சிவப்பிரகாசர் ஆய்வு மாலை

தவத்திரு கயிலைப் புனிதர்
சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களின்
அருளாணையின் வண்ணம் வெளியிடப்பெற்றது



பதிப்பாசிரியர்

த.கோ. பரமசிவம்
ம. மனோன்மணி
கோ.ப. நல்லசிவம்

சிவப்பிரகாசர் இலக்கிய ஆய்வு மாநாடு
பேரூர் ஆதீனம், கோவை.
2002

சிவப்பிரகாசர் ஆய்வுமாலை

தவத்திரு கயிலைப்புனிதர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார்
அவர்களின் அருளாணையின்வண்ணம் வெளியிடப் பெற்றது.

பதிப்பாசிரியர்
த.கோ. பரமசிவம்
ம. மனோன்மணி
கோ.ப. நல்லசிவம்

சிவப்பிரகாசர் இலக்கிய ஆய்வு மாநாடு
பேரூர் ஆதீனம், கோவை.
2002

- சிவப்பிரகாசர் ஆய்வுமாலை

- கோவை, பேரூர் ஆதீனமும்
  தஞ்சை, தமிழ்ப் பல்கலைக்கழகமும்
  களம்பூர், கோவிந்தசாமி அடிகளார் அறக்கட்டளையும்
  இணைந்து நடத்திய சிவப்பிரகாசர் ஆய்வு மாநாட்டின் வெளியீடு

- திருவள்ளுவராண்டு 2033, ஆனி 28,29,30
  (12,13,14.7.2002)

- முதற் பதிப்பு : 2002 சூலை

- பதிப்பாசிரியர்
  முனைவர் த.கோ. பரமசிவம்
  தலைவர், ஓலைச்சுவடித் துறை
  தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 005.

  முனைவர் ம. மனோன்மணி
  முதல்வர், த.சா. அடிகளார் தமிழ்க் கல்லூரி
  பேரூர், கோவை - 641 010.

  தேவார இசைமணி கோ.ப. நல்லசிவம்
  ஸ்ரீ கா.சு.சு. கலைக் கல்லூரி, திருப்பனந்தாள்


- விலை : உருபாய் 300/-

- நூல் கிடைக்குமிடம் : மேலாளர்
  பேரூர்-ஆதீனம்
  பேரூர், கோவை - 641 010.

- கணினி அச்சு : சபாநாயகம் பிரிண்டர்ஸ்
  176, கீழரத வீதி, சிதம்பரம் - 608 001.
  ✆ : 23040, 23020

- அச்சாக்கம் : யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ்
  101-D, ராயப்பேட்டை நெடுஞ்சாலை
  லஸ், மயிலாப்பூர் - 600 004.
  ✆ : 4984693, 4661807

36-1



தவத்திரு சாந்தலிங்க சுவாமிகள்



தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

சிவப்பிரகாசர் ஆய்வுமாலை

ஆய்வு மலர்கள்

பதிப்புரை

'சிவப்பிரகாசர் ஆய்வுமாலை' என்னும் இந்நூல், கோவை பேரூர் ஆதீனத்தில் நடைபெறும் சிவப்பிரகாசர் இலக்கிய ஆய்வு மாநாட்டில் ஆய்வு செய்யப்பெறும் நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பாகும். தமிழ் இந்தி ஆங்கிலம் என்னும் மும்மொழியிலும் கட்டுரைகள் இடம்பெற வேண்டும் என்ற விருப்பம் இருந்தபோதிலும் விழா நாயகராக விளங்கும் சிவப்பிரகாசர் தமிழ், தெலுங்கு, கன்னடம், வடமொழி எனப் பன்மொழிப் புலவராக விளங்கிய போதிலும் - அவருடைய நூல்கள் அனைத்தும் தமிழ் மொழியிலேயே விளங்கியமையின் அவரைப் பற்றிய அவர்தம் நூல்களைப் பற்றிய கட்டுரைகளும் தமிழ் மொழியாகவே அமைந்துள்ளன.

தனி ஒரு புலவருக்காக நிகழும் இம்மாநாடு அனைத்திந்திய மாநாடாக, கருத்தரங்காக அமைந்திருப்பது தமிழுக்கும் வீரசைவர்க்கும் பெருமை சேர்ப்பதாகும். இம்மாநாட்டை, கோவை பேரூர் ஆதீனமும், தஞ்சை, தமிழ்ப் பல்கலைக்கழகமும், களம்பூர் கோவிந்தசாமி அடிகளார் அறக்கட்டளையும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன என்றாலும் பெரும் ஆய்வறிஞர்களாலும், இளைய தலைமுறையினரான ஆய்வு மாணவர்களாலும் தமிழ்ச் சைவப் பெருமக்களாலும் நடத்தப் பெறும் மாநாடாக இதனைக் கருதவேண்டும். சிவப்பிரகாசரின் தமிழும் அவர்தம் இலக்கியங்களும் தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறப்பிடம் பெறும் நிலையின எனலாம். அவர்தம் தமிழ்த்தொண்டால் தமிழ் வளம் பெற்ற சூழலையும் தமிழ் நலம் பெற்ற சூழலையும் இன்றைய தலைமுறை யினர்க்கு எடுத்துக்காட்டும் வண்ணமாக இம்மாநாடு திட்டமிடப்பெற்றதாகும். சிவப்பிரகாசரின் தமிழுக்காக அவரோடு தொடர்புடைய பேரூர் மடத்தில் அவர்தம் புகழ் பேசுவதற்காக விழா எடுப்பதும் அதில் அவர்தம் வாய்மொழியும் உள்மொழியும் ஆய்வு செய்யப்படுவதும் முற்றிலும் தகுதியான நிகழ்வாகவே கருதி மகிழ்கின்றோம். இம்மாநாட்டு ஆய்வுரை களை முன்கூட்டியே பதிவு செய்து நூலாக வெளியிடுவதில் நாங்கள் பெருமையும் பூரிப்பும் கொள்கின்றோம்.

மாநாட்டின் நோக்கம்

சிவப்பிரகாசர் துறவு வாழ்க்கை மேற்கொண்டொழுகியவர் என்றாலும் உலகியலார்க்கு வேண்டிய இலக்கியத் தமிழைப் பல்வேறு வகை

யிலும் வாரி வழங்கிய நிலையில் மொழியிடத்து அவர் துறவு பூணாது வாழ்ந்தவராவார். மிகக் குறுகிய காலத்திலேயே முப்பத்தைந்து நூல்களைப் படைத்துத் தமிழ்மொழிக்கு வளம் சேர்த்தவர். அதன்வழி இந்நாட்டின் சமய கலாச்சாரத்திற்கும் உரமூட்டினார். இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி வரை அவர்தம் நூல்களான நன்னெறி, நால்வர் நான்மணிமாலை, சோணசைலமாலை போன்றன தமிழ் மொழியைப் பயில்வாரிடையே பேரிடத்தைப் பெற்றிருந்தன. குறிப்பாக அவர்தம் நன்னெறி குமரகுருபரரின் நீதிநெறி விளக்கம், ஔவையாரின் நல்வழி, மூதுரை போன்ற நூல்களைப் போலவே சிறுவர்களுக்குப் பாலபாடமாக அமைந்திருந்த சிறப்பைப் பெற்றது. ஆனால் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிற சமய இலக்கியங்களின் பயிற்சி வீழ்ந்தமை போலவே சிவப்பிரகாசரின் நூல்களும் பரிச்சயமிழந்தன. தமிழ்மொழியைப் பாடமாகப் பயில் வாரிடையேயும் பயிற்றுவிப்பாரிடையேயும்கூட சிவப்பிரகாசருக்கு இடம் இல்லாமல் போய்விட்டது. தமிழ்ப்புலவர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மதத்தின் முத்திரையைக் குத்தி ஒதுக்கி வைக்கும் கடந்த 50 ஆண்டுக் கால வரலாற்றில் சிவப்பிரகாசர் யார் என்னும் வினா எழுப்புதற்குக் கூட வெட்கப்படா சூழல் தோன்றி விட்டது.

இச்சூழலை இனங்கண்ட சிலர் - தமிழ்மொழியை வளப்படுத்தியவர் களைச் சமயம் என்னும் போர்வையால் மூடி ஒதுக்கி விடாமல் அவர்களை இனம் காணவேண்டும். அவர்களின் தொண்டை நீடு நினைய வேண்டும், அவர்களின் இனிய தமிழை, செறிந்த மொழியை, இன்றைய கல்வியாளர்க்கும் உணர்த்த வேண்டும் என விரும்பினர். அப்பெருவிருப்பத்தின் விளைவே இத்தகு புலவர் மாநாடுகள்.

கிட்டத்தட்ட ஒரு ஐம்பதாண்டுக் காலமாகவே தமிழ் இலக்கியம் பயில்வாரிடம் ஒரு தேக்கம் காணப்படுகிறது. 5,6 நூற்றாண்டுகளாக வளர்ந்த சமய இலக்கியங்களைப் பயிலும் நிலையில் ஒரு தடையை உண்டாக்கிக் கொண்டனர். இதனால் அரசியல் சமூகச் சூழல்கள் தமிழ்மொழியைப் பயில்வாரிடம் ஒருவகை வெற்றிடத்தை உண்டாக்கி விட்டன. வேறொரு வகையில் சொல்ல வேண்டுமானால் அரசியல் சூழல்கள் இத்தடைகளுக்கு ஒரு காரணமாக அமைந்து விட்டன.

இத்தடையின் காரணமாக ஆய்வாளர்களும் ஆசிரியர்களும் தமிழ்மொழி வரலாறு, தமிழிலக்கியம், தமிழ் இலக்கண வரலாறுகளில் ஒருவகை செயற்கைத் தொய்வை உண்டாக்கிக் கொண்டனர். சங்க இலக்கிய நூல்களுக்குப் பிறகு பிற்கால இலக்கியங்களை, சிற்றிலக்கியங் களைப் பயிலவும் இடைக்கால பக்தி இலக்கியங்களில் தோயவும் மறுத்து விட்டனர். இந்த நிலையில் இலக்கிய வரலாற்றறிவில் கூட தொய்வு வந்து விட்டது. இது மொழிப்பற்றிலும் புலமையிலும் எதிர் ஒலிக்கத்

தொடங்கியது. வெற்று ஆரவாரங்களும் கூக்குரல்களுமே தமிழ் என்ற மாயை பரவத் தொடங்கியது.

இம்மாயையைப் போக்கி, இத்தொய்வைப் போக்கி, படித்தவர்கள் சமய இலக்கியங்களையும் படித்து, பயின்று, தோய்ந்து, சுவைத்து மகிழ்ந்து தமிழை வளர்க்க வேண்டும் என்னும் கொள்கையிலேயே இத்தகு மாநாடுகளை நடத்தத் திட்டமிட்டோம். இந்த அடிப்படை நோக்கத்திற்குத் துணை செய்யும்வண்ணம் அமைந்ததே சிவப்பிரகாசர் இலக்கிய ஆய்வு மாநாடு. சிவப்பிரகாசர் இலக்கியங்களை அறிமுக நிலை யிலாவது உணர்ந்து சுவைக்கவும் அவர்தம் தமிழ் நூல்கள் தமிழை வளப்படுத்தின என்று நன்றி பாராட்டி மகிழவும் இம்மாநாட்டின் நோக்கம் அமைந்தது என்றால் அது மிகையாகாது.

ஆய்வு மாநாடுகள்

தமிழியல் ஆய்வில் தனித்த அறிஞர்களின் தனி ஆய்வுகள் ஒருபுறம் அமைய, ஆய்வறிஞர்களும் ஆய்வு மாணவர்களும் அடங்கிய ஒருமித்த மாநாடுகளும் கருத்தரங்குகளும் நாளுக்கு நாள் பெருகி தமிழியல் ஆய்வைப் பரவலாக்கியுள்ளன. கடந்த முப்பது ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப் பெற்ற அனைத்திந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் கருத்தரங்குகளும் மாநாடுகளும் முன்னோடிகளாகத் திகழப் பல்வேறு தனிப்பட்ட மாநாடுகளும் வளர்வதாயின. பாவை மாநாடுகள், திருமுறை மாநாடுகள், புலவர் மாநாடுகள், குறிப்பிட்ட இலக்கிய இலக்கண மாநாடுகள் எனப் பலவும் துணை செய்த நிலையில் பிற்கால இடைக்கால புலவர்களுக்காகத் தனிமாநாடுகளை நடத்தித் தமிழ் மொழியை உணரத் தலைப்பட்ட சூழல்கள் இந்நூற்றாண்டில் பெருகத் தொடங்கின.

அந்த வகையில் கோவையில் 1998-ஆம் ஆண்டு நடைபெற்ற வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் மாநாடு, காசி மாநகரில் 1999-ஆம் ஆண்டு நடைபெற்ற குமரகுருபரர் இலக்கிய ஆய்வு மாநாடு, தஞ்சையில் 2000-ஆம் ஆண்டு நடைபெற்ற மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை மாநாடு, மீண்டும் காசி மாநகரில் 2001-ஆம் ஆண்டு நடைபெற்ற பெரியபுராண ஆய்வு மாநாடு ஆகியன மிகச் சிறந்த முறையில் தனி ஒரு புலவருக்காக நடைபெற்றனவாகும். இப்போது கோவை, பேரூரில் சிவப்பிரகாசர் ஆய்வு மாநாடு 2002-ல் நடைபெறுகிறது.

இம்மாநாடுகளில் நடைபெற்ற கருத்தரங்குகளில் வெளியான ஆய்வுமாலைகள் பலரை எழுதத் தூண்டின. பலரைத் திறனாய்வுக்குள் நுழைத்தன. சமய இலக்கியங்களிலும் இவ்வளவு வளமும் செறிவும் உள்ளனவா எனும் வியப்பை உண்டாக்கின. சில புதிய எழுத்தாளர்

களையும் உருவாக்கின. மொத்தத்தில் தமிழை உணரச் செய்து தமிழ் ஆராய்ச்சியைப் பெருக்கி தமிழை வளப்படுத்துவதில் ஆய்வுரைகள் முன்னின்றன.

இளம் ஆய்வாளரிடையே ஒரு வேட்கையையுண்டாக்கி, பேராசிரியர் களும், ஆய்வு மாணவர்களும் பிற தமிழார்வலர்களும் இணைந்து தத்தம் கருத்துக்களை வழங்கத் தக்கவாறு களம் அமைத்து, அக்கருத்துக்களை அச்சிலிட்டு, இனிவரும் ஆய்வுகளுக்கு அவற்றை அடித்தளமாக அமைப்பது இத்தகு ஆய்வு மாலைகளின் சாதனையாகக் கருதலாம். தனி ஒரு புலவருக்காக நாடெங்கிலுமிருந்து நூற்றுக்கணக்கான ஆய்வாளர்கள் தம் எண்ணங்களை வெளியிடுவது இம்மாநாடுகளின் மாட்சியைக் காட்டுவதாகச் சிறப்பு நிலையில் கூறத்தகும். தென்னிந்திய பக்தி யியக்க இலக்கியங்கள் நாட்டின் மொழி ஆர்வத்தையும் தேசிய ஒருமைப்பாட்டையும் ஒருங்கிணைத்த பெருமையுடையன. இத்தகு சமூக உணர்வுடன் தோன்றிய பக்தி இலக்கியங்களும் புலவர்களும் படித்து மகிழத்தக்கவர்களே என்பதை விளக்குவனவாக இவ் ஆய்வுமாலை நூல்கள் அமைகின்றன என்பது வெள்ளிடை மலையாகும்.

தமிழ்ப் பல்கலைக்கழகம்

இம்மாநாடு ஒரு கூட்டுமுயற்சியின் விளைவாகத் திட்டமிடப் பெற்றதாகும். மூன்று நிறுவனங்கள் இணைந்து இதனை நடத்துகின்றன. தமிழின் பெயரால் விளங்கும் பல்கலைக்கழகமும், சமய நிறுவனமாக விளங்கும் பேரூர் ஆதீனமும் தனியார் நிறுவனமாக விளங்கும் களம்பூர் கோவிந்தசாமி அடிகளார் அறக்கட்டளையும் என மூன்றும் இணைந்து இப்பெரிய மாநாட்டை நடத்துகின்றன. இவை ஒவ்வொன்றும் தமிழ் வளம் என்னும் பொது நோக்கில் ஒன்றுபட்டதால் இம்மாநாட்டை இணைந்து நடத்துவது பொருத்தமாகத் தோன்றுதல் காணலாம்.

தஞ்சைமாநகரில் இருபது ஆண்டுகளுக்கு முன்பு தோற்றுவிக்கப் பெற்ற சிறப்புநிலைப் பல்கலைக்கழகமாகத் திகழ்வது தமிழ்ப் பல்கலைக் கழகம். இது ஓர் உயராய்வு மையமாகத் தொடங்கப் பெற்றதாகும். தமிழ் மொழியின் வளத்தை அளவிடவும், தமிழ் வளத்தைக் கூட்டவும் எதிர்கால நிலைகளுக்கேற்பத் தமிழ்மொழியை உயர்த்தவும் திட்டமிடப் பெற்று இது தோற்றுவிக்கப் பெற்றதாகும். மொழிப்புலம், சுவடிப்புலம், அறிவியல் புலம், கலைப்புலம், வளர்தமிழ்ப் புலம் என்னும் ஐந்து புலங்களையும் அவற்றுள் இயங்கும் 23 துறைகளையும் கொண்டு இயங்குகின்ற இப்பல்கலைக்கழகம் பழந்தமிழ் வளங்களைக் காக்கவும், பழந்தமிழ்ப் புலவர்களை இலக்கியங்களை ஆய்வு செய்யவும் பல்வேறு களங்களை அடிப்படைகளாகக் கொண்டுள்ளது. ஆய்வு செய்தல்

என்பது கருத்தரங்குகளையும் உள்ளடக்கியதாகும். தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆண்டுதோறும் ஒவ்வொரு துறையிலும் பல்வேறு கருத்தரங்கு களை, மாநாடுகளை, பயிலரங்குகளைச் சிறப்பாக நடத்தி வருவதை அனைவரும் உணர்வர். உலகத்தமிழ் மாநாடு, உலகச் சைவ மாநாடு என உலக அளவிலும், சுவடியியல் மாநாடுகள், தமிழாசிரியர் மாநாடுகள், இலக்கிய மாநாடுகள், நாட்டுப் புறவியல் மாநாடுகள் என தேசிய அளவிலும், மாநில அளவிலும் பல்வேறு மாநாடுகளை முத்திரை மாநாடுகளாக நடத்தித் தமிழை வளப்படுத்தி ஆய்வாளர்களை ஊக்கி இருப்பதைத் தமிழுலகம் நன்கறியும்.

பழந்தமிழ் நூல்களைப் போற்றிப் பாதுகாக்கவும் தமிழ் இலக்கியங் களைப் பதிப்பித்து வெளியிடவும் சுவடிப் புலத்தை உருவாக்கிப் பல்வேறு தமிழ் ஓலைச் சுவடிகளையும் காகிதச் சுவடிகளையும் தேடித் தொகுத்துப் பாதுகாத்து வருவதில் இப்பல்கலைக்கழகம் தலை நிற்கிறது. அவ்வாறே சமயங்களையும் பிற தத்துவங்களையும் ஆய்வதற்கென்றே தத்துவ மையம் என்ற தனி மையத்தையும் இயக்கி வருகிறது. இப்படி இம்மாநாட்டுக்கான அடிப்படை இப்பல்கலைக்கழகத்தில் எவ்வளவோ இருக்கிறது என எழுதிக் கொண்டே போகலாம். எனவே தமிழ் வளம் காக்கும் நோக்கிலும் தமிழிலக்கிய வரலாறு காணும் நோக்கிலும் இம்மாநாட்டை இப்பல்கலைக்கழகம் இணைந்து நடத்துவது மெத்த பொருத்தம் என நாங்கள் கருதுகின்றோம்.

களம்பூர் கோவிந்தசாமி அடிகளார் அறக்கட்டளை

இன்றைக்கு 90 ஆண்டுகளுக்கு முன் களம்பூர் நகரில் தோன்றிய கோவிந்தசாமி அடிகளார் திருமுறைகளிலும், திருக்கோயில் வழிபாடு களிலும் பெரிதும் ஈடுபாடு கொண்டவர். களம்பூர் காசி விசுவநாதர் திருக்கோயில் பணி, நால்வர் மடம் திருப்பணி, வார வழிபாட்டுத் திருத்தொண்டு, திருமுறை பரப்பும் திருநெறிய தமிழ்த்தொண்டு எனப் பன்முகப் பாங்கில் தமிழையும் சைவத்தையும் அவர் வளர்த்தவராவார். அவர் தம் சமாதி நிலைக்குப் பின் அவர் பெயரால் நிறுவப்பெற்றுள்ள களம்பூர் கோவிந்தசாமி அடிகளார் அறக்கட்டளை திருமுறை வளர்ச்சிக் காகவும், சைவ நெறித்தொண்டுக்காகவும் இயங்கி வருகிறது. ஆண்டுதோறும் திருமுறை விழாக்கள், திருமுறை நூற் பரிசுகள், உருத்திராக்கப் பரிசுகள், அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், சைவ மாநாடுகள், தண்ணீர்ப்பந்தல்கள், யாத்திரை, யாத்திரைத் துணை எனப் பலவகையிலும் இயன்ற அளவு தொண்டுகளைச் செய்து வருகிறது. சென்ற ஆண்டு திருப்பனந்தாள் காசித் திருமடத்துடன் இணைந்து காசிமாநகரில் 'பெரியபுராண ஆய்வு மாநாட்டை' மிகச் சிறப்பாக நடத்தி வெற்றி கண்டதை ஈண்டுச் சுட்ட வேண்டும். 1600 பக்கங்கள் கொண்ட இரண்டு ஆய்வுமாலைத்

தொகுதிகள் வெளியிட்டதும், 400-க்கும் மேற்பட்டோர் காசி யாத்திரை மேற்கொண்டு புனித கங்கையில் நீராடி காசி விசுவநாதரை வழிபட்டுப் பயனுற்றதும் அம்மாநாட்டின் பெரிய செய்தியாகும். அவர்கள் தொடர்ந்து ஆண்டுக்கொன்றாகத் திருமுறை மாநாடுகளைக் காசி மாநகரில் நடத்துவதற்குத் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றனர். எனவே அவர்கள் இம்மாநாட்டைப் பேரூர் மடத்துடன் இணைந்து செய்வதைப் பொருத்த முடைய கூட்டாகவே கருதலாம்.

எங்கள் குடும்பம் வீரசைவக் குடும்பம், நாங்கள் திருக்கோவிலூர் ஞானியார் சுவாமிகள் மடத்தைச் சேர்ந்தவர்கள். திருக்கண்டராதித்தபுரம் (இன்று கண்டாச்சிபுரம்) எங்கள் குருவுக்குரிய ஊராகும். ஒவ்வொரு சிறப்பு நிகழ்ச்சிகளுக்கும் அவ்வூரிலிருந்து வில்லுவண்டியில் எங்கள் ஐயர் வரும் போதெல்லாம் எங்கள் தெருவே விழாக்கோலம்பூண்டு கொண்டாடும். அவர் ஒவ்வொரு வீட்டிலும் சிவபூசை செய்தும், லிங்கதாரணம் செய்வித்தும் நடத்தும் நிகழ்ச்சிகளுக்கு வெளியூரிலுள்ள உற்றார் உறவினர்களும் வந்து கலந்து கொள்வர். அந்த வில் வண்டியின் சிவக்காளை, பித்தளைக் குடம் கொண்ட சக்கரங்கள், பித்தளைப் பூண் போட்ட நுகத்தடிகள் இன்றும் எங்கள் கண்முன்னே காட்சி தருகின்றன. வண்டியின் இருபுறமும் லிங்க முத்திரையும் நந்தி முத்திரையும் அழகூட்டு வனவாகக் காட்சியளிக்கும். எங்கள் குடும்பத்தில் நடைபெறும் சமாதி பூசைகளும் நீத்தார் வழிபாடும், சமாதி அடைந்தவர்களை உட்கார வைத்து தேரில் எடுத்துச் செல்வதும் அந்த ஊரிலேயே பெரிதாகப் பேசப்பெறும்.

தொண்ணூறு வயதைக் கடந்த எங்கள் பாட்டியார் திருமதி அன்னபூரணியம்மாள் மார்பிலே லிங்கத்தைக் கட்டிக் கொண்டு பூசை புனஸ்காரங்களில் சிறப்பாகப் பேசப்பட்டவர்கள். ஒவ்வொரு நாளும் பெரிய மொச்சை விதை அளவே உள்ள லிங்கத்தை எடுத்துவைத்துக் கொண்டு திருமஞ்சனமாட்டி வழிபடுவதை நாங்கள் எல்லாம் சிறுவயதில் பக்தி பயத்துடன் பார்த்துக் கொண்டிருப்போம். சிவராத்திரியன்று அச்சிறிய லிங்கத்துக்கும் நான்கு கால பூசையுண்டு. பதினாறு வகை அபிடேகங்கள் உண்டு, பதினாறு வகை மலர்கள் உண்டு. இரவெல்லாம் கண்விழித்துப் பார்த்துக் கொண்டிருப்போம். ஒவ்வொரு காலத்தின் முடிவிலும் கொழுக்கட்டை, சுண்டல், பொங்கல், பால் என நிவேதனப் பொருள்கள் எங்களை இரவெல்லாம் மகிழ்விக்கும்.

எங்கள் சிறிய தந்தையார் சிவத்திரு இராமலிங்க சுவாமிகள் (போளூர் விடோபா மடத்தின் 4-ம் பட்ட அதிபதி) தம் தாயாரைப் போலவே - தாயினும் சிறப்பான நிலையில் இட்டலிங்க வழிபாட்டில் தலை நின்றவராவார். அவர்தம் சமாதி பூசையில் அந்த இட்டலிங்கத்திற்குச்

செய்த வழிபாடும் இறுதியில் அவர்தம் கைகளிலேயே வைத்து அடக்கம் செய்ததும் பெரிய நிகழ்ச்சியாகத் தரிசிக்கப் பெற்றது.

எங்கள் ஊரில் எங்கள் குடும்பத்திற்கென தனியே சமாதி நிலம் உண்டு. எங்கள் குடும்பத்தாரையெல்லாம் அங்கேதான் சமாதி வைப்போம். எங்கள் பாட்டனார் சமாதியடைந்தபோது தோண்டிய குழியில் சிறிய இட்டலிங்கங்கள் கிடைத்ததை எங்கள் தந்தையார் கூறக் கேட்டிருக் கிறோம். இப்படி எவ்வளவோ சொல்லிக் கொண்டே போகலாம். எனவே எங்கள் குடும்பத்தில் நிறுவப்பெற்ற இவ் அறக்கட்டளை வீர சைவராகிய சிவப்பிரகாசர் மாநாட்டை நடத்தத் திட்டமிட்டதும் பேரூர் மடத்துடன் இணைந்து இவ்விழாவைக் கொண்டாடுவதிலும் கூடுதல் பொருத்தம் இருப்பதாக நாங்கள் உணர்கிறோம்.

பேரூர் ஆதீனமும் அருட்பணிகளும்

இன்றைய பேரூர் திருமடத்தின் தமிழ்ப் பணிகளையும் சமயப் பணிகளையும் காணவேண்டுமெனில் அத்திருமடத்தின் வரலாற்றை ஓரளவு சுருக்கமாகக் காண்பது நலம். அது இவ் ஆய்வு மாலைக்குச் சிறப்பானதொரு, தேவையானதொரு வரலாறாக அமையும் என்பதால் இங்கு அவ்வரலாறு தரப்படுகிறது.

செந்தமிழ் நாட்டின் மலைவளம் செறிந்த பகுதி கொங்கு நாடு. இந்நாட்டினைக் கொங்கு மலிகின்றதொரு கொங்கு வளநாடு என்பார் பேரூர்ப் புராண ஆசிரியர் தவத்திரு கச்சியப்பமுனிவர். கொங்குநாடு சேர மன்னர்களது தொடர்புக்கு உரியது. இந்நாட்டின் சிறப்புக்குரிய திருத்தலம் திருப்பேரூர். சங்ககால நூலான பதிற்றுப்பத்தில் ''பேரூர்க் காஞ்சிவாய் மணலினும்'' என்றும், பாண்டியனது செப்பேட்டில் ''காஞ்சிவாய்ப் பேரூர் புக்கு நெடுமாலுக்குக் குன்றமன்னதோர் கோயிலெடுப்பித்தும்'' என்றும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்தில் ''மீகொங்கில் அணி காஞ்சிவாய்ப் பேரூர்ப் பெருமான்'' என்றும் கூறப்பட்டுள்ள செய்திகளால் ஆறும், ஊரும், இறைவனும் பழம்பெருமைக்கு உரியனவாக உள்ளதை அறிகிறோம்.

இத்திருத்தலம் பிறவாநெறி, ஆதிபுரி, மேலைச்சிதம்பரம், அரசவனம் எனப் பல பெயர்களை உடையது. இங்குத் தங்கித் தவம்புரிந்த அருளாளர்களில் குன்றின் விளக்காய்த் திகழ்ந்து உலகுபுகழ் அருள் நூல்களை வழங்கியவர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் ஆவார். அவ்வகையில் 17-ஆம் நூற்றாண்டில் தொண்டை நாட்டில் முழுஞான வீரனாகத் தோன்றியவர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் ஆவார். இவர் தோன்றிய ஊர் இன்னதென்று அறிய இயலவில்லை.

உளம்புக்க சிவப்பிரகாசர்

போற்றி நீறணிந்து உருத்திரசாதனம் பூண்டு ஐந்தெழுத்தைச் சாற்றி மேன்மை கொண்ட சாந்தலிங்கருக்கு ஞான குருவாக அமைந்தவர் திருத்துறையூர் வீரசைவ ஆதீன நிறுவனர் தவத்திரு சிவப்பிரகாச அடிகளார் ஆவார். அவர் திருவாவடுதுறை ஆதீன நிறுவனராகிய தவத்திரு நமச்சிவாய மூர்த்திகளிடம் ஞானதீக்கை பெற்றவர். இத்தகைய சிறப்புப் பெற்ற சிவப்பிரகாசரைத் தன் ஞானகுருவாகப் பெற்றதை சாந்தலிங்கர் பல இடங்களில் குறிப்பிடுகிறார். ''தாளையே தரம் அறிகிலாது எமக்கு எளிதரு சிவப்பிரகாசர்க்கு'' என்றும் ''சிவப்பிரகாச என் கண்மணிதனை உன்னாது'' என்றும், ''என் உளம்புக்க சிவப்பிரகாசன்'' என்றும், ''சிவப்பிரகாச நாமம் கொண்டோங்கு குருவோடிவண் உற்றெனையாண்ட கோவே'' என்றும், ''தாயுமாகி என் தந்தையாய் வந்து தாள்தரு சிவப்பிரகாசன்'' என்றும் தமது நூலாகிய வைராக்கிய சதகத்தில் கூறுகிறார்.

கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாசர் தொடர்பு

சாந்தலிங்க அடிகளார் தலப்பயணம் செய்து கொண்டிருந்தார். அச்சமயம் கற்பனைக் களஞ்சியம் என்று போற்றப்படும் துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள் கடவுள் வழிபாட்டுக்காகக் காஞ்சிபுரம் சென்று கொண்டிருந்தார். வழியில் சாந்தலிங்கர் சிவப்பிரகாசரைச் சந்தித்தார். சிவப்பிரகாசர் சாந்தலிங்கரிடம் எதன் பொருட்டு இங்கு எழுந்தருளினீர் என வினவ சாந்தலிங்கர் சிவஞான பாலைய சுவாமிகளைக் காணும் பொருட்டுச் செல்வதாகக் கூறினார். இருவரும் பொம்மைய பாளையத் திற்கு அருகில் புதுப்பட்டு என்னும் நகரத்தை அடைந்தனர். அங்கு அடிகள் சிவப்பிரகாசரிடம் நாம் சிவஞான பாலைய அடிகளை வணங்கும் பொருட்டுச் செல்வதால் அவர்கள் மீது சில புகழ்ப்பாக்களை அருளுக என்றார். ஆனால் சிவப்பிரகாசரோ நாம் மனிதரைப் பாடுவதில்லை என மறுத்தார். இரவு அங்கேயே தங்க நேர்ந்தது. சிவப்பிரகாசரின் கனவில் முருகப் பெருமான் தோன்றி சில பூக்களைக் கொடுத்து மாலையாக்கித் தரும்படி பணித்தார். இதைச் சாந்தலிங்கரிடம் கூற அவர் முருகனே சிவஞான பாலைய அடிகளைப் பாடும்படி கூறியுள்ளார் எனக் கூறினார். அதன்பின் சிவஞான பாலையர் மீது தாலாட்டு, நெஞ்சு விடுதூது முதலிய நூல்களைப் பாடினார்.

இருவரும் மறுநாள் சிவஞான பாலைய சுவாமிகளைக் கண்டு போற்றி உவந்தனர். அச்சுவாமிகளின் ஆணைப்படி சிவப்பிரகாசர் தமது தங்கை ஞானாம்பிகையைச் சாந்தலிங்கருக்குத் திருமணம் செய்து கொடுத்தார்.

திருப்பேரூரில் திருமடம் அமைத்தல்

சிதம்பரம் முதலிய பல தலங்களையும் வழிபட்டுக் கொங்கு நாட்டில் அவிநாசி என்னும் தலத்தை அடைந்து சிலகாலம் தங்கி இருந்தார். இறுதியில் காஞ்சிமா நதிக்கரையில் அமைந்துள்ள திருப்பேரூரில் தங்கித் திருமடம் அமைத்தார். இதனை வண்ணச்சரபம் தண்டபாணி அடிகள்

''மேலச் சிதம்பரமாம் மிக்கபுகழ்ப் பேரையினில்
சீலத்தர் போற்றத் திருமடம் செய்துற்றானே''

என மொழிகின்றார்.

கயிலை நாயகனாகக் காட்சி தருதல்

சாந்தலிங்கர் தமது அருந்தவத் துணைவியாருடன் திருமடத்தில் ஞான அரசாட்சி செய்து வரும் நாளில் மாணாக்கருள் ஒருசிலர், இவர் தம் மனைவியோடிருந்து கொண்டு மற்றவர்க்கு அருளுபதேசம் செய்கின்றாரே எனத் தமக்குள் ஐயுற்றனர். இதனையறிந்த அடிகள் ஒருநாள் பாடம் நடத்துகையில் ஞானாம்பிகை அம்மையாரைத் தமது மடிமீதமர்த்திக் கொண்டு பாடம் நடத்தினார். மாணவர்களுடைய கண் களுக்குக் கயிலை நாயகனும் உமையம்மையுமாகக் காட்சி கொடுத்தார். ஐயுற்ற மாணவர்கள் மனம் தெளிந்தனர்.

சின்னாளில் அடிகள் இல்லறத்திலிருந்து நீங்கித் துறவறம் பெற எண்ணினார். தமது உண்டியின் பொருட்டுப் பேரூரில் பிச்சை எடுத்து உண்டுவரும் நாளில் அடிகளைக் கண்ட அளவில் தாய்மார்கள் தத்தம் குழந்தைகளை வீட்டில் ஒளித்து வைப்பர். ஏனெனில் அவர்தம் அருள்நோக்கால் குழந்தைகளும் துறவறம் பூணும் என்பதுதான்.

இவ்வாறு இருக்கையில் ஒருநாள், இன்று பாற்சோறு கிடைப்பின் துறவு பூணுவேன் என எண்ணி, அடிகள் சென்றார். இறைவன் திருவருளால் பாற்சோறு கிடைத்தது. இறைவன் திருவருளை நினைந்து துறவு பூண்டார்.

கடவுட் திருக்காட்சி காணல்

துறவு நிலையினை அடைந்த சாந்தலிங்கர் பல்வேறு மாணாக்கர் களுடன் இருந்து அருளுபதேசம் செய்து வந்தார். தில்லைக் கூத்தன் இடபவாகனத்தில் உமையம்மையுடன் காட்சி கொடுத்தார். இதனை வைராக்கிய சதகத்துள்,

''பிரானே திருத்தில்லை உளாய்அன்று இப்பேதையேன்முன்
ஓரானேறிவர்ந்து அம்பிகையோடு எளிதோடி வந்தாய்
வாரானோ இனம் எம்மிறை என்றுனை நாடி வாடி
இரா நாயடியேற்கு எதிர் தோன்றிலை இன்றிதென்னே''

என்று கூறுகிறார். எனவே அடிகள் நம்பிரானை அகக்கண்ணால் மட்டுமின்றிப் புறக்கண்ணாலும் காணும் பேறுடையவர் என்பது தேற்றம். இந்நிகழ்ச்சியினை உறுதி செய்யும் விதமாக தண்டபாணி சுவாமிகள் தமது சாந்தலிங்க சுவாமிகள் பதிகத்தில்

''முக்கணுடை வானவனை மூரிவிடை மீதுகண்டாய்
தக்கபுகழ்ப் பேரைநகர்ச் சாந்தலிங்க தேசிகனே''

என்று கூறுகிறார்.

சாந்தலிங்கர் அருள் நூல்கள்

அடிகளார் இங்கு அருளாட்சி புரிந்த காலத்து பல அடியார்கள் இத்திருமடத்தில் தங்கி இருந்தார்கள் என்று அறிகின்றோம். பல சமயத்தவர்களது வினாக்களுக்கு விடைகூறும் அவையும் இருந்தது. இதனை வலியுறுத்துவது போலவே கொலை மறுத்தலில் 'உடுத்தனைச் சூழ்தர விளங்கும் மதியின் உயர்சைவர்' என்னும் கருத்து காணப்படுகிறது.

இவரியற்றிய நூல்கள் நான்காம். கொலை மறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத உந்தியார் என்பனவாகும்.

கொலை மறுத்தல், தீயனவற்றுள் தலையான கொலையை நீக்கி மெய்தவக்குருவுற்று அவர் சொற்படி வாழ்வதால், மனத்தூய்மை பெற்று பரஞானம் அடையலாம் என்கிறது.

வைராக்கிய சதகம் பக்தியோடு மூதுணர்வோர் முன்கூறிய அருட்பாடல்களை ஓதினால் பவப்பிணி நீங்கி இறைவன் அருளுக்கு உரியவர் ஆவர் என்கிறது.

வைராக்கிய தீபம் பற்றற்ற துறவினால் அனுபவமாச் சிவம் உணர்தல் நிரப்பும் மெய்ஞானம் என்கிறது.

அவிரோத உந்தியார் அப் பரஞானத்தால் அடையும் வீடு இது என்பதை விளக்கப்,

''பொன்றாப் பொருளே பொருள்என்பர் நல்லோர்
அன்றிப் பொருள் யாதென்றுந் தீபற
அடையும் வீடே என்றுந்தீபற''

எனக் கூறுகிறது. இதனால் இந்நான்கு நூல்களும் முக்திப்பெறு வீட்டிற்கு நான்கு திருவாயில்களாக விளங்குகின்றதென்பதை,

''நன்கு முத்தி வீட்டில் உறும் நான்கு பெருவாயில்களே
என் குணங்கட் போற்றிடும் நூல் ஈரிரண்டு செய்தானே''

என்று புலவர் புராணம் கூறுகிறது.

மிக்க குரவனினும் மேலாய சீடன்

கன்னட நாட்டில் குமாரதேவர் என்பவர் மணிமுடி தாங்கிய மன்னராக இருந்தார். மன்னுயிரத்தனையும் தன்னுயிர் எனக் கருதி கண்ணை இமை காப்பது போல் குடிமக்களைப் பாதுகாத்து வந்தார். ஞான நூல்கள் பலவற்றையும் ஓதி உணர்ந்தார். சற்குருவின் கருணை என்று வாய்க்குமோ என எண்ணியிருந்தார்.

திருப்பேரூரில் திருமடம் அமைத்துத் தங்கியிருந்த சாந்தலிங்கருடைய பெருமைகளைத் தமது முதலமைச்சர் மூலமாக அறிந்தார். மணிமுடி துறந்து சடைமுடி தாங்கிப் பாதசாரியாய்த் திருப்பேரூரடைந்து ஞானாசாரியார் திருவருளைப் பெற நேரம் பார்த்து நின்றனர். சாந்தரும் வேந்தரை முழுக நோக்கினார். பின் தம்பிரானிடம், ஆதலின் நம் வழிக்குப் பாத்திரன் ஆகமாட்டான். எனவே, இவன் தமது நாட்டுக்கே திரும்பிப்போய் அரசு புரியட்டும் என்றார். குமாரதேவர் நெஞ்சம் பதைத்தது, வாய்திறந்து ஒன்றும் பேசாமல் மௌனமாய் நின்றார். இவரது அதிதீவிர பக்குவத்தை அறிந்து தம்பிரான் சாந்தலிங்கரிடம் விண்ணப்பித்தார். அதன்பின் சாந்தலிங்கர், அப்படியானால் இவனை நமது எருதுகளுக்குப் புல்லறுத்து வருமாறு செய்க எனக் கட்டளை இட்டார். தன்னைத் தான் அறிய எண்ணும் தக்க சீடன் தன் குருவை மர்க்கடமாப் பற்றல் நீதி என்பதற் கேற்ப, குமாரதேவர் அரிவாளும் கயிறும் கொண்டு வயலுக்குச் சென்றார். ஆங்குப் பணியாளர்கள் புல்லரிதல் கண்டு தாமும் அரிய எண்ணி வில்லைப் பற்றிய கையால் புல்லைப் பற்றினார். பெருவாள் பிடித்த கரத்தில் அரிவாள் பிடித்து அறுக்கலுற்றார். அந்தோ! பழக்க மின்மையால் கையினை அறுத்துக் கொண்டார். சாந்தலிங்கப் பெருமான் இதற்கும் சோதனை நிமித்தம் கோபித்துக் கொண்டார். இவ்வாறு பல சோதனைகளுக்குப் பிறகு குமாரதேவரைத் தமது முதன்மைச் சீடராக ஏற்றுக் கொண்டார்.

தமது சீடராகிய குமாரதேவர் தம்மைப் போலவே பழுத்த ஞானத் துறவியாக விளங்குவதைக் கண்ட அடிகள் அப்பா நீ இங்கிருக்கத் தேவையில்லை பழமலை (விருத்தாசலம்) சென்று அடியவர்களுக்கு அருள்புரிக, ஆங்கு பெரியநாயகியம்மையின் திருவருளுக்குப் பாத்திரனாவாய் எனப் பணித்து விடை தந்தார். இவ்வரலாற்றைக் குமாரதேவர் தமது ஞான அம்மானையில்,

''என்ன உணர்ந்தவின் இல்இன்பை அம்மானே
ஏற நோக்காது இளமைதனில் அம்மானே
பொய்யென விட்டுப் புறப்பட்டேன் அம்மானே
போத குருசாந்தன் பொன்னடிக்கு அம்மானே
வந்து துதித்து வணங்கினேன் அம்மானே

மலரடி என்சென்னி வைத்துப்பின் அம்மானே
முத்தி நெறியை மொழிந்துடன் அம்மானே
முதுகிரியில் தவம்முயல் என்றான் அம்மானே'

என எடுத்துக் கூறுகிறார். இதனையே தண்டபாணி சுவாமிகள்,

''அத்தேயம் விட்டு மனையாதி யாகும்
அவர்தம்மை நீங்கி அகமூ
டுத்தேசமானபடி நற்குருக்கள்
உறல்பேரை என்ன வினவா
முத்தேவுமான சிவலிங்க முற்ற
மொய்ம்போடு கண்டு பணியா
மெய்த் தேவதேவன் இவனே எனாஉள்
விழைவோடு தொண்டு செயும் நாள்''

என அருளிச் செய்கின்றார்.

சிதம்பர மானிடன் நல்ல பாவலன்

பழமலையில் (விருத்தாசலம்) அருளாட்சி புரிந்து வந்த குமார தேவருக்கு சிதம்பர கவிராயர் என்பவர் தொடர்பு கிடைத்தது. அவரது பக்குவம் கண்ட குமாரதேவர் தமது ஆசிரியரான சாந்தலிங்க அடிகளாரின் மாணாக்கனாக ஆக்கும் பொருட்டுப் பேரூருக்கு அழைத்து வந்தார். அங்கு தமதாசிரியரை வணங்கி, இவரைத் தங்களுடைய சீடனாக ஏற்றருளும் என வேண்டினார். இதனைப் புலவர் புராணம்,

''பிந்த வந்தவன் யாவன்நீ அவற்
பேணி நின்னொடு கூட்டிஏன்
வந்த தென்றுயர் சாந்தலிங்கவ
ரோதயன் தனி கேட்டலும்
இந்த மானிடன் நல்ல பாவலன்
இன்னவற் கருள் செய்துநின்
கந்த நாண்மலர்த் தாள்கள் சூட்டிட
வேண்டும் என்னக் கழறினான்''

என்று கூறுவதால் அறியலாம். மேலும் இதனை உறுதி செய்ய சிதம்பர சுவாமிகள் சரித்திரம்,

''அங்கணருட் தேசிகரை அவரென்றும் பிரியாமே
தங்கு நறுநிழல் என்னத்தாஞ்சரிப்ப அஃதுணர்ந்த
சிங்கஏறு எனநிலவத் தேசிகரும் தனைஆண்ட
புங்கவனாம் சாந்தலிங்கப் புண்ணியன்பால் கொடு சென்றார்''

என மொழிகின்றது.

தனக்கு முன் இவ்வாறு கூறுகின்ற குமாரதேவரிடம் சாந்தலிங்கர், எனக்கு நீ சீடனாக உள்ளாய், ஆதலால் உனக்குச் சீடனாக இவனை வைத்துக் கொள்க என மொழிந்தார். நீ இவனை நல்ல பாவலன் எனக் கூறியமையால் எமது கொலை மறுத்தல், அவிரோத உந்தியார், வைராக்கிய தீபம், வைராக்கிய சதகம் முதலிய நூல்களுக்கு உரை யெழுதும்படி பணிக்கின்றேன் என ஆணையிட்டருளினார். இதற்கு உரை வகுத்த சிதம்பர அடிகள் தமது குருவான குமாரதேவருடைய திருவடிகளை வணங்கித் திருப்பேரூரில் மடம் அமைத்து அருட்பணி புரிந்தார்.

மனிதரை ஆட்கொண்ட வள்ளல்

பல்லாற்றானும் இவ்வாறு விளங்கித் தோன்றிய இத்திருமடம் இடைக்காலத்தே பேணுவாரின்மையாலும், முகமதியர் ஆட்சியாலும் நலிவுற்றது. சாந்தலிங்கப் பெருமானுடைய சமாதி நிலையமும், திருமடமும் சீர்குன்றியது. கள்ளிச் செடிகள் வளர்ந்தன. அந்நாளில் கோவையில் காவல்துறையில் ஆய்வாளராக இருந்தவர் இராமசாமி முதலியார் குமாரர் திரு பொன்னுரங்க முதலியார் அவர்கள். ஒருநாள் இரவு சாந்தலிங்க அடிகள் அவருடைய கனவில் தோன்றி, எமது சமாதி நிலையம் பேணுவாரின்றி உள்ளது, அதனைப் பேணி வருக எனக் கட்டளை இட்டு அருளினார். மறுநாட்காலை அவர் பேரூர் வந்து அடிகள் கனவிற் காட்டிய இடத்திற்கு வந்து பார்த்தார். சமாதி இடம் தெரிந்து கொள்ள இயலாமல் வருந்தி நின்றார். அப்பொழுது பெருமானுடைய திருவருளினால் அவ்விடத்தைக் கருடன் ஒன்று வட்டமிட்டுக் காட்டியது. அவ்விடத்திருந்த கள்ளிச் செடிகளை அப்புறப்படுத்திப் பார்க்கையில் அங்கு அருள்நிலையில் சமாதி நிலையமும், இடிபட்ட கட்டிடங்களும் இருந்தன. அதனைத் தூய்மைப்படுத்தி வழிபாட்டுக்குரிய வகையில் சமாதி யினை அமைத்தார். தீர்த்தத்திற்கு உரிய கிணறு ஒன்றையும் தோண்டினார். அதனால் சமாதி நிலையம் சீர்பெறலாயிற்று.

தவத்திரு ஆறுமுக அடிகள் காலத்தில் திருமடம் பொருட்டுறையில் குறைந்திருந்தது. ஒரு பங்குனி உத்திர நாளுக்கு முன்நாளிரவு சாந்தலிங்கப் பெருமானுக்கு இரவு பூசையின் பொழுது வில்வப் பழத்தை அமுதாகப் படைத்து ஆறுமுக அடிகள் பூசையை முடித்தார். தான் ஏதும் உண்ணாமல் இருந்தார். மறுநாள் விடிந்தால் பங்குனி உத்திரத் திருநாளாகும். பெருமானுக்கு அமுது செய்ய ஒன்றுமில்லையே என வருந்தி ஒடுக்கத்திருந்தார்.

அந்நாளில் கோவை - சீரநாயக்கன் பாளையத்தில் திரு. சுப்பிரமணியம் அவர்களது மூதாதை திரு. சீரங்கன் என்பார் நல்லடியாராக வாழ்ந்து வந்தார். அவர் பணத்தால் குறைவுபட்டு இருந்தாலும் மனத்தால் குறைவு

படாதவர். வறுமையில் செம்மையான வாழ்க்கை வாழ்ந்தவர். அவர்தம் கனவில் சாந்தலிங்கர் தோன்றி நாளை பங்குனி உத்திரத்தன்று நாம் அமுது செய்யும் பொருட்டு உணவுப் பொருட்களோடு வருக என அருளிச் செய்தனர். அவரும் அவ்வாறே மறுநாட்காலை ஒருபடி அரிசி, சிறிது பருப்பு, புளி, மிளகாய் போன்ற உணவுப் பொருட்களை எடுத்துவந்து திருமடத்து மடப்பள்ளியில் கொடுத்தார். சாந்தலிங்கப் பெருமானையும் வழிபட்டுச் சென்றார். இன்றும் பங்குனி உத்திரநாளில் மேற்படி குடும்பத்தார் அரிசி, பருப்பு, புளி, மிளகாய் போன்றவற்றைக் கொண்டு வந்து கொடுத்து விட்டு சாந்தலிங்கப் பெருமானின் அருளைப் பெற்றுச் செல்கின்றனர்.

இவ்வாறு வான் பழித்து மண்புகுந்து மனிதரை ஆட்கொண்ட வள்ளலாகச் சாந்தலிங்கப் பெருமான் திருவருள் புரிகின்றார்.

ஆதீனக் குரவர்கள்

பொன்னாபுரம் என்னும் ஊரினைச் சேர்ந்தவர் நாச்சிமுத்து அடிகளார். அவர் இத்திருமடத்தை நிருவாகம் செய்துள்ளார். அவருக்குப் பிறகு பட்டம் ஏற்றவர் தவத்திரு இராமலிங்க அடிகளார் ஆவார். இவர் சமாதிக் கோயிலின் முன் மண்டபத்தை அன்பர்களின் உதவியால் அமைத்தார். கம்பஞ்சோறு சமைத்து அதனோடு கலந்த நீரை வழிச் செல்வார் பசி தீர வழங்கினார். திருமடத்தைக் கட்டியதுடன் திருமடத்திற்குரிய இடங்களையும் விரிவாக்கினார்கள். 1892 வரை தலைவராக இருந்து பணியாற்றிச் சமாதி கொண்டார்கள். .

அவர்க்குப் பின் தவத்திரு. சச்சிதானந்த அடிகளார் பட்டம் ஏற்றார். 1909-ஆம் ஆண்டு வரை இவர் திருமடத்தின் அருட்பணிகளைச் செய்தார். இவர் காலத்தில் சாந்தலிங்கர் சமாதிக் கோயிலின் மூன்றாம் மண்டபம் கட்டப்பட்டது. அவருக்கு முந்தைய பட்டத்திலிருந்த தவத்திரு இராமலிங்க அடிகளாருடைய சமாதிக் கோயிலைக் கட்டினார்.

தவத்திரு சச்சிதானந்த அடிகளாருக்குப் பின் பட்டம் ஏற்றவர் தவத்திரு மௌன அடிகள் ஆவார். இவர் வாய்பேசாத விரதம் இருந்து திருப்பேரூர் அருள்தரும் பச்சைநாயகியம்மை உடனமர் அருள்மிகு பட்டிபெருமான் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டினைச் செய்தார். அறுபான்மும்மை அடியார் படிமங்களையும் செய்தார். நாள்தோறும் குறிப்பிட்ட அளவு தொகை கிடைத்தாலன்றி உணவு உண்பதில்லை என்னும் கொள்கை கொண்டு அப்பணிகளைச் செய்தார்.

மாணிக்க அடிகளார் பணி

தவத்திரு மாணிக்க அடிகளார் காலத்தில்தான் திருமடம் பலவகை களிலும் விளக்கம் பெற்றது. இவர் சிரவையாதீனம் - கௌமார மடாலயத்

தலைவர் தவத்திரு இராமானந்த அடிகளின் மாணவராவார். கொங்கு நாட்டில் உள்ள பல ஊர்களுக்கும் சென்று அன்பர்களிடம் நன்கொடை பெற்றார். மாசி மகம்தோறும் குருபூசைவிழா மூன்று நாட்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றது. விழா நாட்களில் பல்லாயிரம் அடியார்களுக்கு அமுதளிக்கப் பட்டது. சமாதி நிலையம், மடம் ஆகியவற்றைச் சிறந்த முறையில் அமைத்தார். நந்தவனம், தோட்டம் முதலியவைகளையும் அமைத்தார்.

சத்வித்யா சன்மார்க்க சங்கம்

திருமடத்தின் பணிகளும், வழிபாடுகளும் சிறக்கவே அன்பர்கள் மிகுதியாக வரத்தொடங்கினர். அவர்களுக்குச் சமயநெறியை விளக்கு வதற்குத் திருமடத்தின் தலைவராய் இருந்த தவத்திரு மாணிக்க அடிகளார் 'சத்வித்யா சன்மார்க்க சங்கம்' என்னும் பெயரில் ஒரு சங்கத்தைத் தொடங்க ஏற்பாடு செய்தார். இச்சங்கம் தமிழ் இராட்சச ஆண்டு (கி.பி. 1916) தைத் திங்கள் நான்காம் நாள் திங்கட் கிழமை பிரதோட புண்ணிய காலத்தில் மாலை 3.00 மணிக்கு தவத்திரு சிதம்பர மெய்ஞ்ஞான சிவாச்சாரிய அடிகளாலும் பெரியோர்களாலும் தொடங்கப் பெற்றது. இச்சங்கத்தின் பயனாய்க் கோவை நகரில் சமய உணர்வு அரும்பியது. தமிழகத்தின் தலைசிறந்த சமயச் சான்றோர்களாகிய தவத்திரு ஞானியாரடிகள், தவத்திரு மறைமலை அடிகள் போன்ற பெருமக்கள் ஆண்டுதோறும் சங்க ஆண்டு விழாக்களில் பங்கு கொண்டனர். மாணிக்க அடிகளார் சங்கத்தின் வளர்ச்சியுடன் திருமடத்தையும் சிறந்த முறையில் பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் செலவில் புதிதாகக் கட்டினார்கள்.

1938-ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் திருவாதிரை நாளில் திருப்பேரூர் அம்பலவாணர் திருவீதிக்கு எழுந்தருளும் நேரத்தில் திருவடியிற் கலந்தார். இவரது சமாதி சாந்தலிங்கர் சமாதிக்கு வடபால் அமைந்துள்ளது.

ஆறுமுக அடிகளார் அருட்பணி

திருக்கூட்டத்து அடியவர்களுள் ஒருவராய்ப் பேரூர்த் திருமடத்திற்கு 1909-ஆம் ஆண்டு தவத்திரு ஆறுமுக அடிகளார் வந்தார்கள். அவர் வந்த இரண்டாண்டுகளுக்குப் பின்தான் மாணிக்க அடிகளார் வந்து சேர்ந்தார். தவத்திரு ஆறுமுக அடிகள் கோவைக்கடுத்த கணபதி என்னும் ஊரினர். இளமையிலேயே இல்லற வாழ்வில் நாட்டம் இன்றி இருந்தார். பெற்றோர், உடன் பிறந்தார், மனைவி, வீடு, செல்வம் எல்லாப் பற்றுக் களையும் விட்டார். சிரவை - கௌமார மடம், அவிநாசி திருப்புக்கொளியூர் மடம் போன்ற மடங்களுடன் தொடர்பு கொண்டார். சிரவை - கௌமாரமடத் தலைவர் தவத்திரு இராமானந்த அடிகளின் அருள் நோக்கால் தவத்திரு ஆறுமுக அடிகள், சின்ன சுவாமிகள் என்பவருடன் சாந்தலிங்கர் மடாலயத் திருப்பணியை மேற்கொண்டார். 1939-ஆம் ஆண்டு திருமடத்தின்

தலைவராகப் பொறுப்பேற்றார். இவரது காலத்தில் திருவண்ணாமலை, சென்னை, திருவாரூர், காளையார் கோயில் முதலிய இடங்களில் உள்ள வேதாந்த மடங்களின் தொடர்பு ஏற்பட்டது. சுமார் 28 ஆண்டுகள் திருமடத்தின் தலைவராக இருந்தார்.

இவர் திருமடப்பணிகளில் தமக்குத் துணை இருக்கும்படி தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளை 1950-ஆம் ஆண்டில் இளைய பட்டத்தில் நிறுவினார். தவத்திரு ஆறுமுக அடிகள் பிலவங்க ஆண்டு புரட்டாசித் திங்கள் முதல் நாள் ஞாயிற்றுக்கிழமை (17.9.67) இரவு 7.15 மணிக்கு இட்டலிங்கப் பரசிவத்தில் கலந்தருளினார்கள்.

சாந்தலிங்க அடிகள் மாசி மக நன்னாளில் அம்பலவாணப் பெருமானின் திருவடிகளை அடைந்தார். வாழையடி வாழையாக வந்த திருக்கூட்டச் செந்நெறியில் தற்பொழுது திருமடத்தின் தலைவராக தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் இருந்து திருத்தொண்டு ஆற்றி வருகிறார்கள். தமிழையும் சைவத்தையும் தனது இரு கண்களாகக் கொண்டு நெறிப்படுத்தி வருகிறார்கள். அடிகளாரின் அருட்பணிகளை ஓரளவு சுருக்கமாகக் காணலாம்.

தெய்வ ஒண்தீந் தமிழில் வாழ்வியல் சடங்குப் பணி

''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப'' என்ற தொல்காப்பியர் இலக்கணப்படி எண்ணம், சொல், செயல்களால் நிறைமொழி மாந்தர்களாய் விளங்கியோர் தேவார மூவரும் திருமுறை ஆசிரியர்களும் ஆவார்கள் அவர்களின் அடியொற்றி நமது பேரூராதீனம் என்றுமுள இன்தமிழால் திருக்கோயில்கட்குத் திருக்குட நன்னீராட்டுக்களை நடத்தி வருகின்றது. தமிழருச்சனை முறைமை 1953-ஆம் ஆண்டு பேரூர் பட்டீசுவரர் திருக்கோயிலில் நமது பேரூரடிகளார், தவத்திரு குன்றக்குடி அடிகளார், சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணியம் ஐயா ஆகியோர் முன்னிலையில் தொடங்கப்பெற்றது. பேரூரடிகளாரின் அருளார்ந்த தலைமையில் சுமார் 3000 திருக்குட நீராட்டு விழாக்கள் நடத்தப் பெற்றுள்ளன. நமது நாட்டில் மட்டும் அல்லாமல் அமெரிக்கா முதலான அயல்நாடுகளிலும் நமது பேரூரடிகளார் ஓதுவாமூர்த்தி களையும் சிவாச்சாரியார்களையும் வைத்துத் திருக்குட நீராட்டுக்களைச் செம்மையுறச் செய்து வருகின்றனர். திருமணம், புதுமனைப் புகுவிழா ஆகிய வாழ்வியல் சடங்குகள் நடத்த பயிற்சி வகுப்புகள் நடத்தப் பெறுகின்றன. பல நூறன்பர்கள் இச்சடங்குகளை நடத்தி வருகின்றனர்.

தவத்திரு சாந்தலிங்கர் கலை, அறிவியல் தமிழ்க் கல்லூரி

தவத்திரு ஆறுமுக சுவாமிகள் திருமடத்தின் தலைவராக இருந்த பொழுது கொங்குநாட்டில் செந்தமிழ்க் கல்லூரி ஒன்று தொடங்கப்பட

வேண்டும் என்னும் எண்ணம் திருமடத்து அன்பர்கள் பலருக்கு இருந்தது. அப்பொழுது இளைய பட்டமாகப் பொறுப்பிலிருந்த தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகள் அன்பர்களுடன் கலந்து தமிழ்க் கல்லூரி தொடங்க முயற்சி செய்தார். 1953-ல் பேரூர்த் திருமடத்தில் தமிழ்க் கல்லூரியானது சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஒப்புதலுடன் தொடங்கப்பெற்றது. தற்பொழுது கலை, அறிவியல் தமிழ்க் கல்லூரியாக விளங்குகிறது.

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் மேனிலைப்பள்ளி

திருமடத்தின் சாந்தலிங்கர் கல்விக்குழுவின் சார்பில் ஊர்மக்களது நலன் குறித்து 1950 - இல் உயர் தொடக்கப் பள்ளியாகத் தொடங்கப் பட்டு 1960-ல் உயர்நிலைப்பள்ளியாக மாற்றப்பட்டது. தற்பொழுது மேனிலைப்பள்ளியாக உள்ளது. இக்கல்வி நிலையம் சாந்தலிங்கப்பெருமான் திருக்கோயிலை அடுத்து விளங்குவதால் மாணாக்கர்கள் சமய உணர்வு உடையவர்களாய் வழிபாட்டுச் செந்நெறி உடையவர்களாய் வளர்ந்து வருகின்றனர். தமிழ்வழி, ஆங்கிலவழி வகுப்புகள் 6 முதல் 12 வரையுள்ளன. தமிழ்வழியில் 5 வது வரை படித்தவர்களும் ஆங்கிலவழி வகுப்பில் சேர்ந்து பயன்பெறுகிறார்கள்.

ஞானாம்பிகை மெட்ரிக் பள்ளி

இளையோருக்கு ஏட்டுக்கல்வியுடன் சமய உணர்வு, பெரியோரைப் போற்றல், தலைமைப் பண்பு, ஆளுமைத் திறன் போன்றவற்றை அளிக்கும் வகையில் மழலையர் வகுப்பு முதல் பத்தாம் வகுப்புவரை செயல்பட்டு வருகிறது. தொடர்ந்து பல்லாண்டுகளாகப் பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் 100 விழுக்காடு தேர்ச்சி பெற்றுப் பலருடைய பாராட்டுதல் களைப் பெற்றுள்ளது. தாய்த் தமிழ் வழியாக கற்பிக்கும் பணியும் மேற்கொண்டுள்ளது.

சிவசாந்தலிங்கர் திங்களிதழ்

திருமடத்திலிருந்து ஆன்மீகம், கல்வி, மருத்துவம், அறிவியல், அரசுச் செய்திகள் மற்றும் பல்துறைச் செய்திகளைத் தாங்கி இவ்விதழ் வெளிவந்து கொண்டிருக்கிறது.

தாய்த் தமிழ்ப் பள்ளி

தாய்த் தமிழ் வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ள நமது பேரூரடிகளாரின் அருளாசியுடன் தவத்திரு ஆறுமுக அடிகள் தாய்த் தமிழ்ப் பள்ளி செயல்படுகிறது. இப்பள்ளியில் மொட்டு, மலர் மற்றும் 1 முதல் 5 வகுப்பு வரை நடைபெறுகிறது.

சத்வித்யா சன்மார்க்க சங்கம்

தவத்திரு மாணிக்க சுவாமிகள் 1916-ஆம் ஆண்டு தைத்திங்கள் நான்காம் நாள் இச்சங்கத்தினைத் தோற்றுவித்தார்கள். சி.கே. சுப்பிரமணிய முதலியார், சி.எம். இராமச்சந்திரஞ்செட்டியார், பண்டிதமணி கந்தசாமிப் பிள்ளை, வெ.சி. சுப்பைய கவுண்டர் ஆகியோர் இதனைத் திறம்பட நடத்தியவர்கள். சொற்பொழிவுகள் தமிழறிஞர்களைக் கொண்டு நடத்தப் பட்டன. இச்சங்கம் இன்றும் தொடர்ந்து சமயப்பணி புரிந்து வருகிறது. இம்மன்றத்தின் மூலம் திருக்குறள் வகுப்பு, சிந்தனை அரங்கம் நடத்தப் பெறுகின்றது. சாந்தலிங்கர் அருள்நெறி மன்றம் மூலம் திருவிளக்கு வழிபாடு, இலவச சமய பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வறக்கட்டளையின் மூலம் மக்களுக்கு - குறிப்பாக மலைவாழ் மக்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகள், ஆடை தானம் போன்ற உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. துறவியர் பயிற்சி மையம் தொடங்கத் திட்டமுள்ளது.

இதன் வழியாக, பள்ளி மாணவர்களுக்கு இலக்கியப் போட்டிகள், சமய வகுப்புகள், ஆளுமைப் பயிற்சி, ஆதரவற்ற மாணவர்களுக்கு இலவசக் கல்வி, கல்வி ஊக்கத்தொகை, தமிழ்ப்பண்ணிசை வகுப்பு, சமய நல்லிணக்கம் ஆகிய பணிகள் ஆற்றப்படுகின்றன.

எனவே இத்தகு சிறப்பு நிலையில் விளங்கும் பேரூராதீனம், வீரசைவத்தைப் போற்றிய சிவப்பிரகாசர் ஆய்வு மாநாட்டை நடத்துவது மெத்தப் பொருத்தமாகும் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது என உறுதியாகக் கூறலாம்.

பதிப்பு முறை

சிவப்பிரகாசர் இலக்கிய ஆய்வு மாநாடாக விளங்கும் இம்மாநாட்டில் அவர் எழுதிய இலக்கிய நூல்களைப் பற்றியும் அவர்தம் வரலாறு குறித்தும் விரிவாக ஆய்வு செய்யப்பெறும் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. அவர்தம் நீதிநூல், தலபுராணம், காப்பியம், பிள்ளைத்தமிழ், உலா, தூது, மாலை போன்ற சிற்றிலக்கியங்கள் எனப் பலவற்றையும் ஆய்வாளர்கள் ஆய்ந்து வெளிப்படுத்தியுள்ளனர். இம்மாநாடு தொடர்பாக 800 பேர்களுக்கும் மேற்பட்ட தமிழ் ஆர்வலர், ஆய்வறிஞர், மாணவர் எனப் பலரையும் முதல் சுற்றறிக்கை - அழைப்பு வழியாகத் தொடர்பு கொண்டோம். பலர் கட்டுரைகளுடன் பதிவு செய்து மாநாட்டின் தேவையைப் பாராட்டி எழுதி வரவேற்றனர். இத்தகு சிறப்பு மாநாடு களின் வழியாகத் தமிழ்ப் புலவர்களை, சைவப்புலவர்களை நீடு நினைவதற்கு ஒரு வாய்ப்பு வழங்கியதாகக் கருதி நன்றி பாராட்டி மகிழ்ந்தனர். பலர் நூல்கள் கிடைக்கவில்லை, காலம் போதவில்லை எனக் குறைபட்டனர்.

ஏற்கெனவே நாங்கள் பெரியபுராண ஆய்வு மாலையின் பதிப்புரையில் குறிப்பிட்டது போல சமய இலக்கியப் பயிற்சியும் பயன் பாடும் அருகிவிட்ட நிலையின் காரணமாகவே - சிவப்பிரகாசர் போன்ற பெரும்புலவர்களின் அறிமுகம் கிடைக்காமலே பலர் தவிக்கின்றனர் என்பதை இங்கே குறித்துத்தான் ஆகவேண்டும். அரசியல் சூழல்கள் நம்மைச் சமய இலக்கியங்களிலிருந்தும் சிற்றிலக்கிய வளர்ச்சியி லிருந்தும் தள்ளி வைத்து விட்டன என்றால் அது மிகையாகாது.

இத்தகு சூழலில் சிவப்பிரகாசரை நூற்றுக்கும் மேற்பட்டோர் படித்தனர், எழுதினர் என்றால் ஒருவகையில் மகிழ்வாகத் தான் இருக்கிறது என்றாலும் 300 கட்டுரைகளாவது வரும் என்று எதிர்நோக்கிய எங்களுக்கு ஏமாற்றம்தான். 126 ஆய்வுக்கட்டுரைகளே வந்தன. பெரும்பாலும் அதிகம் கிடைக்கின்ற நன்னெறி, சோணசைலமாலை, நால்வர் நான்மணிமாலை போன்ற நூல்களைப் பற்றிய கட்டுரைகள் தாம் அதிகம். தலைப்புகள், பொருள்கள் திரும்பத்திரும்ப வருவதுபோல் தோன்றினாலும் ஒவ்வொரு கட்டுரையும் ஒவ்வொரு வகையில் தனித்திருப்பது போல காணப் பெறுகின்றன. ஆதலின் வந்த கட்டுரைகளை யெல்லாம் தொகுத்து அச்சிட்டு விட்டோம்.

சிவப்பிரகாசரின் பிறமொழித்திறன், சிவப்பிரகாசரும் பிற அடியார் களும், சிவப்பிரகாசர் காலமும் சூழலும், தனிப்பாடல்கள், இலக்கணத்திறன், சிவப்பிரகாசரும் திருமடங்களும், சிவப்பிரகாசரின் தலயாத்திரைகள், சிவப்பிரகாசரின் பிறசமய மறுப்பு போன்ற தலைப்புகளில் கட்டுரைகள் வரவில்லை. என்றாலும் சிவப்பிரகாசரையும் அவர்தம் தமிழ்ப்புலமை, கற்பனை வளம், முன்னோர் பத்தி ஆகியவற்றை உணர்வதற்கு ஒரு திறவு கோலாக இவ் ஆய்வுமாலை விளங்கும்வண்ணம் கட்டுரைகள் இடம் பெற்றிருக்கின்றன என்றால் அது மிகையாகாது. மொத்தத்தில் சிவப்பிரகாசரை அறிமுகப்படுத்தும் பணியில் இம்மாலை துவண்டு விடவில்லை எனலாம். சமய இலக்கியங்களையும் படித்துச் சுவைத்து ஆய்வு செய்யவேண்டும் என்னும் அடிப்படை ஆர்வத்துக்கு இம்மாலை துணை செய்தல் காணலாம். இது இம்மாநாட்டுக்குக் கிடைத்த வெற்றிதான்.

ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தவாறு பக்கம், தலைப்பு, பொருள், மரபு, காலம் இவற்றைக் கடந்த கட்டுரைகள் ஓரளவு செம்மை செய்யப் பெற்றன. என்றாலும் பெரும்பாலும் ஆய்வாளர்களின் கருத்துக்களை மாற்றவோ, சிதைக்கவோ செய்யாமல்தான் பதிப்புப்பணியை மேற் கொண்டோம் என்பதை ஈண்டுக் குறிப்பிட விரும்புகிறோம். சிலர் தலைப்பையே ஒரு பத்தி போல இரண்டு மூன்று வரிகளில் அமைத்து வழங்கியிருந்தனர். உட்தலைப்புகளையும் பொருத்தமில்லாமல் நீட்டி

யிருந்தனர். அவற்றையெல்லாம் பொருள் மாறாமல் சுருக்கித் தரவேண்டிய சூழல் ஏற்பட்டது. தலைப்புகளில் கூறியது கூறல் வராமல் கூடுமான வரை சிறு சிறு மாற்றங்களை மட்டும் மேற்கொண்டு தலைப்பை ஒரு வரிக்குள் அடங்குமாறு தரப்படுத்தி அச்சிட்டிருக்கிறோம். திரும்பத் திரும்ப வரும் நூல் வரலாறு, ஆசிரியர் வரலாறு போன்றன தவிர்க்கப் பெற்றன. என்றாலும் தவிர்க்க முடியாமல் சிலவற்றில் இவை இடம்பெற்றுள்ளன.

கட்டுரைகளில் தொடர்ப்பிழைகள், ஒற்றுப்பிழைகள், மரபு மற்றும் சாத்திரப் பிழைகள் பெரும்பாலும் களையப்பெற்றன. கூடுமானவரை கட்டுரைகளை ஆசிரியர் அகர வரிசையில் அமைத்தும் இறுதியில் வந்த சில கட்டுரைகள் தாமதமானதால் அவ்வாறு செய்ய முடியாமல் போய் விட்டன. இவை பொருள்வாரியாகவோ, அமர்வு வாரியாகவோ பிரிக்க முடியாத சூழலில் அமைந்துவிட்டன. இறுதியில் கட்டுரை யாளர்களின் முகவரியை இணைத்துள்ளோம். இது ஒன்றே முழுமையான அகர வரிசையாக அமைந்தது.

இக்கட்டுரைகளில் சில தவிர்க்க முடியாத, பதிப்பின் அழகுக்குத் துணை செய்ய வேண்டிய மாற்றங்களைத்தான் செய்திருக்கிறோமே தவிர அடிப்படைச் செய்திகளில் நாங்கள் தலையிடவில்லை. எனவே, கட்டுரைகளில் காணப்பெறும் செய்திகளுக்குக் கட்டுரையாசிரியர்களே பொறுப்பாவர் என்பதை வெளிப்படையாகத் தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளோம். குறையும், நிறையும், உரிமையும் அவர்களைச் சார்ந்தனவே.

கட்டுரையாசிரியர்களின் கருத்துகள் அமர்வுகளின் தடை விடை களுக்குப்பின் மேலாய்வுக்குரியன. தொடர் விவாதத்துக்குரியன. எனவே இவை முழுமைபெற்ற கருத்துகளைக் கூறுகின்றன எனக் கொள்ள முடியாது. ஆய்வுகள் தொடரவேண்டும் வளரவேண்டும் எனில் முன்னோர் எண்ணங்களை ஊடுருவவேண்டும் என்பர். ஆதலின் இக்கட்டுரை களைப் பலரும் படித்துச் சிந்திக்க வேண்டும் எனும் வேண்டுகோளை உங்கள் முன் வைப்பதில் நாங்கள் மகிழ்கின்றோம். ஆய்வுகள் பெருகவேண்டும் வளரவேண்டும் எனும் நோக்கிலேயே இவற்றை ஒன்றாகத் தொகுத்து வழங்கியுள்ளோம். இது சிவப்பிரகாசர் ஆய்வு களுக்கு மட்டுமல்ல பிற புலவர்களின், பிற நூல்களின் ஆய்வுகளுக்கும் வழிவகுக்கும், துணைசெய்யும் எனலாம். சுருங்கச் சொன்னால் சிவப்பிரகாசர் கலைக்களஞ்சியத்துக்கு இது ஒரு முன்னோடி நூலாகத் திகழும் சிறப்புடையது எனலாம்.

சிவப்பிரகாசரால் தமிழ் வளம் பெற்றது என்பதற்கு இம்மாலை ஒரு கட்டியமாக அமைந்துள்ளது. இதுவே இம்மாநாட்டின், இவ் ஆய்வு மாலையின் வெற்றி என மகிழ்கின்றோம்.

நன்றியுரை

இம்மாநாட்டிற்கு வித்திட்ட பதிப்புச் செம்மல் பேராசிரியர் மெய்யப்பன் அவர்களுக்கு முதற்கண் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்கள், ஒருமுறை நேரில் சந்தித்தபோது ‘குமரகுருபரர், சேக்கிழார், மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை ஆகியோர்க்குத் தனி மாநாடு நடத்தியது போல சிவப்பிரகாசருக்கு ஒரு மாநாடு நடத்தலாமே’ என்ற கருத்துருவை வைத்தார்கள். அதன்பின், வீரசைவ மடமாகவும் தமிழ் உணர்த்தும் மடமாகவும் விளங்கும் பேரூர் சாந்தலிங்கர் திருமடத்தை அணுகுவது என்பதை முடிவு செய்து கொண்டு தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் மாண்புநிறை முனைவர் இ. சுந்தரமூர்த்தி அவர்களின் இசைவை வேண்டி நின்றோம். தாம் பொறுப்பேற்ற சில நாளிலேயே இப்பெரிய மாநாட்டை வரவேற்று, வேண்டியவாறு துணை செய்வதாக உறுதியளித்த அவர்கள், இம்மாநாட்டைப் பேரூர் மடத்தில் வைத்துக் கொள்ளலாம் என ஆணை வழங்கினார்கள். எனவே அவர் களுக்கு இரண்டாம் நிலையில் நன்றி சொல்வதை மெத்தப் பொருத்த மாகக் கருதுகின்றோம்.

இப்பெரிய மாநாட்டின் திட்டங்களை வரவேற்று ஊக்கப்படுத்திய துடன் மாநாட்டைப் பேரூரில் பேரூர் ஆதீனத்தின் செலவிலேயே நடத்து வதற்குக் கயிலைப்புனிதர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் திருவுளம் பற்றினார்கள். மாநாட்டின் சுற்றறிக்கை முதலாக ஒவ்வொரு பணியிலும் ஆய்வுக் கட்டுரைகளின் ஒவ்வொரு செய்தியிலும் தாமே முன்னின்று ஈடுபட்டுப் பணி முன்னேற்றங்களை தொடர்ந்து உசாவி யறிந்து அருளாணைகள் வழங்கித் துணைபுரிந்த நம் அடிகளாரே இம்மாநாட்டிற்கு மூலகாரணமாக விளங்குகின்றார்கள் என்பதை ஈண்டுக் குறிப்பதில் பெருமைப்படுகிறோம்.

அடிகளார் தாமே ஒரு ஆய்வாளராக விளங்கி இந்த ஆய்வு மாலையின் முதல் மலரை, முதற் கட்டுரையை வழங்கி, ஆய்வு மாநாடு களில் தமக்கிருக்கின்ற ஈடுபாட்டை வெளிப்படுத்தினார்கள். தமக்கிருக் கின்ற பல்வேறு திருப்பணிகளுக்கிடையிலும் வயது தளர்ந்த சூழலிலும் தம்மையும் ஒரு ஆய்வாளராகக் காட்டிக் கொள்ளும் அவர்தம்

பொறுப்புணர்வை எண்ணி எண்ணி வியக்கின்றோம். தமிழ்மொழியிடத்தும், சிவ வழிபாட்டிலும், வீரசைவ நெறியிலும் அவர் கொண்ட பக்திச் சிறப்பை அவர்தம் செயன்மைகள் நாளும் வெளிப்படுத்துவனவாம்.

எதிர்பார்த்த அளவுக்குக் கட்டுரைகள் வரவில்லை என நாங்கள் சோர்வுற்று மயங்கியபோது - 'இந்தக் காலத்தில் சிவப்பிரகாசரை இவ்வளவு பேராவது படித்தார்களே என்று மகிழ்ச்சியடையலாம், கவலை வேண்டா, சிறப்பாக நடத்துவோம்' என ஊக்கப்படுத்தினார்கள். அத்துடன் நூல் வெளியீட்டிற்குப் போதுமான பணம் வரவில்லையே எனத் துவண்டபோது - எப்படியும் நூல் வெளிவந்துவிட வேண்டும். எக்காரணத்தாலும் நூலச்சு தடைப்படக் கூடாது. மாநாட்டின் நோக்கமே நம் எண்ணங்களை அச்சில் பதிவு செய்வதுதான். எனவே ஆய்வுக் கட்டுரைகளை அச்சிட்டு விடுங்கள். நூலச்சுச் செலவுக்கு வேண்டிய தொகையை நாமே வழங்குவோம், நாமே 100 படிகள் பெற்றுக் கொண்டு துணை செய்வோம், கவலைப்படாமல் நூலச்சுப் பணியை மேற்கொள்ளுங்கள் என அருளாணை வழங்கினார்கள். அவர்கள் தந்த இந்த ஊக்கமும் ஆக்கமும் காரணமாகவே இம்மாலை இப்போது வெளிவருகின்றது. இப்பேருதவியை - சூழல், காலம், பொருள் நோக்கிச் செய்த இவ் அருந்துணையை வியந்து போற்றிப் பணிகின்றோம்.

மாநாட்டின் விழாச் செலவுகளையும், இவ்வளவு பேரும் மூன்று நாள் தங்குவதற்கும் உண்பதற்குமான பெருஞ்செலவுகளையும் அடிகளாரே மனமுவந்து ஏற்றுக் கொண்டார்கள். மூன்று மாதங்களாக இம்மாநாட்டைச் சிறப்பாகச் செய்து முடிக்க வேண்டுமே என அவர்கள் மிகப் பொறுப்புணர்வுடன் இயங்கிய இயக்கத்தை நீடு நினைந்து போற்றுகின்றோம். அடிகளாரின் கருணை உள்ளத்தை, வெள்ளத்தை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அவர்தம் பொன்னார் திருவடிகளின் அருட்கனிவுக்கு வழிபாட்டுடன் நன்றி பாராட்டுவதை எங்கள் வாழ்நாள் கடமையாகவே கருதுகின்றோம்.

வட இந்திய யாத்திரையில் ஈடுபட்டிருந்தபோதும் பேரூர் ஆதீனத்தின் இளைய அடிகளார் தவத்திரு கயிலை மருதாசலம் அடிகளார் அவர்கள் இம்மாநாட்டுப் பணிகளில் ஈடுபட்டுப் பெரிதும் துணை நின்றார்கள். அவர்களும் பேரூர் மடத்தின் மேலாளர், பணியாளர்கள் மற்றும் கல்லூரியினர் அனைவரும் இம்மாநாடு வெற்றி பெறப் பல்வகையிலும் துணை நின்றார்கள். அவர்கள் அனைவர்க்கும் எங்கள் நன்றி உரியது.

இம்மாநாட்டினைப் பேரூர் மடத்துடன் இணைந்து தஞ்சாவூரில் இருக்கும் களம்பூர் கோவிந்தசாமி அடிகளார் அறக்கட்டளையினர் நடத்துகின்றனர். அவர்கள் கொண்ட முயற்சியும், திட்டங்களும் இம்மாநாட்டின் வெற்றிக்குத் துணை புரிந்தன. சைவ மாநாடுகளைத் தொடர்ந்து நடத்தி வரும் அவர்களுக்கு எங்கள் கனிவான நன்றி உரியதாகும்.

எல்லாவற்றுக்கும் மேலாக எங்கள் திட்டங்கள், மாநாடுகள் ஆகிய அனைத்துக்கும் ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து அருள் புரியும் எங்கள் காசிவாசி கயிலை மாமுனிவர் காசித்திரு மடத்தின் அதிபர் சுவாமிகள் திருவளர்திரு முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் பொன்னார் திருவடிகளை ஈண்டு நினைவு கூர்கின்றோம். அவர்கள் இலக்கிய மாநாடுகளிலும் சமய மாநாடுகளிலும் பெரிதும் அக்கறை கொண்டவர்கள். படித்தவர்களும் பாமரர்களும் சமய இலக்கியங் களைக் கண்டு கொள்ளாமல் நழுவுகின்றனரே எனப் பெரிதும் கவலைப் படுவார்கள். புறநானூறு, அகநானூறு, கலித்தொகை போன்ற சமயஞ் சாராத இலக்கியங்களில் கூட இலைமறை காயாக ஒளிந்திருக்கும் சமயக் கருத்துகளை யெல்லாம் நுண்ணிதின் ஆய்ந்து வெளிப்படுத்தும் நுட்பம் வாய்ந்தவர்கள். காசி மாநகரில் ஆண்டுதோறும் தாம் நடத்தும் சைவ மாநாடுகளில் எவ்வளவு பொறுப்புணர்வுடன் அக்கறை காட்டு கின்றார்களோ அதே அளவுக்குப் பிற இடங்களில் நடைபெறும் இலக்கிய மாநாடுகளுக்கும் அக்கறை காட்டுகின்றவர்களாக விளங்குகின்றார்கள். அவர்களின் இவ் இலக்கிய ஈடுபாட்டையும் மனிதநேய உணர்வையும் நீடு நினைந்து நன்றி பாராட்டுவதை வாழ்நாள் கடமையாகவே கருதுகின்றோம்.

மாலைக்கு மலர்கள் முதற்பொருளாக அமைவது போல இவ் ஆய்வுமாலைக்கும் கட்டுரைகளாகிய ஆய்வு மலர்களே முதற் பொருளாக அமைந்தன. இவ் ஆய்வுமாலை சிறப்பாக வெளிவருவதற்கு ஆய்வுக் கட்டுரைகளும் அவற்றை எழுதிய பேராசிரியர்கள், தமிழ் ஆர்வலர்கள், ஆய்வாளர்கள் எனப் பலரும் பெருந்துணை புரிந்திருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் எளிதில் கிடைக்காத, அதிகம் பரிச்சயம் இல்லாத சிவப்பிரகாசரின் நூல்களையெல்லாம் தேடித் தேடித் தொகுதலை பயின்று எழுதியுள்ள இக்கட்டுரைகள், அவர்களின் பேருழைப்பையும் தமிழ் ஈடுபாட்டையும் காட்டுவன. சிவப்பிரகாசரையும் அவர்தம் இலக்கியங்களையும் நுண்ணிதின் ஆய்ந்து, மரபு வழுவாமலும், புதிய கோணங்களிலும் ஆய்வாளர்கள் ஆய்வு செய்துள்ளனர் என்று

கூறுவது மிகையாகாது. அவர்கள் கண்ட சமூகப் பார்வை, சமுதாயச் சூழல்கள் ஆகியவற்றை இம்மலர்களில் நாம் காணலாம். எனவே ஆய்வுக் கட்டுரைகளை வழங்கிச் சிறப்பித்த அனைவரையும் தனித்தனியே பாராட்டி நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவர்களின் தொடர்ந்த ஒத்துழைப்பு மேலும் பல கருத்தரங்குகளுக்கு ஊக்கமூட்டும் என நம்புகிறோம். இத்தகு ஒத்துழைப்பு தமிழ் மொழியை மேலும் வளஞ் செய்வதாக அமையும் என முழுமையாக எதிர்பார்க்கலாம்.

இந்த ஆய்வுமாலையை அச்சிட நிதிப்பற்றாக்குறை இருந்த போது 'கவலைப்பட வேண்டாம், அச்சுப்பணியை ஏற்று முடித்துத் தருகிறோம்' என ஊக்கப்படுத்தியதுடன் அழகுற அச்சிட்டு உரிய காலத்தில் வழங்கித் துணைபுரிந்த சிதம்பரம், சபாநாயகம் அச்சகத் தாரின் துணை பெரிதும் பாராட்டுக்குரியது. அதன் உரிமையாளர் திரு இரா. கௌதமசங்கர், அச்சக மேலாளர் திரு மு. பாஸ்கரன் மற்றும் அச்சகப் பணியாளர்கள் அனைவர்க்கும் எங்கள் உளங்கனிந்த நன்றி உரியது.

எல்லாவற்றுக்கும் மேலாகத் தோன்றாத் துணையாக இருந்து திருவருள்பாலித்து இப்பெரு மாநாடும், ஆய்வு மாலையும் நிறைவுறத் துணைபுரிந்த திருவருளை நினைந்து நினைந்து வணங்கி வாழ்த்தி நன்றி பாராட்டி மகிழ்கின்றோம்.

– பதிப்பாசிரியர்

சிவப்பிரகாசர்

சிவப்பிரகாசர் எனும் பெயரில் புலவர், ஞானியர், துறவியர் எனப் பலர் இருந்திருக்கின்றனர். அவர்களுள் நம் விழா நாயகராக விளங்கும் சிவப்பிரகாசர் பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும் புலவராவார். இவரைத் துறைமங்கலம் சிவப்பிரகாசர் எனவும் நல்லாற்றூரில் சமாதி கொண்டதால் நல்லாற்றூர் சிவப்பிரகாசர் எனவும் அழைப்பர். ஆயின் தமிழுலகம் இவரைக் கற்பனைக் களஞ்சியம் என்று அழைத்துப் பெருமை கொள்ளும். அந்த அளவுக்கு இவர்தம் கவிதைகள், கவிச்சுவையும், பொருட்சுவையும், இலக்கிய அணிநலன்களும் நிரம்பி பாராட்டப்பெற்ற சிறப்புடையதாகும். தமிழிலக்கிய வரலாற்றில் இப்புலவருக்குத் தனிஇடம் உண்டு. அவ்வாறே சமய உலகிலும் நிரந்தரமான சிறப்பிடத்தைப் பெற்றவராகத் திகழ்கின்றார் நம் சிவப்பிரகாசர். சொற்சுவையும் பொருட்சுவையும் நிரம்பப் பெற்ற கவிதைகளின் நோக்கம் இறைவன் புகழைப் பாடுவதே என்னும் கொள்கையில் தலைநின்ற சிவப்பிரகாசர் வீரசைவ பக்திநெறியையும் சைவ சித்தாந்த நெறிமுறைகளையும் இணைத்து இறைவனைப் பாடிப் பரவியதால் சைவ சமய உலகிலும் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றவராகத் திகழ்கின்றார். ஆக, தமிழுலகிலும் சமய உலகிலும் சிறப்பாகப் போற்றப் பெறும் இப்புலவரின் வாழ்வையும் இவர்தம் நூல்களையும் ஓரளவு அறிமுகமாகக் காண்பதே இப்பகுதியின் நோக்கம்.

தொண்டை நன்னாடு சான்றோருடைத்து என்பர். அவ்வண்ணமே வாழையடி வாழையாக வந்த திருக்கூட்ட மரபில் நம் சிவப்பிரகாசர் கல்வியிற் கரையிலாத காஞ்சி மாநகரில் கி.பி. 1603-ம் ஆண்டு தோன்றினார். இவர் தம் தந்தையார் தொண்டை மண்டல வேளாளர்க்குத் தீட்சா குருவாக விளங்கிய குமாரசுவாமி தேசிகர் ஆவார். இவருடன் பிறந்தார் வேலாயுதம், கருணைப்பிரகாசர், ஞானாம்பிகை எனும் மூவராவர். இவர்களும் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியவர்களே. குறிப்பாக ஞானாம்பிகையம்மையார் சாந்தலிங்க அடிகளார்க்கு மனைவியாகத் திகழ்ந்த சிறப்புக் கொண்டவர்கள்.

சிவப்பிரகாசர் இளமையில் திருவண்ணாமலையைத் தரிசித்து மலைவலம் வரும்போது அண்ணாமலையைச் சிறப்பித்து 100

பாடல்களைப் பாடினார். அவை சோணசைலமாலை என்ற நூலாக அமைந்தன. முதல் நூலாக இம்மாலையே, அவர் சிற்றிலக்கியங்கள் பாடுவதில் வல்லவராவார் என்பதற்குக் கட்டியம் கூறுவதாக அமைந்தது. பின்னர் அவர் துறைமங்கலம் சென்றபோது, அண்ணாமலை ரெட்டியார் என்பவர் அவருக்கு அணுக்கத் தொண்டராய் அமைந்து ஆங்கே திருமடமும் கட்டித்தந்து சுவாமிகளை அங்கேயே தங்கியருளுமாறு வேண்டினார். அதன் பின்னர் நம் சிவப்பிரகாசர் தாமிரபரணிக் கரை யிலுள்ள சிந்துபூந்துறை எனும் தலத்தையடைந்து அங்கிருந்த தருமபுர ஆதீனத்து வெள்ளியம்பலத் தம்பிரான் சுவாமிகளின் மாணாக்கராய்ச் சேர்ந்து தமிழிலக்கிய இலக்கணங்களை அவரிடம் பாடங்கேட்டுத் தேர்ந்தார். சிவப்பிரகாசரின் மதிநுட்பம் அவர்தம் உடன்பிறந்த வேலைய சுவாமிகள், கருணைப் பிரகாசர் ஆகியோரும் அத்தம்பிரானிடம் பாடங் கேட்கும் தகுதியைத் தந்தது. இவ்வாறு கல்வி கேள்விகளிற் சிறந்த நம் சிவப்பிரகாசரின் நிரோட்டக யமக அந்தாதி எனும் நூல் குருகாணிக்கை யாகப் பாடப்பெற்றது என்பர். அந்நூலால் தம்பிரானுக்கு எதிராகவிருந்த திருச்செந்தூர் புலவர் ஒருவர் தம்பிரானுக்கு அடிமையாகவே மாறி விட்டதாக வரலாறு கூறுவர்.

பின்னர் சுவாமிகள் பல தலங்களைத் தரிசித்துக் கொண்டு சிதம்பரம் முதலிய சிவத்தலங்களில் தங்கியிருந்தனர். மீண்டும் அண்ணாமலை ரெட்டியாரின் வேண்டுகோளுக்கிணங்க திருவெங்கனூர் வந்து மடத்தில் தங்கியிருந்து பல நூல்களைச் செய்தருளினார். அப்போது பொம்மபுரத்து சிவஞான பாலைய சுவாமிகளைச் சந்தித்தபோது அவர்மீது பிள்ளைத் தமிழ், உலா, கலம்பகம் முதலிய நூல்களைப் பாடித் துதித்தனர் என்ப.

சுவாமிகள் துறவு வாழ்க்கை மேற்கொண்டதால் பல்வேறு திருத்தலங்கட்கும் சென்று வழிபட்டு வீரசைவ நெறிகளைப் பரப்பு பவராகத் திகழ்ந்தார். இவருக்கு வடமொழி, கன்னடம், தெலுங்கு போன்ற பிறமொழிகளிலும் புலமையுண்டு என்பர். இவர் தம் பிரபுலிங்க லீலை என்னும் நூல் கன்னட மொழியினின்று மொழிபெயர்க்கப் பெற்ற சுவையான காப்பியமாகும். வேதாந்த சூடாமணி, சித்தாந்த சிகாமணி, தருக்க பரிபாஷை போன்ற நூல்களும் இவர்தம் பிற மொழியறிவைப் பறைசாற்றுவனவே எனலாம்.

நன்னெறி, நால்வர் நான்மணிமாலை போன்ற நூல்களையெல்லாம் அருமையாகப் பாடியருளிய நம் சிவப்பிரகாசர் தம் முப்பத்திரண்டாம் அகவையில் (கி.பி. 1654) நல்லாற்றூரில் சமாதி கொண்டு நிலைத்தார் என்பர். வீரசைவத் துறவியாக வாழ்ந்து சிறநெறிகளை மட்டுமே பரப்பி

வந்த சிவப்பிரகாசரைத் தமிழுலகம் கொண்டாடுவது ஏன்? அவரைப் பாராட்ட வேண்டிய காரணம் என்னை? எனப் பலப் பல வினாக்கள் தோன்றும்போது அவர்தம் தமிழறிவும் தமிழ்ப் பற்றுமே இவை அனைத்துக்கும் காரணமாயிற்று எனலாம். வடமொழி தென்மொழி இவற்றை ஒப்பிட்டு அவர் தமிழ் மொழியின் சிறப்பை எடுத்துக் காட்டித் தம்மை இனங்காட்டிக் கொண்டார். தமிழ் உயர்தனிச் செம்மொழி மட்டுமல்ல. அது உணர்வுப் பூர்வமான உயிரோட்டமான மொழி எனக் கண்டு உலகுக்கு உணர்த்தினார். சுருங்கக் கூற வேண்டுமானால் தமிழ்மொழி அவரால் வளம் பெற்றது. வளர்ச்சி கண்டது. சிவப்பிரகாசர் இலக்கியங்கள் தமிழை வளப்படுத்தின எனலாம். இனி அவர்தம் நூல்களை அறிமுகமாக்குவோம்...

சிவப்பிரகாசர் அருளிய நூல்கள்

1. சோணசைலமாலை

திருவண்ணாமலைக்குத் தலயாத்திரை மேற்கொண்ட சுவாமிகள், திருவண்ணாமலையை வலம் வரும்போது அண்ணாமலையாரின் அருள்வேட்டுப் பாடிய நூலாக இது திகழ்கிறது. நூறு பாடல்களைக் கொண்டது. அம்மாலையிலிருந்து ஒரு பாடல் :

காமரை முனிந்த முனிவரர் புகுமெய்க்
கதியிடைப் புகவிடுத் திடினும்
பாமரன் இவனென்று இருளின்உய்ப் பினும்நின்
பதமலர் அன்றிவேறு உளதோ
வாமரை பொருந்தும் உலகுள குவட்டு
மலைகள் போலாது உணா முலையாம்
தாமரை பொருந்து மானுள்வாழ் சோண
சைலனே கைலைநா யகனே. (81)

2. திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதி

அந்தாதி அமைப்பில் பாடப்பெற்ற இந்த நூல் இதழொட்டா உயிர் மெய்களைக் கொண்டு பாடப்பெற்ற யமகமாகும். சிந்துபூந்துறை வெள்ளியம்பலத் தம்பிரான் கட்டளையிட்டருளியபடி கல்வியிற் செருக்குற்ற ஒரு புலவனை வெல்லும் பொருட்டு திருச்செந்தூர் முருகன் அருளால் பாடப்பெற்றதாகும். இது முப்பது பாடல்களைக் கொண்டதாம். அந்தாதியில் ஒரு பாடல் :

சங்கங் களங்கழ னிக்கரை சேர்செந்திற் றங்கினநஞ்
சங்கங் களங்கர நண்ணரன் சேயெய்தச் சார்ந்தஞ்சற்

சங்கங் களங்க னியைநிகர் தண்ட தரற்கினிய
சங்கங் களங்க ரெனநின்ற யாங்கணெஞ் சங்கரைந்தே. (10)

3. திருவெங்கைக் கோவை

திருச்சி மாவட்டம் பெரம்பலூர் வட்டத்தைச் சேர்ந்த வெங்கனூரி லிருக்கும் இறைவன்மீது பாடப்பெற்ற கோவை நூலாக இது திகழ்கிறது. 425 பாடல்களைக் கொண்ட அரிய கோவை நூலாக இது காணப் படுகிறது. சிந்தாமணி, மணிமேகலை, திருக்கோவையார் முதலிய நூல்கள் இந்நூலில் பயின்று வருதல் நயமிக்கதாகப் பேசப்படுகிறது. வெங்கைக் கோவையில் ஒரு பாடல் :

தலைமகள் பாங்கியொடு உரைத்தல்

நல்லார் தொடர்புஇளங் காய்முதிர் வாமென நாடுரைப்ப
வல்லார் மணிமிடற்று எம்மான் திருவெங்கை யாதிவெற்பின்
மல்லார் திணிபுயத்து அன்பர்நம் பான்முனம் வைத்தநட்பு
வில்லார் சிறுமென் தளிர்முற்ற லாகி விளைந்ததுவே (198)

4. திருவெங்கைக் கலம்பகம்

கலம்பக உறுப்புகள் எல்லாம் அமைக்கப் பெற்று திருவெங்கனூர் இறைவன் மீது பாடப்பெற்ற அழகிய கலம்பகமாக இது திகழ்கிறது. இறைவன் திருவடிக்கு இணையாகத் திருக்குறளைக் கற்பித்துப் பாடி யிருக்கும் கற்பனை பிற எந்த நூலிலும் காணமுடியாத சிறப்புடையதாகும். இதில் பெரியபுராணமும் அது சுட்டும் அடியார்களின் அருமையையும் ஒவ்வோரிடத்தும் சுட்டிப் புகழ்ந்திருக்கும் முறை சுவைத்து மகிழத் தக்கதாம். நூறு பாடல்களைக் கொண்ட இந்நூலிலிருந்து ஒரு பாடல் :

என்னடிகள் வெண்குறணே ரடியிரண்டு
மென்றலையி லிருத்துமிறை வெங்கை நாட்டின்
முன்னடிக ளிரண்டுநெடி லடிகள் பின்னர்
முயங்கடிக ளிரண்டுநே ரடிக ளாகப்
பன்னடிக ளொருநான்கு கொகுந டக்கும்
பழுதகலவெண் டுறைபோலப் படர்த லாலே
பின்னடிக ளெங்கடிரு வடிகள் முன்னர்ப்
பெயர்ந்தவடி யெழிலிளஞ்சே யடிக ளாமே (42)

இதில் என்னடிகள் எனத் திருவள்ளுவரை உயர்த்தியிருத்தல் நோக்கத் தகுவதாகும்.

5. திருவெங்கையுலா

இந்நூலும் திருவெங்கனூர் இறைவனைச் சிறப்பித்துப் பாடியதுதான். இந்நூலுள் சிவப்பிரகாசர் தம்மை ஆதரித்த அண்ணாமலைரெட்டி யாரைச் சிறப்பித்துப் பாடியிருப்பது நோக்கத் தகுவதாம். மணிமுத்தா நதியைப் பெரிதும் புகழ்ந்து பாராட்டிய இடங்கள் இலக்கிய நயம் மிக்க பகுதிகளாம். உலா நூல் வரிசையில் இந்நூல் சிறப்பிடம் பெறுவதாகும். மொத்தம் 419 கண்ணிகளால் இயன்ற இந்நூலின் சில பகுதிகள்.

திருமாலும் நான்முகனுந் தேடும் பொருளைக்
கருமா மிடற்றெங் கரும்பைப் - பெருமானைத்
தெள்ளமுதைத் தெய்வ சிகாமணியைத் தன்னடியார்
உள்ளுயிரைத் தோன்றா வுறுதுணையைக் - கள்ளவிழுங்
கொன்றைப் பவளநெடுங் குன்றைப் பழமலையை
மன்றிற் குனிக்குமொரு மாமணியைச் - சென்றுற்
றுளத்துப் புணர்ந்துவிடாது ஓங்கின்ப முற்றாள் (413 - 16)

6. திருவெங்கை அலங்காரம்

இதுவும் வெங்கனூர் இறைவனைப் புகழும் ஒரு சிற்றிலக்கிய மாகும். ஆனால் இன்று வரை இந்நூல் கிடைக்கவில்லை.

7. சிவப்பிரகாச விகாசம்

இது சைவ சித்தாந்தக் கருத்துகளை விளக்கமாக உணர்த்தும் நூலாகச் செய்யப்பெற்றது. 150 பாடல்களுக்கு மேல் இடம்பெற்ற இந்நூல் குறை நூலாகக் காட்சி தருகிறது. பதிமரபு, பசுமரபு, பாசமரபு என முப்பொருள் உண்மைகளை விளக்கியுரைத்தல் இந்நூலின் தனிச்சிறப்பு.

பாசமரபு

சடமெனப் பட்டுப் பாசந் தீர்தர வேதுவாகிப்
படர்வுறு பாசம் நான்காம் பாசத் தியாகிப் பாசத்
தொடர்தனி னுபசரித்து மலமெனச் சொல்லும் வண்ண
மடைவுறு திரோத சத்தி யலாவிடத் தென்று கொள்ளே.

8. தருக்க பரிபாஷை

தர்க்கம் பயில்வார்க்குப் பால பாடமாக அமையும்வண்ணம் உரைநடையிற் செய்யப்பட்ட நூலாக இது திகழ்கிறது.

'நியாயநூற் பிரவேசஞ் சுருங்கிய கேள்வியினா லடைதலை
மடியனாயும் வார்சிக்கின்ற பாலனெவன் அவனுக்கு
யுக்தியந்வித தர்க்க பரிபாஷையை யான் சுருக்கி
விளக்குகின்றேன்'

எனத் தொடங்கும் இந்நூல்...

'பிரமாணம், பிரமேயம், சம்சயம், பிரயோசநம், திட்டாந்தம், சித்தாந்தம், அவயவம், தருக்கம், நிண்ணயம், வாதம், சற்பம், விதண்டை, ஏத்துவாபாசம், சலம், சாதி, நிக்கிரகத்தாநங்களது தத்துவ ஞானத்தால் உயர்சிறப்படைய'...

எனத் தொடர்கிறது.

9. நால்வர் நான்மணிமாலை

திருமுறையாசிரியர்களாகிய அப்பர், ஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரைப் புகழ்ந்தும் திருமுறைகளைப் போற்றியும் எழுதப் பெற்ற அரிய நூலாகும். சைவர்களிடையே அதிகம் பயிலப் பெறும் நூலாகவும், பெரியபுராணத்தின் சாரமாகப் போற்றப்படும் நூலாகவும் இது விளங்குகிறது. 40 பாடல்களே கொண்ட இந்நூலுள் நால்வகைப் பாக்கள் கலந்து மகிழ்வூட்டுகின்றன.

வலமழு வுயரிய நலமலி கங்கை
நதிதலை சேர்ந்த நற்கருணைக் கடல்
முகந்துல குவப்ப வுகந்தமா ணிக்க
வாசகன் எனுமொடு மாமழை பொழிந்த
திருவாசக மெனும் பெருநீர் ஒழுகி
ஓதுவார் மனமெனும் ஒண்குளம் புகுந்து
நாவெனு மதகினடந்து கேட்போர்
செவியெனு மடையிற் செவ்விதிற் செல்லா
வுளமெனு நிலம்புக ஊன்றிய வன்பாம்
வித்திற் சிவமெனும் மென்முளை தோன்றி
வளர்ந்து கருணை மலர்ந்து
விளங்குறு முத்தி மெய்ப்பயன் தருமே (16)

10. சதமணி மாலை

வடமொழி ஆகமச் சூத்திரங்கள் தரும் செய்திகளை, சைவ சித்தாந்தக் கருத்துக்களைத் தமிழில் மொழிபெயர்த்து செய்யப்பட்ட நூலாகும். நூறு பாடல்களைக் கொண்ட இந்நூல் ஒவ்வொரு சூத்திரத்தையும் தலைப்பிட்டுப் பொருள் காண வைத்துள்ளது குறிக்கத் தக்கதாம்.

இது பராக்கிய சூத்திரப் பொருள்

சிவநில முளைத்துயர் சிறப்பு ணர்த்திவெம்
பவமறு மருந்தெனப் பட்டு நன்கமை
சுவையொடு முடிவுறிற் சுகம ளித்தரு
ணவையக லினையவிஞ் ஞானங் கொள்கவே (6)

11. சிவஞான பாலைய சுவாமிகள் நெஞ்சுவிடு தூது

இத்தூது நூல் சிவஞான பாலைய சுவாமிகள் மீது பாடப் பெற்றதாகும். மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் குருமுதல்வராகிய சிவஞான பாலைய சுவாமிகள் மீது - சாந்தலிங்க சுவாமிகளின் வேண்டுகோளுக்காகப் பாடப் பட்டதாக இதன் வரலாறு கூறுவர். இந்நூலுள் தசாங்கமும் புறச்சமயக் கண்டனமும் மிகத் தெளிவாகவும் சுவையாகவும் சொல்லப்பட்டுள்ளன. தூது நூல்களில் இது சிறப்பிடத்தைப் பெறும் நூலாகக் கருதப்படுகிறது. 255 கண்ணிகளையுடைய இத்தூது தேசிகனை இறைவனாகவே காட்டுதல் காணலாம்.

பத்திக் கடலுட் படிந்த அடியார்க்குத்
தித்திக்குங் கோதிலாத் தேறலே - முத்திக்குச்
சாதியாய் அன்றுஉரிமை சாதனத்தால் என்றுண்மை
போதியா நல்குமொரு பொன்மலையே - நீதியால்
வீடும் பொருளும் வெறுத்துமுத்தி வேண்டுவார்
தேடுஞ் சிவஞான தேசிகனே.

12. சிவஞான பாலைய சுவாமிகள் தாலாட்டு

இதுவும் அக்குருநாதர் மீது பாடப்பட்ட தாலாட்டு வகையைச் சார்ந்த சிற்றிலக்கியமாம். வீரசைவ சித்தாந்தங்களை மிகத் தெளிவாக விளக்குகின்ற நூல்களுள் இது சிறப்பாக எண்ணத் தகுந்ததாம்.

எந்தைசிவ சாதனங்கட் கெல்லாம் திருநீறு
முந்தியதென்று உண்மை மொழியும் பெருமானோ
உருத்திரனே ஐயமிலை ஒருத்தி ராக்கந்
தரித்தவன் என்றெமக்குச் சாற்றும் பெருமானோ
ஒண்மறையின் கண்ணாம் உருத்திரம்அவ் அஞ்செழுத்தும்
கண்மணியென் றையமறக் காட்டும் அருட்கடலோ. (75)

13. சிவஞான பாலைய தேசிகர் பிள்ளைத்தமிழ்

இந்நூலும் அக்குருநாதர் மீது பாடப்பட்ட சிற்றிலக்கியமாகும். தாம் குருநாதரிடம் பெற்ற அருட்சிறப்புகளை இத்தமிழில் சிவப்பிரகாசர் பிழிந்து தந்திருக்கிறார். பருவத்துக்குப் பதில் பாடல்களாக இப்பிள்ளைத் தமிழ் பாடப் பெற்றுள்ளது.

வாரானைப் பருவம்

முட்டு மார்புல னாய சேனைகண் முறியமான்
முற்று நானெனும் வேழ மாய்வுற மனமென்மா
பட்டு வீழ்தர வாவி யாமர சுடையவே
பற்றி ஞானநல் வாளி னாலொரு தமியனாய்

வெட்டு பாணிய னான லாலய லிலையெனா
வெற்றி யாலறி வாகு மோர்நக ரிமையுளே
கட்டு மாறெதிர் மாறில் சேவகன் வருகவே
கச்சி வாழ்சிவ ஞான தேசிகன் வருகவே (9)

14. சிவஞான பாலைய சுவாமிகள் கலம்பகம்

இச்சிற்றிலக்கியமும் சிவஞான பாலைய சுவாமிகள் மீது பாடப் பெற்றதாகும். 93 பாடல்களே இப்போது கிடைக்கின்றன. வெங்கைக் கலம்பகம் போலவே சொற்சுவை கற்பனை வளம் முதலியன சிறக்கப் பெற்ற நூலாக இது திகழ்கிறது.

ஞானியஞ் ஞானியெனல் ஞானசம் பந்தனெனுந்
தானிமணப் பந்தற்குத் தப்பியுழன் - மானுடர்காள்
நில்லாமல் வம்மினோ நின்றசிவ ஞானிபத
மெல்லாம் வழங்குகின்றான் இன்று (79)

15. சிவஞான பாலைய தேசிகர் திருப்பள்ளியெழுச்சி

பள்ளியெழுச்சிப் பாடல்கள் 4 மட்டுமே கொண்ட தனிநூலாக இது காணப்படுகிறது. சிவஞான தேசிகனைத் துயிலுணர்த்தும் பாடல்களாக இவை காணப்படுகின்றன.

தூதுவிடு நம்பிவரு கிலன்சிலையால் எறிந்த
தொண்டனிலை விசயனும்வில் லோடும்வந்தா னில்லை
யேதமறும் இயற்பகையார் கிளைஞர்கள்வந் தடைந்தார்
இல்லைநினை மண்சுமவென் றொருபிரம்பால் அடித்தோன்
போதிலன்நின் திருவடியிற் போதுகள்தூய்ப் பரவிப்
போற்றலுறும் அடியவரே பொருந்தினர்எம் மருங்குஞ்
சீதமதி துறந்தமுடி மருவுசிவ ஞான
தேசிகனே - யருள்மலையே பள்ளியெழுந் தருளே.

தம் குருவை முற்றிலும் சிவபெருமானாகவே பாவித்து வணங்குகின்ற அவர்தம் சங்கம குருபத்தி இத்தகு நூல்களில் பெரிதும் சிறப்பிக்கப் படுதல் காணலாம். இது இந்த ஐந்து நூல்களில் காணப்படும் தனித் தன்மையாக உணரலாம்.

16. திருக்கூவப் புராணம்

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள கூவம் என்னும் ஊரிலுள்ள திருவிற்கோல நாதர் திருக்கோயிலின் புராணமாக இந்நூல் பாடப் பெற்றது. முழுமையான ஒரு தல புராணமாக விளங்கும் இந்நூலுள் நைமிசாரணியச் சருக்கம், திருத்தலச் சருக்கம், திரிபுரதகனச் சருக்கம், சந்தானகிரி சந்தானச் சருக்கம், அடிமுடி தேடிய சருக்கம், செந்நெல்

வைத்த சருக்கம், தாருகன் வதைச் சருக்கம் என ஏழு சருக்கங்களும் 703 பாடல்களும் இடம் பெற்றுள்ளன. திருவிற்கோல நாதராகிய இவ்வூர் இறைவன் திரிபுராந்தகராக திரிபுரத்தை எரித்த வரலாற்றை விரிவாகவும் இவ்வூரின் புனிதத்தை விதந்து பேசுவதாகவும் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருத்தலச் சருக்கம்

தீர்த்தமுல குளவெவையும் அப்புனித
தீர்த்தத்துக் கொவ்வா வெல்லா
மூர்த்திகளும் விற்கோல மூர்த்திதனக்
கிணையல்ல முந்நீர் சூழ்ந்த
பார்த்திகழு மருந்தலங்க ளெனப்பகரப்
பட்டவெலாம் புவன மூன்றும்
போர்த்தபெரும் புகழ்படைத்த கூவமா
நகரதனைப் போன்றி டாவே (75)

இத்தகு பாடல்களைக் கொண்ட இப்புராணத்துக் கவிநயமும் கற்பனை வளமும் புலவர்களால் பெரிதும் பாராட்டப் படுவனவாம்.

17. பிரபுலிங்கலீலை

கன்னட மொழியில் சாமரசன் என்பார் எழுதிய பிரபுலிங்கலீலை என்னும் நூலைச் சிவப்பிரகாசர் அழகிய தமிழ்க் கவிதைகளில் காப்பிய மாகப் படைத்ததாகும். இது அல்லம தேவனின் விளையாட்டைக் கூறுவதாக மாயையின் முயற்சியைத் தோல்வியுறச் செய்வதாக அமைக்கப்பட்ட கதையினைக் கூறுவதாகும். கற்பனைக் களஞ்சியம் எனும் பட்டத்தைச் சிவப்பிரகாசருக்கு வழங்கிய நூலாக இதனைக் கருதுவர். இந்நூலில் அமைந்த பொருளணி, சொல்லணிகளைப் பலரும் பாராட்டுவர்.

இருபத்தைந்து கதிகளைக் கொண்ட இந்நூல் 1159 பாடல் களைக் கொண்டதாகும்.

கையிற் சிவலிங் கத்தின்மேற்
கண்கள் வைத்திட் டெலும்பலான்
மெய்யிற் றசையொன் றின்றியே
மேவும் புனிதன் றனைநோக்கிச்
செய்ய செயலி லாதசெயற்
சிவயோ கியைக்கண் டனையோவென்
றையத் தடைந்த வவனறிய
வறிவித் துயரல் லமதேவன் (கொக்கி தேவர் - 21)

18. வேதாந்த சூடாமணி

வேதாந்த மதத்தை, கொள்கைகளை விளக்கும் நூலாகத் திகழ்கிறது. வேதாந்திகள் பாராயணம் செய்து மகிழும் சிறப்புடையது. விவேக சிந்தாமணியின் உட்பொருளான வேதாந்தத்தைத் தமிழாற் செய்தார் என்பார். 185 பாடல்களைக் கொண்டது.

விண்ணின்மல ரெனத்துச்ச மேயெனவு
மிப்பிவரு வெள்ளிபோல
வெண்ணுமநிர் வாச்சியமா மெனவுமுயிர்
போனித்த மெனவு நிற்கு
முண்ணிலவு தமமாயை மோகமுட
னவித்தை பொய்ம்மை யுருவி யென்றே
நண்ணுமிவை மாயாபாஞ் சகமாகு
மெனவறிஞர் நவில்வ ரன்றே (56)

19. சித்தாந்த சிகாமணி

வீரசைவ சித்தாந்தத்தை மிக அழகிய செய்யுள்களால் பாடப்பட்ட நூலாக இது திகழ்கிறது. இது வடமொழி சித்தாந்த சிகாமணியினின்றும் மொழிபெயர்க்கப்பட்ட நூலாகும். 880 செய்யுள்களால் அமைந்தது.

பிறந்தவர்க் குண்மையே பெறுமி றப்புமற்
றறிந்தவர்க் கன்னதே பிறப்பு மிவ்வகை
செறிந்துள பிறப்புட னிறப்பிற் சீவனு
மறிந்திடு சகடமே போல வந்துறும் (சமுசாரநீக். 3)

20. பழமலை அந்தாதி

விருத்தாசலம் என்னும் பழமலையில் வீற்றிருக்கும் இறைவன் மீது பாடப் பெற்ற 100 பாடல்களைக் கொண்ட அந்தாதியாக இந்நூல் காணப்படுகிறது.

விருத்தா சலசங் கராமலை மாது விழிகளிக்கும்
நிருத்தா சலசந் திரன்போ லுடம்பிடை நின்றவர்தங்
கருத்தா சலசம் பவமிலர்க் காண்டறங் காட்டியசொற்
றிருத்தா சலசந் தமியேன் றலைக்குன் றிருவடியே (100)

21. பிக்ஷாடன நவமணிமாலை

சிவபெருமான் தாருகாவனத்துச் சென்று முனிவர் பத்தினி களுடன் உரையாடியதாகக் கற்பனை செய்யப் பெற்ற நூலாக இது திகழ்கிறது. இலக்கிய நயமும் கற்பனை வளமும் மிகுந்த நூலாக இது திகழ்தல் காணலாம். ஒன்பது பாடல்களை மட்டுமே கொண்ட நூலாகும்.

நீருக்குத் தக்க சடையார் முதுகுன்றர் நேடியுங்கள்
ஊருக்குட் பிச்சையென் றுற்றோமுண் டாயின் உரைமினென
வாருக்குத் தக்க முலையார ரதற்குள் மற்றொருவர்
யாருக்குக் கிட்டு மதுசோறு நீர்கொளு மென்றனரே (8)

22. கொச்சகக் கலிப்பா

இது இன்னும் கிடைக்கவில்லை. ஆதலின் இந்நூல் பற்றிய விவரங்கள் கைகூடவில்லை.

23. பெரியநாயகியம்மை கலித்துறை

திருமுதுகுன்றத்து இறைவியாகிய பெரியநாயகி அம்மன்மீது கலித்துறைப் பாடல்களால் இயற்றப்பட்ட நூலாக இது காணப்படுகிறது. 19 பாடல்களே உள்ளன.

ஆறாத் துயர்கண் டடியேன் சலிப்ப வதுசெவியி
லேறாம லேயிருந் தாலென்செய் வேனெங்க ளீசற்கொரு
கூறாகி யண்ட முதலா யிளமை குலவு தவப்
பேறாகி வாழ்பவ ளேகுன்றை வாழும் பெரியம்மையே (16)

24. பெரியநாயகி நெடுங்கழி நெடிலாசிரிய விருத்தம்

இதுவும் பழமலையின் நாயகி மீது பாடப் பெற்ற தனிநூலாகும். பத்துப் பெரிய பாடல்களைக் கொண்டது.

உள்ளமென் மனையில் விருப்பொடு வெறுப்பா
முறுகுழி மேகுக ணிரவி
யொழிவிலா வாய்மை மெழுக்கினாற் பூசி
யுயர்தரு மனமெனப் படுமோர்
பள்ளிமென் றவிசி லிருத்திநின் பதியைப்
பழுதில்யா னெனப்படு நெல்லைப்
பழமல மாயைத் தவிடுமி போக்கிப்
பாகஞ்செய் தென்றருத் திடுவாய்
துள்ளுமொண் மறிமான் முல்லையு ளாயர்
சூழல்வெண் ணெய்க்குட முருட்டித்
துணைமுலைக் குவட்டின் மஞ்சண்மேற் படப்போய்த்
தோய்ந்துநின் றாடிளங் கயற்கட்
கிள்ளைமென் மொழியார் துகிலெடுத் தொளித்துக்
கேடில்சீர்க் கண்ணனா டுதல்போற்
கிளர்மணி முத்தநதியுடை விருத்த
கிரியமர் பெரியநா யகியே (5)

25. ஏசுமத நிராகரணம்

இது இன்று கிடைக்கவில்லை. கொலை மறுத்தல் எனும் நூலின் உரையில் மேற்கோளாக 3 பாடல்கள் உள்ளன.

26. நன்னெறி

நாற்பது வெண்பாக்களால் ஆன நீதி நூலாக இது திகழ்கிறது. தமிழரிடையே அதிகம் பயிலப்பட்ட நூலாக இது காணப்படுகிறது.

மாசற்ற நெஞ்சுடையார் வன்சொல்இனிதே ஏனையவர்
பேசுற்ற இன்சொற் பிறிதெனக்க - ஈசற்கு
நல்லோன் எறிசிலையோ நன்னுதலாய் ஒண்கருப்பு
வில்லோன் மலரோ விருப்பு (2)

27. சிவநாம மகிமை

11 பாடல்களில் சிவநாமத்தின் பெருமைகளைக் கூறுவதாக இந்நூல் காணப்படுகிறது.

தீப நாளொடு கோளின் செயிர்தபு
நோய கன்றிடு நூறெனக் கூறிய
வாயுள் பல்கு மறம்வளர்ந் தோங்குறுங்
தீய தீரும் சிவசிவ வென்மினே (6)

28. தலவெண்பா

இந்நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. ஆதலின் இந்நூல் பற்றிய விவரங்கள் அறியக் கூடவில்லை.

29. இட்டலிங்க அபிடேகமாலை

வீரசைவர்க்குரிய இட்ட லிங்கத்திற்கு அபிடேகம் செய்யும் விதத்தை விதந்து பாடிய நூலாக இது திகழ்கிறது. பத்து பாடல்களால் இயன்றது. ‘அபிடேகம் ஆடியருளே, அறிவுற்றென் அங்கைமலர் செறிவுற் றமர்ந்த இறை அபிடேகம் ஆடியருளே’ என முடியுமாறு இப்பாடல்கள் காணப்படுகின்றன.

30. நெடுங்கழிநெடில்

இதுவும் இட்டலிங்கப் பெருமானை வழிபடும்போது துதித்துப் பாடப் பெற்ற நூலாகும். ஒவ்வொரு பாடலும்,

‘இட்டநன் குதவியென்கரத் திருக்கும்
ஈசனே மாசிலா மணியே’

என முடியுமாறு அமைக்கப் பெற்றது. சிவபெருமான் தம் கைகளில் வீற்றிருப்பதற்கு தம் கைகள் என்ன புண்ணியம் செய்தனவோ என்று வியக்கின்றார்.

31. குறுங்கழிநெடில்

இதுவும் இட்டலிங்கப் பெருமான் மீது பாடப் பெற்ற துதி நூலாகும். 10 பாடல்களைக் கொண்டது.

பொன்செய்வா ணிகர்போ லெவ்வழி யானும்
புண்ணிய மீட்டினும் அறிஞர்
கொன்செய்பா தகமே புரிந்தன னின்றாள்
குறுகுவ தென்றென விரங்க
முன்செய்தீ வினையோ கனவினுமறமே
மொழிகிலேன் களித்திருக் கின்றேன்
என்செய்கோ மறலிக் கென்கரத் திருக்கும்
ஈசனே மாசிலா மணியே (1)

32. நிரஞ்சன மாலை

கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் 31 கொண்டதாக இந்நூல் விளங்குகிறது. இதுவும் இட்டலிங்கப் பெருமானை வாழ்த்தும் நூலாகவே காணப்படுகிறது. வீர சைவ பழக்கங்களை எண்ணங்களைப் பதிவு செய்யும் நூலாக இவை விளங்குகின்றன.

குருவாகி முத்தனு விற்கிரி யாதிகள் கொண்டொருமூன்
றருவாய் மலமொழித் தாவிகண் மூவங்க மாவருளி
யொருவாது தான்முதன் முப்பொருளாகி யுவந்து நிற்குந்
திருவாரு மென்கைத் தவிசிடை மேவுஞ் சிவலிங்கமே. (2)

33. கைத்தலமாலை

இட்டலிங்கப் பெருமான் வீற்றிருக்கும் தம் கைகளைச் சிறப்பித்துப் பாடிய பாடல்களாக இந்நூல் காணப்படுகிறது. பத்துப் பாடல்களைக் கொண்டது.

அன்ன மாயும்வெண் பிறைமருப் பேனமென் றாயு
முன்ன நான்முக னாரணன் றேடரு முதல்வன்
பின்னு வார்சடைப் பெருந்தகை பீடமாக் கோடற்கு
என்ன மாதவஞ் செய்ததோ எனதுகைத் தலமே (2)

34. சீகாளத்திப் புராணம்

இப்புராணம் மூவரால் பாடப் பெற்றதெனக் கூறுவர். இப்புராணத்தின் முற்பகுதியைக் கருணைப்பிரகாசர் பாடி மறைந்தனர். இடைப்பகுதியைச் சிவப்பிரகாசர் பாடி மறைந்தார். இறுதிப் பகுதியை வேலைய சுவாமி களும் பாடி நிறைவு செய்தனர் என்ப. சீகாளத்திப் புராணத்தில் கண்ணப்பச் சருக்கமும் நக்கீரச் சருக்கமும் சிவப்பிரகாசர் பாடியன.

ஓடினான் திசைகளெல்லா முடம்பெலாங் குலுங்க நக்கான்
பாடினான் வாயில் வந்த படியெலாங் கைகள் கொட்டி
ஆடினான் துள்ளித் துள்ளி யாரவா ரித்தா னின்று
நாடினான் செய்த செய்கை நன்றுநன்று எனவி யந்தான்.

(கண். 169)

இவ்வாறு புராணத்தின் இரு சருக்கங்களிலும் பாத்திரப் படைப்பை உணர்வுப்பூர்வமாகவும் பக்திப் பூர்வமாகவும் படைத்துக் காட்டி இலக்கிய இன்பத்தை வாரி வழங்கியுள்ளார். இந்த அறிமுகத்துடன் ஆய்வு மாலையின் ஆய்வுரைகளுக்குள் செல்வோமாக.

– த. கோ. பரமசிவம்

1. நால்வர் செந்தமிழ்

கயிலை மாமுனிவர் சாந்தலிங்க இராமசாமியடிகளார், பேரூராதீனம்.

செந்தமிழ் - செம்மையுடையது, நன்னெறி காட்டுவது. செழுமை யுடையது, செம்பொருள் உணர்த்துவது எனக் கருதலாம். செந்தமிழ் என்ற தொடரைத் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் எடுத்தாள்கின்றனர். செந்தமிழ் மறைமொழிகளையுடையது. ''செந்தமிழ்த் திறன் அறிகிலா'' என அருளிய மறைமொழியில் திறன் என்பது நன்கு மதித்தல், உயரச் செய்தல் எனப் பொருள்படும். தமிழைக் கற்றவர்கள் பலர். தெய்வத் தமிழ், ஒண்தமிழ், தீந்தமிழ், கன்னித்தமிழ் என ஆய்ந்துணர்வோர்கள் திறன் உடையவர்கள். திருஞானசம்பந்தர் எழுது மறைமொழிந்தவர். அவர் பாடல்கள் தொல்வினைகள் தீர்த்து உயர்வைத் தருவன. ஆதலின் ''திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே'' என அருளியுள்ளார். இதனை உட்கொண்டு நால்வர் நான்மணிமாலையில்,

> ''பூவான் மலிமணிநீர்ப் பொய்கைக் கரையில்இயற்
> பாவான் மொழிஞானப் பாலுண்டு - நாவான்
> மறித்துசெஞ் செவியமுதாய் வார்த்தபிரான் தண்டை
> வெறித்தண் கமலமே வீடு''.

என அருளினார் சிவப்பிரகாசர். இப்பாடல் உமைநல்கிய பால் செந்தமிழைத் தந்தது. அது சுவையானது, செவிக்கமுதமானது. அமுதம் சாவாமூவாத் தன்மையால் உயர்ந்தது. செந்தமிழ் வானோர்க்கு உயர்ந்த உலகமாகிய வீடுபேற்றுக்கு வழிகாட்டுவது என அவரது திருவடியே வீடு தருவது என அருளியுள்ளது செந்தமிழ் திறம் எனலாம். மயிலாப்பூரில் எலும்பும் சாம்பலுமாக இருந்த பூம்பாவையைக் கட்டழகுடன் வரச் செய்ய, செந்தமிழ்ப் பாடலால் விழாச் சிறப்புக்களைக் கூறினார். இது உலகம் மதித்துப் போற்றுதற்குரிய செந்தமிழ்த் திறத்தின் வெளிப்பாடு எனலாம். மதுரையில் மங்கையர்க்கரசியாரது வேண்டுகோளை ஏற்றுக் கூன்பாண்டியனை நின்றசீர் நெடுமாறனாக உயர்த்தியது. ''தேற்றித் தென்னன் உடலுற்ற தீப்பிணியாயின தீர'' எனும் பாடல் செந்தமிழ்த் திறனை வெளிப்படுத்தியது. சிவநேசர் திருஞானசம்பந்தருக்கே உரியவள் என வளர்க்கப் பெற்ற பூம்பாவையாகிய அடைக்கலப் பொருள் கலசத்தி லிருந்து மீண்டெழச் செய்ய வேண்டியது தமது கடப்பாடாகிவிட்டது

என்பதைச் சிவப்பிரகாசர் ''போதமுண்ட பிள்ளை என்பு பொருகண் மாது செய்ததோ எனக் கூறுவது செந்தமிழ்த் திறனை அல்லவா?

அப்பரடிகள் பன்னிய செந்தமிழ் என்பார். செந்தமிழ்ப் பாடலால் பலமுறை சொல்லுதல் பன்னுதலாகும். ''பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே'' என்பது மறைமொழி. இடைவிடாது சொல்லுதல் பன்னுதலாகும். அந்தமிலாத் திருவேடத்தரசாகிய அப்பரடிகள் தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியர் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதியது ஐந்தெழுத்து. அவர் சொற்பாவும் வகை தெரிந்தவர். தூய்மை நோக்கியவர். அவரது வரலாற்றில் பொன்னையும் மணியையும் புறம்போக்கியது தூய்மையாகும். திருவள்ளுவர் ''தூய்மை என்பது அவாவின்மை'' என்பார்.

அவருடைய பாடல்கள் ஆகமமாகி நின்று அண்ணிப்பன. அப்பாடல்கள் திருவிருத்தம் நேரிசை, தாண்டகம் எனும் தொடைநயம் வாய்ந்த பாடல்களாகும். முத்தி வீட்டிற்கு திருவாயில்களாகச் சிறந்தவை. எனவே வீட்டிற்கு வாயில் எனும் தொடை சாத்திய சொல்வேந்த! என அழைக்கிறார் சிவப்பிரகாசர்.

''வீட்டிற்கு வாயில் எனுந்தொடை சாத்துசொல் வேந்தபொது
ஆட்டிற்கு வல்ல னொருவற்கு ஞான அமுதுதவி
நாட்டிற் கிலாத குடர்நோய் நினக்குமுன் நல்கினுமென்
பாட்டிற்கு நீயும் அவனும்ஒப் பீர்எப் படியினுமே''.

திருஞானசம்பந்தருக்கு ஞானப்பால் அருளினார் சிவபெருமான். அப்பரடிகட்கு உலகத்தில் இல்லாத சூலை நோயை அருளினார். இருவர் பாடல்களும் மொழிக்கு மொழி தித்திப்பன. அல்லலையும் அவலத்தையும் போக்குவன. தீவினை வந்து தீண்டாத நிலையைத் தருவன. ''இன்பமே எந்நாளும் துன்பமில்லை'' எனவும், ''ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை'' எனவும், ''தீவினை வந்து எம்மைத் தீண்டப்பெறா'' எனவும் ''மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்'' எனவும் அருளினர். ''நெல்லுநீள்வயல் நீலக்குடி அரன் நல்லநாமம்'' நவிற்றிக் கல் தெப்பமாகத் திகழ்ந்து வர ஐந்தெழுத்தை நற்றுணையாகக் கொண்டார் அப்பரடிகள். நல்ல நாமம் ஆகிய ஐந்தெழுத்தை நவிற்றியதால் இன்பமே எந்நாளும் துன்பமில்லை என வழிகாட்டினார். ஞானப் பாலுண்டதால் வந்த ஒண்தமிழும் சூலை நோயால் வந்த தீந்தமிழும் திருமறைக் காட்டில் வேதங்கள் மூடிய கதவைத் திறக்கவும் மூடவும் செய்த திறனுடையவை. இப்பாடல்களால் இருவரும் பாடிய முதுதமிழ் மந்திரமாய் போற்றப்படுவன. ''பாட்டிற்கு நீயும் அவரும் ஒப்பீர் எப்படியினுமே'' என்றார் சிவப்பிரகாசர்.

சிவப்பிரகாசர் இருவருக்கும் ஒரு தன்மையான பாடல்களால் மாலை சூட்டினார். ஆதலின் என் பாடலுக்கு நீரும் அவரும் ஒப்பானவர்கள் எனப் பாடியுள்ளார் என்பதும் கருத்தாகும்.

செந்தமிழ்த் திறம்

செந்தமிழ் வலிமையுடையது, உயர்ந்த நெறிக்கு வழிகாட்டுவது. கருநாகத்தைக் கையில் வைத்து ஆட்டுகிறார் கூத்தப் பெருமான். ''கரிய பாம்பும் பிடித்தாட்டும் பெருமானைப் புலியூர் சிற்றம் பலத்தே பெற்றாம் அன்றே'' என்பது சுந்தரர் திருவாக்கு. இவ்வாறு இறைவன் பாம்பைப் பிடித்து ஆட்டும் திறம் என்ன என்பதை எண்ணிச் ''செந்தமிழ்த் திறம் வல்லிரோ, அரவமுன் கையிலாடவே'' என விளம்புகிறார். சுந்தரர் செந்தமிழ்த் திறத்தைச் சிவப்பிரகாசர் ஆய்ந்தருளியுள்ளது ஆழமான செய்தியை வெளிப்படுத்துவதாகும்.

''போத முண்ட பிள்ளை என்பு
பொருகண் மாது செய்ததோ
காதல் கொண்டு சொல்லின் மன்னர்
கல்மி தப்ப வுய்த்ததோ
வாய்தி றந்து முதலை கக்க
மதலை நீ அழைத்ததோ
யாது நம்பி அரிது நீ
எனக்கி யம்ப வேண்டுமே''

எனத் திறனாய்வு செய்கிறார்.

ஞானப்பால் உண்ட பிள்ளையாகிய திருஞானசம்பந்தர் ''எலும்பைப் பெண்ணாக்கியது செந்தமிழ்''. இச்செயல் தமக்கே உரியவள் என வளர்ந்த அடைக்கலப் பொருளாகிய பூம்பாவையினை மீண்டும் பெண்ணாகச் சிவநேசர் விருப்பத்தை நிறைவேற்ற எதிர்கொண்டமை ஆகும். இதனை முருகதாச அடிகள் தமிழ் அலங்காரத்தில் சுட்ட வெள்ளென்புக் குடத்தூடிருந்து ஒரு தோகை நல்லாள் கட்டழகோடு மயிலைத் தடாகக் கரையில் வரவிட்டது செந்தமிழே என்பர். இது உருமாறியிருந்ததை மீண்டும் உருவாக்கிய அருட்செயலாகும்.

காதல் கொண்டு சொல்லின் மன்னர் கல் மிதப்ப உய்த்தது செந்தமிழ்த் திறம் அல்லவா? இங்குத் தமக்கு இடர்ப்பாடாக அமைந்த கல்லைத் தெப்பமாக்கிச் செலுத்தியது நல்ல நாமமாகிய ஐந்தெழுத்தின் திருநின்ற செம்மையாகும். செந்தமிழ்த் திறம் வல்ல சுந்தரர்க்குத் தொடர்பில்லாத ஒன்று அவிநாசியில் நிகழ்ந்த நிகழ்ச்சி. ஒரு இல்லத்தில் அழுகை ஒலி கேட்கிறது. ஏன் என வினவிய சுந்தரர் கருணை

நோக்கில் நிகழ்ந்தது முதலையின் வாயில் மதலையை வரவழைத்தது. இதனை முருகதாச அடிகள் ''மறை பயிலும் அந்தணச் சேயை அவிநாசியூரில் அழைத்தது எண்ணில் சந்தனக் குன்றின் மலைமேல் பிறந்த தமிழ்த் தெய்வமே'' என்கிறார். தமிழுக்கு மாறாகக் கருதும் வடமொழி மறையைப் பயின்ற சிறுவனை எழுப்பியது உயர்வுக் குரிய திறமாகும். மேலும் மற்ற இரு நிகழ்ச்சிகட்கும் உருமாறல் எதிர் மறையான பொருள் இருந்தன. இங்குக் குளத்தில் நீரில்லை முதலையும் இல்லை, மதலையும் இல்லை என்பதை,

''இலைக்குளநீர் அழைத்து அதனில் இடங்கர் உறஅழைத்து அதன்வாய்த்
தலைக்குத்தலை மதலைஉயிர் தழைப்ப அழைத்தருளியநின்
கலைக்கும் வடகலைக்கும் முதல்கலைக்கும் உறுகணக்குயர்
பொன்மலைக்கும் அணுநிலைக்கும் உறும்வன்தொண்டப் பெருந்தகையே''.

என்பார் வடலூர் வள்ளலாரடிகள். இந்நிகழ்ச்சி ''கரைக்கால் முதலையைப் பிள்ளைதரச் சொல்லு காலனையே'' என்ற செந்தமிழ்ப் பாடலின் வல்லமையாகும். மூன்று அருட்செயல்களிலும், சுந்தரர் அருட்செயல் தமக்கென நிகழாது கருணையில் நிகழ்ந்ததாகும்.

ஆதலின் 'வாய்திறந்து முதலை கக்க மதலை நீயழைத்தோ யாது நம்பி அரிது' என இயம்ப வேண்டும் என்கிறார் சிவப்பிரகாசர்.

செந்தமிழ் நெறிவளர்த்த சிவப்பிரகாசர் அருந்தும் அமுதமாய், அன்போடமைந்ததாய்த் தந்த பாமாலை நால்வர் நான்மணிமாலை சிவம் பெருக்கும் செந்தமிழாகும், பண்சுமந்த பாடல்களைக் கருங்கல் மனமும் கசிந்துருக கலந்து பாடுங்கால் ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிக்கும் பண்ணிசைப் பாடல்களாக அருளியவர் நால்வர் பெருமக்கள். அவர்களது அருளார்ந்த பாடல்கள் சுவை உடையன. மெய்ஞ்ஞானத்தை உணர்த்துவன. தேனாய் இன்னமுதமாய்த் தித்திக்கும் திருவாசகத்தை வழங்கியுள்ளார் மாணிக்கவாசகர். அவை ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் சுவையுடையவை. செம்பொருளாகிய திருவாசகம்.

''இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்''

என்னும் திருக்குறளுக்கு எடுத்துக்காட்டாய் விளங்குவது என்பதை வாதவூரண்ணல் மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேன் என அருளு கின்றார். இது இன்சொல், திருவாசகம் என்று ஒருகால் ஓதக் கருங்கல் மனமும் கரைந்துருகச் செய்யும். இது ஈரம் அளைஇயது, மனம்

கரைந்து மலங்கெடுக்கும் வாசகம் படிறுஇல்லாதது. திருவாசகம் செம்பொருளாகிய சிவத்தைக் காணத் துணைபுரிவது என்பதை,

''விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கண்
காரணன் உரையெனும் ஆரண மொழியோ,
ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ,
யாதோ சிறந்தது என்குவீ ராயின்
வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவா சகம்இங்கு ஒருகால் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்துஉகக் கண்கள்
தொடுமணல் கேணியின் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுநர் அன்றி
மன்பதை உலகில் மற்றையர் இலரே.

இது செம்மை நலம் அல்லவா?

2. சிவப்பிரகாசரின் செந்தமிழ்ப் பற்று

சி. அங்கயற்கண்ணி, ஈரோடு.

சிவப்பிரகாசர் நூல்கள் பல சூழல்களில் எழுதப்பட்டவை. தானே பாடியனவும், பிறர் தூண்டப் புனைந்தனவும், போட்டி எதிர்ப்பு எனும் நிலையில் யாத்தனவுமாகப் பல்வகையில் அமைகின்றன. இறைப் பொருளைத்தான் பாடவேண்டும் என்ற ஒரு நோக்க வரையறை இவர் வாழ்வின் முற்பகுதியில் இருந்ததாகக் கருதப்பட்ட போதும் இறைவன், இறை அடியவர், புலவர், குரு, தலம், சமய தத்துவம், வழிபாடு, சமய மறுப்பு, தருக்கம், கதை, நீதிக்கருத்து ஆகிய பல இவரின் பாடு பொருள்களாகி உள்ளன. தோத்திர நூற்களும், சாத்திர நூற்களும், இயற்றியதால் பண்டைய மரபுகள் இவரிடத்தும் கொள்கைகளாகத் தொடர்கின்றது. மானிடனைப் பாடேன் என இவர் முதலில் மறுத்த போதும், இறையடியாரையும், இறையடியாராகிய புலவரையும், சமயக் குரவரெனும் நிலையில் குருவையும் பாடியதால் சாதாரண மாந்தரினும் உயர்ந்த, மாந்தருள் மாணிக்கங்களை இவர் பாடற் பொருளாக ஏற்றுக் கொண்டார் எனக் கூறலாம்.

இலக்கியக் குறிப்புகள்

சிவப்பிரகாசர் நூல்கள், அகப்புற நிலையில் அமைவதோடு, நூலின் உட்குறிப்புகளும், இலக்கியம், இலக்கியக் கோட்பாடு பற்றிய பெயர்களையும், குறிப்புக்களையும் தாங்கி நிற்கின்றன. ''தமிழ்'' என்ற சொல்லாலேயே இலக்கியத்தைக் குறிக்கும் தன்மையை,

'தவ ஞானத் தாலாட்டெனும் தமிழைச் சாற்றுதற்கு

(தாலாட்டு-காப்பு)

தன்னிகர் புலவன் கூறும் தமிழ் செவி தாழ்த்துக் கேளா

(சீகா-நக்-116)

'படுமத் தமிழுக்கு வந்த விறை
விடுமத் தமிழுக்கு வந்த விறை (வெங்-கலம்-7)

போன்றவற்றில் காண்கிறோம். அகத்தியர் சொல்லையும், நக்கீரர் படைப்பையும் நினைக்குமிடத்து இலக்கணம் இலக்கியம் போன்ற சொற்கள் கையாளப்படுகின்றன.

நினைவறு குறுமுனி யிலக்கணம் பெறப்
புனைதரு மிலக்கியப் புலவர் சிங்கமே (சீகா-நக்-101)

சிவப்பிரகாசர் கவிஞனாக இருந்தது மட்டுமின்றி, நக்கீரர் போன்ற பழம் புலவரையும், அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்ற இறைக்கவிஞரையும், பாடற்பொருளாக் கொண்டு தாம் இலக்கியம் இயற்றியதால், பல எண்ணங்கள் கவிதையைச் சுற்றி எழுந்து பின்னப் பட்டுள்ளன. பண்டைத் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் துறைபோகியதாலும், துறைமங்கலத்தாரிடம் இப்பண்பு பொருந்தி அமைகின்றது எனலாம். நேரடியாகவும், முரண் நிலையிலும் கவிதையின் இயல்புகளைக் கூறிச் செல்கின்றார்.

கவிதையின் சிறப்பு என்பது பொருளையும் சார்ந்து இருக்கின்றது, பொருண்மை பற்றிய எண்ணமும், பன்முறை நினைக்கப்படுகின்றது, பாடலைப் படித்ததும் அதன் பொருட்புலப்பாடு இன்பம் தருதல் போல், நிலத்தைத் தோண்டியதும் வெளிப்பட்ட பொருள் அமைகின்றது.

தொடலும் செம்பொற் சிகர மொன்று
தோன்றச் செய்யுட் பொருள் போலக்
கருதின் அகழ்ந்து புகுந்த தனுட்
கண்டார் நிலத்தை அகழ்ந்திட்டு (பிரபு-கொக்-20)

கவிதையின் மேற்பொருள் மட்டுமின்றி ஆழ்பொருளும் இங்குக் காணலாம்.

'மனத்திற் றதைத்த நுண் பொருடரவொரு
செய்யுள் செய்புலவர் (சீகா-நக்-49)

'ஆரறு கவி தொடுத்த அரும் பொருள்
எதிர்ந்தான் போல்' (சீகா-நக்-131)

போன்ற அடிகளும் இப்பொருண்மையைக் கருதுகின்றன.

இறைவனுக்குத் தமிழ் மாலை தருவதே கவிஞரின் வாழ்வுக் கொள்கையாக அமைகின்றது. இறைவன் புனையும் மாலையாகச் செந்தமிழ்ப் பாடல் அமைவதனைப் பன்முறை எடுத்துச் சுட்டுகின்றார் சுவாமிகள், தினம் தினம் மாற்றும் தேவையுடைய வாடும் பூமாலை யிலிருந்து இவரது வாடாப் பாமாலை வேறுபட்டு இலக்கியத்தின் காலம் கடந்தும் அழியா இயல்பை அறிவுறுத்துகின்றது.

''அண்ணல் மாபுகழ் மூவரும் புனையரும் பா
வன்றி யென் கவியு நின்றனக்காம்'' (சோண-1)

வாதவூரரை வாழ்த்தும்போது, அவர் பாடலைச் சிறப்பிக்கும் முகமாகக் கவிஞர் கூறும் அடிகள், இறைவனைப் பாடுவதே பாட்டு (பிற பாட்டு அன்று) எனக் கூறியமைகின்றன.

பொருள் நிலையன்றியும், புன்கவிதை பற்றிய சிவப்பிரகாசரின் எண்ணம் ஒவ்வோரிடங்களிலும் காணப்படுகின்றது. புழுதிக்கு உவமை யாகப் புன்கவிதையைப் பிரகாசர் கூறுவது, கலங்கிய நீருக்குக் கம்பர் புன்கவிதையை ஒப்பாக்கியதை நினைப்பூட்டுகின்றது.

சங்கம், பழிக்கும் வழுச் சொற் பதர் சேர்த்து வைத்த
விழுக்குங் கவியென்ப தென்ன - கொழிக்கும்
புழுதி....... (உலா-157)

தமிழ்ப்பற்று

தமிழ்ப் பாடலின் ஆற்றலும் பயனும் பற்றிய எண்ணங்களையும் கவிஞர் தருகின்றார். தொல்காப்பியம் கூறும் மறைமொழியான மந்திரமும், வள்ளுவர் கூறும் நிறைமொழி மாந்தரின் மறைமொழியும், சமயக் குரவர் பாடிய சில பதிகங்களின் அற்புத விளைவும் கவிஞருக்கு இவ் எண்ணத்தை அளித்திருக்கலாம். அங்கதம், வசைக்கவி, அறம் வைத்துப் பாடல் போன்றவற்றையும் இங்கு நினைக்கலாம். நான்மணிமாலையில், சம்பந்தர் பாடலின் ஆற்றலைப் பிரகாசர்,

பயனாகும் நல்லாண் பனைக்கு விடத்திற்கு
புயலாகும், நோய்க்கு மருந்தாம் - உயிராகும்
சிந்து மெலும்பிற்குச் சிரபுரத்து நாவலன்சம்
பந்தன் இயம்புதிருப் பாட்டு (17)

என ஏற்றுகின்றார்.

செய்யுள், கவி, பா, பாடல் (பாட்டு) கவிதை, தொடை, யாப்பு, தூக்கு போன்ற இலக்கியம் தொடர்பான சொற்கள் இவர் நூலில் மிகுதி யான பயிற்சி பெற்றுள்ளன. இலக்கியம், இலக்கணம் போன்ற சொற்கள், அருகியே வந்தபோதும், இவற்றின் மிகுதி, சிவப்பிரகாசர் காலத்தில் இச்சொற்கள் இலக்கியத்தைச் சுட்டியதைத் தெளிவுறுத்துகின்றன.

அரும்பா - (சோண-1)
அருங்கவி - (சோண-6)
இயற்பா - (நால்வர்-1)
திருப்பாட்டு - (நால்வர்-17)
மெய்க்கவிதை - (பிள்ளை-38)

போன்றவற்றை இங்கு நினைக்கலாம்.

நம் கவிஞர் சிவப்பிரகாசர் சில சூழல்களில் சொல் விளையாட்டுப் போன்று இலக்கணம் கலைச்சொற்களை ஆள்வது தனியே குறிப்பிடற் குரியது ஆகும்.

மொழி தரு கருணை மலையெனும் பெயர்அன்
மொழி ஏரிஇ, வேற்றுமைத் தொகையைத்
தழுவுற நின்று வளர்ந்திடும் சோண சைலனே (சோண-9)

எனக் கவிஞரின் முதல் நூலிலேயே இலக்கணக் குறியீடுகள் அமைந்துள்ளன என்பதை இதன் மூலம் அறியலாம்.

மொழியின் இலக்கணத்தைக் கவிதையில் புகுத்தும்போது, எளிதாக அதனை மனத்தில் புகட்டி பதிக்கும் பாங்கும் சிவப்பிரகாசரின் பாடல் களில் அமைந்து விடுகின்றது.

சிற்றெழுத்தின் பின் வரும் லகரம், வருமொழியில் தகரம் வர ஆயுதமாகும் எனச் சூத்திரத்தில் இலக்கணம் கற்பதை, எளிதாக உவமையில் ஆண்டு அறிவுறுத்துகின்றார் சிவப்பிரகாசர்.

குறில் வழி லகரந் தனி நிலை ஆயுதங்
கூடிய தகரமென் எழுந்தென்
....
நறுமலர் வழியிற் கண்டவர் எல்லாம்
நந்தியே என்றுமை மகிழ்ந்தார் (பிரபு-அக்-28)

கவிஞரின் தமிழ் விருப்பு நூலெங்கும் பரந்து வெளிப்படுகின்றது. தமிழ் மொழியின் பெருமையை நேரடியாகப் பாரதிதாசன் தமிழுக்கு அமுதென்று பேர்........என்று தருவது போன்று பாடாத போதும், சிவப்பிரகாசர் தமிழுக்குத் தரும் அடைகளும், தமிழ்ப் புலவரையும், தமிழ் இலக்கியங்களையும் போற்றுவதும், தமிழ் மீது இவர் கொண்ட பற்று நன்கு புலப்படுகின்றது.

அமுதுறும் தமிழ் - (சீகா-நக்-1)
மதுரம் பெருகுறுதமிழ் - (சோண-39)
தெள்ளத் தமிழ் - (தூது-34)
நல்லிசைத் தமிழ் - (பிள்ளை-28)

போன்ற பல அடையடுத்த நிலை பரக்கக் காணப்படுகின்றது.

மதுரம் பெருகுறு தமிழ்ச் சொல்மலர் - (சோண-39)

நல்லிசைத் தமிழ் மாலை சூடிய புகழ் நல்லவா - (பிள்ளை-28)

நக்கீரர் தமிழ் வளர்த்ததைக் கூறுவதில், சிவப்பிரகாசரின் தமிழ் விருப்பும், தமிழ் வளர்ப்பும் தொனிக்கிறது என்பதை இதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

தேவாரம் பற்றிய இவரது உயர்ந்த எண்ணமும் இவரியற்றிய செந்தமிழ் நூல்களில் பரவலாக அமைந்து காணப்படுகின்றது. இறைவனுக்கு மூவர் தமிழ் உணவாகவே அமைந்த சிறப்பை,

வேத உணவு வெறுத்துப் புகழ் மூவர்,
ஓது தமிழ் ஊனுக்கு உழல் செவியான் (உலா-27)

என்று வேதத்தினும் தமிழ் இனிமை மிக்கதாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

வேதத்தையும், திருவாசகத்தையும் ஒப்பிட்டு, இரண்டிலும் சிறந்தது திருவாசகமே எனக் கவிஞர் நிறுவுவது கற்று இன்புறத்தக்கது.

திருவாசகமிங்கு ஒருகால் ஓதில்
கருங்கல் மனமும் கரைந்துக (நால்வர்-4)

சுவைஞராகவும், சிறந்த மதிப்பீட்டாளராகவும், விமரிசகராகவும், சுவாமிகள் அமைந்ததை இதன் மூலம் தெரிந்து கொள்ளலாம். சமயக் கவிஞனான போதும், கற்பனைக் களஞ்சியம் எனப் பாராட்டப்படும் வண்ணம் கவிஞரின் நூல்களில் பலவகை அணிகளும், கற்பனையும், உயர்வு நவிற்சியும் பெருகிக் காணப்படுவதை நாம் பார்க்கலாம். கவிஞரின் வருணனை ஆற்றல், இறைவனை வருணிக்கும் இடத்தும் வெளிப்பட்டு நிற்கின்றதை நாம் காணலாம்.

நோக்கற நோக்கும் உருவமே நாவால்
நுகர்ந்திடா இனிய பேரமுதே
....
இட்ட நன்குதவி எனகரத்திருக்கும்
ஈசனே மாசிலா மணியே (நெடு-5)

வண்ணப் பாடல்களாலும், இசையினிமையைக் கவிதையில் இணைத்த சிவப்பிரகாசர், சொல்லாட்சி காரணமாகவும் பாடலில் ஓசை நயத்தை சேர்க்கின்றார்.

வழை குழை கழை பிழை நிழலிடு
மழை தவழ் மலையதிரத்
தழை செவி மழவுழுவைகள் வழத்
தாக்கிய துறு விசையால் (சீகா-கண்-85)

முரணால் நலம் பயக்கும் இயல்பையும் இவருடைய வெளியீட்டுத் திறத்தில் காண்கின்றோம்.

இறைவனை மட்டுமே பாடவேண்டும் எனும் கொள்கையுடைய சிவப்பிரகாசர் சமயக் குரவர்களையும், இறையவனின் அடியவர்களைப் பாடும்போதும் தமிழ் மூலம், இலக்கிய வளத்தின் இன்றியமை யாமைகளையும், தத்துவங்களையும், தமிழில் பொதிந்துள்ள பொருண்மை களையும், கருத்துகளையும், எடுத்துக்காட்டி தம்மை தமிழ் இலக்கியப் பற்றாளர் என்பதை இனங்காட்டி நிற்கிறார்.

3. வீர சைவமும் பெண்ணின் மேம்பாடும்

அரு. அப்பாசாமி, பாகூர்.

சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய நூல்களுள் பிரபுலிங்க லீலை ஒன்றே காப்பியம் என்ற சிறப்பிற்குரியது. கன்னட மொழி கற்றறிந்த சிவப்பிரகாச அடிகளார் அம்மொழியில் சாமரசர் என்பவரால் எழுதப் பெற்ற பிரபுலிங்க லீலையைத் தமிழில் அதே பெயரில் காப்பியமாகப் பாடியுள்ளார். இந்தக் காப்பியம் 12-ஆம் நூற்றாண்டின் சிறந்த வீரசைவத் தலைவர்களாகவும், அடியார்களாகவும், கவிஞர்களாகவும் விளங்கிய அல்லமர், வசவண்ணர், அக்கமாதேவி ஆகியோரைப் பற்றியும் மற்றும் பல வீர சைவ அடியார்கள் வரலாறுகள் கூறுவதாகும்.

கற்பனைக் கருவூலமாகிய சிவப்பிரகாச அடிகளார் இயற்றிய இக்காப்பியம் 25 கதிகளாலியன்றது. 1158 செய்யுட்களைக் கொண்டது. செய்யுட்களின் இனங்கள் பாவினங்களே.

சைவப் பெருங்காப்பியமாகிய பெரியபுராணம் சுந்தரரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பிற நாயன்மார் வரலாறுகளையும் பொருள் தொடர்பு பெற எடுத்துக் கூறுதல் போன்றே இப்பிரபுலிங்க லீலையும் அல்லமரைத் தலைவராகக் கொண்டு பல வீர சைவ அடியார்களின் வரலாறுகளையும் விளக்கி உரைக்கின்றது. பெரியபுராணம் போன்றே இக்காப்பியத்தையும் கயிலையில் தொடங்கி கயிலையில் முடிக்கிறார்.

கதைப்போக்கு

கயிலாயத்தில் இறைவனும், இறைவியும் வீற்றிருக்கின்றனர். அங்கே ஏனைய நாராயணர், பிரமர், இந்திரர், தேவர்கள் யாவரும் இறைவனைக் கண்டு தொழுவதற்கு வந்தனர். அது காலை இறைவி இறைவனை நோக்கி, தங்கள் அவைக்கு வந்த தேவர்கள் அனைவரும் வீடு பேறடைவரோ? நாம ரூப கிரியை (பெயர், வடிவம், செயல்)களை வென்று முத்தி அடையும் நெறி யாது? மண்ணுலகில் மெய்ப்பொருளை உணர்த்தவல்ல ஞானகுரவன் யார் என்று கேட்டாள். இறைவி கேட்ட இம்மூன்று கேள்விகளுக்கு விடையாகத் தமது மெய்வடிவத்தானாகிய அல்லமனே அத்தகைய ஞானகுரவன். அவனை மாயையாற் காணவியலாது என்று சிவபெருமான் பதில் உரைத்தார். அதற்கு மாயையால் அல்லமனைப் பற்ற இயலும் என்றுரைக்கும் சூளுரையே இக்காப்பியத்தின் கரு எனலாம்.

மாயையால் (ஆணவத்தால்) அல்லமனைக் காணவியலாது என்பது காப்பியத்தின் முதற்பகுதியாகவும் அருளாளனாகிய அல்லமனை அன்பாற் காணவியலும் என்பது காப்பியத்தின் இரண்டாம் பகுதி யாகவும் அமைந்துள்ளன. இரண்டாம் கதியாகிய கைலாச கதியிலிருந்து எட்டாவது கதியாகிய வசவண்ணர் வந்த கதிவரை மாயை மண்ணுலகு வந்து தன் சூள்முடிக்காமல் தோல்வியுற்றுத் திரும்புவதைக் காப்பியம் உரைக்கின்றது. எட்டாவது கதியில் கயிலையில் திருச்சபை கூடுவதையும், சத்துவ கலைமடந்தை, நந்திதேவர் சிவகணங்கள் ஆகியோர் நிலவுலகிற் சென்று தோன்றுவதற்குரிய காரணம் கூறப்படுகின்றன. அக்கமாதேவி உற்பத்தி கதி, அக்கமாதேவி துறவு கதி, கதலிவன கதி முறையே ஒன்பது, பத்து, பதினேழாவது கதிகளாக உள்ளன.

இக்கதிகளில் சத்துவக் கலைமடந்தை மாதேவியராகப் பிறந்து இல்லறம் வெறுத்துத் துறவு நெறியில் நின்றது, அல்லமரை நாடிச் சென்று அவரால் மெய்ப்பொருள் அருளப்பெற்றது, பின்னர் அவர் அருளியபடி கதலிவனத்திற்குச் சென்று தவம் செய்தது ஆகியவற்றைக் கூறுகின்றன. இப்பகுதியே பெண்ணின் மேம்பாடு பேசப்படுகின்ற இடமாக விளங்குகிறதெனலாம். இதனை அறிய முற்படுவதே இவ்வுரையின் நோக்கம்.

ஔவையாரையும் காரைக்காலம்மையாரையும், ஆண்டாளையும் பெற்றுப் பெருமையுற்றது தமிழகம். ஞானநெறியில் நின்று இறைவனை நாட ஆடவரைப் போல் மகளிர்க்கும் இந்நாட்டில் உரிமையுண்டு. இச்சிறந்த உரிமையை அக்கமாதேவி வரலாற்றில் எடுத்துக்காட்டியுள்ளார் சிவப்பிரகாச அடிகளார்.

உடுநடை என்னும் நகரின்கண் நிருமலன் சுமதி என்னும் பெயருடைய இருவருக்கும், இறைவியால் ஏவப்பட்ட சத்துவக்கலை மடந்தை மகளாகத் தோன்றினாள். மாதேவி என்று பெயரிடப் பெற்று நற்பண்புகளுடன் வளர்ந்து வருகிறாள். பின்னர் மாதேவி மங்கைப் பருவம் அடைகிறாள். இப்பருவத்தில் இன்ப நினைவு சிறிதும் அற்று இறைவனை அடைய தவ மேற்கொள்கிறாள். அக்காலையில் அந்நகர் மன்னன் வாத்தியங்கள் இசைக்கடலென முழங்க (கௌசிக மன்னன்) உலா வருகிறான். மன்னன் அழகைக் கண்டு நகர மாதர்கள் மையல் கொண்டு கலங்குகின்றார்கள். மன்னன் மாதேவியைக் காண அவள் பேரழகு அவனை மயக்குகின்றது. தாமரை மலரில் வாழ்ந்திருக்க முடியாமல் பூமியில் வந்த திருமகளோ? இவள் யாரோ என்று எண்ணுகிறான். வஞ்சிக்கொடி போல்பவளாகிய இவள் எனக்குக் காம நோயைத் தந்தாள். இவளை நான் அடையேனாயின் தீப்பட்ட பஞ்சு போல காமன் கணைபட்டு இறப்பேன் என்று எண்ணி, மாதேவி

இன்னாள் என ஒருவர் மூலம் தெரிந்து, அவளை எப்படியும் அடைய வேண்டும் என்று முடிவு செய்கிறான். 'மாதருங் குருவும் வலிந்து பலம் காட்டினால் நன்மை செய்யார்கள்'. நயத்தினாலேதான் காரியத்தை முடிக்க வேண்டும் என எண்ணி மன்னன் நிருமலனிடம் மணம் பேச மாதர்களை அனுப்புகிறான். இதனைச் சிவப்பிரகாசர் வாக்கில் காண்போம்.

தூது வல்லநன் முதுக்குறை மாதரைத் துணிந்து
நீதி வல்லவன் நிருமலன் மகள்தனை நீவீர்
தீதில் எம்மனைக் கிழத்தியாம் படியுரை செய்து
போது மின்களென் றேவினன் வியனிலம் புரப்பான். (செ. 17)

மாதர்கள் அவ்வாறே செய்வோம் எனச் சொல்லி நிருமலனிடத்தில் மன்னன் கருத்திதுவென கூறினர். நிருமலன் தக்கவரல்லார்க்கு மகட் கொடை வழங்கல் தகுதியன்று என்று மறுத்துரைக்கிறான். பின்னர் நிருமலன் எனக்குத் தகாததைக் கூறினீர் பெண்களே! தனக்குத் தகாதது செய்து உயிர் பிழைத்தலைக் காட்டிலும் தாங்குவதற்குத் தகாத உடலை விடுதலே சிறந்தது என்பர். இச்சொல் உங்களுக்குத் தகாது.

தமக்க டாதது செய்துயிர் வாழ்வது தன்னில்
சுமக்க டாதமெய் விடுத்தலே நன்றெனச் சொல்வர்
எமக்க டாதது புகன்றனிர் மங்கைமீர் இச்சொல்
நுமக்க டாததென் றியம்பலும், மங்கையர் நுவல்வார்.

(அக. துற. 21)

என்று கூறி மாதர்களை மாதேவிபால் அனுப்பினான். மணம் பேசவந்த மாதர்கள் கூறியதைக் கேட்ட மாதேவி மன்னன் ஓர் சூள் உரைக்க வேண்டுமென்றாள். மாதர்கள் இதைக் கேட்டு, மாதேவிக்கு மன்னனிடம் காதல் கொண்டிருக்கிறாள் என்று எண்ணி மன்னனிடம் சென்று கூறுகிறார்கள். மாதேவியைக் காண்கிறான் மன்னன். தன்னை வலிந்து தழுவாமலிருக்கச் சூள் உரைக்குமாறு மாதேவி கேட்கிறாள். இக் காப்பியத்தில் கௌசிக மன்னன் சூளுரையாக வரும் பகுதி தனிச் சிறப்புடையது. சூளுரை கூறும் மரபைப் புறநானூற்றில் (72) பாண்டியன் நெடுஞ்செழியனும், சீவக சிந்தாமணியில் (443) சீவகனும் கூறக் காண்கிறோம். கம்பராமாயணத்தில் பரதன் வாக்கிலும் காணலாம். நாற்பத்தாறு நீதிகளை கௌசிகன் சூளுரையில் சிவப்பிரகாசர் உலகியலறிவுடன் எடுத்துக் கூறியுள்ளார் என அறியலாம். சான்றாக, ஒன்றிரண்டு. 'வந்த விருந்தினர் காத்திருக்க, வீட்டினுட் புகுந்து உண்பவனும், பந்தியில் இருவிதமாகப் பணிவிடை செய்பவனும், பெற்றோர் பசித்திருக்கப் பார்த்துக் கொண்டிருப்பவனும், பகற்போதில் பசியால் வருந்துவோர்களைப் பாராமல் தான் மட்டும் உண்பவனும்''

பசுவின் கன்றுக்குப் பால் விடாமல் கறந்து கொள்பவனும் செய் நன்றியை அறவே மறந்து கெடுதல் செய்பவனும் நடுநிலையினின்றும் தவறுபவனும் போர்க்களத்தில் தன் தலைவனை விட்டு ஓடிப்போகின்ற முழு மூடனும் ஆவோர்களில் நானும் ஒருவன் ஆவேன் என்று சூளுரை செய்கிறான்.

இவ்வாறு கூறக்கேட்ட மாதேவி மன்னன் உடன் செல்ல உடன்பட்டு அரண்மனை சென்றடைகிறாள். அங்கே அவளைத் தனிமையில் கண்ட மன்னன் தன் எண்ணத்தை நிறைவேற்றும்படி வேண்டுகிறான். அதற்கவள் நான் சொல்லுகின்ற பணியைச் செய்து விட்டு வந்து என்னோடு பேசுக என்றாள்.

எதைச் செய்ய வேண்டும் அதனைச் செய்து முடிக்கிறேன் சொல் என்று மன்னன் கூற, மாதேவி கூறுவாள், பிரமனும் மாலும் தேடி யறியாத சோதி வடிவாயுள்ள சிவலிங்கத்தை தூய்மையுடைய கையாகிய இருக்கையில் வைத்து மலர்களால் வழிபட்டுப் பின்னர் வந்து என்னைச் சேரும் என்றாள். இதனை,

ஏதுநான் செய்வதன்ன தியற்றுவன் அறைதி என்ன
ஓதினான் அரசன் ஓத ஒண்தொடி அயன் மால் தேடும்
சோதிமா சிவலிங் கத்தைத் தூயையாய்க் கரபீடத்தில்
போதினால் அருச்சித் தென்னைப் பொருந்துதி பின்னர் என்றாள்.

(அக. துற. 46)

அமண மன்னன் மனதில் சிவநேயம் வரல் அரிது என்பதற்கு மன்னன் கூறும் காரணங்கள்;, அரும்பில் மணம் உண்டானாலும், விதையில் முளை உண்டானாலும் குழந்தையிடம் இன்ப உணர்வு தோன்றினாலும் வீரசைவர்களாகிய பகைவர்களோடு சேர்ந்திருந்தாலும் சிவனிடம் அமணர்கள் போற்றும் ஒழுக்கமும் வந்து கூடும் என்றான்.

முகையிடை முருகுண் டாயின் முளையிடை விளைவுண் டாயின்
மகவிடை மதன இன்பம் வருவதுண் டாயின் சைவப்
பகையொடு மருவிநின்ற பார்த்திபன் தனது ளத்தின்
உகவிடை அமலற் போற்றும் ஒழுக்கமும் வந்து நன்னும்.

(அக. துற. 48)

மேலும் நான் செய்து கொடுத்த உறுதிமொழியை எண்ணி உங்கள் சிவனை வழிபாடு செய்யத்தக்கது என்று ம்ன்னன் கூற அவ்வாறானால் உங்கள் தோள்களை யாங்கள் தொடுவது அன்று எனக் கூறினாள். மணம் விரியும் கூந்தலையுடைய மாதேவியின் வாய்மொழி கையையும் வாயையும் கட்டி விட்டதென அடங்கிட மன்னன் மாதேவிமேல்

கொண்ட ஆசையானது விறகில்லா நெருப்பைப்போல் அழிந்தது போன்று மன்னன் வாளாஇருந்தான். அழகிய வேல் போன்ற கண்களையுடைய மன்னனை விட்டு நீங்கிப் போக எண்ணினாள்.

துறவென்னும் ஆசை மனதில் உண்டாக, இறைவனதாணை யெல்லாம் கெட்டோடல் போல், அணிகலன்கள் ஆடைகள் ஆகியவற்றை அகற்றிவிட்டு கூந்தலை அவிழ்த்துவிட்டுக் கொண்டதை எண்ணும்போது, அழகிய பொன்னால் செய்யப்பட்ட பாவையை மிகக் கருநிறம் பொருந்திய மைக்குழம்பால் மறையப் பெற்றது போன்றிருந்தது.

மயக்கமடைந்தனள் கொல்லோ என்ற மயக்கத்தில் மன்னன் இருப்ப, தெளிவடைந்த தன் கையில் கொண்ட சிவலிங்கத்தொடு நினைத்த பொருளடைந்தோம் என மகிழ்ச்சி பொங்க மன்னவனை விட்டுத் துறந்து அருள் பெருகுகின்ற கண்களையுடையாள் போன்று மாதேவி தெருவழியே சென்றாள்.

மருளடைந் தனள்கொல் என்று மருண்டுமன் னவனிருப்பத்
தெருளடைந் தங்கை கொண்ட சிவலிங்கத் தொடுநினைந்த
பொருளடைந் தெனம கிழ்ச்சி பொங்கமன் னவனை நீங்கி
அருளடைந் தொழுகு கண்ணாள் அணிமறு கூடு சென்றாள்.
(அக. துற. 52)

என்று அடிகள் கூறுவதனைக் காணலாம்.

பார்த்தவர்கள் எல்லாம் உள்ளங் கரைந்துருக கண்ணில் நீர் பெருக வலிமைமிக்க அரசன் பின்னர் சிவிகையூர்ந்து மலர்ந்த தாமரைமலர்க் கோயில் எழுந்தருளிய ஒள்ளிய திருமகள் போல் சென்ற ஒள்ளிய வளையலணிந்த மாதேவி இப்பேய்க்கோலம் கொண்டு போகின்ற தன்மை என்ன வென்றறியோம் என்று நகர மக்கள் வருந்தினர்.

கண்டவர் எல்லாம் நெஞ்சங் கரைந்துகக் கண்ணீர் மல்கத்
திண்திறல் அரசன் பின்னர்ச் சிவிகையூர்ந் தலர்பூங் கோயில்
ஒண்திரு மகள்போற் சென்ற ஒண்தொடி இப்பேய்க் கோலம்
கொண்டிவண் போகா நின்ற கொள்கையே தறியேம் என்பார்.
(அக. துற. 55)

இவ்வாறு நகர மக்கள் எல்லாம் அழுது புலம்ப மாதேவி, கரும்பு, அமுது, தேனும் கைப்புச் சுவைபட பெரிய வீட்டின்பத்தை நல்குகின்ற குருவாகிய அல்லம தேவர் தன்னை நாடிச் சென்றாள். சுடுகின்ற வெயிலில் மென்மையான நிழலை நாடிச் செல்வதுபோல் நாடிச் சென்றாள்.

இன்னணம் நகரம் எல்லாம் இரங்கமா தேவியம்மை
கன்னலும் அமுதுந் தேனுங் கைப்பப்பே ரின்ப நல்கும்
தன்னிகர் குருகு கேசன் தன்னையே தேடிச் சென்றாள்
மென்னிழல் விரும்பி மிக்க வெயில்சுடச் செல்வார் போல.

(அக. துற. 57)

காடுகளை எல்லாம் கடந்து மலைகள் மீதேறி காவல் மிகுந்த நகரங்களில் எல்லாம் போய்த் தேடி காமன் கணைக்குத் தப்பிய வல்லிக் கொடி போன்ற மாதேவி குன்றுதலில்லாமல் அருளினால் மக்களை எல்லாம் அடியார்களாகக் கொள்ளும் அல்லம தேவனைத் தேடுகின்றாள்.

காட்டினும் மலையினும் தேடிக் காணாள். வாட்டுகின்ற பிறப்பு என்கிற நோய்கெட வீடுபேற்றைச் சேர்க்கின்ற நல்ல மருந்து போல்பவராகிய அல்லமதேவர் கல்யாண புரத்திலிருப்பதை அறிஞர்கள் கூறக்கேட்டு அங்குச் சென்றாள். அங்கு அல்லம தேவரைக் கண்டு வணங்கி, 'நெஞ்சமானது தீயில் பட்ட அரக்கைப் போல நைந்து நைந்து உருக இனிய சொற்கள் வாயினின்றும் வாராது தத்தளிக்க கண்களில் நீர்சிந்த அப்பொழுது மலர்ந்த தாமரைப் போன்ற மாதேவி வணங்கும்படி, மன்மதனால் வருகின்ற காம மயக்கம் அறியாதவளாகி, பிறவிப் பிணியினின்றும் நீக்குமாறு அருள் செய்க என்றழுதாள். இதனை சிவப்பிரகாச அடிகளார்,

நெஞ்சம் ஆரழல் அரக்கென நெக்குநெக் குருகச்
செஞ்சொல் வாய்தடு மாறவாள் விழிபுனல் சிந்தக்
கஞ்ச நாள்மலர்க் கைதொழு தனங்கன்நோய் காணாள்
அஞ்சி னேன்பவப் பிணியினி அருள்செயென் றழுதாள்

(கதலி. 7)

அக்கமாதேவி அருள் பெறத் தக்காள் என்று அல்லமர். 'வீடு பேற்றை விரும்புபவர் ஆண்கள் என்றும் பெண்கள் என்றும் வேறுபாடு உண்டோ? மாதேவி உமையம்மை சாயலின் ஒரு பகுதி ஆதலின், பக்குவம் பெறுவதற்குரிய ஆண்களேயன்றி, இவளும் அருள் பெறத் தக்கவள் என அல்லமர் கருதினார்.

வீடு வப்பவர் ஆணெனப் பெண்ணென வேறோ
ஏட லர்க்குழல் உமைகலை யேயிவள் இவள்போல்
நாடு நிற்பரு வம்பெறும் அவரிலை ஞானம்
கூடு தற்குரி யாளென அல்லமன் குறித்தான் (கதலி. 8)

பூதம் பொறி முதலியன நீ அல்லவெனக் கூறி மெய்யறிவால் உணரும் உண்மைப் பொருள் நீ என்று அல்லமன் கூறி, மேலும்,

அறிபொருள், அறிவு, அறிபவன், இவை பலவாக நிற்கும், ஆதலினால் ஒன்றுபட்ட வீடுபேறு அன்று. உலகம் பொருந்தும் வண்ணம் இப்பொருள் அப்பொருள் என்று குறித்துக் காட்டி குறிப்பிட்ட தன்மையை, மாயத்தொடர்பு நீங்கிய அக்கமாதேவியிடத்து உண்மைப் பொருளை உணர்த்தினார்.

ஞேய ஞானஞா துருவெனும் இவைபல நிற்கும்
ஆயின் வேற்று முத்தியன் றதுசகம் ஆமென்
றேயும் ஆறிது அதுவெனும் சுட்டிலா இயல்பை
மாயை மாறிய தேவிபால் அருளினன் வள்ளல் (கதலி. 14)

அம்மையே! என்னையடைந்து அறிந்து கொண்ட இப்பொருளினை எல்லாம், ஐயந்திரிபு அறியாமை நீங்கிய தன்மையில் நீயே தெளிந்து உறுதி கொள்வாயாக என்று கூறி அனுப்பினார். அல்லமப் பிரபுவின் திருவடிகளைத் தொழுது வணங்கி அக்கமாதேவி, கதலிவனம் உள்ள திருப்பருப்பதம் என்னும் திருமலையை யடைந்தாள். அங்கு கதலிவனத்தைக் கண்ட அக்கமாதேவி, முனிவர், தேவர், யாவரும் போற்றும்படியாக, துணையின்றித் தன்னந்தனியளாய், மாதொரு பாகனாகிய, இறைவனை விரும்பிய உள்ளமொடு மகிழ்வுற்றிருந்தாள்.

அக்கமாதேவி அரச வாழ்வைத் துறந்து அறிவாசானை நாடி, வசவண்ணர் திருமடத்தில் அல்லமரைக் கண்டு ‘அஞ்சினேன் பவப் பிணி இனி அருள் செய்க’ என அழுதார். அவரது பக்குவ நிலையை உணர்ந்த அல்லமர் ‘வீடு உவப்பவர் ஆணென, பெண்ணென வேறோ என்று கருதி அவருக்கு மெய்ப்பொருளை உணர்த்தினார். ‘வீட்டு நெறியை விரும்புவதில் ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபாடில்லை’ என்று அல்லமர் கருத்தாகச் சிவப்பிரகாச அடிகள் கூறியிருத்தல், இவர் பெண்மைக்குத் தந்த மேன்மைக்குச் சான்றாம் என அக்கமாதேவி வரலாற்றால் அறியலாம்.

4. மணிமாலையில் சமயக்குரவர்

சா. அபிராமி, புதுவை.

முப்பத்திரண்டு வயதில் முப்பத்து நான்கு நூல்களைப் படைத்தருளியவர் சிவப்பிரகாச சுவாமிகள். ''கற்பனைக் களஞ்சியம்'', ''கவிதைக் கடல்'' என்றெல்லாம் புகழப்படக் கூடியவர். இவர் தமது 'சோணசைல் மாலை', 'நெஞ்சுவிடு தூது' போன்ற நூல்களில் நால்வரைப் பற்றிப் பாடியுள்ளார். எனினும், சமயக்குரவர் நால்வர்களுக்காக மட்டுமே பாடப்பட்ட நூல் ''நால்வர் நான்மணிமாலை'' என்பதாகும். இந்நூலில் ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய அருட்பெரும் ஞானிகளைப் பற்றிச் சிவப்பிரகாசர் எவ்வாறெல்லாம் புகழ்ந்து வியந்திருக்கின்றார் என்பதை ஆய்வதே இக்கட்டுரை.

வெண்பா, கலித்துறை, விருத்தம், அகவல் ஆகிய நான்கு பா வகைகளால் அந்தாதித் தொடையுடன் கூடிய நாற்பது செய்யுட்களால் பாடப்படுவது ''நான்மணிமாலை'' ஆகும்.

''வெண்பாக் கலித்துறை விருத்தம் அகவல்
பின்பேசும் அந்தா தியினாற் பதுபெறின்
நான்மணி மாலை யாமென நவில்வர்'' (இலக்கண விளக்கம்.)

'கோயில் நான்மணிமாலை, திருவாரூர் நான்மணிமாலை, பழனி நான்மணிமாலை; என வழங்கும் நூல்களுக்கும் 'நால்வர் நான்மணி மாலை' என்னும் இந்நூலுக்கும் பெரியதொரு வேறுபாடு உண்டு. அந்நூல்களுக்குப் பாட்டுடைத் தலைவர் ஒருவரே, இந்நூலுக்கோ பாட்டுடைத் தலைவர்கள் நால்வர் ஆவர். அந்நூல்கள் இறைவன் திருவருளைப் பெறுவதற்கு விரும்பிப் பாடப்பெற்றவை. இந்நூல் இறைவன் திருவருளைப் பெற்ற சமயக் குரவர்களின் மாண்பையும் அவர்கள் செய்தருளிய திருவருட் செயல்களையும் பாடியருளிய பாக்களின் சிறப்பையும் உலகோர் நன்கு உணர்ந்து, நெறி நின்று, இம்மை, மறுமை, வீடுபேறு முதலிய பயன்களையடைந்து உய்யும் பொருட்டுப் பாடியருளப் பெற்றது.

1, 5, 9, 13, 17, 21, 25, 29, 33, 37 ஆகிய எண்கள் உள்ள வெண்பாக்கள் பத்தும் திருஞானசம்பந்தரின் மாண்பையும் அவர்தம் தெய்வீகச் செயல்களையும் விளக்குவனவாகும்.

2, 6, 10, 14, 18, 22, 26, 30, 34, 38 ஆகிய எண்கள் கொண்ட பாக்கள் கலித்துறையில் அமைந்து அப்பரின் அருமை பெருமைகளைத் தெள்ளிதின் உணர்த்துவனவாகும்.

3, 7, 11, 15, 19, 23, 27, 31, 35, 39 ஆகிய எண்களுள்ள விருத்தப் பாக்கள் பத்தும் சுந்தரரின் பெருமைகளை இசைப்பனவாகும்.

4, 8, 12, 16, 20, 24, 28, 32, 36, 40 ஆகிய எண்களைக் கொண்ட அகவற்பாக்கள் வாதவூரரின் அன்பின் பெருக்கையும் திருவாசகத் தேனின் சிறப்பையும் சீரிய முறையில் எடுத்தோதுகின்றன.

திருஞானசம்பந்தர்

சம்பந்தர் ஞானப்பால் உண்டது; சம்பந்தர்பால் மங்கையர்க்கரசி கொண்டிருந்த பேரன்பு, எலும்பைப் பெண்ணாக்கியது, ஆண் பனையைப் பெண் பனையாக்கியது, பாம்பின் விடத்தினைப் போக்கியருளியது, வையை வெள்ளத்தில் இட்ட ஏடு நீரோட்டத்தை எதிர்த்து மேலே சென்றது, நெருப்பில் இட்ட ஏடு எரிந்து போகாமல் இருந்தது, முத்துச் சிவிகை பெற்றது முதலான தெய்வச் செயல்களைச் சிவப்பிரகாசர் வியந்து போற்றுகின்றார்.

சம்பந்தரின் அருட்பாக்களின் பெருமையைச் சிவப்பிரகாசர் கூறி யுள்ளதைக் காட்டிலும் வேறு யாரும் கூறிவிட முடியாது. ''கொள்ளை கொள்ள வீடுதவிக் கூற்றைப் பிடர் பிடித்துத் தள்ளுந் திருஞான சம்பந்தா...... (6) எமனைப் பிடர் பிடித்துத் தள்ளிவிட்டு, மெய்யன்பர் களுக்கு வீடுபேறு கிடைக்கச் செய்பவை திருஞானசம்பந்தரின் அருட்பாக்கள்.

''பிரமாபுரத்து மறைஞான ஞான முனிவன், ஆனசொல் மாலை ஓதும் அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே'' என்று ஞானசம்பந்தர் ஆணையிட்டுச் சொல்லவில்லையா?

முதல் பாடலிலேயே தண்டையும் நறுமணமும் தண்மையும் வாய்ந்த செந்தாமரை மலர்போலும் திருவடிகளே சிவப்பேறு அளிப்பன என உறுதி தருகின்றார். அடுத்த பாடலில் வாதத்திற்குரிய ஒரு வினாவை வைக்கின்றார்.

அம்மே, அப்பாவென்று அழைத்தழுதல் கண்டு திருமுலை சுரந்து சிவபிரான் பணித்தவாறு அப் பாலடிசிலைப் பொன்வள்ளத்திற் கறந்து ஊட்டியவள் உமையம்மை. சம்பந்தரின் பெருமை நிலைமையை உரைக்கும்போதே திருமுலை சுரந்த அருட்பெருக்கை உடையவள் மங்கையர்க்கரசி.

''..........அழுதல் கண்டு முலை சுரந்த வன்னையோ முன்னின்-னிலை விளம்பக் கொங்கை சுரந்தவருட் கோமகளோ சம்பந்தா விங்குயர்ந்தா ளார்சொல் லெனக்கு'' (2)

இவ் விருவருள் யார் உயர்ந்தவர் என்ற வினா இவர் உள்ளத்தில் எழுந்தது வியப்பே.

சமணர்களை அனல் வாதத்தில் வெற்றி கண்ட பதிகம் ''போக மார்த்த'' எனத் தொடங்கும் பச்சைப் பதிகமாகும். இப்பதிக ஏடுகளைத் தீயிலிட்டும் அவை கரியாகி நீறுபடாமல் நின்று, கொன்றை அணிந்த பரமருடைய பரத்துவ நிலைக்குத் தானே சான்றாக நின்றன.

இம் மகத்துவத்தைச் சுவாமிகள் ஒரே வரியில் மிக அழகாக நம் உள்ளம் கொள்ளும் வண்ணம் பாடியிருக்கின்றார்கள்.

சீரேடு - தானுங் கரியாய் மொழியுங் கரியாய் விடாம லெரியா (7)

சிவப்பிரகாச சுவாமிகளின் சில கேள்விகள் நம் சிந்தனையைத் தூண்டு வனவாக உள்ளன; சில கேள்விகள் நகைச்சுவையாயும் உள்ளன. நகைச்சுவையான இரண்டு கேள்விகளை இங்கே காணலாம்.

ஞானசம்பந்தருக்குச் சிவபெருமான் வெண்முத்துச் சிவிகை அருளினார் அல்லவா?

''சிறுபலியின் பொருட்டு முனிவர் பத்தினிகளின் இருக்கை தோறும் திரிந்த சிவபெருமான் வெண்முத்துச் சிவிகையை யாங்குப் பெற்று உமக்கீந்தார் என்று ஞானசம்பந்தப் பிள்ளையைத் தரிசிக்கும்போது யாம் கேட்போம்'' என்றும் சிவப்பிரகாசர் கவிநயம் பொருந்தக் கூறுகின்றார்.

''சுடுகாட்டிலே நடிப்பவராகிய இறைவனைச் சுட்டிய ஞானசம்பந்த மூர்த்தியே! சுடுகாட்டிலே பிருந்தையின் எலும்பிலே புரண்ட திருமால் அவ்வெலும்பைத் தங்களிடம் கொடுத்துப் பெண்ணாக மாற்றி யிருக்கலாமே'' என்று திருமாலுக்கிரங்கியிருப்பது ஆசிரியரின் நகைச்சுவை உணர்ச்சியை வெளிப்படுத்தும்.

சிவப்பிரகாச சுவாமிகள் தமது நூற்களில் நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் திருக்குறளைப் பயன்படுத்தியிருக்கின்றார்கள், திருக்குறளை முழுவதுமாகப் பயன்படுத்தும் பாங்கை அவர்தம் நூல்களில் காண முடிகிறது.

''அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை'' (குறள்)

அறம் செய்தவன் சிவிகையில் அமர்ந்து செல்வான், அறம் செய்யாதவன் சிவிகையைச் சுமந்து செல்வான் என்பது இக்குறட் கருத்து. ஆனால் இங்கே ஞானசம்பந்தரின் சிவிகையைத் தூக்குவோர், இம்மையின்பமெய்திய பின்னர் சிறந்த தேவராகி, தேவர்குல யானையில் ஏறுவர் என்று உறுதி தருகின்றார்.

''அறத்தாறிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடையை மறுத்தார்சம்
பந்தன் சிவிகை பரித்தார் திரிகுவர் மற்
றுந்துஞ் சிவிகையினை யூர்ந்து'' (9)

சிவிகை பரித்தார் - ஞானசம்பந்தரின் சிவிகையைத் தூக்குவோர்; உந்துஞ் சிவிகையினை யூர்ந்து - தேவயானையில் செல்வர். உவகை மேலீட்டால் அப்பரும் சிவிகையைத் தாங்கினாரல்லவா?

பொருளும் அதனால் எய்தும் புண்ணியமும் - அப்புண்ணியப் பயனாகிய இம்மை மறுமையின்பங்களும் கல்வியும் அதனால் எய்தும் அன்பும் - அவ்வன்பின் பயனாகிய ஞானமும் ஆகிய யாவும் ஞானசம்பந்தப் பெருமானுடைய செவ்விய திருவடிகளே எனும் ஞானம் பெற்றவர் பிறப்பையொழிப்பர்.

''வல்லார் பிறப்பறுப்பர் வண்மை நலங்கல்வி
நல்லா தரவின்ப ஞானங்க - ளெல்லாந்
திருஞான சம்பந்தன் சேவடியே யென்னு
மொருஞான சம்பந்த முற்று'' (10)

திருநாவுக்கரசர்

இறைவன் அருளால் அப்பர் சூலை நோய் அடைந்தது; அருகக் கடலைக் கடந்தது; கல்லையே புணையாகக் கொண்டு கடலைக் கடந்தது. திருமறைக்காட்டில் கோயிற் கதவு திறக்கப் பாடியது; இறைவன் அருளிய படிக்காசு பெற்றது; பாம்பு தீண்டி மாண்டு போனவனை எழுப்பியது; திருநாவுக்கரசு எனும் பெயரால் அப்பூதியடிகள் அடைந்த பேறு முதலியன வற்றைத் திருநாவுக்கரசரைப் பற்றிய பாடல்கள் உணர்த்துகின்றன.

அப்பர் சுவாமிகளின் அருட்பாடல்கள் வீட்டுலகத்திற்கு வாயிலாக அமைவன.

''வீட்டிற்கு வாயிலெனுந் தொடை சாத்து சொல் வேந்தே'' (11)
என்று சிவப்பிரகாசர் மெய்சிலிர்த்துப் போகின்றார்.

முற்பிறவியில் திருநாவுக்கரசரை வழிபடாதவர் மங்கையர் மையலில் மயங்குவர்; அவர்கள் உயிரெய்துதற்குரிய பயனெய்தாமையின்

பிணத்தோடு ஒப்பர்; உண்டு உடுத்து உழல்வர் என்பதால் ''நடைவாய் பிணம்'' எனும் கடுமையான சொல்லாட்சியைச் சிவப்பிரகாசர் பயன் படுத்துகின்றார்.

பிறந்தால் திருநாவுக்கரசரைப் போல் பிறக்க வேண்டும்; ஒரு புதல்வனைப் பெற்றால் திருநாவுக்கரசரைப் போல் பெறவேண்டும் என்று ஏங்குகின்றார் ஆசிரியர்.

''பெற்றா னினைப்பெற் றவர்போற் பெறலும்
பிறப்பதுண்டேனற்றா ரணியி
யினைப்போற் பிறப்பது நல்ல'' (18)

'அவனருளாலே அவன்தாள் வணங்கி' என்று மாணிக்கவாசகர் பாடியுள்ளதைப் போல் இடப வாகனத்தைச் செலுத்தி வரும் இறைவன் அருளாலேயே திருநாவுக்கரசர் சமண சமயத்தைச் சார்ந்து, பின்னர் சைவ சமயத்திற்கு வந்தார். வறுமையில் உழன்றவர் செல்வம் பெற்றால் அவர்களுக்கு அச்செல்வம் எவ்வளவு அருமை உடையதாக இருக்குமோ அவ்வாறே அப்பர் சுவாமிகளுக்கு சைவம் அருமையுடையதாயிற்று.

''.......நல்குரவு முனஞ் சேர்ந்து மருவினர்க் கேசிறந்
தோங்குறுஞ் செல்வமுமே!''
(19)

இங்கேயும் ஆசிரியர் ஒரு வினாவை வைக்கின்றார். வாகீச மூர்த்தியே! உமக்கு அரிய செயல் எது? சமணக் கடலை நீந்திச் சைவ மென்னும் கரையில் இவர்ந்ததோ? கல் தெப்பமாக மிதப்பக்கொண்டு பெருகிய அக்கடலை நீந்திக் கரையேறியதோ? உமக்கு அரிய செயல் எது? என்று சிவப்பிரகாசர் வினவுகின்றார்.

முத்துப் பந்தரும் முத்துச் சின்னமும் பெற்ற ஞானசம்பந்தப் பெருமான் படிக்காசு பெற்றது தகும். ஆனால் இறைவனது அருட் செல்வத்தையன்றி வேறொன்றும் விழையாத திருத்தாண்டக வேந்தருக்குப் படிக்காசு எதற்கு?

''கள்ளைக் குவளை யுமிழ்வீழி யிற்படிக் காசொன்று நீ
வள்ளைக் குழையுமை
பங்காளர் கையிலென் வாங்கினையே'' (13)

இறைவனுடைய அருளாணையை மறுத்தற்கு அஞ்சித்தான் வாகீசர் படிக்காசு பெற்றாரோ?

மலமுத்தராயினாரே பிறரையும் மலமுத்தர் ஆக்குவதற்கு உரியர். ஆன்மா எனப்படும் தனியாலயத்தின்கண் பொருந்திய, அறிவென்னும்

பெயரை அநாதியே கொண்டுள்ள வாயிலில், பதிந்து நிற்கும் ஆணவ மென்னும் கதவையும் திறந்து சிவபெருமானைக் காட்டுவார் வாகீச மூர்த்திகள்.

''தாயிலி யாகுஞ் சிவபெரு மான்றனைத் தாளெனு மோர்
கோயிலி னாரறி வாகிய நாமமுன் கொண்டிருந்த
வாயிலி னாணவ மாகுங் கபாடமு மன்றிறந்து
நோயிலி யாகிய சொல்லிறை காட்டுவ னோக்குதற்கே'' (14)

என்று நமக்கு சிவப்பிரகாசர் வழிகாட்டுகின்றார்.

''ஒரு நம்பி அப்பூதியடியார்க்கும் அடியேன்'' என்று நம்பியாரூரரால் உயர்த்துத் துதிக்கப் பெற்ற மிக்க மேன்மையுடையவராகிய அப்பூதியடிகள் சரியை, கிரியை, யோகங்களைப் பின்பற்றியவரல்லர்; தீயின் நடுவில் நின்று கடுந்தவம் புரிந்தவருமல்லர்; நீரை உணவாகக் கொண்டு மற்றைய உணவுகளை நீக்கியவருமல்லர்.

''திருநாவுக்கரசு'' எனும் ஒரு சொல்லையே உயிர்க்குறுதி பயக்கும் மந்திரமாக உச்சரித்து எக்காலத்தும் துன்பமேயில்லாத முத்தியை எய்தினார்'' என்று அப்பூதியடிகளின் மூலமாக திருத்தாண்டக வேந்தரின் பெருமையை உள்ளங்கை நெல்லிக்கனி போல நமக்குத் தருகின்றார் சிவப்பிரகாச சுவாமிகள்.

நம்பி ஆரூரர்

விருத்தப்பாக்கள், சுந்தரரைச் சிவபெருமான் தடுத்தாட்கொண்டது; சுந்தரருக்காகப் பரவை நாச்சியாரிடம் தூது சென்றது; இறைவன் மனைகள்தோறும் சென்று இரந்து சுந்தரருக்குச் சோறு இட்டது; தோழனாகச் சுந்தரரைச் சிவபெருமான் கொண்டது; முதலையுண்ட பாலனைச் சுந்தரர் அழைத்தது; குண்டையூர் நெல்மலையைக் கொண்டது; சுந்தரரைப் பார்க்க விரும்பாது கலிக்காமர் வயிற்றினிடையே குத்திக் கொண்டது; நதியில் இட்ட பொன்னைக் குளத்தில் எடுத்தது; செங்கல் செம்பொன் ஆனது; யானை மீதமர்ந்து கயிலைக்குச் சென்றது முதலிய அருட்செயல்களைச் சொல்லி தாமும் மகிழ்ந்து நம்மையும் மகிழ் விக்கின்றார் சுவாமிகள்.

''விருந்து துறந்த முனிவர் தொழும் பரவை துணைவா''

''பரவை மகிழக் குண்டையூர் நென்மலை முற்கொண்ட
வருட்கடலே''

''மதலை விழுங்கிய முதலை கான்றிடத் தோன்றும் நாவலனே''

''கயிலை மலையடைந்த மணியே''

''சுரர் முனிவர்பரவலுறும் பெருஞ்சீர்த் தொண்டத் தொகை செய்தோய்''

''அற முதல் நால் வகை செய்தோய்''

என்று உள்ளன்போடு போற்றிப் பரவுகின்றார். பொருட் செல்வத்திற்குத் தலைவனாகிய குபேரனைத் தோழனாகக் கொண்ட சிவபெருமான் கல்விச் செல்வத்திற்குத் தலைமை பெற்ற தோழர் ஒருவர் வேண்டு மென்று சுந்தரரைத் தோழராக கொண்டாரோ என்று ஆசிரியர் வியக்கின்றார்.

முதலை விழுங்கிய அந்தணப் புதல்வனை உயிருடன் அழைத்த அருட்செயலைச் சைவ சித்தாந்த கருத்தோடு இணைத்துப் பாடி யிருப்பது சித்தாந்தக் கருத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ள பேருதவியாக அமைகிறது.

தேகம்	- மடு	திரோதான சத்தி	- எமன்
மூலமலம்	- முதலை	நாதாந்தம்	- கரை
உயிர்	- புதல்வன்	சிவன்	- பெற்றோர்

முதலையின் உடல் என்னும் குளத்தினின்று மூலமலமெனப்படும் ஒரு வெவ்விய முதலையின் விரிந்த வாயினின்றும் அழிவில்லாத உயிரெனப்படும் அந்தண குலப் புதல்வனைத் திரோதான சத்தி எனும் எமனால், நாதாந்தம் என்னும் கரையிலே கக்குவித்து, சிவன் என்னும் பெற்றோருடன் சேர்த்தீரே என்று வியப்பில் மூழ்குகின்றார் சுவாமிகள்.

உமையம்மை உயர்ந்தவளா? மங்கையர்க்கரசி உயர்ந்தவளா? என்று ஞானசம்பந்தரைப் பாடும்போது வினா எழுப்பிய சுவாமிகள் சுந்தரரைப் பற்றிப் புகழும்போதும் ஒரு வினாவை வைக்கின்றார். ஞானசம்பந்தர், எலும்பைப் பெண்ணாக்கியது; சொல்லின் செல்வர் கல்மேல் மிதந்து வந்தது; சுந்தரர் முதலையின் வாயினின்றும் புதல்வனை மீட்டது ஆகிய இந்த முப்பெரும் அருட்செயல்களுள் எது அரியது? எனக்கு விளம்புவீராக என்று சுந்தரரையே கேட்கின்றார். தரும தேவதையையே தமது இடபமாக இறைவன் ஏற்றுக் கொண்ட செய்தியை இந்நூல் வாயிலாக

''சேவாய்ப் பொருதுந் தரும முடைத் தேவன்'' (28)

என்ற வரியால் அறியலாம்.

சிவபிரானமரும் திருக்கயிலை மலைக்குத் தேவீர் எழுந்தருளுங்கால் சேரமான் பெருமாள் நாயனார், செலுத்தி வரும் குதிரையாய் உதிக்கும்படி, இனியுக முடிவில் குதிரையாய் உதிக்கும் திருமாலுக்குக்

கிட்டாது'' என்னும்போது, யுக முடிவில் திருமால் கல்கி அவதாரம் எடுப்பார் எனும் செய்தியையும் சுவாமிகள் அறியத் தருகின்றார்.

அப்பூதியடிகள் திருநாவுக்கரசரைத் துதித்தது போல் பெருமிழலை எனும் ஊரிலிருந்த குறும்ப நாயனார் பேருவகையுற்று சுந்தரரை வழிபட்டார் என்றும் சிவப்பிரகாச சுவாமிகள் மகிழ்ச்சியோடு பாடுகின்றார்.

மாணிக்கவாசகர்

''பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம் மூழ்கிய புனிதன்''
''மாணிக்க வாசகன் எனுமொரு மாமழை''
''ஏறுகந் தேறியைப் பரிமா மிசைவரப் பண்ணிய வித்தக'',
''மனம்நின் றுருக்கும் மதுர வாசக'',
''கலங்குறு புலனெறி விலங்குறு வீர'',
''குருந்தின் நீழல்வா யுண்ட நிகரில் ஆனந்தத் தேன்தேக்
கெறியும் செய்ய மாணிக்க வாசகன்'',
''தெய்வ சிகாமணி பாதம் போற்றும் வாதவூரன்ப''

என மாணிக்கவாசகரை உள்ளன்போடு பத்திச்சுவை ததும்பப் பாராட்டி யிருக்கின்றார் சுவாமிகள்.

வேதங்களையும் திருவாசகத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கின்றார். ''வேதத்தைப் பல முறை ஓதினாலும் கண்களில் நீரைப் பொழிந்து, மனம் கரைந்துருகி நிற்கின்றவரையாம் கண்டிலம்; ஆனால் திருவாசகத்தை ஒரு முறை ஓதினாலும் கருங்கல் எனப்படும் வன் மனமும் உருகிக் கசிய, தோண்டிய மணற்கேணி சுரக்குமாறு போலக் கண்கள் நீர் பெருகிப் பாய உடலிலுள்ள மயிர்கள் சிலிர்க்க அன்பர் ஆகுவர் என்று பெருமிதம் பேசுகின்றார் சிவப்பிரகாசர்.

''வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்ச நெக்குருகி நிற்பவர்க் காண்கிலேந்
திருவா சகமிங் கொருகா லோதிற்
கருங்கன் மனமுங் கரைந்துக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்து நீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே'' (31)

வேதம் ஓதின் மெய்ப்பயன் அறம் மட்டுமே; ஆனால் மதுர வாசகம் ஓதின் மெய்ப்பயன் ''முத்தி''யே என்று சுவாமிகள் உறுதி தருகின்றார். வேதத்தை மட்கலம் என்றும் திருவாசகத்தைப் ''பொற்கலம்''

என்றும் சுவாமிகள் பெருமையோடு பாடுகின்றார். திருப்பெருந்துறையில் புகுந்து பேரின்ப வெள்ளத்தில் மூழ்கிய மணிவாசகரின் திருவாசகத்தின் பொருள் இடபாகத்தில் தேவியோடு இருக்கும் தவசொரூபராகிய சிவபெருமானே ஆவார். திருவாசகத்தை ஓதினால் எப்படி 'முத்தி' கிட்டும் என்பதைக் கற்பனைக் களஞ்சியமாம் சிவப்பிரகாச சுவாமிகள் அழகிய உவமையால் பாடித் தருகின்றார்.

திருவாசகம் எனும் பெருவெள்ளம் ஓதுவார்களுடைய உள்ளமெனும் ஏரியினுள் நிரம்பி, நாக்கு எனும் மதகின் வழி வெளிப்பட்டு, கேட்போர் செவியெனும் மடைகளில் பாய்ந்து, அவர்தம் நெஞ்சு எனும் நிலத்தில் பாய, அங்கே பதிக்கப்பட்டுள்ள அன்பென்னும் வித்திலே சிவமென்னும் சிறுமுளை தோன்றி வளர்ச்சியுற்று 'முத்தி' எனும் பயனைத் தரும்.

சிவப்பிரகாச சுவாமிகள் தம் நூல்களில் சிவனடியார்கள் சிலரின் வரலாற்றைக் கூறுவதுண்டு. அவ்வகையில் மாணிக்கவாசகரைப் புகழும் அகவற் பாவிலும் கணம்புல்ல நாயனார், அரிவாட்டாய நாயனார், திருக்குறிப்புத் தொண்டர், இயற்பகை நாயனார், மானக்கஞ்சாற நாயனார், கலிக்கம்ப நாயனார், சண்டேச நாயனார், சிறுத்தொண்ட நாயனார், கோட்புலி நாயனார், செருத்துணை நாயனார், இளையான்குடி மாற நாயனார், அதிபத்த நாயனார், அமர்நீதி நாயனார், திருநீலகண்ட நாயனார் முதலிய தொண்டர்கள், வருந்தித் தொண்டர் ஆயினர்; ஆனால்

''மதுரைமா நகரிற் குதிரை மாறியும்
விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்து
நிற்றெழின் மேனியின் மாற்றடி பட்டு'' (33)

இறைவன், திருவாதவூரரைத் தொண்டனாகக் கொண்டான் என்று சுவாமிகள், இறைவன் தாமே வந்து தொண்டனாகக் கொண்ட விதத்தை வியந்து பாடுகின்றார்.

பூ என்றால் அஃது செந்தாமரைப் பூவையே குறிக்கும்; அதுபோல் ''பா'' என்றால் அஃது திருவாசகத்தையே குறிக்கும் என்று எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக சுவாமிகள் அருளியிருப்பது மெய்மையேயாகும்.

''தானே முத்தி தருகுவன் சிவனவ
னடியன் வாத வூரனைக்
கடிவின் மனத்தாற் கட்டவல் லார்க்கே''

சமயக்குரவர் நால்வரையும் வணங்கிப் போற்றினாலேயே நமக்கு வீடுபேறு கிட்டும் என்று உறுதிமொழியை ''நால்வர் நான்மணிமாலை''யில் நமக்குத் தெள்ளிதின் உரைக்கின்றார் சிவப்பிரகாச சுவாமிகள்.

5. அல்லமரும் சிவப்பிரகாசரும்

க. அமுதா, அரியக்குடி

சமயங்களின் வளர்ச்சிக்கெனப் பல இலக்கியங்கள் தமிழ் மொழியில் தோன்றின. அவை சமய வளர்ச்சிக்கு அடிகோலி தமிழ் மொழியின் செழிப்பிற்கு உதவின என்றால் மிகையாகாது. மன்னராட்சிக் காலம் முதல் இன்று வரை தமிழ் தரணியில் நிலைக்கச் சமயங்களின் வளர்ச்சியும் ஒரு தூணே. தொல்காப்பியம்,

'நூல் எனப்படுவது நுவலுங்காலை
முதலும் முடிவும் மாறுகோன் இன்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
உள்நின்று அகன்ற உரையொரு பொருந்தி
நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே'

(தொல். செய். 164)

எனக் கூறும் இலக்கணத்திற்கு ஏற்ப வீர சைவ சமயக் கருத்தினை ஆழ்ந்து, அகன்ற நுட்பமான பொருளில் விளக்குவதற்காக 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த 'கற்பனைக் களஞ்சியம், சிவப்பிரகாசர் பல பனுவல் களை இயற்றினார். அவை தமிழ் மொழிக்கு ஆக்கத்தினை அளித்தன. அவ்வாறெழுந்த நூல்களில் ஒன்று பிரபுலிங்க லீலை. அந்நூலில் சிவபெருமான் வீர சைவ சமயத்தினைப் போதிக்க அல்லமரை மண்ணுலகில் வியப்பிக்கச் செய்கிறார். இறைவனே அல்லமனாகத் தோன்றினார் என்பதை,

'தொல்லையில் உயர்சுஞ் ஞானி தூய்நிராங் காரனென் போர்
எல்லையில் தவங்கள் செய்ய எமது மெய் வடிவத்தானே
அல்லமநாம மைந்தன் ஆயினும் அனையாள் தன்னை
வில்லுறழ் நுதலாய் காண்டல் மிகவுனக் கரியதென்றன்'

(2, 54)

என்று கூறுவதனால் அறியப்படும். இந்நூலில் அல்லமர் என்ற பாத்திரப் படைப்பின் நோக்கம், அல்லமர் கூற்றின் வாயிலாகச் சிவப்பிரகாசர் வீர சைவ சமயத்தில் ஒன்றிய நிலை, அச்சமயத்தின் சிறப்பு எனப் பலவற்றைக் கூறுவதற்காக எழுதப்பட்டது. அச்சிறப்புக்களை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம்.

சிவப்பிரகாசர் - அறிமுகம்

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் காஞ்சிபுரத்தில் குமார தேசிகரின் மகனாகத் தோன்றியவர். வீர சைவ சமயத்தின் மீது பற்றுக் கொண்டு பல நூல்களை இயற்றினார். திருவெங்கைக் கோவை, சிவப்பிரகாச விகாசம், தருக்க பரிபாஷை, சதமணிமாலை, நால்வர் நான்மணிமாலை, நெஞ்சுவிடு தூது, வேதாந்த சூடாமணி, சித்தாந்த சூடாமணி, திருப்பள்ளி எழுச்சி, பிள்ளைத்தமிழ், திருக்கூவப் புராணம், நன்னெறி, பழமலை அந்தாதி, பிரபுலிங்க லீலை போன்றனவும் அடங்கும். அனைத்து நூல்களும் 'எல்லாம் சிவமயம்' என்பதைச் சுட்டுவனவாக எழுந்தவை.

அல்லமர்

அல்லமர் என்பவன் 'சுஞ்ஞானி, நிராங்காரன் என்னும் இருவரிடத்திலும் பிறந்த புதல்வன், பிரபுலிங்க லீலையின் கதாநாயகன், இல்லாதவன் (தமிழ்ப் பேரகராதி, பா. 1, ப. 149) எனச் சுட்டும். பிரபுலிங்க லீலையின் பாட்டுடைத் தலைவனான அல்லமர் எங்கும் நிறைந்துள்ள இறைவனாகக் காட்டப்படுகின்றார். அப்பாத்திரத்தின் மூலம் உலகினுக்கு மெய்ஞ்ஞானம் அஞ்ஞானத்தை வென்றதைக் காட்டுகிறார்.

'கலையை மதிக்கும் புலவர் தமைச் சித்தர் குழாத்தைக் கடவுளரை
நிலையை மதிக்கு முனிவரைத் திசைமாமுகனை நிரை வளையாச்
சிலையை மிதிக்கு நெடியோனை விழுங்கு உமிழாத் திறல்மாயை
தலையை மிதிக்கும் அல்லமன் செங்கமல மலர்த்தாள்
தலைக்கணிவாம்'
(துதி கதி. 5)

என அல்லமருக்கும், மாயைக்கும் நடந்த சொற்போரில் அல்லமர் வென்று மெய்ஞ்ஞானத்தை நிலைநிறுத்தியதாக கடவுள் வாழ்த்துப் பாடலில் பாடுகின்றார்.

அல்லமர் - அறிமுகம்

அறிமுகம் என்பது அறிவித்தல் என்ற பொருள்படும். பிரபுலிங்க லீலையில் அல்லமர் மெய்ஞ்ஞானத்தை நிலை நிறுத்தினார் என்று அறிவிக்கின்றார். அல்லமர் 'பிரபு தேவர் வந்த கதியில்' மோகினியின் மகளாகத் தோன்றிய மாயை இறைவனை நினைத்து வழிபாடு நிகழ்த்து கின்றாள்' அப்போது,

''நிரந்தரம் அடியார் வேண்டும் நினைவெலாம் நிரப்பாநின்ற
பெருந்தகை அல்ல மையன் பெயர்ந் தொரு மனிதனாகி
வருந்துறு மயல்மனத்தால் வந்தனை புரிந்தாள்'' (1:1-3)

என்று மத்தளம் கொட்டுபவனாகத் தோன்றினார் அல்லமர். அவன் அழகிய கோலம்,

''அவிர்சடை முனிவர் மாதர் அழுங்குறக் கொண்டகோலம்
கவினுமில் வடிவங் கொள்ளக் கற்றுமுன் விட்டதென்னக்
குவிமுலை மகளிர் ஆவி கூட்டுணுங் கோலம்' என்னப்
புவியுறும் இரவியென்னப் பொங்கொளி உருவொன் நுற்றான்''
(பி.தே.க. 4)

என்று சிவபெருமான் தாருகாவனம் சென்றபொழுது எடுத்த வடிவ அழகினை விடப் பேரழகுடையது என்கிறார். அவ்வழகில் மயங்கிய மாயை அல்லமரை அடைய நினைக்கின்றாள் முயன்றும் முடியாததால்,

''பொருந்துறை வெளிபோல் வராமையால் தீயிற் புழுவென்பதை
பதைத்தரிவை
வருந்தினள் காமம் அல்லமர் அன்றி வடிவுளார்யார்''

என்று சிவப்பிரகாச மாயையின் துன்பம் நீக்குபவன் அல்லமர் ஒருவனே. ஆனால் மாயையுடன் சேராததால் மாயை துன்பமடைந்தாள் என்று ஆசிரியர் கூற்றாகப் பாடுகிறாள். காரணம் அல்லமர் படைப்பு பிரபுலிங்க லீலையில் அடியார்களுக்கு எளியவன், ஆனால் மாயையைக் கடந்தவன் என்பதால் காமம் இறைவன் முன் அழிகின்றது என்பதை உணர்த்த அவ்வாறு பாடுகின்றார். இந்நூலின் பெயரான பிரபு என்பது அல்லமரையும் லிங்கம் சிவனையும் குறித்துச் சிவபெருமான் அல்லமனாகத் தோன்றிச் செய்த லீலைகளை உணர்த்துவதாக எழுந்த புராணம் பிரபுலிங்க லீலை. ஆதலால் அல்லமர் தோன்றியதை, 'பிரபு தேவர் வந்த கதி' என்று பெயரிட்டார் சிவப்பிரகாச சுவாமிகள்.

அல்லமர் பாத்திரப் படைப்பின் நோக்கம்

தன்னிகரில்லாத் தலைவனைக் கொண்டதாகப் படைக்கப்படுவது காப்பியம். பிரபுலிங்க லீலை நாயகனான அல்லமரை அவ்வாறு படைத்துக் காட்டுகிறார். அவ்வாறு படைக்கப்பட்ட பாத்திரம் நூலின் மையக் கருத்தினை நுவல்வதாக எழுதப்பட வேண்டும். அல்லமர் கூற்றின் மூலம் வீர சைவ சமயத்தின் பொருளை எடுத்துக் கூறுவதுடன் சைவத்தின் சிறப்பினையும் எடுத்தியம்புகிறார்.

1. அடியார்களில் வேறுபட்டவரில்லை

சிவனை வேண்டி சிவனின் தாள்களைப் பற்றுவதை நோக்கமாகக் கொண்டு வாழும் அடியார்களில் ''ஆவுரித் தின்றுழலும் புலையரேனும், கங்கை வார்சடைக் கரந்தார்க் கன்பராகில் அவர் கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே'' (தேவாரம்) என்பதால் சிவனடியார்களில்

வேறுபாடில்லை என்பதைச் சிவப்பிரகாசரும் 'ஆரோகன கதியில் வசவண்ணர் அல்லமரைக் காணும் வேட்கையில் உடனிருந்த அடியார் களை மறந்திருக்கின்றார். அல்லமர் வசவண்ணரின் நிறையறிந்து,

''பெரியவர் சிறியவர் என்னும் பெற்றினை
அரவணி கடவுள்தன் அடியார் தம்முனே
தெரிபவன் எவனவன் சிறியனே'' (ஆ. 2. 16)

என்றும்,

''ஆவுரித் திடினும் நீ நணியும் அன்பனம்
மாவுரித் தவணெனி வணங்கத் தக்கவன்'' (ஆ.க. 17)

என்று அல்லமர் வசவண்ணருக்குக் கூறி அடியவர்களை அழைத்து அமுது படைக்கச் சொல்கிறார். இதன் மூலம் இறையடியார்களில் யாவரும் சமமானவரே வேறுபாடில்லை என்ற சைவ சமயக் கருத்தினைப் புகட்டுகின்றார் சிவப்பிரகாசர்.

2. அடியார்களிடம் இறைவனைக் காணலாம்

மெய்யெலாம் நீறு பூசிய அடியார்களைக் கண்டாலே சிவனைக் கண்டதாக வாழ்ந்த சிவனடியார்களில் ஒருவரான சிவப்பிரகாச சுவாமிகள் இறைவனின் திருத்தாள்களைப் பற்ற,

''இழிப்பினும் வெறுப்பினும் இல்லின் உள்ளன
அழிப்பினும் உடம்பினை அரிந்து கொல்லினும்
பழிப்பறு சங்கம பத்தி செய்பவன்
ஒழிப்பது பிறவி யென்றுலகம் ஓதுமம்'' (ஆ. 2. 23)

என்று அல்லமர் வசவண்ணருக்குக் கூறுவதன் மூலம் அடியார்பால் அன்பு கொள்வோன் பிறப்பைக் கெடுப்போன் என்பதால் அடியார்கள் ஒருவருக்கொருவர் அன்பு கொண்டு வாழ்தல் வேண்டுமென்றும் அதனால் எளிதில் வீடுபேறு வாய்க்கப்பெறும் என்கிறார்.

3. இறைவனை அடைய வழி

இறையடி சேர வேண்டுமெனில் ஐம்புலனை அடக்க வேண்டும் இதையே திருமூலர்,

''பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசு ஐந்தும் பாலாய்ச் சொரியுமே (திருமந்திரம்)

என்று ஐம்புலன்களையும் அடக்குபவன் வாழ்வில் வெற்றி பெறுவான் எல்லா நன்மையும் கூடும் எனக் கூறுவார். சிவப்பிரகாசரும் அல்லமர்

வசவண்ணர், அக்கமாதேவி, கொக்கி தேவர், முத்தாயி அம்மை, சித்தராமையர் போன்ற பலருக்கும் வீடுபேறடைய போதித்ததுடன், வடநாடு நோக்கிச் சென்று வேடனுக்கும் உபதேசம் செய்கிறார். அப்போது 'முனிவரர் கதி'யில்,

''அறிவெனும் வேலினால் ஐம்புலன்களாம்
மறியினம் அருளெனும் வலையைத் தப்புறா
தெறிகுவை எனினுனக் கில்லை துன்பெனா
நெறியினை வழுவற நிமலன் கூறினான் (மு.க. 9)

என்று ஐம்புலன்களையும் அடக்கினால் வீடுபேறு கிட்டும் என்றும், தான், எனது என்ற பற்றினையும் அகற்றுதல் வேண்டும் என்பதை,

''யானென தென்ப திருந்திருகாறும்
ஞானம் உறானது நண்ணிலன் ஆகில்'' (மனோலயகதி-5)

என்று கூறுவார். இதனால் பிறப்பு நீங்கும் என்பதை

''மனத்தை அடக்க மனந்துணை ஆகும்
பினைத்துணை இன்றது பெற்றன் ஆயின்
தனிச்சிவமே யொரு தானென வாழ்வன்
நினைத்து மறந்து நிலந்துழ லானே'' (மனோலயகதி - 8)

என்று அல்லமர் வசவண்ணருக்கும் அருள்புரியும்போது கூறும் அறிவுரை உலக உயிர்கள் அனைத்திற்கும் பொதுவான கொள்கையாகும். ஐம்புலனடக்கி, தான், எனது என்ற பற்றினை நீக்குபவன் எச்சமயமாக இருப்பினும் இறையடி சேர்வான் என்பதை ஒவ்வொரு சமயமும் வலியுறுத்துகின்றன. பிரபுலிங்க லீலையின் மூலம் சிவப்பிரகாசரும் தனது வீர சைவக் கருத்தினை உரைக்கிறார்.

4. அடியார்களுக்கு அமுதூட்டல்

சிவனடியார்கள் அடியார்களுக்கு அமுது படைப்பதை இறைவனுக்குச் செய்யும் பணியாகக் கருதி வாழ்ந்தனர். மூர்க்க நாயனார்,

''தூய அடிசில் நெய்கன்னல்
சுவை இன்கறிகள் அவை அமைத்து
மெய் அடியார் தமைப் போற்றி
விருப்பில் அமுது செய்வித்தே
ஆய பொருளும் அவர் வேண்டும்
படியால் உதவி அன்புமிக
ஏயுமாறு நாள் தோறும்
இனிய பணிசெய்து இன்புற்றார்''

(திருத்தொண்டர்புராணம்-4)

என்று அமுது படைத்து வாழ்ந்து தன் மகனை அடிசிலாக உண்ண அடியார் விரும்பியபோது அரிந்து அமுதூட்டி மகிழ்ந்து இறையடி சேர்ந்த சிவனடியாரும் சைவத்தில் உண்டு. அதுபோன்று சிவப்பிரகாசர் அல்லமர் மூலம் வசவண்ணர் ஆக்கிய உணவினை அடியார் உண்ணாமல் சென்றபோது அவர்களை அழைத்து உண்ணும்படி செய்கின்றார். அடியார்களின் உருவமாக சிவன் உறைகின்றார் என்பதை,

''உலகில் ஒருவன் சிவயோகி உண்ட தம் சராசரமாம்
அலகில் உயிர்கள் எலாமுண்டதாகும்'' (ஆ.க. 60)

என்பதால் அடியார்களுக்கு அமுது படைத்தலின் முக்கியத்துவத்தை இறைவடிவான அல்லமர் எடுத்தியம்புவதாகக் கூறுகின்றார்.

அல்லமரும் சிவப்பிரகாசரும்

படைப்பில் படைப்பாளனின் உளம் வெளிப்படுவது இயற்கை. சிவப்பிரகாசர் வீர சைவ சமயத்தின் மீது மிகுந்த விருப்பம் கொண்டவர். அச்சமயத்தின் பெருமையினை இறைவனே கூறுவதாக பிரபுலிங்க லீலையைப் படைக்கின்றார். இறைவி வீர சைவ சமயத்தைப் பற்றி வினவ இறைவன் அம்மைக்குக் கூறுவதாக,

''எவ்வகைச் சமயத்திற்கும் இறைவனே எனினும் நேயம்
சைவநற் சமயத் தூற்றான் சைவத்தும் வீரசைவத்
தவ்வர் பிறவி நீக்கும் அல்லமன் விருப்பம் உள்ளான்''
(மா.க. 9)

என்று வீர சைவத்தைப் பரப்ப அல்லமன் சென்றுள்ளான் என்றும், எல்லாச் சமயங்களிலும் வீர சைவமே சிறந்தது என்பதை,

''சமயமெவ் வகையினுந்தான் சைவமேல் ஆயதென்கொல்
அமையுநல் வீர சைவம் அதனினும் சிறந்ததென்கொல்''

என்றும், அவ்வாறு வீர சைவத்தைச் சேர்ந்தவன் வீடுபேற்றினை அடைவான் என்றும் இறைவியிடம் கூற உண்மைப் பொருளை உணர்ந்த இறைவி,

''மெய்ம்மை நின்பவன வாயால் வியம்பநான் அறிந்தேன்''
(மா.க. 17)

என்று கூறுவதனால் மாயையை அல்லமன் வென்றான் என்று பாடி முடிகின்றார். பிரபுலிங்க லீலையில் பல இடங்களில் ஆசிரியர் கூற்றாக வீர சைவ சமயம் பற்றிய தனது எண்ணத்தை வெளிப்படுத்துகிறார். சிவப்பிரகாசர் வீர சைவ சமயத்தின் மீது மிகுந்த பற்றுக் கொண்டவர் என்பதை இது உணர்த்தும்.

முடிவிலா இறைவனின் புகழினை இயம்புவன நூல்கள். பிரபுலிங்க லீலை வீர சைவ சமயத்தினைப் பரப்பச் சிவப்பிரகாசரால் இயற்றப்பட்ட ஓர் ஒப்பற்ற நூல். காப்பியத்திற்குள்ள அனைத்துப் பண்புகளையும் பெற்றதுடன், தன்னிகரில்லாத் தலைவனாக அல்லமன் என்ற பாத்திரத்தைப் படைத்துச் சிவபெருமானால் அனுப்பப்பட்டவன் அல்லமன் என்றும், அடியவர்களுக்கு எளியவனான அல்லமன் மாயையை வென்று மெய்ஞ்ஞானத்தை உலகினில் நிலைக்கச் செய்தார். இறையடி கரக்க வேண்டுமானால் தான், தனது என்ற எண்ணம் நீங்கி, ஐம்புலனடக்கினால் நீக்கமற நிறைந்த இறைத்தாள்களை எளிதில் பற்றலாம். அதனை உலகினுக்குப் போதிக்க இறைவன் அல்லமனை அனுப்பினார் என்பதைப் பிரபுலிங்க லீலையில் பாடுகிறார். இறைவன் நிறைந்துள்ளது போல் அடியவரான சிவப்பிரகாசரின் இறைப்பற்றும் நிலைத்திருக்கும்.

6. அறவியல் சமூக நீதி

கா. அரங்கசாமி, கோபி.

மூலமுதலான பரம்பொருளாம் சிவத்தை வழிபடுவதில் வழுவா வாய்மை நெறி நிற்கும் வீரசைவப் பெருமக்களில் தலைமை சான்றவர் சிவப்பிரகாசர். கல்வியிற் சிறந்த காஞ்சியம் பதியில் தாளாண்மை மிக்க வேளாண்வழித் தோன்றலாய்ச் சிவம் பெருக்கும் சீலராய்த் தண்டமிழ்க் கடலின் கரை கண்டவராய்ச் சான்றோர் தம் சிந்தையில் வாழும் சிவத்தின் ஊற்றாய் இலங்கியவர் சிவப்பிரகாசர். அவர்தம் பனுவல் யாவும் பக்தி வெள்ளமும் பரம்பொருள் இன்பமும் பெருக்கெடுத்தோடுவன. வீர சைவர்கள் சிறந்த சமூகச் சிந்தனையும் அறவியல் கோட்பாட்டுணர்வும் கொண்டவர்கள். அவ்வழி வந்த சிவப்பிரகாசர் தமது நன்னெறி மூலமாகச் சமயங் கடந்த அறவியல் அடித்தளங் கொண்ட சமூக நீதிக் கோட்பாடுகளை உலக மக்கள் உய்யும் வண்ணம் கூறியுள்ளதை இங்குச் சுருக்கமாக இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

வீர சைவமும் சிவப்பிரகாசரின் ஆளுமையும்

சிவமே அறம் என்பது வீர சைவம் ''வசவண்ணர் தமது திருக்கோயிலின் அறநெறியின் வாயில்களை - உள் அறையின் வாயில் களைக் கூட எல்லோருக்கும் திறந்து வைத்தார். அங்கு உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்னும் குல வேறுபாடு இல்லை. செல்வன், வறியவன் என்னும் பாகுபாடும் இல்லை. அவர் கற்பித்த அறநெறியும் அவ்வாறே......... அறநெறி தூய்மையானது அகத்தையும் புறத்தையும் தூய்மையாக வைத்துக் கொண்டால் அங்குச் சிவம் தங்கும். கயமை வேண்டாம் கொலை வேண்டாம் கோபிக்க வேண்டாம் பொய் வேண்டாம் .....அறநெறி என்றால் எட்டாத தூரத்தில் உள்ளது என்னும் சம்பிரதாய வாதிகளை ஒதுக்கிவிட்டு அனைவருக்கும் பொதுவாக்கினார். சிறு நெறிகளிலிருந்து விடுபட்டு வீர சைவ நெறியில் சேர்ந்து மெய்யன்பர்கள் ஆனவர்கள் தத்தமக்குள் சாதி குலம் போன்ற பாகுபாடுகளைக் காணக் கூடாது என்றும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது''.[1]

மேற்கூறிய அறநெறியைத் தம் வாழ்விலும் வாக்கிலும் போற்றிக் கொண்ட பெருந்தகையாளர் சிவப்பிரகாசர். இதனை அவரது ''பெரியவர் தந்நோய் போற்பிறர் நோய் கண்டுள்ளம் எரியினிழுதாவரென்க''

என்னும் நன்னெறி அடிகள் காட்டும். தனக்கென வாழாது அன்பும் அருளும் அறமும் கொண்டு வாழ்ந்த அடியவர்தம் திருப்பெயரை உள்ளம் உவந்து போற்றும் நால்வர் நான்மணிமாலை அவர்தம் சால்பினைக் காட்டும் ஆளுமைத்திறன் மிக்க பாக்களாகும்.

அறமும் சமூக நீதியும்

உலகினில் உள்ள அனைத்துக்கும் தீமை கலவாத நன்மையே அறமாகும். எனவேதான் சிவத்தை அறத்தின் மூர்த்தி என்றும், அவரது ஊர்தியே அறத்தின் திருவடிவம் என்றும் சைவச் சான்றோர் கொண்டனர். அனைத்துலக அன்னை ஆதிசக்தி 32 அறங்களைச் செய்யவே சக்தியாக வருகின்றார் எனவும் சைவம் கூறும். ''இதனை, சிவன் ஆலின்கீழ் அமர்ந்து முனிவர்க்கு அறமுரைத்தவராய்க் காட்சி தருவர்'' என்றும், ''அறனாராகிய நம் தம்பிரான்'' என்றும், சைவக் கோயில்கள் யாவும் பண்டு சமுதாய ''அற நிலையங்களாக இலங்கின'' என்றும் கூறும் கருத்துக்களால் அறியலாம்.[2]

''அறு'' என்னும் வினையடியாகப் பிறந்த ''அறம்'' நல்வழியை உலகினில் உண்டாக்கித் தீயவற்றைத் தடுத்து மக்களை அறவியலின் ஆட்சியில் மாட்சிபட வைப்பதற்கான செம்பொருள் என்பதை உணரலாம். இதனையே திருவள்ளுவர் ''அறத்தான் வருவதே இன்பம்'' என்றும் ''அதனை மறப்பதே கேடு'' என்றும் வற்புறுத்துவார்.

''நீதி'' என்னும் வடசொல் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் பெருங் கதையில் இடம் பெற்றுத் தமிழில் வழக்குப் பெற்றது. ''நீ'' என்னும் அடிச்சொற்கு ''அழைத்துச் செல்'', ''கொண்டு செல்'', ''நடத்து'', ''வழிகாட்டு'', ''ஆட்சி செய்'', ''இயக்கு'' என்னும் பல்வேறு பட்ட பொருள் களைத் தருவர்''.[3] எனவே அறத்தின் அடித்தளத்தில் அமைந்த நீதி சமூகத்தை வழிநடத்தும் ஆற்றல் மிக்கது என்பதை நாம் அறியலாம். திருவள்ளுவர் நீதியை ''நயன்'' என்னும் சொல்லால் குறிப்பர்.

நன்னெறி காட்டும் அறமும் நீதியும்

உலகப் பொதுமறை தந்த வள்ளுவப் பேராசான் தந்த அறவியல் நீதி நன்னெறியெங்கும் பொங்கிப் பொலிந்து பொன்னில் பொதிந்த மாணிக்க மாலையாக ஒளிர்வதைப் பின்வரும் நன்னெறித் தொடர்கள் காட்டும்.

''மாசற்ற நெஞ்சுடையார் சொல் இனிது'' (நன்-2)

''உள்ளம் கவர் சினம் காக்க'' (நன்-8)

''இன்சொல்லே இனிது'' (நன்-18)

''தந்நோய் போல் பிறர் நோய் போற்றல்'' (நன்-20)

''பேரறிஞர் பிறர் துயர் தாங்கி வீரமொடு காக்க விரைவர்'' (நன்-31)

''தக்கார்க்கு ஈக'' (நன்-36)

''நல்லார் கேண்மை நலந்தரும்'' (நன்-38)

''கைமாறு கருதாது உதவுக'' (நன்-27)

''வறுமையில் செம்மை ஈதல்'' (நன்-17)

''பொருள் போற்றுக'' ''பின் ஈக'' (நன்-13)

''பெருஞ்செல்வம் பிறர்க்குதவிடவே'' (நன்-4)

''தன்னைப் புகழ்தல் பேதமை'' (நன்-37)

''கல்வி அணியே சிறந்தது'' (நன்-40)

''கற்ற அறிவினரைக் காமுறுக'' (நன்-35)

''அறிவுடையார் வழிபடர்க'' (நன்-33)

''கயமை ஒழிக்க'' ''பொதுநலன் காக்க'' (நன்-25)

மேற்காட்டிய தொடர்களால் அறவியல் அடித்தளம் கொண்ட நீதியே சமூகத்தின் ஆணி வேர் என்பதை நன்னெறி உணர்த்தும். இந்த அகப்புறச் செம்மையே சிவம் தரும் சிவகதி என்பதனை,

''மெய்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்மையாம் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பராகிற் சிவகதி விளையும் அன்றே

என்னும் அப்பர் தம் திருப்பாடலால் அறியலாம்.[4]

சிவப்பிரகாசரின் சமயங் கடந்த சமூக நீதிச் சிந்தனைகள்

வீர சைவம் சாதியம், ஆதிக்கம், வல்லாண்மை, சடங்கியல், பிராயச்சித்தம், புறக்கோலம் போன்ற போலிச் சமய வேடங்களை எதிர்த்துத் தோன்றிச் சமூக நீதிக்குப் போராடி வெற்றி கண்ட சமயம். எனவே வீர சைவ உள்ளம் கொண்ட சிவப்பிரகாசர் தமது நன்னெறி யெங்கும் சமயங் கடந்த அறம் பயிலும் நீதிகளையே வற்புறுத்திச் சென்றுள்ளார். மாசற்ற நெஞ்சம், இனிமை, பிறர்க்கென வாழ்தல், செருக்கு-சினம் இவறல் ஒழித்தல், கைம்மாறு கருதாத உதவி, பொருள் போற்றி ஈயும் நெறி, தந்நோய் போல் சமூக-மன்பதை நோய் நீக்கல், கல்வி நல்லறிவு நல்லொழுக்கம் போற்றல், கயமை

ஒழிப்பு, பேரறிவாளராகிப் பிறர் துயர் நீக்க வீரமொடு விரைதல் போன்ற நன்னெறிக் கருத்துக்கள் அவர் தம் சமூக நீதிச் சிந்தனையை உலகுக்குணர்த்தும். இதே கருத்தினைத் திருவெங்கையுலாவில், ''விழி காக்கும் இமை போலச் செம்மை பெறக் காக்க''[5] என்று வலியுறுத்திக் கூறுகின்றார்.

மேற்கூறிய செய்திகளால் சிவப்பிரகாசர் அறத்தின் அடித்தளத்தில் அமைந்த சமூக நீதியின் ஆற்றலை மிக எளிய தக்க உவமைகள் வாயிலாக நன்னெறிக்கண் நவின்றுள்ளதைக் காணலாம். சைவப் புண்ணியக் கண்களாகிய நால்வர் பெருமக்கள் வழியில் அறந்திறம்பாச் சமுதாயம் படைக்கப் பாடியவர் சிவப்பிரகாசர். சிறார் முதல் எளியோர் வரை யாவரும் கற்றுணர்ந்து நல்வழி படரவேண்டும் என்பதே நன்னெறியின் நோக்கம். இத்தகைய சமூக நலச் சிந்தனையே நமது சைவப் பெருமக்களுக்கு ஏற்றம் தருவன. அவர் தம் நன்னெறிவழி மன்பதை நின்று வன்கொடுமை நீக்கி வளவாழ்வு வாழவேண்டும் என்பதே இன்றைய காலத்தின் தேவையாகும்.

சான்றெண் விளக்கம்

1. வசவண்ணர் வாழ்க்கை வரலாறு, ப. 129-132.
2. தமிழ்க் கல்வெட்டுக்களில் அறவியல் கோட்பாடுகள் முனைவர் பட்ட ஆய்வேடு, ப. 72.
3. தமிழ்க் கல்வெட்டுக்களில் அறவியல் கோட்பாடுகள் முனைவர் பட்ட ஆய்வேடு, ப. 13, 14.
4. அப்பர் தேவாரம்
5. சிவப்பிரகாச சுவாமிகள் பனுவல் திரட்டு, ப. 244.

7. பிரபுலிங்க லீலையில் வீர சைவ சித்தாந்தங்கள்

மு. அருணாசலம், திருச்சி.

இந்தியாவின் தொன்மை வாய்ந்த சமயப் பிரிவுகளில் சைவமும் ஒன்று. சைவ சமயத்தில் நிலவிய மூடச் சிந்தனைகளைப் புறத்தே எதிர்த்து சமணமும், புத்தமும் தழைத்தோங்கியது போன்று அகத்தே தூய்மைப்படுத்தும் பொருட்டு வீர சைவம் தோன்றியது. வருண பேதங்கள், தேவையற்ற சடங்குகள், சாதிப் பிளவுகள் போன்றவற்றை எதிர்த்து புரட்சி செய்ததால் 'வீர' எனும் அடைமொழியைப் பெற்றது. இச்சமயம் தாய் சமயமாம் சைவத்திற்குச் சமத்துவம் எனும் கோட்பாட்டை வழங்கியதால் அச்சமயம் மீண்டும் மலர்ச்சி பெற்றது. வீர சைவம் குறித்து டாக்டர் இரத்தினசபாபதி,

''சைவ சமயம் என்றால் சிவசம்பந்தம் உடைய சம்பந்தம் என்பது பொருள். சிவன் வீரக் கடவுள். எனவே, சிவனுக்கு 'வீர' என்ற அடைமொழி இணைக்கப்பட்டது. சிவன் வீர சிவன் ஆனான். வீர சிவனை வழிபடு பொருளாகக் கொண்ட சமயம் 'வீரசைவம்' எனப் பெற்றது. அதனை மேற்கொண்டு ஒழுகுகிறவர்கள் 'வீரசைவர்' எனப் பெற்றனர்'' என்று விளக்குகின்றார். வீர சைவத்தைத் தோற்றுவித்தவர்களாக ஐந்து ஆச்சார்யர்களைக் கூறினாலும் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் கர்நாடக மாநிலத்தில் வாழ்ந்த வசவண்ணரால் புதிய பரிமாணத்தைப் பெற்றது. சைவ சித்தாந்தத்தின் அடிப்படையான சிவாகமங்கள் காமிகம் முதல் வாதுளம் வரை மொத்தம் இருபத்தெட்டாகும். இந்த ஆகமங்களின் பிற்பகுதிகள் வீர சைவக் கொள்கைகளைப் பேசுகின்றன. வீரசைவவாதிகள் உடம்பில் லிங்கத்தைத் தரித்து உயிரைத் தெய்வ நிலைக்கு உயர்த்த விரும்புவதால் இதற்கு லிங்காயத்து சமயம் எனும் மற்றொரு பெயருமுண்டு.

சிவப்பிரகாசரும் – வீரசைவமும்

தொண்டை நாட்டிற் காஞ்சியில் பிறந்த சிவப்பிரகாசர் துறைமங்கலம், பேரூர் மடங்கள் வழியே தமிழ்நாட்டில் வீரசைவத்தை வளர்த்த பெரியார் ஆவார். கன்னட மொழியில் இரேணுகரால் அகத்தியருக்கு கூறப்பட்ட அல்லம பிரபுவின் வரலாற்றைத் தமிழ் மரபிற்கேற்ற வகையில் பிரபுலிங்க லீலையாகச் சிவப்பிரகாசர்

பாடியருளியுள்ளார். இக்கட்டுரை பிரபுலிங்க லீலையில் இடம் பெற்றுள்ள வீரசைவ சித்தாந்தங்களை ஆராய்கின்றது.

பிரபுலிங்க லீலை - அறிமுகம்

இறைவனும், இறைவியும் கைலாயத்தில் உரையாடுகின்றனர். அப்போது அங்கு வருகைபுரியும் திருமால், பிரம்மா, இந்திரன், தேவகணங்கள் எல்லாம் வீடுபேறு அடைய முடியுமா என இறைவி இறைவனிடம் வினவுகின்றனர். மண்ணுலகில் மக்களாய்ப் பிறந்து யோகநெறியில் (சிவயோகம்) ஒழுகினால் வீடுபேறடையலாம் என இறைவன் விடையிறுக்கின்றார். மக்கட் பிறவிகளாக அவர்கள் பூமியில் அவதரிக்கும் நிலையில் மோட்சப்பேறு அளிக்க ஞானாசிரியராக யார் விளங்குவார் என இறைவி கேள்வியெழுப்புகின்றாள். இறைவன் யாமே உரு அருவ வடிவில் அல்லம பிரபுவாக அவதரித்து வழி காட்டுவேன் என்கின்றார். இவ்வடிவத்தை மண்ணுலகில் கண்டு கொண்டு வர தமோ குணமுடைய மாயையை இறைவி அனுப்பித் தோல்வி அடைகின்றாள். மாயை நீண்டகாலம் கடந்தும் வராமையாற் விமலையை அனுப்புகின்றாள். மாயை அல்லமரின் ஆற்றல்களை விமலைக்கு எடுத்துரைக்கின்றாள். பின்னர் அல்லமர் பல இடங்களுக்குச் சென்று வீரசைவத்தை வளர்க்கின்றார். இறைவி சிவகணங்களும், நற்கலையும் மண்ணுலகில் புரியும் செயல்கள் குறித்து இறைவனிடம் வினவ வீரசைவ நெறி பரப்புதலில் ஈடுபட்டிருப்பதை எடுத்துரைக்கின்றார். இறுதியில் அல்லமன் மாயை கடந்தவன் என்றும், குருகேசன் என்றும், அவனாலே வீரசைவம் உயர்நிலை அடைந்தது என்றும் இறைவிக்கு இறைவன் எடுத்துரைப்பதுடன் இந்நூல் முடிவுறுகின்றது.


பிரபுலிங்க லீலையில் இடம் பெறும் வீரசைவ சித்தாந்தங்கள்

வீரசைவ சித்தாந்தக் கருத்துக்களாக

★ தலம் (Sthala)

★ மெய்யறிவு (மெய்ப்பொருள் உண்மை)

★ வீரசைவ நெறிகள்



வீரசைவத் துறைகள்

ஐவகை ஒழுக்கம்	எண் வகைக்காப்பு (அட்டாவரணம்)	அறுவகையிணைப்பு (சடுத்தலம்)
↓		↓
இலிங்க ஒழுக்கம்		குருவின் தீட்சை மொழிகள்
↓		
சிவஒழுக்கம்		
↓		↓
தாழ்வெனும் தகவு		
↓		
கூட்டமைப்பு ஒழுக்கம்		ஆகமங்கள்

ஆகியவை பிரபுலிங்க லீலையில் இடம் பெறுகின்றன.

1. தலம் (Sthala)

வீர சைவம் என்று மூல பரம்பொருளை 'தலம்' என்கின்றது. புலன் அனுபவம், பிரபஞ்சத்தின் முதல், தோற்றம், முடிவு அனைத்தும் இதனுள் ஒடுங்குகின்றது. அதாவது, சிவனே உயிர்ப்பொருளாகவும் உயிரில் பொருளாகவும் அமைந்து பிரபஞ்ச சக்தியாக விரிவு அடைகின்றான் என்பதே இதன் நிலைப்பாடாகும். இந்நிலை காரணமாகச் 'சக்தி விசிட்டாத்வைதம்' எனும் பெயரும் வீரசைவத்திற்கு வழங்குகின்றது.

தலம் தொடக்கமாக அமைந்து இடையில் பிரியும் சிவமும் சக்தியும் லிங்க நிலையில் இணைவதாக வீர சைவவாதிகள் கொள்கின்றனர்.

லி - எனும் சொல் ஒடுங்குதல் (சிவம்) எனும் பொருள் உடையது.

கம் - எனும் சொல் வெளிவருதல் (சக்தி) எனும் பொருள் உடையது.

எனவே உலக உயிர்கள் பரம்பொருளிடத்து ஒடுங்கி வெளிவருவதாக மொழிகின்றனர்.

பிரபுலிங்க லீலையில் அல்லம தேவர் முத்தாயி அம்மைக்கு உண்மைப் பொருளை உணர்த்தி வீடுபேறு அளிக்கும்போது எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருள் சிவம் என்பதை,

''யாவும் ஆகி இருக்கும் சிவத்தொடு
மேவு ஞான விழியுடை யான்தனக்
கோவும் ஆறில் உறவு பகையெனும்
பாவ மோஇவை யென்றறி பாவையே''

என்று உணர்த்தி உறவு, பகை கடந்த உண்மை நிலையில் சிவம் இயங்குவதை எடுத்துரைக்கின்றார். பிறவிப்பிணி நீங்கச் சிவத்தொடு ஒன்ற வேண்டுமென்பதை வசவண்ணருக்கு அல்லமதேவர்.

''தன்னைப் பேதமாய்க் காண்கை சகத்திற் காணப்பட்டதாம்
தன்னைப் பேதம் அறச்சிவமென் றறிவோன் ஞானி தானொருவன்
என்னக் கருதி மறையது நீ ஆனாய் என்ன அத்துவிதம்
தன்னைப் புகலும் கண்டதனைச் சாற்றல் மறையின் கருத்தன்றே''

என்றுரைத்து இறைவன் ஆன்மாக்களோடு ஒன்று கலந்திருக்கும் அத்துவிதத் தத்துவத்தை உணர்த்துகின்றார்.

மெய்ப்பொருள் உண்மை

சிவஞானமாகிய மெய்ப்பொருளை அறிவதே வீர சைவவாதி களின் குறிக்கோள். 'உன்னை முன்னே அறி' எனும் மொழிக்கேற்ப ஆணவத்தை ஒழித்து மெய்யறிவு மூலம் வெற்றி வாழ்க்கையை வாழ வீரசைவ சித்தாந்திகள் வழிகாட்டுகின்றனர்.

அல்லம தேவர் முத்தாயி அம்மைக்கு வீடுபேறு அளிக்கும்போது உண்மைப் பொருளை,

''தத்துவ முற்று மயக்குவ தள்ளி
மெய்த்த தனைப்பெற வேறு கொடுத்தான்
பொய்த்துறு குப்பை கிளைத்தொளி பொங்கும்
முத்தை அளித்தென முத்தை தனக்கு''

கோழி குப்பைகளைக் கிளறியதால் மறைந்திருந்த முத்து வெளிப் பட்டாற்போன்று ஆன்ம தத்துவம், வித்யாதத்துவம், சிவதத்துவம் முதலான முப்பத்தாறு தத்துவங்களை விளக்கிக் காட்டி இறுதியில் உண்மை வடிவத்தைக் (முத்து வெளிப்பட்டாற் போன்று) காட்டியருளுகின்றார். மேலும், சொன்னலபுரத்தில் சித்தராமையர் எனும் யோகியின் சினத்தீயை அடக்கிய அல்லமர் வீடுபேறு அடைய,

''உரைசெயிற் பரம ஞானம் ஒன்றுமே முக்திக்கேது
சரியை நற்கிரியை யோகந் தாமொரு மூன்று ஞான
மருவுதற் கேது என்று மறைபுகன் றுரைக்கும் இந்தக்
கருவியைப் பொருளென் றெண்ணிக் களிப்பவர் கயவர் அன்றே''

என்று கூறி பரம ஞானத்தை அடைய உயர்ந்த மெய்யறிவே பயன்படும் என்கின்றார். சரியை, கிரியை, யோகம் முதலானவை மெய்யறிவுக்குப் பயன்படும் துணைக்கருவிகள் தாம் அவை சிறந்த பொருள்கள் ஆகா எனும் உண்மைப் பொருளையும் உரைக்கின்றார்.

வீர சைவ நெறிகள்

வீரசைவ நெறிகள் மொத்தம் பத்தாகும். அவை 1. அகத்தீநெறி, 2. ஏமநெறி, 3. நந்தி நெறி, 4. நாகநெறி, 5. அமரநிலை தரும் அறுவகை நெறி, 6. பொய்யடிமை தீர்த்த புனித நெறி, 7. நீத்தார் நெறி, 8. வீரமாகேச நெறி, 9. வடுநீங்கு சிறப்பு நெறி, 10. மூலப்பண்டார நெறி என்பவையாகும். பிரபுலிங்க லீலையில் இடம் பெற்றுள்ள ஐவகை நெறிகள் ஆராயப் படுகின்றன.

அகத்தீநெறி

உலகியல்பை எதிர்த்து நின்ற நிலையில் வீரநெறி, ஏமநெறி என அழைக்கப்பெற்று வீரசைவ நெறியாயிற்று. முருகன், அல்லமப்பிரபு ஆகியோர் தோன்றியதும் வெளிப்படுத்தியதும் இந்நெறியாகும். இறைவன் தாமே அல்லமனாக உருவெடுத்தான். நல்லறிவுடைய சுஞ்ஞானிக்கும், ஆணவமற்ற நிர்ஆங்காரனுக்கும் மைந்தனாகப் பிறந்ததை உரைப்பதுடன், இறைவியும் கண்டு தெளிதல் அற்ற அரு உரு வடிவில் புவியில் விளங்குவேன் என்கின்றார். ஆனால் வினைகளை ஒழித்து நின்ற அடியவர்கள் விழிகளில், தோன்றுவேன் என்பதை,

''வினைதபும் அன்பர் அல்லால் வேண்டிய வடிவன் ஆகி
அனையவர் விழியின் தோன்றி அருளுவன் அல்லமதேவன்''

என்று அல்லமதேவரின் இயல்பை உரைக்கின்றார்.

ஏமநெறி

உடம்பைப் பாதுகாப்பாக வைத்து இறைநெறி அடைய உலகியலை எதிர்த்து நிற்பது இந்நெறியாகும். இந்நெறி குறித்து சிவப்பிரகாசர் மாயை உற்பத்தி கதியில் முனிவர்கள் உடலை ஏமமாக வைத்து அல்லம தேவரை நோக்கித் தவஞ்செய்தவை.

''நெஞ்செனும் அகலின் அன்பால் நெய்நிறைத் துள்ளம் என்னும்
பஞ்சுறு திரியின் உச்சி பற்றிட அல்ல மப்பேர்
அருஞ்சுடர் இலக ஏற்றி அருந்தவர் மாயை என்னும்
துஞ்சிருள் அகன்றி ருந்தார்''

என்று மனத்தகளியில் அன்பு நெய் ஊற்றி, கருத்து எனும் திரியின் மீது நின்று, அல்லமதேவன் எனும் விளக்கை ஏற்றி மாய இருளைப் போக்கினர் என்றுரைக்கின்றார்.

நந்தி நெறி

திருமூலரால் ''நந்தி நெறி'' என அழைக்கப்பட்ட இந்நெறி உடலைப் பொன்னுடலாக மாற்றி மரணமில்லாப் பெருவாழ்வு எய்த வழிகாட்டக்

கூடிய ஆறாதார யோகநெறியாகும். இந்நெறியை உலகில் விளக்கத் தோன்றிய வசவண்ணர் நந்தியின் அவதாரம் என்பது வீரசைவ மரபு. இம்மரபு நந்திகேசுவர மரபு என அழைக்கப்படுகின்றது.

சிவப்பிரகாசர் இறைவன் திருவருளால் உலகில் தீமைகள் குறைய நந்திதேவர் மாதரசன் மாதாம்பிகை எனும் இருவருக்கும் மைந்தராக இங்குளாபுரி நகரில் அவதரித்து அல்லமதேவரின் அருளால் மெய்ம்மை ஞானம் பெற்றதாகக் கூறுகின்றார். அவர் புவியில் வீரசைவ சிவத்தொண்டு புரிந்து சமணர்களை வென்றவர் என உரைக்கின்றார்.

நாகநெறி (யோகநெறி)

ஆறாதார யோகப் பயிற்சி மூலம் மனிதனுக்கு மேலான உருவம் பெற்று வாழுவது இந்நெறியாகும். கொக்கிதேவரிடம் அல்லமதேவர் நிலத்தைத் தோண்டச் சொல்ல ஆங்கொரு சிவயோகி தென்படுகின்றார். அவ்யோகியின் கையிலிருந்த சிவலிங்கம் அல்லமரின் கையை அடைவதை கண்ணுற்றக் கொக்கிதேவர் வியப்படைந்து யோகநெறியை அருள வேண்டுகின்றார். அல்லமரும் அவ்வாறே அருள கொக்கிதேவர், மெய்ப்பொருள் உணர்ந்து,

"அங்கைச் சிவலிங் கத்தினிடை அமைந்த நோக்கும் நெஞ்சகமும்
தங்கச் சிவயோ கத்தினையே சார்ந்தங்கிருந்தான் ஓவியம்போல்
மங்கைக் கிடந்தந் தருனினோன் மலர்த்தாட் கிடுழ வனமாக்கிப்
பொங்கப் புரந்த தவத்தால்மெய்ப் பொருளாசிரியற் - கண்ணுற்றாள்"

என்று சிவயோகத்தில் மூழ்கிப் பேரின்ப வாழ்வை எய்துகின்றார்.

இலிங்காயதர்

இலிங்கவழி யோகம் பயின்று இவ்வழியை பிறருக்குத் தீட்சை செய்து இலிங்கியாக ஆக்குவதற்குச் சாதனமாகவும், பயனாகவும் இஷ்ட லிங்கத்தை நாகநெறியுடையோர் மானுடர்களுக்கு வழங்குவர். இவர்களின் ஒழுக்கம் இலிங்காயதம் எனப்பட்டது. உடம்பில் லிங்கத்தை கட்டித் தொங்க விட்டிருப்பதால் இலிங்காயதர்கள் எனவும் அழைக்கப்படுகின்றனர். மனத்தை இலிங்க வடிவமாக்கல் வேண்டுமென்பதே இந்நெறியின் பொருளாகும். இந்நெறியினைச் சாதகாங்க கதியில் அல்லமர் வசவண்ணருக்கு வீடுபேற்றிற்குரிய நல்வழிகளை உரைக்கும்போது யோக வழிகளால் உயிர்க் காற்றை நிறுத்தி மனத்தை லிங்க வடிவ் மாக்கினால் வீடுபேறு கிட்டும் என்கின்றார்.

"மனமி லிங்க மருவிலை யேனுடல்
தனிலி லிங்கம் தரித்தும் இலையிலை
எனவி யம்பும் இணையிலி ஆகம
நினைவ ரன்கழல் நிற்க நிறுத்தினாய்"

என்று மனம் லிங்கமாக மாறாவிடில் இலிங்கம் அணிந்திருந்தும் பயனில்லை என்கின்றார்.

வீரசைவத் துறைகள்

வீர சைவத்தின் அடிப்படை மக்கட்தொண்டே மகேசன் தொண்டு எனும் கோட்பாட்டில் அமைந்ததாகும். தாயுமான சுவாமிகள் சுட்டும்,

''அன்பர் பணிசெய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே''

எனும் பாடல் அடிகள்படி வீரசைவத்தின் தொண்டு அமைகின்றது. வீரசைவத் துறைகளை,

1. ஐவகை ஒழுக்கம் (பஞ்சாசாரம்),
2. எண்வகைக் காப்பு (அஷ்டாவரணம்),
3. அறுவகை இணைப்பு (சடுத்தலம்),

எனப் பிரிப்பர்.

ஐவகை ஒழுக்கம்

தனி மனிதனை உலகப் பொதுமை மனிதனாக மாற்ற ஐவகை ஒழுக்கங்கள் பயன்படுகின்றன.

இவை
1. இலிங்க ஒழுக்கம் (இலிங்க சாரம்)
2. தனி நிறுத்தல் ஒழுக்கம் (சதாசாரம்)
3. சிவ ஒழுக்கம் (சிவாசாரம்)
4. தாழ்வெனும் சைவ ஒழுக்கம் (பிருத்யாசாரம்)
5. கூட்டமைப்பு ஒழுக்கம் (கணாசாரம்)

எனும் நிலையில் அமைகின்றன. இனி பிரபுலிங்க லீலையில் இடம்பெறும் நால்வகை ஒழுக்கங்கள் ஆராயப்படுகின்றன.

இலிங்க ஒழுக்கம்

சாதி, குலம், கோத்திரம், சமயம் சடங்கு கடந்த அமைப்பு அண்ட லிங்கமாகும். வீர சைவர்கள் பிண்ட லிங்கியர்கள். பிண்ட லிங்கியவர்களாகிய வீரசைவர்கள் அண்ட லிங்கத்துடன் பிணைந்து செல்லுவது இலிங்க ஒழுக்கம் ஆகும்.

இலிங்க ஒழுக்கம் ஆணவத்தை ஒழித்து வினைவலி அறுக்கும். காக்கையின் இரு கண்களுக்கு ஓர் மணி விளங்குதற் போன்று அகமும், புறமும் கலந்து இயங்குவது இலிங்க ஒளியாகும். திருக்கோவையாரும்,

''காகத்திரு கண்ணிற் ஒன்றே மணிகலந் தாங்கிருவர்
ஆகத்துள் ஓருயிர் கண்டமை''

என மொழிகின்றது.

அல்லமதேவர் இட்டலிங்க வழிபாட்டின் ஏற்றத்தினை வசவண்ணருக்கு, உரைக்கின்றார். இதனை,

''பொருவில் கற் பத்தியாம்தாரம் பூண்டொரு
வரவயி ராகமாம் வத்திரம்புனைத்
தொருவனில் உணர்வெனும் செச்சை ஒன்றுதப்
பரமனை இருத்துவோன் பத்தன் ஆகுவான்''

என்று இறைவனைத் தன் நெஞ்சில் நிலைபெறச் செய்பவன் ''சிவபக்தன் ஆவான் என்கின்றார். உடல் மூன்றையும் உறுதியாக வேட்டி மடிப்பைப் போல் மடித்து சிவ வடிவத்தை மனத்தில் இருத்தினால் சிவமயமாவன் என்பதை,

''ஒன்றிவென் உள்ளுற உடம்பு மூன்றையும்
மன்றநல் வத்திர மடிய தாக்கியே
என்றுமங் கமைவுற இட்டம் வைப்பனேன்
அன்றவன் சிவமயம் ஆகும் என்பவே''

என்று பிண்ட லிங்கியாகிய வீரசைவன் அண்ட லிங்கத்துடன் பிணைந்து நின்றதைக் காட்டுகின்றார். அண்ட லிங்கத்துடன் இணைந்த சிவத் தொண்டனின் தன்மையை,

''அருளெனும் புனலினை ஆட்டிச் சாந்தமாம்
வரைநறும் சந்தொடு மருவ இந்திய
விரைமலர் புனைந்தறி வினைய ருத்துறில்
பரமனை யவன்சிவ பத்தன் ஆகுவான்''

அருள் எனும் நீரையும், அமைதியெனும் சந்தனமும், ஐம்பொறிகளை அடக்கியதால் மலர்ந்த மலரையும் இறைவனுக்குப் படைத்துத் தொண்டு செய்பவன் என்கின்றார்.

சிவஒழுக்கம்

தலை, உள்ளம், கை எனும் மூன்றும் இணைந்து மக்கட் தொண்டு புரிய வேண்டும் என்பதே சிவ ஒழுக்கத்தின் சாரணமாகும். அல்லமதேவர் நிலவுலகில் பேதங்கருதாது அனைவருக்கும் சிவ அருள் புரிந்ததாக இறைவன், இறைவியிடம்,

''மூத்தவர் இளைஞர் நோயர் முகிழ்முலை மாதர்நல்ல
தீத்தொழி லாளர் பொல்லாத் தீத்தொழிலாளர் என்றும்

பார்த்திலன் யாவர் மாட்டும் பரிந்தருள் மாரி பெய்து
காத்தனள் அமல ஞான காரணன் குருகுகேசன்''.

என்றுரைத்து சிவஒழுக்கத்தில் நின்று வேள்வித்தீ வளர்க்கும் அந்தணருக்கும், கொடியவர்களுக்கும் இரங்கி அருள் புரிந்ததை வெளிப்படுத்துகின்றார்.

தாழ்வெனும் தகவு

உலக உயிர்களையெல்லாம் சமமாகப் பாவித்துத் தொண்டு செய்தல் இவ்வகை ஒழுக்கம் ஆகும். அக்கமாதேவி உற்பத்தி கதியில் வசவேசர் பேத வேறுபாடுகள் ஏதும் கருதாது.

''சாதியும் குறியும் நீத்துச் சரணரைச் சிவனே என்று
பாதபங் கயம் இறைஞ்சிப் பத்திசெய் குவனந் நந்தி
தீதறு சுவைத்தீங் கண்டாற் செய்தசெங் கரும்பும் வேம்பும்
பேதமொன் றுறமந் சாதி பெயர்விடுத் தறிதல்போல.

என்று குலம், ஆண் பெண் என்னும் வேறுபாடுகள் இன்றி சிவஅடியவர் தொண்டு புரிந்து தாழ்வெனும் தகவு ஒழுக்கத்தில் நிற்கின்றார்.

கூட்டமைப்பு ஒழுக்கம்

'அன்பரோடு மருவுக'

என்னும் மெய்கண்டாரின் வாக்கிற்கேற்ப அடியவர் கூட்டத்தோடு பழகும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்வது இவ்வகை ஒழுக்கமாகும். பஞ்சாசாரமாகிய இந்நெறியை வளர்த்து எடுத்ததில் வசவேசருக்கு முக்கிய பங்குண்டு. இதனால் பஞ்சாசார-மூர்த்திப் பிரம்மம் என அழைக்கப்படுகின்றார்.

பிரபுலிங்க லீலையில் வசவேசர் அல்லமபிரபையும், சிவஅடியார் களையும் போற்றி அவர்களோடு கலந்துரைகின்றார். வசவேசர் சிவனடியார் களுக்கு உணவு படைத்து சிவத்தொண்டு புரிகின்றார். வசவேசர் அல்லமதேவர்மீது கொண்ட ஈடுபாட்டால் அடியவர் தொண்டினை மறந்து நிற்கின்றார். அப்போது அல்லமபிரபு அடியவர் தொண்டினை நினைவூட்டி மெய்ப்பொருள் உணர்த்துகின்றார்.

இதையுணர்ந்த வசவேசர் அடியவர் கூட்டத்தை மறந்திருந்த நிலைக்கு இரங்கி நிற்க,

''செம்மை நெறியான் அருணந்தி தேவன்
தன்னைப் புகழ்வமோ
பொய்ம்மை தீரும் அல்லமனைப் புகழ்வ மோவிங்
கன்றியிவர்

தம்மை விழியாற் காண்பதற்குத் தவஞ்செய்
துடலம் இதுபெற்ற
எம்மை யாமே புகழ்வமோ எனநின்றனர்தம்
பிரானடியார்''

என்று சிவஅடியார்கள் தவறை உணர்ந்ததால் நேர்மை மிக்க வசவண்ணரையும், மெய்ப்பொருள் உணர்த்தியதால் அல்லமதேவரையும் புகழ்கின்றனர்.

எண்வகைக் காப்பு

ஐவகை ஒழுக்கத்தின் அடுத்த நிலை எண்வகைக் காப்பாகும். இதன்படி ஆத்மன் அங்கனாக உயர்வடைகின்றான். இதில் கிரியையும், ஞானமும் இணைந்து நிற்கின்றன.

''குரு, இலிங்கம், சங்கமம், பாரதோதகம், பிரசாதம், திருநீறு, அக்கமணி, திருமந்திரம்'' ஆகியவை எண்வகைக் காப்புகளாகும். இறைவனோடு ஒன்றிவிடும் இந்நிலையை சித்தானுபவம் என்கின்றனர். பக்குவமுள்ள அங்கனுக்கு அல்லமதேவர் அருள்புரிவதைச் சிவப்பிரகாசர்,

''இவ்வா றருளால் தனை உணர்த்தி இருந்த ஞான இயல்வீரன்
சைவா சிரியன் அல்லமளித் தரையிற் பருவம் தலைசிறப்பு
உய்வான் நினைந்து தனைநோக்கி உற்ற அடியார் குபதேசம்
செய்வான் இயன்ற வடிவொடு சென்றருள் செயல்செய்
துவாவினாள்''.

என்று உலக உயிர்கள் கடைத்தேற வழிகாட்டுவதாக மொழிகின்றார்.

அறுவகையிணைப்பு

எண்வகைக் காப்பு பயிற்சியால் ஆத்மன் அங்கன் ஆனது போல், அறுவகையிணைப்பு எனும் கடுந்தவப் பயிற்சியால் அங்கன் ஐக்யன் ஆகின்றான். ''வீரசைவம் அருளனுபவம் பெற்ற சான்றோர்களின் திருவாக்குகளுக்கு முதலிடமும், அதனோடு இணைந்து வருகின்ற நெறியிலேயே ஏனையவற்றுக்கு விளக்கம் கூறுதல் வேண்டும் என்ற வகையில் தம் கொள்கையை அமைத்துக் கொள்கிறது.'' இந்நிலையில் வீரசைவம் சிவஞானத்தை எதிர்நிலையில் நின்று முழு வலிமையோடு ஏற்றுக்கொள்கின்றது.

குருவின் தீட்சை மொழிகள்

வீரசைவம் குருவானவர் தீட்சை செய்யும் மொழிகளுக்கு முதலிடம் தருகின்றது. பிரபுலிங்க லீலையில் அல்லமதேவர் குருகுகேசன் நிலையில் நின்று உலக உயிர்களுக்குக் கதி மோட்சம் அளிக்கின்றார்.

அல்லமதேவர் சித்தராமரின் சினத்தீயை அணைத்து குருநிலையிற் நின்று ஐவகைப் புலன்களை ஒழித்தால் அடுக்குப்பானையின் அடியிலுள்ள பானையை இழுக்க, பிற பானைகள் கீழே விழுதல் போன்று பொறி, பூதம், கரணம், கலை, சுத்தம் முதலிய தத்துவங்கள் ஒழியும் என்கின்றார். இதனை,

''புலன்களை ஒழித்த போதே பொறிகளும் பூதம் ஐந்தும்
கலங்குறு கரணம் நான்கும் கலாதியும் சுத்தம் ஐந்தும்
விலங்குதம் அடியில் வைத்த வெறுங்குடம் தள்ளின் மேன்மேல்
மலங்குற ஒருங்கடுக்கும் மட்குலம் விழுதலேபோல்''

என்று உணர்த்துகின்றார். அதனால் ஞான நிலை அடைந்த சித்தராமருக்குக் குருவாக,

''ஆதலான் மனமங்கில் அங்கலிங் கங்கன் தம்முன்
பேதமோ அபேத மோவென் றழிவுறு பித்துநீங்கும்
தீதிலாய் என்றி யம்பிச் சித்தராமற்கு நாவால்
ஓதொணா உணர்வின் உண்மை உணர்த்தினன் குருகுகேசன்''

என்று மெய்யறிவை உணர்த்துகின்றார்.

ஆகமங்கள்

வீரசைவம் வேதத்தைவிட ஆகமங்களுக்கே முக்கியத்துவம் தருகின்றது. ஆகமம் எனும் சொல் ஒன்றிலிருந்து வெளிவந்தவை எனும் பொருள் உடையது. ஆகமங்கள் சிவனிடத்திருந்து வந்ததாக வீரசைவ வாதிகள் கொள்கின்றனர். இதில் ஆ - பாசம், க - பசு, ம - பதி எனும் முப்பொருளையும் எடுத்துரைப்பதாகவும் கொள்வர். பிரபுலிங்க லீலையில் அருமறை முடிவும், ஆகம முடிவும் வீரசைவத்தில் ஒத்திருப்பதை இறைவன்,

''அருமறை முடியும் சீர்சால் ஆகம முடியும் ஒத்துப்
பொருமறம் இல்லாமல் முற்றும் பொருளினை விளங்கக் காட்டித்
தருமறை அதனால் வீரசைவமே தலைமைத் தாயின்
இருபது வறுநன் னாலும் இதிற்பிரமாணம் ஆகும்''

என்று ஆகமங்கள் அன்பும், ஞானமும் கலந்த சிவத்துவத்தை அளிக்க வல்லது என இறைவியிடம் மொழிகின்றார்.

8. "சிவப்பிரகாசரின் நீதி நூல்"

மு. அழகர்சாமி, சென்னை.

'சிவப்பிரகாச சாமியின் நன்னெறி' என்றவுடன் அடியேனுக்கு நமது பழம்பெரும் ஞான நீதி நூல்கள் உணர்த்தும் அரிய நெறிகளை முதலில் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். திருமூல நாயனாரின் 'திருமந்திரம்' உலகுக்கு உணர்த்தும் உண்மைகளை, நெறிகளை முதலில் தெரிவிக்கப் பெரிதும் கடமைபட்டிருக்கிறேன். திருக்கயிலாயத்திலிருந்து இறைவனின் அருளாணையும் நந்தி தேவரின் ஆசியினையும் பெற்று வான்வழியே தெற்கு நோக்கி வருகின்ற ஞான முனிவர் முதலில் தில்லை நடராஜ பெருமானை வணங்கி மகிழ்கின்றார். அதுசமயம் அவர் ஞானக் கண்ணினால் சிவபெருமான் என்றும் தம்மையடைந்த ஆன்மாக்களின் பசுத்தன்மையைக் கெடுத்து பதித் தன்மையைக் கொடுத்தருளும் மிகவும் குளிர்ந்த புனிதபூமி திருவாவடுதுறை பூமி யாகும் என்று தெரிந்து கொள்கின்றார். ஆகவே அங்கு சென்று சிவப் பணியாற்ற வரும்போது இறைவனால் அதிசயங்கள் ஏற்பட்டு திருமூல நாயனார் ஆகியுள்ளார். இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு திருவாவடுதுறை திருப்பதியில் அமர்ந்து ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து ஆண்டுக்கு ஒரு பாடலாக மூவாயிரம் பாடல்கள் மலரச் செய்து உலகத்திற்கே நீதி வழங்கும் நீதிக்கோர் பொற்களஞ்சியம் திருமந்திரம் ஆகும். இந்த திவ்ய படைப்பு இறைவன், உயிர்கள், உயிர்கள் பற்றியுள்ள பாசங்கள் ஆகிய உண்மை இயல்பு பொது இயல்பு, பாசங்களை பொருத்தமட்டில் காரண இயல்பு, காரிய இயல்பு ஆகியவை களை விளக்குவதுடன் மனிதன் வாழ வேண்டிய நெறிமுறைகள் முடிவில் சிவபெருமானின் திருவடிப்பேறு அடைவதுதான் போன்ற உண்மை நிலையை விளக்கும் கலங்கரை விளக்கமாக ஒளிவிடுகிறது, வழிகாட்டு கிறது, நல்லதோர் வழிகாட்டியாக அன்றும் இன்றும் விளங்குகிறது.

சிவப்பிரகாச சாமிகள் அன்பின் அடிப்படையில் பக்தி சுவட்டில் தொண்டின் சிறப்பில் நற்பெருங் களஞ்சியங்களைத் தனது 35 நூல்களில் உருவாக்கி இருக்கின்றார்கள். அவர்கள் இயற்றிய பாடல்கள் அடங்கிய நன்னெறி ஆகிய நீதி நூல் முக்காலத்திற்கும் தற்காலத்திற்கும் வருங் காலத்திற்கும் மனித நேய ஒருமைப்பாட்டிற்கும் மிகச் சிறந்த வழிகாட்டி நல்களஞ்சியமாக விளங்கும் என்பதில் எந்தவித ஐயப்பாடுமில்லை.

இது அரசு நீதிக்கும் மனித, மற்ற நீதிகளுக்கும் அஃதே நல்லதோர் வழிகாட்டி என்பதே பொருந்தும். சிவப்பிரகாச சாமிகளின் 'நன்னெறி' எப்படியெல்லாம் உலகத்திற்குச் சிறந்த வழிகாட்டி என்பதைக் கீழ்க் கண்டவாறு அடியேன் விளக்க முனைகிறேன்!

இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல். (குறள்)

அகிலமறிய ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே திருவள்ளுவர் என்ற தெய்வப்புலவர் தன்னுடைய புலமையின் வளர்ச்சியை நல்ல முறையில் சிந்திக்க முற்பட்டார்.

அதன் விளைவாக நமக்கு ஆயிரத்து முன்னூற்று முப்பது குறட் பாக்களை வழங்கி இன்று உலகில் பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது என்றாலும் அவை பாதாம் அல்வாவைச் சாப்பிடாமல் 'பாதாம் அல்வா' என்று நல்ல வண்ணத்தாளில் அழகுற எழுதி அதனைச் சுவைத்தால் என்ன சுவை கிடைக்குமோ அது மட்டுமே கிடைக்கும்.

ஆனால் அதனை அப்படியே சுவைக்கப் பெற்ற தமிழ்க் குடிமகன் பெற்ற பேறுதான் என்னே? அதுபோல தமிழ்ப் படைப்பில் உள்ள பாடல்களை படிப்பதில் உள்ள சுகம் இல்லற இன்பத்தைச் சுகிக்க வேட்கை கொண்ட ஒரு இளம்பெண்ணானவள் திருமணம் முடிந்த பின்னர், அவளிடம் அந்தச் சுகத்தைப் பற்றிய விளக்கத்தை விவரிக்க அவளுடைய உறவினர் வினவும்போது விளக்கம் சொல்ல இயலாது. அதனைச் சுவைக்கும் போதுதான் அதனுடைய இன்பம் புரியும் சொல்லால் விளக்கிட இயலாதென்று விடை பகர்ந்தார். அதைப் போலத்தான் தமிழ்ச்சுவையைச் சுகிப்பது.

இவர் அறிந்த உண்மை ஒருவன் மாயையில் சிக்குண்டபோது அவனால் முன்னேற்றம் காண முடியாதென்பதையுணர்ந்த சுவாமிகள் ஆன்ம தத்துவத்தை அறிந்து அதை 25 பகுதிகளாக விளக்குகின்றார். அதில் அவருடைய கருத்துக்களை ஒரு நீதியின் ஆணை போன்று அமைத்துள்ளார். அதனை அனைவரும் அறிய படைத்துள்ள பெருமை இவரை மேலும் பற்பல படிகளில் உயர்த்தி விட்டது. இவரே நீதிக் கரசராகிய நிலையில் தன்னுடைய படைப்பினை அருளினார்.

குழலும் யாழும் இனியவெனக்
கூறாவண்ணம்மென் கனிவாய்
கழலலை மொழிந்தும் உடற்கின்பம்
மருவலடிமேல் விழுந்தும்

விழையும் அமிழ்தின் மிக இனிமை
விளையநுகரும் சுவையடிசில்
செழியசிறுகை யாலமைத்தும்
செய்தாள்மோகம் ஈன்றோரை

இந்தப் பாடல் மூலம் சிவப்பிரகாசர் ஒரு தலைசிறந்த ஞானாசிரியராகத் திகழ்ந்ததோங்கின்றார் என்றால் மிகையல்ல. இப்பாடலில் மானிடர்க்கு வலியுறுத்தும் நிலையைப் பார்ப்போமாயின் அதனுடைய சொல்லழகு, பொருளழகு, பிற காவியச் சுவையையும் முதன்போன்றினக்கும் தன்மை அறிந்த ஆன்றோர் அவரை 'கற்பனைக் களஞ்சியம்' என்று போற்றிப் புகழ்ந்தவர்.

இவர் தந்த கருத்துச் செறிவு புதைந்துள்ள 'நன்னெறி' என்ற நூல் இயற்றியுள்ளார். பால்நிலவைக் கண்டு களிப்பிலாடும் கடல் போல இவருடைய படைப்புத் திறமையைக் கண்டு மண்ணிலுள்ள மக்கள் வியந்தனர்.

'குடக்கோடு வானெயிறு கொண்டாற்குக் கேழன்
முடக்கோடு முனைமணிவாற்கு - வடக்கோடு
தேருடையான் றெவ்ஆர்க் குத்தில்லை தோன
லுருடையானென்னு முலகு மேற்கொள்ள'

இப்பாடல் வெண்பாவின் உருவில் தோற்றமளிக்கின்றது. இதற்கு வெகுமதியாகக் கிடைக்கப்பெற்ற தொகையைத் தமது ஆசிரியருக்கு காணிக்கையாக அளிக்க முன் வந்தார். ஆசிரியர் அதனை மறுத்து அதற்கு பதிலாகத் திருச்செந்தூரிலிருக்கும் செருக்குற்ற புலவரை அடக்கி அவரை தமக்கு அடிமையாக்கிட கேட்டுக்கொண்டதன் விளைவாகவே சிவப்பிரகாச சுவாமிகளின் திருவுரு மேலும் இதன் மூலம் பிரகாசிக்கத் தொடங்கிவிட்டது. அதன்படி சிவப்பிரகாச சுவாமிகள் திருச்செந்தூர் சென்றார். அவருடைய திருவருள்வண்ணம் செருக்குற்ற புலவரின் கருவத்தையடக்கி அவரைத் தன்னுடைய குருவிற்குக் காணிக்கையாக அளித்து உதவினார். இதன் மூலம் இவர் தலைசிறந்த முனிவராக விளங்கினார்.

அவ்வமையம் இறைவனான செந்திலன் அருளால் 'நிரோட்டகயமகம்' பாடினார். வெற்றிகனியை ஆசிரியருக்கு அளித்த முதல் சீடனாகத் திகழ்ந்தவர் என்ற புகழைப் பெற்று விட்டார்.

சிவப்பிரகாச சுவாமிகள் பொம்மபுரம் என்ற இடத்திலிருக்கும் போது, தனித் திருக்கக் கடற்கரைக்குச் சென்றார். அந்த விசாலமான கடல், ஆர்பரித்தக் கடலின் அலைகள், வானத்தில் ஜொலிக்கின்ற

விண்மீன் அதனிடையே உதித்த நிலவு, பறவை ஒலிகள், ஒருபுரம், வானில் மிதக்கும் கருமேகங்களுக்கிடையில் கண்சிமிட்டும் விண்மீனும், வெள்ளி நிலவும் ஓடியோ மறைந்து தன்னுடைய குளிர்முகத்தினை அமுதக்கடலில் கண்டு களிப்படைவதையும், மலர்ந்த மலர்களின் வண்ணங்கள் மனிதர்களுடைய பல்வேறு எண்ணங்களாகவும், அதனை தாங்கிய செடிகளின் இலைகளில் எத்தனை விதங்கள், பசுமைகள், சுவை அசைந்தாடி வண்டுகளை அழைப்பது போன்ற பாவங்கள். இடை யிடையே மக்கள் மகிழ்ச்சி ஆரவாரங்கள் அமைதியே நோக்கிய சுவருண்ட ஆன்மீக பயணத்திற்கு அடித்தளமிட்டது போன்ற கற்பனை வளங்கள் அந்தக் கடலலைப் பிய்ப்பது போல் துள்ளி எழுந்து தணிந்தது. மலரின் மணம் தன்னை மெய் மறக்கச் செய்தது கடலின் மணல் பரப்பின் மேலிருக்கும் பழைய ஓடங்கள், மீனவரை காக்கும் கட்டுமரங்கள் அன்றாட வாழ்வை நிலைக்க வைக்கும் பாய்மரக் கப்பல்கள். அதனிடைய பெரிய கலம்பகங்கள் வீரம் சொறிந்திருக்கும் வீரதளவாடம் சுமந்திருக்கும் மிகப்பெரிய கப்பல்கள். இவைகளுக்கிடையே மனமயக்கும் இசையின்பங்கள் தென்னை மரங்களின் ஓலைகளின் சலசலப்பு கடல் மணலை தோண்டி உப்பு நீர் கடலருகில் அந்திட அருமையான சுனை நீர் இவைகளைக் கொண்டு 'நன்னெறி' என்ற நூலுக்கு (40) நாற்பது வெண்பாக்களை எழுதினார் இன்றும் ஆயிரமாயிரம் வெண்பா எழுதிடும் கருப்பொருளை அடைந்தார். இதனை வடிவமைக்கப்பட்ட பின்னர் அதனை ஏட்டில் எழுதிப் பாடிப் பார்த்து பரவசம் அடைந்தார். அந்தப் பாடல்கள் யாவும் மக்களுக்கு என்றென்றும் இன்றியமையாததாக அமையும் என்றால் மிகையாகாது. அதிலுள்ள நீதிகள் அழகியப் புத்தம் புதிய மலர்களாக மணம் பரப்பி என்றும் வாடாத மலர்களாக படர்ந்து வருவதுதான் வியப்பு.

அழகிய உவமைகளும் அற்புதமான உவமேயங்களும், அதில் கூறப்பட்டுள்ள அனைத்தும் மக்களால் விரும்பி ஏற்கத் தக்கதாக அமைந்துள்ளன. அவைகள் கற்போருக்கு பொருத்தமுள்ள செய்திகளைத் தருவதாகவும் வியப்பையளிக்கவல்ல நீதியை அனைவரும் ஆர்வத்துடன் அறிய உதவியது.

மக்களுடைய பயன்தரத்தக்க உலக மக்கள் கண், காது, மூக்கு, வாய் போன்ற அமைப்புக்களின் அற்புதத்தினை அறிமுகப்படுத்தும் வண்ணம் அமைந்துள்ள ஒன்பது பாக்களிலும் ஞாயிறு, திங்கள், கடல், காற்று முதலிய இயற்கை எழிலினையும் கற்பனை சுவையையும், தென்றலின் சுகத்தையும் மலர்களின் மணத்தையும் மனமகிழ வைக்கும் அவர் கண்ட கற்பனையில் நெல், கரும்பு, வாழை போன்ற அனைத்து உயிர்களைப் பற்றி விளக்கமாகப் பாடல்களுக்கிடையே அளிக்கப்

பட்ட அற்புதங்களை மாணவமணிகள் அறிந்துத் தெளிந்து வாழ்ந்திடத் தந்திட்ட கைவண்ண ஓவியம் போன்றதும் கலைஞன் செதுக்கிய சிற்பத்துக்கு இணையாகவும் திகழ்ந்துள்ளன. தான் கற்ற படிப்பினை வருங்கால சந்ததியினரான மாணவமணிகளுக்கு அவருடைய அற்புதப் படைப்பான நீதிநெறி என்ற நூல் ஒரு நீதியை வழங்கும் விதத்தில் அமைந்துள்ளது பாராட்டுக்குரியது. நன்னெறி நாற்பதற்குரிய கடவுள் வாழ்த்தினைக் குறிப்பிடுகையில்,

'மின்னெறி சடாமுடி விநாயக வடிதொழ
நன்னெறி வெண்பா நாற்பதும் வருமே.'

என்றுள்ள பாடல் நன்கு பிரசித்தி பெற்ற சொற்களைக் கொண்டு இயற்றப்பட்டுள்ளது.

விநாயகக் கடவுளின் அருளால் நன்னெறி என்னும் நூல் இடையூறு இன்றி இனிது முடியும் என்பதாகும். அவர் நன்னெறியில் கடவுள் வாழ்த்து அதைத் தொடர்ந்து

முகமன் எதிர்பாராமல் உதவுக, வன்சொல்லும் இனிதாதல் உண்டு, இனிய நெறியறிந்து பெறுக. பொருள் பயன்படுத்து வார்க்குச் செல்வம் நட்பிற் பிரியாமை, காதலர் ஒருமை, கல்விச் செருக்கு, சினத்தைக் காத்துக் கொள்க, சார்பின் வலி, தன்னலம் கருதாமை, புலன் இன்பங்களின் இன்மை, உடம்பில் உயிர் அமைப்பு, அன்பின் உதவுக, செல்வச் செருக்கு விடுக, அன்பின்றிச் செல்வம் பயனில்லை, அதிகாரம் முதலியன பயனில்லை, வறுமையிலும் உதவி, இன்சொல், நற்குணம், பிறர் துன்பம் கண்டு உள்ளங்கை சிதல், அறிவினை செருக்கில்லை, பிறப்பால் உயர்வு தாழ்வு, உதவியாற்ற நெகிழலாகாது, இகழ்ச்சியைப் பொருட்படுத்தலாகாது, கீழோர் செயற்கை ஆகாது, உயிர் திறமை கருதுக, மெய்வருந்தியும் உதவுக, வெறுப்பிலும் உதவுக, இடுக்கண் அஞ்சாது உதவுக, காலத்தில் அறஞ்செய்க, பிறர் துயர் தாங்குக, மெய்யுணர்ந்து உதவுக, பெரியோர் போற்றுதல் வேண்டார், பெரியோர் பழிக்கு அஞ்சுவர், மேன்மக்கள் நல்லோரை விரும்புவர், உலகத்தில் உதவி தக்கார்க்கே, சிறியோர், தாமே நிலை பெறார், தக்கார் தொடர்பு நலம் பெருக்கும், தகாதார் தொடர்பில் தீமை உள்ளது, தக்காரைப் போற்றிக் கொள்க,

என்றும் பல்வேறு தலைப்புகளில் நன்னெறியின் மாண்பினைப் படைத் துள்ள ஆசிரியர் திருக்குறளைத் தீட்டிய திருவள்ளுவரைப் போன்றே 40 அதிகாரத்தில் ஒவ்வொரு அதிகாரத்தில் ஒரு பாடல் அமைத்து நீதியின் மாண்பினை மக்களுக்கு உணர்த்தியுள்ளார்.

திருவள்ளுவர் தந்துள்ள, அறன்வலியுறுத்தல், இல்வாழ்க்கை, அன்புடைமை, செய்நன்றிஅறிதல், நடுநிலைமை, அடக்கம், ஒழுக்கம், ஈகை, புகழ், தவம், வாய்மை போன்ற அதிகாரங்களில் கூறப்பட்டுள்ள பயனுள்ள சொற்றொடர் கொண்டு இனிய குளிர்ந்த தன்மையுடைய குளிர் பதனமும் பழரசமும் தருவதைப் போல் ஆசிரியர் தனது சுவை மிக்கப் பாக்களை நன்னெறியை விளக்கும் வகையில் அமைத்துள்ள விதம் இதன் ஆசிரியரான சிவப்பிரகாச சுவாமிகளுடைய அறியப் படைப்பினை ஔவையார் அளித்துள்ள நன்னெறிக்கும் ஒப்பிடலாம் திருமூலர் தந்துள்ள திருமந்திரப் பாடலுடன் ஒப்பிடலாம். மேலும் இதிலுள்ள பொதுக் கருத்துக்கள் அனைத்தும் தெய்வப்புலவரின் சாயலிலேயே அமைந்துள்ளது.

சிவப்பிரகாச நன்னெறிப் பாடல்

பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு பிறர்க்குதவியாக்குபவர் பேறாம் பிறர்க்குதவி செய்யாக் கருங்கடனீர் சென்று புயன்முகந்து பெய்யாக் கொடுக்கும் பிறக்கு' இதனை திருவள்ளுவர் கூறும்போது இதே கருத்தினை,

'ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும் வாயெல்லாம் செயல்'

என்று சுருக்கமாக கூறியதோடன்றி மீதமுள்ள ஒன்பது பாடலிலும் மிகத் தெளிவான கருத்தினை தெளிவுபடுத்துகின்றார்.

ஔவையின் நீதிநூலில் 'நல்வழி' என்ற தலைப்பில் பற்பல பாடல்களைத் தந்துள்ளார். அவற்றில் கீழ்வரும் பாடலில் கூறும்போது

'புண்ணியம் ஆம்பாவம்போம் போனநாள் செய்த சுவை
மண்ணில் பிறந்தார்க்கு வைத்த பொருள் என்னும் கால
தீது ஒழிய நன்மை செயல் சொல்லும் என்று
செப்புகின்ற நல்வழியில் தீமையை விலக்கி
நன்மையை செய்தல் வேண்டும்'

என்று ஈகையை வலியுறுத்துகின்றார் ஔவையார்.

இதனையே மணிமேகலையில் சீத்தலைச் சாத்தனார் கூறுகையில்,

'ஆற்றுநர்க் களிப்போர் அறவினை பகர்வோர்
அற்றமக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை'

என்று போற்றிடுகின்றார். சமுதாய வாழ்வை புனைவதோடு அறன் வலியுறுத்தலை வள்ளுவரைப் போன்றே இவரும் நல்ல கருத்தினை நயம் பெற்றுத் தந்துள்ளார்.

நாட்டின் சிறப்பினைக் கூறும்போது சிவப்பிரகாச சுவாமிகளின் 'நன்னெறியில்'

'நீக்க மறும் இருவர் நீக்கிப் புணர்தலும்
நோக்கி ஐவர்பெருமை கொய்தாகும் - பூக்குழலாய்
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபொற்
புல்லினுந் திண்மை நிலைபோம்.'

என்று பாடியுள்ளார்கள். அதன் கருத்தாவது ஒருவனுக்கு நல்ல நிலையிலிருந்து இடையே நட்பில் சிக்கல் ஏற்பட்டு அதனால் பிரிய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டாலும் அதன்பின் வேறுயேதாவதொரு சந்தர்ப்பத்தில் கூடினாலும் அது அத்துணை சிறப்பாகி முன்பிருந்ததைப் போலிருக்காது என்று தெளிவுபடக் கூறுகின்றார்.

இதையே திருவள்ளுவர் கூறும்போது நட்பென்னும் அதிகாரத்தின் 785 பாடலில்

'புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்'

என்றும் குறளின் கருத்து நட்பு செய்வதற்குத் தொடர்பும் பழக்கமும் வேண்டியதில்லை எனவும் மூத்த உணர்ச்சியே நட்பு ஏற்படுத்தும் அத்தகைய உரிமையையும் கொடுக்கும் என்று மார்தட்டிக் கூறுகின்றார். மேலும் அதே அதிகாரத்தில்,

'முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு'

என்று நட்பிற்கு இலக்கணம் சொல்லும் தெய்வப் புலவனினும் ஒரு படி மேலே கூறியுள்ள சுவாமிகளின் கருத்துள்ளது. இதையே நல்வழியில் ஔவையார் கூறும்போது அவர் தன் தொண்டின் பயனாய் கிடைத்த அனுபவத்தைக் கொண்டளித்தப் பாடலில்,

'நன்று என்றும் தீதென்றும் நான்என்றும் தான்என்றும்
அன்று என்றும் ஆமென்றும் ஆகாதே - நின்றநிலை
தானம்தாம் தத்துவமாம் சம்பறுத்தார் யாக்கைக்குப்
போனாவா தேடும் பொருள்'.

இதனை ஆராயும்போது நமக்கு நண்பனாக இருக்கும் இறைவன் ஒவ்வொரு மனிதனிடமும் ஒவ்வொரு வகையில் இருப்பதை நெறியாக விளக்குகின்றது.

சிவப்பிரகாச சாமிகள் தந்துள்ள நீதிநெறியில் உள்ளதைப் போலவே ஔவை மூதாட்டியின் 'நல்வழி' என்ற நூற்பாடலிலும் கீழ்வரும் தலைப்புகளில் பல அறிய பாடல்களைத் தந்துள்ளது. பாராட்டுக் குரியதாக்கியுள்ளதை தெளிவுபடுத்துகிறது.

கடவுள் வாழ்த்து, நன்மையே செய்க, ஈயாமையின் இழிவு, ஈதலின் சிறப்பு, காலம் நோக்கிச் செய்க, கவலையுறுதல் கூடாது, பேராசை கூடாது, ஞானிகள் பற்றற்றிருப்பர், மரியாதையே தேடத்தக்கது, குடி பிறந்தால் இல்லை என மாட்டார், செல்வ நிலை அறிந்துவிடுக.

என்பது போன்ற பல கருத்துக்கள் கூறப்பட்டாலும் காலத்தால் அழியாத ஐந்தாம் வேதமாகக் கருதும் வள்ளுவ மாலையாகிய திருக்குறளில் உள்ளது போன்ற ஆணித்தரமான கருத்துக்களைக் காலத்தால் மாறு பாடற்ற தன்மையோடும் சுவாமிகளுடைய கருத்துக்கள் குன்றின் மேல் செதுக்கிய எழுத்துக்களாகவும், மலையுச்சியில் ஏற்றப்பட்ட விளக்கொளி போலவும் உச்சநீதிமன்றத்திற்கும் மேலானதொரு நீதி மன்றத்தில் வழங்கும் நீதிக்கு ஒப்பானதாக உள்ள சிவப்பிரகாச சுவாமிகளின் 'நன்னெறி நீதி நூல்' என்று போற்றிப் புகழ்வதில் இச்சிறியேன் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.' வாழ்க சிவப்பிரகாச சுவாமிகள், வளர்க அவருடைய நீதி நூல்.

9. திருப்பள்ளியெழுச்சி

அன்னிதாமசு, சென்னை.

துறைமங்கலம் சிவப்பிரகாசர், கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து, தமிழுக்கும் சைவத்துக்கும் ஒளிசேர்த்த பெருங்கவிஞர். சமய நோக்கும் இலக்கியப் போக்கும் இவர் படைப்புகளில் பின்னிப் பிணைகின்றன. புராணமும், உரைநடையும், காப்பியமும் இயற்றிய இவர் பிரபந்தங்கள் பலவற்றையும் மரபுத் தொடர்ச்சியுடனும் புதுவது புனையும் திறத்துடனும் ஆக்கியுள்ளார். இறைவனைப் பாடியதுடன் இறையடியவரையும், சமயப் பெரியாரையும் தம் பாடல்களுக்குத் தலைமையாகக் கொள்கின்றார். தனிப்பாடலும், வித்தார கவியும் புனைந்த இவர் நீதியுரைத்தல், பிற சமய மறுப்பு என்பனவற்றிலும் தம் நாத்திறன் புலப்படுத்துகின்றார். ஒரு பா ஆயினும், சில பல பாடல்கள் ஆயினும் அவற்றில் தன் தனித்தன்மையை இவர் வெளிப்படுத்து கின்றார் என்பதற்கு இவர் பாடிய திருப்பள்ளியெழுச்சிப் பிரபந்தம் சான்றாகும்.

மாணிக்கவாசகரையும் தேவார மூவரையும் மிக வியந்து போற்றியவர் சிவப்பிரகாசர். தமிழிலக்கிய வரலாற்றில் மாணிக்கவாசகரின் திருப்பள்ளியெழுச்சி முதலில் வந்தமை இவரிடம் செல்வாக்குக் கொண்டிருக்கலாம். எனினும் அவர்போல் பத்துப்பாடல் பாடாது, நான்கு பாடலில் நிறைவு செய்துள்ளமையும், இறைவனைப் பாடாது சமயப் பெரியவரைத் தலைமையாக்கியுள்ளதும் வேறுபாடாகும். இதற்கு விதை தொல்காப்பியத்திலேயே அமைகின்றது என்பதையும் இங்கு நினைக்கலாம்.

இலக்கண நூல்கள், பள்ளியெழுச்சி எனவோ திருப்பள்ளியெழுச்சி எனவோ கூறவில்லை. கடவுளுக்குரியதாகவும் பதிவு செய்யவில்லை. புறத்திணையின் பாடாணில், அரசனுக்கோ, வீரர் தலைவனுக்கோ உரியதாக இதன் முன்னோடிக் கரு அமைகின்றது. 'துயிலெடை நிலை' என்பது அதற்கு அங்குப் பெயர்.

தாவில் நல்இசை கருதிய கிடந்தோர்க்குச்
சூதர் ஏத்திய துயிலெடைநிலை (தொல்.1037.1-2)

'குறையாத புகழையுடைய அரசர் துயில் கொண்டபோது, அவர்கள் எழ, நின்று ஏத்துவாராகிய சூதர் பாடும் திருப்பள்ளி எழுச்சியும்' என்பது இதற்கமையும் அண்மைக்கால உரை (தொல்காப்பியம் தெளிவுரை, ச.வே. சுப்பிரமணியன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1998, ப. 401).

தலைவனை, மன்னனைத் துயிலெழுப்புதல் ஏன், எப்போது நிகழ்கிறது, என்ன கூறி எழுப்பவேண்டும், யார் எழுப்புவர் என்ற எல்லா வினாவுக்கும் இங்கு விடை இல்லை. 'இசை கருதிக் கிடந்தோர்' எனவும் 'ஏத்திய' எனவும் கூறுவதால், புகழ்தல், போற்றுதல் என்பன பாடுபொருள் என்பதும், அப்பணி செய்பவர் சூதர் என்பதும் போதரும். துயிலெழ வேண்டிய காலைப்பொழுதில் இப்பாங்கு அமையும் எனச் சூழலை ஊகிக்கலாம்.

கால இடைவெளிக்குப்பின் தொடர்ந்த பாட்டியல் நூல்கள் சில இத்துயிலெடையை எடுத்துக் கூறுவதை இங்குக் கருதல் தகும். மாணிக்கவாசகரின் திருப்பள்ளி எழுச்சியும் தொண்டரடிப் பொடியாழ்வாரின் திருப்பள்ளி எழுச்சியும் எழுந்த பின் வந்த நூல்களானபோதும், இப்பாட்டியல்கள் துயிலெடையெனவே இயம்புகின்றன; மன்னவனுக் குரியதாகவே காட்டுகின்றன. எனினும், தொல்காப்பியத்தினின்றும் ஒருபுடை மேற்சென்று சூழலை விளக்க முயல்கின்றன; சூதர் என்பதை விட்டுவிடுகின்றன; தூதர் என்கிறது ஒரு நூல். (இலக்கணத் தொகை யாப்பு - பாட்டியல், ச.வே. சுப்பிரமணியன், தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1978, ப. 443, 444).

அரண்மனையில், விடியலிலே, திறைகொண்டு வந்த மன்னரும் திறை தராமையால் சிறைப்பட்ட மன்னரும் ஏத்தி நிற்றலைக் கூறி, அவன் சொற்கேட்க அவர் விழைதலைச் சுட்டி அரசனைத் துயிலெழும்படி விளம்புதல் - என்பது பன்னிரு பாட்டியலில் அமைகின்றது.

கண்படை மன்னவர் முன்னர்த் தண்பத
விடியல் எல்லை இயல்புறச் சொல்லித்
தந்த திறையரும் தாராத் திறையரும்
ஏத்தி நின்மொழி கேட்டு இனிது இயங்க
வேண்டினர் இத்துயில் எழுக எனவிளம்பின்
அதுவே மன்னவர் துயிலெடை நிலையே (ப.பா. இ. 122)

இதற்குச் சிறிது வேறுபட்டு, பாசறைக்கண் படைபலம் பற்றி நற்றுயில் பூண்ட மன்னனை நன்மை கூற வந்த தூதர் 'எழுக' எனக் கூறல் பிரபந்த தீபிகையில் அமைகின்றது.

தானை வலியினால் பாசறைதனில் ஒரு மனக்கவலை யின்றித்
துயின்ற அரசர்க்கு நற்புகழ் கொடுத்தல்
நேர்ந்து கருதிய தூதர் துயில் எடுப்புதலாய
நிகழ்த்தல் துயிலெடை நிலையதாம் (பி.தீ. 22)

இறைவனுக்குரியதை மனிதனுக்கும் மனிதனுக்குரியதை இறைவனுக்கும் பொருத்திக் காண்பது மனித இயல்பு. தூக்கம், விழிப்புப் போன்ற மனித நிலைகளை இறைவனுக்காக்குவதும் இத்தகையதே. எங்கும் நிறைந்த, எல்லாம்வல்ல, எதையும் கண்டுகொண்டேயிருக்கும் இறைமை, தூங்குவதாகப் பாவித்தலும், அவனை எழுப்புவதாகப் பாடுதலும் பக்தியின் மயக்கம் போலும். 'உன் காலைத் தள்ளாட ஒட்டார்; உன்னைக் காக்கிறவர் உறங்கார். இதோ இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குகிறதுமில்லை. கர்த்தர் உன்னைக் காக்கிறவர்' என்பது விவிலியம் (சங்கீதம் - 121.3-5). தொல்காப்பியம், பூவைநிலை என்ற துறையைத் தந்தது (தொல். 1006.10). 'அரசனைத் தேவரோடு ஒப்பக் கூறும் புறத்துறை' எனத் தமிழ்ப் பேரகராதியில் விளக்கம் பெறுகின்றது (தொகுதி - 5, ப. 2852). இந்நிலையில், மன்னனும் இறைவனும் ஒப்ப வைக்கப்பெற்று துயிலெடையும் - பள்ளியெழுச்சியும் இணைமையுறுவது கருதலாம்.

இலக்கணக் கருத்தின் அடிப்படையில், உறங்குபவரை, 'உறக்கம் நீக்கி-நீங்கி-எழு' எனக் கூறுபவர் சூதராயினும் தூதராயினும் வீரராயினும் பிறராயினும், அவர் கூற்றில் சில தகவல்கள், பொருட் கூறுகள் அமையவேண்டும் என்பது தெரிகிறது. பொழுது விடிந்தது என்ற தகவல்; ஏத்தும் புகழ்மொழிகள்; எழுந்தால், காணக் காத்து நிற்போர் யார் யார் என்ற விடயம்; இவன் எழுந்து வந்து உரையாற்றல் எனும் தேவை; அதற்கேற்றவாறே பின்நிகழ்வுகள் தொடரும் என்ற உண்மை - ஆகியனவற்றை உணர்ந்தறிய முடிகிறது.

இப்பொருண்மைக் கூறுகள், சிவப்பிரகாசரிடம் அமைகின்றனவா எனக் காணமுடியும். நான்கே செய்யுட்களில் அவர் என்னென்ன பொருட் கூறுகள் அமைக்கிறார்; உள்ளீட்டில் வரன்முறையும் படி நிலையும் தெரிகின்றனவா; மரபு அல்லது முறை என்பன எந்த அளவு பின்பற்றப்படுகின்றன; கருத்தாழமும் புதுமைப் புனைவும் எந்த அளவு செல்கின்றன; விளிகள் எவ்வாறு வருகின்றன; மற்ற நூல் களிலில்லாது இந்தச் சிறுநூலில் அவர் உணர்த்த விரும்பியது ஏதேனும் உண்டா; இப்பிரபந்த இலக்கிய வகையின் அமைப்பிற்குப் பொருத்தமாக வெளியீட்டுப் பாங்கு பொருந்துகின்றதா எனப் பிற பல கூறும் காணக் கூடும். அன்றியும் திருப்பள்ளியெழுச்சியில் இவருக்கு முன்னோடியாய்த்

திகழும் மாணிக்கவாசகர், தொண்டரடிப்பொடியார் ஆகியோரின் படைப்பிலுள்ள கூறுகள் இவரிடம் எவ்வாறுள்ளன. எவ்வாறு வேறுபட்டமைகின்றன எனவும் காண்டல் கூடும்.

அடிப்படையாக ஒரு வேறுபாடு காணலாம். அவர்கள் இறைவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டனர். 'திருப்பெருந்துறை உறை சிவபெருமானே........' என விளிக்கின்றார் மணிவாசகர். 'அடல்ஒளி திகழ்தரு திகிரிஅம் தடக்கை அரங்கத்தம்மா...' என முன்னிலைப் படுத்துகின்றார் தொண்டரடிப்பொடிகள். முறையே, சிவபெருமானும், திருமாலும் இங்குத் துயிலெழுப்பப்படும் தலைமை பெறுகின்றனர். சிவப்பிரகாசரோ சிவஞான பாலைய சுவாமிகளைத் தலைவனாகக் கொள்கின்றார்; சமயப் பெரியாரைப் பாட்டுடைத் தலைவனாக்குகின்றார். மன்னனைப் பாடுவதுபோல், சீர்மிகு மானுடரொருவரைப் பாடுகின்றார்; எனினும் சிவனாகவே கொண்டு பாடுகின்றார் என்பதில் வேறுபாடும் - இணைமையும் ஒருங்கு புலப்படுகின்றன. 'சிவஞான தேசிகனே...' என்பது இவரிடம் பயின்ற விளி. கோயிலில் குடியிருக்கும் இறைவனும் திருமடத்தில் உறையும் குருவும் இங்கு ஒன்றுபடுகின்றனர். விடியற்காலை வழி பாட்டுக்காகத் துயிலெழுப்புதலின் தேவை அங்கமைய, இங்குச் சமயஉரை கேட்கவும் ஐயம் நீக்கவும் துயில் எழுப்புதல் இன்றியமையாததாகின்றது.

விடியற்பொழுதின் வருகையும், தலத்தின் இயற்கை வருணனையும் பள்ளியெழுச்சிப் பாடல்களுக்குப் பின்புலம் வழங்குதல் என்பது முன் மரபு. 'புலர்ந்தது' எனவும், 'அருணன் இந்திரன் திசை (கிழக்கு) அணுகினன், இருள் போய் அகன்றது' எனவும்,

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளி ஒளி உதயத்து
ஒருப்படுகின்றது.

எனவும் மணிவாசகர் பொழுது விடிவதைக் காட்டுவார். ஆழ்வாரோ, பெரும்பான்மைப் பாடல்கள்தோறும் காலை வருணனையைக் கவின்பெற அமைப்பார். செங்கதிர், கிழக்கிலே, மலைமுகட்டிலே கூடினான். இரவிருள் நீங்கியது. காலை மலர்கள் பூத்துத் தேன் சொரிகின்றன. கீழைக்காற்று, செழுமை தங்கிய முல்லைக் கொடியிலுண்டான அழகிய மலர்களின் மணம்கொண்டு வீசுகின்றது. பூம்பள்ளியில் உறங்கும் அன்னங்கள் மழைபோல் சொரிகின்ற பனியால் நனைந்த தங்கள் அழகிய இறக்கைகளை உதறி உறக்கம் விட்டு எழுந்தன.

சுடர் ஒளி பரந்தன சூழ் திசை எல்லாம்
துன்னிய தாரகை மின்னொளி சுருங்கிப்

படர் ஒளி பசுத்தனன் பனி மதி இவனோ
பாயிருள் அகன்றது பைம்பொழிற் கமுகின்
மடலிடைக் கீறி வண் பாளைகள் நாற
வைகறை கூர்ந்தது மாருதம் இதுவோ.

எனப் பொழுது விடியும் காட்சியின் சித்திரம் விரிந்து கொண்டே செல்கின்றது. இத்தகு பொழுது வருணனை சிவப்பிரகாசரின் பள்ளி யெழுச்சியில் சற்றும் இல்லை. இவர் பாடல் சுருக்கத்திற்கு இப் படைப்புச் சூழல் ஒரு காரணம் ஆகும்.

இடவருணனையும் இவ்வாறே. சேற்று இதழ்க் கமலங்கள் மலரும் தண் வயல் சூழ் திருப்பெருந்துறை, சீதங்கொள் வயல்... செப்புறு கமலம் கண் மலரும் தண் வயல் சூழ்..., மது வளர் பொழில் திரு உத்தரகோச மங்கை... என்பன போன்று மணிவாசகர் அமைக்கின்றார். திருவரங்கத்தில் பள்ளிகொண்ட இறைவனை எழுப்புகின்ற ஆழ்வார், இத்தகு இட வருணனை அமைத்தாரிலர்; 'சூழ் புனல் அரங்கா' எனக் காவிரியைக் குறிப்பாகச் சுட்டியதுடன் அமைந்தார். சிவப்பிரகாசரும் 'திகழும் மலை மகள் நகரின் மருவு சிவஞான தேசிகனே' என்பது தவிர, தலக்குறிப்போ, தல வருணனையோ தரவில்லை. சிவஞான பாலைய சுவாமிகளைத் தாலாட்டு, நெஞ்சுவிடு தூது, பிள்ளைத்தமிழ் எனப் பிற பிரபந்தங்களாலும் போற்றிப் பாடிய சிவப்பிரகாசர், அங்கு, ''மயிலை வரையிற் சிவஞான மணி', 'கச்சிவாழ் சிவஞான தேசிகன்', 'சிவமுனி கச்சி நகராய்' என்பதுபோல் இருப்பிடம் சுட்டினும் இடவருணனை இன்றியே தருவதும் எண்ணத் தக்கது,

இவ்வாறு பின்புலப் படைப்பில் வேறுபட்டு, தனித்து நிற்கின்ற சிவப்பிரகாசர், பாடலின் உள்ளீட்டிலும் தனக்கெனத் தனித்தளம் அமைத்துக் கொள்ளக் கூடும் எனக் கருதலாம். பாடல்வாரியாகப் பொருண்மையைப் பகுத்தாய்ந்து, ஒப்பீட்டு நிலையில் இதனை வெளிப்படுத்த இயலலாம்.

இருவேறு கருத்துடையோர் எதிர்மோதுகின்ற ஒரு பட்டிமன்றத்திற்கு நடுவர் தேவைப்பட, அவ்வாறொருவரைத் தேடிச் சென்றணைந்து அழைப்பதுபோல, சிவத்தோடு உயிர் இணைவது பற்றிய கருத்தில் இருவேறு கோட்பாடமைவதைச் சுட்டி, அவற்றில் எது சரி என்று உணர்த்த சுவாமிகள் எழுந்தருள வேண்டும் என்று முதல் பாடலைச் சிவப்பிரகாசர் அமைக்கின்றார்.

சிவமும் உயிரும் எப்போது ஒன்றாகும்? இரண்டறக் கலக்கும்? சத், சித், ஆனந்தம் நிறைந்ததான பரசிவத்தில் நிகழும் உயிர், சிப்பியில் முத்துபோல் தோன்றி, அறிவு பெற்று, மயக்கம் அகன்ற

பின்பு, அச்சிவத்தோடு வேறற்ற ஒன்றாகும். இது ஒருசாரார் கருத்து. மற்றும் சிலர் வேறொரு கருத்தை உரைப்பர். பதி, பசு, பாசம் என்பன வற்றில், பதியான சிவத்தைப் போன்று, ஆருயிர், நித்தியம், மும்மலங்களான பற்றுவிட்டுக் கடந்த பின், அவ்வுயிர் சிவத்தோடு ஒப்புமை யுடையதாக அமையும் என்பது இந்த இரண்டாம் கருத்து. இவற்றில் எது சரியான வழி என்று அறிவதற்காக, சுவாமிகளை வினவி ஐயம் நீக்குவதற்காக அடியாராகிய நாங்கள் கூட்டமாகக் கூடிக் குழுமி யுள்ளோம். எனவே துயில் நீங்கி எழுக எனப் பாடலை விளக்கலாம்.

நிறைந்த ஒரு சச்சிதானந்த பரசிவத்தில்
நிகழும் உயிர் இப்பியிடை வெள்ளி போல் தோன்றி
அறிந்து மயல் அகன்றிடில் ஒன்றுஅன்றிவேறு இல்லைஎன்று
அறைவர் சிலர்; பதியினைப்போல் ஆர்உயிர் நித்தியமே
இறந்து மல சத்தி விடில் சிவசமானதையாய்
இருக்கும் என அறைவர் சிலர்; எது வழக்கு என்று அடியேம்
செறிந்தனம், நின்தனை வினவ, எங்கள் சிவஞான
தேசிகனே, அருள்மலையே, பள்ளி எழுந்தருளே (1)

இத்தகு ஒரு சூழல் விளக்கம் திருவாசகத்திலோ திவ்வியப் பிரபந்தத் திலோ காணப்படவில்லை. அங்கு பக்தியியக்க நோக்கமென்றால், இங்குத் தத்துவ விளக்க நோக்கம் என்பதே வேறுபாட்டு அடித்தளம் எனல் போதரும்.

சிவப்பிரகாசர் தரும் இரண்டாம் பாடலிலுள்ள கருத்தும் மிக நவமானதும் நயமானதுமாகும். குறியீட்டின் எல்லையைத் தொடுகின்ற உருவக வெளியீடு இங்குப் பொருந்துவது பிறவிடத்து இல்லை. பால்பசுக்களைப் புரந்து பால்பயனாகிய அமுதை ஊட்டுபவன் என்பது புலக்காட்சி. உட்படுபொருளில் பசு எது பால் எது என்பன விளங்கும். சகலர் என்பன பசுக்கள்; மூலாதாரம் என்பது அப்பசுக்கள் கட்டி வைக்கப்படும் கொட்டில் - தொழு; கட்டும் கயிறு, மலம். புகுதல், ஐம்புல நுகர்வு, உரை ஆகிய எதுவும் இல்லாது அவை கட்டப் பட்டிருக்கும். பின்பு கலை (இடகலை - பிங்கலை) எனும் கைகளால் கட்டவிழ்த்து விடப்படும். நனவு எனும் ஊரில் - இடத்தில் - அவை ஓட்டப்படும். விடயம் என்ற புல்லை மேயும். இறைவன் உயிர்களை இவ்வாறு மேய்த்து, அமுதம் (குண்டலினி சக்தி) அருள்வான். இத்தகைய சிவஞான சுவாமிகளைப் பள்ளியெழப் பாடுகிறார்.

சகலர் எனும் பசுக்களை மூலாதாரம் என்னும்
தக்க தொழுஇடை மலமாம் தாம்பினால் ஆர்த்துப்
புகலும் ஒரு நுகர்வும் இலாது உரைநிறுத்திப் பின்னர்ப்
பொருந்து கலையாம் கரத்தால் கட்டு அவிழ்த்து விட்டே

அகலும் நனவுஎனும் புரத்தில் ஓட்டியே விடயம்
ஆகிய புல் மேய்த்து எமக்கு இங்கு அமுதம் அருள்பவனே
திகழும் மலைமகள் நகரின் மருவு சிவஞான
தேசிகனே அருள் மலையே பள்ளி எழுந்தருளே (2)

ஐம்புலனடக்கம், மௌனம், பிராணாயாமம், குண்டலினி எனப் பலவும் சித்தர் வழியை நினைப்பூட்டுகின்றன. செவ்வையான விளக்கம் இன்னும் தெளிவு வழங்கும்.

மூன்றாம் பாடல், பிற பள்ளிஎழுச்சிகளின் புனை கூற்றுடன் ஒப்பிடத் தக்கதாக அமைகின்றது. திருமாலும், பிரமனும் வந்து நிற்கின்றனர்; எனவே உறக்கம் நீங்கி எழுக என்பது இங்குக் கரு. கடலில் பாம்புப் படுக்கையில் பள்ளிகொண்டிருந்த திருமால் துயில் நீங்கி எழுந்து சங்கொடு வந்து போற்றி கூறி ஊத நிற்கிறான்; நான்முகனோ செம்பில் தண்ணீருடன் உதவிட நிற்கின்றான் என்பது காட்சி. சுவாமிகளைச் சிவனாக ஆக்கிவிடுகிறார்.

காற்று மறைப்பாய படப்பாயல் இடை மடங்கல்
கனல் அருகின் அரிசனப் பொன் தூசு மிசை போர்த்துக்
கோல் தொடி மென்முலை மடந்தைதனை மார்போடு அணைத்துக்
குளிர் குடையான் உததியிடைக் கண் துயில்வோன் எழுந்து
போற்றி நினதுஎதிர் குறிப்பச் சங்கொடும் வந்து உற்றான்
புண்டரிகன் கரகநீர் கொண்டு உதவ நின்றான்
சீற்றம்அறும் தவக் களிறே எங்கள் சிவஞான
தேசிகனே அருள் மலையே பள்ளி எழுந்தருளே (3)

மாணிக்கவாசகரும், ஆழ்வாரும், தம் பாடுபொருளுக்கேற்ப, இவ்வாறு வந்து காணக் காத்திருப்போர் பட்டியலை அமைப்பர். கூறுமுறையிலும், பட்டியலிலும் இவர்கள் சிவப்பிரகாசருடன் ஒன்றவில்லை என்பது ஒன்று; தம்முள்ளும் வேறுபட்டு அமைகின்றனர் என்பது மற்றொன்று.

வீணை, யாழ் எனும் இசைக்கருவிகளிசைத்துச் சிலர் ஒருபக்கம் நிற்கின்றனர். வேதம் முழங்கப் போற்றிப் பாடல் பாடுவோர் மற்றொரு பக்கம். பூமாலைகளை ஏந்தி நிற்போர் சிலர். மற்றும் சிலர் தொழுகின்றனர், அழுகின்றனர், துவள்கின்றனர். பிற சிலரோ தலைமேல் கரம் கூப்பி ஒரு பக்கத்தில் நிற்கின்றனர்.

இன்இசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணை மலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால் (திரு. திருப். 4)

இது மணிவாசகர் வாக்கு. அரங்கனின் நாளோலக்கம் காண உலகமே திரண்ட காட்சியை ஆழ்வார் பல பாடல்களிலாகத் தொடர்ந்து காட்சிப் படுத்துவார். வந்தவர் தேவர், அரசர், முனிவர், இரவிகள், வசுக்கள், இந்திரன், முருகன், விச்சாதரர், இயக்கர், கின்னரர்.... என இப்பட்டியல் நீளும். இத்தகு பெருங்கூட்டம் காரணமாகக் கடல்போல் உள்ளது எனவும்; பெருவெள்ளமாக அமைகின்றது எனவும், அந்தரம் பார் இடம் இல்லை எனவும் காட்சி அமைகின்றது. மங்கலப் பொருட்கள், இசை முழக்கம் என்பனவும் காட்டடப்படுகின்றன.

வம்பு அவிழ் வானவர் வாயுறை வழங்க
 மாநிதி கபிலை ஒண் கண்ணாடி முதலா
எம்பெருமான் படிமக் கலம் காண்டற்கு
 ஏற்பன ஆயின கொண்டு நன்முனிவர்
தும்புரு நாரதர் புகுந்தனர்...

ஏதம் இல் தண்ணுமை எக்கம் மத்தளி
 யாழ் குழல் முழவமோடு இசை திசை கெழுமி
கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள்
 கெந்தருவர் அவர் கங்குலுள் எல்லாம்
மாதவர் வானவர் சாரணர் இயக்கர்
 சித்தரும் மயங்கினர் திருவடி தொழுவான்

(தொண். திரு. 8,9)

யார் யார் வந்துள்ளனர் என்ற பொருட்கூறு, சிறுபட்டியலாகவோ பெரும்பட்டியலாகவோ அமைதல் என்ற இப் பொதுமைக்குச் சற்று வேறுபட்டு, யார் யார் வரவில்லை என - வழக்கத்திற்கு மாறாகக் கூறுதல் சிவப்பிரகாசரிடம் மட்டும் அமைகின்றது. அங்கதம் போன்றும், எள்ளல் எனும் நகைச்சவை கெழுமவும் அமையும் இந்நான்காவது பாடல், புதுமை நோக்குடையது எனலாம். சிவன்பான் சிலர் காட்டிய செயல்கள் இவருக்கு விருப்பில்லாமலாயிற்று என்பது காரணமாகலாம்.

வராதோர் பட்டியலில் முதலாவதமைபவர் சுந்தரர். இவர் சிவபிரானைத் தன் மனைவிபால் தூதாக அனுப்பியவர். இரண்டாவதமை பவர் சாக்கிய நாயனார். இவர் கற்களை எறிந்து சிவனை வழிபட்டவர். அடுத்தது அருச்சனன். இவன் சிவனிடம் பாசுபத அஸ்திரம் பெறத் தவம் செய்தவன். தொடர்வது இயற்பகையார். இவர் தம் மனைவியையே மகேசனுக்களித்ததாகப் பெரியபுராணம் புகழ்ந்துரைக்கும் நாயன்மார்களில் ஒருவர். அடுத்தது, திருவிளையாடல்களுள் ஒன்றான பிட்டுக்கு மண் சுமந்த கதையில் வந்து பிரம்பாலடித்த பாண்டிய மன்னன். எனவே இப்போது, சுவாமிகள், சிவன்போல் தூது செல்லவோ, கல்லாலெறி

யுண்ணவோ, அஸ்திரம் வழங்கவோ, பிரம்பால் அடி பெறவோ எழ வேண்டியதில்லை. இவற்றிற்கு மாறாக, வழிபட வந்துள்ள அடியவர்கள் எதிர்கொள, எழ வேண்டுமென்பதே கவிஞரின் அவாஉரை. இவ் அடியவரும் எக்கோரிக்கையும் முன்வைக்க வரவில்லை; துன்புறுத்தவோ, இக்கட்டான சூழல் தரவோ வரவில்லை; மலர்கள் தூவிப் போற்றி வழிபடுவதற்கே வருகின்றனராம்.

தூதுவிடு நம்பி வருகிலன்; சிலையால் எறிந்த
தொண்டன் இலை; விசயனும் வில்லோடு வந்தானில்லை;
ஏதம் அறும் இயற்பகையார் - கிளைஞர்கள் வந்து அடைந்தார்
இல்லை; நினை'மண் சுமக்க' என்று ஒரு பிரம்பால் அடித்தோன்
போதிலன்; நின் திருஅடியில் போதுகள் தூய்ப் பரவிப்
போற்றலுறும் அடியவரே பொருந்தினர் எம்மருங்கும்.
சீதமதி துறந்த முடி மருவு சிவஞான
தேசிகனே அருள் மலையே பள்ளி எழுந்தருளே (4)

இதில் இரண்டு கூறுகளை எடுத்துச் சுட்டலாம். ஒன்று, நாயன்மார்கள், புராண நிகழ்ச்சிகள் ஆகியவற்றை அங்கங்குத் தம் கவிதையில் எடுத்து ஆளல் இவர் இயல்பு. மற்றொன்று, ஆழ்வார் - மணிவாசகரின் திருப்பள்ளி எழுச்சிகளும், ''அடியவர் இறைவனைக் காணப் பள்ளி எழல் சூழலில் வந்து நிற்கின்றனர்'' என்று கூறுவது.

சிவனின் அடியவர்பால் கவிஞர்க்குள்ள ஈடுபாடு பரவலாக இடம் பெறுகின்றது (பார்க்க : சிவப்பிரகாசர், ச.வே. சுப்பிரமணியன், தமிழ் இலக்கியக் கொள்கை, தொகுதி - 4, ப. 245-247). நால்வர் நான்மணி மாலையில், அடியவர் பெயர்க்குறிப்பின்றி, ஆனால் செயல் கூறிப் பட்டியலிடுவதில் 14 அடியவர் சுட்டப்படுகின்றனர். நெஞ்சுவிடு தூதிலும் சுந்தரர் முதல் கோட்புலியார் வரை (கண்ணிகள் - 142 - 164) 22 அடியவர் செயல்கள் எடுத்து மொழியப்படுகின்றன. பிறவிடத்தும் இவ்வாறே. இது தனி ஆய்வுக்குரியது.

பள்ளியெழும் தலைமகனைக் காண அடியவர் காத்து நிற்றல் என்பது பக்தர் அனைவரையும் உட்படுத்துகின்றது எனலாம்.

பப்புஅற வீடு இருந்து உணரும் நின்அடியார்
பந்தனை வந்து அறுத்தார் அவர்பலரும்
மைப்புஉறு கண்ணியர் மானுடத்து இயல்பின்
வணங்குகின்றார் (திரு. திருப். 6)

என்பது திருவாசகம்.

தொடைஒத்த துளவமும் கூடையும் பொலிந்து
தோன்றிய தோள் தொண் டரடிப்பொடி என்னும்

அடியனை அளியன் என்று அருளி உன் அடியார்க்கு
ஆட்படுத்தாய்... (தொண். திரு. 10)

என்பது ஆழ்வார் வாக்கு. இவ் இரு முன்னோடிகளும், போற்றுதல், தொழுதல், அருள்வேண்டல், திருவடி காட்ட வேண்டல். ஆண்டுகொள வேண்டல், பிறப்பு அறுக்க வேண்டல், பணிவிடை செய்யும் நெறிப்படுத்த வேண்டல், இறையியல்பு உரைத்தல், தன் இறையனுபவம் கூறல் (திருவாசகம்); இறையருளிச் செயல்கள், அவதாரச் செய்தி, திருமேனி விளக்கம், திருவடி தொழ வந்தமை, இறையுறை திருக்கோயில் ஆகிய பொருட்கூறுகளைப் பெய்தல் (ஆழ்வார்) என அமைவது. சிவப்பிரகாசரிடம் இன்மைக்குப் பாடல் சுருக்கம் காரணம் எனலாம்.

எண்சீர் ஆசிரிய விருத்தம் எனும் யாப்பு வடிவம் மூன்று நூல்களிலும் அமையும் பொதுமையாகும். பள்ளி எழுந்தருளே என சிவப்பிரகாசரிடமையும் ஈறொப்பு மற்றிருவரிடம் பள்ளி எழுந்தருளாயே என அமைகின்றன. இம்மூன்று நூல்களையும் தொடர்ந்து இன்னும் பல பள்ளியெழுச்சி நூல்கள் எழுந்தமை அறிய வருகின்றது (பார்க்க : தமிழ் இலக்கிய வகையும் வடிவும், ச.வே. சுப்பிரமணியன், தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1984, ப. 386-388). புதிய பொருண்மை களும், யாப்பு வேறுபாடும்கூட அவற்றில் வெளிப்படுகின்றன.

மரபு வடிவ வகையான திருப்பள்ளியெழுச்சி எனும் பிரபந்த வகையில் சிவப்பிரகாசர் தம் நூலையியற்றிய போதும், பாடல் எண்ணிக்கை, பொருண்மை உள்ளீடு, கூறுமுறை ஆகியவற்றில் தன் தனித்தன்மையைக் காட்டுவது சிறப்பாகச் சுட்டத்தக்கது.

நூற்றொகை

சிவப்பிரகாச சுவாமிகள் பனுவல் திரட்டு, (விளக்கக் குறிப்பு) சு.அ. இராமசாமிப் புலவர், கழகம், சென்னை, 1972.

சிவப்பிரகாசரின் இலக்கிய நூல்கள் ஒரு திறனாய்வு, மா.சு. சாந்தா, வித்யா பதிப்பகம், சென்னை, 1983.

திருவாசகம், (விளக்கம்) சுவாமி சித்பவானந்த, ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை, 1970.

ஸ்ரீ நாலாயிர திவ்வியப் பிரபந்தம், (நயவுரை) ஜெகத்ரட்சகன், ஆழ்வார்கள் ஆய்வு மையம், சென்னை, 1993.

10. சிவப்பிரகாசரும், ஐந்தெழுத்தின் பெருமையும்

அனுராதா ஸ்ரீநிவாசன், சென்னை.

ஐந்தெழுத்து (பஞ்சாக்ஷரம்) பாப விமோசனம் செய்யும், பக்தியைப் பெருக்கும்; சிவத்தொடு சேர்க்கும்; சைவர்களால் இஷ்டகாம்யார்த்த சித்திகளை விரும்பியும், முக்தியை விரும்பியும் ஜெபிக்கப்படும் மகாமந்திரம். இம்மகா மந்திரத்தைத் தனித்தும், பிரணவத்துடனும், பீஜாக்ஷரங்களுடனும் ஜெபித்து மிக்க நன்மைகள் பெறலாம்.

''சிவாய நம என்று சிந்தித் திருப்பார்க்கு
அபாயம் ஒரு நாளும் இல்லை'' (ஔவையார்)

யஜுர் வேதத்தின் நடுவில் ஒளிரும் ஸ்ரீருத்திரத்தின் நடு நாயகமாய் பொதிந்து வைக்கப்பட்டுள்ள அருமந்திரம் இது. ஐந்தெழுத்தை ஓதுவாரிடத்து நெருங்கி வர இயமனும் அஞ்சுவான். கூற்றுதைத்த பெருமானின் ஆற்றல் மிகு மந்திரமல்லவா இது!

''சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவார்
சிவசிவ என்னச் சிவகதி தானே.'' (திருமந்திரம்)

நால்வர் ஏத்திடும் மகா மந்திரம்

''வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே'' (திருஞானசம்பந்தர்)

தோணிபுரத் தோன்றல் ஆளுடைய பிள்ளையார் 'பஞ்சாக்கரப் பதிகம்' பாடி, 'வேதியர்க்கு அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே' எனப் பாடிய தன்மையை உய்த்துணர்வு பெறுவோமாக. மேலும் இவரே 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி' - எனத் துவங்கும் நமச்சிவாயத் திருப்பதிகம் பாடி அருளியுள்ளார்கள். பிள்ளையார் தம் திருமணம் காண வந்த அனைவருடன் உற்றார், சுற்றம் சூழ 'சிவ சாயுஜ்யம்' பெற்ற காலை பாடியருளிய திருப்பதிகம் அல்லவா அது!

ஆளுடைய அரசு

திருநாவுக்கரசர் கல்லொடு கட்டி, தன்னைப் பல்லவ மன்னன் கடலில் தள்ளியபோது 'சொற்றுணை வேதியன் சோதி வானவன்' -

எனத் துவங்கும் நமச்சிவாயத் திருப்பதிகம் பாடி கல்லிலே மிதந்த அற்புத நிகழ்ச்சியை அவனிக்குக் காட்டியுள்ளார்கள். ஐந்தெழுத்தின் ஆற்றலை இந்நிகழ்ச்சியால் உணர முடிகின்றது.

''மந்திரம் நமச்சிவாய வாக நீறணியப் பெற்றால்
வெந்தறும் வினையும் நோயும் வெவ்வழல் விறகிட்டன்றே''.

என்பது அப்பர் பெருமான் திருவாக்கு.

ஆளுடைய நம்பிகள்

திருப்பாண்டிக் கொடுமுடி எனும் திருத்தலத்தில் கொடுமுடி நாதரைப் பாடும் ஆரூரர் ''மற்றுப் பற்றெனக்கின்றி நின் திருப்பாதமே மனம் பாவித்தேன்'' எனத் துவங்கி ''உனை நான் மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே'' என்று ஈற்றடி வருமாறு நமச்சிவாயத் திருப்பதிகம் பாடிப் பரவியுள்ளார்கள்.

ஆளுடைய அடிகள்

வாதவூரடிகள் ''நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க'' எனத் தொடங்கி, சிவ புராணம் இசைத்துள்ளார்கள். 'முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்' என்று இதில் இவர் கூறும் தொடரால் இருவினை நீக்கி, சஞ்சிதமும் அழித்து, முத்திப் பேற்றினை அளிக்கும் ஆற்றல் கொண்டது ஐந்தெழுத்து என அறியமுடிகிறது.

ஐந்தெழுத்தின் வகைகள்

ஸ்தூல பஞ்சாக்ஷரம்	-	நமசிவாய
சூட்சும பஞ்சாக்ஷரம்	-	சிவாய நம
காரண பஞ்சாக்ஷரம்	-	சிவாய சிவ
மகா காரண பஞ்சாக்ஷரம்	-	சிவ
முக்தி பஞ்சாக்ஷரம்	-	சி

இவற்றின் நுட்பங்களைத் தக்கார்பால் கேட்டுணர்தல் வேண்டும்.

சோணசயில மாலை

சிவப்பிரகாச சுவாமிகள் சோணசயில மாலையில் கூறுகிறார்,

''தொடுக்கும் ஆகமங்கள் எலாம் சொல் ஐந்தெழுத்தும்
துணிந்த நெஞ்சு இருக்கையால்... மறலியை வெருவேன்''
(82)

அஞ்செழுத்தை நெஞ்சழுத்திக் கூறினால் மரண பயமில்லை. அதனால்தான் சுவாமிகள் ஆகமங்கள் சொல் ஐந்தெழுத்து என்

நெஞ்சகத்தே இருக்கின்றது. எமனைக் கண்டு எனக்கு என்ன பயம் என்கிறார்.

“உண்மை விளக்கம்” என்னும் சித்தாந்த சாத்திரத்தில் திருவதிகை மனவாசகம் கடந்தார் கூறுகிறார்.

‘‘அஞ்செழுத்தே ஆகமமும் அண்ணல் அருமறையும்
அஞ்செழுத்தே ஆதிபுராணம் அனைத்தும் அஞ்செழுத்தே
ஆனந்தத் தாண்டவமும் ஆறாறுக்(கு) அப்பாலாம்
மோனந்த மாமுத்தி யும்’’.

வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள் யாவும் அஞ்செழுத்தின் விரிவே. அஞ்செழுத்தின்றி வேறில்லை. ஆனந்த தாண்டவமும் அஞ்செழுத்தே, முப்பத்தாறு தத்துவங்களுக்கு அப்பால் மகாமௌன நிலையில் தோன்றும் முத்தியும் அஞ்செழுத்தே என்கிறார். சிவன் வேறு அவன் மந்திரம் வேறா? அதனால்தான் சிவசக்தியின் வடிவாக அனைத்தையும் அவரால் காண முடிகிறது. அனுபவ விளக்கமிது.

சிவப்பிரகாச சுவாமிகள் சோணசயில மாலையில் அருணகிரிவாழ் அண்ணாமலையாரிடம் வேண்டுகிறார்.

‘‘நாவில் ஐந்தெழுத்து மந்திரம் அலாத
நவிற்றுவோர் தமையும், நீ இருப்பப்
பாவினங்கொடு புன்மனிதரைப் புகழும்
பாமரர் தமையும் என்(று) ஒழிவேன்.’’ (86)

சித்தாந்த சிகாமணி

திருநீறு, அக்கமணிமாலை அணிந்து ஐந்தெழுத்து ஓதுவோன் உருத்திரனே என்பதில் ஐயமில்லை. இதனை ஆதி மாமறை அனைத்தும் உரைக்கும் எனப் பகர்கிறார்.

‘‘அக்க மாமணி நீறணி லிங்க தாரணன்தான் ....
நக்கன் ஆம் ஐந்தெழுத் தாகவே நவிலும்
தக்க வித்தையை முறையினில் ஜெபித்திடத் தகுமால்.’’

மெய்ப் பொருளாம் சிவ தத்துவம் உயர்ந்தது. அதனினும் மேலாம் தத்துவாந்தரம். வேதங்களின் முடியாய் ஒளிரும் ஐந்தெழுத்துக்கு ஈடானதோர் மந்திரமும் இல்லை.

நான்முகன் முதலாய விண்ணவர் குழுவில் தனித்தொளிரும் பரமனே போல ஏழு கோடி மந்திரங்களில் பெரியது ஐந்தெழுத்தாகிய புனித மந்திரம்.

அஞ்செழுத்தே அப்பரமனுக்குரிய திருநாமம். ஐந்தெழுத்தைத் தரிப்பவன் பரமனே. நாமமும் நாமியும் வேறன்று. 'நம' எனும் மொழியை முன்னர் ஓதுக, 'சிவாய' என்று பின் இசைக்க. இவ்வைந்தெழுத்தே சப்த கோடி மஹா மந்திரங்களின் அரசாகும். வேதாந்தத்தின் கருத்தும் இதுவேயாகும்.

''முன்னர் ஓதுக 'நம' வென விளம்புறு மொழியைப் பின்னர்
பின்னர் ஓதுக 'சிவாய' என்(று) இங்ஙனம் பிறங்கும்
அன்ன(து) அஞ்செழுத்தாகிய மந்திர அரசைப்
பன்னரும் செழு மறைகளின் முடியெலாம் பரிக்கும்.''

'சிவ' என்னும் ஈரெழுத்தொரு மொழி பவத்தினை நீக்கும்; பரப்பிரமம் தனைப் பயக்கும், 'சிவ' எனும் இரண்டெழுத்தும் ஒளி மயமானது, சச்சிதானந்த சொரூபமானது, இறைவனின் முதன்மைப் பெயருமாகும். இவ்வாறு உரைப்பன வேதநூற் கலைகள் யாவும்.

வீடுபேறு எனும் முக்தி மார்க்கத்தில் ஆர்வமுற்றவராய், தூய நெஞ்சினராய், அன்பு மீதூர ஆர்வம் பொங்க தனி இடத்திருந்து நாள்தோறும் இப்புனித மந்திரத்தை உச்சரித்து வருதல் வேண்டும்.

ஐந்து பூதங்களின் ஐயக்கம், ஐம்பொறிகளின் நுகர்ச்சி, படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் கரும காரணர்களின் தொழிற்பாடு ஆகிய அனைத்திற்கும் தாரகமாக விளங்கி, அறிவறிந்த ஞானியர்களால் உணரப்பட்டு, மற்றையோர்க்கும் உணர்த்துவதற்கு இடனாய்த் திகழ்வது ஐந்தெழுத்து மந்திரமேயாகும்.

''ஐந்து பூதம் ஐம்பொறிகளோ(டு) ஐம்புலன் அமர்ந்த
ஐந்தெனும் கருமம் ஏந்திய ஐவர்கா ரணராம்
ஐந்தெனும் தொழில் ஐம்பெரும் பிரமங்கள் அனைத்தும்
ஐந்தெழுத்தினால் உணர்த்துவர் அறிவறிந் தவரே.''

இந்த ஐந்தெழுத்து ஐந்து உருவுடையது. முதற்கண் பிரணவத்தைக் கொண்டு விளங்கும். ஆதலால் வேதங்கள், ஆகமங்கள் யாவும் இதனை ஆறெழுத்தென்றும் பகரும்.

நடராஜ தாண்டவம்

''சேர்க்கும் துடி - சிகரம் சிக்கன வா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம் - பார்க்கில் இறைக்(கு)
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்கும் மகரம் அது தான்.'' (உண்மை விளக்கம்)

ந - மறைப்பாற்றல்; ம - மலம்; சி - சிவம்; வா - அருள்; ய - உயிர்

'சிவன் அருள் ஆவி திரோதம் மலம் ஐந்தும்
அவன் எழுத்து அஞ்சின் அடைவான்' (உண்மை விளக்கம்)

திருவருட் பிரகாச வள்ளலாரும், நமச்சிவாயப் பதிகம் பாடி ஐந்தெழுத்தின் மாண்பை அவனிக்கு உணர்த்தியுள்ளார். 'சொல் அவாவிய' எனத் துவங்கும் பதிகத்தில்.

''பெற்ற தாய்தனை மக மறந்தாலும்....
நற்றவத்தவர் உள்ளிருந்தோங்கும் நமச்சிவாயத்தை நான்
மறவேனே!''

என்ற பாடல் அனைவரும் அறிந்த ஒன்றாம்.

''அஞ்செழுத்துமே அம்மையப்பர் தமைக் காட்டுதலால்
அஞ்செழுத்தை ஆறாகப் பெற்றறிந்தே - அஞ்செழுத்தை
ஓதப் புக்(கு) உள்ளமதியும் கெடின் உமைகோன்
கேதமற வந்தளிக்கும் கேள்''. (திருக்களிற்றுப்படியார்)

சித்தாந்த சிகாமணி காட்டும் மெய்ப்பொருள் இயல்பு

'மந்திர ராஜம்' எனும் ஐந்தெழுத்தின் முன் ஒளிரும் பிரணவம் பரசிவத்தைக் குறிக்கும். இந்த ஓரெழுத்தாம் பிரணவம் அனைத்துலகின் காரணமாய்த் திகழும் சச்சிதானந்த மெய்ப்பொருளாகவே விளங்கும்.

'சோஹம்' பாவனை (ஜீவான்மாவும் பரமான்மாவும் ஒன்றென பாவித்தல்) - 'நானே அது' என்ற அத்வைத வடிவமே தூய மந்திரம். இதிலிருந்தே 'ஓம்' எனும் பிரணவம் உதிக்குமென்று பெரியோர் இயம்புவர். ஓம் எனும் பிரணவம் நிஷ்கள சிவன்தனைக் குறிக்கும்; ஐம்பெரும் பிரமமாம் தனுவுடை இறையைக் கூட்டும், ஐந்தெழுத்தும் உபயமாம் ஒரு பொருள் கொடுக்கும்; பிறவிப் பிணி ஓட்டும் (நிஷ்களம் - அருவம்; தனு - உடல்; உபயம் - உரு, அரு).

வடதிசை, கீழ்த்திசை நோக்கி அமர்ந்து, நாள்தோறும் மும்முறை பிராணாயாமம் செய்து உமையொரு பாகரைப் பணிவுடன் நெஞ்சகத்து இருத்தி, ஒருமைப்பட்ட மனத்துடன் மந்திரம் ஜபிக்க வேண்டும். இத்தகு மந்திர சித்தியால் பிறவி நோய் கெடும். வறுத்த விதை போன்று மீண்டும் பிறவார்.

சிவனையே சிந்தித்தல் தியானமாகும். பிற சிந்தனை தியானமாகா. சிவாகமத்தின் நற்பொருள் தெரிதல் ஞானம். பவப்பிணி நீக்காத பிற நூல் பயன் ஆய்தல் ஞானமாகா.

''சிவமுறு படிவமாதி சிந்தனை தியான மாகும்;
அவமுறும் ஆன்ம சிந்தை ஆதிய தியான மாகா;

நவில்தரு சிவாகமத்தின் நற்பொருள் தெரிதல் ஞானம்;
பவமுறும் ஒழிந்த நூலின் பயன்உணர்வன்று ஞானம்.''

பவப்பிணி அகற்றிய சிவபக்தனை வழிபடுதல் புண்ணிய வழியில் சேர்க்கும், அவனை நிந்தனை செய்வார் நரகில் வீழ்வார். சிவத்தியானம் ஒருவனைப் புனிதனாக்கி, சிவமாய் ஆக்கும், பஞ்சமா பாதகமும் போக்கும் என்பதை,

''தாய்க்கு, வழுவின் மகளிர்க்கு, தந்தை தனக்குப், பசுவிற்குச்
சேய்க்கு, மறையோர் தமக்(கு) இடர்செய் கொடிய பாதகமும்
போக்கும் இமைப்பிற் கரணத்தைப் புனிதமாக்கிச் சிவமாக
ஆக்கும் அரன்தன் பிரசாதமாயின் அதற்கு நிகருண்டோ?''

என சிவப்பிரகாச சுவாமிகள் 'பிரபுலிங்க லீலை' எனும் காப்பியத்தில் அறிவுறுத்துகிறார்.

ஐந்தெழுத்தோதிடும் சிவத் தியான யோகி ஒருவன் உண்ட உணவு உலகிலுள்ள அனைத்துயிர்க்கும் பசி தீர்க்கும். இதனை பிரபுலிங்க லீலையில்,

''உலகில் ஒருவன் சிவயோகி உண்ட(து) அம்ம சராசரமாம்
அலகில் உயிர்கள் எலாம்உண்ட தாகும் என்ன மறை கூறும்.''

என அறிகிறோம். சிவத் தியானத்தால் ஒருவன் சிவனே யாவான்.

'தன்னைச் சிவம் என்(று) அறிந்தவனே அறிந்தான் தன்னை
உண்மையாத்
தன்னைச் சிவம் என்(று) அறியாதான் அறியான்'
(பிரபுலிங்க லீலை)

தன்னைச் சிவம் என்று உணர்ந்தால் பாசம் நீங்கிப் பதியே யாவான். அவ்வாறு உணராதான் மீண்டும் பிறப்பெடுப்பான். ஐந்தெழுத்தின் ஆற்றலைச் சிவஞானபோத விளக்கத்தில்,

''அஞ்செழுத்தால் உள்ளம் அரனுடைமை கண்டு அரனை
அஞ்செழுத்தால் அர்ச்சித்து இதயத்தில் - அஞ்செழுத்தால்
குண்டலியில் செய்து ஓமம் கோதண்டம் சானிக்கில்
அண்டனாம் சேடனாம் அங்கு'' (9)

இதற்குச் சிவஞான முனிவர் மாபாடியத்தில் கூறிய விளக்கம். ''ஆன்மா சிவனுக்கு அடிமையாதலை அஞ்செழுத்தை உச்சரிக்கும் முறைமையில் வைத்துக் கண்டு தன் உடம்பின் அகத்தே இதயம், நாபி, புருவநடு என்னும் மூன்றினையும் முறையே பூசைத்தானம், ஓமத் தானம், தியானத் தானமாகக் கருதிக் கொண்டு, புறம்பே ஞான பூசை

செய்யும் முறைப்படி இதய கமலத்தில் சிவனை அவ்வஞ்செழுத்தான் அமைந்த திருமேனியில் கொல்லாமை, ஐம்பொறி அடக்கல், பொறுமை, இரக்கம், அறிவு, மெய், தவம், அன்பு என்னும் அட்ட புட்பம் (எண் மலர்கள்) கொண்டு அவ்வஞ்செழுத்தால் பூசை செய்து, குண்டலித் தானமாகிய நாபியில் ஞான அனலை எழுப்பி, அதன்கண் அத்திருவைந்தெழுத்தானே விந்துத்தானத்து அமிழ்தமாகிய நெய்யைச் சுழுமுனை நாடி, இடை நாடி ஆகிய சுருக்குச் சுருவங்களால் ஓமம் செய்து, விந்துத் தானமாகிய புருவ நடுவில் சிகார யகார வகாரங்கள் முறையே தற்பதப் பொருளும், துவம்பதப் பொருளும், அசிபதப் பொருளும், அசிபதப் பொருளுமாம் முறைமையின் அவ்வஞ்செழுத்தால் 'சிவோகம்' பாவனை செய்யின் அப்பொழுதே அங்ஙனம் விளங்கித் தோன்றும் முதல்வனுக்குச் சேட சேடிய பாவத்தால் ஆகற்பாலதாகிய அடிமையாம் என்க.'' (கோதண்டம் : புருவ நடு)

சிவவாக்கியர் போன்ற சித்தர்களும், அறுபத்து மூன்று நாயன்மார் களும், தொகையடியார்களும், வேத, ஆகம, புராணங்களும், நாளும் ஏத்திப் புகழும் ஐந்தெழுத்தை எப்பொழுதும் சிந்தித்து உய்வு பெறுவோமாக!

''இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே. (திருநாவுக்கரசர்)

11. சோணசைல மாலையில் சிவமணமும் ஒளியும்

முத்து. ஆபத்சகாயம், கும்முடிப்பூண்டி.

கற்பனைக் களஞ்சியம், துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த வீர சைவப் பெரும்புலவர் பெருந்தகை ஆவார். இயற்கைக் கல்வி வல்லாரும், நாற்கவிவாணரும், தெய்வச் சுடர்க்கலை வல்லாருமாகிய அவரின் சமயப் பற்றும், மொழிப்பற்றும் இணையற்றவை. காவியப் புலவராகிய அவர் எளிய குழந்தைகளுக்கான 'நன்னெறி' வழங்கி சமூக உணர்வின் செழுமையைக் காட்டியுள்ளார். அந்தாதி, கலம்பகம், கோவை, உலா, மாலை, தூது, பிள்ளைத்தமிழ் எனப் பிரபந்த வகைகளில் சொல் மணமும், பொருள் மணமும் அணிவகுக்க நற்றமிழ் நயம் பரப்பிய நல்லார் ஆவார். அவர்தம் சிந்தையில் விளைந்த 'செம்மணி' சோணசைல மாலையின்வண்ணம் பற்றி இங்குக் காணலாம்.

அருணையின் பெருமை

சோண சயிலம் என்னும் சொல்லுக்கு அருணகிரி, செம்மலை, செவ்வண்ணமலை என்பது பொருள். அறிவின் வடிவான நான்முகனும், ஆற்றலின் வெளிப்பாடான திருமாலும் தாமே பெரியவர் என்று தருக்கி நிற்க, அவர்கள் எதிரே தோன்றிய சோதிப் பிழம்பின் அடிமுடி காண அன்னமும், ஏனமுமாய் வடிவெடுத்துத் தோல்வியுற்ற வரலாறு அனைவரும் அறிந்ததே. நான்முகன், மாலவன் பொருட்டு ஆதியில் இறைவன் அழற்பிழம்பாய்த் தோன்றிய மலைதான் திருவண்ணாமலை. சிவ ரஹஸ்யம், ஸ்காந்தம், சிவமாபுராணம், தேவார, திருவாசகங்களால் அண்ணாமலையின் மகத்துவத்தையும், திருவண்ணாமலையார், உண்ணா முலை அம்மையின் திருவருட் சிறப்பையும் உணர முடிகிறது.

திருவண்ணாமலை பஞ்ச பூதத் தலங்களுள் தேயுத்தலம் (அக்கினி); விராட் புருஷனின் மணிபூரகத் தலம் (வயிறு); கடல் மட்டத்திற்கு மேல் 2668 அடி உயரங் கொண்டது. நினைக்க முக்தி தரும் அற்புத திருத்தலம்; அருணகிரி நாதர் வழிபட்ட தலமும் ஆகும். மாணிக்கவாசகர் திருவெம்பாவை பாடிய திருப்பதி. அன்னை பார்வதி அருந்தவம் புரிந்து ஈசனின் இடப்பாகம் பெற்ற திருப்பதி என்பாரும் உண்டு. எட்டு கல் சுற்றளவு கொண்டது திருவண்ணாமலை.

இத்தெய்வத் திருத்தலத்தில் அர்க்க மலை, தேவமலை, தண்ட மலை, திருசூல மலை என மலைகள் நான்கும், பெண்ணையாறு, சேயாறு, கபிலையாறு, திருநதி என ஆறுகள் நான்கும் அணி செய்கின்றன. இங்கு உள்ள புனித தீர்த்தங்கள் 360 ஆகும். பிறவிப் பிணி போக்குதலால் மலையின் பெயர் 'மா மருந்து' என்று போற்றிப் புகழப்படுகிறது. அன்றும், இன்றும், என்றும் இங்கே 'கிரிப்பிரதக்ஷிணம்' (மலை வலம் வருதல்) சிறப்புக்குரியது. இங்கே கார்த்திகை தீபம் விழாக் காணக் கண்கோடி வேண்டும். இன்றும் நிறைமதி நன்னாளில் கிரிவலம் வரும் மக்கட்கூட்டம் மெய்சிலிர்க்க வைக்கிறது. சேஷாத்திரி சுவாமிகள்; இரமண மாமுனிவர் போல் அன்று முதல் இன்றுவரை எத்தனையோ மகான்கள், மாமுனிவர், சித்தர் கணத்தவர் வாழையடி வாழை என வாழ்ந்து வருகின்றனர். இவர்களைத் தேடி உலகின் பல பாகங்களில் இருந்தும் ஆன்மிக நாட்டங்கொண்டோர் வந்தபடியுள்ளனர்.

இத்தலத்திற்குரிய ஆளுடைய பிள்ளையின் திருப்பதிகங்கள் இரண்டும், ஆளுடைய அரசின் திருப்பதிகங்கள் மூன்றும் கிடைத்துள்ளன. ஆளுடைய நம்பியின் திருப்பாடல்களில் வைப்புத் தலமாக இத்தலம் இடம்பெற்றுள்ளது.

'உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்'
- திருஞானசம்பந்தர்

'ஆதியே அமரர் கோவே அணியணா மலையுளானே'
- திருநாவுக்கரசர்

'விடங்களூர், திருவெண்ணி, அண்ணாமலை' - சுந்தரர்

சிவபெருமானின் அறுபத்து நான்கு மூர்த்தங்களுள் லிங்கோற்பவராக விளங்குபவர் அருணாசலர். இந்திரன் முதலாய தேவர்களும், மாமுனிவர் களும், கார்த்திகை விண்மீனும், குதிரையும் பூஜித்து அருள் பெற்ற புண்ணிய பூமி இது. இங்கு தல விருக்ஷம் சிறப்புமிகு வில்வ மரமாகும். அந்தணர் ஐயாயிரவர் அருச்சித்த புனிதபூமி இது.

சோணசைல மாலை

திருவருட்செல்வரும், கற்பனைக் களஞ்சியமுமாகும் சிவப்பிரகாச சுவாமிகள் ஒருமுறை மலைவலம் வருவதற்குள் பாடி முடித்த சிறப்புக் குரியது சோணசைல மாலை. நூறு பாடல்களைக் கொண்ட இந்நூலை யானை திறை கொண்ட (தலத்து) விநாயகரைத் துதித்து சுவாமிகள் தொடங்கியுள்ளார். ஒவ்வொரு பாடலிலும் முதல் இரண்டு அடிகளில் வேண்டுதலும், பின்னிரு அடிகளில் கற்பனை வளமும் கொஞ்சிக் குலவுகிறது.

'யாவுமாம் உமை உண்ணாமுலை முலைப்பால்
ஈந்து பாடச் செயாய் எனினும்
மேவுமா துயர்செய் சூலைநோய் எனினும்
விடுத்து நிற்பாடுமொறு அருளாய்'' (32)

அம்பிகையின் ஞானப்பால் ஈந்து (திருஞானசம்பந்தரை) பாடச் செய்தது போல் செயாய் எனினும், (நாவுக்கரசருக்குத் தந்து ஆட்கொண்ட) சூலை நோயேனும் தந்து உன்னைப் பாடுமாறு அருளாய் என்று அகங்குழைந்து வேண்டுகிறார். இப்பாடலில் அவருடைய தெய்வத் தமிழ் பாடும் ஆர்வம் புலப்படுவதோடு, அடியார்கள் இருவரையும் இறைவன் ஆட்கொண்ட வரலாறும் அறியமுடிகிறது.

மேலும் அம்பிகையார் ஊட்ட ஞானப்பால் அருந்தும் பேற்றைப் பெறும் பக்குவம் இல்லேன் ஆயினும், அப்பாற்கிண்ணம் கழுவு நீரேனும் வார்க்கப் பணித்தருள்வீர் என்கிறார் அவர் (45). சிவபெருமான் ஆளுடைய பிள்ளையாரின் திருமணப் பந்தரில் அளித்த முத்தி விருந்தினையும் (26) ஞானக் குழந்தைக்கு முத்துப் பந்தர் அளித்த வரலாற்றையும் (28) திருஞானசம்பந்தரின் திருத்தல யாத்திரையையும் (58) சிவப்பிரகாசர் குறிப்பிடும் நயம் உணரத்தக்கது.

'மூவரும் புனை அரும் பா' மட்டுமோ 'என் கவியும் நின்தனக்கு ஆம்' என்று நெஞ்சை நிமிர்த்துகிறார் சிவப்பிரகாசர். (1) 'மூவர்தம் பாடலுள் அடங்குவன் இறைவன்' (67) 'தெய்வத் தமிழ் மறை ஓதிட, அவர்தம் உள்ளத்தில் இறைவன் குடிகொள்வான் என்னும் சுவாமிகளது கருத்து' தொண்டர்தம் பெருமை சொல்லவும் அரிதே' என்னும் ஔவையாரின் ஞானத்தை வழிமொழிகிறது.

'பாரெலாம் இகழும் இகழ்ச்சியும் புகழாய்க் கொள்வான்' என்று ஆரூரரை நினைவில் கொணர்ந்து (16) பரவை நாச்சியார் திருமனைக்கு இறைவனே தூது சென்ற வரலாற்றைச் சுட்டி (22) 'அருங்கலம் புனையும் மகளிர் இருவரை (சங்கிலியார், பரவையார்) ஆரூரர்க்கு மணம் முடித்த மாண்பை நினைவு கூர்வதோடு (41) ஆரூரர் மறுக்கவும் முடிமிசை இருத்திய திருக்கழல் சிறப்பைப் பேசுகிறார் (47) சிவப்பிரகாசர். 'பண்ணுறும் தொடர்பில் 'பித்த' என்கினும் நீ பயன் தரல் அறிந்து நிற்புகழேன்' என்கிறார் (27) ஆரூரருக்கு யானையும், குதிரையும் அருளிய திறத்தைப் பேசுகிறார் (41).

'அருங்கவி வாதவூரன் அன்பிலேன் என்று கூறி அதுவேண்டி இரங்குதல் பொய்ம்மை; யான் அவ்வாறு உரைப்பதே உண்மை' எனத் திருவாசகச் செய்யுள் ஒன்றைச் சுட்டிச் செல்கிறார் (6) நாயன்மார்கள் சாக்கிய நாயனார் எறிந்த கல்லையும் மலராய்க் கொண்ட மாண்பைக்

குறிப்பிடுகிறார் (50) சண்டீசர் உளம் மகிழ்ந்து புனைந்து கொள மலரளிக்கும் மாண்பைப் பேசுகிறார் (20). சிலம்பிக்கு அருள் புரிந்த சிறப்பினை வியந்து ஓதுகிறார் (69).

அம்பிகை

அம்பிகையின் திருப்பெயர்களைச் சிவப்பிரகாசர் அழகுற அடுக்கிச் செல்லும் அரிய பாடல் நம் கருத்தைக் கவர்வது. அன்னையின் திருவருள் இன்றேல் இறைவனை நெருங்க இயலுமா?

''அந்தரி குமரி அஞ்சலி கௌரி அம்பிகை மனோன்மணி மதங்கி
சுந்தரி உமை உண்ணாமுலை யெனநின் துணைவியை
வாழ்த்துமாறு அருளாய்'' (72)

இளங்கோ ஈந்த சிலம்பில் வேட்டுவ வரியில் கொற்றவை நாமங்களை அவர் அடுக்கும் பாங்கில் சுவாமிகள் கூறி அம்பிகையின் திருவருளை வேண்டுகிறார்.

திருமாலின் அவதாரங்கள்

சுவாமிகள் வீரசைவராக விளங்கினும் திருமாலின் திரு அவதாரச் சிறப்பினையும் இந்நூலில் சுட்டிச்செல்வது சிறப்பிற்குரியது. இலங்கையின் கொடுங்கோல் ஒழிய இராவணனை வதைத்த ஸ்ரீ இராமன் அன்பொரு வணங்கிய திருத்தலம் அண்ணாமலை (36) நெடியவன் நெஞ்சு அகன்றிடாதவன் (திருமாலின் இதய கமலத்தில் உறைபவன்) சிவபெருமான் என்று சுவாமிகள் இயம்புகிறார், (90) 'அன்று பசுக்கள் காக்கக் குன்றம் எடுத்த குன்றம்' (கண்ணன்) என்ற தொடரால் கண்ணன் திருமாலின் அவதாரம் என்பதையும், கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்து ஆநிரை காத்த வரலாற்றையும், திருமாலே முப்புரம் எரிக்கச் செல்லும் சிவபெருமானின் கணையயானான் என்பதையும் அழகுற இரத்தினச் சுருக்கமாக சுவாமிகள் சொல்லும் பாங்கு நம் உள்ளத்தை ஈர்க்கிறது. (பாடல் - 86) சரப வடிவாய் தரசிங்கனின் வலிமை அடக்கிய வரலாற்றையும் சுவாமிகள் சுட்டிச் செல்கிறார். (96)

நினைக்க முத்தி தரும் பதி

''தில்லையைக் காண, காசியில் இறக்க, சிறக்கும்
ஆரூர்தனில் பிறக்க,
எல்லையில் பெருமை அருணையை நினைக்க எய்தலாம் முக்தி''
(அருணாசல புராணம்)

ஆரூர் பிறக்க முக்தி, அதுவோ அரிது. காசியில் இறக்க முக்தி, விதியிருப்பின் கைகூடும். சிதம்பரம் தரிசிக்க முக்தி வாய்ப்பு இருக்கிறது. ஆனால் திருவண்ணாமலைத் திருத்தலமோ நினைக்கவே முக்தி தரும்

அருமைத் திருத்தலம். மனமுள்ள யாவருக்கும் கையில் கிடைக்கும் அமுதமல்லவா! அதனால் சுவாமிகள், 'ஆரூரும், காசியும், சிற்றம்பலமும் நின்னகரை ஒக்குமோ' எனப் பாடுகிறார்.

கார்த்திகை தீபம்

திருவண்ணாமலைக்குப் பெருமை சேர்ப்பது 'கார்த்திகை தீபம்' அல்லவா? அதனைப் பலவாறு பல்வேறிடங்களில் சுவாமிகளில் குறிப்பிடு கிறார். 'உலகிலுள்ள தீபம் தான் புகுந்த விடத்து புறத்திருள் ஒழிக்கும்; கார்த்திகைத் தீபமும், சோண சைலமும் அகத்திருள் நீக்கும் ஆற்றல் கொண்டவை (8) அகல், திரி, நெய், தீ ஆக்குவோர் இன்றியே ஒளிரும் அண்ணாமலை (54) ஏற்றிடும் விளக்கின் வேறுபட்டு, தன்பெயர் ஒருகால் சாற்றினும், அகத்தின் இருள் எலாம் ஒழிக்கும் விளக்கெனும் சோண சைலம் (56)

'கார்த்திகை விளக்கு அருகு மதிஉற தடமுடி இலங்க வளர்த்தெழும் சோணசயிலனே' (6) 'உலக விளக்கு அண்ணாமலை' (உலகனைத்திற்கும் மலஇருள் கடிந்து ஞான ஒளி தரும் தீபம்) (24) 'தழல் உறு உண்மை விளக்குறும் சோண சைலம்' (அக்னி ஸ்வரூபம் அண்ணாமலை) (60) 'வான் ஆர் அழல் தம்பமாய் எழுந்து நின்றிடும் சோண சைலம்' (நெருப்புத் தூண்) (96) 'செந்தாமரை மலர்போல் (கார்த்திகை) விளக்கெரியும் முடி' (85) இவ்வாறெல்லாம் கார்த்திகை தீபம் சுவாமிகளால் பாடப்பட்டுள்ளது.

சுவாமிகள் அண்ணாமலையாரிடம் வேண்டுதல்

'உடல், மனம், புலன்களின் உணர்ச்சிகளிலிருந்து பிரித்து அஞ் ஞானத்தை அகற்றி அகக்கண்ணால் உமைக்கான அருளாய்' (17)

'அன்பர் பணி செய்யும் ஆவலும், பூசை புரி நற்பணியும்
எனக்கு அருள்வாய்' (29).

'விருப்பொடு, வெறுப்பும் அகன்று, பேரின்ப வெள்ளத்துள் அழுந்தும் நின் அடியார் திருப்பதம் இறைஞ்சி, அவர்க்கு வேளாண்மைசெய் பெருஞ் செல்வமே அருளாய்'

'மதுரம் பெருகுறு தமிழ்ச்சொல் மலர் நினக்கணியும் பிறவியே
வேண்டுவன்' (39)

ஐம்புலச் சுருக்கமும், மூதறிவு விரிவும், நல்லினச் சேர்க்கையும் கீழோர் தொடர்பறுத்தலும் வேண்டுகிறேன் (70).

கருத்திடை நினது கருணை மாமேனி கண்டெழுத்து, ஐந்து (எழுத்து மந்திரம்) நா இயம்பச் சிரத்தினில் அமைத்த கரத்தொடு, நினை யான் தினம் வலம்புரியுமாறு அருளாய் (15)

'உடலினை உயிர் துறக்கும் சமயம் நும்மைத் தியானிக்க அருள்வீர்'

முற்றும் ஞான சொரூபமாகவே தோற்றும்படி ஓர் உண்மை வாக்கியத்தை உபதேசித்து அருள்புரிவீர்!

'வேணவா அகன்று .... ஞான நாட்டம் பெற அருள்வாய்!

'நின்னையே நோக்கும் விழிகளும், நின்னையே நினைக்கும் நெஞ்சமும், நின்னையே துதிக்கும் நாவும் என்று அருளி நின் திருவடியில் வைத்தருளுவாய்!

மன்மதனை எரித்தாயே! முப்புரத்தை எரித்தாயே! என் ஆணவ மலத்தை எரியாயோ? அடியேனது ஆணவ மலம் தேவரீர் உண்ட விடத்தினும் இருள்மிக்கது. ஆதலின் இதனையும் கண்டத்தில் இருத்தி அருள்யுரியீர்! சடிலக் கற்றையும், அருள் கூர் விழிகளும், திருமுகத்தழுகும், திண்தோள் நான்கும், ஈரடியும் கண்டுகளிக்கும் நாள் எந்நாளோ? ஈரமும், அருளும், ஒழுக்கமும், சால்பும், இன்சொலும் இந்திரியப் பகைவெல் வீரமும் அருளி என்றன் வெம்பிறவி விலக்கி ஆட்கொள்ளும் நாள் உளதோ? மாதர்மேல் வைத்ததோர் அன்பு நின் திருவடித் தாமரையில் வருமோ? அன்னார் உடலுறு நறுமன் கலவையின் விருப்பு வெண் திருநீற்றிலும் வருமோ?

என் சாதாரண மனித நிலையில் தன்மை வைத்து வேண்டுகோள் விடுத்து வழிகாட்டுதலும் உணர்ந்து நெகிழத்தக்கது. இவ்வாறு சிவப்பிரகாச சுவாமிகள் உண்ணாமுலையொடு கூடிய அண்ணாமலை நாதரிடம் அன்பு மீக்கூர ஆதரம் பொங்க வேண்டும் இடங்கள் பல பல.

1. நீரினால், அழலால், கொடும் பிணியால் நிருதரால், அலகையால், விலங்கால், திருடரால் வருந்துவோரலர் நின் தூய திருநாமம் புகல்பவர்.
2. உனது உண்மை நிலையை உணரப் பெறாதவர்கள் கடுந்தவம் புரிந்தும் என்ன பயன்? அவர் நம் பிறவிப் பிணி அகலுமோ?
3. நற்குடிப் பிறந்தும், அளவிலா நூல் பல ஆய்ந்தும் கணத்தினால் உயர்ந்தும், விரதங்களில் வேட்கை மிகுந்தும் என்பயன்? நின் தொண்டர்களிடத்து அன்பிலாதார் நற்கதி அடையார்.
4. அன்னையொடு நின்னை அருச்சித்து அருள் பெற்றார்க்கன்றி கூற்றினைக் கடத்தலும் எளிதோ?
5. பிறவிப் பிணிக்கு அருமருந்தே! தியானிப்பவர் தம் பிறவியறச் செய்பவனே! என் உள்ளம் உருகவில்லை. கரங்கள் மலரும் நீரும் கொண்டு உன்னை அருச்சித்தில. என் செய்வேன்?

6. கற்பவை கற்றிலேன்! விடய ஞானம் உடையேன்! அறிஞரைக் காணின் நாணிவேன்! விலங்கினும் கடையேன்! உய்யும் நான் உளதோ?

அடி, முடி தேடிய வரலாறு

அழகுடன் திகழும் தேவரீர் திருவடியை முன்னர்த் தேடிய அத்திருமாலாகிய கேழல் பூமியைக் கிண்டுதல் இன்றும் பன்றிகள் தம் கொம்புகளால் உழுதலைப் பெற்றுள்ள சோண சைலம் (14) முன்னர் முடியையும் அடியையும் தேடிய அன்னமும் பன்றியும் தங்களுக்குள் அம்முறை மாறி திருவடியையும் திருமுடியையும் தேடிச் செல்வதை ஒத்திருக்கப் பெறும் சோண சைலம். பணிந்திடும் அயன்மால் பெருமைகள் அனைத்தும் பறவைகொண்டு எழுதலாய் முடிந்து தணிந்திட.

கிரி வலம் வருதல்

இன்று ஒவ்வொரு முழுநிலா நாளிலும் அலை கடல் என மாந்தர் திரண்டு மலைவலம் வரும் காட்சியைக் காண்கிறோம். இதனை அன்றே

"வலம்புரி மனிதர் கடலென ஒலித்து வளைவுற நடுவண் மந்தரம்போல்
தலம்புரி தவத்தின் நின்றொளிர் சோண சைலனே! கைலை நாயகனே!" (13)

'பிரதக்ஷிணம் செய்யும் அடியவர்கள் அரஹர என்று துதித்தவாறு கடல் போல் வளைத்திருக்க, நடுவில் மந்தர மலைபோல் உலகவர் செய்த தவத்தால் ஓங்கி எழுந்த சோண சைலரே' என்று சுவாமிகள் பாடுங்கால் திருவருணையில் கிரி வலம் வரும் மக்கட் பெருக்கை ஒருவாறு உய்த்துணர முடிகிறது.

கற்பனைக் களஞ்சியம்

'மலையளவு தெய்வத்திற்கு மலையளவு புஷ்பம் சாத்துவதுண்டோ?' - என்பது பழமொழி. இப்பழமொழியைப் பொய்ப்பித்து விட்டனராம் திருவண்ணாமலையில் குவியும் மக்கள். மலை மலையாக மலர்களை குவித்துச் சாற்றுகின்றனர் என்ற தொடரால் திருவண்ணாமலை திருத்தலத்தை நாடி வரும் மக்கட் பெருக்கை நயமாகக் காட்டியுள்ளார். (30)

இருமலைகள், ஒன்று மந்தரமலை. மற்றொன்று இமயமலை. ஒருமலை விடத்தைத் தந்தது; ஒருமலை அமுதத்தை அளித்தது. சிவபெருமான் மந்தரமலை வழங்கிய நஞ்சை கழுத்தில் இருத்தினார்; நீலகண்டரானார். இமயமலை வழங்கிய அமுதை (உமையை) இடத்தினில் இருத்தினார்.

"மந்தர சைலம் தருவிடம் களத்து வைத்து இடத்தினில் இமசைலம்
தந்திடு அமுதை வைத்திடும் சோண சைலனே! கைலை
நாயகனே' (78)

பொன்னிறங் கொண்ட புறாவும், கருநிறங்கொண்ட காக்கையும் இமையமால் வரைதனைச் சாரில் ஒரே நிறத்தினைப் பெறும் என்றொரு பாடல் உண்டு. சுவாமிகள் கருநிறக் காக்கையைத் தன்வண்ணம் ஆக்கும் ஆற்றல் அம்மலைக்கிருக்கலாம். ஆனால் தன்பால் அடைபொருள் அனைத்தும் தன்வண்ணம் புரியும் மலை அண்ணாமலையே என்கிறார். அதாவது அண்ணாமலையை அடைந்த பொருள்கள் யாவும் முக்தி யெனும் கரைசேரும் என்பதே இதன் கருத்து.

"பொன்வணம் புரியும் காகம் ஒன்றினைப் பொற் பொருப்பென
அடைபொருள் அணைத்தும்
தன்வணம் புரியும் பொருப்பெறும் சோண சைலனே! கைலை
நாயகனே! (94)

சோண சைல மாலை ஒருமனம் கொண்ட திருநிலைச் செல்வராகிய துறைமங்கலம் சிவப்பிரகாசரின் சிவ பக்திச் சிறப்பையும், அவரின் இலக்கிய நயங்களை அள்ளி வழங்கும் கனிந்த இதயத்தையும் காட்டும் வரலாற்றுப் பேழையாக விளங்குவது கண்கூடு.

12. வள்ளுவரின் சிவிகையும் சிவப்பிரகாசரின் சிந்தனையும்

க. இந்திரசித்து, உடுமலைப்பேட்டை.

கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் தோன்றிய சிவப்பிரகாசர் தம்முடைய நூல்களில் பிற தமிழ் இலக்கியங்களில் உள்ள கருத்துக்களை எடுத்தாண் டுள்ளார். சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றான 'மாலை' என்னும் இலக்கிய வகையில் அமைந்த நால்வர்நான்மணி மாலையில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரின் பெருமைகளைச் சிவப்பிரகாசர் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். இந்நூலில் மொத்தம் நாற்பது பாடல்கள் அமைந்துள்ளன. 1, 5, 9, 13, 17, 21, 25, 29, 33, 37 ஆகிய பாடல்கள் திருஞானசம்பந்தரைப் பற்றியும் 2, 6, 10, 14, 18, 22, 26, 30, 34, 38 ஆகிய பாடல்கள் திருநாவுக்கரசரைப் பற்றியும் 3, 7, 11, 15, 19, 23, 27, 31, 35, 39 ஆகிய பாடல்கள் சுந்தரரைப் பற்றியும், 4, 8, 12, 16, 20, 24, 28, 32, 36, 40 ஆகிய பாடல்கள் மாணிக்கவாசகரைப் பற்றியும் குறிப்பிடுகின்றன. திருஞானசம்பந்தரைப் பற்றிக் கூறும் 33-ஆம் பாடலில் திருவள்ளுவர் கருத்தை சிவப்பிரகாசர் எவ்வாறு எடுத்தாண்டுள்ளார் என்பதையும் வள்ளுவர் கருத்துக்கு மாற்றுச் சிந்தனையை (Alternative thought) சிவப்பிரகாசர் சுட்டிக்காட்டி யுள்ள தன்மையையும் இக்கட்டுரை ஆராய்கிறது.

வள்ளுவரும் சிவிகையும்

சிவிகை என்பதற்கு 'பல்லக்கு' என்பது பொருளாகும். இச்சொல்லுக்குப் பல்லக்கு, எருதுபூட்டிய வண்டி வகை என்னும் பொருள்களை தமிழ் அகராதி குறிப்பிடுகின்றது. பல்லக்கு என்னும் சொல்லுக்கு 'தூக்கிச் செல்வதற்கு ஏற்ற வகையில் நீண்டகழி இணைக்கப்பட்டு ஏறுவதற்குப் பக்கத்திறப்புடைய பயணம் செய்வதற்குரிய சாதனம்' என்னும் பொருளையும் அகராதி குறிப்பிடுகின்றது. 'குட்டிப் பெரியபுராணம்' என்று அழைக்கப்படும் நால்வர் நான்மணிமாலையில் திருஞானசம்பந்தரைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது,

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானொ டூர்ந்தா னிடை'யை - மறுத்தார்சம்
பந்தன் சிவிகை பரித்தார் திரிகுவர்மற்
றுந்துஞ் சிவிகையினை யூர்ந்து

என்னும் பாடலில் சிவப்பிரகாசர் திருக்குறளை முழுமையாக அப்படியே எடுத்தாண்டுள்ளார். 'அறத்தாறு' என்னும் இக்குறளுக்குப் பல்வேறு வகையான முரண்பட்ட உரைகள் எழுதப்பட்டுள்ளன. இவற்றுள் சில உரைகள் வள்ளுவரின் உள்ளக் கிடக்கைக்கு மாறாக அமைந்துள்ளன. பரிமேலழகர் இக்குறளுக்கு,

> ''அறத்துஆறு இதுஎன வேண்டா - அறத்தின் பயன்இது என்றுயாம் ஆகம அளவையான் உணர்தல் வேண்டா. சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை - சிவிகையைக் காவு வானோடு செலுத்து வானிடைக் காட்சியளவை தன்னானே உணரப்படும்.''[1]

என்னும் உரை விளக்கத்தை எழுதியுள்ளார். நாமக்கல் கவிஞர் 'பல்லக்கில் சுமக்கிற மனிதனை, பல்லக்கிலிருந்து சவாரி செய்கின்ற மனிதனையும் கவனித்து ஆலோசித்தால் அறம் செய்யாவிட்டால் என்ன துன்பம் என்பதையும், அறம் செய்தால் என்ன இன்பம் என்பதையும் யாரும் சொல்லாமலேயே அறிந்து கொள்ளலாம்''[2] என்று விளக்கம் கூறியுள்ளார். பல்லக்கைச் சுமப்பவனும் அதன் மேல் அமர்ந்து செல்வோருமாகிய அவர்களிடையே அறத்தின் பயன் இது என்று கூறவேண்டாம் என்னும் உரை விளக்கத்தினை மு. வரதராசனார் குறிப்பிட்டுள்ளார்.[3] இக்காலத்திற்கு ஏற்ப திருவள்ளுவரின் கருத்துக்கு மாறான உரையை கு.ச. ஆனந்தன் அவர்கள் எழுதியுள்ளார்கள். பல்லக்குச் சுமப்பவர்களுக்கு அதன் மேல் ஏறிச் செல்பவருக்கும் இடையே உள்ள ஏற்றத்தாழ்வை 'அறவழி என்று கருதக் கூடாது' என்று இவர் கூறுகின்றார். இதனை,

> ''சிவிகையைப் பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை - பல்லக்கு சுமப்பவனுக்கும் அதன் மேல் ஏறிச் செல்கிறவனுக்கும் இடையே அமைந்த ஏற்றத்தாழ்வு நிலையே; இது அறத்தாறு என வேண்டா - இது தான் 'அறவழி' என்று கருதவேண்டாம். பல்லக்குச் சுமப்பவர்க்கும் அதன் மேல் ஏறிச் செல்பவருக்கும் இடையே அமைந்த ஏற்றத்தாழ்வு நிலையை 'அறவழி' என்று கருதற்க. சமுதாய ஏற்றத்தாழ்வின்மையை நல்கும் வழியே அறத்தாறு ஆகும்''[4]

என்னும் வரிகளில் விளக்கமாக எடுத்துக் கூறுகின்றார். ஆனால் பல்லக்கில் செல்பவன் புண்ணியம் செய்தவன். பல்லக்கைத் தூக்கிச் செல்பவன் பாவம் செய்தவன் என்பதே பொறுத்தமான உரையாகும். மற்ற உரைகள் எல்லாம் திருவள்ளுவரின் மேல் தத்தமது கருத்தை ஏற்றிப் பார்க்கின்றன. இக்குறளுக்கு, தேவநேயப் பாவாணர்,

''அறத்து ஆறு இது என வேண்டா - அறத்தின் பயன் இது வென்று உரையளவையால் ஒருவர் அறிவிக்க வேண்டிய தில்லை, சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை - பல்லக்கைச் சுமப்பானோடு அதில் ஏறிச் செல்வானிடைப் பட்ட காட்சியளவையாலேயே அது அறியப்படும். இதுவே ஆசிரியர் கருத்தென்பது பின்னர் அவர் ஆங்காங்கு நூலிற் கூறும் கூற்றுக்களாலும், பல்பிறவியும் பழவினையும் பற்றி அவர்க்கிருந்த நம்பிக்கையாலும்,

''செய்தி வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இருநிதியம் - வையத்து
அறும்பாவ மென்னவறித் தன்றியடார்க் கின்று
வெறும்பானை பொங்குமோ மேல்''

என்னும் ஔவையார் கூற்றாலும், (நல்வழி - 17)

Need not in words to dwell on virtue's fruits, compare The man in litter borne with them that toiling heart

என்னும் போப்பையர் மொழிபெயர்ப்பாலும் அறியப்படும். 'பல்லக்கைச் சுமப்பாரையும் அதில் ஏறிச் செல்வானையுங் காட்டி இதுதான் அறத்தின் பயன் என்று கூறாதே' என்பதை இக்குறளுரை யாகக் கூறுவது, இக்காலத்திற்கேற்குமேயன்றி ஆசிரியர் கருத்தாகாது''[5]

என்று உரை வகுத்துள்ளார். இவ்வுரையே பொறுத்தமானதாக அமைந் துள்ளது. பாவாணர் காட்சி அளவை, உரையளவை என்னும் இரண்டு கோட்பாடுகளை அடியொற்றி இக்குறளுக்கு உரை எழுதியுள்ளார்.

காட்சியளவை

மெய்ப்பொருளியல் அறிவைப் பெறுவதற்கு பத்து துணை நிலைகளைச் சைவ சித்தாந்தம் கூறுகின்றது. அவையாவன :

1. காட்சி; 2. கருதுதல்; 3. உரை; 4. ஒப்புமை; 5. பொருள்; 6. இன்மை; 7. ஒழிவு; 8. உண்மை; 9. மரபு; 10. இயல்புக்குறி

இவைகளில் காட்சி, கருதுதல், உரை ஆகிய மூன்றையும் அடிப்படை அளவைகளாகக் கூறுவர். காட்சியளவையைப் பற்றி,

''காட்சி அளவை என்பது உயிரின் அறிவாற்றல் துறையாகும். அது நிர்ணயிக்கப்படாத காட்சியில் தொடங்கி ஐயம், பிழை ஆகியவற்றினின்றும் நீங்கிய பொருள்களைப் பற்றிய நேரடியான அறிவைத் தருகின்றது. காட்சி அறிவு புலன்களுக்குக் கொடுக்கப் பட்டுள்ள பொருள்களைப் பற்றிய நேரடியானதும் உடனடி

யானதுமான அறிவாகும். காட்சி அதன் இயல்பைக் கொண்டு ஏற்புடைய மற்றும் ஏற்பில்லாத காட்சி எனப் பிரித்தறியப் படுகின்றது. ஏற்பில்லாத காட்சி அறிவாற்றலில் உள்ள ஐயம் அல்லது பிழையினால் ஏற்படுகின்றது. இரு பொருள்களுக் கிடையில் அமைந்துள்ள சில பொதுவான இயல்புகளினால் ஒன்றை மற்றொன்றாக அறிவதாகும் ஏற்புடைய காட்சி, வரையறுக்கப்படாத காட்சி, வரையறுக்கப்பட்ட காட்சி என இருவகைப்படும்.''[6]

என்று விளக்கிக் கூறுவர். எனவே உரையளவை விட காட்சியளவையே பொறுத்தமானது என்று வள்ளுவர் கூறும் கருத்தை சிவப்பிரகாசர் மறுத்துக் கூற நினைக்கின்றார். அதற்கு நால்வர் நான்மணிமாலையில் திருஞானசம்பந்தர் வரலாற்றைப் பயன்படுத்திக் கொள்கின்றார்.

திருஞானசம்பந்தர் வரலாறு

இளம் வயதிலேயே ஞானத்தைப் பெற்ற திருஞானசம்பந்தர் ஒவ்வொரு தலமாகச் சென்று சைவ சமயத்தைப் பரப்பினார். குறிப்பாக சமண, பௌத்த சமயக் கருத்துக்களை மறுத்து விவாதித்து, வென்று சைவத்தை நிலை நிறுத்தினார். இக்கருத்தை,

''சம்பந்தர் வாழ்க்கையைப் படிக்குங்கால் மற்றைய நாயன்மார் களைக் காட்டிலும் இவர் ஒருவரே சமண சமய எதிர்ப்பில் ஈடுபட்டுச் சோழ நாட்டிலும், பாண்டிய நாட்டிலும், தொண்டை நாட்டிலும் அவர்கள் மதத்தின் குறைபாடுகளை எடுத்துச் சொல்லி, அவர்களைப் போல் அற்புதங்கள் நிகழ்த்திக் காட்டி மக்களை முன் போல் சைவத்துக்குத் திருப்பியவர் என்ற உண்மையை உணரலாம்''[7]

என்னும் பகுதியில் சோ. சிவபாத சுந்தரம் எடுத்துக் கூறுகின்றார். சிவிகையின் மூலமாகவே ஞானசம்பந்தர் நாட்டில் உள்ள பல இடங் களுக்கும் பயணம் செய்தார். அடியார் பெருமக்களும் தொண்டர்களும் அவரைச் சுமந்து சென்றனர். இறைவனே அவருக்குச் சிவிகையும் முத்துக்குடையும் வழங்கியமையை,

''ஏறுதற்குச் சிவிகை இடக்குடை
கூறி ஊதக் குலவு பொன் சின்னங்கள்
மாறுஇல் முத்தின் படியினால் மன்னிய
நீறு வந்த நிமலர் அருளுவார்.
ஞானசம்பந்தன் நம்பால் அணைகின்றார்
மான முத்தின் சிவிகை மணிக்குடை

ஆன சின்னம் நம் பால்கொண்டு அருங்கலைக்
கோன வன்பால் அணைந்து கொடும் என''

(பெரிய. 2098, 2100)

என்னும் பெரியபுராண பாடல்கள் சுட்டிக்காட்டுகின்றன. திருப்புகலூரில் திருநாவுக்கரசருடன் ஞானசம்பந்தர் தங்கியிருந்தார். அப்போது சிவத்தல வழிபாடு செய்யப் புறப்பட்டார். இருவரும் நடந்து வர சம்பந்தருடைய முத்துச் சிவிகை பின்னே வந்தது. அதுகண்ட திருநாவுக்கரசர் முத்துச் சிவிகையிலேயே அவர் வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். திருஞானசம்பந்தரும் அவ்வாறே முத்துச்சிவிகையில் ஏறிச் சென்றார். திருஞானசம்பந்தர் முத்துச்சிவிகையில் மதுரை சென்றபோது மந்திரி குலச்சிறையாரால் வரவேற்கப்பட்டதை,

> ''முத்துச் சிவிகையில் ஏறி, முத்துக்குடை நிழற்ற, திருநீறு அணிந்த தொண்டர்கள் கூட்டமாக உடன் வர, சம்பந்தர் மதுரையை நோக்கி எழுந்தருளினார். மந்திரித் தலைவராகிய குலச்சிறையார் தொண்டர் கூட்டத்தின் முன் நிலத்திலே விழுந்து பணிந்தார். தொண்டர் அவரை எழுப்ப அவர் எழாமலே கிடக்க, அவர் வரவையும் நிலையையும் அவர்கள் சம்பந்தரிடம் சென்று கூறினார்கள். அது கேட்ட சம்பந்தர் முத்துச் சிவிகையினின்றும் இறங்கி விரைந்து சென்று, குலச்சிறையை அணுகித் தம்முடைய கர மலர்களால் பற்றி எடுக்க, அவர் அஞ்சலி செய்தபடியே நின்றார்''[8]

என்னும் பகுதியில் விளக்கிக் கூறுவர். திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தரின் சிவிகையைச் சுமந்த வரலாற்றை,

> ''பெரிய கூட்டத்துடன் சம்பந்தர் வந்து கொண்டிருந்தார். அப்பர் சுவாமிகள் யாரும் அறியாமல் அந்தக் கூட்டத்தில் புகுந்து சம்பந்தருடைய சிவிகையைத் தாங்குவோருடன் ஒருவராகச் சேர்ந்து கொண்டு தாங்கி வந்தார். அப்போது திருஞானசம்பந்தருக்கு திருவுள்ளத்தில் ஏதோ ஒரு குறிப்புத் தோன்ற, அப்பர் சுவாமிகள் இப்போது எங்கிருக்கிறார்கள்? என்று கேட்டார். திருநாவுக்கரசர் கீழிருந்தபடியே, அடியேன் ஒப்பரிய தவஞ்செய்த பயனாகத் தங்களுடைய திருவடிகளைத் தாங்கி வரும் பேறு பெற்றேன் என்றார்.''[9]

என்னும் பகுதியில் விளக்கிக் கூறுவர். எனவே திருஞானசம்பந்தரின் சிவிகையைத் தொண்டர்களும் திருநாவுக்கரசரும் சுமந்திருக்கிறார்கள்.

சிவப்பிரகாசர் சிந்தனை

வள்ளுவரின் காட்சியளவைப்படி, பல்லக்கில் செல்பவர் புண்ணியம் செய்தவர்; பல்லக்கு சுமப்பவர் பாவம் செய்தவர். வள்ளுவர் காலத்தில்

உழைப்பில் ஈடுபட்ட வர்க்கமும் உழைப்பில் ஈடுபடாது பயனை மட்டும் அனுபவித்த ஆளும் வர்க்கமும் இருந்தன. இக்கருத்தைத் திருஞானசம்பந்தர் மறுத்தார் என்று நால்வர் நான்மணிமாலை நூலில் சிவப்பிரகாசர் கூறுகின்றார். ஏனென்றால் பல்லக்கில் அமர்ந்த திருஞான சம்பந்தரும் பல்லக்கைச் சுமந்த திருநாவுக்கரசர் போன்றோரும் புண்ணியமே செய்தவர்கள் ஆவார்கள். அவர்களிடையே பாவ புண்ணிய வேறுபாடு இல்லை. இருவருமே ஒரே தர நிலையை உடையவர்களே என்பதைச் சிவப்பிரகாசர் 33-ம் பாடலில் வலியுறுத்திக் கூறுகின்றார்.

இவ்வாறு பல்லக்கு சுமப்போரும், பல்லக்கில் அமர்ந்திருப்போரும் ஒரே வர்க்கத்தைச் சார்ந்தவர்களே என்றும் அவர்களிடையே வேறுபாடு இல்லை என்றும் கூறவேண்டிய அவசியம் சிவப்பிரகாசருக்கு ஏன் வந்தது? சமய வரலாற்றைச் சமூக வரலாற்றோடு பொறுத்திப் பார்க்கும் போது இதற்கான விடை கிடைக்கின்றது. இதற்குள்ளே நுட்பமான சைவ அரசியல் (Siva Politics) அமைந்துள்ளது. திருஞானசம்பந்தர் காலத்திலும் சிவப்பிரகாசர் காலத்திலும் புறச்சமயங்களாலும், அகச் சமயங்களாலும் சைவ சமயத்திற்கு மிகுந்த நெருக்கடி ஏற்பட்டிருந்தது. குறிப்பாக சமண, பௌத்த சமயங்களின் பிடியிலிருந்து சைவத்தை மீட்கவேண்டிய அவசியம் இருந்தது. எனவேதான் சிவப்பிரகாசர் வள்ளுவரின் கருத்தை மறுத்து மாற்றுச் சிந்தனையை (Alternative thought) முன் வைக்கின்றார். பாவ புண்ணியத்தின் பேரால் இருவேறு வர்க்கங்களாகப் பிரிந்து கிடக்காமல் எல்லோரும் ஒன்றுபட்டு புறச்சமயத்தை எதிர்த்துப் போராடி வெற்றி கொள்ள வேண்டும் என்ற கருத்தைத் திருஞானசம்பந்தர் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு சிவப்பிரகாசர் நிறுவிக் காட்டுகின்றார்.

குறிப்புகள்

1. பரிமேலழகர், திருக்குறள் உரை, ப. 27
2. நாமக்கல் கவிஞர், திருக்குறள் எளிய உரை, ப. 9
3. மு. வரதராசனார், திருக்குறள் தெளிவுரை, ப. 8
4. கு.ச. ஆனந்தன், திருக்குறளின் உண்மைப் பொருள், ப. 9
5. தேவநேயப் பாவாணர், திருக்குறள் தமிழ் மரபுரை, ப. 74, 75
6. பி.ஆர். நரசிம்மன், சைவ மரபும், மெய்ப் பொருளியலும், ப. 140
7. சோ. சிவபாதசுந்தரம், சேக்கிழார் அடிச்சுவட்டில், ப. 68, 69
8. மிழலைத்தொண்டன், நாதனைப் பாடிய நால்வர், ப. 72, 73
9. மேற்படி, ப. 100

13. சிவப்பிரகாசரின் கற்பனைத் திறம்

இரத்தின கிருட்டிணமூர்த்தி, பழனி.

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய சோண சைலமாலை என்னும் இலக்கியப் படைப்பில் கற்பனைக் களஞ்சியம் என்று போற்றப்பெறும் அக்கவிஞர்தம் கற்பனைத் திறம் பற்றிக் காணும் முயற்சியாக இக்கட்டுரை அமைகிறது.

''பவக்கடல் கடந்து முத்திஅம் கரையில்
படர்பவர் திகைப்பற நோக்கித்
தவக்கலம் நடத்த உயர்ந்தெழும் சோண
சைலனே கைலை நாயகனே''

என்று கைலை நாயகனாகிய சிவபெருமான் சோணசைலம் என்னும் வடிவில் தோற்றமளிப்பதாகக் குறிப்பிடுகிறார். பிறவிக்கடலைக் கடந்து முத்தியாம் கரைக்குச் சென்று சேர்வதற்கு விரும்புவோர் தவம் என்னும் கலத்தில் ஏறிச் செல்கிறார்கள். அவர்கட்குத் திகைப்பு ஏற்படாதவாறு சோணசைலம் கலங்கரை விளக்கம் எனத் திகழ்கிறது என்று இயம்பு கிறார் கவிஞர். கடல், கலம், கரை என்பன பொருத்தமான உருக்காட்சிகளாக உள்ளன. ஐம்புலம், மனம் ஆகியவற்றின் உணர்வுக்குரிய உவமை, உருவகம் ஆகியவையும், முரணணி, வருணனை, அடைமொழி போன்றவையும் உருக்காட்சி உத்தியாக அமைந்து இலக்கியப் படைப்பின் உள்ளடக்கத்தைப் படிப்பவர் மனத்துள் அழுத்தமுறப் பதியுமாறு செய்வதுடன், கூற வந்த செய்திகளைச் சிறப்பிக்கவும், அழகுபடுத்தவும், விளக்கமுறச் செய்யவும் துணைபுரிகிறது. படைப்பாளியின் ஆட்பண்பைக் காண இவ்வுத்தி உதவுகிறது. பெரும்பாலும் படைப்பாளியின் கற்பனையின் மனவியல் களத்தில் இவ்வுத்தி அரும்பி மலர்கிறது. ஒரு படைப்பின் தனிச்சிறப்பு, முருகியபற்சுவை ஆகியவை இவ்வுத்தியின் அமைப்பு வாயிலாகக் காணப்பெறும்.

சிவப்பிரகாசர் சோணசைலத்தைக் கண்டுகண்டு அதன் அழகில் தோய்ந்து திளைத்துள்ளார் என்பதைச் சோணசைலமாலை காட்டுகிறது. இவ் அனுபவம் அவர்தம் கற்பனையூற்றைப் பீறிட்டு வெளிப்படுமாறு செய்தது.

சோணசைலம் உச்சியில் முழுநிலா ஒளியுடன் விளங்கும் காட்சி இளம்பிறை திகழும் சடையுடன் தோன்றும் சிவனாரை நினையுமாறு செய்கிறது. பிறைமதியைத் தானே சிவன் சடையில் தாங்கிக் கொண்டு

இருக்கிறார் என்று குறைபட்டுக் கொள்ளும் அன்பர்கள் மனம் நிறைவு பெறுமாறு நிறைமதியுடன் சோணசைல வடிவில் காட்சி தருகிறார் சிவனார் என்று கூறுகின்றார் கவிஞர்.

சோணசைலத்தில் பயிலும் கார்மேகன் கடலிலிருந்து நீரை முகர்ந்து மேலெழுகின்ற காட்சி சிவனார் கஜசம்ஹார மூர்த்தியாகத் தோன்றும் நிகழ்வை நினைக்கச் செய்கிறது எனத் தொன்ம உருக்காட்சியில் சிவப்பிரகாசர் இயம்புகின்றார்.

திரிபுராந்தகர் எனப் போற்றப்பெறும் சிவனார் அவுணர்களைப் பார்த்துச் சிரித்த வெண் நகை, அவர் யோகத்தில் அமர்ந்து இருந்த ஞான்று தேவர்களின் வேண்டுதலுக்கிணங்க, காமவுணர்வினை எழச் செய்ததற்காக மலரம்பை எறிந்த மன்மதனைத் தமது நெற்றிக் கண்ணால் எரித்திடச் சீற்றமுடன் நோக்கிய நோக்கு, எளியேனாகிய எனது இருள்மலம் பெறுமோ என்று சிவப்பிரகாசர் ஏக்கத்துடன் தமக்குத் தாமே வினவுகின்றார். தமது இருள்மலம் இறைவனின் அந்தச் சிரிப்பையோ சீற்றம்சார் நோக்கையோ பெற்றால் தமக்கு உயர்வு ஏற்படுமே என்று எண்ணுகின்றார் சிவப்பிரகாசர். சிவனாரின் சிரிப்பும் சீற்றமும் முரணணி சார்ந்த தொன்ம உருக்காட்சியாக ஆளப்பட்டுள்ளன.

''ஆர்த்தெழு திரைகள் சுருண்டு எறிகடல் நஞ்சு
அமுதுசெய் பெரும்புகழ்த் தனிமை
தீர்த்திட உளங்கொண்டு அவலனேன் தனைநின்
திருவடிக்கு அன்பனாக்கிலையே
கார்த்திகை விளக்கு மணிமுடி சுமந்து
கண்டவர் அகத்திருள் அனைத்தும்
சாய்த்துநின்று எழுந்து விளங்குறும் சோண
சைலனே கைலை நாயகனே''

தேவர்கள் உய்ந்திட நஞ்சினை உண்ட சிவனார்தம் அருள்திறத்தினை நினைந்து நெஞ்சம் உருகி ''நஞ்சுண்ட அமுதே'' என்று சேக்கிழார் சிவனாரைப் போற்றுவதைப் பெரியபுராணத்தில் காணலாம். முரணணி நயம் சான்ற, அரியதோர் கிளர்ச்சியூட்டும் திறம் வாய்ந்த, உருக்காட்சி சிவப்பிரகாசர் இறையுணர்வார்ந்த கற்பனையில் இவ்வகையில் எழுந்தது.

சோணசைலத்தின் உச்சியில் ஒளிரும் கார்த்திகை விளக்கு ஆன்மாக் களின் அக இருளை நீக்குகின்றது என இயம்பும் சிவப்பிரகாசர், ''சாய்த்து'', ''நின்று'', ''எழுந்து'', ''விளங்குறும்'' என்னும் வினைச்சொல்/உருக்காட்சி (Verbal Image) ஆள்வதன் வாயிலாக ''அகவிருள்'' என்னும் நுண் பொருளைப் பருப்பொருள் போலக் காட்டுகின்றார்.

மழை பொழிவதால் சோணசைலம் நனைகின்ற காட்சி சிவப்பிரகாசர் நெஞ்சத்தில் அழகியதோர் கற்பனையைத் தூண்டுகிறது. நல்லதோர் கவிதை கற்பனையின் வடிகாலாக அமைகின்றது.

''விண்புனல் வேந்தன் ஆர்கலிக் குடத்து
மணிமுகில் கலயத்தில் முகந்து
தண்புனல் ஆட்ட ஆடுறும் சோண
சைலனே கைலை நாயகனே''

என்பன அக்கவிதை வரிகள்.

இந்திரன் கடல் என்னும் பெரிய குடத்திலிருந்து மணிமுகிலாகிய கலயத்தில் நீரை முகந்து எடுத்துச் சோணசைலமாகத் திகழும் சிவனாருக்குத் திருமுழுக்காட்டுகிறான் என்று கற்பனை செய்கிறார் சிவப்பிரகாசராம் வீரசைவநெறிச் செல்வர். ஆலயத்தில் இறைவனுக்குச் செய்யப்பெறும் திருமுழுக்காட்டினைக் கண்டு கண்டு மகிழ்ந்த வாழ்வியல் அனுபவமே ''திருமுழுக்காட்டு'' எனும் உருக்காட்சியாகச் சிவப்பிரகாசர் கற்பனையில் பிறந்துள்ளது.

''வெண்திருநீறு புனையும் மாதவர்க்கு
விருந்துசெய்து உறும் பெருமிடியும்
கொண்ட நல்விரதத்து இளைக்கும் யாக்கையும் இக்
கொடியனேற்கருளும் நாளுளதோ''

என்று சிவப்பிரகாசர் ஏக்கத்தோடு இயம்பும் வினா வீரசைவ நெறியில் அதாவது அடியரைப் போற்றும் மரபில் அவருக்கிருந்த ஈடுபாட்டினைத் தெரிவிக்கின்றது.

பெரியபுராணத்தில் குறிப்பிடப்பெறும் இளையான்குடி மாறநாயனார், குங்குலியக் கலய நாயனார் போன்ற மெய்யடியார்களின் நினைவில் தோய்ந்தவர் சிவப்பிரகாசர் என்பதையும் நம்மால் கருத முடிகிறது.

சோணசைலத்தில் பூத்த பூக்கள் சூடிக்கழிவடைந்ததாகலின் சண்டேசருக்கே அவை உரியன என்று அவர் குறிப்பதும் பெரிய புராணத்தில் போற்றப்பெறும் அடியார்பால் சிவப்பிரகாசர் கொண்டுள்ள பேரன்பினைக் காட்டுகின்றது. சேக்கிழாரால் சிறிய பெருந்தகையார் என்று போற்றப்பெறும் நாயனார் சிவனாரிடமிருந்து சண்டீசப் பதம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மீனைப் பிடித்தற்கென்று காத்திருக்கும் மீன்கொத்திப் பறவை போன்று என்னுயிரைப் பிடிப்பதற்கு மறலி வந்து நிற்கிறான். உடனடியாக என்னை உனது பேரானந்த வாரிதியினுள் மிக ஆழத்தில் மூழ்குமாறு செய்தருள்க. அவனால் என்னுயிரைப் பிடிக்க முடியாது என்று சிவப்பிரகாசர் சோண சைலனாரிடம் வேண்டுவது தத்துவச் செறிவு மிக்கதாக உள்ளது. மீண் கொத்திக் குருவி பறவை உருவாகவும், ஒருவரை இன்னொருவர் கடலில் மூழ்கடிப்பதாகிய நிகழ்வு மக்கள் உருவாகவும் ஆளப்பட்டுள்ளன. சிவப்பிரகாசரின் இயற்கையியல் ஈடுபாட்டை இவை காட்டுகின்றன.

மெய்யடியார்க்குக் குற்றேவல் செய்வது, ஆகமத்தை உணர்ச்சி யுடன் பயில்வது, புதுமலரால் சிவபூசை செய்வது என்ற வகையில் தமது பொழுதுபோக்கு அமைவதற்கு அருளுமாறு சிவப்பிரகாசர் வேண்டு கின்றார். ''உகம்பல வாழினும் அன்றியோர் கணத்தில் இறப்பினும் நல்லதே உனது கமல மலரடிக்கு அன்பராய் இருக்க நேரின்'' என்று மொழிவது அவரது இறையன்பின் உறுதிக்குச் சான்றாகிறது.

''பிறவாமையை வேண்டுவோர் வேண்டுக. ஆனால் யானோ மதுரம் பெருகுறு தமிழ்ச்சொல் மலர்நினக்கு அணியும் பிறப்பையே வேண்டுவேன்'' என்கிறார் அவர். பாடும் பணியே பணியாய் அருள்வாய் என்று அருணகிரிநாதர் முருகனிடம் வேண்டுவதை நினைக்கச் செய்கிறது இவ்வேண்டுகோள்.

சோணசைலனாரின் கறைமிடற்றுடன் தமது ஆணவ இருளும் கலந்தால் மிடற்றின் கருமைநிற அழகு மேலும் சிறப்புற விளங்கும் என்று நயம்பட மொழிகின்றார் சிவப்பிரகாசர். சோண சைலத்தில் பன்றிகள் தோண்டிய குழிகளில் அரவு உமிழ்ந்த மணியின் ஒளிப் பிழம்பு மேலே எழும் காட்சி சோண சைலனாராகிய பெரிய தீபத் தம்பத்தின் அருகில் சிறிய தீத்தம்பம் போன்று முருகக் கடவுள் தோன்றுவதாகக் குறிப்பிடுகிறார் ஆசிரியர். இறையுணர்வார்ந்த கற்பனையின் களஞ்சிய மாகச் சிவப்பிரகாசரைக் காண்கிறோம்.

''அள்ளிவெண்திருநீறு உடல்முழுதணியும்
அடியார்ப்பெறின் எழுந்து இளங்கன்று
உள்ளிநின்று உருகும் அன்னையின் மனம் நெக்கு
உருகுபு சென்று இறைஞ்சிலனே''

என்ற வரிகளில் அமைந்துள்ள கன்று, தாய்ப்பசு என்பன பொருத்தமான உருக்காட்சிகளாக உள்ளன.

''இழையெனத் தளர்ச்சிற்றிடை உணாமுலையாள்
எனக்கு வண்புகலி வேந்து அயின்ற
கழுமணிப் பசும்பொன் குலவுபால் கிண்ணம்
கழுவும்நீர் வார்ப்பதற்கு உரையாய்''

எனச் சிவப்பிரகாசர் வேண்டுவதில் அவரது அடக்கவுணர்வையும் சிவனடியாரிடத்து அவர் கொண்டுள்ள பேரன்பின் மாண்பையும் காண முடிகிறது.

சோணசைலமாலை என்னும் படைப்பு இயல் மற்றும் இசைத் தமிழ் இணைந்தும் பிணைந்தும் இலங்கும் செஞ்சொற்புனை மாலை யாகத் திகழ்கிறது. சிவப்பிரகாசரின் கற்பனைத் திறத்தின் தனிச்சிறப்பிற்கு ஓர் சின்னமாக மிளிர்கிறது.

14. சிவப்பிரகாசரும் இட்டலிங்க வழிபாடும்

த. இரத்தினமாலா, சிவகாசி.

சைவ சமயத் தத்துவ நூல்களில் இறைவன் உருவத்தையும் அருவத்தையும் இணைக்கும் அருவுருவ வடிவமாக இலிங்கம் கூறப் படுகிறது[1]. இலிங்க வழிபாடு வேத காலத்திலேயே தொடங்கி விட்டது. தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினரால் கண்டறியப்பட்ட தொன்மையான இரண்டு இலிங்க வடிவங்கள் கி.மு. முதலாம் நூற்றாண்டைச் சார்ந்தன வாகச் சொல்லப்படுகின்றன[2]. எனவே தொன்மைக் காலம் முதலாக இலிங்க வழிபாடு விளங்கியமை தெரிகிறது.

காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாம்
நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்

எனச் சேக்கிழார் சாக்கிய நாயனார் புராணத்தில் குறிப்பிட்டுள்ளார். எனவே இலிங்கம் சிவபெருமானைக் குறிக்கும் குறியாகும்.

இலிங்கத்தின் அமைப்பு 'ஓம்' என்னும் பிரணவ மந்திரத்தைக் குறிப்பதாகத் திருமூலர் கூறுகிறார். அண்டலிங்கம், பிண்டலிங்கம், ஆன்ம லிங்கம், ஞான லிங்கம், சதாசிவ லிங்கம் என்னும் பாகுபாட்டின் கீழ் சிவலிங்க தத்துவத்தை திருமூலர் விளக்குகிறார்[3]. சிற்ப நூல்கள் பலவகையான சிவலிங்க வடிவங்களைக் குறிப்பிடுகின்றன[4]. இலிங்கம் செய்யப் பயன்படும் பொருள் மற்றும் அதன் வடிவம் குறித்து வேறு வேறு பெயர்கள் சொல்லப்பட்டுள்ளன.

சிவப்பிரகாச சுவாமிகள் வீரசைவம் சார்ந்த பெரியோர் ஆதலால் இலிங்க வடிவத்தைப் போற்றுகிறார். காமிகாகமம், சுப்ரபேதாகமம், மகுடாகமம் ஆகியவை சிவலிங்கம் பற்றி மிகுதியாகக் கூறுகின்றன. இவை வழிநின்று அறியப்படும் இட்டலிங்கம் சிவப்பிரகாசர் நூல்களில் போற்றப்படுகிறது.

''வீர சைவம் என்பது வீரம் என்னும் ஆகமத்தில் கூறியுள்ள சைவ நெறியாகும். இருபத்தெட்டு சிவாகமங்களின் இறுதிப் பகுதிகள் வீரசைவக் கொள்கைகளையும் சடங்குகளையும் கூறுவதால் வீரசைவம் என்பது ஆகமாந்தத்தின் ஓர் அம்சமாகும். இது சைவ சமயத்தினின்று பிறந்ததாயிருப்பினும் தனி இயல்புடைய ஒரு சமயக் கொள்கையே.

சைவமும் வீரசைவமும் இலிங்க உருவத்தில் சிவனை வழிபட்டாலும் வழிபடக் கையாளும் முறைகள் வேறுபடுகின்றன. சைவர்கள் சிவலிங்கத்தைக் கோயிலில் வைத்து வழிபடுவர். வீர சைவர் அதனைக் கைத்தலத்தில் வைத்து வழிபடுவர்'' என்றும் ''கடவுளுடைய நிலை அம்சத்தையும் அசைவு அம்சத்தையும் இணைப்பதாகிய சக்தி விசிஷ்டா த்வைதமே வீர சைவத்தின் உட்பொருள், உடம்பில் இலிங்கத்தைத் தரித்துக் கொண்டு ஒன்றான கடவுளை வழிபடுமாறு கூறுவதே வீர சைவத்தின் வெளிப்பொருள்'' என்றும் ''அதன் பிரதானமான சடங்கெல்லாம் பிறக்கும்போது ஒவ்வொரு குழந்தைக்கும் குரு செய்யும் இலிங்க தீட்சை ஒன்றே தான்'' என்றும் கலைக்களஞ்சியம் வீர சைவத்திற்கு விளக்கம் தருகிறது[5]. இதனால் வீரசைவர்கள் இலிங்க வடிவத்தைப் போற்றும் தன்மை யாது என வெளிப்படுகிறது. மேலும் ஆன்மாவை அவத்தைகளின் தாக்குதலினின்று பாதுகாத்து மோட்சத்திற்கு அனுப்பும் எட்டு வகையான கேடயங்களை குரு, இலிங்கம், சங்கமம், பாதோதகம், பிரசாதம், விபூதி, உருத்திராட்சம், மந்திரம் என வீரசைவம் விளக்கு கின்றது. உடம்பில் இலிங்கத்தை எப்போதும் அணிந்திருப்பதால் உடம்பிலுள்ள எல்லா மாசுகளும் எரிக்கப்பட்டு விடும் என்பது இச்சமய நம்பிக்கை.

வீரசைவ சமயம் சார்ந்த சுவாமிகள் இலிங்கத்தின்பால் அதிகமான ஈடுபாடு கொண்டதில் எள்ளளவும் வியப்பில்லை. இவர் போற்றியது இட்டலிங்கமாகும். இட்டலிங்க வழிபாடு செய்பவன் ஏற்றம் பெறுவான் என்பதனைச் சுவாமிகள் தமது பிரபுலிங்க லீலையில் கூறியுள்ளார்[6]. இட்டலிங்கம் என்பது புண்ணியங்களால் முதிர்ந்த உள்ளங்கையில் பொருத்தமாக சிவலிங்கத்தினை வந்தனை செய்ய ஏற்றிருத்தல் என்பதும் அச்செய்யுளால் பெறப்படுகிறது[7]. மேலும் இட்டலிங்கம் அகமும் புறமும் இலங்கக் கூடியது[8]. இட்டலிங்கத்தின் இயல்பினை,

> குறிபல பலமுறை கொண்டு பலவகைப்
> பொறிதொறு மருவியொண் புலன்நுகர்ந்துமாய்ந்
> தறிவரு நிலையவா தார மேவியும்
> நிறைவுறும் அங்கையின் நிகழும் இட்டமே.

எனக் கூறியுள்ளார்[9]. பலவகைப் பெயர்களால் குறிக்கப்பட்டு, ஐவகைப் புலன்களாலும், அவை உணரும் நுகர்ச்சியாலும் அறிதற்கரிய நிலைகளை ஆதாரமாய்ப் பெற்று, உயிரின் துன்பம் போக்கி நிறைவுறச் செய்வதாய் அங்கையின் விளங்குவது இட்டலிங்கம் என்பது இதன் பொருள்.

உயிர்கள் பருவுடல், நுண்ணுடல் காரண உடல் என்ற மூன்று நிலைகள் கொண்டுள்ளன. அவற்றிற்கேற்ப பரம்பொருளாகிய சிவமானது இட்டலிங்கம், பிராணலிங்கம், பாவலிங்கம் என்ற மூவகைப் பெயர்

களைப் பெறும். இட்டலிங்கமென்பது கண்ணுக்குப் புலப்படும் உருவ முடையதாய் உயிருக்கு வேண்டாதனவாகிய மலங்கள், மாயை முதலானவை போக்கி உயிர்க்குத் தேவையான அருள், ஆனந்தம் ஆகியவை வழங்கி உயிர்களை மகிழ்விப்பதாகும்[10]. ஆன்மாவானது ஞான வளர்ச்சியில் பல நிலைகளை அடைவதால் பரம்பொருளாகிய சிவமும் பல நிலைகளில் ஆன்மாக்களின் வினைப்பயனைத் தொலைந்து இன்பத்தை அருள்கின்றது. எனவே உயிர்க்குயிராய் விளங்கும் இறைவனைப் புறத்தே கண்டு கரங்களில் வைத்து வழிபடும் முறையை இட்டலிங்க வழிபாட்டு முறையை வீரசைவம் கற்பிக்கின்றது. இதனால் வீரசைவர்கள் சிறிய இலிங்கத்தைப் பிரியாதவராய் உடன் வைத்திருப்பர். இந்த இலிங்கம் சிறிய வெள்ளிப் பேழையினுள் அடக்கப் பெற்றோ அல்லது வீரசைவர் கழுத்தினில் அணியப் பெற்றோ அல்லது வலது கையினில் வளைத்துக் கட்டப் பெற்றோ அவர்களை விட்டுப் பிரியா திருக்கும். அந்தணர்கள் பூணூலைப் பிரியாதது போன்று வீரசைவர்கள் இட்ட லிங்கத்தைப் பிரியாதிருப்பர்[11].

இட்டலிங்கம் வீரசைவர் உயிர்க்குயிர் ஆதலால் இதனைச் சிறப்பித்து, சிவப்பிரகாச சுவாமிகள் இட்டலிங்க அபிடேக மாலை, நெடுங்கழி சுவாமிகள் இட்டலிங்க அபிடேக மாலை, நெடுங்கழி நெடில், குறுங்கழி நெடில் என்னும் மூன்று இலக்கியங்களையும் இட்ட லிங்கத்தை ஏந்தி யிருக்கும் கரத்தைச் சிறப்பித்து கைத்தல மாலை என்னும் இலக்கியத்தையும் படைத்துள்ளார்[12]. அவரது படைப்புகள் அனைத்திலும் சைவ வழிபாடு நிலைத்திருந்தாலும் முற்கூறப்பெற்ற நான்கு இலக்கியங்களும் இட்டலிங்க வழிபாட்டை மட்டுமே நோக்கமாகக் கொண்டவை. ஆதலால் அந்நான்கு நூல்கள் பற்றிய ஆராய்ச்சி இக்கட்டுரையில் இடம் பெறுகிறது.

இட்டலிங்க அபிடேக மாலை, இட்டலிங்கத்திற்கு திருமுழுக்கு செய்யப்பெற்றபோது பாடியது. இம்மாலை பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தான் அமைந்த பத்துப் பாடல்களைக் கொண்டது. நெடுங்கழி நெடில், குறுங்கழி நெடில் இரண்டும் கைத்தலத்தில் உள்ள இட்டலிங்கத்தைப் பாடுவன. பாடலடிகள் அளவால் வேறுபடுவன. குறுங்கழி நெடில், எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் அமைந்த பத்துச் செய்யுட்களைக் கொண்டது. நெடுங்கழி நெடில் பதினான்குசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் அமைந்த பத்துச் செய்யுட்களைக் கொண்டது. கைத்தல மாலை, கலித்துறை என்னும் பாவகையால் அமைந்த பத்துச் செய்யுட்களால் உருவானது.

ஒவ்வொரு நூலிலும் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் இட்டலிங்க வழிபாட்டைப் புலப்படுத்தும் அடிகள் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத் தகுந்தது. அபிடேக மாலையின் செய்யுட்களில் ஈற்றடியின் இறுதி 'அறிவுற்றென்

அங்கைமலர் செறிவுற்றமர்ந்த இறை அபிடேக மாடியருளே' என அமைந்துள்ளது. நெடுங்கழி நெடில் செய்யுட்களில் ஈற்றடியின் இறுதி 'இட்டநன் குதவி யென் கரத்திருக்கும் ஈசனே மாசிலா மணியே' என அமைகின்றது. குறுங்கழி நெடில் செய்யுட்களில் ஈற்றடியின் இறுதி 'என் கரத்திருக்கும் ஈசனே மாசிலா மணியே' என அமைந்துள்ளது. கைத்தல மாலை செய்யுட்களின் ஈற்றடி 'என்ன மாதவஞ் செய்ததோ எனது கைத்தலமே' என அமைகின்றது.

இட்டலிங்கத்தினைச் சிறப்பிக்கும் இப்பாடல்களில் அதன் வடிவம் மற்றும் செயப்படுபொருள் ஆகியவை எந்தப் பாடலிலும் இடம் பெறவில்லை. சிவபெருமானுக்குக் குறியாய் அவர் தொடர்பான புராண, இதிகாசச் செய்திகள், சைவ சமயக் குரவராகிய நாயன்மார்கள், திருவிளையாடல்கள் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. பெறுதற் கரிய பேறாக இலிங்கம் கைவரப் பெற்றமைக்காக மகிழும் இறும்பூது ஒவ்வொரு பாடலிலும் வெளிப்படுகிறது. திருஞானசம்பந்தர், கண்ணப்ப நாயனார் பற்றிய செய்திகள் ஒவ்வொரு நூலிலும் இடம் பெற்றுள்ளன.

இட்டலிங்க அபிடேக மாலையில் தத்துவக் கருத்துகள் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. அபிடேக மாலை என்னும் பெயருக்கேற்ப ஒன்பதாம் செய்யுளில் இட்டலிங்கம் அபிடேகம் கொள்ளும் முறையும் அபிடேகப் பொருட்களும் சொல்லப்பட்டுள்ளன. இட்டலிங்கத்திற்குரிய ஏழுவகையான தீக்கைகள், பிராண லிங்கத்திற்குரிய ஏழுவகையான தீக்கைகள், பாவ லிங்கத்திற்குரிய ஏழுவகையான தீக்கைகள் ஆகியவை குறிக்கப்பட்டுள்ளன.

நெடுங்கழி நெடிலின் முதல் பாடல் துறவறத்தைச் சிறப்பிக்கின்றது. அடியவர் பெறும் சிறப்பு இந்நூலில் மிகுதியாகச் சொல்லப்பட்டுள்ளது. ஏழாவது பாடலில் சிவபெருமானுடைய ஐந்து தத்துவ மூர்த்தி வடிவங் களும் தொழில்களும் சொல்லப்பட்டுள்ளன. பத்தாவது பாடலில் வங்கையர், சங்கையர், வசவண்ணர், வீரமாச்சையர் ஆகிய வீர சைவம் தொடர்புடைய பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

குறுங்கழி நெடில் செய்யுட்களில் தனக்கும் இறைவனுக்கும் இடையிலான நெருக்கமான உறவினைப் பேசுகின்றார். இப்பகுதியில் உவமைகள் மிகுதியாக இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத் தகுந்தது.

கைத்தல' மாலையின் எட்டுப் பாடல்களில் சிவபெருமான் அரி, அயன் தேடி அடைய இயலாத செய்தியும் இரண்டு பாடல்களில் கூற்றுவனை உதைத்த செய்தியும் சொல்லப்பட்டுள்ளன.

சிவப்பிரகாச சுவாமிகள் சீரிய இறையன்பும், பற்றற்ற துறவுள்ளமும், சைவ சமய நூல்களிடத்து ஈடுபாடும், கற்பனைத் திறமும், உவமை யமைக்கும் திறமும், தத்துவ நூலறிவும் தெற்றென வெளிப்படுகின்றன.

அடிக்குறிப்புகள்

1. மறைமலையடிகள், சைவ சித்தாந்த ஞான போதம், கழக வெளியீடு, 1972, ப. 195.
2. T.A. Gopinatha Rao, Elements of Hindu Iconography - Vol. II, Part I, Indological Book House, Varanasi, 1971, P. 65.
3. வாழ்வியல் களஞ்சியம், தொகுதி நான்கு, ப. 367.
4. T.A. Gopinatha Rao, Ibid, PP. 75-102.
5. கலைக் களஞ்சியம், தொகுதி எட்டு, ப. 447.
6. சிவப்பிரகாச சுவாமிகள், பிரபுலிங்க லீலை, கழக வெளியீடு.
7. பிரபுலிங்க லீலை, இட்டலிங்க கதி, செய்யுள் - 14.
8. மு.நூல், இட்டலிங்க கதி, செய்யுள் - 16.
9. மு.நூல், இட்டலிங்க கதி, செய்யுள் --17.
10. வீ. குமாரசாமி ஐயர், பிரபுலிங்க லீலை ஆராய்ச்சி

    கழக வெளியீடு 1958, ப. 182. பிராணலிங்கம் என்பது தோன்றியும் தோன்றா உருவாய் மனது என்னும் பொருளுக்குத் தோற்றிக் கொண்டிருப்பது. பாவலிங்கம் என்பது தோன்றா உருவாய் அறிவு என்னும் பொருளுக்குத் தோன்றி கொண்டிருக்கும்.
11. T.A. Gopinatha Rao, Ibid, P. 33.
12. சு.அ. இராமசாமிப் புலவர் (குறிப்புரை) சிவப்பிரகாச சுவாமிகள் பனுவல் திரட்டு, கழக வெளியீடு, 1972.

15. நன்னெறி உவமைகளில் உடல் உறுப்புகள்

இரெ. இராசபாண்டியன், சென்னை.

சிவப்பிரகாசர் இயற்றிய நூல்களில் நன்னெறியும் ஒன்று. மக்களை நல்வழிப்படுத்தும் நல்ல அறநெறிகளைக் கூறுவதால் இந்நூல் நன்னெறி என்று அழைக்கப்பட்டது. நாற்பது பாடல்களைக் கொண்ட இந்நூலில் நாற்பது உவமைகள் அமைத்து சிவப்பிரகாசர் பாடியுள்ளார்.

மேற்கூறிய நாற்பது உவமைகளில் ஒன்பது உவமைகள் உடல் உறுப்புகளுடன் தொடர்பு உடையனவாய் உள்ளன. இருபத்தோர் உவமைகள் இயற்கைப் பொருள்களுடன் தொடர்பு உடையனவாய் உள்ளன. ஐந்து உவமைகள் சிவன், அகத்தியர் ஆகியோர் பற்றிய புராணச் செய்திகளுடன் தொடர்பு உடையனவாய் உள்ளன. நான்கு உவமைகள் செயற்கைப் பொருள்களுடன் தொடர்பு உடையனவாய் உள்ளன. ஓர் உவமை செயல்பாட்டுடன் தொடர்பு உடையதாய் உள்ளது.

கண் தொடர்பான உவமைகள்

உடல் உறுப்புகள் தொடர்பான உவமைகளில் ஆறு உவமைகள் கண் தொடர்பானவையாக உள்ளன. ஏனைய மூன்று உவமைகளில் ஒன்று கையும் நாவும் தொடர்பானது. கையும் மெய்யும் தொடர்பாக ஒன்றும் பல்லும் நாவும் தொடர்பாக ஒன்றும் உள்ளன. கண் தொடர்பான உவமைகளை இங்கே முதலில் பார்ப்போம்.

1. கண்கள் இரண்டு பார்வை ஒன்று

கண்கள் இரண்டு என்றாலும் பார்வை ஒன்றுதான். அதுபோல ஒரு குடும்பத்தில் கணவன், மனைவி என்று இருவர் இருந்தாலும் இருவரின் எண்ணமும் செயலும் ஒன்றுதான்.

காதல் மனையாளும் காதலனும் மாறின்றித்
தீதில் ஒருகருமம் செய்பவே - ஓதுகலை
எண்ணிரண்டும் ஒன்றுமதி என்முகத்தாய் நோக்கல்தான்
கண்ணிரண்டும் ஒன்றையே காண். (6)

என்னும் பாடல் இதை விளக்குகிறது. இதில் **நோக்கல்தான் கண்ணிரண்டும் ஒன்றையே காண்** என்னும் தொடரில் உடல் உறுப்பான கண்ணைச் சிவப்பிரகாசர் உவமையாகப் பயன்படுத்தியுள்ளார்.

2. விழியில்லார்க்கு விளக்கு இல்லை

ஊமைக்குப் பழமையான நூல்களால் பயன் எதுவும் கிடையாது. பார்வை இல்லாதவனுக்கு விளக்கு ஒளியினால் பயன் எதுவும் கிடையாது. இவை போல, அன்பு இல்லாதவனுக்கு இடம், பொருள், ஏவல் முதலிய எல்லாமும் பொருந்தியிருந்தாலும் அவனால் யாரிடமும் அன்பு காட்ட இயலாது.

இல்லானுக்கு அன்புஇங்கு இடம்பொருள் ஏவல்மற்று
எல்லாம் இருந்தும் அவற்கு என்செய்யும் - நல்லாய்
மொழியில் லார்க்கு ஏது முதுநூல் தெரியும்
விழியில்லார்க்கு ஏது விளக்கு (15)

என்னும் பாடல் இக்கருத்தை விளக்குகிறது. இப்பாடலில் கண்ணுடன் வாயும் உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

3. கண்ணீர் வடிக்கும் கண்

நமது உடலில் உள்ள பிற உறுப்புகள் அடையும் துன்பத்தைக் கண்டு நமது கண்கள் கண்ணீர் வடிக்கும். அதைப்போல, பெரியவர்கள் பிறரது துன்பத்தைத் தமது துன்பமாகக் கருதி நெருப்பில் பட்ட மெழுகைப் போல உருகி வருந்துவார்கள்.

பெரியவர் தம்நோய்போல் பிறர்நோய்கண்டு உள்ளம்
எரியின் இழுதுஆவர் என்க-தெரிஇழாய்
மண்டு பிணியால் வருந்தும் பிறஉறுப்பைக்
கண்டு கலுழுமே கண். (20)

என்னும் பாடல் இக்கருத்தை விளக்குகிறது. இப்பாடலில் கண் தொடர்பாக இடம் பெற்றுள்ள உவமை தவிர மேலும் ஓர் உவமையும் இடம் பெற்றுள்ளது. நெருப்பில் உருகும் மெழுகு போல் என்பது அந்த உவமை ஆகும்.

4. கண் அளவா? விண் அளவா?

உடல் அளவில் புலவர்கள் எளிமையாக இருப்பதைக் கண்டு அவர்களின் அறிவுத் திறத்தைக் குறைவாக மதிப்பிடக் கூடாது.

உடலின் சிறுமை கண்டு ஒண்புலவர் கல்விக்
கடலின் பெருமை கடவார் - மடவரால்
கண் அளவாய் நின்றதோ காணும் கதிர்ஒளிதான்
விண் அளவாயிற்றோ விளம்பு (26)

என்னும் பாடலில் இக்கருத்தைச் சிவப்பிரகாசர் விளக்கியுள்ளார். கதிரவனின் ஒளியானது நாம் கண்ணால் காண்கின்ற அளவைக் கொண்டதா

அல்லது விண் அளவைக் கொண்டதா? விண் அளவைக் கொண்டது என்பது சொல்லாமலே விளங்கும். அதைப் போல, புலவர்களின் அறிவும் உடலை அளவாகக் கொண்டது அல்ல. அவர்களின் புலமையை அளவாகக் கொண்டதே ஆகும். இப்பாடலின் **கண் அளவாய் நின்றதோ காணும் கண் ஒளி தான்** என்னும் தொடரில் கண் உவமையாக இடம் பெற்றுள்ளது.

5. ஒளி உள்ள கண்ணும் ஒளி இல்லாக் கண்ணும்

கல்வி அறிவுடைய அறிஞர்கள் பழி வரும் என்று அஞ்சி, தீய செயல்களைச் செய்யாமல் நற்செயல்களையே செய்வார்கள். ஆனால் கல்வி அறிவு இல்லாதவர்கள் பழி வரும் என்று அஞ்சுவதில்லை.

அறிவுடையார் அன்றிஅது பெறார் தம்பால்
செறிபழியை அஞ்சார் சிறிதும் - பிறைநுதல்
வண்ணம் செய்வாள் விழியே அன்றிமறை குருட்டுக்
கண் அஞ்சுமோ இருளைக் கண்டு. (34)

என்னும் பாடலில் இக்கருத்தைச் சிவப்பிரகாசர் விளக்கியுள்ளார். ஒளியுடைய கண்கள் மட்டுமே இருளைக் கண்டு அஞ்சும். ஒளி யில்லாத குருட்டுக் கண்கள் இருளைக் கண்டு அஞ்சுவது இல்லை. அதுபோல், அறிஞர்கள் மட்டுமே பழிக்கு அஞ்சுவார்கள். அறிவற்றவர்கள் பழிக்கு அஞ்சுவதில்லை. இப்பாடலின் **'வண்ணம் செய் வாள் விழியே அன்றி மறை குருட்டுக் கண் அஞ்சுமோ இருளைக் கண்டு'** என்னும் தொடரில் கண் உவமையாக இடம் பெற்றுள்ளது.

6. அணி இல்லாக் கண்

நமது உடலில் உள்ள கை, கால், கழுத்து, மூக்கு முதலான உறுப்புகளில் அணிகலன்களை அணிகிறோம். ஆனால் கண்ணில் எந்த அணிகலனையும் அணிவதில்லை. என்றாலும் கண்ணுக்கு இருக்கும் மதிப்புக் குறைவதில்லை. மனித உறுப்புகளில் கண்ணையே உயர்வாகக் கருதுகிறோம். அதைப் போல, பொன் அணிகலன்களை அணியும் மன்னனை விட அணிகலன்கள் எதுவும் அணியாத அறிஞரே உயர்வாகப் போற்றப்படுவார். இதை,

பொன் அணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னும் அறிஞரைத் தாம்மற்று ஒவ்வார் மின்னுமணி
பூணும் பிறஉறுப்புப் பொன்னேஅது புனையாக்
காணும் கண் ஒக்குமோ காண். (40)

என்னும் பாடல் விளக்குகிறது. இப்பாடலில் கல்வியின் பெருமை விளக்கப் பட்டுள்ளது. இதில் **புனையாக் காணும் கண் ஒக்குமோ காண்** என்னும் தொடரில் கண் உவமையாக வந்துள்ளது.

கையும் நாவும் தொடர்பான உவமை

நல்லவர்கள் புகழ்ச்சியை விரும்பி எதையும் செய்வதில்லை. தம்மைப் புகழ்கின்றவர் என்றும், புகழாதவர் என்றும் வேறுபாடு பார்ப்பதில்லை.

என்றும் முகமன் இயம்பாதவர் கண்ணும்
சென்று பொருள்கொடுப்பர், தீதுஅற்றோர்; துன்றுசுவை
பூவின் பொலிகுழலாய்! பூங்கை புகழவோ
நாவிற்கு உதவும் நயந்து. (1)

என்னும் பாடல் இக்கருத்தை விளக்குகிறது.

நமது உடலுக்குத் தேவையான உணவுப் பொருட்களை நாக்குச் சுவைத்து வயிற்றுக்குள் செலுத்துகிறது. இந்த உணவுப் பொருட்களைக் கைதான் நாக்குக்கு எடுத்துக் கொடுக்கிறது. இவ்வாறு உணவுப் பொருட் களை நாக்குக்கு எடுத்துக் கொடுப்பதால் தன்னைப் புகழவேண்டும் என்று கை எதிர்பார்ப்பதில்லை. அதைப் போல, நல்லவர்களும் தம்மைப் பிறர் புகழ வேண்டும் என்று கருதாமல் உதவி செய்வார்கள். இப்பாடலின் **'பூங்கை புகழவோ நாவிற்கு உதவும் நயந்து'** என்னும் தொடரில் கையும் நாவும் உவமையாக இடம் பெற்றுள்ளன.

கையும் மெய்யும்

பெருமைமிக்க அறிஞர்கள் வீரத்திலும் சிறந்து விளங்கினால் அது மேலும் பெருமை சேர்க்கும்.

பேரறிஞர் தாக்கும் பிறர்துயரம் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவர் - நேரிழாய்
மெய்சென்று தாக்கும் வியன்கோல்அடி தன்மேல்
கைசென்று தாங்கும் கடிது (31)

என்னும் பாடலில் இதைச் சிவப்பிரகாசர் விளக்கியுள்ளார்.

நமது உடலில் படும் அடியை விரைந்து சென்று கை தாங்கிக் கொள்ளும். அதைப் போல, பிறருக்கு நேரும் துன்பத்தைத் தாங்குவதற்கு அறிஞர்கள் வீரத்துடன் விரைந்து செல்வார்கள் என்பது இதன் பொருள். இப்பாடலின் **'மெய்சென்று தாக்கும் வியன்கோல்அடி தன்மேல் கைசென்று தாங்கும் கடிது'** என்னும் தொடரில் கையும் மெய்யும் உவமையாக இடம் பெற்றுள்ளன.

பல்லும் நாவும்

கல்வி அறிவு பெற்ற அறிஞர்கள் பயனை எதிர்பார்க்காமல் பிறர்க்குத் தம்மால் இயன்ற உதவியைச் செய்வார்கள்.

கைம்மாறு உகவாமல் கற்றுஅறிந்தோர் மெய்வருந்தித்
தம்மால் இயல்உதவி தாம்செய்வர் - அம்மா
முளைக்கும் எயிறு முதிர்சுவை நாவிற்கு
விளைக்கும் வலியனதாம் மென்று (27)

என்னும் பாடல் இதை விளக்குகிறது. வாயில் உள்ள பல்லானது உணவுப் பொருட்களை மென்று உணவின் சுவையை நாவிற்கு உணர்த்துகிறது. உணவை மென்று கொடுக்கும் பல், பயன் எதையும் எதிர்பார்ப்பதில்லை. அதைப் போல, கற்றறிந்தவர்கள் பயனை எதிர்பார்க்காமல் உதவி செய்வார்கள். இப்பாடலின் '**முளைக்கும் எயிறு முதிர்சுவை நாவிற்கு விளைக்கும் வலியனதாம் மென்று**' என்னும் தொடரில் பல்லும் நாவும் உவமையாக இடம் பெற்றுள்ளன.

உடல் உறுப்புகள் பற்றிய உவமைகளையும் இயற்கை பற்றிய உவமைகளையுமே சிவப்பிரகாசர் மிகுதியாகப் பயன்படுத்தியுள்ளார். இந்த உவமைகள் அனைத்தும் எளிதில் கண்ணுக்குப் புலப்படும் தன்மை கொண்டவை ஆகும்.

உடல் உறுப்புகளும் அவற்றின் செயல்பாடுகளும் மனிதனுக்கு நன்கு அறிமுகமானவை மட்டும் அல்லாமல் மனிதனுடன் இணைந்தே இருப்பவை ஆகும். இயற்கைப் பொருட்களும் அவற்றின் செயல்பாடுகளும் மனிதனின் கண்ணுக்குத் தெரிவதுடன் அவற்றின் இயக்கங்களையும் அவன் அறிவான். இவ்வாறு எளிமையான உவமைகளைப் பயன்படுத்துவது சொல்ல விரும்பும் கருத்தை எளிதில் புரிய வைக்கும் என்பதை நாம் அறிந்துகொள்ள முடியும்.

உவமைகளைப் பயன்படுத்துவதன் நோக்கத்தை உவமையியலில் இளம்பூரணர் பின்வருமாறு கூறியுள்ளார். 'இவ்வோத்து என்ன பயத்தோ எனின், உவமையியல் என்னும் பெயர்த்து. ஒருபுடை ஒப்புமை பற்றியுவமை உணர்த்தினமையாற் பெற்ற பெயர்... இதனாற் பயன் என்னை மதிப்பதோ வெனின், புலன் அல்லாதன புலனாதலும் அலங்காரமாகிக் கேட்டார்க்கின்பம் பயத்தலும். ஆப்போலும் ஆமா என உணர்த்திய வழி, அதனைக் காட்டகத்துக் கண்டான் முன்கேட்ட ஒப்புமை பற்றி இஃது ஆமா வென்று அறியும்....' என்னும் விளக்கத்தைக் கூறியுள்ளார்.

பேராசிரியர் 'உவமமும் பொருள் புலப்பாடே கருதியது' என்று கூறியுள்ளார்.

மேற்காட்டிய மேற்கோள்களின்படி உவமையைப் பொருள் விளக்கத்திற்காகப் பயன்படுத்துகிறோம் என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும். மேலும் ஐம்பொறிகளால் உணர்ந்துகொள்ள இயலாத பொருள்

களை எளிதில் உணர்த்துவதற்கும் உவமைகளைப் பயன்படுத்துகிறோம் என்பதையும் நாம் அறிந்துகொள்ள இயலும்.

சிவப்பிரகாசர் தமது நன்னெறியின் வாயிலாக மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான அறநெறிகளை வழங்கியுள்ளார். இந்த அறநெறிகள், பண்புகளை அடிப்படையாகக் கொண்டவை. இந்தப் பண்புகள் ஐம்புலன் களால் எளிதில் உணரத் தக்கவை அல்ல. எனவே இவற்றை உணர்த்து வதற்காக நாற்பது பாடல்களிலும் உவமைகளைப் பயன்படுத்தியுள்ளார். இந்த உவமைகளின் வாயிலாக எளிய முறையில் அறக் கருத்துக்களை விளக்கியுள்ளார்.

நன்னெறி வாயிலாகச் சிவப்பிரகாசர் வழங்கியுள்ள உவமைகளில் உடல் உறுப்புகள் தொடர்பான ஒன்பது உவமைகள் மட்டும் இக்கட்டுரையில் விளக்கப் பெற்றுள்ளன. ஏனைய இயற்கை தொடர்பான இருபத்தோர் உவமைகளும் புராணம் தொடர்பான ஐந்து உவமைகளும் செயற்கை தொடர்பான நான்கு உவமைகளும் செயல்பாடு தொடர்பான ஓர் உவமையும் இக்கட்டுரையில் குறிப்பிடப் பட்டுள்ளன.

இக்கட்டுரையின் மூலம் சிவப்பிரகாசர் உவமைகளை நன்னெறியில் மிகுதியாகப் பயன்படுத்தியுள்ளமையை அறிந்துகொள்ள முடியும். ஐம்புலன்களால் எளிதில் புரிந்துகொள்ள இயலாத அறநெறிகளை உணர்த்துவதற்கு எளிய உவமைகளைப் பயன்படுத்தியுள்ளார் எனப் புரிந்துகொள்ள இயலும். அந்த உவமைகளாக உடல் உறுப்புகளையும் இயற்கைப் பொருட்களையும் மிகுதியாகப் பயன்படுத்தியுள்ளார் எனத் தெளியலாம்.

16. சிவப்பிரகாசரும் திருவள்ளுவரும்

கு. இராமு, சென்னை.

''தோன்றிற் புகழொடு தோன்றுக - அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று'' (குறள் - 236)

இரண்டாயிரத்து இருபத்திரண்டு ஆண்டுகளுக்கு முன் தோன்றியவர் திருவள்ளுவர். இவர் சென்னை திருமயிலையில் வாழ்ந்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

இவருடைய தாய், தந்தையர் ஆதி, பகவன் என்பதாகும். இவர் இயற்றிய திருக்குறள் ஐந்தாம் வேதமாகக் கூறப்பட்டு வருகின்றது. திருக்குறள் கிருத்துவ வேத நூலாகிய விவிலிய நூல் என்னும் பைபிளோடு உயரிய ஒரு ஸ்தானத்தில் வைக்கப்பட்டு மேலை நாடுகளில் பேணிக் காக்கப்பட்டு வருகின்றது.

இன்றைய பாரதத்தில் தமிழகத்தினையும், தமிழ்ப் பெருங்குடியினரையும் உலகம் போற்றி வணங்குகின்ற வகையில் நாமிருக்கின்றோம் என்றால் அதற்குரிய ஒரே காரணம் நாம் பெற்றிருக்கும் பிறரால் பெறுதற் கருமையான திருக்குறளேயாம். இம்மண்ணுலகம் உள்ள மட்டும் அழியா நிலையில் நிலைத்து நிற்கப் போகும் இறவாத புகழுடைய இந்நூல்களுள் தலையாயது திருக்குறள்தான்.

திருக்குறள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இது முப்பாலைக் கொண்டுத் திகழ்கிறது. 133 அதிகாரங்களையும், 1330 குறட்பாக்களையும் உடையது. திருக்குறளைப் புகழ்ந்துரைக்கும் நூல் திருவள்ளுவ மாலை ஆகும்.

இவரது பாவினை நக்கீரர், பரணர், கபிலர், பெருஞ்சித்திரனார், காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார் முதலிய பழம் புலவர்களும் 55. இவையாவும் வெண்பா வடிவில் அமைந்துள்ளது. இதைத் தவிர ஔவையார், பாரதியார் போன்றவர்களும் திருவள்ளுவரைப் போற்றிப் புகழ்ந்தேத்திப் பாப்புனைந்துள்ளனர். இவர் கடவுள் வாழ்த்தினில் தன் தாய் தந்தையரையேக் கடவுளாகக் கருதிப் பாடியுள்ளார்.

''அகர முதல எழுத்தெல்லாம் - ஆதி
பகவன் முதற்றே உலகு''.

திருக்குறளில் பன்னிறமும், பல்பண்பும், ஒன்றோடொன்றொவ்வாத வாழ்வின் நெறிமுறைகளும் கொண்டு வாழும் இம்மன்பதையினர்

யாவரும் ஏற்று மகிழ்வடையும். அதில் உயிரியல்புகளும் உணர்வுத் திறங்களையும் அது நவில்கின்ற தன்மை கொண்டுள்ளது.

இந்நூலைக் கற்போர் காலங்கடந்தாலும் கற்போர் உள்ளுணர்விற் கேற்ப பான்மையில் புதுப்புதுக் கருத்துக்கள் வழங்கி வருகிறது. இது ஒரு சிறந்த இலக்கியமாகத் திகழ்கிறது.

மீண்டும் அருட்திரு சிவப்பிரகாச சுவாமிகளின் செயல் திறனை ஆராய்வோம். இவர் ஒரு சிறந்த தொண்டர். இவர் படைத்த இலக்கியம் எக்காலத்து மக்களுக்கும் உதவும் படியாக வளர்ந்து உள்ளது. இவரது தந்தையார் குருக்கள் குமாரசுவாமி தேசிகர் என்பார்கள். இவர் பின்னர் உரிய சடங்குகளைச் செய்த பிறகு ''வீரசைவராக'' மதத்தின் மீது அபரிமிதமான பற்றுதல் கொண்டு திகழ்ந்தோங்கிய பெருமகனார். இவர் ஒரு ஒழுக்க சீலர், சிறந்த கவிஞர், கலை நுணுக்கமறிந்தவர்.

இவர் திருமணம் செய்து கொள்ளாமல் துறவறம் பூண்ட ஒரு தவசீலர், உத்தம புருடர், சிறந்த கல்விமான், கலை ஆர்வலர், கவித்துவம் அறிந்தவர். இவர் சிறந்த குருவினை திருவண்ணாமலையில் தேர்வு செய்து நல்ல சிறந்தக் கல்விமானாகத் திகழ்ந்தோங்கினார். இளம் வயதிலேயே கவித்திறம் படைத்திருந்தார். ஆகவே இவர் முதலில் ''சோணசயிலமாலை'' எனப் பெரிய நூறு செய்யுட்களை இயற்றினார். பின்னர் பாண்டிய நாட்டிலிருந்த தாமிரபரணி ஆற்றின் கரையிலிருந்த சிந்து பூந்துறையில் தருமபுர ஆதினத்தில் உள்ள வெள்ளியம்பலவாணத் தம்பிரானிடம் இலக்கணம் முறைப்படி பயின்றார்.

அருட்குருவின் கட்டளையின்படி ஒரு அரிய வெண்பாவினை இயற்றினார்.

''குடக்கோடு வானெயிறு கொண்டாற்குக் கேழன்
முடக்கோடு முன்னமணிவாற்கு - வடக்கோடு
தேருடையான் றெவ்வுக்குத் தில்லைதோன்
றூருடையான் என்னு முலகு''.

ஆசிரியர் அவருடைய சிறப்பான வரியான 'வடக்கோடு தேருடையான்' என்ற வரியானது கண்டு வியந்து இலக்கணங்களை முறையாகக் கற்றுத் தந்தார். சிவப்பிரகாசர் தன்னுடைய குருவிற்கு, இலக்கணப் பாடம் கற்றமைக்குக் காணிக்கையாக 300 பொற்காசுகளைத் தந்தார். அதனைப் பெற மறுத்திட்ட குருவின் ஆசையை நிறைவேற்றிட திருச்செந்தூர் சென்று, வித்தியா கருவத்தில் செருக்குற்ற ஒரு புலவனை அடக்கி குருவருளுக்கு அடிமையாக்கி குருகடாட்சத்தினைப் பெற்றுத் திகழ்ந்தார்.

அண்ணாமலை ரெட்டியாரின் விருப்பப்படியே திருவெங்கை மாநகரத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் மீது கோவைக் கலம்பகம்

புனைந்தார். பின்னர் உலாவும், அலங்காரங்களையும் முறைப்படி இயற்றி வெற்றி வாகை சூடினார்.

இவர் இயற்றிய பிரபந்தங்கள் அனைத்தும் பிரசித்தி பெற்றவையாகத் திகழ்ந்தோங்கியது. அவரது காப்பாளர் அண்ணாமலை ரெட்டியாரையும் பல பாடல் வரிகளில் வைத்துப் பாடியுள்ளது மிகவும் பாராட்டத்தக்கது. இவர் இத்தாலிய நாட்டுக் கவிஞருடன் வாதிட்டு அவரது கொள்கை களை மறுப்பு செய்து 'ஏசுமத நிராகரணம்' என்ற ஒரு பெரிய நூலையும் படைத்திட்ட பெருமை போற்றத் தக்கதாக அமைந்துள்ளது.

சிவப்பிரகாசருக்கு ஞானாசிரியராகத் திகழ்ந்தவர் பொம்மபுரம் அருட்குரு சிவஞான பாலைய தேசிகர் ஆவார். ஆகவே தம்முடைய ஆசிரியர் மீது தாலாட்டு, நெஞ்சுவிடு தூது, திருப்பள்ளி எழுச்சி, பிள்ளைத் தமிழ், கலம்பகம் ஆகிய பிரபந்தங்களை ஆர்வ மிகுதியால் எழுதித் தீர்த்தார்.

இவர் சமயக் குரவர் நால்வர் மீது 'நால்வர் மணிமாலை'யை இயற்றியருளினார். சிவப்பிரகாசர் 32 ஆண்டுகள் சைவத் தொண்டாற்றினார்.

''அல்லிமலர்ப் பண்ணவனும் ஆராய்ந்தறி கவிதை
சொல்லும் இருவரிடைத் தோன்றியான் முல்லை
அரும்பிற் பொலியும் அணிமுறுவல் நல்லாய்
கரும்பிற் கணு நிகர்த்தேன் காண்''

பாடியுள்ளார்கள். இவரது பாடல்கள் அனைத்தும் புதிய புதிய கற்பனையும் கற்பவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்படியாக அமைந்துள்ளது. சிவப்பிரகாசரின் காப்பியம், தலபுராணம், சிற்றிலக்கியங்கள், கற்பனைத் திறங்களை மெருகூட்டின.

இவருடைய சொல்லாட்சித் திறம் சுவை மிகுந்த தேனமுதாய் இனித்தன. அவரது நீதிநூல் உலகுக்கு நீதி புகட்டுவதைப் போல் அமைந்துள்ளது அற்புதமானதாகும். இவர் பல தனிப்பாடல்களையும் குருமார்கள் மீது அளவற்ற பக்தி கொண்டு அவர்கள் மீதும் பல பாடல்களை இயற்றியுள்ளார்.

இவர் செந்தமிழ் ஆர்வலர். பற்றுதலும் கொண்டவர். இனிய ஆசிரியருமாவார். சிவப்பிரகாசர் சிறந்த குருபக்தியை உடையவர் என்பது மிகையல்ல. இவர் பிற மொழியிலும் பயிற்சியுடையவர். இலக்கணத்தில் வல்லவர். சைவ சமயப்பற்றுடைய ஆன்மீக அன்பர். பிற சமய மறுப்புப் பாடலும் புனைவதில் கைதேர்ந்தவராவார். இவர் திருவள்ளுவருக்குச் சமமான நீதி நூல்களைப் புனைந்துள்ளார். வேதாந்தம், சித்தாந்தங்களில் சிறந்தோங்கியவர்.

இவர் தருக்கம் செய்து வாதிட்ட சைவ அடியாரை திருமுறை களைனைத்தும் கற்றுணர்ந்து முறைப்படி மகிழ்ந்திட்டப் பாவலர் ஆவார். இவரது கருத்துக்கள் அனைத்தும் திருவள்ளுவர் எழுதிய திருக்குறளினை போலவே பேராற்றல் பெற்றுத் திகழ்கின்றன.

நல்ல பல சேவைகளைச் செய்துள்ளவர். இவர் குருமார்களைப் பாடிப் பரவசமானவர். காலமெல்லாம் தமிழ்த் தொண்டாற்றி காலம் கடத்தியவர். சிறந்த நீதிமான். தெய்வ பக்தி மிக்க இவர் காலசூழலுக் கேற்ப வாழ்ந்தாலும் காலங்கடந்து அன்னாரின் புகழ் பேசப்படும் அளவிற்குச் சிறந்தோங்கி நிற்கின்றதென்றால் மிகையல்ல. இவர் தந்துள்ள இலக்கண, இலக்கியம், நீதிநூல் மற்றும் சைவ சமயத்தினை வாழ்வித்து பிற்கால சந்ததியரை வகைப்படுத்தி ஈர்க்கும் என்பதில் எந்த விதமான ஐயப்பாடும் இல்லை எனலாம். இவருடைய நீதிநூல்கள் ஏனைய நூல்களுக்கோர் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளன. சிவப்பிரகாசரைப் பற்றி ஆய்வுகள் நடத்தி ஆண்டுதோறும் அறிய பல மாநாடு மற்றும் சிறப்புக்குரியவர்களுக்கு பரிசுகள், சான்றுகள் வழங்கி வருவது போற்றத்தக்க செயலாகும். சுவாமிகள் பல்வேறு திருத்தலங்களுக்குச் சென்று தரிசித்தும் அதற்கேற்ப பாடல்களை இயற்றியுள்ள பாங்கும் நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்தி விடுகின்றன. இவர் பயணம் செய்த திருத்தலங்களைப் பற்றிய திருத்தல வரலாறுகளையும் படைத்துள்ளார்.

இவருடைய பாடற்பயிற்சி, கற்பனைத் திறன் அனைத்தையும் செய்யுள் வடிவில் அமைத்துதவியதால் யாப்புக்கு அணிவிக்கும் அணிகலனாகத் திகழ்கின்றன. இவரது படைப்புக்கள் அனைத்தும் இறைவனால் தூண்டப்பட்டு அவரே அடி எடுத்தளித்து எழுதியப் பாடல்களைப் போல் பரிமளிக்கின்றன.

''என்று முகமன்இயம்ப தெவர்கண்ணுஞ்
சென்று பொருள் கொடுப்பர் தீதற்றோர்
பூவிற்பொலி குழலாய் - பூங்கை புகழவோ
நாவிற் குதவும் நயந்து''

என்று நயமுடன் தந்துள்ள பாடலில் சொறிந்துள்ள சொற்சுவையும் பொருள்நயமும் நம்மை மேலும் மேலும் சிந்தித்தறிந்திடத் தூண்டு கின்றன. இவருடைய நீதி நூலானது காலத்தாலும் அழியாத மாபெரும் சிறந்த காவிய நூலாகத் திகழ்கின்றன. அவருடைய கவியானது சிறந்த பேரீச்சம் பழத்தினைத் தேனில் ஊற வைத்தளித்தாற்போல இருக்கும் பாங்கு நாவில் நீர் ஊறச் செய்கின்றன. இப்படிப்பட்ட அறிய படைப்புக்களைப் பாடிப் பரவிட எத்தனை சென்மங்களில் செய்திட்ட புண்ணியத்தின் பலனாய் இது நமக்குக் கிடைத்துள்ள வாய்ப்பாகும் எனலாம்.

வள்ளுவருக்குச் சிலையெழுப்பியதைப் போல் சிவப்பிரகாச சுவாமிகளுக்கும் ஆலயம் எழுப்பி அதில் அவருடைய சிலையை நிறுவிடலாம். சிவப்பிரகாச நின்பாடலைப் பாடலாம். அவரைப் பற்றியே சிந்திக்கலாம். போற்றிகள் பாடலாம்.

17. சோணசைலமாலை

இளங்கண்ணன், உடுமலை.

திருவெங்கை-கோயில் திருக்குட முழுக்கு பற்றிய பாடல் கண்ணிகள் 65-68 திருவெங்கை உலாவில் வருகின்றது, பிரபுலிங்க லீலை பாடி முடிக்கப் பெற்ற காலம் பற்றிய பாடல் 23. மயிலம் பொம்மபுரப் பட்டத்து மூன்று பட்டத்து சுவாமிகளின் அருளாட்சி காலம் பற்றி குறிப்புக்கள் கொண்டு சிவப்பிரகாசர் கி.பி. 1603 - 1654 வரை வாழ்ந்தார் என்று ஆய்வறிஞர்கள் கூறுகின்றார்கள். இவர் பதினேழாம் நூற்றாண்டு. இவர் குமரகுருபரரின் புலமைக்கு ஒப்பானவர் எனலாம்.

தந்தையும் குருமாரும்

இவர் காஞ்சிபுரத்தில் தொண்டை மண்டல வேளாளர் குலத்தில் குமாரசுவாமி தேசிகரின் மகனாகப் பிறந்தார். இவர் திருவண்ணாமலை சாளிகந்த தேவரிடம் பயின்றார். மயிலம் பொம்மபுர ஆதினத்து இரண்டாம் பட்டத்து சுவாமிகள் சிவஞான பாலய தேசிகரை ஞான குருவாகக் கொண்டார்.

புலமையும் நூல்களும்

சிவப்பிரகாசர் தமிழ், வடமொழி, தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் புலமை உடையவர். வீர சைவ மரபினர். சைவ சித்தாந்தம், மற்றும் வேதாந்தம், வானநூல் அறிந்தவர் என்பர்.

இவர் இயற்றிய நூல்கள் 35. மொத்தம் பாடிய பாடல்கள் 3314 கண்ணிகள் - 67 என்று கணக்கிட்டுள்ளனர். 1. இட்டலிங்க அபிடேக மாலை, 2. குறுங்கழி நெடில், 3. கூவத்தல புராணம், 4. சிவஞான பாலய சுவாமிகள் கலம்பகம், 5. சிவஞான பாலய சுவாமிகள் திருப்பள்ளி எழுச்சி, 6. சிவஞான பாலய சுவாமிகள் நெஞ்சுவிடு தூது, 7. சிவஞான பாலய சுவாமிகள் பிள்ளைத்தமிழ், 8. கைத்தல மாலை, 9. சிவநாம மகிமை, 10. சீர்காளத்திப் புராணம், 11. சோணசைலமாலை, 12. திருசெந்தில் நீரோட்டகயமக அந்தாதி, 13. திருவெங்கைக் கலம்பகம், 14. திருவெங்கைக் கோவை, 15. திருவெங்கை உலா, 16. நன்னெறி, 17. நால்வர் நான்மணிமாலை, 18. நெடுங்கழி நெடில், 19. பழமலை அந்தாதி, 20. பழமலைநாதர் பிச்சாடன நவமணிமாலை, 21. பழமலை நாதர்

பெரியநாயகிம்மை நெடுங்கழிநெடில் ஆசிரிய விருத்தம், 22. பெரியநாயகி அம்மை கலித்துறை, 23. பிரபுலிங்க லீலை, 24. தருக்க பரிபாஷை, 25. வேதாந்த சூடாமணி, 26. சிவப்பிரகாச விகாசம், 27. சித்தாந்த சிகாமணி, 28. சதமணி மாலை, 29. சிவஞான பாலய சுவாமிகள் தாலாட்டு, 30. இட்டலிங்க பெருமானின் நிரஞ்சன மாலை, 31. ஏசுமத நிராகரணம், 32. திருவெங்கை அலங்காரம், 33. கொச்சகக் கலிப்பா, 34. தலவெண்பா, 35. தனிப்பாடல்கள்-15.

வாழ்ந்த இடங்களும் சென்ற இடங்களும்

இவர் வாழ்ந்த இடங்கள் காஞ்சிபுரம், திருத்துறை மங்கலம் நல்லாற்றூர், திருவண்ணாமலை. இவர் சென்ற இடங்கள் திருச்செந்தூர், சிதம்பரம், பழமலை, திருவெங்கை, கூவம் முதலியன.

உடன் பிறந்தோர்

வேலயர், கருணைப் பிரகாசர், ஞானாம்பிகை யாவர். இவர் நல்லாற்றில் மறைந்தார்.

பாடல்களின் தன்மை

இலக்கணச் செறிவோடு கற்பனையும் சொல்வளமும், பொருளாழமும் புராணக் கருத்துக்களும், திருக்குறள் கருத்துக்களும், சைவ சித்தாந்தமும் கொண்ட பாடல்களையே இவர் பாடியுள்ளார்.

சோணசைலமாலை

(சிவந்த அழல் வடிவுடை மலையைப் பற்றிய பாமாலை என்று பொருள்)

திருவண்ணாமலை கிரிவலம் வந்தபொழுது பாடிய 100 பாடல்கள் சோணசைலமாலை. இதுவே அவரது முதல் நூல். இம்முதல் நூலிலேயே மேற்கூறிய அனைத்து தன்மைகளும் மிளிர்ந்தன.

காப்புச் செய்யுளிலேயே ஒரு புராணக் கருத்தை மையப்படுத்தி ஒரு கற்பனை கொண்டு ஒப்புமை காட்டி சோணசைலமாலை பாடுவதற்காக விநாயகர் பெருமானின் திருவருள் வேண்டுகிறார்.

இனிய சொற்களால் ஆன பாடல்களைப் பாட விரும்பும் அடியார் களின் மனக் குதிரையை உரிமைப் பொருளாக கொள்ளும், சிவபெருமானைப் பற்றிப் பாட வீரக்கழல் அணிந்த திருவடிகள் உடைய, யானையை உரிமைப் பொருளாகக் கொண்டமையால் இவ்வடை தாங்கிய விநாயகனைத் தொழுவேன் என்று பாடுகிறார் இவ்விநாயகர் கிளி கோபுரத்தருகில் இருப்பவர்.

இவ்விநாயகருக்கு யானை திறை கொண்ட விநாயகர் என்று பெயர். யானை திறை கொண்ட வரலாறு குகை நமசிவராயர் வரலாற்றில் இடம் பெற்றுள்ளது. இங்கு மனமாகிய குதிரை திறையாகக் கொள்வது முரண்தொடையாக அமைந்துள்ளது.

காப்பு நேரிசை வெண்பா

''சதுரனெழிற் சோண சயிலன் துதிப்பன்
மதுரமொழி அன்பர் மனமாம் - குதிரைதிறை
கொண்டவனென் றேத்தும் குரைகழற்கால் யானை திறை
கொண்டவனை என்னுளத்தே கொண்டு''

என்பது பாடல்.

இயல்பாய் நுண்பொருளாக இருக்கும் இறையை நம் கல்விச் செருக்காலும் செல்வச் செருக்காலும் தேடி அறிய இயலாது என்ற கருத்தை அன்னமாக பிரமனும் பன்றியாக திருமாலும் இறையின் முடியும் அடியும் தேடிய புராணக் கதை காட்டுகிறது. இவ்வாறு தேடுவாருக்கு மிகப் பெரிய பளுப் பொருளான சிவந்த அழல் மலையாகச் சிவபெருமான் தோன்றுகிறார். கயிலை மலையை தான் சொந்த இருப்பிடமாகக் கொண்ட சிவபெருமான் தானே ஒரு சிவந்த மலை வடிவு கொள்கிறார்.

அதனை ஒப்பிட, வானளாவும் உச்சி திருமுடியாக, ஒரு கண் கதிராக மற்றொன்று நிலவாக தோன்றும் மேருவே ஒப்பாகக் கொள்கிறார் - பின்னர் கம்பளன், அசுவதரன் என்ற இரு கந்தவர்களின் இன்னிசையைக் கேட்கும் அவன் தன் கைவசம் ஏந்திய மானின் வன்குரலையும் கேட் கின்றான். அதுபோல மூவர் தேவாரத்தைக் கேட்கும் சிவனே எனது கவியும் கேட்டருள் எனச் சிவப்பிரகாசர் விண்ணப்பிக்கின்றார். இங்கே புராணக் குறிப்புக்களைக் கற்பனை கொண்டு உவமித்துக் காட்டித் தன் கவியினை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறார்.

சோணசைலம் தோன்றிய வரலாற்று இணையாக மேருவின் தோற்றத்தையும் கம்பளன், அசுவதரன் என்றவர்களின் இன்னிசைக்கு முரணாக அவன் வசம் உள்ள மானின் புன் குரலையும் கற்பித்து ஒப்புமை காட்டித் தேவாரத்தைக் கேட்கும் அவன் செவிகள் தன் கவியும் கேட்டருள வேண்டும் என்று கற்பனை நயத்தோடு விண்ணப்பிக்கின்றார்.

''அண்ணல்மா புகழ்மூ வரும்புனை அ்ரும்பா
அன்றியென் கவியுநின் றுனக்காம்
பண்ணுலாம் இருவர் இசைகொ(ன்) நின்செவியில்
பாணிமான் ஒலியுமேற் றிலையோ

விண்ணாலாம் முடியின் மேருவின் வடபால்
வெயிலொரு புடையுற ஒருபால்
தண்ணிலா எறிப்ப வளர்ந்தெழும் சோண
சைலனே கைலைநா யகனே''.

இது சோண சைலமாலையின் ஒன்றாம் பாடல்.

சோணாசலத்தின் பெருமையை ஒரு பருப்பொருள் காட்சியாகவே கண்டு கூறியவர் அதன் பெருமையை நுண்ணிய அளவிலே எடுத்துக் காட்டுகிறார். இரண்டாவது பாடலில் இப்படி வரிசை கிரமமாய் அவருடைய சிந்தனையும், கற்பனையும் பரிணமிக்கிறது.

கயிலை மலையை உடையவரே பிறவிக்கடல் கடந்து முக்திகரை சேர விரும்புவோர் கடக்கும் பொழுது ஏற்படும் கலக்கம் நீங்குதற்கு தவப்படகு செலுத்துதற்குத் தியானிக்க உயர்ந்து நிற்கும் சோணாசைல வடிவாக அமைந்தவரே உடல் மீண்டும் வராத தன்மை அறிந்து பிறக்கத் திருவாரும் துயர் தவிர்க்கச் சென்று காணத் திருச்சிற்றம்பலமும், இறந்து வீடுபெற காசியும் நினைத்த அளவில் முத்திதரும் உமது நகருக்கு ஒப்பாகாது என்று பாடுகிறார்.

''தில்லையைக் காணக் காசியில் இறக்கச்
சிறக்கும் ஆரூர்தனில் பிறக்க
எல்லையில் பெருமை அருணயை நினைக்க
எய்தலாம் முத்தி''

என்ற அருணாசல புராணத்தின் கருத்தைப் பாடி சோணாசைலத்தின் நுண் பெருமையைப் பாடுகிறார்.

''துவக்கற அறிந்து பிறக்கு(ம்) ஆரூரும்
துயர்ந்திடா தடைந்து காண் மன்றும்
உவப்புடன் நிலைத்து மரிக்குமோர் பதியும்
ஒக்குமோ நினைக்குநின் நகரைப்
பவக்கடல் கடந்து முத்தியங் கரையில்
படர்பவர் திகைப்பற நோக்கித்
தவக்கலம் நடத்த உயர்தெழும் சோண
சைலனே கைலை நாயகனே''

அடியவர் குறை தீர்க்கின்ற கயிலை மலைக்குரியவனே குறையுடை மதி சூடியவன் என்று உலகோர் கூறும் குறை நீங்குமாறு முழுநிலவும் கார்த்திகை தீபத்தன்று தாங்கும் முடியுடன் ஓங்கி விளங்கும் சோணாசைலரே வாதம், பித்தம், கபம் ஆகியவை வாழ்வதற்கு இடமாகக் கொண்ட உடலை உடையவனான என்னை, அவை தன்னை துரத்தும்

முன் உமது ஒப்பிலா வீடுபேறு பெற்றதில் நிலையாய் வாழ விரும்பு கின்றேன். ஆனால் உன் திருவுள்ளம் என்பதை நான் அறியேன் என்று மிக உருகி வேண்டுகிறார்.

தக்கன் சாபம் பெற்ற நிலவிற்கு அடைக்கலம் அளித்தவன் என்று அவன் பேரிரக்க உணர்வு சுட்டிக் காட்டி முதுமை வருகையில் வாத, பித்தத்திற்கும் கபத்திற்கும் ஆட்பட்டு திண்டாடி உயிர் பிரியும் முன்னர் அவன் திருவருளால் வீடுபேறு பெற விரும்புவதை இறைவன்பால் விண்ணப்பிக்கின்றார்.

பாடல்தோறும் பின்னிரண்டு அடிகள் எழுவாய் ஆக அமைய முன்னிரண்டு அடிகளில் தம் கருத்தைக் கூறும் அவர் புராணக் கருத்துக் களை இடம்பெற வைத்து தன் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்றார்.

தக்கனின் 27 புதல்விகளையும் மணந்த மதி கடையவளான ரோகிணி மீது அதிக அன்பு காட்டுவது அவன் அறிந்து, மதியின் அழகு நாளும் தேய்ந்து வருவதாக அமையட்டும் என்று சபித்தான். அதற்குக் கழுவாய் தேட சிவனிடம் சென்ற பொழுது அவர் அவனைத் தன் முடியில் சூடி நாளும் ஒரு கலையாய் வளர்வாய் என்று வாக்களித்தார். அபயம் நாடியவனுக்கு அபயம் அளித்த வரலாறு ஆகையால் அதனைச் சுட்டிக்காட்டி தனக்கு அபயம் வேண்டுகிறார் சிவப்பிரகாசர்.

''நீங்களும் தூபர்செய் வளிமுதல் மூன்றன்
நிலையுளேன் அவை துறந்திடும்முன்
வாங்கி நின்தனி வீட் டுறைகுவான் விரும்பி
வந்தனன் நின் குறிப்(பு) அறியேன்
ஆங்குறை மதியே தாங்கிஎன் துலகம்
அறைகுறை அறநிறை மதியும்
தாங்கிய முடியோ டோங்கிய சோண
சைலனே கைலைநா யகனே''

என்பது பாடல்.

வீர சைவத் துறவியான அவர், உலகோர் குறையைத் தம் குறையாகப் பாவித்து பெண் மையல் தீர்க்க வேண்டுகிறார். முதற் சொல்லின் இரண்டாம் அசையில் மலை என்ற சொல்லைப் பயன்படுத்திப் பல பொருள் பெறுமாறு சொற் சிலம்பம் ஆடுகிறார். அது படித்து இன்புறத்தக்கது. கயிலை மலைக்குரியவரே கிழக்கில் செங்கதிர் ஒப்பற்ற உதயகிரி மேல் மலை போன்று விளங்கும் பனியை மலைத்து அதாவது அழித்து சோண சைலப் பெருமானுக்கு நிலைக் கண்ணாடியாய் அமைந்த மேடை போல் விளங்க உயர்ந்து எழுந்துள்ள சோண சைலரே என்கிறார்.

எழுஞாயிறின் தோற்றம் சோணசைலருக்கு நிலைக் கண்ணாடியாக அமைகிறது என்று கற்பனை செய்கிறார். அரசர்கள் எழுந்தவுடன் காண் பொருளாக ஆடியைத் தந்து அவர்கள் முகத்தை அவர்களே பார்த்து திருப்பள்ளி எழுச்சி கொள்வது வழக்கம். அம்மரபை ஒட்டிப் பனியை நீக்கி எழுஞாயிறு எழுவதைப் பெருமானுக்கு நிலைக் கண்ணாடியாக அமைவது போல உள்ளது என்று கற்பிக்கிறார்.

மலை என நம்பி கோவை போன்று சிவந்த வாய் உடைய மங்கையரின் இன்பத்துக்காக வருந்தும் கல் போன்ற மனம் உடைய கொடியவனுக்குத் துன்பந்தரும் மலை போன்ற பிறவி நோயினை நீர் போக்கினால் உன்னைக் கோபித்துக் கொள்வார் யார்? எனவே இறைவனே என் மீது இரக்கம் காட்ட வேண்டுகிறேன் என செல்லமாக கோபித்துக் கொள்வது போல் கேள்வி எழுப்பி விண்ணப்பிக்கின்றார்.

தனி மலை என்ற சொல் நிகரற்ற அடியாக விளங்கும் உதயகிரியை குறித்தது. பனி மலை என்பது எங்கும், எழும் ஞாயிற்றின் முன்பு அடர்ந்து படர்ந்து கிடக்கும் பனியை அழித்தலைக் குறிக்கிறது. துனி மலை என்ற சொல் துன்பத்தை மலையளவு தரும் பிறவி நோயைக் குறிக்கும், கனி மலை என்பது எண்ணற்ற, கோவை செவ்வாய்கள் உடைய மங்கையரைக் குறிக்கும். இப்படி மலை என்ற சொல்லைக் கொண்டு வெவ்வேறு பொருள் கொள்ளுமாறு செய்வித்து சொற்சிலம்பம் ஆடுகிறார் சிவப்பிரகாசர்.

''கனிமலை துவர்வாய்க் கோதையர்க்(கு) உருகும்
கல்மனக் கொடியனுக்(கு) என்நீ
துனிமலை பிறவி தவிர்த்தனை எனநிற்
சுளிப்பவர் இலை எனக்(கு) இரங்காய்
பனிமலை கதிர்வந்துற நிலைஆடி
பயின்ற பீடிகையென உதயத்
தனிமலை இருப்ப வளர்ந்தெழும் சோண
சைலனே கைலைநா யகனே''

என்பது பாடல்.

மீண்டும் பத்தாம் பாடலில் உலகோர் சார்பாய் தமது பெண் மையல் அகற்றுவதற்கு இன்னும் நாள் உளதோ எனக் கேட்டு அதனைப் போக்கிட விண்ணப்பிக்கின்றார் சிவப்பிரகாசர்.

இயற்கையான பெரும் மலை வடிவாய் இறைவன் நிற்கின்றான். அவன் உருவிற்கு ஏற்பத் திருமஞ்சனம் செய்ய மனிதரால் இயலாது. அது இயற்கையாகவே வான் பொழிந்து திருமஞ்சனம் செய்கிறது. இங்கு கடல் நீர் குடமாகக் கொண்டு மேகம் இரத்தின செம்பாக

அதனின்று முகந்து வருண தேவன் சிவனுக்குத் திருமஞ்சனம் செய்விப்பதாகக் கற்பிக்கின்றார் சிவப்பிரகாசர்.

வருணனால் திருமஞ்சனம் செய்விக்கப்படும் சோணசைலரே கயிலை உடையவரே ஆனந்தக் கண்ணீர் சொரியுமாறு அனலில் இட்ட வெண்ணெய் போல் மனம் உருகி உமையொரு பாகன் வடிவில் உள்ளத்தே நினைகையில் எனது பெண் மயக்கத்தைப் போக்கும் காலம் இன்னும் உளதோ என்று கேள்வி கேட்டு உருக்கமுடன் விண்ணப்பிக்கின்றார் சிவப்பிரகாசர். இது பத்தாவது பாடலின் கருத்து.

கயிலை மலையுடையவனே, பெருமை மிக்க மணிகளாலும் அரிமாக்கள் பரவியுள்ளதாலும் திசை முழுதும் சென்று பரவுமாறு நீண்டிருப்பதாலும் திசை முழுதும் அழகிய மேகம் வந்து அடைவ தனாலும் உமையாள் விழியை ஒத்திருக்கின்ற சோணசைலரே, இறைவன் அர்த்தநாரீஸ்வரன் எனவே மலை வடிவாக இருப்பவன் அவன் கண்ணும் உமையாளுடையதாக இருக்கிறது என்று கற்பித்து ஒப்பிடுவது சிலேடை நயம் மிக்கது. இவ்வொப்புமை பிறவிடத்து காணல் அரிது.

உனது உயர்ந்த திருப்பெயரைக் கூறித் துதிப்பார் நீர், நெருப்பு கொடிய நோய் அரக்கர், பிசாசுகள், விலங்குகள், திருடர்கள் முதலிய வற்றால் துன்பமுறார் என்று உறுதி கூறுகிறார்.

இனி சிலேடை ஒப்பு நோக்குவாம்.

1. சீருலாம் மணி - மலையில் உள்ள மணிகள் உமையின் கண்ணின் கருமணிகள்.
2. அரிபரவுதல் - சிங்கங்கள் மலையில் பரவலாகக் காணப்படுதல் - செவ்வரி கண்ணில் காணப்படுதலை ஒக்கும்.
3. திசையுறநீள்கை - எல்லா திக்கிலும் வளர்ந்து பரவி இருப்பது - பார்வை காதளவு நீண்டு செல்வது ஒக்கும்.
4. எழில்மை சார்தல் - அழகிய மேகம் வந்து தங்குவது அழகிய மை தீட்டப் பெறுவது ஒக்கும்.

இவ்வாறு காப்புச் செய்யுளில் தொடங்கி பாடல்கள் 100 முடியும் வரையில் தனது விண்ணப்பங்களை உருக்கமுடன் கூறிய புராணக் கருத்துக்களையும், சிந்தாந்தக் கருத்துக்களையும் பாடல்தோறும் கற்பனை நயம் மிளிரப் பாடியுள்ளார். இது பற்றியே அவருக்கு கற்பனைக் களஞ்சியம் என்ற அடைமொழி சூட்டப்பட்டுள்ளது.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற முறையில் இவ்வாய்வு செய்துள்ளேன். இம்முறையில் ஆய்வின் விரிக்கையில் மிகப் பெரிய தனி நூலாக விரியும் என அஞ்சி இத்துடன் முடிக்கின்றேன்.

அவரது அனைத்து நூல்களிலும் கற்பனை நயம் புராணச் சித்தாந்த கருத்துக்கள் விரவி இருக்கக் காணலாம் என உறுதிபட முடிக்கின்றேன்.

''நீரினால் அழலால் வரும்தொடும் பிணியால்
நிருதரால் அலகையால், விலங்கால்,
சோரரால் வருந்தும் அவரவர் நினது
தூய நாமம்புகன் றிடுவார்
சீருலாம் மணியால் அபெர வுதலால்
திசையுற நின் கையால் எழின்மை
சார்தலால் உமையாள் விழிநிகர் சோண
சைலனே கைலை நாயகனே''

என்பது பாடல்.

இது ஐம்பத்து மூன்றாவது பாடல் சிவபெருமான் பரவெளி என்றால் அதில் அடங்கிய பொருள் எல்லாம் சக்தியே என்ற முறையில் இச்சிலேடை ஒப்புமை மிகப் பொருந்துகிறது.

18. சிவப்பிரகாசரின் பிறமொழித்திறன்

இறையடியான், பெங்களூர்.

சிவப்பிரகாச சுவாமிகள் யாத்துள்ள நூல்களை நோக்குமிடத்து அறநூல்கள், சமய நூல்கள், தனிப்பாடல்கள் எனப் பட்டியலிட முடிகிறது. இவற்றுள் கன்னட மூலத்திலிருந்து பிரபுலிங்க லீலை காப்பியமாகவும், சித்தாந்த சிகாமணி வீரசைவ சமய நூலாகவும் அவர் மொழி பெயர்த்திருப்பது தெரிய வருகிறது.

இவர் மொழி பெயர்த்த இரண்டு நூல்களில் ஒன்றான பிரபுலிங்க லீலை நடுக் கன்னடம் வழக்காற்றில் இருந்த காலக்கட்டத்தில் எழுந்த காவியமாகும். கன்னட மொழியியல் துறையினர் கன்னட மொழியின் வரலாற்றைப் பம்பன் பூர்வ யுகம், பம்பன் யுகம், பசவ யுகம், குமார வியாச யுகம் எனப் பிரித்துள்ளனர். குமார வியாச யுகத்தின் படைப்பாளர்களுள் பிரபுலிங்க லீலையைக் கன்னடத்தில் எழுதிய சாமரசன் ஒருவராவார்.

பம்மன் பூர்வ யுகமும் பம்பன் யுகமும் பழங்கன்னடம் (ஹளே கன்னடா) கோலோச்சிய காலக்கட்டம். அக்காலக் கட்டத்தில் எழுந்துள்ள படைப்புக்களில் தமிழ்ச் சொற்களின் ஆதிக்கத்தைக் கண்டுணர முடிகிறது. அதன் பின்னர் கன்னட மொழி மாற்றங்களுக்கு உட்பட்டு இன்றைய சரள நடைக்கு வந்துள்ளது. இன்றைய கன்னடத்தில் வடமொழியின் தாக்கம் இருப்பதை இங்குக் கோடிட்டுக் காட்ட வேண்டியுள்ளது. பழங்கன்னடம் களையப்படுவதற்குப் பேராசிரியர் கோகாக் முதன்மையானவர் என ஈண்டு சுட்டுவது பொருந்தும்.

கன்னடத்தில் வசனகாரர்கள் காலம் என அறியப்பட்ட காலம் பெருமைக்குரியதாக இன்றளவும் சிறப்பிக்கப்படுகிறது. அது 12 மற்றும் 13-ஆம் நூற்றாண்டுகளாகும். அதன் பின்னரே குமார வியாச யுகமாகிய 15, 16-ஆம் நூற்றாண்டுகளில் பிரபுலிங்க லீலையைப் படைத்த சாமரசன் பேசப்படுகிறார். சாமரசன் வாழ்ந்த காலம் தெளிவாக அறிய முடியவில்லை. அவர் படைத்த அல்லமதேவரின் காலம் எப்படி முரணாகச் சித்திரிக்கப்படுகின்றதோ அதுபோலவே கவியின் காலமும் கி.பி. 1460 (கன்னட அகராதி தொகுத்த கிட்டில்) எனவும் 1430 (EP Rice மற்றும் நரசிம்ம ஆச்சார்யா) எனவும் கூறுகின்றனர். இரண்டு கூற்றுகளிலும் சான்றுகள் நிறுவப்படவில்லை.

கன்னடத்தில் அல்லமன் சரிதையைப் ''பிரபுதேவ ரகளே'' என்னும் பெயரில் கவி ஹரிஹரனும் பிரபுலிங்க லீலை என சாமரசனும் படைத்துள்ளனர். அல்லமன் காவியத்தை முதன் முதலாகப் படைத்த பெருமை ஹரிஹரனையே சாரும். இரண்டு காவியங்களிலும் வேறுபாடுகள் உள. காமத்தின் பிடியில் சிக்குண்ட அல்லமன் விரக்தி அடைகிறான். இதனால் அவனுள் உறுதி உண்டாகிறது. இது ஹரிஹரன் படைத்த காவிய நாயகனின் சித்திரிப்பு. சாமரசனின் காவியத்தில் மாயை காதல் தீயில் வெந்து அல்லமன் கரம் பிடிக்க ஏங்கித் தவிக்கிறாள். இவ்விரண்டு காவியங்களில் சாமரசனின் காவியத்தை மட்டும் மொழிபெயர்க்க சிவப்பிரகாசர் ஏன் முனைந்திருப்பார் என்னும் கேள்வி எழத்தான் செய்கிறது. கன்னட அறிஞர்களால் இன்றளவும் மதித்து போற்றப்படுகிற காவியம் சாமரசன் படைத்துள்ள பிரபுலிங்க லீலை. இதுவொரு காரணம். சூன்ய சம்பாதனே நூலிலிருந்து ஐந்து பாகங்கள் கொண்ட மேலுமொரு அல்லம பிரபுவின் கதையும் காணப்படுகிறது. முதல்பாகம் சிவகண பிரகாதி மகாதேவய்யா எழுத ஏனைய நான்கு பாகங்களை முறையே கெஞ்ச வீரண்ண உடையார், மஜ்ஜ கல்லேஷ்வர தேவா, கும்மாளபுர சித்தலிங்கே பதி, கூனூரு வீரனார்யா ஆகியோர்கள் எழுதியுள்ளனர். ஐவர் எழுதியதில் ஒரே வகையான நடையைக் காண்பதரிது. வீரசைவ கவிகளில் சிறப்புக்கும் பெருமைக்குரியவர் சாமரசன். இவருடைய காவியத்தில் கிளைக் கதைகள் சொல்லப்பட்டாலும் மூலக்கதையில் பின்னடைவு இல்லை.

மேற்கண்ட காரணங்கள் மட்டுமின்றி சாமரசன் படைத்த காவியத்தைத் தெலுங்கில் பிடுபர்தி சோமநாதன், மராட்டியில் லீலா விஷ்வரம்ப என்னும் பெயரில் பிரம்மதாச, வடமொழியில் விருபாஷி பண்டிதன் ஆகியோர்கள் மொழி பெயர்த்திருக்கும் பெருமையின் பின்னணியில் சிவப்பிரகாச சுவாமிகள் தமிழில் பெயர்த்திருக்கிறார் என்ற முடிவுக்கு வர முடிகிறது.

வீரசைவம் பன்னிரெண்டாம் நூற்றாண்டின் மத்தியில் கருநாடகத்தில் வேரூன்றி இருந்தது. இக்காலக் கட்டத்தில்தான் சாமரசன் சிவனின் அவதாரமான அல்லமனின் காவியத்தைப் படைத்திருக்கலாமென ஊகிக்க முடிகிறது. தமிழகத்தில் பெரியபுராணம் படைக்கப்பட்டதால் கருநாடகத்தில் பிரபுலிங்க லீலை எழுதப்பட்டது என்ற காரணத்தை முன் வைக்கிறார் டாக்டர் வெங்கட சுப்பய்யா. கருநாடகத்தின் வடக்குப் பகுதியான கல்யாண், இடைப்பகுதியான சொன்னலாபுரம் தெற்கில் பள்ளிகாவே ஆகிய பகுதிகளில் வீர சைவ நாயன்மார்களாக பசவேஷ்வர், சித்தராமய்யா, அல்லமன் ஆகியோர் இஷ்டலிங்க வழிபாட்டிலும் சிவனின் பெருமையைப் பரப்புவதிலும் கண்ணும் கருத்துமாக இருந்துள்ளனர்.

முன்னர் குறிப்பிட்டதைப் போல 'ற' கரம் பயன்பாட்டில் இருந்த இடைக்கால கன்னட மொழியில் பிரபுலிங்க லீலை எழுதப்பட்டுள்ளது. தெலுங்கு, மராட்டி மொழிகளில் அல்லமனின் புகழ் மேம்பட்டுக் காண வில்லை என்றும் கன்னட மூலத்தை விடத் தமிழில் காவிய குணம் மிகுந்து காணப்படுகிறது என்றார் அறிஞர் பி.எம். சிரிகண்டய்யா. ஆனால் பாத்திரங்களின் குண இயல்பு தமிழில் இல்லையெனச் சொல்லும் அவர் தமிழில் வர்ணனைகள் மிகவும் அபாரம் எனப் புகழாரம் சூட்டுகிறார். தமிழ் பிரபுலிங்க லீலையின் வர்ணனைகளைத் தமக்கு எடுத்துக் காட்டியவர் பி.எம். சோமசுந்தரம் பிள்ளை எம்.ஏ. எல்.டி. எனவும் நினைவு கூர்கிறார்.

நிஜகுணர் எழுதிய விவேக சிந்தாமணி சாமரசன் எழுதிய பிரபுலிங்க லீலை ஆகியவற்றைத் தமிழுக்கு மொழி பெயர்த்த சிவப்பிரகாசரும், தமிழ் நாட்டுப் புராணங்களைக் கன்னடத்துக்குக் கொடுத்த ஹம்பேயின் ஹரிஹர தேவனும் இரு மொழிகளிலும் புலமை பெற்றவர்கள் என்பது திண்ணம்.

உரைநடையை மொழி பெயர்க்கும்போது பெரும்பாலும் மூலத்தின் கருத்தை பெயர்ப்பு மொழியில் பின்பற்றுவது இயல்பானது. காவிய மொன்றை மொழி பெயர்க்கும்போது மொழியின் வளமை காரணமாகக் கவி சுதந்திரமாகச் செயலாற்றுவது தவிர்க்க முடியாதது. இதற்குக் கம்ப இராமாயணத்தைச் சான்றாகக் கூறலாம். சிவப்பிரகாசரும் தமிழின் வளமையை வெளிக்காட்டுவதில் மூலத்தை விட, பல எல்லைகளில் விரித்துக் காட்டுகிறார். கதையின் கருவுக்கு ஊறு நேராமல் முன்னெடுத்துச் செல்வதில் கவனமாகவே இருக்கிறார் எனலாம்.

மாணிக்கம் பதித்த பலகையால் செய்த தொட்டில். அதில் தனது உருவத்தைக் கண்ட குழந்தை மாயை கைகளை வீசுகிறாள். அவளது உருவத்தைப் பிடிக்க அவளால் முடியவில்லை. முடியாமற் போகவே அந்த நிழலைக் கால்களால் உதைக்கக் கால்களின் சலங்கை ஒலியெழும்புகிறது.

இதனைக் கன்னடக் கவி சாமரசன்,

ஹலகே மாணிக்க தொட்டலலி
மாகுல்லிகி மலகி நிரீக்ஷேசுதே
மார்போளத தன்னனே கண்டு நலியுதே நகுதே கைதுடுகி
செலேது தெகேதரு பாரதிரால
நெளலாஒதவுதே காலகெஜ்ஜ
களுலுஹணாளிவ மாயே அறிதளு பாலலீயேயலி!

சிவப்பிரகாசர் அக்காட்சியை மனத்துள் நிறுத்தி இப்படிப் பாடுகிறார்.

கள்ள மாயை தன்னெழிற்போற்
கண்ட தில்லை யென்னமிக
உள்ளம் வியந்து தலையசைப்ப
தொப்ப அசையுஞ் சுடர்பார்த்து
மெள்ள விரலொன் றனைச்சுவைத்து
மிளிர்பூஞ் சதங்கைத் தாளுதைத்தும்
விள்ளு மலர்வாய் குவித்தழுது
மீள நகைத்துங் கிடக்குமால்

அல்லமதேவனை மாயைக்கு விமலை கண் சாடையில் காட்டுகிறாள். மாயை அவனைப் பார்க்கிறாள். கண்கள் பார்க்கின்றன - பேசுகின்றன - கேட்கின்றன - உண்மையை அறிகின்றன என்பதைக் கவிகள் இருவரும் அவரவர் மொழிகளில் படம் பிடிக்கின்றனர்.

கங்களலி மாதுகளு திளிவடே
கங்களலி மாடகளு பகேவடே
கங்களலி சம்மோஹகளு கங்களலி நேஹகளு
கங்களலி சர்வ பிரபஞ்சக
களங்கனேயரிகே சஹஜவெந்தேனே
கங்களிந்த விமலே சூச்சிசலறிதளா மாயே!

தெரிந்து கொள்வதென்றால் கண்கள் வழியே பேச்சு
சிந்திப்பதாய் இருந்தால் கண்களினால் மட்டுமே செயல்
கண்களினால் மட்டும் மோகம் கண்களினால் மட்டும் காதல், நட்பு
கண்களில் மட்டும் இவ்வுலகு முழுவதும்
காதலருக்கு இயற்கையிது - என
கண்களினால் மாயைக்குச் சாடை காட்டினாள் விமலை!

மாயை உண்மை தெளிகிறாள் என்பதைச் சிவப்பிரகாசர் இப்படிப் பாடுகிறார்.

கண்ணினாற் கேட்குஞ் சீர்சால் கங்கணத் திறைவன் முன்னர்
கண்ணினாற் குமரர் நெஞ்சக் கட்டவிழ்த் தாடு வாட்குக்
கண்ணினாற் கூற வந்த கயிலைமா தறிந்தாள் அன்னாள்
கண்ணினாற் கண்டு ஞானக் கண்ணினாற் காண்பான் தன்னை.

''ஞானக் கண்ணினாற் காண்பான் தன்னை அன்னாள்
கண்ணினாற் கண்டு

எனவும் படித்தின்புறலாம்.

அஜகண்ணன் செத்துக் கிடக்கறான். முத்தாயி அம்மை கண்ணீரும் கம்பலையுமாகக் காட்சியளிக்கிறாள். இதனைக் கண்ட அல்லம தேவன், ''தாயே! பக்தர்களுக்குச் சோர்வு முண்டோ? உலக நடப்புகளில் நீ

உழன்று வீணே பற்பல சிந்தனையால் துயரப் படலாமா? பைத்திமே! உடலற்ற அஜகண்ணன் பற்றி மாயமான மோகம் கொள்வது ஏன்? என்பதைக் கன்னடக் கவி சாமரசன்,

''தாயே பக்த்ரிகுண்டே சிந்தே
காளயசங்களு லோக லௌகீக
காயதலநீ திரம மாதாடுத
பாய பிடுலஹதே துருதள நீ!

என்கிறார்.

கன்னடம் நன்கறிந்திருந்த சிவப்பிரகாசர் பொருள் மாறுபடா வண்ணம் தமிழுக்கே உரிய மொழி ஆளுமையோடு

அழிவி லானை அழிந்தனன் என்றுநீ
விழியி னான்மிகு வெள்ளம் பெருக்கினை
கழிவி லாதவா காயங் கழிந்ததென்
றொழிவி லாமல் உளமெலி வார்கள்போல்

என்கிறார்.

கன்னடத்திலிருந்தோ அன்றி வேறு மொழிகளிலிருந்தோ தமிழுக்குக் காவியம், கவிதை, நாவல் போன்றவற்றை அறிமுகம் செய்யுங்கால் மூலமொழியின் சந்தங்கள் நிறைந்த வரிகளைத் தமிழிலேயே எழுதி அதன் நயத்தைத் தெரிந்து கொள்ளும் முகத்தான் பொருள் விளக்குவது மொழி பெயர்ப்பாளரின் கடமைகளுள் ஒன்றாகிறது. சில சமயம் மூலத்தில் உள்ளதைப் போலயே இலக்கு மொழி (Target Language)யில் கொடுப்பதும் உண்டு. சிவப்பிரகாசர் இரண்டாவது கூற்றை ஓரிடத்தில் கையாள்கிறார். இது அன்னாரின் கன்னடம் மற்றும் தமிழ் மொழிகளின் புலமைக்கு ஓர் எடுத்துக்காட்டு என்றே சொல்லலாம்.

ஒட்ட ராமனிதேனு கொடவேய
நொட்டிகொண்டு உடுதா மனஸ்சனு
கொட்டமாடியே கெட்டனனு அல்லமனு கேளிதோடே
குட்டரெல்லரு குருவனாவளு - கன்னடம்

இதனைத் தமிழில் இரத்தினச் சுருக்கமாக அதே சந்தத்தில்

ஒட்டராமன் உளத்தினில்
இட்டம்யாது கொல் இத்தொழில்
முட்டில்லாமல் முயன்றனன்
கொட்டி வீழுமி குத்தல்போல்!

இட்டம் - நோக்கம், முட்டு. இலாமல் - தடங்கல் இல்லாமல், கோட்டி - நெல்லைக் குத்தி, வீழ் - அதில் வந்த (உமியைக் குத்துதல் போற் பயனற்ற செய்கை)

சந்திர முகம், கண்களில் கோடி மின்னலின் ஒளி, ஒளியை உமிழும் பல் வரிசை, கோமளமான கை கால்கள் அரும்பு மீசை, இடையில் பளப்பளப்பான பட்டுத்துணி, பளிச்சென எடுத்துக்காட்டுவதைப் போல் தங்க அரைஞாண், 16 முதல் 18 வயதின் தோற்றம்.

மெல்லிய விரல்கள் - முதுகில் சுமந்த மத்தளம், செவிகளில் தொங்கும் இரத்தின காதணிகள், கழுத்தில் மணிச்சரம், நெற்றியில் துலங்கும் சந்தனப்பொட்டு.

மதுகேஷவ ஆலய வாசலில் நின்றவாறு பல்வகை தாள இலயத்தோடு இனிமையும் மென்மையுமான நிரவுகளோடு கேட்போரைப் பிணைக்கும் வண்ணம் மத்தளம் கொட்டினான் அல்லமன்.

மழைக்கால வானத்தில் குவிந்த மேகங்களின் ஒலியைச் செவி மடுக்கும் மயில் போல் அல்லமன் இசைகேட்டு மகிழ்ச்சி அடைந்து யாரென வினவினாள் மாயை. மேற்கண்ட வர்ணனைகளைக் கன்னடக் கவி சாமரசன்,

கங்களலி நடே நோடிதோடே
ஹெறஹிங்பாரத செலுவ முகத சுரங்க
சூசுவ தந்தபங்திய தொளவ கண்ணுகள
அங்க வட்டத சரளிகேய
ஹஸ்தங்கிரியே கோமளத
கர்வாங்கபங்கிய சௌமியதேய தரிசிதனு பிரபுராய
....
....
....
காரமுகிலின கர்ஜனேய கிவியாரே
கேளுவ கோகேயந்தீரே
ஹாராயிசுதலி அல்லமன மத்தளேய தனிகேள்து
நிந்து நானாபரிய வஹனிகளிந்த
தாள சமேள சத்கதியிந்த உக்கடனேய கடாவனேயிந் தல்லமனு
அந்து மதுகேஷ்வரன பாகிலமுந்தே
பாறசுதிர்தளன ஹல
வந்ததலி மத்தளேய கேளுவரெல்லா பெறகாகி.........

இதனைச் சிவப்பிரகாசர் தீந்தமிழில்,

விளிம்புற நடுக்க ளங்கம் வீழ்ந்துசூழ் மதியொன் றுண்டேல்
வளங்கெழு மயிரொ முங்கு வள்ளல்வான் முகநி கர்க்கும்
துளங்குறும் உந்தி மேற்போய் மார்பிடைத் தோன்று ரோமம்
இளங்கரு நளினம் உண்டேல் ஏய்க்குமென் றியம்ப நின்றான்.

விலைவரம் மறியா ஆடை விரித்துடுத் தரையி லங்க
மலைவரும் புதிய சந்தும் மான்மதங் காத நாறக்
கலைவரம் பறிந்து ளோர்தங் கருத்தினுக் கரிதா யென்முன்
தலைவருங் கமலப் பொற்றாள் தம்பிரான் மலியச் சாத்தி

தளிர்த்ததண் பொழிலில் தேமாந் தடஞ்சினைக் குயில்மு கம்போல்
துளித்தலை முகில்க வற்றுஞ் கரிகுழற் சிகழி ஆர்த்திட்
டளித் தொடர்மாலை வேய்ந்தவ் வலங்கனோக் குறுவோர்க் கெல்லாம்
வெளிற்றுரைப் பொருள்போல் தோன்ற மென்தலைச் சாத்த ணிந்து

களத்திடை இருப்பின் உண்மை காண்குவர் என்ன ஆலம்
குளத்திடை வாங்கி வைத்த கொள்கைபோல் திலகந் தீட்டி
ஒளித்தனி மதிதன் பாங்கர் உரோணியோ டொருபெண் கூட்டி
அளித்துற வைத்த தென்ன அணிமணி செவிக்க ணிந்து

விலையில்வெண் தரளக் கோவை வீரசங் கிலிகே யூரம்
இலகுசெம் மணிப்பொன் னாழி யிவைமுத லாய எல்லாக்
கலனுமொண் கவினெ னுஞ்செங் கனலிற்பெய் நறுநெயென்ன
மலைவினங் குருகு கேசன் வயங்குறுப் பெலாம ணிந்து

இந்திர திருவிற் கேற்ற இலக்கணம் முழுதும் வாய்த்த
சுந்தர குமரற் காவா இதனைத்தான் சுமப்ப தாக
வந்துள தெதுகொ லோலென் றெண்ணியமா னிடர்ம யங்க
நிந்தையின் முதுகின் பால்தண் ணுமையொன்று நிகழத் தாங்கி

சென்றருள் மதுகை நாதன் திருமுன்வான் சுடவ்வ லஞ்சூழ்
குன்றுறழ் கொடுநெ டும்பொற் கோபுரத் தெதிர்போய் நின்று
மன்றிடை நவில்கூத் தாடி மத்தளத் தொழில்கைக் கொண்டோன்
என்றுள மருள எங்கோன் எறிந்துதண் ணுமையை திர்ந்தான்.

மேற்கண்ட வரிகளில் கன்னடக் கவியின் சீர்களையொட்டியும் பொருள் நயம் சிதைவுறா வகையிலும் கற்பனை வளத்தை ஆங்காங்கே நிரவியும் சிவப்பிரகாசர் பிரபுலிங்க லீலை என்கிற செவ்விய காப்பியத்தைத் தமிழில் வடித்திருக்கிறார். ஒவ்வொரு வரியாக எடுத்துக் கொண்டு உவமை அணிகளாகச் சீர்தூக்கிப் பார்ப்போமானால் சிவப்பிரகாசரின் காவியப் புகழ் மென்மேலும் கண்டின்புறலாம். கட்டுரையின் விரிவஞ்சி கன்னட மூலத்தின் பொருளை மட்டுமே சுருக்கமாக ஆங்காங்கே கோடிட்டுக் காட்டியுள்ளேன்.

பிறர் அறியும் வண்ணம் யாரொருவன் மனத்தைச் சஞ்சலப்படுத்திக் கொள்கின்றானோ அவன் அஞ்ஞானி. சஞ்சலம் யாதுமின்றி மனத்தை உள்முகமாக திருப்புவோன் எல்லாம் அறிந்தவன். மனத்தை அந்தரத்தில் நிலைக்கச் செய்பவன் மேன்மையான அறிவுடையோன் ஆகிறான்.

மனத்தை நாசம் செய்யும் ஒருவன் பிறப்பு இறப்பு அற்றவனாகிறான். இக்கருத்தை கன்னடக் கவி சாமரசன்,

மனத பஹிரங்கதலி சலிசுவ
மனுஜனவஞ்ஞானி மத்தா
மனவனம் தா்முகதலாச்சரிதோட சர்வக்ஞ
மனவு மனதலி நிந்து நில்லா
சனேயளிதே சுக்ஞானியந்தா
மனவநவிதரே நித்யனன பசவண்ணா கேளந்தா!

மனத - மனதை, பஹிரங்கதலி - பகிரங்கமாக, சவிசுவ - அலை பாயவிடும், மனுஜன - மனிதன், அஞ்ஞானி - மூடன், மத்தா - அந்த, மனவனம் - மனத்தை, தர்முகலாச்சரி சிதோட - உள் முகமாக நிறுத்துவோன், சர்வக்ஞ - எல்லாம் அறிந்தவன், மனவு மனதலி நிந்து - நில்லா மனத்தை மனத்துள் நிலை நிறுத்தியும், நிறுத்தாத தன்மையோன், சுக்ஞானி - மேன்மையான அறிவுடையவன், மனவதலிதரே - மனத்தை அழித்து விட்டால், நித்யன - பிறப்பு இறப்பு இல்லாதவன்.

இதனைத் தமிழாக்கம் செய்துள்ள கவியின் வரிகளை ஈண்டு நோக்குவோம்.

மனத்தை அடக்க மனந்துணை ஆகும்
பிணைத்துணை இன்றது பெற்றனன் ஆயின்
தனிச்சிவ மேயொரு தானென வாழ்வன்
நினைத்து மறந்து நிலத்துழ லானே

இன்னும் சற்று ஆழமான கருத்துடன் சிவப்பிரகாசர் மனத்தின் நிலைப் பாட்டை இப்படி வெளிப்படுத்துகிறார்.

வாரணம் ஆகும் மனத்தை அடக்கிற்
காரண மாயை களைந்தொழி யாத
பூரண மாகிய போதம் அடைந்திட்
டாரணம் ஓதும் அரும்பொருள் ஆவான்!

வாரணம் - யானையைப் போன்ற, காரண மாயை - பிறப்புக்கு காரணமாகிய மாயை, ஆரணம் - மறை

(மனத்தை அடக்கியவன் வீடுபேறெய்துவான்)

கன்னட அறிஞர் திரு. பி.எம். ஸ்ரீகண்டய்யா குறிப்பிடுவதைப் போல் கன்னட மூலத்தை விட தமிழில் காவிய குணம் மிகுந்து காணப் படுகிறது என்பதை மீண்டும் நெஞ்சில் நிலை நிறுத்தி, சிவப்பிரகாச சுவாமிகளின் கன்னடப் புலமையை ஈண்டுப் போற்றுவோம். பி.கு. கன்னடத் - தமிழ் பிரபுலிங்க லீலைகளை அறிஞர்கள் ஒப்பிட்டு ஆய்வாளர்கள் என நம்புகிறேன்.

19. திருநீறும் அக்கமணிமாலையும்

பி. உமா, மீஞ்சூர்.

சிவானுபூதிச் செல்வர் சிவப்பிரகாசர் திருவண்ணாமலை கிரிவலம் வருவதற்குள் சோணசைலமாலையைச் சூட்டி சிவப்பெருமானைப் பணிந்தவர். திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதி பாடி, திருச்செந்தூர் கோவிலை வலம் வந்து வசைபாடிய புலவரை வென்று, சிந்து பூந் துறையில் தருமபுர ஆதின வெள்ளியம்பலவாண சுவாமிகளுக்குக் குரு காணிக்கையாக்கி அடிமை பூணச் செய்தார். எண்ணற்ற பக்தி இலக்கியங் களையும், பிரபுலிங்க லீலை என்னும் வீரசைவக் காவியத்தையும் வழங்கிய சிவநெறிச் செல்வர் தமது 32-ஆம் அகவையிலேயே பரசிவத்தில் இரண்டறக் கலந்த பெருமைக்குரியவர். சான்றோர்வாழ் தொண்டை நன்னாட்டில், கல்வியிற் சிறந்த காஞ்சி மாநகரில் சைவமும் தமிழும் ஓங்கப் பாடுபட்ட அவர் முப்போதும் சிவனையே சிந்தித்து, துறவு நெறி நின்று வேதாந்த சூடாமணி, சித்தாந்த சிகாமணி முதலிய நூல்களையும் அருளியுள்ளார். ஒருமுறை கடற்கரை மணலில் அவர் எழுதிய ‘நன்னெறி’ பிஞ்சு நெஞ்சங்களில் அறத்தை விதைக்கும் இனிய முயற்சிக்கு முன்னுரையானது.

திருநீறு குறியீடாகி நின்று, உலக வாழ்வின் அநித்தியத்தை விளக்கு கிறது. நீறில்லா நெற்றி பாழ்; சிவாலயம் இல்லாத கிராமம் பாழ்; சிவபூஜை இல்லாத பிறவி பாழ்; சிவ சம்பந்தம் இல்லாத கல்வி பாழ் என்று சைவர்கள் வாழ்க்கையில் குறிக்கோள் மேற்கொள்கின்றனர். யுகாந்த காலத்தில் அனைத்தும் வெந்து சாம்பலாகும்போது சிவபெருமான் வெந்த சாம்பலை விரையெனப் பூசி சுடுகாட்டில் ஆடுவதாகப் புராணங்கள் பேசும்.

‘‘முத்தி தருவதுநீறு முனிவர் அணிவது நீறு
சத்தியமாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திரு ஆலவாயான் திருநீறே’’

(திருஞானசம்பந்தர்)

திருநீற்றுப் பதிகங்கள் வாயிலாக நீற்றின் பெருமையைச் சைவ சமயக் குரவர்கள் விளக்கியுள்ளனர். வாழையடி வாழை என வந்த

திருக்கூட்ட மரபில் ஒருவராகும் திருவருட் பிரகாச வள்ளலார் வழிகாட்டுவதைக் காண்போம்.

''பாடற்கினிய வாக்களிக்கும் பாலும் சோறும் பரிந்தளிக்கும்
கூடற்கினிய அடியவர்தம் கூட்டம் அளிக்கும் குணம் அளிக்கும்
ஆடற்கினிய நெஞ்சே! நீ அஞ்சேல் என்மேல் ஆணை கண்டாய்
தேடற்கினிய சீரளிக்கும் சிவாயநம என்றிடு நீறே''.

சிவஞான போதத்தின் இறுதிப் பாடலில் இது வகுத்துரைப்பதைக் காண்போம்.

செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
அம்மலர் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே

சிவமயமாகும் தூய சிந்தையின் அன்பர்கள், தமது அகத்தைப் போலவே புறத்தும் சிவமணம் கமழ விளங்குதல் இயல்பே. அவர்கள் முப்போதும் நீறு பூசி அக்கமணிமாலை அணிந்து, இலிங்க வழிபாடு செய்து, ஐந்தெழுத்து ஓதி அன்பர்பணி செய்து சத்தியம், சிவம், சுந்தரமாய் வாழ்வுப் பயன் பெறுகின்றனர்.

'நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து நான்நடுவே
வீடகத்தே புகுந்திடவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்'

என்பார் மணிவாசகப் பெருந்தகை. அன்பர்தம் சிந்தை அன்பே சிவமாகும் மெய்ப்பொருள் உண்மையை உள்ளங்கை நெல்லிக்கனி என ஓர்ந்து

'அன்பர் பணிசெய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந்து எய்தும் பராபரமே'

என்னும் தாயுமானவரின் அனுபவ உரைப்படி பயணம் மேற்கொள்ளும்.

'மெய்யெலாம் நீறு பூசி வேணிகள் முடித்துக்கட்டி பொய்வேடமிட்டு, கருத்தினுள் இருட்டு வைத்து கொலை செய்ய வரும் பகைவர்க்கும் அருளி 'வேடமே மெய்ப்பொருள்' எனும் இறுதி தலையன்பில் மேம்படுவதைத் தொண்டர் புராணம் காட்டுகிறது. வழியில் வந்த வண்ணானைக் கண்டு நீறு பூசி வருவதாக நினைந்த சேரமான் பெருமாள் நாயனார் வணங்க அவன் 'அடிவண்ணான்' எனவும், தாம் 'அடிச்சேரன்' எனப் பகர்ந்து, 'வருந்த வேண்டாம் தங்கள் தோற்றம் எனக்குப் பரமனை நினைப்பித்தது' என்று சென்ற உழுவல் அன்பின் உருவகங்களை எண்ணும்தோறும் எவர்க்கும் உண்மை ஒளி உண்டாகும்.

சோணசைலமாலையில் திருநீற்றுச் சிறப்பு

''வெண்திரு நீறு புனையுமா தவர்க்கு விருந்து செய்து
உறும்பெரும் மிடியுங்
கொண்டநல் விரதத்து இளைக்கும் யாக்கையும்மிக
கொடியனேற்கு அருளும்நாள் உளதோ? (20)

திருநீறு புனைந்து தவ ஒழுக்கத்தில் நிலைப்பார்க்கு, விருந்து அளிப்பதால் பெரும் வறுமை உண்டாயினும் அதனை ஏற்க அடிகளின் இச்சையை மேலே கண்டோம். அப்படிப்பட்ட அடியவர்க்கு ஆட்பட அவர் மனம் உருகுவதைக் கீழே காணலாம்.

''அள்ளிவெண் திருநீறு உடல்முழுது அணியும்
அடியவர்ப்பெறின் எழுந்து இளங்கன்று
உள்ளிநின்று உருகும் அன்னையின் மனம்நெக்கு உருகுபு
சென்றிறைஞ் சிலனே'' (44)

புலனிச்சைகளைப் பரமன்பால் திருப்பும் முறையில் அடிகள் துதிப்பதைக் காண்போம்.

''ஐயநுண் மருங்குல் மாதர்மேல் வைத்த ஆதரவுஉன் பதாம்
புயத்தும்,
மெய்யுறு நறுமென் கலவையின் விருப்பு வெண்திரு
நீற்றிலும் வருமோ? (64)

உடலை இகழ்ந்து விடாமலும், உடல் முழுவதும் திருநீற்றினைப் பூச அன்புறாமலும், ஐந்தெழுத்தைத் தியானிக்காமலும் உழலும் என்னைக் கொடுங்கூற்று என் செய்யுமோ? என்று நம் நிலையில் இருந்து வேண்டுகிறார் சிவப்பிரகாச சுவாமிகள்.

''நிந்தியாது உடலம் முழுவதும் நீறு அணிய நேசியாது அமல
ஐந்து எழுத்தும்
சிந்தியாது உழலும் எனைக் கொடுங்கூற்று என்செய்யுமோ?
அறிந்திலேன் தமியேன்'' (83)

திருநீற்றைப் புண்டரமாக அணிந்து, அக்கமாலை தரித்து, சிவபூசனை புரியும் வேட்கையை அடிகளார் கீழ்க்கண்டவாறு பாடுகிறார்.

''கண்டிகைக் கலனே கலனென விழைந்து காயமேல்
அணிந்துவெண் ணீற்றுப்
புண்டரக் குறிசேர் நுதலொடு நினை யான் பூசனை புரியுமா
றருளாய்'' (85)

இனி பிரபுலிங்க லீலை காவியத்தில் திருநீற்றுச் சிறப்பையும் அக்க மணிமாலை மகத்துவத்தையும் அடிகளார் வகுத்தவண்ணம் காண்போம்.

நந்திதேவர் வசவராகப் பிறந்தபோது சிவபெருமான் (கூடலசங்கமம் என்றும் திருப்பதி ஈசன்) குழந்தையின் நெற்றியில் திருநீறணிந்து, இட்ட லிங்கம் கட்டி, தானே குருவாகி, வசவன் என்று பெயரிட்டு மறைந்தார்.

''கூடல சங்கமேசன் தாய்க் கொளிந்துக் குறுகி நன்னுதலின் நீறணிந்து
வீடருள் பரம சிற்கன லிங்கம் மெய்யுறத் தரித்தனன் அம்மா''

''பிறந்தமெய்ஞ் ஞானப் பிள்ளைநல் நுதலில் பெருகொளி நீறும் ஒன்களத்தில்
சிறந்துள அமல லிங்கமும் கண்டு செறிந்தவர் அனைவரும் வியந்து
மறைந்தனன் குருவாய் வந்(து) இவை புனைந்து மகவினை வசவன் என்(று) ஒருபேர்
அறைந்தனன் என்ன அறிந்தனர் அமலன் அறிவுள் நின்று அறிவிக்க அன்றே!''

மேலே கண்ட பாடல்களால் சிவபெருமான் தாமே குருவாய் வந்து ஆட்கொள்ளும் திறத்தையும், திருநீறு பூசி, வழியடிமை கொள்வதையும் தெளிவாக அறிகிறோம்.

சிவபெருமானின் அவதாரமாகிய அல்லம தேவர் ஞானோபதேசம் செய்து மெய்யுணர்வளித்து இன்னார், இனியார் எனக் கருதாது யாவருக்கும் அருள் புரியும் நிலையில்

''பொடிய ணிந்(து) எழில் பொங்குறும் அல்லமன்
அடியர் தங்கள் அகத்தில் துயரினை
உடையி ழந்த ஒருவன் கரமெனக்
கடித டைந்து களைந்தருள் செய்யும் நாள்''

என சிவப்பிரகாச அடிகளார் பாடிச் செல்கிறார். திருநீறு பூசுவதால் அல்லம தேவரின் அழகு மேலும் சிறப்படைவதாகக் காட்டுகிறார். வீடுபேற்றிற்குரிய சாதனங்களுள் திருநீற்றையே முந்தியது என்றும் அடிகளார் வாக்கால் அறிகிறோம். 'சாதனங்களுள் நீறு முந்திய தென்பர்'.

இனி 'பிரபுலிங்க லீலை' காவிய இறுதியில் அடிகளார் உறுதியாக விதந்தோதியுள்ளமை காணலாம்.

''பொருவரும் பூதி வாழ்க! பூதியை அணிவோர் வாழ்க!
திருவனர் கண்டி வாழ்க! சிறந்த அஞ்செழுத்தும் வாழ்க!
குருவருள் வாழ்க! மெய்யைக் கூறும் நாவோர்கள் வாழ்க!
வெருவரும் பிறவி தீர்க்கும் வித்தகர் வாழ்க! வாழ்க!''

திருநீற்றின் பெருமைகள்

இத்திருநீறு தூய்மையினையும், சுசியினையும், வியாதி நாசத்தினையும், கைவல்ய முக்தியையும் தரவல்லது. கங்கை நீர் போல் பரம பவித்திர மானது. விஷ நாசம், குரோத நாசம் செய்து பரம சுகத்தையும், சாந்தத்தை யும் அளிக்க வல்லது. உலக வசீகரம் செய்விக்கும் பேராற்றல் கொண்டது, பூதம், பிரேச, பிசாச தோஷங்களை அகற்றவல்லது.

திருநீறு அணியும் முறை

தூய வெண்மையான விபூதி அஷ்ட ஐஸ்வர்யங்களையும் தரும். சுட்டு விரல், நடுவிரல், ஆழிவிரலினால் முப்பட்டை அணிதல் வேண்டும். இவ்வாறு அணிபவனது ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங் களும் அழியும். ஞானம் சித்திக்கும். வடக்கு, கிழக்கு முதலிய திசை களை நோக்கியபடி சிவமூர்த்தியைச் சிந்தித்து மௌனமாக அண்ணாந்தபடி சிந்தாமல், சிதறாமல் ஐந்தெழுத்து ஓதி விபூதியை அணிதல் வேண்டும்.

அக்னி சிவ ஸ்வரூபம், சந்திரன் சக்தி ஸ்வரூபம், சந்திரன் அக்னியை நீங்கான். இவ்விரண்டும் இயைந்தது அமுதம். உலகம் அக்னியால் தூய்மையுறும் உலகத்தோர் அக்னியில் பிறந்த திருநீற்றை அணிவர் (லிங்க புராணம்).

முப்பட்டை வடிவில் விபூதியைத் தரிப்பதே சிறப்பெனக் குற்றமற்ற பெரியோர்கள் கூறியுள்ளனர். தனது வலக்கை நடுவிரல்கள் மூன்றாம் அறுவிரல் அளவோ, கடைக்கண் வரையோ, அளக அளவோ முறைப்படி விபூதியைப் பூசுக. இவ்வாறு பூசும் திருநீற்றால் பஞ்சிற்பட்ட தீப்பொறி போல் நம் பிறவிப்பிணி மாயும் என நல்லோர் நவில்வர். இத்தகு திருநீற்றுச் சிறப்பு மலயத் திருந்து அருந்தவம் புரிந்த அகத்திய மாமுனிவர்க்கு இறைவனால் உரைக்கப்பட்டது.

காலை, நண்பகல், மாலை எனும் முப்பொழுதில் ஒருபொழுதேனும் குறைவிலாமல் முறைப்படி முப்பட்டை விபூதியை அணிபவன் உருத்திரனே யாவான். ஐயமில்லை. மேலும் அவன் மும்மூர்த்தி மயமாய்த் திகழ்வான்.

''முப்பொழுதின் ஒருபொழு தாயினும்
திருவெண் ணீற்றினால் முறைவழாமல்
அப்புனித அரும் திரிபுண்டரம் இடுவோன்
உருத் திரனே ஐயமில்லை. (சித்தாந்த சிகாமணி)

''இப்பரிசு நல்திரிபுண்டரம் இடுவோன் இறைதருமத்து
இசைவுற்று அன்னோன்
ஒப்பரிய மும்மூர்த்தி மயனாவன் எனச் சுருதி உரைக்கு மன்றே''.

மேலும் சித்தாந்த சிகாமணி கூறுவதைக் காண்போம்.

''பூதிதனை அணிந்(து) அதனிற்
பட்டகலாக் கருத்தொடு நற்புனிதனாகிச்
சோதிமய மாயசிவமெனும் பொருளை
விளக்குதலால் தூய்தாம் வெண்ணீறு
ஓதலுறு பசிதமொடு பசுமமெனப்
பட்டிடும்என்(று) உளத்திற் கொண்டு
போதுமவன் யாவன்அவன் உயர்ந்தவன்
இங்(கு)உபாதி யறும்பூதி யுள்ளோன்''.

திருநீற்றை அணிவதால் ஒருவன் புனிதனாகிறான். தூய திருநீறு சோதி மயமான சிவபரம்பொருளை விளக்குகின்றது. இத்திருநீறு பஸிதம், பஸ்மம் என அழைக்கப்படும் தன்மையை அறிந்து நீறணிவோன், பிறவி நோய் தீர்வான். பஸிதம், பஸ்மம் என்ற இரு சொற்களை ஆசிரியர் சுட்டிச் செல்கிறார். பாவத்தைப் பொசுக்க வல்லது பஸ்மம். தன்னை அணிவோனை பிரகாசிக்கச் செய்வது பஸிதம்.

திருநீற்றை அணியும்போது பிரணவ ஜபத்துடன் புனைந்திடுக, அத்தகைய திருநீறு அநாதி மல இருள் நீக்கும். பலப்பல பிறவிகளில் தொடர்ந்து வரும் மும்மலமாகிய இருளைப் போக்கி நல் ஒளி காட்டும்.

விபூதி ஸ்நானம்

''விதி முறையின் விபூதிதனில் மூழ்குறுதல் கங்கை முதல்
விரிநீ ராட்டின்
அதிகமென அறிக, புறமா(சு) ஒழிப்ப தாகிச் சிற்றாவி மாயும்
நதி அறலின் மூழ்குதலின் விருப்பென்கொல் உண்மலின
நசித்து மிக்க
முதிரும் அறி(வு) உதவி இடர்ப் பகுதி நீக்குறு நீற்றின்
மூழ்கு வோர்க்கே''.

திருநீற்று ஸ்நானம் கங்கை முதல் புனித நீராடலினும் மேலானது. புறமாசு ஒழிக்கும் புனித நீராடலினும், அகமாசு ஒழித்துப் பேரறிவு நல்கி பேரிடர் தணிக்கும் திருநீற்று ஸ்நானம் சிறப்புடையது.

''எழுமுறை ஐந்(து) எழுத்தோதி உடல் முழுதும் தூளனம்
செய்திட்டுப் பின்னர்
வழுவகல உயிர் திரிபுண்டரம் இடுக அன்றி முணம் வரும் உத்தூளம்
விழுமியவென புண்டரத்தோடு ஒவ்வாமையால் அதனை
விடுத்தே யேனும்
செழுமைதரு புண்டரமே இடுகவென அறைந்திடுவர் தீதகன்றோர்''.

இவ்வாறு சித்தாந்த சிகாமணியில் விபூதி மகிமைகளைக் கண்டோம்.

உருத்திர அக்கமாலை

இது இமயமலையைச் சார்ந்த காடுகளில் உண்டாகும் மரத்தின் பழத்திலுள்ள விதை. இது வைதீகரால் கொண்டாடப்படுகிறது. இதனை வீர சைவர் உடல் முழுதும் தரிக்கின்றனர். இது ஆணவாதி மலக் குற்றங்களையும், வாதாதி முத்தோஷங்களையும் போக்கும். இது திரிபுர சங்காரத்தின் பொருட்டு எழுந்தருளிய உருத்திர மூர்த்தியின் கோபக் கண்களில் உண்டான ஒரு வித்தினின்று முளைத்த விருட்சத்தின் மணியாகக் கருதப்படுகிறது.

உருத்திரன் கண்ணிற் பிறந்ததால் உருத்திராக்ஷம் எனப் பெயர் பெற்றது. இதனைச் சிவாகமத்தில் கூறிய முறைப்படி சிரம் முதலிய தலங்களில் தரிப்பவர் சகல பாவங்களினின்றும் நீங்குவர். இம்மணி தரித்து முத்தி பெற்றோர் சரிதைகளை உபதேச காண்டம், சூத சம்ஹிதை முதலிய நூல்களில் காணலாம்.

மனிதன் உறங்குகையிலும் பானம் செய்கையிலும் எல்லாக் காலத்திலும் உருத்ராக்ஷத்தை அணிந்து கொண்டிருக்கட்டும். நெல்லிக்காயளவுள்ள உருத்ராக்ஷம் சிறந்ததெனப்படும். இலந்தைப்பழ அளவு மத்திமம். இயற்கையிலேயே துவாரமுள்ளது உத்தமம். மனிதனால் துவாரம் செய்யப்பட்டது மத்திமம், சமமாகவும் பளபளப்பாகவும் கெட்டியாகவும் பருமனாகவும் உள்ளவற்றைப் பொறுக்கியெடுத்துப் பட்டு நூலில் கோத்து அணிந்து கொள்ள வேண்டும். முழுதும் ஒரே மாதிரி உள்ளவை ஸாமான்யம். எதில் பொன் வர்ணமான கோடு தெரிகிறதோ அது உத்தமம். அது சிவ பூஜை செய்பவர்களால் அணிதற்குரியது. ஒன்று முதல் பதினான்கு முக உருத்ராக்ஷங்கள் உள்ளன. (உருத்ராக்ஷ. ஜாபாலோபநிஷத்).

தவமும் தவமுடையாருக்கு ஆகும் என்பார் வள்ளுவர். சிவப்பிரகாசரின் சமயப் பற்று ஆழமானது, அளவற்றது. வீர சைவத் திலகமாகும் அவர் காவியமும் படைத்து சிவ பரம்பொருளை வணங்கி, தம் வாழ்நாளைப் புனிதப்படுத்தியுள்ளார். அடிகள் வகுத்தவாறு திருநீற்று மகிமைகளையும், அக்கமணிமாலைச் சிறப்பையும் உணர்ந்து சிவநெறியாம் தவநெறியில் தழைத்து மெய்ஞானம் அடைவோமாக.

20. சிவப்பிரகாசரின் திருவெங்கைக் கலம்பகம்

ச. உமா அறிவழகன், சென்னை.

பதினேழாம் நூற்றாண்டில் தலைசிறந்து விளங்கிய புலவர் இருவர். ஊமையாய் இருந்து பின்பு இறை அருள் பெற்ற குமரகுருபரர் ஒருவர். சான்றோருடைத்து எனப் போற்றப்பெறும் தொண்டை நாட்டில் காஞ்சி மாநகரில் தோன்றிய துறைமங்கலம் சிவப்பிரகாசர் மற்றொருவர். சிவப்பிரகாசரின் கவித்திறனைக் கண்டு வியக்காத புலவர்கள் இல்லை எனலாம். இவர் சிற்றிலக்கிய வகைகளில் சிறப்பான அந்தாதி, மாலை, கோவை, கலம்பகம், பிள்ளைத்தமிழ், உலா போன்ற பல சிற்றிலக்கிய நூல்களை இயற்றியுள்ளார். இவர் இயற்றிய ''பிரபுலிங்க லீலை'' எனும் காப்பியச் சிறப்பால் இவரை ''கற்பனைக் களஞ்சியம்'' என்று அனைவரும் போற்றினர். இலக்கணக் கடல் எனவும் புலவர்களால் பாராட்டப் பெற்றவர் இவர்.

இலக்கணப் புலமை இயற்கையிலேயே பெற்றிருந்தவர் என்பதை அவர் பாடிய

''குடக்கோடு வானெயிறு கொண்டார்க்குக் கேழல்
முடக்கோடு முன்னமணி வாற்கு - வடக்கோடு
தேருடையான் றெவ்வுக்குத் தில்லைதோல் மேற்கொள்ளல்
ஊருடையான் என்னும் உலகு''

என்ற பாடல் மூலம் அறியலாம்.

கலம்பக இலக்கணம்

கலம்பகம் என்பது, பலவகை உறுப்பும், பொருளும், பாட்டும் கலந்து பாடப் பெறுவது

''பல்பூ மிடைந்த பாடலைக் கண்ணி'' (174 வரி)

என்ற பெரும்பாணாற்றுப்படைத் தொடருக்கு

''பலபூக்கள் நெருங்கிய கலம்பகமாகிய மாலை''

என்று நச்சினார்க்கினியர் உரை செய்திருக்கின்றார்.

தொண்டரடிப் பொடியாழ்வார் இயற்றிய திருப்பள்ளியெழுச்சியில் வரும்,

"களிவண்டு மிழற்றிய கலம்பகம் புணைந்த அலங்கலந் தொடையல்" (5)

என்று கூறுகின்றார்.

ஆகவே, பல்வேறு வகைப்பட்ட நிறமும், வடிவும், மணமும் உடைய மலர்களால் தொடுக்கப்பட்ட பூமாலை, கலம்பகம் என்று பெயர் பெற்றது போல, பலவகையான ஓசை நயமுடைய பாக்களும், இனங்களும், உறுப்புக்களும் பயின்று, அகமும், புறமும் ஆகிய திணைகள் விரவி, உவகை, பெருமிதம் முதலிய சுவைகளை உடையதாய் அமையப் பாடப்படும் பாடல் கலம்பகம் என்று வழங்கப்பெறும். இக்கலம்பக இலக்கியங்கள் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு முதல் தோன்றத் தொடங்கின என்ற கருத்து நிலவுகின்றது.

திருவெங்கைக் கலம்பகம்

திருவெங்கையில் எழுந்தருளியுள்ள சிவபிரான் மீது பாடப் பெற்றது. நூறு பாடல்களைக் கொண்டது. கலம்பகத்திற்குரிய இலக்கணங் களும் சிறப்புக்களும் நன்கமைந்து விளங்குவது. சொற்பொருட் சுவைகள் நிறைந்த பாடல்களைக் கொண்டும், இலக்கண அமைதிகளை இடத்திற் கேற்றவாறு நயமுடன் இயைத்துக் காட்டும் தன்மையும் உடையதாக இக்கலம்பகம் அமைந்துள்ளது.

திருவெங்கைக் கலம்பக முதற்பாடல்

''கலம்பக முதற்பாடல் கொச்சக ஒரு போகு என்ற பாட்டாக வேண்டும் என்பது விதி. அப்பாட்டின் முதல் உறுப்பு தரவாகும். பெரும் பாலும் தரவெல்லாம் தலைவனைப் பற்றிக் கூறி முடிவில் அவனை விளிக்கும் விளியாகவே அமையும்'' என்பர். சிவப்பிரகாசரின் சிவஞான பாலய சுவாமிகள் கலம்பகத்தில் இவ்வாறு அமைந்துள்ளதைக் காண முடிகின்றது. ஆனால் திருவெங்கைக் கலம்பகத்தில் அதற்கு மாறுபட்டு இருப்பதை ''ஆ. சிவலிங்கனார்'' தம் உரையில் கூறியுள்ளார்.

''சீர்பூத்த நிறைமதிமான் திருகரங் கொண்டம் மதியை
யேர்பூத்த சடாமௌலிக் கியையவீர்ந் தனையிருத்தி
மற்றையவோர் பகவுமணி மார்பகத்திற் கிடந்திமைப்பக்
கொற்றவநீ யிருங்கேழற் கோடெனப்பூண் டருளினைகொல்
பூம்புனலோ பொன்முடிக்கண் புல்லோநஞ் சுமிழ்எயிற்றுப்
பாம்பினமோ கண்டுனது பாணியின் மான் தாவுவதே''

நிறைமதியிடத்திருந்து மானைப் பிடித்துத் திருகரத்திற் கொண்டு அம்மதியினைப் பிளந்து சடை முடியில் இருத்தினாய். அம்மதி யினைப் பிளந்து சடை முடியில் இருத்தினாய். அம்மதியின் மற்றொரு

பிளவு என்னுமாறு கரிய பன்றியின் கொம்பினை மார்பகத்தில் கொண்டாய்.

நின் முடிக்கண் உள்ள பூம்புனலையோ வில்வம் முதலிய புல்லையோ நஞ்சுமிழும் பற்களை உடைய பாம்பினத்தையோ கண்டு உனது கையிலுள்ள மான் தாவுவதாயிற்று என்பது இதன் பொருள். இதில் கொற்றவ என்ற சொல் ஒன்றே விளிக்குரியதாக அமைந்துள்ளது.

கற்பனை நயம்

தாமரை மலர் ஒரு தண்டில் பூப்பதைப் பற்றி த்லைவியிடம் தலைவன் கூறுவதாக ஒரு பாடல் அமைந்துள்ளது. அப்பாடலில் ஆசிரியரின் கற்பனையைக் காணலாம்.

பெருந்தகைமை தனக்கன்றி மற்றையபூ
 வினுக்கிலையென் பெற்றி யன்றோ
திருந்துதட மதிற்குவளை குமுதமலரோ
 டுறுப்பினையே சிவண நிற்ப
முருந்துநகை யுமைகணவன் றிருவெங்கை
 யனையாயுன் முகம் பொற் றாள்கை
புரைந்திடுதற் கரவிந்த மொருதாளி
 னின்றுதவம் புரித றானே

மற்ற பூக்கள் போல் இல்லாமல் தாமரை ஒரே தாளில் (தண்டில்) நீரில் நின்று தவம் புரிவது ஏன்? என்பதற்குத் தாமரையானது குவளை, குமுதம் முதலிய பூக்களுக்குப் பெருமையில்லை தனக்கேயுண்டு என்பதை வெளிப்படுத்த நினைத்து அதற்கு வழி யாதென எண்ணியது. அப் பூக்கள் நின் உறுப்புக்களில் ஒவ்வொன்றையே ஒத்திருக்கும். (குவளை கண் குமுதம் வாய்) அவ்வாறின்றி நின்முகம் கால், கை முதலிய உறுப்புக் களை ஒப்பதற்கு எண்ணி ஒரு தாளில் நீரில் நின்று தவம் புரிகின்றது என்று தலைவன் கூறுவதாகக் கற்பனை நயத்துடன் இப்பாடல் அமைந்துள்ளது.

திருவெங்கை நகரத்து நீர்வளத்தைப் பற்றிக் கூறும் பொழுது, வயல்களில் நீர் நிறைந்த காரணத்தால் சங்குகளும், அன்னங்களும் மேய்ந்தன. குவளைகள் மலர்ந்தன. இவற்றின் அழகினை வியந்து திருவெங்கைக்கு வந்த திருமால் தம் கையிலிருந்த வெண் சங்கை அறியாமல் வயலில் தவற விட்டதாகவும், அதை எடுக்க எண்ணிய பொழுது தம்சங்கு எது, என அறியாது மயங்கினார் என்றும், பிரமன் தம் அன்னத்தை விட்டுவிட்டு பிறகு தம் அன்னத்திற்கும் வயல் அன்னத்திற்கும் வேற்றுமை தெரியாது மயங்கினார் என்றும், மன்மதன் தன் கையிலிருந்த குவளை மலரை விட்டுவிட்டு பின்னர் வயலிற்

பூத்த குவளை மலருக்கும் தம் மலருக்கும் வேற்றுமை தெரியாது மயங்கினான் என்றும் கூறி இவ்வாறு இவர்கள் மயங்கும் வகையில் வயல்கள் சங்கு, அன்னம், குவளைகளால் விளங்கும்படியான வெங்கை நகரம் என்று அந்நகரின் சிறப்பை எடுத்துக் கூறியுள்ளார்.

''எடுத்தசங்க கதனை விடுத்தவற் றெதனை
யெடுப்பமென் றறியுள மருள
இவர்ந்திடு மெகின்விட் டிவற்றெதை யூர்வ
மெனவயன் கருத்துறக் குவளை
விடுத்திவற் றெதனைப் பறிப்பமென் றுசாவ''
லின்மதன் பணிலம்வா லெகினம்
விரிந்ததன் குவளை பரந்தவொண் பழன
வெங்கை ழெங்கணா யகனே''

என்ற பாடலில் விளக்கியுள்ளார்.

அடியார்களை போற்றுந் திறம்

நால்வரைப் பற்றியும் பிற அடியவர்களைப் பற்றியும் தமது நூல்களில் பாடியுள்ளார் சிவப்பிரகாசர். நால்வர் நான்மணிமாலை என்று தனி நூலே இயற்றியுள்ளார். என்றாலும் தாம் இயற்றிய இத்திருவெங்கைக் கலம்பகத்திலும் அடியார்களின் சிறப்பைக் கூறுகின்றார்.

''படத்தினிற் பொதிந்த குடத்துவெள் ளெலும்பு
பரிந்துபெண் ணாக்கவு மறியா
பரவையிற் புணைபோன் மிதந்துவந் தணையப்
பருங்கல்பண் ணாக்கவு மறியா
வடுத்துல கனைத்தும் பரவுற மறைந்த
வரியகண் ணாக்கவு மறியா
அமலவென் கவிக ளடியனேன் மனத்தை
யளிந்தபுண் ணாக்கவே யறியும்''

என்ற பாடலில் ''வெங்கையிறைவனே! என் பாக்கள் ஞானசம்பந்தர் பாக்கள் போன்று துணி மூடிய குடத்தில் உள்ள எலும்பைப் பெண்ணாக்க அறியாதவை, அப்பர் பாக்களைப் போல கருங்கல்லைத் தெப்பமாக்க அறியாதவை. சுந்தரர் பாக்களைப் போன்று மறைந்த கண்ணை மீண்டும் தர அறியாதவை என்று கூறித் தம் பாக்கள் மனதைப் புண்ணாக்க அறியும் என்கிறார். மற்றொரு பாடலில் அப்பர், சுந்தரர், சம்பந்தர் பாடல்கள் பசும் பொன்னில் பதித்த நாகமணிகள் போன்றவை என்றும் தம்முடைய பாக்கள் இரும்பில் அம்மணியைப் பதித்தது போன்றன என்று தம் பாக்களைக் குறைத்துக் கூறும் வகையில் அடியார்களைப் போற்றியுள்ளார்.

இறைவனை வழிபட்ட அடியார்கள் இறைவன் மேல்கொண்ட அன்பின் திறத்தினைக் கூற வந்த சிவப்பிரகாசர்,

''பரந்தபுகழ்த் திருவெங்கைப் பழமலையார்
தமைத்துதித்துப் பதத்து மென்பூச்
சொரிந்து பணிந் திரந்திடவு மெமக்கருளச்
சிறிதுமுளந் துணிந்தாரல்லர்
திருந்தவையிற் பித்தவென வைதுகல்லா
லெறிந்து பொருஞ் சிலையான் மோதி
அரந்தையின் மெய்க் கதிதருதி யெனக்கேட்டுபார்க்
கன்றிவ ரளித்தி டாரே''

என்கின்றார்.

கல்லால் எரிந்து வழிபட்டவர்	-	சாக்கிய நாயனார்
பித்தா எனக் கடிந்தவர்	-	சுந்தரர்
வில்லால் அம்பெய்து வழிபட்டவர்	-	அர்ச்சுனன்
கண்ணைப் பிடுங்கி வழிபட்டவர்	-	கண்ணப்பர்

இவர்கள் இறைவன் மேல்கொண்ட - வன்மையான அன்பினைக் கூறி, அடியார்களின் உண்மையான அன்பின் சிறப்பினைக் கூறி, தம் அன்பின்மையை ஒப்பிட்டு அவர்களை உயர்த்திக் கூறுகின்றார். இவை மட்டுமின்றி அடியார் பெருமையை,

''எவராலும் ஏவலற்கருமைம் புலன்கள் வென்ற
எழிலடியார் பெருமைதனை யியம்பொ ணாதே''

என்றும்

''அடியவரை வழுத்தியவர் அடிகள் சூடா
அவலரையோர் பொருளாக அறிகிலோமே''

என்றும் பல இடங்களில் அடியவரின் பெருமைகளைக் கூறியுள்ளார்.

சிவப்பிரகாசரின் இலக்கியங்களை எல்லாம் ஆய்ந்து கற்றால் அவரின் புலமைத் திறத்தையும், அவ்விலக்கியங்களில் காணப்படும். கற்பனை மற்றும் இலக்கிய நயங்களையும் நாம் அறிந்து கொள்ள இயலும் என்பதற்குச் சான்றாகத் திகழ்வது இத்திருவெங்கைக் கலம்பகம் என்றால் அது மிகை ஆகாது.

சிவப்பிரகாசர் பாடலில் உலக வழக்கு

உலக வழக்கைத் தம் பாடல்களில் அழகாக விளக்கிக் காட்டும் திறம் உடையவர் சிவப்பிரகாசர் ''ஒருவன் கூறிய ஒன்றைப் பாடி

மறுத்தபோது தான் கூறியது உண்மை, பிறர் மறுத்தது தவறு என்பதை உணர்த்த

''கிழக்கே உதிக்கும் சூரியன் மேற்கே உதித்தாலும்''

என்றும்

''தெற்கே தோன்றி வடக்கேயோடினும்''

என்றும் கூறி தான் கூறியதை வலியுறுத்துவர். இது உலக வழக்கு அடுத்தது மற்றொரு உலக வழக்கு,

''குருவிக்குத் தக்க ராமேசுரம்''

(குறிக்குத் தக்கது ராமர் சரம் என்பதே நாளடைவில் உருமாறி இவ்வாறு உணரப்படுகின்றது என்கின்றார் திரு. சிவலிங்கனார்) இவ்விரு உலக வழக்கையும்.

''விழியொன்றிய நன்னுதற் பரமர்
வெங்கை விரும்பும் விமலேசர்
எழிலொன்றி ரதக் காலிரதக்
காறெற் கெழுந்தே யோடுகினும்
பிழை யொன்றிடினு மவர்வாளி
வாளி பிறழா தியான் புகலும்
மொழியொன் றகலே னுனையெனமுன்
மொழிந்தா ரென்னை யொழிந்தாரே''

எனும் பாடலில் அமைத்து விளக்கியுள்ளார்.

ஞாயிறு தெற்கு வடக்காதல் பற்றிக் கூறுகையில் ''வெங்கை விமலேசர் இரதக்கால் தெற்கு எழுந்தே ஓடுகினும்'' என்றும், இராமர் சரம் பற்றிய குறிப்பை ''பிழையொன்றிடினும் அவர் வாளி வாளி'' என்றும் அமைத்துக் காட்டியுள்ளார். இவ்வாறு உலக வழக்குகளைத் தமது பாடல்களில் நயத்திற்கு தகுந்தவாறு அமைத்துக் காட்டும் திறன் கொண்டவராகவும் சிவப்பிரகாசர் விளங்குதல் காணலாம்.

21. சிவப்பிரகாசர் காட்டும் பக்திநெறி

ர. உமாதேவி, கோவை.

தமிழ்மொழியில் வீரசைவக் கருத்துக்களை எடுத்துரைக்கும் காப்பியமாகத் திகழ்வது 'பிரபுலிங்க லீலை' ஆகும். துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளால் எழுதப்பட்ட இந்நூல் கற்பனை நயமும், கவிச்சுவையும் வாய்ந்தது. வீரசைவ உண்மைகளை விளக்க எழுந்த நூலெனினும் நாடு, மொழி, இனம் கடந்து உலக மக்கள் அனைவருக்கும் பொருந்தும் அறக் கருத்துக்களையும், ஒழுக்க நெறிகளையும் உணர்த்துவது. இக்காப்பியத்தின் வழி சிவப்பிரகாசர் காட்டும் பக்திநெறி அனைவரும் உணர்ந்து போற்றத்தக்க பொதுநெறி ஆகும்.

நூலமைப்பு

இறைவனது திருவிளையாடல்களைக் கூறும் காப்பியமாதலின் 'பிரபுலிங்க லீலை' என்ற பெயரையுடையது. ஆதியும் அந்தமும் இல்லாத சிவபெருமானே உயிர்களுக்கு மெய்யறிவை உணர்த்தும் பொருட்டு அல்லமப்பிரபுவாகப் பிறக்கிறார். இதனை,

''நாம்பார்க் குழவி ஆகாமல் நம்பாற் குழவி ஆயினான்'' (6:34)

''எமதுமெய் வடிவத்தானே அல்லமநாம மைந்தன் ஆயினம்'' (2:54)

என்று குறிப்பிடுகிறார். இக்காப்பியத் தலைவர் அல்லமருக்கும் மாயைக்கும் நடக்கும் போராட்டமும், இறுதியில் பேரறிவுப் பொருளாகிய அல்லமர் மாயையை வென்று உயிர்களுக்கு மெய்யறிவை உணர்த்தி வீடுபேறு அளித்தலும் ஆகிய செய்திகள் இடம்பெறுகின்றன.

விநாயகர்மீது பாடப்பட்ட காப்புச் செய்யுளோடு நூலைத் தொடங்குகிறார். இது துதிகதி முதலாக மான்மியகதி இறுதியாய் இருபத்தைந்து உட்பிரிவுகளை உடையது. இருபத்தைந்து தத்துவங்களைக் கடந்து நிற்கும் அல்லமரின் புகழைக் கூறுவது என்பதனை,

''பார்க்கதி முதலிய பத்தைந் தாங்கதி
மேற்கதி பெறவருள் விளக்கும் அல்லமன்
சீர்க்கதி யிருபதோ டைந்துஞ் செப்புவாம்'' (1:13)

என்று குறிப்பிடுகிறார். துதிகதியில் சிவன், உமையம்மை, ஆனைமுகன், முருகக் கடவுள் முதலான தெய்வங்களை வணங்கி அல்லமர், வசவேசர்

முதலான வீரசைவ அடியார்களையும், சமயக்குரவர் முதலான சிவனடியார் களையும் வணங்கித் தொடங்குகின்றார். நூல் முழுதும் பல அறக் கருத்துக்கள், ஒழுக்க நெறிகள் வலியுறுத்தப் படுகின்றன. இறுதியில் வீரசைவத்தின் சிறப்பு கூறி, அனைத்து மக்களும் வீடுபேறு அடைந்து மேன்மையுற வேண்டுமென்ற உயர்ந்த நோக்கோடு முடித்துள்ளார்.

இறைவனின் இயல்பு

சைவ சமயம் குறிப்பிடும் மெய்ப்பொருட்கள் மூன்றனுள் தலைவனான இறைவன் கங்கையையும், பிறையையும் சூடிய சடாமுடியை உடையவன். 'வெள்ள வேணிப் பெருந்தகை' என்றும், 'தண்ணிலவு புனை சடிலத்து' என்றும் குறிப்பிடப்படும் சிவன் உமையம்மையை ஒரு பாகத்தில் கொண்டவன். இயல்பாகவே பாசங்களில் இருந்து நீங்கிப் பிறரால் அறியப்படாத பேரறிவாளன்.

''தன்னைத் தானலாதறிதரப் படாதான்'' (5:91)

என்பர். பிரமனும், நான்முகனும் அறிய முற்பட்டபோது அறிய முடியாத பேரொளிப் பிழம்பாக நின்றவன். எனினும், அன்போடு உள்ளம் உருகும் அடியாருக்கு அவர் வேண்டும் வடிவில் தோன்றும் எளியவன்.

''மாலும்நான் முகனுநா டரிய வள்ளல்
....
ஆலமார் மிடற்றினோ னன்பர் வேண்டிய
கோலமாய் நணுகுமீ துண்மைக் கூற்று'' (3:72)

என்கிறார் ஆசிரியர். இறைவனின் இத்தகு இயல்பை,

'அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி
என்போல் மணியினை எய்தவொண் ணாதே' (1:11:3)

என்று திருமூலரும் குறிப்பிடுகிறார். உயிர்கள் மீது நீங்காத கருணை யுடையவன், உயிர்களை மேன்மையுறச் செய்தவன் பொருட்டு படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களைச் செய்பவன்.

உயிரின் நிலை

உயிர் தலைவனாகிய இறைவனைச் சேராது அதன் அறிவை மறைப்பது அதனோடு அனாதியாய்க் கலந்துள்ள ஆணவமலமே ஆகும். இதன் தன்மை குறைய இறையருளால் மாயையின் காரியமாகிய தனு, கரண, புவன, போகங்களுடன் கூடுகிறது. அறிவை விளக்க இடையில் கூடும் இவற்றையே தான் என்றும், தனது என்றும் தவறாக எண்ணி மனம், வாக்கு, காயம் என்ற மூன்று நிலைகளில் நல்வினை, தீவினை களைச் செய்கிறது. இதனை,

''யாக்கை தாமென் றிருந்தழி கின்றவர்
ஊக்கி லாவறி வாகி.... .....'' (12:15)

என்பர். இவ்வாறு வினைப்பயனால் வரும் பல பிறவிகளை அடைந்து துன்புறுகிறது. இதிலிருந்து விடுபட புலன்கள்வழி ஓடும் மனதை நிறுத்தவேண்டும்.

''மட்டற வோடு மனதை நிறுத்திக்
கட்டுதல் வீடு..... ......'' (12:24)

என்பர். மனதினை அடக்க இறைவனை வணங்குதல் வேண்டும்.

வழிபடும் முறை

உயிர் பிறவியாகிய துன்பத்தைக் கடக்க இறையருளால் இறைவனை வழிபடுதல் வேண்டும். வழிபாட்டால் அனைத்தையும் அடையலாம்.

''சித்தியும் ஆயுளுஞ் சிறப்புங் காமிய
புத்தியர் அடைவரப் புத்தி நீங்கினோர்
முத்தியை அடைவரெம் முதல்வன் பூசையால்'' (7:9)

என்பார் சிவப்பிரகாசர். திருவள்ளுவரும்,

''பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்'' (1:10)

என்கிறார். உயிர் தனது பக்குவ நிலைக்கு ஏற்ப சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு நெறிகளில் நின்று இறைவனை வழிபடுகிறது.

(அ) சரியை - இறைவனது திருக்கோயில் சென்று, உருவத் திருமேனியாய் வீற்றிருக்கும் சிவபெருமானுக்கு,

''தயிலமுடன் ஆனிடத்தைந் தையமுத நறுநெய்பால்
தயிர்செழுந்தேன்
வயலினெழு கரும்புடைத்துக் கொள்சாறு பழம்பிழிந்த மதுரச்சாறு
புயலளவு தழையிள நீர்நறுஞ்சந் தனக்குழம்பு போற்றுநூலின்
இயலினமை தபனமிவை யொன்றன்பி னொன்றுமுறை
யிறைவற்காட்டி'' (4:43)

முதலியன கொண்டு நீராட்டி, பூச்சூட்டி, உணவு படைத்து வழிபடுதல் ஆகும்.

(ஆ) கிரியை - இறைவனது அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கத்தைப் புறத்தாலும் அகத்தாலும் வழிபடும் முறையாகும்.

(இ) யோகம் - ஐம்பொறிகளின்வழிச் செல்லும் மனதை மூச்சுப் பயிற்சி முதலானவற்றால் அடக்கி, சோதி வடிவினனான இறைவனை

மனதால் ஒருமையுடன் நினைத்திருக்கும் நிலையே யோக நிலை ஆகும். இந்நிலையை,

''வாயு நிற்க மனமும் உடனிற்கும்
தோய நிற்குறின் நிற்கும் துரும்புமே'' (18:16)

என்பர்.

மேற்கூறிய மூவகைநெறி நின்று வழிபடும்போது உள்ளம் தூய்மை அடைகிறது.

(ஈ) ஞானம் - மனம் தூய்மையோடு இருந்தால்தான் மெய்யுணர்வு தோன்றும்.

''அந்தக் கரண அறிவை அறிதற் சாதனம்'' (24:12)

என்பர். இந்நிலையில் இறைவனே ஆசிரியனாக வந்து மெய்யறிவை உணர்த்துவார். அவ்வழி நின்று வீடுபேறு அடைதலே ஞானநெறி ஆகும்.

ஞானம் ஒன்றே வீட்டின்பத்தை அடைதற்குரிய நேரான வழி. ஏனையவை ஞானம் பெறுதற்குரிய வழிகளே ஆகும்.

'உரைசெயிற் பரம ஞானம் ஒன்றுமே முத்திக்கேது
சரியைநற் கிரியை யோகந் தாமொரு மூன்று ஞான
மருவுதற் கேது என்று மறைபுகன் றுரைக்கும்' (13:69)

என்பார் சிவப்பிரகாசர். தாயுமானவரும் இக்கருத்தை,

'விரும்பும் சரியைமுதல் மெஞ்ஞானம் நான்கும்
அரும்புமலர் காய்கனி போலன்றோ பராபரமே'
(பராபரக்கண்ணி - 157)

என்று வலியுறுத்துகிறார்.

அடியார் வழிபாடு

இறையருளால் மெய்யுணர்வு பெற்ற ஞானியர் தமது உடல் முதலானவற்றிலிருந்து நீங்கி, இறைவனையே நினைந்திருப்பர். அதனால் வினையையும், அதன் காரணமாய்ப் பெருகும் ஆணவத்திலிருந்தும் நீங்கி நிற்பர். அத்தகு சிவனடியாரிடத்து குலம் முதலிய வேறுபாடு கருதக் கூடாது. ஓடும் பொன்னும் ஒக்கவே நோக்கும், உறவும் பகையும் அற்ற உயர்ந்த நெறியினர். அவர்கள் தனது மனம், வாக்கு, காயம் அனைத்தையும் சிவனிடத்தே அர்ப்பணித்து நிலைநிறுத்தியிருப்பார்கள். அவர்களையும் சிவனென்றே வணங்குதல் வேண்டும். அவ்வாறு வழிபடுவோர் பிறவியறுப்பர்.

''இழிப்பினும் வெறுப்பினும் இல்லின் உள்ளன
அழிப்பினும் உடம்பினை அரிந்து கொல்லினும்
பழிப்பறு சங்கம பத்தி செய்பவன்
ஒழிப்பது பிறவியென் றுலகம் ஓதுமே'' (23:23)

என்பார்.

அறக் கருத்துக்கள்

நல்வினை செய்யும் உயிர்களுக்கே மக்கட்பிறவி கிடைக்கும். அதிலும் உயிர்கள் மறுமைப் பயன் கருதாது தீவினைகள் செய்வதுண்டு.

''புன்மர நெளிபுழுப் புள்வி லங்கெனும்
பன்மைய துயர்செயும் பவங்கள் தப்பியே
வன்மைகொள் நிலமிசை மக்கள் ஆகுதல்
நன்மைகொள் உயிர்க்கலால் அரிது'' (16:10)

என்பர். இந்நிலையறியாது பல பாவங்களைச் செய்கிறது. அவற்றுள் 'வந்த உறவினர்களை விடுத்து தான் உணவு அருந்துதலும், பந்தியில் வேறு படைத்தலும், தாய் தந்தை பசித்திருக்க உணவுண்ணுதலும், பசியால் வருவோரை வருத்துதலும், ஊன் உண்பதும், உண்ணுவிப்பதும், கன்றுக்குப் பால் விடாமல் கறத்தலும், அடைக்கலம் புகுந்தோரைக் காவாது விடுதலும், பெற்றோர் உரைக்காவாது விடுதலும், புறங்கூறுதலும், பிறன்மனை நயத்தலும், நட்புக்காலத்து அறிந்த மறைபொருளை பகைக்காலத்தே வெளியிடுதலும், நட்பினைப் பிரித்தலும், பிறர் பொருள் கொண்டு அறம் செய்தலும்' இவை போன்ற பிறவும் மிகக் கொடிய பாவங்கள் ஆகும்.

மறுமைப் பயன் தேடாத உடம்பால் பயனில்லை. நிலையற்ற இந்த உடம்போடு இருக்கும் போதே நல்லறங்கள் செய்திடல் வேண்டும்.

''எய்தற்கரிய யாக்கைதனக் கெய்திற் றென்றால் அதுகொண்டு
செய்தற்கரிய அறங்கள் பலசெய்து துயர்கூர் பிறவியினின்று
உய்தற்கொருமை பெறவொண்ணா துழல்வோன் உடம்பு
பொற்கலத்தில்
பெய்தற்கரிய பால்கமரிற் பெய்த தொக்கும் என்பரால்'' (11:12)

என்பர். நல்வினை செய்வோர் பிறவித் துன்பத்தைக் கடந்து இன்புறுவர்.

வீரசைவத்தின் சிறப்பு

ஆதியும் அந்தமும் இல்லா சிவத்துடன் இரண்டறக் கலந்து நிற்றலே உயிருக்கு மேன்மை தரும் நெறியாகும். மெய்யுணர்வு பெற்ற ஞானி களும் தமது பழவினைகள் கழிந்த பின்னரே பிறவியிலிருந்து விடுபட இயலும். அந்நிலையில் அவர்களை மீண்டும் பாசம் பற்றாதிருக்க வீர சைவநெறி நிற்றல் வேண்டும். தூய்மை இல்லாத கருவி கரணங்களின்

மலமாசுகள் நீங்கும்படி சுத்தனாயிருக்கிற சிவலிங்கப் பெருமானை காரண, சூக்கும, தூல உடம்புகளில் முறையே பிராணலிங்கம், பாவலிங்கம், இட்டலிங்கம் என்று தரித்துக் கொண்டு, உள்ளும் புறமும் உள்ள சிவனை எப்போதும் நீங்காதிருத்தலே வீர சைவநெறி ஆகும். தனது உடம்பு முதலானவற்றையே சிவாலயமாகக் கருதிக்கொண்டு தன்னையே சிவமென்று கருதுபவனுக்கு பிறப்பு இல்லை.

> ''வானம் அல்லேன் வளியல்லேன் அழல்நீர் அல்லேன் மண்அல்லேன்
> ஞானம் அல்லேன் வினையல்லேன் நானே சிவமென் றெண்ணினோன்
> ஊனம் இல்லா ஒருசிவமே ஆவன்'' (25:15)

என்பார். இந்நிலையே 'அத்துவிதம்' எனப்படும். இந்நிலையில் நின்று மனம், வாக்கு, காயம் மூன்றிடத்தும் வரும் நுகர்வுகளைச் சிவனுக்குப் படைத்து பின் தான் நுகரும்போது அதனால் வரும் குற்றம் உயிரைப் பாதிக்காது. ஆதலால், ஞானம் பெற்ற உயிர்களும் வீரசைவநெறி நின்ற பின்பே வீடுபேறு எய்தும். இதனை,

> 'புறந்தரு சமயம் புக்குப் புறமலாச் சமயத்தெய்தி
> அறந்திகழ் சைவ முற்றாங் கதிர்சரி தாதிஆற்றச்
> சிறந்துள வீரசைவம் சேர்ந்தபின் வீடு நண்ணும்' (25:12)

என்று சிவப்பிரகாசர் வலியுறுத்துகிறார்.

இறவாப் புகழுடையவன் இறைவன். அவனது இயல்பு அறியாது உயிர் பொய்ப்பொருளான மாயையோடு பொருந்தி, இருவினை ஈட்டிப் பிறவியில் வீழ்கிறது. இதிலிருந்து விடுபட அறம் பல செய்து, இறையருளால் சரியை முதலான நெறிநின்று ஞானம் பெறுகிறது. இந்நிலையில் இறைவன் உயிருக்குக் குருவாக வந்து மெய்ப்பொருளை உணர்த்துகிறான். மெய்யுணர்வு பெற்ற உயிரை மீண்டும் பிறவிப்பிணி பற்றாமல் இருக்க வீர சைவநெறி நின்று வீடுபேறு அடைதல் வேண்டும்.

22. சிவப்பிரகாசரும் அருட்பிரகாசரும்

தவத்திரு. ஊரன் அடிகளார், வடலூர்.

சிவப்பிரகாசருக்கும் அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகளுக்கும் உள்ள ஒற்றுமைகளுள் மூன்றை மிகச் சுருக்கமாகச் சுட்டுவது இச்சிறு கட்டுரை.

1. திருக்குறளில் ஈடுபாடு
2. நால்வரிடம் ஈடுபாடு
3. நன்னெறியை (சன்மார்க்கத்தை)ப் பரப்புதல்.

1. திருக்குறளில் ஈடுபாடு

திருக்குறள் வெறும் நீதிநூல் மட்டுமன்று, அறநூல் மட்டுமன்று, திருக்குறள் ஒரு ஞானநூல் என்பதும் திருவள்ளுவர் ஒரு ஞானி என்பதும் எம் கொள்கை.

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்.

என்னும் ஒளவையார் திருவாக்கைக் காண்க. ஞானநூல்கள் பலவற்றுள் சொல்லப் பெறாத உண்மைகள் நீதிநூல் எனப்படும் திருக்குறளிற் காணப் பெறும். ஞானநூல்களில் சுற்றி வளைத்தும் இலைமறை காயாகவும் கூறப் பெறும் உண்மைகள் திருக்குறளில் நேரடியாகவும் வெளிப்படையாகவும் அழுத்தந்திருத்தமாகவும் கூறப்பெறும். திருக்குறள் ஞானச் சிறப்பில் திருமந்திரம் திருவாசகம் முதலியவற்றை ஒப்பது. திருவள்ளுவர் ஞானிகளுக்கு ஞானி என்றும், திருக்குறள் ஞான நூல்களுக்கு ஞான நூல் என்றும் நாம் கூறுவதுண்டு.

பின்வந்த ஞானிகள் பலர் திருக்குறளை மேற்கோளாக எடுத்தாண் டுள்ளனர். திருமூலர், சுந்தரமூர்த்திகள், சேரமான் பெருமாள், உய்ய வந்ததேவ நாயனார், உமாபதிசிவம், கண்ணுடைய வள்ளலார், சிவப்பிரகாச சுவாமிகள், வள்ளலார் இராமலிங்க அடிகள் ஆகியோரை உதாரண மாகக் கூறலாம். இவர்களனைவரும் திருக்குறளின் ஞானக் கருத்துகளில் மிகவும் ஈடுபட்டுள்ளனர்.

சிவப்பிரகாச சுவாமிகளின் நூல்கள் பலவற்றில் பல இடங்களில் திருக்குறள் எடுத்தாளப் பெறுகிறது. வித்துவான் வீ. குமாரசாமி ஐயர் என்ற தமிழறிஞர் ''திருவள்ளுவரும் சிவப்பிரகாசரும்'' என்றே ஒரு நூல் எழுதியுள்ளார். (கழக வெளியீடு, 1956). சிவப்பிரகாசர் பதினேழு நூல்களில் எண்பது குறட்பாக்களை எடுத்தாண்டுள்ளார் என்று அவர் அந்நூலிற் குறிப்பிடுகிறார். ஓர் இடம் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. அதனை மட்டும் ஈண்டெடுத்துக் காட்டுகிறோம்.

சிவப்பிரகாசருக்குச் சிவபெருமான் திருவடி தீக்கை செய்கிறார். சிவபெருமானது இரண்டு திருப்பாதங்களும் சிவப்பிரகாசரின் தலைமீது பதிகின்றன. ஒரு பாதம் சற்று வலிவாகப் பதிகின்றது. இன்னொரு பாதம் சற்று மென்மையாகப் பதிகின்றது. ஒரு திருவடி சற்றுச் சிறிய திருவடியாகத் தெரிகின்றது. மற்றொரு திருவடி சற்றுப் பெரிய திருவடி யாகத் தெரிகின்றது. திருவடி தீக்கை செய்பவர் அர்த்தநாரீசுவரர். வன்மை யாகப் பதியும் பெரிய திருவடி அர்த்தநாரீசுவரரின் ஆண்பால் திருவடி. அது திருக்குறளின் முதலடியாகிய நாற்சீரடி போன்று உள்ளது. மென்மையாகப் பதியும் சிறிய திருவடி அர்த்தநாரீசுவரரின் பெண்பால் திருவடி. அது திருக்குறளின் இரண்டாம் அடியாகிய முச்சீரடி போன்று உள்ளது. மாதொரு பாகரின் இரு திருவடிகளுக்கும் திருக்குறள் அடி இரண்டையும் ஒப்பிடுகிறார் சிவப்பிரகாசர். ''என்அடிகள் வெண்குறள்நேர் அடிஇரண்டும் என்தலைமேல் இருத்தும்இறை'' என்பது திருவெங்கைக் கலம்பகம் 42-ஆம் செய்யுளின் பகுதி. என் அடிகள் என்பது திருவள்ளுவரைக் குறிப்பது. குறட்பா இறைவன் திருவடியாகத் திகழ்கிறது சிவப்பிரகாசருக்கு. திருக்குறளை இதைவிட வேறு எவ்வாறு சிறப்பிக்க இயலும்? திருக்குறளுக்கு இதைவிடச் சிறப்பு வேறென்ன வேண்டும்?

வள்ளலாரும் திருக்குறளில் மிகப்பெரிதும் ஈடுபட்டவர். திருக்குறள், திருமந்திரம், திருவாசகம் இம்மூன்றும் வள்ளலார் கண்ட பிரஸ்தானத் திரயங்கள் என்று நாம் சொல்வதுண்டு. திருக்குறள் வள்ளற்பெருமானால் எடுத்தாளப்பெற்ற நூல். சிவப்பிரகாசரைப் போன்றே அருட்பிரகாச வள்ளலாரும் திருக்குறளை முழு முழுக் குறட்பாக்களாக அப்படி அப்படியே எடுத்தாள்கிறார். திருவருட்பா மூன்றாம் திருமுறை நெஞ்சறி வுறுத்தல் 411; 433; 434; 435; 466; 467; 624-ஆம் கண்ணிகளைக் காண்க. வள்ளற்பெருமான் திருக்குறளை எடுத்தாண்டதோடு மட்டுமன்றிப் பொதுமக்களுக்குத் திருக்குறள் வகுப்பு நடத்தவும் ஏற்பாடு செய்தார். தமிழ்நாட்டில் பொதுமக்களுக்காக முதன் முதலில் திருக்குறள் வகுப்பு நடத்தத் தொடங்கியவர் வள்ளலாரே. இதைப் பற்றி விரிவாக இராமலிங்க அடிகள் வரலாற்றிலும், வள்ளலாரைப் பற்றிய எமது நூல்களிலும் எழுதியுள்ளோம்.

திருக்குறள் ஈடுபாட்டில் சிவப்பிரகாசரும் அருட்பிரகாச வள்ளலாரும் ஒத்தவர்கள் என்பதை மட்டும் ஈண்டறிவது போதுமானது. விரிவு விரிந்த நூல்களிற் கண்டு கடைப்பிடிக்க.

2. நால்வரிடம் ஈடுபாடு

சைவ சமயக்குரவர் நால்வரையும் போற்றிப் புகழும் திறத்தில் மிகச் சிறந்த நூல் ஒன்று உண்டு என்றால் அது சிவப்பிரகாசரின் நால்வர் நான்மணிமாலையே. நால்வர் துதி நூல்களில் இதைவிடச் சிறந்தது வேறு எதுவும் இல்லை. பின்னாளில் திரு அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகளார் சமயக் குரவர் நால்வரையும் போற்றி நான்கு மாலைகளைப் பாடினார். ஆளுடைய பிள்ளையார் அருள்மாலை, ஆளுடைய அரசுகள் அருள்மாலை, ஆளுடைய நம்பிகள் அருள்மாலை, ஆளுடைய அடிகள் அருள்மாலை என்ற பெயருடன் அவை திருவருட்பா ஐந்தாம் திருமுறையில் இடம் பெற்றுள்ளன. சிவப்பிரகாசரின் நால்வர் நான்மணிமாலைக்கு ஒப்பாக அருட்பிரகாசரின் நால்வர் அருள்மாலையைச் சொல்லலாம். வேறு எதையும் ஒப்பாகச் சொல்லுவதற்கில்லை. சிவப் பிரகாசரும் அருட்பிரகாசரும் நால்வரிடம் மிகப் பெரிதும் ஈடுபாடு கொண்டவர்கள் என்பது இருவர்க்கும் உள்ள ஒற்றுமைகளிற் சிறந்த ஒன்றாகும்.

3. நன்னெறி - சன்மார்க்கம்

குமரகுருபரரும் சிவப்பிரகாசரும் பிரபந்தத் திரட்டாற் சிறந்தவர்கள். குமரகுருபரர் பிரபந்தவேந்தர் என்று போற்றப் பெறுகிறார். சிவப்பிரகாசரும் பிரபந்த வேந்தரே. குமரகுருபரரும் சிவப்பிரகாசரும் சமய உலகுக்கு அப்பால் இலக்கிய உலகிலும் பேர் பெற்றவர்கள், புகழ் பெற்றவர்கள். இவ்விருவருக்கும் இவ்வளவு புகழைத் தந்தது அவர்களது பிரபந்தத் திரட்டுகளே. சிவப்பிரகாசர் பிரபந்தங்களில் மிகச் சிறந்து விளங்குவது நால்வர் நான்மணிமாலையே. அடுத்துச் சொல்லத்தக்கது நன்னெறி. சிறந்த நீதிநூல். குமரகுருபரர் நீதிநெறி விளக்கத்தை இயற்றினார். சிவப்பிரகாசர் நன்னெறியை இயற்றினார். நன்னெறி வெண்பா நாற்பதும் புதுச்சேரியை அடுத்த பொம்மையபாளையம் கடற்கரையில் இயற்றப் பெற்றது. கடற்கரை மணலில் முதன் முதலில் எழுதப்பெற்றது. மயிலம் பொம்மபுர ஆதீனம் கடற்கரையில் உள்ளது. பொம்மபுர ஆதீன குருமுதல்வர் பாலசித்தர் கடலினின்றும் எழுந்து தோன்றினார். நன்னெறியும் அதே கடற்கரை மணலில் எழுதப்பெற்றுத் தோன்றிற்று.

நன்னெறி என்ற பெயரே எவ்வளவு நன்றாக, பொருள் பொதிந்ததாக இருக்கிறது! ஔவையார் நல்வழி என்று ஒரு நூலை இயற்றினார். நன்னெறி-நல்நெறி-நல்லநெறி-நல்வழி.

வள்ளலார் தம்முடைய மார்க்கத்திற்குச் சமரச சுத்த சன்மார்க்கம் என்று பெயரிட்டார். சன்மார்க்கம் முன்னரே சைவத்தில் உண்டு. தாசமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்பன சைவத்தின் நான்கு மார்க்கங்கள். சைவத்தின் சன்மார்க்கத்தைச் சமரச சுத்த சன்மார்க்கமாக விளக்குகிறார் வள்ளலார். நன்னெறி தமிழ்ச்சொல். சன்மார்க்கம் வடசொல், இரண்டுக்கும் பொருள் ஒன்றே. சன்மார்க்கம் - சத்மார்க்கம் - நல்லநெறி - நன்னெறி. பெயரொற்றுமையும் கருதத் தக்கது.

வழவழக்க விரும்பவில்லை. மிகச் சுருக்கமாக முடிக்க விரும்பு கிறோம். சிவப்பிரகாசரும் அருட்பிரகாச வள்ளலாரும் திருக்குறளைப் போற்றிப் புகழ்ந்து கடைப்பிடித்து எடுத்துக் காட்டியவர்கள். எடுத்துக் காட்டாகவே விளங்கியவர்கள். நால்வரைப் போற்றிப் புகழந்து நால்வரின் நன்னெறியைக் கடைப்பிடித்தவர்கள், நால்வரையும் இவர்கள் போல் பாடியர்கள் இலர். சிவப்பிரகாசர் நன்னெறியையும் அருட்பிரகாசர் சன்மார்க்கத்தையும் வழங்கியருளினர்.

சிவப்பிரகாசர் என்று பெயர் கொண்டோர் சமய உலகில் மிகப் பலர். அவர் அனைவருள்ளும் முதலில் நினைவுக்கு வருபவர் நம் இச் சிவப்பிரகாசரே. சிவப்பிரகாசர், அருட்பிரகாசர் என்ற பெயர்ப் பொருத்தமும் அமைந்திருக்கிறது. சிவம் வேறன்று, அருள் வேறன்று. அருளே சிவம். 17-ஆம் நூற்றாண்டில் வந்து திருக்குறளையும் நால்வரையும் நன்னெறியையும் பிரகாசிக்கச் செய்தவர் சிவப்பிரகாசர். இருநூறாண்டு களுக்குப் பின் 19-ஆம் நூற்றாண்டில் வந்து திருக்குறளையும் நால்வரையும் சன்மார்க்கத்தையும் பிரகாசிக்கச் செய்தவர் அருட்பிரகாச வள்ளலார். இரு பிரகாசர்களும் காட்டிய பிரகாசமான வழியில் உலகம் நடப்பதாக.

23. திருவள்ளுவரும் சிவப்பிரகாசரும்

கடவூர் மணிமாறன், மாயனூர்.

வள்ளுவப் பிரகாசர் என்னும் புகழ்மொழிக்குரியவர் சிவப்பிரகாசர். பயிலும் தோறும் பன்னரும் நயம் ஒளிரும் திருக்குறளைச் சிவப்பிரகாசர் கையாண்டுள்ள திறம் அவருக்கிருந்த குறள் ஈடுபாட்டைத் தெற்றெனப் புலப்படுத்தும். தமிழ் இலக்கண இலக்கியங்களில் மூழ்கித் திளைத்த சிவப்பிரகாசர் திருக்குறளில் பெரிதும் தோய்ந்தவர். தாம் பெற்ற திருக்குறள் இன்பத்தைப் பிறரும் துய்த்திடும் வண்ணம் சற்றொப்ப எழுபது இடங்களில் திருக்குறட் கருத்துகளையும், குறள் அடிகளின் சொற்களையும் எடுத்தாண்டு குறள் விருந்து படைத்துள்ளார். இதனை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

திருவள்ளுவரைப் புலவர் என்றும் தெய்வப்புலமை திருவள்ளுவனார் என்றும் என்னடிகள் என்றும் அறஞ்சூழ்ந்தோர் என்றும் கற்றுணர் பழையோர் என்றும் ஆற்றல் பெரியோர் என்றும் அறத்தூய்மை உணர்ந்தவர் என்றும் இணையில் திருவள்ளுவப் பெயர்கொள் எம்மான் என்றும் வாய்மையால் சிறப்பவர் என்றும் பற்பல பெயர்களால் போற்றி யுள்ளார் சிவப்பிரகாசர். துறவுநெறி நின்ற இப்புலவர் பெருமான் இல்லற நெறிநின்ற வள்ளுவரை என்னடிகள் என்று போற்றியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இலக்கியம் படைத்த புலவர்கட்கும் இலக்கண உரையாசிரியர்கட்கும் தத்தம் கருத்துகளை விளக்கவும் விரித்துக் கூறவும் இலக்கிய நயங்கள் சேர்க்கவும் குறளில் தமக்குள்ள, ஈடுபாட்டைக் காட்டவும் தம்மை எதிர்ப்பவர் கருத்துகளை மறுத்துத் தம் கருத்துகளை நிலை நாட்டவும் குறள் என்னும் பொய்யா விளக்கு பெருந்துணை புரிந்து வந்திருக்கின்றது.

ஒவ்வொரு குறளையும் உமையொரு பாகனின் திருவடிகளாகவே சிவப்பிரகாசர் கண்டுள்ளமையைத் திருவெங்கைக் கலம்பகம் உணர்த்து கின்றது.[1] வீரசைவரான சிவப்பிரகாசர், ஒவ்வோர் அதிகாரத்திலும் அமைத்துள்ள பத்துக் குறள்களையும் திருமாலின் பத்து அவதாரங் களாக உரைத்துள்ளார்.

வற்புறுத்த ஓர்பொருளை வள்ளுவனார் பத்துமுறை
சொற்பொருத்தி ஓதும் துணிவுபோல் - தற்பதத்தால்

ஓதும் பிரமமொரு தானென்ப தொன்றனையால்
காதுபவம் பத்தெடுத்துக் காட்டினோன்.[2]

என்னும் இவ்வடிகளில் ஒரு பொருளை வற்புறுத்த, திருவள்ளுவர் பத்துமுறை கூறியது போல் 'தத்துவமசி' என்னும் சொற்றொடரில் 'தத்' என்ற சொல்லின் பொருளாக உள்ள பரம்பொருளை அறிவிக்கப் பத்து அவதாரம் எடுத்தார் திருமால் என்று உவமை கூறியுள்ளார் சிவப்பிரகாசர். குறளை நிகர்த்த மாதொரு பாகனின் திருவடி என்றது போலப் பத்துக் குறள்களைப் போல் திருமாலின் பத்து அவதாரங்கள் என்று இங்கும் குறளுக்கே முதலிடம் கொடுத்து உவமை அமைத் திருத்தல் சிந்தித்தற்குரியது.

குறளை எடுத்தாண்ட திறம்

'நவத் தமிழ் வேதம்' என்று குறளைப் போற்றியுள்ள சிவப்பிரகாசர் குறள்கள், குறளடிகள், குறளின் பொருள் ஆகியவற்றை எடுத்தாண்டுள்ளார். தம் கருத்துக்களை வலியுறுத்தவும், அறங்களைச் சொல்லவும், பாடல் களில் நயம் சேர்க்கவும் குறட்பாக்கள் இவருக்குத் துணையாய் அமைந்துள்ளன. திருக்குறட் கருத்துக்கட்கு உடன்பட்டும் எதிர்மறுத்தும் சிவபாடல்களைப் புனைந்துள்ளார் சிவப்பிரகாசர்.

பரிமேலழகரின் உரையை ஏற்றும், மறுத்தும் சிவப்பிரகாசரின் பல பாடல்கள் அமைந்துள்ளன. பரிமேலழகர், ஒரு குறளுக்குக் கூறி யுள்ள விளக்கங்களைத் தமது பாடல்களில் பயன்படுத்திய முறையும் இவரது நூல்களில் காணப்படுகின்றது. வள்ளுவரால் சிவப்பிரகாசரும், சிவப்பிரகாசரால் வள்ளுவரும் உயர்ந்து விளங்குகின்றனர். குறட்கருத்து களை உவமத் தொடர்கள் ஆக்கியுள்ள சிவப்பிரகாசர், குறள் கூறும் இலக்கணத்திற்கேற்ப வாழ்ந்து காட்டிய பெருமக்களையும் சுட்டியுள்ளார்.

'கயமை' என்னும் அதிகாரத்தில் கீழ் மக்களின் இயல்பைக் கூறியுள்ளார் திருவள்ளுவர்.

நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்[3]

என்னும் குறளில் கயவரைப் புகழ்வதுபோல் பழித்துரைத்துள்ளார். கவலை இன்மையினால் கயவர் திருவுடையர் என்று புகழ்வது போலக் கூறியிருப்பினும் உண்மையில் கயவர், புகழ் அறம், அறிவு பற்றி அறியாதார், அவர்கள் பழியும் பாவமும் அஞ்ஞானமுமே உடையவர் என்று இழித்துக் கூறியுள்ளார் திருவள்ளுவர்.

இக்குறளை நால்வர் நான்மணிமாலையில் நயம்பெறக் கையாண்டுள்ள சிவப்பிரகாசர், இவ்விரு வகை மக்களுக்கும் சான்றாக இருவரைச்

சுட்டியுள்ளார். அன்னங்கள் விளையாடுகின்ற அகன்ற துறைகளை யுடைய பொய்கைகளைக் கொண்ட திருவாதவூரில் பிறந்த அன்ப! பிறை நிலவு தவழும் பவள நிறம் வாய்ந்த நீண்ட செஞ்சடை உடையவனாகிய சிவபெருமானின் திருவருளைப் பெற்றிருந்தும் பெறாதவர்களைப் போல் கவலையுற்று உள்ளம் நெக்குருகி நீ நிற்கின்றாய்! ஆனால் பேயனாகிய நான், இறையருளைப் பெறாதிருந்தும் பெற்றவர்களைப் போல மகிழ்ச்சி மிகப்பெற்று உள்ளம் கவலையற்று விளங்குகின்றேன். இதனால் தெய்வப்புலமை திருவள்ளுவர் சொன்ன, தமக்கு உறுதியான வற்றை அறியும் சான்றோரைவிட அவற்றை அறியாத கயவர்கள் நன்மையுடையவர்கள், ஏனென்றால் அவர்கள் அவை பற்றித் தம் நெஞ்சில் கவலையற்றவர்கள் என்னும் சொற்களின் உண்மைப்பொருளைத் தெளிவாக அறிந்து கொண்டேன் என்று மாணிக்கவாசகரைப் பாராட்டியும் தம்மை இகழ்ந்தும் பாடியுள்ளார்[4] சிவப்பிரகாசர்.

திருவெங்கைக்கோவை

தலைவர் தலைவியைப் பிரிந்து பரத்தையர் இல்லத்தில் தங்கிச் சில நாட்கள் சென்ற பின் மீண்டும் தன்மனை நோக்கித் திரும்பி வந்தான். தலைவி அது குறித்துத் தலைவனிடம் ஊடல்கொண்டு இருந்ததைத் தோழி அறிந்திருந்ததால் தலைவியின் ஊடலைப் போக்க முனைந்தாள்.

ஒளி வீசுகின்ற பொன்னாலாகிய வளையலை அணிந்த தலைவியே! மின்னலை ஒத்த சிவந்த சடையையுடைய சிவபெருமான் வீற்றிருக்கும் திருவெங்கை மலையில் உன்னை நினைக்காது பிரிந்து சென்ற தலைவர், இப்பொழுது வந்துள்ளார். அவரின் செயலைச் சிந்திக்க வேண்டாம். ஏனெனில் நம்புலவர் வள்ளுவர், தீமை செய்தவர்க்கு நன்மை செய்க; அதுவே அவரைத் தண்டிப்பதாகும் என்றார். அவ்வுரையை நீ அறியாயோ? என்று கூறி தலைவியின் சினத்தைத் தணித்தாள்.

மின்னா கியசெஞ் சடையார் திருவெங்கை வெற்பிலுனை
யுன்னா தகன்றவர் வந்தார்; அவர்செயல் உன்னலைநீ
இன்னா செய்தாரை யொறுத்திடின் நன்மை யியற்றுகெனச்
சொன்னார் புலவர் அறிந்திலையோ பொற்சுடர்த் தொடியே!

என்னும் இப்பாடலில்,

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்"[5]

என்னும் குறளின் சொற்கள் அழகுற அமைந்துள்ளன.

சீகாளத்திப் புராணம்

சீகாளத்திப் புராணத்தில் நக்கீரச் சருக்கத்தில் குறளின் பொருளை ஒரு பாடலில் சிவப்பிரகாசர் நயமுற எடுத்தாண்டுள்ளார். தமக்குச்

சிவபெருமான் சாபத்தால் வந்த தொழுநோய் நீங்க கயிலை காணப் புறப்பட்ட நக்கீரர், தம் நண்பர்களாகிய சங்கப் புலவர்களைப் பிரிவதற்கு வருந்தினார். அப்புலவர்களும், நக்கீரரைப் பிரிய மனமின்றிக் கண்ணீரைப் பொழிந்தனர். நக்கீரர் அவர்களைத் தழுவிச் சான்றாண்மையில் குன்றனையோரே! எளியவனுக்காக வருந்தி அழவேண்டாம். அழியாத நட்புக்கு, சந்தித்துப் பழக வேண்டுமென்பது இல்லை. உள்ளத்தில் நிறைந்த நட்பு உணர்ச்சியே அந்நட்பை வளர்க்கும் என்றுணர்ந்த நல்லவர் நீங்கள் என்றார். இங்கு நக்கீரர் இங்கு இருப்பினும் வேறு எங்குச் செல்லினும் சங்கப் புலவரும் தாமும் கொண்டுள்ள நட்புணர்ச்சியே தங்கள் நட்பை வளர்க்கும் என்று எடுத்துரைத் துள்ளார். இப்பேச்சில்

> 'புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
> நட்பாம் கிழமை தரும்'[6]

என்னும் திருக்குறள் கருத்து ஒளிர்கின்றது.

குறளுக்கு மறுப்பு

அறம் செய்பவர் அடையும் பயனை அறன் வலியுறுத்தல் அதிகாரத்தில் அமைந்த,

> 'அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
> பொறுத்தானோ டூர்ந்தான் இடை'[7]

என்னும் குறளில் குறிப்பிடுகின்றார் வள்ளுவர். இக்கருத்தின்படி சிவிகையைச் சுமப்பவர்கள் முன்பிறவியில் அறம் புரியாதவர்கள்; சிவிகையில் ஏறிச் செல்பவர்கள் முன்பிறவியில் அறம் புரிந்தவர்கள் என்ற முடிபு தோன்றுகின்றது. இதற்கு மாறாக உள்ள ஓர் இடத்தைச் சிவப்பிரகாசர் நால்வர் நான்மணிமாலையில் எடுத்துக் கூறியுள்ளார். திருஞானசம்பந்தரின் சிவிகையைத் தாங்கிச் செல்பவர்கள் தேவர்களே. இவர்கள் தானே இயங்கும் சிவிகையில் அமர்ந்து செல்லும் பேறு பெற்றவர்கள். இவர்கள் சிவிகையைத் தாங்கிச் செல்பவர்கள் அறம் செய்யாதவர்கள்; சிவிகையில் அமர்ந்து செல்வோர் அறம் செய்தவர்கள் என்னும் குறட்கருத்தை மறுத்தவர்கள் ஆவர்.

இவ்வாறு சிவப்பிரகாசர் இக்குறளை மறுத்துரைப்பதற்குக் காரணம் 'அப்பரே' என்று சம்பந்தராலேயே அழைக்கப்பட்ட திருநாவுக்கரசரும் திருப்பூந்துருத்தியில் ஆளுடைய பிள்ளையின் பல்லக்கைச் சுமந்தார். அங்கனமாயின் அப்பெரியார் அறம் புரியாதவரோ? என்று சிந்திக்கும் ஆய்வு நோக்கே ஆகும். மேலும் திருஞான சம்பந்தருள் சிவிகையைத் தாங்கி வந்தவர்கள் விண்ணுலகில் தாமாக நினைத்த இடத்துக்குச் செல்லக்கூடிய 'தேவயானம்' என்னும் சிவிகையில் ஏறிச் செல்லும்

தேவர்களே ஆவார். இதனால் முற்பிறவியில் அறம் செய்யாதவர்களே சிவிகையைத் தாங்குவர் என்னும் கருத்து மறுக்கப்பட்டது.

இக்குறளின் கருத்தை மறுத்துத் தன் அறிவுத்திறத்தால் சம்பந்தரின் பெருமையைச் சிவப்பிரகாசர்.

அறந்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தான் இடையை - மறுத்தார்சம்
பந்தன் சிவிகை பரிந்தார் திரிகுவர்மற்
றுந்துஞ் சிவிகையினை யூர்ந்து[8]

என்னும் பாடலில் விளக்கியுள்ளார்.

பிரபுலிங்க லீலை

திருவள்ளுவர் கூறும் பல அறங்களையும் ஒரே பாடலில் தொகுத்துக் காட்டியுள்ளார் சிவப்பிரகாசர். பிரபுலிங்க லீலையில்,

கொலைகள வழுக்கா றவாவொரு வெகுளி
கொடுஞ்சொல் பொய் பயனில கூறல்
நிலையழிஇ ஒருவன் செய்ந்நன்றி மறத்தல்
சிந்தனை வஞ்சனை பிறர்தம்
சிலைநுதல் மடவார்க் கருதல் என்றனைய தீமைகள்"[9]

என வரும் பகுதியில் திருவள்ளுவர் கூறும் பல அறங்கள் ஒருங்கே தொகுத்துக் கூறியுள்ளார் சிவப்பிரகாசர்.

பெண்மையைப் போற்றல்

பெண்மையைப் போற்றியவர் சிவப்பிரகாசர். திருக்குறள் அதிகார மாகிய மக்கட்பேற்றினைப் பிற்காலத்தில் புதல்வரைப் பெறுதல் என மாற்றி அமைத்தவர் பரிமேலழகர் என்பர்.

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்[10]

என்னும் குறளில் இடம் பெற்றுள்ள 'கேட்ட தாய்' என்ற தொடருக்குப் பரிமேலழகர் 'பெண்ணியல்பால் தானாக அறியாமையின் கேட்ட தாய்' என்று உரை எழுதியுள்ளார். இதனை மறுத்து, மலையரையன் அறிவு மயமான பெரியநாயகி அம்மையைப் பெற்றான் என்று தம் அறிவுத் திறம் புலப்படச் சிவப்பிரகாசர் பெரியநாயகி அம்மை கலித்துறையில்,

நற்றாண் மகற்பெறு கென்றாகி சொல்பவர் நாணஉனைப்
பெற்றாள் மலையரையன் குன்றை வாழும் பெரியம்மையே"[11]

என்று கூறியிருப்பதன் வழி பெண்ணினத்துக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

குறள் கூறும் பல அறங்களுக்கு இலக்கணமாகத் தம் ஞானாசிரியரையும் தன்னைப் பேணிய அண்ணாமலை வள்ளலையும் எடுத்துக் காட்டியுள்ளார் சிவப்பிரகாசர். சிவஞான பாலய சுவாமிகளை,

''அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா அறமுடை யார்''[12]

எனவும் வேண்டுதல் வேண்டாமை இலாதார்[13] எனவும் போற்றியுள்ளார்.

அறநெறிச் சிந்தனையாளரான சிவப்பிரகாசர், பிற்காலப் புலவர்களில் பெரிதும் திருக்குறட்பாக்களைத் தமது நூல்களில் கையாண்டவர் ஆவார். அன்னைத் தமிழுக்கு அளப்பரிய தொண்டுகளைச் செய்தவர் சிவப்பிரகாசர். அவற்றுள் தலையாயது திருக்குறளைப் போற்றி வாய்ப்புள்ள இடங்களில் எல்லாம் தமது நூல்களில் அவற்றைக் கையாண்டுள்ளமை ஆகும். குறள் பரப்புநராகவும் சிறந்த உரையாசிரியராகவும், பரிமேலழகர் போன்ற பழைய உரையாசிரியர்களின் கருத்துகளை ஏற்றும் மறுத்தும் கருத்துகளை வெளியிட வல்லவராகவும் சிவப்பிரகாசர் விளங்கியமை குறிப்பிடத்தக்க வொன்றாகும்.

அடிக்குறிப்புகள்

1. திருவெங்கைக் கலம்பகம், ப. 42
2. திருவெங்கையுலா கண்ணி, ப. 172, 173
3. திருக்குறள் - 1072
4. நால்வர் நான்மணிமாலை - ப. 28
5. திருக்குறள் - 314
6. திருக்குறள் - 785
7. திருக்குறள் - 37
8. நால்வர் நாண்மணிமாலை, ப. 33
9. பிரபுலிங்கலீலை - அக்கமாதேவி உற்பத்தி கதி, ப. 24
10. திருக்குறள் - 69
11. பெரியநாயகி அம்மை, கலித்துறை - 12
12. சிவஞான பாலய சுவாமிகள், நெஞ்சுவிடு தூது - 59
13. சிவஞான பாலய சுவாமிகள் - 61

24. திருப்பள்ளியெழுச்சி - ஒரு பார்வை

இரா. கண்ணன், சென்னை.

"ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னேரி லாத் தமிழ்."

எனும் இத்திருப்பாட்டு உயர்வு நவிற்சியன்று; உண்மை உரையேயாம். பரந்து விரிந்து கிடக்கும் இப்பாரிடையே செறிந்து கிடக்கும் பேரிருளை ஓட்டவல்லது பரிதியொன்றே. ஆயின், அப்பரிதியஞ் செல்வனாலும் ஓட்ட வியலாப் பேரிருள் ஒன்றுண்டு. அது, மாந்தர்தம் அகத்தே மண்டிக் கிடக்கும் அறியாமை எனும் இருட்டாம். புறவிருட்டோ கண்ணொளியை மட்டுமே பறித்துக் கால் இடறச் செய்யும். அக இருட்டோ கருத்தி னொளியையே பறித்து, கால்வழித் தோன்றும் குடியையே மாய்த்து அழித்துவிடும். ஆதலின் புறவிருட்டைக் காட்டிலும் அஞ்சத் தக்கதும் அகற்ற வேண்டுவதும் அகவிருட்டே ஆம். எனின் இவ்வக இருட்டை அழித்தொழிப்பது எப்படி? இருபெரு சுடர்களாலும் இவ்விருட்டு இல்லாது ஒழியாது. விளக்கின் துணை கொண்டும் இவ்விருட்டை விலக்கிட ஒல்லாது. பின்னை என் கொண்டு இதனை மாய்ப்பது எனின்; அறியாமை எனும் இப்பேரிருளை அறிவாகிய தீபத்தான் ஒழிக்க வேண்டும் என்பதாம். ஆயின் அவ்வறிவாகிய ஞானச்சுடர் மாந்தர் அனைவரிடமும் உண்டாமே யெனின் அற்றன்று அது அறிவே உருவான இறைவனுக்கே உரியது என்க. எனின் இறையிடம் விளையும் அறிவைப் புல்லறிவுடைய மாந்தரினம் பெற்றுய்வது எவ்விதமோ யெனின் அவ்விறைவனின் திருவருள் வாய்க்கப் பெற்றோர், தாம் பெற்ற வின்பம் பெறுக இவ்வையம்' எனும் அருட் குறிப்பான் ஆக்கி யருளிய அரும் பெரும் பனுவல்களின் வழிப் பெற்றுய்ய வேண்டுவதாம் என்க. அதனாலன்றோ, 'வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்டது முதனூல்' என மொழிந்தனர் நம் இலக்கண ஆசிரியர். அத்தகு முதனூலாம் பெற்றியுடைய அரும்பெரும் ஞானக் களஞ்சியங்களாகத் திகழும் அறிவன் நூல்களை அளவிலாது பெற்றிருப்பது நம் அருந்தமிழாம். எனவேதான் இம்மொழியைப் பத்திமொழி என்றனர் அறிஞர். ஆக, அறிவினை விளக்கமுறச் செய்யும் பனுவல் பல பெற்று இருத்தலால்

தமிழ் அகவிருட்டை ஓட்ட வல்லது என்பதும் ஆதலின் மேற் சுட்டிய திருப்பாட்டு உயர்வு நவிற்சி அன்றி உண்மையுரையே ஆம் என்பதும் நன்கு புலனாம்.

வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே அறிவனூல்கள் பலவற்றைத் தமிழில் படைத்தருளிய ஆன்றவிந்தடங்கிய சான்றோர் பெருமக்கள் பலராவர். அவ்வருட் கூட்டத்தின்வழித் தோன்றலாகப் பதினேழாம் நூற்றாண்டளவில் இத்தமிழ் மண்ணில் அவதரித்த அருளாளர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் ஆவார். சைவமாம் அருள்நெறி இவ்வையகத்தே தழைத்தோங்கவும் அருந்தமிழ் மேன்மேலும் சிறந்தோங்கவும் இறைவன் திருவருளால் இத்தமிழ் மண்ணில் அவதரித்த சுவாமிகள் ஆக்கியருளிய பத்தி மணம் வீசும் பைந்தமிழ்ப் பனுவல்கள் பல. அவற்றுள், 'சிவஞான பாலைய சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி'யும் ஒன்று. இந்நூலின் இலக்கணம், இலக்கிய நயமாகியவற்றை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

திருப்பள்ளியெழுச்சி

தமிழில் வழங்கி வரும் இலக்கிய வகைகளை வகுத்தும் தொகுத்தும் காட்டும் மரபு பன்னிரு பாட்டியலாரால் கி.பி. ஏழாம் நூற்றாண்டளவிலேயே தொடங்கிவிட்டது என்றாலும் இலக்கிய வகைகள் 96 வகைப்படும் எனக் கருதும் வழக்காறு கி.பி. பதினேழாம் நூற்றாண்டில்தான் எழுந்தது. என்றாலும் இன்றுகாறும் தமிழில் வழங்கி வரும் இலக்கிய வகைகள் நானூற்றுக்கும் மேற்பட்டவையாக உள்ளமை அறிய வேண்டுவதாம். ஆயினும் இலக்கிய வகைகள் 96 வகைப்படும் என்ற கருத்தே இலக்கிய உலகில் வேர் கொண்டுள்ளது. அத்தொண்ணூற்றாறு இலக்கிய வகைகளுள் ஒன்று துயிலெடை நிலை என்பதாம். இவ்விலக்கிய வகைக்கான இலக்கணத்தைப் பன்னிருபாட்டியல், பிரபந்த தீபிகை, பிரபந்த தீபம் ஆகிய இம்மூன்று பாட்டியல் நூல்களும் பகர்ந்துள்ளன. தொன்னூல் விளக்கத்தின் ஆசிரியரான வீரமாமுனிவர் எழுதிய அந்நூலின் உரைப் பகுதியிலும் இவ்விலக்கியம் விளக்கப் பெற்றுள்ளது.

மேற்சுட்டிய பாட்டியல் நூல்கள் இவ்வகைக்கான இலக்கணத்தைப் பகர்ந்துள்ள போதிலும் இவ்விலக்கிய வகை தொல்காப்பியத்திலேயே விளக்கப் பெற்றுள்ளதும் அறிய வேண்டுவதாம். தொல்காப்பியர் பாடாண் திணைக்கு உரிய துறைகளைச் சுட்டுமிடத்து,

''தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்
சூதர் ஏத்திய துயிலெடை நிலையும்'' (தொல். பொருள். 98)

எனத் துயிலெடை நிலை குறித்துக் கூறுவார். இந்நூற்பாவிற்கு உரையாசிரியர் இளம்பூரணர், ''கிடந்தார்க்குக் கேடு இல்லாத நற்புகழைப்

பொருந்த வேண்டிச் சூதர் ஏத்திய துயிலெடை நிலை'' என விளக்குவார். மற்றொரு உரையாசிரியரான நச்சினார்க்கினியர், ''தமது வலியாலே பாசறைக்கண் ஒரு மனக் கவற்சியின்றித் துயின்ற அரசர்க்கு நல்ல புகழைக் கொடுத்தலைக் கருதிய சூதர் அத்துயிலெழுப்பின் ஏத்தின துயிலெடை நிலை; கிடந்தோர்க்கெனப் பன்மை கூறவே அவர் துயிலெடுப்புத் தொன்றுதொட்டு வரூஉம் என்பதூஉஞ் சூதர், மாகதர், வேதாளிகர், வந்திகர் முதலாயினோருட் சூதரே இங்ஙனம் வீரத்தால் துயின்றாரைத் துயிலெழுப்புவரென்பதூஉம் கொள்க'' என மேலும் விரித்துரைப்பர்.

தொல்காப்பியரும் உரையாசிரியர்களும் விடியற்காலையில் துயில்கொண்டுள்ள மன்னன் ஒருவனைத் துயில் எழுப்புவது துயிலெடை நிலை ஆகும் என விளக்கினர். பாட்டியல் நூல்களும் இக்கருத்துடையனவே. பன்னிரு பாட்டியல்,

''கண்படை மன்னவர் முன்னர்த் தண்பத
விடியல் எல்லை இயல்புறச் சொல்லித்
தந்த திறையரும் தாராத் திறையரும்
ஏத்தி நின்மொழி கேட்டினி தியங்க
வேண்டினர் இத்துயில் எழுகென விளம்பின்
அதுவே மன்னவர் துயிலெடை நிலையே'' (ப. பா. 206)

எனக் கூறி மன்னன் ஒருவனைத் துயிலில் இருந்து எழுப்புவது துயிலெடை நிலை என்றே விளக்கியுள்ளது. இவ்விலக்கிய வகைக்கு இலக்கணம் கூறும் பிற பாட்டியல் நூல்களான பிரபந்த தீபிகையும் பிரபந்த தீபமும் பன்னிரு பாட்டியலார் கூறியவாறே இவ்விலக்கிய வகையின் இலக்கணத்தை வரையறை செய்துள்ளன. எனவே தொல்காப்பியர் காலம் முதல் பிரபந்த தீபம் காலம் வரை துயிலெடை நிலை என்பது துயிலும் மன்னன் ஒருவனைத் துயில் எழுப்புவது என்ற கருத்தே இலக்கணப் புலவரிடம் இருந்து வந்தது என்பது போதரும்.

பத்தி இயக்கக் காலத்தில் பல்வேறு இலக்கிய வகைகள் புதிது புதிதாக உருவாகத் தொடங்கின. பழைய இலக்கண மரபுகளை மீறியும் இலக்கியங்கள் படைக்கப்பட்டன. துயிலெடை நிலைக்கான பாடுபொருளில் மரபு மீறலைப் புகுத்தியவர் மாணிக்கவாசகர் எனலாம். இவர் பாடிய திருப்பள்ளி எழுச்சி மன்னர் மீது பாடப்பெறாது இறைவன் மீது பாடப்பெற்றது. அஃதாவது விடியற்பொழுதில் இறைவனைத் துயிலெழுமாறு பொருளமைத்துப் பாடப்பட்டது அந்நூல். அதன்பின் தொண்டரடிப் பொடியாழ்வார் பாடிய திருப்பள்ளி எழுச்சியும் இறைவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது என்பது இவண் நினைவில் கொள்ள வேண்டுவதாம்.

மாணிக்கவாசகர் படைத்த புதுமையைப் போன்றே துறைமங்கலம் சிவப்பிரகாசரும் ஒரு புதுமையை இவ்விலக்கிய வகையின் வடிவத்தில் புகுத்தினார். அதுகாறும் மன்னன் இறைவன் ஆகியோரையே துயிலெடை நிலையின் பாட்டுடைத் தலைவனாகக் கொள்ளும் மரபிருக்க, சிவப்பிரகாசர்தம் ஞான குருவைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு துயிலெடை நிலையைப் பாடியுள்ளார். இறையடியாரும் இவ்விலக்கிய வகையின் பாட்டுடைத் தலைவனாக அமைவர் என்ற புதுக் கருத்து, சிவப்பிரகாசரின் சிவஞான பாலைய சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி யாலேயே நிறுவப் பெற்றது.

சிவஞான பாலைய சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி

முன்னரே சுட்டியவாறு இப்பள்ளி எழுச்சி நூல் ஞானகுருவைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பெற்றது. எண்சீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தத்தால் பாடப்பெற்றுள்ள இந்நூலுள் நான்கு பாடல்கள் மட்டுமே உள்ளன. பிற பள்ளி எழுச்சி நூல்கள் போன்றே இந்நூலின்கண் வரும் பாடல்கள் அனைத்திலும் ஈற்றடியில் 'பள்ளி எழுந்தருளாயே' எனும் தொடர் மகுடமாக அமைந்துள்ளது.

'திறை செலுத்த வந்தோரும் திறை செலுத்த மறுத்தமையால் சிறைப் பட்டு வந்தோரும் நின்அருள் ஆணையைக் கேட்க வந்துள்ளனர். அவர் தமக்கு அருள் புரிய பள்ளி எழுந்தருளாயே' என மன்னன் ஒருவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு திருப்பள்ளி எழுச்சி நூல்கள் பாடுவது இவ்விலக்கிய மரபென மேற்சுட்டிய இலக்கண நூல்கள் உணர்த்தும். இப்பள்ளியெழுச்சி ஞானகுருவைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப் பெற்றுள்ளமையால் அம்மரபு மாற்றம் பெற்றுள்ளது. உயிரின் தன்மை யாது எனும் வினாவிற்கு உலகச் சமயங்கள் பல்வேறாக விடை கூறுகின்றன. அதை செவிமடுத்த யாம் உண்மையறியாது உளம் மருட்கை கொண்டுள்ளோம். 'எம்பெருமானே நீ பள்ளி எழுந்திருந்து எம் ஐயத்தைப் போக்குவாயாக' எனும் விண்ணப்பத்தோடு இந்நூல் தொடங்குகிறது.

''நிறைந்தவொரு சச்சிதா னந்தபர சிவத்தி
னிகழுமுயி ரிப்பியிடை வெள்ளிபோற் றோன்றி
அறிந்துமய லகன்றிழ லொன் றன்றிவே றிலையென்
றறைவர் சிலர் பதியினைப்போ லாருயிர் நித்தியமே
இறந்துமல சத்திவிடிற் சிவசமா னதையா
யிருக்குமென வறைவர்சில ரெதுவழக் கென்றடியேஞ்
செறிந்தனநின் றனைவினவ வெங்கள்சிவ ஞான
தேசிகனே யருண்மலையே பள்ளியெழுந் தருளே''

தண்ணெனும் விடியற்பொழுதில் இனிய இசை முழங்கத் துயிலெழுப்புவது வழக்கு. இந்நூலின் பாட்டுடைத் தலைவனாகிய சிவஞான பாலைய சுவாமிகளைத் துயில் எழுப்ப, திருமால் தன் வலம்புரிச் சங்கொடு வந்து இன்னிசை முழங்கக் காத்திருக்கிறான். பிரமனோ தம் அரும் பெரும் கரக நீர் கொண்டு வந்து மங்கல நீர் தெளிக்கவும் நன்னீராட்டவும் காத்திருக்கின்றான். ஆதலால் எம்பெருமானே பள்ளி எழுந்தருள்க என மற்றொரு பாடலில் வேண்டுகிறார்.

''காற்றுமறைப் பாயபடப் பாயலிடை மடங்கற்
கனலருகி னரிசனப்பொற் றூசுமிசை போர்த்துக்
கோற்றொடிமென் முலைமடந்தை தனைமார்போ டணைத்துக்
குளிர்குடையா னுததியிடைக் கண்டுயில்வோ னெழுந்து
போற்றிநின் தெதிர்குறிப்பச் சங்கொடும்வந் துற்றான்
புண்டரிகன் கரகநீர் கொண்டுதவ நின்றான்
சீற்றமறுந் தவக்களிறே யெங்கள் சிவஞான
தேசிகனே யருண்மலையே பள்ளியெழுந் தருளே''

இவரிவர் வந்துநின் அருள்மொழி கேட்கக் காத்திருக்கின்றனர். எனவே துயில் களைக எனப் பாடுவது இலக்கிய மரபு. கற்பனைக் களஞ்சியமான நம் சுவாமிகள் இவரிவர் வந்திலர்; அதனால் துயில் களைய வேண்டுமென நயமோடு பாடுகிறார்.

''தூதுவிடு நம்பிவரு கிலன்சிலையா லெறிந்த
தொண்டனிலை விசயனும்வில் லோடும்வந்தா னில்லை
ஏதுமறு மியற்பகையார் கிளைஞர்கள்வந் தடைந்தா
ரில்லைநினை மண்சுமவென் றொருபிரம்பா லடித்தோன்
போதிலனின் றிருவடியிற் போதுகள்தூய்ப் பரவிப்
போற்றலுறு மடியவரே பொருந்தினரெம் மருங்குஞ்...''

எம்பெருமானே நின்னைப் பரவையாரிடம் தூது விடுத்து அலைக்கழித்த வன்தொண்டனான சுந்தரனும், கல்லெறிந்து துன்புறுத்திய சாக்கிய நாயனாரும், வில் எடுத்து வந்து சமர் புரிந்த விசயனும் இங்கு வரவில்லை. மாறாக நின் திருவடிகளில் மலர் தூவி, காதல் நெஞ்சோடு கசிந்துருகும் மெய்யடியார்களே வந்துள்ளனர். எனவே எவ்விதத் தயக்கமுமின்றி துயில் களைந்து எழுக எனப் பொருள்படும் பாடலில் பொதிந்துள்ள நயம் எண்ணி எண்ணி இன்பங் கொள்ளத் தக்கது.

இறையடியார்களை இறைவனாகவே கருதும் வழக்கு, சைவத்துள் உண்டு. வீரசைவத்தார் இறையருள் பெற்ற அருளாளர்களைச் சிவனின் அம்சமாகக் கருதுவர். துறைமங்கலம் சிவப்பிரகாசரும் சிவஞான பாலைய சுவாமிகளைச் சிவனாகவே கருதி இப்பள்ளி எழுச்சியைப் பாடியுள்ளார்.

முன்னரே சுட்டியவாறு பத்தி இயக்க காலம் தமிழ் இலக்கியத்தின் பொற்காலமாகும். அதிலும் சைவ சமயம் தமிழை வளர்ப்பதில் தனிப்பெருங் கவனம் செலுத்தியது. பிற சமயங்களைவிட, சைவ சமயமே புதுப்புது இலக்கிய வகைகளைத் தமிழில் படைத்தளித்தது. இப்பள்ளியெழுச்சி எனும் இலக்கிய வகையும் சைவம் தந்த கொடையே. பள்ளி எழுச்சி இலக்கிய வகையின் வடிவத்தில் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளும் பல மாற்றங்களை உருவாக்கி இவ்விலக்கிய வகையைச் செப்பம் செய்துள்ளார். அம்மாற்றங்கள் வருமாறு:

1. மன்னன் ஒருவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இவ்விலக்கியம் பாடப்பெறும் எனும் இலக்கண மரபு மாற்றப் பட்டு இறைவன் மீது மாணிக்கவாசகர் திருப்பள்ளி எழுச்சி பாடினார். சுவாமிகளோ இறையடியாரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இவ்விலக்கியத்தைப் படைத்துள்ளார்.
2. பத்துப் பாடல்கள் வருமாறு இவ்வில்க்கியம் பாடுவது மரபாக இருக்க நான்கு பாடல்களே பாடி எண் வரையறை இன்றி இவ்விலக்கியம் பாடப்பெறும் என்ற புதிய கோட்பாட்டை உருவாக்கித் தந்துள்ளார்.
3. பிள்ளைத்தமிழில் அம்புலிப் பருவத்தில் சாம பேத தான தண்டம் ஆகிய உத்திகள் அமைத்துப் பாடுவது போன்று பள்ளியெழுச்சி யில் இவரிவர் வந்துள்ளனர்; எனவே துயில் களைக எனப் பாடுவது போன்றே இவரிவர் வரவில்லை; எனவே அஞ்சாது துயில் எழுக எனப் பாடி ஓர் புதிய உத்தியை அறிமுகம் செய்துள்ளார்.

இவை யாவும் இப்பள்ளியெழுச்சியின் தனிச் சிறப்புகளாக நின்று பின்வரும் இலக்கிய வாணர்களுக்குப் புதுமையைப் படைக்க வழி காட்டுவனவாக நின்று இவ்விலக்கிய வகை வளர அடித்தளமாக அமைந்துள்ளது.

25. சிவப்பிரகாசருக்கு அடிகளாசிரியரின் பணிகள்

இடைப்பாடி அ. கணேசன், அண்ணாமலைநகர்.

''சிவப்பிரகாசர் அருளிய இலக்கியங்களுக்கு அடிகளாசிரியர் செய்த பணிகள்'' என்பது இவ்வாய்வுக் கட்டுரையின் தலைப்பாகும். இத்தலைப்பைத் தெரிவு செய்ததின் நோக்கம் என்னவெனில், சிவப்பிரகாசர் பற்றிய இவ்விலக்கிய மாநாட்டில், அவரது இலக்கியங்களை வெளிக்கொணர பேராசிரியர் திரு. அடிகளாசிரியர் அவர்கள் எத்தகைய முயற்சியை மேற்கொண்டார் என்பதை அறிவதேயாகும். இவ்வாய்வில் நுழையும்முன் தவத்திரு சிவப்பிரகாசர் பற்றியும், பேராசிரியர் திரு. அடிகளாசிரியர் பற்றியும் அறிமுகம் செய்து கொண்டு, அதன்பின் பேராசிரியர் திரு. அடிகளாசிரியரவர்கள் தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய இலக்கியங்களுக்கு எத்தனை ஆண்டுகளாக எந்தெந்த வகையில் எவ்வெவ்வாறு பணி செய்துள்ளார் என்பதை நோக்குவோம்.

சிவப்பிரகாசர் வரலாறு

வீர சைவ சமயத்தைச் சேர்ந்தவரும் கற்பனைக் களஞ்சியம் என்று போற்றப்படுபவரும் ஆகிய தவத்திரு துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் பதினாறாம் நூற்றாண்டில் தோன்றியவராவர். இவர், வீரசைவம், சைவ சித்தாந்தம், வேதாந்தம் முதலியவற்றின் சமய உண்மைகளை நன்குணர்ந்தவராவர். இத்தகைய அறிஞர்தம் வாழ்நாளில் முப்பத்து நான்கு நூல்களை இயற்றியுள்ளார்.

திரு. அடிகளாசிரியரின் வாழ்வும் பணியும்

இருபதாம் நூற்றாண்டில் குறிப்பிடத்தக்க தமிழ் அறிஞர்களுள் ஒருவராய்த் திகழ்பவர் திரு. அடிகளாசிரியர். இவர், விழுப்புரம் மாவட்டம் கல்லக்குறிச்சி வட்டத்தின் தென்கோடியில் அமைந்துள்ள குகையூரில் சித்தநாதேச்சுர ஆதீனத்தைச் சேர்ந்த வீரசைவ மரபில் தோன்றியவர். மயிலம், கரந்தை ஆகிய இடங்களில் உள்ள தமிழ்க் கல்லூரிகளில் பேராசிரியராகப் பணியாற்றிய பெருமையர். சென்னை, தஞ்சாவூர் பல்கலைக்கழகங்களில் தமிழ்ப் பணி செய்தவர்.

இவர், இதுகாறும் உரை நூல்கள், பதிப்பு நூல்கள், ஆராய்ச்சி நூல்கள், படைப்பிலக்கிய நூல்கள் என்ற வகையில் 55 நூல்களைப்

படைத்துள்ளார். தற்போது அகவை முதிர்ந்த (93) நிலையில் தமிழுக்காகவே வாழ்ந்து வருகின்றார். மேலும், தம் பிறந்த ஊரிலேயே வைக்கோல் வேய்ந்த கூரை வீட்டிலேயே மிக மிக எளிய வாழ்க்கை வாழ்ந்துகொண்டு அரிய பல தமிழ்ப் பணிகளைச் செய்து வருகின்றார்.

அடிகளாசிரியரால் பதிப்பிக்கப்பெற்ற சிவப்பிரகாசரின் நூல்கள்

பேராசிரியர் அடிகளாசிரியர் அவர்கள் சிவப்பிரகாசரின் நூல்களை மூலத்துடன், மூலமும் உரையுடன் தாமே பதிப்பித்தும், பிற நிறுவனங்கள் மூலமாகப் பதிப்பித்தும் வழங்கியுள்ளார். அதன் பட்டியல் வருமாறு,

1. சதமணிமாலை மூலம் மட்டும் - 1938
2. சிவப்பிரகாச விகாசம் மூலம் மட்டும் - 1939
3. சிவப்பிரகாச விகாசம் மூலமும் உரையும் - 1977
4. சதமணிமாலை மூலமும் உரையும் - 1990
5. சித்தாந்த சிகாமணியில் அங்கத்தலத்திரட்டு - 1992
6. ஸ்ரீ சிவஞான பாலைய தேசிகர் திருப்பள்ளி எழுச்சி மூலமும் உரையும் - 1993
7. இட்டலிங்க அபிடேக மாலை மூலமும் உரையும் - 2001
8. பிரபுலிங்க லீலையில் அருள்திரு வசவதேவர் திருஅவதாரப் பாடலும் உரையும் - 2001
9. பிரபுலிங்க லீலை மூலமும் உரையும் (கையெழுத்துப்பிரதி அச்சாகவில்லை)
10. ஸ்ரீசிவஞான பாலைய தேசிகர் கலம்பகம் மூலமும் உரையும் (கையெழுத்துப் பிரதி அச்சாகவில்லை)

சிவப்பிரகாசர் அருளிய முப்பத்து நான்கு நூல்களுள் மேற்குறித்த பத்து நூல்களை அடிகளாசிரியர் அவர்கள் நல்ல முறையில் வெளி யிட்டுள்ளார். இனி அப்பத்து நூல்களைப் பற்றிய பதிப்பு விளக்கங்களை அறிவோம்.

1. சதமணிமாலை மூலம் மட்டும் - 1938

அடிகளாசிரியரவர்கள், சதமணிமாலை மூலத்தை மட்டும் பிரமபுரமென்னும் பொம்மபுரம் மடாலய வெளியீடாக 1938-ஆம் ஆண்டில் பதிப்பித்துள்ளார். அவர், அப்பதிப்பின் முன்னுரையில் எழுதி யுள்ள கருத்துக்கள் வருமாறு:

“இவ்விரு நூல்களையும் தேடி அச்சிடவேண்டும் என்கிற அவாவால் பலவிடங்கள் அலைந்தேன். இதில் சிவப்பிரகாச

விகாசப் பிரதிகள் மட்டும் இரண்டொன்று கிடைத்தன. சதமணி மாலை மட்டும் கிடைக்கவில்லை. இராமலிங்க சுவாமிகளால் சேகரிக்கப்பட்டும், பரிசோதிக்கப்பட்டுமிருந்த நூல் பிரதிகள், பலரால் கொள்ளையடிக்கப்பட்டுத் தம் பெயராலே அச்சேற்றப் பட்டுள்ளன. அக்கொள்ளைக்காரரின் கையில் அகப்படாத நூற்பிரதிகளோ அந்துப் பூச்சிக்கும், காலக்கிரமத்தில் குப்பைத் தொட்டிக்கும் உரியதாகிக் கொண்டே வருகின்றன. அக்குப்பைத் தொட்டியையும் ஆழ்ந்து பரிசோதித்த எனது உயிர் நண்பர் வேங்கடத்தானார், வித்வான், வீ. சோமசுந்தர ஐயர் அவர்கள். அத்தொட்டியிலிருந்து சதமணிமாலை, மயிலத்துலா எழுதப்பட்ட காகிதப் பிரதியொன்றைக் கண்டெடுத்து அதைப் பாதுகாத்து வைத்திருந்தனர். அப்பிரதியைப் பார்த்து யான் ஒரு பிரதி செய்துகொண்டு படித்து வந்தேன்.

ஸ்ரீமத் ஞான இராசதானியான இனாம் பொம்மையபாளையம் திருக்கைலாய பரம்பரை பெரியமடம் சிவகஞ்சி மயூராசல நிவாசயதீச்சுர கார்த்தரான மயிலம் தெய்வத்தான ஆதீன பரம்பரை தர்மகர்த்தத்வம் இனாந்தார் ஸ்ரீமத் சிவஞான பாலைய சுவாமிகள் மகா சந்நிதானத்தில் இப்புத்தகத்தை அச்சிட வேண்டு மென்று விண்ணப்பித்துக் கொண்டேன். அவர்கள் அருள்கூர்ந்து அனுமதியளித்தார்கள்.[1]

2. சிவப்பிரகாச விகாசம் மூலம் மட்டும் - 1939

சிவப்பிரகாச விகாசத்தின் மூலத்தை அடிகளாசிரியரே மிகவும் சிரமப்பட்டு வெளியிட்டுள்ளார்கள். 1935-ஆம் ஆண்டில் தஞ்சையில் அமைந்துள்ள சரசுவதி மகால் நூலகத்திற்குச் சென்று அங்குள்ள சுவடிகளைத் தேடியபோது சிவப்பிரகாச விகாச சுவடி ஒன்றைக் கண்டார். கண்டவுடன் சிவப்பிரகாசரையே நேரில் கண்டாற்போல் உவகை அடைந்தாராம். ஆனால், கிடைத்த சுவடியோ பிழை மலிந்த சிதைந்த நிலையிலே இருந்ததால் ஒருவாறு திருத்தமான பிரதி ஒன்றை எழுதினார். இவ்வாறு எழுதப்பட்ட பிரதியை மயிலம் பொம்மபுர ஆதீனத்தார்கள் தம்மடத்து வெளியீடாக 1939-ஆம் ஆண்டில் வெளியிட்டனர்.

அடிகளாசிரியர் இப்பதிப்பைப் பற்றிக் கூறியுள்ள கருத்துக்களை அறிந்தால் அவரின் உணர்வைப் புரிந்து கொள்ள முடியும்.

"இது போழ்து கிடைத்த வரையில் இந்நூல் அச்சிற்கு வருகிறது இதற்கு செய்ய வேண்டிய திருத்தங்கள் பலவிருப்பினும் வேறு படிகளின் ஒப்புமையின்றி ஒன்றுஞ் செய்ய வியலவில்லை. இந்நூலை இந்தளவில் செம்மையுறுத்தற்கு, என் நெஞ்சுபட்ட

அல்லலை, நெஞ்சையேயிடமாகக் கொண்ட இறைவன்றான் அறிவனல்லது வேறு யாவர் அறிவார்?[2]

3. சிவப்பிரகாச விகாசம் மூலமும் உரையும் - 1977

அடிகளாசிரியர், சிவப்பிரகாச விகாசம் மூலத்தை மட்டும் 1939-ஆம் ஆண்டில் மயிலம் மடத்து வெளியீடாக வெளியிட்டதை அறிந்தோம். ஆனால், அப்பதிப்பு அடிகளாசிரியருக்கு மனநிறைவை அளிக்கவில்லை.

> ''நான் அடிக்கடி சிவப்பிரகாச விகாசம் குறைப்பிரதியாகவே கிடைத்திருக்கிறதே என்று எண்ணி மனக்குறைபட்டுக் கொண்டேயிருந்தேன்.
>
> பின் ஒருகாலத்தில் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள் திருமடத்தில் நிகழ்ந்த குருபூசைக்குச் சென்றிருந்தேன். அப்பொழுது அம்மடத்திலுள்ள ஓலைச் சுவடிகளைத் தேடிய பொழுது சிவப்பிரகாச விகாசம் முற்றிலும் உள்ள ஓலைச் சுவடி ஒன்று கிடைத்தது. அதைக் கண்டதும் எனக்கு உண்டான உவப்பிற்கு எல்லையே இல்லை. சிவஞானம் முழுவதும் பெற்றவருக்கு எத்தகைய உவகை உண்டாகுமோ அவ்வளவு உவகை எனக்கு உண்டாயிற்று. ஞானியார் மடத்துப் பிரதி முழுச் சுவடியாயிருந்தாலும் இதிலும் சில இடங்கள் சிதைந்தே உள்ளன.
>
> அச்சுவடியைப் பெற்று பிரதி செய்து பதிப்பிக்க முயன்றேன். வேண்டும் பொருள் வசதி கிட்டாமையால் முடியவில்லை''[3]

என்று கூறியுள்ளார்.

ஆகவே மிகுந்த சிரமத்திற்கு இடையில் 1977-ஆம் ஆண்டில் தஞ்சை சரசுவதி மகால் நிலையத்தின் சார்பில் சிவப்பிரகாச விகாசத்தை மூலமும் உரையுடன் சிறந்த பதிப்பாக வெளியிட்டார்.

சிவப்பிரகாச விகாசம் என்னும் இலக்கியத்தை வெளிக்கொணர இவரால் 1939-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட முயற்சி 1977-ஆம் ஆண்டில் நிறைவுற்றது.

4. சதமணிமாலை மூலமும் உரையும் - 1990

தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகள், உமாபதி சிவாச்சாரியார் செய்த, ''சதரத்ன சங்கிரகம்'' என்னும் வடமொழித் திரட்டு நூலை வடமொழியிலிருந்து தமிழில் மொழி பெயர்த்து சதமணிமாலை என்னும் பெயரால் இயற்றியுள்ளார். இந்நூல் காப்புப் பாடல் உட்பட 101 பாடல்களைக் கொண்டுள்ளது. இந்நூலிற்கு இதுகாறும் உரை தோன்றவில்லை. இக்குறையை நீக்கியவர் அடிகளாசிரியரே ஆவார். இந்நூலின் மூலத்தை

முதற்கண் தேடித் தொகுத்து 1938-ஆம் ஆண்டில் வெளிப்படுத்தியவரும் இவரே ஆவார்.

இந்நூல் மிகச் சிறந்த சைவ சித்தாந்த நூலாகும். இந்நூலின் சிறப்பை அடிகளாசிரியர்,

> ''வீரசைவர்களுக்கும், சைவர்களுக்கும் சிவாகமங்கள் முதல் நூலாகும். இவ்வாகமங்களுள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவற்றைக் கூறும் பகுதிகளைவிட ஞானத்தைக் கூறும் பகுதிகளே மிக மிகச் சிறந்தனவையாகும். இச்சதமணிமாலை பத்து ஆகமங்களில் உள்ள ஞானபாதக் கருத்துக்களைத் திரட்டி முறைப்படுத்திக் கூறும் ஞான இலக்கியமாதலின், இது மிக மிகச் சிறந்த இலக்கியமாகும்''[4]

என்று கூறியுள்ளார். மேலும், இவ்வுரை நூலைத் தமது சித்தநாதேச்சுர ஆதீன வெளியீடாக வெளியிட்டுள்ளார்.

5. சித்தாந்த சிகாமணியில் அங்கத்தலத்திரட்டு (கருத்துரையுடன்) - 1992

சிவப்பிரகாசர் அருளிய மிகச் சிறந்த வீரசைவ சமய சாத்திரநூல் சித்தாந்த சிகாமணி என்பதாகும். இந்நூலில், அங்கத்தலத்திரட்டு என்ற பகுதியில் உள்ள 48 பாடல்களுக்கு அடிகளாசிரியர் உரையெழுதியுள்ளார். இவ்வுரையுள் வீரசைவன் யார், வீரசைவருடைய பிறப்பு, வீர சைவருடைய கொள்கை, வீரசைவரின் இலிங்க வழிபாடு, ஐந்தெழுத்துக் களின் பெருமை, சிவதீக்கை, இட்டலிங்கத்தின் பெருமை முதலானவைகள் விளக்கப் பெறுகின்றன. இந்நூலைச் சின்னசேலத்தைச் சேர்ந்த புலவர் து. கந்தசாமி அவர்கள் தமது 71-ஆம் ஆண்டின் நினைவாக வெளியிட்டுள்ளார்.

6. ஸ்ரீ சிவஞான பாலைய தேசிகர் திருப்பள்ளிஎழுச்சி மூலமும் உரையும் - 1993

தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகள் சிவஞான பாலைய சுவாமிகள் மீது பத்து எண்சீர் விருத்தப் பாடல் வடிவில் திருப்பள்ளி எழுச்சி இயற்றியுள்ளார். இந்நூலுக்கு பேராசிரியர் அடிகளாசிரியர் அவர்கள் உரை எழுதியுள்ளார். அவ்வுரையில், நமக்குக் கிடைத்தது நான்கு பாடல்களே, ஏனைய பாடல்கள் சிதைந்துவிட்டன போலும் என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வுரை நூலை, 18-ஆம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலைய சுவாமிகள் குருபூசை விழா மலர் நினைவாக மயிலம் பொம்மபுரம் ஆதீனம் வெளியிட்டுள்ளது.

7. இட்டலிங்க அபிடேகமாலை மூலமும் உரையும் - 2001

தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகள் மிகச் சிறந்த வீரசைவராவார். இவர் பல வீரசைவ நூலை இயற்றியுள்ளார். அவற்றில் ஒன்று இட்டலிங்க அபிடேகமாலை. இந்நூல் வீரசைவத்தின் சிறப்பை எடுத்துக் கூறுகின்றது. இவ்வரிய நூலுக்கு அடிகளாசிரியர் அவர்கள் சிறந்த உரை ஒன்றை எழுதியுள்ளார். இந்நூலை, அடிகளாசிரியர் தமது சித்தநாதேச்சுர ஆதீனத் திருவருள் நிலையத்தின் ஆன்ம நலப்பணி வெளியீடாக வெளியிட்டுள்ளார்.

8. பிரபுலிங்க லீலையில் அருள்திரு வசவதேவர் திருஅவதாரப் பாடலும் உரையும் - 2001

அடிகளாசிரியர் அவர்கள் தமது இல்லத் திருமண விழாவில் திருமண மலர் ஒன்றை வெளியிட ஏற்பாடு செய்திருந்தார். அதன்படி அம்மலரில் பிரபுலிங்க லீலை என்னும் இலக்கியத்தில், அக்கமாதேவி உற்பத்திக் கதியிலிருந்து (பாட்டு எண் 21 முதல் 28 வரை) எட்டுப் பாடல்களைத் தெரிவு செய்து உரை எழுதி அதற்கு, அருள்திரு வசவதேவர் திருஅவதாரம் எனப் பெயரிட்டுள்ளார்.

தமது இல்லத் திருமண விழாவில் சிவப்பிரகாசர் அருளிய பாடல் களை உரையுடன் அச்சிட்டு வழங்கிய செயலைக் காண்கின்றபொழுது அடிகளாசிரியரின் தமிழ்ப்பற்றும் அவர் சிவப்பிரகாசரின் மேல் வைத்திருக்கும் பக்தி உணர்வும் நம்மை வியக்க வைக்கிறது.

9. பிரபுலிங்க லீலை மூலமும் உரையும் (கையெழுத்துப் பிரதி அச்சாகவில்லை)

சிவப்பிரகர்சர் அருளிய மிகச் சிறந்த இலக்கியங்களுள் பிரபுலிங்க லீலையும் ஒன்றாகும். இந்நூலிற்கு அரிய உரை ஒன்றை அடிகளாசிரியர் எழுதியுள்ளார். ஏறத்தாழ பதினொரு மாதங்கள் உழைத்து அவ்வுரையைத் தயாரித்தார். மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் வேண்டுகோளுக்கிணங்க உரையெழுதும் பணி தொடங்கப்பெற்று கையெழுத்துப் பிரதி ஆதீனத்திடம் ஒப்படைக்கப் பெற்றது. இவ்வுரையைப் பற்றி அடிகளாசிரியரிடம் கேட்ட போது அகவை முதிர்ந்த நிலையில் மிகவும் சிரமப்பட்டு அவ்வுரையைத் தயாரித்தேன். அதை மயிலம் திருமடத்தார்கள் அச்சிட்டு வெளியிட்டால் என் மனம் அமைதியுறும்''[5] என்று கூறினார்.

10. சிவஞான பாலைய தேசிகர் கலம்பகம் மூலமும் உரையும் (கையெழுத்துப் பிரதி அச்சாகவில்லை)

தவத்திரு சிவஞான பாலைய தேசிகர் கலம்பகத்திற்கு அடிகளாசிரியர் அருமையான சொற்பொருள் உரை ஒன்றை எழுதியுள்ளார். இவ் வுரையின் கையெழுத்துப் பிரதி மயிலம் பொம்மபுர ஆதீன மகா

சுவாமிகளிடம் ஒப்படைக்கப் பெற்றுள்ளது. இவ்வுரையில் பல அரிய வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன. ஆதலால் மயிலம் திருமடத்தார்கள் கலம்பக உரையை அச்சிட்டு வழங்கினால் தமிழுலகம் மிகப் பயனுறும் என்று அடிகளாசிரியர் கூறினார்.[6]

1. பேராசிரியர் அடிகளாசிரியர் அவர்கள் சிவப்பிரகாசரின் முப்பத்து நான்கு நூல்களுள் பத்து நூல்களைப் பதிப்பித்த பெருமையர் ஆவர்.
2. பேராசிரியர் அடிகளாசிரியரின் கடும் முயற்சியால்தான் சதமணிமாலை, சிவப்பிரகாச விகாசம் என்னும் இரண்டு நூல்கள் தமிழுலகத்திற்கு கிடைத்தன.
3. பேராசிரியர் அடிகளாசிரியரின் முயற்சியால் சதமணிமாலை, சிவப்பிரகாச விகாசம், திருப்பள்ளி எழுச்சி, இட்டலிங்க அபிடேக மாலை, அங்கத்தலத்திரட்டு, பிரபுலிங்க லீலை, கலம்பகம் முதலான நூல்களுக்கு அரிய உரை கிடைத்துள்ளன.
4. பேராசிரியர் அடிகளாசிரியர் மயிலம் பொம்மபுர ஆதீனம் வெளி யிட்டுள்ள சிவப்பிரகாசர் பிரபந்தத் திரட்டுக்கு தருக்க பரிபாஷை, சதமணிமாலை, சிவப்பிரகாச விகாசம் போன்ற மூன்று அரிய நூல்களைக் கொடுத்து உதவியுள்ளார்.
5. பேராசிரியர் அடிகளாசிரியரவர்கள் 1938-ஆம் ஆண்டில் சதமணி மாலையை வெளியிட்டார். 2001-ஆம் ஆண்டில் பிரபுலிங்க லீலையில் ஒரு பகுதிக்கு உரை எழுதி வெளியிட்டுள்ளார். இதனை நோக்குகின்றபோது, ஏறத்தாழ 63-ஆண்டுகள் சிவப்பிரகாசரின் நூல்களை வெளியிட்டு மகிழ்வதில் மிகுந்த கவனம் செலுத்தியுள்ளார் என்பதை உணர முடிகிறது.
6. அடிகளாசிரியர் தாம் பாடிய சான்றாண்மை என்ற இலக்கியத்தில் சிவப்பிரகாசருக்கு வணக்கம் தெரிவித்துள்ளார்.

சான்றெண் விளக்கம்

1. சிவப்பிரகாசர், சதமணிமாலை, மூலம் முன்னுரை, ப. 1,2 மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடு, முதற்பதிப்பு - 1938.
2. சிவப்பிரகாசர், சிவப்பிரகாச விகாசம் மூலம், முன்னுரை - ப. 3,4 மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடு - 1939.
3. சிவப்பிரகாசர், சிவப்பிரகாச விகாசம் மூலமும் உரையும், முன்னுரை, ப. 8. சரசுவதி மகால் வெளியீடு - 1976.
4. சிவப்பிரகாசரின் சதமணிமாலை மூலமும் உரையும் முன்னுரை, ப. 5. சித்தநாதேச்சுர ஆதீன வெளியீடு - 1990.
5. அடிகளாசிரியரை நேரில் சந்தித்து உரையாடியமை நாள் - 24.5.2002.
6. மேலது.

26. அக்கமாதேவியார் வாழ்வும் வழிபாடும்

பொ.நா. கமலா, சிவகாசி.

அக்கமாதேவியைக் காரைக்காலம்மையாரோடு இணைத்து ஆராய்ந்து தமிழில் நூல் படைத்தவர் எம்.எஸ். சாந்தா ('காரைக்காலம்மையாரும் அக்கமாதேவியாரும் - ஓர் ஒப்பாய்வு'). அந்நூலின் முன்னுரையில் பொன். கோதண்டராமன், பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், தான் படைத்தளித்த பிரபுலிங்க லீலை மூலம் கன்னட நாட்டு வீரசைவப் பெண் துறவி அக்கமாதேவியைச் சிறப்பான முறையில் தமிழகத்துக்கு அறிமுகம் செய்துள்ளார் எனக் குறிப்பிடுகிறார். (ப.12). சிவப்பிரகாசரின் பிரபுலிங்க லீலை அல்லமதேவரின் வரலாற்றைக் கூறுமுகமாக வீரசைவத்தின் பெருமையை விரித்துரைக்கிறது; அல்லமதேவப் பிரபு, முழுஞானம் பெற விழைந்த அக்கமாதேவிக்கு அருள் செய்தமையையும், இறுதியில் இலிங்கத்தோடு தேவி ஒன்றியமையையும் எடுத்துரைக்கிறது.

பிரபுலிங்க லீலையின் மூலநூல்கள்

சிவப்பிரகாசரின் பிரபுலிங்க லீலை வழிநூலாகும். இதற்கு மூல நூலாக அமைந்தது கி.பி. பதினான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த சாமரசர் என்பவர் கன்னட மொழியில் எழுதிய 'பிரபுலிங்க லீலை' ஆகும். அந்நூலில் 25 கதிகளில் அல்லமதேவரின் வரலாற்றினை அவர் கூறுகிறார். மாதேவி உற்பவகதி (10), மாதேவி துறவு கதி (11), கதலிவன கதி (17) ஆகிய கதிகளில் மாதேவி எனும் அக்கமாதேவியின் வாழ்வினை அவர் விவரிக்கிறார். மூலநூலினை அடியொற்றிச் சிவப்பிரகாசரும் 25 கதிகளில் பிரபுலிங்க லீலை நூலை இயற்றி, அதே வண்ணம் மூன்று கதிகளில் அக்கமாதேவி வரலாற்றினை அமைத்துள்ளார். மேலும் கன்னடத்தில் பிடுபர்த்தி சோமநாதரும், மராட்டியில் பிரமதாசரும் பிரபுலிங்க லீலையை இயற்றியுள்ளனர். கன்னட மொழியில் மாதேவி யாரையும் காரைக்காலம்மையாரையும் ஒப்பிட்டு நூல் எழுதியவர் எம்.எஸ். லட்டே (மு.கூ. நூல். ப. 61).

1. அக்கமாதேவி வாழ்வு

அக்கமாதேவி பற்றிச் சிவப்பிரகாசரின் பிரபுலிங்க லீலை கூறும் செய்திகளாவன:

உமையம்மையின் சத்துவகுணக் கலை மாதாக அக்கமாதேவி, நிருமலன் சுமதி என்பாருக்கு மகளாக உடுதடை என்ற ஊரில் பிறந்தார். குழந்தை பிறந்தவுடன், தந்தை நிருமலன் அதன் நெற்றியில் நீறுபூசி இலிங்கக் குறியை இட்டான். நற்பண்புகளுடன் வளர்ந்த அத்தேவி மங்கைப்பருவம் எய்தினாள். அவளைக் கண்டு காமனும் கண் கலங்கினான். அக்கமாதேவியோ இன்ப நினைவு சிறிதும் இன்றிச் சிவனை அடைய முயன்றாள்.

கௌசிகன் என்ற மன்னன் அக்கமா தேவியைக் கண்டு காமுற்று அவளை அடைய விரும்பினான். நிருமலன்பால் மணம்பேச கௌசிகன் மாதர்களைத் தூது அனுப்பினான். 'கௌசிகன் தக்கவனல்லன்' என்று கூறி நிருமலன் மகட்கொடை மறுத்ததோடு தன் மகளிடம் சென்று நேரில் பேசுமாறு அம்மாதர்களை அனுப்பி வைத்தான். மாதேவி அம்மாதர்களிடம் கௌசிகன் தன்னை வலிந்து தழுவாதிருக்கச் சூளுரைக்குமாறு வேண்டினாள். கௌசிகனும் தேவி விரும்பியவண்ணம் சூளுரைத்தான். மாதேவி அரசனுடன் அவனது அரண்மனையை அடைந்தாள். அரசன் தன்னை மணக்குமாறு வேண்டினான். அவளோ சிவபூசை செய்த பின்னர் தன்னை வந்து சேருமாறு கூறினாள். அரசன் சமண சமயத்தவன். அவன் தான் சிவனை வழிபடுவதில்லை என, மாதேவியும் அவனைத் தீண்ட மறுத்தாள்; ஆடை அணிகலன்களை அகற்றிக் கூந்தலால் உடல் மறைத்து முற்றும் துறந்து தெருவிற் சென்றாள். நிருமலனும் சுமதியும் தம் மகள் தக்கதே செய்தாள் என எண்ணினர். நகர மாந்தர் அக்கமாதேவியின் துறவுக்கோலம் கண்டு வருந்தினர்.

அக்கமாதேவி தன் குருவாகிய அல்லமதேவரைத் தேடி காடு, மலை, நகர் எங்ஙனும் சுற்றினாள். அவர் கலியாணபுரத்தில் (மகாராட்டிரத் திலுள்ள கல்யாண்) அனுபவ மண்டபத்தில் எழுந்தருளியிருப்பதை அறிந்து அங்கு சென்று அவரை அடிபணிந்து தனக்கு அருள் செய்யுமாறு வேண்டினாள். பற்றுகளைத் துறந்து, மாயைத் தொடர்பு நீங்கிய அவள், முற்றும் தெளியும் நிலையை அடைய வேண்டி அல்லமர் அவளுக்கு அருள் செய்தார். பின்னர் திருப்பருப்பதம் (ஸ்ரீசைலம்) சென்ற அக்கமா தேவி அங்கிருந்து கதலிவனத்தை அடைந்து நிட்டையில் ஆழ்ந்தாள்.

2. அக்கமாதேவி வாழ்விலிருந்து அறியப்படுவன

கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் தழைத்திருந்த வீரசைவம், சிவசரணர்களாகிய அக்கமாதேவி போன்ற பெண் துறவிகளை ஏற்றுக் கொண்டது. கலியாணபுரத்திலிருந்த அனுபவ மண்டபத்தில் நிகழ்ந்த சமய உரையாடல்களில் பெண் துறவி அக்கமாதேவியும் பங்கு பெற்றார் (க.வ. கதி. 9). ஞானம் கூடுதற்குரிய தகுதி பெற்ற அக்கமாதேவிக்குக் குருவாகிய அல்லமதேவர் 'சோதியாகிய பிரமம் நீ' என அறிவுறுத்தினார்

(க.வ.கதி. 13). கதலி வனத்தினை அடைந்த அக்கமாதேவியார் அங்கமும் இலிங்கமும் ஒன்றுபட்ட நிலையினை அடைந்தார் (க.வ.கதி. 20) என்பன அக்கமாதேவியார் வாழ்விலிருந்து தெரிய வருகின்றன.

3. அக்கமாதேவி வழிபாடு

அக்கமாதேவி தன் இட்ட இலிங்கத்தை வழிபட்ட முறை பற்றியும், அத்தேவியை ஒருசார் மக்கள் தம் குலதெய்வமாகக் கொண்டு வழிபடும் முறை பற்றியும் இப்பகுதியின்கண் எடுத்துரைக்கப் பெறுகின்றன.

1. இட்டலிங்க வழிபாடு

சிவப்பிரகாசரின் பிரபுலிங்க லீலை கூறுவன

1. அக்கமாதேவி நாயகன் - நாயகி (லிங்கபதி - சரணசதி) பாவத்தில் சிவனை அடைய முயன்றாள் (அ.து. கதி - 3:3-4)
2. அங்கம், இலிங்கம் இரண்டும் வேறுபாடு அற்று ஒன்றாகுமாறு மேவினாள் (அ.து.கதி - 4: 1-2).
3. ஒளிபொருந்திய கதிரவன் எனுமாறு ஒண்தவத்தில் அமர்ந்தாள் (அ.து.கதி - 5:3-4).
4. தூய்மையுடையவளாய் சோதிமா சிவலிங்கத்தைக் கரத்தில் ஏந்தி மலர்களால் அருச்சித்தாள் (அ.து.கதி - 46: 2-4).
5. பிற சார்பு நிலை அற்றவளாய் சிவபெருமானைச் சார்ந்து நின்றாள் (அ.து. கதி - 53: 3-4)

மேற்கூறியவாறு அக்கமாதேவி தன் சீவனும் சிவனும் ஒன்றுபட வழிபட்ட முறைமை பற்றிச் சிவப்பிரகாசரின் பிரபுலிங்க லீலை கூறுகிறது.

2. இட்டலிங்க வழிபாடு

அக்கமாதேவி வசனங்கள்வழி அறியப்படுவன

‘ரகளே' என்ற ஈரடி (Couplets) யாப்பு வடிவத்தில், கன்னடத்தில் அக்கமாதேவி சென்னமல்லிகார்ச்சுனராகிய சிவபெருமான் மேல் பக்திமிக்க வசன கவிதைகள் பாடியுள்ளார்.

சென்ன மல்லிகார்ச்சுனரைத் தன் மணவாளராக வரித்துக் கொண்ட மாதேவியார் (வசனங்கள் - 11), உணவு, தாகம், உறக்கம் மறந்தார் (வசனங்கள் - 48). காடு, மலைகளெல்லாம் அவரைத் தேடி அலைந்தவர், கிளிகள், குயில்கள், அன்னங்களை விளித்து அவரைக் கண்டீரோ என வினவுகிறார் (வசனங்கள் - 47). தன் ஐம்பொறிகளும் காய்ந்த இரும்பிற்பட்ட நீரைப் போல அவனில் கரைய வேண்டும் என விரும்பினார் (வசனங்கள் - 71). தன் குருவாகிய இலிங்கத்தேவன்

தன் கரத்தினைத் தன் சிரத்தின் மீது வைத்தபோது பிறவி அழிய மாதேவி இலிங்கத்தோடு ஒன்றினார் (வசனங்கள் - 201).

அக்கமாதேவியின் இலிங்க வழிபாடு, இலிங்கத்தில் அவர் தன் அங்கம் கரைய முயன்றமை ஆகியவற்றை அவரது வசனங்கள் மேற்கூறியவாறு தெரிவிக்கின்றன.

3. அக்கமாதேவியை வழிபடுதல்

ஆந்திராவிலுள்ள நெல்லூரிலிருந்து புலம் பெயர்ந்த ஐந்து கம்மவார் நாயக்கர் குடும்பங்கள் சிவகாசிக்கு 6 கி.மீ. கிழக்கிலுள்ள பாறைப்பட்டி (பழைய பெயர்) எனும் வாடியூர் மிட்டா ஜமீன் சல்வார்பட்டி என்ற சிற்றூரில் வசிக்கின்றனர். அன்னார் அக்கமாதேவியைத் தம் குலதெய்வ மாகக் கொண்டு வழிபட்டு வருகின்றனர். தம் தெய்வமாகிய அக்கமாதேவி அக்கினியில் உதித்த கன்னித் தெய்வம் என்றும், அவளது காதோலை, கருகுமணி, கறுப்பு வளையல் நெருப்பில் எரியாமல் கிடந்தமையால் அவற்றை வழிபாட்டின்போது வைத்து வழிபடுவது மரபு என்றும் கூறுகின்றனர்.

பிரபுலிங்க லீலை கூறும் அக்கமாதேவி வரலாற்றிலிருந்து சல்வார்பட்டி மக்கள் வழிபடும் அக்கமாதேவி வரலாறு வேறுபடுகிறது. அக்கமாதேவி பற்றிய இலக்கிய வழக்காற்றுக்கும், வாய்மொழி வழக் காற்றுக்கும் இடைவெளி காணப்படுகிறது. இத்தெய்வத்தின் பரவல் குறித்த வரலாற்றை ஆராய்ந்தால் மட்டுமே சல்வார்பட்டி மக்கள் பெண் துறவி அக்கமாதேவியை வழிபடுகின்றனரா, அப்பெயர் கொண்ட அகால மரணமடைந்த பெண்ணைத் தெய்வமாக்கி வழிபடுகின்றனரா என்பது தெரிய வரும். தம் தோளில் சங்கு சக்கரத்தைச் சின்னமாகக் குத்திக் கொண்டிருப்பதால் ஆதியில் இம்மக்கள் வைணவராயிருந்து பின்னர் சைவத்தைத் தழுவினர் என்பது தெரிகிறது.

1. அக்கமாதேவி கோவில் அமைப்பு

அக்கமாதேவிக்குப் பிடிமண் எடுத்துவந்து சல்வார்பட்டியில் கோவில் கட்டியுள்ளனர். 11'x6' பரப்பளவுள்ள அறையிலுள்ள ஒரு மேடையில் சிறு பீடம் அமைத்து மாதேவியை நிலைநிறுத்தியுள்ளனர். இவ்வறை கூரை வேய்ந்த அறையாக இருந்துள்ளது. தற்போது காரைக் கட்டிடமாகியுள்ளது. இக்கருவறை தென்திசை நோக்கிக் கதவுடன் அமைந்துள்ளது. இதனுள் மகளிர் செல்லக் கூடாது. இவ்வறையை ஒட்டி மூன்று புறமும் ஓடு வேயப் பெற்ற முற்றவெளி கொண்ட ஏறத்தாழ 21'x11' பரப்புள்ள வழிபாட்டிடம் கதவுடன் அமைந்துள்ளது. இவ் விடத்தில் பிற சாதியார் உள்ளே அனுமதிக்கப் படுவதில்லை. இவ்வழி பாட்டிடத்தில் சுவர் ஓரமாகக் கிழக்கே 'முன்னோடிக் கல்' என்ற ஒரு கல் நடுகல் போன்று உள்ளது. ஏற்கெனவே தெய்வமாக வழிபடப்

பட்ட 'முன்னோடிக் கல்' அருகே தம் கோவிலை அமைத்துக் கொண்டதாக இம்மக்கள் கூறுகின்றனர். கருவறையிலுள்ள அக்கமாதேவிக்கு நடைபெறுவது சைவ மரபில் வழிபாடு; ஆயின் முன்னோடிக் கல் எதிரே கோயிலுக்கு வெளியே நடைபெறும் பெரிய பூசை வழிபாடு அசைவ மரபில் அமைந்தது; ஆடு வெட்டிப் பலி கொடுத்து வழிபடுவதாம்.

2. வழிபடும் முறை

இக்கோவிலில் வழிவழியாகப் பூசை செய்வோர் கம்மவார் நாயக்கர் இனத்தைச் சேர்ந்த சின்னக்காமன்பட்டியில் வாழ்வோர் ஆவர். தற்போது அண்ணன், தம்பியரான நாராயணசாமியும், இரகுபதியும் பூசாரிகளாக உள்ளனர். அவர்களைப் பூசைக்கு அழைக்க இயலாதபோது சல்வார்பட்டியில் வாழும் சீனிவாசகம் என்பவர் பூசை செய்கிறார்.

ஆண்டுதோறும் சிவராத்திரியன்று சின்னக்காமன்பட்டி, மீசலூர், அழகாபுரி, ஆமத்தூர், கவளூர், கலியாணபுரம், சித்தநாயக்கர்பட்டி, மீனம்பட்டி, வெங்கால் நாயக்கன்பட்டி, கோவில்பட்டி, மதுரை, பெரிய குளம், அம்பாசமுத்திரம், அருப்புக்கோட்டை போன்ற ஊர்களிலிருந்து ஏறத்தாழ எழுபது குடும்பத்தினர் அக்கமாதேவியை வழிபட சல்வார் பட்டியில் ஒன்று கூடுகின்றனர். மகாராட்டிரத்தில் அனுபவ மண்டபம் அமைந்திருந்த கலியாணபுரம் (கல்யாண்) போன்று கோவில்பட்டி அருகே உள்ள கலியாணபுரத்தை அமைத்திருக்கலாம் என்று கருத இடமுளது. இக்கோவிலுக்கு முழுவரியாக நூற்றைம்பது ரூபாயும், செலுத்த இயலாதவர் களிடமிருந்து அரைவரியாக எழுபத்தைந்து ரூபாயும் பெறப்படுகிறது.

வழிவழியாக இத்தெய்வத்திற்கு ஆடை நெய்து அளிக்கும் சங்கரலிங்கபுரம் நெசவாளர் குடும்பத்தினர் ஒரு வாரம் விரதமிருந்து சிவப்பு வண்ணத்தில் வெள்ளைக் கட்டம் போட்ட 'புளியமுத்துக் கண்டாங்கி' என்ற சீலையைத் தேவிக்கு நெய்து அளிக்கின்றனர். அச் சீலையைத் துவைத்துக் காயப்போட்டு அம்மனுக்குச் சார்த்திக் கருப்பு வளையல், கருகுமணி, காதோலை, எலுமிச்சம்பழம் வைத்து, வெந்நிறலமர் சூட்டுகின்றனர். தீப தூப ஆரத்தியுடன் கருவறையில் இரவு இரண்டு மணிக்குப் பூசை நடைபெறுகிறது. பூசாரி மூன்று நாள் விரதமிருந்து பூசை செய்யவேண்டும்; பூசை செய்யும்போது வாயைக் கட்டிப் பூசை செய்ய வேண்டும். முழுவரி செலுத்தியவருக்கு 4 முடித் தேங்காயும், அரைவரி செலுத்தியவருக்கு 2 முடி தேங்காயும் இறுதியில் வழங்கப் பெறும்.

பூசைக்குப் பின்னர் திருநீறு, குங்குமம் வழங்கப் பெறுகிறது. படையலிட்ட பொங்கல், சுண்டல், பச்சரிசி மாவு, தட்டைப் பயிறு ஆகியன அனைவருக்கும் வழங்கப்பெறும். படையல் பொருட்களைப் பெறுதற் குரியோர் பிள்ளை, முதலியார், தேவர், துணி வெளுப்போர், நாவிதர் ஆகியோர் பிற சாதியார்க்கு இப்படையல்கள் வழங்கப்படமாட்டா.

புளியமுத்துக் கண்டாங்கிச் சீலையைக் காயப் போடுகையில் சீலையில் கண்கள் இருந்தால் மறு ஆண்டு பெரிய பூசை செய்ய வேண்டும் என்பது நியதி. இது கோயிலுக்கு வெளியே முன்னோடிக் கல்லுக்கு எதிரே செம்மறிக்கடாவினை வெட்டிச் செய்யப்படும் வழி பாடாகும். கோவிலை அடுத்துள்ள இடத்தில் செம்மறிக்கடாவைக் கறி சமைத்து அனைவரும் உண்பர்.

நாட்டார் வழிபாடாகிய முன்னோடிக் கல் வழிபாடும், அக்கமாதேவிக்குரிய செவ்வியல் வழிபாடும் ஒருங்கிணைந்து விளங்கு வதனை இக்கோவிலில் காண இயலுகிறது.

3. குலக்குறிகளும் விலக்குகளும்

சல்வார்பட்டி கம்மவார் நாயக்கரின் குலக்குறிகள் (Totem) பற்றிய செய்திகள் கிடைக்கவில்லை. இவர்களது சில விலக்குகள் (Taboos) பற்றித் தெரிய வருகிறது. இச்சிப்பழம் தின்னக் கூடாது; இச்சி மரத்தடியில் நிற்கக் கூடாது; பூவரச மரம் ஆகாது; அதில் கட்டில் செய்யக் கூடாது; வெள்ளை தவிர பிற வண்ண மலர்கள் அக்கமாதேவிக்கு ஆகா; கறுப்பு வண்ண உடை, கறுப்பு அணிகலன்கள் ஆகியன கூடா என்பன போன்ற பல விலக்குகளை இம்மக்கள் கொண்டிருக்கின்றனர். பகைவருடைய காவல்மரம் இச்சி மரமாகவோ பூவரச மரமாகவோ இருந்திருக் கலாம்; பூவரச மரத்தடியிலோ, இச்சி மரத்தடியிலோ தீய நிகழ்வுகள் எவையேனும் இவ்வினத்தார்க்கு விளைந்திருக்கலாம்.

சில்வார் கோத்திரம், பாப்புசேனி கூட்டத்தைச் சேர்ந்த இவர்களது தாயாதிகள் வீமினி கூட்டத்தார் ஆவர். இவர்களுக்குள் பெண் கொள்வினை கொடுப்புவினை நிகழ்வதில்லை. இவர்கள், ரங்கம்மாளை வழிபடும் புட்டார் வீட்டாருடன், எல்லம்மாள், வெங்கிடம்மாள், ரேணுகாதேவியை வழிபடும் பாமூர்த்தி வீட்டாருடன் மணவுறவு கொள்ளுகின்றனர்.

அக்கமாதேவி நிட்டையில் ஆழ்ந்த இடத்தில் தெய்வமாகிய வரலாறு, அத்தெய்வம் போட்டுக் கொடுத்த தெய்வமாகப் பல இடங்களில் பரவிய வரலாறு ஆகியவை குறித்து விரிவாக ஆராய்ந்தால் அக்கமாதேவி அக்கினியில் உதித்த தெய்வமா அல்லது இயற்கையிறந்த நிகழ்வு மாதேவி வரலாற்றுடன் இணைக்கப் பெற்று வாய்மொழி வரலாயிற்றா என்பன தெரிய வரும்.

தகவலாளிகள்

1. திரு. கு. கந்தசாமி நாயக்கர், வயது 76, தொழில் - விவசாயம், சல்வார்பட்டி.
2. திரு. அ. சீனிவாசகன், வயது 51, தொழில் - வணிகம், சல்வார்பட்டி.

27. பழமலையந்தாதியில் சிவவழிபாடு

தி. கமலி, சென்னை.

கண்ணால் பார்த்தல், உண்மை உணர்தல், ஐயமின்றி தெளிந்து தேர்தல், தெளிவுபடுத்தப்பட்ட உண்மைக் கூறுகளை நெஞ்சில் தேக்கிக் கொள்ளல், மீண்டும் மீண்டும் அகமனதில் நினைவு கூர்தல், மனனம் செய்தல், மறவாதிருத்தல், அல்லும் பகலும் ஈசன் சிந்தையே மேலோங்க வாழ்தல், 'பக்தி நெறி பயணத்தின் இறுதி முடிவாய் அவன் திருவடி அடைதல்' என்று நெறிப்பட்ட ஆன்மீகத்தை வலியுறுத்தும் போக்கினைச் சிவப்பிரகாச சுவாமிகளின் படைப்புகளில் காண முடிகிறது.

'ஈசனின் சிறப்புகளை அடியவர் மனங்கொள்ள எடுத்துரைத்தல்' முதலிடம் வகிக்கிறது. 'விருத்தாசலம்' என்னும் பழமலையை உடையவர் ஈசன். சுகம் வழங்குபவர் ஈசன்; உமாதேவியின் கண்கள் களிக்கும் திருநடனத்தைக் கொண்டவர் ஈசன்; மெய்ஞானிகளின் கருத்தர் சிவன்; மனித வாழ்வின் சகல தருமங்களையும் உணர்த்தவல்ல சொல்திருத்தம் உடையவர் ஈசன்:

''விருத்தாசல! சங்கரா! மலைமாது விழிகளிக்கும்
நிருத்தா; சலசந்திரன் போலுடம்பிடை நின்றவர்தம்
கருத்தா; சலம் சம்பவம் இலர்க்கு ஆண்டறங் காட்டிய சொல்
திருத்தா; கலசம் தமியேன் தலைக்கு உன் திருவடியே''
(பழமலையந்தாதி, பா. 10)

செந்நிறம் மிக்க பஞ்சின் அழகுமிக்க பாதங்களைக் கொண்ட உமாதேவியின் உடல் பொருந்திய இடதுபாகத்தவர். கூடல், ஐயாறு, புலியூர் மகிழ் முதுகுன்றர்; மதுரை திருவையாறு, சிதம்பரமாகிய தலங்களில் வீற்றிருத்தலோடு உலகம் முழுதும் நிறைந்திருப்பவர். தருமத்தைத் தன் வடிவமாகக் கொண்டவர் ஈசன்; என்று சிவனின் சிறப்புகள் மற்றும் செம்மைசால் இயல்புகளை அறிமுகம் செய்யும் வண்ணம் மனிதர்களுக்கு எடுத்துரைக்கும் சிவப்பிரகாசர் வழிபாட்டு நெறிகளில் ஆற்றுவிக்கும் போக்கினைப் பாடல்தோறும் காண முடிகிறது.

பயில்முறையில் தலையாயது, 'இன்னது பயில்வது எனத் தேர்ந்து கொள்ளுதல்' அவ்வகையில், 'சிவனாரது திருவருள் சிறப்புகளைக் கற்றுத் தேர்தல்' ஆன்மீக அறிவுப்படுத்தலின் முதல் படியாக அமைய,

'மனதில் இருத்தல்' 'சேமித்துக் கொள்ளல்' 'அகமனதில் பதிவு செய்தல்' அடுத்த கட்டச் செயல்பாடாக ஆகிறது. செவி கேட்டதை மனதில் கொண்டு செல்வதில் மனிதருக்கு மனிதர் வேறுபடும் இயல்பினர் கண்கூடு. இரண்டாம் முறையும் கேட்டல், மீண்டும் மீண்டும் கேட்டல், (Trial learning) பலனளிக்கும்.

- **முறைப்படி ஐந்தெழுத்து மந்திரத்தை உச்சரிக்க வேண்டும்.**
- **மனதில் சிவனின் திருவுருவத்தை நிறைத்துக் கொள்ள மந்திர உச்சரிப்பு உதவும்.**
- **'சிவாயநம' எனும் ஐந்தெழுத்து மந்திரம் உச்சரிக்க எளியது.**
- **தொடர்ந்து உச்சரிக்க, உச்சரிக்க மனதில் சிவனது உருவம் நிறைந்து ஒளிரும்.**

என்று உச்சரிப்பில் எளிய, 'ஐந்தெழுத்து மந்திரம்' பற்றிச் சிவப்பிரகாசர் குறிப்பிடுவதைக் காணலாம்.

'அஞ்சு வணத்தை வரன்முறை யோத அரக்கெறிந்த
பஞ்சு வணத்தை மருவும் மென்தாள் உமைபாகமொடு
செஞ்சு வணத்தை அனைய நின்கோலம் என்சிந்தைவர
விஞ்சு வணத்தை மகிழ்குன்றை வாண! விரும்புவனே!''

(பழமலையந்தாதி, பா. 98)

நினைவில் சிவனை இருத்திக் கொள்ளும் ஆற்றல் (retension power) கைவரப்பெற வேண்டும் எனில் அதற்குச் சிறந்த வழி முழுமை யாகவும், பகுதிகளாகவும் மனப்பாடம் செய்தலும் (memorizing) உச்சரித் தலும் (recitation) ஆகும். ஐந்தெழுத்து மந்திரத்தில் தேறிய பின்னர் திருமறை களைக் கற்கத் தொடங்குவதும், ஓதுவதும் இன்றியமையாதன.

'பாசுரங்கள் எழுதிய பனையேடுகள் அலையை உடைய வைகை ஆற்றுநீரைக் கிழித்து எதிரே சென்று, 'கருத்துச் சிறப்பை' வெளிப் படுத்தும் விண்ணுலகம் அளவும் சென்ற புகழைக் கொண்டவர் திருஞானசம்பந்த சுவாமிகளும் அவரது திருப்பாசுரங்களுமாம்.

''ஏடுஅலை ஆறுகிழித்து எதிர்ஏறு விண்ஏறு புகழ்'

(பழமலையந்தாதி - 97.1)

அதற்குண்டு. அதுமட்டுமா? முன்னொரு காலத்தில் எலும்பை நெருங்கிய அழகினை உடைய பெண் ஆக்கியவர் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார். அவர் உரைத்த அருள்பாவின் இலக்கணம் சிறப்புடையது.

தலங்கள் தோறும் பாதம் தேய நடந்துசென்று சிவனை வழிபட வேண்டுமா? என்றால், திருப்பாசுரங்களைத் துணையாகக் கொண்டு, மதுரையில் சமணர் இருந்த இடங்களை எல்லாம் பாழ்செய்தவர் திருஞானசம்பந்தர். அவரது பாசுரங்களைத் துதித்தல் சிறப்புடையது. திருப்பாசுரங்களைத் துதிக்காமல், 'தண்டத்தையும், கமண்டலத்தையும் கொண்டு கால்கள் புண்படும்படி இப்பூமியில் பல தலங்களைத் தரிசித்தும் திரிந்தும் உண்மையாகிய ஞானத்தை அடைய மாட்டார்கள் என்று தலயாத்திரையினும், தமிழ்மறை ஓதி வழிபாடு செய்தலே ஞானத்திற்கு முக்கியம் என்று சிவப்பிரகாச சுவாமிகள் உறுதிபடக் கூறுவது குறிக்கத் தக்கது.

''தண்டம் கமண்டலம் கொண்டு பழமலைச் சங்கரதாட்
புண்டம் கமண்டலம் கண்டு சென்றாலும் மெய்ப்போதமுறார்
பண்டம் கமண்டலம் கார மின்னாக்கினான் பாட்டியலைக்
கொண்டங் கமண்டலம் பாழாக்கிய உனைக் கூறலரே''

(பழமலையந்தாதி, பா. 23. 1-4)

சிவனைப் பற்றித் தெரிந்துகொண்டும், ஐந்தெழுத்து மந்திரம் ஓதியும், திருப்பாசுரங்களை உச்சரித்தும், தலயாத்திரைகள் செய்தும் பெறும் ஞானம் என்பதுதான் என்ன? அந்த ஞானத்தைத் தருபவர் யார்? என்ற வினாக்கள் எழுகின்றன.

- சந்திரன் நீரில் பிரதிபலித்துக் காணப்பட்டாலும் அத் தண்ணீருடன் எவ்விதத் தொடர்பும் இல்லாமல் நடுவானில் ஒளிர்கிறது, அதுபோல்,
- உடம்புடன் கூடி இருந்தாலும், அவ்வுடம்பின்பால் எவ்விதப் பற்றும் வைக்காமல், கருத்தெல்லாம் சிவனே' என்று வாழ்வது ஞான வாழ்வு; அந்நிலை கைகூடி வாழ்பவர் மெய்ஞானியர்; ஏனெனில் அம்மெய்ஞானியர்தம் க்ருத்தர் சிவனராக இருக்கிறார்.
- அம்மெய்ஞானத்தைச் சிவனால்தான் தரமுடியும்.

பொய்யாகிய பிறவியை ஒழித்த சனகாதிகளுக்குக் கைலை மலையில் கல்லால மரத்தின் கீழ் ஞானத்தையும், சகல தருமங்களையும் உணர்த்திய சொல் திருத்தர் சிவனே ஆவார். ஞானம் கைவரப்பெற்றவர் பெறும் சிறப்பு யாது? அவருக்கு என்னவெல்லாம் கைகூடும்? என்ற வினாவிற்கு விடை தருகிறார்.

சிவனின் திருவடிகளில் சேரும்படி சுத்தமான மலர்களைக் கொண்டு அர்ச்சனை செய்யும் பக்குவத்தை ஒருவர் அடைவார் என்றால் அவர் இனிமேல்,

- தரித்திரத்திற்கு அஞ்ச வேண்டியதில்லை.
- யமனுக்கு அஞ்ச வேண்டியதில்லை.
- அவரைப் பிடித்த கனத்த எருமைக்கடாவைச் செலுத்தும் இயமன் அருகில் வரமாட்டான்.
- முன்பு சிவன் உதைத்த உதையை நினைத்து யமன் பயந்தோடுவான்.
- எவ்வுலகத்தவரும் வணங்கச் சிறப்பாக வாழலாம்.

என்று அறுதியிட்டுச் சிவப்பிரகாச சுவாமிகள் கூறுகிறார். நடைமுறையில் பின்பற்றலும், கற்றலும், கற்பித்தலும் குருவின் சிறப்புகள். சுவாமிகள் சிவனை வழிபடலும், மனிதரை வழிபட ஊக்குவித்தலும் தன் நடைமுறை வாழ்வியல் செயல்களாகச் செய்தமையால் பாடலின் வரிகள்,

'மிடிக்கு அஞ்சேம்! அனைவரும் தொழ வாழ்வம்'

(பழமலையந்தாதி, பா. 10-4)

என்று அவரையும் உள்ளடக்கி மொழிவதாக அமைந்திருக்கும் சிறப்பு போற்றத் தக்கது.

சிவனையன்றி இஞ்ஞானம் தர வேறு யாரும் உளரோ? மெய்ஞானம் பெற வேறு வழிகள் உள்ளனவா? அல்லல் படும் உயிர்களை மீட்கவும், காக்கவும் வேறு வழி உள்ளதா என்று சிந்தித்தால் விடை வருகிறது.

- துன்பத்தால் கருகி கரிபோலானாலும்
- கடல் போலக் கண்ணீர் சொரிந்து அழுதாலும் வேறு எவரும் காக்கவோ, மீட்பதற்கோ இல்லை.
- ஆன்மாக்களின் மனங்களால் அளவிடுதற்கு அரியதாகிய பழமலைநாதரும் தேவகணங்களாகிய வானவரும். அவர்தம் தலைவன் இந்திரனும் ஏத்திப் போற்றும் சிவனும் அல்லாமல் காப்பவர் எவரும் இல்லை. உலக உயிர்களுக்குக் காப்பு சிவனன்றி வேறில்லை.
- அழிவற்ற நந்தவனங்கள் உள்ள முதுகுன்றை அடைந்தவர்களுக்கு உற்ற உறவாய் இருப்பவர் சிவன்.
- உயிர்களின்பால் நேசம் மிக்கவர் அவர்.

. . . . உயிர்கள்
உள்நந்த அளக்க அரிதுஆம் முதுகுன்று அரன் ஓங்கு அமர
கணம் தவளம் கரியான் ஏத்து இறைஅன்றி காப்பு இலை''

(பழமலையந்தாதி, பா. 75, 3,4)

சிவவழிபாட்டின் உயர் நிலை யாது? மனித உயிருக்கும் சிவனுக்கும் உள்ள உறவு எத்தகையகையாதல் சிறப்பு என்று புலப்படுத்துகிறார் சுவாமிகள்.

- சிவப்பிரகாச சுவாமிகளது தலையில் அணிவதற்குரிய தாமரை மலர்கள் சிவனாரது திருவடிகளே என்று தம் தலையில் வைக்கும் தாமரை மலர்களாகச் சிவனது திருவடிகள் அமைதல் வேண்டும்.
- அடியவர்களைத் தள்ளாமல், அன்பால் அணைத்து, அழிவற்ற ஆனந்த வெள்ளத்தே மூழ்குவித்து, ஆசை கெடும்படி ஆளும் நாள் எந்நாளோ? அறியேனே! என்று அலைபாயும் உயிர்களை ஆட்கொண்டு இறையருள் பெறும் பரவச நிலை பெறுதல் வேண்டும்.

''இறவாத ஆனந்த வெள்ளத்து அழுந்தி எனையருளால்
துறவாத ஆனந்த ஆள்வதென்றோ? மெய்த்துறவர் தொழும்
மறவாத ஆனந்த தவா நந்தனம்சூழ் முதுகுன்று அடைந்தவர்தம்
உறவா! ஆனந்த கோபாலன் என்றற்கு உடையவனே

(பழமலையந்தாதி, பா. 60, 1-4)

என்று, சிவனின் சிறப்புகள், வழிபாட்டு நெறிகள், வழிபடுவோர் பெறும் பலன், வழிபாட்டின் இலக்கு குறித்து எடுத்துரைக்கும் கருவிகளாக இலக்கிய படைப்புகள் சிவப்பிரகாசரால் ஆக்கம் பெற்று ஆன்மீக ஒளிசிந்தும் நந்தா விளக்கங்களாக இலக்கிய வானில் ஒளிர்கின்றன.

குறிப்புகள்

1. சிவப்பிரகாச சுவாமிகள், பழமலை அந்தாதி, கீலக வருடம்.
2. சிவப்பிரகாச சுவாமிகள், திருவெங்கைக் கலம்பகம், பராபவ வருடம்
3. சிவப்பிரகாச சுவாமிகள், திருவெங்கையுலா, பராபவ வருடம்.
4. சிவப்பிரகாச சுவாமிகள், திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதி, கீலக வருடம்.

28. திருக்குறளும் நன்னெறியும்

ந. காந்திமதி, தூத்துக்குடி.

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் கி.பி. பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த புகழ்மிக்க துறவியாவார். இவர் வீரசைவர் மரபைச் சார்ந்தவர். எனினும், வேதாந்த, சித்தாந்த நூல்களில் தேர்ச்சி மிக்கவர். தமிழ் இலக்கண இலக்கியப் புலமையும் தருக்க நூல் அறிவும் வாய்க்கப் பெற்றவர். இவருடைய நூல்களாக அறியப் பெற்றவை மொத்தம் முப்பத்திரெண்டாகும். இவற்றுள் நான்கு நூல்கள் கிடைத்தில என்பர்.

குமரகுருபர முனிவர் 1688-ஆம் ஆண்டு திருவடிப்பேறு எய்தினார் என்பது வரலாற்று ஆய்வாளர்களால் சான்றாதாரங்களுடன் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. குமரகுருபர முனிவரிடம் மாணாக்கராக விளங்கியவர் வெள்ளி அம்பலவாணத் தம்பிரான். இவர் தருமபுர ஆதீனத்தின் அடியவர் கூட்டத்துள் ஒருவர். இவர் திருநெல்வேலியிலுள்ள சிந்துபூந்துறை தருமையாதீனக் கிளை மடத்திலே தங்கியிருந்து மாணவர்களுக்கு இலக்கண இலக்கிய சமயநூற் கல்வி பயிற்றுவித்து வந்தார். அப்போது, துறைமங்கலம் சிவப்பிரகாசம் சுவாமிகள் வெள்ளி அம்பலவாண முனிவரின் மாணவராக விளங்கினார். தமது ஆசிரியரின் ஆணைப்படி துறைமங்கலம் சிவப்பிரகாசர் திருச்செந்தூருக்குச் சென்று அங்கு கோயில் கொண்டிருக்கும் முருகப்பெருமான் மீது நிரோட்டக யமக அந்தாதி பாடி அரங்கேற்றினார். இந்நூல் அச்சாகியுள்ளது.

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் எழுதி நமக்குக் கிடைக்காது போன நூல்களிலே ஒன்று இயேசுமத நிராகரணம் என்பதாகும். வீரமா முனிவர் சிவப்பிரகாச சுவாமிகளைச் சந்தித்தபோது எழுந்த சமய விவாதத்தின் அடிப்படையிலே துறைமங்கலம் சிவப்பிரகாசர் இந்நூலை எழுதினார் என்பர். இந்த நூலின் மூன்று பாடல்கள் மட்டும் சாந்தலிங்க சுவாமிகள் எழுதிய 'கொலை மறுத்தல்' என்ற நூலில் மேற்கோளாகக் காட்டப்பெற்றுள்ளது. இதனால் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் இவர் என்பது உறுதிப்படுகின்றது. வீரமாமுனிவர் தமிழ்நாட்டில் 1747 வரை வாழ்ந்தார் என்பது வரலாற்று உண்மை. ஏறக்குறைய பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி வரையிலே துறைமங்கலம் சிவப்பிரகாசர் தமது விரிவான படைப்புகளை ஆக்கித் தந்திருக்க வேண்டும்.

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளின் இலக்கியப் படைப்புகள் யாவும் பன்முகத் தன்மை வாய்ந்தவை. பல துறைகளைச் சார்ந்தவை. புராணங்கள், கோவை, கலம்பகம், உலா, அந்தாதி, பிள்ளைத்தமிழ், நீதிநூல் முதலிய பல்வேறுபட்ட இலக்கிய வகைகளை இவர் யாத்துள்ளார். அவ்வாறே அவற்றின் யாப்பு முறையும் பல வகைப்பட்டன. பிற ஆசிரியர்களிடத்தில் அரிதாகக் காணக் கிடைக்கின்ற நெடுவிருத்தம், நெடுங்கழி நெடில், குறுங்கழி நெடில் போன்ற இலக்கிய வகைகளையும் இவர் பயன்படுத்தியுள்ளார். இவருடைய தருக்க பரிபாஷை என்ற நூல் உரைநடையிலே அமைந்துள்ளது. அதில் மணிப்பிரவாள நடை பயன்படுத்தப் பெற்றுள்ளது.

துறைமங்கலம் சிவப்பிரகாசர் எழுதிய நீதிநூல் நன்னெறி எனப்படும். இது வெண்பா யாப்பிலே அமைந்தது. இதில் மொத்தம் நாற்பது பாடல்கள் உள்ளன. தமிழிலுள்ள பதினெண் கீழ்க்கணக்கு நூல்களே மிகப் பழைமையான நீதிநூல்களாகும். அவற்றுள் பெரும்பாலானவை சமண சமயச் சார்புள்ளவை; 'நாலடியார் போல' ஆசாரக்கோவை போன்ற ஒரு சில நூல்களே வைதீக சமயங்களின் சார்பு காணப்படுகின்றது. குமரகுருபரரின் நீதிநெறி விளக்கம் வெண்பா யாப்பில் அமைந்து நூற்றுக்கு மேற்பட்ட பாடல்களைக் கொண்டு விளங்குகின்றது. மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை நீதிநெறி விளக்கத்தை ''திருக்குறள் பருவத்தில் பெற்ற பிள்ளை'' என்று சொல்லுவார். அந்த மரபின்படி நீதிநெறி விளக்கத்திலிருந்து நன்னெறி பிறந்தது என்று கூறுவதில் தவறில்லை.

நன்னெறி தோன்றிய வரலாறு பற்றி ஒரு செவிவழிச்செய்தி உண்டு. கடற்கரை மணலில் சிவப்பிரகாசர் நன்னெறிப் பாடல்கள் நாற்பதையும் எழுதினார் என்பர். அதன் பின்னர் அவற்றை அவருடைய தம்பியராகிய கருணைப்பிரகாசர் ஏட்டில் பெயர்த்தெழுதிக் கொண்டார் என்றும் சொல்லுவார்கள். பிற நீதிநூல்களை நோக்கும்போது நன்னெறி அளவில் மிகவும் சுருங்கியது. அறம், பொருள், இன்பம் என்ற பால் பகுப்பு முறையோ அல்லது அதிகாரப் பகுப்பு முறையோ இந்நூலில் இடம் பெறவில்லை. செம்மையான வாழ்க்கை வாழ்வதற்குரிய பொதுவான அறங்கள் உலகியல் உவமைகளைப் பயன்படுத்தி மிக எளிமையாக இந்த நூலில் எடுத்துரைக்கப் பெற்றுள்ளன.

இனியவை கூறல் என்ற தலைப்பில் ஓர் அதிகாரத்தில் பத்துப் பாடல்களால் திருவள்ளுவர் இனிய சொற்களைப் பேசுவதின் இன்றி யமையாமையை, அதனால் விளையும் நலன்களை எடுத்தியம்பியுள்ளார். இதுவே விளையும் நலன்களை எடுத்தியம்பியுள்ளார். இதுவே பிற நீதிநூல்களிலும் மீட்டும் வலியுறுத்தப் பெற்றுள்ளது. சிவப்பிரகாசர் தமது நன்னெறியில்,

''இன்சொலால் அன்றி இருநீர் வியன்உலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே - பொன்செய்
அதிர்வளையாய் பொங்கா(து) அழல்கதிரால் தண்ணென்
கதிர்வரவால் பொங்கும் கடல்''

'பொன்னால் செய்யப்பட்ட ஒலிக்கின்ற வளையல்களை அணிந்த பெண்ணே, விரிந்து பரந்து கிடக்கின்ற இந்த உலகத்து மக்கள் இனிய சொற்களினால் அல்லாமல் கடுஞ்சொற்களைக் கேட்டு மகிழ மாட்டார்கள். குளிர்ந்த இனிய கதிர்களை உடைய திங்களின் வரவால் கடல் பொங்குமே யல்லாமல் வெப்பமுடைய கதிரவனின் கதிர்களால் கடல் ஒருபோதும் பொங்குவதில்லை'.

நிறைநிலா நாளன்று கடல் பொங்குவதை எல்லோரும் கண்டிருக் கிறோம். அந்த நேரத்தில் கடலின் அலைகள் ஆர்ப்பரித்துத் துள்ளி எழுவதைப் பார்க்கின்றபோது அன்பிற்குரியவர் வரவால் கைகொட்டிக் குதித்து மகிழும் குழந்தைகள் நினைவு நம் மனத்திடை எழும். தண்ணன்று கதிர்களோடு வருகின்ற பௌர்ணமியின் மகிழ்ச்சிப் பூரிப்பை நாள்தோறும் உச்சிப்பொழுதில் வெண்சுடரால் காண்பதற்கில்லை.

''இன்சொல் இனிதுஈன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது'' (குறள் - 99)

என்ற வள்ளுவனாரின் கருத்தையே சொல் ஓவியமாகத் திரட்டிக் காட்டுகிறார் சிவப்பிரகாசர். கண்ணெதிரில் காணும் இயற்கை நிகழ்வை உவமையாக்கி இன்சொல்லின் இன்றியமையாமையை இப்பாடல் மூலம் விளக்கியுள்ளார்.

அறிவின் சிறப்பினைக் கூற வந்த வள்ளுவர் பல அதிகாரங்களால் தமது கருத்துகளை வகைப்படுத்திக் கூறியுள்ளார். அதன் மிகவுயர்ந்த பயனாக

''அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை'' (குறள் - 315)

என்கிறார். அறிவுடைமை என்ற அதிகாரம் உடன்பாட்டு முறையில் கூறிய வற்றை எதிர்மறை வகையில் கூறுவது புல்லறிவான்மை என்றும் அதிகாரம். இவ்விரு அதிகாரங்களையம் சார வைத்து அறிவுடைமையின் பெரும் பயனைக் காட்டுவனவாக அருங்குறட்பாக்கள் பல திருக்குறளின் வெவ்வேறு அதிகாரங்களில் ஆங்காங்கே வள்ளுவரால் அருளப் பெற்றுள்ளன. இதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு.

''அறிதோறு அறியாமை கண்டற்றால்'' என்ற கருதுகோள் வள்ளுவரால் இன்பத்துப்பாலுள் கூறப்பட்டிருப்பதாகும். அவ்வாறே,

அறிவுடைமையின் தீர்ந்த பயன் இன்னா செய்யாமை என்ற தலைப்பின் கீழ் இடம் பெற்றுள்ளது.

பிறிதின் நோய் என்று கூறுவதன் வாயிலாக அஃறிணை உயிர்களுக்கும் துன்பம் நேருமாயின் அதனை நீக்குதலும், தான் துன்புறுத்தாமல் தவிர்த்தலுமாகிய சிறந்த பண்பாடுகளை வள்ளுவர் பெருந்தகை உணர்த்தி விடுகிறார். மற்றொரு அருமைப்பாடும் சிந்தித்தற்குரியது. ஓரறிவுயிர் முதலாக உயிர் வகைகளைப் பட்டியலிட்ட தமிழ்ச் சான்றோரின் ஐம்பால் இருதிணைப் பகுப்பு முறையே அது.

வள்ளுவர் நறுக்குத்தெறித்தது போல கூறிய கருத்தினை நன்னெறியில் சிவப்பிரகாசர்,

''பெரியவர்தம் நோய்போல் பிறர்நோய்கண்டு உள்ளம்
எரியின் இழுதாவர் என்க - தெரியிழாய்
மண்டு பிணியால் வருந்து பிறஉறுப்பைக்
கண்டு கலுழுமே கண்.''

என்று கூறுகிறார்.

'தெரிந்தெடுத்த அணிகலன்களைப் பூண்ட பெண்ணே, மிகுந்த நோயினால் வருந்தித் துயர் உறுகின்ற மற்றைய உறுப்புகளைக் கண்டு கண்ணானது அழுது நீர் வடிக்கும். அதுபோலவே சான்றோரும் பிறர் துன்பப்படுவதைக் கண்டு அதனைத் தமக்கு வந்த துன்பம் போலக் கருதி, 'நெருப்பில் பட்ட நெய் போல மனம் உருகுவது' என்பது இப்பாடலின் தெளிந்த பொருள். பிற உயிர்களின் துன்பத்தை தமக்கு வந்த துன்பமாகக் கருதாத வழி அறிவினால் ஆகும் பயனுண்டோ என்ற பொருள் பொதிந்த வினாவை எழுப்பி, இல்லை என்ற மறுமொழியை உய்த்துணர வைக்கின்றார் திருவள்ளுவர். இதிலிருந்து வேறுபட்டு நோய்ப்பட்ட ஒருவன் தன் அங்கங்களில் எதனால் துன்புற்றாலும் கலங்கிக் கண்ணீர் விடுவது அவனது கண்ணே என்று. அன்றாட நிகழ்ச்சியைக் கண்முன் காட்டித் தெளிய வைக்கிறார் சிவப்பிரகாசர்.

மனித உடலில் உறுப்புக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பணிக்காக ஏற்பட்டவை. அவ்வாறே, ஒவ்வொரு புலனும் ஒவ்வொரு வகையான அறிவிற்கு வாயில். ஐந்து புலன்களின் வழியாக வருகின்ற அறிவைப் பயன்படுத்தி, உயர்ந்த வாழ்க்கை நடத்துவோனே சிறந்த மனிதனாகின்றான்.

''சுவைஒளி ஊறுஓசை நாற்றமென்று ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு'' (குறள் - 27)

என்பது வள்ளுவம். சுவைப்புலனை அறிவதற்கு உரிய வல்லமை நாவிற்கே உண்டு. ஒளியைக் கண்ணும், ஊற்றுணர்வை மேனியும்,

ஓசையைக் காதும், மணத்தை மூக்கும் நுகர்கின்றன. இப்பொறிகளின் வல்லமையை வகைப்படுத்த வந்த சிவஞான முனிவர் மற்றைய யாவற்றையும் விடக் கண்ணிந்திரியமே சிறந்தது என்று எழுதுவார். ஏனெனில், மற்றைய நான்கு பொறிகளும் தம்மிடத்து வந்த சுவை, ஊறு, ஓசை, நாற்றம் என்பவற்றைப் பற்றிப் பின் அறியும். கண் ஒன்று தான், தான் சென்று அவற்றைப் பற்றும் என்பார். நன்னெறியின் இந்தப் பாடலின் கண்ணீர் உருக்கும் கண்ணைப் பெரியவர்களுக்கு ஒப்புமை கூறித் தாம் கூற வந்த கருத்தினை விளக்குகிறார் சிவப்பிரகாசர். பிறர் நோய் கண்டு உள்ளம் இளகுவதற்கு நெருப்பிலிட்ட நெய்யை உவமை காட்டியுள்ளார்.

பிறப்பினால் உயர்வு, தாழ்வு பேசுவது தகாது என்பது சங்கப் பாடல்கள் முதல் அவற்றின் பின்னர்த் தோன்றிய நீதிநூல்கள் வரை யாவும் எடுத்தியம்பியுள்ளன. அவை யாவற்றுள்ளும் மிகச் சிறந்ததாகக் கொள்ளத்தக்கது.

''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்'' (குறள் - 972)

என்றும் திருக்குறள். சாதி, குலம், பிறப்பு என்னும் சுழிப்பட்டுத் தடுமாறாத சான்றாண்மையாளர் ஒருவனது செயலைக் கொண்டே அவனது மேன்மையை முடிவு செய்வர். பெருமைக்கும், சிறுமைக்கும் உறைகல்லாகக் கொள்ளப்படுவது ஒருவனது ஒழுக்கமே. சங்கப்புலவன் கருத்துப்படி 'தீதும் நன்றும் பிறர் தர வாரா'. இதே கொள்கை, வெற்றி வேற்கை என்ற மிகப் பிற்கால நூலிலும் ''பெருமையும் சிறுமையும் தான் தர வருமே'' என்று எடுத்தாளப் பெற்றுள்ளது.

இதனையே சிவப்பிரகாசர் தமது நூலில்,

''ஆக்கும் அறிவான் அலது பிறப்பினால்
மீக்கொள் உயர்வுஇழிவு வேண்டற்க - நீக்கு
பவர்ஆர் அரவின் பருமணிகண்(டு) என்றும்
கவரார் கடலின் கடு.''

'ஒளிமிக்க மாணிக்கக் கல் நல்லபாம்பினிடமிருந்து தோன்றியது. அந்த மாணிக்க மணியின் பிறப்பைக் கருதி அதனை ஒதுக்குவார் ஒருவருமிலர். வளமிக்க கடலிலிருந்து தோன்றியதாக இருந்தாலும் ஆலகால நஞ்சினை விரும்புவார் யாருமிலர்' என்பது இப்பாடலின் கருத்து. பண்டைப் புலவர்கள் கொள்கைப்படி நாகரத்தினம் எனும் மணிவகை நல்லபாம்பின் படத்திலிருந்து தோன்றுவதாகும். அதன் பிறப்பைக் கருதி மாணிக்கத்தை யாரும் ஒதுக்குவதில்லை.

முத்தும் பவளமும் இரத்தினங்களும் நிறைந்து கிடக்கின்ற அலைகடலிலே தோன்றியதாயினும் பிறந்த இடத்தின் பெருமையைக் கொண்டு ஆலகால நஞ்சினைப் போற்றிக் கொள்ளுபவர் ஒருவருமில்லை. 'ஒருகுடிப் பிறந்த பல்லோருள்ளும் முத்தோன் வருக என்னாது, அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்' என்பதை இந்தப் பாடலின் மூலம் சிவப்பிரகாசர் விளக்கியுள்ளார்.

இனியவை கூறல் என்பது ஓர் நல்லறமே ஆனாலும் அச்சொற்களின் நோக்கத்தைக் கொண்டே அதனுடைய நலமும், தீங்கும் கணக்கிடப்பெறும். இதனை மனத்திற்கொண்டே, சிறுமையுள் நீங்கிய இன்சொல் என்று வள்ளுவரும் அடைகொடுத்து ஓதினார். இக்கருத்தை வலியுறுத்தும் வகையில் நன்னெறியில் இடம் பெறுகின்ற பாடல் இது:

''மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி(து) ஏனையவர்
பேசுற்ற இன்சொல் பிறிதென்க - ஈசற்கு
நல்லோன் எறிசிலையோ நன்னுதால் ஒண்கருப்பு
வில்லோன் மலரோ விருப்பு''

'குற்றமற்ற மனமுடையார் பேசுகின்ற கடிய மொழிகளும் இனிமையானவை. அவ்வாறு அல்லாமல் பிறர் பேசும் இன்சொல்லை இனியது என்று ஏற்றுக் கொள்ளுவதும் தவறு என்க. சாக்கிய நாயனார் மறவாத அன்போடு எறிந்த கற்களே சிவபிரானுக்கு உகந்தவையாயின. கரும்பை வில்லாகக் கொண்ட மன்மதன் தொடுத்த மலர் அம்புகள் சிவபெருமானால் இனிது என ஏற்றுக் கொள்ளப் படவில்லையன்றோ?'

இந்தப் பாடலில் சாக்கிய நாயனார் வரலாற்றிலிருந்தும், மன்மதனை நெற்றிக்கண்ணால் சிவபிரான் எரித்த புராணக் கதையிலிருந்தும் இந்த நிகழ்ச்சிகளை எடுத்துக் கொண்டு இன்சொல்லுக்கு இலக்கணம் இது என்று வகுத்துக் காட்டுகிறார் சிவப்பிரகாசர். சாக்கிய சமயத்தில் பிறந்த நாயனார் சிவலிங்கத்தைக் காணும்தோறும் கல்லெறிந்து வழிபடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இதனையே அருச்சனையாக ஏற்று மகிழ்ந்தார் சிவபெருமான். திருநாவுக்கரசு நாயனாரும் தமது தேவாரத்துள் ''புத்தன் மறவாது ஓடி எறி சல்லி புது மலர்கள் ஆக்கினான் காண்'' என்று பாராட்டியுள்ளார்.

நட்பு என்பது ஓர் மெல்லிய உறவு அதனை மிகுந்த கவனத்துடன் போற்றுதல் வேண்டும். நட்பின் பெருமையை நன்குணர்ந்த வள்ளுவர் உடன்பாட்டு முறையிலும், எதிர்மறை முறையிலும் ஏறத்தாழப் பதினேழு அதிகாரங்களால் நட்பின் திறத்தை விரித்துரைக்கிறார். 'இவர் எனக்கு இவ்வளவு நெருக்கமான நண்பர்! நானும் அவருக்கு அத்தன்மையுடையேன் என்று புனைந்து உரைத்தாலும் நட்பு சிறப்பிழந்து விடும்' என்று கூறுகிறார் திருவள்ளுவர்,

''இனையர் இவரெமக்கு இன்னம்யாம் என்று
புனையினும் புல்லென்னும் நட்பு'' (குறள் - 790)

இக்கருத்தினைப் பொன்போல் பொதிந்து சிவப்பிரகாசர் நட்பின் மென்மையைக் கூறும் வண்ணமாக அமைத்துத் தருகின்ற பாடல்,

''நீக்கம் அறும்இருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர்பெருமை நொய்தாகும் - பூக்குழலாய்
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோல்
புல்லினும் திண்மைநிலை போம்''

என்பதாகும். 'நெல்லின் உமி சிறிது நீங்கினாலும் முளைக்கும் தன்மையை நெல் இழந்து விடுகின்றது. மீண்டும் அது நெல்லோடு கூடினாலும் உறுதியாக நிற்பதில்லை. அதுபோலவே நெடுங்காலம் நீங்காது பழகிய நண்பர்கள் இருவர் சற்றே மனம் வேறுபட்டு நீங்கிப் பின் சேர்ந்தாலும் அவர் நட்பின் பெருமை முன்பினும் குறைந்து போகும்' என்பது இப்பாடலின் கருத்து.

இதுபோல, குறுஞ்சித்திரங்கள் பல உடையது நன்னெறி என்ற நீதிநூல். இந்நூலைப் பலகால் பயில்வதின் மூலம் அதன் அழகையும், ஆழத்தையும் தெரிந்து கொள்ளலாம்.

29. சிவப்பிரகாசரின் காப்பியம் - இரு சுவைகள்

சி. கார்த்திகேயன், நெல்லை.

பதினேழாம் நூற்றாண்டுப் புலவரில் தலைசிறந்தவர்களில் ஒருவரான சிவப்பிரகாசர், பிரபுலிங்க லீலையைத் தமிழ் மொழியில் எழுதினார். பிரபுலிங்க லீலை வீரசைவ காப்பியம். சிவப்பிரகாசர் வீரசைவர். இவர் காலத்தில் வீரசைவம் தழைத்தோங்கியிருந்தது. இந்த ஆதிக்கம் இவ்வாசிரியரைக் கவர்ந்திருக்க வேண்டும். இக்காரணத்தால்தான் இவர் தம் மொழி பெயர்ப்புக்கு வடமொழியை நாடாமல் கன்னடமொழியினை நாடியிருக்கலாம். பிரபுலிங்க லீலை கன்னட மொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டதாகவோ, தழுவலாகவோ இருப்பினும் இக் காப்பியத்தில் அனைத்துச் சுவைகளும் மிகுந்துள்ளன. முதனூலாசிரியரை ஒட்டியே சிவப்பிரகாசரும் தம் கற்பனைத் திறமையை வெளிப்படுத்திப் பாடியுள்ளார்.

மனிதனின் உள்ளம் இயற்கைக் காட்சியில் ஈடுபடுவதைப் போல மற்றெதிலும் ஈடுபடுவதில்லை. பண்டை நாளிலிருந்து இன்று நாள்வரை இயற்கையைக் கண்டு அதில் தன் உள்ளத்தைப் பறிகொடுக்காத மக்களே இல்லையென்று கூறலாம். இயற்கைக் காட்சிகளை நேரில் காணும் போதோ, புத்தகங்களில் படிக்கும் போதோ நம் உள்ளத்தில் ஓர் உணர்ச்சி எழுகின்றது. இந்த உணர்ச்சியைக் கலை உணர்வோடு இலக்கியத்தில் படைக்கும்போது அவை சுவைகளாக மாறுகின்றன.

உவமைச் சுவை

பண்டைக்காலத்தில் புலவர்களின் பரந்த புலமையை அளப்பதற்குரிய கருவிகளுள் உவமை ஒரு சிறந்த கருவியாகப் பயன்பட்டது. அவர்கள் கூறிய உவமைச் சுவையில் ஈடுபட்டு அவர்களில் சிலருக்கு அவர்கள் சொன்ன உவமையே பெயராக இட்டு வழங்கி வந்தார்கள் என்றால், அதன் பெருமையை அறிவதற்கு இதனினும் சிறந்த சான்று ஒன்று வேண்டுவதில்லையன்றோ! 'செம்புலப் பெயல்நீரார்' என்பது அவருள் ஒரு புலவர் பெயர். முன்பு யாதொரு தொடர்புமில்லாமல் எதிர்ப்பட்ட, ஒரு தலைவன் உள்ளமும், தலைவி உள்ளமும் ஒன்று பட்டதற்குச் செம்மண் நிலத்துப் பெய்த மழை நீரானது அம்மண்ணோடு கலந்து, அதன் நிறத்தையும் சுவையையும் பெற்று ஒன்றுபடுவதை உவமையாக்கி,

''செம்புலப் பெயல் நீர்போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே''

எனக் கூறியதனால் செம்புலப் பெயனீரார் எனவே வழங்கப்பட்டார். அப்பெயர், அவர் இயற்பெயரையே மறைந்தொழியச் செய்தது. இவ்வாறாகக் குறுந்தொகையில் பதின்மூவரின் பெயர்கள் அவர்கள் பாடலில் கூறிய உவமைகளாலேயே வழங்கப்படுகின்றன.

சிவப்பிரகாச அடிகளின் உவமைகள் சில, புலவர் பெருமக்கள் உலகத்தில் நிகழும் நிகழ்ச்சிகளை எத்துணை உற்றுநோக்கி அவற்றைத் தாம் கூறக் கருதும் பொருளுக்கு உவமையாக்கிக் கூறுகின்றார் என்பதைக் காட்டுகின்றன.

இக்காலத்தில் மத்தளம் அடிக்கின்ற பலரை நாம் காண கின்றோம். அவருள் ஒருவரேனும், அதனை அடிப்பதற்குக் கருவியாக உள்ள தம் கை விரல்களுக்கு மட்டும் வேலை கொடுத்து மெய்க்கு வேலை கொடாமல் இருக்கின்றாரைக் கண்டோமில்லை. ஒவ்வொரு சமயம், மதுரையில் திருக்கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அங்கயற்கண் அம்மையின் திருமுன், கலைமகள் விழாக்காலத்துப் பேய் பிடித்தாடும் பெண் மக்களைப் போல, தம் குடுமி அவிழ்ந்து கீழே தொங்கத் தொங்க ஆடி அஞ்சத்தகுந்த காட்சியளித்தலைக் காண்கின்றோம். அவர்கள் அத்தண்ணுமையிலிருந்து, தமது வலிமை மிகுந்த விரல்களால் கமுப்பு ஒலி, நமது செவியும் புகுந்து விளைக்கும் இன்பத்தைக் காட்டிலும், அவர்களின் பேயாட்டம் நம் கண்ணுக்குப் புலனாகி விளைக்கும் துன்பம் மிகுதிப்படுதலாலே, அவ்வின்னொலியைக் கேளாமல் மீறாதற்கும் உள்ளம் இடம் கொடாமல், 'ஒரு திரைபோட்டு மறைத்தேனும் கேட்கலாமா!' என்று எண்ணுகின்றோமல்லவா? இக்குற்றமின்றி, அல்லமப் பிரபு என்பவர்.'

மத்தளம் அடித்தற்குத் தாமியற்றிய 'பிரபுலிங்க லீலை' எனும் காவியச்சுவை நிறைந்த நூலின்கண் அச்சிவப்பிரகாச அடிகள் எடுத்தாண்ட உவமை நாம் சிந்தித்து மகிழ்வதற்குரியது.

குளங்களிலும், வாய்க்கால் முதலிய நீர்நிலைகளிலும் மீன் பிடித்து உண்ணும் பொருட்டு, மீன் குத்திப் பறவைகள், அந்நீர் நிலைக்குச் சிறிது மேலே பறந்து கொண்டிருத்தலைப் பலர் பார்த்திருக்கலாம். ஆனால், அந்நிகழ்ச்சியை உற்று நோக்குபவர் சிலரினும் சிலரே! அதனை இப்போது நினைவுக்குக் கொண்டு வருவோம். தண்ணீருக்கு மேலே பறக்கும் அது, தன் அலகைக் கீழே இறக்கி, நீருள் இருக்கும் மீன் மீது வைத்த குறி தவறாமல் பார்த்துக் கொண்டு சிறகுகளை மட்டும் ஆட்டி, மற்ற உறுப்புக்களை ஒரு சிறிதும் அசைக்காமல் பறக்கும்; அப்படிப்

பறக்கும் நிலையிலிருந்து சிறிது நேரத்திற்கு ஒருமுறை அது ஒரு முழ அளவில் மேலே சென்று, மீண்டும் அந்நிலையில் வந்து தங்கிப் பறக்கும். இந்நிகழ்ச்சியை இது வரையிலும் பாராதவர்கள் இதைப் படித்தபின் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். இந்நிகழ்ச்சி மெய் அசையாமல் நின்று, மத்தளத்தின் இரு புறத்தும் வைத்த கை விரல்களை மட்டும் இடைவிடாது அசைத்து, சிறிது நேரத்திற்கொரு முறையோ, இருமுறையோ அதனின்றும் பேரொலியை எழுப்பும் பொருட்டு, அக்கைகளைச் சிறிது மேலே தூக்கி அடிக்கும் நிகழ்ச்சிக்கு உவமையாதற்கு எத்துணைப் பொருத்த முடையது என்பதை நன்கு சிந்தித்துப் பாருங்கள். இதனை ஊன்றி யறிந்த அடிகள், இதனை அந்த அல்லமன் மத்தளம் அடிப்பதற்கு உவமையாக்கி,

''சிரலசைந் தாடாநின்ற சிறகர்போல் மத்தளத்தை
விரலசைத் தறைத லின்றி மெய்யசையாமல் நின்றான்''

எனக் கூறி நம்மைச் சுவைக்குமாறு செய்கின்றார்.

''சிரல் - மீன்குத்திப் பறவையின், அசைந்து ஆடா நின்ற சிறகர் போல - சிறகுகள் அசைந்து ஆடுதலைப் போல, மத்தளத்தை - தண்ணுமையை, விரல் அசைந்து அசைதல் இன்றி - விரல்கள் அசைந்து தாக்குதலேயல்லாமல், மெய் அசையாமல் நின்றான் - தன் உடம்பானது (சிறிதும்) அசையாமல் நின்றான்'' என்பது இதன் பொருள்.

இன்னும் அப்புலவர் பெருமான், அப்பறவையின் இயல்பை மற்றொன்றுக்கும் உவமையாக்கிக் கூறும் செய்தி ஒன்று, அவர் முதல் முதலியற்றியதும், திருவண்ணாமலையை வலம் வருவதற்குள் இயற்றியது மாகிய 'சோணசைலமாலை' என்னும் சிறுநூலில் காணப்படுகிறது. அவர் இறைவனை நோக்கி, ''பெருமானே? நீரின் மேல் பாகத்தில் உலாவுகின்ற மீனைக் கொத்தி எடுத்து உண்ணும் பொருட்டு, மீன்குத்திப் பறவை பறப்பதைப் போல, என் உயிரை உண்ணும் பொருட்டுக் கூற்றுவன் வந்து உலாவுகின்றான்; அப்பறவையின் குறிக்கு அம்மீன் தப்பிப் பிழைக்க வேண்டுமானால், அத்தண்ணீருள் மூழ்கி உள்ளே சென்று விட வேண்டும்; அதுபோல, மறலியின் குறிக்கு யான் தப்ப வேண்டுமாயின், சிவானந்தக் கடலுள் மூழ்கி விடல் வேண்டும். அவ்வாறு யான் செய்யும்படி நீ அருள் செய்ய வேண்டும்'' என்பதை

''வந்துமா மறலி எனதுயிர் உண்பான்
மயிலைஉண் சிரலின்நிற் கின்றான்;
முந்துநீ எனையா நந்தவா ரிதியுள்
மூழ்குற விருத்தருள் புரிவாய்''

என்னும் செய்யுளால் அறிகிறோம்.

'கற்பனைக் களஞ்சியம்', 'கற்பனை ஊற்று' என்று புலவர்களால் பாராட்டப்படுகின்ற அப்புலவர் பாடிய நூல்களுள் ஒன்று, நாற்பது வெண்பாக்களையுடைய 'நன்னெறி' என்பது புதுச்சேரிக்கு அண்மையிலுள்ள பொம்மைய பாளையம் மடத்தில் இவர் தங்கியிருக்கும் பொழுது, ஒருநாள் பேதிக்குச் சாப்பிட்டு விட்டுக் காலையில் கடற்கரையில் உலாவியதாகவும், அதுவரையிற்கூடக் காலத்தை வீணாக்கக் கருதாமல், மணலைத் துப்புரவு செய்து ஒரு சிறு கோலால் அம்மணலில் நாற்பது வெண்பாக்களை எழுதிவிட்டு, மடத்துக்கு வந்து தம் தம்பியராகிய கருணைப் பிரகாசரை நோக்கி, 'அப்பாடல்களை எழுதி வரும்படி சொல்ல, அவ்விளவல் அப்படியே எழுதிக் கொண்டு வந்தார் என்றும், அதுதான் நன்னெறி என்றும் அவர் வரலாறு கூறுகின்றது. அந்த நாற்பது வெண்பாக்களின் பொருள்களனைத்தும் உவமைகளாலே விளக்கப் பட்டுள்ளன. கடற்கரையிலிருந்து எழுதியதென்பதற்கேற்ப, அவற்றுள் பன்னிரண்டு வெண்பாக்களில் கடல் நீரும், அதிற் காணப்படும் வெள்ளம் முதலியவுமே உவமையாகக் காணப்படுகின்றன.

உவகைச் சுவை

''செல்வம், புலனே, புணர்வு, விளையாட்டென்று
அல்ல னீத்த வுவகை நான்கே''

செல்வம், அறிவுடைமை, புணர்ச்சி, விளையாட்டு என்ற இவை பற்றி உவகைச் சுவை தோன்றும்.

பிரபுலிங்க லீலையில் சிவபெருமானுககும், உமைக்கும் வாதம் நடந்து, சிவபெருமான் அல்லமராக மண்ணுலகில் உருவெடுக்கிறார். அன்பர்கள் தவிர வேறு யாராலும் என்னை இனம் கண்டு அடைய முடியாது என்று சிவபெருமான் கூறுகின்றார். அதற்கு உமை, 'நான் மாயையால் எல்லோரையம் மயக்குவேன். என்னால் உன்னை இனம் கண்டு கொள்ள முடியாதா? முடியும்' என்று சிவனிடம் வஞ்சினம் கூறி, மாயை என்பாளை நிலவுலகிற்கு உமை அனுப்புகிறாள். பூமியில் மாயை பிறந்து வளர்ந்தது. அல்லமரைக் கண்டு காதல் வயப்பட்ட மாயை அல்லமரை தழுவ முயன்றாள். அப்போது அவள் சென்ற நிலையை,

'வேனில்நண் பகலின் வெய்யாபா லையுள்நீர்
வேட்டவன் அந்நிலத் துறுநீர்
தானெதிர் கண்டு பருகலோ குதல்போல்

என்று கூறுகிறார்.

கண்ணாடியில் தோன்றும் நிழலைப் பற்றுவதற்கு நீட்டிய கை, அக்கண்ணாடியில் மோதக் கண்டு அழுது வருந்தும் மழலைப் பேதை

போல, மாயை அல்லமரைத் தழுவ முயன்று தோல்வியடைந்தாள். அதனால் சிறுகுழந்தை போல் அழுகிறாள். மங்கைப் பருவத்தினளாகிய மாயையை பேதைப்பருவத்தினள் வருந்துவது போல வருணிக்கின்றார் ஆசிரியர்.

''நாடிய ஆடி நிழலென அணைமேல் நண்ணுறத் தோன்றிய இறையை
ஓடினள் விழுந்து தழுவுறத் தழுவ உறாமையால் அணைமிசை விழுந்தே
ஆடியி னிழலைப் பற்றி நீட்டியகை ஆடியில் தாக்கநின் றமுது
வாடுறு மழலைப் பேதையே போல வருந்தினள் மலர்விழி மாயை''

என்கிறார்.

அகப்பொருள் நூல்களில் கூறியிருப்பது போலவே, சிவப்பிரகாசரும் திங்களையும், காதலையும் தொடர்புறுத்திப் பாடி வருணித்துள்ளார். மாயையின் காமப் பெருக்கினை,

'காலை அரும்பிப் பகலெல்லாம் போதா யிருந்த காமமலர்
மாலை மலர்ந்து பொறாம லொரு மாயை நாம மணிவல்லி
மூலையிருந்து புறம்போந்து விரிலெண்ணிலா மென்முற்றத்தில்
பீலி மஞ்ஞை யெனவீழ்ந்து மதநோய் மிகவாய் பிதற்றுமால்'

என்று கூறுகின்றார்.

பிரபுலிங்கலீலை, சமயத்தை நிலை நாட்டும் பொருட்டும், வளர்க்கும் பொருட்டும் எழுந்ததொரு காப்பியம். ஆசிரியர் இல்லறத்தைத் துறந்து, துறவறத்தை மேற்கொண்டு துறவியாக வாழ்ந்தவர். அப்படியிருப்பினும், இல்லறச் சுவையின் இன்பத்தை உணர்ந்தவர் போல் பாடியுள்ளார். அதிலும், உவமைச் சுவை, உருவகச் சுவை இரண்டிலும் இச்சுவை இன்பம் சிறப்பாக உள்ளது என்று கூறிவிட முடியும்.

30. "நான்மணிமாலை"யில் அடியார்களின் பக்தி

க. கிருஷ்ணமூர்த்தி, பழனி.

தமிழ் இலக்கிய வரலாற்றில் கற்பனைக் களஞ்சியம் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் தனி இடத்தைப் பெற்றவர். எண்ணற்ற உயரிய சிந்தனைகளை தமது படைப்பால் உலகிற்கு உணர்த்தியவர். ஆன்மீக ஒளியை இம்மண்ணில் ஏற்றிய உயரிய பண்பாளர். சீரிய படைப்பாளர். பன்மொழிச் சிந்தனையாளர், வீர சைவத் துறவியாக வாழ்ந்தவர்.

காஞ்சிமாநகரில் குமாரசாமி தேசிகர் என்பவருக்குப் புதல்வராய்ப் பிறந்தவர். வீர சைவ மதத்தை நேசித்தவர். சிவப்பிரகாசர் தமிழ்மொழியில் உள்ள இலக்கண இலக்கியங்களை நன்கு தெளிவுறக் கற்றவர். கற்ற கல்வியின் மூலம் பல்வேறு வகையான பக்தி இலக்கியங்களையும், தல புராணங்களையும், திருப்பள்ளி எழுச்சிப் பாடல்களையும் படைத்தவர். மேலும், தூது, பிள்ளைத்தமிழ், மாலை , அந்தாதி, கலம்பகம், கோவை, உலா போன்ற சிற்றிலக்கிய வடிவங்களில் பல்வேறு வகையான பக்தி நூல்களைப் படைத்துள்ளார். சிவப்பிரகாசர் படைத்த ''பிரபுலிங்க லீலை'' உயரிய சைவ சமயக் காப்பியமாகும். சைவ சமய அடியார்களின் சிறப்பைக் கூறும் சிவப்பிரகாசரின் நால்வர் நான்மணிமாலை காட்டும் அடியார்களின் பக்தியை இக்கட்டுரை ஆராய்கிறது.

பெயர்க்காரணம்

நால்வர் நான்மணிமாலை சிவப்பிரகாச சுவாமிகளால் படைக்கப் பட்ட உயரிய சைவ சமய நூலாகும். 'நான்மணிமாலை' என்பது சிற்றிலக்கிய வகையில் இடம் பெறுகிறது. வெண்பா, கலித்துறை, விருத்தம், அகவல் என்ற நான்கு வகையான அந்தாதித் தொடையுடன் கூடிய 'நாற்பது' செய்யுட்களால் படைக்கப்படுவது ஆகும். இதனை,

''வெண்பாக் கலித்துறை விருத்தம் அகவல்
பின்பேசும் அந்தாதி யினாற்பது பெறின்
நான்மணி மாலையாமென நவில்வர்''

என்று நான்மணிமாலைக்கு ''இலக்கண விளக்கம்'' என்ற நூல் விளக்கம் தருகின்றது.

நால்வர் யார்

நால்வர் நான்மணிமாலையில் குறிப்பிடப் பெறும் நால்வர் யார்? சிவப்பிரகாச சுவாமிகள் நேசித்த நான்கு சைவ சமய அடியார்களின் சிறப்பை இந்நூல் விளக்குகிறது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் சைவ சமயக் குரவர்களைப் பற்றியதே நால்வர் நான்மணிமாலை. இறைவனின் திருவருளைப் பெறவே இந்நூல் படைக்கப்பட்டது. இறைவனின் அருளைப் பெற்ற அடியார்களின் சிறப்பினை அறிந்தால் நாமும் இறைவனின் திருவருளைப் பெறலாம். இந்நூல் படைத்ததன் நோக்கமும் இதுவே. அவ்வகையில் நால்வர் நான்மணிமாலை சிறப்பான இடத்தைப் பெற்றுத் திகழ்கின்றது.

நூல் அமைப்பு

சிவப்பிரகாசரின் நால்வர் நான்மணிமாலையானது 'நாற்பது' பாடல்களைக் கொண்டது. வெண்பாவில் 10 பாடலும், கலித்துறையில் 10 பாடலும், அகவல் பாடலில் 10 பாடலும், விருத்தத்தில் 10 பாடலும் இடம் பெற்றுள்ளது. நாற்பது பாடல்களையும் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

அ. 1, 5, 9, 13, 17, 21, 25, 29, 33, 37 - வெண்பா

ஆ. 2, 6, 10, 14, 18, 22, 26, 30, 34, 38 - கலித்துறை

இ. 3, 7, 11, 15, 19, 23, 27, 31, 35, 39 - விருத்தப்பா

ஈ. 4, 8, 12, 16, 20, 24, 28, 32, 36, 40 - அகவற்பா

மேலே உள்ளவாறுதான் நால்வர் நான்மணிமாலையில் செய்யுட்கள் படைக்கப்பட்டுள்ளது. மேலும், நான்கு அடியார்களுக்கும் தனித்தனியான பாவடிவங்களில் இந்நூல் படைக்கப்பட்டுள்ளது. வெண்பாவில் உள்ள பத்துப் பாடல்களும் திருஞான சம்பந்தரின் சிறப்பினை எடுத்துரைக் கின்றது. கலித்துறையில் இடம் பெற்றுள்ள பத்துப் பாடல்களும் திருநாவுக்கரசரின் சிறப்பினைச் சுட்டுகிறது. விருத்தப்பாவில் உள்ள பத்துப் பாடல்களும் சுந்தரரின் வரலாற்றை எடுத்துக் காட்டுகிறது. அகவற்பாவில் உள்ள பத்துப் பாடல்களும் மாணிக்கவாசகரின் பக்திச் சிறப்பைச் சுட்டுகிறது. இதுவே இந்நூலுக்குரிய தனிச்சிறப்பு என்று கூறலாம். இனி தனித்தனியே அடியார்களின் பக்திச் சிறப்பைக் காணலாம்.

அ. சிவப்பிரகாசர் காட்டும் திருஞானசம்பந்தர்

நால்வர் நான்மணிமாலையில் இடம் பெற்றுள்ள பத்து வெண்பாக் களும் திருஞானசம்பந்தரின் பக்திச் சிறப்பைச் சுட்டுகிறது. இதனை,

''இலை படர்ந்த பொய்கை இடத்து அழுதல் கண்டு
முலை சுரந்த அன்னையோ முன்னின் - நிலைவிளம்பக்

கொங்கை சுரந்தவருட் கோமகளோ சம்பந்தா
விங்குயர்ந்தா ளார்சொல் லெனக்கு'' (5-வது பாடல்)

என்ற பாடலில் திருஞானசம்பந்தர் ஞானப்பால் உண்ட செய்தியை நன்கு உணர்த்தியுள்ளார். 'அழுதல்கண்டு முலை சுரந்த அன்னை' என்ற வரிகள் பார்வதியை குறிப்பதாய் உள்ளது. இறைவனின் திருஉள்ளத் தன்மையை சிவப்பிரகாசர் நன்கு உணர்த்தியுள்ளார். திருஞானசம்பந்தரை நோக்கி, அம்பிகையின் செயலையும், மங்கையர்க்கரசியின் செயலையும் ஒப்பிட்டு, யார் செயல் உயர்ந்தது எனக்குச் சொல் என்று கேட்பது சிவப்பிரகாசரின் பக்திச் சிறப்பை வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளது. மேலும்,

''பயனாகு நல்லாண் பனைக்குவிடத் திற்கு
மயிலாகு நோய்க்கு மருந்தா - முயிராகுஞ்
சிந்துமெலும் பிற்குச் சிரபுரத்து நாவலன்சம்
பந்த னியம்பு திருப்பாட்டு'' (17-வது பாடல்)

திருஞானசம்பந்தரின் திருப்பாடல்களால் விளையும் பயன்களை மேலே உள்ள பாடல் வரிகள் உணர்த்துகின்றன. பண்புமிக்க ஆண் பனைக்குப் பழமாகவும், நஞ்சத்திற்கு மஞ்ஞையாகவும், பிணிக்குப் பெருமருந்தாகவும், சிந்தும் எலும்பிற்கு உயிராகவும் திருஞானசம்பந்தரின் திருப்பாடல்கள் திகழ்கின்றன எனச் சிவப்பிரகாசர் குறிப்பிடுகிறார். திருஞானசம்பந்தரிடத்து சிவப்பிரகாசர் கொண்டிருந்த அளவற்ற பற்றினையும், மதிப்பினையும் இப்பாடல் வரிகளால் அறிய முடிகிறது. மேலும் பல பாடல்களில் திருஞானசம்பந்தரின் அரிய திருவிளையாடல் களை சிவப்பிரகாசர் நன்கு விளக்கியுள்ளார்.

ஆ. சிவப்பிரகாசர் காட்டும் திருநாவுக்கரசர்

நால்வர் நான்மணிமாலையில் இடம் பெற்றுள்ள பத்து கலித் துறைப் பாக்களும் திருநாவுக்கரசரின் அருமை பெருமைகளை எடுத்துக் காட்டுகிறது. குறிப்பாக, இறைவனின் திருவருளால் குடல் நோயை அடைந்தது. அருகக் கடலைக் கடந்தது. கல்லையே தெப்பமாகக் கொண்டு கடலைக் கடந்தது, திருமறைக்காட்டில் கோயிற் கதவு திறக்கப் பாடியது. இறைவன் அருளிய படிக்காசு பெற்றது. பாம்பு தீண்டியதால் மாண்டு போனவனை எழுப்பியது போன்ற செய்திகளை சிவப்பிரகாசர் தமது பத்துப் பாடல்களில் நன்கு விளக்கியுள்ளார். இதனை,

''அருகக் கடல்கடந் தேறிய தோசிலை யம்பியெனப்
பெருகக் கடல் கடந்தேறிய தோசொல் பெருமிடறு
கருகக் கடல் விடமுண்டோ னடியிற் கசிந்துமன
முருகக் கடலன்பு பெற்ற சொல் வேந்த வுனக்கரிதே''
(22-வது பாடல்)

என்ற பாடல் வரிகளில் திருநாவுக்கரசரின் பக்தியும், அவர் மீது நாம் கொள்ள வேண்டிய மதிப்பினையும் சிவப்பிரகாசர் நன்கு தெளிவுபடுத்தி யுள்ளார். சமணக் கடலை விட்டு, சைவக் கடலுக்கு வந்த திருநாவுக்கரசரின் நிலை நன்கு உணர்த்தப்பட்டுள்ளது. மனம் உருகிப் பாடினால் இறைவனின் அன்பைப் பெறலாம் என்ற கோட்பாட்டினை சிவப்பிரகாசர் நன்கு விளக்கியுள்ளார். மேலும், திருநாவுக்கரசரின் பக்திச் சிறப்பை நன்கு போற்றியுள்ளார் என்பதையும் இதன் மூலம் அறிய முடிகிறது. மேலும்,

''பெற்றா னினைப்பெற்றவர் போற்பெறலும் பிறப்பதுண்டே
னற்றா ரணியி னினைப்போற் பிறப்பது நல்லகண்டாய்''
(30-வது பாடல்)

என்ற வரிகள் திருநாவுக்கரசர் மேல் சிவப்பிரகாசர் கொண்டிருந்த உயரிய பக்தியினைக் காட்டுகிறது. பிறந்தால் தரணியின் அவர் போல் பிறக்க வேண்டும் என்று உரைப்பது திருநாவுக்கரசர்பால் சிவப்பிரகாசர் கொண்டிருந்த அன்பையும் ஆழமான நெருக்கத்தையும் வெளிப்படுத்து வதாய் உள்ளது.

இ. சிவப்பிரகாசர் காட்டும் சுந்தரர்

நால்வர் நான்மணிமாலையில் அமைந்துள்ள பத்து விருத்தப் பாக்களும் சிவப்பிரகாசர் சுந்தரர் மேல் கொண்டிருந்த நட்பினையும், அன்பினையும் காட்டுவதாய் உள்ளது. மேலும், சுந்தரர் மீது சிவபெருமான் கொண்ட நட்பினையும், பரவை நாச்சியாரிடம் தூது சென்ற நிலையையும் இப்பாடல்கள் உணர்த்துகின்றன.

சிவப்பிரகாசர் சுந்தரர் மீது கொண்ட அன்பால் ''துறந்த முனிவர் தொழும் பரவை துணைவா'' எனக் குறிப்பிடுகின்றார். மேலும், சிவபெருமான் நண்பனாக வந்த நிலையையும் குறிப்பிடுகிறார்.

''அறிந்து செல்வ முடையானா மளகைப்
பதியாற் றோழமை கொண்
டுறழ்ந்த கல்வியுடையானு மொருவன்
வேண்டு மெனவிருந்து
துறந்த முனிவர் தொழும் பரவை துணைவா
நினைத்தொழமை கொண்டான்
சிறந்த வறிவு வடிவமாய்த் திகழு
நுதற்கட் பெருமானே'' (7-வது பாடல்)

என்ற பாடல் சிவப்பிரகாசர் சுந்தரர் மீது கொண்டிருந்த ஆழ்ந்த பக்தியினையும் நட்பினையும் நமக்குக் காட்டுவதாய் அமைந்துள்ளது.

''போதமுண்ட பிள்ளையென்பு பொருகண்மாது செய்ததோ
காதல் கொண்டு சொல்லின் மன்னர் கன்மிதப்பவுய்த்ததோ

வாய்திறந்து முதலை கக்க மகனை நீ யழைத்ததோ
யாது நம்பி யரிது நன்றெனக் கியம்ப வேண்டுமே''
(19-வது பாடல்)

சிவப்பிரகாசர் சுந்தரரை நோக்கிக் கேட்பதாய் இப்பாடல் உள்ளது. மூன்று தொழில்களிலும் சிறந்தது எது? இதனை நீயே எனக்குக் கூற வேண்டும் எனக் கேட்கிறார். இதன் மூலம் சைவ சமய அடியார்களிடம் சிவப்பிரகாசர் கொண்டிருந்த உயரிய பக்தியினை அறிய முடிகிறது.

ஈ. சிவப்பிரகாசர் காட்டும் மாணிக்கவாசகர்

நால்வர் நான்மணிமாலையில் வரும் அகவற்பாக்கள் பத்தும் மாணிக்கவாசகரின் மாண்பினைக் குறிப்பிடுகின்றது. திருவாசகத்தின் உயரிய நிலையை சிவப்பிரகாசர் நன்கு விளக்கியுள்ளார். சிவபெருமான் மாணிக்கவாசகரிடம் கொண்டிருந்த நட்பினையும் திருவிளையாடல்களையும் சிவப்பிரகாசர் நன்கு எடுத்துரைத்துள்ளார்.

மாணிக்கவாசகர் அருளிய 'திருவாசகம்' ஓர் உயரிய பக்தி இலக்கியம். திருவாசகத்தை சிவப்பிரகாசர் உயர்வாகப் பாடியுள்ளார்.

''வாசகன் புகன்ற மதுர வாசகம்
யாவரு மோது மியற்கைத் தாதலிற்
பொற்கல நிகர்க்கும் பூசுரர் நான்மறை
மட்கல நிகர்க்கு மதுரவாசக
மோதின் முத்தி யுறு பயன்
வேத மோதின் மெய்ப்பய னறமே'' (32-வது பாடல்)

என்ற வரிகளில் சிவப்பிரகாசர் மாணிக்கவாசகரின் திருவாசகத்தை நன்கு பாராட்டியுள்ளார். அனைவரும் ஓதும் உயரிய நூல் திருவாசகம். பொன்னால் செய்யப்பட்ட பாத்திரம் போன்றது. விலைமதிப்பற்றது. நான்மறை வேதங்களிலும் உயர்ந்ததாகக் கருதப்படுவது திருவாசகம். முக்திப் பயன்பெறும் உயரிய நூல் எனக் குறிப்பிடுகிறார். மேலும்

''பாவெனப் படுவதுன் பாட்டுப்
பூவெனப்படுவது பொறி வாழ் பூவே'' (40-வது பாடல்)

என்ற வரிகளில் திருவாசகத்தின் சிறப்பை நன்கு உணர்த்தியுள்ளார். பூ என்றால் திருமகள் உறையும் செந்தாமரை மலர் பாட்டு என்றால் மாணிக்கவாசகரின் திருவாசகப் பாட்டு என்று சிவப்பிரகாசர் நன்கு உணர்த்தியுள்ளார். இதன் மூலம் மாணிக்கவாசகர் மீது சிவப்பிரகாசர் கொண்டிருந்த சிறந்த பக்தியினை உணர முடிகிறது.

முடிவாக, நால்வர் நான்மணிமாலையில் சைவ சமயக் குரவர்களிடம் சிவப்பிரகாசர் கொண்டிருந்த உயரிய பக்தி போற்றுதலுக்கு

உரியதாகும். அடியார்களைப் போற்றுவதன் மூலம் இறைவன் அருளைப் பெறலாம் என்ற உயரிய சிந்தனையில் வாழ்ந்தவர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் என்பதை இவ்வாய்வுக் கட்டுரை புலப்படுத்தி யுள்ளது. சைவ சமய அடியார்களைப் போற்றுதல் என்பது சைவ சமய மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் என்பதையும் இவ்வாய்வு உணர்த்துகிறது. சிவப்பிரகாச சுவாமிகளின் 'நால்வர் நான்மணிமாலை' தமிழ் இலக்கிய உலகிலும், சைவ சமய உலகிலும் சிறப்பான இடத்தைப் பெற்றுத் திகழ்வதற்குக் காரணம் நூல் முழுவதும் உயரிய சிந்தனைகளும் பக்திச் சுவையும் மிகுந்து காணப்படுவதே ஆகும். மேலும், தமிழுக்காகவே வாழ்ந்த சிறந்த மொழிப்பற்றினையும் இவர் தம் படைப்பில் காண முடிகிறது. இனிய சொற்களால், எளிய முறையில் விளக்கும் உயரிய கோட்பாட்டினைக் கொண்டவர் 'கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகள்' என்பதை நால்வர் நான்மணிமாலை மூலம் அறிய முடிகிறது.

31. 'சிவப்பிரகாச விகாசம்'

பி.எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, தூத்துக்குடி.

பன்முகப் புலமை வாய்ந்த துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் பல்வேறுபட்ட அமைப்பும், யாப்பும் உடைய நூல்களை அருளியுள்ளார். இவற்றுள் இலக்கணம், இலக்கியம், புராணம், சமயம், தருக்கம் முதலியன அடங்கும். சிவப்பிரகாசர் வீர சைவ சமயத்தைப் பின்பற்றியவர். எனினும், அவர் சைவ சித்தாந்தம், வேதாந்தம் போன்றவற்றிலும் ஆழ்ந்த புலமையும் தேர்ச்சியும் பெற்றிருந்தார். ''சிவப்பிரகாச விகாசம்'' என்ற நூல் சைவ சித்தாந்தக் கருத்துக்களை விளக்குவதாக அமைந்துள்ளது.

விகாசம் என்ற வடமொழிச் சொல்லுக்கு 'வளரொளி' என்பது நேரான பொருள். எனவே, சிவபெருமானுடைய ஒளிச் சிறப்பை விரித்துக் கூறும் நூல் என்ற பொருளை இத்தலைப்பு விளக்குகிறது. இந்நூல் பதிமரபு, பசுமரபு, பாசமரபு என்ற தலைப்புகளில் முப்பொருள்களைப் பற்றி எடுத்துரைக்கின்றது. அதனோடு அமையாமல் தத்துவ இலக்கணம், பிரளய இயல் என்ற பகுதிகளையும் கொண்டுள்ளது. இந்நூலை முதன் முதலாகப் பதிப்பித்தவர்கள் 'இந்நூல் திருந்திய பதிப்பாக இன்னும் அகப்பட வில்லை' என்று குறிப்பிட்டுள்ளனர். அது தவிர இடையிடையே ஏடுகள் சிதிலமானதாலும் கிடைக்காமையாலும் விடுபட்ட பகுதிகள் பல உள.

இத்தனை இடர்பாடுகளுக்கும், ஊடாகக் கிடைத்த நூல். ஆயினும் இது சிவப்பிரகாசரின் சைவ சித்தாந்தத் தெளிவினை நன்கு விளக்குவதாக அமைந்துள்ளது. இன்னும் உலகாயதம், புத்தர், சைனர், வேதாந்தி, சாங்கியர், நியாய மதத்தவர், மீமாம்சகர் ஆகியோருடைய கொள்கை களையும் இந்நூலில் சிவப்பிரகாசர் எடுத்துரைத்துள்ளார். இப்பகுதி சிவஞான சித்தியாரின் பரபக்கத்தை நினைவூட்டுவதாக அமைந்துள்ளது.

பதிமரபு

''இயற்கையால் நிருமல ஞான செய்திநல்
உயற்கையாம் ஒளிதரும் முத்தி ஒண்பயன்
பயக்குமோர் ஐந்தொழிற் பதியெனும் சிவம்
அயர்ப்பிலா நிமித்தகா ரணனென் றுண்டரோ''

'சைவ சித்தாந்தம் கூறும் பதி இலக்கணங்கள் யாவும் சிவப்பிரகாசரால் இவ்வொரே பாடலில் தொகுத்துரைக்கப்படுவது நயமடையது. பதிப்

பொருள் இயற்கையாகவே குற்றமற்ற ஞானமுடையது. உயிர்கள் உய்வடையும் பொருட்டு அவற்றின் இருள் மலத்தை நீக்கி ஒளி தருகின்ற ஒள்ளிய பயனை வழங்கும் பொருட்டு இப்பதிப் பொருள் ஐந்தொழில் இயற்றும். ஓயாது நடைபெறுகின்ற ஐந்தொழில்களுக்கும் பதியாவான் நிமித்தகாரணன் என்பது இப்பாடலில் தொகுத்துத் தரப்பட்டுள்ள பதியின் இலக்கணம்.

இறைவனை, சத்து, சித்து, ஆனந்தம் என்று குறிப்பிடுவர். அவனை அநாதி, முத்த, சித்துரு என்பது சைவசித்தாந்த மரபு. 'இயற்கையால் நிருமல ஞானமெய்தி' என்னும் பகுதி சைவ சித்தாந்தத்தின் இக்கருத்தை விளக்குவதாகும்.

சிவபெருமான் ஐந்தொழில் புரிகிறான் என்பது சைவ சித்தாந்தக் கொள்கை. இவற்றை இதன் பின்னர் வருகின்ற ஒரு பாடலில் சிவப்பிரகாசர் விரித்துக் கூறுகிறார்.

''படைத்திடல் அளித்திடல் பரிந்து ஒடுக்குதல்
தடுத்திடல் அருளுதல் என்று தகுமுறை
அடுத்திடல் இறைசெயும் ஐந்தொழிற் பெயர்''

'தடுத்திடல்' என்ற சொல் வடமொழியில் திரோதானம் என்றும், தமிழில் மறைத்தல் என்றும் வழங்கும். வினைப் பயன்களை உயிர்களுக்கு ஊட்டும் போது அவற்றின் அறிவினை மறைப்பதாகிய தொழிலை இது குறிக்கும், 'பரிந்து ஒடுக்குதல்' என்ற சொற்றொடர் உயிர்கள் இளைப்பாறுவதன் பொருட்டு அவற்றை ஒடுக்குவதாகிய இறைவனது தொழிலைக் குறிக்கும். இத்தொழில்களின் முடிந்த பயன் எண்ணற்ற பிறவிகளின் வலைப்பட்டு அலமருகின்ற உயிரை என்றும் மாறாத பேரின்ப வீட்டில் அமர்த்துவது ஆகும்.

இறைவன் ஐந்தொழில் செய்வது தன் பொருட்டோ? பிறர் பொருட்டோ? வீணோ? என்ற கேள்விகளை எழுப்பிக் கொண்டு மாதவச் சிவஞான முனிவர் அவற்றுக்கு விரிவான விடையைத் தமது சிவஞான மாபாடியத்தில் அருளிச் செய்கிறார். எல்லையற்ற கருணை உடையவனாகிய இறைவனின் ஐந்தொழில்களும் உயிர்களின் பொருட்டே என்று சிவஞான முனிவர் நிறுவுகிறார்.

ஒரு பொருள் தோன்றுவதற்கு மூன்று காரணங்கள் தேவை என்பர் மெய்ப்பொருள் இயலார். அவை முறையே, முதற் காரணம், துணைக் காரணம், நிமித்த காரணம் என்பன. ஒரு பானையை வனைவதற்கு முதற் காரணமாக அமைவது மண். துணைக் காரணமாக அமைவது குயவன் பயன்படுத்துகின்ற சக்கரம், கோல் முதலிய கருவிகள், பானையை

வனைந்தெடுக்கின்ற குயவனை நிமித்த காரணன் என்பர். சைவ சித்தாந்தத்தில் இறைவன் ஒருவன் உளன் என்பதை நிறுவ,

''ஒருவனோடு ஒருத்தி ஒன்றுஎன்று
உரைத்திடும் உலகம் எல்லாம்
வருமுறை வந்து நின்று
போவதும் ஆதலாலே,
தருபவன் ஒருவன் வேண்டும்;.........''

என்று சிவஞான சித்தியார் சுபக்கத்தில் ஆசிரியர் அருள் நந்திசிவம் கூறுகிறார். இப்பாடலுக்குப் பொருள் கொள்ளும்போது, 'உலகமெல்லாம் வருமுறை வந்து நிற்கும் முறை நின்று போகும் முறையில் போவதும் ஆதலாலே' என்று கொண்டுகூட்டிப் பொருள் காண வேண்டும் என்பர். இப்படி முறையாகப் படைக்கப்படுகின்ற உலகத்திற்கு ஒருவனேயாகிய ஒப்பற்ற இறைவன் நிமித்த காரணன் என்பதையும் சிவஞான சித்தியார் எடுத்துரைக்கிறது. அவ்வாறு எடுத்துரைக்கும் பாடலில் தான், பானை வனையும் குயவனைச் சித்தியார் உவமை காட்டுகிறது.

''காரிய கார ணங்கள்
முதல் துணை நிமித்தம் கண்டாம்;
பாரின்மண் திரிகை பண்ணு
மவன் முதல் துணை நிமித்தம்;
தேரின், மண் மாயை ஆக,
திரிகைதன் சத்தி ஆக,
ஆரியன் குலால னாய் நின்று
ஆக்குவன் - அகிலம் எல்லாம்''.

நிமித்த காரணனைக் கருத்தா என்ற சொல்லாலும் குறிப்பிடுவர். இறைவன் என்பவன் தனது முயற்சியாலும், கை, கால் முதலிய காரணங்களாலும் இவ்வுலகத்தைப் படைக்காமல் நினைவு மாத்திரையால் இவ்வுலகத்தை ஆக்குவான். அதனால் அவன் சங்கற்ப கருத்தா என்ற கருத்துக்களையும் சிவப்பிரகாச விகாசத்தில் இதன் பின்னர் வருகின்ற இரண்டு பாடல் களால் சிவப்பிரகாசர் விளக்குகின்றார்.

பசுமரபு

உயிர்கள் எண்ணிறந்தன. இவையும் தோற்றமில் காலம் தொட்டே உள்ளன. ஆணவம், மாயை, கன்மம் என்னும் மூன்று மலங்களால் பிணிக்கப் பெற்றுள்ளமையால் இவற்றைப் பசு என்று வழங்குவர். உயிர்கள் பலவாயினும் அவற்றைப் பிணித்திருக்கின்ற தளைகளை அடிப்படையாகக் கொண்டு விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலரென்று மூன்று வகை யாகப் பிரிப்பர். இக்கருத்தைச் சிவப்பிரகாச விகாசம் ''சாற்றும் உயிர்

விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலரென்றற்பாற்று அரும் கரும மாயை களில் புணர்ப்பினால்'' வகைப்படுத்துவதாகக் கூறுகின்றது. ஆணவ மலம், மட்டிலும் உடையவர்களை விஞ்ஞானகலர் எனவும், ஆணவமும், கன்மமுமாகிய இரண்டு மலங்களையும் உடையவர்களைப் பிரளயாகலர் எனவும் கூறுவர். ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங் களாலும் பிணிக்கப்பட்ட உயிர்களைச் சகலர் என்ற சொல்லால் குறிப்பர். இதனைத் திருவருட்பயன்,

''திரிமலத்தார், ஒன்று அதனிற் சென்றார்கள்; அன்றி
ஒரு மலத்தாராயும் உளர்''.

இம்மூவருக்கும் இறைவன் அருள்பாலிக்கும் முறைமையில் மாறுபாடு உண்டு என்பதும் சைவசித்தாந்தம் எடுத்துரைக்கும் கொள்கை. அதனை அருள்நந்திசிவம் தமது சிவஞான சித்தியாரில்,

''உரைதரும்இப் பசுவர்க்கம் உணரின் மூன்றுஆம்;
உயரும் விஞ்ஞா னகலர், பிர ளயாகலர், சகலர்;
நிரையின் மலம், மலம்கன்மம், மலம் கன்மம் மாயை
நிற்கும்;முதல் இருவர்க்கும், நிராதாரம் ஆகி,
கரையில் அருட்பரன், துவிதா சத்திநிபா தத்தால்,
கழிப்பான், மலம்; சகலர்க்குக் கன்ம ஒப்பில்,
தரையில்ஆ சான்மூர்த்தி ஆதார மாகித்
தரித்து, ஒழிப்பான் மலம், சதுர்த்தா சத்தி நிபாதத்தால்''.
(254)

விஞ்ஞானகலர் பிரளயாகலர் ஆகிய இருவருக்கும் நிராதரமாக இறைவன் திருவருள் பாலிப்பான். சகலர்க்கு இருவினை ஒப்பு நேர்ந்தபோது குருவடிவம் தாங்கி எழுந்தருளி அருள் பாலிப்பான் என்று சித்தியார் விளக்கும்.

பாசமரபு

சைவ சித்தாந்தத்தில் உயிர்களைப் பிணிக்கும் தளைகள் பொதுவாக மூன்று என்பர். இவை, ஆணவம், கன்மம், மாயை எனப் பெயர் பெறும். எனவே, மும்மலம் என்றே பெரும்பாலும் கூறப்படும். ஆயினும், திருவாசகத்தில் ''மலங்கள் ஐந்தால் சுழல்வன் தயிரில் பொருமத்து எனவே'' என்றும், கந்தர் கலிவெண்பாவில். ''பஞ்ச மலம் காய்ந்த சிவஞானக் கடாக்களிறு'' எனவும் இவற்றை ஐந்தாகக் கூறும் வழக்கமும் உண்டு.

திருவருட்பயன் என்ற மெய்கண்ட சாத்திர நூலில் உமாபதி சிவம்,

''ஏகன் அநேகன் இருள் கருமம் மாயை இரண்டு
ஆக இவை ஆறுஆதி இல்''. என்கிறார்.

ஒருவனே ஆகிய இறைவனும் எண்ணற்ற உயிர்களும் என்கிறார். ஆணவமும், வினையும், தூய மாயை (சுத்தமாயை)யும், தூவா மாயை (அசுத்த மாயை)யும் ஆகிய இவை ஆறும் தோற்றமில் காலந்தொட்டு உள்ளன. எனவே, இவை என்றென்றும் உள்ள பொருட்கள் ஆகும். இவ்வாறு பொருட்கள் ஆறு என்பதும் அவை யாவும் நித்தப் பொருட்களே என்பதும் சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கைகளாகும்.

சமயங்களைப் புறப்புறச் சமயம், புறச்சமயம், அகப்புறச் சமயம், அகச்சமயம் என்று வகுத்தெடுத்து விளக்கிய மாதவச் சிவஞான முனிவர் தமது சிவஞான மாபாடியத்தில் திருவருட் பயனின் இந்தப் பாடலையே அளவுகோலாகக் கொள்ளுகிறார். 'அகச்சமயம்' என்பத ஏகன்அநேகன், இருள் கருமம் மாயை இரண்டு என்றும் ஆறு பொருள் கொண்ட பாடாணவாதம் முதலிய அறுவகைச் சைவங்களையேயாம் எனவும், புறச்சமயம் என்பது அங்ஙனம் பொருள் உண்மை கொள்ளாத எனை மூவகைப் புறச் சமயங்களையும் எனவும் உணர்ந்து கொள்க என்பது சிவஞான முனிவரின் உரை.

பாசமரபு என்ற தலைப்பிலே முதல் பாடலிலேயே ''சடமெனப்பட்டு.... படர்வுறு பாசம் நான்காம்'' என்று சிவப்பிரகாச விகாசத்தில் சிவப்பிரகாச சுவாமிகள் குறிப்பிடுகின்றார். அவர் பட்டியல் இடுகின்ற பாசங்கள் ஆணவம், கன்மம், வயிந்தவம், மாயை என்பனவாம். சுத்த மாயைக்கு விந்து என்ற பெயரும் வழங்குவதால் அதனை வயிந்தவம் என்ற சொல்லால் குறித்தார்.

ஆணவத்தைப் பற்றி சிவப்பிரகாச விகாச நூல்,

''அறிவிலதாகி ஒன்றாய் அனாதி ஆணவந்தான் நின்ற
முறை எதுவாகும் என்னின் நெல்உமி தவிடுபோலப்
பிறவியின் ஏது வாகும்''

என்று குறிப்பிடுகின்றது. இதுவே, சிவஞான சித்தியாரில்,

''மும்மலம், நெல்லினுக்கு
முளையொரு தவிடு உமிப்போல்.
மம்மர் செய்து, அணுவின் உண்மை
வடிவினை மறைத்து நின்று
பொய்ம்மை செய் போக பந்த
போத்திருத் துவங்கள் பண்ணும்.....''

என்று இயம்புகின்றது. சைவ சித்தாந்தத்தின் முடிமணி நூலாகிய மெய்கண்டாரின் சிவஞான போதத்தில் இக்கருத்து 'நெல்லுக்கு உமியும் நிகழ் செம்பினில் களிம்பும், சொல்லில் புதிதன்று தொன்மையே' (இரண்டாம் நூற்பா, இரண்டாம் அதிகரணம்) என்று கூறப்பட்டுள்ளது.

இருவினை எனப்படும் கன்ம மலம் பற்றி இதனை அடுத்த பகுதியில் சிவப்பிரகாசர் எடுத்துரைக்கிறார். சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் என்று இவற்றின் வகைகளையும் விரிவாக எடுத்துரைக்கின்றார். இறுதியாக மாயா மலம் பற்றிய செய்திகளையும் வகைப்படுத்தித் தந்துள்ளார். தத்துவங்கள் முப்பத்தாறையும் பல பாடல்களால் சிவப்பிரகாசர் விளக்கியுள்ளார்.

வீர சைவத்திற்கும், சைவ சித்தாந்தத்திற்கும் சிறுபான்மை வேறுபாடுகள் இருந்தாலும் சித்தாந்தக் கொள்கைகளை நிரலே தொகுத்துத் தருவதில் வெற்றி கண்டிருக்கிறார் சிவப்பிரகாச சுவாமிகள். தமிழ்நாட்டின் தவக்குறைவால் இந்நூல் பற்பல இடங்களில் சிதிலமடைந்தும் ஏட்டுப் பிரதிகள் கிடையாமலும் குறைப்பட்டுள்ளது.

நூலின் இறுதியில் பிரளய இயல் என்ற தலைப்பில் ஒரே ஒரு பாடலே நமக்கு கிடைத்துள்ளது. எனவே, இந்தப் பகுதியில் சிவப்பிரகாசர் தெரிவிக்க விரும்பிய கருத்துக்களைப் பற்றி நாம் அறிந்து கொள்ள இயலவில்லை. பண்டைத் தமிழ் இலக்கியங்கள் பல கடல் கொண்டதாலும், கறையான் அரித்ததாலும் மறைந்து போயின என்று தமிழ்ப் புலவர்கள் கூறுவர். கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றிய சிவப்பிரகாச விகாசமும் காலவெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுத் தன்னுடைய முழுமையை இழந்து நிற்கிறது என்பது வருந்துதற்குரியதே.

32. சிவப்பிரகாசரின் பன்முகப் பாங்கு

தவத்திரு. குமரகுருபர சுவாமிகள், சிரவையாதீன கர்த்தர், கோவை.

செந்தமிழ்நாட்டின் தவப்பயனாகப் பதினேழாம் நூற்றாண்டில் தோன்றியவர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள். ஞானாவரண விளக்கம், முக்தி நிச்சயப் பேருரை போன்ற மகத்தான சாத்திரங்களை வழங்கிய வெள்ளியம்பலவாணத் தம்பிரானிடம் தொல்காப்பியம் முதலிய பழைய நூல்களை முறையாகப் பாடங்கேட்டவர். அவர் காலத்தில் தமிழ் இலக்கியஉலகில் வழக்கில் இருந்த எல்லாவகையான இலக்கிய வகைகளையும் பயன்படுத்தித் தம் படைப்புகளை உருவாக்கியுள்ளார். கற்றோரால் கற்பனைக் களஞ்சியம் எனப் போற்றப்பெறும் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளின் நூல்கள் எவ்வாறு பலவகைப்பட்டனவாக விளங்குகின்றன எனக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

சுவாமிகளின் மொத்தப் படைப்புகள்

சிவப்பிரகாசரின் படைப்புகளாக இன்று முப்பத்து நான்கு நூல்கள் அறியப்படுகின்றன. அவற்றுள் நான்கு இப்பொழுது கிடைப்ப தில்லை. நல்லாற்றூராரின் நற்றமிழ் நூல்களாவன:

1. இட்டலிங்க அபிடேக மாலை (10 செய்யுள்)
2. ஏசுமத நிராகரணம் (3 பாடல்கள் மட்டுமே கிடைக்கின்றன.)
3. குறுங்கழிநெடில் (10 செய்யுள்)
4. கூவத் தலபுராணம் (703 பாடல்)
5. கைத்தல மாலை (10 செய்யுள்)
6. கொச்சகக் கலிப்பா (நூல் கிடைப்பதில்லை)
7. சதமணி மாலை (100 பாடல்)
8. சித்தாந்த சிகாமணி (880 பாடல்)
9. சிவஞான பாலைய தேசிகர் கலம்பகம் (95 செய்யுள்)
10. சிவஞான பாலைய தேசிகர் தாலாட்டு (101 கண்ணிகள்)
11. சிவஞான பாலைய தேசிகர் திருப்பள்ளியெழுச்சி (4 பாடல்)
12. சிவஞான பாலைய தேசிகர் நெஞ்சுவிடு தூது (3 செய்யுள்)

13. சிவஞான பாலைய தேசிகர் பிள்ளைத்தமிழ் (102 செய்யுள்)
14. சிவநாம மகிமை (11 பாடல்)
15. சிவப்பிரகாச விகாசம் (333 பாடல்)
16. சீகாளத்திப் புராணம் - இரு சருக்கங்கள் (315 செய்யுள்)
17. சோணசைலமாலை (101 செய்யுள்)
18. தருக்க பரிபாஷை (இது உரைநடை நூல்)
19. தலவெண்பா (இது கிடைப்பது இல்லை)
20. திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதி (31 பாடல்)
21. திருவெங்கைக் கலம்பகம் (103 செய்யுள்)
22. திருவெங்கை அலங்காரம் (இது கிடைப்பது இல்லை)
23. திருவெங்கை உலா (3 செய்யுள்)
24. திருவெங்கைக் கோவை (426 செய்யுள்)
25. நன்னெறி (41 செய்யுள்)
26. நால்வர் நான்மணிமாலை (41 செய்யுள்)
27. நிரஞ்சன மாலை (31 பாடல்)
28. நெடுங்கழி நெடில் (10 பாடல்)
29. பழமலை அந்தாதி (101 பாடல்)
30. பழமலைநாதர் பிட்சாடன நவமணி மாலை (9 செய்யுள்)
31. பழமலை பெரியநாயகி நெடுங்கழி நெடில் (10 செய்யுள்)
32. பிரபுலிங்க லீலை (1158 செய்யுள்)
33. பெரியநாயகி கலித்துறை (19 செய்யுள்)
34. வேதாந்த சூடாமணி (184 பாடல்)
    தனிப்பாடல்கள் (12 செய்யுள்)

ஆகமொத்தம் இப்பொழுது கிடைப்பவை 4960 செய்யுள்களும் தருக்க பரிபாஷை என்னும் உரைநடை நூல் ஒன்றும் ஆகும். இனி இவற்றை வகைப்படுத்திக் காண்பாம்.

1. செய்யுள், உரைநடை

பொதுவாக இலக்கியப் படைப்புகளை அதன் வடிவம் நோக்கிச் செய்யுள் நூல்கள், உரைநடை நூல்கள் என இரண்டாகப் பிரிக்கலாம். முன்பே கூறப்பட்டவாறு சிவப்பிரகாசரின் தருக்க பரிபாஷை ஒன்று மட்டும் உரைநடை நூல் ஆகும். ஏனையவை யாவும் செய்யுள் யாப்பில்

அமைந்தவையே. சுவாமிகள் வாழ்ந்த காலத்தில் உரைநடையைவிடச் செய்யுள் யாப்பே கற்றோரிடையே செல்வாக்குப் பெற்றிருந்தமையால்தான் பெரும்பாலானவை செய்யுளாக யாக்கப்பெற்றன.

2. தோத்திரம், காப்பியம், புராணம், சாத்திரம், நீதி

அடுத்து இலக்கியங்களை மேற்கண்ட ஐந்து வகையாகவும் பிரித்துப் பார்க்கலாம். சிலர் புராணத்தையும் காப்பியத்துள் அடக்குவர். யாம் அவ்வாறு கொள்ளாமல் தல புராணத்தைப் புராணத்தின் ஒரு வகையாகக் கொண்டுள்ளோம்.

அ. தோத்திரம்

சிவப்பிரகாசரின் செந்தமிழ்ப் பனுவல்களில் இட்டலிங்க அபிடேக மாலை, குறுங்கழிநெடில், கைத்தல மாலை, சிவஞான பாலைய தேசிகர் கலம்பகம், திருப்பள்ளியெழுச்சி, நெஞ்சுவிடு தூது, பிள்ளைத்தமிழ், சோணசைலமாலை, செந்தில் நிரோட்டகம், திருவெங்கைக் கலம்பகம், உலா, கோவை, நால்வர் நான்மணிமாலை, நிரஞ்சன மாலை, நெடுங்கழி நெடில், பழமலை அந்தாதி, பிட்சாடன நவமணி மாலை, பெரியநாயகி நெடுங்கழிநெடில், பெரியநாயகி கலித்துறை ஆகிய பத்தொன்பதும் தோத்திர நூல்கள் ஆகும். கோவை, கலம்பகம், பிள்ளைத்தமிழ் போன்ற சிற்றிலக்கிய வடிவங்களில் உள்ள படைப்புகளும் தலைவனைப் போற்றுதல், அவனிடமிருந்து ஒன்றை வேண்டுதல் என்னும் குறிப்பை உடையதாதல் பற்றித் தோத்திரமாகக் கருதப்பெறும்.

ஆ. காப்பியம்

கற்பனைக் களஞ்சியம் சுவாமிகளால் இயற்றப்பெற்றுள்ள அற்புதமான காப்பியம் பிரபுலிங்க லீலை ஆகும். இது ஒன்றுதான் காப்பியப் பகுப்பில் அடங்கும்.

இ. புராணம்

பழைய வரலாறுகளைக் கூறலாகிய புராணங்களின் ஒரு பிரிவாகத் தல புராணங்களைக் கொள்ளலாம். இவ்வகையில் திருக்கூவப் புராணமும், திருக்காளத்திப் புராணத்தின் ஆறு, ஏழாம் சருக்கங்களாகிய கண்ணப்பர், நக்கீரர் சருக்கங்களும் அடங்கும்.

ஈ. சாத்திரம்

சதமணிமாலை, சித்தாந்த சிகாமணி, சிவஞான பாலைய தேசிகர் தாலாட்டு, சிவநாம மகிமை, சிவப்பிரகாச விகாசம், தருக்க பரிபாஷை, வேதாந்த சூடாமணி ஆகிய ஏழும் சிவப்பிரகாச சுவாமிகளால் உபதேசிக்கப் பெற்றுள்ள சாத்திரப் பனுவல்கள் ஆகும்.

உ. நீதி நூல்

நீதியைப் புகட்டும் அறநூலாக நன்னெறி காணக் கிடைக்கிறது.

3. நால்வகைக் கவிகள்

அறிஞர்கள் இலக்கியத்தை ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என நான்காகப் பகுத்து நோக்குவர். இந்த நான்கு வகைகளிலும் சிவப்பிரகாச சுவாமிகள் சிறந்து விளங்குவதைக் காண்பாம்.

அ. ஆசுகவி

பேர்எழுத்தில் சொல்லில் பொருளில் பெருங்கவியில்
சீர்அலங்கா ரத்தில் தெரிந்தொருவன் - நேர்கொடுத்த
உள்ளுறைக் கப்போ துரைப்பதனை ஆசென்றார்
எள்ளாத நூலோர் எடுத்து. (வெண்பாப் பாட்டியல்)

சிவப்பிரகாசரின் தனிப்பாடல்கள் அனைத்தும் ஆசு கவிகளே. செந்தில் நிரோட்டக யமக அந்தாதியை ஒரு புலவனை வெல்வதற்காக அப்போதே பாடியதால் அது ஆசுகவியின்பாற்படும். ஒருநாள் மாலைக் காலத்தில் பொம்மபுரக் கடற்கரையில் இருந்தபோது நன்னெறி மணலில் எழுதப் பட்டது என்பர். அதனால் அந்த நீதிநூலையும் ஆசுகவியாகக் கொள்ளலாம்.

ஆ. மதுரகவி

சொல்லும் பொருளும் சுவைபட நிறீஇச்
செல்வுழித் தொடையும் விகற்பமும் செறீஇ
உள்ளத்துள்ளே கொள்ளும் அமுதெனத்
தன்மை உவமை பின்வரு பெற்றியின்
உருவகம் முதல்உற் றோசை பொலியப்
பாடுதல் மதுர கவிஎனப் படுமே. (இலக்கண வணக்கம்)

சிவஞான பாலைய தேசிகர் கலம்பகம், நெஞ்சுவிடு தூது, பிள்ளைத் தமிழ், சோணசைலமாலை, திருவெங்கைக் கலம்பகம், உலா, நால்வர் நான்மணிமாலை ஆகிய ஏழு பிரபந்தங்களை மதுரகவி எனலாம். ஒருசார் ஆசிரியர் மும்மணிகோவை, உலா, மடல் போன்றவற்றையும் வித்தாரத்துள் அடக்குவர் (முத்துவீரியம்). எனினும் பாடற்றொகையால் பெரியனவற்றை வித்தாரக்கவி என்றால்தான் அகலக்கவி என்னும் அதன் பெயர்க்குப் பொருத்தமாகும்.

இ. சித்திரகவி

அணியிலக்கண நூலார் சொல்லணியாகக் கூறுவனவற்றையே முதன்மையாகக் கொண்டு இயற்றப்பெறும் யமகம், திரிபு, பந்தங்கள் போன்றவை சித்திர கவிகள் ஆகும். திருச்செந்தில் நிரோட்டக யமக

அந்தாதி (இத்தகைய நூலைத் தனித்தமிழில் உதடு ஒட்டாமல் தலையணிச்சீர் இதழகல் அந்தாதி என்பார் வண்ணச்சரபம் சுவாமிகள்), பழமலை அந்தாதி (இது திரிபு என்னும் சொல்லணி பயின்றது) ஆகிய இரண்டும் சிவப்பிரகாசரால் இயற்றப்பெற்ற சித்திரகவி நூல்கள் ஆகும்.

ஈ. வித்தாரகவி

காப்பியம், புராணம் போன்ற பெரிய நூல்களும், பரணி, ஐந்திணைக் கோவை போன்ற கனமான சிற்றிலக்கியங்களும் வித்தாரகவி என்னும் பகுப்பில் இடம்பெறும். சிவப்பிரகாச சுவாமிகளின் படைப்புகளில் திருக்கூவத் தலபுராணம், திருக்காளத்திப் புராணத்தின் இரு சருக்கங்கள், பிரபுலிங்க லீலை, திருவெங்கைக் கோவை ஆகியவற்றை வித்தாரகவி எனலாம். அளவின் பெருமை கருதிப் பிள்ளைத்தமிழ், தூது, உலா, கலம்பகம் ஆகியவற்றையும் வித்தாரகவி என்பாரும் உளர். எனினும் இவற்றை மதுரகவியின்பாற் படுத்துவதே ஏற்புடையது.

4. பிரபந்தங்கள்

பாட்டியல் நூல்களில் பிரபந்தம் எனக் கூறப்பெறும் இலக்கிய வகை இப்பொழுது சிற்றிலக்கியம் என வழங்கப் பெறுகிறது. நன்றாக யாக்கப் பெற்றது என்னும் பொருட்செறிவுள்ள பிரபந்தப் பெயரே இவ்வகை இலக்கியத்திற்கு மிக ஏற்புடையது எனச் சொல்லித்தான் ஆகவேண்டும்.

இட்டலிங்க அபிடேக மாலை, குறுங்கழிநெடில், நெடுங்கழிநெடில், பழமலை பெரியநாயகி நெடுங்கழில் ஆகியன பதிகம் என்பதில் அடங்கும். கைத்தல மாலை, சோணசைலமாலை, நிரஞ்சன மாலை, பெரிய நாயகி கலித்துறை ஆகியன மாலைகள் ஆகும். சிவஞான பாலைய தேசிகர் கலம்பகம், திருவெங்கைக் கலம்பகம் ஆகிய இரண்டும் கலம்பகங்கள். சிவஞான பாலையர் நெஞ்சுவிடு தூது, பிள்ளைத்தமிழ், திருவெங்கை உலா, திருவெங்கைக் கோவை (அகப்பொருட் கோவை), நால்வர் நான்மணி மாலை, பிட்சாடன நவமணி மாலை ஆகியன அவ்வவ் வகையில் அமைந்த ஒவ்வொரு பனுவல் ஆகும். திருச்செந்தில் நிரோட்டகம், பழமலை அந்தாதி ஆகிய இரண்டும் அந்தாதி வகை ஆம். இவ்வாறு சாத்திர நூல் அல்லாத 10 வகையான சிற்றிலக்கிய வகைகளைச் சிவப்பிரகாசர் யாத்தளித்துள்ளார்.

5. மொழிபெயர்ப்பு

தொல்காப்பியம் வழிநூலைப் பற்றிக் கூறும்போது,

''தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்து
அதற்பட யாத்தலோ டனைமர பிளவே''

என்கிறது. இவ்வகையில் மொழிபெயர்ப்பு என்பது தமிழின் பழமையான இலக்கிய வகைகளுள் ஒன்று என்பது பெறப்படுகிறது. துறைமங்கலம்

சிவப்பிரகாச சுவாமிகள் தமிழ், வடமொழி, கன்னடம், தெலுங்கு ஆகிய நான்கு மொழிகளில் வல்லவராக இருந்தவர். அதனால்தான் பிற மூன்று மொழிகளிலுள்ள நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார். தமிழில் மொழிபெயர்க்கப் பெற்ற நூல்களில் தொண்ணூறு விழுக்காடு வடமொழியிலிருந்து பெயர்க்கப் பெற்றனவே. ஆனால் நம் சுவாமிகளோ தெலுங்கு, கன்னட மொழிகளிலிருந்தும் தமிழ்ப் படுத்தியிருக்கிறார்.

1. கூவத் தலபுராணம்

இது வடமொழிக் காந்தத்தின் சனற்குமார சங்கிதையின் ஒரு பகுதி யாகிய காளிகா காண்டத்தில் இடம்பெற்ற கூவநகர்ச் செய்திகளின் மொழிபெயர்ப்பு ஆகும்.

காவி நேர்விழி மங்கைபங் கினன்இசைக் காந்தம்
மேவு மாசனற் குமாரசங் கிதையினில் விரித்த
தாவில் காளிகா காண்டம்என் கடற்புகழ் தன்னில்
கூவ நீர்மைஉட் கொண்டுயான் கூறுவன் தமிழால்

(திருக்கூவப் புராணம் - பாயிரம் - 14)

2. சதமணிமாலை

சைவ சித்தாந்தத்தின் சந்தானாசாரியர்களுள் ஒருவராகிய உமாபதி சிவாசாரியார் பத்து சிவாகமங்களில் உள்ள ஞானபாதச் செய்திகளைத் தொகுத்துச் சதரத்ன சங்கிரகம் என வடமொழியில் தொகை நூல் ஒன்றைப் படைத்துள்ளார். அதனுடைய தமிழ்ச் செய்யுள் மொழி பெயர்ப்பே சதமணிமாலை ஆகும்.

3. தருக்க பரிபாஷை

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளால் இயற்றப்பெற்ற ஒரே ஒரு உடைநடை நூலாகிய இதன் மூலநூலைப் பற்றிய தெளிவான செய்திகள் கிடைக்கவில்லை.

இவை மூன்றும் வடமொழியிலிருந்து தமிழாக்கம் செய்யப்பெற்ற நூல்கள் ஆகும்.

4. பிரபுலிங்க லீலை

சிவப்பிரகாசரின் பெரும்புகழுக்குக் காரணமாகிய இந்த அழகிய காப்பியம் கன்னட மொழியிலிருந்து மொழிபெயர்க்கப் பெற்றதாகும்.

5. வேதாந்த சூடாமணி

கன்னட மொழியில் நிஜகுண யோகி என்பவரால் இயற்றப் பெற்றுள்ள விவேக சிந்தாமணி என்னும் நூலின் ஒரு பகுதியாகிய

வேதாந்த பரிச்சேதத்தைச் சிவப்பிரகாசர் வேதாந்த சூடாமணி என மொழிபெயர்த்துள்ளார்.

இவை இரண்டும் கன்னட மொழியிலிருந்து தமிழாக்கம் செய்யப் பெற்றன ஆகும்.

6. சீகாளத்திப் புராணத்தின் இரு சருக்கங்கள்

சிவப்பிரகாசர், அவருடைய இளவல்களான வேலையர், கருணைப் பிரகாசர் ஆகிய மூவராலும் இயற்றப்பெற்றது சீகாளத்திப் புராணம். இதில் ஆறாவது ஏழாவது ஆகிய கண்ணப்பர், நக்கீரர் சருக்கங்கள் சிவப்பிரகாசரின் வாக்கு ஆகும். இந்தச் சீகாளத்திப் புராணம் தெலுங்கில் தூர்ஜடி மகாகவியால் இயற்றப்பெற்றுள்ள காளஹஸ்தி மஹாத்மியமு என்பதன் மொழிப்பெயர்ப்பாகும். (வடமொழியிலிருந்து பரிமள கவிராயர் என்னும் ஆனந்தக் கூத்தரால் மொழிபெயர்க்கப் பெற்ற காளத்திப் புராணம் வேறு)

இவ்வாறு சிவப்பிரகாசர் மூன்று மொழிகளிலிருந்து ஆறு நூல் களைத் தமிழ்ச் செய்யுள் நூல்களாக மொழிமாற்றிச் சிறந்த மொழி பெயர்ப்பாசிரியராகவும் விளங்குகிறார்.

6. எதிர் நூல்

சமயம், தத்துவம், மொழி இலக்கணம் போன்ற சில துறைகளில் ஓர் ஆசிரியர் தம் கொள்கைகளை வலியுறுத்துவதற்காகப் பிறர் கொள்கையை எதிர்த்து நூல் செய்வது உண்டு. மறுப்பு, கண்டனம், சூறாவளி, நிராகரணம் என்பன போலப் பெயர்பெறும் இவ்வகை நூல்கள் எதிர்நூல் எனப்படும்.

தன்கோள் நிறீஇப் பிறன்கோள் மறுப்பது
எதிர்நூல் என்ப ஒருசா ரோரே.

(இறையனார் அகப்பொருள் உரை மேற்கோள்)

சிவப்பிரகாசரால் இயற்றப்பெற்ற ஏசுமத நிராகரணம் என்னும் நூல் இத்தகைய எதிர்நூலே. இது இப்பொழுது கிடைக்கப் பெறாவிடினும் திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் சாந்தலிங்கப் பெருமானின் கொலை மறுத்தல் நூலின் 7-ஆம் பாடல் உரையில் மேற்கோளாகக் காட்டியுள்ள மூன்று விருத்தங்கள் மட்டும் கிடைக்கின்றன.

துறைமங்கலம் சிவப்பிரகாசர் பிறர் கொள்கைகளை மறுத்துரைக்கும் இலக்கிய வகையாகிய எதிர்நூலையும் இயற்றியுள்ளார் என்பதுறுதியாகிறது.

இதுகாறும் நோக்கியவற்றால் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் அவர்கள் தம் காலத்தில் தமிழ் இலக்கிய உலகில் வழக்கிலிருந்த எல்லா வகையான இலக்கிய வகைகளையும் சிறப்பாகக் கையாண்டுள்ளார் எனத் தெரிகிறது.

33. சிவப்பிரகாசரும் நால்வரும்

க. கொன்றையாண்டி, ஸ்ரீவில்லிபுத்தூர்.

சிவப்பிரகாசர் அண்ணாமலையார் அருளால் காஞ்சிபுரத்தில் வேளாளர் குலத்தில் குமாரசாமி தேசிகருக்கு மூத்த பிள்ளையாகப் பிறந்தார். அண்ணாமலை ரெட்டியாரை அணுக்கத் தொண்டராகப் பெற்றார். வெற்றியம்பல வாணத் தம்பிரான் சுவாமிகளிடம் ஐந்திலக்கணங்களையும் கற்றார். குருநாதரின் கருத்துப்படி சிதம்பரத்தில் சிலகாலம் தங்கினார். அங்குதான் ''நால்வர் நான்மணிமாலை'' என்ற நூலை இயற்றினார்.

இவர் 35 நூல்கள் இயற்றியுள்ளார். அவற்றில் ஒன்றாகிய ''நால்வர் நான்மணிமாலை'' என்னும் நூலில் சமயக்குரவர் நால்வர் பற்றியும் அவர்கள் இயற்றிய பாசுரங்கள் பற்றியும் சிவப்பிரகாசர் கூறுவதென்ன? என்று ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சிவப்பிரகாசரும் திருஞானசம்பந்தரும்

திருஞானசம்பந்தப் பிள்ளையார் 'அம்மே, அப்பா' என்று அழுது ஞானப்பாலுண்டார். இவர் ஞானப் பாலுண்டது பசி போக்கும் பொருட்டன்று. நிலவுலகில் வேத நெறி தழைத்தோங்கவும் மிகுசைவத் துறை விளங்கவுமேயாகும். ஆதலால் அவர் முதல் பாட்டிலேயே ''தோடுடைய செவியன்'' என்று தொடங்கி இறைவனின் சொரூப இலக்கணத்தை எடுத்துக் கூறி இறைவன் இப்படிப்பட்டவர் என்று சுட்டிக் காட்டியதைச் சிவப்பிரகாச சுவாமிகள் மிக அருமையாக எடுத்துக் கூறுகிறார்.

சம்பந்த மூர்த்தியே! நீர் பொய்கைக் கரையில் அழுதல் கண்டு சிவபிரான் ஏவலால் பொற்கிண்ணத்தில் ஞானப்பால் ஊட்டினாள் ஓர் அன்னையாகிய பார்வதிதேவி; பார்வதிதேவி உமக்கு ஞானப்பால் ஊட்டிய செய்தியைக் கேட்டவுடனேயே உன்னைப் பெற்ற தாய் போன்ற மங்கையர்க்கரசியார் பால் சுரந்தார். இந்த இரண்டு தாயரில் யார் சிறந்தவர்? என்று வினவி, அதன் மூலம் குழந்தையைப் பற்றிக் கேட்ட வுடனேயே பால் சுரந்த மங்கையர்க்கரசியின் தலை அன்பை எடுத்துக் காட்டினார். இவ்வாறு சம்பந்தர் ஞானப்பாலுண்ட செய்தியை இரண்டு பாடல்களில் எடுத்துக் கூறுகிறார்.

மேலும் சம்பந்தர் எலும்பைப் பெண்ணுருவாக்கிய பூம்பாவை வரலாற்றையும், ஆண்பனையைப் பெண் பனையாக்கிய அற்புதத்தையும்

குறிப்பிடுகிறார். ஞானசம்பந்தர் பாடல் எழுதிய ஏடு வைகையாற்றில் எதிர்த்துச் சென்றதையும், அமணர்கள் கூற்றுக்கேற்பத் தாம் சிவபெருமானைப் பற்றி எழுதிய திருப்பாசுர ஏட்டை நெருப்பில் போட்டபோது எரிந்து விடாமல் சிவனே முழுமுதல் கடவுள் என்பதைக் காட்டச் சான்றாய் நின்றது என்ற கருத்தை ''கரியாய்விடாமல் கரியாய் மொழியும்'' என்று சொல் நயம் தோன்றக் கூறுகிறார். சிவபெருமான் ஞானசம்பந்தருக்கு முத்துச் சிவிகை கொடுத்ததை ''நீ ஏறும் வெண்முத்துச் சிவிகையை யாண்டுப் பெற்று உமக்களித்தான் என்று அச்சிவிகையை ஏற்ற திருஞானசம்பந்த பிள்ளையாரையே யாம் கேட்போம்'' என்று கூறிய நயம் போற்றத் தக்கதாகும். மேலும் அந்தச் சிவிகையில் திருஞானசம்பந்தப் பெருமான் அமர்ந்து செல்ல அதைச் சுமந்து சென்ற அடியார்கள் தேவராகி இன்றும் உலகில் நடமாடுகிறார்கள் என்கிறார். இதன் மூலம்,

''அறத்தாறு இதுஎன வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை''

என்ற குறளுக்கு பல்லக்கில் அமர்ந்து செல்பவர் சிறந்த புண்ணியம் செய்தவர் என்றும், சுமந்து செல்பவர் அறம் செய்யாதவர் என்றும் அக்குறளுக்கு பொருள் கூறுவதை மறுத்து, திருஞானசம்பந்தப் பெருமானை அமரச் செய்து அப்பல்லக்கைத் தூக்கிச் சுமந்தவர்கள் புண்ணியம் (அறம்) செய்தவராகவும், அவர்கள் தேவராகி இன்றும் இருக்கிறார்கள் என்றும் ''சம்பந்தர் சிவிகை பரித்தார் (சுமந்தார்) திரிகுவர்'' - தேவராய் நடமாடிக் கொண்டிருக்கிறார்கள் என்று நயம் தோன்றக் கூறுகிறார் சிவப்பிரகாச சுவாமிகள்.

இன்னோரன்ன தெய்வக் குழந்தை திருஞானசம்பந்தப் பெருமானின் திருவடிகளை வணங்குபவர்கள் பொருளும், புண்ணியமும், கல்வியும், ஞானமும் ஆகிய யாவும் பெற்றுப் பிறப்பையும் ஒழிப்பர் என்பதை இறுதியாக ''வல்லார் பிறப்பறுப்பர் வண்மை நலங்கல்வி நல்லாதரவு இன்பம் ஞானங்கள் - எல்லாம் பெறுவர்'' என்று உறுதியோடு கூறுகிறார் சிவப்பிரகாச சுவாமிகள்.

சிவப்பிரகாசரும் திருநாவுக்கரசரும்

திருநாவுக்கரசர் சமண சமயம்புக்குச் சூலை நோயைக் கொடுத்து ஆட்கொள்ளப்பட்டவர். எனவே திருஞானசம்பந்தப் பெருமானுக்கு ஞானப்பால் கொடுத்தும் உமக்குச் சூலை நோய் கொடுத்தும் சிவபெருமான் ஆட்கொண்டாலும் என் பாட்டிற்கு நீரும் அவரும் ஒப்பாவீர்கள் என்பதைச் சொல்நயம் பொருள் நயம் தோன்ற ''ஒருவற்கு ஞான அமுதுதவி/நாட்டிற்கிலாத குடர்நோய் நினக்கு முன் நல்கினும் என் பாட்டிற்கு நீயும் அவனும் ஒப்பீர் எப்படியினுமே'' என்று

கூறுகிறார் சிவப்பிரகாச சுவாமிகள். மேலும் திருநாவுக்கரசு சுவாமிகளை நேரில் காணாமலே அவர் சிவபெருமானிடம் பெற்ற பேரருட் செயல்களைக் கேள்வியுற்று அவரையே தம் குருநாதராகக் கொண்டு வணங்கியும் தம்மக்கள், சாலை, குளம், தண்ணீர்ப்பந்தல் போன்றவற்றிற்குத் திருநாவுக்கரசர் பெயரையே வைத்தும் வழிபட்டு வந்தமையால் அவர் பதிகத்தில் அப்பூதியடிகளின் தொண்டினை அமைத்துப் பாடிச் சிறப்பித்தமையையும் குறிப்பிடுகிறார்கள்.

திருநாவுக்கரசர் பெருமானே! சிவபெருமான் திருஞான சம்பந்தப் பெருமானாகிய பிள்ளைக்குப் பட்டீச்சுரத்தில் முத்துப் பந்தரும், திரு அரத்துறையில் முத்துச்சின்னமும் கொடுத்துத் திருவீழிமிழலையில் படிக்காசும் கொடுத்தருளினார். உமக்குத் திருவீழிமிழலையில் படிக்காசு ஒன்றை மட்டும்தான் கொடுத்தார். அதை ஏன் வாங்கினீர்? என்று வினவுகிறார். இதில் பல நயங்களைக் காணலாம். தந்தையானவர் ஏதாவது கொடுத்தால் பிள்ளைகட்குச் சமமாகக் கொடுக்க வேண்டும். கூடக் குறையக் கொடுத்தால் குறையக் கொடுக்கப்பட்ட பிள்ளை வாங்காமல் அடம்பிடிக்கும். ஆனால் நீ அன்போடு ஏற்றுக் கொண்டது ஏன்? என்றும் சொல்லலாம். தந்தை எதை எவ்வளவு கொடுத்தாலும் அடுத்த பிள்ளைக்குக் கொடுத்ததை ஒப்பிட்டுப் பாராமல் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வது நல்ல பிள்ளைக்கு இலக்கணம். அதனால் ஏற்றுக் கொண்டாயோ? என்று கொள்ளலாம். திருஞானசம்பந்தர் சிறுபிள்ளையாகையால் முத்துப்பந்தர், சின்னம், பொற்றாளம் இவை தேவை. ஆனால் வயதிலும், அனுபவத்திலும் உடல் உரத்திலும், வலிமையிலும் சிறந்த நாவுக்கரசராகிய உமக்கு அந்த நேரத்தில் தேவையான படிக்காசு மட்டும் கொடுத்ததால் ஏற்றுக் கொண்டாயோ? என்றும் கொள்ளலாம். மேலும் திருஞானசம்பந்தர் எதையும் விரும்பிக் கேட்டுப் பெற்றுக்கொள்ளும் பிள்ளைப் பருவத்தினர். ஆனால் நாவுக்கரசர் அறிவிலும், அனுபவத்திலும் முதிர்ந்த பற்றற்ற நிலையுடையவர். ஆகையால் படிக்காசு மட்டும் கொடுத்ததைத் திருப்தியோடு ஏற்றுக்கொண்டார் என்றும் கொள்ளலாம்.

மேலும் திருநாவுக்கரசரைப் பல்லவமன்னர் கல்லோடு கட்டிக் கடலில் போட்டும் கரையேறியதையும் விடம் தீண்டி இறந்த அப்பூதியடிகள் மகன் மூத்த திருநாவுக்கரசு என்ற பிள்ளை உயிர் பெற்று எழச் செய்ததையும் கூறுகிறார். திருநாவுக்கரசு சுவாமிகள் சமண சமயம்புக்குச் சைவ சமயத்திற்கு வந்ததை,

"அருகக் கடல் கடந்தேறியதோ சிலை அம்பிளனப்
பெருகக் கடல்கடந்தேறியதோ
.... உனக்கு அரிது ஏது சொல்?"

என்று நயம்படக் கூறுகிறார். திருநாவுக்கரசர் பெருமான் சமண சமயம்புக்குச் சைவ சமயத்திற்கு வந்தமையை, செல்வம் பெற்ற ஒருவன் வறுமை யடைந்து மீண்டும் அச்செல்வம் சேர்ந்தால் எப்படிக் கவனமாக அதைப் பெருமையாகக் காப்பானோ அதே போல் சைவ சமயத்திற்கு வந்தமையால் இவரும் சிறப்புற்றார். சைவமும் சிறப்புற்று ஓங்கியது என்றும் கூறுவது போற்றத் தக்கதாகும். அப்பூதியடிகள் திருநாவுக்கரசு என்ற பெயரைச் சூட்டியும் தாரக மந்திரமாக உச்சரித்தும் எக்காலத்திலும் துன்பம் இல்லாத வீட்டை எய்தினார் என்பதை,

> **"உற்றான் அலன்தவம், தீயில் நின்றான் அவன், ஊண்புனலாம்**
> **அற்றான் அலன் நுகர்வுந் திருநாவுக்கரசு எனும்ஓர்**
> **சொல்தான் எழுதியும் கூறியுமே என்றும் துன்பில் பதம்**
> **பெற்றான் ஒருநம்பி அப்பூதி என்னும் பெருந்தகையே"**

என்று கூறுகிறார். இவ்வாறு திருநாவுக்கரசு சுவாமிகளின் வரலாற்று நிகழ்ச்சிகளையும் பெருமைகளையும் சிவப்பிரகாச சுவாமிகள் நயமாக எடுத்துரைக்கின்றார்.

சிவப்பிரகாசமும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும்

சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தடுத்தாட்கொண்டதும், பரவையார் சங்கிலியார் என்பவர்களிடம் தூது நடந்து துன்புற்றதும் வீடுகள்தோறும் சென்று அன்னம் ஏற்று அமுதளித்த அருள்செயலும் ஆகிய எல்லாம் சுந்தரர் பாட்டில் இறைவன் பெரிதும் விருப்பமுடையவன் என்பதையே காட்டும் என்கிறார். சிவபெருமான் சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் திருவாரூரில் "நம்மை உனக்குத் தோழனாகத் தந்தோம்" என்று அருள்பாலித்த ஒரு செய்தியைச் சிவப்பிரகாச சுவாமிகள் "குபேரனை ஒத்த பொருட் செல்வத்தையும் தம்மை நிகர்த்த கல்விச் செல்வத்தையும் உடைய ஒரு தோழர் வேண்டும் என்று விரும்பி ஏற்றதை, "உன்னி நினை அறிந்து தோழமை கொண்டான்" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகட்கு ஏற்றமும் தோற்றமும் தோன்ற உரைக்கின்றார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள், பரவை நாச்சியார் திருவாரூரில் செய்யும் பக்தர்கள் அன்னதானம் தடையின்றி நடைபெறக் குண்டையூர்க் கிழாரிடம் பெற்ற நெல்மலையைச் சிவபூதங்கள் கொணர்ந்து திருவாரூர் வீதியில் குவிக்கப் பெற்ற அருட் செயலையும் முதலை உண்ட பாலனை முதலை வாயினின்றும் வரவழைத்த அற்புதச் செயலையும் மிகவும் சிறப்பாகச் சித்தாந்த தத்துவங்களோடு கூறும் அருமை போற்றத் தக்கதாகும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்காகப் பரவை நாச்சியாரிடம் உவந்து தூது சென்றதை உயர்ந்தோர் போற்றுவாராயினர். ஆனால் ஏயர்கோன் கலிக்காம நாயனார் அச்செயலைத் தவறாகக் கருதி அவரைப் பார்க்க

மாட்டேன் என்று கூறித் தம் வயிற்றில் குத்திக்கொண்டது எதுக்கு? அதைப் பற்றிப் பலர் பலவாறு கூறினும் நீரே கூறுவீராக'' என்று சிவப்பிரகாச சுவாமிகள் கேட்கும் திறம் போற்றத்தக்கதாகும்.

சிவப்பிரகாச சுவாமிகள் நால்வர் பெருமைகளைத் தனித்தனியே கூறினும் ஒரே பாடலில் ஞானப் பாலுண்ட திருஞானசம்பந்தப் பெருமான் எலும்பைப் பெண்ணுருவாக்கியதோ? திருநாவுக்கரசர் கல்லையே தெப்பமாகக் கொண்டு கடலைக் கடந்து கரையேறியதோ? முதலை உண்ட பாலனை, கழித்த ஆண்டுகட்குரிய வளர்ச்சி நிரம்பிய பிள்ளையாக உமிழச் செய்ததோ? இதில் எச்செயல் அரிது என்று மூவர் செய்த அற்புதங்களையும் கூறி, இதில் எது சிறந்தது என்று கேட்டு ஞானசம்பந்தர் பெண்ணுருவாக்கியதற்கு எலும்பும், திருநாவுக்கரசர் கடலில் தெப்பமாக மிதப்பதற்குக் கல்லும் ஆதாரமாக இருந்தன. ஆனால் இறைவனை வேண்டிப் பாடிய பாடல், ஒன்றாலேயே முதலை உண்ட பாலனை உமிழச் செய்த சுந்தரர் செயலே அவற்றுள் அற்புதமானது என்பதைக் குறிப்பால் உணர்த்திச் சுந்தரர் பெருமையைக் கூறுவது அருமையினும் அருமை. இதனை,

போதம் உண்டபிள்ளை என்பு பொருகண் மாதுசெய்ததோ?
காதல் கொண்டு சொல்லின் மன்னர் கல்மிதப்ப உய்த்ததோ?
வாய்திறந்து முதலை கக்க மதலைநீ அழைத்ததோ?
யாது நம்பி அரிது? நன்றெனக் கியம்ப வேண்டும்

என்று கூறுகிறார்.

இதனை

''வறந்திடும் பொய்கைமுன் நிரம்ப, மற்றவண்
உறைந்திடும் முதலை வந்துதிப்ப, அன்னதால்
இறந்திடும் மகன் வளர்ந்தெய்தப் பாடலொன்(று)
அறைந்திடு சுந்தரன் அடிகள் போற்றுவாம்''

என்ற கந்தபுராணக் கடவுள் வாழ்த்துப் பாடலால் அறியலாம். மேலும் சுந்தரர் வெள்ளையானையின் மீதமர்ந்து திருக்கயிலை எய்தியது உயிர்த்துணைவராகிய சேரமான் பெருமான் நாயனார் குதிரையில் அமர்ந்து உடன் சென்றதும் திருமுதுகுன்றத்தில் பெற்ற பன்னீராயிரம் பசும் பொன்னையும் மணிமுத்தாற்றில் போட்டுத் திருவாரூர்க் குளத்தில் பெற்றதும் திருப்புகலூரில் தலைக்கு வைத்துப் படுத்த செங்கற்கள் யாவும் பொன்னாகியதும் ஆகிய அற்புதச் செயல்களை உம்முடைய பவளவாய் திறந்து சிறியேனுக்குச் செப்புவீராக என்று சுந்தரர் பெருமைகளையும் அற்புதங்களையும் அழகாகக் கூறுகிறார் சிவப்பிரகாசர்.

சுந்தரர், பரவை நாச்சியார், சங்கிலி நாச்சியார் ஆகிய இருவரையும் திருமணம் செய்து வாழ்ந்தாலும் அவர் உலகியல் சிற்றின்பத்தில் மூழ்காது சிவபெருமானின் சிவானுபவ இன்பத்திலேயே மூழ்க்கித் திளைத்தார் என்கிறார்.

சுந்தரரே, நீர் திருத்தொண்டத்தொகை இயற்றினீர், அறம், பொருள், இன்ப, வீடு என்னும் உறுதிப் பொருள்கள் நான்கும் வகுத்தருளினீர், பெருமிழலைக் குறும்பர் என்னும் பரமயோகி பெரிதுவந்து உன் திருவடித் தாமரையைப் போற்றி விரைமலர் தூவி வழிபட்டு முக்தியடைந்தார். இவ்வளவு சிறப்புடைய நீவிர் இருமாதரோடு சேர்ந்து வாழ்வது முறையோ? என்று பழிப்பது போல இருமாதரோடு வாழ்ந்தாலும் அல்லும் பகலும் சிவானுபவ இன்பமே நுகர்ந்தார் என்று புகழ்ந்து கூறுவது அறிந்தின்புறத்தக்கது.

சிவப்பிரகாசரும் மாணிக்கவாசகரும்

மாணிக்கவாசக சுவாமிகள் அவர்களையும் திருவாசகத்தையும் தமிழ் இலக்கிய அறிஞர்கள், மேனாட்டு அறிஞர்கள் பலர், பலபடப் பாராட்டியுள்ளார்கள், என்றாலும் சிவப்பிரகாச சுவாமிகள் அவர்கள் திருவாசகத்தையும் மாணிக்கவாசக சுவாமிகளையும் பாராட்டியது ஒரு தனிச்சிறப்பாக அமைந்துள்ளன. 17-ஆம் நூற்றாண்டில் வடமொழி வேதங்களையும் வேத விற்பனர்களையும் அரசர்கள், வள்ளல்கள், திருமடங்கள், திருக்கோயில்கள் பெரிதும் பாராட்டிப் போற்றி ஓதியும் ஓதுவித்தும் வந்தமையை வரலாறு கூறும். அது வடமொழியும் வடமொழியாளர் ஆதிக்கமும் பெருகியிருந்த காலம். இந்தச் சமயத்தில் மிகவும் துணிந்து தமிழ் வேதமாகிய திருவாசகத்திற்கு எந்த வகையிலும் ஈடாகாது வடமொழி வேதம் என்று எடுத்துக் கூறினார்கள் சிவப்பிரகாச சுவாமிகள். இறைவனே வேதத்தை உண்டாக்கியவர். அதை ஏட்டில் எழுதக் கூடாத எழுதாமறையாக ஒரு சிலரே மனப்பாடம் செய்யலாம் என்றிருந்த காலம்.

வேதத்திலும் விழுமியது திருவாசகம்

சிவபெருமான் திருவாக்கு என்று சிறப்பிக்கும் வேதம், சிவபெருமானையே வாழ்த்தி வணங்கும் மாணிக்கவாசகர் திருவாயினின்றும் தோன்றிய திருவாசகம் ஆகிய இந்த இரண்டில் எது சிறந்தது என்று கேட்பீராகில், வடமொழி வேதத்தைப் பலமுறை ஓதினாலும் கண்ணீர் பெருகி நெஞ்சம் நெக்குருகி நிற்பவர் இலர். ஆனால் திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின் கருங்கல் மனமும் கசிந்துருகி மணற்கேணியில் தண்ணீர் சுரப்பது போலக் கண்ணீர் பெருகி, மயிர் சிலிர்க்க, நடுநடுங்கி அன்புடையவராகுவர். அவ்வாறு அன்பர் ஆகார் இவர்'' என்று கூறுகிறார்.

இன்று கூட எத்தனையோ யாகங்கள், வேள்விகள், கோடி அர்ச்சனைகள், ஜெபங்கள் நடைபெறுகின்றன. எங்கும் வேதம் ஓதுகின்றவர்களும் கண்ணீர் விட்டதில்லை. பார்த்துக் கேட்டுக் கொண்டிருப்பவர்களும் மனம் உருகிக் கண்ணீர் விட்டவர்களும் இலர் என்பதை நாம் அறிவோம். இவ்வாறு வேதத்தைக் காட்டிலும் திருவாசகம் சிறந்தது என்று கூறும் அப்பாடலைக் காண்போம்.

''விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை மூக்கண்
காரணன் உரைஎனும் ஆரண மொழியோ
ஆதிசீர் பரவும்வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்த தென்குவீர் ஆயின்
வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சம் நெக்குருகி நிற்பவர் காண்கிலேம்
திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்துக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்து நீர்பாய
மெய்ம்மயிர் பொடிப்பவிதிர் விதிர்ப்பெய்தி
அன்பர் ஆகுநர்அன்றி
மன்பதை உலகில் மற்றையர் இலரே.

திருவாசகம் பொதுமறை

இதே போல் மற்றொரு பாட்டில் ''திருப்பெருந்துறையில் குருந்தமர நிழலில் சிவபெருமானையே குருநாதராகப் பெற்றுச் சிவானந்தத் தேனைப் பருகிச் சிவஞானம் பெற்ற மாணிக்கவாசகப் பெருமானே! நீர் அருளிச் செய்த திருவாசகம் இந்த வருணத்தார்க்கு உரித்து என்பதின்றி அனைவரும் ஓதியும் ஓதுவித்தும் பயன்பெறலாம். ஆகையால் இது பொன் பாத்திரத் திற்குச் சமமான பொதுமறையாகும். ஆனால் வடமொழி வேதமானது அந்தணர்கட்கு மட்டுமே உரியது. அவர்களுள்ளும் சிலர் வேதத்தை ஓதக் கூடாது என்று மறைக்கப்பட்டமையால் மறை எனப்பட்டது. இது ஒரு சிலர் தொட்டால் தீட்டு எனப்படும் மண் கலத்திற்குச் சமமாகும். வடமொழி வேதத்தை ஓதினால் பெறும் பயன் அறமேயாகும். ஆனால் சிவானந்தத் தேனாகிய திருவாசகம் ஓதினாலும் ஓதுவித்தாலும் பெறும் பயன் முத்தி இன்பமாகும். ஆகையால் இது எவரும் ஓதும் இயல்புடைய தாகும். இப்பாடலில் வேதம் ஓதினால் முத்தி கிடைக்காது. திருவாசகம் ஓதினால் முத்தி இன்பம் கிடைக்கும் என்று கூறுவது அறிந்தின்புறத்தக்கது. இன்னோரன்ன திருவாசகத்தின் பொருள் யாதோ? என்று அனைவரும் வேண்ட, பொன்னம்பலத்தை அடைந்து இவரே பொருள் எனச் சுட்டி மறைந்ததையும் குறிப்பிடுகின்றார்.

இறைவன் தொண்டு செய்து உன் திருப்பாட்டை ஏற்றார்

கண்ணன் தன் கண்களில் ஒன்றை இடந்து உன் திருவடி மலரில் அர்ச்சித்துச் சக்கரப்படை பெற்றான். இதேபோல் பல அடியார்கள் வருந்திப் பல அரிய செயல்களைச் செய்து உன் திருவடி அடையும் தொண்டரானார்கள். ஆனால் சிவபெருமானாகிய நீரோ, மாணிக்கவாசகர் திருவாசகம் பாடும் தொண்டைப் பெறும்பொருட்டு அவருக்காக மதுரையில் குதிரைச் சேவகனாகியும், மண் சுமந்தும், பாண்டியனால் பிரம்படி பட்டும், நீரே வருந்தித் தொண்டாற்றினீர்'' என்று கூறித் திருவாசகத்தின் பெருமையையும், மாணிக்கவாசகர் பெருமையையும் எடுத்துரைக்கும் பாங்கு படித்தின்புறத் தக்கதாகும்.

முக்திப் பயிர் விளைவித்தல்

சிவபெருமானாகிய அருட்கடலில் மாணிக்கவாசகர் என்ற மேகம் தோன்றி திருவாசகம் என்னும் மழை பெய்தது. அந்தத் திருவாசகம் என்னும் மழை வெள்ளமானது ஓதுவார் உள்ளமாகிய குளத்தில் நிரம்பியது. அவர்களின் வாயாகிய மதகின் வழியாக வெளிப்பட்டு, செவிகளாகிய மடைவழியாக நெஞ்சம் என்னும் நிலத்தில் பாய்ந்தது. அங்கே அன்பு என்னும் விதையை நனைத்துச் சிவம் என்னும் முளை தோன்றியது. அது வளர்ந்து பயிராகி முக்தி என்னும் பயனை விளைவித்தது என்று கூறும் நயம் வியக்கத்தக்கது.

இவ்வாறு சிவப்பிரகாச சுவாமிகள் நால்வர் நான்மணிமாலை என்னும் செந்தமிழ் சிற்றிலக்கியத்தில் சைவ சமயக் குரவர்கள் நால்வரின் சிறப்புக்களையும் அவர்களின் திருப்பாடல்களின் சிறப்புக்களையும் பக்தி நயம், இலக்கிய நயம், இலக்கண நயம், அணி நயம் தோன்ற எடுத்தாண்டுள்ள சிறப்பினை அறியலாம்.

34. நன்னெறியும் - திருக்குறளும் ஓர் ஒப்பீடு

இரா. கோபி சுகுணா, புதுவை.

நன்னெறி என்ற நீதிநூல் ஏறத்தாழ இருநூற்றுத் தொண்ணூறு ஆண்டுகட்கு முன் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளால் இயற்றப் பெற்றது. நீதிக் கருத்துக்களை அனைவரும் அறிந்துகொள்ளக் கூடிய நிலையில் உவமைகளைக் கொண்டு அமைந்திருப்பது நாம் அறிந்ததும் அறியக் கூடியதும் ஆகும். வாழ்க்கையைச் செந்நெறியில் செலுத்தும் அறங்களை வலியுறுத்திச் செல்கின்ற நூலாக நீதி நூல்கள் அமைகின்றன. மனிதகுலம் எந்த இடத்தில் எந்தச் சூழலில் வாழ்ந்தாலும், அனைவரும் ஏற்கும் பொதுமையைக் கற்பவர் நெஞ்சில் ஆழப் பதிய வைக்கும் நோக்கில் நன்னெறி கருத்துக்களும் ஒரு நிலையில் ஒத்தும், வேறுபட்டும் இருப்பதை திருக்குறளின் மூலமாக அறிய முடிகின்றது. இந்நிலையில் சிவப்பிரகாசரின் நன்னெறி கருத்துக்களுடன், திருக்குறளின் கருத்தினை ஒப்பீட்டுக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நன்னெறி – திருக்குறள் கருத்துக்கள் ஓர் ஒப்பாய்வு

நன்னெறி நூலில் கடவுள் வாழ்த்துப் பாடலை விநாயகப் பெருமானை நினைத்துப் பாடியுள்ளார். விநாயகரை வணங்கினால் நன்னெறியின் நாற்பது வெண்பாவும் சரளமாக வரும் என்ற கருத்தினை வலியுறுத்து கின்றார் ஆசிரியர். திருவள்ளுவரோ பொதுவான நிலையில் கடவுள் என்ற ஒருவரை வணங்கினால் சகல பொருளையும், எல்லையில்லாத அறிவையும் அடைவார், (குறள் - 2) என்று எடுத்தியம்பியதால் விநாயகப் பெருமானையும் உள்ளடக்கியுள்ளதை மறைமுகமாக உணர்த்தியுள்ளதை அறிய முடிகின்றது.

பெரியோர் தமக்கு உதவி செய்யாதவரிடத்தும், தாமே, சென்று பொருளைக் கொடுத்து உதவுபவர்கள் ஆவர் என்று பெரியோர்களை மட்டுமே முன்னிலைப்படுத்தியுள்ளார் சிவப்பிரகாசர். ஆனால், உலக பொதுமறையிலோ ஒருவன் முயன்று சேர்த்தச் செல்வங்கள் எல்லாம் தகுந்தவர்களுக்குக் கொடுத்து உதவுவதற்கே ஆகும். (குறள் - 2) என்று பெரியோரை மட்டும் கூறாது சமூகத்தில் வாழும் அனைத்து தரமான மக்களையும் உள்ளடக்கி உள்ளதை மறைமுகமாக எடுத்தியம்புகிறார்.

வன்சொல் இனிதாதல் என்பதில் சிவப்பிரகாசர் நல்ல மனமுடை யோருடைய கடுஞ்சொல்லும், இன்பம் விளைவிக்கும், நல்ல மன

மில்லாதார் இன்சொல்லும் துன்பம் விளைவிக்கும். உள்ளத்திலே அன்பு இருக்கின்றதா என்று பார்க்க வேண்டுமே தவிர இனிமையாகப் பேசுவதைக் கண்டு ஏமாறக் கூடாது என்று கூறுகின்றார். திருக்குறளில், உள்ளத்தில் அன்பு உடையவர் தம் உடம்பையே பிறருக்கு உரியதாக்குவர். ஒருவரைக் கண்டவுடன் முகம் மலர்ந்து இனிமையாகப் பார்த்து, உள்ளன்புடன் பேசுவதே நல்லறமாகும். பிறர் பேசும் நல்ல சொற்கள் தமக்கு இன்பத்தைத் தருவதை அறிந்தவன், பிறரிடம் கடுஞ்சொல் பேசுவது இயலாது. (குறள் - 93, 99) என்று சிவப்பிரகாசரின் கருத்தினை இரண்டு அதிகாரங்களின் மூலம் வள்ளுவர் பகுத்துக் கூறியுள்ள கருத்து இதன் மூலம் புலனாகின்றது.

பொருள் பயன்படுத்துவார்க்கே சொந்தம் என்பதை உரைக்கும் சிவப்பிரகாசர் பிறர்க்கு உதவி செய்யாத கடலின் நீரைக் கொண்டு சென்று மேகம் மழையாக பொழிகின்றது. அதுபோல் பிறருக்கு உதவி செய்யாதவரின் செல்வம் பிறிதேயாயினும், பிறருக்கு உதவுபவரின் செல்வமே சிறந்த செல்வமாகும். இதனை வள்ளுவர் கூறும்போது வான்சிறப்பு என்பதில் மேகம் கடலில் நீரை முகந்து கொண்டு மீண்டும் அந்நீரையே மழையாகப் பொழியவில்லை என்றால் கடலில் உள்ள செல்வங்களும் குறையும் (குறள் - 17) ஈகை என்பதில் ஒருவரிடம் வாங்கும் பொருளால் நன்மை உண்டு என்றால் அதை வாங்குவது தீமையாகும். பொருளற்றவர் வேண்டும் பொருளை கொடுப்பது என்ற இரண்டு நிலையிலும் தம் கருத்தை வலியுறுத்துகிறார் (குறள் - 221, 222).

இனிய நெறியறிந்து பெறுக என்பதில் தமக்கு உதவாதவரிடத்து ஒரு பொருளைப் பெற வேண்டின் அதனை அவருக்கு வேண்டிய உரிய ஒருவரைக் கொண்டு பெறுதல் வேண்டும். இவ்வாறு கூறிய சிவப்பிரகாசரின் கருத்துக்கு எதிரான நிலையில் வள்ளுவர் பிறர் பொருளை விரும்பா திருப்பதே அறம் என்ற நிலையில் மற்றவர் பொருளை விரும்பாதிருப்பதே தன் பொருள் குறையாதிருப்பதற்கு வழியாகும் (குறள் - 178) என்ற கருத்தை ஓர் அதிகாரத்தின் மூலமாகவே மக்களுக்கு எடுத்தியம்புகின்றார்.

பிரியா நட்பு என்பதில் பிரிவு இல்லாத நண்பர் இருவர் பிரிந்து கூடினாலும் பார்க்குமிடத்து அவருடைய பெருமை அற்பமாகும் என்ற ஒரு கருத்தை முன் வைக்கிறார். ஆனால், வள்ளுவர் நட்பைப் பற்றி பல்வேறு நிலைகளில் எடுத்து இயம்பினாலும் நட்பினை விரும்பி ஒருவனோடு அன்பு கொண்ட பின் அவனை விடுதல் உண்டாகாது (குறள் - 791). மேலும், இவர் எமக்கு இத்தன்மையவர் யாம் இவர்க்கு இத்தன்மையவர் என்று வேறுபாடு இல்லாமல் சொன்னாலும் அது அற்பமாகும் (குறள் - 790) என்ற கருத்தினை வலியுறுத்தினார். இதில் இருவரும் பிரிந்து பின் கூடினாலோ, தங்களின் நட்பு நிலையைக்

கூறினாலோ அவை அற்ப நிலைக்குக் கொண்டு சென்று விடும் என்ற கருத்தினை நிலைநாட்டியுள்ளனர்.

காதலர் ஒற்றுமை என்பதில் கணவனும், மனைவியும் மனம் ஒருமித்து எக்காரியத்தையும் செய்தல் வேண்டும். அப்பொழுதுதான் அக்காரியம் நிறைவு பெறும் என்ற கருத்தை, சிவப்பிரகாசர் வலி யுறுத்தினார். வள்ளுவர், இதே போன்று தன் துணைவியிடம் அன்பும், பிறருடன் பகிர்ந்துண்ணும் அறச் சிந்தனையும் இருப்பதே இல்வாழ்வின் நிலை என்று கூறியுள்ளார். (குறள் - 45) காதல் ஒற்றுமை என்பதில் கூறிய கருத்தினை இல்வாழ்க்கை என்ற அதிகாரத்தில் கூறியுள்ள கருத்து இதன் மூலம் புலனாகின்றது.

செருக்கினை விடுக என்பதில் பெருங்கல்வியுடையவரானாலும், செருக்கடைதல் கூடாது, இருந்தால் வல்லவரான மற்றொருவரிடம் தோல்வி அடையலாம் என்ற கருத்தினைக் கல்வி என்ற அதிகாரத்தில் கற்கும் நூல்களைக் குற்றமில்லாமல் கற்க வேண்டும், கற்றபின் கற்ற கல்விக்குத் தக்கபடி நடக்க வேண்டும் (குறள் - 391) என்ற கருத்தில் செருக்கு, தன்னலம் இல்லாத நிலையில் இருக்க வேண்டும் என்ற கருத்தும் மறைமுகமான நிலையில் வெளிப்படுவதை அறிய முடிகின்றது.

சினங்கொள்ளுதல் எளிது, சினத்தை அடங்குதல் அரிது, எனவே அரியதைச் செய்வதே பெருமை தரும் என்ற நிலையில் சினங்காக்க என்ற தலைப்பில் எடுத்துக் கூறியுள்ளார் ஆசிரியர். ஆனால், வள்ளுவரோ ஒருவன் தன்னைத் துன்பத்திலிருந்து காத்துக் கொள்ள கோபத்தை அடக்க வேண்டும். இல்லாவிட்டால் சினம் கொண்டவனையே அது அழித்து விடும் (குறள் - 305) என்று சினத்தின் கொடுமையினை முழுமையான நிலையில் எடுத்து விளக்கியுள்ளது தெளிவாகின்றது.

அன்பில்லார்க்குச் செல்வம் பயனில்லை, என்பது போல் ஊமைக்குப் பழமையான நூல்கள் எந்த பயனையும் தராது. கண்ணில்லாதவர்க்கு விளக்கு எந்த பயனையும் தாராதது போல் அன்பில்லாதவரிடம் இடம், பொருள், ஏவல் முதலியன மருந்தும் பயனில்லை. அதனைக் கொண்டு அறமும், புகழும் தேட மாட்டான். குறளில், மனதில் அன்பில்லாத வருக்கு இடம், பொருள், ஏவல் என்னும் புறத்து உறுப்புக்கள் என்ன உதவியைச் செய்யும் என்ற கருத்தினை வலியுறுத்துவதாக உள்ளது.

''புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப் பண்பி லவர்க்கு'' (குறள் - 79)

வறுமையிலும் ஈகை என்பதில் இரப்பவர்க்கு ஈந்து தந்தை வறிய வனானான் என்று அவன் மக்கள் ஈகையைக் கைவிடமாட்டார்கள்

என சிவப்பிரகாசர் அடுத்த தலைமுறையின் நிலையை வெளிப்படை யாகக் கூறாது மறைமுகமாக எடுத்தியம்பியுள்ளார். இதனைப் பொருளற்ற ஏழையின் கடும் நிலையைத் தீர்ப்பதே தன் செல்வத்தைத் தனக்குபின் உதவுவதற்காகச் சேர்த்து வைக்கும் நிலையைக் கூறியுள்ளார் (குறள் - 26).

மெய் வருந்தியும், பிறருக்கு உதவுக என்பதில் அறிவுடையோர் கைமாறு வேண்டாமலே பிறருக்குத் தம்மாலான உதவிகளை வலிந்து செய்வர் என்ற கருத்தினை மையமாகக் கொண்டு பெய்யும் மழை உலக மக்களிடம் மறு உதவியை எதிர்பார்ப்பதில்லை. அதுபோலக் கைமாறு வேண்டியதில்லை என்ற கருத்தினை வள்ளுவர் வலியுறுத்துகின்றார்.

வெள்ளம் வருவதற்கு முன்னரே கரையைக் கட்டி வைக்காதவர் பெருகி வரும் பொழுது யாது செய்வார் நீ சொல்வாயாக என்று கூறுவது போல் இறப்பு வரும் முன்னரே விரைந்து அறம் செய்தல் வேண்டும் என்பதனைச் சிவப்பிரகாசர் கூறியிருக்க, வள்ளுவர் இன்று இளைஞ ராதலால் இறக்கும் காலத்தில் அறத்தினைச் செய்வோம் என்றில்லாமல், நாள்தோறும் அறத்தினைச் செய்தால், உயிர் நீங்கும்போது அவ்வுயிருக்கு உற்ற துணையாகும் என்று கூறியுள்ளார் (குறள் - 36).

நுண்மைப்பொருளை உணர்ந்து விதிவிலக்குகளைப் பகுத்தறியும் அறிவில்லாதவர் செய்யும் அறக்கருத்துக்கள் பயன்படாது என்பதனை வள்ளுவர் உண்மைப் பொருளின் தன்மையை உணராதவர்கள் ஐம்புலனை அடக்கிய நிலையில் தானம் செய்தாலும் பயன் இல்லை என்று கூறியுள்ளார் (குறள் - 354).

பெரியோர் பழிக்கு அஞ்சுவர் என்பதில் அறிவுடையோர் பழிக்கு அஞ்சுவர், மூடர் பழிக்கு அஞ்சார், என்று கூறிய சிவப்பிரகாசருக்கு இணையான நிலையில் குறளில் மற்றவர்களுக்குக் கொடுமை செய் வதற்குக் கொடியவர்கள் அஞ்சமாட்டார்கள் மேலானவர்கள் என்ற கருத்தினை வலியுறுத்துகிறார்கள்.

பெரியோர் முன் தற்புகழ்ச்சி கூடாது என்ற நிலையில் பெரியோர் எதிரே தன்னைப் புகழ்ந்துரைத்தவன் தாழ்வை அடைவான். இதனையே வள்ளுவர் ஆற்றல் மிக்க பெரியோரை மதிக்காமல் நடந்தால் நீங்காத தாழ்வு நிலையை அடைவர் (குறள் - 822) என்பதில் இவர்கள் முன் தற்புகழ்ச்சி கூடாது. தன்னடக்கம் வேண்டும் என்ற கருத்தினையே இருவரும் வலியுறுத்துவது அறிகின்றோம்.

மூடருடைய நட்பு, தொடங்கும் காலத்து நன்றாயிருப்பினும், பின்னர் தீங்கு விளைவிக்கும் எனத் தகாத நட்பினைச் சிவப்பிரகாசர் கூறினார். நெருங்கிப் பழகினாலும், தக்க சமயத்தில் துணையாகாத

கீழ் மக்களின் தீய நட்பின் தொடர்பு, இருப்பதைவிட இல்லாதிருப்பது நல்லது (குறள் 85) என்ற நிலையில் வள்ளுவர் மூடரை, கீழ் மக்கள் சொல்லைப் போட்டு மேலும் தெளிவுபடுத்தியுள்ளார்.

சிவப்பிரகாசரின் நன்னெறியும், திருவள்ளுவரின் திருக்குறளும், சிறுவர் முதல், பெரியோர் வரை அனைவரும் ஏற்றுக் கொள்ளும் நிலையில் பல்வேறான நீதிக் கருத்துக்களை எடுத்துக் காட்டியுள்ளதை நம் முன்னோர் முதல், நம் வரை, தெரிந்தும், தெரிந்து கொண்டும் வருகின்றோம். இவற்றுள் நேரடியான நிலையிலோ, மறைமுகமான நிலையிலோ நன்னெறியும் திருக்குறளும், ஒன்றுபட்டுள்ளதை இக்கட்டுரையின் மூலம் அறிகின்றோம். இக்கட்டுரையின் வாயிலாக சிவப்பிரகாசரின் வேறு படைப்பினையும் திருக்குறளின் மூலம் ஒப்பிட்டு முடிவு காணலாம். இதற்கு ஒரு பாலமாக திருக்குறள் இருக்கும் என்ற கருத்தை நம் சிந்தனைக்கு ஒரு கருவியாகவும் கொள்ளலாம்.

35. சிவப்பிரகாச விகாசத்தில் பதிஇயல்பு

கோமதி சூரியமூர்த்தி, மதுரை.

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் தம்மை ஆதரித்த அண்ணாமலை ரெட்டியாருடன் சிதம்பரத்தில் ஒரு திருமடம் கட்டுவித்து, அங்குச் சில ஆண்டுகள் வாழ்ந்து இறைவழிபாடு செய்து கொண்டிருந்த காலத்தில் அருளிச் செய்த நூல் சிவப்பிரகாச விகாசம் ஆகும். இஃது ஒரு சைவ சித்தாந்த நூல். இந்நூலைப் பொருளுணர்ந்து படித்து ஞான நெறியில் ஒழுகுபவர்கள் உள்ளத்தில் சிவம் பிரகாசிக்கும். மெய்கண்ட சாத்திரங்கள் எனப் போற்றப்படும் பதினான்கு நூல்களுள் தகுதி பற்றி முதல் நூலாகக் கூறப்படுவது சிவஞானபோதம் ஆகும். அருணந்தி சிவாசாரியார் அருளிச்செய்த சிவஞானசித்தியார் வழிநூல் ஆகும். உமாபதிசிவம் அருளிச்செய்த சிவப்பிரகாசம் என்னும் நூல் சார்புநூல் எனப்படும். அச்சிவப்பிரகாச நூலைவிட, சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய இந்நூல் முப்பொருள் இயல்புகளை விரிவாக எடுத்துரைப்பதால் சிவப்பிரகாச விகாசம் என்ற பெயர் பொருந்துவதாயிற்று எனலாம். (விகாசம் என்றால் விரித்தல் எனப் பொருள்). இட எல்லையைக் கருத்தில் கொண்டு இந்நூலில் பதிமரபில் கூறப்படும் பதிஇயல்புகள் மட்டும் இக்கட்டுரையில் ஆராய்ந்து கூறப்படுகின்றன.

நூலமைப்பு

இடைக்காலத்தில் நூலியற்றுவோர்கள் நூல் இடையூறின்றி முடியும் பொருட்டு விநாயகப் பெருமான் மீது காப்புச் செய்யுள் இயற்றுவதை மரபாகக் கொண்டிருந்தனர். அம்மரபைத் தழுவி, சிவப்பிரகாசரும் இந்நூலில் முதற்கண் விநாயகப் பெருமான் மீது ஒரு காப்புச் செய்யுள் பாடுகின்றார். அடுத்து, நூல் நுதவிய பொருள் கூறுகின்றார். ''பலகலை ஆகமம் வேதம் யாவையினும் கருத்துப் பதி பசு பாசம் தெரித்தல்'' (சிவப்பிரகாசம், செ. 13) என்று உமாபதிசிவம் கூறுவதுபோல சிவப்பிரகாச சுவாமிகள்

''சீர் கொளுஞ் சிவாகமந் தெரிந்து கூறுவன்
பார் கொளும் பதிபசு பாசத் தன்மையையே'' (செ. 2)

என்று கூறுகின்றார். இஃது இந்நூல் பதி, பசு, பாச இயல்புகளைச் சிவாகமத்தைத் தழுவி எடுத்துரைப்பது என்பதை உணர்த்தும்.

பதி மரபிலுள்ள செய்யுட்கள்	=	59
பசு மரபிலுள்ள செய்யுட்கள்	=	78
பாச மரபிலுள்ள செய்யுட்கள்	=	141
பிரளய இயல்	=	1

பதிமரபு

காப்புச் செய்யுள் உட்பட பதிமரபிலுள்ள செய்யுட்கள் 59 என்று எண் இடப்பட்டிருந்தாலும், கிடைத்துள்ள செய்யுட்கள் 40 ஆகும். செய்யுள் 32 முதல் 50 முடியவுள்ள 19 செய்யுட்கள் கிடைக்கவில்லை. அந்த ஏடுகள் இல்லை என்று தஞ்சைக் கலைமகள் மாளிகைப் பிரதி கூறுகின்றது. கிடைத்துள்ள 40 செய்யுட்களிலும் 4, 5, 6, 11, 12, 17 செய்யுட்கள் முழுமையாக இல்லை. பின்னாளில் நூல் முழுமையாகக் கிடைத்ததா என்றோ, இந்நூலுக்கு இதுவரை யாரும் உரை எழுதியுள்ளனரா என்று தெரிய வரவில்லை.

பொம்மைபாளையம் பெரிய மடம் திருமயிலை தேவத்தான ஆதின பரம்பரை பதினெட்டாம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் வெளியிட்டருளியுள்ள ''நல்லாற்றூர் சிவப்பிரகாசர் செந்தமிழ் நூல்கள்'' (1944-ஆம் ஆண்டுப் பதிப்பு) தொகுப்பு நூலில் காணப்படும் சிவப்பிரகாச விகாசம் என்னும் நூலின் மூலச் செய்யுட்களின் துணைகொண்டே இங்குப் பதி இயல்புகள் கூறப்படுகின்றன. ஆங்காங்கே அதற்கு ஒப்புமையான கருத்துக்கள் முன்னோடியான சிவஞான சித்தியார் போன்ற பிற நூல்களில் இருந்து எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

பதி இயல்புகள்

எல்லாம்வல்ல முழுமுதல் பொருளுக்கு எண்குணம் கூறுதல் சிவாகம மரபு. அவ்வெண்குணங்களாவன: 1. தன்வயமுடைமை (சுதந்தரம் உடையவன்) 2. தூய உடம்பு உடைமை, 3. இயல்பாகவே பாசங்களின் நீங்கினமை, 4. இயற்கை உணர்வு, 5. முற்றுணர்வு, 6. பேரருள் உடைமை, 7. அளவில் ஆற்றல் உடைமை, 8. வரம்பில் இன்பம் உடைமை. சிவப்பிரகாசரும் இறைவனை, ''எண்ணரிய சுதந்திரனாய் நிறைந்த ஈசன்'' (செ. 52) என்கின்றார். ''ஓங்கும் விந்து வாதியாம் உபாதி யின்றிப் பரமசிவன்'' (செ. 20) என்றும், ''வயிந்தவாதி உபாதி ஒன்றிலாமையால்'' (செ. 24) என்றும் சிவப்பிரகாசர் குறிப்பிடுவது அவன் தூய உடம்பினன் என்பதை உணர்த்தும் எனலாம். இறைவன் ''வேண்டுதல் வேண்டாமை இலான்'' (குறள் - 4) என்று வள்ளுவர் குறிப்பிடு கின்றார். உமாபதிசிவம் ''தாங்கரிய வெறுப்பினோடு விருப்பும் எல்லாம் சார்வரிய தனிமுதல்வன்'' (சிவப்பிரகாசம், செ. 15) என்கின்றார். இதுபோல சிவப்பிரகாசரும் இறைவனைக் ''கைப்பொடு விருப்பிலன்''

(செ. 5) என்கின்றார். சிவப்பிரகாசம் இறைவனை ''நிமலன்'' (செ. 6, 20) என்றும், ''வினையின் அகன்றவன்'' (செ. 6) என்றும் குறிப்பிடுவது அவன் இயல்பாகவே பாசங்களின் நீங்கியவன் என்பதை உணர்த்தும். சிவப்பிரகாசர் ''சின்மயன்'' (ஞானரூபி) (செ. 25) என்றும், ''முத்தனாய் முழுதுணர்ந்து முழுமுதல்'' (செ. 29) என்றும் இறைவனைக் குறிப்பிடுவது அவன் இயற்கை உணர்வினன், முற்றுணர்வினன் என்பதை உணர்த்தும். ''ஒப்பறும் அருளினோன்'' (செ. 5) என்று இறைவனின் பேரருளுடைமையைச் சிவப்பிரகாசர் உணர்த்துகின்றார். ''அகன்ற சங்கற்ப கருத்தர்'' (செ. 18) என்ற இறைவனது அளவிலாற்றலையும், ''அனைவர்க்கும் இன்பம் ஒன்றே வழங்குபன்'' (செ. 51) என்றது அவனது வரம்பில் இன்ப முடைமையையும் உணர்த்தும்.

''ஒன்று என்றது ஒன்றே காண் ஒன்றே பதி'' (சிவஞானபோத உதாரண வெண்பா - 7) என்று மெய்கண்டார் கூறுவது போல, சிவப்பிரகாசரும் இறைவன் ஒருவன் என்பதை ''ஒன்றாய்'' (செ. 13) என்றும், அவனே மேலான பொருள் என்பதைப் ''பரமாய்'' (செ. 13) என்றும், பேருலகத்தைத் தோற்றியும், காத்தும், ஒடுக்கியும் வருகின்ற வல்லமையுடைய இறைவன் பிறப்பும், இறப்பும் இல்லாதவனாதலால் ''நித்தன்'' (செ.29) என்றும் குறிப்பிடுகின்றார்.

நிமித்த காரணன்

பிரபஞ்சமாகிய காரியத்துக்கு வேண்டப்படும் காரணங்கள் முதற் காரணம், துணைக் காரணம், நிமித்த காரணம் என மூன்றாம். அவற்றுள்ளே மாயை முதற் காரணமாகும். சிவசக்தி துணைக் காரணம் ஆகும். சிவபெருமான் நிமித்த காரணனாம் என்று அருணந்தி சிவாசாரியார் கூறுவார் (சிவஞானசித்தியார் சுபக்கம், செ. 28) சிவப்பிரகாசரும்,

''ஐந்தொழில் பதியெனும் சிவன்
அயர்ப்பிலா நிமித்த காரணன்'' (செ. 3)

என்கின்றார்.

ஐந்தொழில்கள்

இறைவன் செய்யும் ஐந்தொழில்களை,

''படைத்திடல் அளித்திடல் பரிந்து ஒடுக்குதல்
தடுத்திடல் அருளுதல் என்று தருமுறை
அடுத்திட இறைசெயும் ஐந்தொழில்'' (செ. 7)

என்று சிவப்பிரகாசர் குறிப்பிடுகின்றார்.

ஐந்தொழில்களின் விளக்கம்

முதற் காரணமான விந்துவிலிருந்து (சுத்த மாயையிலிருந்து) தத்துவப்பவனங்களையும், அங்கு வாழும் உயிர்கட்கு உடம்பினையும் கொடுத்தல் படைத்தல் ஆகும் (செ. 8). உயிர்களை விடயமோடு நிறுத்துதல் காத்தல் (செ. 9). மீண்டும் மாயையில் ஒடுக்குதல் துடைத்தல் (செ. 9) உயிர்களைத் தன்னை உணராவண்ணம் போகத்தில் அமிழ்த்துதல் தடுத்தல் (மறைத்தல்) (செ. 10). மும்மலங்களையும் நீக்கிப் பேரின்பத்தை அநுபவிக்கச் செய்தல் அனுக்கிரகம் (செ. 10) என்று ஐந்தொழில் கட்கும் விளக்கம் சிவப்பிரகாசம் கூறுவார்.

இறைவனே அத்தொழில்களை ஆற்றுதல்

''முழுமுதலாகி நின்ற நித்தன் வான் தொழில்கள் ஐந்து நிகழ்த்துவான் என்பது உண்மை'' (செ. 29) என்றும், **''இவ்வைந்தும் ஈசன் எனப்படும் ஒருவன் செய்கை''** (செ. 10) என்றும் இறைவனே இத்தொழில்களை ஆற்றுவதாகச் சிவப்பிரகாசர் குறிப்பிடுகின்றார்.

சுத்த மாயையில் இறைவன் ஐந்தொழில்களைத் தாமே செய்வார். அசுத்த மாயையில் ஐந்தொழில்களை இறைவன் வித்தியேசுவரரை அதிட்டித்து நின்று செய்வார். பிரகிருதி மாயையில் ஐந்தொழில்களை வித்தியேசுவரர் வாயிலாக ஸ்ரீகண்ட ருத்திரதை அதிட்டித்துச் செய்வார் என்றும் சைவ சித்தாந்தம் கூறும் (அதிட்டித்தல் என்றால் நிலைக்களமாகக் கொண்டு செலுத்துதல் எனப் பொருள்).

தொழிலாற்றும் முறை

தொழிலாற்றுவோன் கருத்தா எனப்படுவான். கருத்தா இரு வகைப்படுவர். சாதனங்களின் துணையால் காரியம் செய்வோன் கரணகருத்தா. நினைப்பளவில் காரியம் செய்வோன் சங்கற்ப கருத்தா (செ. 18) குயவன் மண்ணிலிருந்து நினைப்பளவில் காரியம் செய்ய முடியாதவனாதலால் அவன் கரணகருத்தா. இறைவன் நினைப்பு மாத்திரத்தில் மாயையிலிருந்து உலகைப் படைத்தலால் சங்கற்பகருத்தா (செ. 19) என்று விளக்கிக் கூறுகின்றார் சிவப்பிரகாசர். குயவனுக்கு உருவம் உண்டு. அதுபோல முதல்வனும் உருவுகொண்டுதான் உவகைப் படைப்பானோ என்ற வினா எழலாம். அதற்கு விடை போன்று,

> **''......... மெய் ஆதி உபாதியால் இறைவன் செய்யின்**
> **மன் குறையுளது. விந்து வடிவாதி உபாதியின்றித்**
> **தன் பெருஞ் சக்தி கொண்டே தலைவனுந் தொழிலும் செய்வன்''**
>
> (செ. 12)

என்று சிவப்பிரகாசர் கூறுகின்றார். மேலும் மற்றொரு பாடலில்,

''......... சக்தி மாத்திரையால் செயற்கை ஆதலால் அசம்பவம் என்று
ஈங்கு மொழியில் காலம் உருவிலதாயிருந்தும் பயன்தரல்கண்டு
ஆங்கு நிமலன் இச்சையால் ஆக்கும் அமூர்த்தனாயுமே'' (செ. 20)

என்று காலத்தை உவமையாகக் காட்டி முற்கூறிய கருத்தை வலியுறுத்துக் கூறுகின்றார்.

கரணங்களின்றிக் காரியம் நிகழுமோ எனில், சூரியன் தன் கதிரால் தாமரையை விரியவும், குவியவும் செய்வது போல, காந்தம் தன் ஈர்ப்புச் சக்தியால் இரும்பை இழுப்பதுபோல, சிவன் கரணங்களின்றிச் சக்தி கொண்டே செயலாற்றுவான் எனச் சிவப்பிரகாசர் கூறுகின்றார் (செ. 26). இறைவன் இத்தொழிலாற்றுவதால் விகாரம் அடைவனோ எனில், கரண கருத்தாவிற்கே விகாரம் உண்டு. இறைவன் சங்கற்ப கர்த்தா ஆதலால் விகாரம் அடையான் என விளக்குகிறார் (செ. 19).

இறைவனின் சக்தி

''சக்திதன் வடிவு ஏது என்னில் தடையிலா ஞானம் ஆகும்'' என்று அருணந்தி சிவாசாரியாரும் (சித்தியார், செ. 82) ''சுத்தமாஞ் சத்தி ஞானச் சுடராகும்'' (சிவப்பிரகாசம், செ. 75) என்று உமாபதிசிவமும் கூறுவது போல சிவப்பிரகாசம் ''சின்மயன்தன் சக்தி ஆதலான் அறிவேயாகும்'' (செ. 25) என்று கூறுகின்றார். இறைவனோடு நீக்கமின்றி இருத்தலால் ''சமவேத சக்தியாய் வேறில்லாததாய்'' (செ. 14) என்று சிவப்பிரகாசர் குறிப்பிடுகின்றார். அந்த சக்தி ஒன்றே இச்சை, ஞானம், கிரியை என மூவகைப்படுவதையும் சிவப்பிரகாசர் உணர்த்துகின்றார் (செ. 25). உயிர்களின் மலத்தை நீக்கிச் சிவமாந்தன்மை அளிக்கும் பொருட்டுப் பரமசிவன் கொண்ட கருணை இச்சா சக்தி எனப்படும். அதற்குச் செய்ய வேண்டிய உபாயங்களை அறிதல் ஞானசக்தி, அவ்வுபாயங்களை சங்கற்பித்துச் செய்தல் கிரியாசக்தி (சித்தியார், செ. 83). இவை மூன்றையும் கரணங்களாய்க் கூறுதல் மரபு.

''கண்ட சத்தி மூன்று கரணமாய்''

(கந்தர் கலிவெண்பா, கண்ணி - 63)

என்கின்றார் குமரகுருபரர்.

''நம் கையினால் நாம் அனைத்தும் செய்தாற் போல் நாடனைத்தும் நங்கையினால் செய்தளிக்கும் நாயகன்'' (நம்கை - கரணம், நங்கை - சக்தி) என்று (திருக்களிற்றுப்படியார், செ.78) கூறுவது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

சிவசக்தியின் இவ்வேறுபாடுகள் சிவனின் இலயம், போகம், அதிகாரம் என்ற நிலைகளுள் அடங்கும்.

''........திரிகரணம்
ஆகவரும் இச்சை அறிவு இயற்றல் இலய
போக அதிகாரப் பொருளாகி''

(கந்தர் கலிவெண்பா, கண்ணி - 9,10)

என்கின்றார் குமரகுருபரர். இம்மூன்று நிலைகளிலும் சிவன் முறையே சத்தன், உத்தியுத்தன், பிரவிருத்தி எனப் பெயர் பெறுவான். இதனைச் சிவப்பிரகாசர்,

''உரைத்த இயல்புடைய சிவன் சத்தன் உத்தி
யுத்தன் பிரவிருத்தன் எனத் தன் சத்தி
விருத்தியினால் உபசரிக்கப்பட்டு மிக்க
விந்துவினைக் குறித்தொரு மூவகையாய் நிற்பன்''

(செ. 53)

எனக் குறிப்பிடுகின்றார். பின் அதனைச் சிவப்பிரகாசர் விளக்கிக் கூறுகின்றார் (செ. 54, 55, 56). இலயம் பரமசிவனில் குடிலை பிரளயத்து ஒடுக்கப்பட்ட காரியமொடு காரணமாய் நிற்கும் நிலை. இந்நிலையில் சிவன் சத்தன் எனப்படுவான், இந்நிலையில் அவன் நிட்களன் (அருவம்) (செ. 54). குடிலை (சுத்த மாயை)யிலிருந்து உலகைத் தோற்றுவிக்க ஒருப்படுகின்ற நிலை போகம் எனப்படும். இந்நிலையில் சிவன் உத்தியுத்தன் என்றும், சதாசிவன் என்றும் பெயர் பெறுவன் (செ. 55). அஃது அருவுருவம், நிட்கள சகளம் எனப்படும். இறைவன் விந்துவை (சுத்த மாயையை) விருத்திபெறச் செய்து காரியம் ஆற்றும் நிலை அதிகாரம் எனப்படும். அந்நிலையில் சிவன் ஈசன் எனப்படுவான். பிரவிருத்தன் என்றும் கூறப்படுவான் (செ. 56) பிரவிருத்தன் என்றால் விந்துவின் காரியங்களைத் தொடங்கியவன் எனப் பொருள். இந்நிலை கசளம்-உருவ நிலை எனப்படும். நிட்களசிவமே சகளமாய் வரும் (செ. 57).

''அகளமாய் யாரும் அறிவரிது அப்பொருள்
சகளமாய் வந்தது என்று உந்தீ பற
தானாகத் தந்தது என்று உந்தீ பற''

என்று திருவுந்தியார் கூறுவது (செ. 1) இங்கு நினைவுகூரத்தக்கது. சாதகம் தியானம் பூசனை பொருட்டு கொள்ளும் இறைவனின் வடிவங்கள், மகேசுவர மூர்த்தங்கள் என்று கூறப்படும். அவை சந்திரசேகரன் முதலாக இலிங்கம் ஈறாக இருபத்தைந்து ஆகும் (செ. 58, 59) வடிவமற்ற சிவபரம்பொருள் சாதகர்களின் தியானம், பூசனை இவற்றின் பொருட்டாக வடிவம் கொள்ளும். சிவசாதாக்கியம் முதல் கன்ம சாதாக்கியம் ஈறாக ஐந்து சாதாக்கியங்களும் வடிவம் பெற்று சதாசிவம் என்று பெயர்

பெறும். ஐந்து சாதாக்கியங்களும் ஈசானம், தத்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்னும் ஐம்பிரம்மம் (பஞ்ச பிரம்மம்) என்று கூறப்படும். பின் இறைவனது தொழில் வேறுபாட்டால் தோன்றியவை சந்திரசேகரர் முதலாக லிங்கோத்பவர் ஈறாகச் சொல்லப்படும் இருபத்தைந்து சிவமூர்த்தங்கள் ஆகும். சிவம் ஒன்று, சதாசிவர் ஐந்து, ஈசன் உருப்பேதமாகிய மூர்த்தங்கள் இருபத்தைந்து ஆக இந்த முப்பத்தொன்றும் இறைவன் தன் சக்தியால் கொள்ளும் பல்வேறு வடிவமாகும். இவ்வாறு பல வடிவினனாகச் சொல்வது உபசாரமே. உண்மையில் சிவம் ஒன்றேயாம் (செ. 58, 59).

இவ்வாறு சைவ சித்தாந்தம் கூறும் பதி இயல்புகள் சிவப்பிரகாசரின் இந்நூலில் ஐயந்திரிபற விளக்கிக் கூறப்பட்டுள்ளன.

36. சிவப்பிரகாசர் நூல்களின் பதிப்புகள்

மோ.கோ. கோவைமணி, தஞ்சை.

துறைமங்கலம் சிவப்பிரகாசர் 34 நூல்களையும் 15 தனிப்பாடல் களையும் இயற்றியுள்ளார். இவற்றில் செய்யுள் நூல்கள் 33-ம் உரைநடை நூல் ஒன்றும் அடங்கும். கொச்சகக் கலிப்பா, தலவெண்பா ஆகிய இருநூல்கள் முற்றிலும் கிடைக்கவில்லை. ஏசுமத நிராகரணம் எனும் பிற சமய மறுப்பு நூல் மட்டும் இரண்டு பாடல்கள் கிடைத்திருக் கின்றன. ஆக முழுமையாகக் கிடைத்த நூல்கள் 31 ஆகும். இந்நூல்களின் பதிப்புகளைத் தனிநூல் பதிப்பு, திரட்டுநூல் பதிப்பு என இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

தனிநூல் பதிப்பு

ஒவ்வொரு நூலும் தனித்தனியாகப் பதிப்பிப்பதைத் 'தனிநூல் பதிப்பு' என்பர். இத்தனிநூல் பதிப்பு மூலப்பதிப்பு, உரைப்பதிப்பு என இரண்டு வகையாகப் பிரிக்கலாம். மூலம் மட்டும் கொண்ட பதிப்பை 'மூலப்பதிப்பு' என்றும், மூலமும் அதனுடன் உரை / குறிப்புரை / விளக்கவுரை / பதவுரை / பொழிப்புரை கொண்ட பதிப்பை 'உரைப்பதிப்பு' என்றும் குறிப்பிடலாம். துறைமங்கலம் சிவப்பிரகாசரின் நூல்களில் மூலப் பதிப்பாக கூவப்புராணம், சதமணிமாலை, சிவஞான பாலைய சுவாமிகள் கலம்பகம்-நெஞ்சுவிடு தூது-பிள்ளைத்தமிழ், சிவநாம மகிமை, சோணசைலமாலை, திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதி, திருவெங்கைக் கோவை, நன்னெறி, நால்வர் நான்மணிமாலை, பழமலையந்தாதி, பிட்சாடன நவமணிமாலை, பிரபுலிங்க லீலை, பெரியநாயகி கலித்துறை-விருத்தம் போன்ற நூல்களும்; உரைப்பதிப்பாக இஷ்டலிங்கவபிஷேக மாலை, கூவப்புராணம், சித்தாந்த சிகாமணி, சிவஞான பாலைய சுவாமிகள் பிள்ளைத்தமிழ், சிவப்பிரகாச விகாசம், சோணசைலமாலை, திருச்செந்தில் நிரோட்டக யமகவந்தாதி, திருவெங்கைக் கோவை, நன்னெறி, நால்வர் நான்மணிமாலை, பழமலையந்தாதி, பிரபுலிங்க லீலை, வேதாந்த சூளாமணி போன்ற நூல்களும் வெளிவந்திருக்கின்றன.

திரட்டுநூல் பதிப்பு

ஒரு நூலாசிரியர்/வெவ்வேறு நூலாசிரியரின் ஒன்றுக்கும் மேற்பட்ட நூல்களைத் திரட்டிப் பதிப்பிப்பதைத் 'திரட்டுநூல் பதிப்பு' என்பர். துறைமங்கலம் சிவப்பிரகாசரின் திரட்டுநூல் பதிப்புகளை அமைப்புநிலைப்

பதிப்பு, அளவு நிலைப் பதிப்பு, பொருள்நிலைப் பதிப்பு, திரட்டுகளின் தொகுப்புப் பதிப்பு என நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. அமைப்பு நிலைப் பதிப்பு

அமைப்பு நிலையில் சிவப்பிரகாசரின் திரட்டு நூல்களை மூலப் பதிப்பு, உரைப்பதிப்பு என இரண்டாகப் பகுத்துக் காணலாம். திரட்டு மூலப்பதிப்பாக இஷ்டலிங்கவபிஷேகமாலை முதலிய பிரபந்தங்கள் (1885, 1890, 1904), சிவஞான பாலைய சுவாமிகள் தாலாட்டு முதலிய 5 நூல்கள் (1877), சிவஞான பாலைய தேசிகர் தாலாட்டு முதலிய பிரபந்தங்கள் (1887), சிவஞான பாலைய தேசிகர் திருப்பள்ளியெழுச்சியும் கலம்பகமும் (1934), சிவப்பிரகாச சுவாமிகள் அருளிச் செய்த தோத்திரப் பிரபந்தத்திரட்டு (1890, 1907), சிவப்பிரகாசர் செந்தமிழ் நூல்கள் (1944), சிவப்பிரகாசர் பிரபந்தத்திரட்டு (1916, 1941), சோணசைலமாலை முதலிய பிரபந்தங்கள் (1885, 1906), திருவெங்கைக் கலம்பகம், திருவெங்கையுலா (1890, 1906), நன்னெறி (1874, 1875, 1877, 1878, 1879), நால்வர் நான்மணிமாலை முதலியன (1872, 1873, 1876, 1890, 1909), ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் கீர்த்திமாலைத் திரட்டு போன்றனவும்; திரட்டு உரைப்பதிப்பாக சிவப்பிரகாச சுவாமிகள் பனுவல் திரட்டு (1972, 1978), சிவப்பிரகாசர் பிரபந்தத்திரட்டு (1916, 1941), சோணசைலமாலை, சிவநாம மகிமை (1899), சோணசைலமாலை, நால்வர் நான்மணிமாலை, நன்னெறி (1993), நன்னெறி (1869, 1883, 1884, 1885, 1887) போன்றனவும் வெளிவந்திருக்கின்றன.

2. அளவுநிலைப் பதிப்பு

சிவப்பிரகாசர் நூல்களில் பாடல்களின் எண்ணிக்கை அடிப்படையில் சிறுநூல் திரட்டு, பெருநூல் திரட்டு, சிறு மற்றும் பெருநூல் திரட்டு என மூன்று வகைகளாகப் பிரித்துக் காணலாம்.

அ. சிறுநூல் திரட்டு

சிவப்பிரகாசர் நூல்களில் 40 பாடல்களுக்குக் குறைவான நூல் களைச் சிறுநூல்கள் எனலாம். இவ்வகை நூல்களின் திரட்டைச் 'சிறுநூல் திரட்டு' என்கின்றோம். இவ்வகையில் இஷ்டலிங்கவபிஷேக மாலை முதலிய பிரபந்தங்கள் (நெடுங்கழிநெடில், குறுங்கழிநெடில், நிரஞ்சனமாலை, கைத்தல மாலை); நால்வர் நான்மணிமாலை முதலியன (பெரியநாயகி விருத்தம், பெரியநாயகி கலித்துறை, பிட்சாடன நவமணிமாலை) ஆகியன இடம் பெறுகின்றன.

ஆ. பெருநூல் திரட்டு

சிவப்பிரகாசர் நூல்களில் 40 பாடல்களுக்கு மேற்பட்ட நூல்களைப் பெருநூல்கள் எனலாம். இவ்வகை நூல்களின் திரட்டைப் 'பெருநூல் திரட்டு'

என்கின்றோம். இவ்வகையில் திருவெங்கைக் கலம்பகம், திருவெங்கையுலா ஆகிய இரண்டு நூல்களின் திரட்டு மட்டும் இடம் பெறுகின்றது.

இ. சிறு மற்றும் பெருநூல் திரட்டு

சிவப்பிரகாசர் நூல்களில் சிறுநூல் மற்றும் பெருநூல் ஆகிய இரண்டு நிலைகளும் கலந்த திரட்டு நூல்கள் பல வெளிவந்திருக்கின்றன. இவ்வகையில் சிவஞான பாலைய சுவாமிகள் தாலாட்டு முதலிய 5 நூல்கள் (தாலாட்டு, கலம்பகம், திருப்பள்ளியெழுச்சி, நெஞ்சுவிடு தூது, பிள்ளைத் தமிழ்); சிவஞான பாலைய தேசிகர் திருப்பள்ளியெழுச்சியும் கலம்பகமும்; சிவப்பிரகாச சுவாமிகள் அருளிச்செய்த தோத்திரப் பிரபந்தத்திரட்டு, சிவப்பிரகாச சுவாமிகள் பனுவல் திரட்டு, சிவப்பிரகாசர் பிரபந்தத்திரட்டு ஆகிய மூன்று திரட்டுகளிலும் சிவப்பிரகாசரின் பிரபந்த நூல்கள் 22-ம் கருணைப்பிரகாசரின் இட்டலிங்க அகவலும் மற்றும் திருவெங்கை மான்மியமும் இடம்பெற்றுள்ளன.

சிவப்பிரகாசர் செந்தமிழ் நூல்கள் எனும் திரட்டு நூலில் சிவப்பிரகாசர் நூல்கள் அனைத்தும் வரிசைப்படி வரிசை எண் பெற்று வெளிவந்துள்ளன. இவர்தம் நூல்களில் கிடைக்காத நூல்களுக்கும் அந்நூலுக்கான வரிசைஎண் கொடுத்து 'இந்நூல் இதுவரை கிடைக்க வில்லை' என்ற குறிப்போடு இத்திரட்டு வெளிவந்துள்ளது.

சோணசைலமாலையும் சிவநாம மகிமையும்; சோணசைலமாலை நால்வர் நான்மணிமாலை நன்னெறியும்; சோணசைலமாலை முதலிய பிரபந்தங்கள் (சோணசைலமாலை, நால்வர் நான்மணிமாலை, திருச்செந்தில் நிரோட்டக யமகவந்தாதி, பழமலையந்தாதி, பிட்சாடன நவமணிமாலை, பெரியநாயகியம்மை விருத்தம், பெரியநாயகியம்மை கலித்துறை, நன்னெறி); ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் சீர்த்திமாலைத் திரட்டு (சோணசைல மாலை, நால்வர் நான்மணிமாலை, பிட்சாடன நவமணிமாலை, இஷ்ட லிங்கவபிஷேக மாலை, நிரஞ்சன மாலை, கைத்தலமாலை, சதமணிமாலை) போன்ற சிறு மற்றும் பெருநூல் திரட்டுகளும் வெளிவந்திருக்கின்றன.


3. பொருள்நிலைப் பதிப்பு

பொருள்நிலையில் சிவப்பிரகாசரின் திரட்டு நூல்கள் பாட்டுடைத் தலைவர் பற்றியதாகவும், பாடல்பெற்ற தலத்தைப் பற்றியதாகவும் அமைந் திருப்பதைக் காணமுடிகிறது. சிவஞான பாலைய தேசிகர் தாலாட்டு முதலிய பிரபந்தங்கள், சிவஞான பாலைய தேசிகர் திருப்பள்ளி யெழுச்சியும் கலம்பகமும் ஆகிய இரண்டு திரட்டுகளும் பாட்டுடைத் தலைவராகிய சிவஞான பாலையரைப் பற்றியதாகவும்; திருவெங்கைக் கலம்பகம், திருவெங்கையுலா ஆகிய திரட்டு திருவெங்கை எனும் தலம் பற்றியதாகவும் அமைந்திருப்பதைக் காணலாம்.

4. திரட்டுகளின் தொகுப்புப் பதிப்பு

பல்வேறு காலகட்டங்களில் ஒரே அளவாக, ஒரே பதிப்பாசிரியரால் வெளியிடப்பெற்ற திரட்டு நூல்களின் தொகுப்பாகவும் சிவப்பிரகாசரின் திரட்டு நூல்கள் அமைந்திருக்கின்றன. சோணசைலமாலை முதலிய பிரபந்தங்கள் (1885), திருவெங்கைக்கோவை (1890), திருவெங்கைக் கலம்பகம், திருவெங்கையுலா (1890), இஷ்டலிங்கவபிஷேக மாலை முதலிய பிரபந்தங்கள் (1888), சிவஞான பாலைய தேசிகர் தாலாட்டு முதலிய பிரபந்தங்கள் (1887), கருணைப் பிரகாசரின் இஷ்டலிங்க அகவல் (1890) ஆகிய தனித்தனித் திரட்டு நூல்கள் அனைத்தையும் முறையாகக் கொண்டு சிவப்பிரகாசரின் சரித்திரம் (1890) எனும் நூலை முன்னதாகக் கொண்டு 'சிவப்பிரகாச சுவாமிகள் அருளிச் செய்த தோத்திரப் பிரபந்தத் திரட்டு' (1890) எனும் திரட்டுகளின் தொகுப்புப் பதிப்பு வெளிவந்துள்ளது. முதற்பதிப்பின் முறைவைப்பிலேயே இவற்றின் மறுபதிப்பும் வெளிவந்துள்ளது. அதாவது முதற்பதிப்பில் வெளிவந்த திரட்டுகளின் முறைவைப்பானது 1906, 1906, 1906, 1904, 1904, 1904, 1906-ஆம் ஆண்டுகளில் வெளிவந்த திரட்டுகளைத் தொகுத்து 1906-ஆம் ஆண்டு மறுபதிப்பாக வெளிவந்துள்ளது.

இப்பதிப்பு வகைகளையெல்லாம் பார்க்கும்போது துறைமங்கலம் சிவப்பிரகாசரின் நூல்கள் மூலம் மட்டும் கொண்ட தனிநூல் பதிப்பாகவும், மூலமும் உரையும் கொண்ட தனிநூல் பதிப்பாகவும், அமைப்புநிலைத் திரட்டுப் பதிப்பாகவும், அளவுநிலைத் திரட்டுப் பதிப்பாகவும், பொருள்நிலைத் திரட்டுப் பதிப்பாகவும், திரட்டுகளின் தொகுப்புப் பதிப்பாகவும் எனப் பல நிலைகளில் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றமை தெளிவு. ஒரு நூலாசிரியரின் நூல்கள் இவ்வளவு வகைகளில் பதிப்பாகி இருப்பது சிவப்பிரகாசர் நூல்களுக்கான தனிச்சிறப்பை வெளிப்படுத்துகின்றது எனலாம்.



சிவப்பிரகாசர் நூல்களின் பதிப்பு விவரம்

அ. தனிநூற் பதிப்பு

1. இட்டலிங்க அபிடேகமாலை பழைய உரையுடன், மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடு, ஹனுமான் அச்சியந்திரசாலை, விழுப்புரம், 1965.
2. கூவப்புராணம், ஞானசுந்தர ஐயர் - எம். வீராசாமிச் செட்டியார், மிமோரியல் அச்சுக்கூடம், சென்னை, 1880.
3. திருக்கூவப் புராணம், இராமலிங்க சுவாமிகள் (பதி.), சிதம்பரம் ஈசானிய மடம், மிமோரியல் அச்சுக்கூடம், சென்னை, 1884.
4. கூவப்புராணம், க.வ. திருவேங்கடநாயுடு (குறிப்புரை), எஸ். மூர்த்தி - கோ. வெளியீடு, கபாலி அச்சுக்கூடம், சென்னை, 1908, 2-ம் பதிப்பு.
5. கூவப்புராணம், குமாரச்சேரி சுப்பராய முதலியார் (பதி.), 1969.
6. சதமணி மாலை......., சரஸ்வதி பிரஸ், பாதிரிப்புலியூர், 1938.
7. சித்தாந்த சிகாமணி - உரையுடன், நாகி ரெட்டியார் (உரை), கலாரத்நாகரம் பிரஸ், சென்னை, 1910.
8. சிவஞான பாலைய சுவாமிகள் கலம்பகம், இராமலிங்க சுவாமிகள் (பதி,), மிமோரியல் அச்சுக்கூடம், சென்னை, 1887.
9. சிவஞான பாலைய சுவாமிகள் நெஞ்சுவிடு தூது, இராமலிங்க சுவாமிகள் (பதி.) மிமோரியல் அச்சுக்கூடம், சென்னை, 1887.
10. சிவஞான பாலைய சுவாமிகள் நெஞ்சுவிடு தூது, சிவஞான பாலைய சுவாமிகள் வெளியீடு, ஆனந்தா பிரஸ், புதுவை, 1949.
11. சிவஞான பாலைய சுவாமிகள் பிள்ளைத்தமிழ், இராமலிங்க சுவாமிகள் (பதி.), ஆறுமுக விலாச அச்சுக்கூடம், சென்னை, 1887.
12. சிவஞான பாலைய சுவாமிகள் பிள்ளைத்தமிழ் - மூலமும் உரையும், மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடு, ஹனுமான் அச்சியந்திரசாலை, விழுப்புரம், 1968.
13. சிவநாம மகிமை, க.வ. திருவேங்கடநாயுடு (பதி.), கலாரத்நாகர அச்சுக்கூடம், சென்னை, 1899.
14. சிவநாம மகிமை, மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடு, ஹனுமான் அச்சியந்திர சாலை, விழுப்புரம், 1969.
15. சிவப்பிரகாச விகாசம், அடிகளாசிரியன் (பதி.), ..., 1939.
16. சிவப்பிரகாச விகாசம்-பாட்டும் சிற்றுரையும், அடிகளாசிரியன் (உரை & பதி.), சரஸ்வதி மகால் நூலக வெளியீடு, தஞ்சை, 1977.

17. சீகாளத்திப் புராணம், அரங்கநாத முதலியார் - அருணாசலக் குருக்கள் (பதி.), கலாசாகர அச்சுக்கூடம், புதுவை, 1861.

18. சீகாளத்திப் புராணம், இராமலிங்க சுவாமிகள் (பதி.), மிமோரியல் அச்சுக்கூடம், சென்னை, 1888.

19. சீகாளத்திப் புராணம்-உரையுடன், இராமானந்தயோகி (உரை), பூ. சண்முக முதலியார் (பதி.), மதராஸ் டைமண்டு அச்சுக்கூடம், சென்னை, 1916.

20. சோணசைலமாலை, சி. பெருமாள் நாடார் (பதி.), சின்னயநாயர் அச்சுக்கூடம், ..., 1888.

21. சோணசைல மாலை, வே.கி. வேலு முதலியார் (பதி.), ..., 1891.

22. சோணசைல மாலை, கொ. லோகநாத முதலியார் (பதி.), மனோன்மணி விலாச அச்சுக்கூடம், சென்னை, 1902.

23. சோணசைல மாலை, லோகநாத முதலியார் (பதி.), ..., 1915.

24. சோணசைல மாலை-உரையுடன், இராமலிங்கத் தம்பிரான் (உரை), மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலை, சென்னை, 1925.

25. சோணசைல மாலை, நா. கதிரைவேற்பிள்ளை (பதி.), பூமகள் விலாச அச்சுக்கூடம், சென்னை, 1932.

26. சோணசைல மாலை-உரையுடன், க.வ. திருவேங்கடநாயுடு (உரை), ஆறுமுக நாவலர் அச்சுக்கூடம், சென்னை, 1961.

27. சோணசைல மாலை-உரையுடன், மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடு, மயிலம், 1994.

28. சோணசைல மாலை, சிவனடியார் திருக்கூட்ட வெளியீடு, காஞ்சி, 1994.

29. திருச்செந்தில் நிரோட்டக யமகவந்தாதி, சதாசிவபிள்ளை (பதி.), வர்த்தமான தரங்கிணி அச்சுக்கூடம், சென்னை, 1868, 3-ம் பதிப்பு

30. திருச்செந்தில் நிரோட்டக யமகவந்தாதி, சதாசிவபிள்ளை - ஆறுமுக நாவலர் (பதி.), வித்தியானுபாலன யந்திரசாலை, சென்னை, ஜூன் 1873, 4-ம் பதிப்பு.

31. திருச்செந்தில் நிரோட்டக யமகவந்தாதி, சதாசிவப்பிள்ளை (பதி.), வித்தியானுபாலன யந்திரசாலை, சென்னை, 1886, 5-ம் பதிப்பு.

32. திருச்செந்தில் நிரோட்டக யமகவந்தாதி, சதாசிவப்பிள்ளை (பதி.), வித்தியானுபாலன யந்திரசாலை, சென்னை, 1887, 6-ம் பதிப்பு.

33. திருச்செந்தில் நிரோட்டக யமகவந்தாதி, இராமலிங்கசுவாமி (பதி.), மிமோரியல் அச்சுக்கூடம், சென்னை, 1888.

34. திருச்செந்தில் நிரோட்டக யமகவந்தாதி-உரையுடன், ஆறுமுக நாவலர்(உரை) பொன்னம்பல பிள்ளை (பதி.), வித்தியானுபாலன யந்திரசாலை, 1913, 9-ம் பதிப்பு.

35. திருவெங்கைக்கோவை, இராமலிங்க சுவாமி (பதி.), இந்துதியலாஜிகல் யந்திரசாலை, சென்னை, 1890.

36. திருவெங்கைக்கோவை, இராமலிங்க சுவாமி (பதி.), கலாரத்நாகர அச்சியந்திரசாலை, சென்னை, 1906, 2-ம் பதிப்பு.

37. திருவெங்கைக்கோவை-உரையுடன், இராமானந்த யோகிகள் (உரை), ரிப்பன் பிரஸ், சென்னை, 1909.

38. திருவெங்கைக்கோவை, சிதம்பர முதலியார் (பதி.), ..., 1934.

39. திருவெங்கைக்கோவை-உரையுடன், இராமானந்த யோகிகள் (உரை), ரிப்பன் பிரஸ், சென்னை, 1938, 2-ம் பதிப்பு.

40. நன்னெறி-உரையுடன், ஊ. புஷ்பரதச் செட்டியார் (பதி.), கலாரத்நாகர அச்சுக்கூடம், சென்னை, 1868, 2-ம் பதிப்பு.

41. நன்னெறிப் பதவுரை, சரவணபுரம் சண்முக முதலியார் (பதி.), விவேகவிளக்க அச்சுக்கூடம், சென்னை, 1875.

42. நன்னெறி-உரையுடன், ஊ. புஷ்பரதச் செட்டியார் (பதி.), கலாரத்னாகர அச்சுக்கூடம், சென்னை, 1876, 6-ம் பதிப்பு.

43. நன்னெறி-உரையுடன், சி. மாணிக்க முதலி - கோ., மனோன்மணி விலாச அச்சுக்கூடம், சென்னை, 1877, 2-ம் பதிப்பு.

44. நன்னெறி-மூலமும் உரையும், அருணாசல முதலியார் (உரை), கலைக்கியான முத்திராஷரசாலை, சென்னை, 1882.

45. நன்னெறி-மூலமும் உரையும், சுப்பிரமணியசுவாமி (பதி.), மாதவ நிவாச அச்சுக்கூடம், சென்னை, 1883.

46. நன்னெறி, ஆறுமுக நாவலர் - சதாசிவம் பிள்ளை (பதி.), வித்தியானுபாலன யந்திரசாலை, சென்னை, 1889.

47. நன்னெறி, முத்துசிதம்பரம்பிள்ளை (பதி.), எஸ்.பி.சி.கே. பிரஸ், சென்னை, 1895.

48. நன்னெறி, ஈ. மார்ஸ்டன் (பதி.), எஸ்.பி.சி.கே. பிரஸ், சென்னை, 1897.

49. நன்னெறி, கா. நமசிவாய முதலியார் - சிவஞானம் பிள்ளை (பதி.), குமாரசாமி நாயுடு & சன்ஸ்., எஸ்.பி.சி.கே. பிரஸ், சென்னை, 1904.

50. நன்னெறி, எஸ். சுப்பிரமணிய ஐயர் (பதி.), ஆ. கோவிந்தராஜுலு நாயுடுவின் வெஸ்ட் எண்ட் கம்பெனி, சென்னை, 1905.

51. நன்னெறி, சி.ஆர். நமசிவாய முதலியார் (பதி.), சி. குமாரசாமி நாயுடு & சன்ஸ், எஸ்.பி.சி.கே. பிரஸ், சென்னை, 1906.

52. நன்னெறி, ஈ. மார்ஸ்டன் (பதி.), மாக்மில்லன் கம்பெனி, எஸ்.பி.சி.கே. பிரஸ், சென்னை, 1908.

53. நன்னெறி, சி.வை. தாமோதரம்பிள்ளை (பதி.), மாக்மில்லன் அண்டு கம்பெனி லிமிடெட், எஸ்.பி.சி.கே. பிரஸ், சென்னை, 1909.

54. நன்னெறி-மூலமும் உரையும், ஸி. குமாரசாமி நாயுடு சன்ஸ், சென்னை, 1943.

55. நன்னெறி-உரையுடன், ந.மு. வேங்கடசாமி நாட்டார் (உரை), சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1962.

56. நன்னெறி-உரையுடன், ந.மு. வேங்கடசாமி நாட்டார் (உரை), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1972, 6-ம் பதிப்பு.

57. நால்வர் நான்மணிமாலை-உரையுடன், முருகேச முதலியார் (உரை), ஊ. புஷ்பரதச்செட்டியார், கலாரத்னாகர அச்சியந்திரசாலை, சென்னை, 1878.

58. நால்வர் நான்மணிமாலை - விருத்தியுரையுடன், இராமலிங்க சுவாமிகள் (உரை), ஆறுமுக விலாச அச்சுக்கூடம், சென்னை, 1896.

59. நால்வர் நான்மணிமாலை-உரையுடன், ச. சிவகாமி அம்மையார் (உரை), மாதர் கழகம், தூத்துக்குடி, 1950.

60. நால்வர் நான்மணிமாலை, இராமலிங்க சுவாமிகள் (விருத்தியுரை), தருமையாதீன வெளியீடு, தருமபுரம், 1955, முதற்பதிப்பு, 1973, இரண்டாம் பதிப்பு.

61. நால்வர் நான்மணிமாலை, இராமலிங்க சுவாமிகள் (விருத்தியுரை), செந்தமிழ் நூற்பதிப்புக் கழக வெளியீடு, சிதம்பரம், 1962.

62. நால்வர் நான்மணிமாலை, இராமலிங்க சுவாமிகள் (விருத்தியுரை), திருஐயன் பெருமாள் கோனார் (பதி.), பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1966.

63. நால்வர் நான்மணிமாலை, குமரன் செந்தமிழ் நூற்கழக வெளியீடு, ..., 1970.

64. நால்வர் நான்மணிமாலை, திருஞானசம்பந்தர் கம்பெனி வெளியீடு, சென்னை, 1995.

65. நால்வர் நான்மணிமாலை-உரையுடன், பொம்மபுர ஆதீன வெளியீடு, மயிலம், 1995.

66. நால்வர் நான்மணிமாலை, கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு, தஞ்சை.

67. பழமலையந்தாதி, ஊ. புஷ்பரதச்செட்டியார் (பதி.), கலாரத்நாகர அச்சுக்கூடம், சென்னை, 1868.

68. பழமலையந்தாதி-மூலமும் உரையும், அருணாசல குருக்கள் (உரை), லக்ஷ்மி விலாச சாலை, ..., 1871.

69. பிட்சாடன நவமணிமாலை, ஆறுமுக நாவலர் (பதி.), வித்தியானுபாலன யந்திரசாலை, சென்னை, 1873.

70. பிட்சாடன நவமணிமாலை, வி. சுந்தர முதலியார் (பதி.), விக்டோரியா ஜுபிளி அச்சுக்கூடம், சென்னை, 1890.

71. பிட்சாடன நவமணிமாலை, அருணாசல முதலியார் (பதி.), மனோன்மணி விலாச அச்சுக்கூடம், சென்னை, ...

72. பிரபுலிங்க லீலை, இராமசாமி சுவாமியார் (பதி.), ஜீவரட்சாமிர்த அச்சுக்கூடம், சென்னை, 1830.

73. பிரபுலிங்க லீலை, ..., கல்வி விளக்கம் பிரஸ், சென்னை, 1846.

74. பிரபுலிங்க லீலை-உரையுடன், கந்தசாமி ஐயர் (உரை) - சரவணப் பெருமாளையர் (உரை), கல்வி விளக்க அச்சுக்கூடம், சென்னை, 1847.

75. பிரபுலிங்க லீலை, ஆறுமுக நாவலர் (பதி.), ..., 1864.

76. பிரபுலிங்க லீலை, ஏழுமலைப் பிள்ளை (பதி.), ..., 1875, 1882.

77. பிரபுலிங்க லீலை, பாரிப்பாக்கம் முனியப்ப முதலியார் (பதி.), விவேக விளக்க அச்சுக்கூடம், சென்னை, 1875.

78. பிரபுலிங்க லீலை, சரவண பண்டிதர் (பதி.), ..., 1880.

79. பிரபுலிங்க லீலை, சுப்பராய நாயக்கர் (பதி.), விவேக விளக்க அச்சுக்கூடம், சென்னை, 1882.

80. பிரபுலிங்க லீலை, அ. சச்சிதானந்தம் பிள்ளை (பதி.), சென்ட்ரல் பிரஸ், சென்னை, 1885.

81. பிரபுலிங்க லீலை, டி. முருகேச முதலியார் (பதி.), சென்ட்ரல் பிரஸ், சென்னை, 1885.

82. பிரபுலிங்க லீலை, கடலூர் கிருஷ்ணப்பச் செட்டியார் (பதி.), சகலகலா நிலைய அச்சுக்கூடம், சென்னை, 1888.

83. பிரபுலிங்க லீலை, நாராயண சரணர் (பதி.), ஸ்ரீ கிருஷ்ண விலாச அச்சியந்திர சாலை, தஞ்சை, 1899.

84. பிரபுலிங்க லீலை, சொக்கலிங்க முதலியார் (பதி.), ..., 1900.

85. பிரபுலிங்க லீலை, சாம்பசிவம் பிள்ளை (பதி.), ..., 1901.

86. பிரபுலிங்க லீலை-விருத்தியுரையுடன், ஈசூர் கணக்கு சச்சிதானந்தம் பிள்ளை (விருத்தியுரை), ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் தர்ம பரிபாலன சபை வெளியீடு, கலாரத்நாகர அச்சுக்கூடம், சென்னை, 1905, இரண்டாம் பதிப்பு.

87. பிரபுலிங்க லீலை-உரையுடன், கந்தசாமி ஐயர் (உரை), கல்வி விளக்கம் பிரஸ், சென்னை, 1906.

88. பிரபுலிங்க லீலை-குறிப்புரையுடன், யாழ்ப்பாணம் நா. கதிரவேல் பிள்ளை (குறிப்புரை), வித்தியாரத்தினாகர அச்சுக்கூடம், சென்னை, 1909.

89. பிரபுலிங்க லீலை, டி.சி. பார்த்தசாரதி (குறிப்புரை), பூமகள் விலாசம் பிரஸ், சென்னை, 1930.

90. பிரபுலிங்க லீலை-பகுதி 1, எஸ். துரைசாமி ஐயர் (உரை), பொம்மபுர ஆதீன வெளியீடு, மயிலம், 1950.

91. பிரபுலிங்க லீலை-மூலமும் உரையும்-பகுதி - 2, எஸ். துரைசாமி ஐயர் (உரை), பொம்மபுர ஆதீனம் வெளியீடு, மயிலம், 1953.

92. பிரபுலிங்க லீலை, சு.அ. இராமசாமிப் புலவர் (குறிப்புரை), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, முதற் பதிப்பு, 1954, மறுபதிப்புகள், 1961, 1963, 1966, 1969, 1974.

93. பிரபுலிங்க லீலை, ருக்மணி அம்மையார் (பதி.), ஆதிசேஷ ஐயர் வெளியீடு, ..., 1975.

94. பெரியநாயகியம்மை கலித்துறை, ஆறுமுக நாவலர் (பதி.), வித்தியானுபாலன யந்திரசாலை, சென்னை, 1873.

95. பெரியநாயகியம்மை கலித்துறை, அருணாசல முதலியார் (பதி.), மனோன்மணி விலாச அச்சுக்கூடம், சென்னை, 1876.

96. பெரியநாயகியம்மை கலித்துறை, வி. சுந்தர முதலியார் (பதி.), விக்டோரியா ஜுபிளி அச்சுக்கூடம், சென்னை, 1890.

97. பெரியநாயகியம்மை கலித்துறை, பொம்மபுர ஆதீன வெளியீடு, மயிலம், 1995.

98. பெரியநாயகியம்மை நெடுங்கழி நெடிலாசிரிய விருத்தம், ஆறுமுக நாவலர் (பதி.), வித்தியானுபாலன யந்திரசாலை, சென்னை, 1873, 3-ம் பதிப்பு.

99. பெரியநாயகியம்மை நெடுங்கழி நெடிலாசிரிய விருத்தம், வி. சுந்தர முதலியார் (பதி.), விக்டோரியா ஜுபிளி அச்சுக்கூடம், சென்னை, 1890.

100. வேதாந்த சூளாமணி-மூலமும் உரையும், அருணாச்சல சுவாமிகள் (உரை), பாரிப்பாக்கம் முனியப்ப முதலியாரலு மெய்ஞ்ஞான விளக்க அச்சுக்கூடம், சென்னை, 1861.

101. வேதாந்த சூளாமணி, அருணாச்சல சுவாமிகள் (பதவுரை), ஈசூர் கணக்கு சச்சிதானந்தபிள்ளை (பொழிப்புரை, த. கோவிந்தசாமி ஆச்சாரியார் (பதி.), சிவானந்த நிலைய அச்சுக்கூடம், ..., 1882, இரண்டாம் பதிப்பு.

102. வேதாந்த சூளாமணி, பிறைசை. அருணாச்சல சுவாமிகள் (விரிவுரை), கோ. வடிவேலு செட்டியார் (குறிப்புரை). சி.பொ. சுப்பிரமணிய பிள்ளை (பதி.), ரிப்பன் அச்சியந்திர சாலை, சென்னை, 1908.

103. வேதாந்த சூடாமணி-மூலமும் சந்தோஷதாயிநி உரையும், ஸ்ரீ காசிகாநந்த ஞாநாச்சாரிய சுவாமிகள் (உரை), பூவணநாதர் புத்தகாலயம், மதுரை, 1974.

ஆ. திரட்டுப் பதிப்பு

104. இஷ்டலிங்கவபிஷேக மாலை முதலிய பிரபந்தங்கள், இராமலிங்க சுவாமிகள் (பதி.), மிமோரியல் அச்சுக்கூடம், சென்னை, 1885.

105. இஷ்டலிங்கவபிஷேக மாலை முதலிய பிரபந்தங்கள், வி. சுந்தர முதலியார் (பதி.), விக்டோரியா ஜூபிளி அச்சுக்கூடம், சென்னை, 1890.

106. இஷ்டலிங்கவபிஷேக மாலை முதலிய பிரபந்தங்கள், இராமலிங்க சுவாமிகள் (பதி.), கலாரத்நாகர அச்சியந்திரசாலை, சென்னை, 1904, இரண்டாம் பதிப்பு.

107. சிவஞான பாலைய சுவாமிகள் தாலாட்டு முதலிய 5 நூல்கள், சேயூர் ப. கந்தசாமி தம்பிரான் (பதி.), சபாமாணிக்கம்பிள்ளை அச்சுக்கூடம், புதுவை, 1977.

108. சிவஞான பாலைய தேசிகர் தாலாட்டு முதலிய பிரபந்தங்கள், இராமலிங்க சுவாமிகள் (பதி.), மிமோரியல் அச்சுக்கூடம், சென்னை, 1887.

109. சிவஞான பாலைய தேசிகர் திருப்பள்ளியெழுச்சியும் கலம்பகமும், சிவஞான பாலைய சுவாமிகள் வெளியீடு, ஜெகநாதம் பிரஸ், புதுவை, 1934.

110. சிவப்பிரகாச சுவாமிகள் அருளிச் செய்த தோத்திரப் பிரபந்தத் திரட்டு, இராமலிங்க சுவாமிகள் (பதி.), இந்துதியலாஜிகல் யந்திரசாலை, சென்னை, 1890.

111. சிவப்பிரகாச சுவாமிகள் அருளிச் செய்த தோத்திரப் பிரபந்தத்திரட்டு, இராமலிங்க சுவாமிகள் (பதி.), கலாரத்நாகரம் அச்சுக்கூடம், சென்னை, 1907, இரண்டாம் பதிப்பு.

112. சிவப்பிரகாச சுவாமிகள் பனுவல் திரட்டு, சு. இராமசாமிப் புலவர் (விளக்கக் குறிப்பு), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1972, முதற்பதிப்பு, 1978, மறுபதிப்பு.

113. சிவப்பிரகாசர் செந்தமிழ் நூல்கள், மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடு, ஸ்ரீ ஷண்முக அச்சுக்கூடம், திருப்பாதிரிப்புலியூர், 1944.

114. சிவப்பிரகாசர் பிரபந்தத்திரட்டு, சுவாமிநாத பண்டிதர் (குறிப்புரை). சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1916 முதற்பதிப்பு, 1941 மறுபதிப்பு

115. சோணசைல மாலை, சிவநாம மகிமை-உரையுடன், க.வ. திருவேங்கட நாயுடு (உரை), கலாரத்நாகர அச்சுக்கூடம், சென்னை, 1899.

116. சோணசைல மாலை, நால்வர் நான்மணிமாலை, நன்னெறி, பொம்மபுர ஆதீன வெளியீடு, மயிலம், 1993.

117. சோணசைல மாலை முதலிய பிரபந்தங்கள், இராமலிங்க சுவாமிகள் (பதி.), மிமோரியல் அச்சுக்கூடம், சென்னை, 1885.

118. சோணசைலமாலை முதலிய பிரபந்தங்கள், இராமலிங்க சுவாமிகள் (பதி.), கலாரத்நாகர அச்சியந்திரசாலை, சென்னை, 1906, 2-ம் பதிப்பு.

119. திருவெங்கைக் கலம்பகம், திருவெங்கையுலா, இராமலிங்க சுவாமிகள் (பதி.) இந்துதியலாஜிகல் யந்திரசாலை, சென்னை, 1890.

120. திருவெங்கைக் கலம்பகம், திருவெங்கையுலா, இராமலிங்க சுவாமிகள் (பதி.) கலாரத்நாகர அச்சியந்திரசாலை, சென்னை, 1906, 2-ம் பதிப்பு.

121. நன்னெறி-மூதுரை-நல்வழி, அண்ணாசாமி முதலியார் (பதி.), ஆ.ம.து.வே. ஆரியர் முத்தமிழ் வாணிபீடம் பிரஸ், சென்னை, 1869.

122. நன்னெறி-வாக்குண்டாம்-நல்வழி, டி. பரசுராம முதலியார் (பதி.) பரப்பிரம்ம முத்திராக்ஷரசாலை, சென்னை, 1874.

123. நன்னெறி-மூதுரை-நல்வழி, பி.எஸ். கிருஷ்ணசாமிப்பிள்ளை (பதி.), ..., சென்னை, 1875.

124. நன்னெறி (நீதிமஞ்சரித் திறவுகோல்), பு. தெய்வசிகாமணி முதலியார் (பதி.) மிமோரியல் அச்சுக்கூடம், சென்னை, 1877.

125. நன்னெறி (செய்யுள் திரட்டு), த. செய்யப் முதலியார் (பதி.), ஸ்ரீ நிதி பிரஸ், சென்னை, 1878.

126. நன்னெறி (நீதிமஞ்சரித் தருப்பணம்), முருகேச முதலியார் - ஊ. புஷ்பரதச் செட்டியார் (பதி.), கலாரத்நாகர அச்சுக்கூடம், சென்னை, 1879.

127. நன்னெறி (நீதிநூற்றிரட்டு), பு.பெ. கிருஷ்ணசாமி நாயகர் - நமசிவாயம் பிள்ளை (பதி.), பரப்பிரம்ம முத்திராக்ஷர சாலை, சென்னை, 1879.

128. நன்னெறி-மூலமும் உரையும் (வாக்குண்டாம், நல்வழி), சுப்பிரமணிய சுவாமி (பதி.), மாதவ நிவாச அச்சுக்கூடம், சென்னை, 1883.

129. நன்னெறி (நீதி மஞ்சரி), நமசிவாயம் பிள்ளை (உரை), மதராஸ் ஸ்கூல் புக் அண்ட் லிட்ரரி சொசைட்டி, சென்னை, 1884.

130. நன்னெறி (நீதி மஞ்சரி), நமசிவாயம் பிள்ளை (உரை), கல்பீனியன் அச்சுக்கூடம், சென்னை, 1885.

131. நால்வர் நான்மணிமாலை முதலியன, அருணாசல முதலியார் (பதி.), மனோன்மணி விலாச அச்சுக்கூடம், சென்னை, 1876.

132. நால்வர் நான்மணிமாலை முதலியன, ஆறுமுக நாவலர் (பதி.), வித்தியானுபாலன யந்திரசாலை, சென்னை, 1872, 1873.

133. நால்வர் நான்மணிமாலை முதலியன, வ. சுந்தர முதலியார் (பதி.), விக்டோரியா ஜுபிளி அச்சுக்கூடம், சென்னை, 1890.

134. நால்வர் நான்மணிமாலை முதலியன, சதாசிவம் பிள்ளை (பதி.), ..., 1909.

135. பழமலையந்தாதி-திருப்புகலூரந்தாதி, தில்லைக் கலம்பகம்-மூலமும் உரையும், நெற்குன்றவான முதலியார் - அருணாசல குருக்கள் (பதி.), லக்ஷ்மி விலாச பிரஸ், ...

136. ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் சீர்த்தி மாலைத் திரட்டு, ...

37. "சிவப்பிரகாசரின் மாலை நூல்கள்

சு. சண்முகசுந்தரம், மதுரை.

சிவப்பிரகாசர் என்ற பெயர் பரவலாக உள்ளது. துறைமங்கலம் சிவப்பிரகாசர் என்ற பெயர் இலக்கிய வட்டங்களின் கற்பனைக் களஞ்சியம் நல்லாற்றூர் சிவப்பிரகாசர் என்று சொல்லுவதும் உண்டு.

பதினேழாம் நூற்றாண்டின் களஞ்சியமாக விளங்கிய சிவப்பிரகாச சுவாமிகள் தொண்டை நாட்டில் காஞ்சிபுரத்தில் தோன்றிய இவர், தந்தையாகிய குமாரசாமி தேசிகரை இழந்த பிறகு குடும்பத்துடன் திருவண்ணாமலை சென்று சாளிகந்த குருதேவரைத் தம் சமய குருவாகவும் ஏற்றுக்கொண்டு பக்தி நெறியில் நின்று, தலங்கள் தோறும் சென்று வழிபட்டு தங்கியும் பல இலக்கியங்களைப் படைத்தவர்.

வெள்ளியம்பலத் தம்பிரானிடம் இலக்கணம் கற்றுப் புலவர் ஒருவரோடு போட்டி போட்டு இதழ் ஒட்ட இயலாத நிரோட்டகயமக அந்தாதி நூலைப் பாடி அவரை வென்றார். பிறகு துறைமங்கலம் சென்று துறவியானார். முப்பத்திரண்டே வயதில் இறைவனிடம் சேர்ந்தவர். இவர் தமிழிற்கு ஆற்றிய தொண்டு அளப்பரியதாகும்.

சிவப்பிரகாசரின் இனிய தமிழ்ச்சொல் மாலையை ஈசனுக்குச் சாத்தும் பிறவியே தமக்கு வேண்டும் எனத் தமிழுக்காகவே வாழ்ந்த சிறந்த மொழிப் பற்றாளரான இவர் செய்த மாலை நூல்கள் ஏழு. அவை:

1. இட்டலிங்க அபிடேக மாலை
2. கைத்தல மாலை
3. சோணசைல மாலை
4. நால்வர் நான்மணிமாலை
5. பழமலைநாதர் பிட்சாடன நவமணி மாலை
6. தசமணி மாலை
7. இட்டலிங்கப்பெருமான் நிரஞ்சன மாலை

இந்நூல்கள் இறைவன் அருளியது வேதம் என்றும், சைவ சித்தாந்த நூல் என்றும், வீரசைவ நூல் என்றும், இறைவனின் திருநாமம் வழிப் பாட்டாக பாடியுள்ள நூல்களின் எண்ணிக்கை 35 ஆகும்.

இவற்றுள் தசமணி மாலை சுவாமிகள் தில்லையில் உறைந்தபோது பாடியது. பிட்சாடன மாலையைத் திருமுதுகுன்றத்தில் சுவாமிகள் உறைந்த போது, இறைவன் பிட்சாடன கோலத்துடன் குன்றத்தில் உறைவதை நேரில் தரிசித்துப் பாடியது. அபிஷேகமாலை, நிரஞ்சனமாலை, கைத்தலமாலை இவை சுவாமிகள் நல்லாற்றூரை அடைந்து திருமடம் ஒன்றில் எழுந்தருளிய ஞான்று பாடியது.

இட்டலிங்க அபிடேகமாலை

இந்நூல் வீரசைவ நூல். பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தப்பாடல் பத்தினைக் கொண்டது. இம்மாலை சிறந்த தத்துவப் பொருளைத் தன்னகத்தே கொண்டது.

இட்டலிங்கமாவது அடியவர் தாம் விரும்பி மார்பில் அணிந்து கொள்ளும் இலிங்கமாகும். இதனை வீர சைவர்கள் மட்டும் மார்பில் அணிந்து இருப்பர். அத்தகைய இலிங்கத்திற்கு நாள்தோறும் திருமுழுக்கும் செய்து வழிபாடு செய்தும், அடியவர் உருகித் துதிக்கும் பாங்கில் இம்மாலை அமைந்துள்ளது.

கைத்தல மாலை

இதுவும் வீரசைவ மாலையாகும். இம்மாலை கலித்துறை என்னும் யாப்பில் அமைந்துள்ளது. பத்துப் பாடல்களை உடையது. வீரசைவ மரபைச் சார்ந்த சிவனடியார்கள் தம் அங்கலிங்கத்தை இடது கரத்தில் வைத்து நாடோறும் பூசை செய்வது மரபாகும். பல புண்ணிய தலங்களிலும் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் அடியவர்கள் கரங்களில் அபிடேக நேரத்திற்கு எழுந்தருளியிருத்தலால் அடியவர்களின் கைத்தலம் சிறப்புப் பெறுகின்றது. அந்த நிலையில் அடியவர்களின் கைத்தலத்தின் பெருமையினையும் பேற்றினையும் போற்றும் வகையில் பெருமை கூறும் நூல் இதுவாதலின் கைத்தலமாலை என்னும் பெயரினைப் பெற்றது.

பழமலைநாதர் பிச்சாடன நவமணிமாலை

சிவப்பிரகாசரால் பாடப்பட்ட இம்மாலை ஒன்பது கலிநிலைத்துறைப் பாடல்களைக் கொண்டது.

முன்னாளில் சிவபெருமான் தாருகாவன முனிவர்களின் தருக்கை யடக்கும் பொருட்டுப் பிச்சைக் கேட்பதன் வாயிலாக அவர்தம் மனைவியர் கற்பைக் குலைத்து, முனிவர்களின் செருக்கை யடக்கிய வரலாற்றை எடுத்துக் கூறும் இவ் இலக்கிய மாலைநூல், நவமணிமாலை இலக்கியத்திற்கு முன்னோடியாகும். பிச்சாண்டவர் விழாவைக் கண்ட அடிகளார் இப்பாடல்களைப் பாடிய நூல் என்பர்.

தசமணிமாலை

இம்மாலை நூலும் சிவப்பிரகாசர் பாடியது. வடமொழியில் சைவ சித்தாந்த ஆகம சூத்திரங்கள் உள. அவற்றின் மொழிபெயர்ப்பு போல ஆகம சித்தாந்தக் கருத்துக்களைக் கூறுவது இந்நூல். இந்நூலைச் சிவப்பிரகாசர் சிதம்பரத்தில் இருக்கும்போது பாடியுள்ளார்.

இட்டலிங்கப் பெருமான் நிரஞ்சனமாலை

இம்மாலை நூலும் வீரசைவ நூல். கட்டளைக் கலித்துறையால் முப்பத்தொரு பாடல்கள் கொண்ட இம்மாலை இவ்வாசிரியராலே பாடப்பட்டது. ''நிரஞ்சனம்'' என்னும் வடசொல் ''நிறைவு'', ''இருளின்மை'' ஆகிய பொருள்களைக் குறிக்கும். இங்கு நிறைவு மெய்யறிவை உணர்த்தி நிற்கும். இவ்விலக்கியம் அறிவின்மையைப் போக்கி மெய்யறிவைத் தரவேண்டுமென்று இறைவனிடம் மன்றாடும் போக்கில் அமைந்துள்ளது.

நால்வர் நான்மணிமாலை

செஞ்சொற் கவியின்பத்திற்குச் சிறந்த இலக்கியமாகத் தேனினும் இனிய செந்தமிழ்ப் பாக்களை இயற்றிய அருட்பாவலர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளால் யாக்கப்பெற்றது இம்மாலை.

சைவசமயக் குரவர் நால்வரின் திருமுறைகளையும், அக்குரவர் களின் புராண வரலாறுகளையும் திறனாய்ந்து பிழிவாகத் தரும் இந்நூல் நால்வகைப் பாக்களால் நாற்பது பாக்களைக் கொண்டு அந்தாதியாக அமைந்துள்ளது. விநாயகர் மேல் பாடப்பட்ட காப்புப்பாடல் ஒன்றும் இடம்பெற்றுள்ளது.

சமயக் குர்வர்கள் நால்வரையும் பாடுபொருளாகக் கொண்ட இந்நூலுள் திருஞானசம்பந்தரை வெண்பாவிலும் திருநாவுக்கரசரைக் கட்டளைக் கலித்துறையினாலும் சுந்தரரை விருத்தத்தினாலும் மாணிக்கவாசகரை அகவற்பாவினாலும் போற்றி உள்ளார்.

சோணசைல மாலை

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தினால் ஆன நூறு பாடல் களைக் கொண்ட இந்நூல் சிவப்பிரகாசரால் பாடப்பட்டது. விநாயகரைப் பற்றிய காப்புப்பாடல் ஒன்றும் இடம்பெற்றுள்ளது. பாடல்களின் பன்னிரண்டடி களில் சோணசைலமாகிய திருவண்ணாமலையின் பெருமைகளையும், சிறப்புக்களையும், இயற்கை வளங்களையும் மிகுந்த கற்பனையோடு வருணித்துச் சோணசைலனை முன்னிலையாக்கி விளித்துரைக்கின்றார். முன்னிரண்டடிகளில் தம் குறைகளைக் கூறித் தமக்கு அருள்செய்ய வேண்டுமென்று முறையிடுகின்றார். ஒவ்வொரு பாடலின் ஈற்றிலும்

''சோணசைலனே கைலை நாயகனே'' என்ற சொற்றொடர் இடம் பெறுகின்றது. 32 பக்கங்களைக் கொண்ட இம்மாலை நூல் 100 பாடல் களையும் கொண்டது. சென்னை திருமகள் விலாச அச்சுக்கூடம் 1937-ல் வெளியிட்டுள்ளது. பாடல் 89; பக்கம் 28.

பொன்னிடத் தமைந்த மணியென வடைந்து
புண்ணியர்க் கருளுநின் பதங்க
ளென்னிடத் திரும்பி னடைந்த செம் மணிபோ
லெய்திய தம்மவோ வியம்பே
மன்னிடக் கடலுள எடங்கும்வெற் பன்றி
மலைதரு மருட் பெருங் கடலைத்
தன்னிடத் தடக்கு மலையெனுஞ் சோண
சைலனே கைலைநா யகனே.

இதுபோன்ற பாடலின் அடிப்படையில் இம்மாலை நூலின் ஆய்வில் சிவப்பிரகாசர்,

நாளும் இன்னிசையால் நற்றமிழ் வளர்த்த ஞானசம்பந்தரிடத்தும், சூலைநோய் தந்து ஆட்கொள்ளப்பெற்ற ஆளுடைய அரசிடத்தும் ஆராத காதலுடையவர் சோணசைலமாலையில் ''செம்மை பெறவெடுத்த திருத்தோடுடைய செவியாளனும் மெய்ம்மைமொழித் திருப்பதிகம் பாடி வேயுறு தோளிபங்கனை விடை மீது கண்டு அம்மையின் அருளமுத ஞானப்பால் உண்டு சிவஞானம் பெற்றவர்'' என்று சம்பந்தரைப் பாராட்டுவார்.

''அறந்தெரியா ஊத்தைவாய் அறிவில் சிந்தை ஆதம்பக்குடைரோடு அயர்த்து நாளும் மறந்தும், அரன் திருவடிகள் நினையமாட்டாத நாவுக்கரசுக்கு இடர் உறுநோய் தந்து மீட்டுக் கொண்டவர்'' என்று அப்பரடிகளைப் பாராட்டியுள்ளார். இங்ஙனம் பாராட்டிய சிவப்பிரகாசர் இறைவன்பால் வேண்டும் பகுதி கழிபேரின்பம் நல்கும் பெற்றியுடையதாய்த் திகழும்.

''யாவுமறமுடை யுண்ணாமலை முலைப்பால்
பாடச்செய்யாய் எனினும்
மேவுமாதுயர் செய் சூலைநோய் எனினும்
வகுத்து நிற்பாடு மாறருளாய்''

என்ற பாடலில் சிவப்பிரகாசர் ஞானப்பால் நல்காய் எனினும் சூலை நோயாவது கொடுத்து நின்னைப் பாடுமாறு அருளாய் என வேண்டு கின்றார். அப்பரடிகள், ''மனித்த பிறவியும் வேண்டுவதோ இந்த மாநிலத்தே'' என்றார். அக்கருத்தினை அடியொற்றிச் சிவப்பிரகாசர்

''மதுரம் பெருகும் தமிழ்ச்சொன்மலர் நினக்கணியும் பிறவியே வேண்டுவன் தமியேன்'' என்று கூறுவதிலிருந்து பொய்ம்மையாளரைப் பாடாதே.

எந்தை புகலூரரைப் பாடுதற்குரிய மானிடப் பிறவியையே வேண்டுமென்பர். சிவப்பிரகாசர் செந்தமிழ்ப் புலமை மிக்கவர். கற்பனைக் களஞ்சியமாகத் திகழ்பவர். நாற்கவிராசநம்பி இவரது தமிழ்ப்புலமையைத் தமிழ்ச் சான்றோர் ஒருவர் பாராட்டிப் பாடியுள்ளார்.

''தவம்பழுத்த துறவுடையான் தமிழ் பழுத்த
உறமுடையான் தாரணிக்கே
சிவம்பழுத்த உண்மையினைப் பத்திநயம் பல
நாட்டித் தெளிவுகூட்டி
நவம்பழுத்த தமிழ் நூல்கள் நல்கு சிவப்பிர்காசர்''

என்பர். சிவப்பிரகாசரின் கவிதைப் புலமை நலம் சான்றது.

இறைவன் இருமலையையுடையவன். ஒன்று கருணைமலை; மற்றொன்று திருவண்ணாமலை. இறைவன் திருவண்ணாமலையில் தீவடிவினாக எழுந்தருளுமுன் கருணைமலையாகக் காட்சி தந்தான். கருணையாகிய மலையையுடையவன். அன்மொழித்தொகை. அத்தொடர் கருணை மலையாகிய இறைவனைக் குறிக்கும். பின் அவ் இறைவனே கருணையையுடைய மலையுடையான் என வேற்றுமைத்தொகையைத் தழுவி நின்றவன் எனக் குறிப்பிடுவர்.

அணிநலமும் பொருள் வளமும் நிறைந்து பக்தி மணம் கமழும் நூல் சோணசைலமாலை. சுவையூற்றெனத் திகழ்வது. இச்செந்தமிழ்ப் பனுவலைத் தொட்டால் கை மணக்கும்; சுவைத்தால் வாய் இனிக்கும். நினைத்தால் நெஞ்சம் இனிக்கும்.

சிவப்பிரகாசரின் மாலை இலக்கியங்கள் ஏழு. இதில் சோண சைலமாலை, பழமலைநாதர் பிச்சாடன நவமணிமாலை ஆகிய இரண்டும் தலத்தையும், அத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவனின் சிறப்புக்களையும் விவரிக்கின்றன.

கைத்தலமாலை, நிரஞ்சனமாலை, இட்டலிங்க அபிடேகமாலை ஆகிய மூன்றும் நாடோறும் தன் கரத்தில் வைத்து நீராட்டிப் போற்றி வழிபடும் ஆன்ம லிங்கத்தைப் பற்றியன.

நால்வர் நான்மணிமாலை சிவனடியார்களைப் போற்றி எழுந்த நூலாகும்.

துறைமங்கலம் சிவப்பிரகாசரின் இலக்கியங்கள் பக்தியை வளர்த்தன. அதனால் தமிழ் வளர்ந்தது. காஞ்சி தந்த தமிழ் நாடெங்கும் பரவி வளர்ந்தது என்பது தெள்ளத் தெளிவாகும்.

38. அடியார்க்கு அடியார்

கா. சத்தியபாமா, தஞ்சை.

தமிழ் இலக்கிய வளர்ச்சியில் இறைவனைப் போற்றும் சிற்றிலக்கியங்களை இயற்றுதல் ஒரு காலகட்டத்தில் செல்வாக்குப் பெற்றது. அவ்வமயம், சைவ சமயத்தைச் சார்ந்த பல சிற்றிலக்கியங்கள் படைக்கப்பட்டன. அத்தகைய இலக்கியங்களுள் சைவ சமயத்தவர் பலராலும் இன்றியமையாது ஓதி உணரத்தக்க அரிய நூலாக விளங்குவது நல்லாற்றூர் அல்லது துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் அருளிச் செய்த நால்வர் நான்மணிமாலை. சைவக்குரவர் நால்வரின் பெருமைகளையும் அருட்பாடல்களையும் எங்ஙனம் போற்றி, அடியார்க்கு அடியாரர்க சிவப்பிரகாச சுவாமிகள் விளங்குகின்றார் என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

அடிகளார்

சமய உலகில் எல்லோரும் சிறப்பித்துப் போற்றும்படியாகத் துறவியாக வாழ்ந்த சிவப்பிரகாசர், தமிழ் இலக்கியங்கள் பலவும் படைத்து, தமிழ் உலகம் புகழும் புலவராகவும் விளங்கியவர்.

சான்றோர் பெருமக்கள் பலரும் தோன்றிய தொண்டை நாட்டின் தலைநகர் காஞ்சியில் பதினேழாம் நூற்றாண்டில் தோன்றியவர். சிவநெறி தழைத்தோங்க அரும்பணியாற்றியவர். மயிலம் பொம்மபுர ஆதீனம் இரண்டாம் பட்டத்து சிவஞான பாலய தேசிகரை ஞானகுருவாகக் கொண்டு இறைவனை அடைந்தவர். சிற்றிலக்கிய வரிசையில் முப்பத்து நான்கு நூல்களையும் தனிப்பாடல்கள் பலவற்றையும் படைத்தருளியவர். வள்ளுவப் பிரகாசர், கற்பனைக் களஞ்சியம், கவிசார்வ பௌமர், துறைமங்கலம் சிவப்பிரகாசர், நல்லாற்றூர் சிவப்பிரகாசர் எனவும் பலவாறாகப் போற்றப்படும் பெருமைக்கு உரியவர். சமய உலகம் இவரைச் 'சுவாமிகள்' என்றும் 'அடிகள்' என்றும் சிறப்பித்துக் கூறுகின்றது.

சிவப்பிரகாசரும் இலக்கியங்களும்

சுவாமிகள் பிறந்தது முதல் வீரசைவராக விளங்கினார் என்றாலும் வீரசைவ சமயத்தினரைப் போல் அல்லாது சக்தியைப் போற்றும் பெரியநாயகியம்மை விருத்தம், பெரியநாயகியம்மை கலித்துறை ஆகிய சிற்றிலக்கியங்களைப் பாடியுள்ளார். சிவபெருமான் மீது ஆழ்ந்த

அன்புபூண்ட இவர், சிவபெருமான் குறித்துப் பத்திற்கும் மேற்பட்ட இலக்கியங்களைப் படைத்தளித்துள்ளார். இவையன்றி, வீரசைவம், சைவ சித்தாந்தம், வேதாந்தம், தலபுராணம், நீதி, பிற சமய மறுப்பு முதலான பல நூல்களை எழுதியுள்ளார்.

சிவபெருமானிடத்து அன்பு கொண்டவரான இவர், சைவ சமயக் குரவர் எனப் போற்றப்படும் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரிடத்தும் பேரன்பு பூண்டவர். ஆதலின் நால்வர் நான்மணிமாலையை இயற்றினார். இந்நூலில், இந்நால்வரின் சிறப்புகள், அவர்கள் இறைவன் மீது கொண்ட அன்பு, மக்களுக்குச் செய்த தொண்டுகள் முதலானவற்றை அமைத்தளித்துள்ளார்.

நான்மணிமாலையும் அடியார்களும்

நான்கு விதமான பாடல்களால் நான்கு அடியார்கள் குறித்துக் கோக்கப்பட்ட மாலையாய் இந்நான்மணிமாலை அமைந்துள்ளது. நேரிசை வெண்பா, கட்டளைக் கலித்துறை, அறுசீர்க் கழிநெடில் விருத்தம், நேரிசை ஆசிரியப்பா என்ற வரிசையில் நான்குவித பா அமைப்பு களிலும் ஒவ்வொரு வகைப் பா அமைப்பிற்குப் பத்துப்பத்துப் பாடல்கள் வீதம், மொத்தம் நாற்பது பாடல்கள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பாடல்களில் நேரிசை வெண்பாப் பாடல்கள் யாவும் திருஞானசம்பந்தரைப் பற்றியும், கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் திருநாவுக்கரசரைப் பற்றியும் அறுசீர்க் கழிநெடிலடி விருத்தப் பாடல்கள் சுந்தரரைப் பற்றியும் நேரிசை யாசிரியப்பாவில் அமைந்துள்ள பாடல்கள் யாவும் மாணிக்கவாசகரைப் பற்றியும் அமைந்தனவாகவும் உள்ளன.

சிவனடியார்கள் இறைவனை அடைவதற்கு மேற்கொள்ளும் வழிகளில் ஒன்று, இறைவனைப் போற்றுவதோடு, இறைவனின் தொண்டர் களாகிய அடியார்களைப் போற்றுதல். சைவ சமய நூல்களுள் பெரிய புராணம் இதனை நன்கு விளக்கும். ஆதலின், சிவனைப் போற்றும் இலக்கியங்கள் பலவற்றைப் படைத்த சிவப்பிரகாச சுவாமிகள், சைவக் குரவர் நால்வரைக் குறித்து இலக்கியம் படைத்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. இந்நூலில் திருத்தொண்டர் புராணத்துள்ள அடியவர்கள் பலருடைய வரலாறுகள் வந்துள்ளதால் இதனைக் ‘குட்டிப் பெரிய புராணம்’ என்பர். சிவப்பிரகாச சுவாமிகள், அடியார்களிடத்துக் கொண்டிருந்த பேரன்பை விளக்குவதாக இந்நூல் அமைந்துள்ளது.

இலக்கியச் சிறப்பு வாய்ந்த நால்வர் நான்மணிமாலையில் அடியாரின் செயற்கரிய செயல்கள் முதன்மையாகக் கூறப்பட்டிருப்பதோடு, அவர்களுக்கு அறிவையும் தெளிவையும் காட்டி, அருளை வாங்கிய சிவபெருமானின் திருச்செயல்கள் கூறப்பட்டுள்ளன. நால்வகைப் பாடல்களின் வழி,

நால்வரின் சிறப்பைக் கூறி, அந்நால்வரின் சிறப்பிற்குக் காரணமான சிவபெருமானின் சிறப்பை வெளிப்படுத்தி இருப்பது தெற்றெனப் புலனாகும்.

அடியார்க்கு அடியார்

சிவனுக்கு அடியவர்களாக விளங்கியதோடு, சிவனடியார்களுக்கு அடியவர்களாக விளங்கியவர்கள் சைவக் குரவர்கள் என்பதை அவர்தம் வரலாறு உணர்த்தும் அடியவர்களுக்கெல்லாம் அடியவனாகத் தான் விளங்குகின்ற நிலையினை நம்பியாரூரர் தம் திருத்தொண்டத் தொகையில் காட்டியுள்ளார். நாயன்மார்கள் அனைவருக்கும் அடியவனாகிய தான்,

''பத்தராய்ப் பணிவார்கள் எல்லோர்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கு அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லோர்க்கும் அடியேன்
முப்பொழுதும் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிசார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே''

(திருத்தொண்டத்தொகை, பா. 10)

என்று சிவபெருமானுக்குப் பலவகைப்பட்ட பணிகளைச் செய்வோர், சிவனைப் போற்றுவார் யாராக இருப்பினும் அவர்களுக்கெல்லாம் அடிமை என்பதோடு, அத்தகையவர் அடிசார்ந்த அடியவர்களுக்கும் அடிமையாக விளங்குவதாகக் குறிப்பிடுகிறார். திருநாவுக்கரசர் வாழ்வில் நடந்த நிகழ்ச்சி இங்கு எண்ணத்தக்கது. சிவபெருமான், திருஞானசம்பந்தருக்கு திருவரத்துறையில் முத்துச்சிவிகைக் கொடுத்தருளினார். அடியார்கள் புடைசூழச் சிவதலங்கள்தோறும் சிவிகையிலமர்ந்து செல்லுங்காலத்தில் திருநாவுக்கரசர், திருப்பூந்துருத்தி என்ற தலத்தில் அப்பல்லக்கை ஒருபுறம் சுமந்தார். தான் முதுமையடைந்தவராக இருந்தும் சிவனடியவரான பாலனாகிய திருஞானசம்பந்தருக்கு அடியராகப் பல்லக்கைச் சுமந்து அடியவர்க்கு அடியவர் என்பதை உணர்த்தினார். இத்தகைய சைவக் குரவர்களின் கருத்தை முதன்மையாகக் கொண்டு நால்வர் நான்மணிமாலை இயற்றப்பட்டுள்ளது எனலாம்.

சைவக்குரவர் நால்வரையன்றி அப்பூதி அடிகள், கலிக்காமர், பெருமிழலைக் குறும்பர், கணம்புல்லர், இயற்பகை, மானக்கஞ்சாறர், இளையான்குடி மாறர், அமர்நீதி நாயனார், அதிபத்தர், அரிவாட்டாயர், திருகுறிப்புத் தொண்டர், கழற்சிங்கர், சண்டேசுரர், சிறுத்தொண்டர், கோட்புலியார், செருத்துணையார், நீலகண்ட நாயனார் ஆகிய பதினேழு

நாயன்மார்களின் சிறப்பினை வெளிப்படுத்தி ''அடியார் புராணம்'' எனுமளவிற்கு அடியார் வாழ்வில் நிகழ்ந்த அவர்தம் சிறப்பிற்குச் சான்று பகருவனவானச் செய்திகளைத் தொடுத்தளித்துள்ளார் சிவப்பிரகாச சுவாமிகள்.

அடியாரின் பெருமைகள்

சைவக் குரவர்களாக விளங்கிய நால்வரின் வாழ்வில் சிவபெருமானின் அருளால் பல வியக்கத்தகு நிகழ்வுகள் நடந்தன. இவை அடியவர்தம் பெருமைகளை நிலைநாட்டுவனவாக அமைந்துள்ளன. இந்நிகழ்வுகளைப் பாடல்களில் குறிப்பிடுகின்றார் சிவப்பிரகாச சுவாமிகள்.

திருஞானசம்பந்தர்

திருஞான சம்பந்தர் ஞானப்பாலைப் பருகியது (பா. 2, 5, 19) எலும்பிற்கு உயிர் கொடுத்தது (பா. 9, 17, 19) ஆண்பனையைப் பெண்பனையாக மாற்றியது (பா. 17) திருமண காலத்தில் அனை வருக்கும் முக்தி பேற்றை நல்கியது (பா. 21) இயமன் அணுகாதவாறு காத்தது (பா. 21) சமணர்களைக் கழுவில் ஏற்றியது (பா. 21) வைகையாற்று வெள்ளத்தில் ஏடு எதிரேறியது (பா. 21) சமணர்களிடம் அனல்வாதம் செய்தது (பா. 25) சிவபெருமானளித்த வெண்முத்துச் சிவிகையைப் பெற்றது (10, 29, 33) முதலான நிகழ்வுகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

மேலும் சம்பந்தருடைய தேவாரப் பாடல்களின் பெருமைகளைப் பல பாடல்களில் எடுத்தோதுகிறார். திருஞானசம்பந்தர், திருக்கோயிலில் சிவபெருமான் திருமுன் வந்து புகழ்ச்சி அமையத் தேவாரப் பாடல் களைப் பாடும்பொழுது, தந்தையைக் காட்டிலும் தாய் மிகவும் மகிழ்வாள் (பா. 13) என்கிறார். இவர்தம் பாடல்கள் ஆற்றல் மிக்கவை என்பதற்குச் சில நிகழ்ச்சிகளைக் கூறுவதோடு சிறப்பினை எடுத்துரைக்கிறார். ஆண்பனையைப் பெண்பனைகளாகப் பயன்தந்து உதவுமாறு செய்யக் கூடியவை; விஷத்தை அழிப்பவை; நோய்க்கு மருந்தாக விளங்குபவை; உருவம் சிதைந்து மாறிவிட்ட எலும்பிற்கு உயிர் தருவன என்பதை,

''பயனாகும் நல்லாண் பனைக்குவிடத் திற்கு
மயலாகும் நோய்க்கு மருந்தாம் - உயிராகும்
சிந்துமெலும் பிற்குச் சிரபுரத்து நாவலன்சம்
பந்தன் இயம்புதிருப் பாட்டு''

என்ற பாடலால் (பா. 17) நிலைநாட்டுகிறார். நிறைவாக, அறம், கல்வி அறத்தினால் வரும் இன்பம், ஞானம் ஆகியவற்றைப் பெற வல்லவர்களாக இருப்பினும் திருஞானசம்பந்தப் பெருமானின் திருவடிகளான சிவஞானத் தொடர்பைப் பெற்றுப் பிறப்பறுப்பர் (பா. 37) என்றுரைக்கிறார்.

திருநாவுக்கரசர்

திருநாவுக்கரசரைக் கூறப்புகும் பாடல்களில், அவருடைய பாடல்களில் அமைந்துள்ள சொல்லழகிலும், பொருளழகிலும் மனதைப் பறி கொடுத்தவராக ''வீட்டிற்கு வாயில் எனுந் தொடை சாத்தும் சொல்வேந்த'' (பா. 2) 'வெள்ளேறுடையான் தனக்கன்பு செய்திருத் தாண்டக வேந்த' (பா. 6) 'நாவரசாயப் பெருந்தகையோய்' (பா. 10) 'நோயிலியாகிய சொல்லிறை' (பா. 14) 'பிறை சூடியைப் பாடிமகிழ் ஊட்டா மகிழ்சொல் லிறைவன்' (பா. 18) 'கடலன்பு பெற்ற சொல்வேந்த' (பா. 22) 'வெண் திரைக்கடல் நீந்திய பாவலனே', (பா. 30) எனப் போற்றி மகிழ்கிறார். மேலும் அப்பூதியடிகள், திருநாவுக்கரசு என்ற சொல்லை எழுதியும் உச்சரித்தும் வந்ததாலேயே முக்தி பெற்றார் என்பதை ''திருநாவுக் கரசெனும் ஓர்சொல்தான் எழுதியும் கூறியுமே என்றும் துன்பில் பசும்பெற்றான் ஒருநம்பி அப்பூதி' (பா. 38) என்பதையும் சொல் வேந்தராகிய திருநாவுக்கரசு சுவாமிகளை அவர் போன்றே பாடி மகிழ்ச்சியை உண்டாக்க விரும்பிய ஒருவன் வலிய பெரிய கல்லைக் கட்டி, அவரைப் போல கடலில் விழச் செல்லுவான் (பா. 18) அத்தகைய மனவலிமையை அடியார்க்கு வழங்கவல்லது அவர்தம் பாடல் என்பதையும் எடுத்துரைக்கிறார். இவையனைத்தும் திருநாவுக்கரசர் தம் சொல்லின் மேன்மையையும் பாடல்களின் சிறப்பையும் நிலைநாட்டுவனவாக அமைந்துள்ளன.

திருநாவுக்கரசரின் வாழ்வில் நடந்த, சூலை நோயை இறைவன் அளித்து ஆட்கொண்டது (பா. 2) சிவபெருமானிடம் படிக்காசு பெற்றது (பா. 10) சமணர்களை வென்றது (பா. 22) கல்லைத் தோணியாகக் கொண்டு கரையேறியது (பா. 19, 22) பாம்பு தீண்டியவனை மீண்டும் உயிர்பெறச் செய்தது (பா. 26) முதலான நிகழ்வுகள் மூலமாக சிவபெருமானின் அருள் திறத்தையும் திருநாவுக்கரசரின் அன்பின் மேன்மையையும் வெளிப்படுத்தியுள்ளார்.

நம்பியாரூரர்

திருமணக் கோலத்திலிருந்த நம்பியாரூரரை இறைவன் தானே வலிய வந்து தடுத்தாட் கொண்டதை ''ஈசன் நினைத்தடுத்தாட் கொண்டும்'' (பா. 3) என்கிறார். மேலும், முதலையுண்ட பாலகனை மீட்டதை, 'காக்கரு மதலை விழுங்கிய முதலை கான்றிடத் தோன்றும் நாவலனே' (பா. 15) என்றும், 'வாய்திறந்த முதலை காக்க மகனைநீய ழைத்தாயோ' (பா. 19) என்றும் பாடுகின்றார்.

பரவையாருக்காகக் குண்டையூரில் பெற்ற நெல்மலையைப் பூதங்கள் எடுத்துச் செல்லும்படி ஏவல் கொண்டது (பா. 11) விருத்தாச்சலத்தில்

இறைவனருளால் கிடைத்த பொன்னை மணிமுத்தா நதியில் போட்டுத் திருவாரூர் குளத்தில் வருமாறு பாடியது (பா. 27) திருப்புகலூரில் இரண்டு செங்கற்களை எடுத்துத் தலையணையாக வைத்து, நம்பியாரூரர் துயின்றபோது அவையிரண்டும் செம்பொன்னான நிகழ்ச்சி (பா. 27) ஆகியன நம்பியாரூரரின் பக்தித் திறத்தையும் அதனால் பெற்ற ஆற்றலையும் காட்டுவனவாக உள்ளன. இதனை மணிநீர் இடுபசும்பொன் திரைசங் கெறியும் குளத்துவரச் செம்பொ னாப்பாடும் பரிசின் றெனக்குன் செம்பவளத் திருவாய் மலர்ந்து பகர்வாயே' (பா. 27) என்று பாடுகிறார் சிவப்பிரகாச சுவாமிகள்.

மேலும், நம்பியாரூரருக்காகப் பல்வேறு செயல்களை இறைவன் மேற்கொண்டமையை விரிவாகப் பேசுகிறார். நம்பியாரூரர் பொருட்டு பரவையாரிடத்துத் தூது சென்றது (பா. 3, 15) சிவபெருமான் வீடுதோறும் பிச்சையெடுத்துக் கொண்டு வந்து உணவிட்ட செய்தி (பா. 3) சிவபெருமான் கல்விச் செல்வமுடையவரின் நட்பு வேண்டு மென்று வலிய வந்து ஆட்கொண்டது (பா. 7) திருமணக் கோலத்தில் இருந்த நம்பியாரூரரைத் தடுத்தாட் கொண்டது (பா. 3) முதலியவற்றால் இறைவனால் நம்பியாரூரர் விரும்பப்பட்டத் தன்மையை விளக்குகின்றார்.

இவையன்றி, திருத்தொண்டத் தொகையை இயற்றி அருளிய தன்மையை எண்ணி, தேவர்களும், முனிவர்களும் சிரமேற்கொண்டு வணங்கும் பெருஞ்சிறப்பினை உடைய திருத்தொண்டத் தொகை என்னும் நூலைச் செய்தவரே, அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கையும் தேவாரப் பாடல்களில் அமைந்து மக்கள் உணருமாறு வகைப்படுத்தியச் செயலைப் போற்றுகிறார். இதனைச் 'சுரர் முனிவர் பரவலுறும் பெருஞ்சீர்த் தொண்டத் தொகை செய்தோய் அறமுதநால் வகைசெய் தோயே (பா. 39) என்று பாடிப் பரவுகிறார்.

மாணிக்கவாசகர்

மாணிக்கவாசகரிடத்து மிகுந்த பக்தி பூண்டவராக விளங்கும் சிவப்பிரகாச சுவாமிகள், திருவாசகப் பாடல்களின் சிறப்புக்களை வியந்து பல பாடல்களில் போற்றி உரைத்துள்ளார், மாணிக்கவாசகரைப் பற்றிப் பாடும் பத்துப் பாடல்களில் ஏழு பாடல்களில் திருவாசகத்தைப் போற்று கின்றார் என்றால் எந்த அளவு அப்பாடல்களில் தன் மனத்தைப் பறிகொடுத்தவராக இருந்திருக்கிறார் என்பது தெள்ளிதின் புலனாகும்.

திருவாசகத்தை மறைகளோடு ஒப்பிட்டுக் காணும் சிவப்பிரகாச சுவாமிகள், வேதத்தைப் பலமுறை ஓதினாலும் அதைக் கேட்டுக் கண்களில் நீர்பெருக, மனம் குழைந்து உருகி நிற்பவர்களை இவ்வுலகில் எப்பகுதி யிலும் கண்டதில்லை. திருவாசகத்தை இவ்விடத்து யாரேனும் ஒருமுறை

ஓதினாலும் கருங்கல்லைப் போன்ற மனமும் கரைந்து அழிய, தோண்டப் பட்ட மணற்கேணியில் இருந்து நீர் சுரப்பது போன்று கண்களில் இருந்த ஆனந்த நீர் பெருகியோட, உடலில் உள்ள மயிர்கள் குத்திட்டு நிற்க, ஆனந்த நடுக்கத்தை உடையவராக அன்பராக ஆகும் நிலைபெறுவர் (பா. 4) என்றும், அந்தணர்களால் மட்டுமே புரிந்து கொள்ளக் கூடிய வேதங்களை ஓதினால் அதன் பயனாக அறத்தைப் பேணுதல் அமையும். ஆனால் யாவராலும் ஓதுகின்ற இயல்புடையதாகிய திருவாசகத்தை ஓதினால் அதன் பயனாக முக்தி (பா. 32) என்றும் போற்றுகிறார்.

தூயவனின் அருள்மொழிகளே திருவாசகம் (பா. 8) மாணிக்க வாசகன் என்ற கரிய மேகமானது பொழிந்த திருவாசகம் என்னும் வெள்ளம் முக்தி என்னும் கனியைத் தரும் (பா. 16) பாட்டு என்று சிறப்பித்துச் சொல்லப்படும் பெருமைக்கு உரியது திருவாசகம் (பா. 40) என்று புகழும் சிவப்பிரகாச சுவாமிகள், அனைத்து எழும்புகளும் உள்நெக நின்று உருக்கும் தன்மை வாய்ந்ததும் இனிமை நிறைந்தது மாகிய திருவாசகத்தை இசைத்த மாணிக்கவாசகரை, மனம்நின் றுருக்கும் மதுர வாசக! கலங்குறு புலன்நெறி விலங்குறு வீர! (பா. 24) என்றுரைக்கிறார்.

மாணிக்கவாசகர் பாடுகின்ற திருத்தொண்டை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக சிவபெருமான் மதுரையில் நரியைப் பரியாக்கி பாண்டியனுக்கு அதனை விற்றும், மண்கூடையைச் சுமந்தும் பிரம்பினால் அடிபட்டும் வலியவந்து ஆட்கொண்டான் (பா. 12) என்று கூறும் அடிகளார்,

''தானே முத்தி தருகுவன் சிவனவன்
அடியன் வாத வூரனைக்
கடிவுஇல் மனத்தால் கட்டவல் லார்க்கே''.

என்று சிவன் தன் அடியவராக விளங்கும் மாணிக்கவாசகப் பெருமானை எண்ணுகின்ற உள்ளத்தவர்க்குத் தானே முக்தி இன்பத்தைத் தருவான் என்கிறார்.

இதுகாறும் கண்டவற்றால் அடியார்களின் அருட்செயல்களிலும் பாடல் திறத்திலும் அடிகளார் கொண்டிருந்த பேரன்பு புலப்படும், அடியார்களுக்கு அடியாராய் விளங்குவதில் பேரார்வம் மிக்கவராக விளங்கும் சிவப்பிரகாச சுவாமிகள், அதன் பயனான முக்திப் பேறு கிடைக்கும் என்பதை உணர்ந்து இந்நூலின் வழி நமக்கும் உணர்த்துகிறார்.

39. சிவப்பிரகாசரின் கற்பனைத் திறன்

மு.பெ. சத்தியவேல் முருகனார், சென்னை.

கற்பிப்பது கற்பனை. இதில் இல்லாததைக் கற்பிப்பதும் உண்டு. அதற்கு இல்பொருள் உவமை என்று பெயர். வெவ்வேறு இடங்களில் நடக்கின்றவற்றை தமது கற்பனைத் திறத்தால் ஒன்றுக்கு ஒன்று தொடர்பு படுத்தி நடந்தது போல நயம்படக் கூறுவதும் உண்டு. இரண்டாவது வகையில் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளுக்கு இணையாக வேறு ஒருவரையும் கூற முடியாது. அவருக்கு இணை அவரேதான். அதனால்தான் அவருக்கு கற்பனைக் களஞ்சியம் என்றே ஒரு பெயர் உண்டு. சிவப்பிரகாச சுவாமிகளுக்கு உள்ள திறமைகள் பன்முகப்பட்டு விரியும் என்றாலும் அவருக்கே உரித்தானது நயம் மிக்க அவரது கற்பனைத் திறம் தான்.

அவர் பல சிற்றிலக்கியங்களைப் படைத்திருக்கின்றார். ஒவ்வொன்றிலும் துளும்பும் கற்பனை நயங்களை பட்டியல் இட்டுக் கூறப் புகுந்தால், அது 'விரிக்கின் பெருகும் தொகுப்பின் எஞ்சும்' என்ற புறநானூறு வாக்கிற்கு இலக்கணமாக அமைந்துவிடும். அது இந்த இலக்கிய ஆய்வு மாநாட்டில் சமர்ப்பிக்க விதிக்கப்பட்டிருக்கிற எட்டு பக்க அளவில் முடிவதல்ல. எனவே, நெஞ்சில் இனிக்கின்ற சிலவற்றை மட்டும் இங்கே காண்போம்.

திருவண்ணாமலையில் இப்போதெல்லாம் கிரிவலம் மக்களிடையே செல்வாக்கு பெற்றுவிட்டது. சிவப்பிரகாச சுவாமிகளும் பதினேழாம் நூற்றாண்டில் ஒரு முறை திருவண்ணாமலையில் கிரிவலம் சென்றார். நல்ல ஆசுகவியான சுவாமிகளுடன் கிரிவலம் வந்த அன்பர்கள், கிரிவலம் வருவதற்குள் இந்த மலைக்கு ஒரு மாலை சாத்த வேண்டும் என்று வேண்டினார்கள். சிறிய சிறிய விக்கிரகங்களுக்கே மாலை சாத்த முடியாமல் இருக்கின்ற இக்காலத்தில் மிகப்பெரிய மலையான திருவண்ணாமலைக்கு மாலையா? எங்கே போவது? சுவாமிகள் சிரித்துக் கொண்டே, 'அப்படியே சாத்தலாம். என்றும் பேரா, அழியா, பிரிவில்லா, வாடா மாலை, தமிழ் மாலை அல்லவா? ஆகவே, இங்கே மலையாக எழுந்தருளியுள்ள மகாதேவனுக்கு கிரிவலம் நிறையும் முன் தமிழ் மாலை சாத்துவேன்' என்று கூறி பாடி அருளியதுதான் ''சோணசைலமாலை''.

இந்த நூலில் கிடைக்கின்ற கற்பனை ரத்தினங்கள் பல. காட்டாக ஒன்றிரண்டைக் காண்போம். சிவபெருமானுடைய சடை மீது செறிந்த பிறை முழுமதி அல்ல என்பது அனைவரும் அறிந்ததே. அதைப் 'பாதி மதி' என்பார் அருணையில் அவதரித்த அருணகிரிநாதர். சிலர் அதை இன்னும் குறைத்து மூன்றாம் பிறை என்பர். பாதி மதியோ அல்லது மூன்றாம் பிறையோ, எப்படியாயினும் அது குறை மதி தானே! குறை மதி உடையவன் என்று சொல்வோமானால், அதற்கு புத்தி என்ற பொருளிலே மதி குறைந்தவன் என்றும் கொள்ளலாமல்லவா? இந்த சொல் விளையாட்டில் வைத்து சிவப்பிரகாசரின் கற்பனை சிறகடித்து பறக்கிறது.

திருவண்ணாமலையில் கார்த்திகை தீபம் மிகப் பெரிய விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது. வருடந்தோறும் கார்த்திகை மாதத்தில் நிறை நிலா நாளாகிய கிருத்திகை நட்சத்திரத்தில் இந்த விழா கொண்டாடப்படும். இங்கே ஏற்கனவே கூறியது போல 'இருவர் தேடி வெருவர நிமிர்ந்த' சோதிப்பிழம்பே மலையாக விண்ணளவு அண்ணாந்து எழ அம்மலையே மகாதேவன் என்று நாம் அறிவோம். வேறு இடங்களில் உள்ள சிவபெருமானின் மூர்த்தங்களில் சடையின் மீது குறை மதி இருக்க, உலகவர் எல்லாரும் சிவபெருமானைக் குறை மதியுடையவன் என்று எள்ளலாய்க் கூறி வர, அந்தக் குறை சிவபெருமானுக்கு திருவண்ணா மலையில் தீர்ந்ததாம். அதாவது, இங்கே மலையாகிய சிவபெருமான் கார்த்திகை மாதத்தில் பூரண நிலவைத் தன் முடி மீது சூடுவதால் இவ்வோரிடத்தில்தான் குறை தீர்ந்து நிறைமதியுடையவனாய் ஆனான் என்று சிவப்பிரகாசர் நெஞ்சம் இனிக்கத் தம் கற்பனையைத் தீட்டுகிறார். பாடல் பகுதி இதோ :

''ஆங்குறை மதியே தாங்கியென் றுலகம்
அறைகுறை அறநிறை மதியும்
தாங்கிய முடியோ டோங்கிய சோண
சைலனே கைலைநா யகனே''

கோயில்களில் காலை-மாலை எனக் காலங்கள் தோறும் நடைபெறும் வழிபாடுகளில் பதினாறு உபசாரங்கள் நடைபெறுவது வழக்கம். அதில் சுவாமியை அலங்கரித்து அந்த அலங்காரத்தை அவரே கண்ணாடியில் கண்டு மகிழ்வதாகக் கண்ணாடியைக் காட்டுவது ஒன்று. இதனை வடமொழியில் தர்ப்பணம் காட்டுவது என்பர். சுவாமி சின்னதாய் இருந்தால் பிரச்சனை இல்லை. ஆனால் அண்ணாமலையிலோ சுவாமி மலையாக இருக்கிறார்! எந்த கண்ணாடியை இவருக்குக் காட்டுவது? சிவப்பிரகாசர் தம் கற்பனையைத் தட்டி விடுகிறார்.

வடக்கே பனி மலையாக இமயமலை எழுந்து நிற்கிறது. அதன் மீது கதிரவன் தகதகவென வெள்ளொளி வீசி மேல் எழுகிறான். அது

எப்படி இருக்கிறதாம்? இரு மலை முகட்டு உச்சிக்கு இடையே அந்தக் கதிரவன் இருப்பது ஒரு பீடத்தில் கண்ணாடியை பொருத்தி வைத்திருப்பது போல இருக்கிறதாம். அந்த மலைக் கண்ணாடியில் அண்ணாமலை ஆகிய சிவன் தன்னை எட்டிப் பார்த்துக் கொள்வது போல இருக்கிறதாம். மலைக்கு மலையிலேயே கண்ணாடியைக் காட்டுகிறார், சிவப்பிரகாசர் - தம் கற்பனைத் திறத்தால். பாடல் பகுதி இதோ :

''பனிமலை கதிர்வந் துறநிலை ஆடி
பயின்றபீ டிகையென உதயத்
தனிமலை இருப்ப வளர்ந்தெழும் சோண
சைலனே கைலைநா யகனே''

இன்னொரு பாடலில் அவரது கற்பனை வேறு விதமாக விரிகிறது. சிவபெருமான் அண்ணாமலையில் சிவப்பிரகாசருக்கு காட்சி கொடுக்கிறார். மலையிலே மகாதேவன் தெரிகிறார் சிவப்பிரகாசருக்கு. அவருடைய நீல கண்டமும் தெரிகிறது. ''பெருமானே! உன்னுடைய மணிமிடறு நீலமாக இருக்கிறது. நீலமும் கருமையும் நிறத்தில் அணுக்கமானது. ஆகவே நீலமே அதிகமானால் கருமையாகி விடும். உன்னுடைய அழகான பவள மேனிக்கு அந்த நீலகண்டம் திருட்டிப் பொட்டு போல அமைந்து உனது பவள மேனியின் அழகை தூக்கிக் காட்டுகிறது. பொதுவாக குழந்தைகளுக்கு திருட்டிப் பொட்டு கரும் சாந்திலேயே இடுவார்கள். அது போல உன்னுடைய நீலகண்டத்தில் கருமை ஏறினால் கரும் சாந்தாய் உன்னுடைய பவள மேனியின் அழகை அது இன்னும் தூக்கி காட்டும். கவலை வேண்டாம்! என்னிடம் ஆணவ இருள் இருக்கிறது. அதை எடுத்து விழுங்கி விட்டாயானால் உனது நீல கண்டம் கருமை ஏறி நீ இன்னும் அழகாய் பொலிவாய்'' :

''ஏனுறு மமரர் கடைகட லளித்த
விருளொடு மணிமிடற் றடியேன்
ஆணவ விருளுங் கலந்திடிற் கருமை
யழகுமிக் கிலங்குறுங் கண்டாய்''

என்ன அழகான கற்பனை! இது மட்டுமா? அவருடைய கற்பனை மேலும் விரிகிறது. அண்ணாமலையில் பன்றி அவதாரமாக திருமால் அடியைத் தேடினான் என்பது வரலாறு. அவ்வாறு தேடு முகத்தால் அந்தப் பன்றி தோண்டியதால் மலையில் ஆங்காங்கே சிறு சிறு பள்ளங்கள் குகைகள் போல மண்டிக் கிடக்கின்றனவாம். அந்தப் பள்ளங்களைப் பாம்புகள் தமது வாழிடமான புற்றாகக் கொள்ள அந்தப் புற்றுகளிலிருந்து அவ்வப்போது பாம்புகள் இரை தேடுவதற்காக வெளி வருகின்றனவாம். அந்த நெடுநாள் பாம்புகள் இரை தேடுவதற்கு ஏதுவாக வெளிச்சம் செய்துகொள்ள தம்மிடம் உள்ள இரத்தினங்களை வெளியே உமிழ்

கின்றனவாம். அந்த இரத்தினங்களிலிருந்து ஒளி வீசி எழுகின்றனவாம். அது எப்படி இருக்கிறதாம் தெரியுமா? சிவபெருமானின் நெற்றியிலிருந்து ஆறு சுடர்களாக முருகப் பெருமான் வெளிவந்தது போல இருக்கிறதாம். ஆ! என்ன கற்பனை! பாடல் பகுதி இதோ:

''மாணெழில் வராகம் உழும்புழை யனந்தன்
மணியொளிப் பிழம்பெழல் சிறுதீத்
தாணுவின் முருகன் எழுதல்நேர் சோண
சைலனே கைலைநா யகனே''

இதுபோல 'சோணசைலமாலை' என்னும் சிற்றிலக்கிய வானில் செழுந்திரள் கற்பனைத் தூரிகையில் சிவப்பிரகாசர் தீட்டிய வண்ணச் சித்திரம்தான் எத்தனை?

இனி, பெரியநாயகி அம்மை கலித்துறையைப் பார்ப்போம். இங்கே ஒரு கற்பனைக் காட்சியைத் தீட்டுகிறார் சிவப்பிரகாசர். அதில் இவர் பெரியநாயகி அம்மை முன் நிற்கிறார்; அம்பிகையும் எதிர் நிற்கிறார். ஒற்றைத் தலைவலி போன்ற சில நோய்களுக்கு தாய்ப்பால் மருந்து ஆவது உண்டு. ஆகவே தம் குழந்தைகள் அல்லாதவருக்கும் மருந்து என்ற நிலையில் சிற்றூர்களில் பிறர்க்கு சில தாய்மார்கள் தாய்ப்பாலைக் கறந்து கொடுப்பது உண்டு. ''அம்மா! அது போல நான் உன்னுடைய குழந்தையாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் எனக்கு பிறவியாகிய நோய் உண்டு. பெரிய நாயகியே! அந்நோய் தீர மருந்தாக உன்னுடைய பாலைக் கறந்து தந்தால் என்ன குறைந்து போகும்? ஆனால் நீயோ எத்தனை முறை வேண்டினாலும், ஒரு கிண்ணத்தில் கறந்து தரா விட்டாலும் தெள்ளத் தெளிக்கவாவது பாலைத் தெறிக்க மாட்டேன் என்கிறாய். இதற்கு முன் ஞானசம்பந்தராகிய உன் பிள்ளைக்கு மட்டும் பாலைக் கிண்ணத்தில் கறந்து தந்தாய். ஒருவேளை உன் கையில் வைத்திருக்கும் கிளிக்கும் உனது பாலைக் கொடுப்பாயோ என்னவோ? 'என்னுடைய பிள்ளையாகிய சம்பந்தருக்கும், எனது கையில் உள்ள கிள்ளையாகிய கிளிக்கும் மட்டும் பால் கொடுப்பேன்; மருந்திற்கு என்றாலும் உன் போன்ற பிறர்க்கு கொடுக்க மாட்டேன்' என்றால் அது எவ்வளவு குறுகிய மனப்பான்மை! இப்படிப் பெருந்தன்மையே இல்லாதிருக்க உனக்கு யார் பெரியநாயகி என்று பெயர் வைத்தார்கள்?'' ஆ! என்ன அற்புதமாகக் கற்பனையை நீட்டுகிறார். பாடல் இதோ:

''உள்ளத் துறுபிணி யேற்கு மருந்துக்கென் றுன்னைவந்து
மெள்ளத் தொழவுந் திருமுலைப் பால்மெல் விரல்நுதியால்
தெள்ளித் துளியள வாயினும் தொட்டுத் தெறித்திலையுன்
பிள்ளைக்குங் கிள்ளைக்கும் பால்கொடுத் தாலென்
பெரியம்மையே''

அடுத்து 'சிவஞான பாலைய சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி'யில் ஐந்தாம் பாடலில் அவர் காட்டுகின்ற கற்பனைத் திறம் அளவிடற் கரியது. பாடல்:

''தூதுவிடு நம்பிவரு கிலன்சிலையால் எறிந்த
தொண்டனிலை விசயனும்வில் லோடும்வந்தா னில்லை
ஏதமறு மியற்பகையார் கிளைஞர்கள்வந் தடைந்தார்
இல்லைநினை மண்சுமவென்று ஒருபிரம்பா லடித்தோன்
போதிலன்நின் திருவடியிற் போதுகள் தூய்ப் பரவிப்
போற்றலுறும் அடியவரே பொருந்தினரெம் மருங்குஞ்
சீதமதி துறந்தமுடி மருவுசிவ ஞான
தேசிகனே யருண்மலையே பள்ளியெழுந் தருளே''

இப்பாடலில் சிவப்பிரகாசர் தனது குருவாகிய சிவஞான பாலைய சுவாமிகளை சிவமெனவே கருதுகிறார். சிவனுக்கும் சடையுண்டு; சிவஞான பாலைய சுவாமிகளுக்கும் சடையுண்டு. வேறுபாடு என்ன வென்றால், சிவன் சடையில் நிலவும், பாம்பும் இருப்பது போல் சிவஞான பாலைய சுவாமிகளின் சடையில் நிலவும், பாம்பும் இராது. எனவே சிவஞான பாலைய சுவாமிகளை நிலவையும், பாம்பையும் கழற்றி விட்டு வந்த சிவன் என்று வணங்குகிறார். அப்படி வணங்கி அவருக்கு ஒரு திருப்பள்ளியெழுச்சி பாடுகிறார்.

வைகறையில் பள்ளி கொண்டுள்ள சிவபெருமானை எழுப்புகிறார். சிவபெருமானோ திரும்பிப் படுத்துக் கொள்கிறார். ''சுவாமி! ஏன் இப்படி?'' என்று கேட்கிறார் சிவப்பிரகாசர்.

''அதை ஏன் கேட்கிறாய்? நான் எழுந்து வந்துவிடுவேன். ஆனால் அங்கே சுந்தரன் வந்திருப்பானேயானால் எனக்கு வந்தது ஆபத்து! அவன் என்னை முன் அனுப்பியதைப் போல ஏதாவது தூது செல்லச் சொல்லித் தொல்லை செய்வான். அதனால்தான் திரும்பிப் படுத்தேன்''.

சிவப்பிரகாசர் வெளியே சென்று பார்த்து, ''சுந்தரன் வரவில்லை. கவலை வேண்டாம். எழுந்தருள வேண்டும்'' என்றார்.

அப்போதும் சுவாமி எழுந்தருளவில்லையாம். இந்த முறை அவர் அருச்சுனனைக் காரணம் காட்டினாராம். அவன் வந்தால் முன் ஒருமுறை செய்தது போல் வில்லால் தலையில் அடிக்கவும் கூடும் என்றாராம். முன் போல் சென்று பார்த்துத் திரும்பி சிவப்பிரகாசர் அருச்சுனரில்லை என்று கூறியும் பயனில்லை. இயற்பகை நாயனாரின் உறவினர்கள் யாராவது வந்திருக்கிறார்களா என்று பார் என்றாராம். முன்னமே அவர்கள் என்னிடம் போர் செய்ய வந்தார்கள்; இப்போது பழைய பகையைத் தீர்க்க வந்தாலும் வந்திருக்கலாம் என்றாராம். ''சுவாமி!

அவர்கள் இல்லை'' என்று சிவப்பிரகாசர் கூறியும் பயனில்லை. ''இன்னும் என்ன சுவாமி?'' என்று கேட்டார்.

''இல்லை, அரிமர்த்தன பாண்டியன் வந்திருக்கிறானா என்று பார். முன் போல ஒரு வேளை, 'மண்ணைத் தலையில் சுமந்து கொட்டு! இல்லாவிடில் பிரம்பால் அடிப்பேன்' என்று கூறினாலும் கூறுவான்'' என்றாராம் சிவபெருமான்.

சிவப்பிரகாசர் வெளியே சென்று திரும்பி வந்து இன்னும் பல முறை இவ்வாறே சென்று மீள முடியாது என்று அலுத்தவராய், ''சுவாமி! வெளியே கூட்டம் கூட்டமாய் இருக்கிறது. ஆனால் எல்லாம் அன்பர்கள் கூட்டம். எல்லார் கையிலும் உம்மைப் போற்றிப் பரவு வதற்காக மலர்களை வைத்திருப்பதைக் காண்கிறேன். எனவே எந்தவித அச்சமும் இல்லாமல் இனியாவது சுவாமிகள் எழுந்தருள வேண்டும்'' என்று வேண்டுவதாக கற்பனை நயத்துடன் அமைந்திருக்கிறது மேற்கூறியப் பாடல். இதனை எத்தனை முறை படித்தாலும் தெவிட்டாது.

இன்னொரு கற்பனைக் காட்சி. சிவபெருமானுக்கும் உமை யம்மைக்கும் திருமணம் ஆன புதிது. அம்பிகை ஆண்டவனுடன் புக்ககமாகிய கயிலையில் எழுந்தருளியுள்ளாள். அம்பிகை சிவபெருமானின் நெடிய ஆண் வடிவத்தின் தலைமீது சடையில் ஏதோ ஒரு பெண்ணின் உருவம் தெரிவது போல இருக்கவே, ஆண்டவனிடம் மெல்ல அதைப் பற்றி விசாரிக்கிறாள். சுவாமி தலை மீது கங்கை இருக்கிறாள் என்று சொன்னால் புதிதாக மணம் செய்து கொண்டு வந்த உமையம்மை பிணங்குவாளோ என்று எண்ணி சாமர்த்தியமாகப் பொய்களை அள்ளி விடுகிறார். அது பெண்ணல்ல புனல் என்று சமாதானம் செய்கிறார். அதில் சமாதானம் அடையாத உமையம்மை, ''நீரென்றால் அதற்கு முகம் எப்படி இருக்கும்? கண் எப்படி இருக்கும்? காது எப்படி இருக்கும்? இதழ் எப்படி இருக்கும்? என்னை ஏமாற்றப் பார்க்கிறீர்களா?'' என்று சிணுங்குகிறாள்.

''ஐயோ! அது நீர்தான்! நீரில் இருக்கிற தாமரை உனக்கு முகம் போலத் தெரிகிறது. அதில் உள்ள குவளை மலர் கண்கள் போல தெரிகின்றன. வள்ளைக் கொடிகள் காதுகள் போல காண்கின்றன. சிவந்த குமுத மலர் வாய் இதழைப் போல தெரிகின்றது''. சிவபெருமான் சமாளிக்கிறார்.

அம்பிகைக்கு ஐயம் தீரவில்லை. ''பெண்களுக்கே உரிய தனங்களும் கூந்தலும் தெரிகின்றனவே'' என்கிறாள்.

''அதுவா! நீரில் குமிழிகள் எழுகின்றன அல்லவா? அவை உனக்கு தனங்களைப் போலத் தெரிகின்றன. நீரில் பாசி அடையடையாக இருக்கும். அந்த பாசடை ஒரு பெண்ணின் கூந்தலைப் போலத் தெரிகிறது. இல்லையா நங்காய்?'' என்றார் சிவபெருமான்.

இந்த உரையாடலுக்கு இடையே சுவாமி 'நங்காய்' என்று கூப்பிட்டது சடை மேல் இருந்த கங்கைக்கு 'கங்காய்' என்று கூப்பிட்டது போல கேட்க அவள் மேலிருந்து, ''ஏன் சுவாமி, கூப்பிட்டீர்களா?'' என்று குரல் கொடுக்க, சுவாமியினுடைய குட்டு வெளிப்பட்டது. இதற்கு மேலும் சமாளிக்க முடியாமல் சிவபெருமான், ''உமையே! என்னை மன்னிக்க'' என்று உமையம்மை காலில் பணிந்தாராம். இப்படி ஒரு அற்புதமான கற்பனைக் காட்சியைக் காட்டி உமையம்மையை வணங்குகிறார் சிவப்பிரகாசர். பாடல் வருமாறு:

''ஐயநின் சென்னிமிசை உறைகின்ற மடமங்கை
யாரென்ன உமை வினவவும்
அன்னதொரு மடமங்கை அன்றுவெண் டிரைகொழித்
தழகொழுகு தண் புனலெனத்
துய்ய வொளி ஆனனங் கரியவிழி காதுவாய்
தோயத்தி லுண்டோ வெனச்
சொல்லருங் கமலமலர் காவிமலர் கொடிவள்ளை
தூயசெங் குமுதம் என்னப்
பொய்யென நினைத்துநற் கொங்கையுங் கூந்தலும்
புனலினிடை உண்டோவெனப்
புற்புதஞ் சைவலம தெனவே மறுத்துப்
புகன்றிடுதி நங்கா யெனத்
தையலவள் ஏனென்ன நாணொடு வணங்கியென்
தன்பிழை பொறுத்திடென்றே
சங்கர னுரைத்திடத் திருவுள மகிழ்ந்தசிவ
சங்கரி உமைக் காக்கவே''.

இந்த பாடலில் சிவபெருமான் பார்வதியை வணங்கினார் என்று வருவதைக் காண்க. மனைவி காலில் கணவன் விழலாமா? விழலாம் என்கிறார் தொல்காப்பியர். அது எப்போது என்று குறிப்பிட்டு ஒரு நூற்பா செய்திருக்கிறார் தொல்காப்பியர்.

''மனைவி உயர்வும் கிழவோன் பணிவும்
நினையும் காலை புலவியுள் உரிய''

அதாவது ஊடல் காலத்து மனைவியை அமைதிப்படுத்த கணவன் அவள் காலைப் பிடித்தாலும் தவறில்லை என்பது தொல்காப்பியர் கருத்து. இது ஏனைய காலங்களுக்குப் பொருந்தாது. இந்த இடம் சிவபெருமானுக்கும் பார்வதிக்கும் ஊடல் நடக்கும் காலம். எனவே தொல்காப்பிய இலக்கணப் படி சிவபெருமான் பார்வதியை வணங்கியது தவறல்ல என்றாலும் சிவனடியார்கட்கு இந்த இடத்தில் சிறிது மனம் நெருடலாம். அதிலும் சிவபெருமான் உமையை வணங்கியது மட்டுமல்லாமல் அதில் உமையம்மை மனம் மகிழ்ந்தார் என்று மேல் பாடலில் வருவது மேலும் சிவனடியார்கள் மனத்தை நெருடலாம்.

ஊடல் காலத்தில் மனைவியை கணவன் பணிவது ஒருபுறமிருக்க, அதுகண்டு கற்புக் கடம்பூண்ட ஒரு மனைவி மனம் மகிழ மாட்டாள். வெருட்டென்று காலை உள்ளிழுப்பாள். ஆனால் இங்கே உமையம்மை மனம் மகிழ்ந்தாள் என்று சிவப்பிரகாசர் ஏன் கூறினார்? இதற்கு விடையை வேறு ஒரு பாடலில் வைக்கிறார் சிவப்பிரகாசர். பூட்டிய இடத்திலேயே சாவியை வைக்க கூடாதல்லவா? எனவே மேல் பாடலில் ஒரு ஐயப் பூட்டை வைத்து அதற்கு சாவியை இன்னொரு இடத்தில், பிரபுலிங்க லீலையில் வைக்கிறார். அந்த பாடல் வருமாறு:

''ஆதி பகவன் தனதூடல்
　　தணிப்பான் பணிய அவ்விறைவன்
பாத மிறைஞ்சு மதற்குநெற்றிப்
　　பகையு மல்குற் பகையுமாஞ்
சீத மதியு மரவும்விழுஞ்
　　செயற்கு முவகை செயாமலலை
மாது பணியு மதற்குமன
　　மகிழு முமையை வணங்குவாம்''

அதாவது சிவபெருமான் ஊடல் தணிப்பதற்காக உமையம்மை காலில் விழுந்தபோது அவருடைய சடை முடியில் இருக்கின்ற சந்திரனும், அரவும் தன் காலில் விழுவதற்காகக் கூட உமை மனம் மகிழவில்லையாம். இத்தனைக்கும், இவை இரண்டும் அவளுக்கு ஒரு வகையில் பகை என்று கூட சொல்லலாம். காரணம், அவளுடைய முகத்தை சந்திரனைப் போன்ற முகம் என்றும், அவளுடைய நிதம்பத்தைப் பாம்பின் படம் போன்றது என்றும் புலவர்கள் வர்ணிக்கும்போது அவளுக்குக் கோபம் வரும். காரணம் 'உவமை உயர்ந்ததன் மேற்று' என்பார்கள். அப்படியானால் அவளுடைய முகத்தைவிட சந்திரன் உயர்ந்தது என்றாகி விடுகிறது; அதேபோலத்தான் அரவும். ஆகவே தம் உறுப்புக்களைவிட உயர்ந்தது என்று புலவர்களால் வர்ணிக்கப்படுகிற சந்திரனும் அரவும் உமை காலில் விழுந்தபோது உண்மையில் அவளுடைய மனம் அதற்காக மகிழ்ந்திருக்க வேண்டும். ஆனால் அதற்காகக் கூட அவள் மகிழ வில்லையாம். சிவபெருமான் சடை மீது இருந்த அவளது சக்களத்தி எனப்படும் கங்கை அவள் காலில் விழுந்ததற்காக பெண்ணுக்கே உரிய இயல்போடு அவள் அளவிறந்த மகிழ்ச்சியை அடைந்தாளாம்.

எனவே சிவபெருமான் தன் காலில் விழுந்ததற்காக அல்லாமல், அதன்வழி தன்னுடைய சக்களத்தியாகிய கங்கை காலில் விழுந்ததற்காக உமை மனம் மகிழ்ந்தாள் என்று மிகச் சாதுர்யமாக கற்பனைக் காட்சியைத் தீட்டுகிறார் சிவப்பிரகாசர். இந்த கற்பனைக் காட்சிக்கு ஈடு இணை உண்டா?

சிவப்பிரகாசரின் கற்பனைத் திறனை யாரே அளக்கவல்லார்!

40. சிவப்பிரகாசர் காலமும் சூழலும்

ப. சாந்தி, திருவனந்தபுரம்.

காலமே மனிதனை வார்த்தெடுக்கிறது. அவன் கவிஞன் ஆனாலும் தத்துவவாதியானாலும் அவன் சாதனையில் காலத்தின் பங்களிப்பினை எளிதாகப் புறக்கணித்து விட இயலாது. அதில் தனிமனித ஆளுமைக்கு எந்த அளவிற்கு பங்குள்ளதோ அந்த அளவு பங்கு காலத்திற்குமுண்டு. எனவே காலத்திற்கும் கலைஞனுக்குமான உறவை ஆராய்வதன் மூலமே அவனை, அவன் படைப்புகளை இன்னும் தெளிவாக புரிந்து கொள்ள இயலும். இதனால் சிவப்பிரகாசர் காலம் குறித்த தெளிவான புரிதல் இன்றியமையாதலும் கூட.

சிவப்பிரகாசரின் படைப்புகள் போதிய கவனிப்பை இன்று பெற்றுள்ளன எனக் குறிப்பிட்டு விட இயலாது. ஒரு வகையில் சிவப்பிரகாசரைப் புரிந்து கொள்ள இயலாதது இதன் காரணமாக வேண்டும். வீரசைவத்திலுள்ள 'வீர' என்னும் அடைமொழி சைவத்தி லிருந்து அதனை வேறுபடுத்துகிறது. வீரசைவம் புறத்தே இருந்து வந்த சமய ஒழுக்கமாக அன்னியப்படுத்தப் படுகிறது. காலமே சமூக வாழ்வின் தேவைகளைத் தீர்மானிக்கிறது. சிவப்பிரகாசரின் காலம் வீரசைவ மரபைத் தமிழ் மண்ணிற்கு வரவேற்றது. அதற்கான தேவையுமிருந்தது. இம்மண்ணில் வேரூன்றியபின் எதுவும் அன்னியமாகிவிடாது. சூழல் குறித்த தெளிவான புரிதலின்றி சிவப்பிரகாசரையும் வீரசைவத்தையும் புரிந்து கொள்ள இயலாது.

சைவமும் வீரசைவமும்

இந்திய பக்தி மரபு முழுமையுமே தமிழ் பக்தி மரபிற்குக் கடன் பட்டது. தமிழிலிருந்துதான் பக்தி இயக்கம் இந்தியத் துணைக்கண்டம் முழுமைக்கும் விரிந்தது. வேதநெறியின்பால் பட்ட சமயம் ஒரு குறிப்பிட்ட உயர் பிரிவினருக்கு மட்டுமே ஆன்மீகத்தை உரிமையாக்கியபோது பக்தி இயக்கம் அதை மீட்டு அனைவருக்கும் பொதுவாக்கியது. ஆனால் காலப்போக்கில் பக்தி இயக்கமும் குறிப்பிட்ட பிரிவினருக்கென்றாகியது. சமயமும் நிறுவனமாகியது. சைவம் சோழ சாம்ராஜ்யத்தின் அரசு சமயமாகியது. நிறுவனங்கள அதற்கெதிரான எதிர்ப்புணர்வை இயல்பாகவே தோற்றுவிக்கும் பண்பினைத் தன்னகத்தே கொண்டிருக்கும். சமய

வனங்களுக்கெதிரானதாக தமிழில் சித்தர் மரபைக் குறிப்பிட வேண்டும். நிறுவனமாக்கப்பட்ட சமயம் சைவமும் வைணவமும் மீண்டும் சாதிக் கட்டுகளைக் கடுமையாக்கியது. அதிகாரத்தில் நிலை கொண்டது. தமிழில் போலவே கன்னடத்திலும் இதற்கெதிர்ப்பு இருந்தது. கன்னடத்தில் நிறுவனமாக்கப்பட்ட சமயங்களுக்கு எதிராக வீரசைவம் தோற்றங்கொண்டது.

வீரசைவமும் தமிழும்

பதினான்காம் நூற்றாண்டு இந்தியத் துணைக்கண்ட அரசியலில் மகத்தான மாற்றத்தைத் தோற்றுவித்தது. மிகப்பழமையான தமிழர்களின் அதிகார அமைப்பு காலத்தின் முன் சிதறுண்டு போனது. மாறாக தெலுங்கு, கன்னட அதிகார அமைப்பு புதிதாகத் தென்னகத்தில் உருக்கொண்டது. மிகப் பெருமளவில் கன்னட, தெலுங்கு குடியேற்றங்கள் தமிழ் மண்ணில் நிகழ்ந்தது. கலாச்சார பரிமாற்றங்களும் பெருமளவில் நிகழ்ந்தது. சிவப்பிரகாசர் கூட ''அண்ணாமலை ரெட்டியார் அமைத்த திருமடத்தில் சிலகாலம் இருந்து வீரசைவ சமயத் தொண்டும் சமய இலக்கியத் தொண்டும் புரிந்து வந்தார்''[1] என்பது குறிப்பிடத்தக்கது. கன்னட, தெலுங்கு, தமிழ் கலாச்சார பரிமாற்றத்தின்போது வீரசைவமும் தமிழ் மண்ணை வந்தடைந்தது.

கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் ஜைனமும், வைணவமும் கன்னட மண்ணில் மேலோங்கியது. சைவம் வீழ்ச்சியடைந்தது. அப்போது ஒரு தலைமகனார் தோன்றி புரட்சியுடைய சைவக் கருத்துக்களைக் கூறினார். அவரது முயற்சி வீரம் வாய்ந்தது. சைவத்தின் வீழ்ச்சி வருணாசிரமத் தினால் நிகழ்ந்தது. எனவே வருணாசிரம முறைகளினால் உண்டாகிய கேடுகளைத் தகர்த்து வெற்றி கொண்டு சைவத்தை மீண்டும் நிலை நிறுத்த முயன்றது. இவ்வாறு வீரசைவம் தோற்றம் கண்டது. 'வீரம் நிறைந்த சைவக் கொள்கை' என்பது வீரசைவ சமயம் என்பதற்குரிய விளக்கம். இதைத் தோற்றுவிக்க காரணமான அத்தலைமகனார் கன்னட மாநிலத்து அரசனின் முதலமைச்சராக இருந்தார். ஆனால் வீரசைவம் அதிகார அமைப்பில் உற்பத்தி பொருள் அல்ல அடிப்படையில் வருணாசிரம தருமங்களை வீரசைவம் எதிர்க்கின்றது. எனவே வீரசைவத்தைப் பொறுத்த வரையில் சாதி இல்லை. சாதிக்கு அரணாக அன்று விளங்கியதால் வேதத்தையும் ஒதுக்கியது. ''வேதங்களை முற்றாக எதிர்ப்பது வீர சைவத்தின் நோக்கமன்று. சாதி சமயக் கட்டுக்கோப்பு, உயிர்ப்பலி கொடுக்கும் யாகம் இவை போன்ற செயல்களுக்கு ஆதரவாக வேதக் கருத்துக்கள் கூறப்படுமானால் அவைகளை ஏற்றுக் கொள்ளாமல் எதிர்ப்பது வீரசைவத்தின் கொள்கையே''[2] என்று 'வீரசைவம்' என்ற நூல் கூறுகிறது. வேத ஒழுக்கத்தைப் புறக்கணித்த இவர்கள் இலிங்கத்தின் அங்கம் எனக் கொள்ளும் ஐவகை ஒழுக்க நெறியினை தமக்கு உயிர்க்கொள்கை யாகக் கொண்டு ஒழுகத் துவங்கினர்.

வீரசைவத்திற்கு இரண்டு மரபு உண்டு. முதலாவது பஞ்சாச்சார்யா மரபு. இரண்டாவது பசவமரபு. ஐந்து ஆசாரியர்களால் தோற்றுவிக்கப் பட்டது பஞ்சாச்சார்யா மரபு எனப்பட்டது. பசவரால் தோற்றுவிக்கப் பட்டது பசவமரபு. கன்னட நாட்டில் பசவேசர் வேதத்தைக் கண்டித்தார் என்பதால் வேதத்தை எதிர்த்தவர்களைப் பசவர் என்றனர். பசவேசர் காலத்தில்தான் கன்னடத்தில் வீரசைவ மரபு தழைத்தது.

பசவரின் சீடர்கள் இருவரது கண்களை விச்சல மன்னன் பிடுங்கி எறியச் செய்தான். விச்சல மன்னனும் பசவரின் சீடர்களால் கொல்லப் பெற்றான். வன்முறை வன்முறையினாலேயே வெல்லப்பட்டது. சாதிக் கொடுமையை மூடப்பழக்க வழக்கங்களை உணர்ச்சியால் உந்தப்பெற்று எதிர்த்து அழிக்க முற்படுகிறவர்களையும் வீரசைவர் என்று கூறுவதுண்டு.

வீரசைவத்திற்குப் புராணப் பழமை கற்பிக்கப்படுவதுண்டு. வீரசைவ வரலாற்றை இராமாயணக் காலத்திற்கு கொண்டு போகும் ஒரு போக்கும் உண்டு. ''இரேவராத்யா என்பவரே இரேவணசித்தர், இரேணுகாசார்யர் என்று சொல்லப் பெறுபவர். இவரே அகத்தியருக்கு வீர சைவத்தை உபதேசித்ததாகச் சித்தாந்த சிகாமணி என்ற வீரசைவத் தத்துவநூல் கூறுகிறது''[4]. இவரே ஈழத்திலும் வீரசைவத்தை உபதேசம் செய்தவர். இராவணன் தம்பி விபீடணன் இவரிடம் வீரசைவ உபதேசம் பெற்றதாகக் கூறுவர். அனைத்திற்கும் புராண அடிப்படையைக் கற்பிப்பது நம் மரபு. வீரசைவத்திற்கும் புராணப் பழமை இருக்கலாம். ஆனால் தமிழ் மண்ணை வந்தடைந்த வீரசைவம் பசவேசருடைய வீரசைவம், சிவப்பிரகாசர் தெலுங்கு, கன்னட மொழிகளில் வல்லவராக இருந்தார் என்பதை இங்கு குறிப்பிடப்பட வேண்டும். கன்னட மொழிக் காப்பியமான 'பிரபுலிங்க லீலை' தமிழில் தழுவப்பட்டது. கன்னட வீரசைவத்திற்கும் சிவப்பிரகாசருக்கு மான உறவு ஐக்கியத்திற்கிடமின்றி இங்கு நிறுவப்படுகிறது.

சிவப்பிரகாசரின் காலமும் கலகமும்

சிவப்பிரகாசர் பதினேழாம் நூற்றாண்டைச் சார்ந்தவர். தமிழ் வரலாற்றில் இந்த 17-ஆம் நூற்றாண்டு தனித்துவம் வாய்ந்தது. இக் காலத்தில் வீரசைவம் மட்டுமல்ல இந்தியத் துணைக் கண்டத்தினைச் சாராத மதங்கள் கூட இம்மண்ணில் வேர்கொண்ட நூற்றாண்டு. இஸ்லாமும், கிறிஸ்தவமும் சைவ வைணவ பூசலோடு இவையும் சேர்ந்து கொண்டன. சைவ வைணவங்கள் நிறுவனங்களாக இயங்கின. சைவ மடங்கள் முறையான அதிகார அமைப்பைக் கொண்டு விளங்கின. வைணவமும் இதற்கு குறைவுபட்டதல்ல. அதிகாரமே இங்கு குறி. குறிப்பிட்ட சாதிகள் இந்த அமைப்பின் கீழ் அணி வகுத்தன. இவை தமக்குள் பூசலிட்டுக் கொண்டபோது புறத்தாக்குதலையும் எதிர்கொள்ளும்படியானது. அத்வைதம்

பிராமணர்களுக்கானது. சைவம் உயர்சாதி இந்துக்களுக்கானது. வைணவம் தென்கலை, வடகலையானது. சமூக வாழ்வில் தாழ்த்தப்பட்டவர்களை கிறிஸ்தவ இஸ்லாமிய சமயங்கள் அரவணைத்துக் கொண்டன. கிறிஸ்தவ இஸ்லாமிய சமயங்கள் மக்களிடையே தங்களுடையதான பங்கினையும் தீர்மானிக்க முயன்றன. சிவப்பிரகாசரின் 'ஏசுமத நிராகரணம்' என்ற கிறிஸ்தவ சமய கண்டன நூல் இச்சூழலில்தான் தோற்றம் கொண்டது. சமயங்களினாலும் சாதிகளினாலும் தமிழர்கள் அலைக்கழிக்கப்பட்ட காலகட்டம் இது. சாதி அமைப்பிற்கு அப்பாற்பட்ட இந்து சமய ஒழுங்கு காலத்தின் தேடலாகியது. வீரசைவம் இதற்கு வடிகாலாகியது.

அரசியல் சூழல்

தமிழ்ச் சமூக அமைப்பு காலங்காலமாக அரசனை மையமாகக் கொண்டது. ஆனால் பதினேழாம் நூற்றாண்டு அரசனில்லா நூற்றாண்டு. விஜய நகரத்தின் வீழ்ச்சிக்குப் பின் தமிழ் மண்ணிலிருந்த தெலுங்கு அதிகார அமைப்புக்கள் சிதறுண்டன. புறத்தேயிருந்து வந்த சக்திகள் தாங்கள் அதிகாரத்தை நிலைநிறுத்த முயன்றன. இவற்றிற்கிடையே ஏற்பட்ட கொந்தளிப்புக்கள் நிலையான அரசாட்சியை இல்லதாக்கின. இதன் விளைவே அடுத்தடுத்து தோற்றம் கொண்ட பஞ்சம், ஒருபுறம் ஐரோப்பியரும் மறுபுறம் இசுலாமியரும் அதிகாரத்திற்கான போட்டியில் முந்த முயன்று கொண்டிருந்தனர். காலங்காலமாக அரசினது அரவணைப்பில் செழித்திருந்த கலை இலக்கியம் ஆதரிப்பாரின்றி தடுமாறத் துவங்கியது. மடங்கள் இவற்றை ஆதரிக்க முயன்றன. மடங்களும் குறிப்பாகச் சைவ மடங்களும் அதிகார அமைப்புக்களே. பக்தியைப் போலவே வெறுப்பும் இங்கு நீரூற்றி வளர்க்கப்பட்டது. சிவப்பிரகாசரின் 'திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதி' இத்தகைய காழ்ப்புணர்வின் வெளிப்பாடே. வெள்ளியம்பலத் தம்பிரனுக்காக ஒரு புலவரை வென்றடக்க அவர் பாடியது. இச்சூழலில் சாதாரண மனிதனின் ஆன்மீக வாழ்வைப் பாதுகாக்க புதிய அமைப்பின் தேவை வலுத்தது. கன்னட மண்ணில் வீரசைவம் தாழ்த்தப்பட்ட ஏழை மக்களின் ஆன்மீக வாழ்வை ஒழுங்குப்படுத்தியது. கன்னட தெலுங்கு குடியேற்ற மக்கள் வழியாக இங்கும் அறிமுகமாகியது. சிவப்பிரகாசரும் வீரசைவத்தைத் தேர்ந்தெடுத்ததில் வியப்பில்லை. ஒரு வகையில் வீரசைவம் காலத்தின் தேவை சார்ந்தது.

இலக்கியமும் காலச்சூழலும்

இலக்கியமும் காலம் சார்ந்ததே. நிலையான அரசுகளோ எழுச்சி மிக்க மக்களையோ கொண்டிராத ஒரு சமூகம் பெரும் இலக்கியப் படைப்புகளைக் கொண்டிருக்க இயலாது என்றாலும் இலக்கியத்தின் தொடர்ச்சி இருந்தே தீரும். காலம் தன் பதிவை இலக்கியத்தில்தான் நிகழ்த்த இயலும். இக்காலத்தின் பதிவினை எண்ணற்ற சிற்றிலக்கியங்

களில் காணமுடியும். சிவப்பிரகாசரின் பிரபுலிங்க லீலையைக் காப்பியம் என மதிப்பிடுவது காப்பியத்தை எளிமைப்படுத்தும் ஒரு செயல். பெருங்காப்பியம் தோன்றுவதற்கான காலமல்ல இது. என்றாலும் பெரியபுராணத்தைக் காப்பியமாகக் கொள்ளக் கூடுமானால் பிரபுலிங்க லீலையைக் காப்பியமாகக் கொள்ளக் கூடும். அவருடைய படைப்புக்கள் அனைத்தும் சிற்றிலக்கியங்களே. கோவை, அந்தாதி, மாலை, கலம்பகம், கண்ணி, தூது, உலா என நீண்டு செல்லும். சிற்றிலக்கியங்களும் கோவில் புராணங்களும் படைத்துள்ளார். திருக்கூவப் புராணம், சீக்காளத்திப் புராணம் போன்றவை புராணங்கள் சார்ந்தது. இவரது சிற்றிலக்கியங் களாவன வெங்கைக்கோவை, திருச்செந்தில் நிரோட்டகயமக அந்தாதி, சோணசைலமாலை, சதமணிமாலை, வெங்கைக் கலம்பகம், திருவெங்கை யுலா, சிவஞான பாலையர் நெஞ்சுவிடு தூது, சிவஞான பாலையர் பிள்ளைத்தமிழ் போன்றன. சிவப்பிரகாசர் கையாளாத சிற்றிலக்கிய வகை ஏதுமில்லை, பரணியைத் தவிர. போரின் வெற்றியைப் பாடும் காலமல்ல இது. போரின் துன்பத்தைத்தான் பாடவேண்டும், கூடவே ஐரோப்பியர்களின் பீரங்கி ஓசைகள் ஆயிரம் யானையையும் சிதற ஓடச் செய்திருக்க வேண்டும். சிவப்பிரகாசரின் கவனம் பரணியில் பதியாதது வியப்பில்லை. இச்சிற்றிலக்கியங்கள் மரபின் உச்சமில்லாதவை தான் ஆனால் மரபின் தொடர்ச்சியைக் குறிக்கின்றன.

காலமே கலைஞனை வார்த்தெடுக்கிறது. சிவப்பிரகாசரின் படைப்புக்கள் போதிய கவனிப்பைப் பெறாமைக்கு அவர் காலம் குறித்த புரித லின்மையையே காரணமாகக் கூறவேண்டும். நிறுவனமாக்கப்பட்ட சமயங்களுக்கு எதிராக வீரசைவம் தோற்றம் கொண்டது. கன்னடத் திலிருந்து கலாச்சார பரிமாற்றம் மூலமாகத் தமிழ் பெற்றுக் கொண்டது. வீரசைவம் சாதியையும் உயிர்ப்பலியையும் எதிர்த்தது. தமிழ் வீரசைவம் கன்னட பசவரின் மரபிலிருந்து தோற்றங்கொண்டது. சிவப்பிரகாசரின் 17-வது நூற்றாண்டு சாதிப் பூசல்களும் சமயப் பூசல்களும் நிறைந்தது. இவற்றிற்கப்பாற்பட்ட சமய ஒழுங்கு காலத்தின் தேடலானது. 17-ஆம் நூற்றாண்டு நிலையான அரசினைக் கொண்டிராத நூற்றாண்டு. அதிகாரப் போட்டிகளின் விளைவாக சாதாரண மக்கள் அல்லலுற்றனர். மக்களின் ஆன்மீக வாழ்வைப் பாதுகாக்க வீரசைவம் தோற்றங் கொண்டது. இந்நூற்றாண்டு சிற்றிலக்கியங்களின் நூற்றாண்டு தமிழ் இலக்கிய மரபின் உச்சத்தை நிலை குறிப்பதில்லை. மரபின் தொடர்ச்சியையேக் குறிக்கின்றது. சிவப்பிரகாசரின் இலக்கியப் படைப்புக்கள் இக்காலப் போக்கினைச் சார்ந்தவை.

அடிக்குறிப்புகள்

1. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி ஒன்பது, ப. 59.
2. வீரசைவம், டாக்டர் வை. இரத்தினசபாபதி, ப. 4.
3. மேலது, ப. 9.
4. மேலது, ப. 2.

41. சிவப்பிரகாசர் போற்றும் சிவனடியார்

ச. சாம்பசிவனார், மதுரை.

செந்தமிழ் வல்ல சிவப்பிரகாசர் அருளிய நூல்கள் பல. அவற்றுள் காப்பியம் உண்டு; தலபுராணம் உண்டு; சிற்றிலக்கியம் உண்டு; நீதிநூல் உண்டு; தனிப்பாடல்களும் உண்டு. இவற்றுள், 'சிற்றிலக்கிய' வரிசையில் வைத்து எண்ணப்படும் நூல், 'நால்வர் நான்மணிமாலை' ஆகும். இந் நூலின்கண், மாணிக்கவாசகரை எவ்வாறு போற்றிப் புகழ்கின்றார் சிவப்பிரகாசர் என்பது குறித்து ஒரு சிறிது ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம்.

நால்வர் நான்மணிமாலை

தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களில் 'மாலை' என்பதும் ஒன்று. 'நான்மணிமாலை' என்பதற்குச் ச.வே. சுப்பிரமணியன் கூறும் விளக்கம் வருமாறு:

> ''மும்மணிமாலையில் மூவித யாப்பு முப்பது பாடலில் அந்தாதி யுடன் அமைவது போன்று, இங்கு நால்வகை யாப்பு, நாற்பது பாடலில் இணைகின்றன. வெண்பா, கலித்துறை, அகவல், விருத்தம் என்பன அவை. குறுகிய, செவ்விய அமைப்புப் பற்றியும் இனிமை குறித்தும் கலித்துறையும் அனைத்து விருத்தமும் வெண்பா, அகவல் ஆகிய பாநிலைத் தகுதியுடன் ஒன்றி நிற்கும் சிறப்புப் பெறுகின்றன போலும்! வெண்பா, கலித்துறை, விருத்தம், அகவல் என முறை மாறியும் அமைதல் உண்மை தெரிகின்றது!''
> (இலக்கணத் தொகை: யாப்பு, பாட்டியல், ப. 417)

'நான்மணிமாலை'க்குரிய இலக்கணமாக, 'இலக்கண விளக்கம்' எனும் நூல் கூறும் விதி :

> ''வெண்பாக் கலித்துறை விருத்தம் அகவல்
> பின்பேசும் அந்தாதியின் நாற்பது பெறின்
> நான்மணி மாலை யாம்என நவில்வர்''
>
> (இலக்கண விளக்கம் - 821)

தமிழில் உள்ள 'நான்மணிமாலை' நூல்கள் பலவாம். அவற்றுள், கோயில் நான்மணிமாலை, திருவாரூர் நான்மணிமாலை, பழனி நான்மணிமாலை என்பனவற்றைக் குறிப்பிடலாம். ஆனால் அந்த நூல்களுக்கும், 'நால்வர் நான்மணிமாலை' நூலுக்கும் வேறுபாடு உண்டு.

அந்த நூல்களில் பாட்டுடைத் தலைவர் ஒருவரே! ஆனால் இந்த நூலில் பாட்டுடைத் தலைவர்கள் நால்வர் ஆவர்! அவை, இறைவன் திருவருளைப் பெறுவதற்குப் பாடப் பெற்றவை. 'நால்வர் நான்மணிமாலை'யோ ''இறைவன் திருவருளைப் பெற்ற நால்வர்களின் பெருமையையும், அவர்கள் செய்த திருவருட் செயல்களையும், பாடற் சிறப்பையும் உலகினர் உணர்ந்து, சமயநெறி நின்று, இம்மை மறுமை வீடுபேறு முதலான பயன்களையடைந்து உய்யும் பொருட்டுப் பாடியருளியதாம்'' (நால்வர் நான்மணிமாலை, கழகம், ஆ. பொன்னுசாமிப்பிள்ளை, முகவுரை, ப. 5)

நாற்பது பாடல்களில் சம்பந்தருக்கு-10 வெண்பாக்கள்; அப்பருக்கு-10 கலித்துறைகள்; சுந்தரருக்கு-10 விருத்தப்பாக்கள்; மாணிக்கவாசகருக்கு-10 அகவற்பாக்கள்.

மணிவாசகரைப் போற்றும் மாண்பு

சிவப்பிரகாச அடிகளார், இச்சிறுநூலில், மணிவாசகரை 109 அடிகளால் பரவுகின்றார். 3 அடிச் சிறுமை முதல் 28 அடிப் பெருமை வரை, பாக்கள் அமைந்துள்ளன. மணிவாசகரைப் போற்றத் தலைப்படும் சிவப்பிரகாசர், அவரை ஆட்கொண்ட அருட்கடலாம் சிவபெருமானின் பெருமைகளையும் இணைத்தே பாடுகின்றார்.

''விளங்குஇழை பகிர்ந்த மெய்யுடை முக்கண் காரணன்'' (4:1,2)

என, உமையொரு பாகனாக விளங்கும் முதல்வனைக் குறிப்பவர்,

''இருக்கும் அடுக்கல் அரக்கன் எடுப்ப
முறைபொர வரைபொரு மொய்ம்பின்
மலைமகள் தழுவ மனமகிழ் வோனே!'' (12: 26-28)

எனத் திருக்கயிலையை இராவணன் பெயர்க்க முயன்றபோது தன் விரலால் அடர்த்த அவனின் செயலையும் சுட்டுவர்.

''முதல்வன், தனது வலப்பக்கத்திலே 'மழு'வை உயர்த்தியவன்; திருத்தலையில் புனித கங்கையைக் கொண்டவன் (16:1,2); செம்மையான நீண்ட சடை முடியையுடைய தேவாதிபர்'' (40:1) என்றெல்லாம் குறிப்பிடுகின்றார் சிவப்பிரகாசர்.

இச்சின்னஞ்சிறு பகுதியில், உவமைகளையும் கையாண்டுள்ளார் சிவப்பிரகாசர் என்பதும் இவண் குறிக்கத்தகும்.

''மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ?''

''கருங்கல் மனமும்''

''தொடுமணற் கேணியில் சுரந்து நீர்பாய'' (4:4; 8;9)

''பவளம் வார்சடை'' (28:1)

''பொற்கலம் நிகர்க்கும் பூசுரர் நான்மறை
மட்கலம் நிகர்க்கும் மதுர வாசகம்'' (32:6,7)

என்பன சான்றுகள்.

''வலமழு உயரிய'' (16) எனும் பாடல் முழுவதுமே, உருவக அணியில் அமைந்து கற்பார்க்குக் கழிபேருவகை நல்குவதாம்.

அனைத்திற்கு மேலாகச் சிவப்பிரகாசர், இந்நூலின்கண் திருவாசகத்தையும் அதனையருளிய மணிவாசகரையும் போற்றும் திறம் தனித்தன்மை வாய்ந்தது.

வேதத்தையும் திருவாசகத்தையும் ஒப்பிட்டு, வேதத்தைவிட மணிவாசகர் மொழிந்த திருவாசகமே பலவகையினும் உயர்ந்தது என்கின்றார் சிவப்பிரகாசர்.

''வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணல் கேணியில் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகின் மற்றையர் இலரே!'' (4:6-13)

''திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்'' என்பது தமிழகப் பழமொழி.

மேலைநாட்டறிஞர்-கிறித்துவப் பாதிரியார் - டாக்டர் ஜி.யு. போப் ஐயர், திருவாசகத்தில் தம் உள்ளத்தைப் பறிகொடுத்து, நெக்கு நெக்கு உருகியதனோடமையாது, இதனை ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்த சிறப்பை உலகம் அறியும்.

சிவப்பிரகாசரோ, 'உள்ளம் உருக்கும் திருவாசகம்' என்று பாடியதனோடன்றி, வேதத்தையும் திருவாசகத்தையும் ஒப்பிட்டு, ''வேதம் ஓதுவார், கண்ணீர் சிந்துதல் இல்லை; ஆனால் திருவாசகத்தை ஒருமுறை ஓதினாலே போதும், தொட்டனைத் தூறும் மணற்கேணி போலக் கண்ணீர் சுரப்பர்!'' என்று கூறியது, வேறெவரும் கூறத் துணியாதது!

இம்மட்டோடு நின்றாரிலர் சிவப்பிரகாசர். ''வேதம் ஓதின், அதனால் உண்டாகும் உண்மைப் பயன், விண்ணுலகாதி பதமே! ஆனால் திருவாசகம் ஓதினாலோ, அதனால் ஆகும் பயன், சிவப்பேறு எனப்படும் முத்தியாம்! பூசுரர் நான்மறை, 'மட்கலம்' போன்றது; ஆனால்,

மணிவாசகர் மொழிந்த மதுர வாசகமோ 'பொற்கலம்' நிகர்க்கும்'' என அழுத்தமாகவும் உரைப்பது எண்ணத்தக்கது! (16:32).

சிவனடியார்கள் பலபேர்; எனினும் சிவபெருமான், மணிவாசகர்பால் மட்டும் அளவிறந்த அன்பு காட்டினான் என்கின்றார் சிவப்பிரகாசர்.

சுருதி நாயகற்கு முடிவிளக்கு எரித்தார் ஒருவர்; தன் மகளின் அழகிய கரிய கூந்தலை அளித்தார் ஒருவர்; நீரில் மிதந்த நெல் முளை களைக் கொண்டுவந்து சமைத்து அளித்தார் ஒருவர்; கோவணத்திற்கு ஈடாகத் தன்னையே நிறுத்துத் தந்தார் ஒருவர்; தம் தந்தையின் தாளினைத் துணித்தார் ஒருவர்-எனப் பல அடியார்கள் பற்பல அரிய செயல்களைச் செய்து தொண்டராக ஆயினர்! ஆனால் இறைவனோ, மணிவாசகரின் பாடும் பணிக்காக, மதுரை நகரில் குதிரைச் சேவகனாக வந்தான்; விண் புகழ் முடிமிசை மண் சுமந்தான்; பொன்மேனியில் பிரம்படி பட்டான் - இவ்வாறெல்லாம் செய்து, மணிவாசகரைத் தன் தொண்டனாக ஆக்கிக் கொண்ட வரலாறு, உலகில் எங்கும் காணமுடியாத விந்தைச் செயல் என ஏத்திப் போற்றுகின்றார் சிவப்பிரகாசர். (12)

இராமலிங்க அடிகளாரும்,

''பெண்சுமந்த பாகப் பெருமான் ஒருமாமேல்
எண்சுமந்த சேவகன்போல் எய்தியதும் வைகைநதி
மண்சுமந்து நின்றதும்ஓர் மாறன் பிரம்படியால்
புண்சுமந்து கொண்டதும்நின் பொருட்டன்றோ புண்ணியனே!''

(அருட்பா, மணிவாசகர் அருள்மாலை - 9)

என்று போற்றுவதும் இவண் ஒப்புநோக்கத்தகும்.

பலவாறாகப் போற்றிப் புகழும் சிவப்பிரகாசர், மணிவாசகரிடமே தமது வேண்டுதலைப் பின்வருமாறு புலப்படுத்துகின்றார்:

''திருப்பெருந்துறையில், குருந்த மரத்தின் நீழலில், சைவ சித்தாந்தப் பொருண்மை முற்றும், சிவபெருமானிடத்துக் கொள்ளை கொண்ட வாதவூர் அண்ணலே! தில்லையில் திருநடனம் புரியும் சிவபெருமான்பால் நீ பெற்ற அந்தப் பேரன்பிலே, அடியேனுக்கும் ஒரு சிறிதேனும் அளித்து அருளல் வேண்டும்!''

என்று வேண்டுபவர்,

''மணிவாசகரே! நீவிர், இறைவனிடத்துப் பெற்ற பேரன்போ அளவற்றது. அதில் ஒரு சிறிது எனக்கு அருளாமல், முற்றும் தேவரீரே கொள்ளுதல், உமது கருணை மிகுதிக்கு முறைமை யன்று!''

என்று கூறுவாராயின், மணிவாசகரிடத்துச் சிவப்பிரகாசர் கொண்டுள்ள அளவற்ற பக்தி எத்துணை மேலானது என்பதை அறிந்து கொள்ள முடியும்!

''நீயே கோடல் நின்அருட் பெருக்கிற்கு
ஏற்றது அன்று....!'' (20:7,8)

என்பது சிவப்பிரகாசர் வாக்கு!

இந்நூலின் முத்தாய்ப்பாகச் சிவப்பிரகாசர் கூறுவது ஒன்று உண்டு!

''திருவாசகம் ஓதின் முத்தி மெய்ப்பயன் உறுதியாகக் கிட்டும்'' (16) என்று கூறும் சிவப்பிரகாசர், அதற்கான காரணத்தையும் ஒரு பாடலில் கூறுகின்றார் :

''தானே முத்தி தருகுவன் சிவனவன்
அடியன் வாத வூரனைக்
கடிவின் மனத்தாற் கட்டவல் லார்க்கே!'' (36)

''சிவபெருமான், தன் அடியாராகிய திருவாதவூரடிகளை நீக்கமின்றிய உள்ளத்தால் நேசித்துப் பிணிக்க வல்லவர்க்குத் தானே முற்பட்டுப் பரமுத்தியைத் தந்தருளுவன்'' என்பது இதன் பொருள்.

இந்நூலுக்கு உரை வகுத்த இராமலிங்க சுவாமிகள், இப் பாடலுக்குத் தரும் விளக்கம் இவண் குறிக்கத் தகும் :

"இவ்வாதவூரடிகளார் உலகையீடேற்றுவான், அவதரித்த அருட்குர வராகலின், பிற சிறுதேவரைத் தெய்வமாகப் பேணுவாரைக் காண்டற்கும் அஞ்சுதலுடையராய்ச் சிவபெருமானையே முதற் கடவுளென எவரும் தெளியுமாறு தெருட்டி, ஆனந்த மேலீட்டான் அக்கடவுளை அன்புடனோக்கி நிற்றலும் அழுதலும் தொழுதலு முதலிய அமைந்தவ ரென்பார், 'அவனடியன்' என்றும்; இவ் வுண்மை உணர்ந்து மன ஒருமையுற்று, இடையறவின்றி இவரை வழிபடல், சிவபுண்ணிய முதிர்வினர்க்கே சித்திக்குமென்பார், 'வாதவூரனைக் கடிவின் மனத்தாற் கட்டவல்லார்க்கு' என்றும்; பாலர் பித்தர் பசாசர் போன்று தற்போதம் இழந்து, இறைவர் பணியில் நின்றாராகலின், இவர் செயலெல்லாம் இறைவர் செயலாக முடிதலான், இவரை வழிபடுவோர்க்கு அவ் இறைவர் தாமே, அவற்றை ஏற்று, முத்தி அளிப்பர் என்பார், 'தானே முத்தி தருகுவன்' என்றும் கூறினார்!'' (ப. 119,120)

திருவாசகம் அருளிய மணிவாசகரைப் பற்றிச் செந்தமிழ்ச் சிவப்பிரகாசர் போற்றும் முறை, தனித்தன்மை வாய்ந்தது. திருவாசகத்தை நாளும் ஓதி, முத்திப் பயன் பெறுவது சைவப் பெருமக்களின் கடமையாம்!

42. சிவப்பிரகாசரும் வள்ளுவரும்

ச. சாரதா, சென்னை.

'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று'

என்பது போல் இவ்வுலகில் தோன்றி வளர்ந்த எண்ணற்ற சான்றோருள் குறிப்பிடத்தக்கவர் இருவர், அவர்கள், வள்ளுவரும் சிவப்பிரகாசரும் ஆவர். இவர் தம் கருத்துகள் எந்த நோக்கில் ஒத்துச் செல்கின்றன? என்பது பற்றிய ஆய்வுதான் இக்கட்டுரை.

நோக்கம்

வள்ளுவரும் சிவப்பிரகாசரும் வெவ்வேறு கோணங்களில் தங்கள் வாழ்வை அமைத்துக் கொண்டாலும் உள்ளார்ந்த கருத்துகள் ஒன்றிய நிலையை எடுத்து விளக்குவதே நோக்கமாக அமைகிறது. மனிதன் பல்வேறு மத, இன, வேறுபாடுகள் இருப்பினும் அடிப்படை உணர்வுகள், கருத்துகள், ஒன்றே என்பதைப் பறைசாற்றும் முகமாக கட்டுரை செல்கிறது. எண்ணரும் சொல்லாம் எழு சீரிலேயே கருத்தை விரிவாக முடிக்கும் வள்ளுவன் திறனும், விரிந்து செல்லும் அடிகளைக் கொண்ட சிவப்பிரகாசரும் ஒத்துச் செல்லும் திறன் பாராட்டற்குரியது.

இருவேறு கோணங்கள்

வள்ளுவரும் சிவப்பிரகாசரும் வெவ்வேறு காலங்களில் வாழ்ந்தவர் எனலாம். அடிப்படை நோக்கே, இலக்கிய நோக்கே வேறாக உள்ளது வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்டார். சிவப்பிரகாசர் தன்னை வீர சைவத்திற்கே அர்ப்பணித்த வீரச்செம்மல். இல்வாழ்வான் என்பான் இயல்புடைய அனைவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை என்ற கருத்திற்கேற்ப இல்லறம் காத்து நல்லறம் ஓம்பிய செம்மல், வள்ளுவர். சிவப்பிரகாசரோ துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து இறந்தாரை எண்ணிக் கொண்டற்று என்பதற்கு ஏற்ப துறவு நிலை மேற்கொண்டவர்.

எம்மதமும் சம்மதம் எவ்வுயிரும் ஓரினம் என்ற நோக்கில் தம் வாழ்வை அமைத்து செம்மையுற வாழ்ந்தவர் வள்ளுவர். சிவ நெறியே உயர் நெறி, அதிலும் அதி தீவிரப் பற்றுடைய வீரசைவத்தைக் கொண்டவர்

சிவப்பிரகாசர். இப்படி பல்வேறு கோணங்களில் வேறுபட்டாலும் வள்ளுவர் கருத்து சிவப்பிரகாசர் நூல்களில் காணமுடிகிறது. வள்ளுவர் இயற்றியதோ ஒரே நூல். ஆனால் சிவப்பிரகாசர் இயற்றியதோ பல நூல். வள்ளுவர் ஒரு கருத்தைப் பத்து முறை வற்புறுத்திக் கூறுகிறார். ஆனால் சிவப்பிரகாசரோ ஒருமுறை கூறியும் வள்ளுவனார் கருத்தை எடுத்தாளுகிறார். வள்ளுவம் முப்பாலாகப் பிரிந்து இறை முதல் துறவு வகையிலான வாழ்வியல் கட்டங்களைப் பல்வேறு கோணங்களில் வகுத்துச் செல்கிறது. ஆனால் சிவப்பிரகாசர் நூல்களோ இறைக்கொள்கையிடையே உலகியல் நடைமுறைகளைக் கூறிச்செல்லும் முகத்தான் வள்ளுவனின் குறளையும் சான்றாகக் காட்டும் திறன் வள்ளுவன் கருத்தில் சுவாமிகள் கொண்ட பற்றை நன்றாக விளக்குகிறது.

தோற்றம்

வான்புகழ் நூல் தந்த வள்ளுவன் காலமும் பெற்றோரும் இன்று வரை சரியாக அறிய இயலவில்லை, எனினும் அவர்தம் புகழ் கொடிகட்டிப் பறக்கிறது பாரெங்கும். குறளின் காலம் எனக் கருதும் கடைச்சங்க காலம் வள்ளுவனின் காலம் எனலாம்.

ஐம்பூதத்தில் ஒன்றான மண் மகிமை பெறும் தலமாம் காஞ்சியில் குமாரசாமி தேசிகரின் மகனாகப் பிறந்தார் சிவப்பிரகாசர். தருமை யாதீனம் வெள்ளியம்பலத் தம்பிரானிடம் தமிழ் பயின்றார். தமிழ், வடமொழி, தெலுங்கு போன்ற மொழிப் புலமையுடையவர். 'கற்பனைக் களஞ்சியம்' என்றும் போற்றப்பட்டார். தருக்க பரிபாசை என்னும் நூலை தமிழில் மொழி பெயர்த்தார்.

வள்ளுவரும் சிவப்பிரகாசரும்

திருவெங்கை உலாவில் சிறப்புப் பாயிரத்தில் ''வெங்கைப்பதி.... சங்கத்தில் போற்றும்'' என்ற வரிகள் சிவப்பிரகாசரின் திருக்குறள் பற்றிற்குச் சான்றாகும். கடைச் சங்ககால நூலாம் திருக்குறள் தமிழ் உலகப் பொதுமறை என்றழைக்கப்படுதலின் ''தமிழ் நூல் பொதுக் கடந்தான்'' என்ற வரிகள் திருக்குறளைக் குறிக்கும் எனலாம். ஏனெனில் தமிழில் பொது மறையாகத் திகழ்வது திருக்குறளே.

இறைவனின் திருவடி ஒப்புமை

இறையவனின் திருவடிகள் இரண்டும் வள்ளுவனின் குறளடியோடு ஒப்புமைக் கூறப்படுகின்றன.

> **''என்னடிகள் வெண்குறளோடு அடியிரண்டும்**
> **என்தலைமேல் இருத்தும் இறை''**

என்ற வரிகள் சிந்திக்கத்தக்கன. அடிகளை வெற்றுப்பாடலாகக் கருதாது இலக்கண முறைப்படி, வெண்பாவிற்குரிய இலக்கணம் கொண்ட அடியாக மட்டும் எண்ணாது சிவசிந்தனைக்கு ஒப்பக் கூறும் திறன் போற்றற் குரியது. முதலடியாம் அளவடி சிவனின் பாதத்திற்கும், அடுத்த அடி அம்செஞ்சீரடியாம் முச்சீரடி பார்வதியின் பாதத்திற்கும் ஒப்பிட்டு அர்த்தநாரீசுவரர் தோற்றத்தோடு ஒப்பக் கூறும் திறன் அன்னாரின் சிவ மாண்பினைப் புலப்படுத்தா நிற்கும். வீரசைவ மதமாதலின் காணும் பொருளெல்லாம் வீரசைவமாகக் காண்டல் துணிபாதலின், உலகியல் வாழ்வு நிலையைக் குறள்வழி விளக்கும் திறன் அடிகளாரின் அறிவாற்றல் வெளிப்படுவதோடு குறளிற்கும் பெருமை சேர்க்கும் முகமாக அமைந்தது எனலாம்.

அடி வீடுபேற்றை நல்கும்

இறையடி வீடுபேற்றை நல்கும், குறளடியும் வீடுபேற்றை நல்கும் எப்படி? ''பற்றுக பற்றற்றான் பற்றினை'' என்பது போல் அடிகளார் பற்றற்றான் பற்றினைப் பற்றி வாழ்ந்தது மட்டுமல்லாமல் பட்டறிவு நல்கும் குறளையும் வீடுபேறு நல்கும் சிறப்புடையது என்கிறார். எப்படி? அறம், பொருள், இன்பம் என்ற முப்பால் வழி வாழ்ந்தால் வீடுபேறு என்பது வீடு தேடி வரும் என்பது வள்ளுவர் கருத்தாதலின் இரண்டு அடிகளும் வீடுபேற்றை நல்கும் என்பது துணிபு. மேலும் வெண்குறள் என்ற சொல் வெண்பாவால் ஆன திருக்குறளையே குறிக்கும்.

வள்ளுவமும் சிவமும்

வள்ளுவர் தாம் எடுத்துக் கொண்ட கருத்தைப் பத்துக் குறளில் கூறுவார். அது அவரின் இயல்பு. கருத்து ஒன்றேயாயினும் கூறும் விதம் மாறுபடும் என்பது குறள் பயில்வார்க்கு விளங்கும். எப்படி? எடுக்கின்ற கருத்தினைத் தருவது மட்டுமல்லாமல் அதன் இலக்கணம், அதன் பயன், அதன் சிறப்பு என்று கூறும் தன்மையைத் தன் கருத்தோடு ஒப்பிட்டுக் கூறுகிறார் அடிகளார். வள்ளுவன் பத்து முறை கூறியது போல் திருமாலும் தான் இறையே என்பதைக் காட்ட பத்து அவதாரம் எடுத்தான் எனக் கூறுகிறார்.

''வற்புறுத்த ஓர்பொருளை வள்ளுவனார் பத்து முறை
சொற்பொருத்தி ஓதும் துணிவுபோல்....தற்பதத்தால்
ஓதும்பிரம்மம் ஒருதானென்ப தொன்றின்மையால்
காதுபவம் பத்து எடுத்துக் காட்டினோன்''

என்ற பாடல் வரிகள் திருக்குறளின் வடிவ அமைப்புத் தன்மைக்கு ஏற்ப அமைந்த திறம் பாராட்டிற்குரியது. அகத்துறையாயினும் சரி புறத்துறையாயினும் சரி இருவர் தம் கருத்தும் ஒத்துச் செல்லும் நிலையில் அமைந்துள்ளது.

அகத்துறை

காதல் என்பது புனிதமானது, தூய்மையானது, அகநோக்கு உடையது என்பது துறவிலும் காதல் வயப்பட்ட நிலையில் அகத்துறைப் பாடல்கள் பாடுங்கால் விளங்கா நிற்கும். இன்றோ அதன் பொருள் சொல்லும் நிலையில் இல்லை.

திருவெங்கைக் கோவையில் அடிகளார்

''பாயுமலர்த்தாள் பொழில் சூழ்வெங்கைப் பழமலைச்சீர்
ஆயுமுனிவரர் தாமே முனிவருள் ஆக்குதல் போல
நோயும் அந்நோய்க்கு மருந்தும் தாராநிற்கும் நூற்பகலில்
தேடிமல்கும் பெருமலை மாதர் திருக்கண்களே''

என்ற பாடலில் ''நோயும் அந்நோய்க்கு மருந்தும் தாரா நிற்கும்'' என்று இறைவனைத் தலைவனாக எண்ணிப் பாடிய பாடல் குறள் கருத்தோடு ஒத்துச் செல்கிறது.

''இருநோக்கு இவளுண்கண் உள்ளது ஒருநோக்கு
நோய்நோக்கொன்று அந்நோய்க்கு மருந்து''

என்ற குறள் காதல் வயப்பட்டாரின் நோய் தீர்க்க அக்காதலரே மருந்தாவர் என்று கூறுகிறார் வள்ளுவர். அதே போல் இறைவன் மீது காதல் கொண்டாரின் பக்தியெனும் காதலைத் தீர்க்க அவனே மருந்தாவான் என்கிறார் அடிகளார்.

புறத்துறை

புறத்துறை என்பது பிறர் அறியும் வண்ணம் செய்யும் செயல் எனலாம். அவ்வகையில் ஈண்டு பல தலைப்புகளைக் காணலாம்.

அடக்கம்

பிரபுலிங்க லீலையில் மதில் சிறப்பைக் கூறும்பொழுது அடக்கம் கூறப்படுகிறது.

''தாழ்ந்தோர் உயர்வர் என்றும் மிக
உயர்ந்தோர் தாழ்வர் என்றும் அறம்
சூழ்ந்தோர் உரைக்கும் உரை கண்டார்
மதில்சூழ் கிடந்த தொல்லகழி
தாழ்ந்தோர் அனந்தன் மணிமுடி மேல்
நின்றன்று உயர்ந்த தடவரைச்
சூழ்ந்தோர் வரையிலுறைபவன் தாள்
கீழ் நின்றது போல் எயிலே.

அகழி தாழ்ந்து செல்லலின் ஆதிசேடனின் தலையிலும், மதில் உயர்தலின் ஆதவன் காலடியிலும் இருக்கின்றன என்று சொல்லும் முகத்தான்

''பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து''

என்ற குறள் கருத்து எடுத்தாளப்படுகிறது. பணிவுடையாரென்றும் சிறப்பர், பணிவிலார் என்றும் தாழ்வர் என்று கூறுகிறார்.

கல்வி

கல்வி என்பது கண் போன்றது. ஒளிவிளக்காய்த் திகழ்வது. அத்தகையக் கல்வியைக் கற்க வயது என்பன போன்ற தடை கிடையாது என்பது ஓதற்பிரிவு என அகத்துறையில் கூறியிருப்பது விளக்கா நிற்கிறது. தன் காதலியைப் பிரிந்து கல்வி கற்கச் செல்கிறான் என்பதால் தெளிவாகும். திருவெங்கைக் கோவையில் 408-ஆம் செய்யுளில்

''கண்ணுடையார் கற்றவரே கல்லாதார் கண் முகத்திதரண்டு
புண்ணுடையார் எனக் கூறும் காதலர் போயினரே''

என்ற அடிகள் திருக்குறளின் கருத்து காணப்படுகிறது. இதோ குறள்

''கண்ணுடையோர் என்போர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடை யார்கல் லாதவர்''

இல்லறம்

இல்லறம் என்பது மனமொன்றிய நிலையில் செய்யும் அறம். இல்லறத்தை நல்லறமாக நடாத்திச் செல்ல இருவரும் இணைந்தே செயல்பட்டாலும் பெண்ணின் செயல் அதிகமாதலின் ஈண்டு பெண்சிறப்பு பேசப்படுகிறது எனலாம். பெரியநாயகியம்மைக் கலித்துறை என்னும் நூலில் ''வினைமாட்சி'' எனத் தொடரும் பாடலில்

''மனைமாட சியார்க்குண்டு உலகீன்ற
குன்றப் பெரியம்மையே''

என்ற வரிகள் உலகம் வறுமையுற்ற நிலையிலும் அம்மையார் உலகைப் புறந்தார் என்ற கருத்தானது

''மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை''

என்ற குறளின் கருத்திற்கு ஏற்ப அமைந்துள்ள திறன் அடிகளாரின் குறள் பற்றை வெளிப்படுத்துகிறது எனலாம்.

மக்கட்பேறு

இல்லறத்தின் சிறப்பாய் விளங்குவது நன்மக்கட்பேறே அம்மக்கட் பேற்றைப் பற்றி இதே நூலில் ''கற்றார் அறிகுவர்'' என்ற பாடலில்

''நற்றாண் மகப்பேறுக் கென்றாகி.......
பெற்றார் மலையரசர்''

என்ற மகப்பேற்றைக் குறிக்கும் பாடல் அப்பெண்ணின் அறிவை வெளிப்படுத்தலின் வள்ளுவனின் குறள் கருத்தாம்.

''ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்''

கருத்தோடு பொருந்திச் செல்லும் திறன் பாராட்டற்குரியது.

மேலும் சோணசைலமாலை என்ற நூலில் நூறாவது பாடலில்

''சீரணி புகழும் கல்வியும் சிறந்த செல்வமும் இல்லில் வாழ்பவர்க்கு
பேரணிகலமென புதல்வரும் பெறத்துதிப்பவர்க் கருள்பவன் நீ''

என்ற அடிகள் திருக்குறளாம்.

''மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு''

என்பதோடு பொருத்தமுடையதாய் விளங்குகிறது என்பது போதரும்.

ஈகை

வறியார்க்கு ஒன்று கொடுப்பதுதான் ஈகை என்கிறார் வள்ளுவர். பொருள் பெற்றான் ஒருவன் தான் பெற்ற செல்வத்தை, தாளாற்றி பெறும் பொருளை, தக்கார்க்களித்தலே சிறப்பு என்கிறது குறள். இக்கருத்தமைந்த பாடல் அடிகளாரின் திருவெங்கையுலாவில் காணப்படுகிறது.

''.......... பூத்தப் பொருள்
ஏதப்படியால் இருந்தவ நல்லறமென்
பூதப்படியுறை புதைக்கின்றோன்''

என்ற பாடல் செல்வம் பெற்றான் அதனைப் புதைத்து வைத்தல் என்பது பூதத்தைக் காப்பதற்கொப்பாகும் என்கிறார். இது பொய்யா மொழிப் புலவனின் கருத்திற்கேற்ப அமைந்துள்ளது.

''அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருளவைப் புழி''

என்பதே அக்குறளாகும். அற்றாரென்பது மிகவும் துன்புற்றாரைக் குறிக்கும். செல்வம் மிகத் துன்புறுவார்க்கே வேண்டுமாதலின் இவ்வாறு கூறப்பட்டது எனலாம். ஏனெனில் அடிப்படைத் தேவை இல்லாமல் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்கள் அதிகமுலகில் உள்ளனர் என்பது யாவரும் அறிந்த உண்மையுமாகும்.

வாய்மை

வாய்மை என்று சொல்லப்படுவது யார்க்கும் தீமை பயவாத சொற்களாகும். அவ்வாய்மையைப் பேசுவோர் வேறு பிற அறத்தை

ஆற்றவேண்டாம் என்பதோடு, வாய்மையானது தவம் செய்தலை விட மேலானதென இருவருமே கூறுகின்றனர்.

நைமிச்சரணியர் சருக்கம் என்ற நூலில் அடிகளார்

**''உவமைதீர்ந்திடு வாய்மையொன்றே ஆற்றின் உலகில்
தவமுந்தானமும் ஒருங்குறச் செய்தலிற்''**

என்றும், வள்ளுவரும் தன் குறளில் வாய்மையினும் சிறந்த அறம் இல்லை என்பதனைக் கூறியுள்ளார்.

**''மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானம் செய்வாரின் தலை''**

என்பதே அக்குறள் ஆகும்.

வாணிகம்

வாணிகம் என்பது மக்களுக்குத் தேவையான பொருள்களைத் தேவையான நேரத்தில் கொடுப்பது எனலாம். அத்தகைய செயல் நன்றாக அமைதல் நலம் பயக்கும், எப்படி? பிறர் பொருளையும் தம் பொருள் போல் எண்ணிச் செயல்பட்டால் நலம் தரும். பிரபுலிங்க லீலையில் சொற்போர் புரியும் தன்மையை விளக்க வந்த அடிகளார்,

**''சொற்புரிவர் நான்மறையோர்
..........பிறர் பொருளும்
தம்போற் பேணிப் புரிவர்''**

என்ற அடிகள் வள்ளுவனின்

**''வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணி
பிறவும் தமபோல் செயின்''**

குறள் கருத்தோடு ஒத்துச் செல்வதைக் காணமுடிகிறது.

காலமறிதல்

காலம் என்பது போனால் மீண்டும் வராது. அதனால்தான் ''காலம் பொன் போன்றது கடமை கண் போன்றது'' என்ற பழமொழி தோன்றியது எனலாம்.

திரிபுரதகனச் சருக்கம் என்ற நூலில் காலத்தின் தன்மை பற்றி விளக்குகிறார் அடிகளார்.

''வெல்கொடி வருத்த வெருவிக் கூகை''

என்ற அடிகளில் வள்ளுவனாரின்

**''பகல்வெல்லும் கூகையை காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது''**

கருத்தோடு பொருந்திச் செல்கிறது. வேந்தரின் செயலுக்கு கூறினாலும் இக்கருத்து எல்லோரின் செயலுக்கும் பொருந்தும்.

நட்பு

நட்பு என்பது நண்பனின் நற்பண்பினைப் புலப்படுத்தும் தன்மையது எனலாம். அத்தகைய நட்பும் தவறு கண்டவிடத்து சுட்டிக் காட்டித் திருத்தும் தன்மையதாக அமையவேண்டும். நெஞ்சத்து மகிழ்வோடு கூடியதாக அமையவேண்டும். அந்நட்பு பற்றி எவ்வாறு இருவரும் தம் கருத்தைக் கூறுகின்றனர் என்பதை பார்ப்போம்.

சீகாளத்திப் புராணம் என்ற நூலில் அடிகளார் நக்கீரன் சருக்கத்தில்

''பொன்றனின் நட்பினுக்கு புணர்வொடு பழகல் வேண்டா
நின்ற நல்லுணர்ச்சிதானே நிறைக்குமென்றுணர் நல்லீர்'

என்ற பாடல்வரிக் கருத்தானது வள்ளுவனின்

''புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்''

என்ற நட்பிலக்கணக் குறளோடு ஒத்துச் செல்கின்ற பாங்கு என்றும் பாராட்டற்குரியது. நட்பு என்பது ஒருவருக்கொருவர் பார்த்துப் பேசிப் பழகுவதுதான் என்பதல்ல, கேட்ட அளவிலேயே சிறந்த நண்பர் களாகப் பழகலாம் என இருவருமே கூறுகின்றனர். நட்பு ஆபத்துக் காலத்தில் உதவி செய்வதாகவும் அமைதல் சிறப்பாகும். நல்ல நண்பனை ஆபத்து நேரத்தில்தான் புரிந்து கொள்ள முடியும்.

தீண்டாமை

சாதிக் கொடுமை வேண்டாத ஒன்று அனைத்துயிர்களும் பிறப்பால் ஒன்றே என்பதை வள்ளுவன் தன் குறளில் விளக்கினான்.

''பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்''

என்பதே குறள். இக்கருத்தை அடிகளார் தன் நன்னெறியில்

''ஆக்கும் அறிவால் அல்லது பிறப்பினால்
மீக்கொள் உயர்வு இழிவு வேண்டற்க

என்று கூறுகிறார்.

அருள்

அருள் என்பது எல்லாரிடத்தும் பரந்து விரிந்து செல்லும் அன்பு எனலாம். இன்னார் இனியர் எனப் பாராது அனைவர் பாலும் செல்லும் தன்மையதாகும். அத்தகைய அருளை பல்லக்கின் வாயிலாகப் புலப்படுத்து கின்றனர் இருவரும்.

வள்ளுவர் தம் திருக்குறளில்

''அறத்தாறு இதுவென வேண்டா சிவிகைப்
பொறுத்தானோ டூர்ந்தா னிடை''

என அறத் தன்மையைக் கூறும் முகத்தான் விளக்குகிறார். இதனையே அடிகளார்

''அறத்தாறிதுவென வேண்டா சிவிகைப்
பொறுத்தானோடு ஊர்ந்தானிடை மறுத்தார் தம்
.... திருவருள் மற''

என்கிறார். இறைவனின் திருவருள் தன்மைக்குக் காட்டும் திறன் சிறப்பிற்குரியது.

இதுகாறும் கூறியவாற்றான் வள்ளுவரும் அடிகளாரும் தம் கருத்துக்களில் ஒத்துச் செல்கின்றனர் என அறிந்தோம். அதன் முடிபு பற்றி பார்ப்போம்.

1. காலத்தால் முந்திய குறள் கருத்தை அடிகளார் ஆண்டமை நன்கு தெளிவாகிறது.
2. இல்லறம் துறவறம் என்ற நிலையில் மனிதனின் எண்ணம் வேறாக இருந்தாலும் நோக்கம் சற்று மாறுபட்டுள்ளது.
3. எம்மதமும் சம்மதம் என்ற வள்ளுவரும் வீரசைவமே சிறப்பு என்னும் அடிகளாரும் இருநேர்கோடுகள் இணைந்து செல்ல முடியும் என்பதைக் காட்டுகிறது.
4. அகம் புறம் என்ற இருநிலைகளிலும் வள்ளுவரின் கருத்தை அடிகளார் ஆண்டுள்ளார் என்பது தெளிவாகிறது.
5. மேலும் வள்ளுவர் சிவப்பிரகாசர் இலக்கணம்
    வள்ளுவர் சிவப்பிரகாசர் அகயியல்
    வள்ளுவர் சிவப்பிரகாசர் புறயியல்

என்பன போன்ற பல தலைப்புகளில் ஆய்வுகள் செய்யலாம்.

43. திறனாய்வாளர் சிவப்பிரகாசர்

ச. சிவகாமி, சென்னை.

பதினேழாம் நூற்றாண்டுத் தமிழுக்கு வளம் சேர்த்த பெருந்தகை சிவப்பிரகாசர். 'கற்பனைக் களஞ்சியம்' என இலக்கியவுலகு இவரைப் போற்றும். மிகச் சிறந்த திறனாய்வாளராகவும் மாண்புறுகிறார் இவர் என்பதை எடுத்துக்காட்டுவது இக்கட்டுரையின் நோக்கம். இதற்குக் களமாக நால்வர் நான்மணிமாலையில் மணிவாசகரைப் போற்றியுரைக்கும் பத்துப்பாடல்கள் (4, 8, 12, 16, 20, 24, 28, 32, 36, 40) அமைகின்றன. தம்மைக் கவர்ந்த ஒருவரைப் போற்றியுரைத்தல் என்பது யாவருக்கும் எளிது. ஆயின் அப்போற்றுதற்குரிய காரணிகளின் வன்மை மென்மைகளைத் தெளிந்து, அவற்றின் உண்மைத் தன்மையை உணர்ந்து போற்றுதல் என்பது அரிதானதும் ஆய்வு நோக்குடையதும் ஆகும். இப்போக்கினைச் சிவப்பிரகாசரின் இப்பாடல்கள் நன்கு வெளிப்படுத்தும் பாங்கினை இக்கட்டுரை காட்டுகிறது.

''ஒரு வகையில் ஒரு படைப்பாளி விமரிசகனாகவும் இருக்க வேண்டும். அதனால் அவனது படைப்பின் ஆழ, அகலங்கள் விரிவடைந்து பயன் தரும். ஒவ்வொரு விமரிசகனும் ஒரு நல்ல வாசகனாய் இருக்க வேண்டும்'' என விஜயதிருவேங்கடம் (எழுதுவது எப்படி? -5, மகரம் (தொகு), பழனியப்பா பிரதர்ஸ், சென்னை - 1, மு.ப. டிச. 2001, ப.629) ஒரு விமரிசகனுக்கு வழங்கும் இலக்கணம் மதிப்புரை தருவோருக்கும் திறனாய்வு செய்வோருக்கும் பொருந்தும். இதற்கு முற்றிலும் பொருத்த முடையவராகச் சிவப்பிரகாசர் விளங்குகிறார். அவரது வாசிப்பு பரந்து பட்டு அமைவதற்கு அவரது படைப்புகளே சான்றுகளாகின்றன. திருக்குறள், கம்பராமாயணம், பெரியபுராணம், தேவாரம், திருவாசகம் போன்றன வற்றின் கருத்துகளும், குறிப்புகளும் அவற்றுள் நிறைந்துள்ளன. படைப்புத் திறனுக்கு இத்தொகுதியுள் இடம்பெறும் பிற பல கட்டுரைகளே சான்றுகள்.

திறனாய்வாளரின் பண்புகளாக, 'பொதுவான அழகியல் உணர்வு, கலை - இலக்கியத்தை ரசிக்கக் கூடிய - அனுபவிக்கக் கூடிய - மனவுணர்வு, அதனை முறையாக வெளிப்படுத்தக் கூடிய திறன் - இவை திறானாய்வாளனுக்குரிய அடிப்படையான பண்புகள். இலக்கியத்தைப் பற்றியும், பரந்த உலகியல் வாழ்வு பற்றியும் பொதுவான அறிவும்

இந்த - அல்லது இதனை யொத்த - பொருள்கள் பற்றிய ஆழமான அறிவும், சரியான புலனுட்பமும், எதிர்கொள்பவற்றில் குறிப்பிடத்தக்கவை கண்டால் அவற்றைப் பளிச்செனப் பற்றிக்கொள்ளும் துடிப்பான ஆற்றலும் எதிர்வினை நிகழ்த்துவதில் வேகமும் உள்ளார்ந்த அறிவின் கூர்மையும், எதனையும் வகுத்தும் தொகுத்தும், பொதுமைப்படுத்தியும் வேறுபடுத்தியும் பார்க்கிற பக்குவமும் திறனாய்வாளனுக்கு வேண்டப்படுகிற பண்புகள்' என்பனவற்றைக் குறிப்பர் (தி.சு. நடராசன், திறனாய்வுக் கலை - அணுகுமுறைகளும் கொள்கைகளும், என்சிபிஎச், சென்னை, மு.ப. ஆக. 1996, ப.6). இவை சிவப்பிரகாசரில் முற்றிலுமாக நிறைந்திருப்பதற்கு 'நால்வர் நான்மணிமாலை'யே போதுமான சான்றாகும். ச.வே. சுப்பிரமணியன் தமது சிவப்பிரகாசர் கட்டுரையில் (இலக்கியக் கொள்கை -4, ச.வே. சுப்பிரமணியன் + ஏ.என். பெருமாள் (பதி.), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை; மு.ப. மே. 1979, ப. 243) அவரைச் சுவைஞராகவும், சிறந்த மதிப்பீட்டாளராகவும், விமரிசகராகவும் அமைந்தார் எனப் பாராட்டியுள்ளதும் நோக்கத்தக்கது.

இனி, சிவப்பிரகாசரின் திறனாய்வுச் சீர்மையைக் கட்டுரைக் களம் வழி நிறுவலாம். 1. ஒரு நூலை மதிப்பிடும் பொழுது அல்லது திறனாய்வு செய்யும் பொழுது நூலாசிரியர் பற்றிய அறிமுகம் இன்றி யமையாதது. சிவப்பிரகாசரும் அரியதொரு அறிமுகத்தைத் திருவாசகம் நல்கிய நலமலி வாதவூர் நல்லிசைப் புலவர் (24) மாணிக்கவாசகருக்குத் தந்துள்ளார். திருமால் மற்றும் நாயன்மார் பலர் தம் செயற்கரிய செயல்களால் சிவனடியார் எனச் சிறப்புற்றனர்; ஆனால் இவரோ அங்ஙனமின்றிச் சிவபெருமானால் திருவிளையாடல் பலபுரிந்து வலிய ஆட்கொளப்பட்டவர்.

> பாடும் பணி நீ கூடும் பொருட்டு
> மதுரை மாநகரில் குதிரை மாறியும்
> விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்தும்
> நீற்றெழில் மேனியில் மாற்றடி பட்டும்
> நின்னைத் தொண்டன் என்னக் கொண்டனன் (12)

என அவற்றை வரிசைப்படுத்தி அவரின் மேன்மையைப் புலப்படுத்தி யுள்ளார். மற்றும் அவர் 'அழுது அடியடைந்த அன்பர்' என்பதையும் (20) சுட்டியுள்ளார்.

2. திறனாய்விற்கு எடுத்துக் கொண்ட நூல் எப்பொருள் பற்றியது என்பதைக் கூறலும் வேண்டற்பாலது. திருவாசகத்தின் நுவல் பொருள் 'சிவன்' என்பதை, வாசகம் அதற்கு வாச்சியம் தூசு அகல் அல்குல் வேய் தோள் இடத்தவனே' (8) எனக் காட்டுகிறார்.

3. நூல் எழுந்த பின்புலம் அல்லது வரலாறும் திறனாய்வு செய்தற்குத் தேவையாகும். திருவாசகம் எழுந்த பின்புலத்தை, சிவனே மணிவாசகருக்குக் குருவாகிப் பெருந்துறை எனும் ஊரில் குருந்த மர நிழலில் சைவ சித்தாந்தப் பொருளுரைத்து அறிவுறுத்த, தெளிந்து இயற்றியது என்பதை,

திருந்திய வேதசிரப் பொருள் முழுதும்
பெருந்துறை இடத்துப் பெருஞ்சீர்க்
குருந்துறு நீழலில் கொள்ளை கொள்வோயே (20)

என்பதில் தருகிறார்.

4. நூலின் சிறப்புக் கூறினை, உட்பொருளினை வெளிப்படுத்தி விளக்கியுரைத்தலும் திறனாய்வின் பாற்படும் கூறாகும். சிவப்பிரகாசர் இருபாடல்களில் இரு விதமாக திருவாசகத்தின் உட்பொருளை விளக்கி நிற்பது குறிப்பிடத்தக்கது. மணிவாசகரின் மாணிக்க மொழிகளை இறைவனே அவர் கூறக்கூற எழுதினான் என்பது வழக்கு. இதனால் சிவபெருமான் 'புகழ் விரும்பி' என்பது வெளிப்படுகிறது என்கிறார்.

தன்னை நீ புகழ்ந்து உரைத்த
பழுதில் செய்யுள் எழுதினன் அதனால்
புகழ்ச்சி விருப்பன் போலும்
இகழ்ச்சி அறியா என்பு அணிவானே (24)

என்பது அவர் கூற்று. திருவாசகப் பொருளையும் (சிறப்பையும்) தம்மையும் உட்படுத்தி, குறட்பா ஒன்றின் துணைகொண்டு அதனை விளக்கியிருப்பது பாராட்டத் தக்கதாம்.

பகிர்மதி தவழும் பவளவார் சடையோன்
பேரருள் பெற்றும் பெறாரின் அழுங்கி
நெஞ்சு நெக்குருகி நிற்பை நீயே
பேயேன் பெறாது பெற்றார் போலக்
களி கூர்ந்து உள்ளக் கவலை தீர்ந்தேனே
அன்னம் ஆடும் அகல் துறைப் பொய்கை
வாதவூர் அன்ப ஆதலாலே
தெய்வப் புலமைத் திருவள்ளுவனார்
'நன்று அறிவாரில் கயவர் திருவுடையர்
நெஞ்சத்து அவலம் இலர்' எனும்
செஞ்சொல் பொருளின் தேற்று அறிந்தேனே (28)

என்பது அந்நயமிகு கவி. பிற நூல் (குறள்) கருத்துத் தெளிவிற்கு இந்நூல் (திருவாசகம்) துணை நிற்பதை எடுத்துரைப்பது திறனாய்வாளரின்

புலமைத் திறத்திற்குப் பெருஞ்சான்றாகும். இங்குச் சிவப்பிரகாசர், தமக்கு உறுதியானவற்றை அறிபவர்களைக் காட்டிலும் அதனை அறியாதவர்கள் நன்மையுடையவராவர்; ஏனெனில் அறியாமை காரணமாக அது பற்றிய கவலை அவர்க்கு இல்லை எனும் குறட்பாவிற்கு விளக்கமாக, சான்றாக இப்பாடலைப் படைத்துள்ளார். தெய்வத் திருவருட் பேற்றினைப் பெற்றும் - உணர்ந்தும் அதற்கு ஏங்குபவராகத் திருவாசகத்தின்வழி மணிவாசகர் அமைகிறார்; ஆனால் தாமோ பெறாதிருந்தும் அதனை உணராது, பெற்றவர் போன்று எத்துன்பமுமற்று களிப்புற்று இருப்பதாகக் கூறி இருவருக்குமுள்ள இவ்வேறுபாடு மேற்சுட்டிய குறளுக்கு விளக்க மாகிறது என்கிறார். இது சிவப்பிரகாசரின் தன்னடக்கத்திற்கும், மணிவாசகர் மீது கொண்டுள்ள ஆழ்ந்த பற்றிற்கும், திருக்குறள்பாலுள்ள மதிப்பிற்கும் நற்சான்றாகும்.

5. திறனாய்வுப் பார்வையின் அடிப்படைக் கூறுகளுள் ஒன்று, ஆய்வுக்குட்படும் பொருள் குறித்து சில வினாக்களை எழுப்பி அவற்றிற்கு விடைகாண முயலுதல் ஆகும். நால்வர் நான்மணி மாலையின் மகுடமாக விளங்கும்;

விளங்கு இழை பகிர்ந்த மெய்யுடை முக்கண்
காரணன் உரைஎனும் ஆரண மொழியோ
வாதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்தது என்குவீர் ஆயின்
வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சு நெக்குருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவாசகம் இங்கு ஒருகால் ஓதில்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணல் கேணியில் சுரந்து நீர்பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப்பு எய்தி
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகின் மற்றையர் இலரே (4)

எனும் பாடல் இதற்கு மிகச் சிறந்த எடுத்துக் காட்டாகும். திருவாசகம், நான்மறை வேதம் எனும் இவற்றுள் எது சிறந்தது, ஏன் சிறந்தது எனும் வினாக்களுக்கு விடையாகப் பாடலின் பிற்பகுதி அமைகிறது. வேதம் ஓதுபவரின் அறிவைத் தொடுகிறது; ஆனால் திருவாசகம் அறிவுடன் மனதையும் தொட்டுச் சிறக்கிறது என்பது முடிபு.

6. ஒரு நூல் எழுந்ததன் நோக்கம் நிறைவேறும் பொழுதுதான் அதன் எழுச்சி பெருமைக்குரியதாகிறது. எனவே அதன் நோக்கம் நிறைவேறி யுள்ளதா எனக் கணித்துரைத்தலும் திறனாய்வாளர் கடமையாகிறது.

திருவாசகம் கற்பார் சிவனடியாராகச் சிறப்புறல் வேண்டும் எனும் அதன் இலக்கு நிறைவேறியுள்ளதை, 'அன்பர் ஆகுநர் அன்றி.... மற்றையர் இலரே' (4) என மேற்சுட்டியுள்ள பாடலில் விளக்கியுள்ளார்.

7. நூலின் பெருமையை விதந்தோதுவதற்கு ஒப்பீட்டு அணுகுமுறையைக் கையாளுவதும் திறனாய்வின் போக்காகும். சிவப்பிரகாசர் முன் காட்டியுள்ள பாடலில் (4) மட்டுமின்றிப் பிறிதொரு பாடலிலும் (32) இதனை மேற்கொண்டு திருவாசகத்தின் தனிச்சிறப்பைச் சிறப்பித்துள்ளார். மாணிக்கவாசகர் புகன்ற மதுரவாசகத்தை ஒருவர் பயின்றால் சிவானந்தத் தேன் பருகி முக்தியடையலாம்; ஆயின் நான்மறை ஓதிடின் அறப்பயன் மட்டுமே கிட்டும். பலரும் பயன்படுத்திலும் சுடச்சுட ஒளிரும் பொன்கலம் போன்றது திருவாசகம்; மறையோரால் மட்டுமே பயன்படுத்தப்பட்டுப் பிறருக்கு மறைக்கப்படுதலின் நான்மறை மட்கலம் போன்றது என்றும் அவற்றின் வேறுபாடு உணர்த்துகிறார். திருவாசகம் தன் பொருட் சிறப்பால் மட்டுமின்றி எழுந்த மொழியாலும் மேன்மையடைவதை, மொழிக்கும் பெருமை தருவதை இவற்றால் வெளிப்படுத்துகிறார் எனவும் கொள்ளலாம்.

8. நூலின் பொதுத் தன்மைகளை இயம்புதலும் திறனாய்வின் தொழிலாகும். அவ்வகையில் சிவப்பிரகாசரும் திருவாசகத்தின் பொதுவியல்புகளாக (தன்மைகளாக) வாசகத் தேன் (4), திருவாசகமெனும் பெருநீர் (16) மனம் நின்றுருக்கும் மதுரவாசகம் (24,32) பழுதில் செய்யுள் (24) என அதன் இனிமையை, வளமையை, தூய்மையை, கற்பாரைக் கனிவிப்பதை எடுத்துரைக்கிறார்.

9. ஒரு நூல் தோன்றியதால் இலக்கியவுலகு மற்றும் சமுதாயம் பெற்ற பயன் யாது என்பதை எடுத்துரைப்பதும் திறனாய்வாளரின் பணியாகும். இதற்கேற்ப சிவப்பிரகாசர் திருவாசகம் எழுந்ததன் பயனை,

வலமழு உயரிய நலமலி கங்கை
நதிதலை சேர்ந்த நற்கருணைக்கடல்
முகந்து உலகு உவப்ப உகந்த மாணிக்க
வாசகன் எனும் ஒரு மாமழை பொழிந்த
திருவாசகம் எனும் பெருநீர் ஒழுகி
ஓதுவார் மனம் எனும் ஒள்குளம் புகுந்து
நாவெனும் மதகின் நடந்து கேட்போர்
செவியெனும் மடையில் செவ்விதில் செல்லா
உள்ம் எனும் நிலம்புக ஊன்றிய அன்பாம்

வித்தில் சிவம் எனும் மென்முளை தோன்றி
வளர்ந்து கருணை மலர்ந்தது
விளங்குறு முத்தி மெய்ப்பயன் தருமே (16)

என மொழிகிறார். மாணிக்கவாசகரின் திருவாசகத்தைக் கற்றால் மனமாசகன்று, உள்ளத்தில் அன்பெனும் வித்து சிவமாக முளைவிட அது வளர்ந்து கருணையாக மலர்ந்து முத்தியாகிய உண்மைக் களியை நல்கும் என்று சமுதாயம் பெறும் பயனை உரைக்கிறார். இதனைப் பிறிதொரு பாடலிலும் (36) வலியுறுத்தியுள்ளார். அன்பே சிவம் எனும் திருமந்திர வாக்கு திருவாசகத்தால் நிலைநாட்டப் படுவதையும் (அன்பு - வித்து, சிவன் - முளை) உணர்த்துகிறார். சமூகப்பயன் விளைவிக்கும் நூலால் மொழியும், இலக்கிய உலகும் பெருமிதம் கொளல் வெளிப்படை.

10. திறனாய்வின் முடிவில் அந்நூல் பற்றிய பொதுவானதொரு மதிப்பீட்டினை முடிப்புரையாக வழங்குதல் முறையாகும். சிவப்பிரகாசரும் திருவாசகம் பற்றிய தம் மதிப்பீடாக, 'வாதவூரன்ப பாவெனப்படுவது உன் பாட்டு' (40) என நவின்றிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். இப்பாடலே நூலின் இறுதியாக அமைந்திருப்பதும் சுட்டத்தக்கது.

சிவப்பிரகாசர் நல்லதொரு திறனாய்வாளர் என்பதை இப்பத்துப் பாடல்களின் வைப்பு முறையிலும் காணலாம். முதல்பாடல் (4) ஏன் திறனாய்விற்குத் திருவாசகம் தேர்ந்து கொள்ளப்பட்டது என்பதை உணர்த்துகிறது. தொடரும் பாடல்கள் (8, 12, 16) முறையே நூலின் நுவல் பொருள், நூலாசிரியர் அறிமுகம், நூலின் பயன் எனத் திறனாய்விற்கு ஒரு முன்னுரையமைக்கின்றன. 20, 24, 28 எனப் பின்வரும் பாடல்கள் நூலின் உட்பொருளை விளக்கி நிற்கின்றன. அடுத்துள்ள (32, 36, 40) பாடல்கள் நூல் பற்றிய தமது கருத்துரையாக, நூற்பயனின் உண்மையை உணர்த்துவதாக, முடிவுரையாக அமைகின்றன.

திருவாசகத்தின் பெருமை இத்திறனாய்வுப் பாடல்களால் வெளிப் படுவதுடன் சிவப்பிரகாசரின் செந்தமிழ்ப் பற்றும், மணிவாசகர் மீது கொண்டுள்ள உயர்மதிப்பும், திருவாசகத்தில் பெற்றுள்ள ஆழ்கல்வியும் புலப்படுகின்றன. ''வாசகன், மேலும் மேலும் படிப்பதற்கும் அவனுடைய விருப்பு வெறுப்புக்களை அகற்றிக் குறிப்பிட்ட இலக்கியத்தின் மேல் ஈடுபாடு கொள்வதற்கும் திறனாய்வு ஒரு தூண்டு சக்தியாக இருக்க வேண்டும். புதிய கருத்துகளைத் தருபவனாக, புதிய பாதைகளைக் காட்டுபவனாக, புதிய மதிப்புகளை உணர்த்துபவனாக, மேலும் நல்ல வழிகாட்டியாகவும் தோழனாகவும் திறனாய்வாளன் திகழ வேண்டும்''

எனும் எண்ணத்திற்குச் (தி.சு. நடராசன், மேற்படி ப. 7) சிவப்பிரகாசர் மிகச் சரியான சான்றாகிறார்.

இருபதாம் நூற்றாண்டில் வகுக்கப்பட்டுள்ள இலக்கணத்திற்குப் பதினேழாம் நூற்றாண்டில் தோன்றியவர் இலக்கியமாகிறார் என்பது சிவப்பிரகாசரின் பெருமைக்குப் பெருமை சேர்ப்பதாகிறது.

திருவாசகத் தெள்ளமுதில்
தம்வாசகத் தீம்பால் கலந்து
நல்விருந்தளித்த சிவப்பிர காசரைப்
போற்றி செய்வாம்!

கருவி நூல்

நால்வர் நான்மணிமாலை, கொ. இராமலிங்கத் தம்பிரான் (உரை) பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, இ.ப.டிச. 1990.

44. சிவப்பிரகாசர் பாடல்களில் சில சிந்தனைகள்

அ. சிவபெருமான், அண்ணாமலைநகர்.

சிவப்பிரகாசர் பெயர் விளக்கம்

"சிவப்பிரகாசஸ் ஞானம்
சிவஞ்ஞானம்
பரம் ஸ்மிருதம்

என்னும் ஆகம வாக்கியப்படி சிவனைப் பிரகாசிக்கச் செய்கின்ற ஞானம் எதுவோ அதுவே சிவஞான்மாகும். அஞ்ஞானம் மேலான ஞானம் என்று சொல்லப்படுகின்ற 'பரஞானமாகும்'. எனவே, சிவனைப் பிரகாசிக்கச் செய்கின்ற ஞானம் உடையவர் 'சிவப்பிரகாசர்' ஆவர். தமிழ்நாட்டில் சிவப்பிரகாசர் என்கின்ற சொல்லைப் பல அறிஞர்கள் தங்களுக்கு இயற்பெயராக வைத்துக் கொண்டனர். அவ்வாறு வைத்துக் கொண்டவர்களுள் துறைமங்கலம் சிவப்பிரகாசரும் ஒருவராவர். இவர் இவரது பெயருக்கு ஏற்ப சிவனைப் பிரகாசிக்கச் செய்கின்ற ஞானமுடையவராக அருளாட்சி செய்கின்றார்.

சிவப்பிரகாசர் குடும்பம்

தொண்டை மண்டலத்தில் உள்ள காஞ்சிபுரத்தில் 16-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றியவர் குமாரசாமி தேசிகர் ஆவர். இவர் சிறந்த வீரசைவ சமய அறிஞர். இவரின் மனைவிக்கு இறைவன் திருவருளால் மூன்று ஆண் பிள்ளைகளும், ஒரு பெண் மகவும் தோன்றினர். அந்நால்வரும் முறையே சிவப்பிரகாசர், வேலையர், கருணைச் சிவப்பிரகாசர், ஞானாம்பிகை என்னும் இயற்பெயரை உடையவராவர். இவர்கள் வீரசைவ நெறிப்படி சிவலிங்க தாரணம் உடையவர்களாகவும், கல்வி, கேள்விகளில் சிறந்தவர்களாகவும் விளங்கினர். இந்நால்வருள் சிவப்பிரகாசர் துறவு நிலையை மேற்கொண்டார். ஏனைய மூவரும் இல்லற நெறியைத் தழுவியவர்கள் இம்மூவருள் ஞானாம்பிகை என்பவர் பேரூரில் வாழ்ந்திருந்த சாந்தலிங்க அடிகளாருக்கு வாழ்க்கைத் துணைவியானார்.

சிவப்பிரகாசர் தொல்காப்பிய நெறியில் நூல்களை இயற்றியவர்

சிவப்பிரகாசர், பழமலை அந்தாதியின் காப்புப் பாடலில், "சீரதங் கோட்டு முனிகேட்ட நூற்படி"[1] என்றொரு அடியைக் குறித்துள்ளார்.

இவ் அடியை ஆராயின், தொல்காப்பியர் சொல்ல அதங்கோட்டு ஆசான் கேட்ட தொல்காப்பியத்தைச் சிவப்பிரகாசர் நன்கு கற்றவர் என்ற செய்தி பெறப்படுகின்றது. அஃதாவது, சிவப்பிரகாசர் தொல்காப்பியர் கூறிய நெறிப்படி தம் நூல்களை இயற்றியவர் என்க. மேலும், சிவப்பிரகாசர் திருநெல்வேலியில் சிந்துபூந்துறையில் இருந்த வெள்ளியம்பலத் தம்பிரானிடம் தொல்காப்பியப் பாடம் கேட்டவர் என்ற செய்தியும் இங்கு கொள்ளத்தக்கது.

சிவப்பிரகாச சுவாமிகள் அருளுபதேசம் பெற்ற நிலை, பெற்ற இடம்

சிவப்பிரகாச சுவாமிகள் சாந்தலிங்க சுவாமிகளுடைய உதவியினால் பொம்மைய பாளையத்திற்குச் சென்று சிவஞான பாலைய சுவாமிகளைத் தரிசித்து அருளுபதேசம் பெற்றதாக வரலாறு எழுதப்பட்டுள்ளது.[2] ஆனால், இவ்வரலாற்றிற்கு மாறுபாடாகச் சிவப்பிரகாசரின் பாடல் அமைந்துள்ளது. அப்பாடலை நோக்குவோம்.

> ''நானே சசிவன் னனில்பெரி யேன்அவன் ஞானிதன்னைத்
> தானே அடைந்திலன்; நான்திருக் காஞ்சியில் தண்மலர்ப்பூந்
> தேனே அனைய சிவஞான தேவனைச் சேர்ந்து இமைப்பில்
> ஊனே உயிரே எனுமிவை வேறுபட்டு உய்ந்தனனே''[3]

பாட்டின் பொருள்

நான்தானே திருமுதுகுன்றத்தில் தந்தையின் முயற்சியால் ஞானியை அடைந்த சசிவன்னனைக் காட்டிலும் பெரியோன் ஆவேன்; அச்சசிவன்னன் தந்தையின் முயற்சியால் ஞானியை அடைந்ததன்றித் தானே அடைந்திலன்; நான், அழகிய கச்சிமாநகரில் குளிர்ந்த மலரினின்று தோன்றும் தேனைப் போன்ற சிவஞானதேவனைப் பிறர் உதவியின்றிச் சேர்ந்து ஒரு மாத்திரைப் பொழுதில் உடம்புவேறு உயிர்வேறு என்று இவற்றின் வேறுபாட்டினை அறிந்து உய்ந்தேன்.

பாட்டின் பொருளிலிருந்து பெறப்பட்ட உண்மைகள்

சிவப்பிரகாசர் எவருடைய உதவியும் இன்றித் தானே திருக்காஞ்சியில் சிவஞான பாலைய சுவாமிகளைத் தரிசித்து அருளுபதேசம் பெற்றார். இவ்வுண்மையைக் கூற வந்த சிவப்பிரகாசர் சசிவன்னன் கதையை உவமையாக்கியுள்ளார்.

சசிவன்னன் கதையாவது, சசிவன்னன் என்பான் தேவதத்தன் என்கின்ற ஒருவரால் வழிகாட்டப்பெற்று, தந்தையின் உதவியால் விருத்தாசலத்திற்கு வடகீழ்த்திசையிலுள்ள சத்தீச்சுரம் என்கின்ற தலத்தில் நந்திபராயணர் என்கின்ற ஞானியை அடைந்து வழிபட்டு அருளுபதேசம் பெற்றான் என்பதாம்.

எனவே, சிவப்பிரகாசர் சாந்தலிங்கரின் உதவியோடு பொம்மைய பாளையம் சென்று சிவஞான பாலைய சுவாமிகளைத் தரிசித்து அருளுபதேசம் பெற்றார் என்ற பழைய வரலாற்றுச் செய்தி ஆய்விற்குரியதாகின்றது.

சிவப்பிரகாசரின் குடிமுழுதும் சிவஞானிக்கே

சிவப்பிரகாசர் தாமியற்றிய சிவஞான பாலைய தேசிகர் கலம்பகத்தில் சிவஞான பாலைய சுவாமிகளைப் பார்த்து,

"என்னையேயன்றி எங்கள் குடியிற் பிறந்த எல்லோரும் தனக்குத் தொண்டராயென்று கூறுமாறு ஒருவரையும் எஞ்சாமல் ஆட்கொண்ட சிவஞான தேவனே என்று கூறுகின்றார். இக்கருத்தை அவர்,

''எம்குடிமுழுதும் தொண்டே எனும்
மெய்ச் சிவஞான தேவன் துணையடியே''[4]

என்று பாடியுள்ளார். இதன் மூலம் சிவப்பிரகாசர் மட்டுமின்றி அவர் குடியினர் முழுதும் சிவஞான பாலைய சுவாமிகளுக்குத் தொண்டராவர் என்ற செய்தி பெறப்படுகின்றது. ஆதலால், சிவப்பிரகாசர் குடியில் தோன்றிய வீரசைவப் பெருமக்களெல்லாம் சிவஞான பாலைய சுவாமி களுக்குத் தொண்டராய் வாழ்வார்களாகுக.

சிவப்பிரகாசரும் வீரசைவ தருமமும்

சிவப்பிரகாசர், சிவஞான பாலைய சுவாமிகள் மீது இயற்றிய கலம்பகத்தில்,

''கொள்ளும் உண்டி பகுத்துண்டு
பெருஞ்சீர் கொண்டான் நின்குரவன்''[5]

என்ற அடிகளைப் பாடியுள்ளார். இவ்வடியுள் வந்துள்ள, ''நின் குரவன்'' என்ற தொடர், சிவஞான பாலைய சுவாமிகளின் குருவைக் குறிக்குமென்க. சிவஞான பாலைய சுவாமிகளின் குரு பச்சைகந்தமுனிவர் ஆவர். அக்குருவாகிய பச்சைகந்த முனிவர், நாள்தோறும் தாம் உட்கொள்ளும் உணவினைப் பலருக்குப் பகுத்துக் கொடுத்துவிட்டு அதன் பின்னர் உண்டு மகிழும் பெருஞ்சீர் கொண்டவராவர்.

வீரசைவ நெறிகளுள் (தருமங்களுள்) ஒன்று அன்னமும் தண்ணீரும் அளித்தலாகும். சிவப்பிரகாசர் இந்நெறியைச் சித்தாந்த சிகாமணி என்ற வீரசைவ நூலில் குறிப்பிட்டுள்ளதாகக் கூறுவர். திருவள்ளுவர்,

''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை''[6]

என்று கூறியுள்ள குறளும் சிந்திக்கத்தக்கது.

பிரபுலிங்க லீலைப் பற்றிய ஓர் குறிப்பு

சிவப்பிரகாசர், வேலையர், கருணைச் சிவப்பிரகாசர் ஆகிய மூவரும் நன்கு கற்ற பேரறிஞர்கள். இவர்கள் மூவரும் ஒருவர் செய்யும் நூலுக்கு மற்றொருவர் உதவி செய்தலும் உண்டு. திருக்கூவப் புராணத்தை மூவரும் சேர்ந்து இயற்றினார்கள் எனக் கூறுவர்.

சிவப்பிரகாசர் அருளிய நூல்களுள் 'பிரபுலிங்க லீலை' மிகச் சிறந்த நூலாகும். இந்நூலைச் சிவப்பிரகாசர் ஒருவர் மட்டுமே பாடியுள்ளார். இதனை, அவரே ''என் தனி நாவில்நின்று எழும்இச் செய்யுள்''[7] என்று குறிப்பிட்டுள்ளார். இத்தொடரில் வந்துள்ள என்தனிநா என்ற சொல்லிற்கு ஒப்பற்ற நாக்கு எனப் பொருள் கொள்ளாமல், என்னுடைய ஒரே நாவில் இருந்து எனப் பொருள் கொள்க.

குறிப்புகள்

1. சிவப்பிரகாசர், பழமலை அந்தாதி, காப்புப் பாடல், 1.
2. சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தத் திரட்டு, (பதிப்பாசிரியர், சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்), ப. 24, 25 இரண்டாம் பதிப்பு, பராபவ-தை.
3. சிவப்பிரகாசர், சிவஞான பாலைய தேசிகர் கலம்பகம், பாடல் - 72.
4. மேலது, பாடல் - 4.
5. மேலது, பாடல் - 58.
6. குறள் - 322.
7. சிவப்பிரகாசர், பிரபுலிங்க லீலை, துதிகதி.

45. நன்னெறியில் கல்வியும், ஈகையும்

கு. சிவலிங்கம், கோவை.

''கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்''

என்று கவியரசு கண்ணதாசன் கூறுவார். சமுதாயத்தில் ஏற்படும் மாற்றங்கள், மக்களின் மனநிலை, வாழ்க்கை முறை ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் காலக் கண்ணாடியாக அக்காலத்தில் தோன்றும் இலக்கியங்கள் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட இலக்கியங்களே காலத்தால் நிலைத்து நிற்கும். மக்களின் மனநிலையைக் கருத்தில் கொண்டு அவ்வக் காலங் களுக்கு ஏற்ப வாழ்க்கை நெறிமுறைகளைப் புகட்டும் நீதிநூல்கள் இயற்றப் படுகின்றன. அந்த வகையில் திருக்குறள் தொடங்கி, மூதுரை, நல்வழி, அறநெறிச்சாரம், நீதிநெறி விளக்கம், நன்னெறி என எண்ணற்ற நீதி நூல்கள் வெளிவந்துள்ளன. இவ்வாறு தோன்றுகின்ற நீதி நூல்கள் குறிப்பிட்ட ஒரு சமயத்தை வலியுறுத்துவதாகவோ அல்லது சமயங்களைக் கடந்ததாகவோ இருக்கக் கூடும். அவற்றில் சிவப்பிரகாசரின் நன்னெறியும் ஒரு சிறந்த நீதி நூலாகும். சிவப்பிரகாசர் முதிர்ந்த சைவப்பற்றாளராக இருந்தபோதிலும் இந்த நீதிநூல் சமயச் சார்பற்றதாகவே இயற்றப்பெற்றுள்ளது.

நன்னெறி உருவான சூழல்

சிவப்பிரகாசர் ஒரு நாள் கடற்கரைக் காட்சியைக் காண்பதற்காகத் தன்னந்தனியராய்ச் சென்றிருந்தார். அப்போது மனத்தில் ஏற்பட்ட ஓர் உந்துதலால், கடற்கரை மணற்பரப்பில் நன்னெறி நாற்பது வெண்பாக் களையும் நினைத்த மாத்திரத்தில் எழுதி முடித்தார். அங்கிருந்து தம் இருப்பிடம் வந்து இளவலாகிய கருணைப் பிரகாசரிடம், ''நாற்பது வெண்பாக்களால் நன்னெறி என்னும் நீதிநூலைக் கடற்கரை மணற் பரப்பில் எழுதியுள்ளேன். அதைப் பார்த்து எழுதிக்கொண்டு வா'' எனக் கூறினார். கருணைப் பிரகாசர் அவ்வாறே எழுதிக்கொண்டு வந்து அடிகள் திருமுன் சேர்த்தார்.

நன்னெறி விளக்கம்

''மின்னெறி சடாமுடி விநாயகன் அடிதொழ
நன்னெறி வெண்பா நாற்பதும் வருமே''

எனக் கடவுள் வாழ்த்துப்பாடலில் நன்னெறி நாற்பது வெண்பாக்களால் ஆனது என்பதைக் குறிப்பிடுகின்றார். கல்வி, ஈகை, நட்பு, சான்றோர், இன்சொல், உலோபியின் செல்வம், இல்லறம், சினத்தை அடக்குதல், புலனடக்கம், மேன்மக்கள் என வாழ்வியலுக்குத் தேவையான நீதிக்கருத்துக்கள் பல நன்னெறியில் அமைந்துள்ளன. ஒவ்வொரு பாடலிலும் ஒரு நீதியைத் தெளிவாக ஓர் உவமையைக் காட்டி விளக்குகின்றார். நன்னெறி காட்டுகின்ற கல்வி மற்றும் ஈகை பற்றிய கருத்துக்களைத் தொகுத்துக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கல்வியின் சிறப்பு

மனிதன் மனிதனாக வாழ்ந்திடக் கல்வியறிவு அவசியம். ''கண்ணுடையார் என்போர் கற்றோர்'' என்பது வள்ளுவப் பெருந் தகையின் வாக்கு. கல்வி காலத்தால் அழியாது; வெந்தழலால் வேகாது; கள்வரால் கவர முடியாது; கொடுப்பதால் குறையாது; எழுபிறப்பிற்கும் பெருமை தரக்கூடியது. கற்ற கல்வி நம்மை எப்பொழுதும் கைவிடாது. மனித மனத்தைப் பக்குவப்படுத்துவது கல்வியே. அதனால்தான் பெரும் பாலான நூல்கள் கல்வியின் அவசியத்தை அழுத்தமாக வற்புறுத்து வனவாகவே உள்ளன. அந்த வகையிலேயே சிவப்பிரகாச சுவாமிகளும் கல்வியின் சிறப்பைப் பற்றிக் கூறும்பொழுது,

கற்ற அறிவினரைக் காமுறுவர் மேன்மக்கள்
மற்றயர்தாம் என்றும் மதியாரே - வெற்றிநெடும்
வேல்வேண்டும் வாள்விழியாய்; வேண்டா புளிங்காடி;
பால்வேண்டும் வாழைப் பழம் (35)

என்கிறார். மேன்மக்கள் என்றும் கற்றவரையே விரும்புவர். கற்றவர் சிறப்பை மற்றவர் அறியார். இக்கருத்தையே

''கற்றாரைக் கற்றாரே காமுறுவர்'' (வாக்குண்டாம் - 24)

எனவும்,

''கற்றோர் கனமறிவர் கற்றோரே'' (நீதி வெண்பா - 15)

எனவும் பிற நீதிநூல்களும் கூறுகின்றன.

கற்றவர் மேன்மை

கல்வியைவிடச் சிறந்த செல்வம் உலகில் வேறொன்றுமில்லை. அக்கல்வி கற்றவருக்கு மிகுந்த புகழைக் கொடுக்கும்; சென்ற இடமெல்லாம் சிறப்பைக் கொடுக்கும் மனம் தளர்வடையும்பொழுது தன்னம்பிக்கையூட்டும் கற்றவரின் மேன்மையைச் சிவப்பிரகாசர் குறிப்பிடும்பொழுது,

''பொன்அணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னும் அறிஞரைத்தாம் மற்றொவ்வார் - மின்னுமணி
பூணும் பிறஉறுப்புப் பொன்னே அதுபுனையாக்
காணுங்கன் ஒக்குமோ காண். (40)

என்கிறார். ஒருவர் உடல் முழுவதும் தங்க நகைகளை அணிந்திருந் தாலும், அவர் எந்த அணிகளையும் அணிந்து கொள்ளாத கல்வியறிவு பெற்ற அறிஞர்க்கு நிகராக மாட்டார்கள். இக்கருத்தினையே குமரகுருபர சுவாமிகளும் தம் நீதிநெறி விளக்கத்தில் பிரமனால் படைக்கப்பட்ட வெற்றுடம்புகள் எல்லாம் ஒருநாள் கட்டாயம் அழிந்துவிடும். ஆனால் அறிஞர்களால் படைக்கப்பட்ட நூல்கள் என்றென்றும் புகழோடு நிலைத்து நிற்கும். அதனால் படைப்புக் கடவுள் ஆகிய பிரமனைக் காட்டிலும் புலவர்கள் உயர்ந்தவர்கள் என்று கூறுகின்றார்.

''கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க்கு ஒவ்வான் - மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யும் உடம்பு. (நீதிநெறி விளக்கம் - 7)

ஔவையார் தம் வாக்குண்டாம் என்னும் நீதிநூலில்,

"ஒரு மன்னனையும் குற்றமறக் கற்றவன் ஒருவனையும் சீதூக்கிப் பார்க்கின்ற பொழுது கற்றவனே சிறப்புடையவனாகின்றான். காரணம் மன்னனுக்குத் தன் தேசம் மட்டுமே சொந்தம்; கற்றவனுக்கோ சென்ற இடமெல்லாம் சிறப்பு''

என்று கூறுகின்றார். திருவள்ளுவப் பெருந்தகையும்

யாதானும் நாடாமல் ஊராமல் என்ஒருவன்
சாந்துணையும் கல்லாத வாறு. (397)

என்கிறார். கல்வியிற் பெரிய கம்ப நாடனின்,

''மன்னவனும் நீயோ? வளநாடும் உன்னதோ?
உன்னைஅறிந் தோதமிழை ஓதினேன்? - என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்து உண்டோ? உண்டோ
குரங்குஏற்றுக் கொள்ளாத கொம்பு?''

என்னும் தனிப்பாடலும் இங்கே நினைவு கூரத்தக்கது.

கற்றவர் செருக்கடைதல் கூடாது

''கல்வி கரையில; கற்பவர் நாள்சில'', கற்றது கைம்மண் அளவு; கல்லாதது உலகளவு என உற்ற கலைமடந்தை ஓதுகின்றான்'' என்பன போன்ற முதுமொழிகளுக்கு ஏற்பக் கல்வி என்பது ஒருவன் தன் வாழ்நாள் முழுவதும் கற்றுக்கொண்டே இருக்க வேண்டியது. கற்கக்

கற்க இன்னும் நிறையக் கற்க வேண்டும் எனும் ஆர்வம் எப்பொழுதும் தொடர்ந்து கொண்டே இருக்க வேண்டும். இக்கருத்தினைச் சிவப்பிரகாசர் குறிப்பிடும்பொழுது,

''கடலே அனையம்யாம் கல்வியால் என்னும்
அடலேறு அனையசெருக்கு ஆழ்த்தி-விடலே
முனிக்கரசு கையால் முகந்து முழங்கும்
பனிக்கடலும் உண்ணப் படும். (7)

என்று, ''நூல்பல கற்றவராயினும், தாம் எல்லாம் கற்றுவிட்டோம் எனும் செருக்குக் கொள்ளக்கூடாது. அப்படிச் செருக்குக் கொண்டால் மற்றவர் களால் அடக்கப்படுவர்'' என்கிறார். இக்கருத்தினையே நீதிநெறி விளக்கத்திலும் குமரகுருபரர்,

''அனைத்தும் அறிந்தவர் எவரும் இல்லை. எல்லாம் கற்று விட்டோம் என்று செருக்குக் கொள்ளாதே, கற்றவர் செருக்குக் கொள்ளல் தவறு''

எனக் கூறுகின்றார்.

''முற்றும் உணர்ந்தவர் இல்லை முழுவதூஉம்
கற்றனம் என்று களியற்க; - சிற்றுளியால்
கல்லும் தகரும்; தகரா கனங்குழாய்!
கொல்லுலைக் கூடத்தி னால். (14)

அறநெறிச்சாரம் என்னும் தொன்மையான நீதிநூலிலும்,

''பலகற்றோம் யாம்என்று தற்புகழ் வேண்டா;
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையும் காக்கும்;
சிலகற்றார் கண்ணும் உளவாம் பலகற்றார்க்கு
அச்சாணி அன்னதோர் சொல். (79)

எனச் செருக்கடையாமை வற்புறுத்தப்படுகிறது. செருகக்கு ஆகிய குற்றம் இல்லாதவருடைய வாழ்வில் என்றும் உயர்வு இருக்கும்.

கல்லாதவர் நிலை

கற்றவர் சிறப்பைக் கூறும் சிவப்பிரகாசர் எதிர்மறையாகக் கல்லாதவரின் இழிநிலையையும் கூறுகின்றார். முறையான கல்வி யறிவற்றவர்கள் ஒன்றும் விளையாத களர் நிலத்திற்கு ஒப்பாவர்.

கல்லா அறிவின் கயவர்பால் கற்றுணர்ந்த
நல்லார் தமதுகளம் நண்ணாரே - வில்லார்
கணையின் பொலிவும் கருங்கண்ணாய்! நொய்தாம்
புணையில் புகும்ஒண் பொருள். (25)

கல்வியறிவற்றவரிடம் தொடர்பு கொண்டால் கற்றவரும் தம் பெருமையை இழந்து விடுவர். இனம் இனத்தோடு சேர வேண்டும்.

புலம்மிக் கவரைப் புலமை தெரிதல்
புலம்மிக் கவர்க்கே புலனாம் – நலம்மிக்க
பூம்புனல் ஊர! பொதுமக்கட் காகாதே;
பாம்பறியும் பாம்பின் கால்'' (5)

என்பது பதினெண்கீழ்க்கணக்கில் ஒன்றாகிய பழமொழியின் சொல்.

ஈகை

''வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை'' என்பது திருவள்ளுவர் வாக்கு. திருக்குறளைத் தொடாத நீதி நூல்களே இல்லை. இதன்பால் எல்லா கருத்துக்களும் உள. ஈகையின் இலக்கணத்தை இவ்வளவு எளிமையாகவும் முழுமையாகவும் எவராலும் கூறமுடியாது. ''யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி'' என்பது திருமூலரின் மந்திரம். தன்னால் முடிந்ததைத் தவறாமல் தானமாகக் கொடுக்க வேண்டும். காரணம் ''தனக்கு மிஞ்சியதுதான் தானமும் தர்மமும்'' என்று முன்னோர்கள் கூறியுள்ளார்கள். ''ஈயென இரத்தல் இழிந்தன்று'', ''ஈயேன் என்பது அதனினும் இழிவு'', பசித்து வந்தவர்க்குப் புசிக்க ஏதாவது கொடுக்க வேண்டும். 'தர்மம் தலை காக்கும்' இப்படி யெல்லாம் ஈகைப் பண்பினைப் பற்றி எவ்வளவோ அறிவுரைகளைக் காணலாம். சிவப்பிரகாசரும் நன்னெறியில் ஈகையின் சிறப்பைப் பற்றிச் சிறப்பாகக் கூறியுள்ளார்.

என்றும் முகமன் இயம்பா தவர்கண்ணும்
சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர் – துன்றுசுவை
பூவின் பொலிகுழலாய் பூங்கை புகழவோ
நாவிற்கு உதவும் நயந்து. (1)

சான்றோர் தமக்கு உபசார வார்த்தைகளைக் கூறாதவர்க்கும் தாங்களாகவே முன்வந்து அவர்கள் விரும்பும் பொருளைத் தருவர் என்னும் இக் கருத்தினையே மற்றொரு பாடலிலும்

கைம்மாறு உகவாமல் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மால் இயலுதவி தாம்செய்வர். (27)

என, கைம்மாறு கருதாது தம்மால் இயன்ற உதவியைச் சான்றோர் தவறாமல் செய்வர் என்று குறிப்பிடுகின்றார்.

பொதுவாக எந்தவொரு உதவியை நாம் மற்றவர்களுக்குச் செய்தாலும் அவர்களால் நமக்கு ஏதாவது பயன் கிட்டுமா என்று எதிர்பார்த்துச் செய்வோம். இன்றைய சூழலில் பிரதிபலன் இல்லாமல்

யாருக்கும் எதையும் செய்வதில்லை. நாம் மற்றவர்க்கு ஒரு மடங்கு உதவி செய்தால் இருமடங்காகப் பயனை எதிர்பார்க்கின்றோம். மனம், வாக்கு, காயம் மூன்றாலும் விரும்பிச் செய்வது ஈகை. ஈகையின் சிறப்பைத் திருவள்ளுவர்,

நல்ஆறு எனினும் கொளல்தீது மேலுலகம்
இல்எனினும் ஈதலே நன்று (222)

எனவும்,

கைம்மாறு வேண்டா கடப்பாடு (211)

எனவும் தம்மால் இயன்ற முயற்சி செய்து உரியவர்களுக்கு உதவி செய்வதே சான்றோர் இயல்பு. ஈகைக் குணம் உள்ளவர்களிடம் உள்ள செல்வம் ஊரின் நடுவே உள்ள பழமரத்தைப் போன்று அனைவருக்கும் பயன்படும் என்றும் விளக்குகிறார்.

இனிமையாகப் பேசக் கூடியவரும், புன்சிரிப்போடு, நற்குணங்கள் மிக்கவரும், சலிப்பில்லாமல் கொடுக்கக்கூடிய உயர்ந்த பண்புடையவர் களுமே சான்றோர்கள் என்று நீதிநெறி விளக்கத்தில் கூறப்பட்டுள்ளது. ''பொதுமகளே போல்வ தலையாயர் செல்வம்'' சான்றோர்களின் செல்வம் பொதுமகளின் நலத்தைப்போல அனைவருக்கும் பயன்படும் என்று குமரகுருபரர் குறிப்பிடுவார். ஈகைக் குணம் இல்லாதவனிடம் குவிந்துள்ள பொருளைவிட, ஈகைத்தன்மையுடையவனின் வறுமையே நல்லதாகக் கருதப்படும்.

அறிவுமிக்க சான்றோர்கள் எந்த நிலையிலும் மற்றவர்களுக்கு உதவுவார்கள். அவர்கள் சினம் உள்ள காலத்திலும் மற்றவர்க்கு உதவி செய்வர். ஈகைக் குணம் இல்லாதவர்களோ தான் மகிழ்ச்சியாய் இருக்கின்றபோதுகூட மற்றவர்களுக்கு உதவி செய்ய மாட்டார்கள்.

முனிவினும் நல்குவர் மூதறிஞர்; உள்ளக்
கனிவினும் நல்கார் கயவர்; - நனிவிளைவில்
காயினும் ஆகும் கதலிதான்; எட்டிபழுத்
தாயினும் ஆமோ? அறை. (28)

எனும் பாடலில் அறிஞர்கள் சினம் கொண்ட காலத்திலும் மற்றவர் களுக்கு உதவி செய்வர் என்று கூறப்படுகிறது.

இவ்வாறே உயர்ந்தோர் காலமாற்றத்தால் வறுமையுற்றானும் இவர் சந்ததியினர் கூடத் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்யாமல் இருக்க மாட்டார்கள் என்பதையும் சிவப்பிரகாசர்,

எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்குஈந்து என்றவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ? - பைந்தொடீஇ!

நின்று பயனுதவி நில்லா அரம்பையின் கீழ்க்
கன்றும் உதவும் கணி. (17)

எனக் கூறியுள்ளார்.

நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லைஎன மாட்டார் இசைந்து (நல்வழி - 9)

என்னும் ஔவையின் அமுதமொழியின் எதிரொலியாக இதனைக் கொள்ளலாம். உயர்ந்தோர் வறுமையடைந்து மிகுந்த துன்பப்படும் நாளிலும் தன்னை நாடிவருபவர்களுக்கு இல்லையெனாது தம்மிடம் இருப்பதைக் கொடுத்து உதவும் குணம் உடையவராக இருப்பர் என்பது கருத்து.

சான்றோர், தம்மை நாடி வருபவர்கள் தம்மை விடத் தாழ்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் கேட்காமலேயே அவர்களின் நிலையை உணர்ந்து வலியச் சென்று உதவுவர் என்பதனை நன்னெறி,

''தம்மையும் தங்கள் தலைமையையும் பார்த்துயர்ந்தோர்
தம்மை மதியார் தமைஅடைந்தோர் - தம்மின்
இழியினும் செல்வர் இடர்தீர்ப்பர் அங்கு
கழியினும்செல் லாதோ கடல்'' (16)

என்று குறிப்பிடுகிறது.

இவன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலன்உடையான் கண்ணே உள (223)

என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். யான் வறியவன் என்னும் துன்பச் சொல்லை ஒருவன் சொல்வதற்கு முன்பே அவனுக்கு வேண்டியதைக் கொடுக்கும் உயர்ந்த குணம் சான்றோர் குடிப்பிறந்தார்க்கு மட்டுமே வரும் என்பது பொருள்.

கொங்கு நாட்டில் வாழ்ந்திருந்த வாணராயன் என்னும் வள்ளல் ஒருவன் தன்னை நாடிவரும் இரவலர்கள் தம் வறுமையைக் கூற நாணுவர் என உணர்ந்து, அவர்கள் வாயாற் சொல்லாமல் எழுதிக் கொடுக்க வசதியாகத் தன் வீட்டு முகப்பில் பனையேட்டையும் எழுத்தாணியையும் வைத்திருந்தான் எனக் கொங்குமண்டல சதகம் கூறுகிறது (97). இவன் வாழ்க்கை மேற்கண்ட திருவள்ளுவத்திற்குச் சரியான இலக்கியம் ஆகும்.

ஈதல் இசைபட வாழ்தல் எனத் திருவள்ளுவரும், நட்பு, தயை, கொடை இவையெல்லாம் பிறவிக் குணம் என்று ஔவை மூதாட்டியும் கூறுவது போல, ஈகைப்பண்பு பிறவிக்குணம் ஆகும். அதிலும் வலக்கை கொடுப்பதை இடக்கை அறியாது கொடுக்க வேண்டும் என்றும் கூறுவர்.

மனதில் நினைத்த மாத்திரத்தில் காலம் தாழ்த்தாது உதவி செய்ய வேண்டும் என்பர். காரணம் காலம் தாழ்த்தினால் மனம் மாறிவிடலாம். ஆனால் இன்றைய சமுதாயச் சூழலில் மனிதன் பொதுநலமும், தொலைநோக்குப் பார்வையும் இன்றிச் சுயநலத்தை மட்டும் விரும்பித் திரிகின்றான், ''தன்பெண்டு, தன்பிள்ளை, சோறுவீடு, சம்பாத்யம் இவை யுண்டு'' என்னும் பாவேந்தர் பாரதிதாசன் கூற்றுக்கு ஏற்பக் குறுகிய மனப்பான்மையோடு வாழ்ந்து வருகின்றான். சமுதாயத்தில் இந்நிலை பல்வேறு நிலைகளிலும் தொடர்ந்து இருந்துகொண்டே இருப்பதால்தான் காலந்தோறும் நீதிநூல்கள் தோன்ற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

மனிதநேயம், மனிதநேயம் என்று வாய்கிழியப் பேசியே காலத்தை வீணில் கழிக்கின்றோம். தன்னிடம் உள்ளதிற் சிறுபகுதியையாவது பிறருக்குக் கொடுத்து மகிழ்வோம் என்னும் மனப்பான்மை வளர வேண்டும். இதைக் கருத்தில் கொண்டே சிவப்பிரகாசரும் ஈகைப்பண்பைத் தம் நீதிநூலில் வலியுறுத்தியுள்ளார்.

மனித இனத்திற்கு மிக இன்றியமையாது வேண்டப்படுகின்ற நற்பண்புகளை விளக்குவதற்காகச் சமயம் சாராத நீதிநூலாக மலர்ந்த நன்னெறியில் கல்வி, ஈகை ஆகிய இருபண்புகளைக் கண்டோம். கல்வி ஒருவனைத் தன் அளவில் முழுமையான மனிதனாக்குகிறது என்றால் ஈகை அவனைச் சமுதாயத்திற்குப் பயன்படுபவனாக மலர வைத்து உயர்த்துகிறது. எனவேதான் நம் நாட்டில் தோன்றிய நூல்கள் யாவும் இப்பண்புகளை மிகவும் ஏற்றம் கொடுத்துப் போற்றுகின்றன. வாழையடி வாழையென வந்த அந்தப் பெருமரபின்படியே துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளும் நன்னெறியில் மனித வாழ்விற்கு இன்றி யமையாத முதன்மைப் பண்புகளாகக் கல்வியையும் ஈகையையும் வலியுறுத்தியுள்ளார்.

46. நன்னெறி - திருக்குறள் காட்டும் ஒப்புரவு

நா. சிவா, புதுவை.

சிவப்பிரகாசரின் நன்னெறியும் திருவள்ளுவரின் திருக்குறளும் நீதி நூல்கள் எனும் அடிப்படையிலே இங்கே ஒப்பீட்டு முறையில் விளக்கப்படுகின்றன. கால எல்லையைக் கருத்தில் கொள்ளாமல் உலக நீதி என்பதை முன்னிறுத்தியே இவ்விரு நூல்களில் இடம் பெறும் சில முதன்மையான ஒப்புரவுக் கருத்துக்கள் இங்கே ஒப்பிடப்படுகின்றன. ஆதிகால இனக்குழு சமுதாயமாயினும் இன்றைய நடைமுறை குடும்ப சமுதாயமாயினும் கூட்டுணர்வு முறையிலே மக்கள் வாழ்ந்தனர்; வாழ்கின்றனர் என அறிகின்றோம். இதனடிப்படையிலேதான் 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை எனும் பழமொழியும் நாட்டில் நிலவி வந்திருக்கின்றது என்பதையும் காணுகின்றோம். ஒருவர் உதவி யில்லாமல் பிறிதொருவர் வாழவே இயலாது என்பது உலக இயல்பாக அமைந்திருக்கின்றது என்பதை நாம் உணருகின்றோம். உதவி என்பது பொருளுதவியாகவோ பிற உடலுதவியாகவோ அமையலாம். செல்வரும் இல்லாரும் அவரவர்க்கு ஏற்ப பிறருக்கு உதவி செய்து வாழலாம். இதனால் பிறருக்கு உதவி செய்து வாழ்வதே 'ஒப்புரவு' என்பதை அறியலாம். உலகமெல்லாம் உள்ள மக்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் ஒப்புரவு செய்து வாழ வேண்டிய கடப்பாட்டிற்குத் தள்ளப்படுகின்றனர். பிறக்கும்போதே யாரும் செல்வராகப் பிறப்பதில்லை; உற்றார், உறவினரின் செல்வத்தைக் கொண்டே ஒருவர் செல்வர் அல்லது வறியவர் எனக் கணிக்கப்படுகின்றனர். வறியவராக இருந்து தம் உழைப்பால் செல்வர் களாக உயர்பவர்களும் உண்டு.

எனவே யாராக இருந்தாலும் இருப்பவர் இல்லாதவர்க்குக் கொடுத்து உதவவேண்டும் என்பது உலக நீதியாக இருக்க வேண்டும் அல்லது மாற வேண்டும் என்பதே வள்ளுவரிலிருந்து சிவப்பிரகாசர் வரைக் கடைபிடித்திருக்கும் சமூகச் சமநிலையான நடுநிலைமை நீதியாக அமைந்திருக்கின்றது. இவ்வகையில் வள்ளுவர் 'ஒப்புரவு' எனும் அதிகாரத்தில் 10 குறட்பாக்களிலும் ஒப்புரவின் திறத்தை அலசி ஆராய்ந்துள்ளார். வேறு பல இடங்களிலும் அதை வலியுறுத்துவதாகவே தம் நூல் முழுமையையும் அமைத்துள்ளார் என்பதை 'அறன் வலியுறுத்தல்' அதிகாரம் நமக்குத் தெரிவிக்கின்றது. சிவப்பிரகாசருக்கு இயல்பாகவே

பிறருக்கு உதவும் ஒப்புரவு குணம் அமைந்திருக்கின்றது என்பதற்கு அவ்ரியற்றிய நன்னெறியே ஓர் எடுத்துக்காட்டு. சிவப்பிரகாசருக்கு வள்ளுவரின் ஒப்புரவைப் பற்றி நன்கு தெரியும். இருந்தும் ஏன் அவர் 'நன்னெறி' எனும் பொது நீதிநூலில் நாற்பது வெண்பாக்களில் ஏறக்குறைய இருபது வெண்பாக்களை ஒப்புரவிற்கென்றே முழுமையும் ஒதுக்க வேண்டும்? இங்குதான் சிவப்பிரகாசரின் அருளுள்ளம் வெளிப் படுத்தப்படுகின்றது. சமூகத்தின் தாக்கம் இல்லையானால் வள்ளுவர் தம் 1330 குறட்பாக்களில் ஒரு குறளைக்கூட படைத்திருக்க முடியாது. அவ்வாறே சிவப்பிரகாசருக்கு வள்ளுவரைப் பற்றி நன்கு அறிந்திருந் தாலும் தம்முடைய ஒப்புரவை 'உள்ளநிறைவு' செய்து கொள்ளவே சமூகத்தின் அதீதப் பற்றால் அல்லது அதீதத் தாக்கத்தால் தம்முடைய நாற்பது வெண்பாக்களையும் இயற்றியுள்ளார் என்பது நமக்குப் புலனாகின்றது. ஆகவே மேற்சொன்ன இரு ஒப்புரவாளர்களின் நீதிக் கருத்துக்கள் ஒப்புரவு என்பதில் ஒன்றுடன் ஒன்று எவ்வாறு ஒத்திருக் கின்றன அல்லது பொருந்துகின்றன என இங்கே சுருங்கக் காணலாம்.

சிவப்பிரகாசர் தம் முதல் செய்யுளில்,

'என்றும் முகமன் இயம்பாதவர் கண்ணும்
சென்று பொருள் கொடுப்பர் தீதற்றோர்'

எனக் கூறும்போது, தம்மைப் பிறர் புகழ வேண்டும் என எதிர்பாராமல் நாவிற்கு உதவும் கைபோல பிறருக்கு உதவி செய்வர் மிகச் சிறந்த ஒப்புரவாளர் என்கின்றார் சிவப்பிரகாசர். வள்ளுவரும் ஒப்புரவின் முதற்குறளை 'கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு என்னாற்றும் கொல்லோ உலகு' என அமைத்துள்ளார். மழை எவ்வாறு பதிலுதவி பாராமல் பிறருக்கு உதவி செய்கின்றதோ அதுபோல மக்கள் பிறருக்கு உதவி செய்ய வேண்டும் என்கிறார். சிவப்பிரகாசர் நம் உடம்பின் உறுப்பாகிய கை நாவிற்கு உதவுவது போல எனவும், வள்ளுவர் மழை மக்களுக்கு உதவுவது போல எனவும் கூறி கைம்மாறு இல்லாமல் செய்யும் உதவியே வையகமும் வானகமும் போற்றும் நல்லுதவியாக அமையும் என்கின்றனர். இங்குச் சிவப்பிரகாசர் மிக எளிமையாக இயல்பான உவமையைக் கையாண்டு நம் கை, நா இவற்றைக் காட்டி நம் உடம்பே இயற்கையாக எதிர் உதவி பாராமல் உதவி செய்யும் பாங்கினை என மனிதரைச் சிந்திக்கத் தூண்டுகின்றார். இதேபோன்று பல், நாவிற்கு நல்ல வலிய பொருட்களையும் மென்று அரைத்து சுவை கூட்டுகின்றது. மேலும் இளம் பற்கள் இன்றும் நன்றாக உதவுகின்றன. அதுபோல உலக உண்மையான மெய்யறிவைக் கற்றறிந்தவன் (ஒப்புரவாளன்) தம் மெய்வருத்தியும் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்து வருவர் (27). மேற்சொன்ன கருத்து, 'தாளாற்றித் தந்த பொருளெல்லாம்

தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டு' எனும் ஒப்புரவு குறளால் விளக்கம் பெறுகின்றது. பல் தன்மெய் வருத்தத்தைப் பாராமல் வலிய பொருட்களைக் கடித்து அரைத்து நாவிற்கும் உடம்பிற்கும் உதவு கின்றது. அதுபோல மக்களாகிய நாம் நம்முடைய மெய்வருத்தம் பாரா உழைத்தாவது பிறருக்கு உதவி செய்து வாழவேண்டும் என்கின்றார் சிவப்பிரகாசர்.

அடுத்து சிவப்பிரகாசர் நம் உடம்பின் பிறிதோர் உறுப்பான கண்ணை வைத்து ஒப்புரவு ஒழுகுகின்றார்.

'மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண்'

எனும் பாடலில் கண்ணானது நம் உடம்பின் பிற உறுப்புகளுக்குத் துன்பம் வந்தால் தனக்கு வந்த துன்பம் போன்று கசிந்துருகி கண்ணீர் மல்கும். அதுபோல பெரிய ஒப்புரவாளர்கள் பிறரின் துன்பம் தம் துன்பம் போல் நினைந்து எரியிடையிட்ட நெய்போல உருகி உதவி செய்வார்கள். இக்கருத்தை வள்ளுவப் பெருந்தகை, ஒப்புரவை அறிந்துப் போற்றிப் பிறர்க்கு உதவியாக வாழ்கின்றவன்; உயிர் வாழ்கின்றவன்; அப்படி ஒப்புரவைப் போற்றாமல் வாழ்கின்றவன் செத்தவருள் சேர்த்துக் கருதப்படுவான் எனக் கூறுகின்றார். மேலும் 'மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க்கு இல்லென்ப தன்னுயிர் அஞ்சும் வினை' என்றும் 'அறிவினான் ஆகுவதுண்டோ பிறிதின் நோய் தன்நோய்போல் போற்றாக் கடை' என்றும் 'ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப் பசியை மாற்றுவார் ஆற்றலின் பின்' என்றும் அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன் பெற்றான் பொருள்வைப் புழி' என்றும் குறட்களை அமைத்து ஒப்புரவு செய்பவன், செய்யாதவன் இயல்புகளைப் பட்டியலிடுகின்றார்.

நம்முடைய கையை எடுத்துக்காட்டி சிவப்பிரகாசர் ஒப்புரவை விளக்கிச் செல்கின்றார். உடம்பின்மேல் அடிவிழும்போது தன்னியலாக, கை அதைத் தடுத்து உடம்பிற்கு ஊறு விளைவிக்காமல் பார்த்துக் கொள்கின்றது. அதுபோல ஒப்புரவாளன் பிறர்க்கு வந்த துன்பத்தைத் தாம் ஏற்றுக்கொண்டு அருள் வீரத்தொடு அவரைக் காத்து வருவர் (31). மேற்சொன்ன குறட்கள் இக்கருத்திற்கும் பொருத்தமுடையன.

நம் சங்க இலக்கியங்கள் ஆற்றுப்படை இலக்கியங்களைப் படைத்துத் 'தாம் பெற்ற இன்பம் (பொருள்) பெறுக இவ்வையகம்' எனும் உயரிய நோக்கில் அமைவன. அவ்வகையில் நாம் நமக்கு முன்பே தெரிந்த ஒருவரிடம் நேரிடையாகச் சென்று பொருள் பெற்றுக் கொள்ளல் எளிது. ஆனால் தெரியாத ஒருவரிடம் சென்று பொருள்பெற வேண்டு

மானால் அவரைப் பற்றித் தெரிந்த அல்லது அவருக்கு மிக நெருக்க மானவரை அணுகினால் முன் தெரியாத அவரிடமிருந்தும் பொருளை எளிதில் பெறலாம். இதை மனத்திற் கொண்டு சிவப்பிரகாசர்,

'தங்கட் குதவிலர்கைத் தாமொன்று கொள்ளினவர்
தங்கட் குரியவரால் தாங்கொள்க'

எனும் கருத்தைப் புலப்படுத்தி, ஓர் எளிமையான உவமையின் மூலம் அதனை எளிமையாக விளக்குகின்றார். பால் வேண்டுமானால் நாம் நேரிடையாகச் சென்று பசுவினிடம் பெற முடியாது. அதனோடு நெருக்கமுடைய பசுவின் கன்றின் மூலம் அதன் மடியை இளகச் செய்து, அதை விலக்கி நாம் பாலைக் கொள்கின்றோம். அதுபோல நமக்குத் தெரியாதவரிடமிருந்து தெரிந்தவர் மூலம் பொருளை எளிதாகப் பெறலாம் என ஒப்புரவு பெறும் முறையை விளக்குகின்றார். வள்ளுவர் இதை நேரிடையாக விளக்காவிட்டாலும் 'தெரிந்து வினையாடல்' எனும் அதிகாரத்தில், 'இதனை இதனால், இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்' (517). எனும் குறளின் மூலம் சிவப்பிரகாசரின் கருத்திற்கு மிகப் பொருந்த சொல்லியிருக்கின்றார்.

அடுத்து, கடல்போன்ற வற்றாத பெருஞ்செல்வம் பெற்றிருந்தும் அதை ஒப்புரவு செய்யாதவன் எக்காலத்திலும் பேறு அடையமாட்டான் எனும் பொருளில் காட்டி, அதை அவனிடமிருந்து பெற்று யார் ஒருவன் பிறரைப் புரக்கின்றானோ அவனே அச்செல்வத்திற்குரியவனாகி நிலைத்த பேறு அடைகின்றான் எனும் பொருளில்,

'பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி ஆக்குபவர் பேறாம்'' (4)

இப்பாடல் அமைந்துள்ளது. இதன் உவமையாக, கடல்நீர் எவ்வளவு நீரைத் தேக்கி வைத்திருந்தாலும் மேகமே அதை உள்வாங்கிப் பிறர்க்கு மழையாக உதவுகின்றது என மேற்சொன்னக் கருத்திற்குப் பொருத்து கின்றார். வள்ளுவர் இதற்கு இணையாக, 'ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்கும் கூன்கையரல்லா தவர்க்கு' எனக் கூறி கயமையாக ஒருவன் வைத்திருக்கும் செல்வத்தை வேறொருவன் அவனைத் துன்புறுத்திப் பெற வேண்டும் என்கிறார். அப்படிப் பெறப்பட்ட செல்வத்தை யார் அனைவர்க்கும் பகிர்ந்து கொடுக்கின்றார்களோ அவர்களே அச் செல்வத்தின் உடைமையாளனாக மாறி அவனே பேறு அடைவான் என உள்ளுறையாகக் கூறுகின்றார். 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்த வற்றெல்லாம் தலை' என்ற குறளையும் ''காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும் அன்ன நீரார்க்கே உள' என்ற குறளையும் மேற்சொன்ன சிவப்பிரகாசரின் ஒப்புரவோடு இணைத்துப் பார்க்கலாம்.

ஒப்புரவு செய்பவர் தம்முடைய மனவருத்தம், 'வறுமை இவற்றைப் பாராமல் உதவுவர் எனும் கருத்தையும் சிவப்பிரகாசர் விளக்கிச் செல்கின்றார். வாழையின் பிஞ்சுகூட பிறர்க்கு உதவும். ஆனால் பழுத்த நிலையிலும் எட்டிப்பழம் யாருக்கும் உதவாது. அதுபோல கருணை வுள்ளம் கொண்ட ஒப்புரவாளன் மனவெறுப்பு காலத்திலும் பிறர்க்கு உதவுவான். ஆனால் வைத்திழக்கும் வன்கணவர் மகிழ்ச்சியாக இருக்கும் போதும் பிறர்க்கு உதவார். நிலவானது தன்னுடைய கறை இருளைப் போக்கிக் கொள்ளாது பிறர்க்கு ஒளிகொடுப்பதைப் போல வறுமை யுற்ற காலத்தும் ஒப்புரவாளன் தம் உடல் வருத்தி உழைத்தாவது பிறருக்கு உதவுவான். மேலும் நிலவு தாம் வளர்ந்து வரும் அளவைப் பொருத்து பிறருக்கு வெளிச்சத்தைக் கொடுக்கும். அதுபோல செல்வராக இருந்து அதிக அளவு ஒப்புரவு செய்தாலும் வறுமையுற்ற காலத்தும் செய்யும் சிறிய உதவியாயினும் புரவலன் அன்பு வெளிப்படுவதால் அது பனை அளவு உயர்ந்த ஒப்புரவாகவே கருதப்படும் எனச் சிவப்பிரகாசர் கூறுகின்றார். இச்செய்திகளுக்கு நிகராக, 'இடனில் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார் கடனறி காட்சி யவர்' என்றும், ஒப்புரவினால் வரும் கேடெனின் அஃதொருவன் விற்றுக்கோள் தக்கது உடைத்து என்றும் சிவப்பிரகாசரைவிட ஒருபடி மேலே சென்று விளக்கு கின்றார். ஒப்புரவு செய்து அதனால் வரும் வறுமைக் கேட்டை ஒருவன் தன்னை விற்றாவது வாங்கிக் கொள்ள வேண்டும் என வள்ளுவர் ஒப்புரவின் உச்சத்தை விளக்குகின்றார்.

பேச முடியாத ஊமையால் பண்டை நூல் பெருமைகளை அனுபவித்துச் சொல்ல முடியாது. குருடரால் விளக்கிருந்தும் ஒளியை கண்ணுற முடியாது. அதுபோல் ஒப்புரவு செய்யாதவன் எவ்வளவு செல்வ வளம் பெற்றிருந்தாலும் அதனால் அவனுக்குச் சிறு பயனும் கிடையாது எனச் சிவப்பிரகாசர் கூறிச் செல்கின்றார். கடல் எவ்வளவு பெருமை வாய்ந்த நீர்ப்பரப்பைப் பெற்றிருந்தாலும் அது உப்பங்கழிக்குக் கூட தன் நீரைக் கொடுக்கின்றது. அதுபோல பெரிய செல்வந்தரும் தம்முடைய தகுதி, பெருமை கருதாமல் செல்வம் தாழ்ந்தவர்க்கும் உதவ வேண்டும் எனவும், வாழைக் கன்று, தன் தாய் மரம் தான் ஈன்ற வாழைக்குலையால் கொலை செய்யப்படுகிறது என அறிந்தும் தானும் அவ்வாறே வாழைக் குலையை ஈன்று தானும் பிறர்க்கு உதவி செய்து அழிகிறது. அதுபோல தன் தந்தைப் பிறர்க்கு உதவி செய்து வறிஞரானார் என்று அவருடைய புதல்வன் நினையாமல் தானும் தன்னாலியன்ற உதவியைச் செய்வான் என்றும் சிவப்பிரகாசர் வறுமை நிலையிலும் பிறர்க்கு உதவவேண்டும் எனக் கூறுகின்றார். வறுமை நிலையில் உள்ளவர்களே ஒப்புரவு செய்ய வேண்டுமென்றால் செல்வந்தர் ஒப்புரவு செய்ய வேண்டும் எனச் சொல்லாமலே தானே முன்வந்து செய்ய வேண்டும் என்ற உள்ளுறையையும் வைத்துச் சிவப்பிரகாசர் விளக்கு

கின்றார். இதற்கு நிகராக வள்ளுவர், ''நச்சப்படாதவன் செல்வம் நடுவூருள் நச்சுமரம் பழுத் தற்று' எனக் கூறி, செல்வந்தர் ஊருணி போலவும், உள்ளூர் பயன் மரம் போலவும், தம் எல்லா பாகங்களும் மருந்தாகிப் பயன்படும் மருந்து மரம்போலவும் பிறருக்கு உதவி செய்ய வேண்டும் எனவும் கூறி ஒப்புரவு செய்யாதவனின் தீமை நிலையையும் ஒப்புரவு செய்பவனின் (பேரறிவாளன், பெருந்தகையாளன், நயனுடையான்) நன்மையையும் அவனின் பெருமையையும் சிவப்பிரகாசரைப் போன்று விளக்கிச் செல்கின்றார்.

இறுதியாக, சிவப்பிரகாசர் தக்கார்க்கு உதவவேண்டும் எனக் கூறுகின்றார். பயன்தரும் நெற்பயிருக்கே உலகத்தார் நீர் பாய்ச்சுவர். பயன்படா புல்லுக்கு நீர் பாய்ச்ச மாட்டார்கள். மேலும் கதவின் வலிமை அதன் தாழ்ப்பாளில் அமைந்துள்ளது. அதுபோல ஒப்புரவு வலிமை வாய்ந்ததாக ஆகவேண்டுமானால் பிறருக்குப் பயன்படும் தக்கவர்க்கே உதவ வேண்டும் எனக் கூறிச் செல்கின்றார். வள்ளுவர் இக்கருத்திற்கு நிகராக 'நன்றாற்ற லுள்ளும் தவறுண்டு அவரவர் பண்பறிந் தாற்றாக் கடை' எனக் கூறி உதவியும் தக்கவர்க்கே செய்ய வேண்டும் என்கிறார்.

வள்ளுவர் 'இரந்தும்' உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்' என்றும் 'பண்புடையரார்ப் பட்டுண்டு உலகம்' என்றும் கூறி இரப்பு இல்லாமல் மக்கள் இன்பமோடு வாழ வேண்டுமானால் இந்த உலகம் உய்ய வாழ்ந்து வரும் சில பண்புடையாளர்கள் தேவை எனக் கூறி அறிவுறுத்துகின்றார். இவ்வாறு சிவப்பிரகாசர் வள்ளுவரின் தோளில் நின்று அவரைவிட மிக இயல்பாக மேலும் பல சான்று களோடு ஒப்புரவு செய்யப்பட வேண்டுவதின் அவசியத்தை அனுபவ முறையில் நடைமுறையோடு ஒப்பிட்டு எடுத்துரைக்கின்றார். இதனால் பெருமை கொள்ளத் தக்கவர் வள்ளுவரே. ஏனெனில் வள்ளுவரே 'தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க் கெல்லாம் இனிது' எனக் கூறி, சிவப்பிரகாசரின் 'நன்னெறி' உலகத்து உயிர்கட் கெல்லாம் இன்பம் பயக்கவல்லன எனச் சொல்வதாகக் கருத வேண்டும். பொருளாதாரத் தந்தை மார்க்சு ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு காலத்திற்கு முன்னர் தோன்றி, மக்கள் அனைவரும் சம உரிமை மதிப்புப் பெற 'உபரி உற்பத்தி' அனைவர்க்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் எனப் புரட்சி செய்து போராடி உலக மக்களுக்கே உறுதுணை புரிந்தார். ஆனால் இவருக்கு, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இப்படிப்பட்ட புரட்சி வெடிக்காமல் மக்கள் நல்வாழ்வு பெற பொருள் அனைவர்க்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என வள்ளுவரும், முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு சிவப்பிரகாசரும் உள்ளுறையாகத் தம் இலக்கியங்களில் ஒப்புரவுக் கருத்துக்களைப் பதிவு செய்துள்ளனர் என அறிகிறோம்.

47. 'சிவப்பிரகாசரும் - சேக்கிழாரும்'

கோ. சுப்பிரமணியனார், திருவையாறு.

''உலகெலாம் உணர்ந்து ஓதற்கரிய'' சிவ பரம்பொருளும், செந்தமிழும் ஒன்றே. சிவம் வேறு - செந்தமிழ் வேறல்ல. ஒன்றை ஒன்று பின்னிப் பிணைந்து, பிரிக்கமுடியாத நிலையில் தமிழக மக்கள் உள்ளங்களில் குடியமர்ந்து அவர்களுக்கு வாழ்வளித்து வருகின்றன. அதனால், உலக மக்களுக்கே ஒரு வழிகாட்டியாக உள்ளது எனலாம். எனவே, சைவமும், தமிழும் பேணிக் காக்கவல்ல சான்றோர் பலர் தமிழகக்தே உருவாயினர். அவர்கள் சைவ சமய ஆச்சாரியர், சந்தானாச்சாரியர், பன்னிரு திருமுறை கண்ட அருளாளப் பெருமக்கள் எனப் பலராவர். அவர்களுள் சிவப்பிரகாச சாமிகளும் ஒருவராவர்.

வாழ்க்கைத் தத்துவம்

''வாழ்வெனும் மையல் விட்டு
வறுமையாம் சிறுமை தப்பித்
தாழ்வெனும் தாழ்மை யோடும்
சைவமாம் சமயம் சாரும்
ஊழ்பெறல் அரிது''

என்பது சிவஞான சித்தியார்.

''சிவஞான சித்திக்குமேல் நூலில்லை
சிவத்திற்கு மேல் தெய்வமில்லை''

என்பது பழமொழி.

இறைவன் இயல்பு

அடியார் பெருமக்களுள் உயர்வு, தாழ்வு வேறுபாடு கருதான் இறைவன்.

''சலமிலன் சங்கரன்... குலமிலராகிலும் குலத்திற் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சிவாயவே''

என்பது நாவுக்கரசர் வாக்கு.

அடியார் பண்பு

இறைவனிடம் அன்பு செலுத்துவோர்; தான், தனது என்ற உணர் வின்றித் தன் உடமையாவும் பிறர்க்கே (இறைவனுக்கே) என்ற உணர்வுடையோராயிருப்பர்.

''அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு'' (72)

எனும் திருவள்ளுவர் காட்டும் இலக்கணத்திற்கே சான்று - கண்ணப்ப நாயனார்.

சேக்கிழாரும் - சிவப்பிரகாசரும்

சேக்கிழார் சுவாமிகள்

கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தெய்வப் புலவராவர். இறைவன் முன் அனைத்துயிர்களும் சமம்; சாதி, மத, இன வேறுபாடில்லை - எனும் உயரிய தத்துவத்தை முன்னிறுத்தி அறுபத்து மூன்று நாயன் மார்களின் வரலாற்றை உலகிற்குத் தந்தவர்.

''பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட பாடிய கவிவலவ'' - என மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் தம் சேக்கிழார் பிள்ளைத்தமிழில் சிறப்பித்துப் பாடப்பெற்ற சிறப்பிற்குரியவர். அவரது திருத்தொண்டர் புராணத்துக் 'கண்ணப்ப நாயனார் புராணம்' ஒரு ஒப்பற்ற சிறப்பு வாய்ந்தது.

சிவப்பிரகாச சுவாமிகள்

கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தெய்வப் புலவராவார். ''வீரசைவம்'' பேணிக் காக்க வந்த அருளாளர்.

''கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாசர்'' - எனச் சான்றோர் பெருமக்களாற் புகழப்பெறும் சிறப்பிற்குரியவர். சமயம், தருக்கம், துறைகளில் தேர்ந்து, புராணம், சிற்றிலக்கியம், நீதிநூல் எனப் பல்வேறு முப்பத்தைந்து நூல்கள் இவரால் யாக்கப்பெற்றன. அவை, வீரசைவ மாண்பை விளக்க, வளர்க்க எழுந்த நூல்களாயினும் எந்நாட்டவர்க்கும், எம்மதத்தவர்க்கும் ஒப்ப முடிந்த கருத்தாகப் பொது நெறியே புகலவல்லனவாம்.

சான்றோருடைத்தாய தொண்டை நன்னாட்டுக் காஞ்சிபுரத்தே தொண்டை மண்டல வேளாளர் தம் குலகுருவாம் குமாரசாமி தேசிகர் அவர்களுக்கு, அருள்மிகு அண்ணாமலையார் அருளால் சிவப்பிரகாசர், வேலையர், கருணைப்பிரகாசர், ஞானாம்பிகை எனும் மக்கள் நால்வர் தோன்றினர். ஆண்மக்கள் மூவரும் தமிழ்ப்புலமை மிக்கவர்கள் என்பது அவர்களியற்றிய ''சீகாளத்திப் புராணத்தால்'' அறிகின்றோம். கருணைப் பிரகாசரால் - விடசங்கமச் சருக்கம், தென் கைலாயச் சருக்கம், நான்முகச் சருக்கமும், சிவப்பிரகாச சுவாமிகளால், ''கண்ணப்பச் சருக்கமும்'', நக்கீரச் சருக்கமும், வேலையரால் கன்னியர்ச் சருக்கமும், சிலந்தி முன்கதைச் சருக்கமும் ஆக எட்டுச் சருக்கங்களுடன் கூடிய 'சீகாளத்திப் புராணம்' உருவாகியது.

எனவே, இவண் சிவப்பிரகாசரின் சீகாளத்திப் புராணத்தேவரும் - கண்ணப்பச் சருக்கத்தையும், சேக்கிழாரின் பெரியபுராணத்தே வரும் கண்ணப்ப நாயனார் புராணத்தையும் இணைத்து, ஒப்பீடு செய்து காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இணையற்ற இருபெரும் புலவர்கள்

சேக்கிழாரினும் - சிவப்பிரகாசர் காலத்தால் பிற்பட்டிருந்தாலும் அறிவால், ஆற்றலால், கருத்தால், புலமையால், கற்பனைத் திறத்தால் எவ்வகையிலும் சளைத்தவரில்லை என்பது இவ் ஆய்வின் மூலம் காண முடிகின்றது. கண்ணப்ப நாயனார் வரலாறு தமிழ் மக்கள் அனைவர் உள்ளத்திலும் பதிந்த ஒன்று. கண்ணப்பர், தம் அன்பின் உயர்வை, பக்தியின் முதிர்வை, தன்னலம் கருதாத பண்பை, எவராலும் செயற்கரிய செயலாகிய தன் கண்ணைத் தானே பெயர்த்து இறைவர்க்கு அப்பிய செயலால் இன்று உலகமே அவரைப் போற்றிப் புகழுதற்குரியவராகிறார்.

இக்காலத்தே இறந்தவர் தம் கண்ணை - கண் ஒளி இழந்த ஒருவர்க்குப் பயன்படக் 'கண்தானம்' என வழங்குவதனைக் கண்டு பாராட்டுகின்றோம். இதற்கு முன்னோடியாக ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே கண்ணப்பர் செய்துள்ள செயல், உலக மக்கள் அனைவரது உள்ளத்திலும் ஒரு அதிர்ச்சியையும், பெரு வியப்பையும் ஊட்டவல்லதா யுள்ளது. அதுமட்டுமல்ல, தமிழகத்தே நிகழ்ந்த இந்த அதிசய வரலாறு உலகமே போற்றும் உயரிய வரலாறாக தமிழுக்கும் தமிழ் மக்களுக்குமே பெருமை சேர்க்கும் நிகழ்ச்சியாக அமைந்துவிட்டது. இன்று இச்செயல் நடைபெற்றதென்றால் அவர் பெயர் ''கின்னஸ்'' புத்தகத்தில் இடம் பெறச் செய்யும் அரும் செயலாக உலக அரங்கில் பேசப்பெறும்.

அதிசயம் - ஆனால் உண்மை

சேக்கிழார் கண்ணப்ப நாயனார் வரலாற்றை 186 பாடல்களிலும், சிவப்பிரகாசர் 178 பாடல்களிலும் அவரவர்தம் புலமைக்கேற்பப் பாடி யுள்ளனர். அருளாளர்தம் கருத்துக்கள் என்பதால், காலம், இடம் மாறு பட்டிருந்தாலும் சொல்லும், பொருளும் இணைந்து சொற்சிலம்பமாடு கின்றதனைக் காணும்பொழுது பெரிதும் வியப்பாகவே உள்ளது. இதனைத் தொடக்க முதல் முடிவு வரை ஒப்பீட்டு ஆய்வின் அடிப்படையில் தக்க சான்று கொண்டு நிறுவுவோம்.

சேக்கிழார்

''பூஅலர் வாவி சோலை சூழ்ந்த பொத்தப்பி நாடு'' - என்பார்.

சிவப்பிரகாசர்

"புதுமை கொண்ட வெற்புடுத்தது பொத்தப்பி நாடு" (1) என்பார் .

''மத்தவெங் களிற்றுக் கோட்டு வேலி கோலிய முதுபதி உடுப்பூர்

என்பார் சேக்கிழார்

''வெண்கவரி மாவின் மென்மயிர்க் கற்றை வேய்ந்த
சிற்றில் சூழ்ந்த உடுப்பூர் (2)

என்பார் சிவப்பிரகாசர்.

சேக்கிழார் தம் கற்பனை

புலிக்குட்டிகளும், யானைக்கன்றுகளும் வேடர்களுடன் விளையாடுமாம்
வேடச் சிறுமிகளின் கண்களைக் கண்டு மான்கள் தம் இனமென நெருங்கி வருமாம். (4)

சிவப்பிரகாசர்தம் கற்பனை

இளம் புலிகள் இளம் வேடச் சிறுவர் பின்னே திரிந்துஅவரது வீரக்குணத்தைக் கற்றுக் கொள்ளுமாம்; இளம் யானைகள் குறத்தியரது நடையைக் கண்டு கற்றுக்கொள்ளுமாம் - நடைபயிலுமாம். (4)

''வேடர்க்கு அதிபதி ''நாகன்'' என்பான்

''குறிஞ்சி வாழ்க்கை மனைவியும் ''தத்தை'' என்பாள் (8)

என்பார் சேக்கிழார்.

''வனச ராதிபனி ''நாகன்'' என்பான், வாட்கண் மனைவி
''தத்தை'' என்பாள்'' (7)

என்பார் சிவப்பிரகாசர்.

சேக்கிழார் கருத்தும் - சிவப்பிரகாசர் கருத்தும்

இத்தகைய சிறப்புடையவர்க்கு புதல்வர்ப்பேறு அரிது எனப் பலரும் கூறியதால், முருகன் சந்நிதி சென்று சேவல், மயில் பராய்க் கடன் செலுத்தினர். - என்பார் சேக்கிழார்.

இந்த இடத்தில் நாகன் தனக்குக் குழந்தைப் பேறின்மையால் கீழ்க்கண்டவாறு கலங்கியதாகச் சிவப்பிரகாசர் கூறுவார் - கற்பனைக் களஞ்சியமல்லவா?

''கண்ணில்லாத உடம்பும் சந்திரனில்லாத இரவும், மந்திரியில்லாத அரசாட்சியும், கருணையில்லாத கடின சித்தமும், புலவரில்லாத சபையும் போலப் பாலருந்தாத குழந்தை இல்லாத வாழ்க்கையும் ஒப்பாகும் என்பார். அத்துடன் புறநானூற்றில் பாண்டியன் அறிவுடைநம்பி குழந்தைப் பேறு கிட்டாதவர் வாழ்க்கையை,

''படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கல்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்ப்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைதாம் வாழும் நாளே'' (புறம்)

என வருணிக்கும் கருத்தைச் சான்று காட்டுவார்.

''அரிகொள் பொன்புனை கிண்கிணிதண்டையோ டணிந்த
தருண மென்றளிர்ச் ''சீறடித் தளிர்நடைச் சிறுவர்
மருவ றாதசெவ் வாம்பல்வாய் மழலைய ரமுதம்
பருகி லாச்செவி பாவையின் செவியெனப் படுமால்'' (11)

மேலும்,

''மக்கள் மெய்த்தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு'' (65)

என்ற வள்ளுவப் பேராசான் கருத்தையும் இணைத்துப் பாடியுள்ள திறம், அருமையிலும் அருமை.

''சேறளைந்த மென்சீறடித் தளிரொடு தீம்பால்
சோறளைந்த கைத்தாமரை யோடுசெந் துகிர்வாய்
ஊறுநனை மார்பினோ டிளமகா ருந்தி
யேறுமின்ப முள்ளதனையே யுடம்பென விசைப்பார்'' (10)

அதாவது, ''சேற்றுக்காலுடன் பாற்சோறு பூசிய கையுடைய குழந்தை - தன் வாயெச்சிலுடன் மார்பில் ஏறும் உடம்பே உடம்பு'' என்ற கருத்தை,

''அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள்
சிறுகை அளாவிய கூழ்'' (64)

எனும் திருக்குறட் கருத்துடன் இணைத்துப் பாடிய திறம் போற்றிப் புகழற்குரிய தொன்றாம். எனவே, குழந்தைப்பேறு கிட்டிவிட்டது நாகனுக்கு - எப்படி?

உவர்க்கடலில் சந்திரன் தோன்றியது போல மகவு பிறந்தது. அதனை கரிய மலை ஒன்று காளமேகத்தைச் சுமப்பது போல, கரிய நிறமுடைய நாகன் தன் கையால் எடுத்தான்; எடுத்தற்கு அரியனாயிருந்தமையின் அக்குழந்தைக்குத் **திண்ணன்** எனப் பெயரிட்டான் என்பார் சேக்கிழார்; - சிவப்பிரகாசரோ...

''பூங்குழல்வே னெடுங்கண்ணார் புனலாட்டிப் புனைந்துதர
வாங்குசிலை மறவர்கோன் மணிமகனைத் தடக்கையாற்

றாங்குபுதிண் ணென்றிருந்த தன்மையாற் ''றிண்ணனெனத்''
தேங்கியபே ருவகையொடுந் திருநாமம் சாத்தினான்'' (24)

என்பார், அதற்பின்,

''சிலைபயில் பருவம் சேர்ந்தார்'' (27) சேக்கிழார்

''சிலை விஞ்சை கற்பிக்கும் பருவம் வர'' (31) சிவப்பிரகாசர்

''விசயன் வேட்டுவக் குலத்தி னுள்ளவ தரித்தான்கொல்'' (34)

என்பார்.

தந்தை நாகன் தன் மகனைத் தன் குடிகாக்க இளவரசாக்கு கின்றார் என்பதனைச் சேக்கிழார்,

''உன்னுடைய மரபு உரிமை தாங்குவாய் என்று
உடை தோலும் சுரிகையும் கொடுத்தான்'' (53)

என்பார். சிவப்பிரகாசரோ,

''இற்றை நாண் முதலா நீயே யிறவுளர்க் கிறைவனாகி''

என வாழ்த்தி வெற்றிதரும் வில்லைக் கையில் கொடுத்து, மகிழ்ந்து கட்டித்தழுவி முருகன் அருளால் 'கன்னி வேட்டை'யாடி இனிதே வருக! என வாழ்த்தினான். பின் தாயினை வணங்க, அவள், திரு வெண்ணீறு அணிவித்து, உச்சிமோந்து கண்ணேறின்றி வேட்டையாடி மீண்டு வருக! என வாழ்த்தி அனுப்புவதாகக் கூறுவார்.

புதிய செய்தி

பதினோராம் திருமுறையில் கல்லாட தேவநாயனார்,

''திருக் கண்ணப்ப தேவர் திருமறம்''

என 38 வரிகளில் பாடியுள்ளார். அதில் அவர் கண்ணப்பரின் தோற்றப் பொலிவை,

''பரிவின் தன்மை உருவுகொண் டனையவன்
போழ்வார் போர்த்த காழகச் செருப்பினன்
குருதி புலராச் சுரிகை எஃகம்
அரையிற் கட்டிய உடைதோற் கச்சையன்'' (1-4)

என அழகுறக் காட்டுகிறார்.

கருத்து மாற்றம்

சேக்கிழார், கன்னி வேட்டையில் பன்றி ஒன்றைச் சாய்த்துக் களைத்த திண்ணனார், பசிதாகம் தணிந்து காடு செல்வோம் என்று கூற, வேடர் துணைவன் 'நாகன்' அதோ பொன் முகலியாறுள்ளது - காளத்தி மலை மீது குடுமித்தேவர் உள்ளார், சென்று கும்பிடலாம் வா! - என்கிறான்.

இந்த இடத்தில் சிவப்பிரகாசர்தம் கருத்து, சற்று மாற்றம் பெருகின்றது. அதாவது, கன்னி வேட்டையாடிக் களைத்த திண்ணனார் படுத்து உறங்குகின்றார். அவர் கனவில் சிவபெருமான் தோன்றி, ''சிறுவனே! வடமூல கல்லால மரத்தடியில் பொன்முகலிக்கரையில் ஒரு சிவலிங்கம் உள்ளது, பெறுதற்கரிய அதனை நீ சென்று வணங்கு!'' எனக் கூறி மறைகின்றார்.

திடுக்கிட்டு விழித்தவன் கண் எதிரில், பன்றி ஒன்று வலையை அறுத்துக்கொண்டு ஓட, அதனைப் பின் தொடர்ந்த திண்ணன் மலைமீது கல்லால் மரத்தினடியில் இருந்த சிவலிங்கத்திடம் ஓடிச்சென்ற பன்றி மறைந்தது கண்டு வியந்து பார்க்கிறான் சிவலிங்கத்தை,

''காண்டலும் கடவுள்தங் கருணைநோக் கினிதுபெற்று
மாண்டகு மிரதந் தோய்ந்த வல்லிரும் புருவமாறி
யீண்டொளி கெழு பொன்னா வதென்னமுற் குணங்கள் மாறி
யாண்டகை யிறைவன் றன்பா லன்பொரு வடிவமானான்''
(95)

ரசத்தில் தோய்த்த இரும்பு பொன்னாவது போல, பழைய குணங் களெல்லாம் மாறுபட சிவபெருமானிடத்து அன்பே வடிவமாயினான் என்பார். - சேக்கிழாரோ, ''பொரு இல் அன்பு உருவம் ஆனார்'' (104) என்பார் சுருக்கமாக.

சேக்கிழார் காட்டும் திண்ணனாரின் பாசவுணர்வுகள்

வேட்டை முடிந்தது - திண்ணன் வீடு திரும்ப இன்னும் ஏன் காலதாமதம் - என உடன் வந்த காடன் நாகனிடம் கேட்க,

''அங்கு இவன் மலையில் தேவர்
தம்மைக் கண்டு அணைத்துக் கொண்டு
வங்கினைப் பற்றிப் போதா
வல்உடும்பு என்ன நீங்கா்ன்
இங்குஅத் தேவர் தின்ன
இறைச்சி கொண்டேகப் போந்தான்
நம்குலத் தலைமை விட்டான்
நலப்பட்டான் தேவர்க்கு என்றான்'' (116)

என்பார் சேக்கிழார் - இக்கருத்து திருவாரூர் தேவாரத்தே தாண்டக வேந்தர்,

''முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்;
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்;
பெயர்த்து மவனுக்கே பிச்சி யானாள்;

அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே''

எனக் குறிப்பிடும் கருத்துக்கிணையாக, கண்ணப்பர் தன் தாய் தந்தையரை நீத்து குடுமித்தேவரைச் சரண் அடைந்ததைத் தாம் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம். இருவர் கருத்தும் ஒப்ப முடிந்த கருத்தாகவே உள்ளன.

சேக்கிழார் - திண்ணனார் இறைவனிடம் மோகமாய் ஓடிச்சென்றார், தழுவினார், மோந்து நின்றார் - அடியனேற்கு அகப்பட்டார் அச்சோ' (105) என்றும்

சிவப்பிரகாசர் - தாயெனத் தாழா தோடி தழுவி, மோந்து ''ஐயன் வந்து அகப்பட்டான் என்பதோடு - என்றும் கூறுவர்.

சிவப்பிரகாசர் காட்டும் திண்ணனார்தம் மெய்ப்பாட்டுணர்வுகள்

எந்தையே! யானையும் புலியும் திரியும் இக்காட்டில் தனித் திருத்தல் ஏனோ? உனக்கு மாமிச உணவு தருவார் யார் இங்கு இருக்கின்றார்கள்? - மான், பன்றி, உடும்பு மாமிசம் யானே கொணர்ந்து தருகின்றேன். நல்ல வேடர் துணையுண்டு எம் ஊர் வருக 'நீ இங்கு தனித்திருக்க யான் சகியேன். நீ மௌனமாயிருப்பதால் இவ்விடம்தான் உனக்கு விருப்பம்போலும், - உன்னைப் பிரிந்து உயிரோடிரேன். உன் தலையில் பூவும் நீரும் இருப்பதால், உனக்கது பிடித்தம்போலும், எந்தையே' நீங்கள் மிகவும் பசித்திருக்கின்றீர்கள் - இதோசென்று உடன் வருகின்றேன் - என்று கன்றினைப் பிரிந்த பசுப்போல திரும்பித்திரும்பி பார்த்தபடி பிரிய மனமின்றி காடு சென்றான்.

கையிலுள்ள மாமிசத்தைப் படைத்துத் தந்தையே! உண்க! - உண்க! எனப் பரிவுடன் சொல்லி அருகிருந்தான் - இரவு முழுதும் கண்விழித்துப் பார்த்திருந்தான் - நாளும்வந்து பூசை செய்யும் - சிவகோசரி'' எனும் அந்தணர் பற்றி இருவரும்,

சேக்கிழார் கூற்று

''எய்தியசீர் ஆகமத்தில் இயம்பியபூ சனைக்கு ஏற்பக்
கொய்தமல ரும்புனலும் முதலான கொண்டு அணைந்தார்
மைதழையும் கண்டத்து மலைமருந்தை வழிபாடு
செய்துவரும் தவம்உடைய முனிவர்சிவ கோசரியார்'' (135)

சிவப்பிரகாசர்

ஈசனார்தம் மிணையடித் தாமரைப்
பூசைசெய் - தொழி லாப்பூண்டு செய்திடு
மாசைமேல் கொண்டறாமனத் தான்சிவ
கோச னென்னுங் குணப்பெருங் குன்றனான் (131)

என்பார்.

இறைவன் திண்ணனாரின் அன்புப் பூசனையைப் பற்றி சிவகோசரியார் கனவில் எவ்வாறு புகழ்ந்துரைத்தார் என்பதனைச் சேக்கிழார்,

''அவனுடைய வடிவுஎல்லாம் நம்பக்கல் அன்பு என்றும்
அவனுடைய அறிவுஎல்லாம் நமைஅறியும் அறிவு என்றும்
அவனுடைய செயல்எல்லாம் நமக்கு இனிய வாம் என்றும்
அவனுடைய நிலை இவ்வாறு அறிநீ என்று அருளிச் செய்வார்''
(157)

சிவப்பிரகாசர் இதனை ஆறு பாடல்களில் கூறுவார்.

சிவகோசரி! அவனது பேரன்புத் திறத்தை நாளை காட்டுவோம். அவன் அறியாதபடி மறைந்து இருந்து பார் - எனச் சொல்லி மறைந்த இறைவன் மறுநாள் திண்ணனார் வரும் நேரத்துத் தம் கண்ணில் இரத்தம் சொரியச் செய்தார். அதனைக் கண்ட திண்ணன் படும்பாட்டை, அத்துன்பக் காட்சியைச் சிவப்பிரகாசர்,

''ஓடுவன் மீள்வன் வீழ்வ னுருள்வன் எழுந்து விம்ம
னீடுவ னந்தோ வென்ப வெட்டுயிர்ப் பெறிய னெஞ்சம்
வாடுவன் பொங்கிப் பொங்கி வாய்விட்டு முகத்தைக் கையான்
மூடுவ னழுவன் கைகண் மோதுவன் கற்க ளோடே (162)

எனக் காட்டுவார். அடுத்து,

''ஊனுக்கு ஊண் மருந்து''

என உணர்ந்து தன் கண்ணைப் பெயர்த்து வைத்தவுடன் இரத்தம் நின்றதும் அவனடைந்த மகிழ்ச்சியை,

''ஓடினான் றிசைக ளெல்லா முடம்பெலாங் குலுங்க நக்கான்
பாடினான் வாயில் வந்த படியெல்லாம் கைகள் கொட்டி
யாடினான் றுள்ளித் துள்ளி யாரவாரித்தா னின்று
நாடினான் செய்த செய்கை நன்றுநன் றெனவி யந்தான் (169)

என சிவப்பிரகாசர் அவருக்கு ஏற்பட்ட மெய்ப்பாட்டுணர்வை - அவ்-இன்பக் காட்சியைச் சேக்கிழாரினும் ஒரு படியுயர்வாகவே படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

48. சிவப்பிரகாசரின் நீதி நூல்

செ. சுமதி, கோவை.

உயிர்கள் அனைத்தும் வாழ்கின்றன. ஆயின் பகுத்தறிவால் பிற உயிரினங்களிலிருந்து வேறுபட்டு வளர்ந்து நிற்கும் மனிதனின் வாழ்வு தனிப்பட்டது. தனித் தன்மையுடையது. சிந்திக்கவும் அதன்படி செயற் படவும், நெறிப்படுத்தவும் ஆற்றலுடைய மனிதனின் வாழ்வு மேம்பட்டு அமைதல் வேண்டும். அனைவரும் வாழவேண்டும் என்பது படைப்பின் அடிப்படை நோக்கம் என்றாலும் அவ்வாழ்வும் வெற்று வாழ்வாகி அழியாது பயனுடையதாக ஆகுதல் வேண்டும் என்பது குறிக்கோள். எனவே, எப்படியும் வாழலாம் என்றில்லாமல் மனிதனை மனிதனாக வாழுமாறு நெறிப்படுத்துவது இலக்கியம். மனிதனை மாண்புமிகு மனிதனாகச் சிறப்புற்று விளங்கச் செய்வதற்கு வழிகாட்டும் அறநெறிக் கருத்துக்களை எடுத்துரைப்பது நீதி இலக்கியம்.

'நீதி' என்பது தமிழ்ச்சொல் அன்று. அது ஒரு வடமொழிச் சொல் ஆகும். 'நீ' என்னும் வேர்ச் சொல்லை அடியாகக் கொண்டது. இதற்கு அழைத்துச் செல், கொண்டு செல், நடத்து, வழிகாட்டு, ஆட்சி செய், இயங்கு என்னும் பல்வேறு பொருள்கள் வடமொழியில் வழங்கி வருகின்றன.

நீதி என்னும் சொல் பழந்தமிழ் இலக்கியத்தில் பயன்படுத்தப் படவில்லை. திருக்குறளிலும் நீதி என்ற சொல் இடம் பெறவில்லை. 'நீதி' என்ற சொல்லிற்கு 'நியாயம்' என்ற பொருள் தமிழில் வழங்கப்பட்டு வருகிறது. நேர்மை, வாய்மை, நன்னெறி, கட்டுப்பாடு என்பன இதற்குரிய பொருள்களாகும்.

கற்பவரை உணர்ச்சிப் பெருக்கால் கிளர்ச்சி அடையச் செய்யாது சிறந்த கருத்துக்களை அறிவுறுத்தி, அவர்களுடைய வாழ்க்கையைச் செம்மைப் படுத்துவதை நோக்கமாகக் கொண்டவை நீதி நூல்கள்; இவை உணர்ச்சியைத் தூண்டாமல் அறிவைத் தூண்டுவன; இன்புறுத்துவதைக் காட்டிலும் அறிவுறுத்துவதையே குறிக்கோளாகக் கொண்டவையாகும். கலையழகிற்கு முதன்மை இடம் தராமல் கருத்திற்கே இவை முதன்மை இடம் தருகின்றன. இந்த வரிசையில் சிவப்பிரகாசரால் எழுதப்பட்ட 'நன்னெறி' என்ற நீதி நூலும் இடம் பெற்றுள்ளது. நாற்பது வெண்பாக்களால் ஆன இந்நூல் மனித சமுதாயத்திற்கு தலையாய அறநெறிகளை எடுத்துரைக்கின்றது.

அறநெறிக் கருத்துக்களை அறிவுறுத்துவதையே முதன்மையான நோக்கமாகக் கொண்டிருந்தாலும் கருத்துக்களை வெளிப்படுத்தும் முறையில் ஒரு தனித்தன்மையை இந்நூலில் காண முடிகிறது. கற்பனை வளமும், கவிதைத் திறனும் நாடகப் பண்பும் நிறைந்துள்ளது. அதனால் இலக்கிய உலகில் சிறந்ததொரு நீதி இலக்கியமாக இது விளங்குகிறது.

சிவப்பிரகாசர் ஒரு தீர்க்கதரிசி. தன் காலத்தவர்க்கு மட்டுமின்றி, எக்காலத்தவர்க்கும் ஏற்ற கொள்கைகளைக் கூறுகின்றார். தன் நாட்டினர்க்கு மட்டுமின்றி எந்நாட்டினர்க்கும் உரிய கொள்கைகளைத் தருகின்றார்.

ஒன்று, இரண்டு என்று நீதிகளை ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கிச் சொல்லாமல் ஒவ்வொரு பாடலிலும் வெவ்வேறு கருத்துக்களை, நின்று நிறுத்திச் சிந்தனையைத் தூண்டும் வண்ணம் சொல்வது மேலும் சுவையூட்டுகிறது. 'இதைச் செய்', இதைச் செய்யாதே' என்று எடுத்த எடுப்பிலேயே உருட்டல், மிரட்டலோடு உண்மைகளைச் சொல்லாமல், எதைச் செய்தால் உயர்வடையலாம் என்பதனை விளக்கி அறிநெறிகளை எடுத்துரைப்பது சிவப்பிரகாசரின் தனிச் சிறப்பாகும்.

இலக்கியத்தின் பயன் இன்புறுத்துவதும், அறிவுறுத்துவதும் ஆகும். இவ்விரு இயல்புகளும் ஏற்ற வகையில் இணைந்து, இழைந்து இருக்கின்ற இலக்கியமே போற்றுதற்குரியது. சிவப்பிரகாசரின் 'நன்னெறி' நீதி நூலில் இந்த இரு பண்புகளும் இணைந்தே காணப்படுகின்றன.

நாடகப்பாங்கு என்பது ஆசிரியரின் கைவந்த கலை. மாதரை அழைத்து முன்னிறுத்திச் சொல்வது போலத் தம் அறிவுரைகளை சமுதாயத்துக்குக் கூறுகின்றார். நயமாக அழைத்து, கனிவாகப் பேசி கூற வேண்டியதைக் கூறுகின்ற அமைப்பு முறை அவர் கவிதைக்கு உயிரோட்டமளிக்கின்றது.

மானிட வாழ்க்கையைச் செப்பனிடுவதும் சீராக்குவதும் கல்வி. கல்வி என்பது ஒளி. அறியாமை இருளை அகற்றும் அறிவொளி. 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்பது வள்ளுவர் வாக்கு. சிவப்பிரகாச சுவாமிகள் கல்வியினால் ஒரு மனிதன் எந்த அளவிற்கு உயர்ந்து விளங்குவான் என்பதை மிக அழகாக சொல்லுகின்றார்.

சூரியனுடைய ஒளியோடு கூடிக், காண்கின்ற கருமணி ஒளியானது, கண்ணின் அளவாக அடங்கி நில்லாமல், ஆகாயத்தின் அளவாக உயர்ந்து நிற்கும், அதுபோல ஒருவன் தோற்றத்தில் சிறுமையாக இருப்பினும், கல்வி யினால் உயர்ந்து விளங்குவான் என்று கல்வியின் பெருமையை கீழ்க்கண்ட கவிதையினால் உணர்த்துகிறார்.

''உடலின் சிறுமை கண் டொண்புலவர் கல்விக்
கடலின் பெருமை கடவார் - மடவரால்
கண்ணளவாய் நின்றதோ காணுங்கதிரொளிதான்
விண்ணளவா யிற்றோ விளம்பு''.

ஒருவர் கல்வியில் எவ்வளவு சிறந்து விளங்கினாலும் தான் கல்லாதவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்தால் ''கற்றது கைமண்ணளவு, கல்லாதது உலகளவு'' என்ற உண்மை விளங்கும்.

இதனை உணராதவர்கள், நாம் தான் கல்வியில் உயர்ந்து விளங்கு கின்றோம். என்றெண்ணி செருக்குடன் திகழ்வர். கற்றவர்க்கு இவ்வாறான செருக்குக் கூடாது. இந்த செருக்கு அவர்களை அழித்து விடும் என எச்சரிக்கின்றார்.

''கடலே யனையம்யாங் கல்வியா லென்னும்
அடலே றனயை செருக்கு காழ்த்தி - விடலே
முனிக்கரசு கையில் முகந்து முழங்கும்
பனிக்கடலும் உண்ணப் படும்''.

என்ற வெண்பா வழி இவ்வுண்மை அறியக் கிடக்கின்றது. இந்த உண்மையை மேலும் ஒரு நிகழ்வு மூலமும் தெளிவுபடுத்துகின்ற மாண்பு போற்றுதற்குரியது. அதாவது பரந்து விரிந்து கிடக்கின்ற குளிர்ச்சி பொருந்திய கடலும் முனிவர்களுக்குத் தலைவராகிய அகத்திய முனிவர் கையால் முகந்து உண்ணப்படுகின்றது. எனவே கல்விச் செருக்கு அறவே கூடாது என வலியுறுத்திக் கூறுகின்றார்.

''தோன்றா தோற்றித் துறைபல முடிப்பினும்
தான்றற் புகழ்தல் தகுதி யன்றே''

என்ற நன்னூற் நூற்பாவும் இங்கு நினைவு கூரத்தக்கது.

மனிதன் அறம் செய்வதற்குக் கூட ஒரு தகுதி வேண்டும். அந்தத் தகுதி என்னவென்றால் 'பன்னும் பனுவல் பயன்தேர் அறிவு' என்கிறார். அதாவது சொல்லப்படுகின்ற நூல்களினது பொருளை அறியும் விவேக மில்லாதவர் செய்யும் தருமங்கள் கூட உறுதி இல்லாதனவே ஆகும். எனவே நிலையான தருமங்களை ஒருவன் செய்வதற்கும் கல்வி அறிவு இன்றியமையாததாகின்ற மாண்பினை காண முடிகின்றது.

''கல்லா தவரும் நனிநல்லர்; கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின்''

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க எழுத்தறிவிலாரின் கல்விப் பெருக்கம் எழுத்தறிவுடையாரின் முன்னிலையில் இல்லாமல் போய்விடும். இங்கு

எழுத்தறிவு என்று குறிப்பிடப்பட்டது இலக்கண அறிவினை எனக் கொள்க.

இனி கல்வி அறிவுடையோர் பெரும்பழிக்கு அஞ்சுவர் என்றும் கல்வி அறிவில்லாதவர் பழிக்கு அஞ்சமாட்டார் என்பதும் அவரது நீதிநெறிக் கருத்து. இவ்வுண்மையினை ஒரு அழகிய உவமை மூலமாக தெளிய வைக்கின்ற அழகில் கவித்துவம் மிளிர்கின்றது.

அழகிய தோற்றத்தை உடையதாக இருந்தாலும் குருட்டுக் கண்கள் இருட்டைக் கண்டு அஞ்சுமோ? என்பது அந்த வெண்பாவில் அடங்கிய வினா? இல்லை என்பது விடை.

''அஞ்சுவது அஞ்சல் அறிவுடமை அஞ்சுவது
அஞ்சாமை அறிவிலார் தொழில்''

என்ற வள்ளுவர் வாக்கு இங்கு ஒத்து நோக்கற்பாவது.

மனிதனிடம் இருக்கவேண்டிய அடிப்படைப் பண்புகளில் ஒன்று ஈகை.

''உண்டாலம்ம இவ்வுலகம்
இந்திரர் அமிழ்தம் இனயவதாயினும்
இனிதெனத் தமியர் உண்டலுமிவரே''

என்ற கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதியின் பாடலுக்கேற்ப ஈதல் இசைபட வாழ்தல் என்பது வாழ்வியல் தத்துவம்.

இல்லையென வந்தவர்க்கு இல்லை என்னாது தரவேண்டும் என்பது மரபு. இவ்வுண்மையைச் சிவப்பிரகாசர் ''ஈயேன் என்று உரைப்பதை பெரியோர் இழிந்ததாகக் கருதினர். எனவே தம்மிடம் உள்ள பொருளின் அளவிற்கேனும் இரந்தவர்க்கு ஈகை செய்பவர் என்ற கருத்தினை குறிப்பிடுகின்றார்.

''பெருக்க மொடு தருக்கம் பெற்ற பொருட் கேற்ப
விரும்ப மொடு கொடுப்பர் மேலோர்.''

என்று கூறிச் செல்கின்றார்.

இவ்வாறு ஈகையில் சிறந்து விளங்கினாலும் அதில் ஒரு நெறி முறையையும் பின்பற்றினர். அதுதான் 'பாத்திரமறிந்து பிச்சையிடு' என்பது. இல்லையென்று இரந்தாலும் தகுதி வாய்ந்தவர்க்கே ஈய வேண்டுமென்பது அவரது வேண்டுகோள்.

'தக்கார்க்கே ஈவர் தகார்க்களி பாரில்லென்று
மிக்கார்க் குதவார் விழுமியோர் - எக்காலும்

நெல்லுக் கிறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி
புல்லுக் கிறைப்பரோ போய்.

பயன்தரக் கூடிய நெல்லுக்கிறைக்க வேண்டிய நீரை யாராவது பயன் தராத புல்லுக்கு இறைப்பரோ என கேட்கும் பாணியில் தாம் சொல்ல வந்த கருத்தினை பசுமரத்தாணி போல மனதில் பதியவைக்கும் மாண்பு சிவப்பிரகாசரின் தனிச் சிறப்பாகும்.

''ஒன்றே செய்க; ஒன்றும் நன்றே செய்க
நன்றும் இன்றே செய்க; இன்றும் இன்னே செய்க''

என்பதற்கிணங்க அறச்செயலை காலந்தாழ்த்தாமல் உடனே செய்ய வேண்டுமென தெளிவுபடுத்துகின்றார். ''நாளை நாளை என்றிருந்தால் நாளை நமதோ அன்றி நமனதோ யார் அறிவார்? அதனால் உயிரைக் கொள்ளும் கொடுங்கூற்றுவன் வருமுன்னர் உடனடியாக அறஞ்செய்க என்று மன்பதைக்கு அறைகூவல் விடுகின்றார்.

''கொள்ளுங் கொடுங்கூற்றங் கொல்வான் குறுகுதன் முன்
உள்ளங் கனிந்தறஞ்செய் துய்கவே - வெள்ளம்
வருதற்கு முன்னர் அணை கோலி வையார்
பெருகுதற்கண் என்செய்வார் பேசு''.

என்பது அவர் நன்னெறி.

சமுதாயத்தில் அங்கமாக அமைந்தது மனித வாழ்வு. மற்றவருடன் உறவாடுதல் என்பது கட்டாயம். எனவே மனிதன் எப்போதும் இன்சொல் சொல்பவனாக இருத்தல் வேண்டும். வன்சொற்கள் தன்னைச் சுற்றியுள்ள உறவுகளை அழித்துவிடும். எனவே இன்சொல்லின் இன்றி யமையாமையை வலியுறுத்த வந்த சிவப்பிரகாசர் ''பொன்னால் செய்யப்பட்ட வளையலை அணிந்த பெண்ணே! என்று அழைத்து கடலானது குளிர்ச்சி பொருந்திய சந்திரனின் வரவினால் மகிழ்ச்சி யடைந்து பொங்கும். வெப்பக் கதிர்களை உடைய சூரியன் வரவினால் பொங்காது. அதுபோல நாம் பேசும் இன்சொல் மற்றவர்க்கு இன்பம் தரும் என்றும் வன்சொல் அவ்வின்பத்தை தராது என்றும் கூறி இன்சொல்லின் இன்றியமையாமையை வலியுறுத்துகின்றார்.

மனிதனின் எதிர்மறை குணங்களில் ஒன்று கோபம். ''கோபம் என்பதற்கு சேர்ந்தாரைக் கொல்லி'' என்று குறள் விளக்கமளிக்கிறது. கோபமானது தன்னைச் சேர்ந்தவர்களை அழித்துவிடும். எனவே சினம் வராமல் காத்துக் கொள்ளவேண்டும்.

''உள்ளம் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளும் குணமே குணமென்க - வெள்ளந்

தடுத்தலரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்தலரிதோ விளம்பு''

வெள்ளப்பெருக்கினை எப்படி கரைகட்டி காக்கவேண்டுமோ அதுபோல கோபத்தையும் காத்தல் வேண்டும். இல்லையென்றால் கட்டுக்கடங்காத வெள்ளம் அனைத்தையும் அழித்து விடுதல் போல மனிதனின் கோபமும் தன்னைச் சுற்றியிருக்கின்ற அனைத்தையும் அழித்துவிடும் என்று காரண காரியத்தோடு மனிதனுக்கு கோபம் கூடவே கூடாது என்று சிவப்பிரகாசர் தெளிவாகக் கூறுகின்றார்.

''தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்''

என்ற வள்ளுவர் வாக்கும் இங்கு ஒத்து நோக்கற்குரியதாகும்.

மனித உறவில் ஒன்று நட்பு. நட்பினை பற்றி கூற வந்த சிவப்பிரகாசர் நல்ல அறிவில்லாதவர்களின் தீய நட்பு தீங்கு விளைவிக்கும் என்பதில் ஐயப்பாடு இல்லை என்று உறுதிபடக் கூறுகின்றார். மலரானது மலர்ந்த அன்று மிக்க மணமுடையதாக இருந்தாலும் உடனே வாடிவிடும். அதுபோல தீயவர் நட்பு முதலில் மகிழ்வைத் தந்தாலும் பின்னர் பெரிதும் தீமை விளைவிக்கும் என்பது அவர் கருத்து.

''கற்றறியார் செய்யுங் கடுநட்புந் தாங்கூடி
உற்றுழியுந் தீமை நிகழ் வுள்ளதே - பொற்றொடீ
சென்று படர்ந்த செழுங்கொடிமென் பூ மலர்ந்த
அன்றே மணமுடையதாம்.

என்ற வெண்பா மூலம் இக்கருத்தினை விளக்குகின்றார்.

வள்ளுவரும் ஒரு மனிதன் தீ நட்பினை விலக்குவதே ஊதியமாகும் என்கிறார்.

''ஊதியம் என்பது ஒருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல்''

சாதாரண நிகழ்வுகளை சிந்தனையைத் தூண்டும் பாடுபொருளாக ஆக்கி அதன்வழி தம் கருத்துக்களை மக்கள் மனதில் பதிய வைக்கும் திறன் வியத்தற்குரியது. உடம்பில் ஏதேனும் ஒரு பகுதியில் வலி ஏற்பட்டால் அதனை தாங்க முடியாது அழுவது கண்களே. இது ஒரு சாதாரண நிகழ்ச்சி. இந்நிகழ்ச்சி வழியாக ஒரு பெரிய உண்மையை வெளிப்படுத்துகின்றார். பெரியவர் தன்னுடைய நோய் போல பிறருடைய நோயையும் கண்டு தீயிலிட்ட மெழுகு போல உருகுவார்களாம்.

''பெரியவர்தந் நோய் போற்'' பிறர்நோய் கண்டுள்ளம்
எரியின் இழுதாவர் என்க - தெரியிழாய்

மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண்''

அவரது உவமை அழகுக்கு மற்றுமோர் எடுத்துக் காட்டாய் அமைவது.

பேரறிஞர் தாக்கும் பிறர் துயரந் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார் - நேரிழாய்!
மெய் சென்று தாக்கும் வியன்கோல் அடிதன்மேற்
கைசென்று தாங்குங் கடிது''

என்ற பாடலாகும்.

நம்முடைய உடம்பின் மீது யாரோ கோல் கொண்டு அடிக்க வந்தால் நம்முடைய கை உடனே ஓடிச் சென்று அந்த அடியினைத் தடுக்கும் உடம்பின் மீது அடி படாமல் காத்துக் கொள்ளும். அதுபோல பேரறிஞர்கள் பிறர் துயரம் கண்டால் தம் துன்பம்போல் நினைத்து ஓடிச் சென்று உதவுவார் என்பது விளக்கம்.

இவ்வாறாக நன்னெறி வாயிலாக அரிய பெரிய அறக் கருத்துக் களை மானிடம் மேன்மையுற அருளிச் செய்துள்ளார் சிவப்பிரகாசர் சுவாமிகள். அவர் அருளிய நன்னெறியாம் பொன்னெறி பற்றி உய்வோமாக.

49. சோணசைலமாலையில் இலக்கிய நயங்கள்

ஆ. செந்தாமரைக்கண்ணி, புதுக்கோட்டை.

சிவப்பிரகாசர் காஞ்சிமாநகரில் வீரசைவர் மரபில் பிறந்தவர். இவர் வெள்ளியம்பல சுவாமிகளின் மாணவர். செந்தமிழ்ச்சுவைக் கனிகளை ஈந்தவர். இவரின் கவிப்பெருக்கைக் கண்டு வியக்காத புலவர்களே இல்லை எனலாம். இவர் ''கற்பனைக் களஞ்சியம்'' என்று புலவர்களால் அழைக்கப் பெறுகிறார். இவர்தம் புலமை நயமும், கற்பனைச் சிறப்பும், பக்தியுணர்வும் இன்றளவும் பின்வந்த பெரும்புலவர் களால் போற்றப்பெற்றுவரும் செய்திகளாகும். இவ்வாறு தமிழ் இலக்கிய வரலாற்றில் தமக்கெனத் தனித்ததோர் இடத்தினைப் பற்றிக் கொண்டுள்ள சிவப்பிரகாசரின் இலக்கிய நூல்கள் பல. அவற்றில் சோணசைலமாலை என்ற நூலில் இடம்பெறும் இலக்கிய நயங்கள் பற்றி ஈண்டு காண்போம்.

சோணசைலமாலை நூறு பாடல்களைக் கொண்டது. இம்மாலையின் பாடல்கள் முழுவதும் சொற்சுவையும் பொருட்சுவையும் நிறைந்து கற்பவர்கட்கு மிகுந்த இன்பம் பயப்பனவாக விளங்குகின்றன. இந்நூலில் அண்ணாமலையின் சிறப்புகள், பெருமைகள், இயற்கை வளங்கள் போன்றவற்றைக் கற்பனை அழகோடு வருணித்துள்ளார்.

இதில் எதுகை, மோனை, சொல்லாட்சி, கற்பனை, அணி, ஒலி நயம், அடைமொழிகள் போன்றவை எவ்வாறு அமைந்துள்ளன என்பதனைப் பற்றிக் காண்போம்.

எதுகை, மோனை

எதுகை

அடிதோறும், இரண்டாமெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகையாகும்.

காமரை முனிந்த முனிவரர் புகுமெய்க்
கதியிடை புகவிடுத் திடினும்
பாமர னிவனேன் றிருளினுய்ப் பினுரின்
பதமல சன்றிவே றுளதோ
வாமரை பொருந்து முலருள குவட்டு
மகள்போ லாதுரை முலையாந்

தாமரை பொருந்து மானுள்வாழ் சோண
சைலனே கைலைநா யகனே. (சோணசைலமாலை - 81)

என்னும் இப்பாடலில் அடிதோறும் இரண்டாம் எழுத்தாகிய 'மகர' ஒற்று ஒன்றி வந்துள்ளது.

மோனை

அடிதோறும் முதலெழுத்தொன்றி வர தொடுப்பது மோனை எனப்படும்.

நின்னையே நோக்கி விடாதகட் புலனு
நின்னையே நினைக்குநெஞ் சகமும்
நின்னையே துதிக்கு நாவுமென் றருளி
நின்றிரு வடியின் வைத் தருள்வாய்
தன்னையே றினர்க்குச் சகமெலாங் காட்டுந்
தரணியோ டிகலிமே விளர்க்குத்
தன்னையே காட்டு மலையெனுஞ் சோண
சைலனே கைலைநா யகனே (சோணசைலமாலை)

என்னும் இச்செய்யுளில் அடிகள் தோறும் முதல் எழுத்தாகிய 'நகர' மெய் 2 அடிகளிலும் 'தகர' மெய் 2 அடிகளிலும் ஒன்றி வந்துள்ளது.

சொல்லாட்சி

சிவப்பிரகாசர் வளமார்ந்த தமிழ் மொழியினைக் கசடறக் கற்று பல திறங்களும் உடைய பன்மொழியறிஞர். பாடுவது ஒன்றே தம்பணி எனக் கொண்டவர். இத்தகைய ஆழ்ந்த அடிப்படையில், சிறந்த சொல்லாட்சியும் விழுமிய நல்ல நடையும் இவருக்கு இயல்பாக அமைந்துள்ளது. சோணசைமாலையில் வரும் பாடலொன்று, இவரது சொல்லாட்சித் திறத்திற்குச் சிறந்த சான்றாக விளங்குகின்றது.

மரணத் துன்பம் என்பது சிந்தை கலங்கல், இருவிழியும் இருளல், செவிகள் செவிடுபடல், கபம் கட்டுதல் முதலியன. இது போன்ற கொடிய துன்பம் என்னைத் தாக்கும்போது, என் மனம் மகிழ உன் வடிவமாகிய பரிசினை நீ அருள்வாய்.

''சிந்தனை கலங்கி யிணைவிழி யிருண்டு
செவிகளுஞ் செவிடுபட்டைம் மேல்
உந்திட வுயிர்போம் பொழுது நின்வடிவ
முளங் கொளும் பரிசெனக் கருள்வாய்''

மானிடப் பிறப்பு எடுத்தவர்களுக்கு மரண பயம் என்பது இயற்கையான ஒன்று. தனக்கு அந்த பயம் வரும்போது இறைவனது திருவடியை நாடலும் இயல்பானவையே.

''புலனைந்தும் பொறி கலங்கி
நெறிமயங்கி அறவழிந்திட்டு ஐமேலுந்தி''

என்ற தேவாரப் பாடலில் திருநாவுக்கரசர் குறித்துள்ளதும் ஈண்டு நோக்கத்தக்கது.

மனம் திரிந்த நிலை, உறுப்புகள் செயலற்ற நிலை இந்நிலையில் கூட மனிதர்கள் எதைப் பற்றியும் எண்ணமாட்டார்கள். ஆனால் இவர் தன்னுடைய புலன்கள் எல்லாம் கலங்கிய நிலையில் இறுதிநாளில் கூட இறைவனைப் பற்றி நினைக்கும் தன்மை சிறப்புக்குரியது.

ஐம்புலன்களும் மயங்கிய நிலையினை, சிந்தையில் தொடங்கி படிப்படியாக கூறி இறைவனிடம் முடிந்துள்ள தன்மையில் சொல்லாட்சி யினை இவர் பயன்படுத்திய விதம் நன்கு புலனாகும்.

கற்பனை

நம்முடைய அன்றாட வாழ்வின் எளிய நிகழ்ச்சிகளைக் கூடத் தன் கற்பனைத் தூரிகையில், அழியா அழகுக் காட்சிகள் ஆக்கி விடுகின்றான் கவிஞன். எனவே 'கற்பனையின் வெளிப்பாடே கவிதை' என்று போற்றினார் ஷெல்லி என்ற ஆங்கிலக் கவிஞர் எதையும் ஆழ்ந்து நோக்கும் பண்பு சிறந்த அறிவாற்றலுடன் விரித்துரைக்கும் மொழியாற்றல் போன்றவை கற்பனைக்கு இன்றியமையாததாகும். கருவிலேயே புலமைத்திரு உடைய வித்தகரான சிவப்பிரகாசருக்கு இத்தகைய வல்லமை உண்டு.

வெறுங்கற்பனையும் உண்மைக் கற்பனையும்

கற்பனையின் வகைகளான இவை ஒன்றுக்கொன்று தொடர்புடை யனவே. வெறுங்கற்பனையும் உண்மைக் கற்பனையாக முதிர்ச்சி பெறும்.

வெறுங்கற்பனையை, இல்லாததைப் புனைத்து உயர்வு நவிற்சி யாகக் கூறுவது என்று கொண்டால், உண்மைக் கற்பனையை தேவைக் கேற்ப அளவுடன் உயர்வு நவிற்சியோடு அமைவது எனலாம். சோண சைலமாலையில், இவ்விரு கற்பனைகளும் அமைந்துள்ளன. இந்நூலில் 23-வது பாடலில்,

''கழைமொழிக் கொடியேர்க் கேவல்செய் துடலங்
கமருகு மகிழ்தின் மங்குருமல்
விழைவறத் துறந்துன் றிருவடிக்கமலம்
விழைகுநர்க் கேவல்செய் தியனே
மழைமதக் களிநல் யானைமத் தகம்பாய்
வள்ளுகி ரோடு செல் வரிமாத்
தழை சிறைச் சிம்புள் கொண்டெழுஞ்
சைலனே கைலைநா யகனே''.

என்ற பாடலில், மழையென, மதநீரைப் பொழியும் யானையின் மத்தகத்தின் மேல் சிங்கம் பாய்ந்தது. அச்சிந்தனையை யானையோடு சேர்த்து 'சிம்புள்' என்னும் சர்ப்பபறவை தூக்கிக் கொணடு பறந்தது என்பது அக்கற்பனை.

இக்கற்பனையின், அறிவுக்கண் கொண்டு, யானையின் வலிமையையும் சிங்கத்தின் ஆற்றலையும் நினைத்து, இவ்வாறு நடக்குமா என்று சிந்தித்துக் காணும்போது, இக்கற்பனை வெறுங் கற்பனையாகவே அமைந்துள்ளது.

மலைவளத்தைப் பற்றி அமைந்த மற்றொரு பாடலில்,

முத்துமு மரவமணிகளு மெறிந்து
முதிர்தினைப் புனத்தெயின் மடவார்
தத்தைகள் கடியுஞ் சாரலஞ் சோண
சைலனே கைலைநா யகனே (சோண - 29)

அருணை மலைச்சாரலில் தினைப்புனம் காக்கும் மகளிர், தினைகளைக் கவர வரும் கிளிகளை ஒட்டுவதற்கு முத்துக்களையும் பாம்புகளையும் பாம்புகள் உமிழ்ந்த மாணிக்க மணிகளையும் எடுத்து வீசினர் என்று மலைவளத்தை விளக்கும் கற்பனை கூறப்பட்டுள்ளது. இவ்வாறு நிகழ்ந்திருக்குமோ என்ற ஐயம் தோன்றினாலும், செல்வ வளம் நிறைந்த ஒரு நாட்டையே காட்டவிழையும் கவிஞரின் ஒரு சிறந்த உணர்ச்சி இக்கற்பனையில் அடிப்படையாக அமைந்திருப்பதால், இஃது உண்மைக் கற்பனையாக உள்ளது.

அணி

தன் உள்ளத்தில் ஊறிவரும் உணர்ச்சியைக் கற்பனையில் குழைத்துப் பாடலாக வடிக்கும் கவிஞன் அக்கற்பனைக்குத் துணையாக அணிகள் பலவற்றையும் பயன்படுத்துகின்றான். அணிகள், கவிஞனின் தனித் தன்மையைப் புலப்படுத்துவன. காலப்போக்கில் சொல்லாட்சியும், யாப்பு முறைகளும் மாறலாம். ஆனால் புகழுக்குக் காரணமாக அமைவதில் மட்டும் மாற்றம் பெறுவதில்லை. மேலும் சிறந்த கவிஞர்களின் படைப்பினில் இவ்வணிகள் அழியா அழகு பெற்றுத் திகழ்கின்றன என்றால் அது மிகையாகாது.

கற்பனை நலம் சான்ற கவிஞராகிய சிவப்பிரகாசர் தம்முடைய சோணசைலமாலை என்ற நூலில் அணிகள் பலவற்றைக் கை யாண்டுள்ளார்.

கவிஞன் தான் கூறவிரும்பும் கருத்துக்களை தன் கற்பனையில் (குறிப்பினில்) ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்றணி ஆகும். சோணசைல மாலையில் வரும் 10-வது பாடல் இவ்வணிக்கு சான்றாகத் திகழ்கின்றது.

அருணை மலைமீது மழைபொழிவும் காட்சியை, வருணன் கடலாகிய குடத்தில், மேகமாகிய சொம்பினால் முகந்து விண் நீராட்டியது போல் விளங்கிற்று என்று இயல்பாகப் பொழியும் மழையினைத் தன் கற்பனை மூலம் ஏற்றிக் கூறுகிறார்.

''வண்புனல் வேந்த னார்கலிக் குடத்து
மணிமுகிற் கலயத்தின் முகந்து
தண்புன லாட்ட ஆடுறும் சோண
சைலனே கயிலை நாயகனே'' (சோணசைலமாலை)

என்ற பாடலில் இவ்வணி அழகுபெற்று நயமுறத் திகழ்கின்றது.

ஒலிநயம்

ஒலிநயமே உரைநடையினின்றும் கவிதையை வேறாகப் பிரிக்கின்றது. ஒலிகள் பாட்டில் ஓர் ஒழுங்குமுறையில் அமையும்போது, பாடல் ஒலிநயம் பெறுகிறது. இவ்வொலி நயமானது படிப்பவர் உள்ளத்தில், பாட்டின் கருத்தைப் பதிய வைக்கும் ஆற்றல் உடையது. தமிழிலும் ஒலிநயம் போற்றப்பட்டுள்ளது என்பதற்கு யாப்பிலக்கண நூல்கள் சான்றாக உள்ளன.

சிவப்பிரகாசரின் சோணசைலமாலையின் ஒவ்வொரு பாடலின் ஈற்றடியும் சோணசைலனே! கயிலை நாயகனே! என்றமைந்து, பக்தி உணர்ச்சியைத் தூண்டுவதாக உள்ளது.

அந்தரி குமரி யஞ்சலி கௌரி
யம்பிளை மனோன்மணி மதங்கி
சுந்தரி யுமையுண் ணாமலை யெனநின்
துணைவியை வாழ்த்துமா றருளாய்
வந்தரி குருதி மருங்கினிற் பாட
வயங்குதும் புருவுநா ரதனுத்
தந்திரி யிழைவாழ் பாடுறுஞ் சோண
சைலனே கயிலைநா யகனே (சோணசைலமாலை - 78)

என்னும் இப்பாடலில் ஒலியின்பம் சுந்தரி, அந்தரி, வந்தரி, தந்திரி என்னும் சொற்களால், நந்திமத்தளம் கொட்ட, நாரதர் யாழிசைக்க, தொம்தொம் என்று கூத்தாடும் தில்லை அம்பலத்தானை நினைவூட்டும் வகையில் விளங்குகின்றது.

அடைமொழிகள் அமைத்தல்

அடைமொழி கொடுத்தமைத்து சிறந்த பொருளைக் கூறுவதில் வல்லவர் சிவப்பிரகாசர் என்பதை, சோணசைலமாலையில் உள்ள,

‘நலம்புரிமனிதர்’, ‘பூமழை’, ‘கழைமொழி’, ‘தழங்குவெள்ளருவி’, ‘மழைமதக்களி’ என்னும் தொடர்கள் அறிவுறுத்துகின்றன.

சிவப்பிரகாசரின் கூரிய அறிவுத்திறனையும் ஆளுமைப் பண்பும் பரந்து பட்டன. இது இவரது இலக்கிய நூல்கள் அனைத்திலும் காணப்படுகின்றன. இவரது எந்தப் பாடலைப் படித்தாலும் அறிவு மாண்பும், பெருமிதமும் விளக்கும் வண்ணம் அமைந்திருக்கும்.

கற்பார் நெஞ்சம், களிக்கும் புதிய கற்பனைகளைப் படைத்த புதுமை விரும்பி சிவப்பிரகாசர் என்றால் அது மிகையாகாது. மேனாட்டுக் கவிஞர் வேர்டஸ்வேர்த் பற்றி, ‘அவர் புதிய பொருளைக் கண்டார் அல்லது பொருள்களைப் புதிய கோணத்தில் கண்டார்’ என்று கூறப் படுவது கற்பனைக் கருவூலமாகிய சிவப்பிரகாசருக்கும் பொருந்துவதாகும்.

சிவப்பிரகாசரின் சோணசைலமாலை எதுகை, மேனி சொல்லாட்சி, அணி, ஒலிநயம் போன்றவற்றுடன் காலப்பேழையின் ஒளி மணி களாய் ஒளிர்கின்றன.

50. திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதி

வெ. செல்வசுப்பிரமணியன், கோவை.

திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதி என்னும் இந்த நூலை இயற்றியவர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் என்பவர். நிரோட்டக யமக அந்தாதி என்றால் நிரோட்டகமும், யமகமும் பாடப் படும் அந்தாதியாகும். நிரோட்டகமாவது இதழ் முயற்சியால் பிறக்கும் மெய்யும், உயிரும், உயிர் மெய்யும் வராமல் பாடப்படுவது. யமகம், அடி முதல் எழுத்தோடு இரண்டெழுத்துக்கள் முதல் பத்தெழுத்துக்கள் வரை முதலடி போலவே நான்கடிகளையும் பாடுவது ஆகும். இங்ஙனம் கொண்டுள்ள இலக்கண வரம்பையே அடிப்படையாகக் கொண்டு திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதி, திருச்செந்தூரில் உள்ள முருகனைப் பற்றிக் கூறுகின்றது. இந்த நூல் முப்பது பாக்களை யுடையது. இந்தப் பிரபந்தத்தின் முதற் செய்யுளாகிய காப்புச்செய்யுள் நீங்கலாக ஏனைய அனைத்தும் நிரோட்டக யமகத்தைக் கொண்டு வருவன. காப்புச்செய்யுள் நிரோட்டகமும் அல்ல. யமகமும் அல்ல, திருக்கு என்னும் செய்யுளமைதி கொண்டதாகும். திருக்காவது அடி முதலெழுத்தை ஒழித்து இரண்டெழுத்து முதல் பன்னிரண்டு எழுத்து வரை முதல் ஒரு அடி போலவே நான்கடிகளும் வருவது எனலாம்.

நிரோட்டக யமக அந்தாதி இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்த இந்நூலில் திருச்செந்தூரின் வளமும், சிவன், திருமால் பெருமை களும், புராணக் கதைகளும், முருகப் பெருமானது தோற்றம், கருணை, அவனை வழிபடுவதால் ஏற்படும் பயன்கள் போன்றவை இடம் பெற்றுள்ள பாங்கினை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திருச்செந்தில் வர்ணனை

செல்வக்குமரன் திருமுருகன் உறைகின்ற ஊராகிய திருச்செந்தூர் சிறந்த நிலவளம், நீர்வளம் ஆகியன பெற்று வளமார் வாழ்க்கை நடத்துகின்ற மக்களைக் கொண்டுள்ளது. வெள்ளை யானையின் மேல் இருக்கின்ற இந்திரன் துதிக்கும் அழகினை யுடையதாகத் திருச்செந்தூர் விளங்குகின்றது என்பதைச் சிவப்பிரகாசர்,

''யானைக் கண் தங்கு அரி சென்று
ஏத்து எழிற் செந்தில்''

என்று குறிப்பிடுகின்றார்.

தினகரனாகிய சூரியனுடைய ஒளியும் குன்றும் படியாகப் பிரகாசிக்கின்ற நகரமாகத் திருச்செந்தூர் விளங்குகின்றது. அத்தகைய நகரையுடையவனாக முருகன் விளங்குகிறான் என்பதை,

''தினகரன் தந்த நனி இலங்கா நின்ற செய்ய நல்செந்
தில் நகரன்''

என்ற பாடலில் விளக்குகிறார்.

நன்மையே உருவமாக உடைய திருச்செந்தூர் மருதநில வளத்தோடு விளங்குகிறது. மருதநில வயல்களில் சுகத்தையுடையனவாகச் சங்குகள் உழுகலப்பை வழி சாலிலே நீர் நிற்கவும், அதன் வழியாக ஊர்ந்து செல்கின்றன. அத்தகு நிலைக்கேற்ற குளிர்ச்சியையுடைய மருதநில வளம் பெற்று விளங்குகின்றது.

''செய் தன்னில் நயத்த நத்து அலம்கார்
அதராய் இயங்கத்தக்க தண்செந்தில்''

மலர் மணம் வீசுகின்ற திருநந்தவனங்கள் நிறைந்திருக்கப் பெற்ற சோலைகள் பலவற்றைத் தன்பாற் கொண்டது திருச்செந்தூர். அங்குள்ள நந்தவனங்களிலே நிறைந்திருக்கின்ற பூக்களின் மணம் காததூரம் சென்று மணம் பரப்பும். அத்தகைய விழுப்பமுடையன.

''காதம் கந்தம் நம்கள் அலர் காக்கண்
ஆர் எழில் தண் செந்தில்''

என அருமையையும், பெருமையையுமுடைய திருச்செந்திலை வர்ணிக்கின்றார்.

திருச்செந்தூரின் கடற்கரையில் நிறைந்த முத்துக்கள் அலைகளால் வீசி எறியப் பெற்றுள்ளன. முத்துக்கள் நிறைந்த திருச்செந்தூர் எங்ஙனம் காட்சியளிக்கிறது என்பதை,

''அறைந்து தேயத் தியங்கின நித்திலம்
தான் எறிசெந்தில்''

என்ற அடிகளால் உணரலாம்.

கடலலைகள் சங்குகளை மதிலின் மேலே மிக ஏற்றுகின்ற அழகையுடைய திருச்செந்தூர் என்பதை,

''தரங்கம் நந்து ஆரல் நனி ஏற்று
எழில் செந்தில்''

என்றும், சங்குகள் அழகையுடைய வயல்களினது கரைகளிலே பொருந்தியதாயிருந்து விளங்கும் திருச்செந்தூர் என்பதை,

''சங்கங்கள் அம்கழனிக் கரைசேர்
செந்தில் தங்கினம்''

என்றும், அழகைப் பொருந்திய வயல்களிலே சங்குகள் ஊர்ந்து சென்று தாமரை மலரிலே பொருந்தியிருந்தனவாம் என்பதை

''எழிற்செய் யில்நந்து இயங்கி இரும் கஞ்சம்
சேர் செந்தில்''

எனப் பாடலில் எடுத்துரைக்கிறார்.

தளிர்களைப் பொருந்திய சந்தன மரங்களின் காடுகளும், பூஞ்சோலைகளும் நிறையப் பெற்ற திருச்செந்தூர் என்பதை,

''தளிர் எழில் சந்தனக் கடம் காநிறை செந்தில்''

என்றும்,

கரும்புகளானவை அன்னங்கள் இருக்கின்ற அலையையுடைய நீரையுடைய வயல்களிலே விளைகின்றன என்பதை,

''இக்கு அனம் தங்கு அலை நீர்ச்
செய்க்கண் ஆம் செந்தில்''

என்றும்,

பெரிய கயல்மீன்களானது தாமரை மலரிலே பாய அதன் மேல் துயில்கின்ற சங்குக் கூட்டங்கள் கீழேயிறங்கப் பெற்ற திருச்செந்தூர் என்பதை,

''தடக்கயல் கஞ்சம் தந்த நத்தின் இனம் கீழ்
இழி செந்தில்''

என்ற அடிகளில் விளக்குகிறார். இவ்வாறு திருச்செந்தூரைப் பற்றிய வர்ணனைகளைச் சிவப்பிரகாசர் பல இடங்களில் காட்டுகின்றார்.

சிவபெருமானது சிறப்புக்கள்

முருகப் பெருமானது மாட்சிமைகளைப் பற்றிக் கூறும் இந்நூலில் சிவபெருமானது சிறப்புகளும் கூறப்படுகின்றன. கருங்கழுத்தையுடையவரும், கைலாச கிரியைப் போன்ற இடப வாகனத்தையுடையவரும், அட்ட திக்குகளும் படைத்த பெருமையுடையவர் சிவனார் என்பதை,

''ஐக்கண்டம் கரியற்கு, அம்கயிலையை
ஏத்தகை ஆணைக்கு, அண்டம்
கரிசேர் எண்டிக்கு ஆக்கினற்கு''

என வரும் பாடலில் கூறுகின்றார். சிவபிரான் செவிகளிலே குண்டலங்களை அணிந்தவரென்றும், உமா தேவியை இடப்பாகத்திலும், விஷ்ணுவை

வலப்பாகத்தில் கொண்டவர் என்றும், தோளில் அரவத்தைத் தரித்தவர் என்றும், சந்திரனைச் சூடியவர் என்றும், அக்கினியையுடையவர் என்றும், உமா தேவிக்கு முடிவில்லாத சாத்திர மார்க்கங்களை உபதேசித்தவரும், எலும்பு மாலையைத் தரித்தவர் என்றும் பல இடங்களில் குறிப்பிடுகின்றார்.

பகீரதன் வேண்டுகோளுக்கு இணங்க கங்கையைத் தம் தலையில் தாங்கினார் என்றும், மார்க்கண்டேயரிடத்திலே துக்கத்தைக் கொடுக்கும் பொருட்டு இயமனை அனுப்பியதையும், சலந்தரன் என்ற அரக்கனை உடல் சோரும்படி கொன்றதையும், விஷ்ணு மூர்த்தியின் புதல்வனாகிய மன்மதனது உடலைக் கொன்றருளியதையும், முதலையினது வயிற்றி னுள்ளே புகுந்த பிராமணப் பிள்ளையினுடைய உடம்பை சுந்தரமூர்த்தி நாயனாருடைய திருப்பதிகத்தின் பொருட்டு அழைத்துக் கொடுத்ததையும், மாமேரு மலையை வில்லாக்கிக் கொண்டதையும், முப்புரங்களை அழித்ததையும், தக்கனது அகங்காரத்தினது வலிமையை அடக்கியதையும் சுந்தரமூர்த்தி நாயனாருடைய மனைவியாகிய பரவையினது வீட்டில் தூதாகச் சென்றதையும் பல்வேறு பாடல்களில் குறிப்பிடுகின்றார்.

திருமாலின் பெருமைகள்

திருமாலைப் பற்றிக் கூறும்போது சாரங்கமென்னும் வில்லையும், சங்கையும் அரிதாகிய சக்கரத்தையும் கையிலே தரித்தவர் விஷ்ணு பெருமான். அவர் மன்மதனுக்குத் தந்தை என்று அழகுறக் காட்டுகின்றார்.

''சாரங்கம் சங்கு அரிதாம் சக்கரம்
கையினால் தாங்கினான்''

சிவபிரானது வலப்பாகத்திலே இருப்பவர் என்றும், தம்முடைய பாத மாகிய தாமரை மலர்களை நீங்காமல், திருப்பாற் கடலிலே நித்திரை செய்யும் அழகுடைய விஷ்ணு மூர்த்தி என்றும் குறிப்பிடுகின்றார்.

''அடிக்கஞ்சங்கள் நீங்காது அலையான்'' என்கிறார். மாவலிச் சக்கரவர்த்தியினிடத்திலே சென்று இப்பூதலத்தை யாசித்த வாமன ரூபத்தையுடைய விஷ்ணுமூர்த்தி என்று கூறி திருமாலின் திருவிளையாடல் களைச் சிறப்பாகக் காட்டுகின்றார்.

முருகப்பெருமானது தோற்றம்

ஆறு முகங்களின் மாட்சி, வேல், ஆபரணம், தார் புரளும் திருமார்பு, வெண்ணீறு புனைந்த திருமேனி, உலகு எங்கும் புகழ் பெற்று விளங்கும் அவன் மாட்சி, அருள் வெள்ளப்பெருக்கு ஆகிய அனைத்தும் பல்வேறு இடங்களிலும் புகழ்ந்து பேசப்படுகின்றன. மயிலைத் தமக்கு வாகனமாக உடையவன் என்றும் குறிப்பிடுகிறார்.

கருணைக் கடலாக உள்ள அவனது சிறப்பு உலகை அஞ்ஞானக் கடலினின்று நீக்கி மெய்ஞ்ஞானக் கடலில் கொண்டு சேர்த்தருளும் அவன் கீர்த்தி நுவலப்படுகிறது. திருமாலுக்கும், பிரமனுக்கும், இந்திரனுக்கும், சூரன் முதலிய அசுரர்களால் உண்டாகும் வருத்தம் நீங்கும் பொருட்டு திருமுருகன் கையில் வேலைத் தாங்கினார் என்பதை,

''கரத்து அரிக் கங்கனம் கட்டு
அரனார் தந்த கந்தர்; அழ
கரத்தர் இக்கு அங்கணம் கண்ட
செய்ச்செந்தில் எம் காங்கெயர் சா
கரத்து அரிக்கு அம் கணங்கட்கு
அயனார்க்கு எழில்காசு அணி சே
கரத்து அரிக்கு அங்கு அணங்கு
அற்றிடத் தாங்கினர் கைச்சத்தியே''

என்ற பாடலில் புலப்படுத்துகிறார் சிவப்பிரகாசர்.

முருகப் பெருமான் தனது தந்தையாராகிய சிவபெருமானுக்கு சைவாகமத்தினது சீலத்தை உணர்த்தியதையும், அகஸ்திய மகா முனிவரை ஆண்டருளியதையும் பாடலில் குறிப்பிடுகின்றார்.

திருமுருகனை வழிபடுவதால் ஏற்படும் பயன்கள்

முருகக் கடவுள் தம்மை மனம் கசிந்து வழிபடுகின்ற அன்பினை யுடையவர்க்கு இன்பத்தைச் செய்வார். துன்பத்தை வெறுத்தொழித்தல் நிச்சயம் என்பதை,

''சரி தம் கை ஆரக் கலன்
தம் தனம் தரித்தார் நர கே
சரி தங்கையார் அக்கர் இடத்தினார்
தந்த தண் செந்தில் நே
சரிதம் கையார் அக்கணத்து இன்னல்
கைத்தல் சரதம், தம் சீர்த்
சரிதம் கைஆரக் கசிந்து
இசைக்கின்ற கையினர்க்கே''

என்ற பாடலில் குறிப்பிடுகின்றார் சிவப்பிரகாசர்.

முருகக் கடவுளை வணங்குவதால் இயமனுக்கு இனி அஞ்ச மாட்டோம் என்கிறார். நாவுக்கரசரும் சிவனை வழிபடுவதால்,

''நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்ப மில்லை

தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடிஇணையே குறுகி னோமே''

என்று பாடுகின்றார் திருநாவுக்கரசர்.

நான் செந்தூர் தலத்தை அடைந்ததனால் எனக்கு முருகப் பெருமான் மோட்சத்தைத் தந்தருளினார் என்பதை சிவப்பிரகாசர்

''தளையின் நந்தி அங்கு இசையக்
கதியீந்தனன் என்றனக்கே''

என்ற பாடலில் விளக்குகிறார்.

சூரியனைப் போன்ற நிறத்தையுடைய பெருமையிற் சிறந்தவராகிய சிவபிரானும், அக்காலத்து யாசித்து அளக்கப்பட்டப் பூமியையுடைய விஷ்ணு மூர்த்தியும், பிரம்ம தேவரும் வணங்கும் சிறப்பினையுடையவர் முருகப் பெருமான் என்று பாக்களில் எடுத்துரைக்கிறார். மனமே! நீ வருந்தாதே! அவர் பெருமை பொருந்திய அரணாயிருக்கின்றார். செந்தாமரை மலர் போலும் அவரது திருவடிகளைத் தாங்கி வணங்கு என்று அறிவுறுத்துகிறார்.

கிரியா சக்தியாக விளங்கும் தெய்வயானை அம்மையுடன் இருக்கும் முருகப் பெருமானது பாதத்தை நினைத்தால் யமனார் வடவா முகாக்கினி சுவாலித்தாற் போலக் கோபித்தற்குத் தக்கவரல்லர் என்பதை,

''அளகம் தகர நலங்கள் தர நின்ற
சத்தியன தாள் எனின் அம்
தகர் அனலம் கனன்றால் எனச்
சீறிடத் தக்கர் என்றே''

என்ற வரிகளில் குறிப்பிடுகிறார்.

முருகப் பெருமான் திருச்செந்தூரைத் தம் உறைவிடமாக்கியதால் உருத்திர மூர்த்தியினுடைய பதத்தையும், பிரமனுடைய பதத்தையும், விஷ்ணுவினது செல்வத்தையும் தந்து காக்கத் தக்கவர் என அறிவிக்கின்றார்.

மனமே! நீ! பல தேசங்கள் தோறும் சஞ்சரித்து அளவில்லாத க்ஷேத்திரங்களிலே போயக் கால்கள் தேயும்படித் தியங்கி அலையாதே. மோட்சத்தை அடைதல் நிச்சயம். பெண்களது மனம் விரும்பும் பொருட்டுத் திரவியங்களை அவர்களுக்குக் கொடுத்துக் கெட்டவனாகிய எனக்கு அழகை யுடைய திருச்செந்தூரைத் தரிசிப்பதற்கும், தம்முடைய அழகிய பாதத்தைத் துதிப்பதற்கும் அருள் செய்தார் முருகன் எனக் கூறுகின்றார்.

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை ஆகிய அனைத்து ஆசைகளையும் துறந்து மனிதன் வாழ வேண்டும். அங்ஙனம் வாழ்ந்தால்தான் மலநீக்கம் பெற இயலும். மலநீக்கம் பெற்று இறைவன் திருவடிப் பேறு கிடைப்பதால் வீடுபேறு கிடைக்கும் என்கிறார்.

''சந்தத் தனத்திகள் தம்திறந்து ஆசை தலத்தின் இச்சை
சந்தத் தனத்தின் நசைதீர் அடியன் தனது இல் இல்சேர்
சந்து அத்தன் அந்தி அதளான் தனய தடக்கயல் கஞ்
சம் தத்த நத்தின் இனம் கீழ் இழி செந்தில் தங்கினற்கே''

என்ற பாடலில் புலப்படுத்துகிறார். இதையே,

''மண்ணாசை, பெண்ணாசை மூன்று நீத்து
மனத்தாசை யறவெறிந்தா னந்த நீர்பாய்
கண்ணாசை சிவபெருமான் காட்சிக் காக்கிக்
கருத்தாசை யவனருட்கே கைம்மா றாக்கி
யுண்ணாசை மருந்தனையார் புகலூர் மன்னும்
உழவாரப் படையாளி யுருகிப் பாடும்
பண்ணாசைத் திருநாவுக் கரையன் பாதம்
பத்திபழுத் தொழுக நெஞ்சிற் பதித்து வாழ்வாம்''

என திருவாப்பனூர்ப் புராணத்தால் அறியலாம்.

காசிக்கு அநேக முறை கால்கள் வருந்தும்படி போனதினாற் பயன் இல்லை. திருச்செந்தில் வீற்றிருக்கும் முருகனை வணங்கினால் பிறவித் தளையை விட்டு நீங்கலாம் என்கிறார் சிவப்பிரகாசர்.

வாழ்நாள் வீணாளாகச் செல்லாது நல்வழியிலே அது செல்ல மனிதன் வீழ்நாள் படாது நன்றாற்ற வேண்டும் என்கிறார். செந்தில் குமரனை வேண்டுகின்ற ஆசிரியர் தீமை நீங்கி நன்மையுடைய நல்லதையே எண்ணிச் செயல்பட இறைவனாகிய முருகனை வேண்டு கின்றார். படைத்துக் கொல்லாதே என மன்றாடுகிறார். என் விருப்ப மனைத்தையும் உன்மேல் வைத்தேன். நம்புகிறேன் என்பதை,

''காதலை யான் நின் தனக்கு
ஆக்கினன் இனிக் காயம் தந்தே
காதல் ஐயான் இன் தனம்
காரணன் அடிக் கஞ்சங்கள்நீங்
காது அலையான் நின்று அகம்
கரைந்து ஏத்து அரன் கண்ணி அராக்
காது அலையாநின்ற சங்கரன்
சேய் செந்தில் காங்கெயனே''

என்ற பாடலில் விளக்குகிறார்.

கூட்டமாகிய காகங்களும், நாய்களும் உண்கின்ற சரீரத்தை நித்தியமென்று நினைத்து யான் அலைந்து இளைத்தேன். எனவே திருச்செந்தூரில் வீற்றிருக்கும் முருகப் பெருமானே உம்மை விருப்பத் தினாலே தியானிக்கும் பொருட்டு இடையூறு வராமல் காத்தருள வேண்டும் என வேண்டுகின்றார். இறுதியாக அந்தாதியில் சரீரம் நீங்கும்படி வருந்துகின்ற இயமன் வருங்காலத்திலே பரமசிவனுடைய காதல் அழகு ஆன குமாரராகிய முருகக் கடவுளினது திருவுருவத்தைத் தியானி சமுத்திரம் ஒலிக்கின்ற திருச்செந்தூரை யுடையவரே என்று சொல்லு. வருந்தாதொழி மனமே என உறுதியாகச் சொல்லும் பாங்கு இன்புறத் தக்கது.

''காயம் கலைய நலிசி அந்தகன்
அணைகாலம் செய்ய
காயம் கலை அதளான் நிலம்
நீர் அழல் காற்று எழில்ஆ
காயம் கலை யனலரி சித்து
ஆயினன் காதல் அழ
காய் அங்கு அலை அதிரும்
செந்திலாய் என்க கன்றல் நெஞ்சே''

என இறுதிப் பாடலில் பாடுகின்றார் சிவப்பிரகாசர்.

மனிதன் மனிதனாக வாழ, உலகில் மனிதன் எதற்காகப் பிறந்தானோ அதைச் செய்து முடித்துச் சீர்த்தி பெற, மனித உள்ளங்கள் அனைத்தும் ஏற்கும் அரிய அறிவுரைகளையும் சிவப்பிரகாச சுவாமிகள் நுவல்கின்றார். மனிதனை மனிதனாக்க சிறந்த நல்லாறுகளைக் காட்டும் ஒரு சிறந்த நூல். இவரது படைப்பு. இறைவனைத் தம் உள்ளத்திலேயே கொண்டு துதிக்கின்ற இம்மாண்புடையோர் தாம் இயற்றிய இப்பக்திப் பனுவலில் அனைத்து வகைச் சுவைகளையும் இடத்திற்கேற்ப பொருத்தியுள்ளார். பல தெய்வங்களைப் பற்றிய வருணனைகள், பல்வேறு கதைக் குறிப்புக்கள், புராணக் கருத்துக்கள் ஆகியவற்றை நாம் இவரது பாக்கள் மூலம் காண்கின்றோம்.

51. மாணிக்க மணி

இரா.வீ. செல்வபெருமாள், புதுவை.

தமிழுலகின் தொன்மையான நன்மை பயக்கும் நெறி சிவனெறி யாகும். சிவலிங்க வழிபாடு மிகவும் தொன்மை வாய்ந்தது. அருவுருவத் திருமேனியை அடிப்படையாகக் கொண்ட சிவவழிபாடு மிகவும் தொன்மையானது என்பதனை மொகஞ்சதாரோ, ஹரப்பா முதலான இடங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்ட புதைபொருட்களால் அறியலாம். இத்தகைய ஒரு விழுமிய முழுமுதலாகிய சிவபெருமானை முதன்மையாகக் கொண்டு அழியா வழிபாடு தனித்தமிழால் செய்துய்ய வழிகாட்டும் சைவ இலக்கியங்கள் பலவாகும். அவற்றுள் மூவர் தேவாரமும், மணிவாசகரின் திருவாசகமும் உயர்தனிச் சிறப்பிடம் பெறுவன என்பது உலகறிந்த உண்மை. இதனை உறுதி செய்கின்ற வகையிலும் அந்நால்வர் பெருமக்களையும் போற்றுகின்ற வகையிலும் நால்வர் நான்மணிமாலை என்னும் ஓர் அற்புத படைப்பினை யாத்துச் சென்றுள்ளார் சிவப்பிரகாசர்.

தமிழ்மொழியின்கண் பல்வேறு காலங்களில் பல்வேறுபட்ட இலக்கியங்கள் தோன்றி வளர்ந்துள்ளன. அவ்விலக்கியங்களைப் பேரிலக்கியம் என்றும் சிற்றிலக்கியம் என்றும் வகுத்தும் தொகுத்தும் பகுத்தும் வரையறை செய்துள்ளனர். சிவப்பிரகாசர் அருளிய நால்வர் நான்மணிமாலை என்னும் இந்நூல் சிற்றிலக்கிய வகையைச் சார்ந்ததாகும்.

நான்மணிமாலை

முத்து, பவளம், மரகதம், மாணிக்கம் என்னும் நான்கு மணிகளால் செய்யப்பெறும் அணிகலனுக்கு உலகியலில் நான்மணிமாலை எனப்பெயர். இலக்கியவுலகில் வெண்பா, ஆசிரியப்பா, கலித்துறை, விருத்தப்பா என்னும் நால்வகை யாப்பு வகைகளால் இயற்றப்பெறும் நாற்பது பாடல்களைக் கொண்ட நூல் நான்மணிமாலை எனப்பட்டது. உலகியலில் நான்மணிகள் அணிவோர்க்குப் பேரழகு தருதல் போல நால்வகை யாப்பில் அமைந்த பாடல்கள் கற்போர்க்கு நல்லறிவும் பேரின்பமும் தரவல்லனவாகும்.

சிவப்பிரகாசர் இயற்றிய நால்வர் நான்மணிமாலையில் மாணிக்க மாலையாகப் பேரொளி தரும் மணிவாசகப் பெருந்தகையின் சிறப்பினை ஆய்வதாக இச்சிறு கட்டுரை அமைகிறது. மேலும் மணிவாசகர் மீதும்

அவர்தம் படைப்பான திருவாசகத்தின் மீதும் தீராக்காதல் கொண்டவர்கள் இலக்கியவுலகில் பலர் இருந்தபோதிலும் அவர்களுள்ளும் தீராக்காதலின் தீவிரப்போக்கு இவர்தம் படைப்புகளில் நிலவுகின்றமையை அறிந்து கொள்ள முடிகிறது.

தெய்வத் தெமிழ் மறைகளைத் திருவாய் மலர்ந்தருளிய சைவ சமயக் குரவர்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய அருளாசிரியர்களைப் பாடிப் பரவுவதாக அமைந்தது நான்மணிமாலை. இந்நான்கு சிவநெறிச் செல்வர்களும் ஆட்கொள்ளப்பெற்ற தன்மை, அவர்தம் படைப்பின் சிறப்பு, அவர்கள் நிகழ்த்திய அற்புதங்கள் ஆகியவற்றைப் போற்றுவதாக அமையும் இந்நூலின்கண் ஒவ்வோரிடத்தும் மணிவாசகப் பெருந்தகையின் சிறப்பு மேலோங்கக் காணலாம்.

ஆட்கொண்ட தன்மை

சிவப்பிரகாசர் திருஞானசம்பந்தரை இறைவன் ஆட்கொண்ட தன்மையைக் கூறுகின்றபோது, சம்பந்தர் நாவால் பாவியற்றிய சிறப்பு உமையம்மையின் மொழிஞானப்பால் உண்டதால் விளைந்தது என்னும் வரலாற்றோடு கூறிச் செல்வர் (நான்மணிமாலை[1]).

திருநாவுக்கரசரை இறைவன் ஆட்கொண்ட தன்மையைக் கூறுகின்ற போது சிவப்பிரகாசர் ஞானசம்பந்தரோடு ஒப்பிட்டுக் கூறுவர். குழந்தையாக இருந்தமையால் திருஞானசம்பந்தருக்கு ஞானப்பால் ஊட்டி இறைவன் ஆட்கொண்டனன். திருநாவுக்கரசர் நன்கு கற்றறிந்த நிலையில் வேறு சமயம் சார்ந்தார், ஆதலால் அவருக்கு உலகவர் அறிய கொடுநோய் தந்து ஆட்கொண்டார். இச்செய்தியை,

“வீட்டிற்கு வாயி லெனுந்தொடை சாத்துசொல் வேந்தபொது”[2]

எனத் தொடங்கும் பாடலில் கூறி சமாதானம் தேட முயன்றுள்ளமை தெரிய வருகிறது.

சுந்தரரைத் திருமண காலத்தில் சிவபெருமான் தடுத்தாட் கொண்டார். சங்கிலி நாச்சியார், பரவை நாச்சியார் ஆகிய இருவரிடத்தும் சுந்தரர் பொருட்டு தூது சென்றார். சுந்தரர் தம் பசிதீர்க்கும் பொருட்டு வீடுகள்தோறும் இரந்து அன்னம் கொடுத்து ஆட்கொண்டார்.[3]

மணிவாசகப் பெருந்தகையை இறைவன் ஆட்கொண்ட தன்மை மேற்கண்ட மூவரை ஆட்கொண்ட தன்மையினும் மேன்மை பெறுவது. இறைவன் தான் ஒரு கடவுள் என்ற நிலையினின்றும் மாறி மதுரை மாநகரில் மணிவாசகருக்காகப் பிட்டுக்கு மண் சுமந்தார். பாண்டிய மன்னனிடத்தில் பிரம்படி பட்டார். நரிகளைப் பரிகளாக மாற்றி

குதிரை வியாபாரியாகப் பாண்டியன் முன் நின்றார். மணிவாசகரின் கல் மனமும் கசிந்துருகும் அமிழ்தமாகிய பாடல்களைக் கேட்டு இன்புறும்பொருட்டே இத்தகைய செயல்களையெல்லாம் செய்தனன் இறைவன் என்பதனை,

''வலம்புரி கிடக்கும் வாதவூ ரன்ப
பாடும் பணிநீ கூடும் பொருட்டு
மதுரைமா நகரிற் குதிரை மாறியும்
விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்தும்
நீற்றெழின் மேனியின் மாற்றடி பட்டு
நின்னைத் தொண்ட னென்னக் கொண்டனன்'' (12)

என்னும் பாடலடிகளின் மூலம் சிவப்பிரகாசர் விளக்கிச் சென்றுள்ளமை யோடு நால்வருள்ளும் மணிவாசகப் பெருந்தகையைத் தொண்டனாக்கிக் கொள்ளும்பொருட்டு இறைவன் தன்னைத் தொண்டனாக்கிக் கொண்டமையைத் தெளிவுப் படுத்தியுள்ளார்.

மேலும் சிவபெருமானுக்கு அருந்தொண்டாற்றி நற்பேறு பெற்ற நாயன்மார்கள் பலருள்ளும் பார் போற்றும் சிறப்பினையும், நற்பேற்றினையும் பெறுபவர் மணிவாசகர் என்பதனை பலரோடும் ஒப்பிட்டுச் சென்றுள்ளமையைச் சிவப்பிரகாசர்தம் பாடல் மூலம் அறிந்துக் கொள்ள முடிகிறது.

படைப்பின் சிறப்பு

முடி விளக்கெரித்த கணம்புல்ல நாயனார், துணைவியை அளித்த இயற்பகை நாயனார், அருமகள் நறும்பூங்கருமயிர் உதவிய மானக்கஞ்சாற நாயனார், நென்முளை வாரி இன்னமுதருத்திய இளையான்குடி மாற நாயனார், கோவண நேர்தமை நிறுத்திக் கொடுத்த அமர்நீதி நாயனார், அகப்படு மணிமீன் அரற்கென விடுத்த அதிபத்த நாயனார், பூட்டியரிவாள் ஊட்டியறிந்த அரிவாட்டாய நாயனார், சிலையிடை தலைமோதிய திருக்குறிப்புத் தொண்ட நாயனார், மொய்ம்மலர்க் கோதையைக் கைம்மலர் துணித்த கழற்சிங்க நாயனார், தந்தையைக் தடிந்த சண்டேசுர நாயனார், மைந்தனைக் கொன்ற சிறுத்தொண்ட நாயனார், குற்றம் செய்த சுற்றங் களைந்த கோட்புலி நாயனார், இளமுலை மாதர் வளமை துறந்த திருநீலகண்ட நாயனார் போன்ற பலரும் தம்மால் இயன்றதும் உலகியலில் இயலாததுமான செயல்களைச் செய்து சிவபெருமானின் தொண்டராகியபோது, இறைவனின் இறை உள்ளமே விரும்பி தன்னைத் தொண்டனாக்கிக் கொண்ட பெருமை மணிவாசகரைச் சாரும் என்பதனை,

''முடிவிளக் கெரித்தும் கடிமலர்க் கோதையைச்
சுரிகுழற் கருங்கட் டுணைவியை யளித்து

மருமக ணறும்பூங் கருமயி ருதவியு
நென்முனை வாரி இன்னமு தருத்தியுங்
கோவண நேர்தனை நிறுத்துக் கொடுத்து
மகப்படு மணிமீ னாற்கென விடுத்தும்
பூட்டி யரிவா ளூட்டி யரிந்துந்
தலையுடை யொலிக்குஞ் சிலையிடை மோதியும்
மொய்ம்மலர்க் கோதை கைம்மலர் துணித்துந்
தந்தையைத் தடிந்து மைந்தனைக் கொன்றுங்
குற்றஞ் செய்த சுற்றங் களைந்தும்
பூக்கொளு மாதின் மூக்கினை யரிந்து
மிளமுலை மாதர் வளமை துறந்தும்
பண்டைநா ளொருசிலர் தொண்ட ராயினர்'' (12)

என்ற பாடலின்வழி மணிவாசகரின் சிறப்பு மேலோங்கக் காணலாம்.

வேதத்தினும் உயர்ந்தது திருவாசகமே

உலக இயக்கத்திற்கு மூலகாரணமாக விளங்கும் சிவபெருமானால் அருளிச் செய்யப்பட்ட வேதத்தினும் மேன்மை உடையது மணிவாசகப் பெருமானால் பாடப்பெற்ற திருவாசகம் என்பதை,

''விளங்கிழை பகிர்ந்த மெய்யுடைமுக்கட்
காரணனுரை யெனு மாரண மொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூ ரண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்த தென்கு வீராயின்
திருவாசகமிங் கொருகா லோதிற்
கருங்கண் மனமுங் கரைந்துக் கண்கள்
தொடு மணற்கேணியிற் சுரந்து நீர்பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர் விதிர்ப் பெய்தி
அன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே'' (4)

என்ற பாடல் மேற்கண்ட கருத்திற்கு அரண் செய்தல் காணலாம்.

கங்கையாற்றைத் தலையில் கொண்டு கருணைக் கடலாக விளங்கும் சிவம் என்னும் கடலில் மணிவாசகர் என்ற மேகமானது படிந்து நீரை முகந்து திருவாசகம் என்னும் பெருமழையாய்ப் பொழிந்தது என்று திருவாசகத்தின் சிறப்பு,

''வலமழு உயரிய நலமலி கங்கை'' (16)

என்று தொடங்கும் பாடலின் மூலம் சிவப்பிரகாசரால் வியந்து போற்றப்படுகின்றன.

சிவபெருமானே திருவாசகப் பாடல்களை எடுத்து எழுதியதாகவும், அவ்வாறு எழுதியமைக்குக் காரணம் அப்பாடல்களிடத்து அவர் கொண்ட பெருவிருப்பமே என்பதை,

''ஆயினும் தன்னை நீ புகழ்ந் துரைத்த
பழுதில் செய்யுள் எழுதினன்'' (24)

என வரும் செய்யுள் அடிகள் இக்கருத்தைச் சுட்டிக் காட்டுகின்றன.

வேதத்தை அந்தணர் மட்டுமே ஓதுவதால் அவ்வேதங்கள் மட்பாண்டத்தை ஒத்தது என்றும், இதனை ஓதினால் விண்ணுலக இன்பம் மட்டுமே விளையும் என்றும்; திருவாசகத்தை ஓதுபவருக்கோ முத்திப் பயன் விளையும் என்றும் சிவப்பிரகாசர் வேதங்களைக் காட்டிலும் திருவாசகமே உயர்ந்தது என்பதை,

''வாசகன் புகன்ற மதுரவாசகம்
யாவரு மோது மியற்கைத் தாதலின்
பொற்கல நிகர்க்கும் பூசுரர் நான்மறை
மட்கல நிகர்க்கு மதுரவாசக
மோதின் முத்தி யுறுபயன்
வேத மோதின் மெய்ப்பய னறமே'' (32)

மேற்கண்ட பாடலின் மூலம் மலர்களில் செந்தாமரை மலர் எவ்வாறு சிறந்ததோ, அதேபோன்று பாடல்களில் சிறந்தது திருவாசகப் பாடல்கள் என மெய்ப்பிக்கின்றார்.

சைவ சமயக் குரவர்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வருடைய படைப்பின் சிறப்பு, ஆட்கொண்ட தன்மை, நிகழ்த்திய அற்புதங்கள் ஆகியவை சிவப் பிரகாசரால் பத்துப் பத்துப் பாடல்களாக எடுத்துக் கூறப்பட்டாலும் அந்நால்வரினும் மணிவாசகப் பெருந்தகையின் சிறப்பு மட்டும் சிவப்பிரகாசரால் உயர்த்திக் காட்டப்பெறுவதற்குக் காரணம் உலகியலார் திருவாசகத்தின் மீது கொண்ட பற்று (அ) மணிவாசகர் மீது சிவப்பிரகாசரின் தனிப்பட்ட விருப்பம் காரணமாக இருக்கலாம் என்பது நான்மணிமாலையின்வழி தெள்ளத்தெளிவாக அறிய வருகிறது.

52. நான்மணிமாலை - கட்டமைப்பு

அ. செல்வராசு, புதுக்கோட்டை.

சிற்றிலக்கிய வளர்ச்சியில் சிவப்பிரகாசரின் பங்கு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட நால்வர் நான்மணிமாலையும் சிற்றிலக்கிய வகையைச் சார்ந்ததே. நான்மணிமாலை எந்தெந்தப் பாக்களைக் கொண்டு பாட வேண்டும் என்று பாட்டியல் நூல்கள் இலக்கணம் கூறுகின்றன. என்றாலும் நால்வர் நான்மணிமாலையின் இலக்கணக் கட்டமைப்பில் சிவப்பிரகாசரின் தனித்தன்மை ஒளிவிடுகின்றது. அதை வெளிக்காட்டுவதே இக்கட்டுரை.

நான்மணிமாலை

இலக்கணத்தின் ஒரு பகுதியான யாப்பிலக்கணம் மற்ற இலக்கணக் கூறுகளைப் போலவே காலந்தோறும் மாற்றம் பெற்று வந்துள்ளது. ஒரு கால கட்டத்தில் இலக்கியப் படைப்பாக்கத்திற்குப் பயன்படுத்தப் பெற்ற 'பா'வகை, அடுத்தொரு காலகட்டத்தில் மாற்றம் பெற்றது. இலக்கிய வகைமையும், பாடு பொருளும் இம்மாற்றத்திற்குக் காரணமாக அமைந்தன எனலாம்.

பக்தி இலக்கியக் காலகட்டத்தில் சிற்றிலக்கியங்கள் வளரத் தொடங்கின. நாயக்கர் காலத்தில் அதிகமான சிற்றிலக்கியங்கள் பாடப்பெற்றன. சிற்றிலக்கியங்களின் எண்ணிக்கை நூலுக்கு நூல் வேறுபடுகின்றன என்றாலும் இலக்கிய வழக்கில் 96 வகையான சிற்றிலக்கியங்கள் குறிப்பிடப் பெறுகின்றன. அவ்வகைகளுள் ஒன்றுதான் நான்மணிமாலை. உரைநடையில் மணிப்பிரவாளம் பயன்படுத்தப் பெற்றது போன்று பா வகைகள் கலந்து படைக்கப்பெறுவது நான்மணிமாலை. இதற்கு இலக்கணம் கூறும் இலக்கண விளக்கப்பாட்டியல்

''வெண்பாக் கலித்துறை விருத்தம் அகவல்
பின்பேசும் அந்தாதியினாற் பதுபெறின்
நான்மணி மாலை யாமென நவில்வர்''

என்று கூறுகிறது. அதாவது வெண்பா, கலித்துறை, விருத்தம், அகவல் என்ற நான்கு பாக்களால் 40 பாடல்களை அந்தாதி முறையில் பாடுவது நான்மணிமாலையாகும். இக்கட்டமைப்பை முத்து, பவளம், மரகதம், மாணிக்கம் இவற்றாலாகிய மாலை போன்றது என்பாரும் உளர். இவ்வகையில் பாடப்பெற்றுள்ள நால்வர் நான்மணிமாலையின் அக, புறக் கட்டமைப்பு இனி விளக்கப் பெறுகிறது.

அகக் கட்டமைப்பு

'காரிகை கற்றுக் கவிபாடுவதைவிட பேரிகைக் கொட்டிப் பிழைப்பது நன்று' என்றொரு பழமொழி வழக்கில் உண்டு. அந்த அளவிற்குக் காரிகை கற்பது கடினமானது என்று கூறுவர். ஆனால் யாப்பு என்பது ஓசையை உயிர்நாடியாகக் கொண்டது (பொற்கோ, 1995, 17) என்பதை உணர்ந்து கொண்டால் காரிகையை விளங்கிக் கொள்வதும் எளிதாகும். ஓசையின் வேறுபாட்டை இனங்கண்டு கொள்வோர் யாப்பையும் எளிமையாகப் புரிந்து கொள்வோராவர். சிவப்பிரகாசர் பயன்படுத்தியிருக்கும் ஓசையடிப்படையிலான பா அமைப்பு முறையையே அகக் கட்டமைப்பு எனக் கொள்ளலாம்.

சிவப்பிரகாசர் நான்மணிமாலைக்குப் பாட்டியல் இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும் பா அமைப்பு முறையில் தன்னுடைய தனித்திறனை வெளிப்படுத்தியுள்ளார். பாடுபொருளாக - பாட்டுடைத் தலைவர்களாக நால்வரைத் தேர்ந்தெடுத்ததும், அந்நால்வருக்கும் ஓசை அடிப்படையில் பாக்களை அமைத்ததும் புதுமையாகும். அதற்குக் காரணமாக அமைந்தது சமயக் குரவர்களின் வாழ்க்கையாகும். நால்வரும் சிவனடியார்கள் என்றாலும் நால்வரின் வாழ்க்கையும் ஒரே மாதிரியானது அன்று. அவர்களின் வாழ்க்கை வேறுபாட்டின் அடிப்படை யிலேயே சிவப்பிரகாசர் 'பா' வகைகளைத் தேர்ந்தெடுத்துள்ளார்.

செப்பலோசை

அடியார்களுள் இளம் வயதுடையவர் ஞானசம்பந்தர். என்றாலும் அவரை முதலாவதாக வைத்துப் பேசுவது தமிழ் இலக்கிய மரபு. அம்மரபு அடிப்படையில் ஞானசம்பந்தரை முதலாவதாகப் பாடியுள்ளார் சிவப்பிரகாசர். ஞானசம்பந்தர் வாழ்வில் நடந்த நிகழ்ச்சிகள் நேரிசை வெண்பாவில் பாடப் பெற்றுள்ளது. வெண்பாவிற்குரிய ஓசை செப்பலோசையாகும். இதற்கு விளக்கம் தரும் இளம்பூரணர், 'செப்புதலாகிய வாக்கியம் போன்ற ஓசையினை உடையதாக வரும்' என்று குறிப்பிடு கின்றார். 'ஒரு பொருண்மையினைக் கட்டுரைக்குங்கால் எழுந்த ஓசை செப்பலோசை' என்பார் பேராசிரியர். 'செப்புதல்' என்பதற்குச் சொல்லுதல், கூறுதல் என்ற அகராதிப் பொருளும் உள்ளன. அதற்கு ஏற்ப ஞானசம்பந்தர் வாழ்வில் நடந்த நிகழ்ச்சிகளைக் கட்டுரைப்பதற்குச் செப்பலோசையை உடைய வெண்பாவைத் தேர்ந்தெடுத்துள்ளார் சிவப்பிரகாசர். இளமையில் இறைவனைப் பார்த்துப் பாடத் தொடங்கியது முதல் திருமணக் கோலத்தோடு இறைவனடியை அடையும் வரை அவருடைய வாழ்க்கையில் பல அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன. அவற்றை எடுத்தியம்பு வதற்குச் செப்பலோசை ஏற்றதாக அமைந்துள்ளது.

''இலைபடர்ந்த பொய்கை யிடத்தழுதல்கண்டு
முலை சுரந்த வன்னையோ முன்னின் னிலைவிளம்பக்
கொங்கை சுரந்தவருட் கோமகளோ சம்பந்தா
இங்குயர்ந்தா ளார்சொல் லெனக்கு''

என்பது ஒரு பாடல்.

வெண்பாவிற்குரிய ஓசை செப்பலோசை என்றாலும் பிற்கால யாப்பிலக்கண நூலார் அவ்வோசையை மூன்றாகக் கூறியுள்ளனர். செப்பல், வெண்கூ, அகவல் என்பன அம்மூன்று. தொல்காப்பியர் இவ்வாறு பாகுபடுத்தவில்லை என்பதும் இங்குச் சுட்டத்தக்கது.

துள்ளலோசை

ஞானசம்பந்தருக்கு அடுத்த நிலையில் நாவுக்கரசர் பாடப் பெற்றுள்ளார். இவருக்குப் பயன்படுத்தப் பெற்றிருக்கும் பா கட்டளைக் கலித்துறை யாகும். கலிப்பாவிற்குரிய ஓசை துள்ளலோசை. 'துள்ளுதலாவது ஒழுகுநடைத் தன்றி இடையிடையுயர்ந்து வருதல்; கன்று துள்ளிற்றென்றாற்போல கொள்க' என்று துள்ளலோசையை விளக்குவார் இளம்பூரணர். கற்றோர் ஏத்தும் கலி எனப் போற்றப்பெறும் கலித்தாகையைப் படிப்போருக்குத் துள்ளலோசையின் தன்மை மிகத் தெளிவாகத் தெரியும்.

நாவுக்கரசருக்குத் துள்ளல் ஓசையையுடைய கலிப்பாவைத் தேர்ந்தெடுத்ததற்கும் அவருடைய வாழ்வியலே காரணம் எனலாம். மற்ற அடியார்களைவிட வயதில் மூத்தவரான நாவுக்கரசர் பெற்ற துன்பங்கள் மிக அதிகம். சைவத்திலிருந்து சமணத்திற்குச் சென்ற அவர் மீண்டும் சைவத்திற்கே வருகிறார். இம்மாற்றத்தை விரும்பாத சமணர்கள் மகேந்திரவர்மப் பல்லவன் ஆதரவில் பல்வேறு இன்னல்களைத் தருகின்றனர். விஷம் வைத்தும், யானையைக் கொண்டும், கடலில் தூக்கி எறிந்தும், சுண்ணாம்பு களவாயில் இட்டும் துன்புறுத்துகின்றனர். இப்படிப்பட்ட ஒவ்வொரு சோதனையிலும் நாவுக்கரசர் மீண்டு வருகிறார். இம்மீட்சியே மனதில் ஒருவரை மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது. நாவுக்கரசர் வரலாற்றைப் படிப்போர் அல்லது கேட்போர் அனைவருக்கும் இவ்வுணர்ச்சி ஏற்படுதல் இயல்பு. அந்த உணர்ச்சியின் காரணமாகவே மகிழ்ச்சியை ஏற்படுத்தும் துள்ளல் ஓசையுடைய களப்பாவைத் தேர்ந் தெடுத்துள்ளார் சிவப்பிரகாசர். இன்றைய திரைப்படங்களிலும் கதாநாயகன் துன்பத்தில் மாட்டிக்கொண்டு மீளும்போது ஏற்படும் ரசிகர்களின் உற்சாகத் திற்கு இதனை ஒப்பிட்டுக் கூறலாம். எனவேதான் சிவப்பிரகாசரின் ஓசைக் கட்டமைப்பு முக்கியத்துவம் பெறுகிறது.

அகவல் ஓசை

சுந்தரரைப் பாடுவதற்கு ஆசிரிய விருத்தத்தையும், மாணிக்கவாசகரைப் பாடுதற்கு நேரிசை ஆசிரியப்பாவையும் பயன்படுத்தியுள்ளார் சிவப்பிரகாசர்.

ஆசிரியப் பாவிற்குரிய ஓசை அகவலோசை என்பதை அனைவரும் அறிவர். அகவல் என்பதற்குக் கூவுதல், அழைத்தல், மயிற்குரல், பாடுதல் என்ற பொருள்களை அகராதி குறிப்பிட்டுள்ளது. மற்ற அடியார்களோடு ஒப்பிடும்பொழுது சுந்தரரும் மாணிக்கவாசகரும் சற்று வேறுபட்டு நிற்பர். நாவுக்கரசர் பெற்ற துன்பங்களைப் போன்று இவ்விருவரும் பெறவில்லை. இருவரையுமே இறைவன் தடுத்தாற்கொண்டார். வாழ்விலும் கூட நிம்மதியைப் பெற்றோர் இவ்விருவருமாவார். எனவேதான் கலிப்பாவைப் போன்ற துள்ளலோசையுமின்றி, வெண்பாவைப்போல செப்பலோசையுமின்றி இவ்விரு நிலையிலும் வேறுபட்ட பாடுதல் போன்ற அகவலோசையை இவ்விருவருக்கும் தேர்ந்தெடுத்துள்ளார் ஆசிரியர்.

யாப்பைப் பொறுத்தவரை ஓசை இன்றியமையா இடத்தைப் பெற்றுள்ளது. ஒருவகையில் ஓசையின் அடிப்படையிலேயே பா வகைகளை இலக்கண நூலார் படைத்திருக்கலாம் எனக் கருதுவதற்கும் இடம் உண்டு. பக்தி இலக்கிய வளர்ச்சிக்கு வேறுபட்டு அமைந்த பா வகையோடு கூடிய ஓசையும் ஒரு காரணமாக அமைந்தது. சிவப்பிரகாசரும் ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரை எப்பாவகையில் வேண்டுமானாலும் பாடலாம் என்றில்லாமல் சிறப்பாக ஓசையின் அடிப்படையில் வேறுபடுத்திப் பாடியது அவரது படைப்பாக்கத் திறனை வெளிக்காட்டுவதாக உள்ளது.

புறக் கட்டமைப்பு

40 பாடல்களை அந்தாதியில் பாட வேண்டும் என்பது நான்மணி மாலைக்குரிய இலக்கணம். இவ்விலக்கணத்தைப் புறக் கட்டமைப்பில் சரியாகப் பின்பற்றியுள்ளார் சிவப்பிரகாசர்.

நேரிசை வெண்பாவில் ஞானசம்பந்தரைப் பாடியுள்ளார் என்பது முன்பே சுட்டப்பெற்றது. வெண்பாவில் வெண்டளை வரவேண்டும் என்பதும், ஈற்றடி முச்சீராய் ஏனைய அடி நாற்சீராய் வரவேண்டும் என்பதும், இரண்டாமடி தனிச்சீர் பெற்றும், ஈற்றடியின் ஈற்றுச் சீர் நாள், மலர், காசு, பிறப்பு எனும் வாய்பாட்டில் ஏதாவது ஒன்றைப் பெற்று வரவேண்டும் என்பதும் வெண்பாவிற்குரிய இலக்கணமாகும். ஞானசம்பந்தருக்குரிய பத்துப் பாடல்களையும் ஆசிரியர் இவ்வெண்பா விலேயே அமைத்துப் பாடியுள்ளார்.

எழுத்தெண்ணி பாடப்பெறுவது கட்டளை அடிகளாகும். இவற்றில் அளவடி, , நெடிலடி, கழிநெடிலடி மூன்றும் கலிப்பாவிற்குரியன. நெடிலடி நான்காய் முதற்சீர் நான்கும் வெண்சீர் வெண்டளையாலோ இயற்சீர் வெண்டளையாலோ ஆக்கப்பெற்று அடிதோறும் இறுதிச்சீர் விளங்காயாக வந்து, நேரசை தொடக்கமாக இருப்பின் எழுத்துக்கள் ஓர் அடிக்குப் பதினாறும், நிரையசை தொடக்கமாக இருப்பின் எழுத்துகள்

ஓர் அடிக்குப் பதினேழும் கட்டளையாக அமைக்கப் பெறுவது கட்டளைக் கலித்துறையாகும். இரட்டை அடியினை உடையதாகவும் அமைதல் உண்டு. அதாவது எண்சீரடியின மடிந்து இரண்டடியாக அமைதலும் உண்டு. சிவப்பிரகாசர் நாவுக்கரசரைப் பாடியுள்ள பாடல்களில் ஒரு பாடலை மட்டும் மடக்கடியயைக் கொண்டவையாகப் பாடியுள்ளார். மற்றவை யாவும் நான்கடி கொண்ட பாடல்கள்.

சிவப்பிரகாசர் சுந்தரரைப் பாடுவதற்கு அறுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், எழுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் ஆகியனவற்றைப் பயன்படுத்திப் பாடல்களைப் பாடியுள்ளார்.

''அந்த அடியின் அயலடி சிந்தடி
வந்தன நேரிசை யாசிரியம்மே''

என்ற யாப்பருங்கல இலக்கணத்தின் அடிப்படையில் மாணிக்கவாசகரை நேரிசை ஆசிரியப்பாவில் பாடியுள்ளார். அடி எண்ணிக்கை வரையறை இன்மையால் சிவப்பிரகாசரின் பாடல்களிலும் ஒவ்வொன்றிற்கும் அடி எண்ணிக்கை மாறுபட்டுள்ளது. ஆனாலும் இலக்கண விதிக்கு ஏற்ப இறுதியடிக்கும் முதலடி மூன்று சீர்களையே பெற்று வந்துள்ளன. மாணிக்கவாசகர் தொடர்பான 12-ஆம் பாடல் 28 அடிகளை உடையது. 16-ஆம் பாடல் 13 அடிகளை உடையது. 28-ஆம் பாடல் 11 அடிகளையும், 32-ஆம் பாடல் 14 அடிகளையும் கொண்டு பாடப் பெற்றுள்ளன.

சிவப்பிரகாசரின் நால்வர் நான்மணிமாலையை நோக்கும்பொழுது அகக் கட்டமைப்பில் ஒவ்வொரு பாவிற்கும் உரிய ஓசையின் அடிப்படையிலேயே ஞானசம்பந்தரை நேரிசை வெண்பாவிலும், நாவுக்கரசரை கட்டளைக் கலித்துறையிலும், சுந்தரரை விருத்தத்திலும், மாணிக்கவாசகரை நேரிசை ஆசிரியப்பாவிலும் பாடியுள்ளார் என்பது தெளிவாகிறது. புறக் கட்டமைப்பு என்கின்ற பொழுது பாட்டியல் இலக்கணத்தை அப்படியே பின்பற்றியுள்ளார். 40 பாடல்களும் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. புறக் கட்டமைப்பைக் காட்டிலும் அகக் கட்டமைப்பில் சிவப்பிரகாசரின் தனித்தன்மை வெளிப்படுவதைக் காண முடிகிறது.

துணை நின்ற நூல்கள்

நால்வர் நான்மணிமாலை, 1990, சென்னை; பழனியப்பா பிரதர்ஸ்.

தொல்காப்பியம், பொருளதிகாரம், 1986, இளம்பூரணர் உரை, சென்னை; கழகப் பதிப்பு.

கந்தசாமி, சோ.ந., தமிழில் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும், முதற்பாகம், முதற்பகுதி, 1989, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

பொற்கோ, புதிய நோக்கில் தமிழ் யாப்பு, 1995, சென்னை; புதுமை வெளியீடு.

யாப்பருங்கலம் (விருத்தி உரை), 1998 (பதி.) வேணுகோபால் பிள்ளை, சென்னை; உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

யாப்பருங்கலக்காரிகை, 1990 (பதி.) சு. சாமிஐயா, அண்ணாமலைநகர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

53. மயக்கும் மாயை

வே. செல்லாத்தாள், பேரூர்.

ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களும் ஆன்மாவைப் பிணித்து நிற்பவை. இவற்றை ''மும்மலக் கொத்து'' என்பார் வாகீச முனிவர். இவற்றைத் ''தளை'' எனவும் குறிப்பர்.

பதி, பசு, பாசம் இவை முறையே வேதனை தவிரும் பொருள், வேதனைப் படும் பொருள், வேதனை தரும் பொருள் என அமையும். இம் மூன்றனுள் பதியையும் பசுவையும் இயக்கும் தன்மை இயங்கும் தன்மை என்ற நிலையில் இணைந்து அதற்குக் காரணமாய் அமைவது பாசம். பாசங்களுள் ஆணவம் ஆன்மாவின் அறிவை மறைப்பது. இன்ன அனுபவம் என்பதைத் தெரியச் செய்யாத அறியாமை உடையது. அதிலிருந்து ஆன்மாவை விடுபடச் செய்வன கன்மமும் மாயையு மாகும். இந்த இரண்டுமே வேதனை அனுபவத்தை வெளிப்படுத்துவன வாகும். இம்மூன்றனுள் 'ஆணவம்' இயற்கையாக இருப்பது. அதற்காகத் தரப்படுவன மாயை, கன்மம் என்று கூறுவார் சிவஞான முனிவர்.

இவற்றை விளக்கும் சாத்திர நூல்கள் ஆணவத்தை 'அநாதிமலம்' என்றும் 'மாயை கன்மங்களை 'ஆகந்துகமலம்' என்றும் கூறுகின்றன.

மாயை - உலகம் தன்பால் வந்து ஒடுங்குதற்கும் தன்னிலிருந்து உற்பத்தியாவதற்கும் காரணமாய் இருப்பதாகும்.

இது சுத்தமாயை அசுத்தமாயை என இரண்டு வகைப்படும். சுத்தமாயையிலிருந்து சுத்த தத்துவங்கள் நால்வகை வாக்கு ஆறு அத்துவாக்கள் முதலியன தோன்றும்.

அசுத்தமாயையிலிருந்து வித்தியா தத்துவங்கள் ஏழும், ஆன்மா தத்துவங்கள் இருபத்து நான்கும் தோன்றும்.

இம்மாயை தான் உலகிற்கு முதற்காரணம் என்பதை,

''காரிய காரணங்கள் முதறுணை நிமித்தங் கண்டாம்
பாரின்மண் டிரிகை பண்ணு மவன்முத றுணைநி மித்தந்
தேரின்மண் மாயை யாகத் திரிகைதன் சத்தி யாக
ஆரியன் குலால னாய்நின் றாக்குவ னகில மெல்லாம்''

என வரும் சிவஞானசித்தியார் பாடலால் உணரலாம்.

மாயை இறைவனின் பரிக்கிரகசத்தியாகும். இது அருள்தன்மை விளைவிக்க வேண்டிய சுத்த நிலையுடையது. எனினும், அனுபவத்தில் ஆன்மாவின் ஆணவச் சேர்க்கையால் மயக்க அனுபவம் தருவதாகும். எனவே, இதனை ''மருள்'' என்பர்.

இந்த 'மருளை' மங்கையாகப் படைத்துப் பிரபுலிங்க லீலையைப் படைத்துள்ளார் சிவப்பிரகாசர். இவர் பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த மிகப்பெரிய புலவர். இவர் எழுதிய நூற்களில் வீரசைவக் கொள்கை களும் சைவ சித்தாந்தக் கருத்துக்களும் நிரம்பி வழிவதோடு, கற்பனை பூத்துக் குலுங்கும். அவ்வகையில் படைக்கப்பட்ட கற்பனைப் பெண்ணே ''மாயை'' ஆவாள்.

பிரபுலிங்க லீலையின் காப்பியத் தலைவன் அல்லமன். இவனை ''மயக்கித் தன்வசப்படுத்துவேன்'' என்ற செருக்குடன், சென்ற தன்மை யிலிருந்து, மாறித் தானே மயங்கிவிடுகிறாள் மாயைப் பெண். அம்மயக்கத்தை விளக்குவதே இக்கட்டுரை.

கதைச் சுருக்கம்

பிரபுலிங்க லீலையில் ''அல்லமதேவன்'' என்னும் பெயர் கொண்ட பரம்பொருளே காப்பிய நாயகன். அவரது வல்லன்மைகளை மயக்கும் மங்கையாக உமையின் ஆணையால் அனுப்பப்பட்ட ''மாயை'' தான் காப்பியத் தலைவி (இது தாமேகுணம்) இவர்களுடன் தேவர்கள், தேவலோக மங்கையர்கள், முனிவர்கள், பூதகணங்கள், விளவல நாட்டரசன் மமகாரன் - அவன் மனைவி மோகினி, மாயையின் தோழியர் சகளை, விலாசி, மதமானி முதலியோரும் படைக்கப்பட்டுள்ளனர்.

உமைக்கும் இறைவனுக்கும் கயிலாய மலை அவையில் நிகழ்ந்த உரையாடலில் அல்லமனின் பெருமையை,

''தொல்லையி லுயர்சுஞ் ஞானி தூய்நிராங்கார னென்போர்
எல்லையில் தவங்கள் செய்ய எமதுமெய் வடிவத் தானே
அல்லம நாம மைந்த னாயினம் அனையான் தன்னை
வில்லுறழ் நுதலாய் காண்டல் மிகவுனக் கரியதென்றான்.

என்றும்,

''வினைதபும் அன்பர் அன்பால் வேண்டிய வடிவ னாகி
அனையவர் விழியிற் றோன்றி அருளுவன் அலமதேவன்''
தனியியல் பியாவ ரானும் சாற்றிடற் கரியது''

என்றும் கூறுகிறார் சிவபெருமான். இதனால் சினமுற்ற உமை, ''மாயை, பொய்ம்மலி செயலில் தப்ப யாராலும் இயலாது எனச் செருக்கி

அல்லமப் பிரபுவை மயக்க ''மாயையை'' அனுப்புகிறாள். மாயை விளவல நாட்டு அரசன் மமகாரனுக்கும் மோகினிக்கும் மகளாகப் பிறந்து வளர்கிறாள்.

மாயையால் அல்லமபிரபுவை மயக்க இயலவில்லை. காம வேட்கையில் துன்புறுகிறாள். இறுதியில் அல்லமபிரபு தோன்றி மாயைக்கும் அல்லமனுக்கும் உள்ள உறவினை மாயையின் தோழி சகளையிடம்,

> ''கால் எழுதல், மாற்றம் உண்டாதல் உணமனம் வருதல், பகல் இரவு என்னும் வேறுபாடு அறிதல் காயமும் உயிரும் கலந்து வாழ்தல், கண்டனம் என உரைத்தல் இவற்றிற்கெல்லாம் காரணம் உயிருக்கு உயிராக விளங்கும் இறைவன் இன்றேல் முடியாது என்றும், காணப்படும் வடிவம் முதலிய உறுப்புகள் மாயையின் தன்மையென்றும், காணப்படாத அருவமாகிய ஆன்மா முதலியன இறைவன் தன்மையென்றும் இறைவன் பிரியின் உடனே அவனுடைய தன்மையாகிய ஆன்மா விலகும் விலகவே சடமாகிய உறுப்புகளால் யாதொரு பயனும் இல்லை''

என்றும் கூறுகிறார்.

இறைமைத் தன்மையான நான் விலகின் 'மாயை' அடையும் துன்பத்திற்கு அளவே இல்லை என்பதே இதன் பொருளாகும்.

மாயை அறிமுகம்

இறைவனோடு எழுந்தருளியிருக்கும் உமாதேவியின் அருகில் முக்குணங்களும் (இராசதம், தாமோகுணம், சத்துவம்) மூன்று பெண்களாக வடிவெடுத்து அணுக்கப் பணி செய்ய அருகில் நிற்கின்றனர். அவர்களுள் தாமதகுணமாது உமையின் திருவருளால் 'அழகையும்' 'மாயை' என்ற பெயரையும் பெற்றுச் செருக்குற்று நிற்கிறாள். இதனைச் சிவப்பிரகாசர்,

> ''வந்த மாதருட் டமோகுண மாதுமை யருளாற்
> சந்த மாயையென் பெயர்கொடு தருக்கி நின்றனளே''

என்கிறார். அழகு செருக்கைத் தருமல்லவா இறைவியின் சூளுரைக்கும் அதனால் வந்த தோல்விக்கும் காரணமானது,

> ''போகபூமியில் வாழும் தேவர்கள் மெய்ஞ்ஞானத்தைப் பெற இயலாது. புண்ணிய பூமியில் மக்களாகப் பிறந்து யோகநெறியில் நின்றவர்களே ஞானத்தைப் பெறமுடியும். அந்த ஞானத்தைத் தருபவன் சுஞ்ஞானி நிராங்காரன் ஆகிய தாய் தந்தையர்க்குப் பிறந்த அல்லமனே. அவனைக் காண் உனக்கு இயலாது. மிகவும் அரிது என்று கூறிய அல்லம தேவனின் தனித்தன்மையாகும்''.

சுஞ்ஞானி - பொருளைப் பொருளாகக் கொள்ளும் ஞானமுடையவன்.

நிராங்காரன் - அல்லதை யானெனக் கோடலைத் தவிர்வான்.

மேலும் அவரது இயல்பை,

''முனிவுறேல் வறிய வுன்றன்
மொழியள வல்லன் மாதே
வினைதபும் அன்பர் அன்பால்
வேண்டிய வடிவ னாகி
அனையவர் விழியிற் றோன்றி
அருளுவன் அலம தேவன்
தனியியல் பியாவ ரானும்
சாற்றிடற் கரிய தென்றான்''

என்று இறைவன் கூறிய மொழிகள் அல்லமனின் அரிய சிறப்பைக் காட்டுகிறது.

மாதவர் மனங்கலக்கிய மாயை

ஒருபிடி இடையுடன் மாதவத்தார் மனங்கலங்க 'மாயை' தோன்றுகிறாள். மாயை தோன்றியதன் அடையாளமாக விளவல நாடெங்கும் ''மன்மதனின்'' போர் தொடங்குகிறது. எங்கும் மலர்க்கணைகள் வீழ்கின்றன. இதனை,

''வாவி யாவும் மதன்பெருந் துணிசெய்
யாவு மாரன் எடுக்குஞ் சிலையிடம்
காவெ லாமவன் காகள சாலைகள்
பூவை மார்மனை போர்க்கள மென்பவே''

என்கிறது பிரபுலிங்க லீலை.

தன் துணையைக் கூடியவர்களுக்கு இன்பமும் பிரிந்தவர்களுக்குத் துன்பமும் தரும் தென்றலையும் மாலைக் காலத்தையும் போன்று மாயையின் தோற்றத்தால் அந்நாட்டில் மகிழ்வுற்றவன் மன்மதனே. மற்றையோர் அனைவரும் காமபானத்திற்கு இலக்காகி வருந்துகின்றனர். இச்செயலைப்,

''பொங்குறும் உவகை நெஞ்சம்
பொறுக்கல னாகி எய்யும்
வெங்கணை மழையும் தூவு
மென்மலர் மழையும் ஒன்றா
வெங்கணும் மதன வேள்நின்
றிடையறச் சொரிந்தான் அம்மா''

எனப் புகன்றுள்ளார் சிவப்பிரகாசர்.

மன்மதனின் தாக்குதலால் நிலம், மலையுச்சி, கங்கைக்கரை, வனம் எனச் சென்று புற்றுமேவ, மரம் முளைக்க, ஊண் துறந்து துயில்

துறந்து நீரிலும் நெருப்பிலும் தவம் செய்து கொண்டுள்ள முனிவர்களின் ''மனங்கள்'' பதை பதைத்தன. இது மாயை செய்த முதல் மயக்கம்.

இவ்விடத்தில் சிவப்பிரகாசர் அழகான உவமை ஒன்றைக் கையாண்டுள்ளார். அது, ''விளக்கைக் காண்பான் பயிலிரு ளினைவிடுத்த பரிசென'' என்பதாகும். கலங்கிய முனிவர்கள் உண்மை உணரத் துருவாசகர் கூறுவது இது. அதாவது அல்லம பிரபுவை அறிய உமாதேவி 'மாயையை' அனுப்பியுள்ளார். இவ்விருள் நஞ்சால் ஏற்பட்ட மயக்கம் தீர அல்லம பிரபுவாகிய விளக்கை நினையுங்கள் என்கிறார். அவர்களும் அல்லம பிரபுவை நினைந்து தங்களது மயக்க இருள் நீங்கித் தவத்தைத் தொடர்கிறார்கள். இங்கு மாயை ''இருளாகக்'' காட்டப்பட்டுள்ளாள்.

மாயை வளர்கிறாள். இவ்வளர்ச்சியே கள்ளம் நிறைந்தது என்ற பொருளில் ''கள்ள மாயை தன்னெழில் போல்'' என மொழிந்துள்ளார். இம்மாயை உள்ளத்தை உள்ளவாறு உணர்ந்துள்ள அறிவையும் மயக்குதலினால் இவ்வாறு கூறப்பட்டது எனலாம்.

தன்னை அறியாள்

மாயை பெதும்பைப் பருவத்தை அடைகிறாள்.

''யான்நோக்குங் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்''

என வள்ளுவர் கூறிய காதற்குறிப்பை உணர்பவளாகிறாள். மற்ற மாதர்களைத் தன்னினும் தாழ்ந்தவர்களாகவே கருதுகிறாள். இங்குதான் ''தன்னிகரற்ற தலைமைத் தன்மை'' தோன்றுகிறது. மாயை காப்பியத் தலைவி என்பதைக் காட்டுகிறார் சிவப்பிரகாசர்.

''கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்தொடி கண்ணே உள''

என வள்ளுவர் கூறும் காதல் மடந்தையின் 'நிறைவு' மாயை இடத்தில் தோன்றுகிறது. இதனைச் சிவப்பிரகாசர்,

''இந்தக் கன்னி முழுமதிநோக்
　　கெய்திச் செவ்வாய் வலிவடைந்து
சந்தச் சிங்கம் தனையடுத்த
　　தக்க வரவின் வலிசார்ந்து
முந்தைக் கொடிமீனத்
　　தலைவன் முனிவராகும் பகைவெல்ல
கந்தப் பகழி பலவேழக்
　　கருப்புச் சிலையில் தொடுத்தனனால்''

என மிக அழகாக வடித்துக் காட்டியுள்ளார்.

கரிநுகர் கனியினர்

மாயை பூசை செய்யப் புறப்படுகிறாள். அவளுடன் அவளை ஒத்த மகளிரும் செல்கின்றனர். நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும் உடைய ஆடவர்கள் மாயைப் பெண்ணைப் பார்க்கிறார்கள். அந்தப் பொழுதே ''யானையுண்ட விளாம் பழம்போல்'' ''பெருமையையும் உரனையும் இழந்து'' குறிக்கோளின்றி நிற்கிறார்கள். இந்நிலையினை,

''எரிபுரை விழியரி யேறு போல்பவர்
கரிநுகர் வெள்ளிலங் கனியை ஒத்தனர்''

என்கிறது பிரபுலிங்க லீலை.

''மனை'' மறந்த மாதேவர்

மாயை பூசையை நிறைவேற்றிய பின் நடனமாடுகிறாள். இந் நடனத்தைப் பிரமா முதலான தேவர்கள் பார்க்கின்றனர். பயன் - தங்களது கிழத்திகளை மறந்து, செயல் மறந்து நிற்கிறார்கள். பிரமா கலைமகளைத் தூ-எனத் துப்பிவிட்டான். திருமால் திருமகளை 'சீ' எனக் கூறிவிட்டான். இந்திரன் 'சசியை' மறந்தே விட்டான் என்கிறார் சிவப்பிரகாசர். இம்மாற்றம் நிகழ்ந்தது மாயையின் நடனத்தால்.

மயங்கிய மாயை

மாயை நடனமியற்ற அவளது காதலனாய 'அல்லமன்' மத்தளம் முழங்க வருகிறான். அல்லமனைப் பார்த்த மாயை காதல் வேட்கையால் மயங்கி நிற்கிறாள். இதைக் கண்ட தோழியர் அல்லமனைப் பார்த்து,

''மயக்குமென் பதுபோய் மாயை
மயங்கு மென் றிடவிருப்ப
வியக்குநின் றேயம் யாது?''

என்கிறாள். இதன் மூலம் மயக்க வந்த மாயை மயங்கிய தன்மை காட்டப்பட்டுள்ளது.

காதல் குறிப்புக்குப் பின் வேட்கை மீதூற அல்லமனைத் தழுவுகிறாள் மாயை. அங்கு அல்லமன் உருவமற்று நிற்கிறான். மங்கை ஐயுறுகிறாள். இவ்வாறு அல்லமனை மயக்க வந்த மாயை தோல்வியுற்று மயங்கி நிற்கும் நிலை பிரபுலிங்க லீலையில் மிக அழகாக வருணனையுடன் கூறப்பட்டுள்ளது.

54. சீகாளத்திப் புராணம், நக்கீரச் சருக்கம்

தவத்திரு. சொக்கலிங்க சுவாமிகள், தஞ்சாவூர்.

- தருமிக்கே

ஓர்வாழ்க்கை வேண்டி உயர்கிழி கொள்வான்
கொங்குதேர் வாழ்க்கை என்றெடுத்த செய்தியும் - கீரன்
இசையா வகையின் இயம்பினான் என்றே

வசையாடித் தர்க்கித்த வாக்கும் கொண்ட மதுரைமாநகரைத் தலைநகராகக் கொண்டு, வங்கிய சூடாமணி எனும் பாண்டியன், முன்னே, மதுரையைச் சுந்தரபாண்டியனாகி அரசாண்ட தெய்வத்திருமுடிக்குத் தகுதியுடையவனாய்ப் பலவகை மலர்களும் தரும்படியான நந்தவனம் அமைக்கிறதான திருப்பணியிலே ஈடுபட்டு, அந்நறுமலர் நந்தவனத்திலே, ஓர் கொம்பிலே கோங்கரும்பும், செங்கழுநீரும் மலர்ந்தாற்போன்று தன்தேவியோடு, சந்திரகாந்தச் சலவை வசந்த மண்டபத்திலே வேனிற் கோடை போக வீற்றிருக்கும் தருணத்திலே;

தென்றல் காற்றானது, நல்ல திவ்யபரிமளகந்தம் தோன்ற முகத்து முன்னே வீச, அதை முகர்ந்த மாறன், இது பூஞ்சோலை வீசிய நறுமணக் காற்றுமன்று, காற்றுக்கோ வாசம் இன்று என்று ஐயுற்று, தன் ஐயத்தினைத் தன் தேவியிடம் கூறுவான்போன்று அவள் பக்கமே திரும்ப, அம் மணமானது, அவளது கூந்தலினின்றும் வீசக் கண்ட வழுதி, ''இவளது கூந்தலுக்கு இயற்கையோ; அன்றி செயற்கையோ'' என வியந்து, ''என் ஐயத்தைத் தெரிந்து பாடவல்ல புலவருண்டானால், அன்னாருக்கு ஆயிரம் பொன் கொடுப்பேன்'' என்று கூறி முடிவுகட்டிப் பொன்முடிப்புக் கட்டிக் கொடுக்க, அதனை ஏவலாளர் சங்க மண்டபத்திலே தொங்கவிட்டனர்.

இதனை, நம் சிவப்பிரகாச சுவாமிகள், இச்சருக்கத்தின் 49-ஆம் பாடலில்,

''மதித்த காவலன் அதுமனங்கொண்டு தன்மனத்திற்
நதைத்த நுண்பொருள் தரனொரு செய்யுள் செய்புலவர்
இதைக் கொள்கென்று பொன்னாயிர மொருகிழி யியற்றி
அதைப் பொற்சங்க மண்டபத்தின் முன் தூக்கின னன்றே!''

என்று கூறுகின்றார்.

புலவர்கள் யாவரும், தாம் கண்டவாறு பாப்புனைந்து காவலனிடம் கொடுக்க, அவைகள் மன்னன் ஐயத்தைத் தீர்க்குமாறில்லாததால், அப்பொற்கிழி அனுப்பாரின்றித் தொங்கியது.

அதுகாலை, பாண்டி நாட்டிலே மழைவளம் குன்றியது. வற்கடம் சூழ்ந்தது. 'உண்ப தின்பன நனிமிகக் குறைந்தன. சிலர் பிழைத்த அவ்வற் கடத்து உழன்ற, இறையை அருச்சிக்கும் தலைமை பெற்றவன் 'தருமி' என்பான் உடல் தளர்ந்து, இங்கு உயிர்க்கு அரணில்லை. இனி மலிவிலைத்து நாடெய்துவம் எனத் துணிந்தான்.

சொக்கேசப்பெருமான் கோயிலை அடைந்து, திருவடி பணிந்து ''தாயினுமன்புடையாய்! இம்மதுரையிலிருப்பின் இனிச் சாவேன். அதனால் வேற்றூர் சென்று பிழைத்து, இவ்வூர் செழுமையாய பின்பு வருகுவர்'' எனத் தொழுது அழுதான்.

அதுகேட்ட ஆலவாயண்ணல், அழுது அகம் குழைய வேண்டாம். வழுதி, தன்மனதில் எண்ணிய ஐயம் தீர ஓர் பாட்டு தருபவர்க்கு ஆயிரம் பொன் தருவதாகக் கூறியுள்ளான். அப்பாடலை நான் தருகிறேன். அதைப் பாண்டியனிடம் கொடுத்து அதனைப் பெற்றுக்கொள்'' என்று கூறி, ''கொங்குதேர் வாழ்க்கை'' எனத் தொடங்கும் குற்றமற்ற பாடலைத் தந்தார். அதைப் பெற்ற தருமி மன்னனிடம் கொடுக்க மகிழ்ந்த மாறன் ''சங்கத்தவர் பால்போய் இப்பொற்றமிழ் பாட்டிசைப்பாயாக'' என்றான்.

பொய்யடிமை இல்லாத புலவன் எனப்பெயர் பெற்ற நக்கீரன் 'சொற்றபாக்குற்றம்' என்று மறுக்கவே, தருமி கோயிலடைந்து கூறலுற்றான். கேட்டலும், சொக்கேசன் பாட்டியற் புலவனாகிப் பாவலர் தம்பால் போய், ''எம்கோட்டமில் கவிக்குக் குற்றம் கூறியது யார்?'' எனக் கேட்க, நாட்டிய புகழ் நக்கீரன் ''நான்'' எனத் தருக்கிச் சொன்னான்.

பாட்டியற் புலவர், ''குற்றம் யாது'' என, 'நல்லார் கூந்தலுக்கு செயற்கை மணமே யன்றி இயற்கை மணமில்லையே' என்றான் 'மல்லல் விண் மகளிர் கூந்தல் எற்று?'' என்றார். 'அரம்பையர்க்கும் கூந்தல் மணம் இயற்கை இல்லை' என்றான். ''இறைவி என்றுலகமேத்தும் குள்நிறை பயந்த செல்வி கூந்தல் எற்று'' என்றார். அம்மை தனது கூந்தலும் அற்றே'' எனத் தருக்கிச் சொல்ல, கோபமடைந்த சோமசுந்தரன், ஏற்றினான் நெற்றிக்கண்ணும், எரிமருள் சடையுங்காட்ட நக்கீரன், ''கண்வடிவெலாங் காட்டினாலும் சாற்றிய பாக் குற்றம், சடைகொண்டு வெருட்டல் வேண்டாம், தோற்றிலன் இதற்கு என்றான்.

அழிவிலாக் கடவுள் கோபத்துடன், ''எம்முடன் மாறுபட்டு, பூங்கொம்பு போன்ற அம்பிகையின் சூழல்பழித்த செம்மைகொள் அறிவிலாய்! நீ

தீர்ப்பருங்குட்டநோய் கொண்டலையக் கடவாய்'' எனச் சாபமிட்டார். கீரன் மிகப்பயந்து, கழலடி பணிந்து இறைஞ்சி ''கருணையங் கடலே எந்தாய்! இழிபுடை நாயினன்னேன் இலங்கு அறிவிலாது கூறிய பிழை பொறுத்துச் சாபப்பிணி கெட அருள்வாய்'' எனப் பணிந்தான்.

''சென்று நீ கைலை காணில் இக்கொடுநோய் தீரும்'' என மறைந் தருளினார். பாண்டியன் அதிசயித்தான். பொற்குவை தருமி ஏற்றுப் பொலிந்தினிதிருந்தான். பஞ்சம் தீர எங்கும் மழை பொழிந்தது. நாடு செழித்தது. நக்கீரனின் உடலில் தீப்பிணி தீண்டியது. பலப்பல நாடு கடந்து, இந்நோயை ஒழிப்போம் என மனந்துணிந்து நண்பர்களாக உள்ள புலவர்களை விட்டுப்பிரிய மனம் வருந்தினான். அவர்களைத் தனித்தனி விளித்து நோக்கி, ''மடனறு நமரங்காள், இப்பாவியேனை மறவன்மின்'' என்று கூறி, அவர்களைத் தழுவ இயலாது நின்றான்.

மற்ற புலவர்கள், கீரனை நோக்கி, ''ஐயனே! நும்பை இன்றி வாழ இருக்கின்ற நாங்களே பாவம் செய்தவர்கள்'' என்று கூறி, அழுதனர். அவர்களைத் தனித்தனியே தழுவி, ''எனக்காக அழவேண்டாம். பொற்றலின் நட்பினுக்குப் புணர்வொடு பழகல் வேண்டாம். நின்றநல் உணர்ச்சிதான் நிறைக்கும் என்பதனை உணர்ந்தவர்களே! நான் செல்கின்றேன்'' எனக் கூறிப் புறப்பட்டார். புலவர்களின் கண்ணும் சிந்தையும் தொடரச் செல்லும்போது வைகையின் வடகரை கடந்து, ''என்றினி மதுரை காண்பேன். எப்பகல் சவுந்தரேசன்தன் திருவடிகள் காண்பேன். அங்கயற் கண்ணியை எஞ்ஞான்று காண்பேன். வெற்றிவேல் தருமவேந்தர் வேந்தனை எந்நாள் காண்பேன். சங்கத்து உறவை எப்பொழுது காண்பேன். யாவரும் என்னை மறப்பர் கொல்லோ. சங்கப் புலவர்கள் 47 பேர் என்று உரைப்பார்களோ. இனித் தமிழினிமையை யாவர்க்கு எடுத்திசைப்பேன்'' என்று பலவாறாக எண்ணினான். இதனைச் சிவப்பிரகாசர் சிறப்பாக,

''இனித்தமி ழினிமை யாவர்க் கெடுத்திசைத் திடுபமன்றோ
வெனப் பலபலவு மெண்ணி யினைந்து வெஞ்சுர மிறந்து
புனற்றிரு நாடுபுக்குப் பொருந்தினாப் பெண்ணை நாடு
தனைக் கடந்தந்தண் பாலித் தண்ணடை கண்டு சென்றான்''

என்பார். மேலும், அவர்தம் தரிசனத் தலங்களை ஆசிரியர் கூறும்போது,

''அரவணைச் செல்வன் வாழுமந்தமிழ் நிலத்தினெல்லைத்
திருமலை கண்டு கண்டோர் செறிவினைத் தொடரறுக்கும்
பொருவரை கண்டிறைஞ்சிப் பிறங்குவெள்ளருவிதாழும்
பொருவரு கண்டி மேல கூடப்பொரும்பினை யினிது கண்டான்''

என்கிறார்.

பாம்பணையில் பள்ளிகொண்ட திருமால் எழுந்தருளியிருக்கிற அழகிய தமிழ் நிலத்துக்கு எல்லையாக உள்ள திருப்பதி மலையைக் கண்டார் என்கின்றார். இத்தொடர்,

''வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து''

என்ற தொடரினை நினைவுறுத்துகின்றது. வேங்கடம், தமிழ் நிலத்துக்கு வடக்கு எல்லை என்பது பெறப்பட்டது.

அடுத்ததாக, தரிசித்தவர்களுடைய தீவினைகளை அறுக்கின்ற, வெண்மையான அருவியாறுகள் பாய்கின்ற ஒப்பற்ற ஏமகூடப் பருவத் தினைக் கண்டார் என்கின்றார். ஏமம் எனில் பொன். கூடம் எனில் சிகரம் உச்சி ஆகும். எனவே, ஏமகூடம் என்பது, பொன்சிகரமாகும். அடுத்து,

''அருநெடுங்கடலா நந்தி யடிகள் வந்து அவதரித்து
முணுறு சமண் குறும்பு முருக்குழசைவ மென்னும்
திருநில முழுது மாண்டுசெல்வமோ டினிதிருந்த
பொருவில் கல்யாண மென்னும் பொன்மதி நகரங் கண்டான்''

என்கின்றார்.

கருணைக் கடலாகிய நந்தியடிகள் என்பவர் வந்து அவதரித்து, மாறுபாடு மிக்க சமணர் கூட்டத்தை அழித்து, சைவத்தை நிலைநாட்டி அரசாட்சி செய்த கலியாணபுர நகரைக் கண்டார். இவ்வாறு, சோழநாடு, மகதநாடு, தொண்டை நாடு முதலானவற்றிலுள்ள தலங்களையெல்லாம் தரிசித்து, பருப்பதம் விருபாட்சம், கலியாணபுரம், காசி முதலான தலங் களையும் தரிசித்து, இமய மலையின் நெடுந்தொலைவிலுள்ள, தொண்டர்கள் இண்டை கட்டி வழிபாடு செய்யும் திருக்கேதார நாதரையும் தரிசித்தார்.

அங்கிருந்தும் புறப்பட்டுச் செல்லுங்கால், ஒரு இனிய கடலை ஒத்த தடாகத்தைக் கண்டு, காலையில் நீராடி அதன் கரையில் உள்ள ஓர் ஆலமரத்தடியில் அமர்ந்தார். ஆலமரத்து இலைகள் நீரில் விழுந்தன மீனாகவும், கரையில் விழுந்தன பறவையாகவும் மாறின. அங்கு அமர்ந்து (சிவபூசை) தியானித்திருக்கும்போது, ஒரு இலை பாதி நீரிலும், பாதி நிலத்திலும் விழ, நீரில் விழுந்த பகுதி மீனாகவும், நிலத்தில் விழுந்த பாதி பறவையாகவும் மாறி ஒன்றை ஒன்று இழுத்துக்கொண்டன. இது, இல்லறத்தினும், துறவறத்தினும் இழுக்கும் மனம்போல என்பார் சிவப்பிரகாசர். அப்போது சிவபூசை முதலானவற்றில் வழுவினார் ஆயிரம் பேரை ஒருங்கு உண்ணக் கருதி, தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது பேரை அம்மலையில், ஒரு குகையில், அடைத்து வைத்து ஒருவருக்காகக் காத்திருந்தது ஒரு பூதம். நக்கீரர், தம் தியான நிலையினின்றும் நீங்கிப்

பறவை மீன் இழுப்பதைக் கண்டு வியந்து கொண்டிருந்தார். பூதம் நக்கீரரைத் தூக்கிச்சென்று, குகையில் அடைத்துவிட்டு, நீராடிவந்து அனைவரையும் உண்ண எண்ணிச் சென்றது. செய்தியறிந்த கீரன், முருகனைத் துதித்து, ''உலகம் உவப்ப'' என்றெடுத்துத் 'திருமுருகாற்றுப்படை' பாட, உடன் எழுந்தருளிய முருகப்பெருமான், பூதத்தை வதைத்து ஆயிரம் பேரையும் விடுவித்தார். நக்கீரன் தன் வரலாற்றை முருகப்பெருமானிடம் கூறி, கைலைக்குச் செல்ல வழிகேட்டார். கந்தக்கடவுள், ''சிவபெருமான், இன்ன கைலை என்று சொல்லவில்லை. அதனால், இந்த வாவியில் முழுகினால், பொன்முகலியாற்றில் எழுந்திருப்பாய். அங்கு, ஞானப் பூங்கோதை உடனாய திருக்காளத்திநாதர் எழுந்தருளியுள்ளார். அதுவே, தென்கைலாயம். அவரைப் பணிந்து நோய் நீக்கம் பெறுவாயாக எனக் கூறி மறைந்தார்.

நக்கீரர்,

''முருகனைத் தொழுது சென்று மூழ்கினா னத்தடத்தி
லிருவினைக் குறும்பு சொல்லு மிலங்குதென் கயிலை தோன்றப்
பொருதிரைக் கங்கை நாணும் பொன்முகலியினெழுந்தான்
சுரர்கள் மொய்த் தலர்பூமாரி சொரிந்தனர் விசும்பு போர்ப்ப''

என்று பொன்முகலியாற்றில் எழுந்ததும், தேவர்கள் பூமாரி பொழிந்தனர் என்று கூறுகின்றார்.

இது, முன்பு, அப்பரடிகள் பாதி கைலைமலை சென்றதும் சிவபெருமானால் தடுக்கப்பட்டு அங்குள்ள குளத்தில் முழுகித் திருவையாற்றில் எழுந்து தென் கைலாயக் காட்சி கண்ட வரலாற்றினையும் நினைவு கூர்கின்றது.

மேலும்,

''அருந்தமிழ்ப் புலவன் பொன்னை
ஆற்றிலிட்டொரு குளத்திற்
பொருந்து வித்தவன் பயந்த
புலவனோர் புலவன் தன்னை
திருந்துறக் குளத்தின் மூழ்கச்
செய்தொரு நதியின் வந்து
வினாதொழப் புரிந்த தன்மை
வியந்திடப் பட்டதன்றே''

என்கின்றார்.

அரிய தமிழ்ப் புலவராகிய சுந்தரமூர்த்தி நாயனார் பொன்னை, மணிமுத்தா நதியில் போட்டு, திருவாரூர்க் கமலாலயத்தில் மீண்டும்

பெறச்செய்த சிவபெருமானுடைய புதல்வனாகிய முருகக் கடவுள் ஒப்பற்ற புலவனாகிய நக்கீரனை, ஒரு பொய்கையில் மூழ்கி, பொன்முகலி நதியினின்றும் விரைந்து தோன்றும்படி செய்த விதம் யாவராலும் அதிசயித்துத் துதிக்கப்பட்டது என்கின்றார்.

நக்கீரர் அவ்வாறெழ, நோய் நீக்கம் பெற்றார். பின்னர், ''கைலை பாதி காளத்தி பாதி'' பாடுவதனை நம் சிவப்பிரகாசர்,

''கயிலை வேறு காளத்திவேறென் றெண்ணுங் கருத்திலனாய்க்
கயிலை பாதி காளத்தி பாதியாகக் கலந்துறழ்ந்தும்
மயிலில் கரும்பாமொழிபாகன் மகிழ வெண்பா வந்தாதி
மயிலில் வருவோன் பேரருளால் வந்த புலவன் பாடினான்''

என்கின்றார். சிவன் வேறு முருகன் வேறு என்று எண்ணாது, சிவனே முருகன். முருகனே சிவன் எனத் துணிந்த நக்கீரன் முருகன் வாவியில் மூழ்கச் சொன்னார். அவ்வாறே நக்கீரர், காளத்திநாதரைப் பணிந்து நிறக, குட்டநோய் நீங்கியது. உடன், ''கைலை பாதி காளத்தி பாதி'' எனும் ஒரு வெண்பா வந்தாதியைப் பாடியருளினார். மகிழ்ந்த காளத்தியப்பன், நக்கீரரை நோக்கி ''நீ வேண்டும் வரம் யாது?'' என வினவ, ''இப்பிணி நீக்கியதுபோல எனது ஆணவப் பிணியையும் போக்கவேண்டு''மென்று பணிய அவ்வாறே தந்து தன் திருவடி நிழலிலேயே சேர்த்துக் கொண்டார்.

இவ்வாறு தீதறு கவிவான் செயலுரைத்த செய்தியினை நம் சிவப்பிரகாச சுவாமிகள், தமிழ்த் தேன் நனி சொட்டச் சொட்ட, தொடை, நடை சிறக்க, எளிதின் பொருள் விளங்குமாறு அழகாகத் திருக்காளத்திப் புராணத்தில், நக்கீரச் சருக்கத்தினைப் பாடியருளி யுள்ளார்கள். பலரும் பயின்று இதன் கண்ணுள்ள, அரிய நீதிகளைக் கடைப்பிடித்து வாழ்வார்களாக''

''வாழ்க அவர்தம் திருப்புகழ்''

55. திருவெங்கைக்கோவையில் திருக்குறள்

ஞா. ஞானசிங்காரம், கோவை.

சிவப்பிரகாச அடிகளார் இடைக்காலத்துத் தோன்றிய புலவர் பெருமக்களுள் மிகவும் போற்றத்தக்கவராவர். தமிழ், கன்னடம், தெலுங்கு, வடமொழி ஆகிய மொழிகளில் நல்ல புலமையுடையவர். தமிழ் இலக்கண இலக்கியங்கள், தருக்கம், சோதிடம், வீரசைவ சித்தாந்தம், வேதாந்தம், வடமொழி ஆகமப்பயிற்சி முதலிய துறைகளில் வல்லவர். திருக்குறள், திருத்தொண்டர் புராணம், திருவாசகம் ஆகியவை இவர் விரும்பிக் கற்றுத் தேர்ந்த நூல்களாகும். சிவப்பிரகாசர் திருவள்ளுவரிடம் மிகுந்த ஈடுபாடுடையவர். உலகப் பொதுமறையாகப் போற்றப்படும் திருக்குறள் தமிழ் இலக்கிய நூல்களுள் தனிச்சிறப்பு வாய்ந்தது. அறிவு சான்ற ஆன்றோர் பலரும் விரும்பிக் கற்கும் மாண்புடையது. திருவள்ளுவர் காலத்திற்குப் பின்னர் தோன்றிய புலவர்கள் பலரும் ''முன்னோர் மொழி பொருளேயன்றி அவர் மொழியும் பொன்னேபோற் போற்றுவம்'' என்னும் முறையில் தமது நூல்களில் திருக்குறளையும், திருக்குறள் கருத்துக்களையும் எடுத்தாண்டுள்ளனர். கம்பர் தமது இராமாயண காவியத்தை அழகுபடுத்தத் தமிழ் நூல்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வோர் அகப்பை முகந்து கொண்டதாகக் கூறுவர். இவ்வாறு ஆன்றோர் உரைகளை ஆளுதல் என்பது இன்று நேற்றல்ல தொன்று தொட்டு வரும் மரபாக உள்ளது. திருக்குறளைத் தமது நூல்களில் எடுத்தாண்ட புலவர்களுள் சிவப்பிரகாச அடிகளார் முதன்மையாக வைத்து சொல்லத் தகும் சிறப்புடையவர்.

சிவப்பிரகாசர் திருவள்ளுவரைப் போற்றுதல்

சிவப்பிரகாச அடிகளார் நூல்களில் திருக்குறளின் மணம் யாண்டும் மணக்கக் காணலாம். அடிகள் இயற்றிய திருவெங்கையுலாவின் சிறப்புப் பாயிரமாக உள்ள,

'' - சங்கத்து
போற்றுந் தமிழ்நூல் பொதுக்கடிந்தான் என்றுலகஞ்
சாற்றுஞ் சிவப்பிரகாசன்''

என்ற செய்யுளில் சங்கப் புலவர்களால் போற்றப்பட்ட திருக்குறளாகிய நூலைத் தமக்கே உரியதாகக் கொண்டவர் சிவப்பிரகாசர் என்று

கூறியிருப்பதால் திருக்குறளில் அவர் கொண்ட ஈடுபாடு நன்கு விளங்கும். திருவெங்கைக் கலம்பகத்தில் சிவப்பிரகாசர், ''என்னடிகள், வெண்குறணோ அடியிரண்டும்'' என்று திருவள்ளுவரை 'என்னடிகள்' என்று குறிப்பிடு வதோடு குறள் வெண்பாவின் இரண்டு அடிகளையும் சிவபெருமானுடைய இரண்டு திருவடிகளுக்கு ஒப்புமைப்படுத்துகின்றார். மேலும் தமது பாடல்களில் வள்ளுவனார், பெரியோர், வாய்மையால் சிறப்பவர், அறஞ்சூழ்ந்தோர், கற்றுணர் பழையோர், அறத்தூய்மையுணர்ந்தவர், தெய்வப்புலவர், இணையில் திருவள்ளுவப் பெயர்கொள் எம்மான் என்றும், அவருடைய தமிழ் மறையைச் 'செஞ்சொல்' என்றும் 'நவத்தமிழ் வேதம்' என்றும் கூறுகின்றார்.

''முன்னோர் தொடைப்பொருளை முற்றுங் கரந்துரைத்துப்
பின்னோர் எமதென்னும் பெற்றி போல்'' (நெ.வி.தூது)

அல்லாமல் திருவள்ளுவருடைய கருத்து இஃது என்பதை யாவரும் அறியும்படி திருவள்ளுவர் பெயருடன் தமது நூல்களில் எடுத்தாண்டி ருப்பது அடிகளாரின் பெருந்தன்மையைக் காட்டுகிறது.

சிவப்பிரகாச அடிகளார் இயற்றியருளிய நூல்களுள் நமக்குக் கிடைத்திருப்பவை இருபத்தொன்பதும் அவற்றுள் பதினேழு நூல்களில் திருக்குறளையும் திருக்குறள் கருத்துக்களையும் எடுத்தாண்டுள்ளார். அவற்றுள் அகப்பொருள் நூலாகிய திருவெங்கைக் கோவையில் திருக்குறளும் குறள் கருத்துக்களும் எங்ஙனம் எடுத்தாளப்பட்டுள்ளன என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.

திருவெங்கைக் கோவையில் திருக்குறள்

மாணிக்கவாசகரின் திருக்கோவையாரை அரசகோவை என்றும், அந்நூலை அடிப்படையாகக் கொண்டு சிவப்பிரகாசரால் பாடப்பட்ட அகப்பொருள் நூலாகிய திருவெங்கைக் கோவையை மந்திரிக்கோவை என்றும் தமிழ்ப் புலவர்கள் கூறுவர். திருவெங்கனூரில் எழுந்தருளியுள்ள பழமலை நாதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு நாயகன் நாயகி பாவத்தில் பாடப்பட்ட நூல் திருவெங்கைக் கோவை. இந்நூலின் கண்ணும் திருக்குறள் கருத்துக்கள் பரவலாகக் காணப்படுகின்றன. திருவெங்கைக் கோவை, அகப்பொருள் கூறுகளாகிய களவியல், வரைவியல், கற்பியல் மற்றும் அவற்றிற்குரிய துறைகளையும் கொண்டு விளங்குகின்றது. இப்பாடல்களில் திருவள்ளுவரின் காமத்துப்பால் மட்டுமல்லாமல் அறத்துப்பால், பொருட்பால் இவற்றில் உள்ள குறள் வெண்பாக்களும் எடுத்தாளப்பட்டுள்ளன. அவற்றைக் காணலாம்.

இயற்கை எழில் சூழ்ந்த பொழிலகத்து, அழகிய தலைவியைக் காணுகின்றான் தலைவன். இந்நிலவுலகத்துப் பெண்ணோ? அல்லது

திருமகள் முதலாய தேவலோகத்துப் பெண்ணோ? என்று ஐயுற்றவன் கண் இமைத்தல் முதலாய குறிகளால் இந்நிலவுலக நங்கையே எனத் தெளிந்து, அவள்மீது தான் கொண்ட காதலைக் குறிப்பால் உணர்த்துகின்றான்.

''பாயுமலர்த்தண் பொழில்சூழம் வெங்கைப் பழமலைசீர்
ஆயுமுனிவரர் தாமே முனிவரு ளாக்குதல்போல்
நோயுமந் நோய்க்கு மருந்துந் தராநிற்கு நூற்பகலில்
தேயுமருங்குல் பெருமுலை மாதர் திருக்கண்களே''
(தி.வெ.கோ. 5)

என்ற பாடலில்,

''இருநோக்கு இவளுண்கண் உள்ளது ஒருநோக்கு
நோய்நோக்குஒன்று அந்நோய் மருந்து'' (குறள் - 1091)

என்ற குறட்பாவின் கருத்தை எடுத்தாள்கின்றார்.

''பிணியும் அதற்கு மருந்தும் பிறழப் பிறழ மின்னும்
பணியும் புரைமருங்குல் பெருந்தோளி படைக் கண்களே''
(திருக்கோவையார் - 5)

என்று திருவாதவூரடிகளும் தமது திருக்கோவையாரில் வள்ளுவரின் அதே கருத்தினை அமைத்துப் போற்றியுள்ளார்.

ஊழ்வினைப் பயனால் தலைவியை அடைந்த தலைவன் அவள்பால் தான்துய்த்த இன்பத்தை மகிழ்ந்துரைப்பதாக புணர்ச்சி மகிழ்தலில் ஒரு பாடல் வருகின்றது. அப்பாடலில்,

''யாண்டும் பெறலரும் இன்பமெல்லாம் ஐம்புலனுமின்று
தூண்டுஞ் சுடரென நின்றஇம்மாதரில் துய்த்தனவால்''
(தி.வெ.கோ. 21)

என வரும் அடிகளில்,

''கண்டுகேட்டுண் டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள'' (குறள் - 1101)

என்ற குறள் வெண்பாவின் பொருட்சிறப்பை நன்குணர்ந்து சிவப்பிரகாசர் எடுத்தாண்டுள்ள திறம் போற்றற்குரியதாகும். 'சித்தாந்த சிகாமணி' என்னும் தமது நூலில்,

''கண்டுகேட்டுமற் றுண்டுயிர்த் துற்றிடு காலைக்
கொண்ட இன்பங்கள் யாவையும் சிவத்தினிற் கொடுத்து''

என்று மேற்கூறிய குறளின் முதலடியை எடுத்தாள்வது ஈண்டு நோக்கத்தக்கது.

தலைவியைப் புகழ்ந்து மகிழ்ந்த தலைமகன் தலைவியைக் காணாது தோழியர் வருந்துவர் என்று எண்ணி அவளை ஆயத் துய்ப்பதாக வரும் பாடலில் திருக்குறளின் சொல்லும் பொருளும் இடம் பெறுவதைக் காணலாம்.

''வானோக்கி நிற்கும் பைங்கூழ்போலவும் ஒரு மன்னவன் செங்
கோல் நோக்கி நிற்கும் குடிபோலவும், தடங்கோட்டிமயத்
தேனோக்கி எழிலுடையான் வெங்கைச் செல்வயுனைத்
தானோக்கி நிற்குநல் லாயத்துளே சென்று சார்ந்தருளே''
(தி.வெ.கோ. 41)

இப்பாடலில்,

''வானோக்கி வாழும் உலககெல்லா மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி'' (குறள் - 542)

என்ற குறளின் கருத்து உவமை நயத்தோடு அமைந்துள்ளது.

மெல்லிய கொடி போன்றவளாகிய நும்தலைவியையன்றி என் உயிர் வாழாது! என்று தலைவன் தோழியை அணுகி வேண்டுவதாக வரும் பாடல் :

''பைங்கூழ் ஒளிநிகர் வெங்கைபுரேசர் பொருப்பிடத்தில்
வங்கூழ் வழங்கும் வியன் ஞாலந்தன்னில் வளர்ந் தெழுந்து
பைங்கூழ் புயலின் றமையாத வாறெனப் பாவை நல்லாய்!
இங்கூழ் தருமென் கொடியன்றி வாழ்தலின் றென்னுயிரே
(தி.வெ.கோ - 90)

இப்பாடலின்கண் ''வழி வழங்கு மல்லன்மா ஞாலம்'' (குறள் - 245) என்ற குறள் வரியும்,

''விசும்பிற் றுளிவீழின் அல்லான் மற்றாங்கே
பசும்புற்றலை காண்ப தரிது'' (குறள் - 16)

என்ற குறட்பாவின் கருத்தும் எடுத்தாளப்பட்டுள்ளது.

மாலைப் பொழுது பிரிந்தவர்களுக்குத் துன்பத்தைத் தருவது. தலைவனைப் பிரிந்த தலைவி மாலைப்பொழுதில் வருந்தியிருந்தாள். அவள் வருத்தத்தைக் கண்ட தோழி புலம்புவதாக வரும் திருவெங்கைக் கோவை பாடலில்,

''பெருந்தாப மாலைக்கு இவளென் கொலோ பிழை செய்ததுவே''
(தி.வெ.கோ. 146)

என்ற வரி வருகிறது. காமத்துப்பாலில் பொழுது கண்டு இரங்கல் என்ற அதிகாரத்தில்

''காலைக்குச் செய்த நன்றென்கொல் எவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை'' (குறள் - 1225)

என வரும் குறள் வெண்பாவில் ''எவன்கொல் மாலைக்குச் செய்த பகை'' என்ற அடி எடுத்தாளப்பட்டுள்ளது.

பொருள் ஈட்டக் கருதித் தலைவியைப் பிரியக் கருதும் தலைவனது போக்கைத் தோழி தவிர்ப்பதாக வரும் பாடலில் ''என்னோடு சொல்லுக செல்லான உண்டெனின்'' (தி.வெ.கோ - 264) என வரும் வரி ''செல்லாமையுண்டேல் எனக்குரை'' (குறள் - 1151) என்ற குறள் வெண்பாவின் முதலடியின் கருத்தைக் கொண்டுள்ளது.

கார்காலத்து வருவேன் என்று கூறிப் பொருள் வயிற்பிரிந்து சென்ற தலைவன் பிரிவால் உயிர் துறவாமல் ஆற்றிலிருந்து தலைமகள் தோழியிடம்,

''மலர்விழி மாதே! என்றாயினுங் காதலர் ஈங்கு
ஒருநாள் வருவர் என்றே நின்றது ஆவியுடலகத்தே''
(தி.வெ.கோ. 275)

என்று கூறுவதாக வரும் பாடலில்,

''உரனசைஇ உள்ளந் துணையாகச் சென்றார்
வரனசைஇ இன்னும் உளேன்'' (குறள் - 1263)

என்ற குறட்பாவின் ஈற்றடிக் கருத்து இடம் பெற்றுள்ளது.

உடன்போக்கு உரைத்த தோழிக்கு அதனது அருமை கூறி தலைவன் உடன்போக்கு மறுத்ததாக திருவெங்கைக் கோவையில் அடிகள் அமைத் துள்ள பாடல் மிக அருமை.

''அனிச்சமும் அன்னத்தின் தூவியு மாதர் அடிமலர்க்குச்
சனித்த நெருஞ்சிப்பழ மென்றறிந் தகுவரன்றி
மனித்தர் வழங்கரும் வெங்கொடும்பாலை வழியொருநாள்
இனித்த மொழியுடை யாரை யெவ்வாறு கொண்டேகுவனே''
(தி.வெ.கோ. 310)

இப்பாடலில்,

''அனிச்சமும் அன்னத்தின் தூவியு மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்'' (குறள் - 1120)

என்ற குறளை அப்படியே எடுத்தாண்டு நயம் சேர்த்துள்ளார்.

தலைவனோடு தலைவி இல்லற வாழ்க்கை மேற்கொண்டு ஒழுகும் அழகைக் காண விரும்பி வந்த செவிலித்தாயிடம் தோழி, ''திருவெங்கைப் பதியில் நமது ஆரணங்கின் இல்லறமானது 'மிக நன்று' என்று உலகினர் யாவரும் புகழ்கின்றனர்'' என்று கூறுகின்றாள்.

''பல்லறம் ஆற்றியும் எல்லாம் ஒருங்குபடத் துறந்தோர்
நல்லறம் ஆற்றும் துணையாகவும் பெறு நன்மையினால்
அல்லற மாற்றுங் களத்தார் திருவெங்கை யாரணங்கின்
இல்லறம் ஆற்றவு நன்றெனு மால் இவ்விருநிலமே''
(தி.வெ.கோ. 375)

இப்பாடலில்,

''ஆற்றின் ஒழுக்கி அறனிழக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை யுடைத்து'' (குறள் - 48)

என்ற குறட்பாவின் கருத்து இடம் பெற்றுள்ளது.

தீமை செய்த ஒருவர்க்கு நன்மை செய்வதென்பது எங்ஙனம் சாத்தியம்? கண்ணுக்குக் கண்; பல்லுக்குப் பல் என்று பழி வாங்குவதை விடுத்து அவர் நாணும்படி நன்மை செய்; அதுவே அவரை தண்டிப்ப தாகும் என்பது வள்ளுவர் வாக்கு.

''இன்னா செய்தாரை யொறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்'' (குறள் - 314)

என்ற குறட்பாவை அகப்பொருள் துறையில் அமைத்து,

''இன்னா செய்தாரை யொறுத்திடின் நன்மையியற்றுகென
சொன்னார் புலவர் அறிந்திலையோ?'' (தி.வெ.கோ. 386)

என்று பரத்தை வயிற் பிரிந்து சென்று திரும்பி மனைக்கு வந்த தலைவனிடம் ஊடல் கொண்டிருந்த தலைவியின் ஊடலைப் போக்க முயல்கின்றாள் தோழி. தெய்வப் புலவர் மொழியை ஈண்டு பொன்னே போல் போற்றியுள்ளார் சிவப்பிரகாசர்.

விருந்து கண்டு ஒளித்த ஊடல் பின்னர் வெளிப்பட்டபோது தலைவன், 'சீறேல் என்று அவள் சீறடி தொழுது', தன் பிழை பொறுத்துப் புகழடையுமாறு வேண்டுகின்றான்.

''ஒறுத்தார் பெறுமின் பழநினை யாமல் ஒருவர் பிழை
பொறுத்தார் புகழும் அறிந்திலையோ மலர்ப் பூங்கொடியே''
(தி.வெ.கோ. 397)

என வரும் பாடலின்கண்,

''ஒறுத்தார்க்கு ஒருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்'' (குறம் - 156)

என்ற குறட்பாவின் கருத்து அமைந்துள்ளது.

தலைமகன் ஓதல் காரணமாகத் தலைவியைப் பிரிய வேண்டிய நிலை வருகிறது. தோழி தலைமகனிடம் அவனது பிரிவை உணர்த்து கின்றாள். ''பெண்ணங்கே!

கண்ணுடையார் கற்றவரே கல்லார்கண் முகத்திரண்டு
புண்ணுடையா ரெனக் கூறிநங் காதலர் போயினரே''
(தி.வெ.கோ. - 408)

என்ற பாடலில்,

''கண்ணுடைய ரென்பவர் கற்றோர், முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்'' (குறள் - 393)

என்ற குறள் வெண்பாவை அப்படியே எடுத்தாள்கின்றார்.

நட்பு என்பது உறவு முறைகளைக் காட்டிலும் மேலான ஒன்று. திருவள்ளுவர் நட்புக்கு இலக்கணம் கூறுகின்றார்.

''உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு'' (குறள் - 788)

என்ற குறட்பாவைத் தமது பாடலில் எடுத்தாள்கின்றார் சிவப்பிரகாசர். நட்புக் கொண்ட வேந்தனுக்கு உண்டான துன்பத்தைப் போக்குதற் பொருட்டு தலைவியையும் விடுத்து விரைந்து செல்கின்றான் தலைவன். தலைவனது பிரிவைத் தோழி தலைவிக்கு உணர்த்துவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

''கடுக்கை யணிந்த முடியோன் திருவெங்கைக் காரிகையாய்!
உடுக்கை யிழந்தவன் கையோர் பொருளை யொழித்ததனைத்
தடுக்கை விரைந்தது போல் நட்டவேந்தன் தனக்குதவி
அடுக்கை விழைந்து நினைவிடுத்தார் நட்பறிந்தவரே''
(தி.வெ.கோ. 417)

இப்பாடலின்கண் திருவள்ளுவர் கூறிய நட்பின் இலக்கணத்தை இணைத்துக் கூறுகின்றார். ''அவையிடை ஆடை குலைந்தவனுக்கு அப்பொழுதே கையானது தான் வைத்திருந்த பொருளை விடுத்து அவ்விகழ்ச்சியைப் போக்குதல் போல'' என்று உவமை நயத்தோடு கூறியிருப்பது பாராட்டுதற்குரியது.

இங்ஙனம் 'திருவெங்கைக் கோவை' நூலில் திருக்குறள் கருத்துக்கள் விரவி வருவதைக் காணலாம். ''எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு'' என்ற வள்ளுவர் வாக்கை மனத்துள் கொண்டு திருக்குறள் கருத்துக்களைத் தமது நூலில் ஏற்புடைய இடங்களில் தலைவன், தலைவி, தோழி இவர்களின் கூற்றில் அமைத்துத் தமது நூலுக்குச் சுவையூட்டியுள்ளார் சிவப்பிரகாசர்.

56. சிவப்பிரகாசரின் சிவநாம மகிமை

சு. ஞானப்பூங்கோதை, பேரூர்.

சைவ மரபு பேணிய புலவர் பெருமக்களில் சிவப்பிரகாசர் குறிப்பிடத் தக்கவர். இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி கால்கொள்ளத் தொடங்கிய காலச்சூழலில் 17-ஆம் நூற்றாண்டில் மிகுந்த ஈடுபாடும் தமிழ்மொழிப் பற்றும் கொண்டு வாழ்ந்தவர் 'கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாசர்' ஆவார். வீரசைவ நெறியினர் எனினும் சித்தாந்த நெறிகளை நன்கு அறிந்ததுடன் சித்தாந்த மரபினைப் போற்றிய தனித்தன்மையாளர். சமயக் குரவர்கள், சைவ அடியார்கள், வீரசைவ அடியார்கள் மீது பெரும்பக்தி கொண்டவர். இவர் இயற்றிய நூல்களுள் ஒன்றான நால்வர் நான்மணி மாலை, சமயக்குரவர்கள்மீது சிவப்பிரகாசர் வைத்துள்ள அளப்பரிய அன்பினை எடுத்துக் காட்டுவதாகும். மேலும் தமது இலக்கியங்களுள் கடவுள் வாழ்த்துப் பகுதியில் பெரியபுராண அடியார்கள் துதி, அடியார்கள் போற்றிகள் மற்றும் வீரசைவ அடியார்கள் துதி ஆகியவற்றை அமைத்துள்ள பாங்கினை நன்கு காணலாம்.

நூலமைப்பும் நுவல்பொருளும்

கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாசர் இயற்றிய நூல்களுள் ஒன்றாக விளங்குவது சிவநாம மகிமை. சிவநாமம் என்பது சிவபெருமானுடைய திருப்பெயர். இறைவனின் திருப்பெயர்களுள் எல்லாம் சிறந்து விளங்குவது சிவம் என்பது. இப்பெயரை இரட்டித்துச் ''சிவசிவ'' என்பர். இவ்வாறு சிவசிவ என்பதன் பெருமை செப்புதற்கரியது. இப்பெயரின் பெருமையில் ஒருசிறிது கூறுவதால் இந்நூல் சிவநாம மகிமை என்று பெயர் பெற்றது. இது பத்துக் கலிவிருத்தப் பாடலையும் இறுதியில் ஓர் அறுசீர் விருத்தப் பாடலையும் கொண்டதாக அமைந்துள்ளது. ஒவ்வொரு பாடலின் இறுதியடியின் இறுதியில் ''சிவசிவ என்மினே'' என்றுளது.

'நமசிவாய', 'சிவாயநம' என்பன ஐந்தெழுத்து மந்திரம். இந்த மந்திரத்தைப் பொருளாக வைத்து திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் ''ஐந்தெழுத்துத் திருப்பதிகம்'', ''நமச்சிவாயத் திருப்பதிகம்'', ''கொடுமுடித் திருப்பதிகம்'' என்று திருமுறைப் பாடல்களை அருளி' யுள்ளனர். எத்துணை இடர்கள் வரினும் ஐந்தெழுத்தைச் சொன்னால் இடர்கெடும். தீவினை நீங்கும்; செல்வம், கல்வி நல்கும்; அறம் வளரும்; எமபயம் நீங்கும் மற்றும் இவைபோன்ற பயன்கள் உண்டாகும் என்று பதிகம் இயம்புகிறது.

சிவப்பிரகாசர் முன்னோர் மொழியைப் பொன்னே போல் போற்றும் இயல்பினர். இவர் இறை அருளாளர்களால் பாடியருளிய திருமுறைகள், இறைவன் திருவடியை அடைதற்குத் துணைநின்றன என்பதனை உணர்ந்தார். எனவே சிவநாம மகிமை எனும் இலக்கியத்துள் திருஐந்தெழுத்துக் குறித்து மேலோர் கூறிய கருத்துக்களையும், பயன் களையும் எடுத்தாண்டுள்ளார். இதனை ஒப்பாய்வு முறையில் எடுத்துக் காட்டுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மந்திரம்

மனனம் செய்பவனைக் காப்பாற்றுவது மந்திரமாகும்.

''நிறைமொழி மாந்தர் ஆணையில் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப''

என்பது தொல்காப்பிய நூற்பா. திருவள்ளுவர்,

''நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்'' (நீத்தார் பெருமை)

என்பர்.

மந்திரங்களைச் செபிக்க மந்திரத்திற்குரிய தேவதை செபிப்பவன் முன் தோன்றுகின்றது என்பதனை விஞ்ஞானிகள் மெய்ப்பித்துள்ளனர். மந்திரங்களால் யானை முதலிய மிருகங்களும் பாம்பு முதலிய விச சந்துக்களும் கட்டுப்படுகின்றன. மெய்ஞ்ஞானிகள் மந்திரங்களால் பல்வகையான பயன்களைப் பெற்றுள்ளனர். சைவ அடியார்கள், ஆழ்வார்கள் பஞ்சாக்கர, அட்டாக்கர மந்திரங்களைச் சொல்லி அதனால் பற்பல அற்புதச் செயல்களையும் செய்துள்ளனர். மேலும் இறைவன் திருவருளையும் பெறமுடியும் என்பது திருமுறைப் பாடல்களால் அறிவுறுத்தியுள்ளனர்.

திருஐந்தெழுத்து – விளக்கம்

பஞ்சாக்கரம் என்பது திருஐந்தெழுத்து. நமசிவாய, சிவாயநம ஆகும். சிவாயநம என்பதற்குச் சிவனுக்கு வணக்கம் என்பது பொருள். சிகரம் - சிவனையும், வகரம் - சக்தியையும், நகரம் - மறைத்தலையும், யகாரம் - உயிரினையும், மகாரம் - ஆணவம் முதலிய மலங்களையும் சுட்டுகின்றது. எனவே இறைவன் உயிர்களின் மலத்தை ஒழித்து அருளால் ஆட்கொள்வதை இம்மந்திரம் உணர்த்துகின்றது. பஞ்சாக்கர மந்திரம் வேதத்தின் இதயத்தில் ஒளிவீசிக்கொண்டு விளங்குகிறது. இதனை அருளாளர்கள் தம் நூலுள் சுட்டியுள்ளனர்.

"அருமறையின் அகத்தானை" "பழுத்தன ஐந்தும் பழமறையுள்ளே"

என்று திருமுறைகளும்,

"ஓங்காரமாம் ஐந்தெழுத்தால் புவனத்தை உண்டு பண்ணிப்
பாங்காய் நடத்தும் பொருளே"

என்று தாயுமானவர் பாடலடிகளும் குறிப்பிட்டுள்ளன.

திருஐந்தெழுத்து வகை

பஞ்சாக்கரம் எனும் திருஐந்தெழுத்து ஐந்து வகைப்படும். அவையாவன:

பஞ்சாக்கரம்	எழுத்து	பயன்
1. ஸ்தூல பஞ்சாக்கரம்	நமசிவாய	இம்மை மறுமை பயன் அளிக்கும்
2. சூக்கும பஞ்சாக்கரம்	சிவாயநம	மலத்தை நாசம் பண்ணும்
3. காரண பஞ்சாக்கரம்	சிவாயசிவ	பாசத்தைக் கெடுக்கும்
4. மகா காரண பஞ்சாக்கரம்	சிவ	அருள் சிவத்தொடு சேர்ந்து இன்பம் அளிக்கும்
5. மகாமநு	சி	சிவமேயாக்கும்

என்பன.

சாத்திர நூல்களுள் ஒன்றாகிய கொடிக்கவி திருஐந்தெழுத்து முதலிய மந்திரத்தை,

"அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்துமு மேலைப் பெருவெழுத்தும் - நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமல் காட்டக் கொடி"

என்று கூறியுள்ளது. பேரூர்ப் புராணம் நிருத்தப் படலத்துள்ளும் இவ்வெழுத்துக்கள் குறித்து விளக்கப்பட்டுள்ளது.

சிவ எனும் மந்திரம்

சிவப்பிரகாசர் திருஐந்தெழுத்துள் சிவநாமம் ஓதத் தூண்டுதலாக இருந்தார். எளியோருக்காக திருஐந்தெழுத்தைக்கூட எளிமைப்படுத்தும் வகையில் இரண்டெழுத்தாகிய மகாகாரண பஞ்சாக்கரத்தைப் பரப்ப முனைந்துள்ளார். திருமூலரும் ஈரெழுத்துப் பெருமையினைத் திருமந்திரத்தில் கூறியுள்ளார். இதனை,

"சிவ சிவ என்கிலர் தீவினை யாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவ சிவ என்னச் சிவகதி தானே"

என்ற பாடல்வழி தெளியலாம்.

சி - சிவம் - அன்பு : வ - சக்தி - அருள். அன்பு உயிரினுடைய பண்பு, அருள், சிவத்தின் பண்பு. பண்பும் அதன்பொருளும் வேறுவேறு அன்று. அன்பு, அருள், சிவம் எனும் மூன்றை அனுபவித்து உணர்ந்தவர்கள் அருளாளர்கள். அவன் அருளால் அவன் தாள்வணங்குதல் வேண்டும். சிவம் வழங்கிய அருளால் அன்பு மென்மேலும் வளரப் பெற்று சிவத்தையடைந்து இன்பம் எய்தினர். இதற்கு சிவ என்னும் ஈரெழுத்து மந்திரமே போதுமானது என்று உணர்ந்தார் சிவப்பிரகாசர். சிவத்துடன் உணர்வு ஒன்றி, சிவமாகவே நின்று அன்பையும் அருளையும் சிவத்தையும் நமக்கு உணர்த்தியுள்ளார். இதனை, சிவநாம மகிமை எனும் இலக்கியம் வாயிலாக அறியலாம்.

தீவினை தீரும்

வானுயர அடுக்கிய மரங்கள்கூட நெருப்பில் எரிந்து சாம்பலாகும். செய்த பாவங்கள் மலை போல் வந்தாலும் நமசிவாய என்று கூறினால் அழிந்து போகும் என்பர் அப்பரடிகள். இதனை,

''பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை
நண்ணி நின்று அறுப்பது நமச்சிவாயவே'' (அப்பர்)

என்று கூறுகின்றார்.

ஒளியினைக் கண்ட இருள் எவ்வாறு விலகி வெளிச்சம் பெறுமோ, அதுபோன்று தீமையெல்லாம் தொலையும் எப்பொழுது? சிவசிவ என்று சொல்லும்பொழுது, இக்கருத்தினை,

''சோதி காணிருள் போலத் தொலைந்திடும்
தீதெலாமுஞ் சிவசிவ என்மினே'' (சிவநாம மகிமை)

''........ ஆதிதவத்தினான்
வாய்ந்த மேனி வருந்த இறந்திடாப்
போந்த பாதகமேனும் பொருக்கெனத்
தீந்து போகும் சிவசிவ என்மினே'' (சிவநாம மகிமை)

என்ற தொடர்களால் அறியலாம்.

வாழ்த்த வாயும் நினைக்க நெஞ்சும் தாழ்த்த சென்னியும் தந்த தலைவனாகிய இறைவனை வணங்காது ஐம்புல ஆசைகளுள் அகப்பட்டு தீவினைக்கு ஆளாகும் மனிதப்பிறவி. சிவசிவ என்று கூறினால் தீவினை தீரும். இதனை,

''நாக்கினாலும் நயனங்களாலும் இவ்
வாக்கையானும் அருஞ்செவியாலும் நம்
மூக்கினாலும் முயங்கிய தீவினை
தீர்க்கலாகும் சிவசிவ என்மினே'' (சிவநாம மகிமை)

என்பர்.

திருநாவுக்கரசரும் திருஅங்கமாலையில், ''தலையே நீ வணங்காய், கண்காள் காண்மினோ, மூக்கே நீ முரலாய், செவிகாள் கேள்மின்களோ'' என்று ஐம்பொறிகளுக்கு உரிய கடமைகளை இயம்பியுள்ளதை ஈண்டு நினையலாம்.

முன்னர் சிவசிவ என்று ஒருமுறை கூறியவர் இறைவனை இகழ்ந்தாலும், வந்த தீவினையை மாற்றி அருளும் இயல்பினன் இறைவன். எனவே சிவசிவ என்று கூறுங்கள் என்கிறார் சிவப்பிரகாசர். இதனை,

''முந்தையோர் சொல் மொழிந்து சிவனென
நிந்தை தானச் சிவனை நிகழ்த்தினும்
வந்த தீவினை மாற்றுவன் ஆதலால்
சிந்தையோடு சிவசிவ என்மினே''

என்கிறது சிவநாம மகிமை.

பேதமின்மை

மக்களுள் இழிந்தவராயினும் அறிவுடையவராயினும் சிவசிவ எனும் சிவனின் பெயரை ஓதினால் வேதப் பொருளின் பயன் கிட்டும். குற்றம் அகலும். துன்பம் நீங்கும். இக்கருத்தினை,

''புல்லராயினும் போதகராயினும்
சொல்வராயில் சுருதி விதித்திடும்
நல்லவாகும் நவை என்று அகற்றியும்
செல்லல் தீரும் சிவசிவ என்மினே''

என்ற பாடலால் அறியலாம். மேற்கண்ட பாடலோடு தொடர்புடைய திருமுறைத் தொடர்கள்,

''நல்லவர் தீயர் எனாது நச்சினர்''
கொல்வா ரேனும் குணம் பல நன்மைகள்
இல்லா ரேனும் இயம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவர் என்பரால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே'' (திருஞானசம்பந்தர்)

''குலமிலராகிலும் குலத்துக்கு ஏற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சிவாயவே'' (அப்பர்)

என்பன.

சிவசிவ என்று கூறுபவர்கள் இழிந்தவராயினும் தேவர்களே. வானீசர் என்று கருதப்படும் தேவர்கள் சிவசிவ என்று சிவநாமத்தைக் கூறவில்லை எனில் நீசரே என்கிறார். இக்கருத்தினை,

''நீசரேனும் வானீசர் நிகழ்த்தில் வான்
ஈசரேனும் சிவசிவ என்கிலார்

நீசரேயென்று இயம்புறு நின்றுப
தேச நூல்கள் சிவசிவ என்மினே

என்ற பாடல் வலியுறுத்துகின்றது.

எம பயமின்மை

ஐந்தெழுத்து மந்திரம் ஒருவனை நல்லவனாக வாழச் செய்யும். இம்மந்திரத்தைச் சொன்னால் எமதூதரும் அஞ்சுவர். கூற்றுவன் அஞ்சும் வண்ணம் உதைக்கும் தன்மையுடையது. திருப்பதிகங்கள் இதனை,

''வஞ்சகம் அற்றுஅடி வாழ்ந்த வந்த கூற்று
அஞ்ச உதைத்தன அஞ்செழுத்துமே''

''கொல்ல நமன்தமர் கொண்டு போமிடத்து
அல்லல் கெடுப்பன அஞ்செழுத்துமே''
இயமன் தூதரும் அஞ்சுவர் இன்சொலால்
நயம்வந்து ஓதவல்லார்தமை நண்ணினால்
நியமந்தான் நினைவார்க்கு இனியான் நெற்றி
நயனன் நாமம் நமச்சிவாயவே'' (திருஞானசம்பந்தர்)

என்று கூறுகின்றன.

சிவப்பிரகாசர் சிவசிவ என்னும் மந்திரத்தை எண்ணி, நெஞ்சில் நினைப்பவரது அழகிய கால்கள் இறைவனை நெருங்கி வணங்கும். அப்பொழுது வலிமை வாய்ந்த கூற்றுவன் உள்ளத்தால் அஞ்சி நடுங்குவன். இது உறுதி எனவே சிவசிவ என்று கூறுங்களேன் என்று மக்களை விளித்துக் கூறுகிறார். இதனை,

''எண்ணி நெஞ்சில் சிவசிவ என்பவர்
வண்ண மென்பதங் கிட்டி வணங்கவும்
உண்ண டுங்குவ னொண்டிறற் கூற்றுவன்
திண்ண மீது சிவசிவ என்மினே

என்ற பாடலில் தெளியலாம்.

இழிவிலும் உய்தி

இழிந்த செயல்களைச் செய்பவன் என்றாலும் கொலை வேடன் என்றாலும் பழி பொருந்திய பாதகன் என்றாலும் இழிந்தவன் என்றாலும் சொல்ல முடியாத மொழிகளைச் சொல்பவனாய் ஒரே ஒரு முறை சிவசிவ என்று மொழிந்தால் அவனது மலர் போன்ற திருவடியின் துகள், எங்களது குலதெய்வம் என்று சிவப்பிரகாசர் கூறுகிறார்.

ஈரெழுத்து மந்திரத்தின் மீது கொண்ட எல்லையில்லா ஈடுபாட்டினை,

''...... சிவசிவ என்று
ஒருமுறைதான் மொழியில் அன்னோன்
செழிய நறுமலரடியின் துகளன்றோ
எங்கள் குலதெய்வம் என்ப''

என்ற பாடலடிகள் புலப்படுத்துகின்றன.

''ஆவுரித்துத் தின்னும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கன்பராகில்''

என்ற திருநாவுக்கரசர் பாடலை ஈண்டு நினையலாம். இறைபக்திக்கு குலவேறுபாடும், நல்லோர் தீயோர் என்ற பேதமும், பண்புடையர் பண்பிலார் என்ற வேறுபாடும் இல்லை என்பதனை அறியலாம்.

விழுப்பயன்கள்

நந்தி நாமத்துக்குரிய நமச்சிவாய மந்திரம் செல்வத்தைத் தரும்; மிகுவிக்கும்; வானவர் செல்வத்தைத் தரும்; வீடு பிறப்பு அறுக்கும்; பீடை கெடுக்கும்; பின் மாநடம் ஆடி மகிழ்விப்பது ஐஞ்செழுத்து. கூத்தப் பெருமானின் திருநடனம் ஐந்தெழுத்து என்பதனை நினையலாம். நான்கு மறைகள் மட்டுமன்றி மறைகளின் மெய்ப்பொருளாகவும் அமைந்துள்ளது.

''வீடு பிறப்பை அறுத்து மெச்சினர்
பீடை கெடுப்பன பின்னை நாள்தொறும்
மாடு கொடுப்பன மன்னு மாநடம்
ஆடி உகப்பன அஞ்செழுத்துமே'' (திருஞானசம்பந்தர்)

இக்கருத்தினை சிவப்பிரகாசர் பின்வருமாறு எடுத்தாள்கின்றார்:

''கல்வி நல்கும் கருத்து மகிழ்வறும்
செல்வ நல்கும் சிவ சிவ என்மினே''

''தீய நாளொடு கோளின் செயிர்தபும்
நோய் அகன்றிடும் நூறு எனக்கூறிய
ஆயுள் பல்கும் அறம் வளர்ந்து ஓங்குறுந்
தீய தீருஞ் சிவசிவ என்மினே''

என்று சிவநாமத்தின் பயன்களை இயம்புகின்றார்.

''சொற்கோவுஞ் தோணிபுரத் தோன்றலுமெஞ் சுந்தரனுஞ்
சிற்கோல வாதவூர்த் தேசிகரும் - முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறை நூலெங்கே
எந்தைபிரா னஞ்செழுத்தெங்கே''

என்ற பாடலை எண்ணி, நாமும் சிவசிவ என்று நினைந்து நாள்தொறும் இறையருள் பெறுவோமாக.

57. நன்னெறி உவமைகள்

ஞானப்பூங்கோதை, மதுரை.

மனித வாழ்வை அடிப்படையாகக் கொண்டு மனிதனை மனிதனாக வாழச் செய்வதற்குரிய அறநெறிக் கருத்துக்களை எடுத்துரைத்து, அவனை நெறிபடுத்தும் வகையில் அமைந்தவையே நீதி இலக்கியங்கள். திருவள்ளுவர் முதலாகிய பலர் நீதி இலக்கியங்களை நமக்கு வழங்கியுள்ளனர். அவ்வாறு 17-ஆம் நூற்றாண்டில் நமக்கு நீதி இலக்கியங்களை வழங்கியவர்களுள் குமரகுருபர சுவாமிகளும், சிவப்பிரகாச சுவாமிகளும் குறிப்பிடத் தக்கவராவர். சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய ''நன்னெறி'' என்னும் நீதி நூலில் அமைந்த உவமைகளைப் பற்றி இக்கட்டுரையில் காணலாம்.

சிவப்பிரகாசரும் அவர்தம் நூல்களும்

பொம்மையபாளையம் திருக்கயிலாய பரம்பரை பெரியமடம் மயிலம் தேவத்தான ஆதீன பரம்பரைத் தர்மகர்த்துவம் இனத்தார் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளின் சீடராகிய அருள்மிகு சிவப்பிரகாச சுவாமிகள் ''துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்'' என சிறப்புடன் அழைக்கப்படுகிறார்.

இவர், குருவைச் சிறப்பித்துப் பல நூல்கள் இயற்றியுள்ளார். மேலும் சைவ சித்தாந்த நூல்கள், வீர சைவ நூல்கள், தலபுராண நூல்கள், காப்பியம், நீதிநூல்கள் மற்றும் பலவகை நூல்களைத் தமிழ் இலக்கிய உலகிற்குத் தந்தருளிய வள்ளல் ஆவார். இவரது நூல்கள் பெரியோரும் புலவர்களும் போற்றற்குரிய நூல்களாகத் திகழ்வதோடு சிறுவரும் விரும்பிக் கற்றற்குரிய நூல்களாகவும் திகழ்கின்றன.

ஒருமுறை பொம்மையபாளையத்து சமுத்திரக் கரையில் நறுமணற் பரப்பிலே இளைஞர்களும் தெரிந்து கொள்ளும் வகையில் 40 வெண்பாக்களால் அமைந்த ''நன்னெறி'' என்னும் நீதிநூலை எழுதினார். அதனை அவரது சகோதரர் கருணைப் பிரகாச சுவாமிகளே ஏட்டில் எழுதியதாகக் கூறுவர்.

நன்னெறி காட்டும் உவமைகள்

உவமை என்பது ஒரு பொருளோடு பிறிதொரு பொருளை ஒப்புமை தோன்றக் கூறுவதாகும். நன்கு அறிந்ததைக் கொண்டு

அறியாதவற்றை விளங்கிக் கொள்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட உவமை, பின்னர் கருத்துக்களை அழகுற எடுத்துக் காட்டுவதற்கும் கையாளப்பட்டன. ''புலனல்லாதன புலனாதலும் கேட்டார்க்கு அலங்காரமாகி இன்பம் பயத்தலும்'' என்பது இளம்பூரணர் கருத்து. உவமையமைந்த கவிதை, அணிகலம் பூண்ட அரிவையொருத்தியைப் போன்றது என்பர்.

சிவப்பிரகாச சுவாமிகள், நன்னெறி என்னும் நீதி நூலில் அமைந்த 40 வெண்பாக்களிலும் உவமைகளை அமைத்து விளக்கம் அளித்துள்ளார். அவற்றைக் கீழ்க்காணும் தலைப்புகளில் வகுக்கலாம்.

அறிவுடையோர் மேன்மை

நல்ல அறிவுடைய மேன்மக்கள் பற்றியும் அவர்களது சிறப்புத் தன்மை பற்றியும் எடுத்துரைக்கும் வெண்பாக்களில் அமைந்த உவமைகளுள் சில:

நல்லோர், அறிவு பெற்றதன் பயனாய் பிறருடைய துன்பத்தைத் தன் துன்பம் போன்று நினைந்து உருகுவர் என்னும் கருத்தை, ''தீயில்பட்ட வெண்ணெய் போன்று உருகுவர்'' என்றும் ''உடம்பின் எந்த உறுப்பில் துன்பம் வந்தாலும் அதற்காகக் கண் அழுவதைப் போன்று பிறர் துன்பம் கண்டு வருந்துவர்'' என்றும் இரு உவமைகளை,

''பெரியவர்தந் நோய்போற் பிறர்நோய்கண் டுள்ள
மெரியி னிழுதாவ ரென்க - தெரியிழாய்
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண்'' (20)

என்ற வெண்பா மூலம் எடுத்துரைக்கிறார்.

மேலும் உடம்பைத் தாக்க வரும் கோலினைக் கையானது விரைந்து சென்று தடுத்துக் காப்பது போல, பேரருளாளர்கள் பிறர் துன்பம் கண்டு வீரமோடு விரைந்து சென்று காப்பர் என்கிறார். (31)

அத்தகைய பெரியோர், பிறரது துன்பத்தைப் போக்கும் பெருமையை உடையவராய இருப்பரேயன்றி தமக்கு வரும் துன்பத்தைப் பற்றிக் கவலை கொள்ளமாட்டார் என்பது, சந்திரன் தன்மேல் உள்ள கறையை நீக்கிக் கொள்ளுதல் இன்றி இவ்வுலகத்து இருளை நீக்குவதை ஒக்கும் என்கிறார். (நன்னெறி - 10). மேலும் தம்மை மதியாதவரிடத்தும் சென்று அவர்தம் இடர்தீர்ப்பர் என்பதை, கடலானது உப்பங்கழி யினுள் சென்று பயன் தருவதற்கும், தன்னைப் புகழாத நாவிற்கும் இன்சுவை வழங்கும் பூங்கைக்கும் ஒப்பிட்டுக் கூறுகிறார். (1)

அவர்கள் தம்மை வருத்திக் கொண்டாவது பிறர் துன்பம் களைவர் என்பதை தம்மை வருத்திக் கொண்டு பல் முளைப்பதற்கு உதவி நாவிற்கு நல்ல சுவையைத் தரும் ''எயிறு''க்கு ஒப்பிடுகிறார். (27)

மேலும் அவர்கள் தாம் பெருஞ்செல்வம் பெற்றிருந்தபோது மட்டுமல்லாமல் அச்செல்வத்திலே சுருக்கம் வந்த போதும் அதற்கேற்ப விருப்பமுடன் அனைவருக்கும் கொடுப்பர் என்பது சந்திரன் தன் பிறையின் அளவிற்கேற்ப ஒளியைத் தருவதற்கு ஒப்பாகும் என்கிறார்.

இதனை விளக்கும் வெண்பா,

''பெருக்க மொடுசுருக்கம் பெற்றபொருட் கேற்ப
விருப்ப மொடு கொடுப்பர் மேலோர் - சுரக்கு
மலையளவு நின்றமுலை மாதே மதியின்
கலையளவு நின்ற கதிர்'' (13)

என்பதாகும்.

ஐம்புலன்களால் வரும் துன்பங்கள் சிற்றறிவுடையோரையே தாக்கும் அன்றி மெய்ஞானியரைத் தாக்காது என்பதை, சூறாவளிக் காற்று சிறு துரும்புகளையே சுழற்றும் அன்றி பெரிய கல்தூணை சுழற்ற முடியாது என்ற உவமை மூலம் எடுத்துரைக்கிறார். (11)

பரத்தைச் சார்ந்து பரத்தையே நண்ணி இருக்கும் ஞானிகள் உடற்கு ஏதேனும் துன்பம் வரினும் அதைக் கண்டு அஞ்சமாட்டார்கள் என்பதை விண்ணில் இருக்கும் சந்திரனில் உள்ள மான் மண்ணில் இருக்கும் புலியைக் கண்டு அஞ்சாது என்பதோடு ஒப்பிடுகிறார். (29)

பிறரை இகழும் சொற்கள் வராமல் காப்பதே அறிஞர்களுக்கு பெருமையுடையதாகும். எனினும் பேசா அனுபூதி நிலை அடைந்த ஞானியர்க்கு அத்தகைய காப்பிற்கு அவசியமே இல்லை என்பதை, ''கட்டப்பட்ட குளத்தின் கரையை காக்க வேண்டும்; ஆனால் அகன்று விரிந்த கடலுக்குக் கரை கட்ட வேண்டிய அவசியமே இல்லை'' என்ற உவமை மூலம் கூறுகிறார். இதனை விளக்கும் வெண்பா,

''எள்ளா திருப்ப விழிஞர் போற் றற்குரியர்
விள்ளா வறிஞரது வேண்டாரே - தள்ளாக்
கரைகாப் புளதுநீர் கட்டுகுள மன்றிக்
கரைகாப் புளதோ கடல்'' (33)

என்பதாகும்.

அறிவிலாதார் கீழ்மை

அறிவுடைய நல்லாரின் மேன்மையை எடுத்துரைத்த சிவப்பிரகாச சுவாமிகள் அதேசமயம் அறிவில்லாத கயவர்களின் தன்மையையும் அவர்களால் எந்த பயனுமில்லை என்பதையும் பல உவமைகளின் மூலம் எடுத்துரைக்கிறார். அவற்றுள் சில :

நல்ல குணங்கள் பல இருக்க அறிவிலாத இழிந்தோர் பிறரைக் கீழ்த்தரமாக இகழ்வதையே தமது குணமாகக் குற்றம் கொள்வர் என்பதை, ''காக்கையானது பல நல்ல பழங்கள் இருக்க அவற்றை விடுத்து வேப்பங்கனியையே விரும்புவது போன்றதாகும்'' என்ற உவமையோடு ஒப்பிடுகிறார். (24)

அவர்கள் பழிக்கு அஞ்ச மாட்டார்கள் என்பதை, ''ஒளியில்லாத குருட்டுக் கண் இருளைக் கண்டு அஞ்சாது'' என்பதனோடு ஒப்பிடுகிறார். (24)

அவர்கள் செய்கின்ற அறச் செயல்களால் எவ்வித பயனும் இல்லை என்பது, வலிமையுடைய கதவாக இருந்தாலும் தாழ்ப்பாள் இல்லாதிருப்பின் அதனால் எப்பயனும் இல்லாதது போன்றது என்கிறார். இதனை விளக்கும் வெண்பா,

''பன்னும் பனுவற் பயன்றே ரறிவிலார்
மன்னு மறங்கள் வலியிலவே - நன்னுதால்
காழொன் றுயர்திண் கதவு வலியுடைத்தோ
தாழொன் றிலதாயிற் றான்'' (32)

என்பதாகும்.

மேலும், அன்பும் அறிவுமிலாத கயவர்க்கு இடம், பொருள், ஏவல் மற்றும் எல்லா செல்வமும் இருந்தும் யாருக்கும் எவ்வித பயனுமில்லை என்பது, எதைப் போன்றது எனின், மொழியறிவே இல்லாதவனுக்கு பழம்பெரும் நூல்களால் எந்த பயனும் இல்லாதது போன்றதும் விழி யில்லாதவனுக்கு எரியும் விளக்கினால் எந்த பயனும் இல்லாதது போன்றதும் ஆகும் என்று எடுத்துக் கூறுகிறார். (15)

சினங்கொண்டாலும் நன்மையையே நல்குவர் கற்றறிந்த நல்லோர். ஆனால் இனிமையாகப் பேசினும் கயவர் நன்மையை நல்க மாட்டார்கள் என்பதை, ''வாழை, காயாக இருப்பினும் நல்ல உணவாகும் ஆனால் எட்டி பழுத்துக் கனியானாலும் பயனில்லை'' என்ற உவமை மூலம் விளக்குகிறார். (28)

இன்சொல்லின் இனிமை

இனிமையான நல்வார்த்தை சொல்லிப் பேசுவதால்தான் இந்த உலகம் மகிழுமேயன்றி கடுமையான சொற்களால் என்றும் மகிழ்ச்சி யில்லை என்பதை, குளிர்ச்சி பொருந்திய சந்திரனின் ஒளியினால் தான் கடல் பொங்குமேயன்றி வெம்மையான சூரிய ஒளியினால் என்றும் பொங்குவதில்லை என்ற உவமை மூலம் எடுத்துரைக்கிறார். (18)

ஈகையின் சிறப்பு

தன் தந்தை பிறர்க்கு ஈந்து, ஈந்து அனைத்து செல்வங்களையும் இழந்தார் என்று கூறும் மைந்தனும் ஈகையை மறுக்க மாட்டான் என்பதை, வாழை மரமானது கனி முதலிய பலவற்றை உதவித் தான் அழிந்த பின்னும் தன் கிழங்கு அடுத்த கன்று வருவதற்கு உதவுவது போன்றதாகும் என்று ஈகையின் சிறப்பை

''எந்தை நல்கூர்ந்தா னிரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் மீகை மறுப்பரோ - பைந்தொடீ
நின்று பயனுதவி நில்லா வரம்பையின் கீழ்க்
கன்று முதவுங் கனி'' (17)

என்ற வெண்பா மூலம் எடுத்துரைக்கிறார்.

சினத்தை அடக்குவதன் இன்றியமையாமை

வெள்ளம் மிகுந்து ஆற்றின் கரை உடையுமானால் அதனை அதன் போக்கில் விடாமல் தடுத்து, ஆற்றின் போக்கில் திருப்பி அமைத்தலே சிறந்தது. இன்றேல் வெள்ளம் புகுந்து நகரம் அழிந்து விடும். அதுபோல் மனத்தை மாற்றி ஓங்கி எழுகின்ற சினத்தை அடக்கி அமைதி படுத்தல் வேண்டும். இன்றேல் அது தன்னையும் பிறரையும் அழித்து பெருங்கேடை விளைவிக்கும் என்று சினத்தை அடக்குவதன் இன்றியமையாமையை

''உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க - வெள்ளந்
தடுத்த லரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்த லரிதோ விளம்பு'' (8)

என்ற வெண்பா மூலம் சிறப்பாக எடுத்துரைக்கிறார்.

செருக்கு அடங்குதல்

''கடல் அளவு கல்வி கற்றிருப்பினும் ஆரவாரத்துடன் செருக்கு கொண்டு இருப்பாராயின், அச்செருக்கு அகத்தியர் கடல் முழுமையையும் கையால் முகந்து உண்டது போன்று அடக்கப்பட்டுவிடும்'' என்று கல்விச் செருக்கையும் (7)

''அழியாத பெருஞ் செல்வத்தைப் பெற்றவராயிருக்கிறோம் என்று செருக்கு கொள்ளலாகாது. மேரு மலைக்கு அன்று ஒரு வளைவு வந்தது போன்று இச்செல்வத்திற்கும் அழிவு நேரலாம்'' என்று செல்வச் செருக்கையும் எடுத்துரைக்கிறார். (14)

சிவபெருமான் பற்றிய உவமைகள்

சைவ மடத்தைச் சார்ந்து, சிவபெருமானை வழிபடு தெய்வமாகக் கொண்ட சிவப்பிரகாச சுவாமிகள், சதமணிமாலை, சிவப்பிரகாச விகாசம்

போன்ற சைவ சித்தாந்த நூல்களை இயற்றியுள்ளார். சோணசைல மாலையிலும் பல சைவ சித்தாந்தக் கருத்துக்களை வெளியிடுகிறார். நன்னெறி எனும் இந்நீதி நூலிலும், சிவபெருமானைப் பற்றிய சில செய்திகளை ஆங்காங்கு எடுத்துரைக்கிறார்.

குற்றமல்லாத மனமுடைய உயர்ந்தோர் கூறும் வன்சொல்லும் இனிமை பயப்பதாகும். ஆனால் ஏனைய கயவர் இன்சொல் கூறினும் அது விரும்பத்தகாததே என்பதை எடுத்துக் கூறுகையில், சாக்கிய நாயனார் எரிந்த கல்லே, மன்மதன் எரிந்த மலரம்பைக் காட்டிலும் சிவபெருமானுக்கு விருப்பமுடையதாயிற்று என்ற பெரியபுராணக் கருத்தை உவமையாக்குகிறார். (2)

மேலும்

''மெலியோர் வலிய விரவலரை யஞ்சார்
வலியோர் தமைத்தர் மருவிற் - பலியேல்
கடவுளவிர் சடைமேற் கட்செவியஞ் சாதே
படர் சிறையப் புள்ளரசைப் பார்த்து''

என்ற வெண்பாவில் சிவபெருமானது சடையில் வீற்றிருக்கையில் பாம்பு பறவைகளுக்கெல்லாம் அரசராகிய கழுகைக் கண்டு அஞ்சாது என்ற உவமையை எடுத்தாள்கிறார். (9)

எழுத்தறிவு இல்லாதவருடைய ஏனைய கல்விச் செல்வம் அனைத்தும் எழுத்தறிவும் உடைய கற்ற பெரியோர் முன் நிலைத்து நில்லா என்பதற்கு, பாய்ந்து பெருக்கெடுத்து வந்த கங்கையும் சிவபெருமானின் அவிர்சடையில் அடங்கிய புராண கருத்தை உவமையாக்குகிறார். (21)

நட்பு பற்றிய உவமைகள்

நல்லோர் மேற்கொள்ளும் நட்பு என்றும் நன்மையையே தருவதாகும்; ஆனால் தீயோர் செய்யும் நட்பு நன்மையாகாது என்பது, ''காய் பழுத்தால் அது நல்ல கனியாகும்; ஆனால் இளந்தளிர் (பிஞ்சு) பழுத்தால் அதனால் எந்த நன்மையும் இல்லை'' என்பதற்கு ஒப்பிடுகிறார். (38)

நட்புடைய இருவரிடம் ஏதேனும் காரணம் பற்றி ஒருமுறை பிளவு ஏற்படின் பின்னர் மீண்டும் அவர்கள் சேர்ந்த பின்பும் பழைய பெருமையுடையதாக இருக்காது என்பதை நெல்லின் உமியை நீக்கி மீண்டும் சேர்த்தாலும் அதன் திண்மை முன்புபோல் இல்லாததை ஒக்கும் என்று கூறுகிறார். (5)

கண் பற்றிய உவமைகள்

அன்புடைய மனையாளும் அவள்தம் கணவனும் கருத்து வேறுபாடின்றி ஒக்க நோக்குகின்ற சிறப்பிற்கு, இரண்டு கண்களும்

சேர்ந்து ஒரே பொருளையே நோக்குகின்ற தன்மையை உவமையாக எடுத்துக் காட்டுகிறார். (6)

மேலும், பொன்னாபரணங்கள் எல்லாம் அணிந்திருந்தாலும் கல்வியறிவிற் சிறந்து விளங்காமல் இருக்கும் ஒரு வேந்தர் எந்த அணிகலனும் அணியாத கற்றறிந்த அறிஞர்க்கு ஈடாக மாட்டார். இதை, நம் உடம்பில் பிற உறுப்புகள் எல்லாம் மின்னுகின்ற பல அணிகலன் களை அணிந்திருந்தாலும் எந்த அணிகலனும் அணியாத கண்ணிற்கு ஈடாக மாட்டா என்ற உவமை மூலம் எடுத்துக் கூறி கண்ணின் சிறப்பையும், கற்றோரின் சிறப்பையும் காண்பிக்கிறார். (40)

அறத்தின் சிறப்பு

வெள்ளம் வருவதற்கு முன்பே அணைகட்டி வளம் பெருக்குவதைப் போன்று கொடுங்கூற்றம் கொல்வதற்கு வருமுன்பே கனிந்த உள்ளத்துடன் அறம் செய்து உய்வடைக என்று அறம் செய்வதன் அவசியத்தை வலியுறுத்துகிறார். (30)

பிறப்பால் உயர்வு - இழிவு இல்லாமை

பிறப்பினால் மனிதரிடையே ஏற்றத் தாழ்வு கிடையாது என்பதை கொடும் ஆலகால விஷத்தைக் கக்கிய பாம்பு என்றாலும் அதன் தலையில் அமைந்த மாணிக்கக் கல்லை எவரும் விலக்கமாட்டர் என்ற உவமை மூலம் எடுத்துக் கூறுகிறார். இதனை விளக்கும் வெண்பா,

''ஆக்கு மறிவா னலது பிறப்பினான்
மீக்கொ ளுயர்விழிவு வேண்டற்க - நீக்கு
பவரா ரரவின் பருமணிகண் டென்றுங்
கரவார் கடலின் கடு'' (22)

என்பதாகும்.

இவ்வாறு, உயர்ந்தோர் பெருமையையும், தீயோர் தன்மையையும் எடுத்துக் காட்டுவதோடு, அறத்தின் சிறப்பையும், மாணவர்க்குரிய நன்னெறிக் கருத்துக்களையும் சிறந்த எடுத்துக்காட்டுகள் மூலம் எடுத்துரைக்கும் சிவப்பிரகாச சுவாமிகளின் நன்னெறி என்னும் நீதி நூல் மாணவ உலகிற்கு ஒரு சிறந்த கொடையாக அமைகிறது என்பதில் ஐயமில்லை.

58. நீதிநூலில் புராணச் செய்திகள்

இல. தங்கராஜ், வேலூர்.

உயர்தனிச் செம்மொழியாம் நம் தமிழ்மொழி சிறந்த இலக்கியங் களைப் பெற்றதாகும். இலக்கியம் என்பது நல்ல கருத்துக்களைச் சிறந்த நடையில் வெளிப்படுத்துவதாகும். புராணங்கள் என்பவை சிறந்த தத்துவக் கருத்துக்களைக் கதை வாயிலாக வெளிப்படுத்துபவை. கந்தபுராணம் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் சூரபத்மன், சிங்கமுகாசூரன், தாரகாசூரன் ஆகிய பாத்திரங்கள் வாயிலாக விளக்குகிறது.

புராணங்கள் தத்துவங்களைக் கதைகளாக விளக்குவதோடு அல்லாமல் நீதிகளையும் கூறுகிறது. துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமி களின் நீதிநூல் புராணச் செய்திகளை எடுத்துக்கூறி நன்னெறிகளை விளக்குகின்றது. நன்னெறி என்பது நல்ல நெறிகளைக் கூறும் நூலாகும். இந்நூலில் நாற்பது செய்யுள்கள் உள்ளன. நூலின் தொடக்கத்தில் விநாயகர் வணக்கம் கூறப்பட்டுள்ளது. சிவப்பிரகாச சுவாமிகள் கடவுள் நம்பிக்கையுடையவர். புராணங்களை நன்கு கற்றவர். சிவபெருமான் வழிபாடு செய்தவராவார். இவர் புராணச் செய்திகளை நன்னெறி என்ற நீதிநூலில் விநாயகர் வணக்கம் உட்பட்ட ஏழு இடங்களில் கூறியுள்ளார்.

விநாயகர் வணக்கத்தில் விநாயகர் பற்றிக் கூறும்பொழுது மின்னொளி வீசுகின்ற சடாமுடியினை உடையவர் என்று விளக்குகிறார்.

''மின்னெறி சடாமுடி விநாயகன் அடிதொழ
நன்னெறி வெண்பா நாற்பதும் வருமே!''

எந்தக் காரியத்தையும் செய்யத் தொடங்குபவர்கள் அந்தக் காரியம் நன்றாக முடிவடைய வேண்டும் என்று விநாயகரை வேண்டி அந்தக் காரியத்தைத் தொடங்குவார்கள். சிவப்பிரகாச சுவாமிகளும் அந்த நம்பிக்கையின் அடிப்படையில் விநாயகப் பெருமானை வேண்டி நூலைத் தொடங்கி நன்றாக முடித்துள்ளார். நாமும் விநாயகரை வணங்கி நம் காரியங்களில் வெற்றிபெற வேண்டும் என்பதைத் தெரிவிப்பதாக இந்தப் பாடல் அமைந்துள்ளது.

எண்ணம் போல் வாழ்வு

நல்லோர் கூறும் வன்சொற்கள் நன்மையைத் தரலாம். அல்லோர் கூறும் இன்சொற்கள் கொடுமையை அளிக்கலாம் என்பதை விளக்க வந்த சிவப்பிரகாசர்,

- ஈசற்கு
''நல்லோன் எறிசிலையோ நல்நுதால் ஒண்கருப்பு
வில்லோன் மலரோ விருப்பு'' (நன்னெறி - 2)

என்ற புராணச் செய்தியைக் கூறியுள்ளார். 63 நாயன்மார்களில் ஒருவரான சாக்கிய நாயனார் தாம் கொண்ட புத்த வேடத்துடனேயே சிவபெருமானைப் போற்றி வந்தார். அவர் ஒருமுறை சிவலிங்கத்தைக் கண்ட மகிழ்ச்சியால் இன்ன செய்வதென்று அறியாது அருகில் கிடந்த செங்கற்சல்லிகளை எடுத்து எறிந்தார். சிவபெருமான் அக்கற்களையும் மலர்களாகவே கருதி விருப்பத் துடன் ஏற்றுக் கொண்டார். ஆனால் கரும்பை வில்லாக உடைய மன்மதன் மலர்க்கணையைப் பூட்டி சிவபெருமான் மீது எய்து அவரது தவத்தைக் கலைக்க முயன்றான். அவனது செய்கை அன்பில்லாதது அதனால் சிவபெருமான் வெறுப்புற்று மன்மதனை எரித்தார். இந்தப் பெரியபுராணக் கதை மற்றும் கந்தபுராணக் கதை வாயிலாகத் தங்களது எண்ணத்தின் அடிப்படையில் பயன்களைப் பெறுவார்கள் என்பதை விளக்குகிறார்.

வல்லவனுக்கு வல்லவன்

எவ்வளவு பெரிய கல்வியாளர்களும் செருக்கடைவார்களானால் அவர்கள் தம்மினும் வல்லவர் ஒருவரால் வெல்லப்படுவார்கள் என்பதைச் சிவப்பிரகாசர்,

''முனிக்கு அரசு கையால் முகந்துமுழுங்கும்
பனிக்கடலும் உண்ணப்படும்'' (நன்னெறி - 7)

என்ற புராணச் செய்தியைக் கூறி விளக்குகிறார்.

பேரொலி உடைய மிகப்பெரிய கடலின் செருக்கினை அகத்திய முனிவர் அடக்கினார். அந்தக் கடல் நீர் முழுவதையும் அகத்தியர் தம் கையினால் ஒரு காலத்தில் முகந்து குடித்தார் என்பது புராணச் செய்தி யாகும். அதுபோல் ஆழ்ந்த கல்வி அறிவினை உடையவராக இருக்கலாம் ஆரவாரம் உடையவராக இருக்கலாம் பிறர் கண்டு நடுங்கத் தக்கவராகவும் இருக்கலாம் எப்படிப்பட்டவராக இருந்தாலும் ஆண் சிங்கத்தின் செருக்குப் போன்ற செருக்கிலே தம்மை ஆழ்த்திவிட்டால் அவரைக் காட்டிலும் வல்லவர் ஒருவரால் வெல்லப்படுவார் என்பது உலக நியதி. இதையே சிவப்பிரகாச சுவாமிகள் தனது நீதி நூலாகிய நன்னெறியில் புராணச் செய்தியைக் கூறி விளக்குகிறார்.

சேரிடம் சேர்ந்து வாழ்தல்

ஒருவனின் பகைவன் தன்னைக் காட்டிலும் வலிமையுடையவனாக இருப்பானானால் அப்பகைவரை விட வலிமையானவர்களை அறிந்து அவருடன் சேர்ந்து வாழ்ந்தால் பகைவரைக் கண்டு அஞ்ச வேண்டிய தில்லை என்பதைச் சிவப்பிரகாசர்,

- பலி ஏல்

''கடவுள் அவிர்சடைமேல் கட்செவி அஞ்சாதே
படர்சிறை அப்புள் அரசைப்பார்த்து'' (நன்னெறி - 9)

என்ற புராணக் கருத்தைக் காட்டி விளக்குகிறார்.

கடவுள் என்பவர் அடியவர்கள் செய்யும் பூசையை மனமுவந்து ஏற்றுக் கொள்பவர் ஆவார். அவர் எல்லா வல்லமையுடையவர்.

பாம்பு (கட்செவி) தனது கண்களையே காதாக உடையது. தன்னுடைய பகைவரைக் கண்டு அஞ்சுவது. கருடன் (புள் அரசு) பாம்பினைக் கொல்லும் வலிமையுடையது. பாம்பு கருடனைவிட வலிமையுள்ளதாக இருந்தாலும்; கருடனைக் கண்டு அஞ்சக்கூடியது என்றாலும் எல்லாம்வல்ல இறைவனாகிய சிவபிரான் முடிமேல் இருக்கின்றபொழுது அக்கருடனைக் கண்டு அஞ்சுவதில்லை - என்ற செய்தியை சிவப்பிரகாசர் நமது நூல் மூலமாக உணர்த்தியுள்ளார்.

அடக்கமான வாழ்வே அமைதியான வாழ்வு

நில உலகில் எவையும் நிலையில்லாத தன்மையுடையவை ஆகும். செல்வமும் நிலையில்லாதது. தொன்று தொட்டு குறையாத செல்வத்தை உடையவனாக இருந்தாலும் ஒருவன் அதனால் செருக்கு அடையாமல் பணிவுடனும் அடக்கத்துடனும் வாழ்தல் வேண்டும் அல்லாமல் செருக்கிலேயே இருப்பானானால் அச்செல்வத்தாலேயே அவனுக்கு அழிவு உண்டாகும். அதனால் தலைமை சான்ற அறிவினையுடைய வர்கள் செருக்கினால் செல்வம் அழியும் என்பதை அறிந்து அடங்கி வாழ்தல் வேண்டும் என்பதை,

- ''இலையால்

இரைக்கும் வண்டு ஊதுமலர் ஈரங்கோதாய் மேரு
வரைக்கும் வந்தன்று வளைவு'' (நன்னெறி - 14)

என்ற புராணக் கருத்தினைக் கூறி விளக்கியுள்ளார்.

மேருமலையானது மிகவும் உயர்ந்தது எவராலும் அசைக்க முடியாத வலிமையை அது பெற்றுள்ளது. அதனால் அது நிகரில்லாமல் நிற்கிறது. இத்தகைய உயர்வான மேருமலைக்கும், ஒரு காலத்தில் தாழ்வாகிய வளைவு உண்டானது. சிவபிரான் ஒரு சமயம் முப்புரங்களையும்

அழிக்கின்ற பொழுது மேருமலையை வில்லாகக் கொண்டு வளைத்தார். அதுபோல ஒருவர் தம்முடைய வாழ்வில் செல்வ நிலையில் ஓங்கி உயர்ந்து நிற்கும்பொழுதும் செருக்கில்லாமல் அடக்கமாக வாழ்தல் வேண்டும் என்ற உயர்ந்த கருத்தினை உலக மக்கள் உணரவேண்டும் என்ற நோக்குடன் சிவப்பிரகாசர் நன்னெறியில் குறிப்பிட்டுள்ளார்.

முறையான கல்வி முக்தி தரும்

இலக்கண முறைப்படிக் கற்காமல் அரைகுறையாக முறையற்றக் கல்வியினைக் கற்றவர்கள் மற்றவர்கள் கண்டு அஞ்சுமாறு கல்வியின் பெருமையால் ஆரவாரம் உள்ளவர்களாக இருக்கலாம். அவர்கள் இலக்கண அறிவு உடையவர்களைக் கண்டபொழுது அவர்களின் ஆரவாரம் களைந்து போய்விடும். முறையாகக் கல்லாதவர்களின் கல்வி சிறப்பைத் தராது பெருமை சேர்க்காது என்பதனை

"எழுத்து அறிவார்
ஆயும் கடவுள் அவிர்சடைமுன் கண்டஅளவில்
வீயும் சுரநீர் மிகை" (நன்னெறி-21)

எனும் புராணக் கருத்தினைத் தமது கருத்திற்குச் சான்று காட்டி விளக்கியுள்ளார்.

ஆகாய கங்கை என்பது மிகுந்த நீர்ப்பெருக்கைக் கொண்டது. இலக்கணம் நன்கு கற்ற எழுத்துக்களை அறிந்த பெரியோர்களால் ஆராயப்படும் கடவுள் சிவபெருமான்.

ஒரு காலத்தில் பகீரதன் என்னும் வேந்தன் அந்த கங்கையினை மண்ணுலகிற்குக் கொண்டு வருவதற்காகக் கடுந்தவம் செய்தான். இறைவனும் அருள் புரிந்தான். ஆனால் கங்கையானது மிகவும் செருக்குற்று உலகையே அழித்து விடுவது போன்ற ஆரவாரத்துடன் வந்தது. அதனால் சிவபிரான் தனது சடைமுடியினால் ஆகாயக்கங்கையின் நீர்ப்பெருக்கைத் தாங்கினார். அதனால் வெள்ளம் அடங்கி செருக்கும் தணிந்தது.

"குறைகுடம் கூத்தாடும்" என்பது போன்ற முறையாக இலக்கணத்தோடு கல்லாதார் வீண்பெருமையும் ஆரவாரமும் கொண்டு திரிவர். அவர்கள் முறையாக கற்றவர்முன் சிறப்படையாது தாழ்வர் என்பதைச் சிவப்பிரகாசர் நீதிநூல் வாயிலாக மக்கள் பயனடையும் பொருட்டு வழங்கியுள்ளார்.

தற்புகழ்ச்சி கூடாது

ஒருவன் மிகுந்த உயர்வினை உடையவனாக இருக்கலாம். அவனைப் பல பெரியவர்கள் புகழ்ந்து கூறியிருக்கலாம். அதனால் செருக்கடைந்து அப்பெரியவர்களின் முன்பாகவே தன்னைத்தானே புகழ்ந்து கூறிக்கொள்ளுதல் கூடாது. அவ்வாறு இல்லாமல் அவன் தன்னைப்

புகழ்ந்து கூறினானாயின் அவன் அந்த உயர்வினை என்றும் பெற்றிருக்க மாட்டான். அப்பெரியவர்களாலேயே தாழ்ச்சி அடைவான் என்பதை,

- ''தெரியாய்கொல்
பொன்உயர்வு தீர்த்த புணர்முலையாய்! விந்தமலை
தன்உயர்வு தீர்ந்தன்று தாழ்ந்து'' (நன்னெறி - 37)

என்று நன்னெறி கூறுகிறது. விந்திய மலை என்பது மிகவும் உயர்ந்த மலையாகும். அதன் உயர்வைக் கருதி அகத்திய முனிவரும் அதனை ஒருகாலத்தில் பாராட்டியுள்ளார். அதனால் அம்மலை பின்னத்தன்னைக் காட்டிலும் உயர்ந்த மலை வேறொன்றும் இல்லை என்றும் தானே மிக உயர்ந்த மலை என்றும் செருக்கடைந்து நின்றது. பின்னர் அதன் செருக்கினை அறிந்த அகத்திய முனிவர் தம்முடைய கையை அதன் முடியின் மீது வைத்து ஊன்றினார். அதனால் அம்மலை தாழ்வினை அடைந்தது, தன்னுடைய உயர்வை இழந்தது பெரியோர்கள் முன் செருக்கு அடைதல் கூடாது, தற்புகழ்ச்சி கூடாது என்பதை உணர்த்த இக்கதையைக் காட்டி தெளிவாக விளக்கியுள்ளார்.

சிவப்பிரகாச சுவாமிகள் தலைசிறந்த ஞானியாவார். அவர் மக்களுக்கு நீதிகளை புகட்டும் நோக்கத்தோடு எழுதிய நன்னெறியில் விநாயகர் வணக்கம் உட்பட 41 செய்யுள்கள் எழுதியுள்ளார். இச்செய்யுள் களில் மேலோர் பெருமைகள் அறிவுடையோர் சிறப்புக்கள் கல்லாமையின் இழிவுகள் நல்ல குணங்கள் தீய குணங்கள் காதல் நட்பு கொடை ஆகியவை பற்றியெல்லாம் பேசுகிறார்.

நாற்பது செய்யுள்களிலும் கூறப்படும் கருத்துக்கள் எடுத்துக்காட்டு களுடன் விளக்கப்பட்டுள்ளன. விலங்குகளின் இயல்புகள், இயற்கை நிகழ்ச்சிகள் போன்றவைகளை எடுத்துக்காட்டுகளாக கூறப்பட்டுள்ளன. புராணச் செய்திகள் விநாயகர் வணக்கம் உட்பட ஏழு இடங்களில் கூறப்பட்டுள்ளன. நீதிநூல் செய்யும் பொழுது புராணங்களின் சில உட்கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தால் சிவப்பிரகாசர் இந்த எடுத்துக்காட்டுகளை கூறி விளக்குகிறார்.

59. பெண்ணியல் நோக்கில் சிவப்பிரகாசர்

தாயம்மாள், கொடைக்கானல்.

ஒரே சமயத்தில் பெண்ணைப் போற்றுதலும் தூற்றுதலும் செய்கின்ற முரண்போக்கு சமயக் கவிஞர்களிடம் காணப்பெறுகிறது. துறைமங்கலம் சிவப்பிரகாசரும் இதற்கு விதிவிலக்கு அல்லர். பெண் தெய்வங்களைப் போற்றுகிறார்; மனைவியின்றி மற்றொரு பெண்ணைக் கொள்ளல் பிழை என்கிறார்; பெண்ணும் ஆணும் இணைந்தது இனிய இல்லறம் என்கிறார்; பெண் மகப்பேற்றைப் பெருமை ஆக்குகிறார்; ஆண்களால் பெண்கள் படும் அவலங்களை அழகிய உவமையாக்கி விள்க்குகிறார்; பெண்டிரை மகடூஉ முன்னிலைப்படுத்தி நன்னெறியைப் படைக்கிறார்; ஆனால் அதே சமயத்தில் பெண்ணை நோயாக நினைக்கிறார். பெண் மறுத்தலையும் வெறுத்தலையும் தம் படைப்புகளில் இணைக்கிறார். தமிழ்ச் சமய இலக்கியப் படைப்பாளிகளிடம் குறிப்பாகச் சைவ சமயப் படைப்பாளிகளிடம் பெண் வெறுப்புக் கருத்து இடம்பெற்றமை ஆராயத்தக்கது.

1. பண்டைத் தமிழர் பெண் வெறுப்பாளி அல்லர்; காதல் வெறுப்பாளியும் அல்லர்; திருமண வெறுப்பாளியும் அல்லர். சங்க இலக்கியங்கள் தலைவனும் தலைவியும் களவில் காதலித்துக் கற்பில் இல்லறம் துய்த்தலைச் சிறப்பாக எடுத்துரைக்கின்றன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் ஐந்திணைகள் பெண்ணையே முன்னிறுத்திப் படைக்கப்பட்டுள்ளன. தமிழிலக்கியத்தில், இலக்கணங் களில் தமிழரின் உயிர் அகம். யூத கிறித்துவ நெறிகளைப் போல ஆணும் பெண்ணும் நேசித்தல் பாவம் (Sin) அன்று.

2. பண்டைத் தமிழர் சமயத்தில் சேயோன் எனும் முருகனின் தாயாகிய 'பழையோள்' எனப்பெறும் கொற்றவையே தலைமைத் தெய்வம். கொற்றவை பாலைத்தெய்வம் என்பதோடு மட்டுமில்லாமல் பழந்தமிழரின் தலைமைத் தெய்வமாக இருந்ததைச் சேரநாட்டு அயிரைமலைக் கடவுளாகக் கொற்றவை இலங்கியதைப் பதிற்றுப் பத்து பல இடங்களில் தெளிவுபடுத்தும். இன்றைய தமிழர் வாழ்விலும் பண்டைய கொற்றவையே பலவேறு அம்மன் வழிபாடாகத் தமிழ் மக்களிடையே பரவியும் விரவியும் போற்றப்படுகிறாள். பின்னாளில் இணைக்கப் பெற்று ஏற்றுக்கொள்ளப் பெற்ற சிவமதத்திலும் சக்தியே

தலைமை இடம் பெற்றுள்ளாள். இதன் இன்னொரு வடிவத்தையே பண்டைத் தமிழரின் தலைநகரமான மதுரையில் அமைந்துள்ள மீனாட்சி அம்மை கோயிலும் புலப்படுத்துகின்றது.

3. தமிழர் பண்டை நாளிலும் பின்னாளிலும் தலைமைத் தெய்வமாகத் தாய்த் தெய்வத்தையே கொண்டிருந்தனர்.

4. தலைமுறை தலைமுறையாகப் பெண்ணுடன் காதலித்து வாழுதலையும், குழந்தை பெறுதலையும் குடும்பமாக இருத்தலையும் போற்றி வந்த தமிழர் வாழ்வில் பெண் மறுப்பும் வெறுப்பும் இடம்பெற்றமை இடை வரவுதான். இவ்விடை வரவுக்கு மூலகாரணம் பெண் மறுப்புச் சமயங்களான சமணமும் பௌத்தமும் தமிழரிடையே பரப்பப்பட்ட தாகும். இச்சமயங்கள் ஆண் தலைமைச் சமயங்கள்; பெண்ணை முன்னிறுத்துவன அல்ல. பெண்ணின்பத்தை மறுப்பன; வெறுப்பன. பெண் நேரே வீடுபேறு எய்தும் தகுதி உடையவள் அல்லள் என்பதைக் கோட்பாடாகக் கொண்டது சமணம். அன்றியும் பெண்ணை மறுத்தும் விலக்கியும் வாழும் துறவு நெறியை முன்னிலைப்படுத்துவன. தமிழர் இடைக்காலத்தில் சமண பௌத்த நெறிக்கு ஆட்பட்டதன் விளைவே பெண் மறுப்பும் வெறுப்பும் எனக் கருதுதல் தகும்.

5. கி.பி. 3-ஆம் நூற்றாண்டளவில் சமண பௌத்த நெறிகளிலிருந்து துறவை வரித்துக்கொண்ட இடைக்காலத் தமிழர் சமய நெறி கி.பி. 17-ஆம் நூற்றாண்டளவு - ஏன் இன்றளவும் இக்கொள்கையைப் போற்றுதல் வியப்புதான். சமயப் பரப்புதலுக்கு என அமைப்பு ரீதியாக மடங்களை நிறுவுதல் தமிழர்தம் பண்டைய நெறி என்று சாற்றுவதற்குச் சான்றுகள் இல்லை. தனிமடங்கள் நிறுவுவது பௌத்தர்தம் பழக்கமாகும். தாமும் தம் சமயத்தைப் பரப்பப் பௌத்தரைப் பார்த்து அமைத்துக் கொண்டதே சைவ மடங்கள் என்று கொள்ளல் தகும். சிவநெறி போற்றிய மன்னர்களும் சைவ மடங்களை அமைக்க உதவினர்; மானியங்களை வழங்கினர். சமண பௌத்தரைப் போலவே மடத்தலைவராகவும், அவர்தம் துணைவராகவும் இடம் பெற்றோர் பெண் துணையை மறுக்கும் துறவிகள் ஆயினர்.

துறைமங்கலம் சிவப்பிரகாசர் வாழ்வும் இதைத்தான் காட்டுகிறது. அண்ணாமலை ரெட்டியார், திருமணம் செய்து கொள்ளுமாறு சிவப்பிரகாசரை வேண்டியதும், சிவப்பிரகாசர் அதை மறுத்ததும் இவற்றைத் தொடர்ந்து ரெட்டியார் சிவப்பிரகாசர்க்குத் தனிமடம் கட்டிக் கொடுத்ததும் இந்தப் பின்னணியில் எண்ணத்தக்கன. கடவுளைச் சரிபாதி பெண்ணாகவும் ஆணாகவும், அம்மையப்பராகவும் கருதிய ஒரு கட்டத்தில் பார்வதி, கங்கை, முருகன், மலர்மகள், வள்ளி எனக்

கடவுளரைக் குடும்ப அமைப்பினராகக் கண்ட ஒரு சமய அமைப்பில் தனித்துறவு வந்ததும் நிலைத்ததும் தமிழர் வரலாற்றில் நிகழ்ந்த வியப்பா விபத்தா என்பது தொடர்ந்து ஆராயத்தக்கது.

1. திருமணம் மறுத்த சிவப்பிரகாசர்

துறைமங்கலம் அண்ணாமலை ரெட்டியார் என்பவர் சிவப்பிரகாசரை மதித்து அவர் தமிழ் மீதும் அறிவு மீதும் கொண்ட பக்தியால் 'பொருள் கொடுத்துப்' புரந்தார். அவரை மட்டுமல்லாது அவர்தம் தம்பியர் வேலாயுதம், கருணைப் பிரகாசம், தங்கை ஞானாம்பிகை ஆகியோரையும் காத்தார். வாலிகண்டபுரத்தில் இருக்கும்போது சிவப்பிரகாசருக்கு மடம் ஒன்று கட்டியும் கொடுத்துப் பல நூல்களை இயற்றக் கூறியதன் அடிப்படையில் திருவெங்கைக் கோவை, திருவெங்கைக் கலம்பகம், திருவெங்கை உலா, திருவெங்கை அலங்காரம் ஆகிய நான்கு சிற்றிலக்கியங்களை யாத்திடச் செய்தார்.

தம் வாழ்வில் மிக அணுக்கமான அண்ணாமலை ரெட்டியார், சிவப்பிரகாசரை நோக்கி 'தேவரீர் விவாகம் செய்து கொள்ள வேண்டும்' என்று வேண்டவே, அதற்கு அவர்,

''சேய்கொண்டா ருங்கமலச் செம்மலுட னேவரப்
பாய்கொண்டா னும்பரவும் பட்டீச் சுரத்தானே
நோய்கொண்டா லும்கொளலா நூறுவய தளவிருந்து
பேய்கொண்டா லும்கொளலாம் பெண்கொள்ள லாகாதே

என்றும்,

கிட்டையிலே தொடுத்து முத்தி பெறுமளவும் பெரியசுகங்
கிடைக்கும் காம
வேட்டையிலே மதிமயங்குஞ் சிறுவருக்கு மணம்பேசி
விரும்பித் தாலி
கட்டையிலே தொடுத்து நடுக்கட்டையிலே கிடத்து மட்டும்
கவலைதானே

என்றும், இல்லறத் துன்பத்தை எடுத்தியம்பித் திருமணம் செய்ய மறுத்துத் துறவியாகவே 72 அகவை வரை சிவத்தொண்டாற்றினார். மூத்த தமையர் எனும் முறையில் தம் தம்பியர் இருவருக்கும், தங்கைக்கும் மணம் புரிவித்தார்.

2. பெண் பற்றிய செய்திகள்

நோய் கொண்டாலும் கூடப் பரவாயில்லை; நூறு வயதளவு இருந்து பேய் கொண்டாலும் கொள்ளலாம்; பெண் மட்டும் கொள்ளலாகாது என்று சிவப்பிரகாசர் சுட்டுவது ஆய்ந்து எண்ணற்குரியது. பெண்ணுடன்

சிலகாலம் வாழ்வது பேயுடன் நூறு வயதளவிருந்து வாழ்வதினும் கொடியதாம் என்பது. நோய் உடலைத் துன்புறுத்துவது; பேய் உயிரைத் துன்புறுத்துவது; பேய் தன்னால் பிடிக்கப்பட்டவன் மனத்தைத் திரித்துத் தன் விருப்பப்படி ஆட்டுவிக்கும். அவ்வாறே பெண்ணும் தன்னை மணந்தவனின் மனத்தை மாற்றித் தன்வயப்படுத்தி ஆட்டி வைப்பாள். பேய் தன்னால் பிடிக்கப்பட்டவனை மட்டுமன்றிச் சார்ந்தவர்க்கும் அவன் மூலம் தொல்லை தரும். பெண்ணும் அப்படியே.

இங்கு சிவப்பிரகாசர், மனைவியாக வருபவளை நோயினும் பேயினும் கொடியவள் என்று கூறுவது பொருந்துமாறு இல்லை. இருப்பினும் சுவாமிகள், தம் துறவுக்குக் கேடு வரலாகாது என்பது கருதியும் உலகில் மனையறத்துக்கு மாறாக நடக்கும் பெண்களை மனத்தில் கொண்டு தமக்கு அப்படி ஒருத்தி அமைந்து விட்டால் கொடுமை என நினைந்து பாடியிருக்கக் கூடும் (உரை அறிஞர் ஆ. சிவலிங்கனார், தனிப்பாடல்கள் மூலமும் உரையும், ப. 30).

3. மனைவியன்றி மற்றொரு பெண்ணைக் கொள்ளல் பிழை

ஒருவர் இன்னொரு பெண்ணைக் கொண்டிருப்பது பிழை என்பது சிவப்பிரகாசர்தம் கொள்கை. இதைச் சிவன்-பார்வதி-கங்கை எனும் கடவுள்ர்தம் உரையாடலில் நயம்படப் புனைந்துள்ளார். சிவபெருமான் தலைமங்கையாம் இன்னொரு பெண்ணை வைத்திருப்பதை அறிந்த பார்வதி வெகுளியாகக் கேட்கிறார்.

பார்வதி : ஐய! நின் தலையில் உறைகின்ற மடமங்கை யார்?

சிவன் : அது பெண் இல்லை; அழகு ஒழுகும் தண்புனல்

பார்வதி : கரிய விழி, காது, வாய் இவை புனலுக்கு உண்டோ?

சிவன் : கமலம், காவிமலர், கொடி வள்ளை இலையும், தூய செங்குமுத மலரும் அல்லாமல் வேறு இல்லை.

பார்வதி : மேற்சொன்ன மலர்கள் புனலிடை இருப்பன சரியே! ஆயின் அங்கே கூந்தலும், கொங்கையும் புனலில் இடையில் உண்டோ?

சிவன் : கொங்கையும் கூந்தலும் இல்லை; நீர்க்குமிழியும், பாசியும் ஆகும். என்னை மறுத்துப் பேசுகிறாயே நங்காய்!

கங்கை : (கங்கையைச் சிவன் விளிப்பதாக எண்ணி கங்கை) ஏன்? என்று கேட்டுவிட

சிவன் : (நாணோடு வணங்கி) ''என் பிழை பொறுத்திடு'' என்று வெட்கி உரைத்திட்டார்.

மேற்கண்ட கருத்துடைய பாடல்

ஐயநின் சென்னிமிசை உறைகின்ற மடமங்கை யாரென்ன
உமைவினவவும் அன்னதொரு மடமங்கை அன்றுவெண்
திரைகொழித்து அழகொழுகு தண்புனல் எனத்
துய்யவொளி ஆனனம் கரியவிழி காதுவாய் தோயத்தில்
உண்டோஎனச் சொல்லரும் கமலமலர் காவிமலர்
கொடிவள்ளை தூயசெங் குமுதம் என்னப்
பொய்யென நினைத்துநல் கொங்கையும் கூந்தலும்
புனலினிடை உண்டோவெனப் புற்புதம் சைவலமது
எனவே மறுத்துப் புகன்றிடுதி நங்காய் எனத்
தய்யலவள் ஏன்என்ன நாணொடு வணங்கிஎன் றன்பிழை
பொறுத்திடுஎன்றே சங்கரன் உரைத்திடத் திருவுளம்
மகிழ்ந்தசிவ சங்கரி உமைக்காக்கவே (தனிப்பாடல்-5)

ஆக, ஒருவன் ஒருத்தி என்ற கோட்பாட்டை உலகினர்க்கு ஓதவே இப்பாடலை இயற்றியுள்ளார் சிவப்பிரகாசர். இன்னொரு பெண்ணை ஒருவர் கொண்டிருப்பது பிழை என்பதும், கடவுளே ஆயினும் அப்பிழைக்குத் தம் துணைவியிடம் ‘என் பிழை பொறுத்திடு’ என்று மன்னிப்புக் கேட்க வேண்டும் என்பதும் சிவப்பிரகாசர்தம் உட்பொதி கருத்துகளாம்.

4. இருபெண்கள் உரையாடும் நயம்

மலைமகளும் மலர்மகளும் தம் கணவன்மார்களைப் பற்றிப் பின்வருமாறு பேசி மகிழ்கிறார்கள். பேச்சில் கணவன்மார்களின் எளிமை புலப்படுத்தப்படுகிறது.

மலைமகள் : இலக்குமியே என் கணவருக்கு உணவு பிச்சை சோறுதான்.

மலர்மகள் : என் கணவர்க்கு உணவு மண்ணுதான்.

மலைமகள் : என் கணவர்க்குக் காளை ஒன்று உண்டு.

மலர்மகள் : மாடு மேய்த்த இடையர் என் கணவர்.

மலைமகள் : என் கணவர் ஒரு தூதுவர்

மலர்மகள் : என் கணவர் தூது சென்ற கதையே ஒரு பாரதம்

மலைமகள் : தாம் வைத்திருந்த பிச்சை ஓட்டைத் தாமே திருடியவர் என் கணவர்

மலர்மகள் : என் கணவர் வெண்ணெய் திருடிக் கயிற்றால் கட்டப்பட்டவர்

மலைமகள் : அம்பலத்தில் ஆடியவர் என்னவர்

மலர்மகள் : காளிங்கன் என்னும் பாம்பு மேல் நின்று நடனம் ஆடியவர் என் கணவர்

மலைமகள் : நஞ்சுண்டவர் என் கணவர்

மலர்மகள் : மண் உண்டவர் என் கணவர்

இப்பெண்டிர்தம் உரையாடல்வழி சில சிறப்புக்கள் அறியப்படுகின்றன. பெண்டிர் தம் கணவர் பெருமைகளைப் பறையடிப்பவர் என்பதும், விட்டுத்தராதவர் என்பதும் மிகவும் எளிமை வாய்ந்தவர் என்பதும் புலனாகின்றன.

5. பெண்களை முன்னிலைப் படுத்துதல்

சிவப்பிரகாசர் வீரசைவர் நெறியினர். வீரசைவத்தின் விளைநிலம் கன்னட நாடு. சிவப்பிரகாசர் கன்னட மொழியை நன்கு கற்றறிந்தவர். கன்னட மொழியிலிருந்து ஓரிரு நூல்களை மொழிபெயர்த்தவர். பெண்களை முன்னிலைப்படுத்தி இலக்கிய இலக்கணங்கள் படைப்பது கன்னட நெறி. இதன் பாதிப்பால் சிவப்பிரகாசர் தாம் படைத்த நன்னெறி நூலை மகடூஉ முன்னிலைப்படுத்தி அமைத்தனர் ஆதல் கூடும். பெண்ணை முன்னிறுத்தி அறநூலைப் படைத்ததன் மூலம் பெண்வழி அறநெறிகள் குழந்தை முதல் குடும்பம் வரை வேரூன்றி விரைவில் பரவும் என்பதும் நோக்கமாதல் கூடும். அவர் மகடூஉ முன்னிலைப்படுத்திய மொழிகளாவன. 1. பொலிகுழலாய் 2. நன்னுதால் 3. குன்றினால் செய்தனைய கொங்கையாய் 4. பூக்குழலாய் 5. மதிஎன் முகத்தாய் 6. திருந்திழாய் 7. மலை அளவு நின்ற முலைமாதே 8. மலர் ஈர்ங்கோதாய் 9. நல்லாய் 10. பைந்தொடீஇ 11.பொன்செய் அதிர் வளையாய் 12. தெரியிழாய் 13. பூரிக்கின்ற முலைப்பேதாய் 14. கருங்கண்ணாய் 15. அம்மா 16. மடவரால்! 17. பண்ணின் புகலும் பனி மொழியாய் 18. நேரிழாய் 19. நன்னுதால் 20. பிறைநுதால் 21. வாள்விழியாய் 22. பொன் உயர்வு தீர்த்த புணர் முலையாய் 23. நல்லாய் 24. பொற்றொடீஇ 25. பொன்னே ஆக இருபத்தைந்திற்கும் மேலான இடங்களில் பெண்ணை முன்னிலைப் படுத்துகிறார்.

6. பெண்ணும் ஆணும் இணைந்த இல்லறச் சிறப்பு

சிவப்பிரகாசர் இல்லறம் பற்றிய உயரிய கோட்பாடு உடையவர். கணவனும் மனைவியும் ஒன்றிணைந்து வாழவேண்டும். கண்கள் இரண்டும் ஒரே காட்சியைக் காணுதல் போலக் கணவன் மனைவி இணைந்து செயல்பட வேண்டும் என்கிறார். சான்று :

காதல் மனையாளும் காதலனும் மாறுஇன்றித்
தீதுஇல் ஒருகருமம் செய்பபே - ஓதுகலை
எண் இரண்டும் ஒன்றும் மதிஎன் முகத்தாய் - நோக்குமால்
கண் இரண்டும் ஒன்றனையே காண் (நன்னெறி - 6)

7. பெண் மகப்பேற்றைப் பெருமை ஆக்கல்

உலகில் 'ஆண் குழந்தை பெற்று உயர்க' என்று மணமக்களுக்கு ஆசி வழங்குதலே இயல்பு. ஆனால் சிவப்பிரகாசர் பெரியநாயகி யம்மையின் பிறப்பைப் போற்றும்போது 'ஆண்மகற் பெறுக என்று ஆசி சொல்பவர் நாணும்படி பெண் பெறந்தார்' என்கிறார். சான்று:

கற்றா ரறிகுவர் மக்கடம் பேறெனக் கட்டுரைத்த
சொற்றான் ஒருபெண் ஒழித்ததென் பாரொடு தொல்லுலகி
நற்றாண் மகற்பெறு கென்றாசி சொல்பவர் நாணவுனைப்
பெற்றான் மலையரையன்

(பெரியநாயகியம்மை கலித்துறை - 12)

8. திருக்காட்டுப் பள்ளி என்ற பெண்ணின் கவித்துவத்தை வெளிக்கொணர்தல்

திருக்காட்டுப்பள்ளி என்னும் ஊரில் தங்கியிருந்தபோது கல்வியிற் சிறந்த ஒரு பெண் தெருவில் உப்பு விற்றுச் சென்றது கண்டு அவளின் புலமைத் திறத்தைப் பிறர்க்கு உணர்த்தப் பாடல் பாடினார்; அப்பெண்ணும் கவிதை பாடினார்.

9. இயற்பகையார் மனைவிக்கு ஏற்பட்ட நிலைக்கு வருந்துதல்

உலகியலுக்கு ஒவ்வாத நிகழ்ச்சியாகச் சிவ அடியார் இயற்பகை நாயனாரின் மனைவியைத் தருக என்று கேட்கிறார். அப்பெண்ணுக்கு ஏற்பட்ட பிழையை எந்த ஒரு பெண்ணும் பொறுக்க மாட்டாள்; பொறுக்கக் கூடாது என்பதே சுவாமியின் கருதுகோள். அந்நிலைக்கு வருந்துவது போல,

..........நல்லியற்பகையார் மனைக்குற்றவொரு
பிழை பொறுத்தாய் (பெரியநாயகியம்மை கலித்துறை - 3)

என்று பெரியநாயகியைப் பாடுகிறார்.

10. பெண்கள் படும் துன்பத்திற்கு ஆண்களே காரணம்

பெண் கேட்டு மன்னர் ஓலை கொண்டு வந்த தூதுவரிடம் மகள் மறுத்துக் கூறும் மறம் என்ற தனிப்பாடலில் சிவப்பிரகாசர் பெண்கள் படும் இன்னல்களை விளக்கி அவற்றுக்குக் காரணர் ஆண்களே என்பார். 'உங்கள் அரசர்கள் தாம் மணந்த பெண்ணை விற்றனர், காட்டில் அழ விட்டனர்; சிறைபுக விட்டனர். துகில் உரிய விட்டனர். யாங்கள் சிவனார் மகன் முருகனுக்கு எம் வளர்ப்புப் பெண்ணைத்தான் கொடுத்தோமே யன்றிப் பெற்ற மகளைக் கொடுப்போமோ? பெண் கேட்ட இவர்கள் வாயில் எச்சில் உமிழுங்கள்; பெண் கேட்ட ஓலையைக் கிழித்துக் காற்றில் உருட்டுங்கள் என்று பொருள் படும் பாடலில் பெண்ணை உயர்வாகப் போற்றி ஆண்களைப் பழிக்கிறார்.

மனைவியை விற்றவர் (அரிச்சந்திரன்) வனத்தில் அழவிட்டவர் (நளன்) தவம்சிறை புகவிட்டவர் (இராமன்) துகில் உரிய விட்டு விழித்தவர் (பாண்டவர்) ஆகிய எல்லோரும் பெண்களின் துயரங்களுக்கு காரணர் ஆனவர். இனியும் பெண்கேட்டு வருதல் பிழை என்கிறார். ஆகப் பெண்ணை அழாமல் போற்றவேண்டும் என்பது சிவப்பிரகாசர் ஆணை.

11. பெண் கொடுத்தல் பற்றிய செய்தி

'சிவனே உன் மாமனாரும் மாமியும் உன்னை வெறுக்காமல் உனக்குப் பெண் கொடுத்துள்ளனர். உன் உடம்பு எலும்பும் தோலுமாய் இருப்பதைக் கண்டு வெறுக்கவில்லை; நீயோ இளமையில்லாத பழைய மலை (பழமலை) என்றாலும் உனக்குப் பெண் கொடுத்துள்ளார் என்றால் மலையரசன் என்ற சாதி ஒப்புமையினை மட்டும் மனத்தில் கொண்டனர் போலும். (நெடுங்கழிநெடில் ஆசிரிய விருத்தம்) வேலவர் தமக்குப் பெண் கொடுத்ததும் சாதியினாலே. வேடன் என்ற இனத்தை எண்ணியே (பெரியநாயகியம்மை கலித்துறை)

12. பெண்ணின்பத்தைப் பழித்தல்

சிவப்பிரகாசர் தம் பாடல்களில் மாணிக்கவாசகரைப் போலப் பெண்வழி இன்பத்தைப் பேசிப் பழிக்கிறார். சான்றுகள்:

1. ஐயநுண் மருங்குல் மாதர்மேல் வைத்த ஆதரவுன் பதாம் புயத்து
   மெய்யுறு............ (சோணசைலமாலை - 64)

2. மங்கையர் பாரக் கொங்கை யங்குவட்டு மதர்விழிக்
   கடலினு மசைக்
   கங்குலினூடுஞ் சென்ற என்மனத்தைக்
   கதியிடை நடத்துமா றெதிதோ (84)

3. அரிஅரவ சயனத்தை அரவுருவ மானத்தை
   அறியாய்கொல் சிறிதும் என்ன (தனிப்பாடல் - 7)

4. தார்தரு குவவுக் கொங்கை நுண்மருங்குல் தையலார்
   மையலென் றொழிவேன் (சோணசைலமாலை - 24)

5. பெண்ணருங் கலமே யமுதமே யெனப்பெண்
   பேதையர்ப் புகழ்ந்தவந் திரிவேன் (சோணசைலமாலை - 27)

6. உயங்குநூலிடைப் பூங்கோதைய ரல்குல் ஒளிமணிப்
   பாம்பு தீண்டுதலான்
   மயங்குவேன் தனக்குன் பரமருந் துதவி மயக்கமென்
   றொழித்தருள் புரிவாய் (சோணசைலமாலை - 28)

மேற்கண்ட பாடல்களில் பல வரிகளில் பெண்ணை அவள் தரும் இன்பத்தைப் பழிப்பதைக் காணலாம். துறவுள்ளம் கொண்டவர் சுவாமிகள். துறவுக்கு இடையூறு தரும் ஒருத்தியை வெறுத்தல் என்பது பக்தர் களிடம் பரவிக் கிடக்கும் கருத்து. இல்லறத்தில் இருந்துகொண்டு பொதுநலன் செய்வது சிறிது கடினம் என்று கருதியிருக்கலாம். பெண்ணின்பத்தை வெறுத்த சுவாமிகள் பெண்ணை எல்லா இடத்தும் போற்றியுள்ளார் என்பதே இவ்வாய்வுக் கருத்து ஆகும். பெண் தெய்வங்களைப் போற்றுதல், பெண் பற்றிய செய்திகள், மனைவியின்றி மற்றொரு பெண்ணைக் கொள்ளல் பிழை, பெண்ணும் ஆணும் இணைந்த இனிய இல்லறச் சிறப்பு, பெண் மகப்பேற்றைப் பெருமை ஆக்கல், திருக்காட்டுப்பள்ளிப் பெண்ணிடத்தும், இயற்பகையார் மனைவியிடத்தும் மதிப்பளித்தல், ஆண்களால் பெண்கள் படும் பெருந்துன்பம் போன்ற செய்திகளால் பெண்ணின் பெருமைகளைப் போற்றி ஏற்றுபவர் சிவப்பிரகாசர் என்று உணரலாம்.

60. திருக்கூவப் புராணம் காட்டும் துறவோர் நெறி

கா. திருநாவுக்கரசு, பேரூர்.

கல்போல் அசைவற்றுக் கிடந்த உயிரைத் தனு, கரண, புரண, போகங்கள் வழி மனிதனாக்கியது சிவம். அவ்வாறு மனிதனாய் நின்ற நிலையில் வியத்தலும் உவத்தலும் ஏற்பட்டு உயிர் தீவினைச் செயல் பாட்டை நாடுகிறது. அந்நிலையில் இறையின் அருளால் அவதாரம் பெற்ற அருளாளர்கள் மனிதனையும், அவன் வாழும் சமுதாயத்தையும் நன்னெறிக்கு இட்டுச் செல்கின்றனர். அத்தகைய அருளாளர்களின் அருட்பணி, கைத்தொண்டாகவும், கவித்தொண்டாகவும், அற்புதங்களின் அருளிச் செயல்பாடுகளாகவும் அமைந்து மனித குலத்தை காலந்தோறும் ஆற்றுப்படுத்தி வந்துள்ளன. அத்தகைய அருளாளர் வரிசையில் 17-ம் நூற்றாண்டில் அவதரித்தவர் சிவப்பிரகாச சுவாமிகள். அவரின் அருளாட்சி பல்நிலையில் அமைந்தாலும் இலக்கிய நிலையில் இறை நிலையை விளக்கியமைதான் போற்றப்படுகிறது. காப்பியம், தலபுராணம், சிற்றிலக்கியம், நீதிநூல், தனிப்பாடல், தருக்கம் என்று இவரது இறை இலக்கியப் போக்கு அமைகிறது. இலக்கிய வகைமைகளில் ஒன்றான புராண வகைமையில் கூவத்தல புராணம், சீகாளத்திப் புராணம் என்ற சிவப்பிரகாசரின் தலபுராணங்கள் சிறப்புப் பெற்றன. அந்நிலையில் கூவத்தல புராணம் காட்டும் துறவு நெறி இங்கு விளக்கப்படுகிறது.

புராணம் ஒரு பார்வை

'புரா, நவம் என்ற இருசொற்களின் தொகுப்பே புராணம்' என்பர் அறிஞர் (ச. தண்டபாணிதேசிகர், திருவம்பர் புராணம், முகவரை, ப. 20) இதிலிருந்து பழைமையானதும் புதுமைத்தன்மை உடையதும் புராணம் என்பதைப் பெறலாம். முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம் பொருளும் பின்னைப் புதுமைக்கு பேர்த்தும் அப்பெற்றியனுமான இறைவனைப் பற்றிய பாடல்களைப் புராணம் எனலாம். ஆதலினாலே 'ஆதிபுராணன்' (திருநாவுக்கரசர் தேவாரம், போற்றித் திருத்தாண்டகம்) என்றும், புராணன் என்றும் (திருமூலர் திருமந்திரம் - 1557) என்றும் அருளாளர்கள் போற்றினர். புராண நூல்களில் அடங்கியுள்ள கருத்துக்கள் பழயவைகள் ஆயினும் கேட்கக் கேட்கப் புதியனவாகத் தோன்றும். எனவே புரா நவம் எனப்பட்டது என்பர் அறிஞர் (சித்பவானந்தர், திருவாசக விளக்கம், ப. 7)

புராணம் என்பதைத் தொல்காப்பியம் 'தொன்மை' என்று விளக்குகின்றது.

''தொன்மை தானே சொல்லுங்காலை
உரையொடு புணர்ந்த பழமை மேற்றே'' (தொல். செய். 229)

என்பதிலிருந்து பழைமைத்தாகிய பொருள்மேல் வருவது தொன்மை என்பதை உணரலாம்.

தலைவனைப் பிரிந்து வாடும் தலைவிக்குச் செவிலித்தாய் பழங்கதை கூறிப் பொழுது போக்கினர் என்பதை

''செம்முகச் செவிலியர் கைம்மிகக் குழீஇக்
குறியவும் நெடியவும் உரைபல இயற்றி''
(நெடுநெல்வாடை - 153,154)

என்று சங்கநூல் கூறுகின்றது. இச்செய்தியிலிருந்து தொன்மை, புராணம் என்பதின் தமிழ்ச்சொல் என்பது பெறப்படுகிறது. இத்தகைய புராணங்கள் பல தமிழில் தோன்றியுள்ளன. அவற்றில் பல தலபுராணங்களாகவே காணப்படுகின்றன. ஒரு தலத்தில் எழுந்தருளிய இறைவனது பெருமையை எடுத்துரைப்பது தலபுராணமாக அமைகிறது. அவ்வகையில் திருக்கூவ நகரில் எழுந்தருளியுள்ள திருவிற் கோல நகரின் பெருமையை எடுத்துரைப்பதாக சிவப்பிரகாச சுவாமிகள் அருளியதே திருக்கூவப் புராணம் ஆகும்.

திருக்கூவப் புராணம்

தொண்டை நாட்டுத் திருத்தலங்களுள் ஒன்று திருக்கூவம். இது திருவிற்கோலம் என்றழைக்கப்படுகிறது. இறைவன் திருவிற்கோல நாதர், திரிபுராந்தக நாதர், கூவநாதர் என்றும் இறைவி, பையரவல்குலம்மை, திரிபுராந்தக நாயகி என்றும் திருப்பெயர் பெறுகின்றனர். அச்சு இறுத்த விநாயகர் திருவுருவம் இங்குள்ளது. தர்க்கமாதா, பிடாரி என்ற காளியின் வடிவம் இங்குண்டு. அச்சிறுகேணி, கூவம் தீர்த்தம் என்ற தீர்த்தங்கள் காணப்படுகின்றது. திருக்கூவத்தின் திருமஞ்சன மேடையிலிருந்து திருமஞ்சனம் கொணரப்பெற்று இறைவர்க்கு நீராட்டுப் பெறுகிறது. வேறு தீர்த்தங்கள் விட்டால் பெருமான் மீது சிற்றெறும்புகள் படரும் என்ற நம்பிக்கை நிலவுகிறது (திருமுறைத் திருத்தலங்கள், ப. 56) திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற தலமாகவும் விளங்குகிறது.

திருவிற்கோலம் என்பது திரிபுராந்தகர்களை அழிக்க மேருவை வில்லாகக் கொண்டு நின்ற கோலம் என்று பொருள்படும்.

கூவத்திற்கு 'கூகம்' திருவிற்கோலம் என்ற இருபெயர்கள் தலத் தேவாரத்தில் வருகின்றன. கூவம் என்ற பெயர் வரவில்லை. கூகம்

என்ற பெயர் தேவாரம் தவிர ஏனைய நூல்களில் வரவில்லை. வழக்கிலும் இல்லை என்பர் (கே. வயித்தயநாத முதலியார், கூவத்தலம் ஆராய்ச்சி, ப. 454)

இத்தகைய கூவத்தலத்தில் தங்கி, வழிபட்டு, சிவப்பிரகாச சுவாமிகள் அருளியது திருக்கூவப் புராணம் ஆகும். இது திருத்தலச் சருக்கம், திரிபுர தகனச் சருக்கம், சந்தானகிரிச் சந்தானச் சருக்கம், அடிமுடி தேடிய சருக்கம், செந்நெல் வைத்த சருக்கம், தாருகன் வதை சருக்கம் என்ற அமைப்பில் அமைந்துள்ளது. 703 திருப்பாடல்களை பெற்றுள்ளது. புராண அமைப்பு வழுவாமல் இலக்கிய நயம் மிகுந்த தலபுராணமாகத் திருக்கூவப் புராணம் விளங்குகிறது.

துறவு நெறி

உலகியலில் வாழ்க்கை நிலை இருவகைப்படுகிறது. அவை இல்லற நெறி, துறவற நெறி எனப்படும். அவற்றுள் துறவறம் என்பது ''பிறப்பினை அஞ்சி வீடுபேற்றின் பொருட்டுத் துறந்தார்க்கு உரித்தாய அறம். அதுதான் வினை மாசு தீர்ந்து அந்தக் கரணங்கள் தூய ஆதற் பொருட்டு அவராற் காக்கப்படும் விரதங்களும் அவற்றான் அவை தூய ஆய வழி உதிப்பதாய ஞானமும் என இருவகைப்படும்'' என்பர் (திருக்குறள்-பரிமேலழகர் உரை, துறவற இயல்). 'துறந்தார்க்கு தூநெறியாய் நின்றான் தன்னை' என்பதில் (திருநாவுக்கரசர், திருஆலவாய்ப் பதிகம்) துறவறமே வீடுபேறு எனும் தூநெறி அடையும் எளிய வழி என்பது பெறப்படுகிறது. அத்தகை துறவுநெறியின் மாண்பினைத் தாபதர் நிலை என்று தொல்காப்பியம் பேசும். அவ்வகையில் புராண இலக்கியமான கூவ புராணத்தில் துறவு நெறியின் சிறப்பினைச் சிவப்பிரகாசர் விளக்கியுள்ளார்.

உலக வாழ்வை விரும்பாமை

முத்தலைச் சூலம் ஏந்திய சிவபெருமானிடத்து உய்ந்தவர் உலக வாழ்க்கையை விரும்பார் என்பதைச் சிவப்பிரகாசர்,

''முத்தலை எஃகம் ஏந்தும்
முதற்பெருங் கடவுள் தன்பால்
உய்த்தவர் உலக வாழ்வை
ஒரு பொருளாகக் கொள்ளார்''

என்கிறார். ''உலகமென்பது பல பொருள் ஒரு சொல்லாய் நிலத்தையும் உயிர்களையும் ஒழுக்கத்தையும் உணர்த்தி நிற்கும் ஈண்டு மண்ணிடத்து வாழும் சீவான்மாக்களை உணர்த்திற்று என்பார் நச்சினார்க்கினியர். (திருமுருகாற்றுப்படை உரை) இதிலிருந்து மண்ணினிற் பிறந்து வாழும் சீவான்மாக வாழும் நிலையிலிருந்து நீங்கி, அதாவது சீவபோதம் நீங்கி சிவபோதமாய் நிற்கும் நிலையே துறவு நெறி என்பது பெறப்பட்டது.

சிவச் செல்வத்தைக் கொள்ளும் நெறி

உலகியல் வாழ்க்கைக்குச் செல்வம் முக்கியம். ஆனால் செல்வம் ஈட்டலும், காத்தலும் மட்டுமே வாழ்வியலாகாது. ஆதலின் இல்லறத்தார்க்குக் கூட ''செல்வத்துப் பயனே ஈதல், துய்ப்பேம் எனினே தப்புந பலவே'' (புற. நா.) என்று வழிகாட்டப் பெற்றது.

விண்ணில் விளங்கும் பிறைச்சந்திரன் வளர்வதும், பின் குறைவதுமான தன்மை உடையது. அதைப் போன்றது உலகினர் செல்வம். ஆதலிற் துறவோர் இச்செல்வத்தை நீங்குதல் வேண்டும். சிவமாகிய விழுச்செல்வத்தை பற்ற வேண்டும் என்பதை,

''விலகுதல் செல்வம் எங்கள்
விழுப்பொருள் ஆய அண்ணல்
அலகுஇல் செம் சோதிப் பின்னல்
அணிமதி உணர்த்த வாழ்ந்தார்''
(திருக்கூவப் புராணம், பா. 30)

என்று விளக்குகிறது அஞ்ஞவதைப் பரணி,

''என்றும் பொருவரிய இன்னப் பொருளுடையார்
பொன்னும் பொருளும் பொருளாகப் போற்றாரோ''

என்கிறது. இவற்றிலிருந்து கேடில் விழுச்செல்வமான சிவத்தையே துறவோர் கொள்வர் என்பது பெறப்படுகிறது.

வீடு வேண்டா விறன்மை நெறி

இறைவனிடத்துக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி வழிபட்டு அவன் திருவடிப் பேற்றைப் பெறவேண்டும் என்பது பிறந்து மொழி பயின்ற எல்லா உயிர்க்கும் பொதுவானது. ஆனால் துறவென்னும் தூநெறி நிற்பார் வீடுபேற்றினைக் கூட விட்டுக் கொடுப்பர் என்பதை,

''அன்பு கொண்டு அரும்சிவத்தோடு
அயர்ந்து அனுபவித்து இருக்கும்
இன்பமும் முக்தி அன்றுஎன்று
இகம்துறந்துடைய மேலோர்'' (திருக்கூவப் புராணம், பா. 31)

விளக்கப்படுகிறது.

ஆனால் 'வீடும் வேண்டா விறலினர்' என்பது துறவு நெறியின் எல்லை. மேலும் துறவு நெறியின் உறுதிப்பாட்டிற்காக வலியுறுத்திச் சொல்லப்பெறுவது. அதாவது வீடே வேண்டாம் என்ற வைராக்கியம், மற்ற எதுவும் விரும்பாதவர் என்ற நிலையை விளக்க, வலியுறுத்தச் சொல்லப்பெறுவது எனலாம். இதனைத் துன்பம் மிக்கு எய்தி ''மின்னின் தொலைந்து போம் சிற்றின்பத்தில் தன்பரிவு அறத் துறத்தல் சாற்றவும்

வேண்டுமோ'' (மேலது) என்பதிலிருந்து அறியலாம். ஆனால் சிவப்பிரகாசர்வழி, முக்தியை வெறுத்த மேலோர் என்ற நிலை நினைக்கற்பாலது. ஏனெனில் சிவப்பிரகாச சுவாமிகள் வீரசைவம் போற்றியவர். யாரிடத்தும் எதையும் கேட்டுப் பெற்று வாழாமை என்பதே வீரம். வீடும் வேண்டா விறல் என்று சேக்கிழார் எடுத்துக் காட்டினார். ''இறைவனிடத்துங்கூட எதையும் கேட்டுப் பெறாமையே வீரசைவம்'' என்பர் அறிஞர் (வை. இரத்தினசபாபதி, வீரசைவம், ப. 35). இந்நிலையே சிவப்பிரகாசர் ஒப்புவது ''ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள் ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்'' என்ற திருமூலரின் கருத்தும் இங்கு பொருந்துகிறது.

ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கும் நெறி

''தபனியம் ஓட்டிற் கொள்வார்

(திரு.கூ. 32) (தபனியம்-பொன்)

அதாவது ஓடும் செம்பொன்னையும் ஒன்றெனக் கருதும் நெறியே துறவு என்கின்றார். இவற்றின் படிநிலையை விளங்குதல் வேண்டும்.

1. ஓட்டினை ஓடாகவும் பொன்னினைப் பொன்னாகவும் கொள்ளுதல் இயல்பு நிலை இது எல்லார்க்கும் உரியது.
2. பொன்னினை ஓடாகக் கொள்ளுதல் தாழ்ந்தோர் நிலை. எதிலும் குறை சிந்தனை உடையோர்.
3. மூன்றாம் நிலை ஓட்டினையும், பொன்னினையும் அதனதன் தன்மை அழித்து ஒன்றாகக் கொள்வது.

அஃதாவது ''இருமை கடந்த நிலை'' இந்நிலையைச் சேக்கிழார்,

''புல்லொடும் கல்லொடும் பொன்னோடும் மணியோடும்
சொல்லோடும் வேறுபாடு இலாநிலைமை துணித்திருந்த''

(திருத்தொண்டர் புராணம், திருநாவுக்கரசர், பா. 1638)

என்று விளக்குகின்றார். இதனை ''நெறிநோக்கி இருமை கடத்தல்'' எனலாம். அதாவது மேற்சொன்ன நிலையில் திருநாவுக்கரசரின் நெறி, அடியார் செல்லும் வழியைத் தூய்மைப்படுத்தல். எனவே உழவாரப் படையின் மூலம் வழியைத் தூய்மைப்படுத்தல் என்பது நெறி. அப் பணியில் நின்றபோது கல்லும், பொன்னும் நெறிக்குத் தடை செய்வன ஆதலால் அவற்றின் சிறப்புத் தன்மை நீக்கி, வாரி குளத்தில் இடுகின்றார். மேற்சொன்ன விளக்கங்களின் வழி சிறப்பு, பொது என்ற இருமை கடந்த நிலையே சிவப்பிரகாசர் நெறி. 'தபனியம் ஓட்டிற் கொள்வார்' என்ற சொல்லாட்சியும் அதை வலியுறுத்துகிறது.

நேயத்து மகளிரும் நின்ற தாய் எனும் நெறி

துறவோர்கள் பெண்ணின்பத்தை வெறுத்து நீக்கினரே அன்றி பெண்களை அல்ல என்பது நமது வரலாற்று வழி விளங்கும் உண்மை. பெண்ணின்ப நிலையைக் கடிந்து கூறிய அருணகிரிநாதரும் பட்டினத்துப் பிள்ளையாரும் தாய்மையைப் போற்றினர் என்பதை அறிகிறோம். (முத்தை என்று தாயின் பெயரால் முதலடி அமைத்தாலும், நானும் இட்ட தீ மூழ்கவே, என்று தாயிற்கு தீ இட்டதாலும் எனக) அத்தகைய நிலையில் எம்மகளிரையும் அம்மையாகக் காணும் நெறி துறவு என்பதை,

> ''ஆயிழை மகளிர் நேயத்து அணையினும் அவரை ஈன்ற
> தாய் எனக் கருதும் நீரார்'' (திருக்கூவப் புராணம், பா. 32)

என்ற வரிகள் வழி அறியலாம்.

பற்று இலா நெறி

பற்று என்பது உலகில் நிலவும் உறவாய பற்றுக்கள் என்பர்.

> ''தந்தைதாய் தன்னுடன் தோன்றினோர்
> புத்திரர் தாரம் என்னும்
> பந்த நீங்காதவர்க்கு உய்ந்து போக்கு
> இல்லெனப் பற்றினாயே'' (திருஞானசம்பந்தர் தேவாரம்)

என்றும்

> குடும்ப பாரந் தலைக் கொண்டவர்க் கல்லல்
> விடும்பரி(சு) இன்மையால் உந்தீபற
> மெய்யுணர்வு எங்ஙனாம் உந்தீபற
> (சாந்தலிங்க அடிகளாா், அவிரோத உந்தியார், பா. 17)

என்ற அருளாளர் அருட்பாடல்கள் உலக உறவுப் பற்றுக்களை நீக்கும் நெறி துறவு நெறி எனப்பெற்றது. இதனைத் துறவு நெறி மாண்பில் 'பற்று இலா நெறி' என்று சிவப்பிரகாசர் விளக்குகின்றார்.

இகல் இலாஞான நெறி

துறவு நெறி மாண்பில் 'இகலிலா நெறி' என்ற நெறி சிவப்பிரகாச சுவாமிகளோடு நெருங்கிய தொடர்புடையவரான சாந்தலிங்க அடிகளாரால் விளக்கமுறச் சொல்லப்பட்ட நெறியாகும். அப்பெருமான் இகலிலா நெறிக்காக அவிரோத உந்தியார் என்ற ஆப்தவாக்கியம் தந்தவர். சமய உலகில் இவரது அவிரோதம் எனும் முரணின்மைக் கோட்பாடு சிறப்புற்று நிற்கும் தன்மையது. யாதொரு சமயிகள் எந்தவொரு கொள்கை கூறினாலும் அது தற்போதத்தை நீக்குமானால் அதனை இகல் இன்றி ஏற்றுக் கொள்ளுதல் வேண்டுதல் என்பதைச் சாந்தலிங்க அடிகளார்,

''எம்மதத்தோர் எவ்வகை நிட்டை சொல்லினும்
சம்மதமே எமக்(கு) உந்தீபற
தற்போதம் மாய்க்குமேல் உந்தீபற (அவிரோத உந்தியார்)

என்று அருளுகின்றார். ஒத்த கருத்துடையோரை நட்பாம் கிழமை கொண்டவர் என்ற கருத்தால் சிவப்பிரகாசரும், சாந்தலிங்கரும் நட்பாம் கிழமை கொண்டவர்கள். ஆதலால் ''இகல் இலாத ஞானப் பண்பினர்'' இரு துறவோர்கள் கொண்ட நெறியதால், முரணின்மை நெறி துறவு நெறியாகக் கொள்ளப் பெற்றது.

நட்டார்ப் பேணும் நெறி

நட்பாம் கிழமை என்பது துறவோர்க்கும் உரிய நெறி என்பதை சிவப்பிரகாச சுவாமிகள் விளக்குகின்றார் (தி.கூ.பு.பா. 33) சாந்தலிங்கர் முதலான துறவோர்களிடத்துச் சிவப்பிரகாசர் தொடர்பு கொண்டது இதற்குச் சான்றாம் (தற்காலத்தும் பேரூரடிகளார், மயிலம் சன்னிதானம், குன்றக்குடியடிகளார் முதலான துறவோர்கள் நட்பு பேணுவது கொள்ளத்தக்கதாம்).

பூசை நெறி

வழிபாட்டுச் செந்நெறியில் மெய்தான் விதிர்விதிர்த்து வெளிப்படும் மெய்ப்பாட்டுத் தன்மை எல்லோருக்கும் உண்டானது. ஆயினும் துறவோர் சிறப்புத் தன்மையாய்க் கொள்ள வேண்டும் என்பதை,

''கண்புனல் துளிப்ப நெஞ்சம்
கரைந்து உக மெய்மயிர் பொடிப்பத்
தண்புனல் தரித்த வேணித்
தம்பிரான் பூசை செய்வார் (திருக்கூவப் புராணம், பா. 35)

என்று விளக்கப் பெறுகிறது.

தேவ பதவி விரும்பா நெறி

சிவமாம் தன்மை போற்றி நிற்கும் துறவோர்கள் . தவத்தினாய பிரம, வைகுந்த பதவிகளை விரும்பார்கள். அதுவே அவர்தம் செந்நெறி என்பதை,

வேதன்மால் தமையும் அன்னார்
வியன்பதந் தமையும் கொள்ளார்'
(திருக்கூவப் புராணம், பா. 36)

என்று திருக்கூவப் புராணம் விளக்குகின்றது.

உவத்தலும் வெறுத்தலும் இலாநெறி

''பெரியோரை வியத்தலும் இலவே, சிறியோரை இகழ்தல் அதனினும் இலவே'' (புற.நா.) என்று நம் தமிழ் நெறி வழிகாட்டு கிறது. அவ்வாறு உவத்தல் இன்றியும் வெறுத்தல் இன்றியும் இருக்கும் நெறியே துறவு என்பதை,

''ஓதற துதி நிந்தைக் கண்
உவகையும் வெறுப்பும் இல்லார்''

என்ற வரிகள் விளக்குகின்றன.

துறவோரை குறிக்கும் சொற்களில் 'முனிவர்' என்பதும் ஒன்று. அதற்கு வெறுத்தவர் என்ற பொருள் குறிப்பிடப் பெறுகிறது. ஆனால் சிறப்பு நிலையில் முனிவு என்பதற்கு நீங்குதல் என்றே கொள்ளுதல் வேண்டும். எனவே உவகையும், வெறுப்பும் இன்றி நீங்குதலே துறவு நெறி என்பது பெறப்படுகிறது.

துறவு நெறிக்கான விளக்கம் உரையளவையால் பலவாறு கூறப்பட்டிருந்தாலும் சிவப்பிரகாசரின் கூவப்புராணம் விளக்கும் துறவு நெறி ஈண்டு விளக்கப்பெற்றது. சிவப்பிரகாசரும் துறவு நெறி ஒழுகியவர். வீடும் வேண்டா விறன்மை வேண்டும். எவையிடத்தும் இகல் இல்லா தன்மை வேண்டும். எதனையும் வெறுத்தல் இலாது நீங்க வேண்டும் முதலான கருத்துக்கள் பெறப்பட்டன.

61. சிவப்பிரகாசர் போற்றும் மணிவாசகர்

ச. திருநாவுக்கரசு, திருச்சி.

துறைமங்கலம் சிவப்பிரகாசர், நல்லாற்றூர்ச் சிவப்பிரகாசர், நன்னெறிப் பிரகாசர், வள்ளுவப் பிரகாசர், கற்பனைக் களஞ்சியம் என்றெல்லாம் போற்றப் பெறுபவர் சிவப்பிரகாச சுவாமிகள். இவர் முப்பத்து நான்கு நூல்களைத் தமிழுலகிற்குத் தந்துள்ளார். இலக்கணம் கற்க வேண்டி வெள்ளியம்பலத் தம்பிரானிடம் சென்றபொழுது அவர் நம் சுவாமி களின் இலக்கியப் பயிற்சியை யறிதற்பொருட்டு, '' 'கு' எனத் தொடங்கி 'கு' என முடிய வேண்டும். சிவபெருமானைப் பற்றிய பாட்டாக இருக்க வேண்டும். ஊருடையான் என்ற சொல் இடையே வரவேண்டும். ஒரு வெண்பாப் பாடுக'' எனப் பணித்தார். உடனே சுவாமிகள்,

'குடக்கோடு வானெயிறு கொண்டார்க்குக் கேழன்
முடக்கோடு முன்னமணி வாற்கு - வடக்கோடு
தேருடையான் றெவ்வுக்குத் தில்லைத் தோன் மேற்கொள்ள
லூருடையா னென்னு முலகு'

என்னும் அழகிய நேரிசை வெண்பாவைத் திருவாய் மலர்ந்தருளினார் என்பர். இத்தகைய புலமைத்திறன் மிக்கவர் சிவப்பிரகாச சுவாமிகள்.

நான்மணிமாலையென்பது தமிழில் வழங்குஞ் சிற்றிலக்கியங் களுள் ஒன்று. முத்து, பவழம், மரகதம், மாணிக்கம் என்னும் நால்வகை மணிகளை முறையே கோக்கப்பட்ட மாலை போல வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா என்னும் நால்வகைப் பாக்களைக் கொண்டு அந்தாதியாகப் பாடப்படும் நாற்பது செய்யுட்களைக் கொண்டதோர் நூல் நான்மணிமாலையென்பதை,

வெண்பாக் கலித்துறை விருத்தம் அகவல்
பின்பேசும் அந்தா தியினாற் பதுபெறின்
நான்மணி மாலை யாமென நவில்வர்

என இலக்கண விளக்கம் பேசுகிறது. வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா ஆகிய நான்குவகைப் பாக்களில் முறையே திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரைப் போற்றி நால்வர் நான்மணிமாலை யென்னும் அரிய பனுவலை சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றியுள்ளார். இந்நூலை ஆழ்ந்து நோக்கு

கின்ற பொழுது சிவப்பிரகாச சுவாமிகளுக்கு மாணிக்கவாசகர்பால் மிகுந்த ஈடுபாடும் தோய்ந்த அன்பும் பாசமும் இருந்ததை உணரலாம்.

நற்கருப்பஞ் சாற்றினிலே தேன்கலந்து பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிக்கும் திருவாசகம் மாணிக்கவாசகரால் நம்பொருட்டுப் பாடப்பெற்ற பனுவல். திருவாசகமும் திருக்கோவையாரும் பன்னிரு திருமுறைகளில் எட்டாந் திருமுறையாக வைத்தெண்ணப்படும் சிறப்புடையன. சாத்திரங்களுள் தலையாயதாகக் கருதப்படும் சிவஞானபோதத்தின் எட்டாஞ் சூத்திரம், இந்த எட்டாந் திருமுறையை அடியொற்றிப் பாடப்பட்டதோ என எண்ணுமாறு அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. 'திருவாசகத்திற்குருகார் ஒரு வாசகத்திற்கு முருகார்' என்ற தொன்மொழியே திருவாசகத்தின் சிறப்பையுணர்த்தும். தெய்வப் பனுவல் திருவாசகத்திடத்தும், அழுதடி யடைந்த அண்ணல் மாணிக்கவாசகரிடத்தும் தணியாத காதல் கொண்டவர் சிவப்பிரகாச சுவாமிகள் என்பதை அவரது பாடல்கள் தெரிவிக்கின்றன.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிய திருத்தொண்டத் தொகையில் குறிப்பிடப்படும் 'பொய்யடிமையில்லாத புலவர்' யார் என்பதில் ஆய்வாளர்களிடையே கருத்து வேறுபாடு காணப்படுகிறது. இச்சிக்கலுக்குத் தீர்வு காண விழைகிறார் சிவப்பிரகாச சுவாமிகள். வகைநூலாம் திருத்தொண்டர் திருவந்தாதி பாடிய நம்பியாண்டார் நம்பி,

'தரணியிற் பொய்ம்மை யிலாத்தமிழ்ச் சங்க மதிற்கபிலர்
பரணர்நக் கீரர் முதனாநாற்பத் தொன்பது பல்புலவோர்
அருணமக் கீயுந் திருவால வாயரன் சேவடிக்கே
பொருளமைத் தின்பக் கவிபல பாடும் புலவர்களே'

என்று பொய்யடிமையில்லாத புலவரைக் குறித்துப் பாடுகிறார். இதில் நம்பியாண்டார் நம்பிகள் சங்கப் புலவர்களே பொய்யடிமையில்லாத புலவர் எனக் குறிக்கிறார். 'பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ' ராகிய தெய்வச் சேக்கிழார் பெருமான் தொகை, வகை நூல்களுக்கு விரி நூலாகத் திருத்தொண்டர் புராணம் பாடினார். வகை நூலைப் பின்பற்றிப் பாடவேண்டிய கடப்பாடு சேக்கிழாருக்கு உண்டு. இருப்பினும் வகை நூலில் குறிப்பிட்டவாறு சங்கப் புலவர்களைக் குறித்துப் பாடாமல் பொதுவாகப் புலவர் பெருமக்களைச் சுட்டிப் பாடுகிறார் தெய்வச் சேக்கிழார். இதற்கு ஏதேனும் உள்நோக்கம் இருக்கவேண்டுமென எண்ண வேண்டியுள்ளது.

'செய்யுணிகழ் சொற்றெளிவுஞ் செவ்வியநூல் பலநோக்கும்
மெய்யுணர்வின் பயனிதுவே யெனத்துணிந்து விளங்கியொளிர்
மையணியுங் கண்டத்தார் மலரடிக்கே யாளானார்
பொய்யடிமை யில்லாத புலவரெனப் புகழ்மிக்கார்'

என்பது தெய்வச் சேக்கிழார் வாக்கு. இச்செய்யுள் பொய்யடிமையிலாத புலவராக மாணிக்கவாசகரையும், அவர்தம் திருவாசகத்தையும் குறிப்பால் புலப்படுத்துவதுபோல் தோன்றுகிறதென வுணர்ந்த சிவப்பிரகாச சுவாமிகள், நால்வர் நான்மணிமாலையில் மாணிக்கவாசகரைப் போற்றும் 'நலமலி' எனத் தொடங்கும் பாடலில், சேக்கிழார் கையாண்ட 'செய்யுள்', 'புலவர்' என்ற சொற்களை எடுத்தாளுகிறப் பாங்கை யுணரலாம்.

'நலமலி வாதவூர் நல்லிசைப் புலவ!
மனநின் றுருக்கு மதுர வாசக!
..
.... தன்னை நீபுகழ்ந் துரைத்த
பழுதில் செய்யு ளெழுதின னதனாற்
புகழ்ச்சி விருப்பன் போலு
மிகழ்ச்சி யறியா வென்பணி வானே'

என்பது சிவப்பிரகாச சுவாமிகள் வாக்கு. இதில் சேக்கிழார் பொதுவாகக் கையாண்ட 'செய்யுள்', 'புலவர்' என்ற சொற்களைத் திருவாசகத்தையும் மாணிக்கவாசகரையும் குறிக்கும் விதமாக அமைத்திருப்பதால் சிவப்பிரகாச சுவாமிகள் பொய்யடிமையில்லாத புலவர் என்பது மாணிக்கவாசகரைக் குறிப்பது என்பதைத் தெளிவுபடுத்துகிறாரோ என எண்ணத் தோன்றுகிறது. மேலும் இப்பாடலில் எல்லாம்வல்ல இறைவன் திருவாசகத்தைக் கேட்டு தானே கைப்பட எழுதித் திருச்சிற்றம்பலமுடையான் எனக் கையொப்ப மிட்ட திறத்தை நினைந்து பாடுகிறார். கடையூழிக் காலத்துத் தனிமையைப் போக்கிக் கொள்ளத் துணையாகவிருக்கும் எனக் கருதியே தனது திருக்கையால் எழுதி வைத்துக் கொண்டான் என்ற கருத்துப்பட

கடையூழி வருந்தனிமை கழிக்கவன்றோ அம்பலத்துள்
உடையாருன் வாசகத்தில் ஒரு பிரதி கருதினதே

எனப் பாடுகிறார் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை.

'கடனிற வண்ணன்' எனத் தொடங்கும் பாடலில் பதினான்கு நாயன்மார்களை அடுக்கிக் கூறி அவர்கள் செய்த செயற்கருஞ் செயல் களையும் குறிப்பிடுகிறார். கணம்புல்லர், அரிவாட்டாயர், திருக்குறிப்புத் தொண்டர் ஆகியோர் தமதுயிர் நீங்கும் தன்மையைக் கருதாது கொண்ட கொள்கையில் நின்ற சான்றோர்கள். இயற்பகை நாயனார், மானக்கஞ்சாற நாயனார், கழற்சிங்க நாயனார், சண்டேசுர நாயனார், சிறுத்தொண்ட நாயனார், கோட்புலி நாயனார், செருத்துணை நாயனார் ஆகியோர் உலகியலைக் கடந்து தம்மிடமுள்ளவை யாவும் சிவபெருமானுக்கும் சிவனடியார்களுக்கும் உரிமையானவை என்று எண்ணி செயல்பட்ட வல்வினை வழிப்பட்ட சான்றோர்கள். இளையான்குடி மாற நாயனார், அதிபத்த நாயனார் ஆகியோர் எத்தகைய துன்பமுற

நேரினும் கொண்ட கொள்கையில் வழுவாத பெருமக்கள். அமர்நீதி நாயனார், திருநீலகண்ட நாயனார் இருவரும் வாய்மையில் வழுவாத பெரியவர்கள். இவர்கள் அனைவரும் தங்களது செயற்கருஞ் செயல்களால் இறையருள் பெற்ற சிவனடியார்கள். ஆனால் மாணிக்கவாசகரால் பாடப்படுகின்ற திருத்தொண்டைப் பெறும் பொருட்டு சிவபெருமான் மதுரை மாநகரில் குதிரை மாறியும் விண்புகழ் முடிமிசை மண்சுமந்தும், நீற்றெழில் மேனியில் பிரம்படி பட்டும் அவரைத் தனது தொண்டனாக்கிக் கொண்டான் என்று வியந்து போற்றும் சிவப்பிரகாச சுவாமிகள்,

............வாதவூரன்ப
பாடும் பணிநீ கூடும் பொருட்டு
மதுரைமா நகரிற் குதிரை மாறியும்
விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்தும்
நீற்றெழின் மேனியின் மாற்றடி பட்டு
நின்னைத் தொண்ட னென்னக் கொண்டனன்.

எனப் பாடுகின்ற திறத்தைக் காணலாம்.

''வேண்டுநின் னடியார் மெய்யன் பெனக்கு
மருள்செய் சிவனே யலந்தே னந்தோ
முறையோ! முறையோ! இறையோனே!''

என்று அழுது தொழுது செம்பொன்னம்பலக் கூத்தனருளால் தான்பெற்ற அன்பினில் தனக்கும் மிகச் சிறிது தந்தருள வேண்டும் என வேண்டுவது மட்டுமல்லாமல் 'நீயே கோடல் நின்அருள் பெருக்கிற்கு ஏற்றதன்று' என்றும் கூறுவதன் மூலம் மாணிக்கவாசகரின் அருள் கிடைத்தால் அதுவே ஆண்டவன் அருளாகும் என உணர்ந்து அடியாரின் பெருமையைப் புலப்படுத்துகிறார்.

''என்னடிகள் வெண்குறள்நேர் அடியி ரண்டும்; என்தலையில் இருத்தும் இறை'' என்று சிவப்பிரகாச சுவாமிகள் திருவெங்கைக் கலம்பகத்தில் திருவள்ளுவரை 'என்னடிகள்' என்பதோடு மாதொரு பாகனின் அடிகளுக்கு திருக்குறளடிகளை உவமையாகக் கூறுவதிலிருந்து அவருக்குத் திருவள்ளுவர்பாலும் திருக்குறள்பாலுமுள்ள ஈடுபாட்டை யறியலாம். வாதவூரன்பன் பாதிமதி தவழும் பவளவார் சடையோனின் பேரருள் பெற்றும் அதனைப் பெறாதார் போன்று வருந்தி நெஞ்சம் நெக்குருகி நிற்கிறார். இதனைக் குறிப்பிட்டு 'பேயேனாகிய நான் சிவபெருமானருளைப் பெறாதிருந்தும் பெற்றவர்போன்று களிகூர்ந்து உள்ளக்கவலை தீர்ந்தேன்' என்று தன்னைக் குறிப்பிட்டு,

''ஆதலாலே
தெய்வப் புலமைத் திருவள் ளுவனார்

'நன்றறி வாரிற் கயலர் திருவுடையர்
நெஞ்சத் தவல மில'ரெனும்
செஞ்சொற் பொருளின் தேற்றறிந் தேனே''

எனத் தன்னைத் தாழ்த்திக் கூறுவதற்கு எஞ்ஞான்றும் திருக்குறளில் தோய்ந்த நெஞ்சினராதலின் திருக்குறளை அடிபிறழாமல் அப்படியே எடுத்தாண்டு விளக்கமளிக்கும் தன்மையைக் காணலாம். திருவாசகத்தில் தோய்ந்து தோய்ந்து அதிலுள்ள தாழ்வெனுந் தன்மையைத் தான் பெற்றதால்தான் மாணிக்கவாசகரைப் போலச் சிவபெருமானருளைப் பெற்றிருந்தும் தாம் பெறாதது போலப் பாடச் செய்ததோ எனக் கருதலாம்.

ஆச்சாரிய பஞ்சாட்சரம் என்பதொரு வகை. நாவுக்கரசு என்ற ஆச்சாரிய பஞ்சாட்சரத்தை எழுதியும் ஓதியுமே ஒரு நம்பி அப்பூதி எனும் பெருந்தகை துன்பில் பதம் பெற்றார் என்ற செய்தியை நமது சிவப்பிரகாச சுவாமிகள்,

உற்றா னலன்றவந் தீயினின் றானல னூண்புனலா
வற்றா னலனுகர் வுந்திரு நாவுக் கரசெனுமோர்
சொற்றா னெழுதியுங் கூறியு மேயென்றுந் துன்பில்பதம்,
பெற்றா னொருநம்பி யப்பூதி யென்னும் பெருந்தகையே.

என மொழிகிறார். இதே அடிப்படையில் 'மணிவாசக' எனும் ஆச்சாரிய பஞ்சாட்சரம் ஒன்றே போதும் முத்திபெற என்கிறார் சிவப்பிரகாச சுவாமிகள். தனது அடியவராகிய திருவாதவூரடிகளை நீக்கமில்லாத உள்ளத்தால் அன்பு பாராட்டிப் பிணிக்க வல்லார்க்கு தாமே முற்பட்டுச் சிவபெருமான் முத்தி பேற்றைத் தந்தருளுவார் என்பதை,

'தானே முத்தி தருகுவன் சிவனவ
னடியன் வாத வூரனைக்
கடவின் மனத்தாற் கட்டவல் லார்க்கே'

என்ற செய்யுளால் தெளிவிக்கிறார். மாணிக்கவாசகர் செயலெல்லாம் சிவபெருமானின் செயலாக விருத்தலின், இவரை அன்பால் வழிபடு வோர்க்கு அச்சிவபெருமானே முத்தியளிப்பன் என்னும் உண்மையைச் சிவப்பிரகாச சுவாமிகள் புலப்படுத்துகிறார். இறைவனின் தனிப்பெருங் கருணையே மழையாகும். இதனால்தான் திருவள்ளுவர் கடவுள் வாழ்த்திற்கு அடுத்து 'வான்சிறப்பை' வைத்துள்ளார். திருவாசகத்தால்தான் உணர்ந்த அருளனுபவத்தை நினைந்த சிவப்பிரகாச சுவாமிகள், மாணிக்கவாசகராம் ஒப்பற்ற சிறந்த மேகம் நல்ல சிவமென்னும் அருட்கடலில் மொண்டு பொழிந்த திருவாசகம் என்கின்ற பெரு வெள்ளஞ் சென்று ஓதுவார் மனம் எனும் குளத்தில் புகுந்து நிரம்பி

வாய் எனும் மதகின்வழி வெளிப்பட்டு அன்புடன் கேட்போர் செவி எனும் மடையில் சென்று உளம் எனும் நிலத்தில் பாய்வதால் ஊன்றிய அன்பாம் வித்திலே சிவம் எனும் மென்முளை தோன்றி வளர்ந்து கருணை மலர்ந்து ஒளிர்கின்ற முத்தி எனும் மெய்ப்பயனைத் தரும் என முற்றுருவகமாகப் பாடியுள்ளார். உலகியலுக்கு மழை இன்றியமையாதது. அதுபோல அருளியலுக்குத் திருவாசகமாகிய பெருமழை தேவை என்பதைத் தெளிவாக உணர்த்துகிறார் நம் சுவாமிகள்.

'ஊரெனப் படுவது உறையூர்' என்பதற்கு உரை காணும்போது ஊர் என்று சிறப்பித்துக் கூறப்படுவது உறையூராகும் என்பர். 'பூவெனப் படுவது பொறிவாழ் பூவே' என்பது பூவென்று சிறப்பித்துக் கூறப்படுவது திருமகள் வாழ்கின்ற செந்தாமரைப் பூவேயாம். அதுபோல் செய்யவார்சடை தேவர் கோமான் சிவபெருமானது திருவடிகளை வழிபடுகின்ற வாதவூரன்பரே 'பாவென்று சிறப்பித்துக் கூறப்படுவது உமது திருப்பாடலாகும்' என சிவப்பிரகாச சுவாமிகள்,

செய்ய வார்சடைத் தெய்வ சிகாமணி
பாதம் போற்றும் வாதவூ ரன்ப
பாவெனப் படுவதுன் பாட்டுப்
'பூவெனப் படுவது பொறிவாழ் பூவே'

என்று பாடுகின்ற பாங்கை யுணரலாம். பாவென்று சிறப்பித்துக் கூறப்படுவது மாணிக்கவாசகரது திருவாசகமும் திருக்கோவையாருமே என்பதைத் தெளிவுபடுத்தி உறுதியாகக் கூறுகிறார் சிவப்பிரகாச சுவாமிகள். திருப்பெருந்துறையெனும் திருப்பதி புகுந்து பேரின்ப வெள்ளத்தில் மூழ்கிய புனிதனாம் மணிவாசகப் பெருமான் திருவாய் மலர்ந்தருளியது திருவாசகமாகும். அத்திருவாசகத்திற்கு வாச்சியமாக (வாசகத்தால் உணர்த்தப் படும் பொருளாக) இருப்பவன் உமையொரு பாகனே என்பதை,

பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ள
மூழ்கிய புனிதன் மொழிந்தவா சகமே
வாசக மதற்கு வாச்சியந்
தூசக லல்குல்வேய்த் தோளிடத் தவனே!

எனப் பாடுகிறார் நமது சிவப்பிரகாச சுவாமிகள். 'எனதுரை தனதுரையாக' என்னும் திருஞானசம்பந்தர் வாக்கும் 'நானுரைக்கும் வார்த்தையெல்லாம் நாயகன்தன் வார்த்தை' என்னும் திருவருட்பிரகாச வள்ளலாரின் வாய்மொழியும் இங்கு சிந்திக்கத்தக்கன.

வேதத்தையும் திருவாசகத்தையும் ஒப்பிட்டு வேதத்தைவிட திருவாசகம் மிகச் சிறந்ததாகக் காணப்படுகிறது என்பதைக் காரண காரியங்களோடு விளக்குகிறார். திருப்பெருந்துறையிலே செழுமலர்க்

குருந்தமர நிழலில் தான் பருகிய நிகரிலா சிவானந்தத்தேன் உவட்டெடுக்க வள்ளலாம் மாணிக்கவாசகர் அருளிச் செய்தது இனிய திருவாசகம். இது யாவரும் ஓதுகின்ற இயல்புடையது. ஆதலின் திருவாசகம் பொன் பாத்திரத்தை யொக்கும். மேலும் இனிய திருவாசகம் ஓதினால் அடையும் பயன் பிறவாப் பெருநெறியாகிய வீடுபேறாம் முத்தியே யாகும். தேவர்களின் வேதம் மண் பாத்திரத்தையொக்கும். அவ்வேதங்களை யோதினால் அவற்றாலடையும் உண்மைப் பயன் பிறப்புக்கு வழிவகுக்கும் அறன் மட்டுமே. தானும் மாசுபடாமல் தன்னிடஞ் சேர்ந்தார்க்கு நற்பயன்தரும் திருவாசகத்தைப் 'பொற்கலம்' என்றும் அத்தன்மையற்ற வேதத்தை 'மட்கலம்' என்றும்,

'திருவார் பெருந்துறைச் செழுமலர்க் குருந்தி
நிழல்வா யுண்ட நிகரிலா னந்தத்
தேன்றேக் கெறியுஞ் செய்ய மாணிக்க
வாசகன் புகன்ற மதுர வாசகம்
யாவரு மோது மியற்கைத் தாதலிற்
பொற்கல நிகர்க்கும் பூசுரர் நான்மறை
மட்கல நிகர்க்கு மதுர வாசக
மோதின் முத்தி யுறுபயன்
வேத மோதின் மெய்ப்பய னறமே'

என்ற செய்யுளால் விளங்க வுரைக்கிறார் சிவப்பிரகாச சுவாமிகள்.

விளங்குகின்ற அணிகலன்களையுடைய உமாதேவியார் பங்கிட்டுக் கொண்ட திருமேனியையுடைய சிவபெருமான் அருளிச் செய்தது என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது வேதமாகும். அச்சிவபெருமானது சிறப்பைத் துதிக்கின்ற வாதவூரண்ணலாம் மாணிக்கவாசகரது மலர் வாயினின்றும் பிறந்தது திருவாசகத்தேன். இவ்விரண்டில் மேன்மை யுடையது எது? என்ற வினாவை யெழுப்பி விடை கூறுகிறார் சிவப்பிரகாச சுவாமிகள். வேதத்தைப் பலமுறை ஓதினாலும் அதுகேட்டு விழிநீர் பெருக்கி நெஞ்சம் நெக்குருகி நிற்பவரை யாம் கண்டிலம். திருவாசகத்தை ஒருமுறை ஓதினாலும் கருங்கல் மனமும் கரைந்து கசிய தோண்டுகின்ற மணற்கேணி நீர் சுரக்குமாறு போல கண்களில் நீர் பெருகிப்பாய மெய்மயிர் சிலிர்க்க, விதிர்விதிர்ப்படைந்து அன்பராகு வரல்லாது இம்மண்ணுலகில் மற்றையர் இலர் என்று இரண்டு எதிர்மறைச் சொற்களைப் பெய்து உடன்பாட்டுப் பொருளை உணர்த்துகிறார்.

விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரண னுரையெனு மாரண மொழியோ
வாதிசீர் பரவும் வாதவூ ரண்ணல்

மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்த தென்குவீ ராயின்
வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேந்
திருவா சகமிங் கொருகா லோதிற்
கருங்கன் மனமும் கரைந்துகக் கண்க
டொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
யன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே

என்பது சிவப்பிரகாச சுவாமிகளின் முடிமணியானப் பாடலாகும். சிவப்பிரகாச சுவாமிகள் காலத்து திருக்கோயில்களில் வடமொழிச் செல்வாக்கு மிகுதியாய் இருந்திருக்க வேண்டும். 'அர்ச்சனைப் பாட்டேயாகு மாதலால் மண்மேல் நம்மை சொற்றமிழ் பாடுகென்றார் தூமறை பாடும் வாயார்' எனப் பாடிய தெய்வச் சேக்கிழார் வழிவந்தவர் நமது சுவாமிகள். தாய்மொழியாம் தமிழ்மொழியில் வழிபாடியற்ற வேண்டு மென்ற கொள்கையுடையவர். உருக்கந்தரும் திருவாசகம் முதலான அருள்நூல்களே தமிழ் மக்கட்குப் பெரும் பயனைத் தரத்தக்கன என்பதை யுணர்ந்தவர் சுவாமிகள். எனவேதான் சிவபெருமானருளிய வடமொழி வேதத்தினும் ஆதிசீர் பரவும் மணிவாசகரருளிய திருவாசகம் பொருளுணர்ந் தோதச் சிறந்ததென மொழிகின்றார். அர்த்தநாரீசுவர வடிவத்தை சிவபெருமானது தொன்மைக் கோலமாக மாணிக்கவாசகர் குறிப்பிடுகிறார். அதைப் பின்பற்றி சிவபெருமானை 'விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட் காரணன்' எனச் சிவப்பிரகாச சுவாமிகள் குறிப்பிடுவதைக் காணலாம்.

மனிதப் பிறவியின் குறிக்கோள் இறைவனடியடைந்து பிறவாப் பெருவாழ்வு பெறுவதேயாகும். இதற்கு வழிகூறும் சிவஞான சித்தியார்,

ஞானநூல்தனை யோதல் ஓதுவித்தல்
  நற்பொருளைக் கேட்பித்தல் தான்கேட்டல் நன்றா
ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்
  இறைவனடி அடைவிக்கும் எழில்ஞான பூசை

என நவில்கிறது. அமுதடியடைந்த அண்ணல் மாணிக்கவாசகரின் திருவாசகம், அவரின் அடியாராகத் தன்னைக் கருதிய சிவப்பிரகாச சுவாமிகளின் நூல்கள் ஆகியவற்றை ஓதுதல், ஓதுவித்தல், அவற்றின் நற்பொருள் களைக் கேட்பித்தல், தான் கேட்டல், நன்றாக ஈனமிலாத அவற்றின் பொருள்களைச் சிந்தித்தல் ஆகியவையே இறைவனடி சேர நாம் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளாம் என்பது திண்ணமன்றோ!

62. நன்னெறி காட்டும் அறங்கள்

க. திலகவதி, தஞ்சாவூர்.

கல்வி கரையிலாத காஞ்சி மாநகரில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் சிவப்பிரகாச சுவாமிகள் தோன்றினார். இவர் தந்தையார் குமாரசாமி ஆவார். தாயார் பெயர் அறிய இயலவில்லை. இளமையிலேயே தம் பெற்றோரை இழந்தார். வேலையர், கருணைப்பிரகாசர் என்னும் இரு தம்பியரும், ஞானாம்பிகை என்ற தங்கையும் இவருடன் பிறந்தோர்கள் ஆவர். இவருடன் பிறந்தோர் இல்லறம் ஏற்க, சிவப்பிரகாசரோ பிறவிப் பிணியிலிருந்து நீங்கவும், ஈசனுக்குத் தொண்டாற்றவும் விரும்பித் துறவை மேற்கொண்டார். இளமையிலே இவரும், இவருடன் பிறந்த சகோதரர்களும் கல்வி கேள்விகளில் வல்லவராயும் நூல் படைக்கும் ஆற்றல் உள்ளவராயும் விளங்கினார்கள். சிவப்பிரகாசர் சைவ சித்தாந்தம், வீரசைவம், தருக்கம், வானநூல் ஆகிய துறைகளில் வல்லவராயும், வடமொழி (சமஸ்கிருதம்) தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளைக் கற்றுப் பன்மொழிப் புலவராயும் விளங்கினார். திருவண்ணாமலைக் கோயில் தெற்குத் தெரு மடத்திலிருந்த சாளிகந்த குருதேவர் இவருக்குச் சமயக் குருவாகவும், சிவஞான பாலைய சுவாமிகள் இவருக்கு ஞானாசிரியராகவும் விளங்கினார்கள். சிவப்பிரகாசர் ஞானாசிரியரைப் போற்றிச் சிவஞான பாலைய சுவாமிகள் தாலாட்டு, நெஞ்சுவிடு தூது கலம்பகம், பிள்ளைத்தமிழ், திருப்பள்ளியெழுச்சி ஆகிய ஐந்து நூல்களைப் பாடியுள்ளார். சிவப்பிரகாசர் 'துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்', நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள்' என்றும் குறிப்பிடப் பெறுகிறார். இவரைப் போற்றிப் பேணியவர், அண்ணாமலை ரெட்டியார் என்னும் வள்ளல் ஆவர். இவர் திருவெங்கைக் கோயில் (வெங்கனூர் - பெரம்பலூர் மாவட்டம்) திருப்பணியைச் செய்ததோடு, திருவெங்கனூரிலும், துறைமங்கலத்திலும் சிவப்பிரகாசருக்குத் திருமடங்கள் கட்டித் தந்தார். அவற்றில் சிவப்பிரகாசர் தங்கி, இலக்கியங்கள் பலவற்றைப் படைத்து தமிழுலகிற்கு வழங்கி அளப்பரிய பணியை ஆற்றிச் சென்றுள்ளார். தமிழ்ப் பற்றும் சமய ஈடுபாடும் உடைய இவர், 'இனிய தமிழ்ச் சொல் மாலையை ஈசனுக்குச் சாத்தும் பிறவியே தமக்கு வேண்டும்' என்று வேண்டினார். இவர் இறுதிக்காலத்தில் புதுச்சேரிக்கு அண்மையில் உள்ள நல்லாற்றூர் மடத்தில் சிவசோதியில் கலந்தார். இவர் இறந்த

இடத்தில் அமைக்கப் பெற்ற சிவலிங்கமும் இவரது உருவச் சிலையும் இன்றும் இம்மடத்தில் காணலாம்.

இலக்கியப் படைப்புக்கள்

உடன் பிறந்தார் மூவர் ஒன்று சேர்ந்து ஒரு நூலைப் படைத்த புதுமை சிவப்பிரகாசர் வரலாற்றில் காணப்படுகின்றது. சீகாளத்திப் புராணத்தின் முதல் ஐந்து சருக்கங்களைக் கருணைப் பிரகாசர் பாடி மறைய, ஆறு, ஏழாவது சருக்கங்களைச் சிவப்பிரகாசர் பாடி மறைய, எட்டு, ஒன்பதாவது சருக்கங்களை வேலையர் பாடி நிறைவு செய்தார்.

சிவப்பிரகாசர் இயற்றிய நூல்களின் தொகை 34. இவற்றுள் திருவெங்கை அலங்காரம், கொச்சகக் கலிப்பா, தலவெண்பா ஆகிய மூன்றும் கிடைக்கவில்லை. கிடைத்துள்ள 31 நூல்களுள் ஒரே உரைநடை நூல் தருக்கபரிபாடை ஆகும். எஞ்சிய நூல்கள் செய்யுள் வடிவம் உடையன. இவற்றுள் வேதாந்த சூடாமணி, வேதாந்தத்தையும் சிவப்பிரகாச விகாசம், சதமணிமாலை சைவ சித்தாந்தத்தையும், சித்தாந்த சிகாமணி வீர சைவத்தையும் விளக்கும் நூல்களாகும். சிவஞான பாலய சுவாமிகள் தாலாட்டும், இட்டலிங்கப் பெருமானைப் போற்றும் நிரஞ்சன மாலையும், வீரசைவ நூல்களாகும். ஏசுமதநிராகரணம் பிற சமய மறுப்பு நூல். இவையன்றிக் காப்பியம் (பிரபுலிங்க லீலை) தலபுராணங்கள் (கூவத்தல புராணம், சீகாளத்திப் புராணம்), சிற்றிலக்கியங்கள் (பிள்ளைத்தமிழ், தூது, கலம்பகம், பள்ளியெழுச்சி, கோவை, உலா, அந்தாதி, நவமணிமாலை, நான்மணிமாலை, சிவநாம மகிமை, நீதிநூல்) போன்ற பல நூல்களைப் படைத்துள்ளார்.

நீதி நூல் - நன்னெறி

சமுதாயம் நல்ல நெறியில் (நன்னெறியில்) செல்ல மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய அறங்களை 'நன்னெறி' என்னும் நூலில் காப்புச் செய்யுளைத் தவிர்த்து 40 வெண்பாக்களில் எடுத்துரைக்கின்றார். ஒருவன் வாழ்வில் எத்தகைய செயல்களைக் கடைப்பிடிக்க வேண்டும். எத்தகைய செயல்களைத் தவிர்க்க வேண்டும் என்னும் நிலையில் அறங்களை வலியுறுத்திச் சொல்வதால் அறநூல்கள் 'நீதி நூல்கள்' எனப் போற்றப் படுகின்றன. அறம் கூறும் ஆசிரியர் உடன்பாட்டு முறையிலும், எதிர்மறை முறையிலும் அறங்களை எடுத்துரைப்பர். இந்நூல்கள் கற்பவரின் உணர்ச்சியைத் தூண்டாமல் அறிவைத் தூண்டும் தன்மையன. நீதி நூல்கள் இம்மையுலகில் மனிதன் வாழ்வாங்கு வாழ வழிக் காட்டுவதோடு, மறுமையுலகிலும் அவனுக்கு இன்பத்தை (முத்தி மறுமை இன்பம்) நல்கும் சிறப்புடையன. அறவழியை ஏற்காது தம் ஆற்றலால் உலக இன்பங்களைத் துய்ப்பவர்களுக்கு இம்மையிலும் மறுமையிலும்

நரகத் துன்பம் நேரும் எனவும் கூறப்பட்டது. அறவாழ்வை ஏற்பதற்கு இவ்வறிவுரைகளும் (போதனைகளும்) ஓரளவு காரணமாயிருந்தன. நன்மையுடைய அறச்செயல்களும், தூய மனமும், தூய வாழ்க்கையும்தான் சிறந்த வாழ்வைத் தரும் என்று மக்களுக்கு அறிவுறுத்தினர்.

நூலின் சிறப்பு

சிவப்பிரகாசர் கடற்கரையில் ஒருநாள் உலாவச் சென்றிருந்தபோது, கடற்கரை மணற்பரப்பில் நன்னெறிப் பாடல்களை எழுதினார். இதனை அறிந்த இவருடைய இளவல் கருணைப் பிரகாசர் கடற்கரைக்குச் சென்று, ஏட்டில் அப்பாடல்களை எழுதி வந்தார் என்பர். நன்னெறியை போப்பையரும், டி.பி. கிருட்டினசாமியும் மொழிபெயர்த்துள்ளனர். ''நன்னெறி இலக்கியநயமும், பெரும்பயனும் நல்குவது. ஒவ்வொரு பாடலும் பொருத்தமான கற்பனை நலம் சான்ற உவமையைக் கொண்டுள்ளது'' என்று கூறியிருப்பதால் இந்நூலின் சிறப்பை அறியலாம். சிறுவர்களுக்கானப் பாட நூல்களில் நன்னெறி இடம் பெற்றிருப்பது, இந்நீதி நூலின் சிறப்பைக் காட்டுகிறது.

நூல் அமைப்பு

நாற்பது பாடல்களைக் கொண்ட நன்னெறியில் மகடூஉ முன்னிலை யாகப் பெரும்பான்மையான பாடல்கள் அமைந்துள்ளன. ஒவ்வொரு வெண்பாவும், முதலிரண்டு அடிகளில் ஒரு நீதிக் கருத்தையும், பின்னிரண்டு அடிகளில் அக்கருத்தை விளக்கும் அழகிய உவமையும் கொண்டு விளங்குகின்றது. மகடூஉ முன்னிலையாக வரும் வெண்பாக்களில், மகடூஉ முன்னிலை, இரண்டாம் அடியில் தனிச் சொல்லாகவோ அல்லது மூன்றாம் அடியில் சொற்றொடர்களாகவோ அமைந்துள்ளது. 24 பாடல்கள் மகடூஉ முன்னிலையில் அமைந்துள்ளன. சிவப்பிரகாசரின் நூல்களுள், இந்நூல் மிக எளிமையாக படிப்போர்க்குப் புரியும் வண்ணம் அமைந் துள்ளது தனிச்சிறப்பாகும். பண்டைக் கதைகளையும், பழமொழிகளையும், உவமைகளையும் கவிதை உணர்வோடு கூறிக் கருத்தை விளக்கும் தன்மையால் இந்நூல் சிறுவர்களுக்கேற்ற நீதிநூலாகவும் விளங்குகின்றது.

சிவப்பிரகாசர் இந்நூலில் பெரியோர் (சான்றோர், மேன்மக்கள்) இயல்பு, கீழோர் இயல்பு ஆகியவற்றை எடுத்துரைத்துள்ளார். ஈகையறம், இன்சொல் கூறல், கல்விச் சிறப்பு, நட்புப் பாராட்டுதல், பெரியோரைத் துணைகோடல் ஆகிய அறங்களையும், கல்விச் செருக்கு, செல்வச் செருக்கு இல்லாமை, பிறப்பினால் உயர்வு தாழ்வு பாராட்டாமை, சினங் கொள்ளாமை, நிலையாமை ஆகிய அறங்களையும் எடுத்துரைத்து மக்களை அதன்வழி நடக்க அறிவுறுத்துகின்றார்.

பெரியோரின் ஈகைக் குணம்

பெரியோர், தம்மிடத்து ஒரு நாளும் அன்பு பாராட்டதவரிடத்தும் தாமே சென்று அவர்க்கு வேண்டும் பொருளைப் புகழை எதிர்பாராமல் கொடுத்துதவுவர். திங்களின் தேய்வுக்கும் வளர்ச்சிக்கும் தக்கவாறு அது மக்களுக்கு ஒளியைத் தருவதுபோல மேன்மக்கள் தம்மிடத்துள்ள பொருள் வளர்ச்சிக்கும் குறைவுக்கும் தக்கவாறு அன்புடன் பிறர்க்குக் கொடுத்துதவுவர். தம்மைச் சார்ந்தோர் தாழ்ந்தவராயினும் அவர் இருக்கும் இடம் சென்று பெருங்கடல் உப்பங்கழியில் சென்று பாய்வதைப் போலத் துன்பம் நீக்குவர். இக்கருத்தைச் சிவப்பிரகாசர்,

''என்று முகமன் இயம்பா தவர்கண்ணும்
சென்று பொருள் கொடுப்பர் தீதற்றோர்'' (1)

''பெருக்க மொடு சுருக்கம் பெற்ற பொருட் கேற்ப
விருப்ப மொடு கொடுப்பர் மேலோர்'' (13)

''உயர்ந்தோர்
தம்மை மதியார் தமையடைந்தோர் - தம்மின்
இழியினும் செல்வர் இடர் தீர்ப்பர் (16)

என பெரியோர் உதவும் தன்மையையும், ஈகை செய்யும் முறையையும் பாராட்டுகின்றார். மேலும் இவர்கள், ''எம் தந்தை இரப்பவர்க்குக் கொடுத்தமையால் வறுமை அடைந்தான்'' என்று கருதிப் பிறர்க்கு ஈதலைக் கைவிட மாட்டார். இதனை விளக்க வந்த ஆசிரியர்,

''நின்று பயனுதவி நில்லா அரம்பையின் கீழ்க்
கன்றும் உதவும் கனி''. (17)

என்று பழம் கொடுத்து அழிந்த வாழையின் கீழ் நின்ற வாழைக் கன்றை ஒப்புமையாகக் காட்டுகிறார். மேலோர் கைம்மாறு கருதாமல் உதவி செய்யும் தன்மையையும், சினமடைந்த காலத்தில் கொடுக்கும் தன்மையையும் குறிப்பிடும் பொழுது

''கைம்மாறு உகவாமற் கற்றறிந்தோர் மெய் வருந்தித்
தம்மால் இயலுதவி தாஞ் செய்வார்'' (27)

''முனிவினும் நல்குவர் மூதறிஞர்'' (28)

என்று போற்றுவர். மேலும் பிறர் துயரத்தை நீக்க விழையும்போது கோலின் அடியைக் கை விரைந்து சென்று தன்மேல் தாங்கிக் கொள்வது போல வீரமொடு தாங்கிப் பிறரைப் பாதுகாப்பர். மிக்க நோயினால் வருந்தும் பிற உறுப்புக்களைக் கண்டு கண் கண்ணீர் சிந்தும். அதுபோலப் பெரியோர் பிறர் படும் துன்பங்களைக் கண்டவுடன் தம் துன்பமாக எண்ணி நெருப்பில் பட்ட நெய் போல உருகி உதவி செய்வர்.

இதனை ஆசிரியர்,

''மெய் சென்று தாக்கும் வியன்கோல் அடிதன்மேல்
கை சென்று தாங்கும் கடிது'' (31)

''பெரியவர் தம் நோய்போற் பிறர் நோய் கண்டு உள்ளம்
எரியின் இழுதாவர் என்க
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண்'' (20)

எனத் துயரைக் கண்டு உதவும் நிலையையும், உருகும் மனத்தையும் படம்பிடித்துக் காட்டுகிறார். மேலோர் உதவி செய்யும் காலத்தில் நல்லொழுக்கம் உடையவர்க்கே உதவி செய்வர். ஒழுக்கம் இல்லாதவர்க்கு உதவி செய்ய மாட்டார். இதனை விளக்கும்போது,

''நெல்லுக்கு இறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி
புல்லுக்கு இறைப்பரோ போய்'' (36)

என்ற உவமையைக் காட்டுகின்றார்.

இன்சொல் கூறல்

இனிய சொற்களைப் பேசுவதே ஒருவருக்கு இனிமை தரும். அவ்வாறன்றி வன்சொல் பேசுவதால் ஒருவருக்கு மகிழ்ச்சி உண்டாகாது. இது எதைப் போலவெனில் திங்கள் வரவால் கடல் பொங்குகின்ற மகிழ்ச்சிக்கும் கதிரவன் வரவால் கடல் பொங்காத தன்மைக்கும் (துன்பத்திற்கும்) ஒப்பாகும் என்றுரைப்பர்.

''இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே'' (18)

எனக் கூறிய ஆசிரியர், அதற்கு மாறாகக் குற்றமற்ற பெரியோர் நம்மிடத்துள்ள அன்பின் மிகுதியால் தவற்றைத் திருத்தும் பொருட்டு வன்சொல் (கடுஞ்சொல்) பேசினால் அச்சொல்லை இன்சொல்லாகக் கருத வேண்டும் என்று அறிவுறுத்துகின்றார். நம்மிடத்து அன்பில்லாதவர் தேனொழுகப் பேசுகின்ற இன்சொல்லும் கடுஞ்சொல்லுக்கு ஒப்பாகும் எனக் காட்டி பேசுபவரை இனம் கண்டு கொள்ளச் செய்கிறார். இதனை விளக்கச் சாக்கியர் அன்புடன் எறிந்த கல்லை இறைவன் ஏற்றுக் கொண்டதையும், அன்பில்லாமல் மன்மதன் எறிந்த மலரை இறைவன் ஏற்றுக் கொள்ளாமையையும் ஒப்புமையாக எடுத்துக் காட்டியுள்ளார்.

''மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி தேனையவர்
பேசுற்ற இன்சொல் பிறிதென்க - ஈசற்கு
நல்லோன் எறிசிலையோ நன்னுதால் ஒண்கரும்பு
வில்லோன் மலரோ விருப்பு'' (2)

கல்விச் சிறப்பு

பல அணிகலன்களும் அணிந்து அழகுப்படுத்திக் கொள்ளும் உடலின் உறுப்புகள், அணிகலனே அணியாத கண்ணுக்கு ஈடாகாது. அதுபோலப் பலவகைப் பொன் அணிகள் அணியும் முடியுடை வேந்தர்கள், அணிகலன் அணியாத கற்று வல்ல அறிஞர்களுக்கு ஒப்பாக மாட்டார்கள். இதனைப்

''பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னும் அறிஞரைத்தாம் மற்றொவ்வார் - மின்னுமணி
பூணும் பிறவுறுப்புப் பொன்னே அது புனையாக்
காணுங் கண் ஒக்குமோ காண்''

என்று கல்விச் சிறப்பின் பெருமையையும், கல்வியறிஞரின் உயர்வையும் எடுத்துரைக்கின்றார்.

நட்புச் சிறப்பு

நட்பு கொண்ட இருவர் பிரியாது எப்பொழுதும் நட்பாக இருக்க வேண்டும். சிறிது காலம் (மன வேறுபாட்டால்) பிரிந்து பின் கூடினாலும், அவ்விருவரின் நட்புச் சிறப்பாகாது. அரிசியுடன் கூடி இருக்கும் உமி, சிறிதளவு நீங்கிப் பின் கூடினாலும் அது முளைத்தற்குரிய வலிமையை இழந்து விடுவதைப் போலாகிவிடும் என்று அழகான உவமை மூலம் நட்பின் சிறப்பை எடுத்துக் காட்டுகிறார்.

''நீக்கம் அறு இருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர் பெருமை நொய்தாகும்'' (5)

கல்விச் செருக்கின்மை

'கற்றது கைம்மண் அளவு, கல்லாதது உலக அளவு'' என்பதால் யாம் அனைத்தும் கற்றோம் என்று கல்விச் செருக்குற்று திரியக் கூடாது. கல்விச் செருக்கே அவனை வீழ்த்தி விடும் என்பதைக்,

''கடலே யனையம்யாங் கல்வியால் என்னும்
அடலே றனையசெருக் காழ்த்தி - விடலே'' (7)

எனக் காட்டுகிறார். மேலும் கல்லாதவர் கல்விச் செருக்குறக் கூடாது. கல்லாரின் செருக்கு கற்றார் முன் அடங்கி விடும் என்பதை,

''எழுத்தறியார் கல்விப் பெருக்கம் அனைத்தும்
எழுத்தறிவார்க் காணின் இலையாம் (21)

என்று கற்றார், கல்லார் இருவருக்கும் கல்விச் செருக்கு கூடாது என அறிவுறுத்துகின்றார்.

செல்வச் செருக்கின்மை

செல்வம் ஓரிடத்தில் நிலையாக நிற்கும் இயல்பற்றது. கீழ் மேலாகும். மேல் கீழாகும். ஆதலால் சான்றோராகிய பெரியோர், 'அழியாத செல்வக் குடியில் பிறந்துள்ளோம்' என்று செல்வத்தால் செருக்கு அடைய மாட்டார். எக்காலத்திலும் அசைக்க முடியாத மேரு மலைக்கும் ஒரு காலத்தில் வளைவு வந்தது. ஆதலால் அதனை உணர்ந்து நடங்கள் என்று உலகோர்க்கு செல்வநிலையாமையை அறிவுறுத்துகின்றார். இதனை,

''தொலையாப் பெருஞ்செல்வத் தோற்றத்தோம் என்று
தலையா யவர்செருக்குச் சார்தல் - இலையால்'' (14)

என வரும் பாடற் பகுதியால் அறியலாம்.

அறிவால் உயர்வு தாழ்வு உண்டே தவிர பிறப்பினால் உயர்வு தாழ்வு இல்லை என்று சாதிப் பாகுபாட்டைக் கண்டித்தும் (22), ஒன்பது ஓட்டைகளை உடைய உடம்பில் உயிர் நீங்குதல் இயல்பு என்று யாக்கை நிலையாமையை உணர்த்தியும் (12), சினத்தை அடக்கிக் கொள்ளும் குணமே சிறந்த குணம் என்று சினம் காப்பதன் அவசியத்தையும் (8), புலனடக்கத்தையும் (11), பெண்ணாசையின்மையையும் (23), பொன், பொருள், ஏவலைவிட இல்லற வாழ்விற்கு அன்பே அடிப்படை என்பதையும் (15), கணவன் மனைவியின் கருத்தொற்றுமை அவசியத்தையும் (6), இயமன் வருமுன்னர் அறம் செய்தலையும் (3), முறையறிந்து அறம் செய்யும் முறையையும் (32), இறைவனிடத்துப் பற்றுள்ள துறவிகளுக்கு ஒரு கோடி துன்பம் வரினும் அது பொருட்டல்ல என்று உண்மைத்துறவைச் சிறப்பித்தும் (29), குற்றமே பேசி தீய செயல் செய்யும் கீழோர் இயல்பையும் (24) எடுத்துக்காட்டி அறமுரைக்கும் பாங்கு சிறப்புடையது.

அறநெறிகள் சிதைந்து மனித அவலங்கள் பெருகிவிட்ட இக் காலத்தில் சிவப்பிரகாசரின் நன்னெறி சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவர்க்கும் ஒளிகாட்டும் விளக்காகத் திகழ்கின்றது. அவர் கூறிய அறநெறிகள் எக்காலத்திற்கும் பொருந்தி வரும் நன்னெறிகளாகத் திகழ்கின்றன என்றால் அது மிகையாகாது. பிற்கால ஞானியாகத் திகழும் சிவப்பிரகாசர் சமய உலகிற்கும், தமிழ் இலக்கிய உலகிற்கும் அளப்பரிய பணியை ஆற்றிச் சென்றுள்ளார். தமிழ் இலக்கிய வரலாற்றில் முத்திரை பதித்துச் சென்றுள்ள அச்சான்றோர் பெருமானைத் துதித்து வணங்குவதோடு வரும் இளைய தலைமுறையினருக்கும் அறியும்படி செய்வது நம்மனோரின் கடமையாகும்.

63. சிவப்பிரகாசர் போற்றிய ஞானசம்பந்தர்

திலகவதி சண்முகசுந்தரம், கோவை.

உலகு போற்றும் கவிச்சுடராகத், தமிழ் இலக்கிய வரலாற்றில் பதினேழாம் நூற்றாண்டில் திகழ்ந்தவர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள். நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள் என்றும் அழைக்கப் படுவார். கற்பனைக் களஞ்சியம் என்று பல்லோராலும் பாராட்டப்பெறும் இவர் நீதி நூல் முதல் பல நூல்களை எழுதியுள்ளார். சைவசித்தாந்தத்தைப் போற்றும் வகையில் சிவப்பிரகாச விகாசம், சதமணிமாலை போன்ற நூல்களை எழுதியுள்ளார். சைவ அடியார்களைப் போற்றுபவர். அவருள் குறிப்பாகச் சைவசமயக் குரவர்கள் என்று அழைக்கப்பெறும். திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரையும் பற்றி ‘நால்வர் நான்மணிமாலை’ என்ற நூலை எழுதிப் போற்றியுள்ளார்.

சுருங்கச் சொல்லல் முதலிய அழகுகள் நிரம்பப் பெற்றும், அடி அளவால் சுருங்கியும் திகழ்வது இந்நூல். நால்வர் வரலாறுகளிலும், அவர்களின் அருட்பாடல்களிலும், அவற்றை அடுத்துத் தோன்றிய ஏனைய சைவத் திருமுறைகளிலும் அமைந்துள்ள அரிய பல உண்மை களையெல்லாம் இனிது விளங்கவைக்கும் ஆற்றல் உடையது இந்நூல். சிறிய கண்ணாடியில் பெரிய மலையின் தோற்றம் முழுவதும் தெரிவதுபோல, அடி அளவால் சிறியதான இந்நூலில் சைவத் திருமுறைகளின் நலங்கள் எல்லாம் செறிந்து விளங்குகிறது. இதனாலேயே ‘சிவஞானபோதத்திற்கு உரை வரைந்த மாதவச் சிவஞான சுவாமிகள் இந்நூலை எப்போதும் தம் கையில் வைத்திருப்பார். இந்நூலையும் நூலின் பொருளையும் சிந்தையிலும் சென்னியிலும் வைத்துப் போற்றி வந்தார்கள் என்ற செவிவழிச் செய்தி ஒன்று உண்டு’ என்று வெள்ளைவாரணர் அவர்கள் கூறுகிறார்கள். அத்தகைய சிறப்புமிக்க நூல் நால்வர் நான்மணிமாலை.

சிவப்பிரகாசர் சைவ அடியார்கள் பலரையும் போற்றியுள்ளார். எனினும் நால்வரைப் போற்றி நான்மணிமாலை பாடியுள்ளார். நால்வரையும் விரிப்பின் பெருகும் என்பதால், நால்வருள் ஒருவரும் முதல்வரும் ஆகிய திருஞான சம்பந்தரைப் போற்றிய திறம் மட்டுமே இங்கே எடுத்துக் கொள்ளப் பெற்றுள்ளது.

செந்தமிழ் நாட்டில் தெய்வத்திருவருளாய்த் தோன்றி அனைவருக்கும் சைவநெறியைப் போதித்து, அற்புத மகிமைகளை அனைவரும் உணரும்படி

செய்த நால்வர் பெருமக்களைப் பற்றி நான்கு வகையான பாக்களில் அந்தாதித் தொடையாக அமைத்துப் பாடியுள்ளார். முத்து, பவளம், வைரம், பச்சை என்ற நான்கு மணிகளை முறைப்பட அமைத்துக் கட்டப்பட்ட மாலை நான்மணிமாலை. அதைப்போல வெண்பா, கலித்துறை, விருத்தம், அகவல் என்னும் நால்வகைப் பாக்களால், நால்வரையும் பற்றிப் பாடியுள்ளதால் இந்நூல் நால்வர் நான்மணி மாலை என்றாயிற்று.

நூல் நன்றாக அமையவேண்டி விநாயகப் பெருமானை நினைந்து, 'கைப்போதகத்தின் கழலை எப்போதும் அகத்திலே நினைவார்க்கு இடரே இல்லை' என்று போற்றி நூலைத் தொடங்கியுள்ளார். இரட்டை மணிமாலை, மும்மணிக்கோவை என்பவை இரண்டு வகை மணிகளாலும் (பாக்களாலும்) மூன்று வகை மணிகளாலும் (பாக்களாலும்) பாடப்பெற்றுள்ளவை போல நான்மணிகளால் (பாக்களால்) பாடப்பெற்றது, நான்மணிமாலை. திருஞானசம்பந்தருக்கு வெண்பாவும், திருநாவுக்கரசருக்கு கலித்துறையும், சுந்தரருக்கு விருத்தமும், மாணிக்க வாசகருக்கு அகவற்பாவும் அமைத்துப் பாடியுள்ளார். பாடலின் முதலில் 'பூ' எனத் தொடங்கி, இறுதியில் 'பூவே' என்றமைத்து, முதலையும் முடிவையும் சேர்த்து ஒரு மாலையாகக் கட்டியுள்ளது மிகவும் சிறப்பானதாகும். சைவசித்தாந்தக் கருத்துகளை இடையிடையேபெய்து வைத்துள்ளமையானது இவரது சைவசித்தாந்த அறிவைத் தெள்ளென உணர்த்துகிறது.

திருஞானசம்பந்தர்

வேதநெறி தழைத்தோங்க, மிகு சைவத்துறை விளங்க, பூதபரம்பரை பொலிய புனித வாய்மலர்ந்தழுத, சீதவள வயற்புகலி திருஞானசம்பந்தரின் பாதமலர் தலைக்கொண்டு முதலில் பரவுகிறார். சீர்காழிப் பதியிலே உமையம்மை ஊட்டிய ஞானப்பாலை உண்டு செவிக்கு அமுதாகிய தேவாரப் பாக்களைத் தந்த செந்தாமரை மலர் போலும் திருவடிகளே எமக்குக் காப்பு என்று பாதம் போற்றிப் பரவி, பின் அவரின் சொல்லருஞ் சிறப்புகளை விரித்துரைக்கின்றார்.

அம்மை ஊட்டியது ஞானப்பால். எனவே சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானமாகிய உவமை இலாக் கலைஞானத்தையும், பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானமாகிய உணர்வரிய மெய்ஞ்ஞானத்தையும் பெற்றார். முன்னையது அபரஞானம், பின்னையது பர ஞானம்.

ஞானம் என்பது இரண்டு வகையாதலை

'இயம்பிய ஞானம் ஓர் இருவகைப்படும்
பயன்தரும் அபரமும் பரமும் என்னவே

நயன்தரு கலைகளே அபரஞானமாம்,
உணர்ந்திடு பரஞ்சொலின் உணர்வென்று ஓதுவார்'

என்று தமது சதமணிமாலையில் குறிப்பிட்டுள்ளார். இது திருஞானசம்பந்தக் குழந்தை தாயிடம் ஞானப்பால் உண்டு அருள்பெற்ற முதல் நிலையிலிருந்து தொடங்கியுள்ளமையைப் புலப்படுத்துகின்றது.

நால்வர் நான்மணிமாலைக்கு உரை எழுதிய ஆசிரியர் சிதம்பரம் ஈசானியமடம் இராமலிங்க சுவாமிகள். இவரும் தம் உரையில் பதி, பசு, பாசங்களை உள்ளவாறு உணரும் உண்மை உணர்ச்சியே ஞானமாகும். அது அபரம், பரம் என்று இருவகை. வேதாகமங்களின் ஆராய்ச்சி உணர்வு அபரம்; அதனால் பெறப்படும் அனுபவ உணர்வு பரம் என்றே கூறியுள்ளார். மூன்று வயதிலேயே இந்த வாயமுதைப் பெற்றதால்தான் செவியமுதாக நமக்கு தேவாரப் பதிகங்கள் கிடைத்தன.

இத்தகு சிறப்பிற்குக் காரணமாகிய ஞானப்பாலைத் திருஞானசம்பந்தர் அழுத குரலைக் கேட்டபின்பு திருமுலை சுரந்தளித்த அன்னையாகிய அம்பிகை உயர்ந்தவரா? முன்பு, உன் நிலையைக் கூறக் கேட்கும் போதே திருமுலை சுரந்த அருட்பெருக்கை உடைய மங்கையர்க்கரசியார் உயர்ந்தவரா? நீரே சொல்ல வேண்டுகிறேன் என்று திருஞானசம்பந்தரிடமே கேட்கிறார் சிவப்பிரகாச சுவாமிகள்.

''பிள்ளையின் இயல்பைக் கேட்கும் போதே முலை சுரத்தல் தலையன்பு, பிள்ளையைக் கண்டபோது சுரத்தல் இடையன்பு; பிள்ளை அழுவது கண்டும், பிறர் தூண்டச் சுரந்து அளித்தல் கடையன்பு''. இங்கு மங்கையர்க்கரசியரைத் தலையன்பு கொண்டவர் என்கிறார். திருஞானசம்பந்தரும் மங்கையர்க்கரசியாரிடம் இவரைப் போலவே அன்பு கொண்டிருந்தார். அமணர்கள் சம்பந்தர் தங்கியிருந்த மடத்திற்கு தீ வைக்க, அதற்குக் காரணமான பாண்டியனின் மனைவி மங்கையர்க்கரசியார். ஆதலின் அவரது மங்கல நாணைக் காப்பாற்றவும் வேண்டும் என்பதால், 'பையவே சென்று பாண்டியர்க்காகவே' என்று பணித்ததும் இவரது அன்பின் முதிர்வுடைய தன்மையைப் பார்த்தே போலும் என்று உரையாசிரியர் தம் உரை மூலம் சிவப்பிரகாசரின் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்தியுள்ளார் எனலாம்.

திருஞானசம்பந்தர் எலும்பைப் பெண்ணாக்கிய அற்புதச் செயலை நினைந்து, சுடுகாட்டிலே எலும்பிலே புரண்ட திருமால், அவ்வெலும்பைச் சம்பந்தரிடம் தந்து பெண்ணாகச் செய்து கொண்டிருக்கலாம் என்று நகைச்சுவையோடு கூறுகிறார். திருஞானசம்பந்தரின் தேவாரப் பாடல்களைப் பாடினால் ஆண் பனைகளுக்குப் பயனாகும்; நஞ்சுக்கு மயிலாகும்; நோய்க்கு மருந்தாகும்; உருவம் சிதைந்து உதிர்ந்த எலும்பிற்கு

உயிராகும் என்று கூறுகிறார் சிவப்பிரகாசர். பயனாயிற்று; மயிலாயிற்று; மருந்தாயிற்று என்று இறந்த காலத்தில் சொல்லாமல் பயனாகும். மயிலாகும் மருந்தாகும் என்று எதிர்காலத்தில் சொல்லியிருப்பதால், இன்றும் நம்பிக்கையோடு இப்பதிகங்களை ஓதி அன்பர்கள் நலம் பெறலாம் என்பது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். இதுபற்றியே நலம்தரும் பதிகங்கள், இம்மை, மறுமைப்பயன் அளிக்கும் பதிகங்கள், பயனளிக்கும் பதிகங்கள் என்று இன்று பலரும் தொகுத்து அச்சிட்டு வழங்கிப் பாராயணம் செய்து வருகிறார்கள். நலம் பெறுகிறார்கள். சிவப்பிரகாசரின் இந்தத் திண்ணிய நெஞ்சம், அவர்தம் வாழ்வில் பெற்ற இத்தகைய அனுபவத்தின் வெளிப்பாடே எனலாம்.

அதனால்தான், 'எமனைப் பிடர்பிடித்துத் தள்ளுவதோடு, யாவரும் கைக்கொள்ளும் வகையில் எளிதாக முக்தியைக் கொடுக்கக் கூடிய சம்பந்தரே!' என்று அடுத்த பாடலில் துணிந்து பாடுகிறார் சிவப்பிரகாசர்.

திருஞானசம்பந்தர், திருப்பதிகம் எழுதிய திருஏடு நம்பெருமான் சிவபெருமானையே பொருளாக உடையது. ஆதலினால் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கும் தீயில் விழுந்தும் கரியாகி விடாமல் பசுமையுற்று விளங்கியது. அதனாலேயே இப்பதிகம் பச்சைப் பதிகம் என்றே பெயர் பெற்றுள்ளது.

"இட்ட ஏட்டினில் எய்திய செந்தமிழ்ப் பதிகம்
மட்டுலாங் குழல் வனமுலை மலைமகள் பாகத்து
அட்டமூர்த்தியைப் பொருளென உடைமையால் அமர்ந்து
பட்ட தீயிடைப் பச்சையாய் விளங்கியதன்றே"

என்று சேக்கிழாரும் பாடியுள்ளார்.

பக்தித்திறம்

உலக வழக்கில் உண்மையைச் சாதிக்க விரும்புபவர்கள் தீக்குளித்து மெய்ப்பிப்பார்கள். தீக்குளித்த சீதாப்பிராட்டியை இங்கே நினைவிற் கொள்ளலாம். இங்கே, திருஞானசம்பந்தரின் ஏடு சிவபெருமானையே பொருளாக உடையதால் தீயிலே புகுந்தும் கூட வேகாமல் வெளியில் வந்து சைவத்திற்குச் சான்று பகர்ந்து, சைவத்தின் மேன்மையையும் சீர்மையையும் அறிவித்தது என்று கொள்ளலாம் என்பார் உரையாசிரியர். சைவத்தையும் சைவ அடியார்களையும் மிகவும் பக்தியுடன் போற்றுபவர் சிவப்பிரகாச சுவாமிகள் என்பதற்குச் சிறந்த காட்டாக இந்த இடம் அமைகிறது எனலாம்.

நகைச்சுவை உணர்வு

'ஊர் ஊராகத் திரிந்து பிச்சை ஏற்றுண்ணும் சிவபெருமான் உமக்கெப்படி முத்துச் சிவிகையைக் கொடுத்தார்?' என்று திருஞானசம்பந்தரைக்

கேட்கவேண்டும் என்று நிந்தாஸ்துதி பாடுகிறார் சிவப்பிரகாசர். இதனால் இவரது நகைச்சுவை உணர்வையும் அறிய முடிகிறது.

பரந்து உலகேழும் படைத்த பிரானை
இரந்துணி என்பர்கள் எற்றுக்கு இரக்கு
நிரந்தரமாக நினையும் அடியார்
இரந்துண்டு தன்னடி எட்டச் செய்தானே

என்பது திருமந்திரம்.

'பெற்றம் ஏறிப் பலிக்கு வரும் பெருமான்'

என்று சேக்கிழார் கூறுகிறார்.

இறைவன் சில்பலி ஏற்கப் பலமனையில் செல்வது, தம்பொருட்டன்று. அடியவர்கள் அனுட்டித்து உய்தற் பொருட்டென்பார் 'பலிக்கு' என்று சொல்லாமல் 'பலிக்கென்று' என்று பாடியுள்ளார் சிவப்பிரகாசர் என்று உரையாசிரியர் குறிப்பிடுகிறார். நம்மை எப்படியேனும் ஆட்கொள்ளவே இறைவன் காத்திருக்கிறான். இதை அறிந்து கொள்ள முடியாமல் நம்மை அறியாமை மறைத்திருக்கிறது.

வள்ளுவம் போற்றல்

'அறத்தாறிதுவென வேண்டா' என்று தொடங்கும் பாடலில் திருக்குறளை அப்படியே பெய்து வைத்துப் பாடி, இதை மறுத்தார் சம்பந்தர் என்று பாடியுள்ளார். சிவப்பிரகாசர் வள்ளுவத்தில் தோய்ந்திருக்கிறார் என்பதையும் வள்ளுவரையும் இவர் போற்றும் மேன்மையையும் இதனால் அறிந்து கொள்ள முடிகிறது.

பயன்

திருஞானசம்பந்தருக்கு இறைவன் திருவருள் புரிந்த தன்மை யினையும், அதனால் அவரால் நடைபெற்ற அற்புத நிகழ்ச்சிகளையும், அவரது உயர்வையும் மேன்மையையும் பலவாறாகப் பாடிய சிவப்பிரகாசர் இறுதிப் பாடலிலே முத்தாய்ப்பாக, ஞானசம்பந்தப் பெருமானின் பேரருள் திறத்தினை வியந்து கூறி நம்மையும் நல்லாற்றுப் படுத்துகிறார். இம்மைக்கும் மறுமைக்கும் உரிய பயன்களைத் தந்து பிறப்பை அறுப்பது திருஞானசம்பந்தரின் திருவடிகளே. ஆதலினால் இத்தகைய ஞானத்தை அனைவரும் பெற்று வாழவேண்டும் என வாழ்த்துகிறார்.

பொருளும் அதனால் எய்தும் புண்ணியமும், அப்புண்ணியத்தின் பயனாகிய இம்மை மறுமை இன்பங்களும், கல்வியும், அதனால் எய்தும் அன்பும், அவ்வன்பின் பயனாகிய ஞானமும் ஆகிய யாவும் திருஞானசம்பந்தப் பெருமானின் சேவடிகளே எனக் கொள்ளும் ஒரு

ஞானசம்பந்தத்தை எய்தி, வல்லுநர் அல்லாரும் பிறப்பை ஒழிப்பார்கள் என்று பாடிச் சைவ அடியாராம் திருஞானசம்பந்தரைப் போற்றுகிறார் சிவப்பிரகாசர்.

இறைவனைவிட இறைவன் அடியவர்களுக்கே சிறப்பதிகம். காரணம், இறைவன் அடியார் உள்ளத்தில் எழுந்தருளியிருப்பதே. அதனால் திருஞானசம்பந்தரை இறைவனாகவே கொண்டு அவரது திருவடிகளைப் பிறப்பறுக்கும் திருவடிகள் என்று பாடுகிறார்.

''நடமாடக் கோயில் நம்பர்க் கொன்று ஈயில்
படமாடக் கோயில் பரமர்க்கு அங்கு ஆகுமன்றோ?''

மண்ணினில் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தலும்
கண்ணினால் அவர்தம் நல்விழாப் பொலிவுகண்டு

ஆர்தலுமே ஆகும் என்பதை நிறுவியவரன்றோ திருஞானசம்பந்தர்?

அத்தகைய பயனை நாம் பெற்று உய்யவேண்டும் என்பதால் சிவப்பிரகாச சுவாமிகள் திருஞானசம்பந்தரின் திருவடிகளைப் பற்றிக் கொண்டால் அவ்வாறுய்யலாம் என்று நமக்குச் சிறந்ததொரு வழிகாட்டு கிறார். இதனால் இவர் சைவத்தையும் சைவ அடியாரைப் பேணுந்திறத்தையும் உணர முடிகிறது. சிவலோகத்தையும் சிவபெருமானையும் கண்ட இன்பத்துக்கு மேலான இன்பம் திருவடி இன்பமாகும். இந்த இன்பத்தைத் தாமும் பெற்று, நம்மையும் பெற வைக்கிறார் என்றால் திருஞானசம்பந்தர்பால் இவர் கொண்ட அன்புதான் என்னே!

64. நால்வரிடம் சிவப்பிரகாசர் காட்டும் பேரன்பு

செ. தேவராஜு, கோபிசெட்டிபாளையம்.

தமிழ் இலக்கிய வரலாற்றில், பதினேழாம் நூற்றாண்டைச் சிறப்பித்த - பிற்காலச் சைவ சமயத்தைச் சிறப்பித்த தமிழ்ப்புலவர்களில் குமரகுருபரருக்கு அடுத்த பெருமை வாய்ந்தவராகக் கருதப்படுபவர் சிவப்பிரகாச சுவாமிகள். இவர் துறைமங்கலத்தில் பிறப்பெடுத்துத் துறவுபூண்ட வீரசைவர். சைவ சமயத்தின்பாற் கொண்ட ஈடுபாட்டினால் - பற்றினால் சைவ சமயக் குரவர் நால்வரைப் பற்றி 'நால்வர் நான்மணிமாலை' எனும் ஒப்பற்ற நூலைப் படைத்துள்ளார். இறைவனின் திருவருளைப் பெறுவதற்காக விரும்பிப் பாடப்பட்ட இந்நூலில், இறைவன் திருவருளைப் பெற்ற சைவசமயக் குரவர் நால்வரின் மாண்பையும், அவர்கள் மீது தாம் கொண்ட பேரன்பையும் பெருமதிப்பையும் சிவப்பிரகாச சுவாமிகள் கூறுகிறார். இந்நூல் பக்திக்கு ஒரு வித்தாகவும், கற்பனைக்கு ஒரு களஞ்சியமாகவும் விளங்குகிறது.

திருஞானசம்பந்தர்

'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்' எனச் சுந்தரரால் போற்றப்பட்ட ஞானசம்பந்தரைச் சிவஞானச் செல்வரான சிவப்பிரகாசர் ஞானப்பாலுண்ட செய்தியைக் கூறிச் சிறப்பிக்கிறார். தாமரை மலர்கள் சூழ்ந்த நீர்நிலையின் கரையில், உமையம்மையால் பொற்கிண்ணத்தில் தரப்பட்ட ஞானப்பாலை உண்ட ஞானசம்பந்தர், அதைத் திரும்ப அமுதமாகத் தேவாரப் பாக்களால் தம் செவிகளுக்கு வார்த்தார் என்பதைச் சிவப்பிரகாசர்,

"இயற்பாவான் மொழிஞானப் பாலுண்டு
நாவான் மறித்தெம் செவியமுதாய் வார்த்தபிரான்" (பா. 1)

எனக் கூறுகிறார். திருமால் பிருந்தை என்பவளை விரும்பினார். அவள் மாண்டபோது அவளது எலும்பில் புரண்டார். சிவநேசர் ஒருவர் தம் பெண் பூம்பாவையின் எலும்பை ஞானசம்பந்தரிடம் கொடுத்துப் பெண்ணுருப் பெற்றார். இதை,

"சுடுகாட்டுள் ஆடுவாற் சுட்டினொடு காட்டும் சம்பந்தா" (பா.9)

எனக் கூறும் சிவப்பிரகாசர், திருமால் உம்மிடம் பிருந்தையின் எலும்பைத் தந்து பெண்ணுருக் கொள்ளாததற்குக் காரணம் என்ன? என வினவுகின்றார்.

திருஞானசம்பந்தர் வைகை ஆற்றில் இட்ட 'வாழ்க அந்தணர்' எனத் தொடங்கும் பதிகம் பதிந்த ஏடு நீரை எதிர்த்துச் சென்றது. இவ்வேடு சிவபெருமானே பரம்பொருளெனத் தெளிய எதிரேறிச் சென்றதென்பர். இதைக் கண்ணுற்ற சமணர் தம் கொள்கையில் தோற்று, வருந்திக் கழுக்கூட்டத்தில் ஏறத் துணிந்தனர். எல்லோரும் கொள்ளை கொள்ளும்படி வீடுபேற்றை உதவி, இயமனை அணுகாமல் அகற்றிய வள்ளல் சம்பந்தர் என்பதைச் சிவஞானச்செல்வர்,

"கூற்றைப் பிடர்பிடித்துத் தள்ளும் திருஞானசம்பந்தர்" (பா. 21)

எனப் புகழ்ந்துரைக்கிறார்.

திருநாவுக்கரசர்

'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற பரந்த கொள்கையில், ''நாமார்க்கும் குடியல்லோம்; நமனை யஞ்சோம்'' என்ற வீரவாழ்வு - தவ வாழ்வு வாழ்ந்தவர் அப்பர் பெருமான். ''பாவுற்றலர் செந்தமிழ்ப் பதிகத் தொடை பாடிய பான்மையினால்' நாவுக்கரசரெனும் பெயரைச் சிவபெருமான் வழங்கினார். அச்சிவபெருமானுக்கு, வீடுபேற்றை அடை வதற்குக் காரணமாகும் என யாவரும் சிறப்பித்துக் கூறும் தேவாரப் பாக்களை அப்பர் பெருமான் அணிவித்தார். அதைச் சிவப்பிரகாசர்,

''வீட்டிற்கு வாயில் எனுந்தொடை சாத்துசொல் வேந்த'' (பா. 2)

என்று இயம்புகிறார். சம்பந்தருக்கு ஞானப்பாலையும் உமக்குச் சூலை நோயையும் சிவன் அளித்தாலும் அக்குறை அச்சிவனையே சாருமே அன்றி, உமக்கு இல்லை என்கிறார் சிவஞானச் செல்வர். வெண்மையான காளையை ஊர்தியாகக் கொண்ட சிவபெருமான் அன்புகாட்டும்படி திருத்தாண்டகமெனும் தேவாரப் பாடல்களைப் பாடிய தாண்டகவேந்தரைச் சிவப்பிரகாசர்,

"வெள்ளேறு உடையான் தனக்கன்பு செய்திருந் தாண்டக வேந்த" (பா. 6)

எனப் போற்றுகிறார். அப்பூதியடிகள் நாவுக்கரசரின் மீது கொண்ட அன்பினால், தம் மக்கட்கும், அறச்சாலை நீர்நிலை, வீட்டிலுள்ள அளவைகள், பசுக்கள் இவற்றிற்கு நாவுக்கரசர் பெயரிட்டார். அவ்வாறு சிவநேசர்க்குரிய சிறப்பனைத்தும் வாகீசமூர்த்தியை வழிபடுவோர்க்கும் உண்டு எனச் சிவப்பிரகாசர் உரைக்கிறார்.

பகைவரின் முப்புரங்களை எரித்துச் சாம்பலாக்கிய மேருமலையான வில்லையுடையவர் சிவபெருமான். அவரது திருப்பெயரான திருவைந் தெழுத்தை நற்றுணையாகக் கொண்டு கல்லில் பிணித்து விடப்பட்ட கடலை நீந்தியவர் நாவுக்கரசர். சேக்கிழார் கூறும் இச்செயலைச் சிவப்பிரகாசரும் கூறுகிறார்.

"செற்றார் புரமெரி செய்தலில் வீரன் திருப்பெயரே

பற்றாமறிவெண் டிரைக்கடல் நீந்திய பாவலனே" (பா. 30)

என அப்பரின் அருட்செயலை - இறைத்தன்மையை சிறப்பிக்கிறார். மேலும் இவ்வுலகில் ஒரு மைந்தனைப் பெற்றால், உம்மைப் பெற்ற தாய்-தந்தையரைப் போன்றும், பிறப்புண்டாயின் உம்மைப் போல் ஒரு மைந்தனாகிப் பிறத்தலுமே சிறப்பென்கிறார். நாவுக்கரசர் மீது சிவஞானச் செல்வர் கொண்டுள்ள பேரன்பும் ஆழ்பற்றும் இதனால் விளங்கும்.

சுந்தரமூர்த்தி நாயனார்

'சைவ முதல் திருத்தொண்டர் தம்பிரான் தோழனார் நம்பி' என்று சேக்கிழார் பெருமானால் புகழப்பட்டவர் சுந்தரமூர்த்தி நாயனார். இவர் மனிதரைப் பாடாமல் இறைவனையே பாட வேண்டும் என்ற கொள்கையுடையவர். இறைவனையே பித்தர் என அழைத்தவர். அந்த இறைவனான சிவன் தாமே, செல்வமுடையவனும் அளகாபுரிக்குத் தலைவனுமான குபேரனை நட்புக் கொண்டு கல்விச் செல்வமுடைய ஒருவனும் வேண்டுமெனத் தேடி உம்மை நட்புக் கொண்டார். அத்தகு சிறப்புடைய முனிவர்கள் வணங்குகின்ற பரவைநாச்சியாரின் கணவராக விளங்கும் திருநாவலூரரை,

"விருந்து துறந்த முனிவர் தொழும்பரவை துணைவ" (பா. 7)

என்கிறார் சிவப்பிரகாச சுவாமிகள். சுந்தரர் தம் மனைவியான பரவைநாச்சியார் மகிழும்படி குண்டையூர்க்கிழார் என்பவர் அளித்த நெற்குவியலைத் திருவாரூரில் சேர்க்குமாறு இறைவனிடம் வேண்டினார். இறைவன் ஆணைப்படி சிவகணங்கள் நெற்குவியல்களைத் திருவாரூரில் பரவையார் இல்லத்தில் சேர்த்தன. அதைச் சிவப்பிரகாசர்,

பரவை மகிழக்குண்டையூர் நென்மலைமுற் கொண்ட வருட்
கடலே" (பா. 11)

என்கிறார் பரவையார். தம் இல்லத்திற்கு வேண்டுவன சேமித்துப் பிறவற்றை எவரும் கைக்கொள்வான் பறையறைந்து உவந்தார்.

பிள்ளையை விழுங்கிய முதலையே அப்பிள்ளையைக் கரையில் உமிழும்படி எவராலும் பிறப்பித்தற்கரிய மைந்தன் தோன்றுவதற்குக் காரணமான வாக்கின் வன்மையுடைய புலவரான சுந்தரரை,

"மதலை விழுங்கிய முதலை சான்றிடத் தோன்றும் நாவலனே"
(பா. 15)

எனச் சிவப்பிரகாச சுவாமிகள் சிறப்பிக்கின்றார். அவ்வாறு சிறப்புப் பெற்ற வன்தொண்டர், திருவஞ்சைக்களம் எனும் தலத்தில் தம்மை

இறைவர் அழைத்துக்கொள்ள வேண்டும் எனத் துதித்தார். சிவபெருமானும் அவரை அழைத்து வருமாறு தேவர்கட்கு ஆணையிட்டார். விண்ணினின்றி வந்த வெள்ளை யானை மேலேறிச் சுந்தரர் கயிலை செல்லலானார். அதை

''கயிலை மலையடைந்த மணியே'' (பா. 27)

என்கிறார் சிவஞானச் செல்வர். அதைக் கண்ட சேரமான் பெருமாள் நாயனாரும் தாம் ஏறிய குதிரையின் செவியில் ஐந்தெழுத்தை ஓதவே, அதுவும் கயிலை சென்றது.

தேவர் முனிவர் போன்றோர் வணங்கும் மிகு புகழுடைய 'திருத்தொண்டத் தொகை' எனும் பதிகத்தைச் சுந்தரர் அருளிச் செய்தார். அத்திருத்தொண்டத் தொகையே நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதிக்கும் சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணத்திற்கும் வித்தாய் அமைந்தது. அறம், பொருள், இன்பம், வீடுபேறெனும் நால்வகை உறுதிப்பொருளை வகுத்தளித்த சுந்தரரை சிவஞானச் செல்வர்,

''சுரர்முனிவர் பரவலுறும் பெருஞ்சீர்த் தொண்டத் தொகை செய்தோய்
அறமுதல்நால் வகைசெய் தோயே'' (பா. 39)

என்கிறார்.

மாணிக்கவாசகர்

ஒருவாத புகழுடைய திருவாதவூரிலே பிறந்த மாணிக்கவாசகர் அரிமர்த்தன பாண்டியனிடம் 'தென்னவன் பிரமராயன்' எனும் விருதுப் பெயருடன் அமைச்சராய் விளங்கியவர். அரசன் பொருட்டுக் குதிரை வாங்கச் சென்றபொழுது திருப்பெருந்துறை எனும் திருத்தலமடைந்து எல்லையில்லாப் பேரின்ப வெள்ளத்தில் ஆழ்ந்தவர் மாணிக்கவாசகர். அதை,

''பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம் மூழ்கிய புனிதன்'' (பா. 8)

எனக் கூறும் சிவப்பிரகாசர் அவரின் ஆழ்பக்திச் சிறப்பை கூறுகிறார். சிவமெனும் கருணைக் கடலைத் திருப்பெருந்துறையில் புகுந்து முகந்தது மாணிக்கவாசகம் எனும் மேகம். அம்மேகம் மக்கள் உயிர்கள் மகிழுமாறு சொரிந்த திருவாசகம் எனும் மழை பெருவெள்ளமாய் ஓடிச்சென்றது. இதை,

''மாணிக்க வாசகன் எனுமொரு மாமழை'' (பா. 16)

எனக் கூறுகிறார். இம்மாமழை ஓதுபவரின் உள்ளத்தில் - கேட்பவரின் செவியில் - எண்ணுபவர் சிந்தையில் சென்று ஊன்றும் அன்பு விதையே சிவம். அச்சிவம் முத்தி என்ற உண்மைப் பயனைக் கொடுக்க்க் கூடியது என்கிறார்.

இளங்காளை ஊர்தியை விரும்பி ஊர்ந்த சிவனைக் குதிரைமேல் எழுந்தருளச் செய்த வித்தகராக விளங்கும் திருவாதவூரரை,

''ஏறுகந் தேறியைப் பரிமா மிசைவரப் பண்ணிய வித்தக''
(பா. 20)

என்கிறார். 'திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்பது மூதுரை. இம்மூதுரைக்கேற்ப, உம்மை நினைக்கும்போது உள்ளத்தில் தோன்றி, அதை உருக்கும் வாசகமாகத் திருவாசகம் இலங்குகிறது என்பதைச் சிவப்பிரகாச சுவாமிகள்,

''மனம்நின் றுருக்கும் மதுரவாசக'' (பா. 24)

எனப் புகழ்கின்றார். அத்தகு புகழுடைய திருவாசகம், தெய்வத் தன்மை யுடைய திருப்பெருந்துறைத் தலத்தில் குருந்தமர நிழலில் உண்ட சிவானந்தமெனும் தேன் திகட்டெடுக்கும் ஞானச்சிறப்புடையது. அதை எழுதிய மாணிக்கவாசகரை

''குருந்தின் நீழல்வா யுண்ட நிகரில் ஆனந்தத்
தேன்தேக் கெறியும் செய்ய மாணிக்க வாசகன்'' (பா. 32)

என்கிறார். மேலும் இதை ஓதினால் வீடுபேறு கிட்டும் என்கிறார். பூக்களில் உயர்ந்த பூவாகப் பேசப்படுவது செந்தாமரை மலர். அதுபோல பாக்களில் உயர்த்திப் பேசப்படுவது உம் பாக்களே எனப் போற்றுகிறார் சிவப்பிரகாசர்.

இவ்வாறு சிவப்பிரகாசர் சைவக் குரவர் நால்வரையும் அவர் தம் படைப்புகளையும் போற்றுகின்றார். பக்தி இயக்கத்தில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் போன்றோர் படைத்த தேவாரம் பக்திக் கருவூலமாக - தமிழ் இசைக்குக் களமாக - வழிபாட்டுக்கு ஊற்றாக அமைந்தது. பக்தி உலகின் இமயமான மாணிக்கவாசகரின் திருவாசகம் ஊனை, உயிரை உருக்கிக் கல் மனத்தையும் கசிவித்தது. இத்தகு சீருடைய இந்நால்வரையும் சிவப்பிரகாசர் உள்ளன்போடு - பக்திச்சுவை ததும்பப் பாராட்டுவதையும் அவர்களிடத்தும் அவர்கள் செய்துள்ள தெய்வத்தன்மைமிக்க - அருட்திறம்மிக்க செயல்களிடத்தும் தேவார திருவாசகங்களினிடத்தும் கொண்டுள்ள பேரன்பையும் பெருமதிப்பையும் அறியலாம்.

65. சிவப்பிரகாசர் போற்றும் மகளிர்

ரெ. தேவி, தஞ்சாவூர்.

சிவப்பிரகாசர் இயற்றிய நால்வர் நான்மணிமாலை என்னும் நூல் சைவசமயக் குரவர்களின் அற்புத மகிமையையும், சன்மார்க்க நெறிகளையும் பற்றிக் கூறுகிறது. சிவப்பிரகாச சுவாமிகள் இந்நூலில் பெண்களைப் பற்றிச் சில இடங்களில் சுட்டிக்காட்டிச் செல்கிறார். அச்சுவாமிகள் பெண்களை எவ்வாறு பாராட்டுகிறார் என்பதைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

காஞ்சி மாநகரத்தில் குமாரசாமி என்பவருக்கு மகனாகத் தோன்றியவர் சிவப்பிரகாசர். இவர் கல்விப் புலமையுடன் சைவசித்தாந்தம் மற்றும் வீரசைவ நெறிகளை நன்கு அறிந்தவர். பல மடங்களுக்குச் சென்று சன்மார்க்க நெறிகளைக் கற்றுத்தேர்ந்தவர். திருமணத்தைத் தவிர்த்து துறவறம் மேற்கொண்டவர். சுவாமிகள் திருமணத்தைத் தவிர்த்துப் பாடிய பாடல்

''சேய்கொண்டா ருங்கமலச் செம்மலுட னேயரவப்
பாய்கொண்டா னும்பரவும் பட்டிச் சுரத்தானே
நோய்கொண்டா லுங்கொளலா நூறுவய தளவிருந்து
பேய்கொண்டா லுங்கொளலாம் பெண்கொள்ள லாகாதே''

(சீகாளத்திப்புராணம், ப. 10)

என்று, நோய்கொண்டு நூறுவயது வாழ்ந்தாலும், பேய்கொண்டிருந்தாலும், பெண்ணைத் திருமணம் செய்துகொள்ளல் ஆகாது என்று, பெண்களை இத்தருணத்தில் பேயைவிட தாழ்த்திக் கூறியிருக்கிறார்.

''நிட்டையிலே யிருந்துமனத் துறவடைந்த
பெரியோர்க ணிமலன் றாளைக்
கிட்டையிலே தொடுத்து முத்திபெறுமளவும்
பெரியசுகங் கிடைக்குங் காம
வெட்டையிலே மதிமயங்குஞ் சிறுவருக்கு
மணம்பேசி விரும்பித் தாலி
கட்டையிலே தொடுத்துநடுக் கட்டையிலே
கிடத்துமட்டுங் கவலை தானே''.

(சீகாளத்திப்புராணம், ப. 10)

இப்பாடல் வாயிலாகவும் பெண்களின் மீது சுவாமிகள் கொண்டிருந்த வெறுப்புணர்ச்சியை அறிய முடிகிறது. எனவே, இதன் வாயிலாக சுவாமிகள் பெண்களை ஒரு பின்னோக்கிய நிலையில் எண்ணி பார்த்திருக்கிறார் என்பது போலத் தோற்றமளிக்கிறது எனலாம்.

ஆனால், பிற இடங்களில் பெண்களை உயர்த்திப் பாடல்களைப் பாடியுள்ளார். சுவாமிகள் திருக்காட்டுப் பள்ளியையடைந்து, சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு தங்கியிருந்தபோது, கல்வியறிவிற் சிறந்த ஒரு பெண் வீதியினிடத்தே உப்பு விற்றலை கண்டு, இரக்கமுற்றுத் திருநோக்க தீட்சை செய்து, அவளது பரிபக்குவத்தை உணர்ந்து அவளுடைய புலமையைப் பிறர்க்குப் புலப்படுத்த எண்ணி

''நிறைய வுளதோ வெளிதோ கொளுவேம்
பிறையை முடிக்கணிந்த பெம்மா - னுறையுந்
திருக்காட்டுப் பள்ளி திரிபாவாய் நீயிங்
கிருக்காட்டுப் பள்ளி யெமக்கு'' (சீகாளத்திப்புராணம், ப. 13)

என்று பாடினார். உடனே அப்பெண் சிறந்த ஒரு வெண்பாவை பாடிச் சுவாமிகளை வணங்கி அருள் பெற்றார். அவ்வெண்பா,

''தென்னோங்கு தில்லைச் சிவப்பிரகா சப்பெருமான்
பொன்னோங்கு சேவடியைப் போற்றினோ - மன்னோன்
றிருக்கூட்ட மத்தனைக்குந் தெண்டனிட்டோந் தீராக்
கருக்கூட்ட போக்கினோங் காண்''.

(சீகாளத்திப்புராணம், ப. 13)

என்று பாடினார்.

வீர சைவப் பெரும் புலவராகிய சிவப்பிரகாச சுவாமிகள் காரைக்காலம்மையாரைப் பற்றியும் பாடியுள்ளார்.

''எவர்க்கும் இவன் தந்தையேஅன்றித் தனய
னாகா தவன்காண் அந்தமிழ்சீர்க்
காரைக் காலம்மைதனை முந்தொருநாள்
தப்பா அருளால் தனக்கம்மை என்வன்காண் என''.

என்று அருளினார்.

''தாயிலி தந்தையிலி'' எனப் போற்றப்பெறும் சிவபெருமான் தன்னுடைய தாயாகப் புனிதவதியைக் குறிப்பதாக அமைந்துள்ள வரலாறு ஒரு பெண்ணுக்குக் கடவுளே தரும் பெரும் மரியாதையாகும். இதனைப் பெரியபுராணமும், திருவாலங்காட்டுப் புராணமும் எடுத்துரைக்கின்றன.

இவர் தாம் எழுதிய நால்வர் நான்மணிமாலையிலும் பெண்களைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

''பூவான் மலிமணிநீர்ப் பொய்கைக் கரையினியற்
பாவான் மொழிஞானப் பாலுண்டு - நாவான்
மறித்தெஞ் செவியமுதாய் வார்த்தபிரான் றண்டை
வெறித்தண் கமலமே வீடு''. (நால்வர் நான்மணிமாலை, பா. 1)

இப்பாடல் மூலம் திருஞானசம்பந்தருக்கு ஞானப்பால் ஊட்டிய உமாதேவியாரைச் சிறப்பான இடத்தில் வைத்துப் போற்றியுள்ளார் என்பது அறியலாகிறது.

''இலைபடர்ந்த பொய்கை யிடத்தழுதல் கண்டு
முலைசுரந்த வன்னையோ முன்னின் - நிலைவிளம்பக்
கொங்கை சுரந்தவருட் கோமகளோ சம்பந்தா
வீங்குயர்ந்தா ளார்சொல் லெனக்கு''.

(நால்வர் நான்மணிமாலை, பா. 5)

என்ற இப்பாடல், பொற்றாமரைக் குளத்தில் அம்மே, அப்பா என்று அழைத்து அழுதல் கண்டு சிவபிரானும், உமையம்மையும் காட்சியளித்தனர். உடனே உமையம்மைக்குத் திருமுலைசுரந்து பாலைக் கறந்து அளித்தனர். இவ்வம்மை 'அழுதல் கண்டு முலைசுரந்தஅன்னை' என்று போற்றினர். கோமகளான பாண்டியமாதேவி ஞானசம்பந்தர் மதுரைக்கு எழுந்தருளிய போது தாய்ப்பாசம் காரணமாக முலைசுரந்தார் என ஆன்றோர்கள் புகழ்ந்தனர். உமையம்மையுடன் பாண்டியமாதேவியை ஒப்பிட்டுக் கூறுவதைச் சிவப்பிரகாச சுவாமிகள் தமது நூலில் சுட்டிக் காட்டி யிருக்கிறார். இங்கு உமாதேவியைவிட மானிடப் பெண்ணை உயர்த்திக் காட்டுவதை அறியலாம்.

''மகிழ்ச்சி மிகவுண்டு போலுமெதிர் வந்து
புகழ்ச்சியொடு நீபாடும் போது - நெகிழ்ச்சி மலர்ச்
சந்தையினும் வண்டிரையுந் தண்புகலிச் சம்பந்தா
தந்தையினும் பால்கொடுத்த தாய்க்கு

(நால்வர் நான்மணிமாலை, பா. 13)

என்ற இப்பாடல் உமையம்மையின் சிறப்பைப் பற்றிக் கூறுகிறது.

திருஞானசம்பந்தருக்கு ஞானப்பால் ஊட்டிய உமாதேவியாரைப் பற்றித் திருவிளையாடல் பாடலிலும் குறிப்பு காணப்படுகிறது.

''திருமுலைப் பாலி னோடு ஞானமுந் திரட்டிச் செம்பொற்
குருமணி வள்ளத் தேந்திக் கொடுப்பவர் பாலன் வாங்கிப்
பருகியெண் ணிறந்த வேதா கமமிவை பற்றிச் சார்வாய்
விரிகலை பிறவுமோதா துணர்ந்தனன் விளைந்த ஞானம்.

(திருவிளையாடல் - பாண்டியன், சுரந்தீர்த்த....20)

''பாண்டிமா தேவியார் தமது பொற்பிற் பயிலுநெடு
மங்கல நாண் பாதுகாத்தும்
மாண்டறகயார் குலச்சிறையா ரன்பினாலு
மரசன்பா லபராத முறுத லாலு
மீண்டுசிவ நெறியுடையும் விதியினாலும்
வெண்ணீறு வெப்பகலம் புகலி வேந்தர்
தீண்டியிடப் பேறுடையனாத லாலுந்
தீப்பிணியைப் பையவே வெல்க வென்றார்''.

(பெரியபுராணம், திருஞானசம்பந்தர் - 705)

என்ற பெரியபுராணப் பாடல் வாயிலாகப் பாண்டியமாதேவியாரின் சிறப்பைக் காணமுடிகிறது.

''அறிந்து செல்வ முடையானா
மளகைப் பதியாற் றோழமைகொண்
டுறழ்ந்த கல்வி யுடையானு
மொருவன் வேண்டு மெனவிருந்து
துறந்த முனிவர் தொழும்பரவை
துணைவா நினைத்தோ ழமைகொண்டான்
சிறந்த வறிவு வடிவமாய்த்
திகழு நுதற்கட் பெருமானே''.

(நால்வர் நான்மணிமாலை, பா. 7)

இப்பாடல் வாயிலாக, பரவைநாச்சியார் கல்விப்புலமையும், சேவை மனப்பான்மையும் கொண்டவர் என்பதைச் சிவப்பிரகாச சுவாமிகள் சிறப்பாகச் சுட்டிக் காட்டுகிறார்.

''செல்வநல் லொற்றி யூரன்செய்யசங் கிலியாலார்த்து
மல்லலம் பரவை தன்கண் மாழ்குற வமிழ்த்துமேனு
மல்லுநன் பகலு நீங்கா தவன்மகி ழடியிலெய்தி
நல்லவின் படைந்தி ருப்பனம்பி யாரூரன் றானே.''

(நால்வர் நான்மணிமாலை, பா. 35)

இப்பாடலிலும் பரவைநாச்சியாரைப் பற்றிச் சுவாமிகள் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

சீகாளத்திப்புராணப் பாயிரத்தில் காரைக்காலம்மையாரை வணங்கிப் பாடியுள்ளார்.

''தோற்ற மில்பரஞ் சோதிதன் வாய்திறந்
தாற்ற வன்புடனம்மையே யென்னுமோர்
பேற்றை முன்பெறப் பேயுரு வெய்திய
சாற்ற ரும்புகழ்த் தாயை வணங்குவோம்''

(சீகாளத்திப்புராணப் பாயிரம், பா. 12)

இலக்கியங்களிலும், புராணங்களிலும் பெண்களைப் பற்றிய வருணனைகள் காணப்படுகின்றன. சீகாளத்திப்புராணத்தில் சீகாளத்தி நகர பெண்களைப் பற்றிய வருணனைகள் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.

''முற்றுபொன் மதிலிம் மூதூர் முழுமடந் தையராம்
சிற்றிடை மகளிர்ச் சுட்டித் தெளிந்தரை மகளிரென்று
சொற்றனர் பெயர றிந்தோர் சுடர்செய்வின் மாத ரார்க்கு
மற்றது மரீஇய தன்றோ வழங்கர மகளிரென்பேர்''

(சீகாளத்திப்புராணம், பா. 23)

இப்பாடல் மதிலால் சூழப்பட்ட சீகாளத்தி நகரத்திலுள்ள பெண்கள் வாள்போன்ற கண்களையும், சிற்றிடையையும் கொண்டவர்கள் என்றும், தெய்வப் பெண்களுக்கு அரைமகளிர் என்று அறிஞர்கள் கூறினார்கள். அது அரமகளிரென மரூஉவாயிற்று என்றதனால், இந்நகரத்துப் பெண்கள் முழுமடந்தையரெனக் கூறப்பட்டனர். இதன் மூலமாக இந்நகரத்துப் பெண்களின் சிறப்பை அறிய முடிகிறது.

இவ்வாறாகச் சிவப்பிரகாச சுவாமிகள் பெண்களைப் பக்தி உணர்வு மிக்கவராகவும், சேவை மனப்பான்மை மிக்கவராகவும், கல்வியில் புலமை மிக்கவராகவும் அவர் பாடல்களில் ஆங்காங்கே சுட்டிக் காட்டியுள்ளார். எனவே இச்சுவாமிகள் துறவு மேற்கொண்ட நிலையிலும் பெண்களைப் பாராட்டத் தவறவில்லை எனலாம்.

66. சிவப்பிரகாசரின் இலக்கிய மாண்பு

புரிசை. ச. நடராசன், திருப்பத்தூர்.

உயர்தனிச் செம்மொழிகளில் ஒன்றாகிய நம் தமிழ் மொழியைக் கட்டிக்காத்து வளர்த்த பெருமைக்குரிய புலவர் பெருமக்களுள், கற்பனைக் களஞ்சியம் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளுக்கு முக்கிய இடம் உண்டு. சிற்றிலக்கியங்கள் பலவற்றையும், பிரபுலிங்கலீலை என்ற காப்பியத்தையும் படைத்து, இலக்கியத்தையும், சைவ சமயத்தையும் வளர்த்த பெருமைக்குரியவர். தமிழ்மொழியும், வடமொழியும் கற்றுத் துறைபோகிய புலவர் பெருந்தகை. வேதாந்தம், சித்தாந்தம் முதலிய சமயக் கொள்கைகளிலும் வல்லுநராக விளங்கியவர். அவருடைய இலக்கிய மாண்பினைப் புலப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழ்ப்பற்று

பதி, பசு, பாசம் என்ற முப்பொருளின் தன்மையை உணர்ந்து, பாசத்தளை அறுத்து, பரமனின் பாதம் அடைவதையே நோக்கமாகக்கொண்டு, இறைவனிடத்தில், பிறவாமையை வேண்டுவோர் உண்டு, அடியவர்களின் விருப்பமே மீண்டும் பிறவாநெறியில் ஈடுபடுவதே ஆகும். அடியவர்களுள் ஒருவராகத் திகழும், சிவப்பிரகாசர், அண்ணாமலை அண்ணலை, தூய தமிழ்ச் சொல் மலரெடுத்துப் பாவாகப் புனைந்து அவ்விறைவனுக்குச் சூட்டுகின்ற இனிய பிறவியே தமக்கு வேண்டும் என இசைக்கின்றார்.

மதுரம் பெருகுறும் தமிழ்ச்சொல் மலர் நினக்கு
அணியும் பிறவியே வேண்டுவன் தமியேன்

(சோண சைலமாலை - 39)

என வேண்டுவதன் வாயிலாகச் சுவாமிகளுக்குத் தமிழ் மொழியின் மீது இருந்த பற்று எவ்வளவு என்பதனை நன்றாக அறியலாம். மேலும், இறைவனைப் போற்றுவதற்கு உரிய மொழி வடமொழிதான் என்பார் கருத்தை மறுத்து, தெய்வத்தமிழ் மொழிக்கே அவ்வுரிமை உண்டு என்பதனை அடிகள் நிலைநாட்டுவதனையும் நாம் காண்கிறோம்.

கற்பனை வளம்

இலக்கியம் இயற்றும் புலவருக்குக் கற்பனை வளம் மிக இன்றியமையாது வேண்டப்படுவதாகும். கற்பனைத்திறனில் சுவாமிகளுக்கு

இணையற்ற வலிமை உண்டு. விருத்தாசலத்தில் எழுந்தருளியுள்ள பெரிய நாயகியம்மையை ''மென்கொடி'' என அழைப்பதற்கான காரணத்தைச் சொல்லும் அழகு சிறப்புடையது. சிவபெருமான் கங்கையைச் சூடியிருக் கின்றார். எனவே, பெருமானிடத்தில் அம்பிகை ஊடுதல் கொண்டாள். பிராட்டியின் ஊடலைத் தணிக்க பிரான் செய்த முயற்சியை ஆசிரியர் குறிப்பிடுகின்றார். சிவபெருமான் உடல் வளைந்து, அம்மையின் திருவடியைச் சடையின் ஒரு புறத்தில் இருக்கும் பிறைச்சந்திரனைக் கொண்டு உழுது, மறுபுறத்தில் இருக்கும் கங்கைநீரை அவ்வடிமீது விடுகின்றான். இதனால் அம்பிகை உள்ளம் குளிர்ந்து முகமலர்ச்சி உறுகின்றாள். அதாவது, வாடிவதங்கும் கொடியின் அடியில், மண்ணைக் கிளறி நீரைப் பாய்ச்சினால் அக்கொடி குளிர்ந்து மலர்ந்து மகிழ்ச்சியைக் காட்டும். அதுபோல, அம்பிகை பிரானுடைய சடாமகுடகங்கை தன் திருவடியில் பட்ட காரணத்தால் ஊடல் நீங்கி மலர்ச்சி கொண்டாள். எனவே, ''மென்கொடி'' என அம்மையைக் கருதியதாக அடிகள் குறிப்பிடுவது பொருத்தமாக உள்ளது.

விழுமணி யரவ நுழைசடா டவியின் விண்நதித் தண்புனல் விடுப்ப
விரைவொடு குளிர்ந்து முகமலர் தலினால் மென்கொடி
எனநினை உணர்ந்தேன்
(பெரியநாயகியம்மை விருத்தம் - 1)

காரண காரிய இயைபு

சிவபெருமானுடைய திருவுருவில், சடைமுடியில் தங்கிய பிறைச் சந்திரனும், ஆலகாலவிடத்தைத் தேக்கியிருக்கும் கண்டமும், எடுப்பான தோற்றம் உடையவை. அவன் தன்னைச் சரண்புகுந்த பிறைத்திங்களை எடுத்துச் சூடியதும், அஞ்சிய அமரர் துயர் களைய கடல்விடத்தை எடுத்து மடுத்ததும் ''பிரான்'' என்பதை நிலை நாட்டும் காரணிகளாகும். சோண சைலத்தைச் சிவமாகவே காணுகிறார் அடிகளார். பெருமானுக்குள்ள அங்க அடையாளங்கள் மலைக்கும் உள்ளன என்று நிறுவுகின்றார். வானத்தில் உலா வரும் சந்திரன், மலையின் உச்சிக்கும் வருகின்றான். மலைக்குகைகளில் இருட்டு தங்கியிருக்கின்றது. இவற்றைக் கண்ணுற்ற அடிகள், அம்மலை, நிலவு சூடிய நெருந்தகையாகவும், கறைபொருந்திய கண்டனாகவும் இருப்பதை உணர்ந்து சோணசைலமே கயிலை நாயகமாக இருக்கின்றது எனப் பாடுகிறார். காரண, காரியத் தொடர்பு கொண்டு இப்புலவர் இப்படிப் பாடுவதனைப் பாராட்டியே ஆகவேண்டும்.

வரத்திரு முடியின் மதி திருமுடியின் வணைந்து கந்தரத்து இருள்கந்
தரத்தினில் இருத்தி விளங்குறும் சோண சைலனே
கைலை நாயகனே.
(சோணசைல மாலை - 15)

மறுப்பை அறிவிக்கும் மாண்பு

இலக்கியப் புலவனுக்குத் தன்னுடைய கருத்தை எடுத்து நிலை நாட்டுவதற்கு உரிமை இருப்பது போலவே பிறருடைய கருத்தை மறுத்துரைப்பதற்கும் உரிமை உண்டு. ஆனால், அம்மறுப்பைத் தெரிவிக்கின்றபோது மென்மையிழையோட வேண்டும். தேர்ந்த கவிவாணராகிய அடிகளுக்கு, திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகரை மறுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. பழமலையில் வாழும் பெரியம்மையே மலையரசன் மகளாகப் பிறந்தவள். அவள் உலகில் தோன்றியதால் அறிஞர் சிலர் நாணுகின்றனர். திருக்குறள் உரையில் பெண்கள் தாமாக அறியார்; கற்றவர் சொல்லத்தான் அறிந்துகொள்வர் எனக் கூறியுள்ள உரையாசிரியர் அவருள் ஒருவர். பெண்களை அறிவில் குறைந்தவர்களாக எண்ணிய அவர் அறிவுச்சுடராக விளங்கும் அவளைக் கண்ட அளவில் தம் கருத்து தவறுடையது என்றுணர்ந்து நாணம் அடைகின்றார் என்ற கருத்துபட ஆசிரியர் பாடுகின்றார். பரிமேலழகர், மக்கட்பேறு என்ற அதிகாரத் தலைப்பை ''புதல்வரைப் பெறுதல்'' எனப் பெயரிட்டு இருந்தார். மேலும்,

> **ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்**
> **சான்றோன் எனக்கேட்ட தாய்.** (குறள் - 69)

என்ற குறளுக்கு, பிறர் சொல்ல அறியும் இயல்பினரே பெண்கள் என்ற பொருளில் உரை எழுதினார். இக்கருத்தினை மறுக்கக் கருதிய அடிகள் பெரியநாயகியம்மையினுடைய பிறப்பை முன்வைத்து மென்மையாகத் தம் கருத்தை எடுத்துரைப்பதனைக் காணும் யாரும் அகமகிழ்வர்.

> **கற்றார் அறிகுவார் மக்கள்தம் பேறெனக் கட்டுரைத்த**
> **சொற்றான் ஒருபெண் ணொழித்ததென் பாரொடு தொல்லுலகில்**
> **நற்றாண் மகற்பேறு கென்றாசி சொல்பவர் நாண உனைப்**
> **பெற்றான் மலையரை யன்குன்றை வாழும் பெரியம்மையே**
> (பெ.அ.கலித்துறை, பா. 12)

அடிகளார் தம்மையொத்த புலவர் கருத்தை மறுப்பதோடு அமையாது, இறைவன் நிகழ்த்திய செயலையும் ஆய்வுக்குட்படுத்தி, தமது எதிர் முகமான கருத்தைப் பதிவு செய்கின்றார். தாயும், தந்தையும் சேர்ந்து, தம் மகனைக் கொன்று உணவாகச் சமைப்பதற்குக் கட்டளையிட்ட சிவபெருமானுடைய செயலை விமர்சிக்கின்றார். தன்னுடைய பிள்ளையாகிய முருகப்பெருமான் அழும்பொழுது, அதனைப் பொறுத்துக் கொள்ளமாட்டாது விரைந்து எழுந்து பாலூட்டும் தாயாகிய பரமேசுவரி, சிறுத்தொண்டருடைய மனையில், சீராளதேவனைக் கறியாகச் சமைக்க உத்தரவிடச் சென்றபொழுது சிவபிரானை ஏன் தடுக்கவில்லை? எனக் கேட்கின்றார். இதன் வாயிலாக அடிகள் பிள்ளைக்கறி கேட்கப் பிரான்

எழுந்தாலும், தாய்மையுணர்வு நிறைந்த அம்பிகை அதனைத் தடுக்காதது சரியாகாது எனத் தனது கருத்தைத் தெரிவிக்கின்றார் அவர். (பெரி. நெ. நெ. விருத்தம் - 9) மேலும், உலகில் யாரும் செய்வதற்கரிய செயலைச் செய்த பரஞ்சோதியாரைப் ''பெருந்தொண்டன்'' என்னாது, ''சிறுத் தொண்டன்'' என்று உரைத்தது பொருந்துமா? என இறைவனை நோக்கிக் கேட்கின்றார்.

தான்பெறு மழலை மொழிமகன் தன்னைத் தன்கையா
லுளங்களித் தரிந்து
சமைத்துல கறிய விடுபெருந்த தொண்டன்தனைச்சிறுத்
தொண்டன்என்று அவன்சேய்
ஊன் பெறு நீயே யுரைத்தனை. (நெடுங்கழிநெடில் - 8)

தலைமை பாராட்டும் தகைமை

அறிவிலும், ஆன்ற பண்பிலும், தியாகத் தொண்டிலும் சிறந்த பெருமக்களை வாய்ப்பு நேரும் இடங்களில் போற்றிப் புகழுவதற்கு ஓர் இலக்கியவாதி தயங்கமாட்டான். அவ்வகையில் சிவப்பிரகாசரும் வள்ளுவப் பேராசானையும், சைவசமயத் தலைவர்களான நால்வர் பெருமக்களையும், தூய தொண்டர்களான நாயன்மார்களையும் தம் இலக்கியங்களில் பொருத்தமாகப் பாராட்டியுள்ளார். நால்வர் நான் மணிமாலையை அறியாத சைவர்கள் யாரும் இல்லை, சிவஞான பாலைய சுவாமிகள் பிள்ளைத்தமிழில் ''இணையில் திருவள்ளுவப்பெயர் கொள் எம்மான்'' என்று வள்ளுவப் பேறிஞரைப் பாராட்டியுரைக்கின்றார். திருவள்ளுவருடைய ஒப்பற்ற புலமைச் சிறப்பும், தமது பேரன்பும் தோன்ற அடிகளார் கூறியுள்ளது போல வேறு எவரும் வள்ளுவரைப் பாராட்டவில்லை என்பதை நாம் அறிய வேண்டும்.

சிவப்பிரகாசர், மூவர் தேவாரத்தையும், வாதவூரடிகள் அருளிய திருவாசகத்தையும் கண்ணெனப் போற்றிக் கருத்தில் இருத்திக் கைதொழுதார் என்பதை யாவரும் அறிவர். நான்கு வேதங்களையும் திருவாய் மலர்ந்து அருளிய சிவபெருமான், அவற்றைத் தம் கைப்பட எழுத வேண்டும் எனக் கருதவில்லை. ஆனால், அப்பெருந்தகையோ, திருக்கோவையார் என்னும் அரிய தமிழ் நூலை மணிவாசகர் வாய்மலர்ந்து பாடத் தம் கைப்பட எழுதினான் எனக் கூறுகின்றார். வேதத்தை மிஞ்சிய கோவையைப் பாராட்டி உரைக்கும் அடிகளின் ஆர்வமும் தமிழ் அன்பும் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன.

விரிந்து மறையொரு நான்கும் எழுதுகிலம்
எனவோர் வீறுடைப்பொற்
கொன்றை புனைவிரி சடையோன் எழுதத்

திருந்து தமிழ்க் கோவையொரு நானூறும் உரைத்ததிருவாத
வூரன்எனுஞ்
செழுமலர்க்கற் பகமே. (பிள்ளைத்தமிழ், பா. 9)

சொல்லாட்சி

இதழ் முயற்சியால் பிறக்கும் மெய்யும், உயிரும், உயிர்மெய்யும் வராமல் பாடுவதற்கு நிரோட்டகம் என்று பெயர். யமகமாவது அடிமுதலெழுத்தோடு இரண்டெழுத்து முதல் பத்தெழுத்து இறுதியாக ஓரடி போலவே நான்கடியும் பாடப்பெறுவது. அந்தாதியாவது ஒரு பாட்டினுடைய அந்தம், அடுத்த பாடலுக்குத் தொடக்கமாக வருமாறு பாடுவது. திருச்செந்தூரில் எழுந்தருளிய முருகப்பெருமான்மீது திருச்செந்தில் நிரோட்டக யமகவந்தாதி பாடியுள்ளார். இந்நூல் 30 பாடல்களைக் கொண்டது. பழமலை அந்தாதி கலித்துறையில் அமைந்த 100 பாடல் களைக் கொண்டது. இவ்வாறு சொற்செறிவும், பொருள் அழகும் பொருந்தப்பாடும் ஆற்றல் உடைய அடிகளார் பாடல்களில் தமிழ் அழகொழுக வீற்றிருப்பதில் வியப்பு ஒன்றுமில்லை. திருவெங்கையில் எழுந்தருளிய சிவபிரான்மீது மையல் கொண்ட தலைவிக்கு எவை யெல்லாம் பகையாக இருக்கின்றன என்று ஆசிரியர் அடுக்கிச்சொல்லும் பாங்கு அருமையானது. பொங்கிவரும் கடலுக்குப் பகையாய் இருந்த அகத்தியர் வாழும் பொதிகை மலையில் தோன்றும் தென்றல், நிலவு, மன்மதன், முத்து, அன்றில் பறவை, குயில், உறவினர், அன்னை, தோழி, ஊர்மக்கள், மலர் தூவிய மஞ்சம், பன்னீர், சந்தனம் முதலான பகைவர்கள். இன்பத்தைச் செய்பவன் என்ற பொருளுடைய சங்கரனோ பிரிவாகிய துன்பத்தைச் செய்கின்றானே தவிர, வந்து தாங்கிக்கொள்ள வில்லை என்று தன் மகள் படும் வேதனையைச் செவிலித்தாய் எடுத்துரைப்பதாக அடிகள் பாடும் பாடலில், ''பகை'' என்ற சொல் பலமுறை வந்து செவிக்கும், சிந்தைக்கும் இன்பம் தருகிறது. தண்என்ற கோதாவரியைப் போலச் சவியுறத் தெளிந்த அப்பாடல் வருமாறு.

புரளுந்திரை எறியும்குரை கடலும்பகை தமிழோன்
பொதியம் பகை, மதியம்பகை, மதனன் பகை, முலைசேர்
தரளம்பகை, பனையன்றில்கள் பகைஅம் குயில் பகையே,
தமரும்பகை, அனையும் பகை, சசியும் பகை நகர்வாழ்
திரளும்பகை, மலர்சிந்திய அணையும் பகை, பனிநீர்
திமிரும்குளிர் களபம்பகை, எனில்என் செயவடியேன்
அருளுஞ்சுகம் அருள்கின்றிலர் பெயர் சங்கரர் எனவே
அணி வெங்கையில் அமர்கின்றவ ரதுமென்குறை அனமே.
(திருவெங்கைக் கலம்பம், பா. 68)

சிவஞான பாலைய சுவாமிகள் மீது பாடப்பெற்ற பிள்ளைத் தமிழில் வாரானைப் பருவப் பாடல் ஒன்று இங்கு சிந்திக்கத்தக்கது. பிறப்பு, இறப்பு அற்ற பெருமானாகிய சிவபிரானே சிவஞான பாலைய சுவாமிகளாக அவதரித்து இருக்கின்றார் என அடிகள் போற்றிப் பாடுகின்றனர். எனவே, சிவபரம்பொருளின் செயல்களை எடுத்துக்காட்டித் தமது ஞானாசிரியரைப் பாராட்டும் பாங்கினை நூலில் நெடுக காணலாம். நற்றாய் முதலியோர் குழந்தையை வருக என்று அழைக்கும். பருவம் வாரானைப் பருவம். இது குழந்தையின் 12-ஆம் திங்களில் நிகழ்வது. திருவாரூரில் நம்பியாரூரின் வேண்டுகோளின்படி, சிவபெருமான் பரவை நாச்சியார்பால் தூது நடந்தார். அப்படி ஆரூர் வீதியில் நடந்த பெருமான் இன்று தம்மிடம் நடந்து வந்தால் பழி உண்டோ? இல்லை. எனவே, மயிலை மலையில் எழுந்தருளியிருக்கும் சிவஞானக் குழந்தையே வருக, வருக என நற்றாய் அழைப்பதாகப் பாடியுள்ளார். இப்பாடலில் பயின்று வரும் சொற்களின் அழகு நெஞ்சைக் கவருவதாகும்.

பைந்தா துகுக்கு நறுங்கொன்றைப் பனிமா மலரும் குழவியிளம்
பயில்வெண் மதியும் துளையெயிற்றுப் பாம்பும் சுமக்கும் அன்றுநீ
செந்தா மரைச்சே வடிநோவத் திரும்பித் திரும்பி யோரிரவிற்
சேல்வென்று அகன்ற வரிமதர்க்கண் சிலைக் கூன்
புருவத் தரளநகை
நந்தா விளக்கின் திருமனைக்கு நாவல் நகரின் வன்தொண்டர்
நடத்த வொருதூ தாளாகி நடந்த உனக்கின்று அடியேம்பால்
வந்தால் வருமோர் பழியுண்டோ மதுரக்கனியே வருகவே
மயிலை வரையிற் சிவஞான மணியே வருக வருகவே.
(வாரா. பா. 3)

வழிகூறும் மொழி

சமய உண்மைகளைத் தெள்ளிய தமிழில் பாடுவதே அடிகளின் நோக்கமாகும். எனவே, அவருடைய பாடல்களில் ஆன்மா உய்வு பெறுவதற்கான வழிவகைகளை நிரம்பக் காணலாம். மனம், மொழி, செயல் ஆகிய மூன்றையும் திரிகரணங்கள் என்பர். மனித வாழ்க்கையில் இம்மூன்றும் தூய்மையாக இருத்தல் வேண்டும். மனத்தை இடமாகக் கொண்டு பொறாமை, ஆசை, கோபம் முதலான குற்றங்கள் நிகழும். இவற்றைப் போக்குவதற்கு தியானம் பயன்படும். வாயை இடமாகக் கொண்டு பொய், புறங்கூறல், தீயனசொலல் ஆகிய தவறுகள் நிகழும். இவற்றை துதி எனும் நீரால் கழுவி நீக்கலாம். உடம்பை அடிப்படையாகக் கொண்டு அவத்தொழில் எனும் தீங்கு நிகழும். இதனை அருச்சனை எனும் செய்கையால் போக்கலாம். இப்படி மூவகை அழுக்கையும் மூன்று செயல்களால் போக்கியும் நீக்கியும் மானிடர் உயர்வு பெற வேண்டும் என்று அடிகளார் அறிவுரை கூறுகிறார்.

திருக்குறு அழுக்கா றவாவொடு வெகுளி
செற்றமா கியமன வழுக்கைத்
தியானமென் புனலால் பொய்புறங் கூறல்
தீச்சொலென் கின்றவா யழுக்கை
அருட்கிளர் நினது துதியெனும் புனலால்
அவத் தொழி லென்னுமெய் யழுக்கை
அருச்சனை யென்னும் புனலி னாற் கழுவா
(நெடுங்கழி நெடில், பா. 6)

சமுதாயத்தின் நன்மைக்கும், இனிமைக்கும் தம்மால் ஆன வழிவகைகளைக் கவிஞர்கள் எப்போதும் கூறுவர். சமுதாயத் தீமைகளைக் கண்டிப்பதற்கு முன்நிற்பர். மனித சமுதாயம் வாழ்நாளை வீழ்நாளாகக் கழிப்பதைக் கண்டு பொறுக்காமல் துடிப்பது கவிஞர் இயல்பு. விலங்கினத்திலே இருந்து உயர்ந்து மனிதப் பிறப்பெடுத்துள்ள ஆன்மா மேலும் உயர்ந்து தெய்வ நிலை அடைய வேண்டும். இப்படி இல்லாமல் மனித நிலையிலே இருந்து தாழ்ந்து விலங்கினத்தைப் போல உழன்று முடிவில் மீளா நரகத்திற்குச் செல்லும் சிலரைப் பார்த்து வருந்தி அடிகள் கூறும் கருத்து, ஒட்டுமொத்த மனித சமுதாயத்திற்கே அறவுரை பகர்வதாக இருக்கிறது.

கண்கள் பார்க்கும் திறனை இழப்பதற்குள்ளாக நடராஜப் பெருமானின் நடனத்தைக் கண்டுகளிக்க வேண்டும். நடக்க முடியாமல் போவதற்கு முன்பாக சிவபெருமான் வீற்றிருக்கும் திருக்கோயிலை வலம் வர வேண்டும். நா குழறுவதற்கு முன்பாகப் பெருமானின் திருவடிகளைத் துதிக்க வேண்டும். காதுகள் கேட்கும்திறனை இழப்பதற்கு முன் அவனுடைய மெய்மையான புகழைக் கேட்க வேண்டும். கைகள் நடுக்கம் கொள்வதற்கு முன்பாக அப்பெருமானை மலர் கொண்டு அர்ச்சிக்க வேண்டும். மனக்கலக்கம் அடைவதற்கு முன்பாக நெஞ்சத்தில் இறைவனை இருத்த வேண்டும். இப்படியெல்லாம் செய்யாமல் மனிதர்கள் மீளமுடியாத நரகத்திற்குச் செல்வதற்காக மாண்டு போகின்றார்களே என்று சிவப்பிரகாசர் வருத்தமுறுகின்றார்.

மயலில் அழுந்தி அயராமுன் மனத்தில் அவனை இருத்திடார்
மனிதர் உழன்று வாளாபோய் மறியா நரகின் மறிவாரே
(திரு. கலம்பகம் - 96)

புதிய இலக்கியக் கோட்பாடு

சிவப்பிரகாச சுவாமிகள் ஏனைய தமிழ்ப்புலவர்களைப் போலவே முன்னோர் மொழி பொருளைப் பொன்னே போல் போற்றும் மரபுடையவர் என்பதனை அவர்தம் பாடல்கள் வழி அறியலாம். தேவாரம், திருவாசகம் போன்ற சமய இலக்கியங்களில் ஆழங்கால்பட்ட

அவ்வறிஞர், ஏற்ற இடங்களில் அத்திருமுறை தொடர்களைப் பயன்படுத்தி இருக்கிறார். திருக்குறளை, சிவபெருமானுடைய திருவடிகளைப் போலவே எண்ணிப் போற்றும் அடிகளார், ஏறக்குறைய 80 குறட்பாக்களை தம்முடைய நூல்களில் எடுத்து ஆண்டுள்ளார் என்பார், திரு.வி. குமாரசாமி ஐயர். இவ்வாறு முன்னோர் கூறிய மொழிகளை எடுத்தாளும் புலவர் பெருந்தகை ஓர் இலக்கியக் கோட்பாட்டை எடுத்துரைக்கின்றார். நல்லறிஞர் தம் புலமைத் திறத்தால் அருளிய பாக்களையும் நூல்பொருள்களையும், உரைகளையும், தம்முயற்சியாலும், ஆற்றலாலும், அறிவு நுட்பத்தாலும், கண்டனபோலப் படைத்துக்கொள்ளும் தன்மையர் எக்காலத்திலும் உண்டு. இத்தகைய இழிசெயலை அடிகளார் கண்டிருக்கிறார். தமக்குமுன்னே வாழ்ந்த அறிஞர் பெருமக்கள் கண்டு காட்டிய உண்மைகளை அவருடையன எனவே தெளிவாக தெரிவிக்கும் நேர்மை இலக்கிய வாணர்களுக்கு வேண்டும். பிறருடைய கருத்தைத் தம்முடைய கருத்தெனக் காட்டுதல் கூடாது என்ற இலக்கியக் கோட்பாட்டைச் சிவப்பிரகாசர் நிறுவுகின்றார்.

முன்னோர் தொடைப்பொருளை முற்றும் கரந்துரைத்துப்
பின்னோர் எமது எனும் பொற்றிபோல். (நெஞ்சுவிடு தூது - 184)

கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் தமிழகத்தில் விளங்கிய தலைசிறந்த புலவர் பெருமக்கள் இருவர். ஒருவர், திருச்செந்திலாதிபன் அருள் பெற்று ஞான ஒளி வீசிய அருளாளர் குமரகுருபரர். மற்றொருவர் தொண்டை மண்டலம் தந்த கவிக்கடல், கற்பனைக் களஞ்சியம், நல்லாற்றூர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் ஆவார். இருபெருமக்களும் சைவ இலக்கியக் கண்மணிகள் எனக் கொள்ளத்தக்கவர்கள். பின்னவராகிய சிவப்பிரகாசர் தமிழ் இலக்கியச் செழுமைக்கு வழங்கிய அருட்கொடைகள் பல. இங்கு, சுவாமிகளின் இலக்கிய மாண்பினைப் புலப்படுத்தும் சான்றுகள் சில காட்டப்பெற்றன.

67. திருவண்ணாமலை தீபம்

வெ.அ. நாகரத்தினம், காங்கேயம்.

பதினேழாம் நூற்றாண்டில் தலை சிறந்து விளங்கிய புலவர்களில் குமரகுருபரரும், சிவப்பிரகாசரும் குறிப்பிடத்தக்கவர்கள். பல்வேறு இலக்கிய வகைகளால், சைவ சமயத்தைப் பரப்பியப் பெருமை இருவருக்கும் உண்டு. சைவ நெறி வழுவாது வாழ்ந்து வந்த இவர்களில் சிவப்பிரகாசரின் இலக்கியம் இங்கு ஆய்வுப் பொருளாக இடம் பெறுகிறது. தொண்டை மண்டலத்தில், காஞ்சிபுரத்தில் வேளாளர் குடியிலும், வீரசைவ மரபிலும் வாழ்ந்த குமாரசாமி தேசிகர் என்பவருக்கு மகனாகப் பிறந்தார். வேலாயுதம், கருணைப் பிரகாசம், ஞானாம்பிகை ஆகியோர் உடன் பிறந்தவர்கள். தமிழின்மீது கொண்ட ஆர்வத்தின் காரணமாகத் தென்னாட்டிற்குச் சென்று, துறைமங்கலம் அண்ணாமலை ரெட்டியார் என்பவரால் ஆதரிக்கப் பெற்று, தருமபுர ஆதினத்து வெள்ளியம்பல சுவாமிகளைக் குருவாகக் கொண்டு அவரிடம் சிவஞானம் பெற்றார்.

அப்பர் சுந்தரர் சம்பந்தர் ஆகியோரைப் போலவே பல்வேறு தலங்களுக்குச் சென்று பாடல்களைப் பாடியுள்ளார். அவற்றில் சோணசைல மாலை என்பதும் ஒன்று. 'மாலை' என்பது சிற்றிலக்கிய வகைகளில் ஒன்று. சோணசைல மாலை, நால்வர் நான்மணிமாலை, நவமணிமாலை, கைத்தலமாலை, இட்டலிங்கவபிடேக மாலை, நிரஞ்சன மாலை ஆகிய ஆறு 'மாலை' நூல்கள் இவருடைய பிரபந்தத் திரட்டில் இடம் பெற்றுள்ளன. அவற்றில் முதலில் இடம் பெறுவது சோணசைல மாலை. தம் குருநாதரைப் போலவே இவரும் திருவண்ணாமலையில் முக்தி பெற்றதாகக் கூறுவர். முத்தியைத் தருகின்ற தலமாக இருப்பதால், இம்மாலை முதலில் இடம் பெற்றிருக்கக் கூடும். எனவேதான், 'சோணசைல மாலை' முழுவதும் பக்தி நெறியிலிருந்து முத்திக்குச் செல்லும் வித்தாக அமைந்துள்ளது.

நூறு பாடல்களைக் கொண்ட இம்மாலை, ஏழுசீர் விருத்த யாப்பினால் பாடப்பட்டுள்ளது. முதல், இரண்டு அடிகளில் ஆசிரியன் உள்ளக் குமுறல்களாகவும் மூன்றாவது திருவண்ணாமலையின் வளத்தையும் நான்காவது அடி அத்தலத்தில் உறைந்திருக்கும் சிவபெருமானின் சிறப்பினையும் கூறுகிறது. பக்திச் சுவையின் கனிவினையும் கற்பனையின் வளத்தினையும் பாடல்கள் முழுக்கக் காணலாம். சொல்லழகும், பொருளழகும் மிகுந்து காணப்படும் இவரது பாடல்கள் தமிழ்ப்புலமையின் ஆழத்தை

வெளிப்படுத்தி, 'கற்பனைக் களஞ்சியம்' என்ற இவரது சிறப்புப் பெயருக்கு இந்நூல் ஒன்றே போதும் என்று சொல்லும்படி விளங்குகிறது.

'சோணசைலமாலை' என்பது திருவண்ணாமலையைக் குறிக்கும். காப்புப் பாடலிலிருந்து தொடங்கப்பட்ட நூறு பாடல்களில் திருவண்ணாமலை என்று எங்கும் சுட்டவில்லை. சிவப்பிரகாசர் இம்மலைக்கும் அங்கு அமர்ந்திருக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பினைக் கொண்டு 'சோணசைலமாலை' என்று பெயர் வழங்கியுள்ளார். ஐம்பெரும் பஞ்சபூத பதிகளில் திருவண்ணாமலை நெருப்பிற்கு உதாரணமாகத் திகழ்கிறது. நெருப்பு என்பது சிவந்த நிறத்தைக் குறிப்பிடும் சொல் சிவனிற்கும் அந்நிறத்தையே சுட்டுவர். சோணம் என்பதற்கு, இரத்தம், செந்தூரம், தீ, சிவப்பு, செங்கரும்பு, செந்தூரம் என்ற பொருள்களைத் தருகிறது. தமிழ்மொழி அகராதி அதேபோல்,

சோணகிரி - இரத்தினமாலை
சோணகிரி வள்ளல் - சிவன்
சோணசைலம் - சோணகிரி
சோணசைலம் - இரத்தினசலம், அருணாசலம்

போன்ற பொருள்களையும் அவ்வகராதி தருகிறது. (ப. 713, 714, நா. கதிரைவேற்பிள்ளை, தமிழ்மொழி அகராதி) எனவே சிவந்த உருவில் இருக்கும் சிவபெருமான் அமர்ந்திருக்கும் இத்தலத்திற்கு 'சோணசைலமாலை' என்று குறிப்பிட்டிருக்கும் அவரது கருத்து தெற்றென விளங்கும். அத்துடன், பாடல்களில் எங்கும் அண்ணாமலை, அண்ணாமலையார், அண்ணாமலைநாதன் என்றெல்லாம் குறிப்பிடாது. 'கையிலைநாதன்' என்றே கூறியுள்ளார். பாடல்களுக்கு அமைந்துள்ள உரை குறிப்புகள் அதற்கு விளக்கத்தைத் தருகின்றன. அதன்படி, வடபாலுள்ள கைலாயமலை அல்லது மேருமலையைப்போல, தெற்கில் இல்லை என்பதால் இம்மலையை திருவண்ணாமலை என்று சொல்லாமல், கைலாயத்திற்கு இணையாகச் சொல்லப்படுகிறது. அதாவது கைலாயமாகவே கருதப்படுகிறது. கைலாய மலையானது, வானினைத் தொடுமளவு உயர்ந்தோங்கி நிற்பதால் இம்மலையினையும், வளர்ந்தோங்கும் சோணசைலம், உயர்ந்தோங்கும் சோணசைலம் என்றே குறிப்பிட்டுள்ளார். அத்துடன், கைலாய மலையில் இருப்பதை இம்மலைக்கு ஏற்றிச் சொல்லியிருப்பதைப் பாடல்கள் விளக்குகின்றன.

மண் - காஞ்சிபுரம், திருவாரூர்
நீர் - திருவானைக்கா
காற்று - திருக்காளத்தி
வான் - (சிதம்பரம்) தில்லை
நெருப்பு - திருவண்ணாமலை

என்று ஐம்பெரும் பஞ்சபூதப் பதிங்களில், திருவண்ணாமலை நெருப்பிற்குச் சொல்லப்படுகிறது. அதற்கு புராண வரலாறு உண்டு. அதாவது இம்மலை, உலக உருவன் என்னும் விராட்புருடனுக்கு மேல் வயிற்றுப் பகுதியாகும். மேல்வயிறு - மணிபூரகம் பிரமன் மால் இருவரும் செருக்குற்றுத் தாமே பரம்பொருள் என வழக்கிட்டபோது இடையில் இறைவன் நெருப்புத்தூண் வடிவில் தோன்றி உண்மையை விளக்கிய திருவூர். அந்தத் தூணே இப்பொழுது மலை வடிவமாக உள்ளது. ஆண்டுதோறும் கார்த்திகைத் திங்கள் கார்த்திகை நாளில் இவ்விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இம்மலையின் திருச்சுற்று 13 கி.மீ. உள்ளது. பார்வதியம்மை தவம்புரிந்து சிவபெருமானிடம் இடப்பாகம் பெற்றார். இக்குறிப்பு 'பவழக்குன்று' என வழங்கும் குன்றின்மேல் புலப்படுகின்றது. திருப்புகழ்ப் பாடிய அருணகிரிநாதன் தோன்றியருளிய திருவூர் அவரையாட்கொண்டருளிய முருகப்பெருமான் திருவுருவம் கோயிலுக்குக் கிழக்கில் ஒரு கம்பத்தில் இருக்கிறது. அப்பெருமானுக்குக் கம்பத்திளையனார்'' என்பது பெயர். கோபுரத்திளையனார் கோயிலில் அருணகிரிநாதரின் திருப்படிமம் உள்ளது.

நினைப்பவர்க்கு வீடுபேறளிக்கும் திருவூர். பகலவன் பிரகத்த மன்னன், வசுக்கள், எண்மர், நான்முகன் மால் நிலவோன், புனகாதிபன் முதலியோர் வழிபட்ட திருவூர், வித்தியாதரர் இருவர் ஒரு முனிவரின் வசைமொழியால் பூனையாகவும் குதிரையாகவும் மாறினர். இத்திருவூரை வலம் வந்தபின் அவ்வசை நீங்கப் பெற்றுப் பேறு பெற்றனர். கங்கைகொண்ட சோழன் காலத்துக்கு முன்னரே (கி.பி. 1025) இக்கோயில் கற்றளியாக இருந்ததென்பது கல்வெட்டுகளால் புலப்படுகின்றது. கிருஷ்ணதேவராயர் கி.பி. 1516-இல் ஆயிரக்கால் மண்டபத்தையும், எதிரில் உள்ள திருக்குளத்தையும் பதினொருநிலைக் கோபுரத்தையும், வேறு பல திருப்பணிகளையும் செய்தமை கல்வெட்டுகளால் புலப்படுகின்றது.

வல்லாளன் கோபுரம், சக்தி விலாசம், கிளிக்கோபுரம், கல்யாண மண்டபம் முதலியன காணத்தக்கன. கோயிலின் அகத்தும் புறத்தும் மலைப்பகுதியிலுமாக 360 தீர்த்தங்கள் உள்ளன. இவற்றுள் சிவகங்கை, பிரமதீர்த்தம், அக்கினி தீர்த்தம், இந்திர தீர்த்தம் என்பவை சிறந்தனவாகும். சித்துக்கள் பல புரிந்த குகை நமச்சிவாயர், குருநமச்சிவாயர் சமாதிக் கோயில்கள் உள்ளன. (ப. 128-129, சிவப்பதிகள் வரலாறு, கழக வெளியீடு)

மேற்கண்ட கருத்திற்கேற்ப திருவண்ணாமலையில் இறைவன் நெருப்பாகக் காட்சி தருபவன். காத்தல், படைத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலைச் செய்யும் இறைவன், இங்கு அறியாமை என்னும் இருளினைப் போக்கியும் ஆணவத்தை அழிப்பவனுமாகக் காணப்படுகிறான். நெருப்பு அழிக்கும் ஆற்றல் பெற்றது. ஒளியைக் கொடுக்க

வல்லது என்பதைப் போல நெருப்பாகிய இறைவன் தீவினைகளை அழித்து உள்ளத்துள் ஒளிவிளக்காகத் திகழ்வதை 'நெருப்பு' என்று படிமமாகச் சுட்டப்படுவதைக் காணலாம்.

சிவன் என்னும் இறைவன் எல்லா உயிர்களுக்கும் முதல் பொருளாகவும் மூலப்பொருளாகவும் அமைவதுடன் மெய்ப்பொருளாக விளங்குகிறான். நினைத்தற்கு அப்பாற்பட்ட உருவமும் அருவமும் இல்லாத தூல வடிவமாக இருப்பது திருவண்ணாமலை வடிவம். அவ்வுருவத்திற்கு லிங்கவடிவம் தந்திருப்பதையும் பாடல்களில் காணலாம்.

சாருமா லயத்திலிங்கமாஞ் சோண
சைலனே கைலைநா யகனே (பா. 16)

தரித்த திதூல வடிவுறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே (பா. 17)

இத்தகைய தூலவடிவுடன் விளங்கும் ஈசன், திரிபுரம் எரித்தது, மன்மதனை எரித்தது, நான்முகனுக்கும் திருமாலுக்கும் இருந்த ஆணவத்தை அழித்தது, இரணியனை அழித்த திருமாலின் (பறவையும் விலங்கும் சேர்ந்த வடிவத்தை (நரசிங்கமூர்த்தி) உக்கிரத்தை ஒடுக்கியது. பாற் கடலில் தோன்றிய நஞ்சினை, தான் மட்டும் ஒருவனாகவிருந்து அருந்தியது (பா : 42, 97) போன்ற இந்நிகழ்ச்சிகள் பாடல்களில் இடம் பெற்றுள்ளன (பாடல்கள் : 7, 22, 61, 63, 70. 96, 98) எனவே அழித்தல், அருளல் போன்ற சிவபெருமானின் தொழில்கள் மட்டுமே இப்பாடல்களில் இடம் பெற்றுள்ளன. இக்கருத்திற்கு விளக்கம் அளிக்கும் வகையில், பாடலுக்கு எழுதிய உரைக்குறிப்பில், ''சிவபெருமான் கொண்ட (உரு) மூர்த்தங்களுள் கோர மூர்த்தங்கள் இடரொழிவிற்கும் மிச்சிரமூர்த்தங்களைச் சித்தியெய்தற்கும், சாந்த மூர்த்தங்களைச் சாந்தியெய்தற்கும் வழிபட வேண்டுமென்பது நூலின் துணிபாகலின்; ஈண்டியம்பிய உக்கிரமூர்த்தங்களின் வெற்றிகளைத் துதிக்கில் இடர் எய்தாவென்பது'' (ப. 35, சிவப்பிரகாச சுவாமிகள் பனுவல் திரட்டு) என்று இடம் பெற்றிருப்பது மேற்கண்ட கருத்திற்கு விளக்கம் அளிக்கும். எனவே அழித்தல் தொழிலைக் கொண்ட சிவபெருமான் உள்ளத்தினுள் இருக்கும் இருளினைப் போக்கும் விளக்காக, ஒளியாக, சுடராக இருப்பவன். தன்னை வழிபடுபவர்க்கன்றி அனைவருக்கும் அறியாமையை அகற்றுகின்ற விளக்காக, உலக விளக்காக இருப்பவன் என்று பாடல்களில் கூறியுள்ளதைக் காணலாம்.

'கார்த்திகை விளக்கு' (பா. 5)

''உலக விளக்கு'' (பா. 24)

''ஒண்பரிதி'' (பா. 12)

உண்மை விளக்கு (பா. 60)

பகல் விளக்கு (பா. 53)

சக விளக்கு (பா. 53)

இவ்வாறு சொல்வதுடன் மட்டுமன்றி, மெய்ப்பொருளாக விளங்கும் சிவபெருமான், செம்பொருளாகத் திருவண்ணாமலையில் எங்கும் விளங்கு வதாகக் குறிப்பிடுகிறார். உச்சியில் கார்த்திகை விளக்கும் (பா. 5), உள்ளங்கையில் தழலையும் (பா. 70) சூரியன் தவழ்ந்து விளையாடு மிடமாகவும் (பா. 1, 4), மலையில் உள்ள அருவிகள் கூட பொன் சொறிவதுபோல இருப்பதாகவும் (பா. 25) எங்கும் மணிகள் பரந்து காணப்படுவதாகவும் (பா. 45) அருவியாகிய சுனையில் தாமரைப் பூக்கள் விளக்காகத் திகழ்வதும் (பா. 45) ஆயிரங்கோடி கதிர்கள் வந்து தங்குமிடமாகவும் (பா. 27) உள்ளது. மலையில் காணும் உயர்ந்த அடர்ந்த மரங்களின் செழிப்பு, அவற்றினால் ஏற்படும் இருளினை வைத்துக் கொண்டு திருமால் உறையும் மலையோ என்று பார்க்கின்றவர்கள் ஐயுறாதபடி சோதிமரங்கள் எங்கும் நிறைந்து ஒளியைப் பரப்புகின்றதாம் என்று நயம்படக் கூறியுள்ளார் (பா. 21) இவ்வாறு சுடராக, நெருப்பாக விளங்குபவன் கைலைநாதன் அவன் வீற்றிருப்பதாலே அம்மலை பெருமையடைகிறது. திருமால் வணங்கும், அன்னக்குவியல் போல் காட்சியளிக்கும் இம்மலை கைலைமலைதானோ என்று வியப்புறும் வண்ணம் சுடர்விடுகிறது. (பா. 55) மேருமலை போன்று உயரமாக வளர்ந்து செல்வதால், சூரியனால் தாண்ட முடியாமல் அங்கேயே தங்குகின்ற பீடமாக இம்மலை உள்ளது (பா. 4)

நான்முகனும் மாலும் காணமுடியாத (அடிமுடியை) அவர்களைத் தோற்கடித்த வெற்றிமலையாகத் திகழ்கிறது. (பா. 79)

திரிபுரத்தை எரிப்பதற்கு மேருவை வில்லாக வளைத்ததால் சிவபெருமானுக்குத் தாழ்ந்து கொடுப்பதாக உள்ளது. (பா. 19)

யானை, புலி உருவில் வந்த அசுரர்களை அழித்தவர் சிவபெருமான் ஆயினும் இம்மலையில் அவை உலவிச் செல்கின்ற காட்சியை உடையது. (பா. 11)

மலையில் இருக்கும் பாம்புகள் தம் இரத்தினத்தை வெளிக்கொட்ட அதிலிருந்து வந்த ஒளியை மூங்கிலில் ஏற்படும் தீ என நினைத்து புலிகள் பயந்து ஓடும் வளத்தைக் கொண்டது. (பா. 71)

தாயானவள் தன் குழந்தையைப் பார்த்தவுடன் அன்பு பொங்கி அணைத்துக் கொள்வதைப் போல, பக்தர்களுக்காக அருவி தாழ்ந்து செல்லும் இயல்பினை உடையது. (பா. 35)

கரிய மேகம் போல விளங்கும் யானை தன் துதிக்கையை மேலே தூக்க அது பாம்புதானோ என்றும் சூரியன் அஞ்சும்படி உயர்ந்து விளங்குகிறது. (பா. 69)

கரிய யானைகள் மலையில் திரிவதை விரும்பாத அருவிகள் சற்றுத் தள்ளிச் சென்று ஓடுகின்ற வளத்தைக் கொண்டது. (பா. 44)

தினைமணிகளைச் சிந்துகின்ற கிளிக்கூட்டங்களை மணிகளாலும் இரத்தினங்களாலும் ஓட்டுகின்ற குறவர்கள் வாழும் மலை (பா. 64)

முசுக்கலை தன் பிணாவுடன் கூடியிருக்கும் இடத்தையுடையது. (பா. 45)

தேன் கூடுகளிலிருந்து தேன்சொறுகின்ற வளத்தைக் கொண்ட உயரமான அசோகம் போன்ற மரங்களைக் கொண்டது. (பா. 73)

இத்தகைய இயல்பான இயற்கைச் சூழலில் வீற்றிருக்கும் கைலைநாதன் நெருப்பு வடவடிவமாகத் திகழ்ந்தாலும் அனைவருக்கும் கருணை காட்டுவதால் குளிர்ச்சியுடையதாக இம்மலை விளங்குகிறது. (பா. 75)

கோயிலுக்குள் மட்டுமே இறைவன் என்று இல்லாமல் எங்கும் நிறைந்து இருப்பவன் கைலைநாதன் (பா. 11) மெய்ப்பொருளாக விளங்கும் இவ்விறைவன், தன் மெய்யடியார்களுக்கு மட்டுமன்றி பொய்யடியார்களுக்கும் தீவினைகளை அகற்றி மெய்ப்பொருள் விளங்கச் செய்கின்ற மலையாக உள்ளது (பா. 33).

மக்கள் எங்கெல்லாம் இருக்கின்றார்களோ அங்கெல்லாம் தானே வந்து காட்சி தரும் எளிமை மிக்கவன். (பா. 91) சிவன் என்று உணர்த்தும் மலை இம்மலை.

தவம் செய்யும் முனிவர்களும் ஞானிகளும் பக்தர்களும் கூடி யிருக்கும் பெருமையைக் கொண்டது. ''மலையளவு சுவாமிக்கு குன்றளவு புஷ்பம்'' என்னும் பழமொழிக்கு மாறாக மலையளவு சுவாமிக்கு மலையளவு புஷ்பம் என்று விளங்கும்படி மிகப்பெரும் அடியார்களின் கூட்டத்தைக் கொண்டது. (பா. 30)

அனைத்து உயிர்களிடத்தும் கருணைகாட்டும் மலையாக இருப்பவன். சிவப்பிரகாசர், சிவபெருமானை 'கருணைமலை' என்று சொல்லாமல் வேற்றுமைத் தொகையாக விரித்து மலைபோலும் கருணையைக் கொண்டவன் என்று சொல்லும் நயத்தை இப்பாடலில் பார்க்கலாம். (பா. 91)

இம்மலைக்கு வருகின்ற மெய்யடியார்களுக்கு சிவன் தன் உண்மைத்தன்மையைக் காட்டுபவனாக விளங்குகிறான். (பா. 93)

சிவசக்தி வடிவில் இருப்பவன் சிவபெருமான் சிவன் செய்யும் தொழில்களுக்கெல்லாம் உடனிருப்பவள் சக்தி. அவள் ஆதிமலைக்கு மகளாகவும் (பா. 26) சிவபெருமானுக்கு அமுதமாகவும் இருப்பவள். (பா. 78)

சிவன் சக்தியுடன் விளங்கும் சோணசைலநாதனை வழிபட்டாலன்றி முக்தி கிடைக்காது. உடலும் உயிரும் இயங்குவதுபோல், சிவனும் சக்தியும் இயங்குகின்ற சிவசக்தி தத்துவத்தை உணர்ந்தாலன்றி முக்தி கிடைக்காது (பா. 55) எனவே இறைவியுடன் வீற்றிருக்கும் சோணசைலநாதனை வழிபடவேண்டும். நினைத்தாலே முத்தி தரும் மலை இம்மலை என்பதால், ஜனனம் என்னும் பிறவி நோயைப் போக்கவல்லது. இக்கருத்தினைக் கூறுகையில் ஆசிரியர், மற்ற மலைகளிலெல்லாம் மூலிகைச் செடிகள் இருக்கின்றன. அவை நோய்களை மட்டுமே போக்கும். ஆனால் பிறவி நோயை அம்மலைகள் நீக்காது என்பதால், இம்மலைப் பார்த்து நாணுகின்றது என்கிறார். (பா. 65)

இம்மலையில் கந்தவர்கள் மட்டுமன்றி எல்லோரும் செல்லும் சிறப்பினையுடையது. (பா. 43)

கிம்புருடர்களைப் போல எந்நேரமும் இசை எழுப்பிக் கொண்டு திகழ்கின்ற இம்மலையில் (பா. 68) எப்பொழுதும் அரோகரா, அரிஅரி என்ற அரவமும் ஒலித்துக் கொண்டிருக்கின்ற பெருமையைக் கொண்டது. (பா. 67) தவ முனிவர்களும் பக்தர்களும் கூடியிருக்கும் காட்சியானது, பாற்கடலுக்கு இடையில் மந்தரமலைபோல விளங்கி உயர்ந்து நிற்பது இம்மலை. (பா. 12) இத்தகைய பெருமையைக் கொண்ட இம்மலை, மெய்ப்பொருளாக இருப்பதே அதற்குக் காரணம் என்பது விளங்கும் பிறப்பும் இறப்பும் இல்லாத சிவன் ஒருவனால் மட்டுமே முத்தியைத் தரமுடியும் திருமால், பிரம்மன் போன்றோரைப்போல, பிறப்பதும் இல்லை, இறப்பதும் இல்லை கணக்கிட முடியாதளவிற்கு, எத்தனையோ மெய்யடியார்களுக்கு சிவகதி என்னும் வீடுபேற்றினை அளித்தவன். நான்முகனும் மாலும் காணாத அடிமுடியினைக் கண்டவர்கள் மெய்யடியார்கள் திருமாலும் பிரம்மாவும் அடிமுடியைக் காணவும் இல்லை; உணரவுமில்லை. கற்பனைக் களஞ்சியமான சிவப்பிரகாசர் இதனை விளக்கும் வகையில், கழுத்திலே அணிந்திருக்கும் பாம்பானது சிவனின் அடிமுடியைக் காண மண்ணுக்குள்ளே இருக்கும் மண்ணுளிப் பாம்போ அப்பெருமையைப் பெறவில்லை என்றும் கூறுகிறார். இவ்வாறு கூறும்போது கழுத்தில் அணிந்திருந்த பாம்பு பதஞ்சலி முனிவராகவும்,

மண்ணுளிப் பாம்பானது திருமால் என்றும் கருதும் அவரது கருத்தைக் காணலாம். மெய்யடியார்கள் பெற்ற பெருமை திருமால் பெறவில்லை என்பதை உணர்த்துகிறார். அதாவது தாமாக உணர முடியாதபோது பிறரால் உணர்த்த முடியாது என்கிறார் கருத்து தோன்றும்படி அன்னப் பறவை வடிவில் சிவனின் தலைமுடியைக் காண மேலே உயரமாகப் பறந்து செல்லும் பறவைக்கு, அப்பகுதியாவுமே சிவன்தான் என்பது உணரப் பெறவில்லை. அதுபோல் பன்றி உருவில் நிலத்தைத் தோண்டிக் கொண்டே செல்லும் திருமாலுக்கும் இறைவனின் திருவடியைத் தொட்டுக்கொண்டு செல்கிறோம் என்ற உணர்வும் இல்லை என்று சுவைபடக் கூறுகிறார். (பா. 22)

எனவே மெய்யடியார்களுக்கு மட்டுமே சிவத்தை உணரமுடியும் என்பது தெளிவு. சோணசைல மாலையில் பூனைக்கு மோட்சம் கொடுத்தது (பா. 49) அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர், சேரமான் பெருமாள் நாயனார் போன்றோர்களுக்கு முத்தியைக் கொடுத்தது போன்ற முத்தி பெற்றவர்களைத் தமது பாடல்களில் குறிப்பிடுகிறார். (பா. 32, 691)

மரணம் என்பது வேறு சிவகதி அல்லது சிவபதம் என்பது வேறு. வாத பித்த கபம் என்னும் மூன்று நிலைகளில் வருகின்ற மரணத்தை அடைவதற்கு முன் முத்தி அடைய சிவனின் அருள் கிடைக்க வேண்டு மென்கிறார். (பா. 3) கூற்றுவன் வந்து அழைக்கு முன்பே இறைவனின் திருவடி நிழல் அடையவேண்டும். (பா. 15) மரணத்தை அடைவதற்கு முன் ஒரு முறையாவது, இறைவனின் திருமுகத்தைக் காணவேண்டும் (பா. 78) மனமும், சிந்தையும் எந்நேரமும் சிவபெருமானையே நினைத்திருக்க அவனுடைய குரைகழல் சிலம்பொலியைக் கேட்க வேண்டும் (பா. 56) என்று கூறும் அவருடைய மொழிகள் உள்ளத்தை உருக்கி இதயத்தை நெகிழ்விப்பனவாக உள்ளன.

மெய்ஞானம் அடைவதே சிவப்பிரகாசருக்குக் குறிக்கோளாக இருந்ததால், அதனை அடைவதற்கான நெறிகளைப் பாடல்களில் கூறி யுள்ளார். ஆணவம் கன்மம் மாயை என்று சொல்லக்கூடியதும் மலங்களி லிருந்து நீங்க வேண்டும். இவற்றிற்கெல்லாம் காரணமாகவிருப்பது வினைப்பயன் அதற்கு ஆசைகள் அடிப்படையாக இருப்பதால் அவற்றை வேறுடன் அறுக்கவேண்டும். மண், பெண், பொன் போன்ற ஆசைகளே பிறவித் துன்பங்களுக்குக் காரணமாகின்றன. அவற்றில் பெண்ணாசை அல்லது சிற்றின்பம், முக்தியைப் பெறுவதற்குத் தடையாக இருப்பது, சிவப்பிரகாசர் சிற்றின்பம், வினை, அறியாமை, ஆசை போன்றன குறித்து பல்வேறு பாடல்களில் பாடியிருப்பது ஒன்றையே அடைவது அவருடைய குறிக்கோள் என அறியலாம். பெண்ணாசை பற்றி பல்வேறு பாடல்களிலும் (பா. 1, 10, 12, 23, 27, 28, 72, 84, 98) ஆணவம்

குறித்தும் (பா. 74) அறியாமை குறித்தும் (பா. 43, 46, 91) வினை குறித்தும் (பா. 46, 71) பாடியிருப்பதைக் காணலாம். ஆசையை ஒழித்து விட்டால் மட்டும் சிவபெருமானின் அருளினைப் பெறமுடியுமா? அல்லது மெய்ப்பொருளை உணர முடியுமா? இறைவனின் மீது செலுத்தும் தீராத பக்தியினால் மட்டுமே அவன் அருளினைப் பெறமுடியும். வீடுபேறு என்னும் ஞானத்தையடைய பக்தி நெறியே அடிப்படையாக உள்ளது. சரியை, கிரியை யோகம், ஞானம் என்னும் நான்கு மார்க்கங்கள் இறைவனை அடைவதற்குச் சொல்லப்பட்ட வழிமுறைகள் பக்தி மார்க்கமாகிய, சரியை, கிரியை இரண்டினால் மட்டுமே தொண்டு செய்து பெறும்பேற்றினைப் பெறமுடியும். தொண்டு செய்யாமலே இறைவனை அடைவது ஞானமார்க்கம். சாதாரண நிலையிலிருக்கும் மனிதன் படிப்படியாகத்தான் மனதால் உயர்ந்து வரமுடியும். எனவே அனைத்து உயிர்களும் உய்வதற்கான வழிகளைப் பாடல்களில் விளக்கியுள்ளார்.

1. சரியை கிரியை யோக ஞான மார்க்கங்களைப் பின்பற்றுதல் (பா. 29, 58, 85)
2. மெய்யடியார்களுக்கு அடிமையாக இருந்து தொண்டு செய்தல் (பா. 29, 33)
3. அடியார்களைப் போலவே விரதம் இருந்து மெய்வருத்தி தவம் செய்தல் (பா. 20)
4. மெய்நூல்களைக் கற்றும், அவற்றின் வழியில் நடத்தல் (பா. 59)
5. இறைவனுக்கு உகந்த முத்திரைகளான திருநீறு பூசுதல், உத்திராட்சம் அணிதல், (சிவாய நாமத்தை) ஐந்தெழுத்து மந்திரம்

போன்றனவற்றைக் கடைபிடித்தல். சின்முத்திரைகளாக விளங்கும், இவை பற்றிப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. (பா. 58, 83, 20) திருநீறு பூசுபவர்க்கு பாவம் அழிந்துவிடும் என்கிறார். பெண்ணின் அழகினை விடவும் சிவனின் திருவடி அழகு உயர்ந்தது என்றும் பெண்கள் பூசும் சந்தனக் கலவையை விடவும் திருநீறு சிறந்தது என்றும் குறிப்பிடுகிறார். (பா. 64) மோட்சத்தை அடைய நினைப்பவர் இம்முத்திரைகளைப் பயன்படுத்தவேண்டும். சிவாயநம அல்லது நமசிவாய என்னும் சிவபெருமானின் நாமத்தை உச்சரித்துக் கொண்டே இருக்கவேண்டும். இறக்கும் தருவாயில் ஒருமுறையாவது ஐந்தெழுத்து நாமத்தைச் சொன்னால் சிவகதி கிடைக்கும் என்கிறார் ஆசிரியர் (பா. 51).

ஐந்தெழுத்து மந்திரம் பிறவித் துன்பங்களையும் நோயையும் நீக்கவல்லது. இம்மந்திரத்தை ஓதுபவர்களுக்கு, மரணத்தைப் பற்றியும் கூற்றுவன் பற்றியும் பயம் இல்லை. (பா. 82)

மேற்கண்டவாறு கூறும் கருத்துக்கள் மெய்ப்பொருளைத் தேடுவதற்கு அல்லது அடைவதற்குச் செல்லும் மந்திரமொழிகளாக உள்ளன. ஒரு பாடலில் சிவ அருள் பெற்றுவிட்டேன் என்று கூறுகிறார். ‘சிவாயநம’ என்னும் திருமந்திரத்தைச் சொல்பவர்கட்கு என்றும் அபாயம் இல்லை என்பதை அனுபவப் பூர்வமாகவும், உணர்வுப் பூர்வமாகவும் சிவப்பிரகாசர் உணர்த்துகிறார்.

கைலமலைபோல் இருக்கும் இத்திருவண்ணாமலையில் சிவபெருமான் சிவமாக, தீபமாகத் திகழ்கிறார். எல்லோர்க்கும் கருணை காட்டும் இவ்விறைவன் உலக விளக்காகத் திகழ்ந்து உள்ள சோதியாகவும் ஒளிர்வான். அத்தகைய ஒரு நிலையை அடைய திருவண்ணாமலை நாதனை வணங்க வேண்டும் என்று கூறும் சிவப்பிரகாசரின் கருத்துக்கள், தேவாரம் பாடிய மூவரைப் போலவும் மணிவாசகரையும் போலவும், வள்ளலார் போலவும் அபிராம பட்டரைப் போலவும் இன்னும் எத்தனையோ நாயன்மார்கள் ஆழ்வார்கள் ஆகியோரைப் போலவும் தமிழாய் அதன் சுவையாய் இருந்து தித்திக்க வைக்கின்றன.

68. சிவப்பிரகாசர் படைப்புக்களில் உருவகம்

கா. நாகராசு, பேரூர்.

கற்பனைக் களஞ்சியம் எனப் போற்றுப்பெறும் சிறப்புக்குரியவர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள். கவிமழை பொழிந்த எத்தனையோ புலவர் பெருமக்கள் இருக்க இப்பெருமகனாருக்கு மட்டுமே இத்தகைய ஒரு சிறப்புப் பெயர் அமைந்திருப்பது குறிப்பிடத் தக்கது. மற்ற புலவர்களுடைய சிந்தனைப் போக்குகளிலிருந்து பல கோணங்களில் வேறுபட்டதாக சிவப்பிரகாசரின் சிந்தனைத் திறன் அமைந்திருப்பது சுட்டத்தக்கது. இத்திறனே இவருக்குக் கற்பனைக் களஞ்சியம் என்னும் பெருமையைப் பெற்றுத் தந்திருக்கின்றது. இப்புலவர் பெருமானின் கற்பனையாகிய சோலைக்குள் புகுந்து பார்த்தால் அங்கு உருவக அணிகளாகிய மரங்கள் ஏராளமாகச் செழித்திருப்பதைக் காணலாம். அவற்றை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.

உருவக அணி

உவமைப் பொருளையும் உவமிக்கப்படும் பொருளையும் எடுத்துக் கொண்டு, அவை இரண்டும் ஒன்றே என்று கற்போர் கருதும்படி ஆக்கிக் காட்டுவதே உருவக அணி ஆகும். உவமிக்கப்படும் பொருளில் (உவமேயம்) உவமைப் பொருளை (உவமானம்) ஏற்றிக் கூறுவதே இவ்வணியின் அடிப்படை ஆகும். உருவக அணி பதினைந்து வகைப் படும். மேலும், இது பிற அணிகளோடும் கூடிவரும் இயல்புடையது. இத்தகைய உருவக அணியின் அழகைச் சிவப்பிரகாசர் படைப்புகளில் பரக்கக் காணலாம்.

விரியுருவகம்

உருவக அணிப் பாடல்களில் உருவக உருபுகளாகிய ஆகிய, ஆக போன்றன விரிந்து நின்றால் அவை விரியுருவகம் எனப்படும். சிவப்பிரகாசர் பாடல்கள் பலவற்றுள் இவ்வணி சிறப்பாக அமைந்துள்ளது. நால்வர் நான்மணிமாலையில் சுந்தரர் துதியாக அமைந்த பாடலொன்றில் அவர் திருப்புக்கொளியூர் அவிநாசியில் முதலையுண்ட சிறுவனை மீட்ட சிறப்புப்பேசப்படுகிறது. அப்போது முதலையுண்ட வரலாற்று நிகழ்வுகள் முழுவதும் சைவ சித்தாந்தத் தத்துவக் கருத்துக்களாக உருவகம் செய்யப்படுகின்றது.

''வாங்குசிலை புரையும் உடல்எனும் குளத்தின்மூல
மலம் எனுமோர் வெங்கரவின் பகுவாயில் நின்றும்
தீங்கில் உயிரெனும் பனவக் குலமகனை ஆதி
திரோதாயி என்னும் ஒரு வெந்திறல் கூற்றுவனால்
ஓங்குறு நாதாந்தம் எனப்பெயரிய அக்கரையில்
உமிழ்வித்துச் சிவமெனுமோர் தந்தையொடும் கூட்டாய்
கோங்கமுகை கவற்றும் இளமுலைப் பரவை மகிழச்
குண்டையூர் நென்மலை முற்கொண்ட அருட்கடலே''
(பாடல் எண் - 10)

இதில் உடல் குளமாகவும் மூலமலம் முதலையாகவும் உயிர் அந்தணச் சிறுவனாகவும் திரோதானசக்தி இயமனாகவும் நாதாந்தம் குளக் கரையாகவும் சிவம் தந்தையாகவும் உருவகம் செய்யப்பட்டுள்ள திறம் வியக்கத்தக்கது. இதே நூலில் மாணிக்க வாசகரைப் போற்றும் பாடலொன்றிலும் இவ்வாறே விரியுருவகம் அமைந்து அணிசெய்கின்றது.

''வலமமு உயரிய நலமலி கங்கை
நதிதலை சேர்த்த நற்கருணைக் கடல்
முகந்து உலகு உவப்ப உகந்த மாணிக்க
வாசகன் எனமொரு மாமழை பொழிந்த
திருவாசகம் எனும் பெருநீர் ஒழுகி
ஓதுவார் மனம் எனும் ஒண்குளம் புகுந்து
நாவெனும் மதகில் நடந்து கேட்போர்
செவியெனும் மடையில் செவ்விதிற் செல்லா
உளம் எனும் நிலம்புக ஊன்றிய் அன்பாம்
வித்தில் சிவமெனும் மென்முளை தோன்றி
வளர்ந்து கருணை மலர்ந்து
விளங்குறு முத்தி மெய்ப்பயன் தருமே'' (பாடல் எண் - 16)

இப்பாடலில் சிவபெருமான் கருணைக் கடலாகவும் மாணிக்கவாசகர் அக்கடல் நீரை உண்டு பெய்யும் மழையாகவும் உருவகம் செய்யப் பட்டுள்ள முறை அரிய அமைப்புடையது. மேலும் திருவாசகம் மழை நீர்ப்பெருக்காகவும், அதை ஓதுவார் மனம் குளமாகவும், அதைப் பாடுவோர் வாய் குளத்தின் மதகாகவும் அதைக் கேட்போர் செவி மடையாகவும் அவர்தம் மனம் நிலமாகவும் அம்மனத்தின்கண் நிறைந்துள்ள அன்பு விதையாகவும் சிவம் அவ்வித்தினின்று தோன்றும் முளையாகவும் கருணை அவ்வித்தின் வளர்ச்சியாகவும் அதன் விளைவாகிய முத்தி பயனாகவும் உருவகிக்கப்பட்டு திருவாசகத்தின் பெருமைகள் எடுத்துரைக்கப் படுகின்றன.

சோணசைலமாலையில் அமைந்துள்ள பாடலொன்றிலும் (பாடல் எண் - 56) சிவப்பிரகாசர் இவ்விரியுருவகத்தைச் சிறப்பாகக் கையாள்கின்றார். அப்பாடலில் பிறவியைக் கடலாகவும் துன்பங்களைக் கடல் அலைகளாகவும் மரணத்தை நீரில் வாழும் முதலையாகவும் இறைவனின் திருவடிகளைக் கடற்கரையாகவும் உருவகித்துள்ளார். இப்பாடல் வள்ளுவர் மொழிந்த,

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்" (கடவுள் வாழ்த்து, குறள் எண் - 10)

என்னும் குறளின் விளக்கமாகவே அமைந்திருப்பது சுட்டத்தக்கது.

விருத்தகிரி பெரியநாயகியம்மை நெடுங்கழி நெடிலடி ஆசிரிய விருத்தத்திலும் சிவப்பிரகாசர் இவ்விரியுருவகத்தைச் சிறப்பாகக் கையாண்டுள்ளார்.

'காமமென்கின்ற கதுவுவெந் தீயும்
கடுஞ்சினம் எனப்படு புலியும்
களிப்பெனும் சிறுகண் புகர்முகப் புழைக்கைக்
கறையடிக் களிநல் யானையுமே
தாமிகு மெனது மனமெனும் வனத்தில்
தனிவரல் வெருவினை யாயில்...." (பாடல் எண் - 3)

என்னும் பாடலில் காமம், வெகுளி, பெருங்களிப்பு போன்ற மனமாசுகள் தீ, புலி, யானை முதலியனவாக உருவகிக்கப்பட்டு, மனித மனம் அவை உள்ள காடாக உருவகிக்கப்பட்டுள்ள பங்கு சிறப்புக்குரியது.

இதே போல நெடுங்கழி நெடிலிலும் ஒரு பாடல் (பாடல் எண் - 6) அமைந்துள்ளது. அதில் அழுக்காறு, அவா, வெகுளி, செற்றம் முதலியன மனத்தின்கண்ணுள்ள அழுக்காகவும் தியானம் அதை நீக்கும் புனலாகவும் உருவகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் பொய், புறங்கூறல், தீச்சொல் என்பன வாயின் கண்ணுள்ள அழுக்காகவும் இறைத்துதி அதைப் போக்கும் நீராகவும், தீய செயல்கள் உடம்பின் கண்ணுள்ள அழுக்காகவும் அருச்சனை அதைக் கழுவும் நீராகவும் உருவகம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிவஞான பாலைய சுவாமிகள் நெஞ்சுவிடு தூதில் சிவப்பிரகாச சுவாமிகள் விரியுருவகத்தை விரிவாகக் கையாண்டுள்ளார். பொதுவாகத் தூது முதலிய நூல்களில் தசாங்கச் சிறப்புப் பகுதி இடம்பெறுவது வழக்கம். இப்பகுதி உருவக அணிப் பயன்பாட்டிற்கு மிகுதியும் இடம் தருவது. அம்முறையில் சிவஞான பாலைய சுவாமிகள் நெஞ்சுவிடு தூதிலும் அம்முனிவருடைய தசாங்கச் சிறப்புக்கள் எடுத்துரைக்கப் படுகின்றன. இப்பகுதியில் சிவப்பிரகாசர் கைவண்ணம் மேலோங்கி மிளிர்வதைக் காணமுடிகின்றது.

சிவஞான பாலைய சுவாமிகளுக்குரிய ஆறு ஆனந்தம் என்பதாகும். இது தோன்றி வரும் சிறப்பை சிவப்பிரகாசர் ஐந்நிலங்களோடு தொடர்பு படுத்தி உயர்ந்த முறையில் உருவகப்படுத்தியுள்ளார். இவ்வானந்தம் என்னும் ஆறு தோன்றுமிடம் அறிவாகிய குறிஞ்சி நிலம். அங்கு தோன்றிய இவ்வாறு காமச் செறிவாகிய கொடும்பாலையைக் கடந்து மாயையாகிய முல்லை நிலத்திற்கு வருகிறது. அங்குள்ள ஆன்மாவாகிய பசுக்களைக் கொண்டு, அப்பசுக்களை மேய்க்கும் ஆயர்களாகிய ஐம்புலன்களை அடக்கிவிட்டு உள்ளமாகிய மருத நிலத்திற்கு வருகிறது. அங்குள்ள விடயங்களாகிய குளங்களையெல்லாம் உடைத்துவிட்டு இறுதியில்,

"..... வாள்விழியா நெய்தல்
பெரிதுபெற வந்து பெருகிக் கருதிலொரு
தானந்த லின்றித் தலம் விசும்பு போர்த்துவரும்
ஆனந்த மென்னுமலி...." (பாடல் அடிகள் - 30 - 33)

ஆறாகக் காட்சியளிக்கின்றது.

சிவஞான பாலைய சுவாமிகளின் ஊராகச் சிற்றின்பப் பற்றுள்ள வஞ்சகர்கள் அடையமுடியாத மெய்யன்பர்களின் உள்ளம் உருவகிக்கப் படுவதும் குறிப்பிடத்தக்கது. (பாடல் அடிகள் - 36,37) சுவாமிகளின் மாலை தமிழ்ப்பாக்களால் ஆகிய மாலையாகும். இதைச் சிவப்பிரகாசர் கூறும் பொழுது கற்பனைச் சுவை விஞ்சி நிற்பதைக் காண முடிகின்றது. (பாடல் அடிகள் - 37 - 43)

சுவாமிகளின் மாலையாகிய பாமாலைக்குத் தெள்ளுதமிழ்ச் சொற்களே மலர்கள்; அச்சொற்களின் சுவையே மலரிலுள்ள தேன்; இம்மாலை வழுச்சொற்களாகிய புன்மை கலவாதது; புண்மைக் குணம் வாய்ந்த புலவர்களாகிய குரங்குகளால் அம்மாலை போற்றப்படாதது; ஆனால் உயர்குணம் நிறைந்த நற்புலவர்களாகிய வண்டுகளால் மொய்க்கப் பெறுவது; நிறைந்த அன்பே இம்மாலையைத் கட்டப்பயன்பட்ட நார்; சிவப்பிரகாசர் நாவே மாலை புனைந்த கரங்கள் ஆகும். இத்தகைய உருவகச் சிறப்பு பிற நூல்களில் காண முடியாத அருமையுடையது.

ஞானமே சுவாமிகளின் யானை ஆகும். ஞானமாகிய யானையின் இயல்புகள் சிவப்பிரகாசரின் கற்பனைத் திறத்தால் பலவாறு உருவகப் படுத்தப் படுகின்றன. ஞானமாகிய இந்த யானை தத்துவங்களாகிய படைகளை வெல்லும் தன்மையுடையது; ஆணவமாகிய தளையை அறுத்தெறியும் வலியுடையது; மேலும், வினையாகிய கட்டுத்தறியை உடைத்தும் அலைபாயும் மனமாகிய குதிரையை மாய்த்தும் மன்மதனின் கைக்கரும்பாகிய காமத்தை முரித்தும் பொய்ச் சமயங்களாகிய படுகுழி

களில் விழாமலும் ஆனந்தமாகிய நீரில் படிந்தும் வேதாகமமாகிய மணியைக் கழுத்தில் தரித்தும் வரும் இயல்புடையது. (பாடல் அடிகள் - 40 - 51)

சிவஞான பாலைய சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சியிலும் சிவப்பிரகாசர் இதேபோல தத்துவக் கருத்துக்களை உயர்ந்த முறையில் உருவகப்படுத்திக் காட்டுகின்றார். இந்நூலில் சிவஞான பாலைய சுவாமிகளின் பெருமைகளை எடுத்துரைக்கும்போது அவர்தம் செயல் பாடுகள் சிலவற்றை உருவக அணி அமைய படைத்துள்ளார். சிவஞான பாலையர் ஆன்மாக்களை ஆட்கொண்டு அருள்புரியும் தன்மையினர்; அவர் மும்மலர்களாகிய பசுக்களை நெறிப்படுத்தி அவர்கட்கு அருள்புரியும் கருணைப் பெருக்கினர். சுவாமிகளின் இத்தகைய அருட்தன்மை கீழ்வரும் பாடலில் சிறப்பாக விளக்கப்படுகிறது.

''சகலர் எனும் பசுக்களை மூலாதாரம் என்னும்
தக்க தொழுவிடை மலமாம் தாம்பினால் ஆர்த்துப்
புகலும் ஒரு நுகர்வுமிலா துரை நிறுத்திப் பின்னர்ப்
பொருந்து கலை ஆங்காரத்தால் கட்டவிழ்த்துவிட்டே
அகலு நனவெனும் புரத்தில் ஒட்டியே விடய
மாகியபுல் மேய்த்து எமக்கு இங்கு அமுதம் அருள்பவனே''
(பாடல் எண் - 2)

இங்கு சிவபெருமானின் அருட்தொழில்கள் எல்லாம் சிவப்பிரகாசரின் குருநாதர் மீது ஏற்றிவைத்துச் சொல்லப்படுவது குறிப்பிடத்தக்கது. சிவஞான பாலைய சுவாமிகள் பிள்ளைத்தமிழிலும் சுவாமிகள் அருள் மழை பொழியும் மேகமாகவும் அவர்தம் தயை கடலாகவும் உருவகப்படுத்தப் பட்டுள்ளமை இங்கு சுட்டத்தக்கது. (பாடல் எண் - முத்தப்பருவம் - 8)

தொகையுருவகம்

உருவக அணிப்பாடல்களில் உருவக உருபாகிய ஆகிய என்னும் மாட்டேற்றுச் சொல் தொகுத்துக் கூறுவது தொகையுருவகமாகும். இத்தொகை யுருவக அணியை சிவப்பிரகாசர் சில பாடல்களில் கற்பனைநயம் சிறக்க அமைத்துப் பாடியுள்ளார். நால்வர் நான்மணிமாலையில் உள்ள,

''துடைவாழை மேல்மடவார் அல்குல்பாம்பு தொடமயங்கி
நடைவாய்ப் பிணம்எனப் பட்டார்....'' (பாடல் எண் - 26)

எனத் தொடங்கும் அப்பர் பெருமானுக்குரிய போற்றிப் பாடலில் இவ்வணி அமைந்திருப்பது சுட்டத்தக்கது. சோணசைலமாலையில் அமைந்துள்ள,

''மங்கையர் பாரக் கொங்கையங் குவட்டு
மதர்விழிக் கடலினும் அளகக்
கங்குலினூடும் சென்ற என் மனத்தைக்...'' (பாடல் எண் - 84)

என்ற பாடலில் பெண்களின் கொங்கைகள் மலைச்சிகரங்களாகவும் கண்கள் கடலாகவும் கூந்தல் இருளாகவும் உருவகப்படுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதே முறையில் கீழ்வரும் திருவெங்கைக் கோவைப் பாடல் ஒன்றிலும் தொகையுருவகத்தைச் சிவப்பிரகாசர் பெண் வருணனைக்குக் கையாண்டுள்ளமை சுட்டத்தக்கது.

''கொங்கைக் குவடும் மணியல்குல் பாம்பும் குறுமுனிவன்
அங்கைத் தலம் அடங்கா விழி வாரிதியும்...''

(பாடல் எண் - 20)

சிவப்பிரகாசர் தொகை உருவகத்தைப் பெண்வருணனைக்கே அதிகமாகக் கையாண்டுள்ளமை நோக்கத்தக்கது.

தொகை விரியுருவகம்

உருவகப் பாடல்களில் உருவக உருபுச் சொற்கள் தொக்கும் விரிந்தும் நின்றால் அப்பாடல்கள் தொகை விரியுருவகம் எனப்படும். இவ்வணியையும் சிவப்பிரகாசர் பல இடங்களில் அமைத்துள்ளார். திருவெங்கையுலாவில் அமைந்துள்ள விநாயகர் வணக்கப்பாடலான,

''நாவலர்தம் வாய்வீதி நாளும் உலா வருமே
தாவருநம் வெங்கையிறை தன்னுலாப் - பாவெனுமோர்
அம்பொற்றளை பூண ஆழத்தகப்பட்ட
கும்பக் கடாக்களிற்றைக் கொண்டு'' (பாடல் எண் - 1)

என்பதில் முதலடியில் உருபு தொக்கும் இரண்டாம் அடியில் பிரிந்தும் நிற்பது குறிப்பிடத்தக்கது. பின்வரும் சிவஞான பாலைய சுவாமிகள் கலம்பகப் பாடலிலும் இவ்வணி அமைந்துள்ளது.

''தத்துவமாம் திரையெழுந்த தனிமாயைப் பெருங்கடலுள்
மெய்த்ததாட் புணையன்றி வேறொன்றால் கடப்பரிதே....''

(பாடல் எண் - 2)

இதில் முதலடியின் முற்பகுதியில் உருவக உருபு விரிந்தும் முதலடியின் பிற்பகுதியிலும் இரண்டாமடியின் முற்பகுதியிலும் தொக்கும் நிற்கின்றது.

விருத்தகிரி பெரியநாயகியம்மை நெடுங்கழி நெடிலடி ஆசிரிய விருத்தத்தில் இவ்வணி அமைந்த பாடலொன்று சிறப்பாக விளங்கு கிறது. இதில் உருவக உருபுகள் தொக்கும் விரிந்தும் வருவதைக் காணலாம். இப்பாடலில் உள்ளம் வீடாகவும் அதிலுள்ள விருப்பு வெறுப்புகள் குழிமேடுகளாகவும் வாய்மை மெழுக்காகவும் மனம் இருக்கையாகவும் உயிர் நெல்லாகவும் மலம்மாயை தவிடுஉமியாகவும் உருவகம் செய்யப்பட்டுள்ள பாங்கு போற்றுதற்குரியது. (பாடல் எண் - 5)

சிவஞான பாலைய சுவாமிகள் பிள்ளைத்தமிழ்ப் பாடலொன்றில் இவ்வணி நுட்பமாக அமைந்துள்ளது. அப்பாடல் வருமாறு:

''முட்டுமார் புலனாய சேனைகள் முறியமான்
முற்று நானெனும் வேழம் மாய்வுற மனமென்மா
பட்டுவீழ்தர ஆவியாம் அரசுடையவே
பற்றி ஞானநல்வாளினால் ஒரு தமியனாய்.....''

(பாடல் எண் - வாரானைப் பருவம் - 9)

இதில் இறுதியில் மட்டும் உருவக உருபு தொக்கும் பிற பாடல்களில் விரிந்தும் வந்துள்ளதைக் காணலாம்.

முற்றுருவகம்

முற்றுருவகம் என்பது ஒரு பாடலில் அவயவ அவயவிகளை ஏற்ற இடத்தோடும் பிறவற்றோடும் முற்ற உருவகம் செய்து உரைப்பதாகும். இவ்வணியையம் சிவப்பிரகாசர் சிலவிடங்களில் கையாண்டுள்ளார். கீழ்வரும் திருவெங்கைக் கோவைப் பாடலொன்றில் இவ்வணி சிறப்பாக அமைந்துள்ளது.

''முகையே முலை செழும் போதே முகமலர் மூசுவண்டின்
தொகையே குழல் செந்தளிரேயடி நற்சுவைக் கனியே
நகையே இதழ் திருவெங்கை புரேசர் கைந்நல்விமிகும்
பகையே யெனுங் கண் இவரே இறைசொன்ன பைங்கொடியே''

(பாடல் எண் - 55)

இதில் அவயவ அவயவிகள் முழுமையாக உருவகம் செய்யப்பட்டுள்ள அழகினைக் காணலாம். இப்பாடலில் கொங்கை, கோங்கரும்பாகவும், முகம் தாமரையாகவும், குழல் கருவண்டு கூட்டமாகவும், பாதம் தளிராகவும், இதழ் கனியாகவும், கண் மானின் பகையாகவும் உருவகிக்கப் பட்டுள்ளமை எடுத்துரைக்கத்தக்கது.

இவ்வாறு சிவப்பிரகாசர் உருவக அணியைப் பல பாடல்களில் கற்பனைச் சுவை விஞ்சி நிற்க அமைந்துள்ளார். சிவப்பிரகாசர் கற்பனைக் களஞ்சியம் எனப் போற்றப் பெறுவதற்குரிய காரணங்களுள் ஒன்றாக அவர்தம் உருவக அணி அமைத்தல் திறத்தையும் குறிப்பிடலாம்.

69. சிவப்பிரகாசர் கையாண்ட யாப்பு வகைகள்

ப.வெ. நாகராஜன், கோவை.

துறைமங்கலம் சிவப்பிரகாசரால் இயற்றப்பெற்றதாக 30 நூல்களும் 12 தனிப்பாடல்களும் இப்போது கிடைக்கின்றன. (மூன்று நூல்கள் பெயரளவில் அறியப்படுகின்றன; ஏசுமத நிராகரணம் என்பதன் மூன்று பாடல்கள் மட்டும் கிடைத்துள்ளன. கிடைத்துள்ள முப்பதிலும் சில குறை நூல்களாகும்.) மொத்தமாக இப்பொழுது கிடைப்பவை 4984 செய்யுள்கள். இச்செய்யுள்களின் யாப்பமைதியைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழ்ச் செய்யுள்களைச் சீர்வகையால் அமைந்த யாப்பு வகைகள், மாத்திரை வகையால் அமைந்த சந்தப் பாவகைகள், வண்ணக் குழிப்பிற்கேற்ப அமையும் வண்ணக்கவிகள் என மூன்றாகப் பிரிக்கலாம். அதே முறையில் இந்தக் கட்டுரை சிவப்பிரகாசரின் செய்யுள்களைப் பிரித்து ஆராய்கிறது.

1. சீர்வகையால் அமைந்த யாப்பு வகைகள்

1. குறள் வெண்பா - நா. நா. மா. காப்பு ஒன்று மட்டும்
2. நேரிசை வெண்பா - நா. நா. மா. 1, 5, 9, 13, 17, 21, 25, 25, 29, 33, 37 ஆகப் பத்து. சோ. மா. காப்பு மட்டும். நன்னெறி 1-40 ஆக நாற்பது. சி.பா.நெ. காப்பு 1, ஈற்று வெண்பா 1 ஆக இரண்டு சி.பா.தா. காப்பு ஒன்று மட்டும். திரு. கலம், காப்பு, 2, 6, 20, 22, 30, 38, 40, 49, 64, 69, 75, 81, 93, 100 ஆகப் பதினைந்து. சி.பா. கலம். காப்பு, 2, 14, 20, 25, 32, 36, 45, 53, 62, 65, 70, 72, 79, 89 ஆகப் பதினைந்து. திரு. உலா காப்பு 1, ஈற்றுப்பா 1 ஆக இரண்டு. தனிப்பாடல்கள் 3 ஆக மொத்த நேரிசை வெண்பாக்கள் 89.
3. நேரிசைக் கலிவெண்பா - சி.பா. நெ. 1, திரு. உலா 1 ஆக இரண்டு.
4. குறள் வெண்செந்துறை - திரு. கலம். 78, சி.பா.தா. 1-100. நன்னெறி காப்பு. ஆக நூற்றிரண்டு.
5. நேரிசை அகவல் - நா.நா.மா. 4, 8, 12, 16, 20, 24, 28, 32, 36, 40 ஆகப் பத்து. திரு. கலம் 16, 17, சி. பா. கலம் 46, 67 ஆக ஆசிரியப்பாக்கள் பதினான்கு.

6. அறுசீர்க்கழிநெடில் - விளம். மா. தேமா இரட்டித்தது.
நா. நா. மா. 35. கூ. பு. 29-37, 73-86, 100-109, 139-147, 165-174, 194-206, 235-264, 314-326, 372-390, 435-452, 494-515, 595-626, 631-651, 681-685. சி.பா. கலம். 7, 39, 48, 93, வாழி. காள. கண். 17-19, 34, 35, 55-80, 88-110, 141-176. காள. நக். 1, 8, 60-81, 112-131. பிரபு. 18-29, 72-82, 113-126, 216-245, 374-402, 463-481, 515-532, 563-590, 702 - 723, 746-771, 884 - 910, 975 - 984, 990 - 1014, 1079-1096, 1140-1158, சத. மா. 7-19, 71-75, சிவ. விகா. 8-12, 23-45, 82-159. வே.சூ. 62-69. ஏசு. நி. 3. சித். சிகா. 11-20, 46-59, 118-159, 243-262, 339-364, 426-459, 581-631, 688-737, 740-747, 773-804, 851-862, 878. ஆக இவ்வகை அறுசீர் விருத்தங்கள் ஆயிரத்து எண்பது.

7. அறுசீர்க் கழிநெடில் மா. விளம். விளம் இரட்டித்தது.
சி.பா. கலம். 76, பிரபு. 343-356 ஆக இவ்வகை அறுசீர் விருத்தங்கள் பதினைந்து.

8. அறுசீர்க் கழிநெடில் மா. 4 விளம். காய்.
சி.பா. கலம். 9 ஆக. இவ்வகை ஒன்று மட்டும்.

9. அறுசீர்க் கழிநெடில் மா.மா. காய் இரட்டித்தது.
நா. நா. மா. 7, 27, 31. திரு. கலம். 8, 14, 25, 47, 59, 84, 99. சி.பா. கலம். 8, 17, 28, 31, 44, 57, 66, 84. காள. கண். 111-113. காள. நக். 2, 132-136, பிரபு. 1-10, 96-101, 127-141, 246-280, 324-342, 602-620, 784-795, 1097-1110, 1121-1131. சிவ. விகா. 13-22, ஆக மொத்தம் நூற்று எழுபத்து நான்கு விருத்தங்கள்.

10. அறுசீர்க் கழிநெடில் 4 காய், மா, தேமா.
சிவ. நா. ம. 11 மட்டும். நா. நா. மா. 3 மட்டும். திரு. கலம். 4, 17, 37, 52, 54, 85, 87, 102. கூ.பு, 3-8, 117, 118, 156-164, 303-313, 627-630, 693-702. சி.பா. கலம். 11, 19, 35, 40, 43, 69, 80, 86. பிரபு. 199-207, 428-436, 937-946. சிவ. விகா. 60-71. வே.சூ. 53-61. சித். சிகா. 1-10, 82-84, 160-182. தனிப். 3 ஆக இவ்வகையில் மொத்தம் நூற்று நாற்பத்தெட்டு பாக்கள்.

11. எழுசீர்க் கழிநெடில் விளம்:மா. விளம். மா. விளம். விளம். மா.
கு.க.நெ. 1-10, நா.நா.மா.15 மட்டும். சோ. மா. 1-100.

திரு. கலம். 61, 98, கூ.பு. 38, 39, 366, 367, 369-371, 403-410, 686-692. சி.பா.கலம். 5, 73. காள. கண். 41, 42. காள. நக். 87, 88, பிரபு. 281-306, 493-574, 1041-1046. வே.சூ. 36-52. ஆக. எழுசீர்க் கழிநெடில் மொத்தம் இருநூற்றுப் பதின்மூன்று.

12. எண்சீர்க் கழிநெடில், மா. விளம். மா.விளம். இரட்டித்தது
சி.பா. கலம். 56 ஒன்று மட்டும்

13. எண்சீர்க் கழிநெடில் விளம். விளம். மா. விளம். இரட்டித்தது
சி.பா.கலம். 91 ஒன்று மட்டும்

14. எண்சீர்க் கழிநெடில் 2 காய். மா. தேமா. இரட்டித்தது.
நா. நா. மா. 39 மட்டும். திரு. கலம் 5, 29, 42, 60, 63, 83, 89, 92, சி. பா. பி. 8 மட்டும். சி. பா. கலம். 26, 37, 54, 83, 88. சிவ. விகா. 46-59, 72-81, 160-162, 174-187, 226-237, 239-249, 251-333. ஆக இவ்வகை எண்சீர் விருத்தம் நூற்றொன்பது.

15. எண்சீர்க் கழிநெடில் 3 காய், 1 மா இரட்டித்தது.
நா. நா. மா. 11 மட்டும் சி.பா.ப.எ. 1-4, சி.பா.பி. 7,9. சி.பா. கலம். 52. சிவ. விகா. 163-173, 188-225-238. வே.சூ. 3-35, 70-182. ஆக இத்தகைய விருத்தங்கள் இருநூற்று நான்கு.

16. எண்சீர்க் கழிநெடில் தேமா. கருவிளங்காய். மா.தேமா இரட்டித்தது
திரு. கலம். 56 மட்டும்.

17. பன்னிருசீர் விருத்தம். மா.மா.காய் நான்கு முறை
திரு. கலம். 7, 58, 96. சி.பா.பி. 1-5, 21-25, 41-45, 51-58, 72-77. சி.பா. கலம். 10,49. ஆக இவ்வகை விருத்தங்கள் முப்பத்து நான்கு.

18. பன்னிருசீர் விருத்தம் மா. 4, விளம். காய். இரட்டித்தது.
சி.பா.பி. 26-28. ஆக இவ்வகையில் மூன்று மட்டும்.

19. பதினான்குசீர் விளம். மா. விளம். மா. விளம். விளம். மா. இரட்டித்தது.
நெ.க.நெ. 1-10, திரு. கலம். 46. சி.பா.கலம். 4, 50. ப. பெ.நெ.க. 1-10. ஆக இவ்வகைப் பதினான்குசீர் ஆசிரிய விருத்தங்கள் இருபத்து மூன்று.

20. ஆசிரியத் தாழிசை. மூன்று அளவடிகளால் ஆனது.
திரு. கலம். 71 மட்டும்.

21. மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா.

அ) ஈரடித் தரவு 3, மூவடித் தாழிசை 3, ஈரடி அராகம் 2, தனிச்சொல், ஏழடி நேரிசை ஆசிரியச் சுரிதகம். இவ்வாறு அமைந்தது திரு. கலம். 1.

ஆ) ஈரடித் தரவு 3, நாலடித் தாழிசை 3, ஈரடி அராகம் 3, ஈரடித் தாழிசை 6, முச்சீர் ஓரடி 4, இருசீர் ஈரடி 8, தனிச் சொல், 9 அடி நேரிசை ஆசிரியச் சுரிதகம் என அமைந்தது சி.பா. கலம். 1. ஆக மொத்த மயங்கிசைக் கொச்சகக் கலிப் பாக்கள் இரண்டு.

22. கலிவிருத்தம். நேர்நிரைக்கு 11, 12 என எழுத்துக் கட்டளை.

சி.நா.ம. 1-10, திரு. கலம். 27, 55. கூ.பு. 1, 2, 9-14, 25-28, 59-63, 90-99, 119, 120, 148-152, 225-234, 368, 453-462, 476-487, 679-680, 703. சி.பா.கலம். 16, 29, 34. காள. கண். 20-22, 40, 43-54, 81, 82, 127-134. காள. நக். 89-99. பிரபு. காப்பு. 30-47, 83-95, 107-112, 307-316, 437-462, 621-638, 796-802, 859-883, 961-969, 1047-1061, 1111-1120. சத. மா. 26-31, 63-70, 99, 100. சிவ. விகா. 1. மட்டும். சிந். சிகா. காப்பு. 60-76, 183-192, 233-242, 286-311, 460-492, 863-866, 879. ஆக இவ்வகைக் கலிவிருத்தங்கள் முந்நூற்றுத் தொண்ணூற்றொன்பது.

23. கலி விருத்தம். விளம். விளம். மா. விளம்.

திரு. கலம். 12 மட்டும். கூ.பு. 15, 40-45, 64-72, 87, 110-116, 175-191, 211-216, 292-302, 396-402, 411-432, 488-493, 516-526, 561-594, 652-668.

சி.பா. கலம். 6, 22. காள. கண். 36-39, 178. காள. நக். 100-111, 137, பிரபு. 12-17. 69-71, 142-156, 188-198, 317-323, 357-373, 482-492, 591-601, 661-682, 772-783, 803-838, 947-960, 1023-1040, 1062-1078, 1132-1139. சத. மா. 2-6, 43-62, 76-98. சிவ. விகா. 2-7, வே.சூ. 1, சித். சிகா. 25-45, 77-81, 99-117, 263-285, 312-324, 365-425, 493-529, 738, 739, 748-772. ஆக. இவ்வகைக் கலிவிருத்தங்கள் அறுநூற்று நாற்பத்தைந்து.

24. கலி விருத்தம். விளம். விளம். விளம். மா.

பிரபு. 639-647 ஆக ஒன்பது மட்டும்.

25. வெண்டளைக் கலிப்பா.

சி.பா.கலம். 33, தனிப்பாடலில் 1. ஆக இரண்டு மட்டும்.

26. கொச்சகக் கலிப்பா.

திரு. கலம். 51, 86. சி.பா. கலம். 85. காள. கண். 23-33, 135-140. காள.நக்.34. பிரபு. 970-974. சத.மா. 20-25. ஆக மொத்தக் கொச்சகக் கலிப்பாக்கள் முப்பத்திரண்டு.

27. கலித்துறை. மா. மா. மூவசைச்சீர். மா. மா.

இதில் எழுத்துக்கட்டளை. நேர்நிரைக்கு 14, 15.

முதல் சீர் சில அடிகளில் காயாகவும் வரலாம்.

பிரபு. 102-104 ஆக 5 பாடல்கள் மட்டும்.

28. காப்பியக் கலித்துறை, மா, விளம், விளம், விளம், மா.

கை.மா. 1-10, கூ.பு. 16-24, 46-58, 88, 89, 121-138, 207-210, 265-291, 339-365, 391-395, 463-475, 533-560, 669-678. காள. கண். 1-16, 114-126, காள. நக். 3-7, 9-31, 35-59, பிரபு. 48-68, 157-187, 403-427, 549-562, 683-701, 724-745, 839-858, 911-936, 1015-1022, சத. மா. 32-42. சித். சிகா. 21-24, 85-98, 193-232, 325-338, 530-580, 632-687, 805-850, 867-877. ஆக மொத்தம் காப்பியக் கலித்துறைகள் எழுநூற்று அறுபத்தொன்று.

29. கட்டளைக் கலித்துறை.

பழ. அந். (திரிபு) 1-101. நா. நா. மா. 2, 6, 10, 14, 18, 22, 26, 30, 34, 38. செ.நி.அ. காப்பு, 1-30, பி.ந.மா. 1-9.

பெ.கலி. 1-19. நி.மா. 1-31. திரு. கலம். 3, 21, 28, 32, 39, 41, 44, 50, 57, 65, 73, 82, 91, 95. சி. பா. கலம். 3, 15, 18, 21, 27, 30, 41, 47, 51, 58, 61, 71, 82, 87, 90. திரு. கோவை காப்பு, 1-426. ஆக மொத்தக் கட்டளைக் கலித்துறைகள் அறுநூற்றைம்பத்தாறு.

30. ஈற்றடி மிக்குவந்த கலித்தாழிசை

திரு. கலம். 9 மட்டும். சி.பா. கலம். 23 மட்டும்.

சிவ. விகா. 250 மட்டும். ஆக மொத்தம் ௩ செய்யுள்கள்.

31. வஞ்சித்துறை.

பிரபு. 648-655. சத. மா.1 ஆக. மொத்தம் ஒன்பது வஞ்சித்துறைகள்.

32. வஞ்சி விருத்தம்.

பிரபு. 656-660 ஆக மொத்தம் ஐந்து மட்டும்.

33. மருட்பா

அ. 4 வெள்ளடி 2 நேரிசை அகவலடி வியனிலை திரு. கலம். 31.

ஆ. 2 வெள்ளடி 2 நேரிசை அகவலடி. சமநிலை சி.பா. கலம். 92

ஆக மொத்த மருட்பாக்கள் இரண்டு மட்டும்.

34. சதுக்கம்

ஒரு சீர் ஓரடியாக நான்கு அடிகள் வருவது சதுக்கம் எனப்படும். (இலக்கண சூடாமணி - 15) இஃது ஓர் அரிய சொல்லாட்சி. சி.பா.பி. காப்பு இத்தகைய சதுக்கம் ஆகும். இதில் ஒரு மூவசைச் சீர் ஓரடியாக வருகிறது. ஈற்றடி நீண்ட விளம். அதனால் காய்ச்சீராகக் கருதப்படும்.

இத்துடன் சீர்வகையால் வந்த யாப்பு வகைகள் முற்றுப்பெற்றன. இதில் இடம்பெற்ற பாவகைகள் 34. மொத்தச் செய்யுள்கள் நாலாயிரத்து எண்ணூற்றிரண்டு.

2. மாத்திரை வகையால் அமைந்த சந்த யாப்பு வகைகள்

1. சந்தக் கலிவிருத்தம் 41 மாத்திரை மாச்சீர் 4.
காளா. நக். 33 ஒன்று மட்டும்.

2. சந்தக் கலிவிருத்தம் 4 மாத்திரை 4 மாச்சீர்கள் வெண்டளையில்
பிரபு. 639-647. ஆக ஒன்பது பாக்கள் மட்டும்.

3. சந்தக் கலிவிருத்தம். 4. மாத். தேமா. 1, 4. மாத். புளிமா 3 (காந்தி)
திரு. கலம். 36, சி.பா. கலம். 24, கூ.பு. 222-224.
ஆக இவ்வகைச் செய்யுள்கள் ஐந்து மட்டும்.

4. சந்தக் கலிவிருத்தம் 4 மாத். புளிமா 4 (தோடகம்)
கூ.பு. 221 ஆக ஒரு செய்யுள் மட்டும்.

5. சந்தக் கலிவிருத்தம் முக்குறிலீற்றுக் காய் 3, தேமா 1.
கூ.பு. 520 - 531. பிரபு. 208-215. ஆகப் பதினொன்று.

6. சந்தக் கலிவிருத்தம். மாங்கனி 3, மா 1 (4 உட்பிரிவுகள் உள.)
கூ.பு. 335 - 338. பிரபு. 985-989. காளா. நக். 32.
ஆக மொத்தம் பத்துக் கவிகள்.

7. சந்தக் கலிவிருத்தம். 3. விளங்கனி, மா. (2 உட்பிரிவுகள் உள.)
காளா. நக். 83-87. ஆக ஐந்து செய்யுள்கள்.

8. சந்தக் கலித்துறை. மா, மா, விளம், மா, காய் (4 மாத். 4 6 மாத். 1)
காளா. கண். 177. சி. பா. கலம். 12, 68. கூ.பு. 327-334.
திரு. கலம். 11, 24, 88 ஆக மொத்தம் பதினான்கு பாடல்கள்.

9. சந்தக் கலித்துறை. விளம், மா, விளம், மா, மா
கூ.பு. 192, 193 ஆக இரண்டு மட்டும்.

10. சந்தக் கலித்துறை. விளம், மா, விளம், மா, காய்
திரு. கலம். 53 ஒன்று மட்டும்.

11. சந்தக் கலித்துறை. 5 மாத். சீர் 5 வெண்டளையில், ஒரு நெடில்
சி.பா. கலம். 55 ஒன்று மட்டும்.

12. அறுசீர்ச் சந்தம் புளிமா, 3 கூவிளம், மா, கூவிளங்காய்
நா. நா. மா. 23 ஒன்று மட்டும்.

13. எழுசீர்ச் சந்தம் 6 குறிய மா, ஒரு நீண்ட விளம் (சுகந்தி)
சி.பா. கலம். 59. நா.நா.மா. 19. ஆக இரண்டு மட்டும்.

14. எழுசீர்ச் சந்தம் மா. விளம். மும்முறை, விளம். (மத்தகோகிலம்)
கூ.பு. 153-155. திரு. கலம். 43, 79 ஆக ஐந்து மட்டும்.

15. எழுசீர்ச் சந்தம் குறியமா முக்குறிலீற்றுக்காய் மும்முறை, நீ.விளம்
சி.பா. கலம் 75 ஒன்று மட்டும்.

16. எழுசீர்ச் சந்தம் குறிய காய், மா. மும்முறை, மா. (மணிமாலம்)
கூ.பு. 217-220. திரு. கலம். 26.சி.பா. கலம். 81
ஆக மொத்தம் ஆறு மட்டும்.

17. எண்சீர்ச் சந்தம். 4 மாத். ஈரசை 4 வெண்டளையில் இரட்டித்தது.
கூ.பு. 433, 434. திரு. கலம். 45. ஆக. மூன்று மட்டும்.

18. எண்சீர்ச் சந்தம். 3 மாங்கனி, மா இரட்டித்தது. அடிக்கு 44 மாத்.
திரு. கலம். 18. சி.பா. கலம். 77 ஆக இரண்டு மட்டும்.

19. எண்சீர்ச் சந்தம் 3 புளிமாங்கனி, புளிமா இரட்டித்தது.
திரு. கலம். 68 ஒன்று மட்டும்.

20. பன்னிருசீர்ச் சந்தம். இரட்டையாசிரியம். அடிக்கு 64 மாத்.
இ.அ.மா. 1-10. சி.பா.பி. 11-16, 31-35, 62-67, 82-86, 92-96,
தனிப்பாடல்களில் 5 ஆக மொத்தம்.
நாற்பத்திரண்டு இரட்டையாசிரியங்கள்.

21. பதினான்குசீர்ச் சந்தம். இரட்டித்தது (மத்தகோகிலம்)
திரு. கலம். 101. சி.பா. கலம். 38, 60 ஆக மூன்று மட்டும்.

22. பதினான்குசீர்ச் சந்தம். குறிய மா, முக்குறிலீற்றுக்காய் மும்முறை,
நீ. விளம். ஆக எழுசீர் வந்து இரட்டித்தது.
சி.பா. கலம். 97 சி.பா.பி. 68 ஆக இரண்டு மட்டும்.

இத்துடன் மாத்திரை வகையால் அமைந்த சந்த வகைகள் நிறைவுற்றன. இதில் 22 வகைகள் உள்ளன. மொத்தச் செய்யுட்டொகை நூற்று இருபத்தெட்டு.

3. குழிப்பிற்கேற்ப வரும் வண்ணக்கவிகள்

1. வண்ண வஞ்சித்துறை
   தன்னன தந்ததனா - திரு. கலம். 33
   தான தானன - சி.பா. கலம். 63. ஆக இரண்டு மட்டும்.

2. வண்ண வஞ்சிவிருத்தம்
   தனதன தந்த தனத்தானா திரு. கலம். 19
   தனந்த தத்தன தானனா சி.பா. கலம். 78 ஆக இரண்டு.

3. வண்ணக் கலி விருத்தம்
   தனத்தன 3, தன்ந்தா கூ.பு. 527, 528, 532
   தனனதன 3, தனதானனா சி.பா. கலம். 13 ஆக நான்கு.

4. வண்ணக் கலித்துறை
   தனன தனதன இரட்டித்துத் தந்தனா திரு. கலம். 76 ஒன்று மட்டும்.

6. வண்ண விருத்தம் (அறுசீர்)
   தனதன தந்தன தனதானா இரட்டி திரு. கலம். 48
   தானன தத்தன இரட்டித்துத் தானன தத்ததனா சி.பா. கலம். 64
   தான தானன தந்தன தந்தன தான தனதனா மேலது 74
   ஆக இவ்வகை வண்ணக்கவிகள் மூன்று மட்டும்.

6. வண்ண விருத்தம் (எழுசீர்)
   தனதான தந்த மும்முறை தனனா திரு. கலம். 34 மட்டும்

7. வண்ண விருத்தம் (எண்சீர்)
   தந்த தனதான தந்தத் தனந்தனா இரட்டி திரு. கலம். 23.
   தனன தனதன தந்தனா தனனா இரட்டி மேலது 74
   தனனதன தந்ததன தந்ததன தானா இரட்டி மேலது 90
   தனனதன தனனதன தானனத் தாத்தனா இரட்டி சி.பா.பி. 6
   தந்ததன தானதன தந்தா தந்தானா இரட்டி மேலது 17-20
   தந்ததன தானதன தந்ததன தானா இரட்டி மேலது 78-81
   தனதான தானதன தந்தத் தனந்தனா இரட்டி சி.பா. கலம். 42
   ஆக மொத்த எண்சீர் வண்ணவிருத்தங்கள் பதின்மூன்று.

8. வண்ண விருத்தம் (பதின்சீர்)
   தனனா தனதன தானன தானா தானானா இரட்டி சி.பா.பி. 29,30
   தனனா தந்தன தானன தந்தன தந்தானா இரட்டி மேலது 36-40
   தனன தனதன தான தனதன தத்தனா இரட்டி மேலது 46-50
   தத்த தானன தான தானன தனதனா இரட்டி மேலது 59-61
   ஆக மொத்தப் பதின்சீர் வண்ணவிருத்தங்கள் பதினைந்து.

9. வண்ண விருத்தம் (பன்னிருசீர்)
தானன தந்தன தந்தா 4 முறை திரு. கலம். 72
தனன தனதன தந்தனா 4 முறை மேலது 77
தனதன தனத்த தனனா 4 முறை சி.பா.பி. 87-91
ஆக இவ்வகையில் மொத்தம் ஏழு செய்யுள்கள்

10. வண்ண விருத்தம் (பதினான்கு சீர்)
தனன தந்தன தான தானன தனன தந்தன தனதனா இரட்டி
சி.பா.பி. 69-71 ஆக மொத்தம் மூன்று பாடல்கள்.

11. வண்ண விருத்தம் (பதினாறு சீர்)
தந்தத்தன தனதானன மும்முறை தனதனந் தனனா இரட்டி
திரு. கலம். 15 ஆகிய ஒன்று மட்டும்.

12. வண்ண விருத்தம் (இருபத்துநான்கு சீர்)
தனதன தனன மும்முறை தானனத் தாத்தனா என
வந்த எண்சீர் மும்முறை. சி.பா.பி.10 மட்டும்.

13. வண்ண விருத்தம் (இருபத்தெட்டு சீர்)
தனதந்த தந்த மும்முறை தனனா என வந்து எழுசீர்
நான்மடங்கு திரு. கலம் 70 ஒன்று மட்டும்

இத்துடன் வண்ணக்கவி வகைகள் நிறைவுள்ளன. இதில் பதின்மூன்று வகைகள் உள்ளன. மொத்த வண்ணக் கவிகள் 54.

இதுகாறும் நோக்கியவற்றால் துறைமங்கலம் சிவப்பிரகாசர் சீர்வகை, மாத்திரை வகை, குழிப்புவகை ஆகிய மூவகை யாப்புகளிலும் கவிதை களைப் படைத்துள்ளார் என்றும், அவரால் கையாளப்பட்ட மொத்த யாப்பு வகைகள் 69 என்றும் அறிகிறோம். இதை மேலும் விரிவாகப் பகுத்து நோக்கவும் வாய்ப்புண்டு.

ஆதார நூல்

சிவப்பிரகாசர் செந்தமிழ் நூல்கள்
மயிலம் ஆதீன வெளியீடு 1944

சுருக்க விளக்கம்

இ.அ.மா.	-	இஷ்டலிங்க அபிடேக மாலை
ஏ.ம.நி.	-	ஏசுமத நிராகரணம்
காள. கண்.	-	காளத்திப் புராணம் கண்ணப்பச் சருக்கம்
காள. நக்.	-	காளத்திப் புராணம். நக்கீரச் சருக்கம்
கு.க.நெ.	-	குறுங்கழி நெடில்

கூ.பு.	-	கூவத் தலபுராணம்
கை.மா.	-	கைத்தல மாலை
சத.மா.	-	சதமணி மாலை
சித்.சிகா.	-	சித்தாந்த சிகாமணி
சி.பா.கலம்.	-	சிவஞான பாலய தேசிகர் கலம்பகம்
சி.பா.தா.	-	சிவஞான பாலய தேசிகர் தாலாட்டு
சி.பா.நெ.	-	சிவஞான பாலய தேசிகர் நெஞ்சுவிடு தூது
சி.பா.தி	-	சிவஞான பாலைய தேசிகர் திருப்பள்ளியெழுச்சி
சி.பா.பி.	-	சிவஞான பாலய தேசிகர் பிள்ளைத்தமிழ்
சி.நா.ம.	-	சிவநாம மகிமை
சிவ. விகா.	-	சிவப்பிரகாச விசாகம்
செ.நி.அ.	-	செந்தில் நிரோட்டக யமக அந்தாதி
சோ.சை.மா.	-	சோண சைல மாலை
திரு.உலா	-	திருவெங்கை உலா
திரு. கலம்.	-	திருவெங்கைக் கலம்பகம்
திரு. கோவை.	-	திருவெங்கைக் கோவை
நா.நா.மா.	-	நால்வர் நான்மணிமாலை
நி.மா.	-	நிரஞ்சன மாலை
நெ.க.நெ.	-	நெடுங்கழி நெடில்
ப.பெ.நெ.க.	-	பழமலை பெரியநாயகி நெடுங்கழிநெடில்
பழ.அந்.	-	பழமலை அந்தாதி
பி.ந.மா.	-	பிட்சாடன நவமணி மாலை
பிரபு.	-	பிரபுலிங்க லீலை
பெ.கலி.	-	பெரியநாயகியம்மை கலித்துறை
வே.சூ.	-	வேதாந்த சூடாமணி.

70. சிவஞான பாலைய சுவாமிகள் தாலாட்டு

பா. நீலாவதி, கோவை.

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளுக்குக் குருவாக அமைந்தவர் சிவஞான பாலைய சுவாமிகள் ஆவார். இவர் திருமடம் அமைத்துக் கொண்டு எண்ணற்ற அடியார்கள் புடைசூழ இருந்து, இயற்றமிழை வளர்த்தவர். இவர் சிவஞான நெறியை அறிய விரும்பியவருக்கு உண்டி, உறையுள் கொடுத்து, ஞான நெறிக்கு வழிகாட்டியவர். தவத்தொடு தானமும் செய்து மகிழ்ந்தவர். சிவப்பிரகாசருக்குத் தமது குருவின் இறைப்பணியும், தவப்பணியும், அறப்பணியும் வியப்பைத் தருவனவாக அமைந்தன. எனவே அவரது இயல்பைப் போற்றிச் சிற்றிலக்கியங்களைப் படைத்தார். சிவப்பிரகாசர் சிவஞான பாலைய சுவாமிகள் மீது பாடிய பிரபந்தங்கள் ஐந்தனுள் தாலாட்டு என்னும் தனிப்பிரபந்தத்தை இக்கட்டுரை விளக்குகிறது.

தாலாட்டு

தாலாட்டு என்ற சொல்லுக்கு தால் + ஆட்டு, நாவினை ஆட்டுதல் என்பது பொருள். குழந்தையின் அழுகை ஒலியை அடக்கத் தாய், இதழ்களைக் குவித்து, நாவினை ஆட்டி ஒலி எழுப்புவாள். இதனையே தாலாட்டு என்பர். இதைத் தொடர்ந்து இசைக்கும் பாடலையும் தாலாட்டு என்றே சுட்டுவர். குழந்தைக்கு வரும் ஐம்புல நுகர்வில் இரண்டாவதாக மதிக்கத்தக்கது செவிப்புலனே ஆகும். குழந்தை அழும்போது, அதன் கவனத்தைத் திருப்ப, தால, தாலலா, தாலே, தாலேலோ, ராராரோ, ஆரிரரோ ஆர்ஆரோ, யார் இவரோ போன்ற நாவொலிகள் பயன் படுகின்றன. இவை பொருளற்ற வெற்றொலிகள் எனச் சொல்லப் பட்டாலும், அவற்றுள், 'ஆர்ஆரோ? யார் இவரோ' என்பன மட்டும் மிகுந்த பொருள் தருவனவாகக் கருதப்படுகின்றன. 'இங்கு வந்து நம் வீட்டில் பிறந்தவர் யாரோ? யார் மறுபிறவி எடுத்து இங்கு வந்து பிறந்தாரோ?' என்று பொருள் தரும் வகையில் இவை அமைந்துள்ளன. கிராமப்புறங்களில் தாலாட்டென்பது வாய்மொழி இலக்கியமாகத் தொன்று தொட்டு பெருவழக்காக இருந்து வந்துள்ளது. தாலாட்டுப் பாடல்களைச் சிறப்பித்துக் கூறுமிடத்து, தமிழண்ணல், 'தாய்மை உலகிற்குத் தந்த பெரும் பேறு தாலாட்டு' என்று புகழ்ந்துள்ளார்.

தாலாட்டு இலக்கிய வளர்ச்சி

பக்திக்காலம் பல இலக்கிய வகைகள் தோன்றவும் பரவவும் காரணமாக அமைந்தது. அவற்றுள் பிரபந்தங்கள் குறிப்பிடத் தக்கன வாகும். பிரபந்தங்களுள் பிள்ளைத்தமிழும், தனித் தாலாட்டுப் பிரபந்தமும் தாய்சேய் உறவினைப் பறைசாற்றுவனவாக அமைந்தன. நாட்டுப் பாடலாக, மக்கள் வாழ்வின் குழந்தைப் பருவத்திலும், தாய்மைப் பேற்றிலும் இணைந்து வந்த தாலாட்டென்னும் வகைக்கு, ஏட்டிலக்கிய ஏற்றம் தந்தவர் பக்திக் கவிஞர்களே ஆவர். பெரியாழ்வார் திருமொழியும், பெருமாள் திருமொழியும் முதன் முதலில் ஏட்டு இலக்கியப் பாடல்களாக முகிழ்த்தன. இறைவனைக் குழந்தையாகப் பாவித்துப் பாடிய இத் தாலாட்டுக்கள், பிற்காலத்துப் பிள்ளைத்தமிழில் தாலப்பருவமாக வளர்ந்தன.

தாலாட்டின் பாடுபொருள்

குழந்தையை 'அழேல்' எனலும், 'உறங்கு' எனலும் தாலாட்டின் அடிப்படையான கருத்தாகும். கிராமப்புறத் தாலாட்டில் குழந்தையின் சிறப்பு, இக்குழந்தை கிடைப்பதற்காகத் தாய் செய்த தவம், தாய்மாமனின் சிறப்பு, குலப்பெருமை இவையெல்லாம் அடங்கியிருக்கும். இவ்வளவு சிறப்புக்களைப் பெற்றவனே 'கண்ணுறங்கு' எனப் பாடல் முடிவுறும். ஆனால் இறைவனைப் பற்றிப் பாடும் பக்தித் தாலாட்டில் இறைவன் புகழ், இறைவனின் மாண்பு இவையே அடித்தளமாக அமைந்திருக்கும்.

குருவிற்குத் தாலாட்டு

சிவப்பிரகாசர் தமது குருவான சிவஞான பாலைய சுவாமிகள் மீது, தாலாட்டு என்ற தனிப்பிரபந்தம் ஒன்றையும் பிள்ளைத்தமிழில் பத்துப்பருவத்தில் ஒரு பருவமான தாலப்பருவத்தையும் பாடியுள்ளார். தமிழ் இலக்கியத்தில் குருவை, பிள்ளைத்தமிழுக்குரிய பாட்டுடைத் தலைவனாக ஆக்கியோரில் சிவப்பிரகாசர் குறிப்பிடத்தக்கவராவார். இறைவனையோ, இறைவியையோ குழந்தையாகப் பாவித்துப் பாடுதல் போல், இவரது தாலாட்டுப் பாடல், குருவை ஈசன் வடிவினன் எனவும் ஈசனே குருவாய் வந்தனன் எனவும் குறிப்பிட்டுள்ளது. சிவப்பிரகாசருக்குத் தம் குரு ஈசன் வடிவினராகத் தோன்றியுள்ளார்.

"உருத்திரனே ஐயமிலை ஓர் உருத்தி ராக்கந்
தரித்தவ னென்றெமக்குச் சாற்றும் பெருமானோ"

என்று தம் குருவை உருத்திரன் என்று கொண்டு பாடியமையைக் காணலாம்.

"குருவே சிவமெனக் கூறினன்"

என்று திருமந்திரமும்,

''தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த''

என்று சிவஞானபோதமும்,

'அருவுருவத் திருவாய் அவனே' வருவான் எனத் திருவாசகமும் குறிப்பிடுகின்றன. 'குருதேவோபவ' என்பதில் குருவிற்கு இறைத்தன்மை உண்டென வேதம் சொல்கிறது. இறைவனது தாளினுக்கு ஒப்பாக, குருவின் தாளினை ஒப்பிட்டுக் கூறுகிறார். குருவின் தாளினை, 'பவக்கடலை நீக்கவல்ல தோணி' எனக் குறித்துள்ளார்.

'இணையாது மில்லா விடர்ப் பவவேலைக்குப்
புணையாக வந்தருளும் புண்டரிகத் தாளானோ?'

என வரும் இத்தாழிசை,

'அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்த லரிது'

என்ற திருக்குறளுடன் ஒப்புநோக்கத்தக்கது.

இத்தாலாட்டின் தனித்தன்மை

சிவப்பிரகாசர் இயற்றிய தாலாட்டு, 100 தாழிசைகளால் இயன்றது. தத்துவ ஞானப்பொருளை உட்பொருளாகக் கொண்டிலங்குவது. குருவைப் பற்றிய உயர் எண்ணங்கள், குரு தனக்கு போதித்த கருத்துக்கள், குருவின் புகழ் ஆகியவை இங்கு தாலாட்டாக உருப்பெற்றுள்ளன. தனிப்பிரபந்தச் செய்யுளான இது காப்புச் செய்யுளைப் பெற்றுள்ளது. தாலாட்டில் இடம் பெறுவதான தாலே, தாலேலோ, ஆராரோ போன்ற ஒலித்தொடர்களை இத்தாழிசைகள் பெறவில்லை. குருவைக் குழந்தையாகப் பாவித்துப் பாடும் இத்தாலாட்டில் குரு-சீடன் என்ற உறவு முறையே அதிகப்படியாக இடம் பெற்றுள்ளது. குரு, தனக்குப் போதித்த தவநெறியும், வழிபாட்டு முறைகளும், லிங்கத்தின் சிறப்பும் போற்றப்பட்டுள்ளன. குருவைக் குழந்தையாகப் பாடுவதைவிட, குருவை இறைவனாகப் போற்றும் சிறப்பே அதிகமாக இடம் பெற்றுள்ளது. இத்தாலாட்டில் தாய் சேயினை உறங்கச் செய்வதான பொருளில் எந்தத் தாழிசையும் அமையவில்லை. மாறாக, தனக்குக் கிடைத்த குழந்தை, தனக்கு இவ்விவற்றையெல்லாம் போதிக்க வந்த சிவஞான தேசிகனோ, அருட்கடலோ, நாயகனோ, சிவஞானியோ, பெருமானோ, தேசிகனோ, குருவாகித் தன்னைக் கொடுக்குமெனச் சொன்னானோ? போன்ற சொற்களால் முடிவுறுகிறது. நாட்டுப் புறங்களில் தாய் தன் குழந்தையை, 'என் அன்னையே என்றும் என் தந்தையே' என்றும் கூறிப் பெருமிதப்படும் இச்சொற்களோடு, சிவப்பிரகாசரின் தாலாட்டு தாழிசைகளின் முடிவில் வரும் சொற்கள் ஒப்பு நோக்கத்தக்கன. 100 தாழிசைகளிலும் தமது குருவின் சிறப்பு,

குணச்சிறப்பு, தம்மை நல்வழிப்படுத்திய சீர்மை, தனக்குக் கொடுத்த அருட்கொடை இவையே பாடப்பட்டுள்ளன. இவற்றைத் தொகுத்தால் ஒரு தவகுருவிடம், ஒரு தவச்சீடர் எவ்வெவற்றையெல்லாம் கற்றறிய வேண்டும் என்பதைப் பட்டியலிட்டு விடலாம்.

சிவப்பிரகாசர் தமது குருவைக் குழந்தையாகப் பாவித்துப் பாடியதால், குருவிடம் சீடனுக்கு இருக்க வேண்டிய மரியாதை காரணமாக, இத்தாழிசைகளில் தாய்சேய் உறவு நிலை வெளிப்படவில்லையோ என நினைக்கத் தோன்றுகிறது. குழந்தை என்ற நிலையிலும் ஞானகுருவின் மாண்புகளே பாடப்பட்டுள்ளன.

சிவப்பிரகாசரின் தாயுள்ளம்

இத்தாலாட்டின் 100 தாழிசைகளில் ஒரே ஒரு தாழிசையில் மட்டும் ஒரு தாய் தன் குழந்தையை எப்படியெல்லாம் வர்ணிப்பாளோ அதுபோல் வர்ணித்துள்ளார். ஒரு தாயிற்கு குழந்தையைத் தவிர செல்வம் பிறிதுண்டோ?

''ஊனோ, உயிரோ, உயிர்க்குயிரோ, ஆனந்தத்
தேனோ, அமுதோ, சிவஞான தேசிகனோ''

என்பதுவே அத்தாழிசை. இவ்வரிகள் ஒரு தாய் தன் குழந்தையின் மீது கொண்ட அன்பின் ஆழத்தினைச் சுட்டுவதாக அமைந்துள்ளது. இதற்கு முந்தைய தாழிசைகளில், தன் குருவின் சிறப்புக்களையும், போதித்த கருத்துக்களையும் பாடிக்கொண்டே வந்த சிவப்பிரகாசர், இவ்வரிகளில் தானே ஒரு தாயாக மாறி விடுகிறார். ஒரு தாயின் ஆழ்ந்த கற்பனையில் விளைந்த சீரிய பாடலாக இதைக் கொள்ளலாம். இத்தாழிசையை, என்உயிர், என் கண், மன்னுயிரெல்லாம் உயிர் என்று இராமனைச் சொல்லும் தசரதனது சொற்களுடன் ஒப்பு நோக்கத்தக்கது.

சிவப்பிரகாச சுவாமிகள் இத்தாலாட்டிற்கு, 'தவஞானத் தாலாட்டு எனும் தமிழ்' எனப் பெயரிட்டுள்ளார். ஆகவேதான் அன்றாட வாழ்வியலில் நாம் காணும் தாய்சேய் உறவு நிலை இவ்விலக்கியத்தில் பேசப்படவில்லை என அறிதல் வேண்டும்.

குருவிடம் கொண்ட பணிவு

''தன்னை அருளாள னென்னும் தன்மையுலகறிய
என்னை யடியாரோ டெழுந் தருளிக் காத்தானோ?''

அருட்தன்மையைக் காட்டுதற்கு என்னையும் ஒரு பொருட்டாக நினைத்து, அடியார் கூட்டத்தில் சேர்த்துக் கொண்டு, என்னையும் காத்தானோ? எனக் கூறுவதில் சிவப்பிரகாசரின் பணிவு விளங்குகிறது.

''மண்களிக்க, நாயேன் மனங்களிக்கக் கண்டுகொண்டு
கண்களிக்க வந்த கருணைப் பெருங்கடலோ''

என்ற தாழிசையில் சிவப்பிரகாசர், தன்னை நாயேன் எனச் சொல்லி, தன்னையும் ஆட்கொண்ட அருட்திறத்தை வியக்கின்றார். நாயினும் கீழ்ப்பட்ட என்னைத் தாய் எனத் தாங்கும் தயாபரன் என வரும் பிற இலக்கிய வரிகளுடன் இது ஒப்பிடத் தக்கதாகும்.

குருவின் அருட்தன்மை

''பொய்ம்மாயை யென்னும் புலியின் வாய்ப் பட்டேனைக்
கைம்மாறி லாமற் கருணை கொடு மீட்டானோ
விருப்பு வெறுப் பின்மை விளங்க வென்புன் சொல்லைத்
திருப்பதங் கொள்கின்ற சிவஞான தேசிகனோ''

என்ற இத்தாழிசைகளால் குரு, தன்னைக் கைம்மாறிலாமற் காத்த தன்மையினையும், தன்புல்லிய சொற்களையும் ஏற்று அருள்பாலித்த தன்மையினையும் விளக்கியுள்ளார்.

சம்பந்தரைச் சுட்டல்

சிவப்பிரகாசர் தனது குருவை, திருஞானசம்பந்தப் பெருமானுடன் ஒப்பிடுகிறார். இறைவனிடம் ஞானப்பால் உண்ட திருஞானசம்பந்தர் ஒருமுறைதான் உண்டார். ஆனால் தன் குருவோ தனக்கு நாளும், ஞானசம்பந்தர் உண்ட ஞானப்பாலுக்கு இணையான ஞான அமுதத்தினை நல்கினார் என்கிறார்.

''சம்பந்தன் அன்றொரு நாள் தானுண்டபால் நாளும்
எம்பந்த நீங்க வினிதமுது செய்தானோ''

என்பதால் தனது குருவினால் தான் பெற்றபேறு, சம்பந்தர் பெற்ற பேற்றினும் உயர்ந்தது என்கிறார்.

நோய் தீர்க்கும் அருமருந்து

சிவஞான பாலைய சுவாமிகள் மண்ணுலகில் அற்புதங்கள் பல செய்து, மக்களைக் கொடிய நோய்களினின்றும் காத்தார் என்று வரலாறு கூறுகிறது. அச்செய்தியை,

''ஆர்க்குங்கொடு நோய் அனைத்துங் கடைக்கண்ணால்
தீர்க்குங் கருணைச் சிவஞான தேசிகனோ''

என்று பாடியுள்ளமையால் அறியலாம். இறைவனின் கடைக்கண் பார்வையின் அருட்பார்வையாலேயே நோய் நீங்குவது போல், தன் குருவின் கடைக்கண் பார்வையால் உலக உயிர்கள் நோயின்றி வாழ்ந்தன எனச் சுட்டுகிறார்.

வீடுபேற்று ஆசையையும் வேரறுப்பவன்

''செப்பமுற வெனது சிந்தை வீட்டாசை யெனுங்
குப்பை துகைத்துக் குடியிருக்க வல்லானோ''

என்ற தாழிசையில், சிவப்பிரகாசர், வீட்டாசையை விடுவதற்குக் காரணமாய் இருந்து உள்வீடாகிய உள்ளத்தில் குடியிருந்த வல்லவன் எனப் புகழ்ந்து பாடியுள்ளார். சிறந்த அடியார்களோடு தன்னையும் அடியானாக ஏற்றருளிய தன்மையை,

''தன்னை யருளாளனெனும் தன்மையுலகறிய
என்னை யடியாரோ டெழுந்தருளிக் காத்தானோ''

எனப் போற்றுகிறார்.

பாவம் என்னும் மரம் அறுத்தல்

உலகியலில் மரத்தை அறுப்பதற்கு மழு வேண்டும். ஆனால் இறையருளாளருக்கு பாவம் என்னும் மரத்தினை அறுப்பதற்கு மழு வேண்டியதில்லை; சிவஞான பாலையர், தமது அருட்தன்மையால், பாவம் என்னும் மரத்தினை மழுவில்லாமலேயே அழிக்க வல்லவர் என்கிறார். இதனால், 'செடியாய வல்வினைகள் நீக்கும்', தன்மையை இறைவனைப் போலவே தனது குருவும் பெற்றிருந்தார் என்ற கருத்து உறுதி செய்யப்படுகிறது.

குரு குணக்குன்று

அண்டங்கள் முழுவதும் அணுவினும் சிறியதாகும்படித் தன் குரு, பெருமையினால் குன்றுபோல்வார். 'அண்டம் அணுவிற் சிறியது' என்பதில், அணுவைப் பற்றிய செய்தியும், அணு மிகமிகச் சிறியது என்ற கருத்தும், அண்டசராசரங்களின் பெருமையைவிடத் தன் குரு பெருமை மிக்கவர் என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டுள்ளன.

குருவின் பாதம் சூடி மகிழ்தல்

இறைவனின் பாதமலரின் சிறப்பினைப் பல்வேறு புலவோர் பாடி மகிழ்ந்துள்ளனர். இறைவன் தன்னைத் தடுத்தாட் கொண்டபோது அவனது பாதத்தைச் சூடி மகிழ்ந்தவரும் உண்டு. சிவப்பிரகாசர் தன் குருவெனும் குழந்தையின் பாதங்களை அழகுறச் சூடிமகிழும் பாடல் சிறப்பு வாய்ந்தது.

''பாடியுந்தன் சீர்த்தி பரவியுந்தன் பாதமலர்
சூடியுமிக் காலந் தொலைக்க வருள் செய்தானோ?''

என்று ஒரு தாய் ஒரு குழந்தையின் பாதமலரைச் சூடி மகிழ்தலைப் போல் பாடி மகிழ்ந்துள்ளார்.

குருவின் நாமத்தைப் பாடி மகிழ்தல்

குருவின் மீது பக்தியும், தாமரைக்கு ஒப்பான பாதங்களைப் பாடும் நற்பேறும் கொடுத்து ஆண்ட சிவஞான தேசிகன் என்று தனது குருவின் அருட்தன்மையால் விளைந்த பாதமலர்ச் சிறப்பைப் பாடி மகிழ்கிறார்.

குரு வாழ்ந்த நகர்களைப் போற்றுதல்

தனது குரு வாழ்ந்த ஊர்களான மயிலை, காஞ்சி ஆகிய நகர்களை மட்டும் சுட்டுகிறார். அல்லும்பகலும் இடையறாது அருள் வழங்கும் தனது குருவின் இயல்பினை இணைத்து நகர்ச்சிறப்பும் பாடபப்பட்டுள்ளது.

''எங்கண் மலவிருளுக் கீண்டு மயிலை மிசைச்
செங்கதிர் போற்றோன்றுஞ் சிவஞான தேசிகனோ'' என்றும்,

''அற்பகலு மாறாதரனடியார்க் கீதலுறுங்
கற்பகமாய் வந்து திருக்காஞ்சி நகருற்றானோ?''

என்ற தாழிசைகளால் நகர்ச்சிறப்பும் குருவின் சிறப்பும் மிளிர்கின்றன.

இவ்வாறு சிவப்பிரகாசரது தனிப் பிரபந்தமாக அமைந்த தாலாட்டு, மற்ற பிள்ளைத்தமிழ் நூல்களில் இடம்பெற்றுள்ள தால்ாட்டினின்றும் வேறுபட்டதாய் அமைந்துள்ளது. கிராமப்புறப் பாடல்களில் அமைந்துள்ள தாய்சேய் உறவு நிலையைவிட, குருசீடன் என்ற உறவு நிலையே போற்றப் பட்டுள்ளது. இதிலுள்ள தாழிசைகளில் உள்ள கருத்துக்களைப் பட்டிய லிட்டால் குரு போதித்த தத்துவக் கருத்துக்கள் கிடைத்துவிடும். குருவின் பெருமை, குருவின் இயல்பு, குருவும் ஈசனும் ஒன்றெனக் காணும் தன்மை ஆகியவற்றை இத்தாழிசைகள் விளக்குகின்றன. தாலாட்டு இலக்கியத்திற்கு இவரது படைப்பு பெரும் கொடையாக அமைந்தது மட்டுமின்றி அதில் ஒரு புதுமையாக குருவின் போற்றுதலையும் புகுத்தியுள்ளார். சைவ சமயத்திற்கு மாபெரும் கொடையாக இத்தாலாட்டு அமைந்துள்ளது எனில் தகும்.

71. காப்பிய நோக்கில் பிரபுலிங்க லீலை

எஸ். பசுமதி, திருவனந்தபுரம்.

தமிழிலுள்ள காப்பியங்களுள் சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற இரண்டைத் தவிர பிற காப்பியங்கள் அனைத்தும் வழிநூல்களே யாகும். இவற்றின் மூல நூல்கள் பெரும்பாலும் வடமொழியான சமஸ்கிருதம், பிராகிருதம் மொழிகளில் அமைந்துள்ளன. இக்காப்பியங்கள் அனைத்தும் பெரும்பாலும் ஒரே அமைப்பினைக் கொண்டுள்ளன எனலாம். இவை பெரும்பிரிவு, அதற்குட்பட்ட சிறுபிரிவு என்ற அமைப்பினைக் கொண்டவை. பெரும்பிரிவு காண்டம் என்றால் சிறுபிரிவு காதை, படலம் மற்றும் இலம்பகம் எனக் காணப்படும். இப்பிரிவில் முரணாக அமைவது பிரபுலிங்க லீலை மட்டுமே. இது வடமொழி சாராததாகும். ஆனால் கன்னட மூலத்திலிருந்து பெறப்பட்டது. பிற காப்பியங்களுக்கும், பிரபுலிங்க லீலைக்கும் இடையே கால வேறுபாடு மிகுதியாக உள்ளது. பிரபுலிங்க லீலை சிற்றிலக்கியக் காலத்தின் பாற்பட்ட காப்பியமாகும். பிரபுலிங்க லீலையின் தனித் தன்மைகளை ஆராய்வது இங்கு அவசியமாகிறது.

சிவப்பிரகாசரின் காலம்

சிவப்பிரகாசர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவார். இது சிற்றிலக்கியங்களின் காலமாகும்.

கி.பி. 1652-ல் பிரபுலிங்க லீலை எழுதப்பட்டது. இதனை,

"பார்கெழு சுகாத்த மூவைந் நூற்றெழு பானான்காவ,
தாகிய கரநா மங்கொள் ஆண்டுறு விடைஞாயிற்றில்
சீர்கெழும் அல்ல மன்றன் திருவிளையாடற்காதை,
கார்கெழு மிடற்றெங் கோமான் கருணைகொண் டியம்பினானே"

பிரபுலிங்க லீலையிலுள்ள இச்செய்யுளின் மூலம் உறுதி செய்ய முடிந்தது. இந்நூல் முதன் முதலில் கி.பி. 1847-ஆம் ஆண்டு அச்சில் வெளியிடப் பெற்றது. இது காலப்போக்கில் முழுநூலாகவும், பகுதி பகுதிகளாகவும் வெளிவந்துள்ளன.

மூலநூலின் காலம்

சீரிய முறையில் கல்வி கற்று, இலக்கிய இலக்கணப் புலமை பெற்ற சிவப்பிரகாசர் சைவ சித்தாந்த - வீரசைவ நெறிகளை நன்கு

அறிந்தார். மேலும் தருக்கம், வானநூல் ஆகிய துறைகளிலும் வல்லவரானார். தமிழில் மட்டுமின்றித் தெலுங்கு, சமஸ்கிருதம், கன்னடம் ஆகிய மொழி களைக் கற்று பன்மொழிப் புலவரான இவர், கன்னட மொழியிலுள்ள பிரபுலிங்க லீலையைத் தமிழில் இயற்றியுள்ளார்.

கன்னட பிரபுலிங்க லீலையின் ஆசிரியர் சாமரசர் என்றும், அவருடைய காலம் கி.பி. 1400 அல்லது 1430 என்றும் கன்னட ஆராய்ச்சியாளர்கள் கூறுவர்.

நூல் குறித்தான தொன்மங்கள்

சிவப்பிரகாசர் பொம்மபுர மடத்தில் தங்கியிருந்த சமயம், தலயாத்திரை செய்து வந்த கன்னட வீரசைவத் துறவிகள் அம்மடத்தில் வந்து தங்கினர். அப்போது கன்னடத்துறவி பிரபுலிங்க லீலையைக் கூறினார். அதைக் கேட்டுக் கொண்டு இருந்த சிவப்பிரகாசர் அவர் தலயாத்திரை சென்று திரும்பி வருவதற்குள் தமிழில் பிரபுலிங்க லீலையை எழுதி முடித்து விட்டார். அத்துறவி நூலின் சொற்சுவை, பொருட்சுவைகளை உணர்ந்து, சினங்கொண்டு சிவப்பிரகாசருக்குத் தெரியாமல் அவ்வேடுகளை எடுத்துச் சென்று, கடற்கரை மணலில் புதைத்துவிட்டு ஊருக்குத் திரும்பிவிட்டார். பின்னர் ஒருநாள் சிவப்பிரகாசர் பல் தேய்த்துவிட்டுப் பற்குச்சியை மணலில் புதைக்க மணலைத் தோண்டியபோது அவர் எழுதிய பிரபுலிங்க லீலை ஏட்டினைக் கண்டு மகிழ்ந்ததோடு, இறைவன் திருவருளால்தான் கிடைத்தது என எண்ணினார்.

இதனை வரலாற்றுச் செய்தியாகக் கொள்ள வேண்டுமென்பதில்லை. நூல் இயற்றப்பட்ட காலத்தில் எதிர்கொண்ட எதிர்ப்பையும், படிப் படியாக பெற்றுக்கொண்ட ஏற்பையுமே உணர்த்துகிறது எனலாம்.

வீரசைவம்

வீரசைவத்தின் மூலம் கன்னட மொழியைச் சார்ந்தது. வீரசைவம் சாதியை மறுத்தது. அதனால் ஆரம்ப நாட்களில் வீரசைவம் மக்களிடையே வரவேற்பினைப் பெறவில்லை. எதிர்ப்பினைக் கடந்து வீரசைவம் நிலைபெற்றபோது, பிரபுலிங்க லீலையும் செல்வாக்குப் பெற்றது.

பிரபுலிங்க லீலை என்னும் சொற்களாகிய இத்தொடர் வடமொழிச் சொற்றொடர் ஆகும். பிரபு என்பது மேலாண்மையைக் குறிக்கும் சொல்லாகும். லிங்கம் என்பது அருவுருவாகிய இறைவனான சிவபெருமானை உணர்த்தும் அடையாளமாகும். லீலை என்றால் திருவிளையாடல் என்று பொருள். எனவே ''பிரபுலிங்க லீலை என்பது எல்லாமாய், அல்லவுமாய், யாவர்க்கும் மேலாய், அருட்செல்வமாய், லிங்கமாய், பரமசிவமாய்த் திகழும் சிவபெருமானது திருவிளையாடல்கள்'' என்று பொருள்படும்.

தமிழில் இதற்கிணையான இவரது திருவிளையாடல்களைக் குறிக்கும் நூல்கள் உள்ளன, என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆனால் வீரசைவம் குறிக்கும் இவரது பண்புகள் வேறு, பிரபுலிங்க லீலை குறிக்கப்படும் திருவிளையாடல்கள் இப்பண்பு சார்ந்தது.

நூலமைப்பு முறை

தமிழ் காப்பிய மரபில் கதி என்ற உட்பிரிவு காணப்படவில்லை. ஆனால் கன்னட பிரபுலிங்க லீலையில் காணப்படுவது போன்று தமிழ் பிரபுலிங்க லீலையிலும் கதி என்ற பிரிவே உள்ளது. மேலும் கதிகளின் எண்ணிக்கையும் மூலநூலில் இருப்பதுபோல இருபத்தைந்தாக அமைந்துள்ளது.

இந்நூல் 1158 செய்யுள்களைக் கொண்டுள்ளது. இதிலுள்ள ஒவ்வொரு பாடலும் நான்கடிகளால் ஆயது. வடநூல் கருத்துப்படி இந்நூல் வைதருப்ப பாகமாகவும் திரட்சா பாகமாகவும் அமைந்துள்ள செய்யுட்களைக் கொண்டது.

காப்பிய போக்கு

ஒரு புள்ளியிலிருந்து விரிந்து பரந்து செல்வது காப்பியத்தின் இயல்பாகும். ஆனால் இக்காப்பியத்தில் ஒரு புள்ளியை நோக்கி குவிகிறது. புள்ளியாக இறையருள் அமைகிறது.

கயிலாயத்தில் பார்வதியும், பரமேஸ்வரனும் வீற்றிருக்கும் சமயம் பார்வதி பரமேஸ்வரனை நோக்கி, கயிலையில் ''தாங்கள் அவைக்கு வந்த தேவர்கள் அவைரும் வீடுபேறடைவரோ?'' நாமகிரியை (பெயர், வடிவம், செயல்)களை வென்று முக்தியடையும் நெறி யாது? மண்ணுலகில் மெய்ப்பொருளை உணர்த்தவல்ல ஞானக்குரவன் யார்?'' என்று கேட்டார். இவர் கேட்ட இம்மூன்று கேள்விகளுக்கு விடையாகத் தமது மெய்வடி வத்தவனாகிய அல்லமனே அத்தகைய ஞானக்குமரன்; அவனை மாயையால் (ஆணவத்தால்) காண இயலாது என்று சிவபெருமான் பதிலுரைத்தார். அத்ற்கு 'மாயையால் அல்லமனைப் பற்ற இயலும்', என்று பார்வதி உரைக்கும் சூளுரையே இக்காப்பியத்தின் கருவாகும்.

இக்காப்பியம் கயிலையில் தொடங்கி கயிலையில் முடிவு பெறுகின்றது. இறுதியில் நந்திதேவர், சத்துவகலை மடந்தை, சிவகணங்கள் ஆகியோர் பெருமையினை பரமேஸ்வரர், பார்வதிக்கு எடுத்துரைக்கிறார். மேலும் வீரசைவ நெறியின் உயர்வும் கூறப்படுகின்றது.

காப்பிய இலக்கணமும் பிரபுலிங்க லீலையும்

தமிழில் கம்பராமாயணத்தை மட்டுமல்லாமல் பெரியபுராணத்தையும் காப்பியமாகவே கருதுகிறோம். பெரியபுராணம், சுந்தரரைப் பாட்டுடைத்

தலைவனாகக் கொண்டு பிற நாயன்மார்களின் வரலாறுகளை எடுத்துக் கூறுதல் போன்றே, பிரபுலிங்க லீலையும் அல்லமரைத் தலைவராகக் கொண்டு, பல வீரசைவ அடியார்களின் வரலாறுகளை விளக்கிக் கூறுகின்றது.

தமிழில் பெருங்காப்பியம், காப்பியம் என்ற பாகுபாடு உள்ளது. பெருங்காப்பிய இலக்கணத்தில் சில குறைந்தால் காப்பியம் என வழங்கப்படும். கடவுள் வாழ்த்து, நாற்பொருள், தன்னிகரில்லாத் தலைவன், மலை, கடல், நாடு, வளநகர், பருவம், பொன்முடி கவித்தல், பூம்பொழில் நுகர்தல், புனல் விளையாடல், கலவியல் களித்தல், மதுக்னி, சிறுவரைப் பெறுதல், புலவியில் புலத்தல், மந்திரம், செலவு, போர், வெற்றி ஆகியவை காப்பியத்தின் இன்றியமையாத உறுப்புகளாகும் என்று தண்டியலங்காரம் குறிப்பிட்டுள்ளது.

இந்த அனைத்து காப்பிய இலக்கணங்களும் பிரபுலிங்க லீலையில் அமைந்துள்ளதைக் காணலாம்.

கடவுள் வாழ்த்து

கடவுள் வாழ்த்து, வாழ்த்து, வணக்கம், வருபொருளுரைத்தல் என்று மூவகைப்படும் என்கிறது தண்டியலங்காரம்.

விநாயகப் பெருமானின் திருவடிகளைத் தொழும் காப்புச் செய்யுளோடு பிரபுலிங்க லீலை தொடங்குகிறது. அடுத்து துதிகதியில், சிவபெருமான், பார்வதி, முருகன் இவர்களை வணங்கும் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. மேலும் வீரசைவமான இந்நூல் அல்லமர், வசவேசர், சென்ன வசவர், மடிவால மாச்சையார் ஆகியோர் பற்றியும் கூறுகின்றது. எனவே, துதிகதியில் கடவுள் வாழ்த்தும், அவையடக்கமும், உட்பொருளும் கூறப்பட்டுள்ளதை காண முடிகிறது.

நாற்பொருள்

அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் ஆகிய நான்குமே நாற்பொருள் எனப்படும். இவற்றுள் பொருள் இன்பம் குறித்து பிரபுலிங்க லீலை அக்கறைக் கொள்ளவில்லை. அறம், வீடு என்ற இரண்டுமே கவனம் கொள்கிறது.

தன்னிகரில்லாத் தலைவன்

இக்காப்பியத்தின் ஒப்பற்றத் தலைவராகத் திகழ்பவர் அல்லமப் பிரபு ஆவார். அடியார்க்கருள்தலே அவருடைய வாழ்க்கை நெறியாகும். இவர் இறைவனின் வடிவமாகக் கயிலையிலிருந்து பூவுலகிற்கு வருகின்றார். பொறுமை, அழித்து ஆக்கும் வல்லமை, பல வடிவம் கொள்ளும்

பேராற்றல் ஆகிய சிறப்புகளைக் கொண்ட அல்லமர், தம் பெற்றோரின் நெற்றியில் தோன்றிய பரஞ்சோதியில் குழந்தை வடிவம் கொண்டவர். அன்புக்கு பணியும் மலையாக, எங்கும் நிறைந்த பரம்பொருளாக, வெளியரியணையில் அமர்ந்த சான்றோராக விளங்குபவர் அல்லமர்.

பார்வதியால் கயிலையிலிருந்து அனுப்பப்பட்ட மாயையின் பிடியில் சிக்காமல் மாறனை வென்ற வீரனாகத் திகழ்ந்தார்.

வருணனைகள்

காப்பியங்களில் வருணனைகள் இடம்பெறுவது சிறப்பம்சமாகும். கோட்டுப்பூ, நிலப்பூ, நீர்ப்பூ, கொடிப்பூ, சுனைப்பூக்களாகிய தாமரை, குவளை ஆகியவை பொலிவதலால் மலர் சூடிய மங்கையரைப் போன்று விளங்குகிறது. திருப்பருப்பதம்

"சினைமலர் புதல்மென் போது செழும்புனல் பசுந்தாட் செந்தேன்
நனைமலர் தமது தண்பூ தண்ணியீர்ங் கொடிகள்குண்டுச்
சுனைமலர் விழிகள் போலத் தோன்றுமப் பராரை குன்றில்
புனைமலர் பலவும் காட்டும் புரிகுழல் மகளிர் போலும்"

என்று பருப்பதமலையை வருணித்துள்ளார் சிவப்பிரகாசர்.

கதிரவன், சந்திரன் இவற்றின் தோற்றத்தையும் மறைவையும் வருணிப்பது இலக்கிய மரபாகும். பிரபுலிங்க லீலையில் வருணிக்கப் பட்டுள்ளது.

சூரியன் மேற்குக் கடலில் மறையும்போது சந்திரன் கீழ்க்கடலில் எழுகின்றான். நீரில் விளையாடும் இருவருள், நீரினுள் குதித்து மூழ்குபவனைப்போல அதுவரை உலகுக்கு ஒளிதந்த சூரியன் கடலில் விழுந்து மறைந்தது. நீரினுள் மூழ்கி மறைந்து வந்து மற்றொரு புறத்தில் எழுபவனைப்போல், இருளைப் பருகி வெண்ணிலவு எழும். இக் காட்சியை,

"புனலின் விளையா டிருமைந்தர் தம்முள்எழுந்து போயோடிப்
புனலின் விழுவான் போல்விழுந்த தாளிஞா யிறுபோய்ப்
புணரியிடைப்
புனலின் விழுந்து மூழ்குபுவந் தெழுவான் போலக் குணறுடற்
புனலின் மிசைவந் தெழுந்ததிருள் பருகிப் புதுவெண் திங்களே"

என்னும் பாடலில் வருணித்துள்ளார். காப்பியத்தின் பல இடங்களில் வருணனைகள் சிறப்பாக அமைந்துள்ளன. இவற்றிலிருந்து சிவப்பிரகாசரின் வருணனைத் திறனை நன்கு அறியலாம்.

பாவிகம்

பாவிகம் என்பது, காப்பியம் முழுமையும் தொடர்ந்து வரும் பண்பாகும். பிரபுலிங்க லீலை பேரின்பப் பொருளாகிய மெய்ப்பொருள் பற்றியதாகும். நூல் முழுவதும் ''கரும நெறியை விட ஞான நெறியே சிறந்தது, இறைவனை உணர, மனம் அடங்குதல் வேண்டும்'' என்னும் நெறி கூறப்படுகின்றன. ''மனத்தூய்மையும், சோகம் - பாவனை என்ற உணர்வும்'' இந்நூலில் போற்றப்படுகின்றன. காப்பியத் தலைவரான அல்லமரின் செயல்களை பாவம் வெல்லுதல், வாதில் வெல்லுதல், அடியார்க்கு அருள் செய்தல், அரிய செயல்களைச் செய்தல் ஆகிய நான்கு பிரிவுகளாகக் காணலாம். இறைவனை ஆணவத்தால் காண இயலாது. அன்பினால்தான் காண இயலும். ஆண்டவன் அன்பர்களுக்கு எளியவன் என்பதே இக்காப்பியத்தின் பாவிகமாகும்.

காப்பிய நலமாகத் திகழும் சிறந்த கற்பனைகளும், பொருட் சுவையும், நடையழகும் இக்காப்பியத்தில் சிறப்புற்று விளங்குகின்றன. சமய நெறிமுறைகள், அறக் கருத்துக்கள், பழமொழிகள் ஆகியவை இக்காப்பியத்திற்குச் சிறப்பு செய்கின்றன.

கற்பனை நயம்

திருக்கயிலையில் பரமேஸ்வரன், பார்வதியோடு அமர்ந்திருக்கின்றார். அவருடைய இடதுக்கையில் மானும், வலதுக் கையில் மழுவும் காணப் படுகின்றன. இதில் மான் முகத்தைத் திருப்பிக் கொண்டிருக்கிறது. மழு தகதக என்று ஒளிவீசிக் கொண்டிருக்கிறது. இவ்வாறு மான் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டிருப்பது பார்வதியின் கண்ணழகிற்கு நாணித் திருப்பிக் கொண்டு உள்ளது என்றும், மழுவினின்று இயற்கையாக எழும் 'தகும் தகும்' என்ற ஓசை, மான் இப்படி நாணம் கொண்டு திரும்பியிருப்பது தகும், தகும் என்று கூறுவதுபோல் உள்ளது என்றும் குறிப்பிடுவதிலிருந்து சிவப்பிரகாசரின் கற்பனைத் திறனை நாம் அறியலாம்.

''நகந்த ருங்கொடி கண்களை நாணியே
முகந்தி ரும்பு முறையில் திரும்புமான்
மகிழ்ந்தி டங்கதிர் வர மழுவலந்
தகுந்த குந்தகு மென்று தயங்குற''.

அணிநயம்

அணிகள் கவிஞனின் தனித்தன்மையைப் புலப்படுத்துவன ஆகும். கற்பனை நலம்சான்ற கவிஞராகிய சிவப்பிரகாசர், பல இடங்களில் அணிகளை அமைத்துள்ளார்.

மக்கட் பேறின்றி வருந்திய மமகாரனும், மோகினியும் நோன்பிலிருந்து மாயையைப் பெற்றெடுத்தனர். தவமிருந்து பெற்ற மகளை அத்தாய் எவ்வாறு அருமையாக வளர்த்தாள் என்பதை உவமை மூலம் விளக்கியுள்ளார்.

ஒரே ஒரு செய் நிலமுடைய மிக வறியவன் ஒருவன், தன் நிலத்தைக் காப்பதுபோல, ஒப்பில்லாத கல்வியை விரும்பியவன், பாடங்களைப் போற்றுவதுபோல, செங்கோல் நெறிப்படி புரப்பதுபோல, தான் பெற்ற மாயைக் கண்ணும் கருத்துமாகப் போற்றி வளர்த்தாள் மோகினி. இதனை,

மிடியன் ஒருசெய் யாளனச்செய் விளையக் காக்குஞ் செயல்போலப்
படியில் கல்வி விரும்பினோன் பாடம் போற்று மதுபோல
ஒடிவில் செங்கோல் மனுவேந்தன் உலகம் புரக்கும் முறைபோலக்
கொடிய நோன்பு செய்தீன்ற கொடியை வளர்த்தாள் மோகினியே

என்ற பாடல் உணர்த்துகின்றது. பொருட்களின் இயல்பை உள்ளவாறு விளக்குவது தன்மையணியாகும். குழந்தையாகிய மாயையின் செயல் களை தன்மையணி பொருந்தக் கூறியுள்ளார் சிவப்பிரகாசர்.

மாயை விளக்குச் சுடரைக் கண்டு மகிழ்ந்தாள் தன்கால் பெருவிரலை நாவால் சுவைத்தாள், அழகிய சதங்கை அணிந்த கால்களை உதைத்தாள், மலர்வாய் குவித்து அழுதாள், மீண்டும் சிரித்தாள் என இவ்வணியால் குழந்தையின் இயல்பான செயல்களை குறிப்பிட்டுள்ளார். இதனை,

“.......சுடர் பரந்து, மெள்ள விரலொன்றனைச் சுவைத்து
மிளிர்பூஞ் சதங்கைத் தாளுரைத்து விள஌ மலர்வாய்
குவித்தழுது
மீள நகைத்துங் கிடக்குமால்”

என வரும் அடிகள் காட்டுகின்றன.

கதைமாந்தர் படைப்பு

காப்பியத்தில் வரும் பாத்திரங்களைத் திறம்பட அமைத்தல் ஆசிரியரைப் பொறுத்ததேயாகும். இக்காப்பியத்தில் வரும் தலைவனான அல்லமர் பாட்டுடைத் தலைவன் என்னும் பெருமைக்கேற்ப சான்றோனாக படைக்கப்பட்டுள்ளார்.

துணைப் பாத்திரங்களாக முப்பத்திரண்டுபேர் இக்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளனர். மேலும், பெயர் சுட்டப்படாத முனிவர்கள், ஏவனர், வேடன், நாட்டு மக்கள் ஆகியோர் துணைப் பாத்திரங்களாக காப்பியத்திற்கு அழகு சேர்க்கின்றனர்.

சிவப்பிரகாசரின் பிரபுலிங்க லீலை கன்னடத்தை மூலமாகக் கொண்ட தமிழ் காப்பியம். சிற்றிலக்கியக் காலக்கட்டத்தில் தோன்றிய காப்பியம். தமிழ் காப்பியங்களினின்றும் சற்று வேறான அமைப்பைக் கொண்டது. நால்வகை உறுதிப் பொருளில் அறத்தையும், வீடுபேற்றையுமே எடுத்துக் கூறுவது. இந்நூலில் பயின்று வரும் காப்பிய குணங்களே பிரபுலிங்க லீலையை ஒரு காப்பியமாக உறுதி செய்கின்றன. தமிழ்க் காப்பியங்கள் அனைத்தும் சமயம் சார்ந்தவையே. பிரபுலிங்க லீலை வீரசைவ சமயநெறியைச் சார்ந்தது, எனினும் சமயப் பிரச்சார நூல் எனக் குறுகி விடாமல் அனைத்துச் சமயத்தாரும் போற்றும் வகையில் சிறந்த இலக்கியமாக விளங்குகிறது.

அரிய கருத்துக்களை கொண்ட இக்காப்பியம் ஒரு அருள் நூலாக, அறநூலாக, அறிவு நூலாக திகழ்கிறது.

72. சிவப்பிரகாசரின் சிற்றிலக்கிய வகைகள்

ச. பத்மினி, கோவை.

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த பெருங்கவிஞர். தமிழில் அனைத்து வகை இலக்கியங் களையும் படைத்தளித்துள்ள மிகச் சில பெரும்புலவர்களுள் இவர் ஒருவர். இவர் வாழ்ந்த காலம் தமிழ்ப் படைப்பிலக்கிய உலகில் சிற்றிலக்கியங்களும் தலபுராணங்களும் கொடிகட்டிப் பறந்த காலம். அத்துடன் இவர் பிரபந்த வேந்தர் எனப் போற்றப்பெறும் குமரகுருபர சுவாமிகளின் மாணவராகிய வெள்ளியம்பலவாணத் தம்பிரானிடமும் பாடம் கேட்டவர். இந்தத் தாக்கங்களால் சிவப்பிரகாச சுவாமிகளும் பல சிற்றிலக்கியங்களைப் படைத்துள்ளார். அந்தச் சிற்றிலக்கிய வகைகளைக் காண்பதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழ் இலக்கியத்தின் மொத்தப் பரப்பைக் கூர்ந்து நோக்கினால் அதன் மிகப்பெரும் பகுதி சிற்றிலக்கியங்களே என அறியலாம். தமிழில் பிரபந்த வகைகள் 96 எனக் கூறப்படினும் உண்மையில் இன்று ஏறத்தாழ இருநூறு வகையான சிற்றிலக்கியங்கள் காணப்பெறுகின்றன. இது பற்றிய ஆய்விற்குத் துணைசெய்வன பாட்டியல் நூல்கள்.

1. பதிகம்

பதிகம் என்பது பழமையான சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. குறிப்பிட்ட ஒரு பொருளைப் பற்றி ஒரே யாப்பில் பத்துப் பாடல்கள் இயற்றுவது பதிகம் எனப்படும். ''பப்பத்தாய் எத்துறையும் பாடல் பதிகமதே'' (சுவாமி நாதம் - 168). சிவப்பிரகாசரின் நூல்களில்,

அ. இட்டலிங்க அபிடேக மாலை - இட்டலிங்கத்தைத் திருமுழுக் காட்டும்போது கூறுவதற்குரிய பத்துப் பன்னிருசீர் விருத்தங்களாலாகிய நூல்.

ஆ. குறுங்கழிநெடில் - இது இட்டலிங்கத்தைப் போற்றும் பத்து எழுசீர் விருத்தங்களாலாகிய தோத்திரம்.

இ. கைத்தல மாலை - இட்டலிங்கத்தை ஏந்துவதற்கு என் கை என்ன தவம் செய்ததோ என வியக்கும் பத்துக் காப்பியக் கலித்துறைகளாக அமைந்த துதி;

ஈ. சிவநாம மகிமை - சிவசிவ என உச்சரிப்பதால் ஏற்படும் நன்மைகளை உபதேசிக்கின்ற 10 கலிவிருத்தங்களையும், அந்நாமத்தைச் செபிப்பவன் எத்தகையோன் எனினும் அடியார் களால் குலதெய்வமாக மதிக்கப்படுவான் எனக் கூறும் எழுசீர் விருத்தம் ஒன்றையும் கொண்ட நூல்; இதனைத் தோத்திரம், சாத்திரம் ஆகிய இரு வகையிலும் அடக்கலாம்.

உ. நெடுங்கழிநெடில்; இட்டலிங்கத் தோத்திரமாக அமைந்த பத்து 14 சீர் விருத்தங்களாகிய துதிப் பனுவல்;

ஊ. பழமலை பெரியநாயகியம்மை நெடுங்கழிநெடில் ஆசிரிய விருத்தம் - விருத்தாசலத்தில் விளங்கும் பெரியநாயகியம்மையைப் பத்து 14 சீர் விருத்தங்களால் போற்றுகின்ற தோத்திரம்

ஆகிய இந்த ஆறும் பதிகம் என்னும் சிற்றிலக்கிய வகையைச் சேர்ந்த பனுவல்கள் ஆகும்.

2. மாலை

பொருள், இடம், காலம், தொழில் ஆகிய நான்கனுள் ஏதாவது ஒன்றைப் பற்றி 30, 40, 70, 90, 100 வெண்பா அல்லது கட்டளைக் கலித்துறை இயற்றினால் அது மாலை எனப்படும் என்றும், இவை பலவாறு பெயர் பெறும் என்றும் பிரபந்த மரபியல் இலக்கணம் வகுத்துள்ளது. ''கருது பொருள் இடம் காலம் தொழிலின் முப்பான் நாற்பான் எழுபான் தொண்ணூறு நூறான் வெண்பாக் கலித்துறையினாத (ல் மன்னும் அவ்வெ)ண்ணால் மாலை மஞ்சரி காஞ்சி மாலை முல்லைக்கலி சதகம் என்று இயலும் செய்யுட்கேற்ற பெயரே''(16). எனினும் பிற்காலத்தில் ஆசிரிய விருத்தத்தாலும் - குறிப்பாக எழுசீர்க்கழிநெடிலால் - ஏராளமான மாலை இலக்கியங்கள் தோன்றியுள்ளன.

சிவப்பிரகாசரின் படைப்புகளுள் சதமணி மாலை, சோணசைல மாலை, நிரஞ்சன மாலை ஆகிய மூன்றும் மாலைகள் ஆகும். (இட்டலிங்க அபிடேக மாலை, கைத்தல மாலை ஆகிய இரண்டும் மாலை எனப் பெயர் சூட்டப்பெற்று விளங்கினும் பத்துப் பாடல்களால் மாலை இயற்ற இலக்கணம் இன்மையின் அவை பதிகங்களே ஆகும்) மூன்று மாலைகளில் சதமணி மாலை ஆகமப் பொருளை விளக்கும் சாத்திர நூலாதலின் அதனை விடுத்து ஏனைய இரண்டினையும் காண்போம்.

அ. சோணசைலமாலை

திருவண்ணாமலை ஈசனைப் போற்றும் எழுசீர் ஆசிரிய விருத்தங்கள் நூறையும் காப்பு வெண்பா ஒன்றையும் கொண்டது இத்துதி நூல், ''சோணசைலனே கைலை நாயகனே'' என்பது இதன் மகுடம்.

ஆ. நிரஞ்சன மாலை

இட்டலிங்கத்திடம் வேண்டுகோள் விடுப்பதாக 31 கட்டளைக் கலித்துறைகளால் ஆனது இம்மாலை. முதல் செய்யுள் நிரஞ்சன எனத் தொடங்குவதால் நூலின் முதற்சீரால் நூற்பெயர் அமைந்தது.

இ. பழமலை பெரியநாயகி அம்மை கலித்துறை

இப்போது கிடைத்துள்ள அளவில் 19 கட்டளைக் கலித்துறை களைக் கொண்டுள்ளது. பெரியம்மையே என நிறைவு பெறுகிறது. பெரும்பாலும் இது 30 செய்யுட்களாலான ஒரு மாலையாக இருந் திருக்கும். (ஒருவேளை 100 பாடல்கள் கூட இருந்திருக்கலாம்). இப்போதைய வடிவில் இந்தப் பனுவலையும் ஒரு மாலைப் பிரபந்தம் என்றே கொள்ள வேண்டும்.

இவ்வாறாக மாலைவகையில் சாத்திரம் அல்லாத மூன்று நூல்கள் உள்ளன.

3. கலம்பகம்

சிவஞான பாலைய தேசிகர் கலம்பகம், திருவெங்கைக் கலம்பகம் என இரண்டு கலம்பக இலக்கியங்களைச் சிவப்பிரகாசர் இயற்றியுள்ளார். இவ்வகைச் சிற்றிலக்கியத்தின் இலக்கணம் நன்கு விளக்கமானது.

அ. சிவஞான பாலைய தேசிகர் கலம்பகம்

இக்கலம்பகம் முழுமையாகக் கிடைக்கவில்லை. 94 முதல் 100 வரையிலான ஏழு பாடல்கள் இழக்கப்பட்டுவிட்டன. நூலுக்குப் புறமாகக் காப்பு வெண்பா ஒன்றும், வாழி விருத்தம் ஒன்றும் இடம் பெற்றுள்ளன. கிடைத்துள்ள 93 பாடல்களில் மறம் (10), மடக்கு (17), அம்மானை (23), காலம் (26), வண்டுவிடு தூது (33), சிந்து (35), ஊசல் (37), தவம் (41), புயவகுப்பு (42), களி (54), தழை (55), பிச்சியார் (68), பாண் (70), மதங்கு (76), சம்பிரதம் (84), கைக்கிளை மருட்பா (92) எனப் பதினாறு கலம்பக உறுப்புகள் இடம் பெற்றுள்ளன.

ஆ. திருவெங்கைக் கலம்பகம்

காப்பு வெண்பா நூலுக்குப் புறமாக அமைய 100 செய்யுள்கள் உள்ளன. நூல் 'சீர்பூத்த' எனத் தொடங்கி, அந்தாதித் தொடை பெற்று நடந்து, 'ஒழிவுஇல் சீர்' என நிறைவுறுவதால் மண்டலித்த அந்தாதியாகிறது. இந்தக் கலம்பகத்தில் மறம் (57), மடக்கு (7), அம்மானை (9), புய வகுப்பு (23), சம்பிரதம் (29), கைக்கிளை மருட்பா (31) தழை (39) சிந்து (45), ஊசல் (56), களி (63), மதங்கு (79), காலம் (84), பாண் (87), தவம் (89), கொற்றியார் (93) ஆகப் பதினைந்து உறுப்புக்களே உள்ளன. ஆனால் அகத்துறைப் பாடல்கள் நிறைய இடம் பெற்றுள்ளன.

இப்படியாகச் சிவப்பிரகாசரால் இயற்றப்பெற்ற கலம்பக இலக்கியங்கள் இரண்டு ஆகும்.

4. தூது

பாட்டுடைத் தலைவனிடத்துத் தூது அனுப்புவதாகக் கலிவெண் பாவால் பாடப்படுவது தூது எனப்படும். இலக்கண விளக்கப்பாட்டியல், ''பயில்தரும் கலிவெண்பாவினாலே உயர்திணைப் பொருளையும் அஃறிணைப் பொருளையும் சந்தியின் விடுத்தல் முந்துறு தூதெனப் பாட்டியற் புலவர் நாட்டினர் தெளிந்தே'' (114) என்கிறது. தூதாக அனுப்பத் தக்கவை எவை என்பதும் ''எகினம் மயில் சிந்தை எழிலியொடு பூவை சகிகுயில் நெஞ்சு ஆர்தென்றல் வண்டு தொகை பத்தை வேறுவேறாய்ப் பிரித்து வித்தரித்து மாலை கொண்டன்பு ஊறிவா என்றல் தூது'' (பிரபந்தத் திரட்டு - 30) என வரையறுக்கப் பட்டுள்ளன.

சிவப்பிரகாச சுவாமிகள் தம் ஞானாசிரியர்பால் தம் உள்ளத்தைத் தூதாகச் செலுத்தும் சிவஞான பாலைய தேசிகர் நெஞ்சுவிடு தூது என்னும் ஒரு பனுவலை இவ்வகையில் யாத்தளித்துள்ளார். இது காப்பு வெண்பா ஒன்று, நூலாக 255 கண்ணிகளைக் கொண்ட நேரிசைக் கலிவெண்பா ஒன்று, தனி வெண்பா ஒன்று என மூன்று செய்யுள்களால் இயற்றப் பட்டுள்ளது.

5. பிள்ளைத்தமிழ்

இவ்வகை இலக்கியத்தின் இலக்கணம் வெள்ளிடைமலை. கற்பனைக் களஞ்சியம் சுவாமிகள் சிவஞான பாலைய தேசிகர் பிள்ளைத்தமிழை இயற்றியுள்ளார். இந்த ஆண்பாற் பிள்ளைத்தமிழின் காப்புப் பருவத்தில் வீரசைவ மரபிற்கேற்ப அல்லமதேவர், வசவ தேவர், 'மூவர் முதலிகள், மணிவாசகர், சென்ன வசவதேவர் ஆகியோர் காப்புக் கடவுளராக உள்ளனர். இந்த அமைப்பை மகாவித்துவான் பிள்ளையவர்கள் தம் சேக்கிழார் பிள்ளைத்தமிழ்க் காப்புப் பருவத்திற்கு முன்னோடியாகக் கொண்டிருக்கலாம்.

காப்பாக ஒரு வெண்டுறை, நூலில் பத்துப் பருவத்திற்கு 101 பாடல் (வருகைப் பருவத்தில் 11 பாடல்கள்) என மொத்தம் 102 செய்யுள்கள் இதன்கண் உள.

6. அந்தாதி

அ. நிரோட்டக யமக அந்தாதி

முதல் செய்யுளின் ஈற்றடியின் அடி, சீர், அசை, எழுத்து ஏதாவது ஒன்று அடுத்த செய்யுளின் தொடக்கமாக அமைவது அந்தாதி

எனப்படும். அந்தத்தை ஆதியாக உடையது அந்தாதி. இதில் பல வகைகள் உள்ளன. சிவப்பிரகாசர் இருவகைகளில் இலக்கியம் படைத் துள்ளார். உதடு ஒட்டாத எழுத்துக்களை மட்டும் கொண்டு பாடப்படுவது நிரோட்டகம் (நிர் ஓஷ்டகம்) எனப்படும். செய்யுள் அடிகளின் தொடக்கத்தில் மடக்கணி அமைவது யமகம் எனப்படும். திருச்செந்தூரில் பாடப்பெற்ற அந்தாதி மேற்கண்ட இருவகைத் தன்மைகளையும் கொண்டிருப் பதால் அது திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதி என வழங்கப் படுகிறது. இது 30 கட்டளைக் கலித்துறைகளால் ஆனது. காப்பாக ஒரு திரிபுக் கட்டளை கலித்துறை பாடப்பட்டுள்ளது.

சின்னையன் என்னும் புலவர் ஒருவர் இதனோடு 65 நிரோட்டக யமகத்தை இயற்றிச் சேர்த்து நூற்றந்தாதி ஆக்கியுள்ளார். நூல் சுவடி யாகவே உள்ளது. அச்சாகவில்லை. இச்செய்தி,

''தென்னையன் மாற்கரி யான்றே சிகன்எனும் செந்திலற்குச்
சொன்னையன் தேறும் சிவப்பிரகாசன் தொடர்நிலைப்பா
தன்னையன் பாகநி ரோட்டத்தைந் தேழ்செய்யுட் டானுரைத்தான்
சின்னையன் முன்னவன் தாள்போற்றி மற்றதும் செப்பினனே''

என்னும் தனிப்பாடலால் தெரிய வருகிறது.

இப்பாடலால் மேலும் பல சிந்தனைகள் கிளர்ந்து எழுகின்றன. நிரோட்டக யமக அந்தாதியாக நமக்குக் கிடைப்பவை 30 பாடல்களே. அந்நூல் 'யானைக் கண் தங்கு' எனத் தொடங்கி 'கன்றல் நெஞ்சே' என முடிகிறது. இதில் மண்டல அமைப்பு இல்லை. 17-ஆம் நூற்றாண்டில் தோன்றிய மிகமிகப் பெரும்பாலான அந்தாதிகள் மண்டலித்தனவே; எனவே இது குறை நூலாகலாம் என்ற ஐயம் தோன்றுகிறது. மேற்கண்ட தனிப்பாடல் சிவப்பிரகாசரால் இயற்றப்பெற்றவை 35 பாடல்கள் (ஐந்தேழ் செய்யுள்) என்கிறது. இது மிக வலுவான பழைய சான்று ஆகும். எனவே சிவப்பிரகாசருடைய 5 நிரோட்டக யகமப் பாடல்கள் இன்னமும் வெளிச்சத்திற்கு வராமல் சுவடிகளில் முடங்கியுள்ளன எனத் திண்ணமாக நம்பலாம்.

ஆ. திரிபந்தாதி

ஒரு செய்யுளின் தொடக்கத்தில் நான்கு அடிகளிலும் முதலெழுத்து நீங்கத் தொடரும் நான்கைந்து எழுத்துக்கள் ஒன்றாகவே வருவது திரிபு என்னும் சொல்லணி ஆகும். இத்தகைய திரிபுக்கவிகள் அந்தாதியாக அமைவது திரிபந்தாதி எனப்படும். சிவப்பிரகாசரின் பிரபந்தங்களுள் பழமலை அந்தாதி என்னும் ஒன்று இத்தகையது ஆகும். காப்புச் செய்யுளும் திரிபுக் கட்டளைக் கலித்துறையாகவே உள்ளது. நூல் 'திருவரும்' எனத் தொடங்கி 'திருவடியே' என முற்றுப்பெறும் மண்டலித்த

கட்டளைக் கலித்துறை அந்தாதி ஆகும். இதில் தோத்திரப் பாடல் களோடு பல அகத்துறைச் செய்யுள்களும் இடம் பெற்றுள்ளன.

அந்தாதித் தொடையையே முதன்மையாகக் கொண்ட சிற்றிலக்கிய வகையில் சித்திரத்தன்மையும் சேர்ந்துள்ள இரண்டு விதமான பிரபந்தங் களைச் சிவப்பிரகாசர் இயற்றியுள்ளார்.

7. உலா

பாட்டுடைத் தலைவன் வீதியில் உலா வந்தபோது அவனைக் கண்டு பேதை முதலிய ஏழு பருவப்பெண்களும் காதல் கொண்டதாகக் கலிவெண்பாவால் பாடுவது உலா ஆகும். உலாப்புறம் எனவும் வழங்கப்படும் இச்சிற்றிலக்கியத்தில் பாட்டுடைத் தலைவனுக்குரிய தசாங்கங்கள் இடம்பெற வேண்டும் என்பது சிறப்பு விதி ''பேதை முதல் ஏழ்பருவப்பெண்கள் மயக்கம் உற ஓதும் மறு குற்றான்ஒள் வேலோன்என் - றேதம் அறக்கலி வெண்பாவில் மாட்டல் உலாவாம்; புறம்தசாங்கம் தாங்கிப் போற்று'' என்பது பிரபந்தத் திரட்டு (31)

இவ்வகையில் சிவப்பிரகாசரால் இயற்றப் பெற்றுள்ளது திருவெங்கை உலா ஆகும். வெங்கனூரில் கோயில்கொண்டுள்ள பழமலைநாதரைப் போற்றும் தோத்திரப் பிரபந்தம் இது. காப்பு வெண்பா ஒன்றும், ஈற்று வெண்பா ஒன்றும் நூலுக்குப் புறமாக உள்ளன. உலா 419 கண்ணி களைக் கொண்ட நேரிசைக் கலிவெண்பாவால் இயற்றப்பெற்றுள்ளது.

8. அகப்பொருட் கோவை

அகப்பொருட்டுறைகளுக்கு இலக்கியமாக ஒரு வரலாற்றுமுறை அமைய நானூற்றுக்கு மேற்பட்ட கட்டளைக் கலித்துறைகள் கோக்கப் படுவது கோவை ஆகும். இது ஐந்திணைக் கோவை எனவும் பெயர் பெறும்.

''கோவை என்பது கூறும் காலை மேவிய களவு கற்பெறும் கிளவி ஐந்திணைதிரியா அகப்பொருள் தழீஇ முந்திய கலித்துறை நானூறென்ப'' (பன்னிரு பாட்டியல் - 137)

சிவப்பிரகாசர் வெங்கனூர்ப் பழமலைநாதர்மீது பாடியுள்ள திருவெங்கைக் கோவை இத்தகையது. காப்பாகக் கட்டளைக் கலித்துறை ஒன்று, நூலாக 425 காரிகைகள் இதில் இடம்பெற்றுள்ளன.

9. நான்மணிமாலை

வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், அகவல் ஆகியன வரிசையாக அந்தாதித்து 40 பாடல்களால் நிறைவேறுவது நான்மணிமாலை ஆகும். ''வெண்பாக் கலித்துறை விருத்தம் அகவல் பின்பேசும் அந்தாதியின் நாற்பதுபெறின் நான்மணிமாலையாம் என

நவில்வர்''. (இலக்கண விளக்கம் - 821) விருத்தமும் ஆசிரியப்பாவும் இடம் மாறி அமையும் நான்மணிமாலைகளும் உள. அதற்கு இலக்கணம் ''வெண்பாக் கலித்துறை அகவல் விருத்தம் நண்பாய் வருவது நான்மணி மாலை'' (பன்னிரு பாட்டியல் - 69) என்பது ஆகும்.

சிவப்பிரகாசரால் இயற்றப்பெற்றுள்ளது மிகப் புகழ்பெற்ற நால்வர் நான்மணிமாலை ஆகும். இது இலக்கண விளக்க நெறியைப் பின்பற்றியது. நூலுக்குப் புறமாகக் குறள் வெண்பா ஒன்றும் காப்பாக இடம் பெற்றுள்ளது.

10. நவமணிமாலை

இது அரியதோர் பிரபந்த வகை. அதிகமான இலக்கியங்கள் இவ்வகையில் தோன்றவில்லை. பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், பிரபந்த மரபியல், சிதம்பரப் பாட்டியல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், பிரபந்த தீபம் ஆகிய ஒன்பது நூல்களில் இது குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இதைப் பற்றிய ஒருமித்த கருத்து இல்லை. பொதுவாக ஒன்பது வகையான அல்லது ஒரே வகையில் 9 பாக்கள் அந்தாதியாகவோ அல்லாமலோ அமைவது நவமணிமாலை எனலாம்.

சிவப்பிரகாசரின் பிட்சாடன நவமணிமாலை 9 கட்டளைக் கலித்துறைகளால் அமைந்துள்ளது. இது இப்போது கிடைக்கும் நவமணி மாலைகளை எல்லம் திரட்டி விரிவாக ஆராயப் படவேண்டியதோர் சிற்றிலக்கிய வகை ஆகும்.

இதுகாறும் நோக்கியவற்றால் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் சாத்திரம் அல்லாத 10 வகையான சிற்றிலக்கியங்களை இயற்றியுள்ளார் எனவும், அவ்வாறு அமைந்தவை மொத்தம் 19 நூல்கள் எனவும் அறிகிறோம்.

'அவையாவன: பதிகம் (6), மாலை (3), கலம்பகம் (2), தூது (1), பிள்ளைத்தமிழ் (1), அந்தாதி (2) (நிரோட்டக யமகம் (1), திரிபு (1)) உலா (1) அகப்பொருட் கோவை (1) நான்மணிமாலை (1), நவமணிமாலை (1).

இவற்றால் 17-ஆம் நூற்றாண்டில் தமிழ் இலக்கிய உலகில் சிற்றிலக்கியங்கள் பெற்றிருந்த பெருஞ் செல்வாக்கு தெளிவாக விளங்குகிறது.

73. சிவப்பிரகாசரின் நன்னெறி

சு. பாலுசாமி, நாமக்கல்.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்த வான்புகழ் கொண்ட தமிழ்நாட்டில், வள்ளுவரின் குறளென்னும் கோட்டை வாயிலைத் தொட்டுச் சென்ற ஒரு பேரறிஞர் சிவப்பிரகாசர். இவர் சைவ சமயத் திற்காகத் தன்னை அர்ப்பணிக்காது இருந்திருந்தால் மற்றும் ஒரு மாபெரும் திருக்குறளை நாம் பெற்றிருப்போம். சிற்றிலக்கியங்கள் சீர்மிகு வளர்ச்சியடைந்த காலகட்டத்தில் சிற்றிலக்கியம், தலபுராணம், காப்பியம், பக்தி இலக்கியம், நீதி இலக்கியம் எனப் பலதுறை இலக்கியங் களையும் படைத்துப் புகழ் பெற்றவர் சிவப்பிரகாசர்.

சிவப்பிரகாசரின் படைப்புகளில் கற்பனையும், சொல்லாட்சியும் கரைபுரண்டோடுகின்றன. மேலும், அனைத்திலும் சைவ சமயப்பற்றே மேலோங்கியிருக்கின்றது. இருந்தாலும், இறைவனை மட்டும் சிந்தித்துப் பாடக்கூடிய ஆன்மீகவாதிகளில் இறைவனோடு சமுதாயத்தையும் சேர்த்துச் சிந்தித்துப் பாடக்கூடிய ஒரு மனப்பாங்கு சிவப்பிரகாச சுவாமிகளிடம் இருந்ததை அறிய முடிகின்றது. அந்த நோக்கில் இவர் படைத்த இலக்கியம் தான் நன்னெறி. மொத்தம் 40 பாடல்களைக் கொண்ட இந்நூலை ஒரு ''சின்னத் திருக்குறள்'' என்றே சொல்லலாம். ஒவ்வொரு நெறிக்கும் மிக அழகான இயல்பான உவமைகளைச் சொல்லி விளக்கியிருக்கின்றார். இத்தகைய நன்னெறியில் சிவப்பிரகாசர் சமுதாயத்திற்கு கூறியுள்ள நீதிகளைப் பற்றி இக்கட்டுரை ஆராய்கின்றது.

1. கல்வி

கல்விச் செல்வத்தைப் பல்வேறு நிலைகளில் போற்றிப் புகழ்ந்து பாடியுள்ள தமிழறிஞர்களில் சிவப்பிரகாசர் ஒரு படி மேலே உயர்ந்து நிற்கின்றார். கல்வியைப் பற்றி இவர் கூறும்போது, உடலில் உள்ள பல்வேறு உறுப்புகளும் விலைமதிப்பில்லாத அணிகலன்களை அணிந்திருந் தாலும், எந்த அணிகலனையும் அணியாத கண்ணே உயர்ந்தது என்பதை,

''பொன் அணியும் வேந்தர் புனையாப் பெரும்கல்வி
மன்னும் அறிஞரைத்தாம் மற்று ஒவ்வார்'' (நன்னெறி-40)

என்று உவமைகூறிப் பொருட்செல்வத்தை உடைய அரசர்களைவிடக் கல்விச் செல்வத்தை உடைய அறிஞர்களே உயர்ந்தவர்கள் என்று

சிறப்பிக்கின்றார். மேலும், கல்வியில் சிறந்து விளங்கக் கூடியவர்களின் பண்புகளைச் சுட்டும்போது கல்வியில் சிறந்தவர் நல்லவர் வருகையால் இன்பமும், தீயவர் வருகையால் துன்பமும் அடைவர் (நன்னெறி-19) என்றும்; கல்வி கற்றவர் கல்லாதவருடன் சேர்ந்தால் பெருமையை இழப்பர் என்றும் கூறுகிறார்.

தான் கற்ற கல்வியால் ஒருவன் செருக்கடைதல் கூடாது என்பதற்கும் நீதி கூறுகிறார் சிவப்பிரகாசர். அதில் கல்வி கற்றவர் என்பவர் அக்கல்வியின் காரணமாகச் செருக்கடையக் கூடாது. அவ்வாறு செருக்கடைந்தால் அவரைவிட வல்லவரால் வெல்லப்படுவார் (நனனெறி-7) என்றும்; முறையாக இலக்கண அறிவோடு கல்வி கல்லாதவர்கள் பெருமையில்லாமல் போய்விடுவர் (நன்னெறி-21) என்றும்; கல்வி கற்ற ஒருவருடைய உடம்பின் சிறுமையைக் கருதி அவர்தம் கல்வியாகிய கடலை எவராலும் வெல்ல முடியாது (நன்னெறி-26) என்றும் விளக்குகின்றார். இவ்வாறு கல்வியின் சிறப்பிற்கும், அதைக் கற்றவர் பண்பிற்கும் நெறி கூறுகின்றார் சிவப்பிரகாசர்.

2. அறம்

அறம் செய்தலைப் பற்றிக் கூறும்பொழுது, ஒருவன் தன்னைக் கூற்றுவன் வந்து கொல்வதற்கு முன்னால் அவன் அறங்களைச் செய்து நல்ல நிலையிலேயே இறக்க வேண்டும் (நன்னெறி-30) என்கிறார். மேலும், அறம் செய்வதிலும் எவ்வகை அறங்களைச் செய்யலாம், எவ்வகை அறங்களைச் செய்யக்கூடாது என்ற அறிவில்லாதவர்கள் செய்யும் அறங்கள் பயனளிக்காது (நன்னெறி-32) என்றும் விளக்குகிறார்.

3. செல்வம்

செல்வம் உடைய ஒருவர் பிறர்க்கு உதவ வேண்டும். அவ்வாறு உதவாவிட்டால், பிறர்க்கு உதவி செய்யும் குணமுடைய ஒருவர் அவருடைய செல்வத்தை எடுத்துப் பிறர்க்கு வழங்கிடுவார் (நன்னெறி-4) என்கின்றார். பெருஞ்செல்வமுடைய ஒருவன் அச்செல்வத்தால் செருக்கடைதல் கூடாது அவ்வாறு செருக்கடைந்தால் அவருடைய செல்வம் அழிந்து போகும் (நன்னெறி-14) என்றும் செல்வமுடையவர்க்கு நெறி கூறுகிறார்.

4. ஈகை

ஈதல் என்ற நிலை ஒரு மனிதனிடம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைக் கூறும்போது, ஒருவன் தன் தந்தை பிறர்க்கு ஈன்றதால் பொருளில்லாமல் அழிந்து விட்டால் கூட, அவனும் அவ்வழியிலே சென்று வாழையடி வாழையாகப் பிறர்க்கு ஈதல் வேண்டும் என்கிறார். இதனை,

''நின்று பயன்உதவி நில்லா அரம்பையின்கீழ்க்
கன்றும் உதவும் கனி'' (நன்னெறி-17)

என்ற உவமையால் அறியலாம். மேலும், அறிவுடைய ஒருவன் எக்காலத்திலும் பிறர்க்கு ஈதல் வேண்டும் என்றும் ஈகையைப் பற்றி எடுத்துரைக்கிறார் சிவப்பிரகாசர்.

5. வாய்மை

வாய்மைக்கு வாக்களிக்கும் சிவப்பிரகாசர் நல்லவர்கள் சொல்லுகின்ற வன்மையான சொற்களும் ஒருவருக்கு நன்மையையே அளிக்கும் என்றும், ஆனால் தீயவர்கள் கூறுகின்ற நன்மையான சொற்கள் கூட ஒருவருக்குத் தீமையையே அளிக்கும் (நன்னெறி-2) என்றும் சுட்டுகின்றார். இதே கருத்தை, ஒருவர் பேசுகின்ற இன்சொல்லால் உலகம் மகிழ்ச்சியும், வன்சொல்லால் துன்பமும் அடையும் (நன்னெறி-18) என்று கூறி, அனைவரும் நன்மையான சொற்களையே பேசவேண்டும் என்று வலியுறுத்துகின்றார்.

6. நட்பு

நட்பிற்கு இலக்கணம் கூறும் சிவப்பிரகாசர், உறுதியான நல்ல நட்பினை உடையவர்கள் இடையிலே ஏற்பட்ட பகைமையினால் பிரியாமல் கூடியே வாழவேண்டும் (நன்னெறி-5) என்கிறார். மேலும், நல்லவருடைய நட்பு என்பது நாளும் வளர்ந்து இனிமையைத் தரக்கூடியது என்றும், தீயோர் நட்பு என்பது நாளும் தேய்ந்து துன்பம் தரக்கூடியது (நன்னெறி-38) என்றும் கூறுகிறார். இதேபோன்று, கல்லாதவருடைய நட்பும் தீமையைத் தரும் என்கிறார்.

7. அறிவுடைமை

அறிவுடையவர் எதற்கும் அஞ்சமாட்டார் என்ற நோக்கில் அறிவுடைமைக்கு விதிசெய்யும் சிவப்பிரகாசர் அறிவுடையவர் என்பவர் சூறாவளிக் காற்றினால் அசைக்க முடியாத கல்தூணைப் போல, ஐம்புலன்களால் ஏற்படும் துன்பத்திற்கு ஆளாக மாட்டார்கள் (நன்னெறி-11) என்று கூறுகிறார். சாதியை ஒழிப்பதற்கு அறிவுடைமை மூலம் வழி கூறும் சிவப்பிரகாசர் ஒருவருடைய சாதியைக் கருதாமல் அறிவினைக் கருதியே அவரை உயர்ந்தவர் என்றும், தாழ்ந்தவர் என்றும் மதித்தல் வேண்டும் என விளக்குகிறார். இதனை,

''ஆக்கும் அறிவான் அலது பிறப்பினான்
மீக்கொள் உயர்வுஇழிவு வேண்டற்க'' (நன்னெறி-22)

என்ற அவரது வரிகள் வாயிலாக அறியலாம்.

8. சான்றோர் செயல்

சான்றோர் செயல்களைப் பற்றிப் பலவிடங்களில் சுட்டும் சிவப்பிரகாசர், உடம்பிலுள்ள எந்த உறுப்பும் துன்பத்தினால் வருந்தினாலும் அதற்காகக் கண்ணீர் சிந்துகின்ற கண்களைப் போல, சான்றோர்கள் பிறருடைய துன்பம் கண்டு வருந்தி மனமிரங்குவர் என்பதை,

''பெரியவர்தம் நோய்போல் பிறர்நோய்கண்டு உள்ளம்
எரியின் இருதுஆவர் என்க'' (நன்னெறி-20)

என்று பாடுகின்றார். சான்றோர் என்பவர் பிறர் இகழாமல் இருப்பதற் காகத் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள மாட்டார்கள் (நன்னெறி-33) என்று கூறும் சிவப்பிரகாசர், அதே சமயம் சான்றோர்கள் தங்களுக்கு ஏற்படக்கூடிய பழிபாவங்களுக்கு அஞ்சுவர் (நன்னெறி-34) என்ற முரணையும் வைக்கின்றார்.

பிறர்க்கு உதவி செய்கின்ற மனப்பாங்கைக் கூறும்போது சான்றோர் என்பவர் தன்னைவிடச் சிறியவர்களுக்கும் உதவிபுரிவர் என்றும்; அதே சமயம், உதவி செய்வதிலும் தகுதி உடையவர்க்கே உதவி செய்வர் என்றும் விளக்குகின்றார்.

9. தன்னலமற்ற தன்மை

தன்னலமற்ற சமுதாய நோக்கோடு ஒரு மனிதன் வாழவேண்டும் என்பதற்கு ஒருவர் கைம்மாறு கருதாது தன் உடலை வருத்தியும் பிறர்க்கு உதவ வேண்டும் (நன்னெறி-10) என்று நெறி கூறுகின்றார். உடம்பிலுள்ள கையானது எவ்வாறு பல நிலைகளிலும் உடலுறுப்புகளைக் காக்கின்றதோ, அதைப்போலப் பிறருடைய துன்பம் கண்டு விரைந்து போக்குதல் வேண்டும் (நன்னெறி-31) என்றும் சுட்டுகின்றார். மேலும், கைம்மாறு கருதாமல் உதவி செய்வது கற்றவர் கடமை என்றும் வலியுறுத்துகின்றார்.

10. தனிமனிதப் பண்பு

ஒரு மனிதனுடைய தனிச்சிறந்த பண்பிலே மிக முக்கியமானது என்பதைக் குறிப்பிடும்பொழுது, கோபத்தை அடக்குவதே ஒருவனுக்குப் பெருமையை உண்டுபண்ணும் சிறந்த குணம் ஆகும் என்பதை,

''உள்ளம் கவர்ந்துஎழுந்து ஓங்கும் சினம்காத்துக்
கொள்ளும் குணமே குணம்என்க'' (நன்னெறி-8)

என்று நிறுவுகின்றார்.

11. இல்வாழ்க்கை

இல்வாழ்க்கை என்பது முகத்திலுள்ள இரு கண்களைப் போன்றது என்று உவமை கூறும் சிவப்பிரகாசர், அதைப்போல கணவன் மனைவி

இருவரும் ஒருமித்த கருத்தோடு செய்கின்ற காரியமே ஒழுங்காக நிறைவேறும் என்பதை,

''காதல் மனையாளும் காதலனும் மாறுஇன்றித்
தீதுஇல் ஒருகருமம் செய்பவே'' (நன்னெறி-6)

என்ற வரிகளின் மூலம் விளக்குகிறார்.

இவ்வாறு கல்வி, அறம், ஈகை, வாய்மை முதலான ஒரு மனிதனின் அனைத்து நிலைகளையும் நாற்பது பாடல்களில் நெறிப்படுத்திக் கூறியுள்ள சிவப்பிரகாசரின் நீதிநூலான நன்னெறியானது ஒரு சிறந்த மனிதனையும், சிறந்த சமுதாயத்தையும் உருவாக்கக்கூடிய சிறந்த நீதிநூல் என்பதில் ஐயம் எதுவுமில்லை.

74. பிரபுலிங்க லீலையில் ஞானமும், நன்னெறிகளும்

பிரபாகரன், மீஞ்சூர்.

கற்பனைக் களஞ்சியமாகிய சிவத்தமிழ்ச் செல்வர் சிவப்பிரகாச அடிகளார் வகுத்த காவியம் பிரபுலிங்க லீலை ஆகும். பிரபுவாகிய அல்லம தேவரின் வரலாற்றைக் கூறுவதே இந்நூலின் உள்ளுறைப் பொருளாகும். வீர சைவ மாண்பை விளக்கவும், வளர்க்கவும் இந்நூல் அடிகளால் அருளப்பட்டது. கருத்தாழமும், கற்பனை வளமும், ஒன்பான் சுவைகளும், பொது மற்றும் சிறப்பு அறங்களும், உவமை, அணி முதலிய இலக்கிய நயங்களும் இந்நூலில் செறிந்து விளங்குகின்றன. அடிகளாரின் தூய தவ வாழ்வும், இறை ஞான அனுபவங்களும், வீர சைவத் தெளிவும் இக்காவியமாக மலர்ந்திருக்கின்றன.

இருபத்தைந்து தத்துவங்களையும் கடந்து நின்ற சிவபரம்பொருளின் அவதாரமான அல்லமர் கதையை இருபத்தைந்து கதிகளில் அடிகள் வகுத்தளித்துள்ளார். பிறந்த பயனைப் பெற அல்லமரின் அமர லீலைகள் உதவ வல்லன. அல்லமர் திருவிளையாடல்கள் மயக்கமாகிய சேற்றைக் கடக்க உதவும் ஊன்று கோலாகவும், பெருகும் அன்பெனும் வாழ்க்கைச் சித்திரம் தீட்ட எழுதுகோலாகவும், அங்க லிங்கங்களால் ஆன உலகிலே அளவுகோலாகவும், தூய அறிவாகிய விளக்கின் தூண்டுகோலாகவும் அமைந்துள்ளன.

இக்காவியத்தில் நிராங்காரன் (ஆணவமின்மை) என்ற தந்தைக்கும் சுஞ்ஞானி (நல்ல ஞானம்) என்ற தாய்க்கும் சிவபெருமானின் அவதார மாகிய அல்லம தேவர் பிறப்பதாகச் சித்திரிக்கப்படுகிறார். இதே போன்று மமகாரன் (தனது எனும் மயக்கம்) என்ற தந்தைக்கும், மோகினி (கவர்ச்சி) என்ற தாய்க்கும் மாயை என்ற தமோ குண வடிவான சக்தி பிறப்பதாகக் காட்டப்படுகிறாள். மமகாரனின் குருவாக ஆங்காரன் (ஆணவம்) குறிக்கப்படுகிறார்.

மாயை அல்லமரை வசப்படுத்த இயலாமல் தோற்றுத் திரும்பிய பிறகு சிவபெருமானின் அறிவுரைப்படி உமையம்மையால் மண்ணுலகுக்கு அனுப்பப்படும் சத்துவ குண வடிவான சக்தி அக்கமாதேவி ஆவார். அவர் நிருமலன் (தூய்மை) என்ற தந்தைக்கும், சுமதி (நல்லறிவு) என்ற தாய்க்கும் பிறப்பதாகக் காட்டப்படுகிறார். அவர் நல்லொழுக்கம், தவம், பணிவு மேற்கொண்டு அனைத்து உயிர்களின் இதயக் குகைகளில்

விளங்கும் குருகுகேசராம் அல்லமரை நினைந்து வணங்கி ஞானத் தெளிவடைகிறார்.

நந்திதேவர் மாதரசன் என்ற தந்தைக்கும், மாதாம்பிகை என்ற தாய்க்கும் மகனாக வசவராகப் பிறக்கிறார். சிவபெருமான் வசவர் பிறந்த உடனேயே அவரது நெற்றியில் திருநீறு பூசி, இட்டலிங்கம் கட்டி ஆட்கொள்கிறார். வளர்ந்து சிவபக்தியில் மேலோங்கிய வசவண்ணர் தொண்டர் பணியிலும் முன்நின்றார். அன்பர் பலரோடு வந்தாலும், தனித்து வந்தாலும, மிக்க நலத்தோடு வந்தாலும் உடல் நலம் கெட்டு வந்தாலும் அவரை எதிர்சென்று வரவேற்று, பூமியில் பணிந்து வணங்கி, அஞ்சி நின்று, குலம் மற்றும் ஆண், பெண் பாகுபாடுகள் பாராமல் சிவனாகக் கருதி வசவர் வழிபட்டார். இல்லறத்தார், துறவறத்தார், பூஜிப்போர், விரதிகள், சிவ சரணர்கள் அனைவர்க்கும் வசவர் தொண்டு செய்தார்.

எள்ளில் எண்ணெயைப் போலவும், விறகில் நெருப்பைப் போலவும், மலரில் மணத்தைப் போலவும் இறைவன் எங்கும் பரவி நிறைந்திருப்பினும், அன்பர்கள் மனத்தில் மிகவும் சிறப்பாகக் காட்சி அளிப்பான். அவன் அன்பினால், அன்பர்களால் பெறுதற்கு எளியவன். தொண்டு அன்பின் வழி நின்று மன மாசு தீர்ந்த பெரும் தூயோர்க்கு அல்லால் அவன் மற்றவர்க்கு வசப்படமாட்டாமையை இந்நூல் விளக்குகிறது. நித்திய குரவனை அறிய, சத்துவ கலை மடந்தையால் மட்டுமே இயலும் என்பதையும் அறிவுறுத்துகிறது இந்நூல். ''ஒப்பரும் பக்தி என்னும் அஞ்சனம் ஒன்று உண்டாயின் செப்பரும் ஞானாஞந்த அல்லம தேவன் என்னும் வைப்பினை எளிதில் காணலாம்'' என்னும் நந்தி தேவரின் நம்பிக்கை மெய்யாதலையும், மாயையின் முயற்சிகள் யாவும் தோற்றுப் பொய்யாதலையும் இந்நூல் அழகாக விளக்குகிறது.

வழிபாட்டின் மகத்துவம்

விமலை மாயைக்கு நல்லறிவுரை கூறும்பொழுது இறைவழிப்பாட்டின் சிறப்புகளை விளக்கியுள்ளார். இந்திரன், தேவர்கள், நான்முகன், திருமால், அலைமகள், கலைமகள், மலைமகள் மற்றும் முனிவர்கள் அவர்தம் துணைவியர் ஆக யாவரும் மண்ணிலே சிவபெருமானை விதிப்படி அருச்சித்து பயன்பெற்ற ஆலயங்கள் பல இருப்பதை நினைவுறுத்திய அவர் விருப்புற்றோர்க்கு சித்தியும், ஆயுளும், சிறப்பும் கிடைக்கும் என்றும், விருப்பு, வெறுப்பற்றோர்க்கு முக்தியும் கிடைக்கு மென்றும் வலியுறுத்தியுள்ளார். தூய அன்பு இதயத்தில் இல்லையேல் பண்ணிய பூசனை பயன் தராததையும், சிவ வழிபாடு குருவின் ஆணைப்படி நன்கு தெளிந்து நிகழ்த்தப்பட வேண்டும் என்பதையும் கூறியுள்ளார்.

நன்னெறிகள்

விருந்தினர்க்குக் கொடாமல் தான் உணவருந்துதல், பந்தியில் அமர்ந்தும் தான் சிறப்பு உணவு உண்ணுதல், தாய் தந்தைக்குக் கொடுக்காமல் உணவு உண்ணுதல், உச்சிப் போதில் பசியால் நொந்தவர் பற்றி எண்ணாமல் தான் உணவு உண்ணல், பெரியவர்களால் விலக்கப் பட்ட உணவை உட்கொள்ளல், இறைவன் வழிபாடின்றி உணவு அருந்துதல் ஆகிய அனைத்தும் தீமையே விளைவிக்கும். கன்று குடிக்க விடாமல் பால் கறத்தல், செய்ந்நன்றி பாராட்டாமை, நடுநிலை தவறுதல், பிற உயிரைப் பதைபதைக்கக் கொல்லும் கொடுமை, போர்க்களத்தில் கட்சி மாறும் கயமை, அடைக்கலம் புகுந்தோரைக் காப்பாற்றாமை, தருகிறேன் என உரைத்தப்பின் தராத புன்மை, கொடை விலக்கும் மடமை, பாவச் செயல்களுக்கு உதவி செய்தல், நட்புப்போல் நடித்து வஞ்சித்தல், குருவின் ஆணையை மீறல், துறவோரை வரவேற்றுப் போற்றாமை, புதியவராக இரவு வந்த நல்லவர்களுக்குத் தங்க இடம் கொடாமை, புறங்கூறுதல், தனது சுற்றம் வறுமையில் தளரவும் தான் வாழுதல், பிறர் பொருள் கவர்தல், கடின வேலை வாங்கித் தக்க கூலி கொடாமை, விற்கத் தகாதவற்றை விற்றல், சொற்பொருள் உணர்த்திய நல்லாசிரியரை வணங்க நாணுதல், சினந்து, ஒழுங்கு தவறிய கொடுஞ்சொல் உரைத்தல், பிறர் பிழையே நாடி பிறரோடு பேசுதல், நன்நட்புப் பிரித்தல், தளர்ந்தவரிடத்தில் அதிக சினங் கொள்ளல், பிறர் பொருளால் அறஞ் செய்தல், நட்புக் காலத்தில் அறிந்த மறைபொருளை பகைப்பொழுதில் வெளியிடுதல், நல்ல வயல், ஆறு, சோலை, ஆலயத்தில் அசுத்தப் படுத்துதல், தகுதியற்றோர்க்குப் பெண் கொடுத்தல், பாவச் செயல் புரிதல், தவத்தோரை இகழ்தல், ஏமாற்றி வாணிகம் செய்தல் ஆகிய பலவற்றின் தீமைகளை அக்கமாதேவி துறவு கதியில் அரசன் உரைத்த சபதத்தின் வாயிலாக அடிகளார் விளக்கியுள்ளார்.

விளவல நாட்டில் பொறுமையால் புகழை நிலைநிறுத்தியும், இன்சொற்களால், விருந்தோம்பலில் தலைசிறந்தும், அறச்செய்கைகளால் செல்வத்தைத் தக்க வைத்தும், குருவின் நன்மொழிகளால் வாழ்வை வசப்படுத்தியும் வாழ்ந்ததை அடிகள் நயமுற வருணித்துள்ளார்.

படைப்பின் விளக்கம்

சிவலிங்கம்

சதாசிவம் + ஞான சக்தி
↓ ↓
சிவன் + இச்சா சக்தி
↓ ↓
உருத்திரன் + கிரியா சக்தி
↓ ↓
திருமால் + திருமகள்
↓ ↓
நான்முகன் + கலைமகள்

ஐந்தொழில் நடத்தி அலகிலா விளையாடல் புரியும் குரு குகேசனாம் இறைவனின் ஆணைப்படி நான்முகன் படைப்புத் தொழில் ஒன்றையும், திருமால் படைத்தல், காத்தல் ஆகிய இரு தொழில் களையும், உருத்திரன் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில் களையும் முறைப்படி ஆற்றி வருகின்றனர்.

அங்கம் – 6

1. பக்தன்	2. மாகேஸன்	3. பிரசாதி
4. பிராணலிங்கி	5. சரணன்	6. ஐக்கியன்

இலிங்கம் – 6

			பொறி		நுகர்ச்சி
1.	ஆசர்ரலிங்கம்	-	நாசி	-	மணம்
2.	குருலிங்கம்	-	நா	-	சுவை
3.	சிவலிங்கம்	-	விழி	-	வடிவம்
4.	சங்கமலிங்கம்	-	உடல் (தோல்)	-	தொடு உணர்ச்சி
5.	பிரசாதலிங்கம்	-	செவி	-	ஒலி
6.	மஹாலிங்கம்	-	உள்ளம்	-	நினைவு

தூய தவநிலை

(அல்லம தேவனின் தாய் தந்தையர் செய்த எல்லையற்ற தவம்)

வாயு நிற்ப மணம் நின்று மனம்தான் நிற்ப பொறிநின்று
பாய பொறிகள் நிற்பஇடர் படுபுண் புலன்கள் நின்றனவால்
ஆய புலன்கள் நின்றமையால் அகிலம் தோன்றா துள்ளத்தே
தூய பரமா னந்த பரஞ் சோதி தோன்றக் கண்டிருந்தார்.

பேரின்பம் பெறும் வழி

(கொக்கி தேவருக்கு அல்லமர் உரைத்தது)

பொறியான் புறத்து மனம் செல்லில் புலனே தோன்றியிடும் அகத்தில்
செறியக் கரணம் பரனாந்த சிவமே தோன்றும் சிவம் தோன்ற
அறிவில் பரந்த விடயமயம் ஆகும் உலகம் தோன்றாமல்
பிறவித் துயரக் கடல் கடந்து பேரின்பம் சார்குவரென்று

ஞானியர் இயல்பு

சத்து, சித்து, ஆனந்தமாகும் சிவமாகவே தனது ஜீவனைத் தெளிந்து அச்சம் நீங்கிய ஞானியர் தமதுடலை 'யான்' என இச்சியார். பூமியில் தோன்றி அன்பால் உபதேசித்த பரம குருவின் அருளால் ஆணவம்,

கன்மம், மாயை எனும் தடைகள் அகலத் 'தான்' எனும் ஜீவ போதத்தின் மெய்ப்பொருளை உணர்ந்தோர் 'அது' வாகவே நிலைநிற்பர். மண்குடம் உடைந்தபோது அதிலுள்ள தனித்ததாகத் தோன்றும் ஆகாயமும், அதைச் சூழ்ந்துள்ள ஆகாயமும் ஒன்றாவதைப் போல ஞானியர் உடல் நீங்கும் போது பரம்பொருளுடன் இரண்டறக் கலப்பார். தீப்பட்டெறிந்த ஆடை மடிப்பின் தோற்றம் கண்களைக் கவர்ந்தாலும் எங்ஙனம் உடுக்க இயலாததாக உள்ளதோ, அங்ஙனமே ஞானியர்க்கு உடல் முதலியவை தோன்றுகின்றன. உறவும், பகையும், புண்ணியமும், பாவமும் நீங்கி தூய ஞான வடிவாகித் திகழும் ஞானியரும் உலகிலுள்ள பிறர் உய்வடையுமாறு சிந்தனை, சொல், செயல் மேம்பாடுகளின் இலக்கண 'வாழ்வு' மேற்கொள்கின்றனர்.

எல்லையில்லாமல் ஓடும் மனத்தைக் கட்டுதலே முக்திக்கு வழி. அகப்பற்றுக்களை அறுத்து புறக்கரும் விழைவையும் நீக்கி தத்துவம் கடந்த பரவெளியில் நிலை நிற்பதால் பேரின்பம் சித்தியாகும். மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளின் வழியாகச் செல்லும் ஐவகை ஆசைகளையும் ஒருவன் ஒவ்வொன்றாக விட்டொழிக்க முற்பட்டால், மற்றொன்று பற்றி நிற்கும் மனத்தை புலன்வழிச் செல்லாது அடக்க, எந்தப் பற்றும் வராது. மனம் தூய்மையுற்றுத் தெளிய உடலும், உயிரும் மயக்கம் நீக்கி, மெய்யறிவு நிலைக்கும். சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்றும் மெய்யறிவுக்குத் துணைக் கருவிகளாக விளங்கி, உள்ளத்தை தூய்மையாக்குபவையே. தூய மனத்தில் பிறக்கும் பரம ஞானமே முக்திக்கு நேரான வழியாகும்.

சரியை, கிரியை, யோக நிலை நிற்பவர்களை அவர்களது செய்கை களால் அறிந்து கொள்ள இயலும், ஆனால் மெய் உணர்வுடைய ஞானியரை அறிவது கடினம்.

அரிது, அரிது மானிடராதல் அரிது என்பாள் ஔவை. மனிதப் பிறவி எய்தியும் அறவழி நிற்றல் அரிது. அன்போடு அற ஒழுக்க மேம்பாடு அடைந்த போதிலும், ஆகம வழியும் அதிலும் சைவ சமய நெறி சார்தலும் அரிது. அகமும், புறமும் ஒளி வீசி வினைவலிமை தொலைத்து ஆணவம், அகற்றும் இட்டலிங்க வழிபாடு மிகவும் ஏற்றமுடையது.

வீர சைவர் ஒப்பற்ற பக்தியாகிற முத்து மாலையை அணிந்து மேலான வைராக்கியமாகிற மேலாடை புனைந்து நீங்காத உணர்வாகிற கச்சையைக் கட்டி, இறைவனை தன் நெஞ்சகத்தே நிலைபெறச் செய்வோராவர். பேரண்டமே இலிங்க வடிவில் விளங்கும் சிவபெருமானை உயிர்களிடத்து கருணை என்னும் புனித நீராட்டி அமைதி என்னும் சந்தனம் பூசி, ஐம்பொறி மன மலர்களால் அர்ச்சித்து தனது தூய அறிவை நிவேதனம் செய்து வழிபடுவதே மேன்மையான முறையாகும்.

குரு, லிங்க, சங்கம வழிபாடே உயர்ந்தது. சிவபெருமானே குருவாக எழுந்தருளுகிறார். அவரை மனம், மொழி, மெய்களால் பணி செய்து உய்வு பெற வேண்டும். அகத்தூய்மையும், புறத்தூய்மையும் மிகவும் தேவை. தான் உண்ணும் முன் இறை நிவேதனம் ஆக்கி உண்பவரைத் தீவினைகள் தீண்டா. அடியவர்களுக்காக ஆக்கும் உணவே அமுதமாகும். மனத்தைத் தூய்மையாக்கி, அதில் இறைவனையே அமர்த்தி வழிபட வேண்டும். பக்குவமுற்றார்க்கே இருவினை ஒப்பு மலபரிபாகம், சத்தி நிபாதம் முதலியன நிகழ்ந்து ஞானஒளி பிறக்கும் மனம் இலிங்க வடிவாக மாறாவிட்டால் உடலின் புறத்தில் இலிங்கம் அணிந்தும் பயனில்லை. நல்ல மனம் ஓடும் பொன்னும், வறுமையும் செல்வமும், நிந்தையும் புகழும் காடும் வீடும் சம்மாகவே கருதி, இறைபணியில் சமநிலையில் சுகம் காணும். ஞானகுரு தமது உடல் நீங்களவும் வேதாகமங்களில் விதித்தவாறே எப்பொழுதும் நற்செயல்கள் புரிந்து ஓயாமல் வழிகாட்ட வேண்டும்.

வீர சைவச் சிறப்பு

1. புறச் சமயத்தில் சென்றவரும், பிறகு உட்சமயத்தை அடைந்து அதன்பின் சைவத்தைச் சார்ந்து பின் வீர சைவத்தை மேவியே முக்தி பெற வேண்டும்.
2. அறுமறை முடிவும், ஆகம முடிவும் ஒத்து பரம்பொருளைப் பூரணமாகக் காட்டித் தருவது வீர சைவமே ஆகும். இதற்கு குற்ற மற்ற நல்ல நூல்களும் பிரமாணமாகும்.
3. ஒவ்வொரு செயலிலும் பொருந்திய நல்வினைகளால் கிடைக்கும் தூய்மை, வீர சைவத்தைத் தவிர பிறவற்றில் கிட்டாது.
4. பக்குவ வேறுபாட்டின் காரணமாக அல்லமர் புரிந்த அருள் பல தரப்பட்டது. மூத்தோர், இளைஞர், நோயாளிகள், பெண்கள், அந்தணர் என்று பார்க்காமல் அனைவர்க்கும் அருள் புரிந்தார்.

இறைவனின் இனிய திருவிளையாடல்களை உணர்ந்து நடக்க அறம், பொருள், இன்பம், வீடு எனும் நாற்பெரும்பேறும் கிடைக்கும். அறிவு, மக்கட்பேறு, செல்வம், நிலைபேறு, பதி முதலிய அனைத்தும் கைகூடும்.

நன்னெறிகளுக்கும், ஞானத்திற்கும் அன்பே அடிப்படை. அன்போடு செய்யக்கூடிய தீமையும் நன்மையாகும். அன்பின்றிச் செய்யக் கூடிய நன்மையும் தீமையாகும். ஏனெனில் அன்பே சிவம். இதனை உணர்ந்த மெய்ஞ்ஞானிகள் அன்பே சிவமாய் அமர்ந்திருந்து ஆரா இன்பம் துய்க்கின்றனர்.

"துறவறம் மனையறம்சீர் தூய்மைநற் கல்வி நல்லோர்
உறவொடு மகங்கள் தானம் ஒண்தவம் விரதம் பூசை
அறி(வு) இவை அனைத்தும் இல்லை ஆதர(வு) இல்லை ஆயில்
பெறுவன மெய்வருத்தம் பெரும்பொருள் அழிவு மாதோ!"

அன்புடன் கொடுக்கக் கூடிய மிகச் சிறுபொருளும் மலை போன்ற புண்ணியத்தைக் கொடுக்கும், அன்பின்றிக் கொடுக்கும் மலையளவு பொருளும் சிறிதும் பயனற்றதாகவே முடியும் இந்த தரும நுணுக்கத்தை தாதை தாள் எறிந்தும், சண்டீசர் பதம் பெற்ற நாயனார் வரலாற்றாலும், பூங்கணை தொடுத்தும் நீரான காமனது வரலாற்றாலும் உணரலாம். கண்ணப்பர் வரலாறும், சாக்கிய நாயனார் வரலாறும் மற்றும் பல அடியவர் வரலாறுகளும் அன்பின் மகிமையையே அறிவுறுத்துகின்றன.

75. சிவப்பிரகாசரின் நீதிநூல்

க. புனிதாதேவி, தஞ்சை.

தமிழுக்காகவே தம் வாழ்நாள் முழுமையும் அர்ப்பணித்தவர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளாவர். இவர் நினைத்தபோது கவி இயற்றும் வல்லவர். காப்பியம், தலபுராணம், சிற்றிலக்கியம், நீதிநூல், தனிப்பாடல் போன்ற இலக்கிய நூல்களையும், சமயம், தருக்கம் ஆகிய துறைநூல்களையும் சிவப்பிரகாசர் படைத்துள்ளார். இவர் இயற்றிய சிற்றிலக்கிய நூல்களுள் ஒன்றாகத் திகழும் நன்னெறி எனப்படும் நீதிநூல் பற்றி விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

நீதிநூல்

வாழ்க்கையை நல்வழிப்படுத்தும் அறங்களை வலியுறுத்திச் செல்லும் அறநூல்கள் நீதிநூல்கள் என்று கூறப்படுகின்றன. நீதிநூல்கள் கற்பவரின் உணர்ச்சியைத் தூண்டாமல், அறிவைத் தூண்டும் இயல்பைக் கொண்டுள்ளன. கலையழகை விடக் கருத்திற்கே நீதிநூல்களில் முதன்மை தரப்படுகிறது. நீதிநூல்களின் குறிக்கோள் இன்புறுத்துவதை விட அறிவுறுத்துவதேயாகும். மனிதன் செய்யத்தக்கன, செய்யத் தகாதன என்பதைத் திறம்பட எடுத்துக் கூறிக் கற்பவர் நெஞ்சில் பதிய வைப்பன இந்நூல்களாகும்.

நீதிநூல்களின் அமைப்பு

''ஆறடிக்கு மேற்படாமல், அம்மை என்ற வனப்புடன் அமைந்து, அறம், பொருள், இன்பங்களை, வெண்பா யாப்பில் ஒருவரை விளித்து நேரே பேசுவது போல் அமைவது, நூல்களின் அமைப்பு முறையாகும். சுருங்கச் சொல்லி விளங்க வைத்தலே நீதிநூல்களின் தலையாய பண்பாகும்'' (ப. 130) என்று சிவப்பிரகாசரின் இலக்கிய நூல்கள் ஒரு திறனாய்வு என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிவப்பிரகாசரின் நன்னெறி

சிவப்பிரகாசர் நினைத்த போது கவி இயற்றுவதில் வல்லவராகத் திகழ்ந்தவர். இவர் 'ஒரு நாள் பொம்மபுரத்தை அடுத்த கடற்கரைக்கு உலாவச் சென்றிருந்தபோது நன்னெறிப் பாடல்களைக் கடற்கரை மணற்பரப்பில் எழுதியதாகவும், பின்னர் இவருடைய மாணவர்

அதனையறிந்து, கடற்கரைக்குச் சென்று, இப்பாடல்களை ஏட்டில் எழுதிக் கொண்டு வந்தார் என்பர்' என்று சிவப்பிரகாசர் செந்தமிழ் நூல்கள் என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளதாகச் சிவப்பிரகாசரின் இலக்கிய நூல்கள் ஒரு திறனாய்வு என்ற நூலில் கூறப்பட்டுள்ளது.

நூலமைப்பு

விநாயகர் வணக்கம் காப்புப் பாடலுடன் நன்னெறி நூல் தொடங்கப் பட்டுள்ளது. இக்காப்புப்பாடல் 'நன்னெறி நாற்பது' என்பதைச் சுட்டுகிறது. இந்நூல் நாற்பது வெண்பாக்களால் இயன்றுள்ளது. ஒவ்வொரு வெண்பாவும் முதல் இரண்டு அடிகளில், ஒரு நீதிக்கருத்தை விளக்குவதாக அமைந் துள்ளது. பின்னிரண்டு அடிகளில் அந்நீதிக்கருத்தை விளக்குவதற்கு உவமானம் கூறப்பட்டுள்ளது. மகடூஉ முன்னிலையாகப் பெரும் பான்மையான பாடல்கள் அமைந்துள்ளன.

நன்னெறியில் கூறப்படும் நல்லறங்கள்

பிறருக்கு உதவி செய்யும் குணம் உடைய ஒருவர் மற்றவர்களுக்கு உதவும் செல்வமானது அவருடையது அல்லவானாலும் அவருடைய தாகவே கருதப்படும் என்பதை,

"பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறாம்"
. . . . (4)

இப்பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

கணவனும் மனைவியும் ஒரே மனதோடு ஒற்றுமையாய்ச் செய்யும் தருமமே உயர்வு உடையதாகும் என்பதை,

"காதன் மனையாளுங் காதலனு மாறின்றித்
தீதி லொருகருமஞ் செய்பவே"
. . . . (6)

என இவ்வெண்பாவில் கூறியுள்ளார்.

"உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங் காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க"
. . . . (8)

என்னும் பாடலில் மனதில் உண்டாகும் கோபத்தை அறிவைக் கொண்டு அடக்கிக் கொள்ளுதல் வேண்டும் என்பதைத் திறம்பட எடுத்துரைத்துள்ளார்.

"கொள்ளுங் கொடுங்கூற்றங் கொல்வான் குறுகுதன்முன்
உள்ளங் கனிந்தறஞ்செய் துய்கவே"
. . . . (20)

என்னும் செய்யுளில் மரணம் வருவதற்கு முன்னரே பிறருக்குத் தருமம் செய்தல் வேண்டும் என்று வலியுறுத்திக் கூறியுள்ளார். மேலும், பல நல்லறங்கள் நன்னெறியில் கூறப்பட்டுள்ளன.

கல்விச் சிறப்பு

சிவப்பிரகாசர் கல்விச் சிறப்புப் பற்றி நன்னெறியில் மிகச் சிறப்பாக எடுத்தியம்பியுள்ளார். சான்றாக, நன்னெறியில் இறுதி வெண்பாவில், ஆபரணங்களை அணியும் உடலின் உறுப்புகள் ஆபரணங்களே அணியாக் கண்ணுக்கு ஒப்பாகாது. அதுபோல ஆபரணங்களை அணியும் அரசர் களாக இருந்தாலும், அவர்கள் ஆபரணங்களை அணியாத அறிஞர் களுக்கு ஒப்பாகமாட்டார்கள் என்னும் பொருள் அமைந்த

''பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னும் அறிஞரைத்தாம் மற்றொவ்வார் - மின்னுமணி
பூணும் பிறவுறுப்புப் பொன்னே அதுபுனையாக்
காணுங்கண் ஒக்குமோ காண்''

இவ்வெண்பாவினால் கல்விச் சிறப்பையும் அறிவுடைமையின் பெருமையினையும் அறிய முடிகிறது.

சிவப்பிரகாசரின் உவமை நலம்

''சிவப்பிரகாசரின் உவமைத் திறத்தை நன்னெறியின் நாற்பது வெண்பாக்களிலும் காணலாம். கை, கண், நாக்கு, பல் ஆகிய உடலுறுப்புகளும், கடல், மேகம், வெள்ளம், திங்கள், சூறாவளி ஆகிய இயற்கைப் பொருள்களும், வாழை, மா, எட்டி, சோலை, நெல், புல் ஆகிய தாவர இனங்களும், பாம்பு, எறும்பு, காக்கை, பசு என்னும் உயிர் வகைகளும், தளிர், பூ, கனி ஆகிய செடி கொடிகளின் பாகங்களும், குளம், பானை, படகு, தாழ் முதலிய செயற்கைத் திறங்களும் சிவப்பிரகாசரின் உவமைகளில் இடம் பெற்றுள்ளன'' (ப. 132) என்று சிவப்பிரகாசரின் இலக்கிய நூல்கள் ஒரு திறனாய்வு என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ.ம்)

1. ஐம்புலன்களும் அறிவில்லாதவர்களைத் துன்பப்படுத்தும் ஆனால் அறிவுடைய பெரியோரைத் துன்பப்படுத்தாது என்பதை,

''பொய்ப்புலன்க ளைந்துநோய் புல்லியர்பா லன்றியே
மெய்ப்புலவர் தம்பால் விளையாவாந் - துப்பிற்
சுழற்றுங்கொல் கற்றூணைச் சூறா வளிபோய்ச்
சுழற்றுஞ் சிறுபுன் துரும்பு'' (11)

இப்பாடலில் சூறாவளி காற்றுக்கு ஐம்புலனையும், அறிவுடையவர்க்குக் கல்தூணையும், அறிவில்லார்க்குச் சிறிய துரும்பையும் உவமையாகக் கூறியிருப்பது சிவப்பிரகாசரின் புலமையை வெளிப்படுத்துகிறது.

2. சிநேகிதர்கள் பகைமையால் பிரிந்து பின்பு சேர்ந்தாலும் முன்பு இருந்த நட்புறவு போல இருக்காது என்பதனை,

''நீக்க மறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கி னவர்பெருமை நொய்தாகும் - பூக்குழலாய்
நெல்லி னுமிசிறிது நீங்கிப் பழமைபோற்
புல்லினுந் திண்மைநிலை போம்'' (5)

என்னும் பாடலில் சிநேகிதருக்கு நெல்லையும், பிரிதலுக்கு உமியையும் உவமையாக உவமித்து இருப்பது சிவப்பிரகாசரின் அறிவுத் திறத்தை எடுத்துக் காட்டுகிறது.

3. கணவனும் மனைவியும் ஒரே மனத்தோடு ஒற்றுமையாய்ச் செய்யும் தருமமே உயர்வானது என்பதை,

''காதன் மனையாளுங் காதலனு மாறின்றித்
தீதி லொருகருமஞ் செய்பவே - ஓதுகலை
எண்ணிரண்டு மொன்றுமதி யென்முகத்தாய் நோக்கறான்
கண்ணிரண்டு மொன்றையே காண்'' (6)

இப்பாடலில் கணவன், மனைவியைக் கண்களுக்கு உவமையாகச் சிவப்பிரகாசர் நயம்படக் கூறியுள்ளார்.

மகடூஉ முன்னிலையின் சிறப்பு

நன்னெறியில் இருபத்து நான்கு வெண்பாக்கள் மகடூஉ முன்னிலையாய் அமைந்துள்ளன. பூவிற் பொலிகுழலாய் (1), நன்னுதால் (2), தங்கநெடுங் குன்றினாற் செய்தனைய கொங்கையாய் (3), பூக்குழலாய் (5), ஓதுகலை எண்ணிரண்டு மொன்று மதியென் முகத்தாய் (6) திருந்திழாய் (12), சுரக்கும் மலையளவு நின்ற முலைமாதே (13), இலையால் இரைக்கும் வண்டு மலரீங் கோதாய் (14), நல்லாய் (15), பைந்தொடீ (17), பொன்செய் அதிர் வளையாய் (18), தெரியிழாய் (20), நெகிழ்ச்சி பெறும் பூரிக்கின்ற முலைப்பேதாய் (23), வில்லார் கணயிற் பொலியுங் கருங்கண்ணாய் (25), மடவரால் (26), அம்மா (27), நடுக்க முறார் பண்ணிற் புகலும் பனிமொழியாய் (29), நேரிழாய் (31), பிறைநுதால் (34), வெற்றி நடு வேல் வேண்டும் வாள் விழியாய் (35), தெரியாய் கொல் பொன்னுயர்வு தீர்த்த புணர் முலையாய் (37), நல்லாய் (38), பொற்றொடீ (39), நன்னுதால் (32) போன்றவை மகடூஉ முன்னிலையாக நன்னெறி நூலில் சிவப்பிரகாசர் குறிப்பிட்டுள்ளார்.

சிறுவர் இலக்கியம்

அனைவரும் போற்றும் நீதி நூலாக நன்னெறி அமைந்துள்ளது. சிவப்பிரகாசர் பல நூல்கள் இயற்றியுள்ளார். இருப்பினும் மற்ற நூல்களைக்

காட்டிலும் நன்னெறி எளிமையாக அமைந்துள்ளது. பண்டைக் கதைகளையும், பழமொழிகளையும், உவமைகளையும் கூறி கருத்தை எளிமையாக விளக்குவதால் இந்நூல் சிறுவர்க்குரிய நீதிநூல் என்பதை விளக்கி நிற்கின்றது.

பள்ளியில் தவறு செய்தால் மாணவர்க்குப் பிரம்படி தருவதையும், பிரம்படி படும்போது கை விரைந்து சென்று மெய்யின் மேல் விழும் அடியைத் தாங்கும் தன்மையையும் சிறுவர்கள் அறிவர். இந்நிகழ்ச்சியை,

''பேரறிஞர் தாக்கும் பிறர்துயரந் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார் - நேரிழாய்
மெய்சென்று தாக்கும் வியன்கோ லடிதன்மேற்
கைசென்று தாங்குங் கடிது'' (31)

என்னும் பாடலில் பெரியோர் மற்றவர்களுக்கு வரும் துன்பத்தைத் தாங்கள் ஏற்றுக் கொண்டு அவர்களைக் காப்பாற்றுவார்கள் என்பதற்கு உவமையாக்கியுள்ளார் சிவப்பிரகாசர்.

அம்புலியைப் பார்த்து அக மகிழ்வதும், நிலவில் மானுள்ளது என்று அதன் கறையைப் பார்த்துக் கூறுவதும் சிறுவர்கள் இயல்பு. இக்கருத்தை,

''உடற்கு வருமிடர்நெஞ் சோங்குபரத் துற்றோர்
அடுக்கு மொருகோடி யாக - நடுக்கமுறார்
பண்ணிற் புகலும் பனிமொழியா யஞ்சுமோ
மண்ணிற் புலியைமதி மான்'' (29)

இப்பாடலில் சந்திரனில் உள்ள மானானது பூமியிலுள்ள புலிக்குப் பயப்படாது அதுபோல கடவுளிடத்தில் தங்கள் மனதை எப்பொழுதும் செலுத்தியுள்ள பெரியோர்கள் தங்களுக்கு வரும் எவ்விதத் துன்பங்களுக்கும் அஞ்சமாட்டார்கள் என்று விளையாட்டு உணர்வுபடக் கூறியுள்ளார்.

சிறுவர்கள் எளிதில் உணரும் வகையில் வேப்பம் பழத்தைத் தின்னும் காகத்தையும், எறும்பூரக் கல் தேய்வதையும் உவமையாகக் கொண்டு நீதிகளை உணர்த்தியுள்ள திறத்தால், இந்நூல் சிறுவர் இலக்கியமாகத் திகழ்வதைக் காட்டுகிறது.

நன்னெறியின் சிறப்பு

நன்னெறியில் நாற்பது வெண்பாக்களிலும் முதலிரண்டு அடிகளில் நீதியையும், பின்னிரண்டு அடிகளில் உவமையையும் கூறப்பட்டிருப்பது நன்னெறியின் தனிச்சிறப்பாகும். நீதிக்கருத்துகளை மட்டும் சொல்லிச் செல்லாமல், நூல் முழுவதும் அழகிய உவமைகளையும் கூறியுள்ளார். இதனால் தாம் கூற வந்த அறக்கருத்துகளைத் தெளிவாக விளக்கிக்

கூறியுள்ளார். மேலும் கவிதையின் சிறப்புகளாகிய அறிவுறுத்தல், இன்புறுத்தல் ஆகிய இரண்டு தன்மைகளும் நன்னெறி விளக்குவதும் சிறப்பானதாகும். நன்னெறி சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவருக்கும் ஏற்ற செந்நெறியைக் கூறுவது சிறப்பாகும்.

ஆங்கில மொழியில் நன்னெறி

''ஆங்கிலத்திலும் நன்னெறியை முன்னர் போப்பையரும், இக் காலத்தில் டி.பி. கிருட்டினசாமியும் மொழிபெயர்த்து உள்ளனர். போப்பையர், நன்னெறி இலக்கிய நயமும் பெரும்பயனும் நல்குவது ஒவ்வொரு பாடலும் பொருத்தமான கற்பனைநலம் சான்ற உவமையைக் கொண்டுள்ளது'' (ப. 134) என்று சிவப்பிரகாசரின் இலக்கிய நூல்கள் ஒரு திறனாய்வு என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது மிகவும் பொருத்தமானதாகும்.

மக்களின் நல்வாழ்விற்கு அறநெறிகளைச் செப்புவதே நோக்காகக் கொண்டு சிவப்பிரகாசர் நன்னெறியை இயற்றியுள்ளார் என்பதை அறிய முடிகிறது. அறக்கருத்துக்களை உவமைகளுடன் கூறி சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவரும் எளிமையாகப் புரிந்துக் கொள்ளும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது. இதனால் சிவப்பிரகாசரின் கல்விப் பரப்பும், புலமை பெருக்கமும், கற்பனை நயமும், சொல்லாட்சித் திறமும், நடைநலமும் இவருடைய அறிவு நுட்பத்தையும் நன்கு அறியலாம்.

துணை நூல்கள்

1. சிவப்பிரகாச சுவாமிகள் பனுவல் திரட்டு, கழக வெளியீடு, 1978.
2. சிவப்பிரகாசரின் இலக்கிய நூல்கள் - ஒரு திறனாய்வு, டாக்டர் மா. சாந்தா, சிதம்பரம் ஈசானிய மடம் இராமலிங்க சுவாமிகள், ஆறுமுக விலாச அச்சுக்கூடம், சென்னை.
3. துறைமங்கலம்-சிவப்பிரகாச சுவாமிகள் அருளிச் செய்த - நன்னெறி (மூலமும்-உரையும்) ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ், சென்னை, 1943.

76. சிவப்பிரகாசரின் நான்மணிமாலை

த. பூமிநாகநாதன், சென்னை.

சிவப்பிரகாசர் காலத்தில் வீரசைவம் என்ற கோட்பாடு பேசப் பட்டாலும் அது சைவ சித்தாந்தத்தைப் புறக்கணித்து பேசப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நந்தி தேவரை சமயத் தளபதியாகக் கொண்டு, தனது நெஞ்சிலே இலிங்கத்தை ஆபரணமாகக் கொண்டு, வழிபாட்டு சடங்கு நெறிமுறை களில் சற்று மாறுபாட்டைக் கொண்டு விளங்கியவர்களே மேற்சொன்ன வீரசைவ பெருமக்கள். வீரசைவ வழிபாட்டை (அ) வரலாற்றை நாம் கண்டு உணரப் பெரிதும் துணை நிற்பது சிவப்பிரகாசரின் இலக்கியப் பனுவல்களே. சனாதன தர்ம மதங்களின் சிறப்புகளைப் பேசும் காப்பியங் களாகப் பாரதம் இராமாயணம் விளங்கியதுபோல் சமண சமயத்தின் சிறப்பைப் பேச சிலப்பதிகாரம், சிந்தாமணி விளங்கியது போல், பௌத்த சமயச் சிறப்புகளைப் பேச மணிமேகலை விளங்கியது போல், சிவப்பிரகாசரின் பிரபுலிங்க லீலை வீரசைவக் காப்பியமாக விளங்கியது. அத்தகைய சிறப்புடைய வீரசைவத்திற்கு கர்நாடகத்தில் பசவர் பெருமை சேர்த்தது போல, தமிழகத்தில் சிவப்பிரகாசர், காப்பியம் தொடங்கி மாலை வரை பல்வேறு விதமான சிற்றிலக்கியங்களைப் படைத்துத் தமிழுக்கும் தமிழ் போற்றும் சைவநெறிக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

சைவம் என்று சொன்னாலே சமயக் குரவர் நால்வரே நாற்பெருந் தூண்களாக நின்று தென்னக சைவ சமயத்தை நிலைப்பெறச் செய்தவர் என்றால், மிகையாகாது. மூவர் தேவாரமும் மணிவாசகரின் திருவாசகமும் திருக்கோவையாரும் சைவ சமயத்தின் பன்னிரு திருமுறைகளில் முதல் எட்டாக விளங்குவது யாவரும் அறிந்ததே. தோத்திரமாகவும் சாத்திர மாகவும் விளங்கும் தேவாரம் திருவாசகம் பற்றிய சிறப்புகள் தமிழ் கூறும் நல் உலகத்தில் அறியாதவர்கள் இருக்க முடியாது. இதன் காரணமாகத்தான் தேவாரம் திருவாசகத்தின் பிறகு எழுந்த சைவ சமய பக்தி நூல்கள் அத்தனையும் சமயக் குரவர் நால்வரை வணங்கியும் வாழ்த்தியும் பேசத் தவறுவதில்லை.

நால்வர் புகழைப் பாடுவதென்பது சைவ சமயத்தைத் துதிப்பதற்கு ஒப்பாகும் என்ற கருத்து அக்காலத்திலே பரவலாக இருந்தது எனலாம்.

அந்த அடிப்படையில்தான் சிவப்பிரகாச சுவாமிகள் நனி தமிழ் கொஞ்சும் நால்வர் நான்மணிமாலை என்ற சிற்றிலக்கியப் பனுவலைப் படைத்துள்ளார்.

இக்கட்டுரையில் இந்நூலின் சிறப்பு, இலக்கிய வளம் ஆசிரியரின் படைப்பாற்றல் நூல் நுவலும் செய்தி ஆகியன பற்றி ஆராயப்படுகிறது.

தமிழ் இலக்கியம் 96 வகையான சிற்றிலக்கியங்களை பெற்றுள்ளது என்பர். அதனில் ஒன்று தான் மாலை இலக்கியம் மாலை என்ற சொல் தொடுத்த பூந்தொடை, மாதரணிவடம், பிரபந்த வகை, வரிசை, பாசம், விரலி, பெண் போன்ற பல பொருண்மைகளை குறிக்கும் என்பார் பேராசிரியர் ச.வே. சுப்பிரமணியம். பாட்டியல்கள் பொருள், யாப்பு, அமைப்பு, எண்ணிக்கை போன்ற அடிப்படையில் அமைந்த மாலை பலவற்றைத் தருகின்றன.

நாமமாலை, புகழ்ச்சி மாலை, பெருமகிழ்ச்சி மாலை, தாரகை மாலை, செந்தமிழ் மாலை, அங்கமாலை, அனுராகமாலை போன்ற பொருள் நிலைமாலைகள் பல தமிழில் உண்டு.

புறத்திணையின் அடிப்படையில் எழுந்த வெட்சி மாலை, கரந்தை மாலை, வஞ்சி மாலை, நொச்சி மாலை, உழிஞை மாலை, தும்பை மாலை, வாகை மாலை போன்ற மாலைகள் இலக்கண நூல்களின் வாயிலாக அறிய முடிகின்றன. பலவகை யாப்பு விரவி வரும் நிலையில் இணைமணி மாலை, இரட்டைமணி மாலை, மும்மணிமாலை, நான்மணிமாலை போன்ற மாலை நூல்கள் உளவாக அறிய முடிகிறது. பலசந்த மாலை, கலம்பக மாலை, வருக்க மாலை போன்றன ஒரு குறிப்பிட்ட அமைப்பு காரணமாக தனிவகையில் உருவாகி உள்ளன.

எண்ணால் பெயர் பெறும் மாலைகள் பற்றிக் குறிப்பாக நான்மணி மாலை பற்றி பாட்டியல் கூறும் பொழுது,

''வெண்பாக் கலித்துறை விருத்தம் அகவல்
பின்பேசும் அந்தாதி யினாற் பதுபெறின்
நான்மணி மாலையாம் என நவில்வர்''

இவ்வாறான இலக்கணத்தைக் கூறுகிறது.

இதில் நான்மணி என்பது முத்து, பவளம், மரகதம், மாணிக்கம் என்ற ஒன்பான் மணிகளில் சார்ந்த இவற்றை ஒன்றன்பின் ஒன்றாக தொடுப்பதால் கவினுறு ஆபரணமாலை ஒன்று உருவாவது போல நேரிசை வெண்பா கட்டளைக் கலித்துறை ஆசிரியர் விருத்தம் நேரிசை ஆசிரியம் ஆகிய நான்வகையான பாக்களைக் கொண்டு பாடல்கள் தொடுக்கப்படும் பொழுது வெண்பாவிற்கு உரிய செப்பலோசை கலிக்குரிய துள்ளல் விருத்தத்திற்குரிய இன்னிசை ஆசிரியத்திற்கு உரிய அகவல் ஆகியன ஒன்றன்பின் ஒன்றாய் இசைக்கப்படும்பொழுது இசையில் புதுமை

உருவாவதைக் காணலாம். அவ்வகையில் துதிநூல் என்ற போதும் இசையைத் தொடுப்பதனாலும் இசைக்கு உரிய யாப்பை தொடுப்ப தனாலும் இந்தச் சொல் மாலை ஆபரணமாக, மாலைக்கு ஒப்பாக அமைகிறது.

மாலையின் உள்ளே அமைந்துள்ள பொருளமைப்பு முறைகளைக் கீழ்கண்டவாறு காணலாம்.

1-4 இறைவன் நால்வரையும் ஆட்கொண்ட முறையும் பாடற் குறிப்பும்

5-8 நால்வருடைய மேன்மையை விளக்கி நிற்கும் நான்கு அடியார்தம் பெருமை

ஞானசம்பந்தரின் வரலாற்றில் இடம்பெறும் மங்கையர்க்கரசியார் பற்றிய குறிப்பு

நாவுக்கரசர் என்ற சொல்லை மந்திரமாகக் கொண்டு உயர்ந்த அப்பூதியடிகள்

துறந்த முனிவரும் தொழும்பேறு பெற்ற பரவை நாச்சியார் பற்றிய செய்தி

மாணிக்கவாசகர் பாட பாடு பொருளாய் நின்று காத்த இறைவன்

9-12 தேவார, திருவாசகங்களைப் பாடிய நால்வரின் பெருமை இவ்வாறு விளங்கிக் கொள்ள வேண்டும் என்பது

13-16 ஞானசம்பந்தரின் பாடல் கொண்டுள்ள பொருளுண்மையை அறிந்து தந்தையினும் தாய் மகிழ்தல்

நாவுக்கரசர் பாட்டு ஆணவமாகும் கபாடத்தைத் திறப்பது ஆதலின் தந்தைக்கு மகிழ்ச்சி

நம்பியாரூரர் அருட் சக்தியாக நின்று உயிர்களுக்கு விடுதலை நல்குவதால் இருவருக்கும் மகிழ்ச்சி

17-20 ஞானசம்பந்தர் பாட்டு ஆண்பனைக்குப் பயனாகும்; விடத் திற்கு மயிலாகும். நோய்க்கு மருந்தாகும் எலும்பிற்கு உயிராம் நாவுக்கரசர் பாட்டு புகழ்ச்சியோடு உயர் திருத்தொண்டு நெறியாம் (உழவாரப்படை)யை வாழ வைத்தது.

21-24 பாடுவோரின் வாகை - செயற்கை வென்றி கூற்றைத் தள்ளி சமணரை விரட்டியது. ஞானசம்பந்தர் செயல் இருவகைக் கடல் கடந்தேறி அன்புக் கடல் கண்டு உலகுய்யச் செய்தது திருநாவுக்கரசு பாடல்.

நம்பியாரூரர் உபமன்யு முனிவனும் எழுந்து நின்று காண்குற அவர் கயிலை சென்றது.

25-28 ஞானசம்பந்தர் கைப்பட்ட ஏடு எரியில் விழுந்தும் கரியாய் ஒழியாமல் கரியாய் சாட்சியாய் மொழியும் நாவுக்கரசரை நினைத்தால் காம மயக்கம் தீரும் நம்பியாரூரர் உடல் பட்ட செங்கல் அவர் பாட்டால் செம்பொன் ஆதல்

மாணிக்கவாசகர் பாடல் நெஞ்சம் நெக்குருகச் செய்வதால் அதனைப் பாடும் அனைவரும் ஒழுக்கமுடையவராதல்

29-32 குடி செய்வல் என்றும் ஒருவற்குத் தெய்வம் மடிதற்றுத்தாள் முந்துறும் என்ற கருத்தை நால்வருக்கும் அமைத்துக் காணுதல்

33-36 அருளாளர் நிகழ்ச்சி அறவழியையும் மாற்றும் ஆற்றல் பெற்றது.

37-40 வல்லார் பிறப்பறுப்பர்; வண்மை, நலம், கல்வி, நல்லாதரவு, ஞானம் அனைத்தும் ஞானசம்பந்தன் திருவடி எனல் 'திருநாவுக்கரசு' என்ற சொல்லை ஓதியும் கூறியும் சிறப்புற்ற நிகழ்வின் வழி நாவுக்கரசரை பெருந்தகை யெனல் தொண்டர்தம் பெருமை சொல்லும் திருத்தொண்டத்தொகை செய்ததன் வழி இறைவனுக்கு நண்பரான செயல் பற்றிக் கூறல்

திருவாசகத்தின் சிறப்பையும் அதனை யாத்த வாதவூரர் பெருமைய்யயும் கூற சிவப்பிரகாசர் நவில்வர் அருட் பாக்களையும் இரண்டாகப் பிரித்துக் கொள்கிறார். உணர்வை (அறிவை) அளிப்பன; உருக்கியன. உணர்வை அளிப்பன தேவாரம். உருக்கத்தை அளிப்பது திருவாசகம். இவை இரண்டு நெறியால் வேறு. இளி உணர்வை அளிப்பனவாகிய தேவாரங்களும் பொருள்களின் உண்மைத் தன்மையை அறியும் நெறியை உணர்த்துவது சம்பந்தர் தேவாரம்; அறியும் நெறியோடு முத்தியுலக இன்பத்தையும் இணைத்து உணர்த்துவது நம்பியூரர் தேவாரம். இரண்டையும் முறையே எம் செவியமுது என்றும் ஞானமுதம் என்றும் வகைப்படுத்திக் காட்டினார். நாவுக்கரசர் தேவாரம் வீட்டிற்கு வாயிலாக நின்று, திருத்தொண்டர் நெறி வாழத் தோன்றிய உண்மைகளை உணர்த்துவன. இதனை இன்னும் சுருக்கமாக இப்படிக் கூறலாம்.

நால்வர் பாக்களையும் சிவப்பிரகாசர் நோக்கும் பண்பு

ஞானசம்பந்தர் தேவாரம்	-	எம் செவியமுது. எம் தந்தையினும் தாய்க்கு மகிழ்விப்பது; திருப்பாட்டு.
நாவுக்கரசர் தேவாரம்	-	வீட்டிற்கு வாயில் எனும் தொடை; திருதாண்டகம் நோயிலியாகிய சொல்: இறைவனை மகிழ்விப்பது.
நம்பியாரூரர் தேவாரம்	-	படியில்லாத பாட்டு : பாவாய்ப் பொலிந்த வாளமுதம்

மணிவாசகர் திருவாசகம்	-	வாசகத்தேன் : புனிதன் மொழிந்த வாசகமே வாசகம் திருவாசகம் மனம் நின்று உருக்கும் மதுர வாசகம் பிரிவெனப்படுவது உன் பாட்டு.

என நால்வர்தம் பாக்களை வகைப்படுத்திக் காட்டுவார்.

திருவாசகம் பற்றிச் சிவப்பிரகாசர்

மூவர் தேவாரத்தை முறைப்படுத்திப் பாராட்டும் சிவப்பிரகாசர் மாணிக்கவாசகரின் திருவாசகம் பற்றிச் சிந்திக்கும்போது அவர் அப்பனுவலிடத்துக் கொண்ட ஈடுபாடு அளப்பறியது. கேட்டவர்களை யெல்லாம் அன்பராக்குவதால் திருவாசகம் வேதத்தினும் உயர்ந்தது. அனைவருக்கும் உரிமையுடைமையால் பொற்பாத்திரம் திருவாசகம். திருவாசகம் அதுவே வாசகம்; அதுவே பாட்டு. அதற்கு வாச்சியம் இறைவன்; அடியவர்கள் பலரும் அரும் பெரும் செயல்கள் புரிந்து இறைவனுக்குத் தொண்டராயினர். ஆயின் மண் சுமந்தும், பிரம்படி பட்டும் இறைவன் இவருக்குத் தொண்டரானார் என்ற சிறப்பு; மாணிக்கவாசகமாம் பேசும் திருவாசகத்தைப் பொழிந்து முத்தியை விளைத்தது. எருதேறியைக் குதிரையேறியாகச் செய்த வித்தகச் செயல் பெருந்துறையிடத்துக் குருந்த மரநிழலில் வேதச் சிறப்பொருள் உபதேசம் பெற்றது. இறைவன் வந்து வாசகத்தை ஓதியது. நெஞ்சு நெக்குருகி நிற்கும் மணிவாசகரின் அன்பு நிலை. வாதவூரரைக் கருத்திற் கொண்டு மனத்தகத்தே கட்ட வல்லார்க்கு இறைவனே முத்தி தருவன் என வாசகத்தின் சிறப்பையும் மாணிக்கவாசகரின் பெருமையையும் இந் நூலில் எடுத்துக் கூறியுள்ள விதம் நம் சிந்தனைக்கு விருந்தாகும்.

தொன்மக் கருத்துக்களைக் கொண்டு சிவப்பிரகாசர் தம் நுண்மாண் நுழைபுலம் வெளிப்படும்படியாக இதுவரை யாருமே சிந்திக்காத முறையில் ஒரு சில வினாக்களை எழுப்பி அதன் வாயிலாக புதிய செய்தியைத் தருவதோடு இறைவனின் சிறப்பையும் எடுத்துக்காட்டும் அற்றல் பற்றி ஈண்டு சிலவற்றைக் காணலாம். ஞானசம்பந்தர் ஞானப்பால் உண்ட வரலாறு, படிக்காசு பெற்ற வரலாறு, திருமறைக் காட்டில் கதவந் திறந்த வரலாறு ஆகியன ஈண்டுச் சிந்திக்கப்படுகின்றன.

இந்நூலின் இரண்டாம் பாடலில் ஒரு ஐயத்தை உள்வைத்து சிவப்பிரகாசர் ஒரு வினாவை எழுப்புகிறார். அஃதாவது ஞானசம்பந்தருக்கு ஞானப்பால் கொடுத்தும் நாவுக்கரசருக்குக் குடல்நோய் தந்து ஆட் கொண்டது முறையா? எனக் கேட்கிறார்.

பொருள் தன்மையை அறியும் நெறியை உணர்த்தியமையால் சூலை நோயால் துன்பம் பெற்றதும் முறையான செயல்களே என்பதை

'இயற்பாவால் மொழி ஞானப்பால்' என்றும், 'வீட்டிற்கு வாயில் எனும் தொடை சாத்து சொல் வேந்த' என்றும் கூறி இருவர் செயலும் ஒரே குறிக்கோளை அடைவதற்கு உதவும் இரு நிலைமைகளை விளக்குவன என்றும் குறிப்பிட்டுக் காட்டுகின்றார்.

ஞானசம்பந்தன் குறித்து சிவப்பிரகாசர் தரும் அடைகள்

பூவான் மலிமணிநீர்ப் பொய்கைக் கரையினியற்
பாவான் மொழிஞானப் பாலுண்டு - நாவான்
மறித் தெஞ் செவியமுதமாய் வார்த்த பிரான் (1)

. . . . நெகிழ்ச்சி மலர்ச்
சந்தையினும் வண்ரையும் தண்புகலிச் சம்பந்தா (13)

சிரபுரத்து நாவலன் சம்பந்தன் (17)

கூற்றைப் பிடர்பிடித்துத் தள்ளும் ஞானசம்பந்தன் (21)

வானும் புகழ் புகலி மன்னன் (25)

வல்லார் பிறப்பறுப்பர் வண்மை நலங் கல்வி
நல்லா தரவின்ப ஞானங்கள் - எல்லாம்
தரு ஞான சம்பந்தன் சேவடியே (37)

நாவுக்கரசர் குறித்து வருவன

வீட்டிற்கு வாயிலெனுந் தொடை சாத்து சொல்வேந்தன் (2)

திருத் தாண்டக வேந்தன் (6)

நாவரசப் பெருந்தகை (10)

மகிழ் ஊட்டா மகிழ்சொல் லிறைவனைப் பாடி யுவப்புறுக்க
வேட்டான் மலிபெருங் கல்லவன் (18)

. . . . .நச்சுக்குலை
யுடைவாழை மேலுரகந் தீண்ட மாய்ந்த வொருவனுயிர்
அடைவானருள்புரி யுந்திரு நாவுக்கரசன் (26)

மறிவெண் திரைகடல் நீந்திய பாவலன் (30)

சைவ நலங் கூர்ந்து மளிர்தரு நாவரசு (34)

. . . . நாவுக்கர செனுமோர்
சொற்றா னெழுதியும் கூறியுமே யென்றுந் துன்பில் பதம்
பெற்றா னொரு நம்பி (38)

சுந்தரரைக் குறித்துக் காண்பவை

படியிலாநின் பாட்டி லாரூர நனிவிருப்பன் பரமன்என்ப (3)
துறந்த முனிவர் தொழும் பரவை துணைவா (7)
குண்டையூர் நெல்மலை கொண்ட அருட்கடல் (11)
உணற்கரும் புகழ்மேவிய சுந்தரன் (23)

அரசன் பறிமேல் வ்ர நெடுமால்
யானை யெருத்தத் தமர்ந்து போய்
வரதன் கயிலைமலை யடைந்த மணி! (27)

பாவாய்ப் பொழிந்த வானமுதப் பவளத் திருவாய் நம்பி (31)
சுரர் முனிவர் பரவலுறும் பெருஞ்சீர்த் தொண்டத்
தொகை செய்தோய் (37)

மாணிக்கவாசகர் குறித்துக் காண்பன

ஆதீ சீர் பரவும் வாதவூர் அண்ணல் (4)
திருவாசகமிங் கொருகா லோதிற்
கருங்கன் மனமும் கரைந்துக் கண்க
டொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர் விதிர்ப் பெய்தி
அன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே. (4)

இப்பாடலில் திருவாசகத்தின் சிறப்புப் பற்றி எடுத்தியம்புகிறார்.

செங்கண்மா நடக்கையிற் சங்க நாண
முட்டாட் டாமரை முறுக்கவிழ் மலர்மேல்
வலம்புரி கிடக்கும் வாதவூர் அன்பர் (12)

......இள ஏறு உகந்தேறியைப்
பரிமா மிசைவரப் பண்ணிய வித்தக (20)

திருந்திய வேத சிரப்பொருண் முழுதும்
....
குருந்துறு நீழலிற் கொள்ளை கொள்வோய் (20)

நலமலி வாதவூர் நல்லிசைப் புலவ
மனநின் றுருக்கு மதுர வாசக
கலங்குறு புலநெறி விலங்கு வீர (24)

அன்ன மாடு மகன்றுறைப் பொய்கை
வாதவூர் அன்பர்

இறுதியாக அடிகளின் சொற்றிறம் பற்றிச் சிறிது கண்டு கட்டுரையை நிறைவு செய்யலாம். புலவர்தம் கற்பனைக்கேற்பச் சொற்கள் அமையும். கற்பனை புலவர் எடுத்துக் கொண்ட பொருண்மைக்கேற்ப அமையும். அவ்வகையில் சைவ சமயத்தின் மாண்புகளைப் புகழ வந்த நால்வரைப் பற்றியும் சைவ சமயத்தின் தலையாய இறைவனைப் பற்றியும் சிவப்பிரகாசர் குறிப்பிடும்போது முத்திரை பதித்தாற் போலச் சொற்களைக் கையாளுகிறார். அதற்கான சில எடுத்துக் காட்டுக்களை ஈண்டுக் காண்போம்.

> ஞான சம்பந்தர் ஊரான சீர்காழிக்குப் பன்னிரு பெயர்கள் உண்டு. அத்தனைச் சிறப்புமிக்க அவ்வூரின்கண் தடாகங்கள் பல உண்டு. அத்தடாகத்தின் சிறப்பை 'பூவான் மலிமணிநீர்ப் பொய்கை'

எனப் பாராட்டுகிறார் சிவப்பிரகாசர். இச்சொல்லாக்கம் நமக்கு சிலம்பை நினைவுபடுத்துவதைக் காணலாம். வைகையைப் போற்றும் இளங்கோ இது புனலாறு அன்று பூம்புனல் ஆறு என்பார். அதே போன்று சிவப்பிரகாசரும் பூக்கள் நிறைந்த பொய்கை எனப் போற்றுகிறார். இதைப்போலவே பிறிதொரு இடத்தில் இலைபடார்ந்த பொய்கை (5) என்பார்.

இறைவனைக் கூறும்போது வெவ்வேறு விடையான். நாவுக்கரசரைப் பாராட்டும்போது தாண்டக வேந்தன் சிவபிரானின் கோலத்தைக் கூறும்போது 'சுடுகாட்டுள் ஆகுவான்' மாணிக்கவாசகர் பற்றிக் கூறும் போது பேரின்ப வெள்ளம் மூழ்கிய புனிதன். சுருக்கம் கருதி ஒரு சிலவற்றைத் தொகுத்துக் காண்போம்.

வள்ளைக் குழை உமை பங்காளர்	(10)
கள்ளைக் குவளை யுமிழ் விழி	(10)
மலர்ச் சந்தை	(13)
தாயிலி	(14)
சிரபுரத்து நாவலன்	(17)
போதம் உண்ட பிள்ளை	(19)
இளரறு உகந்து ஒளி	(20)
புகலி மன்னன்	(25)
நச்சு உரகம்	(26)
அன்னம் ஆடும் அகல்துறை பொய்கை	(28)
நோயிலி யாகிய சொல்லிறை	(14)

இப்படி எண்ணற்ற சொற்களைக் கவிதையாக்கியுள்ள பாங்கு மிகுந்த இன்புறத்தக்கது.

இறுதியாக இந்நூலில் இடம் பெறும் தொன்மைச் செய்திகளைப் பற்றிக் காண்போம். சமயக்குரவர் நால்வர்தம் அருளிச் செயல்களில் இருந்து சிவப்பிரகாசர் பல கருத்துக்களை எடுத்தாண்டு உள்ளார். அவை வருமாறு:

> 'சுருங்கக் கூறின் சைவ சமயத்துக்கு இது ஒரு சமய நூல். தத்துவ உலகிற்கு இது ஓர் அட்டவணை நூல். இலக்கிய உலகில் ஒரு மறுமலர்ச்சி உண்டாக்கிய புரட்சிகரமான ஆராய்ச்சி நூல். உலக வாழ்வியலுக்கு ஒரு கொள்கை நூல். அடியார்கள் வரிசையில் சண்டேசுரர் 'சிறிய பெருந்தகை' என வழங்கப் படுதல் போல சைவ சமய இலக்கிய உலகில் இது 'சிறிய பெருந்தகை' என்ற பேராசிரியர் முனைவர் இரத்தினசபாபதியின் கருத்து ஈண்டு எண்ணத்தக்கது.

நால்வர் நான்மணிமாலை நானிலம் போற்றும் நற்பனுவல். அதன் ஒளி நற்றமிழகம் எங்கும் வீச தமிழ்கூறு நல்லுலகம் முயல வேண்டும்.

77. நன்னெறியில் உவமைகள்

தி. மகாலட்சுமி, சென்னை.

மனிதன் மனிதனாக வாழ முற்பட்டபோது அறக்கோட்பாடுகள் தோன்றத் தொடங்கின. மக்களிடமுள்ள பலவிதக் குற்றங் குறைகளைக் களையத் தோன்றிய அறக்கோட்பாடுகள் தனிநூல்களாகவும், பிறநூல்களின் பகுதிகளாகவும் எழத் தொடங்கின. சமூக நோக்கோடு எழுந்த தொல்காப்பியம் மற்றும் சங்க நூல்கள் அறக்கோட்பாட்டிற்கும் இடம் தந்தன. சமூக விழிப்புணர்ச்சி குறித்து எழுந்த பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் இக்கோட்பாட்டையே முதன்மையாகக் கொண்டிருந்ததால் இவற்றில் பதினொரு நீதி நூல்கள் இடம்பெற்றுள்ளன.

குற்றங் குறைகளைக் களையச் சொல்லிச் சென்ற சமண பௌத்தரின் கீழ்க்கணக்கு நூல்களின் தன்மையை அடியொற்றியே சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, மணிமேகலை போன்ற நூல்களும் எழுந்தன. புராணங் களும் தொன்மச் செய்தி வாயிலாக நீதியை வலியுறுத்தின. பின்வந்த சமயச் சிந்தனையாளர் இறை நேயத்தை வெளிப்படுத்துவதோடு மனித நேயத்தையும் வலுப்படுத்த வேண்டும் எனக் கருதியதன் வெளிப்பாடே பிற்காலத்து எழுந்த எண்ணிறந்த நீதிச் சிற்றிலக்கியங்கள்.

ஆத்திசூடி, உலகநீதி, கொன்றைவேந்தன், நல்வழி, வாக்குண்டாம், வெற்றிவேட்கை எனும் நறுந்தொகை போன்ற நீதிநூல்களின் பாரம் பரியத்தில் தனக்கென ஓரிடத்தைப் பெற்ற நூலே துறைமங்கலம் சிவப்பிரகாசரின் நன்னெறி. காஞ்சிபுரத்தில் பிறந்த வீரசைவரான இவர் தமிழால் பெருமையும் சிறப்பும் பெற்றவர். சிவநெறி தழைத்தோங்க, பிறவியின் பயனைத் துய்க்க இலக்கிய உலகுக்கு நல்ல நூல்களைப் படைத்துத் தந்து மனித சமுதாயத்தினை மேலோங்கச் செய்ததில் இவருடைய பங்கும் எண்ணிப் பார்க்கத்தக்கது. இவர் இயற்றிய 34 நூல்களில் நீதிக்கெனத் தனியே எழுந்த நூல் இது ஒன்றேயாகும். முற்காலத்தில் சிறுவர்கள் ஆத்தி சூடி, கொன்றை வேந்தன், வாக்குண்டாம், நல்வழி எனக் கற்ற பின்னர் நன்னெறியைக் கற்றனர். இன்றும் சிறுவர்க்கு இம்முறை பின்பற்றப்பட்டு வருகிறது. அறநூல் வரிசை எதுவரினும் அதில் இதுவும் இடம் பெற்றிருத்தல் இதன் சிறப்பினை வெளிப்படுத்துகிறது.

நூல் எழுந்த சூழல்

சிவப்பிரகாசர் பொம்மபுரத்திற்கு வந்திருந்தபோது ஒரு நாள் தனிமையாகக் கடற்கரையடைந்து அங்குள்ள மணற்பரப்பிலே நன்னெறி வெண்பாக்களை எழுதிவிட்டு வந்து, அதனை ஏட்டில் எழுதி வருமாறு தன் தம்பி கருணைப் பிரகாசரிடம் கூற, அவரும் அவ்வாறே எழுதி வந்தனர் எனக் கூறுவர்.

நூல் நுவல் பொருள்

மகடூஉ முன்னிலையில் பாடப்பெற்ற இந்நன்னெறி 40 வெண் பாக்களால் ஆனது. இதுவன்றி விநாயகரை முன்னிலைப்படுத்தும் காப்புப் பாடல் ஒன்றும் உள்ளது. வன்சொலும் இனிதாதல் உண்டு, இனிய நெறியறிந்து பெறுக, செல்வம் பயன்படுத்துவோர்க்கே உரியது. நட்பின் பிரியாமை நன்று, காதலர் ஒருமை, தன்னலங்கருதாமை, புலன்களால் வரும் துன்பம், உடம்பில் உயிர் அமைப்பு, அன்பின் உதவுக, செல்வச் செருக்கும், கல்விச் செருக்கும், தற்பெருமையும் விடுக, அன்பிலார்க்குச் செல்வம் பயனில்லை, வெறுப்பிலும், வறுமையிலும் உதவி, இன்சொல், நற்குணம், அடக்கம், கல்வியின் சிறப்பு, மனவுறுதி, மேலோர்; கீழோர் இயல்பு, காலத்தில் அறஞ்செய்க, தக்காருக்கு உதவுக, தக்கார் தொடர்பு கொள்க போன்ற வாழ்க்கைக்கு உதவும் கருத்துகளை இந்நூல் பேசுகிறது.

இக்கருத்துகளை விளக்கப் பின்வருமாறு அழகிய உவமைகளையும் உவமேயங்களையும் அமைப்பதன் வழி சமூகத்திற்குத் தேவையான கருத்துகளை இந்நூல் மனத்தில் ஆழமாகப் பதிய வைக்கின்றது.

இரண்டு விழிகளிலும் பார்ப்பது ஒரு பொருளை அல்லவா? அதுபோலத் தலைவனும் தலைவியும் மனம் ஒத்து நற்செயல் செய்து வாழ வேண்டும். (6)

இனிய வாழைப்பழத்தைப் பால் விரும்பும்; புளியங்காடி விரும்பாது. அதுபோல் மேன்மக்கள் கற்றோரை விரும்புவர்; கீழ்மக்கள் விரும்பார் (35).

இந்நூலில் உவமை மட்டுமன்றி கற்பனை, இயற்கை வருணனை, சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் போன்றவையும் அமைந்து நூலைச் சிறக்கச் செய்கின்றன. மேலும் வஞ்சகர் - வஞ்சகமற்றவர், நல்லோர் - தீயோர், மேலோர் - இழிந்தோர், அறிவாளி - மூடன், பெரியோர் - சிறியோர், கற்றோர் - கல்லாதவர் என்ற இருநிலை களில் ஒப்பிட்டுப் பேசுவதும் நூலின் தன்மையை உயர்த்திக் காட்டுகின்றது. தனிமனித ஒழுக்கம், பொது ஒழுக்கம், அறிவைப் பயன்படுத்துவதற்கான வழிமுறை, வேண்டுவன, வேண்டாதன, மனிதப் பிறவியின் ஈடேற்றம், மனித நேயம், வாழ்க்கைத் தத்துவம், ஞானம்,

பக்தி, சமூக அறம், நீதிக்கருத்து போன்றவை நூலின் உள்ளடக்கமாய் அமைகின்றன. இல்லறத்தார்க்குக் கல்வியோடு செல்வத்தின் தேவையும், துறவறத்தாருக்கு தவம் கைகூட ஐம்புலன் அடக்கமாகிய முயற்சியும் வலியுறுத்தப்படுகின்றன. கல்லாத மக்கள் கடிந்துரைக்கப்படுகின்றனர். பொருளாதாரச் சமத்துவநிலை பெறுதற்குரிய சிந்தனைகள் புலப்படுத்தப் படுகின்றன. பொதுவில் இந்நூல் அது தோன்றிய சூழலையும், முற்காலச் சமுதாய அமைப்பையும் தெளிவாக உணர்த்தும் காலக் கண்ணாடியாக உள்ளன என்றால் அது மிகையாகாது.

உவமை

இந்நூலின் ஒவ்வொரு பாடலும் மக்களுக்கு இன்றியமையாத நீதிகளை அழகிய உவமைகளுடன் கூறுகிறது. உவமைகள் பலராலும் அறியப்பட்டனவாகவும், உவமேயங்களுடன் மிகப் பொருத்தம் உள்ளன வாகவும் அமைந்து கற்போர்க்கு மகிழ்ச்சியையும் வியப்பையும் ஊட்டு கின்றன. மக்களின் உடலுறுப்புக்களாகிய கண், கை, பல், நா முதலிய வற்றின் இயல்புகளை ஒன்பது பாடல்கள் எடுத்தியம்புகின்றன. ஆகாயம், பூமி, ஞாயிறு, திங்கள், கடல், காற்று, மழை, வெள்ளம் முதலிய இயற்கைப் பொருட்களையும், மா, நெல், வாழை, பசு, பாம்பு, புலி முதலிய பயிற்சிமிக்க பொருட்களையும் உவமையாக்கியுள்ளமை போற்றத் தக்கது. இங்கு, இவர் கையாண்டுள்ள உவமைகளை இயற்கை, புராணம், தத்துவம், விழிப்புணர்வு என்றவாறு வகைப்படுத்திக் காணலாம்.

இயற்கை சார்ந்த உவமைகள்

இயற்கையோடு இயைந்து அறிவார்ந்த பாடங்களைப் பெற்ற சிவப்பிரகாசர், தாம் கண்ட வாழ்வியல் செய்திகளை அவ்வியற்கை உவமைகளைக் கொண்டே வெளிப்படுத்துகிறார்.

கடலானது தந்நீரைக் கழிகளுக்கும் சென்று வார்ப்பது போலப் பெரியோர், தம்மின் தாழ்ந்தவர் ஆயினும் தேடிச் சென்று துயர் துடைப்பர் என்று கூறும்போது பெரியோரைக் கடலுக்கும், சிறியோரைக் கழிக்கும் ஒப்பிடுகிறார் (16).

கடல் நிலவின் வருகையால் பொங்கும்; சூரியன் வருகையால் பொங்காது என்ற உவமையைக் கூறி மக்கள் இன்சொல்லன்றி கடுஞ்சொல் விரும்பார் என்றுணர்த்துகிறார். இங்கு அலைகடல் அடங்குவது சுடுசொல்லார்க்கும், பொங்குவது இன்சொல்லார்க்கும் உவமையாகிறது (18).

அறிவுடையோர்க்கு நல்லோர் வரவு இன்பமும், தீயோர் வரவு துன்பமும் அளிக்கும் என்பதற்குத் தென்றல் காற்றால் மாமரம் மகிழ் தலையும், சூறைக்காற்றால் வருந்துதலையும் காட்டுகிறார். இந்நிகழ்வில்

தென்றலுக்கு நல்லவரும், சூறைக்காற்றுக்கு வன்நெஞ்சரும் ஒப்புமையாக்கப் பட்டுள்ளனர்.

புராணஞ் சார்ந்த உவமை

நீதிக்கருத்தை வலியுறுத்திச் சொல்ல, மக்களது சிந்தனையில் நீங்காது கிடக்கும் தொன்மக் கதைகளை உவமையாக்கும் இலக்கிய மரபிற்கேற்ப இவ்வாசிரியரும் புராண அடிகளைச் சுட்டி, அக்கதைகளைப் படிப்பவர் கண்முன் கொண்டுவரத் தவறவில்லை.

நல்லுள்ளம் கொண்டவர் பேச்சு சற்று கடுமையாக இருப்பினும் நன்மை தரும். நல்லுள்ளம் அற்றவரது பேச்சு இனிமையாக இருப்பினும் தீமை தரும். அதுபோல் சிவனிடம் அன்புள்ள சாக்கிய நாயனார் கல்லால் எறிந்தும் சிவன் மலராக ஏற்று அருள் செய்தார். சிவயோக நிலையில் இருந்த சிவனைக் கலைக்க நினைத்து மலரால் எய்தான் மன்மதன். சிவன் அவரை நெற்றிக் கண்ணால் எரித்தார். இப்பாடல் கூறுபவரின் சொல், செயல், பயன் ஆகியன பற்றி விளக்குகிறது (2).

இலக்கணம் வழுவாது கற்ற ஒருவர் முன் அவ்வாறு கல்லாதவரின் அறிவு மட்டுப்பட்டே தெரியும் என்பதில் கற்றவர்க்குச் சிவனின் சடைமுடியிலுள்ள கங்கையும், கல்லாதார்க்குப் பொய்த்தோற்றம் கொண்ட ஆகாச கங்கையும் உவமைகளாகின்றன (21).

பெருஞ்செல்வத்திலே பிறந்து விட்டோம் எனப் பெருவகந்தை பிடித்தொழுகக் கூடாது என்பதை உணர்த்த மேருமலை கூடப் பாற்கடலைக் கடையுங் காலத்து மத்தாக இருந்து வளைந்து அசைந்த தொன்மைக் கதையை நினைவுபடுத்துகிறார். (14)

தத்துவம் சார்ந்த உவமை

சமயச் சார்போடு அறநெறி கூறும் இந்நூலில் உவமைகள் தத்துவார்த்தத்தோடு அமைந்துள்ளன. சுழற்காற்றால் சிறுதுரும்பு பாதிக்கப் படும். கற்றூண் பாதிக்கப்படாது. அதுபோல் பாமரர்க்கு ஐம்புலன்களால் துன்பம் ஏற்படலாம். ஆயின் ஞானியர்க்கு ஏற்படாது. இதில் புயல்காற்று ஐம்புலனுக்கும், மெய்யறிவாளர் கற்றூணுக்கும் ஒப்பிடப்பட்டுள்ளன.

ஒன்பது ஓட்டைகளை உடைய உடம்பினின்று உயிர் எளிதில் வெளியேறாமல் தங்கியிருப்பது வியப்புக்குரியது. அதுபோல் துளை விழுந்த பானையில் நீர் நில்லாமல் போவது இயல்பு. நீர் நின்றால் அதுதானே வியப்பு என விரிசல் பானையை உடலுக்கும், நீரினை உயிருக்கும் ஒப்பிடுவது நகைச்சுவை உணர்வை ஏற்படுத்துவதோடு சிந்திக்கவும் வைக்கிறது.

மொழியிலார்க் கேது முதுநூல் தெரியும்
விழியிலார்க் கேது விளக்கு (15)

என்ற வினாக்களை எழுப்பி ஊமை நூலைப் படித்துப் பயன் பெறவும், குருடன் ஒளிவிளக்கால் பயன்பெறவும் இயலாது என்கிறார். அதுபோல் அன்பு இல்லாதவர் எவற்றைப் பெற்றிருப்பினும் அவற்றால் பயன் இல்லை என்பதையும் கூறுமவர் மூடரைச் செவிடர்க்கும், அந்தகர்க்கும் உவமையாக்கியுள்ளார்.

விழிப்புணர்வூட்டும் உவமை

வாழ்க்கைக் கடலைக் கடக்க தன்னறிவு மட்டுமன்றி, தாம் உணர்ந்து போற்றிய புத்திக் கொள்முதலும், பிறர் அறிந்து பாராட்டிய பட்டறிவுச் செய்திகளும் விழிப்புணர்வை ஏற்படுத்தவல்லன. அவ்வகையில் ஆசிரியர் தாம் கண்டு கேட்டுத் தானறிந்த செய்திகளைச் சுட்டத் தவறவில்லை.

உதவாதவரிடத்திலுள்ள பொருளைப் பெற, அவருக்கு வேண்டிய வரைக் கொண்டு பெறல் வேண்டுமென்ற கருத்து, ''பசுவின் பாலை நேரடியாகப் பெறமுடியாது. எனினும் கன்றின் துணையோடு பெறுதலை'' வைத்து உணர்த்தப்படுகிறது (3).

பிறருக்கு உதவாதவரிடம் உள்ள பொருளை எடுத்து ஒருவர் அறச்செயலுக்குப் பயன்படுத்தினால் அது அவர் பொருளாகவே கருதப்பெறும் (4) என்பதை உணர்த்தும்போது, ''கடல் நீரை மேகம் எடுத்து மழையாகத் தர மக்கள் மழை தந்த மேகத்தைப் போற்றுவரே அன்றி நீர் தந்த கடலை நினையார்'' என்கிறார்.

பகைத்துக் கூடினவரது நட்பு ஆழங்கால் படாது என்பதை, உமி நீங்கிய நெல் முளைக்கும் வலிமையை இழத்தலை வைத்து உணர்த்துகிறார் (36).

பகைவனின் வலிமை கூடியிருப்பின் அவரைவிட வலியவரோடு சேரின் அச்சம் இருக்காது என்று கூறவரும்போது ''சிவன் தலையிலுள்ள பாம்பு கருடனுக்கு அஞ்சாது'' (6) என்ற தொன்மக் கருத்தை எடுத்தாள்கிறார்.

இந்த வகைப்பாடுகளில் மட்டுமின்றி இவரது உவமைகளை எக்கோணத்தில் வேண்டுமானாலும் அணுகிப் பல்வேறு வகைப்பாடுகளில் அமைத்து இன்புறல் இயலும்.

ஆசிரியர் முந்தையோர் கருத்துகளை வழிமொழிவதுடன் அவர்தம் உவமைகளையும் கைக்கொண்டு, அவ்வுவமைகளைத் தன்வயப்படுத்தியுள்ள பாங்கு படித்து இன்புறத்தக்கது. ஈண்டு இது குறித்து ஓரிரு காட்டுகளைக் காண்போம்.

நெல்லிலிருந்து உமி நீங்கினால் அந்நெல் முளைக்கும் திறனை இழக்கும் என்ற கருத்தை உவமையாக்க எண்ணிய மூதுரை,

பண்டு முளைப்பது அரிசியே ஆனாலும்
விண்டு உமி போனால் முளையாதாம் (11)

என்கிறது.

இதனை ஒத்து நன்னெறி,

நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோல்
புல்லுனுந் திண்மை நிலைபோம் (5)

என்று கூறுகிறது.

நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம் (10)

என்கிறது மூதுரை.

நெல்லுக் கிறைப்பதே நீரன்றிக் காட்டுமுனி
புல்லுக் கிறைப்பரோ போய் (36)

என்கிறது இந்நூல். நெல்லுக்கு இறைத்த நீர் புல்லை அடையினும் இறைக்கப்பட்டது நெல்லிற்கே என்ற உவமை இரண்டிலும் ஒத்து அமைகிறது.

மிகச்சிறந்த உவமைகளின் வழி ஒரு சிறந்த கற்பனையாளர் என நிறுவுகிறார். நடைமுறைக் காட்சிகளை எடுத்தாண்டுள்ளமையால் உவமைகள் பொருத்தமுறவும், எதார்த்த நிலையிலும் அமைந்து சிறக்கின்றன.

வாழ்வியலுக்குத் தேவையான கருத்துகளால் வடிக்கப்பட்ட இந்நூல் சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவரையும் ஈர்க்கவல்லது. சங்கம் மற்றும் சங்கம் மருவிய காலத்தில் இடம்பெற்றுள்ள எண்ணிக்கையான நாற்பதைப் பெற்றுள்ள இந்நூல் அளவிற் சிறியதே ஆயினும், இதன் கருத்துகளை விரிக்கின் விரிந்து கொண்டே செல்லும் இயல்பினைதாக அமைகிறது. ஈண்டு கல்வி, செல்வம், அனுபவக் கூறு, நிலையாமை போன்ற கருத்துகள் சிந்திக்கப் பெற்று, தக்கவற்றோடு ஒப்பிட்டும் பார்க்கப்பட்டுள்ளன. அறம், பொருள், இன்பம், வீடு என்று மட்டு மல்லாமல் அன்பு, அறிவு, தெளிவு என்ற நிலையிலும் கருத்துகளைக் கோர்த்துள்ள இச்சிந்தனைக் கருவூலம் வாழ்க்கைக்கும் ஞானவழிக்கும் மட்டுமல்லாது தமிழ்மொழிக்கும் வளமை சேர்க்கும் எனில் அது மிகையாகாது.

78. சிவப்பிரகாசரும் வீரசைவமும்

சு. மதியழகனார், ஈரோடு.

சிவப்பிரகாசர்

துறைமங்கலம் சிவப்பிரகாசர், நல்லாற்றூர் சிவப்பிரகாசர், என்றெல்லாம் இந்நாளில் போற்றப்படும் 'கற்பனைக் களஞ்சியம்' சிவப்பிரகாசர், காஞ்சியம்பதியைச் சேர்ந்தவர். 17-ஆம் நூற்றாண்டினர். தமிழில் பிரபுலிங்கலீலை முதலான முப்பத்திரண்டிற்கும் மேற்பட்ட நூல்களைச் செய்தவர். 32 ஆண்டுகளே வாழ்ந்த துறவியர் ஆவர். இவர் வீரசைவ மரபினர்.

வீரசைவம்

காமிகம் முதல் வாதுளம் ஈறாக ஆகமங்கள் இருபத்தெட்டாகும். இவை தமிழில் இருந்து பிறரும் அறிந்து கொள்வதற்கு ஏதுவாக வடமொழியில் செய்யப்பட்டன. சிவபெருமானுடைய உச்சிமுகத்தி லிருந்து ஆகமங்கள் தோன்றின என்பவர். ''மன்னு மாமலை மகேந்திர மதனில் சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும்'' என்கிறது திருவாசகக் கீர்த்தித் திருவகவல். ''ஆகமங்கள் சைவ சித்தாந்தம் ஆகும்'' என்னும் சாத்திரத் தொடர் சைவத்தின் முடிந்த முடிவினை உணர்த்தும். அசுத்த சைவம், மார்க்க சைவம், சுத்த சைவம், வீரசைவம் என திருமந்திரம் நால்வகைச் சைவ நெறி பற்றிக் கூறும், வீரம் என்பது பக்தி வைராக்கியத்தைக் குறிப்பதாகும். ''வீரம் எம்மால் விளம்பும் தகையதோ?'' ''வீடும் வேண்டா விறலின் விளங்கினார்'' என்பன திருக்கூட்டச் சிறப்பினைக் குறிக்கும் பெரியபுராணத் தொடர்களாகும். வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம் என்னும் நூல்கள் தவத்திரு பேரூர் சாந்தலிங்க அடிகளாரால் அருளப் பெற்றவை. இவர் சிவப்பிரகாசரது தங்கை ஞானாம்பிகையின் கணவர் என்பது குறிப்பிடத்தக்கது. காமிக ஆகமம் வீராகமம், வாதுளாகமம் முதலான ஆகமங்களின் நெறிப்பட்டதே வீரசைவம் ஆகும்.

வீரசைவம் ஓர் இயக்கம்

வீரசைவம் ஒரு சமயமன்று; மதமன்று; மார்க்கமுமன்று. அஃது ஓர் இயக்கமாகும். அவ்வியக்கம் பழந்தமிழகத்தில் தோன்றி, உலகெங்கும் பண்டு பரவியிருந்தது. ஐம்பெருங்குரவர்களால் போற்றி வளர்க்கப்

பட்டு வழிவழியாகப் பேணப்பட்டு வந்த தொன்மைச் சிறப்பினது. இடைக்காலத்தில் கர்நாடக தேசத்தில் தோன்றிய பசவேசர் கல்யாண் என்னுமிடத்தில் 'சிவானுபவ மண்டபம்' அமைத்து, உலகளாவிய ஐந்து மாநாடுகளைக் கூட்டி வீரசைவ இயக்கத்திற்குப் புத்துயிர் ஊட்டினார். இவ்வரலாறுகள் பசவபுராணம், பிரபுலிங்க லீலை முதலான நூல்களால் அறியப்படுவனவாகும்.

வீரசைவத்தில் சாதிப்பாகுபாடில்லை; ஆண் பெண் வேறுபாடில்லை; ஐவகைத் தீட்டுகளுமில்லை. அவரவர் ஆன்ம ஈடேற்றத்திற்கு அவரவரே முயல வேண்டும். அதாவது, பெண்டிரும், தாழ்ந்த குலத்தில் பிறந்தவர்களும் உயர் குலத்து ஆடவர்களைப் போலவே, லிங்கதாரணம், விபூதி உருத்திராக்க தாரணங்களைச் செய்து கொண்டு, தீட்சை பெற்று சிவபூசை செய்து சிவஞானியராய்த் திகழலாம். பாமரர்களுக்கும் இதில் தடையில்லை. ''ஆசூசம் இல்லை'' என்ற தொடக்கத்து திருமந்திரப் பாடலும், பஞ்சசூதகவிதி நிடேதனம் என்னும் வீரசைவ நூலும் இதனை வலியுறுத்தும். சிவபூசைக்கு இடைத்தரகர்கள் தேவையில்லை, மனிதராகப் பிறந்தவர்கள் அனைவர்க்கும் ஒரே பிறப்பில் முக்தியடையும் உரிமை உண்டு. அதுவும் வாழும்போதே முக்தி அனுபவத்தைப் பெற்றுவிட வேண்டும். வீட்டில் குழந்தை பிறந்தாலோ, யாவரேனும், இறந்து விட்டாலோ, பெண்கள் மாதவிலக்கு ஆகிவிட்டாலோ, பிறப்பால் தாழ்ந்த சாதியினரைத் தீண்டிவிட்டதனாலோ, பிறர்க்குப் படைத்து எஞ்சிய உணவை உண்பதனாலோ, குளிக்கவில்லை என்ற காரணத்தினாலோ இஷ்டலிங்க பூசை தடைபடாது. இடக்கையில் சிவலிங்கப் பெருமானை எழுந்தருளச் செய்து வழிபடுவதே முறை. சிவப்பிரகாசர் இயற்றிய ''கைத்தலமாலை'' என்னும் நூலில் ''முன்னம் மால் அயன்..... என்ன மாதவம் செய்ததோ என் கைத்தலமே'' என்று பெருமைப்படுகின்றார்.

இஷ்டலிங்க வணக்கம்

பூவாய் நெடும் கோட்டு உறுபசும் தேன்
    கைகால் முடங்கு பொறியிலிதன்
நாவாய் ஒழுகிற்று எனஉலகம்
    அளந்த மாலும் நான்முகனும்
காவாய் எனநின்று ஏத்தி எடுப்பத்
    தானே வந்து எம்கர தலத்தின்
மேவா அமர்ந்த மாமணியைத்
    தொழுது வினைக்கு விடைகொடுப்பாம். -சிவப்பிரகாசர்

சிவப்பிரகாசரும், வீரசைவமும்

சிவப்பிரகாசர் இயற்றிய நூல்களுள் பெரும்பான்மையானவை வீரசைவத்தினைப் போற்ற எழுந்தனவே ஆகும். அந்நூல்களுள்

காணப்படும் வீரசைவ நெறியினை இவண் ஒருவாறு தொகுத்துக் காண்போம்.

வீரசைவத்தில் ஐவகை ஒழுக்கம், எண்வகைக் காப்பு, அறுவகை இணையும் நிலை என்பன இன்றியமையாதன. அவற்றை ஈண்டு சுருக்க விளக்கமாகக் காண்போம்.

ஐவகை ஒழுக்கம்

1. இலிங்காசாரம்

ஒளிநெறி, செந்நெறி, சாதி குலம் பிறப்பென்றும்... நெறியில்லா நெறியின் நீங்குதல். (பெருநெறி)

2. சதாசாரம்

தன்னிறுத்தல், தாளாற்றித் தந்த பொருளெல்லாம்...

தம் இல் இருந்து தமது பாத்து உண்டற்றால் (ஆள்வினை உடைமை)

3. சிவாச்சாரம்

வீர ஒழுக்கம், மக்கள் தொண்டே மகேசன் தொண்டு, வேறுபாடு கருதாமல், உள்ள நெகிழ்ச்சியுடன் (அன்புடைமை).

4. பிருத்தியாச்சாரம்

தாழ்வென்னும் தகவு, அனைவரையும், அணைத்து ஆதரிக்க உலகுயிர்களின் பணியாளராகத் தன்னைக் கருதுதல் (பணிவுடைமை).

5. கணாச்சாரம்

கூட்டமைப்பு ஒழுக்கம் (சங்கம்) 'அடியேன் உன்றன் அடியார் நடுவுள்ளிருக்கும் அருளைப் புரியாய்''

'எனைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்'

'கட்டறுத்து உன் தொண்டரொடும் கூட்டி' (திருவாசகம்)

எண்வகைக் காப்பு

1. குரு

சிவமே குருவாக வருதல். சீவனின் உய்விற்கு, தீட்சை செய்து மோட்சத்தை உதவுபவர். காயத்தை இலிங்க மயம் ஆக்குபவர் (மாதா-பிதா; குரு-தெய்வம் கு-இருள், ரு-போக்குபவர்) 'இறவாமல் பிறவாமல் எனையாள் சத்குருவாகி'-அருணகிரிநாதர்.

2. இலிங்கம்

சிவக்கொழுந்தீசர், 'தூங்காணை மாடச் சுடர்க்கொழுந்து; சோதிர்லிங்கம், சிவக்குறி - தாலிபோல, சிவம் எழுந்தருளுதற்குரிய திருமேனி, அஷ்டாஷ்ட மூர்த்திகளும் இதனுள் அடக்கம்.

3. சங்கமம்

சங்கமர்களைச் சிவமாகவே பாவித்தல், (சித்தாந்த சிகாமணி ரேணுகாச்சாரியார்) அல்லமப் பிரபுதேவர் - உத்தமோத்தும சங்க மூர்த்தி, பசவேசர், தம்மை ''சங்கமர்'' என்றே கூறிக்கொள்ளல்.

4. விபூதி

ஒப்பற்ற செல்வம், எல்லாம் எரிந்தபின் மிஞ்சுவது - நித்திய வஸ்து. பசுவின் மலத்தை சுட்டெரித்த சாம்பல் (ஆன்மாவின் ஆணவ மலத்தைச் சுட்டெரிக்கும் அருள்) முடிவில் ஒரு பிடி சாம்பல், சுடலையாடி, வேள்வி நீறு.

5. உருத்திராக்கம்

சிவபெருமான் கண்ணில் உதிர்த்த கருணைத் துளிகள் (திரிபுன தகனம்) உருத்திராக்கம் அணிவதால், சாதகனுடைய மலத்திரையங்கள் அடங்கி தூய்மை அடைகிறது.

6. மந்திரம்

நினைப்பவரைக் காப்பாற்றுவது மந்திரம். வர்ணம், ஸ்வரத்தோடு கூடியிருப்பதால் சித்திக்குச் சிறந்த சாதனம். மூலமந்திரம் சப்தகோடி மந்திரங்களில் பஞ்சாட்சரமே சிரேஷ்டம். சிவரூபம், 'சிவாய நம'; சி-சிவம், வ-அருள், ய-ஆன்மா, ந-மறைப்பாற்றல், (கன்ம மாயைகள்), ம-ஆணவ மலம். 'நமசிவய'; நம-அங்கம், சிவ-லிங்கம், ய-கமரஸ்யம்.

7. பாதோதகம்

பாதம்-குரு, உதகம்-சீடர், திருவடி-ஞானம், 'தாடலை' உதகம்-சுத்த ஜலம், அருள்நீர்-அகரம், அருள்நீர் ஆட்டிக் கொள்ளுதல் - தீட்சை, இதனால் தூல, சூக்கும, காரண தேகங்கள் சுத்தியடைந்து, இஷ்ட, பிராண, பாவ, லிங்க சம்பந்தத்தை அடையும் தேகம் இலிங்க மயமாகும். பருகவும், புழங்கவும் திருவடிநீர்.

8. பிரசாதம்

வீரசைவர் எந்த பொருளையும் இஷ்டலிங்கத்திற்கு அர்ப்பிதம் செய்த பின்னரே நுகர்வர். தீர்த்தமின்றி பிரசாதம் அமையாது. புலநுகர்ச்சி மடைமாற்றம். 'அஞ்சும் அடக்கா அறிவறிந்தேனே' (திருமந்திரம்) சேடம், இஷ்ட, பிராண, பாவ லிங்கப் பிரசாதங்களாகப் பிரகாசிக்கும்.

அறுவகை, இணையும் நிலை

'சிந்தனை செய்ய மனம் அமைத்தேன்' என்றற்றொடக்கத்து சேரமான் பெருமாள் நாயனாரது 11-ஆம் திருமுறைப்பாவாலும், 'தலையே நீ வணங்காய்' என்றற்றொடக்கத்து அப்பர் பெருமானது திருவங்கமாலைத் தேவாரப் பாடலாலும், 'உண்ட ஊன் உனக்காம்'

என்னும் திருவிசைப்பாவாலும், கொண்டும், கொடுத்தும், குடி குடி ஈசர்க்கு ஆட் செய்மின்' என்னும் திருப்பல்லாண்டினாலும், ஏகனாகி இறைபணி நிற்றல்' என்னும் சித்தாந்தச் சாத்திரத் தொடராலும், இன்னும் இது போல் வருவன பிறவற்றாலும் ஐம்புலன்களால் நுகரப் படுவன அனைத்தையும் நன்றியுணர்வோடு சிவார்ப்பிதம் செய்து பிரசாதமாகக் கொள்ளுதல் வேண்டுமென்பது அறியப்படும்.

ஒன்றொரு விடயந்தன்னில் உறுசுவை நிறைவு என்றாக்கி
என்றும் எம்முகத்து அளித்திட்டு எம் பிரசாதங்கொண்டு
துன்றுறு கருமம் உன்னாத் தூய்மை இன் வீரசைவத்து
அன்றி வேறொரு மார்க்கத்தின் அடுக்குமோ வடுக்கன் மாதே

- சிவப்பிரகாசர் (பிரபுலிங்க லீலை)

பக்தி – 'ஞானம் கனிந்த நலம்'

'கலந்த அன்பாகி கசிந்து உள்ளுருகும் நலம்' என்றார் மணிவாசகப் பெருந்தகை. ''நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து, அன்பே நிறைந்து நிறைந்து, ஊற்றெழும் கண்ணீர் அதனால் உடம்பு நனைந்து நனைந்து.....என்னுரிமை நாயகனே என்று வளைந்து வளைந்து ஏத்துதும் நாம் வம்மின் உலகியலீர்! மரணமிலாப் பெருவாழ்வு வாழ்ந்திடலாம் கண்டீர்'' என அறை கூவுகின்றார் வள்ளல் பெருமானார். இச்சடுத்தல பாவனையால் சீவன் (அங்கம்) முறையே, சுத்த தேகம் (ஸ்வர்ண தேகம்), பிரணவ தேகம் (ஒளி உடல்), ஞான தேகம் (அருள் உடல்) வாய்க்கப் பெறுதல் திண்ணம்.

அபிடேகாதி செய்தபின், கரஸ்தலத்தில் வந்து அருள்கொண்ட மூர்த்தியை உற்று நோக்கி, பின் அந்தர் தியானத்தில், பூசகன் அட்டவணையில் கண்டுள்ளபடி தனது அந்தந்த அங்கத்தில், அந்தந்த ஆதாரஸ்தானத்தில், அந்தந்த பக்தி பெருகும்படி தியானம் செய்து, அந்த அந்த சிவசாதாக்கியங்களில் ஐக்கியப்படும்படி ஒன்றி நினைந்து, முடிவில் சிவார்ப்பிதமாய் நிற்றல் சடுத்தல யோகமாகும். பக்தி ஞானமின்றி இது நிகழாது.

சிவஞானம் ஒன்றுமே முக்தியடைதற்கு வழி, ஏனைய சரியை, கிரியை, யோகங்கள் ஞானம் அடைதலுக்கு ஏது. 'ஞானம் என்பது ஈசன் பால் அன்பே' (சித்தாந்த சாத்திரம்) பக்தி-ஞானம் கனிந்த நலம்; ஐந்தாம் பேறு.

கிரியை செய்யும் முறை

அங்கன் ஒருவனே அறுவகை நிலைகளில் நின்று ''சதி-பதி-தர்ம நெறி''யில் தாம் அனுபவிக்கும் பொருள்களை சிவப்பிரசாதமாகக் கொள்கிறான். அதற்கேற்ப லிங்கம் ஒன்றே அறுவகையாக நின்று அருள்பாலிக்கின்றது.

வழிபடுவதற்குரிய மூர்த்திகள், குரு, லிங்கம், சங்கமம் என்பவனே. இலிங்கம் ஒன்றே பரம்பொருள், அதனை உணர்த்துபவரே குரு, அவரை அடைந்தவர்களே சங்கமர்.

அட்டசைவல்

கொடுத்துக் கொள்ளும் நெறி (கிரியை)
(அங்கமும் இலலிங்கமும் இணையும் நிலை)

அங்கலிங்க சத்திபத்தி அத்தமுக அர்ப்பித
சேடங்களின் அட்ட சயிலமெனச் சொன்னானோ.

-சிவப்பிரகாசர்

(சிவஞான பாலய தேசிகர் தாலாட்டு - 31-வது கண்ணி)

அங்கம் (1)	பக்தி (2)	கிரியை (கை) (3)	அர்ப்பிதம் (அ) நிவேதம் (கொடுத்தல்) (4)	இலிங்கம் (5)	சக்தி (6)	முகம் (பரு உடலில் நிற்குமிடம்) (7)	சேடம் (பிரசாதம் பெறுதல்) (8)
1. பக்தன்	சத்பக்தி	நற்சிந்தை	மணம்	ஆசார லிங்கம்	கிரியா சக்தி	நாசி	கந்தப் பிரசாதம் (இன்ப சேடம்)
2. மாகேசன்	நைட்டிக பக்தி	நற்புத்தி	சுவை	குரு லிங்கம்	ஞான சக்தி	நாக்கு	இரசப் பிரசாதம் (இன்ப சேடம்)
3. பிரசாதி	அவதான பக்தி	நிர் அகங் காரம்	ஒளி	சிவ லிங்கம்	இச்சா சக்தி	கண்	ரூபப் பிரசாதம் (இன்ப சேடம்)
4. பிராண லிங்கி	அனுபவ பக்தி	நல்மனம்	ஊறு	சங்கம லிங்கம்	ஆதிசக்தி	தோள்	ஸ்பரிசப் பிரசாதம் (இன்ப சேடம்)
5. சரணன்	ஆனந்த பக்தி	நல்ஞானம்	ஓசை	பிரசாத லிங்கம்	பராசக்தி	காது	சப்தப் பிரசாதம் (இன்ப சேடம்)
6. ஐக்கியன்	சமரச பக்தி	நற்பாவம்	திருப்தி	மகா லிங்கம்	சிற்சக்தி	உள்ளம் திருப்தி (நிறைவு)	பர மானந்தப் பிரசாதம் (பேரின்ப சேடம்) - சிவன் தன்னையே ஈதல்.

இஃது அட்டசயிலம் (எண்வரை ஏறுதல்) எனப்படும். இதுவே தகராலய வித்தையும் ஆம், ஈண்டு விரிப்பிற் பெருகும் என்பதனால் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு சடுத்தலங்கள் ஒன்றுக்கொன்று சம்பத்தித்துக் கொண்டிருக்கின்றன.

ஸ்தூல, சூக்கும, காரண தேகங்களில் இஷ்ட, பிராண, பாவ லிங்கங்கள் பதிந்து, குரு லிங்க, சங்கம பக்தியாகத் திகழ்ந்து அங்க லிங்க ஐக்கியம் அடைகின்றான்.

இவற்றின் விரிவெல்லாம் தக்கார் வாயிலாகவும் சித்தாந்த சிகாமணி முதலான நூல்களின் வாயிலாகவும் அறிந்து கொள்க. தீட்சை பெறும் காலத்து குருவினால் உயர்த்தப் பெறும்.

மேற்கோள் செய்யுட்கள்

"ஆசார லிங்கமாய் நாசிதனிலே இருந்து மணமே கொள்ளுவீர்
அரியகுருலிங்கமாய் நாவுதனிலே இருந்து அமுதுசுவையே கொள்ளுவீர்
தேசார்ந்த சிவலிங்கமாய் விழியிலே நின்று திருவுருக் கண்டு மகிழ்வீர்
செய்ய சங்கம லிங்க மதினின்று திகழ்பரிசமே கொள்ளுவீர்,
மாசேதுமில்லாத பிரசாதலிங்கமாய் வந்து செவியோசை கொள்ளுவீர்
மனமதனிலே மகாலிங்கமதுவாய் நின்று மகிழ்விடயமே கொள்ளுவீர்
தாசோக மார்க்கமுறு பக்தர்மேற் றயவாய் சடுத்தலமும் லிங்கமான
தற்பரானந்த சிவமே இஷ்டலிங்கமே சச்சிதானந்த சிவமே"

(சச்சிதானந்த மாலை)

நாசியின் கண் வீற்றிருந்து மணத்தைக் கொண்டும்,
நல்லதொரு நாவிலிருந்து சுவையே செற்றும்
தேசிருக்கும் விழியிருந்து வடிவைத் தேர்ந்தும்
திகழ்மேனி தனில்மேவி ஊற்றை உற்றும்
பேசிருக்கும் செவிமருவி இசையைப் பெற்றும்
பெரிய உளந் தனிலிருந்து நிறைவைக் கொண்டும்
ஆசிருக்கும் பிறவிநெறி அனைத்தும் மாற்றும்
அண்ணலே உனது நிவேதனமே உண்பேன்

(வீரசைவ சிவ பூசா விதி)

இலிங்கம் - சிவம், அங்கம் - அருள், ஆன்மா, உடல்.

இலங்குவது இலிங்கம், அங்கி-சிவம். 'அங்க அங்கி பாவம்' என இதனைச் சிவஞான சித்தியார் செய்கிறது.

இலிங்கம் - இஷ்ட, பிராண, பாவ லிங்கம் (இலிங்கமும் சக்தியும் நிற்கும் நிலை)

அங்கம் - தியாக, போக, யோகாங்கம் (அங்கமும், பக்தியும் நிற்கும் நிலை)

காயத்துள் நின்ற கடவுள்

'உள்ளம் பெருங்கோவில் (பாவ லிங்கம்), 'சீவன் சிவலிங்கம்' (பிராணலிங்கம்), 'ஊன் உடம்பு ஆலயம்' (இஷ்டலிங்கம்) என்பவர் திருமூலர். (திருமந்திரம்-1823).

ஆயத்துள் நின்ற அது சமயத் தோரும்
காயத்துள் நின்ற கடவுளைக் காண்கிலர்
மாயக் குழியில் விழுவர் மனைமக்கள்
பாசத்தில் உற்று பதைக்கின்ற வாறே. (திருமந்திரம்-1530)

வழிபடும் முறை	மூவுடல் (அங்கம்)		முச்சுடர் (லிங்கம்)
1. கையில் எழுந்தருளச் செய்து (புறப்பூசை)	தூல உடம்பு (உருவம்)	-	இஷ்டலிங்கம்
2. மனத்தில் எழுந்தருளச் செய்து (அகப்பூசை)	சூக்கும உடம்பு (அருஉருவம்)	-	பிராண லிங்கம்
3. ஆன்மாவில் எழுந்தருளச் செய்து (ஒன்றிய பூசை)	காரண உடம்பு (அருவம்)	-	பாவ லிங்கம்

மூன்று மாளிகை மூவர் இருப்பிடம்
மூன்றினில் முப்பத் தாறும் உதிப்பன
மூன்றனின் உள்ளே முளைத்தெழும் சோதியைக்
காண்டலும் காலக் கணக்கற்ற வாறே (திருமந்திரம்-2379)

கண்காணி யாகவே கையத்தே எழும்
கண்காணி யாகக் கருத்துள் இருந்திடும்
கண்காணி யாகக் கலந்து வழிசெய்யும்
கண்காணி யாகிய காதன் தானே. (திருமந்திரம்-2072)

இவ்வாறு கையகத்தும் கருத்துள்ளும் கலந்தும் வழிபடுமுறையைத் தமிழ் ஆகமம் இனிது இயம்புகின்றது. பசுபதி-உயிர்த்தலைவர் (உயிர்க்குயிர்), சிவக்கொழுந்து, சோதிர் லிங்கம், மனமணிலிங்கம், 'மானுடர் ஆக்கை வடிவு சிவலிங்கம்' என்னும் திருமுறைத் தொடர்பாகள் இக்கருத்தை வலியுறுத்துவன.

தத்துவம்

சத்தியை உடையவன் சத்தன் (சிவபெருமான்), சத்தி சத்தர்கள் பிருதிவி முதல் நாதம் வரை உண்டு. தத்துவாதீதமான மகாலிங்கம்

ஒன்றே ஆறு லிங்கங்களாகவும் விளங்கி நின்று அர்ப்பிதம் ஏற்று சேடப் பிரசாதம் அருளும். இவ்வாறு சடுத்தலங்கள் ஒன்றற்கொன்று சம்பந்தித்துக் கொண்டிருக்கின்றன. தூல, சூக்கும, காரண, தேகங்களில் இஷ்ட, பிராண, பாவ லிங்கங்கள் பதிந்து, குரு, லிங்க, சங்கம பக்தியாகத் திகழ்ந்து அங்கன் லிங்கத்துடன் ஐக்கியமாகி இலிங்காங்க சமரஸ்யம் அடைகிறான்.

திசைமுகம்-நிறம்

ஈசானம் - பொன்மை (உச்சிமுகம்)

தற்புருடம் - வெண்மை (கிழக்கு முகம்)

அகோரம் - பசுமை (தெற்கு முகம்)

வாமதேவம் - செம்மை (வடக்கு முகம்)

சத்தியோசாதம் - கருமை (மேற்கு முகம்)

அதோமுகம் - கலப்பு (உள்முகம்)

சதி-பதி தர்மம்

'வினையே ஆடவர்க்கு உயிரே' - தொல்காப்பியம்.

'இல்லாள் (இல்லத்தின்கண் இருந்து அறம் புரிதல்) இல்லறம் (விருந்தோம்பல்). தற்காத்தல், தற்கொண்டாற் பேணுதல், தகைசான்ற சொற்காத்தல், சோர்விலாமை - (குறள்). தற்கொண்டாற் பேணுதல் - அர்ப்பிதம் செய்தல், மிச்சில் மிசைதல். சைவத்தில் தாம் வழிபடும் இலிங்கத்தை உடலில் தரித்துக் கொள்ளும் வழக்கமுண்டு. இலிங்காய தர்கள் எல்லாம் வீரசைவர்கள் அல்லர்; வீரசைவர்கள் எல்லாம் இலிங்காதயதர்களே! அகத்தியம், திருமூலர், திருவள்ளுவர், மாணிக்க வாசகர் முதலானோர் வீரசைவர்களே. வீரசைவ பஞ்சாசாரிய மரபு பின்வந்த பசவேசரால் மறுமலர்ச்சி பெற்றது.

சூனிய சிங்காதன பீடம் – 18 படிகள்

நிரஞ்சன (ஒளி மயமான), சூனிய (சுத்த வெளியான), நிஷ்கள (அருவமான) பரமசிவம் (இலிங்கம்) துவாதசாந்தப் பெருவெளிக்கு அப்பால் உள்ளது.

1. மூலாதாரம் முதல் ஆக்ஞா ஸ்தானம் வரை ஆறு ஆதாரங்கள் கீழாலவத்தை
2. ஆக்ஞா ஸ்தானத்திலிருந்து பிரமரந்திரம் வரை மத்தியலவத்தை.
3. பிரமரந்திரம் முதல் துவாதசாந்தம் ஈறாக மேலாவவத்தை (3 x 6 = 18) அம்மலப் பிரபு தேவரை பசவேசர் தமது சிவானுபவ மண்டபத்து

பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட சூனிய சிங்காதன பீடத்தில் அமர்த்தி வழிபட்டார் என்று பிரபுலிங்க லீலை கூறுகிறது.

மூலத் தெருவில் ஒரு பாய்ச்சல் ; அந்த
முச்சந்தி வீதியில் ஒரு பாய்ச்சல்,
மேலைத் தெருவில் ஒரு பாய்ச்சல்,
பரி வேடிக்கைப் பார்க்கலாம் ஞானப் பெண்ணே

(சித்தர் பாடல்)

அகத்தீ வேட்டல் - அகத்தியர், திருமூலர், முதலாயினோர்
புலத்தீ வேட்டல் - புலத்தியர்,
'வேள்விப் பகையாம் வீரசைவம்' (புலவர் புராணம்)

'எரி பெருக்குவர் அவ்வெரி ஈசனது உரு அருக்கமாவது அறிகிலர்'

(திருமந்திரம்)

படமாடக் கோயில் - தாவர லிங்கம், அசுலிங்கம் (அண்ட லிங்கம்)

நடமாடுங் கோயில் - சங்கம லிங்கம், குரு லிங்கம், சர லிங்கம்

(பிண்ட லிங்கம்)

நடமாடும் கோயில் இயங்கும் உடம்பு. இலிங்க தாரணமுடைய அடியவர்களது திருமேனி கோயில் என்றே வழங்கப்படும்.

(திருமந்திரம்)

இலிங்கதாரணம்

தாய், கருவுற்ற ஏழாம் மாதத்தில், பிறக்கப் போகும் குழந்தைக்காக இலிங்கம் அணிந்து கொள்ளும் மரபு 'கர்ப்பலிங்க தாரணம்' எனப்படும். இது இந்நாளில் வளைகாப்பு, சீமந்தம் ஆயிற்று.

குழந்தை பிறந்த பதினோராம் நாள் அச்சிவலிங்கம் குழந்தைக்கு அணிவிக்கப்பெற்று பெயர் சூட்டப் பெறும். இதுவே 'இலிங்க தாரணம்' எனப்படம். இது இந்நாளில் புண்ணியாவசனம் ஆயிற்று.

பின் பக்குவமெய்திய காலை, தீட்சை அளிக்கப்பெறும். தொழிலில் அமர்த்தப்படுதல், மணவினை புரிதல் நிகழுங்காலை தீட்சை வழங்கப்படுகிறது. மோட்ச தீபம் நடைபெறுங் காலங்களில் தீட்சை பெற்றே அதற்குரிய அதிகாரத்தினை அடைவர்.

இலிங்கம் தரித்துக் கொள்ளுதற்குரிய இடங்கள்

1. சரஸ்தலம் - கழுத்து (அ) கண்டம்
2. உரஸ்தலம் - மார்பு (நெஞ்சு)
3. சிரஸ்தலம் - தலை (நெற்றி (அ) உச்சி)
4. கரஸ்தலம் - உள்ளங்கை (அ) தோள்

இறைவன் உயிர்களோடும், பொருள்களோடும், ஒன்றாயும் வேறாயும் உடனாயும் இருக்கின்றான் என்பது ஈண்டு நினைவு கூரத்தக்கது.

தீட்சை

வீரசைவ தீட்சை, 1. வீரசாமான்ய தீட்சை 2. வீரவிசேட தீட்சை, 3. வீரநிராபர தீட்சை என மூவகைப்படும். இத்தீட்சை முறைகளை ஆதிசிவப்பிரகாச தேசிகர் தமது 'அத்துவித வெண்பா' என்னும் நூலிலும், துறைமங்கலம் சிவப்பிரகாசர், 'இஷ்டலிங்க அபிடேக மாலை' என்னும் நூலிலும் மிக விரிவாகக் கூறியுள்ளனர்.

திருவாசகம் - சிவபுராணம்

வீரசைவர்கள் தமது இல்லத்திலும், திருக்கோயிலிலும், நலங்கீங்கு களின் போதும், வழிபாட்டின் போதும் திருவாசகத்தை ஓதுவதையே மரபாகக் கொண்டுள்ளனர். ஒருபுடை ஒப்பாக, வாழ்க 6 - சடங்க மந்திரம், சடுத்தலம்; வெல்க 5 - பஞ்ச பிரம்ம மந்திரம், பஞ்சாசாரம், போற்றி 8 - அஷ்டோத்தரம், அஷ்டாவரணம். 6, 5, 8 - 658. திருவாசகப் பாக்கள் மொத்தம் 658 ஆகும். 'மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்' - 32-ஆவது அடி.

'பக்தி நெறி அறிவித்து .....சிவமாக்கி எனையாண்ட' மணிவாசகர் தமது 32-ஆம் அகவையில் சிவமானார் என்பது சிந்தித்து இன்புறத்தக்கது.

தத்துவமசி மகாவாக்கியம்

வேதங்களில் அந்தமாய் உள்ள சாமவேத மகாவாக்கியம் 'தத்துவமசி' என்பதாகும். இதற்கு சங்கரரும், மாத்துவரும், இராமானுசரும், நீலகண்ட சிவாச்சாரியாரும் பிறழவே உரை கண்டனர். குமார தேவர் தமது சுத்த சாதகம் என்னும் நூலில், தத்பதம், துவம்பதம், அசிபதம் என்னும் மூன்று பதங்களாகக் கொண்டு, 'துவம் தத் அசி' (நீ அது ஆகிறாய்) என்றே உரை கண்டனர். துவம்-நம, தத்-சிவ, அசி-ய (நமசிவய) சிவய-யகரமாகிய ஆன்மா, வகரமாகிய அருளோடு கலந்து, சிகரமாகிய சிவத்தோடு பிரிவற நிற்கிறது. (இலிங்காங்க சமரஸ்யம்). ஐக்கியம் அருளோடும், சமரஸ்யம் சிவத்தோடும் நிகழ்வன. இதுவே திரிபுடி அற்ற நிலை, சிவோகமும் ஆகும். 'வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற வித்தகச் சித்தர் கணம்' என்பர் தாயுமானவர், இவ்வீரசைவமே வள்ளலார் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் நிறுவுவதற்கும் அடிப்படையாய் அமைந்தது.

மோட்ச தீபம்

குரு, லிங்க, சங்கம பூசை (திருநட்சத்திரங்களில்), சமாதி வலியுறுத்தல் (அமர்ந்த நிலையில் இஷ்ட லிங்கத்தோடே, வில்வம்,

திருநீறு முதலியன இட்டு), திருவாசகம் முற்றோதல் நிகழ்த்தப் பெறும். இழவு கொடுத்தல், ஒப்பாரி வைத்தல், மேளம் கொட்டுதல், வாண வேடிக்கை செய்தல், பார்ப்பனர்களை அழைத்து சடங்கு செய்தல், திவசம் கொடுத்தல், தர்ப்பணம் விடுதல், அமாவாசை விரதம் இருத்தல் முதலியன இன்றளவும் வீரசைவக் குடும்பங்களில் வழக்கத்தில் இல்லை.

நேரில் கண்ட காட்சி

ஹூப்ளி நதிக்கரையில் எருமைமாடு மேய்த்துக் கொண்டிருந்த பாமரப் பெண்ணொருத்தி பகல் 11.00 மணியளவில், தன்னுடலில் துணியில் முடிந்து அணிந்திருந்த இஷ்டலிங்கத்தை இடக்கையில் எழுந்தருளச் செய்து வலக்கையால் ஆற்றுநீரை அள்ளியிட்டு நீறணிந்து, பச்சிலை சாத்தி, துதித்து, ஐந்தெழுத்து மந்திரத்தைச் சொல்லி, மூங்கிற் குழாயினில் வைத்திருந்த கூழினை நிவேதனம் செய்து, பிரசாதமாகப் பருகித் தன் தொழிலைத் தொடர்ந்தாள். இதனால் இஷ்ட லிங்க பூசை புரிய அனைவர்க்கும் உரிமை உண்டு என்பது பெறப்படும். தமிழகத்தி லிருந்தே வீரசைவம் கன்னட தேசத்திற்குப் பரவியது என்பதற்கு ஆதாரங்கள் ஏராளமாய் உள்ளன.

உலகளாவிய தொன்மைச் சமயம்

உலகம் முழுவதும் சிறிய அளவிலான அழிஞ்சில் பழம் போன்ற வடிவில் முழுதும், அஷ்டபந்தனத்தினால் போர்த்தப்பெற்ற, உடலில் தரித்துக் கொள்ளுவதற்கு ஏதுவான இஷ்டலிங்கங்கள், அகழ்வாய்வின் போது கண்டெடுக்கப்படுகின்றன. முருகன், சண்டீசர் போன்ற திருமேனி களில் நெற்றியின் மேற்பரப்பில் சிறு சிவலிங்கங்கள் வடிவமைக்கப் பட்டிருப்பதை நோக்க சிவலிங்கத்தை உடலில் தரித்து வாழும் சிவநெறி தமிழகத்தில் தொன்றுதொட்டே இருந்து வருவதை அறியலாம்.

79. சிவப்பிரகாசர் காட்டும் கண்ணப்பர்

வீ. மலர்விழி, தஞ்சாவூர்.

சிவப்பிரகாசர் கண்ணப்ப நாயனாரின் பக்திப் பரவசத்தையும், அவரின் சிவத்தொண்டு பற்றியும் சிறப்பாகச் சீகாளத்திப்புராணத்தில் குறிப்பிட்டுள்ளார். கண்ணப்ப நாயனார் பற்றிய குறிப்புகள் பல நூல்களில் இடம் பெற்றுள்ளன. இவர் 63 நாயன்மார்களில் ஒருவராவார். சீகாளத்திப்புராணத்தில் கண்ணப்ப நாயனாரின் சிவத்தொண்டு பற்றிக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கண்ணப்பர் பொத்தப்பி நாட்டில் உள்ள உடுப்பூரில், வேடர் களுக்கு அரசனாக விளங்கும் நாகன், தத்தை என்பவர்களுக்கு மகனாகப் பிறந்தவர் ஆவார். இவரின் இயற்பெயர் திண்ணனார் என்பதாகும்.

பாண்டவர்களில் ஒருவரான அருச்சுனன் திண்ணனாராக அவதரித்து, திருக்காளத்தியப்பரை வணங்கிய வரலாற்றைச் சிவப்பிரகாசர் சீகாளத்திப் புராணத்தில் முற்கதைச் சருக்கத்தில் கூறியுள்ளார்.

பாண்டவர்களில் ஒருவரான அருச்சுனன் துரியோதனன் முதலிய பகைவரை வெல்லும் பொருட்டு இறைவனை வேண்டிக் கடும்தவம் இருந்தார். இங்ஙனம் தவம் இருக்கும்போது அர்ச்சுனனைக் கொல்லுதற் பொருட்டு துரியோதனனால் ஏவப்பட்ட மூகாசுரன் என்பவன் பன்றி யுருவம் கொண்டு அர்ச்சுனன் தவத்தைக் கலைக்க முயன்றான். அப்போது சிவபெருமான் அர்ச்சுனனைக் காக்கும் பொருட்டு வேடன் உருவம் கொண்டு அம்பிகையோடு காட்டையடைந்தார். கீழ்க்காணும் பாடல் இவற்றை இயம்புகின்றது.

''மண்டி னாத மணிக்கணை மன்னிடும்
பண்டி லாவொரு தூணி பரித்துவெந்
நண்டர் நாயக னம்பு வலக்கரங்
கொண்டு கோலமிவ் வாறுகொண் டானரோ''

(சிலந்தி முதல் முற்கதை சருக்கம், பா. 45)

சிவபெருமான் அருச்சுனனை நெருங்கி பன்றி மீது அம்பை எய்தார். உடனே அப்பன்றி ஓடிச்சென்று மறைந்தது. இதனால் இதனை உணர்ந்த அர்ச்சுனன் சிவபெருமானிடம் போரிட்டான். இருவருக்கும் போர் நடைபெற்றது கீழ்வரும் பாடல் வாயிலாக இவற்றை அறியலாம்.

''என்று மாதவம் புரிந்திடும்
விசயனு மிறைவனு மிகலெய்தி
நன்று வீரமா திருந்திடு
தனுவினை நாரியின் கொளைநீக்கிச்
சென்று மோதின ரிருவருஞ்
செருச்செயத் தனஞ்சய னதுகாலைக்
குன்ற வில்லிதன் முடிமிசைத்
தாக்கினன் குழகனு மதுகொண்டான்''

(சிலந்தி முதல் முற்கதை சருக்கம், பா. 57)

அத்தருணத்தில் உமாதேவியாரோடு, இடபவாகனராகச் சிவபெருமான் காட்சியளித்தார். இவ்வற்புதத்தைக் கண்ட அர்ச்சுனன் பெருமானை வணங்கினான். அப்பெருமான் அப்போது அருச்சுனனுக்கு ஓர் வரம் தந்தருளினார். அவ்வரமே எம்மை (சிவபெருமானை) வேடனென்று இகழ்ந்து கூறியதனால் நீ வேட்டுவ அரசனாகி வேறு சிந்தனையின்றி, நாகலிங்கத்தை வழிபடுவாயாக என்றார். அதன்படி அர்ச்சுனன் திண்ணனாராக அவதரித்துத் திருக்காளத்தியப்பரை வழிப்பட்டான்.

''கோலமே முதலிய விலங்கு கொன்றுநீ
சாலவே தசையமு தருத்திச் சாருநா
ளேலவே முத்தியு மீதும் போவெனா
நீலமார் களத்திறை நீங்கி னானரோ''

(சிலந்தி முதல் முற்கதை சருக்கம், பா. 67)

இப்பாடல் அர்ச்சுனன் வேடன் உருவங்கொண்டு அவதரிப்பான் என்பதைச் சுட்டி காட்டுகிறது.

காரைக்கால் அம்மையார் பாடிய அற்புதத் திருவந்தாதி என்ற நூலில்

''வில்வேட னாகி விசயனேடேற்ற நாள்
வில்வேடனான வடிவு'' (அற்புதத் திருவந்தாதி, பா. 28)

என்ற பாடல் அர்ச்சுனனின் வீரத்தை அறியச் சிவபெருமான் வேடனாக வந்து அர்ச்சுனனுடன் போரிட்டதைக் கூறுகிறது. இதன் சிறப்பு வடிவத்தை சிதம்பரத்திற்கு அருகில் உள்ள திருவேட்களம், காரைக்காலுக்கு அருகில் உள்ள திருவேட்டக்குடி ஆகிய இரு தலங்களில் காணலாம்.

''பாடகஞ்சேர் மெல்லடி நற்பாவையாரும் நீயும்
போய்ப் பார்த்தனது பலத்தைக் காண்போம்
வேடனாய் வில்வாங்கி நின்ற நாளோ''

(திருவாசகம், கோவில் மூத்த திருப்பதிகம், பா. 1)

என்ற பாடல் வாயிலாக இக்கதை பற்றி அறிய முடிகிறது. நான்கு திருக்கரங்களுடன் வில்லையும், அம்பையும் கொண்டு இருவிதங்களில் இவ்வேடனாகிய சிவபெருமானின் சிற்பங்கள் தமிழ்நாட்டுச் சிவாலயங் களில் காணப்படுகின்றன.

காட்டில் வேடராக வாழ்ந்த திண்ணனார் தம் ஆழ்ந்த பக்தியினால் இறைவனின் பாராட்டையும், அருளையும் பெற்றவர். திண்ணனார் வேடர் உருவம் கொண்டு காட்டிற்கு வேட்டையாடச் செல்லுதலைக் கீழ்வரும் பாடல் வாயிலாக அறியலாம்.

''ஆர்நாரின் றிண்கயிற்றா லமைச் சிறுகோல் வளைத்தவில்லுங்
கூர்வாய்முண் ணுனிபதித்த கோற்கோலுங் கைக்கொண்டு
கார்மேனி மைந்தரொடு கான்புகுந்து கொடுவிலங்கி
னோர்வாய்மென் குருளைபல வெய்தல்செய்தான் விளையாட்டால்''

(கண்ணப்பச் சருக்கம், பா. 29)

இப்பாடல் வலிய கயிற்றினால் மூங்கிலின் சிறிய கோலை வளைத்துச் செய்த வில்லையும், கூர்மையான அம்பையும் கையில் கொண்டு வேட்டைக்குச் சென்றார் என்பதை விளக்குகிறது.

மேலும் திருத்தொண்டர் புராணப் பாடலும் திண்ணனார் வேட்டைக்குச் செல்லும் வடிவத்தைக் குறிப்பிடுகிறது.

''மார்பிற்சிறு தந்த மணித்திரள் மாலை தாழத்
தாரிற்பொலி தோள்வல யங்கள் தழைத்து மின்னச்
சேர்விற்பொலி கங்கணமீது திகழ்ந்த முன்கைக்
கார்விற்செறி நாண்எறி கைச்செறி கட்டிகட்டி''

(கண்ணப்ப நாயனார் புராணம், பா. 60)

''அரையிற்சர ணத்துரி ஆடையின் மீதுபௌவத்
திரையிற்படு வெள்ளல கார்த்து விளிம்புசேர்த்தி
நிரையிற்பொலி நீளுடை தோல்கரி கைப்பு றஞ்சூழ்
விரையில்துவர் வார்விசி போக்கி அமைத்துவீக்கி''

(கண்ணப்ப நாயனார் புராணம், பா. 61)

''வீரக்கழல் காலின் விளங்க அணிந்துபாதம்
சேரத்தொடு நீடு செருப்பு விருப்பு வாய்ப்பப்
பாரப்பெரு வில்வலாங் கொண்டு பணிந்து திண்ணன்
சாரத்திருத் தாள்மடித் தேற்றி வியந்து தாங்கி''

(கண்ணப்பநாயனார் புராணம், பா. 62)

கச்சையை அரையில் கட்டி உடைவாளை அணிந்து மாலையையும், தோல் செருப்பையும் அணிந்து, நீண்டவில்லை கையில் பிடித்துக் கொண்டு

வேட்டைக்குச் சென்றார். பின்வரும் பாடல்கள் திண்ணனார் வேட்டைக்கு செல்லும் காட்சியைச் சித்திரிக்கின்றன.

''தாயடி மறிந்துந் தாழ்ந்து தரும்விடை கொண்டு நீங்கி
மேயநீ ணிறங்கொள் கச்சை விசித்துடைவாளும் யாத்திட்
டாயிளந் தளிர்தொ டுத்த வலங்கலங்கண்ணி வேய்ந்து
மாயவன் றொடுதோ றொட்டு வரிசிலை யெடுத்துக் கொண்டான்''

(கண்ணப்பச் சருக்கம், பா. 73)

வேட்டைக்குச் சென்று திரிந்த திண்ணனார் அங்கு சிவலிங்கத்தைக் கண்டார். அப்பெருமான் மீது அளவுகடந்த பக்தியினால்

''. . . . . திருமுடிமேற்
றுன்று தளிருஞ் செழும்போதுந் தொடுதோ லடியான் மாற்றிவா
யொன்று நீராற் பிரானுடலோ டுள்ளங்குளிர வாட்டினான்''

(கண்ணப்பச் சருக்கம், பா. 112)

இறைவனது திருமுடி மீது தளிர்களையும், மலர்களையும் கொண்டு பூசை செய்து தாம் அணிந்திருந்த கால்அணிகொண்டு சுற்றியுள்ள இடங்களை தூய்மைப்படுத்தியும் தம் வாயினால் கொண்டுவந்த நீரினால் இறைவனின் திருமேனியின் மீது உமிழ்ந்து குளிர்ச்சியடையும்படி நீராட்டினார்.

ஒருமுறை இறைவனின் கண் ஒன்றிலிருந்து உதிரம் வருவதைக் கண்ணுற்ற திண்ணனார் அம்பினால் தம் கண்ணைத் தோண்டி எடுத்து அப்பி உதிரம் சிந்துவதைத் தடுத்தார். இதைக் கண்ணப்ப நாயனார் சருக்கத்தில் சிவப்பிரகாசர் குறிப்பிட்டுள்ளார்.

''கானவர் பெருமான் றன்கண் கணையினா லிடந்திட் டானால்''

(கண்ணப்பச் சருக்கம், பா. 167)

''இடந்தன் கண்ணை யண்ண லிறைகண்ணி லப்பச்சோரி
மடந்தையோர் பங்க னாங்கே மாற்றினா னதனைக் கண்டான்
னடங்கரு மகிழ்ச்சியென்னு மாழ்கட லதனுட் டாழ்ந்து
முடங்களை மடங்கலன்னான் முழவுத்தோள் கொட்டி யார்த்தார்''

(கண்ணப்பச் சருக்கம், பா. 168)

இதைப் பற்றிப் பெரியபுராணத்திலும் சேக்கிழார் பெருமான் அழகாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

''இதற்கினி என்கண்அம்பால் இடந்தப்பின் எந்தையார்கண்
அதற்கிது மருந்தாய்ப் புண்ணீர் நிற்கவும் அடுக்கும் என்று
மதர்த்தெழும் உள்ளத்தோடு மகிழ்ந்துமுன் இருந்துதங்கண்
முதற்சர மருந்து வாங்கி முதல்வர்தங் கண்ணில்அப்ப''

(கண்ணப்ப நாயனார் புராணம், பா. 178)

பிறகு சிறிது நேரத்தில் இறைவனின் மற்றொரு கண்ணிலிருந்து உதிரம் வருவதைப் பார்த்த திண்ணனார் அதிர்ந்தார். உடனே தம் மற்றொரு கண்ணை அம்பினால் தோண்டி எடுக்க முற்பட்டபோது சிவபெருமானால் தடுக்கப்பட்டார் என்பதை,

''இன்னுமோர் கண்ணெ னக்குண் டாதலி னிதற்கஞ் சேனென்
றன்னது களைந்த காலை யையர்கண் ணறிதற்காகத்
தன்னொரு செருப்புக் காலைத் தம்பிரான் கண்ணி லூன்றிப்
பின்னடு கணைகண் வைத்தான் பிரானது பொறுக்க லாற்றான்''

(கண்ணப்பச் சருக்கம், பா. 172)

இப்பாடல் வாயிலாக அறிய முடிகிறது.

இறைவனுக்கு ஆகமநெறிப்படி பூசைபுரிந்த சிவகோசரியார் மறைந்திருந்து கண்ணப்பரின் பக்தியையும் இறைவன் அவரைத் தடுத்ததையும் கண்ணால் கண்டு வியந்து போனார்.

''மறைமொழி பிறந்த தம்வாய் மலர்திறந் தருட்பே ராழி
யிறைவர் கண்ணப்ப நிற்க வெனமுக் கான்மொழிந்து கொண்டே
கறையணற் கங்க ணத்த கையினாற் பிடித்தார் செங்கை
யுறுநறைப் பொலம்பூ மாரி யும்பர்மண் புதையப் பெய்தார்''

(கண்ணப்பச் சருக்கம், பா. 173)

இப்பாடல் வாயிலாகத் திண்ணனார் தம் கண்ணைத் தோண்டுவதை இறைவன் தடுத்து ''நில்லு கண்ணப்பா'' ''நில்லு கண்ணப்பா'' என்று மூன்று முறை கூறினார். அன்றைய நாள் முதல் திண்ணனார் கண்ணப்பர் என்று அழைக்கப்பட்டார் என்பது புலனாகின்றது. இப்புராணக் கதை, திருக்காளத்தி உடையார் கோயிலில் சிற்ப வடிவமாகக் காணப் படுகிறது. திருகாளத்தி பஞ்சபூத தலங்களில் வாயுதலமாகும். இக்கோயிலில் அந்தராளத்தில் கண்ணப்பர் கைகூப்பிய நிலையில் வில்லைத்தாங்கிக் கொண்டு நிற்கும் கற்சிலை உள்ளது. வெளிப்பிரகார மண்டபத்தில் மற்றொரு பெரிய கண்ணப்பர் சிலையும் உள்ளது.

திருக்காளத்தி கோயிலின் பின்பக்கத்தில் கண்ணப்பர் ஈசுவரர் என்ற கோயில் உள்ளது. இக்கோயில் கண்ணப்பரின் பெயரால் அழைக்கப் படுகிறது. கண்ணப்பரின் சிற்பம் ஒன்று தஞ்சை கலைக்கூடத்தில் காணப் படுகிறது. இது முற்கால சோழர்காலத்தைச் சார்ந்த உலோகச் சிற்பமாகும். இவர் நின்ற நிலையில் காலில் அக்காலத்திலிருந்த தோலாலான காலணி அணிந்துள்ளார். இடுப்பில் தோலாடை அணிந்திருப்பது போன்று காட்டப்பட்டுள்ளது. காதில் ஓலைச்சுருளும், இடது கையில் வில் ஒன்று ஏந்தியிருக்கும் பாணியில் காட்டப்பட்டுள்ளது. வலது கண்ணைத் தோண்டித் தனது வலது உள்ளங்கையில் இருப்பதுபோல் சித்தரிக்கப்

பட்டுள்ளது. தாடியுடன் நீண்ட பெரிய மீசையுடனும் உள்ளார். சடையில் பறவைகளின் இறக்கைகளைச் சொருகியிருக்கும் பாங்கில் அமைக்கப் பட்டுள்ளது. வேட்டுவனுக்குரிய சின்னங்களோடு, ஒரு கண் மட்டும் இழந்திருக்கும் நிலையை சிற்பி காட்டியிருப்பது அற்புதமான சிற்ப நுணுக்கம் நிறைந்த காட்சியாகும்.

தஞ்சைப் பெரிய கோயிலின் முன்கோபுர வாயிலின் வடக்குப் பக்க அதிட்டான பகுதியில் கண்ணப்பர் வரலாற்றைச் சித்திரிக்கும் புடைப்புச் சிற்பங்கள் காணப்படுகின்றன. தாராசுரம் ஐராவதேசுவரர் கோயிலின் அதிட்டான பகுதியில் 63 நாயன்மார்களின் வரலாற்றைக் கூறும் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன. இக்கோயிலின் தெற்குச்சுவரில் கண்ணப்பரின் உருவம் தாடி மீசையுடன் வில்லைக் கையில் ஏந்தி நின்ற வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. காஞ்சி ஏகாம்பரேசுவரர் கோயிலின் முன்மண்டபத்தில் உள்ள தூண் வரிசை ஒன்றில் கண்ணப்பர் வில் அம்பு ஏந்தியும், தம் அம்பினால் கண்ணைத் தோண்டி எடுப்பது போன்றும் காட்டப்பட்டுள்ளது. மேலக்கடம்பூர் அமிர்தகடேசுவரர் கோயிலின் கருவறையின் மூன்று சுவர்ப் பக்கங்களிலும் இரண்டு வரிசைகளில் நாயன்மார்கள் வரலாற்றைச் செதுக்கியுள்ளனர். இதில் கண்ணப்பரின் வரலாறு புடைப்புச் சிற்பமாக வடிவமைக்கப் பட்டுள்ளது. (எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், ப. 40), திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில், திருவலஞ்சுழி, வெள்ளை விநாயகர் கோயில் முதலான இடங்களில் கண்ணப்பர் சிலைகள் இடம்பெற்றுள்ளன. மேலும் ஒற்றியூர், செம்பனார்கோயில், ஆடுதுறை, பேரூர் போன்ற இடங்களிலும் 63 நாயன்மார்களின் சிலைகள் காணப்படுகின்றன.

(சைவ சமய வளர்ச்சி, மா. இராசமாணிக்கனார், ப. 151, 152)

மேற்கண்ட சிற்பங்கள் கண்ணப்பரின் வரலாற்றையும், பக்தி நிலையையும் எடுத்துக் காட்டுகின்றன.

இங்ஙனம் சீகாளத்திப்புராணத்தில் காணப்படும் கண்ணப்பரின் வரலாற்றும் சிவபக்தியும், சமயத்தொண்டும் சிவப்பிரகாச சுவாமிகள் மிகத்தெளிவாகச் சித்திரித்துக் காட்டியுள்ளார். கண்ணப்பரின் வரலாற்றைக் கூறும் சிற்பங்கள் கோயில்களில் கற்சிற்பமாகவும், செப்புப்படிமமாகவும் காணப்படுகின்றன. பக்தி இலக்கியங்கள் வாயிலாகவும், கோயிற்சிற்பங்கள் வாயிலாகவும் கண்ணப்பரின் சிவத்தொண்டுகள் எத்தகையது என்பதை நாம் அறிந்துகொள்கிறோம். அதற்கு சிவப்பிரகாசரின் இலக்கியமும் துணைநிற்கின்றன எனலாம்.

80. நன்னெறி நவிலும் நல்லறங்கள்

த. மலைமதி, புதுவை.

தமிழ் இலக்கிய வரலாற்றின் ஏழாம் நூற்றாண்டில் சைவ சமயம் வளர்ந்தோங்க அரும்பாடுபட்டவர்களில் ஞானசம்பந்தரும் அப்பரும் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றனர். இவர்களைப் பின்பற்றியே பதினேழாம் நூற்றாண்டில் சைவ சமயம் செழித்தோங்க அருந் தொண்டாற்றியவர்களுள் குமரகுருபரரும் சிவப்பிரகாசரும் குறிப்பிடத் தக்க இடத்தை வகிக்கின்றனர் என்பதை இதுவரை வெளிவந்துள்ள தமிழ் இலக்கிய வரலாற்று நூல்கள் பறைசாற்றுகின்றன. சிவப்பிரகாசனார் முழுக்க முழுக்க வீர சைவ நெறியைப் பின்பற்றியே நூல்கள் இயற்றி யுள்ளார். இவர் துறைமங்கலம் என்னும் இடத்தில் அமைந்த மடத்தில் வாழ்ந்தவர் என்றும், வாயின் இதழ் குவியாமல் பாடும் நிரோட்டக யமக அந்தாதி என்ற நூலை இளமையிலேயே பாடிப் புகழ் பெற்றவர் என்றும் வரலாறு தெரிவிக்கின்றது.

இவர் இயற்றிய நூல்களின் வகைகளாக நமக்குக் கிடைப்பன தலபுராணம், காப்பியம், சிற்றிலக்கிய வகைகள், தனிப்பாடல், நீதி நூல் போன்றவையாகும். பல்வேறு வகையான இலக்கியங்களைப் படைத்ததன் மூலம் தனக்கென ஒரு வரலாற்றினை உருவாக்கிக் கொண்டவர் சிவப்பிரகாசர். கட்டுரையின் பக்க எல்லை கருதி ஆசிரியரின் நன்னெறி என்ற நூலில் கூறியுள்ள அறக்கருத்துக்களை வகை பிரித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

அறம்-விளக்கம்

தமிழர்கள் தங்களின் வாழ்வியற் கூறுகளில் மற்ற செயல்பாட்டினை விடவும் அறத்திற்கு முதன்மை கொடுத்துள்ளனர்.

தமிழ் லெக்சிகன் அறம் என்பதற்கு தருமம், புண்ணியம், தகுதி யானது, சமயம், ஞானம், அறச்சாலை, நோன்பு, தீப்பயனுண்டாக்குஞ்சொல், தருமதேவதை, யமன் என்று பல பொருள்களைத் தருகின்றது.

'அறத்தான் வருவதே இன்பம்'

என்றும்

'அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை'

என்றும்

'அல்லவை செய்வார்க்கு அறம் கூற்றாகும்'

என்றும்

'அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும்'

என்றும்

'அறமெனப்படுவது யாதெனக் கேட்பின்
மறவாதிதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது கண்டதில்'

என்றும் மணிமேகலை உட்பட தமிழ் இலக்கியங்கள் அறத்திற்குப் பல்வேறு பொருள் கூறுகின்றன.

நீதி நூல்கள்

ஓர் இலக்கியப் படைப்பாளன் தான் வாழும் சமூகத்தை மாற்ற முயலுகையில் தன் வாழ்க்கை அனுபவத்திலிருந்து பெற்ற தரவுகளின் மூலம் சமூகத்தைச் செம்மைப்படுத்த முயலுகின்றான். இங்ஙனம் வாழ்க்கையைச் செம்மையாகவும், சிறப்பாகவும் அமைத்துக்கொள்ள அறங்களை வலியுறுத்தும் இலக்கியங்கள் படைக்கப்பட்டன. இவை 'அறநூல்கள்' அல்லது 'நீதி நூல்கள்' எனப்படுகின்றன. தமிழ் இலக்கிய வரலாற்றில் 'சங்க மருவிய கால நூல்கள்' அல்லது 'நீதி இலக்கிய கால நூல்கள்' என்பன போன்ற தலைப்புகளின் கீழ் அறக்கருத்துக்களை உணர்த்தும் நூல்கள் தொகுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. ஆ. வேலுப்பிள்ளை எழுதிய 'தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்' என்ற நூலில் சங்க மருவிய காலத்தை 'அறநெறிக்காலம்' என்று குறிப்பிடுகின்றார் என்பதும் இங்கு சுட்டத் தக்கது.

பொது நிலையில் இலக்கியங்கள் கற்பவரின் உணர்ச்சியைத் தூண்டக் கூடியவையாகவே இருக்கின்றன. ஆனால் கற்பவரின் அறிவைத் தூண்டும் இலக்கியங்களாக விளங்குபவை அற இலக்கியங்களே. மனிதனுக்கு இன்பத்தை அளிப்பதைவிட நல்வாழ்வை அடைவதற்குரிய வழிகள் இவை இவை என்று அறிவுறுத்துவதே நீதி இலக்கியங்களின் முதன்மையான குறிக்கோளாகும். மேன்மையான வாழ்வை அடைய மனிதன் செய்ய வேண்டியது இது, செய்யக்கூடாதது இது என்று பகுத்துக் கூறி, கற்பவரின் நெஞ்சில் பதிய வைப்பன நீதி நூல்களாகும்.

நூல் எழுந்த வரலாறு

நன்னெறி எனும் நீதிநூல் எவ்வாறு தோன்றியது என்பதற்குச் சிவப்பிரகாசர் ஒரு நிகழ்வினைக் காரணமாகக் கூறுகின்றார்.

சிவப்பிரகாசரின் ஞான குருவாகிய சிவஞான பாலைய சுவாமிகளின் திருமடம் உள்ள பொம்மபுரத்தையடுத்தக் கடற்கரையில் ஒரு நாள் சிவப்பிரகாசர் உலாவச் சென்றபோது, நினைத்தவுடன் கவி இயற்றும் வல்லவராகிய இவர், நன்னெறிப் பாடல்களைக் கடற்கரை மணலில் எழுதினார். அதனை அறிந்து இவரின் இளவலான கருணைப்பிரகாசர் கடற்கரைக்குச் சென்று இப்பாடல்களை ஏட்டில் எழுதிக் கொண்டு வந்தார் என்பர். இவ்வரலாற்றிற்கு அகச்சான்றுகள் இல்லையாயினும், நன்னெறியில் வரும் ஐந்து பாடல்கள் கடல் பற்றிய உவமையினை உணர்த்துவதன் மூலம் அறிய முடிகின்றது.

நூலின் அமைப்பு

சமூகத்தில் வாழும் மக்கள் எந்த ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன்பும் முதற்கடவுளான விநாயகரை வணங்குதல் என்பது அன்று தொட்டு இன்று வரை உள்ள மரபு. இம்மரபிலிருந்து ஆசிரியர் மாறவில்லை என்பதை அவரது படைப்புகள் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. விநாயகர் வணக்கச் செய்யுளை முதலாக்கிக்கொண்டு நன்னெறி, நாற்பது வெண்பாக்களால் இயற்றப்பட்டுள்ளது. இந்நூலில் நட்பு, கல்வி, சினத்தை அடக்குதல், பிறர்க்கு உதவுதல், தன்னலம் கருதாமை, பெண்களைச் சிறப்பித்தல், துணைவலிமை, நல்ல குணம் போன்ற அறக்கருத்துக்கள் வலியுறுத்தப்படுகின்றன. ஒவ்வொரு வெண்பாவும் ஒரு நீதிக் கருத்தையும் அக்கருத்தை விளக்கும் அழகிய உவமையையும் கொண்டு இயற்றப்பட்டுள்ளது. சான்றாக,

> 'நல்லோர் வரவால் நகைமுகம் கொண்டு இன்புறீஇ
> அல்லோர் வரவான் அழுங்குவார் - வல்லோர்
> திருந்தும் தளிர் காட்டித் தென்றல்வரத் தேமா
> வருந்தும் சுழற்கால் வர'

என்ற பாடலில் இறுதி இரண்டு வரிகளில், தளிர் விடுகின்ற மாமர மானது தென்றல் காற்று வந்தால் மகிழும் சூறாவளி காற்று வந்தால் வருந்தும் என்ற உவமையைக் கூறி முதல் இரு வரிகளில் நல்லவர்கள் வரவால் சான்றோர்கள் நகைமுகத்துடன் வரவேற்பர், தீயவர்களின் வரவால் துன்பம் அடைவர் என்று மேற்சுட்டிய உவமைக்கேற்ற அறக்கருத்தினைக் கூறுகின்றார் என்பதை அறிய முடிகின்றது.

நன்னெறி உணர்த்தும் அறக்கருத்துக்கள்

நன்கு கற்றுத் தேர்ந்த கொள்கையினையுடைய சான்றோர் பலர் வாழும் சமுதாயத்தைப் படைத்துக் காட்டுவதே பாவலர்களின் குறிக்கோள். அறச்சான்றோராகிய சிவப்பிரகாசரும் அதற்குச் சளைத்தவர் அல்ல என்பதற்கு அவரின் நன்னெறியே சான்றாக அமைகின்றது. ஈகை,

அறிவு, இன்சொல், கல்விச்சிறப்பு, பிறர் துன்பம் போக்கல், சினம் களைதல், மெய் உணர்வு ஆகிய நற்பண்புகள் நிறைந்த சான்றோர்களின் இயல்பையே நல்லறமாகக் கூறிச் செல்கின்றார்.

ஈகை

பொருள் உள்ளவர் பொருள் இல்லாதவர்க்குக் கொடுத்தலே ஈகையாகும். இதனையே சங்க இலக்கியத்தில் ஆற்றுப்படுத்துதல் என்று கூறுகின்றனர்.

'என்று முகமன் இயம்பா தவர்கண்ணுஞ்
சென்று பொருள் கொடுப்பர் தீதற்றோர் துன்றுசுவை
பூவிற் பொலி குழலாய்! பூங்கை புகழவோ
நாவிற் குதவும் நயத்து'

மனிதன் உயிர் வாழவேண்டுமெனில் உணவு முக்கியம். உணவினை உட்கொள்வதற்கு கை மிகவும் முக்கியமான ஒன்று. என்றுமே புகழ்ச்சியினை எதிர்ப்பார்த்து கை நாவிற்கு உதவுவதில்லை என்ற கருத்தின் மூலம் பெரியோர் தமக்கு எந்தவிதமான உதவியும், உபகாரமும் செய்யவில்லையாயினும் தாமே சென்று தன்னால் முடிந்த உதவியை செய்ய வேண்டும் என்றும் கருத்தைத் தெரிவிக்கின்றது. தனக்கு இரண்டு கண்ணும் போனாலும் எதிரிக்கு ஒரு கண்ணாவது போகவேண்டும் என்று கருதும் சமூகத்தில் இப்படிப்பட்ட ஓர் அறக்கருத்தை வலியுறுத்தியுள்ளது சிறப்பான ஒன்றாகவே உள்ளது.

சினம் களைதல்

ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய செயல்களில் மிக முக்கியமான ஒன்று சினம் காத்தல். இதனை,

'உள்ளம் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளும் குணமே குணமென்க - வெள்ளந்
தடுத்த லரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்த லரிதோ விளம்பு'

என்று கூறுகின்றார்.

வந்தபின் காப்பதைவிட வருமுன் காப்பதே நல்லது. வெள்ளம் வந்து அணையை உடைப்பதைவிட வெள்ளத்தைத் தடுத்தலே அரிய செயல். வெள்ளைத்தைத் தடுப்பது போல் சினம் (கோபம்) என்பதை அதிகப்படுத்தாமல் அடக்க கற்றுக் கொள்வதே சிறந்த குணம். இக்கருத்தானது, மனிதன் வாழ்க்கையில் பல வெற்றிப் படிகளை எளிதில் அடைய வழி செய்யும் என்பதில் ஐயமில்லை.

கல்வியின் சிறப்பு

கல்வியைக் கற்காத மனிதன் கண்ணிருந்தும் குருடனாகவே கருதப்படுகின்றான். 'கல்வி கரையில்லாதது', 'கற்றது கைமண்ணளவு கல்லாதது உலக அளவு' என்றெல்லாம் கல்வியை மேம்படுத்திக் கூறுகின்றனர் அறிஞர் பெருமக்கள்.

'கற்கக் கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக'

என்று கல்வியின் சிறப்பினையும், பெருமையினையும் திருவள்ளுவர் கூறுகின்றார்.

கல்வி அறிவினைப் பெற்றவர் எல்லாவற்றையும் கற்றுத் தேர்ந்தவர் என்று செருக்கு கொள்ளுதல் கூடாது என்பதை,

'கடலே அனையம் யாம் கல்வியா லென்னும்
அடலேறு அனைய செருக்கு ஆழ்த்தி - விட்லே
முனிக்கரசு கையான் முகந்து முழங்கும்
பனிக்கடலும் உண்ணப் படும்'

எனும் பாடலடிகளின் மூலம் விளக்குகின்றார். கற்றுத் தேர்ந்த சான்றோனாக இருப்பினும் செருக்கடைதல் கூடாது. அப்படி இருந்தால் வல்லவரான மற்றொருவரிடம் தோல்வி அடைவது உறுதி என்று சிவப்பிரகாசர் குறிப்பிடுகின்றார்.

பெருகி வரும் கங்கையானது சிவபெருமானின் சடையைக் கண்டவுடன் அடங்கிவிடும். இதுபோல் கல்வியைக் கற்றவராயினும் இலக்கணம் கற்றவர்முன் இலக்கணம் அறியார் அடங்கிவிடுவர் என்று கல்வியின் பெருமையினைக் கூறுகின்றார்.

மனித உடலில் அணிகலன் அணியும் உறுப்புகள் அணிகலனே அணியாத கண்ணிற்கு இணையாகா, இதைப் போன்று பொன்னை அணிந்துள்ள வேந்தர்கள் அணிகலன் அணியாத கல்வியறிவுடைய அறிஞர்களுக்கு இணையாக மாட்டார்கள் என்று கூறுகின்றார். ஒரு மனிதனிடம் எவ்வளவுதான் பொன்னும் பொருளும் இருப்பினும் அவனிடம் கல்வி அறிவு இல்லை என்றால் யாரும் மதிக்கமாட்டார்கள் என்பதே சமூக நிகழ்வாகவும் உள்ளது.

நட்பு

அன்போடு இருவர் ஒருமித்து இருப்பதே நட்பு. இதற்குச் சங்க இலக்கியங்களில் இருந்து பல சான்றுகளைக் கூற முடியும். ஔவையாரும் - அதியமானும், கபிலரும் - பாரியும், புலவர் - அரசன் என்ற நிலையைத் தாண்டி நண்பர்களாக இருந்துள்ளனர்.

நல்ல நண்பர்களாக இருந்தவர் பிரிந்து மீண்டும் கூடினால் பழைய நிலையை எட்டுவது அரிதே. இக்கருத்தினை வலியுறுத்தும் சான்றாக,

'நீக்க மறும் இருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர்பெருமை நொய்தாகும்-பூங்குழலாய்
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோற்
புல்லினும் திண்மைநிலை போம்'

இப்பாடலைக் கூறுகின்றார். நெல்லும் உமியும் சிறிது நீங்கி மீண்டும் சேர்ந்தாலும் நெற்பயிரின் பழைய வலிமை குன்றும் என்பதைப் போன்று இணைபிரியா நண்பர்கள் இருவர் மீண்டும் இணையினும் அவர்களின் பெருமை குன்றும். கண்ணாடிப் பாத்திரத்தை எவ்வாறு பாதுகாக்க வேண்டுமோ அதனைப் போன்றுதான் நட்பையும் காக்க வேண்டும். கண்ணாடிப் பாத்திரம் கீழே வீழ்ந்தால் உடையும் அல்லது விரிசல் அடையும் இதேபோன்றுதான் நட்பும் இருக்கின்றது.

பேசாத ஊமை முதுகலை நூலைப் படிப்பது என்பது இயலாது. விழியிலார்க்கு எதை விளக்கினாலும் பயன் இல்லை. இதைப் போன்று அன்பு இல்லாதவனுக்கு வாழ்க்கையில் இடம், பொருள், ஏவல் அனைத்துமிருப்பினும் ஆனால் அறம் புகழ் தேடமாட்டான் என்று அன்பின் நிலையினை விளக்குகின்றார்.

நல்ல மனமுடையோருடைய கடுஞ்சொல்லும் இன்பம் விளைக்கும். நல்லமனமில்லாதார் இன்சொல்லும் துன்பம் விளைக்கும். எனவே உள்ளத்தால் உண்மையான அன்பு இருக்கிறதா என்று பார்க்க வேண்டுமே தவிர இனிமையாகப் பேசுவது கண்டு ஏமாறக்கூடாது. உள்ளன்புடன் கல்லெறிந்து வழிபட சாக்கியருக்கு சிவன் அருள் செய்தார். ஆனால் பூவால் வழிபட்ட மன்மதனை எரித்தார், என்பதன் மூலம் உண்மை அன்பின் தன்மையினை உணர முடிகின்றது.

பெண்களைப் பற்றிக் கூறுதல்

கண்கள் இரண்டும் ஒரு பொருளையே காண்பது போல், கணவனும் மனைவியும் கருத்தொருமித்து எக்காரியத்தையும் செய்தல் வேண்டும். அப்பொழுதுதான் அக்காரியம் நிறைவடையும் என்று கூறுகின்றார்.

பேசப்பேச கல்லும் கரையும் என்பார்கள். அதுபோல் எறும்பு ஊரக் கல்லும் தேயும் என்பதை

'பகர்ச்சி மடவார் பயிலநோன் பாற்றல்
திகழ்ச்சி தருநெஞ்சத் திட்பம் - நெகிழ்ச்சி
பெறும் பூரிக் கின்றமுலைப் பேதாய் பலகால்
எறும்பூரக் கற்குழியு மே'

இப்பாடலில் குறிப்பிடுகின்றார். முனிவர்கள் பெண்களிடம் பல முறை பேசிப் பழகுவதால் தவம் செய்யக்கூடிய மனவலிமையினை இழப்பர் என்றும் கூறுகின்றார்.

பிறர்க்கு உதவுதல்

தன்னால் முடிந்த உதவியைப் பிறர்க்குச் செய்தலே மனித இயல்பு. பிறந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் என்பது எல்லோருக்கும் உரியதே. ஆனால் நாம் இறந்த பின்பும் நம் செயல்கள் இவ்வுலகில் வாழ வேண்டுமென்றால் பிறர்க்கு உதவுதல் அவசியமான செயலாகும். இதனை,

'தங்குறைதீர் அள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர் - திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகில்
நிறையிருளை நீக்குமே நின்று'

என்ற பாடலில் சந்திரன் தனது களங்கமாகிய இருளை நீக்குதற்கு நினையாமல் ஆகாயத்திலே நின்று உலகத்திற்கு ஒளியை வழங்குவது போன்று, மேலோர் தன் துன்பம் நோக்காது பிறருக்குற்ற குறையை நீக்குவர் என்பதன் வழி தன்னலங்கருதாத் தன்மையை வலியுறுத்துகின்றார். இவ்வகையில் பல்வேறு வகையான நல்லறக் கருத்துக்களை சிவப்பிரகாசரின் நன்னெறி வழி அறிய முடிகின்றது.

இலக்கியங்கள் பொதுவாகச் சமூகத்தைப் பிரதிபலிப்பதாய் அமைவன. எனவே, இலக்கியங்களில் சமூகக் கூறுகள் பொதிந்து கிடைக்கும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இக்கூறுகள் 'தீமைக்கு ஆளான சமூகத்தை நல்வழிப்படுத்தும் இலக்கியக் கூறுகள்' எனவும், 'நல்ல சமூகத்தை அடையாளப்படுத்தும் இலக்கியக் கூறுகள்' எனவும் இரு வகைப்படும். இவ்வகையில் சீர்கெட்ட சமூகத்தில் நிலவக்கூடிய கருத்துக் களை கூறி அதன்வழி சமூகத்தைச் சீரமைக்கும் கருத்துக்களை சிவப்பிரகாசரின் நன்னெறி தெளிவாகச் சுட்டுகிறது.

81. செந்நெல் வைத்த திருவிற்கோல நாதர்

வே.இரா. மாதவன், தஞ்சாவூர்.

''முந்தினான் மூவருள் முதல்வ னாயினான்
கொந்துலா மலர்ப்பொழிற் கூகம் மேவினான்
அந்திவான் பிறையினான் அடியர் மேல்வினை
சிந்துவான் உறைவிடந் திருவிற் கோலமே''
(திருஞானசம்பந்தர் தேவாரம், 3:10:5)

தொண்டை நாட்டில் தேவாரம் பெற்ற முப்பத்திரண்டு தலங்களில் ஒன்று திருவிற்கோலம் என்னும் திருக்கூவமாகும். மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் சிறப்பாக அமைந்த இத்தலம், திருவாலங்காட்டிற்குத் தென்திசையிலுள்ளது. இதன் வடக்கில் காஞ்சியும் மேற்கில் இலம்பையங் கோட்டூரும் உள்ளன. வடமொழிக் காந்தமா புராணத்தில் சனற்குமார சங்கிதையில் உள்ள காளிகா காண்டத்தில் இத்தலத்தின் சிறப்பு கூறப் பட்டுள்ளது. இதனைத் தமிழில் புராணமாக ஆக்கித் தந்தவர் கற்பனைக் களஞ்சியமான துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் ஆவர். திருவிற்கோல நாதராகிய சிவபெருமானுக்குச் 'செந்நெல் வைத்தவர்' என்ற சிறப்புப் பெயர் வந்த வரலாற்றைச் சிவப்பிரகாசர் இத்தலபுராணத்தில் குறிப்பிடுகின்றார். அதனை ஈண்டு நோக்குவோம்.

கூவத்தலம்

கூவத்திற்கு, 'கூகம்', 'திருவிற்கோலம்' என்ற இரு பெயர்கள் தலத் தேவாரத்தில் வருகின்றன. திருஞானசம்பந்தர் இத்தலத்திற்காக ஒரு பதிகம் பாடியுள்ளார். இறைவன், மேருமலையை வில்லாகக் கையில் பிடித்த கோலம் = திரு+வில் கோலம். இதுவே தலத்தின் பெயராயிற்று. திருவிற்கோலம் என்பது கூவத்தலத்திற்கும், தலமூர்த்திக்கும், தேவாரத்திலும் ஏனைய நூல்களிலும் பொதுப்பெயராக வருகிறது.

தேவாரம் கூறும் 'செருவினான் உறைவிடம் திருவிற்கோலமே' என்பதில் 'செருவினான்' - போர்க் கோலத்துடன் வந்தவன் என்றும், 'செற்றவன் உறைவிடம் திருவிற்கோலமே' என்பதில் அழித்தவன் உறைவிடம் என்றும் பொருள் கொண்டால் முறையே இறைவனின் போர்க்கோலமே திருவிற்கோலம் எனவும், பகைவர்களை அழித்தவன் தங்கிய இடம் திருவிற்கோலம் எனவும் ஆம். பெரியபுராணத்திலும்,

'திருத்தொண்டர் பலர் சூழத் திருவிற்கோலமும் பணிந்து' (பா. 1005) என்பதால் திருவிற்கோலம் என்ற பெயரே வழங்கியுள்ளதைக் காணலாம்.

கூவத்திற்கு வடக்கே சுமார் இரண்டு மைலில் ஓர் ஆறு உளது. இதுவே சென்னையில் ஓடிக் கடலில் கலக்கும் கூவ நதி. இதுவே கூவப்புராணத்தில் பாலாறு எனப்படுகிறது. இதன் ஓரமாயுள்ள குழிகளிலிருந்து திருமஞ்சன நீர் இக்கோயிலின் நாலுகால பூசைக்கும் ஆசாரத்துடன் கொண்டு வரப்படுகிறது. இதனால் இக்குழிக்குத் திருமஞ்சனக் குழி என்றே பெயர். இவ்வழக்கம் தொன்றுதொட்டு வருவது என்பதை,

"முன்பென நதிநீர் மூழ்கி, மெய்ம்மலர் புனல்கொண் டெய்திப்
பொன்புரை திருவிற் கோலப் புனிதனை வழிபட் டேத்தி"

(செந்நெல் வைத்த சருக்கம், 10)

என்று சிவப்பிரகாசர் இத்தலபுராணத்தில் குறிப்பிடுகின்றார்.

சுற்றிலும் உள்ள பத்து ஊர்களுக்கும் திருவிற்கோல நாதரே குலதெய்வம் ஆவார். இம்மூர்த்தி இங்கு மணல் இலிங்கமாகக் காட்சி யளிக்கின்றார். தீண்டாத் திருமேனி. பல அற்புதங்களை நிகழ்த்துபவர். அதிக மழை, வெள்ளம் வரும் அறிகுறி இருந்தால் இத்தல மூர்த்தி மீது வெண்மை படரும் என்றும், போர் நிகழ்வதாயின் செம்மை படரும் என்றும் கூறப்படுகிறது. இது பற்றியே திருஞானசம்பந்தர் தம் பாடலில் 'ஐயன்நல்அதிசயன்' என்று குறிப்பிடுகின்றார்.

இறைவனின் பன்னிரு திருநாமங்கள்

திருவிற்கோலத்திலுள்ள இறைவனைத் திரிபுராந்தகர் என்றும், இறைவியைத் திரிபுராந்தகி என்றும் அழைப்பர். சிவப்பிரகாசர் இத்தல இறைவனுக்குரிய பன்னிரு திருநாமங்களையும் புகழ்ந்து பாடுகின்றார்.

"இரட்சகர் தியாகர் இசைச்சந்த தாரர்
எழில்மிக வளர்சடைக் கூத்தர்
அருட்சக நாதர் அஞ்சநா பகண்டர்
அருங்கிலா நிக்கின ரோடும்
திருக்கறு புவன நாயகர் திரிபு
ரக்கினர் அப்பிர திட்டர்
தெரித்திடு கூவ நாதர்அன் பர்க்குச்
செந்நெல்லைத் தவர்என லாமால்"

(அடிமுடி தேடிய சருக்கம், 40)

என்னும் பாடலில் இவற்றை விளக்குகிறார்.

1. இரட்சகர் (உயிர்களை உய்விப்பவர்)
2. தியாகர் (கொடை நல்கும் கோமான்)

3. சந்ததாரர் (அடியாரைச் சமுசார பயம் நீக்கிக் காத்தவர்)
4. தீர்க்க ஜடா நிருத்தர் (வளர்சடைக் கூத்தர்)
5. சகநாதர் (சர்வ கர்த்தர்)
6. அஞ்சநாப கண்டர் (விடத்தால் மைபோலும் ஒளிமிக்க கண்டமுடையவர்)
7. கிலாநிக்னர் (கலிகாலத் துயரைப் போக்கியவர்)
8. புவன நாயகர் (உலக நாதர்)
9. திரிபுரக்னர் (முப்புரம் அழித்தவர்)
10. அப்பிரதிஷ்டர் (தானே முளைத்த தனிமுதல்வர்)
11. கூவநாதர் (கூவத்தல இறைவர்)
12. நீவாரதர் (செந்நெல் வைத்தவர்)

என்னும் இப்பன்னிரு நாமங்களுள் ஒன்றையேனும் தம் மக்கட்குப் பெயராக இட்டவர், இம்மையில் அழியாப் போகமுடன் வாழ்ந்து மறுமையில் சிவனடி சேர்வர் என்கிறார் சிவப்பிரகாசர் (பா. 41)

திருவிற்கோல நாதர் செந்நெல் வைத்த வரலாறு

மொத்தம் 703 செய்யுள்களாலான இத்தலபுராணத்தை ஏழு சருக்கங்களால் பாடியுள்ளார் சிவப்பிரகாசர். நைமிசாரணியச் சருக்கம், திருத்தலச் சருக்கம், திரிபுரதகனச் சருக்கம், சந்தானகிரி சந்தானச் சருக்கம், அடிமுடி தேடிய சருக்கம், தாருகன் வதைச் சருக்கம் ஆகியவற்றைப் பாடிய இவர், இத்தலத்தில் சிவனடியாருக்குக் காட்சி தந்தருளிய இறைவன் திருவிளையாடலைத் தனியே ஒரு சருக்கமாக அமைக்கின்றார். 'செந்நெல் வைத்த சருக்கம்' என்னும் இப்பகுதியில் நாற்பத்திரண்டு பாடல்களில், திருவிற்கோலநாதர் ஓர் அடியவருக்காக நாள்தோறும் நெல் வழங்கி, 'செந்நெல் வைத்தவர்' என்ற பெயர் பெற்ற வரலாற்றை மிக அழகாக விளக்குகின்றார்.

அருள்நெறி காத்த தருமசீலர்

கூவமாநகரில் வாழ்ந்த தருமசீலர் என்ற அந்தணர் அரன் பக்தி யிலும், அடியார் பக்தியிலும் சிறந்தவர். அறநெறியால் ஈட்டிய தம் பொருளையெல்லாம் அடியவர்க்கு அறுசுவையுண்டி யளிப்பதற்காகவே செலவழிப்பதில் பெருமை கொண்ட தருமசீலர் இவர்.

அமுதளிக்கும் நற்தொண்டினைச் செய்துவந்த இவருடைய பெருஞ் செல்வமெல்லாம் மறைந்தன. இருப்பினும் இவர்தம் மனம் தளராமல் திருத்தொண்டினைத் தொடர்ந்து செய்து வந்தார். வீட்டிலுள்ள பொருள் களையெல்லாம் விற்றும், மனைவியின் தாலியை விற்றும் அடியவருக்கு அமுதளித்து வந்தார்.

"பழகுதஞ் செல்வ மெல்லாம் பயன்தரு கதலி யாக
அழகுதம் பெருகு கற்பி னளவலா தளவி லாமல்
ஒழுகுநல் மனைவி யார்தம் உரியபொற் தாலி யாதி
முழுதும்விற் றடியார்க் கன்பால் முதிர்சுவை அமுதளித்தார்" (6)

தருமசீலரிடமிருந்த பொருள்கள் அனைத்தும் ஒழிந்தன. செந்நெல்லைப் பிறரிடம் சென்று இரந்து வந்து அடியவர்க்கு அமுதளிக்கலாயினார். பிறகு பிச்சைக்குப் போனபோது இடுவாரின்மையால் வறிதே வீடு திரும்பினார். இவ்வாறு எட்டு நாள்கள் தம் மனைவியுடன் உணவின்றிப் பசித்திருந்தார் இவர். மனைவியார் மிகவும் வருந்தி மனம் நொந்தார். தரும சீலரின் உடல் தளர்ந்தது. ஆனால் உள்ளம் தளரவில்லை. நாள்தோறும் நீராடி முறைப்படி திருவிற்கோல நாதரை வழிபட்டு வீடு வந்தார். ஒன்பதாம் நாள், வழக்கம் போல் வழிபாடு முடித்து வீடு வரும்போது மயங்கி கீழே விழுந்தார். அதுகண்ட மனைவியார் கதறியழுதார்.

இந்நிலையில், பசியால் இளைத்த திருத்தொண்டர் ஒருவர் தருமசீலரது மனைக்கு வந்தார். அடியாரை வரவேற்ற தருமசீலர், அவருக்கு அமுதூட்ட இயலாமைக்காக வருந்தினார். 'இன்னும் இந்நகர் முழுதும் சென்று இரந்து நெல் கொண்டு வருவேன்' என்று கூறி விரைந்து சென்றார். அவ்வாறே இருநாழிச் செந்நெல் கிடைத்ததும் வீடுவந்து மனைவியிடம் தந்தார். அவரும் அதனை ஏற்றுச் சமைத்து அடியார் பசிதீர அமுதளித்தார். அடியாரும் மனமகிழ்ந்து விடைபெற்றுச் சென்றார். அவர் உண்டு எஞ்சிய உணவைத் தருமசீலரும் அவர் மனைவியும் உண்ணச் சென்றனர். அப்பொழுது ஓர் முதியவர் உருவில் தோன்றிய இறைவன் திருத் தொண்டின் சிறப்பை அனைவருக்கும் உணர்த்தியருளினார். கூவ நாயகனான திருவிற்கோல நாதர் தம்முடைய உண்மை வடிவை மறைத்து முந்து தொண்டர்கள் போலொரு மூப்புருவெடுத்து வந்தார்.

"அன்று மேவிய காரைக்கா லம்மையே யம்மை
என்ற வாசக மெய்பெற அவளுரு வென்னத்
துன்று மேனியிற் தசையொழிந் தென்பெலாந் தோன்ற
மன்று ளாடிய திருவடி மலர்நடை தளர"

"பொருவில் தன்னைவிற் கோலத்த னெனும்பெயர் புதுக்க
உருவ முள்வளைந் தொருகழைத் தண்டுமுன் னூன்றித்
திருவி றைஞ்சுபொற் பையர வல்குலாள் சிரிப்பத்
தரும சீலர்தம் மனையிடைப் புகுந்தனன் தலைவன்" (24, 25)

என இவ்வாறு தருமசீலர்தம் இல்லம் சேர்ந்த இறைவனின் திருக்கோலத்தைக் காட்டுகிறார் சிவப்பிரகாசர்.

இவ்வாறு அடியார் உருவில் வந்த இறைவன், ''தருமசீலரே! யாம் பசியோடு இருக்கிறோம். ஒருபிடி சோறிட்டாலும் உமக்குப் புண்ணியமுண்டாகும்'' என்றார். இதனைக் கேட்ட தருமசீலரும் அவர் மனைவியும் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டனர். ''நாங்கள், இங்கு எஞ்சிய உணவினை உண்பதற்குமுன் நம்பரடியார் வந்தது எங்கள் நற்றவம்'' என்று அடியாரை அழைத்து வந்து ஆசனத்திருத்தினர். அன்பு மனைவியார் ஆர்வமுடன் அமுது படைத்தார். தாம் எட்டு நாள் பட்டினி ஆயினும் வந்த அடியவருக்கு மனமுவந்து உணவிட்டனர். இவர்தம் அன்பினை மெச்சிய இறைவன் அருளுருவம் காட்டி நின்றார். ''உமது வறுமை நீங்கும் வரையிலும் நம் ஆலயத்தில் நாள்தோறும் ஓர் அழகிய குடத்தில் செந்நெல் வைப்போம். எடுத்துக் கொள்க'' என மொழிந்தருளினார்.

''கலிமிகு சிறுவிலைக் காலஞ் செல்வரை
மெலிவுறு நுமக்குநம் விளங்கு மாலயத்
துலைவற வனுதின மொரும ணிக்குட
மலிவுறு செந்நெல்முன் வைத்துங் கொண்மென'' (30)

என இறைவன் கூறியருளியதைச் செவியுறக் கேட்ட தருமசீலர் கைகள் தலைமிசையேறக் கண்ணீர் பாய, ''எளியேனை ஆளவந்தவன் இறைவன் தானோ'' என எண்ணித் துதித்தார். மனைவியாரும் பரமனைத் துதித்து மகிழ்ந்தார்.

பின்னர், தருமசீலர் நாள்தோறும் ஆலயம் சென்று இறைவனைத் தொழுது, செந்நெல்லைக் கொண்டுவந்து அளவற்ற அடியவர்க்கு அமுதூட்டும் திருத்தொண்டைத் தொடர்ந்து செய்து வந்தார். இவ்வாறு தவறாமல் சோறளித்த தருமசீலர் சிவகதி பெற்றார்.

''இத்திற நாடொறும் இறைவ னாலயம்
வைத்தசெந் நெற்கொடு வருந்தொண் டர்க்கெலாந்
துய்த்திட அமுதறு சுவையொ டும்படைத்
துத்தமர் சிவனரும் பதத்தி லொன்றினார்'' (34)

என இவ்வரலாற்றை உரைக்கின்றார் சிவப்பிரகாசர்.

தருமசீலருக்குச் செய்த இவ்வற்புதத்தால் திருவிற்கோல நாதருக்குச் 'செந்நெல் வைத்தவர்' என்ற திருநாமம் வழங்கலாயிற்று. இத்திருநாமத்தை அன்போடு செபிப்பவர் அழியாச் செல்வமும் நிறைந்த கல்வியும் பெற்றுச் சிவகதியும் சேர்வர் என்பர்.

''மறையவர் தமக்கிம் முறைமையிற் செந்நெல்
வைத்தலான் அரியவிற் கோலத்
திறையவன் உலகிற் செந்நெல்லைத் தவனா
மென்னுமெய்ப் பேரடைந் தனனால்

அறையுமப் பெயரை மனம்விழைந் துரைப்போர்
அழிவிலா மிக்கசீர்ச் செல்வம்
நிறைபெருங் கல்வி பெருகுவர் பின்னும்
நிகரில்பே ரின்பவீ டடைவார்'' (35)

என்னும் இப்பாடலில் இப்பெயர் வந்த வரலாற்றையும் இப்பெயரின் அருமை பெருமைகளையும் சிவப்பிரகாசர் விளக்குகின்றார்.

தொண்டார்வம் மிக்க அடியார்கள் பலர் காலந்தோறும் இருந்து வருகின்றனர். அவர்களை இனங்காண்பதும், அவர்களை வரலாற்றில் பதிவு செய்வதும் அருமை. இதனை மனங்கொண்ட சிவப்பிரகாசர் இத்தலபுராணத்தில் இவ்வடியார் பெருமையையும், இறைவன் திருநாம மகிமையையும் திறம்படப் பதிவு செய்துள்ளார்.

சேக்கிழார் காட்டும் சிவனடியார்கள் மக்களுக்குச் செய்த தொண்டுகள் சிறப்பானவை. அவற்றுள், 'சோறிடுதல்' என்பது குறிப்பிடத்தக்க ஒன்று. திருவீழிமிழலையில், திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் தனித்தனி மடங்களில் பஞ்சம் தீர்க்கின்ற வரையில் சோறிட்ட வரலாற்றைச் சேக்கிழார் காட்டுகின்றார். 'பசித்தவர்கள் யாராக இருந்தாலும் வந்து உணவு உண்க' என்றழைத்து அவர்கள் உணவிட்டனர். இதற்காக இறைவன் படிக்காசு நல்கியதையும் வரலாற்றால் அறிகிறோம்.

''கால நிலைமையால் உங்கள் கருத்தில் வாட்டமுறீர் எனினும்
ஏல உம்மை வழிபடுவார்க் களிக்க அளிக்கின்றோம் என்று
கோலங் காண எழுந்தருளிக் குலவும் பெருமை இருவர்க்கும்
ஞாலம் அறியப் படிக்காசு வைத்தார் மிழலை நாயகனார்.''
(திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம், 257)

என இதனைச் சேக்கிழார் விளக்குகின்றார்.

'சோறிடுதல் சிறந்த சிவத்தொண்டு' என்ற கருத்து வேரூன்றிய காலம் மிகப்பழமையானது எனத் தெரிகின்றது. பெரியபுராணம் கூறும் நாயன்மார்கள் பலரின் வரலாறுகள் இதற்குச் சான்றாகும். இது, சிவப்பிரகாசர் காலத்திலும் தொடர்கின்றது என்பதையே இத்தல வரலாறு புலப்படுத்துகின்றது. பெரியபுராண அடியார்கள் வழியில் மேலும் பல அடியார்கள் வாழ்ந்திருந்ததைச் சிவப்பிரகாசர் தம் நூலில் பதிவு செய்துள்ளார். இவ்வாறு நடந்த நிகழ்ச்சிகளின் பயனாக எழுந்த இறைவன் திருநாமங்களையெல்லாம் நம் பிள்ளைகளுக்கும் வைத்து அழைத்தால் நம் பண்பாட்டுச் சிறப்பை இப்பாரறியும் என்பதையும் சிவப்பிரகாசர் உணர்த்துகின்றார். இவ்வரிய செய்திகளை நாமும் உணர்ந்து போற்றி நலம் பெறுவோமாக.

82. மாணிக்கவாசகரும் திருவாசகமும்

அ. மாதவி, திருநெல்வேலி.

சைவ சமய வளர்ச்சிக்கும் வளத்திற்கும் பாடுபட்டவர்களில் சிவப்பிரகாசர் குறிக்கத்தக்கவர். 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகிய இவர் தாம் வாழ்ந்த 32 ஆண்டுகளில் 32 நூல்களை இயற்றிய பெருமைக் குரியவர். இந்நூல்களில் குறிப்பிடத்தக்க பெருமைக்குரியது 'நால்வர் நான்மணிமாலை'யாகும்.

சமயக்குரவர்கள் நால்வரைப் பற்றியும் விரிவாகவும் விளக்க மாகவும் போற்றும் வகையிலும் இலக்கிய நயத்துடனும் ஆராய்ச்சிப் போக்குடனும் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. நால்வர் பற்றியும் இந்நூலில் செய்திகள் இடம்பெற்றாலும் இவ்வெழுத்துரையில் மாணிக்கவாசகரைப் பற்றியும் திருவாசகம் பற்றியும் கூறப்பட்டுள்ள பத்துப் பாடல்களை மட்டும் கொண்டு செய்திகள் பேசப்படுகின்றன.

நால்வர் நான்மணிமாலை சிறப்புகள்

இந்நூலில் பாட்டுடைத் தலைவர்கள் நால்வராக இருப்பதால் நால்வரையும் பற்றி 40 பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. இந்நூல் 'பெரிய புராண சாரம்' என்றும் புகழப்படுகின்றது. செயற்கருஞ் செயல்கள் செய்த அடியார்களின் பெயர்கள் ஒரு பாடலில் (பா. 12) இடம் பெற்றுள்ளமை இதற்குக் காரணமாகும்.

சிவஞான முனிவர் இந்நூலை உருண்டை வடிவமான சுவடியில் எழுதித் தம் உருத்திராட்ச கண்டிகையிற் சேர்த்து அணிந்து கொண்டு இருந்தார் என்று புகழப்படுகின்றது. அடியவர்களின் வரிசையில் சண்டேசுரா 'சிறிய பெருந்தகை' என வழங்கப்படுதல் போல இலக்கிய உலகில் இந்நூல் 'சிறிய பெருந்தகை' என வழங்கப்படுகின்றது.

மேலும் இந்நூலைப் பின்பற்றித் திருமயிலை வித்துவான் சண்முகம்பிள்ளை 'சந்தான குரவர் நான்மணிமாலை' என்ற நூலை இயற்றியுள்ளமையும் இங்குக் கருதுதற்குரியது. இக்கருத்துகள் இந்நூல் சமய உலகிலும் இலக்கிய உலகிலும் இறையன்பர்கள் மத்தியிலும் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தைப் புலப்படுத்துகின்றன.

இவற்றின் மூலம் சிவப்பிரகாசரின் நூலின் சிறப்பையும் பாடல்களின் பெருமையையும் நன்கு உணர முடியும்.

மாணிக்கவாசகர், திருவாசகம் – சிவப்பிரகாசர் வழி

தம்மைத்தாமே வருத்திக் கொண்டு இறைவனுக்குத் தொண்டரானவர்கள் சிவனடியார்கள். ஆனால் இறைவனே தன்னை வருத்திக்கொண்டு மாணிக்கவாசகரைத் தொண்டராக்கிக் கொண்டான். இதையே இராமலிங்க வள்ளலார் 'மணிவாசகப் பேறு' என்று குறிப்பிடுகின்றார். இத்தகு சிறப்புகள் கொண்ட மாணிக்கவாசகர் மீது சிவப்பிரகாச சுவாமிகளுக்கு அளவிடற்கரிய பக்தியும் பாசமும். இதனை அவர் மாணிக்கவாசகர் மீது பாடியுள்ள பத்துப் பாடல்களும் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

சிவப்பிரகாசர் மாணிக்கவாசகர் பற்றிப் பாடியுள்ள பாடல்கள் பத்தும் (4, 8, 12, 16, 20, 24, 28, 32, 36, 40) அகவல் என்னும் யாப்பமைப்பையும் மணிகளுள் மாணிக்கத்தையும் கொண்டனவாய் அமைந்துள்ளன. இந்நூலுக்கு அரிய உரை எழுதி உள்ள வை. இரத்தினசபாபதி அகவல், மாணிக்கம் குறித்துப் பின்வருமாறு விளக்க மளிக்கின்றார்.

''அகவல் ஞானநிலையை வெளிப்படுப்பது, மயிலின் ஓசையே அகவலோசை எனப்படும். நினைவின் முதிர்ச்சியே மயிலுக்குக் கருவாக அமையும். அதனாலேயே முருகப்பெருமான் அதனை வாகனமாகக் கொண்டார். நினைப்பற நினைக்கும் நினைவின் தன்மையை வழியாகக் கொண்டு இறையருள் இன்பம் துய்த்த மாணிக்கவாசகப் பெருமானை அகவலோசையால் அமைத்துப் பாடினார்......மாணிக்கம் நீர்ப்பொருள் (விஷம்) கட்டிப்பட்டதால் அமையும் வகையைச் சார்ந்தது. நீர்மைத் தன்மையாயிருந்தும் தம்முடைய ஒழுக்கத்தினால் மாணிக்கத் தன்மையைப் பெற்றவர்கள் மாணிக்கவாசக சுவாமிகள்'' (வை. இரத்தினசபாபதி (உரை), நால்வர் நான்மணிமாலை, ப. 18, 20)

சிவப்பிரகாசர் மாணிக்கவாசகருக்கு அளித்துள்ள சிறப்புப் பெயர்கள்

இறைவனே துன்பம் அனுபவித்து நரியாகிய பரியில் வந்து உதவிய தொண்டர் மாணிக்கவாசகர். மேலும் அவரது பாடல்கள் கேட்போர் படிப்போர் போன்ற யாவரும் ஊன், உயிர் உருகக் கேட்கும் தன்மையன. இத்தகைய மாணிக்கவாசகரின் சிறப்புகளைச் சிவப்பிரகாசர் தமது நூலில் பலபடியாகப் பாராட்டுகின்றார். இதனை மாணிக்கவாசகருக்கு அவர் அளித்துள்ள சிறப்புப் பெயர்கள் மூலம் அறிய முடியும்.

ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல் (பா. 4), பெருந்துறை போந்து பேரின்ப வெள்ளம் மூழ்கிய புனிதன் (பா. 8), வாதவூரன்பன் (பா. 12), மாணிக்கவாசகன் எனும் ஒரு மாமழை (பா. 16) வித்தகன் (பா. 20), நலமலி வாதவூர் நல்லிசைப் புலவன், மனம் நின்று உருக்கும் மதுரவாசகன், செய்ய மாணிக்கவாசகன், கலங்குறு புலனெறி விலங்குறு வீரன் - (பா. 24) என்றிவ்வாறு போற்றுகின்றார்.

ஆயின தொண்டரும் ஆக்கின தொண்டரும்

சாதாரண மக்களால் நினைத்தற்கும் அரிய செயல்கள் செய்து இறைவனுக்குத் தம்மை தொண்டர்களாக ஆக்கிக் கொண்ட சில நாயன்மார்களின் பெயர்களையும் அவர் செயல்களையும் எடுத்துக்காட்டி இவர்களெல்லாம் தம் சொந்த முயற்சியினால் தொண்டரானவர். ஆனால் மாணிக்கவாசகரை,

'பாடும் பணிநீ கூடும் பொருட்டு
மதுரைமா நகரிற் குதிரை மாறியும்
விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்தும்
நீற்றெழின் மேனியில் மாற்றடி பட்டும்
நின்னைத் தொண்டன் என்னக் கொண்டனன்' (பா. 12)

என்று நரியைக் குதிரையாக மாற்றியும், தலையில் மண் சுமந்தும், அரசனின் பிரம்பால் முதுகில் அடிபட்டும் அவரைப் பாடுவித்துத் தொண்டராக்கிக் கொள்ளும் பொருட்டுத் துன்பங்களை அலைவித்தத் தன்மையைச் சிவப்பிரகாசர் 'ஆயின தொண்டரும் ஆக்கின தொண்டரும்' என்ற அடியின் மூலம் புலப்படுத்துகின்றார்.

மாணிக்கவாசரைப் பிணிக்க வல்லார்க்கு இறைவன் அருளுவான்

'தானே வந்து என்னைத் தலையளித்து ஆட்கொண்டருளினான்' என்று மாணிக்கவாசகரே குறிப்பிடும் பேறுபெற்றவர் மாணிக்கவாசகர். மேலும் 'நானேயோ தவம் செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்' என்றும் அவரே குறிப்பிடுகின்றார். இத்தகைய சிறப்புகளைப் பெற்ற மாணிக்கவாசகரை மனத்தாற் பிணிக்க வல்லார்க்கு இறைவன் தானே முன்வந்து முத்தியை அளிப்பான் என்பது சிவப்பிரகாச சுவாமிகளின் கருத்து. இறைவனையே நினைக்க வேண்டாம் இறைவனால் விரும்பி தொண்டராக்கிக் கொள்ளப் பட்ட மாணிக்கவாசகரை நினைத்தாலே போதும் இறைவன் தானே வந்து அருள் புரிவான். இது மாணிக்கவாசகர் மீது சிவப்பிரகாசர் கொண்ட அளவிடற்கரிய பக்தியைக் குறிப்பிடுகின்றது.

'தானே முத்தி தருகுவன் சிவன்அவன்
அடியன் வாத வூரனைக்
கடிவுகில் மனத்தால் கட்டவல் லார்க்கே' (பா. 36)

என்பன சிவப்பிரகாசரின் வரிகள்.

இறைவனிடம் பெற்ற அருளை அடியேனுக்கும் அருளுக

மாணிக்கவாசகர் இறைவனிடம் பெற்ற எல்லையில்லாக் கருணையை அருளைக் கண்டு சிவப்பிரகாசர் பெரிதும் மகிழ்ந்து அதில் சிறிதளவு தனக்கும் அருளல் வேண்டும் என்று மாணிக்கவாசகரை வேண்டுகின்றார். சிவப்பிரகாசர் மாணிக்கவாசகர் இறைவன் அருள் பெற்ற தன்மையை.

– 'அந்தோ
முறையோ முறையோ இறையோனே யென்(று)
அழுது' (பா. 20)

என்று குறிப்பிடுகின்றார். இவ்வாறு அவர் பெற்ற அருளினில் ஒரு சிறிது அடியேனுக்கும் அருளல் வேண்டும். இறைவனிடம் பெற்ற அன்பினை நீயே கொள்ளுதல் உன் அருட் பெருக்கிற்கு உகந்ததன்று. எனவே எனக்கும் உன் பெருமைக்குத்தக இறைவன் அருளைச் சிறிதளவு வழங்க வேண்டும் என்பது சிவப்பிரகாசரின் விண்ணப்பமாக உள்ளது.

நன்றறிவாரிற் கயவர் திருவுடையார்

நன்மை தீமைகளை ஆராய்ந்து அறிபவர்களை விட அறிவற்ற கயவர்கள் சிறந்தவர்கள் என்பது திருவள்ளுவர் வாக்கு. இதைத் தம் நூலில் பயன்படுத்திக் கொண்ட சிவப்பிரகாசர், மாணிக்கவாசகர் இறைவனிடம் அருளைப் பெற்ற பின்னும் பெறாதவரைவிட அதிகமாக அழுது அரற்று கின்றார். மாணிக்கவாசகரின் 'நீத்தல் விண்ணப்பம்' இதனைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றது. ஆனால் சிவப்பிரகாசர் தாம் இறைவனிடம் எந்த அருளையும் பெறாத போதும் இவ்வுலக வாழ்க்கையை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டுள்ள போதும் இறைவன் அருளைப் பெற்றதைப் போலக் களிப்பில் ஆழ்கின்றார்.

மேலும் தன்னைப் 'பேய்' என்றும் குறிப்பிட்டுக் கொள்கின்றார். இதற்கு விளக்கமளித்துள்ள வை. இரத்தினசபாபதி, ''பேயேன் என்பது சிவப்பிரகாச சுவாமிகள் தம்மையே கூறிக் கொள்ளும் சொல். பிடித்துக் கொள்ளும் தன்மையிற் சிறந்தது பேய். இவ்வுலக வாழ்க்கையில் விடாப் பிடியாய்ப் பேயெனப் பற்றியுள்ளவன் யானே என்று குறிப்பிடுகிறார்'' (வை. இரத்தினசபாபதி (உரை) நால்வர் நான்மணிமாலை, ப. 206, 207) என்று எழுதுகின்றார்.

இவ்வாறெல்லாம் மாணிக்கவாசகர் இறைவனிடம் அருள் பெற்ற திறம் பேசப்படுகின்றது. பின்வரும் பகுதி இத்தகைய அருள் பெற்ற மாணிக்கவாசகரின் பாடல்கள் பற்றிச் சிவப்பிரகாசர் கூறும் கருத்துகளைக் கொண்டு அமைகின்றது.

வாசகன் எனும் மாமழை

மாணிக்கவாசகர் பாடிய பாடல்கள் மாமழைக்கு ஒப்பானது என்று பேசுகின்றார் சிவப்பிரகாசர்.

'மாணிக்க
வாசகன் எனும்ஒரு மாமழை பொழிந்த
திருவா சகம்எனும் பெருநீர்'' (பா. 16)

மழை பயிர் செழித்து உயிர் வாழ உதவுவதைப் போல மாணிக்க வாசகரின் பாடலும் 'சிவம்' எனும் முத்திப்பயன் கனிந்தமைய உதவும் தன்மையுடையதாக உள்ளது எனும் பொருள்பட 'திருவாசகம்' எனும் பெருநீர் என்று குறிப்பிடுகின்றார் சிவப்பிரகாசர்.

வாசகமும் வாச்சியமும்

ஏழிசையாய் இசைப்பயனாய் இருப்பவன் இறைவன். அதைப்போல் திருவாசகத்தின் பாடலாகவும் பாடற்பொருளாகவும் (வாச்சியம்-பொருள்) இருப்பவனும் இறைவனே. சொல்லும் பொருளும் எனும் பேதம் அற்று நிற்பவன் இறைவன் என்பதை மாணிக்கவாசகரின் பாடல் கொண்டு நிறுவுகின்றார் சிவப்பிரகாசர்.

திருவாசகத்தைப் படித்த தில்லை வாழந்தணர் இவ்வாசகத்திற்குப் பொருள் யாது என்று வினவிய காலத்துச் சிற்றம்பலத்தை அடைந்து இவரே பொருள் எனக் காட்டி மறைந்தவர் மாணிக்கவாசகர் எனும் கருத்தை உட்கொண்டே சிவப்பிரகாசர் இப்பாடலில்,

''பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம்
மூழ்கிய புனிதன் பொழிந்தவா சகமே
வாசகம் அதற்கு வாச்சியம் - இறைவன்'' (பா. 8)

இக்கருத்தைப் பெற வைக்கின்றார்.

மேலும் மலர்களில் தாமரை உயர்ந்ததாகக் கருதப்படுவதைப் போலப் 'பாட்டென்றால் அது உன்பாட்டு' என்று மாணிக்கவாசகரின் பாட்டுக்குப் பெருமை சேர்க்கின்றார். பாட்டென்றால் உடலையும் உள்ளத்தையும் உருகச் செய்ய வேண்டும். மாணிக்கவாசகரின் பாட்டோ ஒருபடி மேலாகச் சென்று உயிரையும் உருகச் செய்வது அதனால்தான் அதனைச் சிவப்பிரகாசர் 'பாட்டென்றால் அது உன் பாட்டு' என்கின்றார்.

மேலும் சிவப்பிரகாசர் இவ்வாறு கூற மற்றொரு காரணமும் உண்டு. மாணிக்கவாசகர் கூற இறைவனே எழுதினான் என்பது அக்காரணமாகும்.

''தன்னை நீபுகழ்ந் துரைத்த
பழுதில் செய்யுள் எழுதினன்' (பா. 24)

என்று சிவப்பிரகாசர் மாணிக்கவாசகரின் பாடலை இறைவனே எழுதியதால் 'பழுதில் செய்யுள்' என்று குறிப்பதைக் காண முடியும்.

இங்ஙனம் வாசகமாகவும் வாச்சியமாகவும் அவ்வாசகத்தை எழுதியவனுமாக இறைவன் இருப்பதைச் சிவப்பிரகாசர் அழகாகக் குறிப்பிடுகின்றார்.

இத்தகு சிறப்புகள் கொண்ட திருவாசகத்தை மிக உயர்ந்தது என்று போற்றப்படுகின்ற வேதங்களுடன் ஒப்பிட்டுத் திருவாசகத்தின் பெருமையைப் புலப்படுத்துகின்றார்.

மொழியும் தேனும்

சிவப்பிரகாசர் திருவாசகத்தை 'வாசகத்தேன்' என்று குறிப்பிடுகின்றார். இதனை, 'ஆதிசீர் பரவும் வாதவூரண்ணல் மலர்வாய் பிறந்த வாசகத்தேனோ' (பா. 4) என்று குறிப்பிடுவதன் மூலம் உணரலாம். திருவாசகத்தைத் 'தேன்' என்றவர் வேதத்தை மொழி என்கின்றார். இந்த இரண்டையும் ஓதுவதால் ஏற்படுகின்ற விளைவுகளைப் பின்வருமாறு கூறுகின்றார் சிவப்பிரகாசர் :

வேதம்ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவா சகமிங்(கு) ஒருகால் ஓதில்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை யுலகில் மற்றையர் இலரே (பா. 4)

மற்றொரு பாடலில் வேதத்தை மட்கலத்திற்கும் திருவாசகத்தைப் பொற் கலத்திற்கும் ஒப்பிடுகின்றார். இவ்விரு பாடல்களையும் நோக்கிய வை. இரத்தினசபாபதி பின்வருமாறு உரையெழுதுகின்றார்.

''வேதத்தை விடத் திருவாசகம் உயர்ந்தது என்பதை மூன்று சான்றுகளால் நிறுவுகிறார்.

1. வேதம் பலகால் ஓதினும், ஓதக் கேட்கினும் மனம் உருகி அன்பராதல் இல்லை; திருமுறை ஒருமுறை ஓதக் கேட்டவர்கள் அன்பர் ஆகாமல் இருத்தல் இல்லை. அன்பர் ஆதல் இல்லை; அன்பர் ஆகாமல் இருத்தல் இல்லை என்று இரண்டையும் எதிர்மறையாற் கூறினர்.
2. ஒரு சிலருக்கே ஓதும் உரிமையுடையதாகிய வேதம் மண்கலம், அனைவருக்கும் ஓதும் உரிமையுடைய திருவாசகம் பொற்கலம் நிகர்க்கும்.

3. வேதம் ஓதினால் வரும் பயன் அறம்; திருவாசகம் ஓதினால் வரும் பயன் முத்தி'' (வை. இரத்தினசபாபதி (உரை) நால்வர் நான்மணிமாலை , ப. 38).

இவ்வாறு சிவப்பிரகாசர் மாணிக்கவாசகரைப் புகழ்ந்தும் திருவாசகத்தைப் போற்றியும் பாடியுள்ள கருத்துகள் நால்வர் நான்மணிமாலையில் சிறப்பிடம் பெற்றுள்ளன. அடியவர்கள் பலரும் அரும்பெரும் செயல்கள் புரிந்து இறைவனுக்குத் தொண்டாயினராக, மண் சுமந்தும் பிரம்படி பட்டும் இறைவன் இவருக்குத் தொண்டா யினானே என்ற சிறப்பு, எருதேறியைக் குதிரையேறியாகச் செய்த வித்தகச் செயல், பெருந்துறையிடத்துக் குருந்தமர நிழலில் வேதப்பொருள் உபதேசம் பெற்றது, இறைவனே வந்து திருவாசகத்தை எழுதியது இவை சிவப்பிரகாசரின் மனத்தை நெக்குருகச் செய்துள்ளன என்பதை அவர் மாணிக்கவாசகர் குறித்து எழுதியுள்ள பாடல்கள் புலப்படுத்துகின்றன. இப்பாடல்கள் மாணிக்கவாசகரின் பெருமையை மட்டுமல்லாது இவற்றைப் படைத்த சிவப்பிரகாசரின் சிறப்புகளையும் பாடுந்திறத்தையும் புலப்படுத்தி நிற்கின்றன எனில் மிகையில்லை.

83. "சிவப்பிரகாசரின் கற்பனைத் திறன்"

தெ. முருகசாமி, காரைக்குடி.

பதினேழாம் நூற்றாண்டின் கவிச்சுடராகத் திகழ்ந்த சிவப்பிரகாச சுவாமிகள் கற்பனைக் களஞ்சியம் எனப் புகழப்பட்டார். தமிழிலக்கிய உலகில் அவர் காலத்திலும் அவர் காலத்துக்கு முன்னும் பின்னும் அவரைப் போலக் கற்பனை செய்தவர்கள் இல்லை என்றே கூறலாம்.

ஆங்கிலமொழித் தொடர்பால் கற்பனைக்கான இலக்கண வரை யறைகள் தமிழில் தனித்தறியப்பட்டாலும் கவிஞர்கள் தம் போக்கில் பாடிய பாடல்களை நோக்கும்போது கற்பனையின் பரிமாணங்கள் அவர்களை அறியாமையிலேயே அவர்தம் பாடல்களில் படிந்துள்ளதை உணரலாம். இந்த வகையில் அள்ளஅள்ளக் குறையாத அற்புதக் கற்பனை களை வாரி இறைத்த பெருமை சிவப்பிரகாசரையே சாரும் எனலாம். எனவே தொட்ட இடமெல்லாம் மணக்கும் துளசியைப் போலச் சிவப்பிரகாசரின் எழுத்துக்கள் தோறும் கற்பனை கரைபுரண்டோடும் திறத்தை நோக்கியறிவதே இக்கட்டுரையின் கருதுகோளாகும்.

கற்பனையைப் பற்றி இலக்கியக் கலை வித்தகர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்கள் கீழ்வருமாறு கூறுகிறார்.

> "கற்பனை என்றவுடன் நம்ப இயலாததும் இயற்கைக்கு மாறானவையுமான சிலவற்றைப் பற்றிக் கவிதை புனைவது என்பதாகச் சிலர் எண்ணுவது பிழையானது. அனுபவித்த ஒரு பொருளைப் புலன்களால் நேரடியாக அனுபவியாத காலத்திலும் மறுபடியும் அவ்வனுபவத்தையே தூண்டவல்லதான நினைவைத் தருவதாயின் அதுவே கற்பனை. இது கவிஞனின் ஆக்கல் சக்தியால் (Creative Power) கவிதையாகிறது."

அறிஞர் அ.ச.ஞா. அவர்களின் கருத்தைக் கொண்டு கற்பனையை வரையறை செய்தால் 'எண்ணத்தின் மேல் எழுகின்ற உருவகமே கற்பனை என்பதும் அது காட்சியளவாலும் கருதல் அளவாலும் உருவாவது என்பதுமாக உணரலாம். இந்த அடிப்படையில் சிவப்பிரகாசரின் கற்பனைகளை நோக்குவோமாக!

சிவப்பிரகாசரின் முதல் இலக்கியமாகிய சோணசைலமாலையின் தொடக்கமே காட்சியளவும் கருதல் அளவுமான கற்பனையோடு தொடங்கு

கிறது. திருவண்ணாமலையை வலம் வருதற்கேற்ற தோத்திரப்பாடலாக நூல் பாடப்பட்டுள்ளது. இலக்கியம் பாடுதற்கேற்ற அவையடக்கத்தோடு நூலைத் தொடங்குகிறார் சிவப்பிரகாசர்.

சிவபெருமானுக்குத் தேவாரம் பாடிய மூவர் முதலிகளின் பாடல்கள் உவப்புடையதாக இருத்தல் போல நாம் பாடும் நூல் உவப்புடையதாக இருக்குமோ என்ற அலைபாயும் வகையில் பாடலைத் தொடங்கினாலும் சிவபெருமானின் திருவுருவக் காட்சி அவரது ஐயத்தைப் போக்குதற்கான விடையாக அமைவதில்தான் கற்பனையின் தோற்றம் வெளிப்படுகிறது.

சிவபெருமானது திருவுருவக் காட்சியில் அவனது இடது கையில் மான் உள்ளதும் அது சிவனது இடது காதோரமாக முகத்தை வைத்துள்ளதும் கவிஞருக்குத் தெரிகிறது. மேலும் சிவனது இரு காதுகளிலும் தோடணிந்த காட்சியும் தெரிகிறது. இத்தோடுகள் பொன்னாலானவை அல்ல என்ற உண்மையே கற்பனைக்குக் களமாக அமைகிறது.

கலைமகளிடம் கான வித்தை கற்ற அசுவதரன், கம்பளதரன் என்ற இருவரும் சிவனைப் பாடிச் சித்தியடைந்தபோது தாங்கள் எப்போதும் சிவனை விட்டுப் பிரியாமல் பாடிக்கொண்டே இருக்க வரம் வேண்டியபடி அவ்விருவரும் சிவனது காதுகளில் தோடாயினர் என்பது புராண வரலாறு. இனிமையான அவ்விருவர் இசைப்பாடலைக் கேட்கும் இறைவன் பொருளற்ற புல்லிய எளிய ஒலியை எழுப்பும் மானின் ஓசையையும் வெறுக்காமல் கேட்பதைப் போல மூவர் முதலிகளின் தேவாரத்தை உவக்கும் இறைவன் சோணசைல மாலையையும் உவப்பான் என்ற தன்னம்பிக்கையோடு பாடலைத் தொடங்குகிறார் சிவப்பிரகாசர்.

அண்ணன்மா புகழ்மூ வரும்புனை யரும்பா
வன்றியென் கவியுநின் றனக்காம்
பண்ணிலா மிருவ ரிசைகொணின் செவியிற்
பாணிமா னொலியுமேற் றிலையோ? (1)

மான் ஒலியை ஏற்கவில்லையா? அதுபோலத்தான் எனது கவியும் உன்மீது பாடப்பட்டதாகும், அதை ஏற்கமாட்டாயோ? எனச் சிவப்பிரகாசர் சிவனிடம் கூறுவது இலக்கிய உலகில் பழமையானாலும் அது ஒட்டியும் வெட்டியும் பேசும் பட்டிமன்றப் பான்மையில் கருத்தைப் புலப்படுத்துவது போன்ற தோற்றுவாய்க்கு இடம் தருவதாக உள்ளதால் கவிஞரின் கற்பனைத் திறன் புதியது எனக்கொள்வதில் அட்டியில்லை எனலாம். இது போலப் பல இடங்களில் பட்டிமன்றப் பான்மையில் கற்பனையை வெளிப்படுத்துவராகவே சிவப்பிரகாசர் காணப்படுகிறார் என்பதுதான் அவரின் கற்பனைக்குக் கிடைத்த புகழ் முத்திரையாகும்.

இலக்கியங்களின் ஊடே இலக்கணக் கருத்துக்களை மிகுதியும் பயன்படுத்திய புலவர்கள் உண்டு. ஆனால் அவற்றையெல்லாம் கற்பனை யாகப் பயன்படுத்திய பெருமை சிவப்பிரகாசர் ஒருவருக்கே உண்டு. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்து வகையாலும் இலக்கணக் கற்பனைகள் ஆங்காங்கே கூறப்பட்டுள்ளன.

எழுத்திலக்கணக் கற்பனை

இங்குளாபுரி என்னும் எழில்மிகு நகரத்தில் வாழும் மாதரசன், மாதாம்பிகை என்னும் தம்பதியருக்கு இறைவனது கட்டளையால் நந்தியம் பெருமான் மகனாகப் பிறக்கின்றார். ஐந்தொழில் புரியும் இறைவன் மகிழுமாறு அறுதொழில் புரியும் அந்தணர் இல்லத்தில் நந்தியம் பெருமான் பிறந்த பிறப்பின் பெருமையைக் கலைமகள் தங்கியுள்ள பிரமனது நாவாலும் புகழ்ந்துவிட முடியாது எனச் சிறப்பிக்கிறார் சிவப்பிரகாசர். இதை அரியதோர் எழுத்திலக்கணப் புணர்ச்சி விதியால் கற்பனை செய்து காட்டுவது மிகச் சிறப்பாக உள்ளது.

குறில்வழி லகரந் தனிநிலை ஆயுங்
　　கூடிய தகரமுன் எழுத்தென்
றறிகுறி வடிவந் திரிதல்போல் நந்தி
　　அடல்விடை மெய்திரிந் துறினும்
நறுமலர் விழியிற் கண்டவர் எல்லாம்
　　நந்தியே என்றுளம் மகிழ்ந்தார்
பெறுதவம் முயன்ற அன்னையும் பிதாவும்
　　பெறுமுவ கையினையார் உரைப்பார்.

(பிரபுலிங்க லீலை)

பிறந்த குழந்தையை மானிடக் குழந்தையாக எண்ணாமல் நந்தியந் தேவரே வந்து பிறந்ததாகக் கருதி வாழ்த்தி மகிழ்கிறார்கள். நந்தியே குழந்தையாகப் பிறந்தார் என்பது உண்மையாதலின் குழந்தைக்கான வாழ்த்தும் மகிழ்ச்சியும் நந்திக்குரியதாகவே அமைகிறது. பிறந்த குழந்தை மானிடமா? தெய்வமா? என்ற பட்டிமன்ற உணர்வைத் தோற்றுவிப்பது போலக் கருத்தை விரித்து இறுதியில் தெய்வக்குழந்தை என்பதால்தான் இத்துணை மகிழ்ச்சி எனக் கூறுவதை குறில்கீழ் வரும் லகரம் வருமொழி தகரமாயின் ஆய்தமாகத் திரியுமானாலும் அவ்வாய்தம் உண்மையில் லகரமே என்ற எழுத்துப் புணர்ப்பைச் சுட்டுவதன் மூலம் கற்பனையின் பரிமாணம் புதுவிதமானது என்பதைச் சிவப்பிரகாசரின் எழுத்தால் உணர முடிகிறது.

குறில்வழி லளத்தவ் வணையின் ஆய்தம்
ஆகவும் பெறூஉம் அல்வழி யானே

என்பது நன்னூல் நூற்பா. ஆய்தம் தனிமொழி, புணர்மொழி என இருவகைப்படும். குறிலுக்கும் குற்றியலுகரத்திற்கும் இடையில் வருவது தனிமொழி ஆய்தம். குறிற்கீழ் லகரம் நிலைமொழியாய் நிற்க வருமொழியில் தகரம் வந்தால் அந்த லகரம் ஆய்தமாகிவிடும். இந்த ஆய்தம் இயல்பான ஆய்தமன்று; புணர்ச்சியால் தோன்றியது. அதன் இயல்பான முந்தைய வடிவம் லகரமேயாகும். இதேபோலவே பிறந்த குழந்தை மானிடமானாலும் அது நந்திதேவரே என்ற உண்மையைச் சிவப்பிரகாசர் கற்பனையாக உணர்த்தும்போது தான் இலக்கணத்தின் சிறப்பும் உணரப்படுகிறது எனலாம்.

திருக்குறட் கற்பனை

திருக்குறளோடு சிவப்பிரகாசருக்குள்ள ஈடுபாடு அளப்பரியது. அவர் குறளோடும் குறளுக்கமைந்த உரையோடும் செய்த கற்பனைபோல எவரும் செய்திலர் என்றே துணிந்து கூறலாம்.

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை. (37)

இக்குறளுக்குப் பொருள் எழுதிய பரிமேலழகர் ''ஆகம அளவையாலும் காட்சியளவையாலும் அறத்தின் பயன் இது எனப் பல்லக்கில் அமர்ந் திருப்பவனைக் கொண்டும் அதைச் சுமந்து செல்பவரைக் கொண்டும் உணர்ந்து கொள்ளலாம்'' என்றார். இக்கருத்து உண்மையானதன்று எனக் கூற எண்ணிய சிவப்பிரகாசர், திருப்பூந்துருத்தியில் ஞானசம்பந்தரது பல்லக்கைத் திருநாவுக்கரசர் சுமந்ததால் பரிமேலழகரின் கருத்து மறுக்கப் படுவதாகக் கூறுகிறார்.

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடையை - மறுத்தார்சம்
பந்தன் சிவிகை பரித்தார் திரிகுவர்மற்
றுந்துஞ் சிவிகையினை யூர்ந்து. (நால்வர் நான்மணிமாலை)

இதுவும் பட்டிமன்றப் பான்மையிலான கற்பனையாகும். ஞானசம்பந்தர் அமர்ந்து வந்த பல்லக்கை நாவுக்கரசர் தாங்கியதை நினைவுகூர்ந்து ஒரு பெரிய பொருள் மாற்றத்தை உருவாக்கிக் காட்டுகிறார் சிவப்பிரகாசர். காட்சியளவான இச்செய்தி பரிமேலழகர் கருத்துக்கு மறுப்பாக அமைவதால் இது பட்டிமன்றப் பான்மையில் கற்பனையாகிறது எனலாம்.

வாழ்வியல் அளவான கற்பனை

பிரபுலிங்க லீலையில் கூறும் வனவரை மாநகரின் சிறப்பைப் பட்டிமன்றக் கற்பனையில் வாழ்வியலை விளக்குகிறார் சிவப்பிரகாசர்.

ஈசன் அளித்த ஒருகோட்டி யானைக்
கியாங்கள் இணையாயின்

வாச வனைத்தாங் கீரிருகோட் டியானை
யெம்மை மானுமெனும்
பாச வுரற்கால் யானையொடு பாண்டில்
இழுக்கும் பகடுயரின்
தேசின் இரதப் பரிசிறந்த என்னும்
பரிகள் தெருவகலா.

இப்பாடலை யானையொடு பரிகள் தெருவகலா என்பதாகக் கொண்டு கூட்டிப் பொருள் காணவேண்டும். இதில் யானைகளும் குதிரைகளும் தங்களைத் தாங்களே புகழ்ந்து கொள்வதாகக் கற்பனை செய்கிறார் சிவப்பிரகாசர். இப்புகழ்ச்சிகள் அவை தங்களுக்குள் மறைமுகமாகத் தாழ்த்திக் கொள்ளும் பாங்கில் அமைந்துள்ளதாகப் பாடப்பட்டுள்ளன. அதாவது உம்மைக் காட்டிலும் நாங்களே சிறந்தவர்கள் என்பதை வெளிப்படையாகக் கூறாதபடித் தம்மைத் தாமே புகழ்ந்து கொள்கின்றன.

இரண்டு கொம்புகளை உடைய யானைகள் தேவேந்திரனின் நான்கு கொம்புடைய யானையினும் உயர்வுடையன இல்லைதான். என்றாலும் இரண்டு கொம்பினும் கீழாக ஒற்றைக் கொம்புடைய விநாயகராகிய யானை உயர்வுடையது. இதில் கொம்பு குறையக் குறைய மதிப்பு கூடுகிறது என்ற அடிப்படையில் நான்கு கொம்புடைய ஐராவதத்தைவிட இரண்டு கொம்புடைய யானைகள் உயர்வுடையன எனக் காட்சியளவில் யானைகள் தம்மைத் தாமே புகழ்ந்து கொள்கின்றன.

யானைகளுக்கு இணையாகக் குதிரைகள் பேசத் தொடங்குகின்றன. உலகில் இரண்டு சக்கரங்களை உடைய வண்டியை இழுத்துச் செல்லும் எருதுகளை விட சூரியனின் ஒரே சக்கரத்தை உடைய தேரை இழுத்துச் செல்லும் ஏழு குதிரைகள் உயர்ந்தவை. அந்த ஏழு குதிரைகளை விட எந்த ஒன்றையும் இழுத்துச் செல்லாது தெருவில் திரியும் குதிரைகள் உயர்ந்தவை என்று குதிரைகள் தமக்குத் தாமே புகழ்ந்து கொள்கின்றன.

இதில் வேலைப்பளு குறையக் குறைய உயர்வு கூடுகிறது என்ற கருத்து நுட்பமாகக் கூறப்பட்டுள்ளது. இரண்டு சக்கரங்களை ஓர் எருது இழுக்கும்போது வேலை பளு கூடுதலாகும். ஆனால் ஒரே சக்கரத்தை ஏழு குதிரைகள் இழுத்துச் செல்லும்போது வேலை பளு குறைகிறது. ஒரு சக்கரத்தை 7 பேர் இழுத்தால் இரண்டை 14 பேர் இழுக்க வேண்டும். இந்த 14 பேர் செய்யும் வேலையை ஒரே ஒரு எருது வேலை பளுவாகச் செய்தாலும் சூரியனுடைய குதிரைக்கு இணை யாவதில்லை. மாறாக வேலை குறையக் குறைய மதிப்பு கூடுகிறது என்ற அடிப்படையில் எந்தச் சக்கரமும் இல்லாத எந்த வண்டியையும் இழுக்காதக் குதிரைகள் உயர்வுடையன எனத் தருக்கநூல் அளவில் கருத்தை உறுதிப்படுத்துவதாகக் குதிரைகள் தம்மைத் தாமே புகழ்கின்றன.

இவ்விருவேறு விலங்குகளும் விட்டுக் கொடுக்காமல் உரையாடுவது போன்ற கற்பனையின் நயம் எண்ணுந்தோறும் இனிப்பதாகும். வானுலக ஐராவதத்தை விட நாங்களே உயர்ந்தவர்கள் என வீணே திரியும் குதிரையிடம் யானைகள் கூறுவதால் குதிரையை விடவும் தாங்கள் உயர்ந்தவர்கள் என்பதைக் கூறாமல் கூறுவனபோல் இச்செய்தி அமைந்துள்ளது.

அவ்வாறே நாங்களும் வான மண்டலக் குதிரைகளைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் என்று யானையிடம் குதிரைகள் கூறுவதால் யானை களின் தகுதிக்கு நாங்கள் குறைந்தவர்கள் அல்லர் என்பதைக் கூறாமல் கூறுவன போல் அடுத்த செய்தியும் அமைந்தது என்பதாம்.

ஈண்டு கொம்பு குறையக் குறைய மதிப்பு உயருமா? குறையுமா? என்றும் வேலைப் பளு குறையக் குறைய மதிப்பு குறையுமா? கூடுமா? என்றும் பட்டிமன்றப் பான்மையில் சிந்தனையைத் தூண்டி மறுதலையாகச் சிந்தித்து இரண்டிலும் மதிப்பு உயரும் என்ற கருத்தைக் கூறும் சிவப்பிரகாசரின் கருத்தாற்றலோடு கூடிய கற்பனையை இலக்கிய நயமும் உலகியல் வாழ்வும் கலந்ததான புதிய பரிமாணம் எனலாம்.

யானையும் குதிரையும் உயர்வு தாழ்வு கற்பித்துக் கொண்டாலும் உண்மை உணரப்பட்டபோது அவைகள் தங்களுக்குள் சமமானவை என்ற கருத்து புலப்படுமாறு சிவப்பிரகாசர் இப்பாடலில் ''யானையொடு பரிகள் தெருவகலா'' என்ற வரியில் ஓர் இலக்கண நுட்பத்தை வெளிப் படுத்துகிறார்.

ஒடு என்ற 3-ஆம் வேற்றுமை உருபு உடனிகழ்ச்சிப் பொருளில் வரும். ஈண்டு யானையும் பரியும் தம்முள் மாறுபட்டவைபோல் கருதிக் கொண்டாலும் உண்மை அறிந்ததும் தம்முள் இணையானவையே என்ற கருத்தை ஒடு என்ற வேற்றுமை உருபால் உணர முடிகிறது.

உலகில் அவரவர் வழியில் அவரவரும் உயர்ந்தவர்களே என்பதால் ஒருவர்க்கொருவர் தம்முள் உயர்வு தாழ்வுகளைக் கற்பித்தல் கூடாது என்ற தொனிப்பொருள் இப்பாடலில் நுட்பாக உள்ளதை அரிதின் உணர்வோர் உணர்வர் என்பதாம்.

இவ்வாறாகப் பன்முகப் பாங்கானது சிவப்பிரகாசரின் கற்பனை எனலாம்.

84. சிவப்பிரகாசர் காட்டும் சிவம்

இரா. முருகன், புதுவை.

தமிழ் இலக்கிய வரலாற்றில் பதினேழாம் நூற்றாண்டின் தனிப்பெருங் கவிஞராக விளங்கியவர் சிவப்பிரகாச சுவாமிகள். ''கற்பனைக் களஞ்சியம்'' எனும் பெயர் பெற்ற சிவப்பிரகாசர் தமிழுலகிற்கு முப்பத்து நான்கு (34) நூல்களை வழங்கியுள்ளார். இவற்றுள் சிற்றிலக்கிய வகைகளாக அமைந்ததே மிகுதி. வேதாந்த சூடாமணி, சித்தாந்த சூடாமணி, பிரபுலிங்க லீலை போன்ற பிறமொழி நூல்களைத் தமிழுக்கு வழங்கிய பெருமைக்குரியவர். இவ்விலக்கிய வகைகளோடு தலபுராணத்தை அருளிய சிறப்பு இவருக்கு உண்டு. அவற்றுள் குறிப்பிடத் தகுந்தது திருக்கூவப் புராணம். தொண்டை நாட்டுத் தலங்களுள் ஒன்றாக விளங்குவதே திருக்கூவம். இத்தலம் ஞானசம்பந்தரின் தேவாரத்தை யுடைய சிறப்புக்குரியது.

சமய இலக்கிய வகைகளுள் ஒன்றான தலபுராணம், இறைவன் கோயில் கொண்ட இடத்தினைப் புகழ்ந்து பாடுவதாகும். இத்தல புராணத்தில் சிறப்பிடம் பெறுபவை மூர்த்தி, தலம், தீர்த்தம். பொதுவாக, தலபுராணமானது காண்டம் அல்லது சருக்கம் எனும் பிரிவுகளில் ஒன்றைப் பெற்றிருக்கும். இத்தலபுராணம் சுட்டும் சிவன் குறித்த செய்தி களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திருக்கூவப் புராணம் - பெயர்க்காரணம்

சிவபெருமான் முப்புரங்களை அழிக்கச் சென்றபோது முதற்கடவுளான விநாயகரை வழிபடாமல் சென்றதால் கோபம் கொண்ட விநாயகர் சிவபெருமானது தேரின் அச்சினை ஒடித்து விடுகிறார். இதன் காரணமாக விநாயகர் ''கூவராக்கினர்'' எனும் பெயர் பெற்றார். இந்நிகழ்ச்சிக்கு மூலமாக அமைந்த இடமே ''கூவம்'' எனப்பட்டது. இத்தலப் பெயரானது தேவாரத்தில் ''கூகம்'' எனவும் பெரியபுராணம், கூவபுராணம், அம்மானை போன்ற நூல்களில் ''திருவிற்கோலம்'' எனவும் வழங்கப்படுகிறது.

திருக்கூவப் புராணமானது மூர்த்தி (திருவிற்கோலநாதர்), தலம் (திருக்கூவம்), தீர்த்தம் (அச்சிறுகேணி) ஆகியவற்றின் பெருமைகளைப் பேசுவதோடு தலைவனின் சிறப்பு, நாடு, நகர ஊர் வரலாறு, அடியார் களின் சிறப்பு, ஊரினது இயற்கை வளம், கோயில் சிறப்பு, இறைவன்

அருள், மக்களின் பக்தி நிலை போன்றவற்றைப் பற்றியும் பேசுகின்றது. கூவப்புராணமானது பாயிரம் தவிர்த்து நைமிசாரணியச் சருக்கம், திருத்தலச் சருக்கம், திரிபுர தகனச் சருக்கம், சந்தானகிரி சந்தானச் சருக்கம், அடிமுடி தேடிய சருக்கம், செந்நெல் வைத்த சருக்கம், தாருகன் வதைச் சருக்கம் முதலிய ஏழு (7) சருக்கங்களையும் மொத்தம் எழுநூற்று மூன்று (703) பாடல்களையும் கொண்டுள்ளது.

சமண பௌத்த சமயங்களின் செல்வாக்கிற்கு எதிராகப் பணி புரிந்தவையே சைவம், வைணவம் ஆகிய இரு சமயங்கள், வைணவத்தில் ஆழ்வார்களைப் போல சைவ சமயத்தில் அடியார்கள் தங்களின் முதற் கடவுளான சிவனைப் போற்றிப் புகழ்ந்து வழிபட்டனர். இச்சைவ சமயத்திலிருந்து பிரிந்து சென்ற ஒரு பிரிவே வீரசைவம் ஆகும். இம்மரபில் உதித்த சிவப்பிரகாசரால் இயற்றப்பட்ட வீரசைவ இலக்கியமே ''திருக்கூவப் புராணம்''. சிவனின் சிறப்புகள் கடவுள், தேவர், அடியார் போன்றோரின் துயர் துடைக்கும் சிவனின் பண்பு நலன்கள், சிவ வழிபாட்டினால் விளையும் நற்பலன்கள் போன்றவற்றை இப்புராணம் வழி அறிய முடிகிறது.

1. சிவனின் சிறப்புகள்

இறைவனான சிவபெருமான் தேவர்களின் துயர் துடைக்க வேண்டி முப்புரம் எரிக்கச் சென்றபோது, தன்னை வழிபட்டுச் செல்லாத காரணத்தினால் சிவபெருமானது தேரின் அச்சை ஒடித்த விநாயகர் ''கூவராக்கினார்'' என்றழைக்கப்பட்டார். இதனை,

''நின்ற ஆதிகூ வரந்தனை ஒடித்திடு நிலையால்
அன்று கூவரக் கினர்எனும் பிள்ளையொடு''

(தி.கூ.பு. 138:1-2)

எனும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

இத்திருக்கூவநகர் இறைவடிவமானது, லிங்க வடிவம் கொண்டிருந் தாலும் முன்பு விற்கோலம் கொண்டிருந்த காரணத்தினால் 'விற்கோலநாதர்' என்றழைக்கப்பட்டது. இறைவன் வில்கொண்டு போருக்குச் சென்ற நிலையினை,

''குலவுறும் அரியவிற் கோலங் கொண்டு முன்
இலகுற நின்றதால்'' (தி.கூ.பு. 296 : 1-2)

எனும் பாடலடிகளில் சிவப்பிரகாசர் குறிப்பிடுகின்றார். இந்த விற்கோல நாதர், ''இரக்கர், தியாகர், சந்ததாரர், வளர்சடைக்கூத்தர், சகநாதர், அஞ்சனாப கண்டர், கிலாக்கினார், புவன நாயகர், கிலானி, திரிபுரக்கினர், அப்பிரதிஷ்டர், கூவநாதர், செந்நெல் வைத்தவர்'' (தி.கூ.பு. 366:1-8) எனும் பல்வேறு திருநாமங்களால் அழைக்கப்படுகிறார்.

2. துயர் துடைக்கும் பண்பு

திருமால், பிரமன், இந்திரன் மற்றும் தேவர்களுக்கு ஏற்படும் துயரங்களைப் போக்குவதோடு, அவர்களுக்கு ஏற்படும் துன்பங்களி லிருந்தும் பாதுகாக்கின்ற தொழிலை உலக முதல்வனாகிய சிவபெருமான் செய்கின்றார். தேவர்கள் தங்களுக்குள்ளாகவே போக்கிக் கொள்ள முடியாத அளவுக்குத் துன்பம் வரும்போதுதான் அவர்கள் சிவனை நாடுகின்றனர். இத்தகைய நிகழ்வுகள் திருக்கூவப்புராணத்தில் பேசப் பட்டுள்ளன. இதில் வரும் நான்கு நிகழ்வுகளுமே இறைவனால் தோற்று விக்கப்பட்ட ஒரு பொருளினால் இறைவனுக்கு ஏற்படும் துன்ப அல்லது துயர நிகழ்வினைப் பற்றிப் பேசுகின்றன. இந்நிகழ்வுகளைப் பொதுவாக 1. இறைவன் கடவுளர்களின் துயர் துடைத்தல் 2. இறைவன் தேவர்களின் துயர் துடைத்தல் 3. இறைவன் அடியவர்களின் துயர் துடைத்தல் எனும் மூன்று நிலைகளில் அடக்கலாம். இத்தகைய சூழலே இறைவன் பல்வேறு வகையான அவதாரமெடுக்கக் காரணமாகிறது. இந்த அவதாரச் சிறப்புகளின் வழி இறைவனின் பெருமையைப் பேசுவதே தலபுராணத்தின் முக்கிய நோக்கமாகும்.

அ. தீப்பிழம்பினனாதல்

கடவுள், தேவர், மக்கள், அசுரர் எனும் நால்வகையினருள் கடவுள், தேவர், மக்கள், தவிர்த்த தீயசக்திகளான அரக்கர்களை மட்டும் அழிப்பதுதான் சிவனின் தொழில். பிரமன், திருமால் ஆகிய இருவரும் கடவுளர்கள் (நல்ல சக்திகள்) என்பதால் அவர்களின் அறியாமையைப் போக்க வேண்டி அறவே அழித்துவிடாமல் சிவபெருமான் தண்டிக்க மட்டுமே செய்தார்.

படைத்தல் (பிரமன்), அழித்தல் (சிவன்), காத்தல் (திருமால்) ஆகிய முத்தொழில்களைச் செய்பவர்களுள் படைப்புத் தொழிலோனுக்கும் காத்தல் தொழிலோனுக்கும் இடையே தங்களுக்குள் யார் உயர்ந்தவர் எனும் தன்னுணர்வின் காரணமாகப் போர் நிகழ்ந்தது. இங்கு பிரமன், திருமால் ஆகிய இருவரின் அகங்காரத்தை அடக்க விண்ணுக்கும் மண்ணுக்குமாகி வளர்ந்த கம்பம் போன்ற தீப்பிழம்பு வடிவெடுக் கிறார் சிவபெருமான். இதனை,

> ''வந்த வேலையின் இருவர்தம் அகந்தையும் அறுப்பான்
> எந்தை ஆயிடை அழல்வடிவு இலிங்கமாய் எழுந்தான''
>
> (தி.கூ.பு. 339 : 2-4)

எனும் பாடல் வரிகளில் தெளிவுபடுத்துகின்றார் சிவப்பிரகாசர்.

சிவன், பிரமன், திருமால் ஆகிய மூவருள் மற்ற இருவரைவிடச் சில சிறப்புத் தகுதிகளினால் சிவபெருமான் உயர்வாகக் கருதப்படுகிறார்.

பிரமன், திருமால் ஆகிய இருவரும் சண்டையிட்டுக் கொண்டபோது, தான்தான் உயர்ந்தவன் எனும் நிலையில் அவர்களை அணுகாது அவர்களுக்குச் சமமான தகுதி உடையவராகவே தன்னைக் கருதிக் கொண்ட சிவபெருமான், தன் நிலையிலிருந்து கீழிறங்கி வந்து அவர் களிடம் பேசிய தன்மையினை,

''நும்மைநாம் படைத்து இருதொழில் நுங்களுக்கு உதவ
எம்மை நீர்என உமதுஅறிவு ஒன்றியும் வேறாய்
எம்மை நீர் மறந்து உமைமதித்து அமர் புரிந்து இளைத்தீர்''
(தி.கூ.பு. 356:1-4)

எனும் பாடலடிகள் உணர்த்துகின்றன. சாதி, மத வேறுபாடுகளைக் கூறி உயர்வு தாழ்வு பாராட்டாத வீரசைவ நெறியையே இந்நிகழ்ச்சி தெளிவுபடுத்துகிறது.

ஆ. சிரிப்பொலியனாதல்

இறைவன் தேவர்களின் துயர் துடைக்கும் நிகழ்ச்சிக்குச் சிறந்த சான்றாக விளங்குகிறது திருக்கூவப் புராணம் குறிக்கும் திரிபுரதகனச் சருக்கம். தாருகன் எனும் அசுரனுக்கு 1. வித்துவன் மாலி 2. தாரகாட்சன் 3. காமலாட்சன் எனும் மூன்று மக்கள் பிறந்தனர். முருகப் பெருமானால் தன் தந்தையாகிய தாருகாசுரன் அழிக்கப்பட்ட பிறகு இம்மூவரும் பிரமனை நோக்கிக் கடுந்தவம் புரிந்து சக்தி வாய்ந்த வரம் ஒன்றைப் பெற்றனர்.

இதன்படி விண்ணுலகம், மண்ணுலகம், பாதாள உலகம் ஆகிய மூவுலகங்களிலும் தங்களுக்கென வெள்ளி, இரும்பு, பொன் ஆகிய உலோகங்களாலான தனித்தனிக் கோட்டைகளை வேண்டியதோடு அவர்கள் சந்தித்துக் கொள்ள ஆயிரம் (1,000) ஆண்டுகளுக்கு ஒரு முறை அக்கோட்டை தானாக இணையவேண்டும் என்றும் வேண்டிக் கொண்டனர். மேலும் அழிவில்லாத தங்களுக்கு அழிவு என்பது நேருமானால் ஒரே அம்பினால்தான் நாங்கள் மூவரும் மடிய வேண்டும் என்றும் வரம் பெற்றுக் கொண்டனர்.

இந்த அரிய வரம் பெற்றதனால் அசுரர்கள் மூவரும் இந்திரன் முதலான தேவர்களைத் துன்புறுத்தினர். அசுரர்களுக்குப் பயந்த தேவர் களின் தலைவனான இந்திரன் மறைந்திருக்கவே இந்திரனின் இழிநிலையை எண்ணித் தேவர்கள் வருந்தினர். அதன் பின்னர் அசுரர்களால் ஏற்படும் துன்பம் நீங்க வரம் கொடுத்த பிரமனை நாடினர். ஆனால் பிரமன் திருமாலிடம் செல்லும் படிக் கூறிவிடவே, திருமாலாலும் முடியாத சூழலில் தங்களின் தோல்விக்கான காரணத்தை ஆராய முயன்றனர். சிவனையே வழிபடுதலும் கற்புடைய மனைவியரைப் பெற்றிருத்தலுமே

இதற்கான காரணம் என்பதை அறிந்ததால், அசுரர்களின் சிவவழி பாட்டைத் தடுத்ததோடு, அவர்களுடைய மனைவியர்களின் கற்புக்கும் களங்கம் விளைவித்தனர்.

தேவர்கள் தங்களின் முழுத்துயரையும் போக்கிக்கொள்ளச் சிவனை நாடினர். அசுரர்களை அழிக்கப் போருக்குச் செல்ல நினைத்த சிவபெருமான் உமையம்மையைப் பார்த்துச் சிரித்தார். அச்சிரிப்பொலியிலிருந்து தோன்றிய நெருப்பினால் அசுரர்களின் மூன்று கோட்டைகளும் தீப்பற்றி எறிந்தன. இதனை

''நின்று வன்தழல் கொழுந்து ஒரு நிமிடத்திற் பாதி
சென்றுஓ டுங்குமுன் புரங்களில் சென்றுபற் றியதே''
(தி.கூ.பு. 277 : 3-4)

எனும் பாடல் வரிகள் உணர்த்தி நிற்கின்றன. மூன்று கோட்டைகளை அழித்ததோடு அசுரர்கள் மூவரையும் ஒரே அம்பில் அழித்த திறத்தினை,

''விரைவில் சென்று அவர் உயிர்குடித் திடுக என விடுத்தான்
மருவிக் குன்றுஎன நின்றிடு மூவர்மார் பினும்பட்டு
உருவிச் சென்றதுஅப் புறத்தினன் ஒரு கணப்பொழுதின்''
(தி.கூ.பு. 285 : 2-4)

எனும் வரிகள் உறுதிப்படுத்துகின்றன. வரம் கொடுத்தது பிரமனாக இருந்தாலும் கூட அந்த வரத்திற்குப் பலம் சேர்ப்பது சிவவழிபாடே எனும் புராணச் செய்தியானது வீரசைவ நெறியையே வலியுறுத்துகிறது.

இ. ஆடல் வல்லானாதல்

தாருகன் எனும் அசுரன், 'தன் உயிருக்குத் தீங்கு எனும்போது தன்னால் சிந்தப்படும் குருதித்துளிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அசுரராக உயிர்பெற வேண்டும்' எனும் அரிய வரத்தைப் பெற்றிருந்தான். அதனால் அறம் அழித்து பாவச் செயல்கள் மிகுதியாயின. எனவே பிரமன், திருமால், இந்திரன் முதலியோர் தாருகனை அழிக்க எண்ணிச் சிவனைச் சரணடைகின்றனர். தாருகன் மேல் கோபம் கொண்ட சிவன் அவனை அழிக்கக் ''காளி'' எனும் அகோர வடிவு உடையவளைத் தன்னுடைய கழுத்தில் உள்ள விஷத்திலிருந்து தோற்றுவித்து, அக்காளியிடம், சிவபெருமான் தாருகனை அழிக்கச் சொல்வதோடு, அவன் பெற்ற வரச் சிறப்பினையும் கூறி, தாருகனை அழிப்பதற்குச் செய்ய வேண்டிய சூட்சுமத்தையும் சிவபெருமான் கூறுகின்றார். இதனைச் சிவப்பிரகாசர்,

''சூலத் தால்குத் துபுசொரி சோரிக
பாலத்து ஏற்றுப் பருகி அவன்நெடு
நீலத்து ஆக்கையை நீயே விழுங்குதி'' (தி.கூ.பு. 456:1-3)

எனும் பாடலடிகளில் பதிவு செய்துள்ளார்.

சிவனின் பேச்சைக் கேட்ட காளி தாருகனுடன் போருக்குச் செல்கிறாள். தாருகன், காளி இருவருக்குமிடையே பயங்கரப் போர் நடந்தது. இருவரும் தங்களின் வரபலத்திற்கு ஏற்ப ஆயுதங்களையும், வலிமை மிக்க அஸ்திரங்களையும் கொண்டு, ஒருவருக்கொருவர் சளைத்தவர் அல்லர் என்பதுபோல் இருவரும் இணையாகவே போரிட்டுக் கொண்டனர். இறுதியில் காளியானவள் தாருகனைச் சூலத்தால் குத்தி மாய்த்துவிட்டுப் போர் வெறியில் அவன் குருதியைக் குடிக்க மறந்து விட்டாள். தாருகன் பெற்ற வரத்தின்படி அவன் குருதித்துளிகள் ஒவ்வொன்றும் அரக்க வடிவம் கொள்ளவே மீண்டும் போர் நடந்தது. பின் சிவன் கூறியது நினைவுக்கு வரவே, தாருகனைக் கொன்று குருதியைக் குடித்ததோடு அவன் உடலையும் விழுங்கி விடுகிறாள்.

தாருகனைக் கொன்ற வெற்றியைக் கொண்டாட கையில் யாழேந்தி ஆடிப் பாடுகிறாள். வெற்றிக் களிப்பின் காரணமாகப் பிணக்குவியல் மேல் ஏறிநின்று வெறித்தனமாக ஆடுகிறாள். அகிலமே நடுங்கும்படி ஆடியதால் தேவர்கள் பயந்துபோய்ச் சிவனிடம் முறையிடுகின்றனர். காளியின் ஆணவத்தை அடக்க, சிவன் திருவாலங்காட்டிற்குச் சென்று காளியுடன் தானும் சேர்ந்து ஆடுகிறார். ஆனாலும்கூடக் காளி ஆட்டத்தை நிறுத்தாமல் மனமயக்கத்தின் காரணமாகச் சிவனை தன்னுடன் தருக்கத்துக்கு ஆடும்படி அழைக்கிறாள். இதனால் சினம் கொண்ட சிவன்,

''அந்த வேலையின் அண்ட முகடுஉற
எந்தை தாள்ஒன்று எடுத்தனன் என்பவே'' (தி.கூ.பு. 679:3-4)

எனும் அடிகளுக்கு ஏற்ப அண்டமுற ஒரு காலைத் தூக்கி ஊர்த்துவ தாண்டவம் செய்தபோது சிவனின் நடனம் கண்ட காளி, நாணி ஆட்டத்தை விடுத்தாள். இதனால் தேவர்கள் சிவனை வாழ்த்தி வணங்கினர். இங்கு தீமையை அழிக்க உருவாக்கப்பட்ட பொருளே தீமைக்குக் காரணமாக அமையும்போது அதனையும் அழிக்கத் தலைப்படும் சிவனின் பெருமையைப் புராணம்வழி உணர்த்தி விடுகின்றார் சிவப்பிரகாசர்.

ஈ. செந்நெல் வைத்தோனாதல்

பெரியபுராணத்தைப் போலவே திருக்கூவப்புராணமும் அடியார்க்குச் சிவன் அருளிய நிலையை தெளிவாகச் சுட்டுகின்றது. தருமசீலனாரின் வாழ்க்கை நிலை இதற்குச் சரியான சான்றாகும். சிவனடியார்க்கு அமுது படைப்பதையே தம்தொழிலாகக் கொண்டவர் தருமசீலனார். சிவனடி யார்க்குச் செய்யும் தொண்டைச் சிவனுக்கே செய்யும் தொண்டாகக் கருதிச் செயல்பட்டதால் அவரின் செல்வ நிலையானது நாளுக்குநாள் குறைந்து கொண்டே வந்தது. தருமசீலனாரின் மனைவியும் அவர் கருத்துக்கு முரண்படாத நல்லதொரு இல்வாழ்க்கைத் துணையாக விளங்கினார்.

சிவத்தொண்டு அதிகரித்ததால் செல்வநிலை அனைத்தையும் இழந்து ஒருவேளை சோற்றுக்குகூடப் பிறரை நாடவேண்டிய சூழலுக்கு ஆளானார். அந்நிலையிலும் கூடத் தமது சிவத்தொண்டினைச் செம்மையாகவே செய்து வந்தார். வறுமையின் காரணமாகத் தான் பட்டினி கிடந்த போதிலும் கூடத் தன்னை நாடி வரும் சிவனடியார்க்கு உணவு படைக்க வேண்டி பிச்சையெடுக்கவும் துணிந்தார்.

ஒருநாள் சிவனடியார் ஒருவர் விருந்துக்கு வரவே, பிச்சையெடுத்த நெல்லினைக் கொண்டு அமுது படைத்து வழியனுப்பினார். பின்னர் மீதமுள்ள சோற்றை தாம் உண்ணுவதற்குச் சென்றபோது, சிவபெருமானே முதுமைக்கோலம் கொண்ட சிவனடியாராக வந்தார். இதனை அறியாத தருமசீலனார் முன்புபோலவே அவருக்கும் இன்முகத்துடன் விருந்து படைத்தார். உடனே அடியார் மறைந்து போனார். 'உன்னை சோதிக்கவே துன்பம் தந்தோம். உன் பணியானது சிறக்க யாம் தினம் ஒரு குடம் நெல்லைத் தருவோம்' என்று சிவன் தருமசீலனாருக்குக் காட்சி அளித்ததனை,

''மெலிவுறும் நுமக்குநம் விளங்கும் ஆலயத்து
உலைவு அற அனுதினம் ஒரும ணிக்குடம்
மலிவுறு செந்நெல்முன் வைத்தும் கொண்ம் என''

(தி.கூ.பு. 398:2-4)

எனும் பாடலடிகளால் அறியலாம். இவ்வாறு அடியார்க்கு அருளும் சிவனின் பெருமை பேசப்படுகிறது.

3. சிவவழிபாடும் அதன் பயன்களும்

சிவன், பிரமன், திருமால் எனும் முக்கடவுளர்களில் முதற்கடவுளான சிவபெருமானை, சிவனோடு இணைந்து தொழில் புரியும் பிரமனும் திருமாலும்கூட வழிபட்டனர். அவர்களோடு இந்திரன் முதலான தேவர்களும் சிவனை வழிபாடு செய்தனர். இறைவர்களும், தேவர்களும் தங்களின் பக்தி மேலீட்டால் வழிபாடு செய்ததனை,

''ஆதலும் மனம்மகிழ்ந்து அமரர் இந்திரன்
மாதவன் அயன்முனி வரர்கள் மஞ்சனம்
போதொடு சுடர்நறும் புகைகொண்டு அர்ச்சியா ஈது''

(தி.கூ.பு. 295:1-3)

எனும் பாடலடிகள் விளக்குகின்றன. மேலும் கூவநகர் இறைவனை வழிபடுவதால் ஏற்படும் பலன்களை,

''இம்மைமறு மைப்பயனும் மறையின் முடி
தெருட்டுபேர் இன்ப வீடு'' (தி.கூ.ப. 307:1-2)

எனும் பாடலடிகளின் வழி, சிவப்பிரகாசர் பட்டியலிடுகிறார். இத்தகைய சிவனின் சிறப்புகளையும், சிவத்தலத்தின் பெருமைகளையும் திருக்கூவப் புராணத்தின்வழி, தெளிவாக அறிய முடிகிறது.

திருக்கூவப் புராணம் சுட்டும் சிவன் குறித்த செய்திகளைக் கொண்டு பின்வரும் கருத்துக்களைப் பெறமுடிகின்றது.

1. இறைவனால் அளிக்கப்படும் வரத்தினால் இறைவனே துன்புறுதல் உண்டு.
2. துயரங்களைப் போக்கவேண்டி இறைவன் பல்வேறு அவதாரமெடுத்தல் நிகழும்.
3. நல்ல சக்திகளுக்கு அவர்களின் அகந்தையை அடக்கித் திருவருள் புரியும் இறைவன், தீய சக்திகளை வேரோடு அழித்தலையும் செய்வார்.
4. சிவபெருமான் கடவுளர்கள், தேவர்கள், அடியார்கள் எனும் மூவகையினரின் துயர் துடைத்தமை புலனாகிறது.
5. துன்பங்களையும், துயரங்களையும் பெற்றபோதும் தங்களின் நெறியிலிருந்து வழுவாத நிலைகொண்ட அடியார்க்கே இறைவன் அருள் தருகின்றான்.

85. பிள்ளைத்தமிழில் கற்பனைத்திறன்

க. முருகேசன், கோவை.

தமிழன் செழுமைக்கும் வளமைக்கும் சிறப்புச் சேர்க்கும் இலக்கியங்களில் தனக்கெனத் தனியிடத்தைப் பெற்றுத் திகழ்வது பிள்ளைத்தமிழாகும். இலக்கியத்தரம், அணிநலம், கற்பனைநலம் ஆகியவற்றில் ஆழ்ந்து கற்போரின் மனதைக் கவர்ந்து பிணைத்துக் கொள்வது இவ்விலக்கிய வகையாகும்.

சிற்றிலக்கியங்கள் மொத்தம் 96 வகைப்படும் என்பர். இச்சிற்றிலக்கியத்தின் தோற்றம், வளர்ச்சி குறித்து அறிஞர் ந.வி. செயராமன் தம் நூலில், ''தொல்காப்பியர் காலத்தில் இடம் பெற்ற சிற்றிலக்கிய வித்து, சங்ககாலத்தில் ஆற்றுப்படையாக முளைவிட்டு, ஐந்தாம் நூற்றாண்டில் அந்தாதியாகத் துளிர்த்து, ஏழாம் நூற்றாண்டில் கோவையாகச் செடியாகி, எட்டாம் நூற்றாண்டில் உலாவாக மரமாகி, ஒன்பதாம் நூற்றாண்டில் கலம்பகமாகக் கிளைத்து, பதினோராம் நூற்றாண்டில் சதகமாகவும் பரணியாகவும் அரும்பி, பன்னிரண்டாம் நூற்றாண்டில் பிள்ளைத்தமிழாக மொட்டாகி, பதினான்காம் நூற்றாண்டில் தூதாகப் பூத்து, பதினாறாம் நூற்றாண்டில் பள்ளாகக் காய்த்து, பதினெட்டாம் நூற்றாண்டில் குறவஞ்சியாகக் கனிந்தது'' என்று குறிப்பிடுவதை நோக்குகையில் இதன் படிநிலை வளர்ச்சியை அறிய முடிகின்றது. சிறப்புடைய சிற்றிலக்கியங்களில் ஒன்றாக விளங்கும் பிள்ளைத்தமிழ் ''குழவி மருங்கினும் கிழவதாகும்'' என்று தொல்காப்பியரால் சுட்டப் படுகின்றது.

ஒட்டக்கூத்தர் இயற்றிய இரண்டாம் குலோத்துங்கன் பிள்ளைத்தமிழே காலத்தால் முற்பட்டது. இவையன்றி மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ், சேக்கிழார் பிள்ளைத்தமிழ் முதலிய பிள்ளைத்தமிழ் வகைகளும், தற்காலத்தில் தோன்றிய மகாத்மா காந்தி பிள்ளைத்தமிழ், அண்ணா பிள்ளைத்தமிழ், பாவேந்தர் பிள்ளைத்தமிழ், எம்.ஜி.ஆர். பிள்ளைத்தமிழ் முதலியவையும் உண்டு.

பாட்டுடைத் தலைவனைக் குழந்தையாகப் பாவித்துப் பத்துப் பருவங்களாகப் பகுத்துப் பருவத்துக்குப் பத்துப் பாடல்கள் வீதம் பாடப்படுவது பிள்ளைத்தமிழின் இலக்கணமாகும். இருபாலார்க்கும் தனித்தனியான பிள்ளைத்தமிழ் நூல்கள் உண்டு. பிள்ளைத்தமிழ் என்னும்

சொல்லுக்கு அபிதான சிந்தாமணி கூறும் விளக்கம் : ''பிள்ளைக்கவி - காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர் இவற்றை முறையே அகவல், விருத்தத்தால் பப்பத்தாகக் கூறுவது ஆண்பால் பிள்ளைக்கவி. இவ்வுறுப்புக்களுள் கடைமூன்றும் ஒழித்துக் கழங்கு, அம்மானை, ஊசல் என்பவற்றைக் கூட்டிச் சொல்வது பெண்பாற் பிள்ளைக்கவி'' என்பதாகும். மனிதரில் சிறந்தவர்களையும், தெய்வங்களையும் பாட்டுடைத் தலைவராக்கும் முறையில் சிவஞான பாலைய சுவாமிகளைக் குழந்தையாகப் பாவித்து சிவப்பிரகாசர் பிள்ளைத்தமிழ் இயற்றியுள்ளார். சிவப்பிரகாசரின் கற்பனைத்திறம் பிள்ளைத்தமிழில் இடம்பெற்றுள்ள பாங்கினைப் புலப்படுத்துவது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

கம்பன் சங்கப் பாடல்களுக்குப் பிறகு கவிதையைப் பேசும் சித்திர மாக்குகிறான். பொருட்சிறப்பிலும், பெருமிதத்திலும், கற்பனையிலும், வண்ணத்திலும், இசை இன்பத்திலும் தமிழை உயர்த்தினான். கற்பனை ஆற்றலில் அவன் எதிர் இல்லாத மன்னன். எடுக்க எடுக்கக் குறையாது வளர்ந்து கொண்டே போகும் அமுதசுரபியாகக் கற்பனை நிறைந்து காணப்படுகின்ற காப்பியம் கம்பன் காப்பியம் என்னும் கருத்து இவ்விடம் நோக்கத்தக்கது.

காப்புப் பருவம்

குழந்தையைக் காத்தருள வேண்டும் என்று தெய்வங்களை வேண்டிப் பாடுவது இப்பருவத்தின் இலக்கணம். காப்புப் பருவத்தில் திருமால், மல்லிகார்ச்சுனேசுரர், உமாதேவியார், விநாயகர், சுப்பிரமணியர், அல்லமதேவர், மாணிக்கவாசகர், வசவதேவர், தேவாரம் அருளிய மூவர், சென்னவசவதேவர் ஆகியோரிடம் வேண்டி குழந்தையாகிய சுவாமியைக் காத்தருள வேண்டுகின்றார் சிவப்பிரகாசர்.

''விளைக்குந் தவத்தாற் பால்தனக்கு விரும்பிக் கொடுத்த
கொழுநன்மணி
மிடறே போல வெனதுபுன்சொல் விடமுண் கின்ற
திருச்செவியை
முளைக்குந் தரள நகைவாயான் முதிர்தீஞ் செய்யு ளமுதூட்ட
முன்னம்பிள்ளைப் பெருமாளை முளைப் பாலூட்டு
மொருதாயே''

என்ற பாடலில் உமாதேவியாரை வேண்டுவதுடன், வாதம் ஒழிய மலர்வாய் மலரப் பெருங்கருணை வடிவாய் வந்த சிவஞான வள்ளலினை திருமாலின் தாள்மலர்கள் காக்க வேண்டுகின்றார். தன் ஒரு வாசகத்தால் இவ்வுலகை உருகச் செய்த திருவாசகப் பெருந்தகை மணிவாசகரை வேண்டுமிடத்து,

''விரிந்தமறை யொருநான்கு மெழுதுகில மெனவோர்
வீறுடைப்பொற் கொன்றைபுனை விரிசடை யேனெழுதத்
திருந்துதமிழ்க் கோவையொரு நானூறு முரைத்த
திருவாத வூரனெனுஞ் செழுமலர்க் கற்பகமே''

என்று பாடுகின்றார். கொன்றைவார் சடையனைத் தன் கோவையில் தொழுது போற்றிய வரலாற்றினை இவ்வரிகள் எடுத்துரைக்கின்றன. சிவப்பிரகாசரின் இலக்கியப் புலமைக்குச் சான்றாகவும், திருவாசகத்தில் உருகி, ஊறித் திளைக்கும் கற்பனை உள்ளமும் இப்பாடலில் வெளிப்படுகின்றது.

செங்கீரையாடுதல்

குழந்தை தன் ஒருகால் மடக்கி ஒருகால் நிமிர்ந்து இரண்டு கைகளையும் நிலத்தில் ஊன்றித் தலையை நிமிர்த்து ஆடுதல் செங்கீரையாடுதல் எனப்படுகின்றது. சிவப்பிரகாசர்,

''எய்தவந் துறுபெருஞ் செல்வமே யமையாத
வின்சுவைத் தென்னமுதமே
பொன்னுயிர்த் துணையாய மாணிக்க மதலையே
யென்றுசீ ராட்டியன்பால்
செய்தவம் பெருகும் மனைவளர்க் குங்குழவி
செங்கீரை யாடியருளே''

என்ற வரிகளில் அமுதமாக, மாணிக்க மணியாக குழந்தையைப் பாவித்து வர்ணிக்கும் சுவாமிகளின் கற்பனை உள்ளம் புலப்படுகின்றது. குமரகுருபரர் தனது மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழில், பச்சையொளியை உடைய மரகதத்தினை ஒத்த திருமேனியின் மிகப் பசுமையான ஒளி நிறையும்படி, முத்துக்கள் போன்ற பற்களையுடைய வாயில் தெளிந்த நிலவு போன்ற நகை பரவ, நின்று ஆடுகின்ற பச்சை மயிலே செங்கீரையாடி அருளே என்று பாடுகின்ற பாடலை இங்கு சுட்டலாம். வஞ்சமலர், மாயை, கன்மம் ஆகியவற்றை விலக்கிட வேண்டுவோரின் முன்தோன்றி, நெஞ்சுருகுவார்க்குத் துணையாக விளங்கும் துணையை செங்கீரையாட அழைத்து,

''கம்பநகர் வாழிறைவ செங்கோ செங்கீரை
கங்கைசும வாதபா செங்ககோ செங்கீரை
செம்பொன்முடி தாழ்சரண செங்கோ செங்கீரை
செங்கைமணி நேர்தலைவ செங்கோ செங்கீரை

என்று சிவப்பிரகாசர் பாடுகின்றார்.

தாலாட்டுதல்

குழந்தை தாலாட்டைக் கவனிக்கும் பருவமாகிய எட்டாந் திங்களில் நிகழ்வது. தால் - நாக்கு. தம் நாவை ஆட்டிப்பாடுவதால் தாலாட்டு எனப்பெயர் பெற்றது. இப்பருவப் பாடல்களின் இறுதிவரி ''தாலே

தாலேலோ....'' என்ற சொல்லோடு நிறைவு பெறும். அருவமாகவும், உருவமாகவும், அருவுருவமாகவும் மூன்று நிலைகளில் விளங்கும் சிவபிரானது தன்மையையொத்த குருவாகவே சிவஞான பாலைய சுவாமிகளைக் காண்கின்றார் சிவப்பிரகாசர்.

''பொருவா வளங்க ளிறும்பூது
புகழ்வார் புகலும் படியெல்லாம்
பொருளே யாகியேனைய போற்
புராண மலது மறைகூறுந்
திருவார் கச்சிநகரிடங் கொள்
செல்வ தாலே தாலேலோ....''

என்று ஒப்பில்லாத சிறப்புக்களைப் பெற்ற திருவார்சடையும், புகழும் பொருள்களிலெல்லாம் பொருளாகியும், புராணங்கள் மட்டுமல்ல மறை களும் கூடப் புகழும் திருநிறைக் கச்சி நகரில் வாழும் செல்வமே உறக்கம் கொள்வாய் எனப் பாடுகின்றார். மலர்ந்த விழிபொருந்திய நுதலும் மதி போல் விளங்க, செவியிற் குழையும், மிடற்றிலும் திருமார்பிலும் அணிகளும், புலித்தோலினை ஆடையாக உடுத்தியும் விளங்கும் சிவபிரானின் உண்மைக் கருணையுருவை உணராத வஞ்சத்தன்மை கொண்ட விழிகளைக் காணாது, நீ உறங்குவாய் தாலே தாலேலோ எனத் தாலாட்டுகின்றார்.

சப்பாணி கொட்டுதல்

ஒன்பதாம் திங்களில் நடைபெறும் கையோடு கை சேர்த்துக் கொட்டுதல் சப்பாணிப் பருவம் எனப்படும். ''விண்ணளிக்கும் சுடர்'' என்று தொடங்கும் பாடலில் குமரகுருபரர் அம்பிகை வீற்றிருக்கும் இடங்களை வரிசைப்படுத்தி, அவ்விடங்களே தொட்டிலாகக் கொண்டு அன்னையைச் சப்பாணி கொட்டியருள வேண்டுவார். இங்கு சிவப்பிரகாசர், அள்ளிக் கொடுக்கின்ற பொருள்கள் எல்லாம் தானாகப் பாதுகாத்து வைக்கப்படாமல் உதவுவது போல, முழுமுதற் பொருளாக விளங்கும் மெய்ப்பொருளே பொருள் என்று தன்னுடைய அடியவர்களுக்குக் காட்டி, தீங்கினை நீக்கி அருளும் தன்மையைச் சுட்டிக்காட்டி,

''விண்டுமது மடைதிறந் தொழுகுபைங் கொன்றைபுனை
விரிசடைக் கற்றைநெற்றி
விழியுடை யவர்க்கலது குவியாத நிலையென்று
விரியாத தேதிலார் முன்
கொண்டவெம் பவநீறு படநீறு தன்னைக்
கொடுப்பதும் நடுங்கவாவி
கொள்ளை கொண்டுண்ணவெம் பால்வருங் கொடியவெங்
கூற்றைத் தடுப்பதாய
தண்டளிர் கவற்றுநின் கையினா லையநீ
சப்பாணி கொட்டியருளே''

என்றவிடத்து விரிசடை முடியும், நெற்றிக்கண் பொருந்திய நெற்றியும், பிறவி அழிந்தொழிய வைக்கும் நீறும், உயிரை வருத்துகின்ற கூற்றை அழிக்கும் நீறும் என சிவபிரானின் தோற்ற வர்ணனையைக் காட்சிப் படுத்தி, சப்பாணி கொட்ட வேண்டுகின்றார். கரிய நீர்மைத் தன்மையுடைய திருமால் அடியை வணங்கி உய்யும் வாழ்வை உணர்த்தும் நாமக் குறியிட்ட நெற்றியைத் துடைத்துவிட்டு, ஈசனின் திருநீற்றை இட்டுக் கொள்ளும் மாதவனும், மதயானைப் பொறி காவல் கொள்பவனும், பொழில்சூழ் கச்சியில் வாழ்கின்றவனும், புதைந்து போகாத மெய்ப் பொருளானவனும் ஆகிய இறைவனே சிவஞானப் பெயராண் முனியே சப்பாணி கொட்டியருளே என்று விண்ணப்பிக்கின்றார்.

வரவேண்டுதல்

குழந்தையானது தளிர்நடை நடக்கக்கூடிய பருவத்தில், அக் குழந்தையை வருமாறு அழைப்பது வருகைப்பருவமாகும். மீனாட்சி யம்மையை, மறைப்பொருளாகவும், மணம் கமலும் தேன்சுவைத் துறைகளாகவும், அகந்தைக்கிழங்கை அகழ்ந்து வேரோடு நீக்கும் உள்ளக் கோயிலில் ஏற்றிவைத்த விளக்காகவும், சிவபிரானின் உள்ளத்தில் அழகு பொருந்திய ஓவியமாகவும் போற்றிப் பாடுகின்றார் குமரகுருபரர். நான் வருந்துமாறு என்னைப் பிடித்து ஆட்டிவைக்கும் பேராசையாகிய பேய் என்னைவிட்டு அகன்று போக அருள் செய்யும் மந்திரவாதி யாகவும், பாச இருளை விலக்கும் ஒரு செஞ்சுடராகவும், பிறவிப்பிணிக்கு மருந்தாகவும், பிறந்த அன்புக் குழந்தைக்குப் பெற்ற தாயிடும் பால் சோறாகியும், எழுந்துவரும் செங்கதிராகியும், நறுமலர்களைத் தூவி வணங்க வேண்டிய வாய்க்கருணை வடிவாகியும் விளங்குவதைப் போற்றுகின்றார் சிவப்பிரகாசர்.

''போற்ற வருக வடிமையேம் புகழவருக நறியமலர்
புனைய வருக வருண்மாரி பொழிய வருக வடிகடலை
ஏற்ற வருக மவுன்மொழி யிசைப்ப வரும் வெமதுளத்தி
னிருப்ப வருக வறங்கடலை யெடுப்ப வருக நீற்றழகு
தோற்ற வருக செங்கண்மய றுரப்ப வருக கொடுங்காமந்
துடைப்ப வருக கூற்றுவலி தொலைப்ப வருக பிறவிநோய்
மாற்ற வருக வறிவுருவில் வைப்ப வருக வருகவே
மயிலை வரையிற் சிவஞான மணியே வருக வருகவே''

என்று அல்லவை போக்கி நல்லவை நல்கிடவும் வருமாறு அழைத்து, கட்டுமாறெதிர் மாறில் சேவகன், கற்றி லாரறியாத சீரியன், கத்து வாதமிலாத போதகன் என்று போற்றுகின்றவிடத்து சிவப்பிரகாசரின் கற்பனைத்திறம் பளிச்சிடுகின்றது.

முத்தம் வேண்டுதல்

மெல்லிய தாமரையைப் போன்ற அழகிய குழந்தையைத் தாவி யணைத்து முத்தம் தருமாறு வேண்டும் பருவம் இது.

''கற்ற புலவர் மிகச்சிறந்து காட்டு மொன்றன் வளமெடுத்துக்
கவியால் விரித்துப் புகன்றியம்பக் கருதியதுபொற் குன்றநாண்
உற்ற மணிப்பொற் கோபுரமோ வொளிர்பொன் மாட மோமுகில்வந்
துறங்கு மதிலோ மாளிகையோ உலவு திருத்தேர் மறுகோசீர்
பெற்ற குடிகண் மனைவளமோ......''

என்ற பாடலில் மாடமுகில் வந்து உறங்கும் மாளிகையாகவும் சீர்பெற்ற குடிகண் மனைவளமாகவும், தேன்மலர் தண்டலைய்யாகவும், நீர்பெருக் கெடுக்கும் தடமாகவும் வருணித்துப் பாடும் சிவப்பிரகாசர், சிவஞான பாலைய சுவாமிகளை முளரி மலர்கள் பூப்பித்த முதல்வர் என்றும் முற்ற மயங்குஞ் சீர்க்காஞ்சி முதல்வர் என்றும் விளித்து முத்தந் தருகவே என வேண்டுகின்றார். களர் நிலத்தில் முளைத்த செங்கரும்பு போன்ற முருகக் கடவுள் இறைவனின் நுதல் விழியிற் தோன்றி, விரிந்த கதிர் களைப் பரப்பும் சூரியன்கூட கறுத்துப் போகத் தன்மேனி சிவக்கும் சுடர்வேலைக் கையில் கொண்டவன். முளரி மலரில் கருவண்டுகள் உலவித் தேனருந்த வேண்டி அப்பூக்களைப் பூப்பித்தவனாகிய இறைவன், வினையே உள்ளமாகிய என்னுள்ளத்தை மாற்றி முளரி மலர்களாகப் பூக்கவைத்தவன் முருகன் அவன் வந்து குழந்தைக்கு முத்தந்தர வேண்டும் என்று எதிர்நோக்குகின்றார்.

அம்புலி விளையாட்டு

நீலவானத்தில் திலகம் போல் ஒளிரும் நிலவினைக் குழந்தை யோடு வந்து விளையாடுமாறு அழைக்கும் பருவம் அம்புலிப் பருவமாகும். அகன்று விரிந்துள்ள விசும்பில் பரவிய பேரிருளை நீக்க வரும் செங்கதிராய், அமரராக உயர்ந்த தேவர்தானவர் குரவராய், முகம் மலர்ந்து உனை வருகவென அழைக்க, நீ முகிலுறங்கும் வானளாவிய திருமலையிலே பகையாகும் அரவத்தைக் கண்டு அஞ்சாமல் பரமனொடும் கண்டுளம் மகிழ்வுற்றாடி விளையாட வருவாய் என்று அம்புலியை அழைக்கின்றார்.

''வேத மாமுடியி னோதுமோர் பொருளை மேனியிந்திய முதலவாய்
மேவு பாதிகளை மோதி யோர்மொழியில் வேற்றும்படி
யுதவினான்
ஆதலாலிவனு மோகை யாலருளு மாட வம்புலி வருகவே
யாசி லாதசிவ ஞான தேவனுட னாடவம்புலி வருகவே''

என அம்புலியை விளையாடத் துணைக்கழைக்கின்றார். மேலும் கருவண்டு ஒலி எழுப்புகின்ற சோலையில் குவளையை கயல் என்று

மாறுகொண்டு அதனோடு மோதி மீண்டு திரும்பும். நெடிய கருமையான கூந்தலையுடைய மாது தன் கூந்தலைக் கருமையாகச் செய்வதற்கு, நிலவின் இடையில் வரும் கருமையை மையாகக் கொள்ளக்கருதி, அக்கருமையை வெண்மை செய்வது அரிது என்று உணரவும், சிவமென்றும், உயிரென்றும் வேறுபாடு காண இயலாத மெய்யறிவை மறைக்கும் ஆணவ மலம் அகன்றோட, இருள் நீக்கி குடிவிளங்கும் வழிமலர் திறந்து தன் பத முடியின்மேல் நிலவினை நிறுத்தி, மனம் - மொழி - மெய் கடந்து, குணமும் குறியும் இன்றி, அருமறைக்கு அரிய பொருளினை அளிக்கும் தன்மையுடையவனோடு விரைந்து விளையாட வா என்று அழைக்கின்ற விடத்து ஆசிரியரின் கற்பனை கடலெனப் பரந்து விரிந்துள்ளது.

சிற்றில் கட்டுதல்

இளஞ்சிறுமியர்கள் மணலால் வீடுகட்டி விளையாடும்போது, இளஞ் சிறுவர்கள் அம்மணல் வீட்டைக் காலால் அழித்துவிட்டு ஓடி விடுவதும், அவ்வாறு செய்ய வேண்டாம் என்று வேண்டுவதும் சிற்றிற் பருவத்தின் பாற்படும்.

''அழிக்க வுளத்துக் கொண்டனையே லடங்கா தெழும்வெங்
கொடுஞ்சினத்தை
யழிக்க கடலிற் பெருகியெழு மவாயை யழிக்க
செருக்குளத்தை
அழிக்க விருளி னுய்த்திடுமோ ரழுக்கா றதனை மூலமற
வழிக்க காமப் பெரும்பிணியை யழிக்க கொலையை
யஞ்சாமை
அழிக்க வினைகண் மூன்றினையு மழிக்க வழியு முடம்பதனை
யழியா தென்னுங் கருத்ததனை யழிக்க மலவிருளை
அழிக்க....''

என்று தன்னிடத்துள்ள தீயவற்றை அழித்து ஒதுக்குமாறும் ஆனால் தான் கட்டி விளையாடும் சிற்றில்லத்தை மட்டும் அழிக்க வேண்டாம் என்றும் கெஞ்சுகின்ற தொனியில் சிவப்பிரகாசர் பாடுகின்றார். பாலைய சுவாமிகளின் விளையாட்டுகளை வரிசைப்படுத்தும் ஆசிரியர், இரவு பகல் மாற்றம், ஒரு வாசகத்தால் புகழ்ந்து அறியப்படும் பொருளும் நிறைந்த ஆதியாய், அகர முதலாய், மந்திரமும் நால்வகை வாக்குமாய், வளியுமாய், விசும்புமாய், பேருலகுமாய் ஆக்கும் திருவிளையாடல்களை உடைய வள்ளலே என் சிற்றில்லத்தை அழிக்க வேண்டாம் : இத்தன்மையான திருவிளையாடல்களை மட்டும் புரிவாயாக என்றும் உரைக்கின்றார்.

சிறுபறை அடித்தல்

ஒலி எழுப்புகின்ற இசைக்கருவிகளில் ஒன்று பறை. சிறிய பறையைத் தட்டி ஒலியெழுப்பி குழந்தை விளையாடும் இவ்விளையாட்டு நான்காம் ஆண்டில் நிகழும்.

''தார்மணி முழக்கமொடு வருபரி முழக்கமுந்
தருமசாலைகண் முழக்குஞ்
சதுர்மறை முழக்கமுஞ் செந்தமிழ் முழக்கமுந்
தமனியத் திருமறுகுலாந்
தேர்மணி முழக்கமுங் கிளர்கச்சி நகராளி
சிறுபறை முழக்கியருளே''

என்று சிறுபறையை முழக்கியருள வேண்டுகின்றார். பவளவாய்க் குலமங்கையரின் மலரடிச் சிலம்பும் மணியும் முழங்குகின்ற முழக்கம் : அடைமழை விடாமல் சொரியும் முழக்கம் : பெரும்பணைக்கடன் முழக்கம் : வீரர்களின் கழவொலி முழக்கம் : செங்குதலைவார் மகளிர் கட்டுகின்ற கிண்கிணி முழக்கம் என்று பல்வகையான முழக்கங்களை ஒப்பிட்டுக் காட்டி திரிவறு தவத்தின் அரசே சிறுபறையை முழக்குக என்று வேண்டுகின்றார் சிவப்பிரகாசர்.

சிறுதேரோட்டுதல்

ஐந்தாம் ஆண்டில் நிகழும் சிறுதேர் உருட்டி விளையாடும் பருவம் சிறுதேர்ப் பருவம் எனப்படும். வண்தமிழ் புலவர்களின் செய்யுளின்கண் வழுப்படாத சொல்லோடு, வழுவமைத்த சொல் புணர்வது போன்று இளமதியைச் சூடி, நன்னெறியரோடு கூடி, முகஞ்சுளிக்காத அடியேனைத் தழுவி, சங்கரனின் திருத்தொண்டில் இவ்வுலக உயிர்களை மட்டுமல்ல வேற்றுலகரைச் சார்வுற வரைந்து, வண்டுமொய்க்கும் மலர் போன்ற தனிமுகங் கொண்ட கச்சியனை சிறுதேர் உருட்ட வருமாறு அழைக்கின்றார்.

''சிந்தும் வன்மருப் பெறுழ்வலிப் புகர்முகச்
சிறுவிழிப் பெருவேழச்
செல்வ விந்திர னாக்குத லுடையவண்
செழுமணித் தரளங்கள்
உந்தும் வெள்ளரு வித்திரு மயிலைய
னுருட்டுக சிறுதேரே''

என்று சிறுதேரை உருட்டி விளையாடும் வகையில் வேண்டுகின்றார்.

கால வளர்ச்சியாலும், கருத்தின் வளர்ச்சியாலும், கவிஞனின் சொற்கள் புதிய புதிய உவமை, உருவகங்களையும் தொட்டுக் காட்டுவதோடு அல்லாமல் வியத்தற்குரிய கற்பனைகளையும் சொற்சித்திரங்களாகத் தீட்டிவிடும் என்பது போல சிவப்பிரகாசரின் கற்பனைத்திறம் பிள்ளைத் தமிழ் இலக்கியத்தில் சொற்சித்திரங்களை வடித்துத் தந்துள்ள பாங்கினை உணர முடிகின்றது.

86. சிவப்பிரகாசரின் சிற்றிலக்கியங்கள்

தெ. மேகநாதன், அண்ணாமலைநகர்.

சிற்றிலக்கியம்

தமிழ் இலக்கியங்கள் காலந்தோறும் சூழ்நிலைக்கேற்ப வளர்நிலை பெற்று வந்துள்ளன. சங்க இலக்கியம், பதினெண் கீழ்க்கணக்கு, ஐம் பெருங்காப்பியங்கள் என்னும் நூல் பிரிவுகளை அடுத்துச் சிற்றிலக் கியங்கள் தோன்றி வளர்ந்தன.

சிற்றிலக்கியங்களைப் பிரபந்தம் என்பர். பிரபந்தங்கள் 96 என்பது பழைய வழக்கு. இத்தொகை பாட்டியல் நூல்களில் ஒருமுகப்படவில்லை. காலந்தோறும் புதுப்புது வகைகள் தோன்றியுள்ளன. அவ்வாறு தோன்றிய சிற்றிலக்கிய வகைகள் 417 என்பர் ஆய்வாளர்.[1]

''கண்ணி ஊழியும் முடியலாம், புதிய ஊழி பிறக்கலாம், மாந்தன் இம்மண்ணளவையும் கடந்து விண்ணில் குடியேறும் காலமும் வரலாம். என்றாலும், மனிதன் மனிதனாக இருக்கும்வரை அவனை மனிதனாகப் பேணி வைத்திருக்கும் பொறுப்பில் இலக்கியத்தின் பங்கு இருக்கவே செய்யும். இலக்கியம் இல்லையேல் உலகில் விலங்குகள்தான் இருக்கும்'' என இலக்கியத்தின் இன்றியமையாமையை விளக்குவர் டாக்டர் க.ப. அறவாணன்.[2]

அத்தகைய தமிழிலக்கியங்கள் பிற்காலத்தில் தோன்றி வளர்வதற்குத் தங்கள் பங்கை ஆற்றிய சான்றோர் பலராவர். அவருள் குறிப்பிடத் தக்கவர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளாவர்.

1. திருவெங்கைக் கோவை

இது திருவெங்கை என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் மீது பாடப்பெற்ற நூல். இந்நூல், களவியல், கற்பியல், வரைவியல் என்ற மூன்று இயல்களும் கைக்கிளை முதல், பொருள்வயிற்பிரிவு ஈறாகவுள்ள முப்பத்து மூன்று கிளவித் தொகை எனப்படும் அதிகாரங்களும், காட்சி முதல் கார்ப் பருவங்கண்டு களித்தியம்பல் முடியவுள்ள நானூறு துறைகளும், காப்புச் செய்யுள் ஒன்று உட்பட நானூற்று இருபத்தாறு செய்யுட்களும் கொண்டு விளங்குகின்றது.

தெள்ளிய தீந்தமிழ் நடையில், தெய்வ மணம் கமழ - கற்பனை நலம் சிறக்க, அணிநலம் அமைய இந்நூலை ஆக்கியுள்ளார் ஆசிரியர்.

கோவை என்பது அகப்பொருள் தழுவிப் பல அகத்துறைகளும் அமையப் பாடப்பெறுவது. பெரும்பான்மையான கோவைகள் 400 பாடல்களைக் கொண்டுள்ளன. திருவெங்கைக் கோவை இவ்வரம்பை மீறுகிறது. 426 பாடல்கள்.

திருக்கோவையாரை நோக்க, கோவை இலக்கியத்தில் இது ஓர் வளர்ச்சி நிலை என்று கூறலாம்.

காப்புச் செய்யுள்

இந்நூலின் காப்புச் செய்யுள்.

''பூவை மலர்நிறத்து எம்பெரு
மாட்டி பொருப்பரையன்
பாவை வளர்க்கும் கிளி முள்கை
யாள்தெ ஒருபாலமருவும்
தேவை வளர்சடைத் தென்வெங்கை
வாணனைச் சேர்ந்து வரும்
கோவை படர்வதற்கு உள்ளூன்று
வாம்ஒற்றைக் கொம்பரையே''

என்பது. இது விநாயகர் வாழ்த்து. இதில், கோவை கொம்பர் என்ற சொற்களைச் சிலேடையாக அமைத்துள்ளமை ஆசிரியரின் கவிதைச் சிறப்பைப் புலப்படுத்துகின்றன.

''பொருப்பரையன் பாவை ஒருபால் மருவும் தேவை என்றதனால் இக்கோவை முழுவதும் தலைவி-தலைவனைப் பற்றியவை என்றும், கோவை கொம்பு என்றதனால் தலைவி தலைவனைச் சார்ந்து வாழ்பவள் என்றும் இந்நூல் முதலிய பொருளைச் சுட்டியவாறாம்'' என நயம் காண்பர் சிவ. திருநாவுக்கரசு.[3]

காட்சித்துறை

கோவை நூல் துறைகளுள் முதற்கண் இடம்பெறுவது தலைவன் தலைவியைக் காணும் காட்சித்துறை. இதனைத் திருக்கோவையாரின் உரையாசிரியர்,

''மதி வாணுதல் வளர்வஞ்சியைக்
கதிர் வேலவன் கண்ணுற்றது''[4]

என்பர். இத்துறையை உவமை நகல் அமையக் கற்பனை வளத்துடன் பாடுகிறார் சிவப்பிரகாசர்.

''பூவும் பழுத்த செழுந்தீங்
கனியும் பொழியமுதம்
மேவும் குடங்கள் இரண்டுட
னேஇரு மீறும் கொண்டு
சேவுந்து அழகர் திருவெங்கை
வாணர் சிலம்பில் மலர்
தூவும் பொழிலில் எதிர்ப்பட்ட
தால் ஒரு தூமணியே''[5]

''தாமரை மலர் போன்ற முகமும், கொவ்வைக்கனி போன்ற இதழ்களும், அமிர்த கலசமும் போன்ற தனங்களும், மீன் போன்று பிறழும் கண்களும் ஆகிய இவற்றுடன் கூடி திருவெங்கை நகர்ப் பொலிவின்கண் ஒரு தூய மாணிக்க மணி போன்ற பெண் ஒருத்தி எதிர்பட்டு நின்றாள்'' என்பது இப்பாடலின் பொருள்.

சிவப்பிரகாசர் தினமும் சிவபூசனை செய்பவராதலின் இப்பாடலைத் தெய்வமணம் கமழுமாறு இயற்றியுள்ளார். பூ என்ற மங்கலச் சொல்லில் தொடங்கி சிவபூசைக்குரிய பொருள்களான பூ, கனி, பால் ஆகியவற்றைக் கூறியது ஆசிரியரின் பத்திமை நிறைந்த உள்ளக் கிடக்கையைப் புலப்படுத்தி நின்றது எனலாம்.

திருவெங்கைக் கலம்பகம்

சிவப்பிரகாசரால் பாடப்பெற்ற மற்றொரு சிற்றிலக்கியம் திருவெங்கைக் கலம்பகம்.

திருவெங்கையில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் மீது பாடப் பெற்ற கலம்பகம் என இது பொருள்படும்.

'கலம்பகம்' என்பது புயவகுப்பு, மதங்கு, அம்மானை, காலம், சம்பிரதம் முதலிய பதினெட்டு உறுப்புகள் அடைய வெண்பா, கலித்துறை, ஆசிரியப்பா, ஆசிரிய விருத்தம், மருட்பா போன்ற பாடல் விகற்பங்கள் விரவி வர நூறு செய்யுட்களால் பாடப்பெறுவது.

'கற்பனைக் களஞ்சியம்' என்று புலவர் பாராட்டுவதற்கேற்ப இந்நூலைக் கற்பனை வளம் நிறையுமாறு சிவப்பிரகாசர் பாடியுள்ளார்.

கலம்பகத்தின் முதல் பாடல் 'கொச்சக ஒருபோகு' என்ற பாட்டாக அமைய வேண்டும் என்பது விதி.[6] அப்பாட்டின் முதல் உறுப்புத் தரவாகும். பெரும்பாலும் தரவெல்லாம் தலைவனைப் பற்றிப் புகழ்ந்து கூறி முடிவில் அவனை விளிக்கும் விளியாக அமையும்.

இவ்வெங்கைக் கலம்பகம் அதற்கு மாறாக உள்ளது. தாழிசை உறுப்பில் பாடும்முறை தரவு உறுப்பில் அமைந்துள்ளது. காலப்போக்கில் தோன்றிய ஒரு மாற்றம் என இதனைக் கருதலாம்.

களி

இக்கலம்பகத்தில் பல உறுப்புகள் இலக்கணப்படி கூறப்பட்டுள்ளன. ஆயினும் இவற்றுள்''களி' என்ற உறுப்பு மிகச் சிறப்பாக அமைந்துள்ளது.

பொதுவாகக் கலம்பகங்களில் குடிமகன் கள்ளுண்டு களித்துப் பாடுவதாக அமையும். ஆனால் இவ்வெங்கைக் கலம்பகத்தில், கள்ளுண்ட களித்த களிமகன் கருத்தமையப் பாடப்பெறவில்லை. கடவுட் களியாகவே அமைந்துள்ளது.

களியர் பாடுகின்றனர்:

''கொண்டல்தவழ் மணிமாடம் மலிந்த வெங்கைக்
கோவிடங்கொள் பெரியநாயகிஎம் அன்னை
தண்தரள நகைஉமையாள் கருணை தன்னால்
தாலத்து வந்த குருக் களையுட் கொண்டு
கண்டவர்கள் அதிச யிப்பப் பரமா னந்தக்
களிப்படைந்து கரணமுடல்புலன்கள் எல்லாம்
உண்டெனவும் இவைஎனவும் உணர்ந்தி டாமல்
உணர்வு கடந் திருக்கின்ற களியர் யாமே?''

''பனையின் நீழலில் (திருப்பனந்தாள்) வந்த குருவாகிய (சிவன்) கள்ளை உண்டு பரமானந்தமாகிய களிப்பை அடைந்து, கரணம், உடல், புலன்கள் ஆகிய இவை உண்டென்றும் இல்லையென்றும் உணர்ந்திடாமல் உணர்வு கடந்திருக்கின்ற களியர்யாம்'' எனக் களியர் பாடுவது ஒரு புதுமை மாற்றம்.

கற்பனை வளம்

கற்பனை என்பது செய்யுளுக்கு அழகூட்டுவது. கற்பனை என்பது கலையின் வடிவம். உள்ளதை உள்ளவாறே படைக்காமல் சிறிது கூட்டியும் குறைத்தும் பாடுவது கற்பனை.

உள்ளத்தில் சிறிது குறைத்தும், கூட்டியும் பாடுவதால்தான் பாட்டு என்பது கலையாகிறது. இயற்கை நம் கண்ணெதிரே உள்ளபோது அதை ஏன் மீண்டும் அப்படியே சொற்களால் அல்லது வண்ணத்தால் காட்டவேண்டும்? கற்பனையும் சேர்த்துக் குழைத்துக்காட்டும் கலையைத் தான் நாம் நாடுகிறோம்'' என்பர் மேனாட்டு ஆய்வாளர் ஆபர் கிராம்பி.[7]

''கலைஞர் படைக்கும் கற்பனையும் இத்தகையதே ஆகும். உள்ளதை உள்ளவாறே படைப்பதனால் அது கலையாவதில்லை. அதைப் படைத்திடக் கலைஞரும் முன்வருவதில்லை. எனவே, உள்ளம் விரும்புமாறு படைக்கும்

உணர்ச்சியே பாட்டு, ஓவியம் முதலிய கலைகளுக்கு அடிப்படையாகும்[8] என்பார் கூற்று இங்கு கருதத்தக்கது.

வெங்கைக் கலம்பகத்தில் கற்பனை

திருவெங்கைக் கலம்பகத்தில் பல இடங்களில் கற்பனைக் களஞ்சியம் எனப்படும் சிவப்பிரகாசர் தமது பெயருக்கேற்பக் கற்பனை களை அழகுறக் கையாளுகின்றார். அவற்றுள் ஓரிடம்...........

''திருவெங்கை நகரில் வயல்களில் நீர் நிறைந்த இடங்களில் சங்குகள் மேய்ந்தன. அன்னங்கள் உலவின. குவளைகள் மலர்ந்தன. இவற்றின் அழகைக் கற்பனை வளம் பொலிய ஆசிரியர் கூறுவதைக் காணுங்கள்;

திருவெங்கைக்கு ஒருமுறை வந்த திருமால் தன் கையிலிருந்த வெண்சங்கை நினைவின்றி வயலில் தவறவிட்டார். மீண்டும் அதை எடுக்க எண்ணியபோது தன்சங்கு எது? வயலில் மேயும் சங்குகள் எவை? என்று வேற்றுமை காண முடியாமல் மயங்கினாராம்.

பிரமனோ எனில் தன் அன்னத்தை அங்கே விட்டுவிட்டு பின்னர் வயல் அன்னங்களுக்கும் வேற்றுமை காண முடியாமல் எதைப் பிடித்து ஊர்வது? என்று மயங்கி நின்றாராம்.

மன்மதன் காதலர்கள் மீது தனது மலரம்புகளை எய்யும் தொழில் உடையவன். அவன் அங்கு வந்து தன் கையிலிருந்த குவளை மலர் களை விட்டு விட்டும் பின்னர் வேற்றுமை காணாது எதைப் பறிப்பது என்று அறியாமல் மயங்கி நின்றான். இத்தகைய அரிய கற்பனையை உள்ளடக்கியது பின்வரும் திருவெங்கைக் கலம்பகப் பாடல்.

''எடுத்தசங் கதனை விடுத்தவற் றெதனை
    எடுப்பம் என்று அறியுளம் மருள,
இவர்ந்திடும் எகின்விட்டு இவற்றெதை ஊர்வம்
    என அயன் கருவறக் குவளை
விடுத்தவற் றெதனைப் பறிப்பமென் னுசாவ
    இன்மதன் பணிலம்வால் எகினம்
விரிந்த தண் குவளை பரந்தஒண்
    பழன வெங்கை''

என்பது.

நால்வர் நான்மணிமாலை

சிவப்பிரகாசரின் சிற்றிலக்கியங்களில் பாடல் அளவால் சிறியது நால்வர் நான்மணிமாலை. ஆனால், மூர்த்தி சிறியது; கீர்த்தி பெரிது.

அமைப்பு

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்றும் நால்வர்மீதும் ஒவ்வொருவர்க்கும் பத்துப்பாடல்களாக வெண்பா, கட்டளைக் கலித்துறை, விருத்தம், ஆசிரியப்பா என்றும் பாமணிகள் விரவி வர நாற்பது பாடல்களால் அமைந்தது இந்நூல்.

கற்பனை வளம் மிக்கது. கனிச்சுவை மிகுந்த பாடல்களால் ஆனது. உவமை நலம் சிறந்தது. பத்திச்சுவை மிளிர்வது.

முத்து, பவளம், மாணிக்கம், வைரம் என்றும் நால்வகை மணி களால் ஆன மாலை போன்று வெண்பா முதலிய நால்வகைப் பாக்கள் விரவி வரத் தொகுக்கப்பட்டுள்ளமையால் நான்மணிமாலை எனப் பெயர் பெற்றது.

தமிழ்ப்பற்று

சைவ சமயக் குரவர் நால்வரது புகழ்பாடும் இந்நூலில் ஆங்காங்கு ஆசிரியரின் தமிழ்ப்பற்று இழையோடுவதைக் காணமுடிகிறது.

வைதிக சமயத்தினர்க்கு ஞான நூலாக விளங்குவது வேதம்; சைவ சமயத்தினர்க்கு ஞான நூலாகத் திகழ்வது தேனினும் இனிய தமிழ்ப் பாடல்களை உடைய திருவாசகம்.

இவ்விரண்டில் சிறந்தது எது? இவ்வினாவை எழுப்பிப் பின்வரும் பாடலில் அதற்கு விடை காணுகின்றார் சிவப்பிரகாசர்.

''விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கண்
காரணன் உணரஎனும் ஆரண மொழியோ?
ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகர் தேனோ?
யாதோ சிறந்தது? என்குவி ராயின்;

வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சம் நெக்குருகி நிற்பவர்க் காணிகிலேம்;
திருவாசகம் இங்கு தெருகால் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்துக் கண்கள்
தொடுமணற் கேணியில் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிழ்ப் பெய்தி
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகின் மற்றையர் இலரே''[9]

இப்பாடலில் வேதங்களை ஓதினால் உள்ளம் உருகி அதன் விளைவாக விழிநீர் பெருக நிற்பவர் எவரையும் காண்கிலோம்.

ஆனால் தமிழ் வேதமான திருவாசகத்தை ஒருமுறை ஓதினாலோ கருங்கல் மனமும் கரைகின்றது; உருகுகின்றது. கண்களில் நீர் பொழிகின்றது. மெய்ம்மயிர் பொடிக்கின்றது, விதிர் விதிர்ப்பு ஏற்படுகின்றது; பத்திமை உணர்வு பெருகுகின்றது. இதனால் திருவாசகத்தை ஓதுவோர் சிவபெருமானுக்கு அன்பராகின்றனர்'' என்று காரண காரியத்தோடு கூறி வேதத்தினும் திருவாசகமே சிறந்தது என நிறுவுகின்றார் அடிகள்.

அடிகள் பெற்றுள்ள தருக்க நூற்புலமையை இதனால் அறிய இயலுகின்றது.

பிற இலக்கியங்கள்

சிவப்பிரகாசரால் பாடப்பெற்ற பிற இலக்கியங்களும் தமிழ் வளம் மிக்கு விளங்குகின்றன. அவரது புலமைக்குச் சான்றாக அமைகின்றன.

இவர் பாடிய திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதி, வெள்ளியம்பலத் தம்பிரானை எள்ளிய புலவரை அடக்கப் பாடியது.

பழமலை நாதரின் பெருமையைப் பல்லாற்றானும் எடுத்துரைப்பது பழமலை அந்தாதி.

திருவண்ணாமலையில் திருமாலும் நான்முகனும் காணாதவாறு நிமிர்ந்தோங்கிய சிவபரம்பொருளின் சீர் பாடுவது கோவை சைவமாலை.

மாணவர் உலகம் சிவப்பிரகாசரை நன்கறிவதற்கு வாய்ப்பளித்த நீதிநூல் நன்னெறி அரிய பல நீதிகளை எளிய தமிழ்ப் பாடல்களால் எடுத்துரைப்பது.

சதமணிமாலை, சிவஞான பாலைய தேசிக நெஞ்சுவிடு தூது, சிவஞான பாலைய தேசிகர் பிள்ளைத்தமிழ் போன்ற 34 நூல்களை இயற்றித் தமிழுக்கு அணி சேர்த்த சிவப்பிரகாசர் கற்பனைக் களஞ்சியம் என்ற புகழ்ப் பெயரால் போற்றப்படுகின்றார்.

சான்றெண் விளக்கம்

1. த. அழகரசு, தமிழிலக்கியக் கொள்கை தொகுதி, 8.
2. டாக்டர் க.ப. அறவாணன், தமிழிலக்கியச் சமூகவியல், ப. 32.
3. வித்துவான் சிவ. திருநாவுக்கரசு, ''திருவெங்கைக் கோவை'' சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள், ப. 109.
4. திருச்சிற்றம்பலக் கோவையார், காட்சித்துறை - உரைக்கொத்து
5. திருவெங்கைக் கோவை. செய. காட்சித்துறை.
6. வித்துவான் ஆ. சிவலிங்கனார், திருவெங்கைக் கலம்பகம், சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள், முதலாவது மாநாடு, ப. 326.
7. L. Abercrombie, PRINCIPLES OF LITERARY CRITICISM, P. 86.
8. டாக்டர் மு. வரதராசன், இலக்கியத் திறன், ப. 131.
9. சிவப்பிரகாச அடிகள், நால்வர் நான்மணிமாலை, 4.

87. பிரபுலிங்க லீலையின் கற்பனைச் சிறப்பு

கி. மைதிலி, சென்னை.

சிவப்பிரகாச சுவாமிகள் கற்பனைக் கருவூலம். பிரபுலிங்க லீலை எனும் காப்பியத்தினைச் சைவ சித்தாந்தம் பொதிய கற்பனை வளத்துடன் பாடியுள்ளார். பிரபுவாகிய அல்லம தேவரின் வரலாற்றைக் கூறுவது இக்காப்பியத்தின் உள்ளுறைப் பொருள். மண்ணில் மக்களாகப் பிறந்து போக நெறியில் ஒழுகி மெய்யறிவு கைவரப் பெற்றவர் வீடுபேறடைவர் என விளக்கவந்த காப்பியம் இது. யோக நெறியில் ஒழுகவும் மெய்யறிவு கைவரப் பெறவும் ஞானாசிரியர் வேண்டும். ஞானாசிரியர், அன்பர்களின் அன்புக்கு ஏற்ற வகையில் உருவங் கொள்வர். அவர் மாயையால் மயங்காதவர். சைவ நெறியை வளர்ப்பவர். மக்களுக்கு வீடுபேறு அருளும் தொழிலை மேற்கொள்பவர் என விளக்கும் நூல் இதுவாகும். வீர சைவத்தின் சிறப்பியல்புகளை, நுண்மையை விவரிக்கின்றது. இவற்றோடு ஒழுக்க நெறிகளும் கவிச்சுவையும் கற்பனைச் சிறப்பும் விளங்கும்.

சிவப்பிரகாசர் அருட்செல்வமும் கல்விச் செல்வமும் பெற்றவர். தம் குறிக்கோளைச் செம்மையாக உணர்த்தி ஓசை நயத்துடனும் பொருள் வளத்துடனும் வருணனை செய்து பாடியுள்ளார். நூலின் தொடக்க முதலே இவற்றைக் காணலாம்.

திருக்கயிலையில் இறைவனும் இறைவியும் வீற்றிருந்தபோது தேவர் குழாம் வந்து பணிந்தது. இக்குழாம் வீடுபேறடையுமா என இறைவி வினவி இறைவன் அடையா என்றார். மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து வீடுபேறடையலாம் என இறைவன் கூறித் தாமே ஞானாசிரியனாக, அல்லமன் எனும் பெயரோடு மக்கட்கு வீடுபேறடைய வழிசெய்வேன் என்றார். ஞானாசிரியனை மாயையால் மயங்கச் செய்வேன் எனச் சூளுரைத்து இறைவி தமோ குண மாயையை மண்ணுலகிற்கு அனுப்பினாள். அவள் பிறந்து வளர்ந்து அல்லமனைக் கண்டு காதலாகி அணைய முற்பட்டாள். இயலாமல் காலந்தாழ்ந்தது. இறைவி விமலை என்பாளை அனுப்பினாள். மாயை அல்லமனின் இயல்புகளை விவரித்தாள். இறைவி இறைவனிடமே மண்ணுலகில் நடப்பனவற்றைக் கேட்டறிந்தாள் என்று காப்பியம் நிறைகின்றது.

மாயை பிறந்து வளர்ந்து மதுகைநாதனை நாள்தோறும் பூசனை செய்கின்றாள். ஒவ்வொரு நாளும் விடியலில் எழுந்து நீராடி அணிமணி அணிந்து அழகுறச் செல்பவள் மாயை. தோழியர் அணிமணி சூட்டி மகிழ்வர். மூக்கணியில் ஒன்று புல்லாக்கு எனப்படும். மூக்கின் இரு வாயிலுக்கும் இடையே உள்ள பகுதியில் வாயின் நடுப்பகுதிக்கு மேலாகத் தொங்கவிடப்படும் அணிகலன் இது. முத்துப்புல்லாக்கு அணிவது அழகு. நெற்றிச் சுட்டிக்கு நேராக, புல்லாக்கும், புல்லாக்குக்கு நேராக அட்டிகையின் பதக்கமும் அமைந் திருக்கும் அழகினை வருணிக்கின்றார் சிவப்பிரகாசர். ஒவ்வோர் அணியின் சிறப்பினையும் கற்பனையால் மிளிரச் செய்கின்றார்.

அவற்றுள் முத்துப்புல்லாக்கு மிக்க அழகுடன் பொருந்தியிருந் தாலும் மாயையின் வெண்முத்துப் பற்களுக்கு இணையாக இல்லை எனக் கூறவந்த சிவப்பிரகாசர் மனித இயல்பையும் விளக்குகின்றார். வெற்றி பெற முடியாதவர், வெற்றி பெற்றவருக்குப் பழிவந்து சேரும் வகையில் அவர் வீட்டுமுன் ஞான்று கொள்வது (நாண்டுகிட்டுச் சாவது - தற்கொலை செய்து கொள்வது) கோழைத்தனத்தால் நிகழ்வதாகும். மூக்கின் நடுத்தண்டில் துளைத்து மேலுதட்டில் படுமாறு முத்துப்புல்லாக்கினைத் தோழியர் மாயைக்கு அணிவித்தபோது, சிவப்பிரகாசர்க்குக் கோழைத் தனமிக்க போராடும் உணர்வற்ற, விரைந்து உணர்வு வயப்பட்டு தற்கொலைக்கு முயல்கிற பெண்ணே நினைவுக்கு வருகிறாள். இந்த நூற்றாண்டிலும் மாறாத போக்காகவே இச்செய்கை உள்ளது.

மாயையின் வெண்பற்கள் முத்துக்களைப் பழிக்கும் வண்ணம் உள்ளன. இப்பழியினைத் தாங்க முடியாத முத்து ஒன்று உங்கள் வாய் வீட்டின் முன் ஞான்று கொள்கிறேன் என்பது போன்று தொங்குகின்றது என்று புல்லாக்கினைக் கண்டு கற்பனை செய்துள்ளார் சிவப்பிரகாசர்.

''தன்னை நிந்தைசெய் வெண்ணகை மேற்பழிசார
மன்னி யங்கது நிகரற வாழ்மனை வாய்தன்
முன்இ றந்திடு வேன்என ஞான்றுகொள் முறைமை
என்ன வெண்மணி மூக்கணி'' (மாயை பூசைகதி-11)

என்று பாடியுள்ளார்.

இவ்வாறே கழுத்தில் அட்டிகை அணிந்திருந்தமைக்கும் ஒரு காரணத்தினை அழகுறக் கற்பிக்கின்றார். கூந்தல் சுமக்கிற அளவுக்குக் கனமாக இருக்கிறது. அதன்மேல் மலர்களைச் சூட்டியிருக்கிறாள் மாயை. பீலிபெய் சாகாடும் அச்சிலும் அல்லவா? மலர் கூந்தல் சுமை தாங்காமல் கழுத்து வளையலாமே! அதனால், கழுத்து வளையாமல் இருக்க பூண் பிடித்ததுபோல் அட்டிகை உள்ளதாம்.

"கற்றை யங்குழல் நறுமலர்த் தொடையொடு கனமாய்
உற்ற ணங்கும் என்றுஇலகு பூண் பிடித்ததை ஒப்ப
.....................மாயைதன் மிடற்றில்
பொற்றடந் தகட்டு அணிஒரு மடவரல் புனைந்தாள்"

(மா. பூ. க. 12)

காதில் ஓலைச்சுருள் அணிந்ததற்கும் காதின்மேல் குவளை மலர் அணிந்ததற்கும் கூட அழகிய காரணங்களைக் கற்பிக்கின்றார் ஆசிரியர். தம்மீது பழி வருமாறு உள்ள செயலைத் தம்மைக் காட்டிலும் வலியவர் திணித்தால் அதனைச் செய்வதிலிருந்து தப்ப முடியாது. பெருஞ்சிக் கல்தோன்றி தாம் சிக்கிக் கொள்ளும்போது அதிலிருந்து மீள, நீதிமன்றத்தில் மூன்று சான்றுகளில் ஒன்றையேனும் தருதல் வேண்டும். ஆட்சியில் ஒன்று, ஆவணத்தில் ஒன்று, அயலார்தம் காட்சியில் ஒன்று தருவது சிறப்பு. மூன்றனுள் ஒன்றையேனும் தந்து ஓரளவு தப்புதலைச் செய்யலாம்.

அதனால், மாயையின் கண்கள் தம் பார்வையிலேயே படுமாறு ஓர் ஆவணத்தைச் சுருட்டிக் காதினுள் நுழைத்து வைத்திருக்கின்றனவாம். காதளவோடிய கண்கள் என்பதால் அருகிருந்து பார்த்துக் கொள்ளவும் முடியும். சுருட்டி, காதிற்குள் நுழைக்கவும் முடியும். அந்த ஆவணம் காமவேள் அனுப்பிய ஓலை முனிவர்களின் தவத்தை அழிக்குமாறு கண்களுக்குக் காமவேள் ஓலை அனுப்பினானாம். தம்மேற் பழிச் சொற்வந்தால், காமன் மீது பழியைப் போட கண்கள் அந்த ஓலையைக் காதிலே போட்டு வைப்பதாக நம் காதில் போட்டு வைக்கிறார் சிவப்பிரகாசர்.

"அடுத்து, மாதவம் அழிமின் என்று அனங்கவேள் தமக்கு
விடுத்த ஓலையைக் கண்கள்தம் மேல்பழி விளம்பில்
கொடுத்த வேள்மிசை நிந்தைகூ றுதற்குவைத் திருத்தல்"

(மா.பூ.க. 10)

போல் மாயை காதில் அணிந்திருந்தாளாம்.

தொட்டியில் இட்டுச் சீராட்டும் பருவத்திலும் பல அணிகளை அணிந்திருந்தாள் மாயை. குழந்தைகளில் பெண்ணுக்கு என்று சில அணிகள் உள்ளன. ஆணுக்கென்று சில அணிகள் உள்ளன. இவற்றைக் குமரகுருபரர் முறையே மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழிலும், முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழிலும் விவரித்துள்ளார். சிவப்பிரகாசரும் பெண் குழந்தையான மாயையின் அணிமணிச் சிறப்புகளை விவரித் துள்ளார். குமரகுருபரரோடு பெரிதும் ஒத்துள்ளது. சில நூற்றாண்டுகளாக குழந்தை அணிகளை ஒரே மாதிரியாக அணிந்து வருவதை இப்பாடலும் சான்றாக நின்று உறுதிப்படுத்துகின்றது.

கண்ணிற்கு அமைய மையெழுதிக் காற்குச் சதங்கை பொற்றண்டை
நண்ணப் புனைந்து பொன்னரைஞாண் நடுவில்பூட்டிப்
புலியுகிர்சேர்
வண்ணப் பசும்பொன் அணிமார்பில் வனைந்து சிறுமென் தொடி
சேர்த்திப்
பெண்ணிற்கு அரசி திருநுதல்பொன் பிறைமேல் சுட்டி
ஒன்றணிந்து''

(மாயையின் உற்பத்தி கதி-47)

இருந்த காட்சி மனக்கண்ணில் அழகுறப் பதிந்துவிட்டது.

மனங்கவரும் காட்சி மட்டுமன்று, பாலைநிலக் கொடுமை போன்றுள்ள காட்சியையும் தக்க உவமை கொண்டு விளக்கி மகிழ்கின்றனர். கடும் வெயிலில் முகத்தில் குளிர் நீர் வீழ்ந்ததைப் போன்ற இன்பத்தினை அவர் கற்பனை நமக்குக் காட்டுகின்றது. யானையின் துதிக்கை போன்ற பருமனான நீர்த்தாரை மழையாகப் பொழிந்தாலும், கை கழுவிய பின்பு, நகத்தின் மேல் நின்ற நீர்த்துளியை உதறினால் அது மண்ணில் விழுந்த அக்கணமே மறைந்து விடுவதைப் போல், பாலை நிலத்தில் விழுந்த பெருமழை மறைந்து போனதாம். அந்த வெம்பாலைக் காட்சியை இங்ஙனம் கற்பித்துள்ளார் சிவப்பிரகாசர்.

. . . . .கொடும் பாலை
யானை தன் புழைக் கைநிகர் துளியிடை விடாமல்
வான நின்றுபெய் யினும்தழல் பட்டவல் இரும்பின்
மேல் நகம்தெறி திவலைபோல் சுவறுறும் விரைந்து''

(மாயை கோலாகல கதி-49)

துதிக்கை அளவான நீர்த்தாரை மனித நக அளவான திவலை போல் பாலை நிலத்தில் விழுந்து மாறும் கொடிய பாலை என்பதனோடு, துளிக்கும் திவலைக்கும் உள்ள வேறுபாட்டினையும் நுட்பமாகக் காட்டியுள்ளார் புலவர்.

சிறுதுளி பெருவெள்ளம் எனும் பழமொழியில் உள்ள துளி எங்ஙனம் பெருவெள்ளத்தினைத் தோற்றுவிக்கும் எனும் ஐயம் பலருக்கும் இருக்கும். துதிக்கை அளவிலான துளி என்பதை உணர்ந்து கொண்டால் உறுதியாக அது பெருவெள்ளமாகப் பெருகும் என்பதை உணர முடியும். துளியினைக் காட்டிலும் மிகமிகச் சிறிது திவலை என்பதையும் புலப்படுத்தியுள்ளார் சிவப்பிரகாசர்.

ஆண் ஒருவன் அதிலும் ஆளும் பொறுப்பில் இருக்கிறவன் எத்தனை பெரிய துன்பம் வந்தாலும் அழுது புலம்புதல் கூடாது. துன்பத்தைக் காட்டாமல் தொடர்ந்து கடமையாற்ற வேண்டும் என்ற மரபினைத்

தமிழகம் நெடுநாளாகப் பின்பற்றி வருகின்றது. துன்பத்தில் துவண்டவன் மண்ணில் விழுந்து புரண்டு அழுது வாய்விட்டு அரற்றுவது இயல்பு. மாயையைப் பிரிந்த தந்தை மன்னனாக இருந்தமையால் அங்ஙனமின்றி எழுதும் ஓவியமாக இருந்தானாம்.

''அழுது வாய்விட்டு அரற்றிலன் தன்னுடன்
புழுதி யாடப் புரண்டிலன் மன்னவன்
பழுதி லாததன் பாவைகா ணாமையால்
எழுதும் ஓவியம் என்னநின் றானரோ''

(வசவண்ணர் வந்த கதி-18)

மருந்தை உட்கொள்ளும்போது குரங்கை நினையாதே என்று சொல்லி விட்டால், மருந்தை உண்ணும் போதெல்லாம் குரங்கின் நினைவு பலருக்கும் வரும். மன்னன் புழுதியில் விழுந்து அரற்றி அழவில்லை என்கிறபோது பிறரெல்லாம் அப்படி அழுதமை கற்பனைக் கண்ணில் தோன்றும். கற்பனையைத் தோன்றாமல் தோன்றச் செய்யும் உத்தியைச் சிவப்பிரகாசர் கையாண்டுள்ளார். புழுதி, பழுதி என்பனவற்றுக்கு ஏற்ப எழுதி என வருவது சிறப்பாக இருக்கும் என்றாலும் எழுதும் என்றே சொல்லை அமைத்துள்ளமை அவரது கற்பனைச் சிறப்பினைக் காட்டும்.

எழுதும் ஓவியம் என்பது முற்றுப்பெறாத ஓவியம். அது புனையா ஓவியமும் அன்று. முழுமைபெற்ற ஓவியம் கலையழகுடன் மிளிரும். எழுதும் ஓவியம் கலையழகு தோன்றும் நிலையில் உள்ளது. கலையழகு கெட்டது எனக் கூறக் கூடாதது. கலையழகு கெட்டுவிட்டால் அது முழுமை பெறும்போது எங்ஙனம் சிறப்பாக மிளிர முடியும்?

இவற்றையெல்லாம் மனத்திருத்திய சிவப்பிரகாசர், மாயையின் தந்தையும் மன்னவனுமான மமகாரனை 'எழுதும் ஓவியம் என்ன இருந்தான்' என்கிறார். எழுதும் ஓவியத்தில் இறுதியாகத்தான் கண் திறக்கப் பெறும். கண்ணின் அழகு அவ்வோவியம் நேரில் பார்ப்பது போன்றும் உயிருடன் இருப்பது போன்றும் தோன்றச் செய்யும். மமகாரன் மகளை இழந்து, மன்னனாய் இருப்பதால், துன்பத்தினைப் பொறுத்து, கண்மூடி ஆடாது அசையாது இருந்தான் என்கிற நெடிய விளக்கத்தினை ஒரு தொடரால் விளக்கி நின்றார் சிவப்பிரகாசர்.

இவ்வாறே, பெண்ணொருத்தி, பெற்று வளர்த்த ஒரே மகளைக் காணாது வருந்தும்போது விழுவாள், எழுவாள், மெலிவாள், நைவாள், அழுவாள், தளர்வாள், தரையைக் கையால் அறைவாள், வாயால் மூச்சிரைப்பாள், கைநெரிப்பாள், ஏங்குவாள், இறப்பேன் என்று துணிவாள். சோகத்தின் எல்லா நிலைகளையும் மாயையின் தாயான மோகினியிடம் படைத்துத் தன் படைப்புக் கற்பனையை வெளிப்படுத்தியுள்ளோர் சிவப்பிரகாசர்.

''விழுவள் மீள எழுவள் மெலிந்து நைந்து
அழுவள் மேனி அசைந்து நிலங்கையால்
உழுவள் வாய்க் கொண்டு உயிர்ப்பள் இறப்பல் என்று
எழுவள் கைநெரித்து ஏங்குவள் அன்னையே'' (வ.வ.கதி. 19)

துன்பத்தில் மூக்கடைக்கும், மூச்சிரைக்கும். விழுந்து எழுந்து நிலமறைந்து கைநெரித்து நிற்கும்போது மூச்சிரைக்கும். வாயால் மூச்சுவிட வேண்டியிருக்கும். இவற்றை நுட்பமாக உணர்ந்து உரைத்திருக்கின்றார்.

கற்பனையொடு நகையுணர்வும் நிரம்பப் பெற்றவர் சிவப்பிரகாசர். விளையாட்டாய் நகையூட்டக் கூடியவரல்லர். சிந்திக்குமாறும் செய்யும் வல்லமை பொருந்தியவர். ஊடலில் தோற்றவர் வெல்வது என்பது பண்டைய மரபு. பெரும்பாலும் ஆணே தோற்று நிற்பதை இலக்கிய நூல்கள் காட்டும். போட்டியில் தோற்றவர், காலில் விழுவதும் இய்ல்பு. இதில் தன் முனைப்பு, ஆளுமை குறுக்கிடின் பகைவளரும் அமைதி குலையும். நாட்டுத் தலைவர் என்றால் நாடழியும். ஊர்த்தலைவர் என்றால் ஓர் ஊர் அழியும். வீட்டுத்தலைவர் என்றால் குடும்பம் சிதையும், விட்டுக் கொடுத்து, மன்னிப்பு வேண்டி நின்றால் மன்னிக்க வேண்டியவர் தாமும் பணிவார். நெருக்கமும் மிகும். இறைவன் ஆனாலும் ஊடல் தணிக்க மனைவியின் காலில் விழுவது முறை. இறைவனே விழும்போது அடியார் வணங்குவதில் இயல்பு மீறல் இல்லை. நெருக்கம் கூடும் என்னும் பொருளை நல்ல நகையுணர்வுடன் பாடியுள்ளார் சிவப்பிரகாசர். நூலைத் தொடங்கும்போது இறைவனையும் இறைவியையும் வணங்குகிறார். உமையை வணங்கும்போது ஒரு நகைச்சுவைக் காட்சியை வைத்துள்ளார்.

''ஆதி பகவன் தனதூடல் தணிப்பான் பணியை அவ்விறைவன்
பாதம் இறைஞ்சும் அதற்கும் நெற்றிப் பகையும் அல்குல் பகையுமாம்
சீத மதியும் அரவும்விழும் செயற்கும் உவகை செயாமல் அலை
மாது பணியும் அதற்கு மனம் மகிழும் உமையை வணங்குவாம்''
(துதிகதி-2)

ஊடலைத் தணிக்க வேண்டி, சிவபெருமானே காலில் விழுகின்றான். அவனொடு அவன் தலையில் உள்ள பிறைநிலவும் கழுத்தில் உள்ள பாம்பும் காலில் விழுகின்றன. கணவன் விழுந்ததற்கும் தன் அழகு உறுப்புகளுக்குப் போட்டி போல் உள்ள பிறைநிலவும் அரவும் தோற்றன போல் விழுந்தனவற்றுக்கும் பெரிதும் மகிழ வேண்டிய உமை மகிழாமல், இறைவன் தலைமீது வைத்துக் கூத்தாடும் கங்கையே அவள் காலடியில் விழுந்தற்கு மகிழ்ந்தாள் எனப் பாடியுள்ளார்.

ஒருவரைப் புகழ்ந்து கொண்டிருந்தால் இணையானவருக்கு எரிச்சல் வரும். வாய்ப்பு கிடைக்கும்போது இகழ்வார். அல்லது வேறொருவர் இகழ்ந்தால் மகிழ்வார். அது இவ்வுலகில் பலருக்கும் உள்ள மனநிலை. மங்கையொரு பாகன் தனக்கும் மேலாகத் தலையில் வைத்திருப்பதால் தாழ்வுணர்வு உமைக்கு வந்தது என்றும் அவளும் காலில் விழுந்ததால் மகிழ்வு வந்தது என்றும் பாடியுள்ளமை நம் மக்களை அவர் போக்கில் சென்று திருத்தும் உத்தியாகும்.

சிற்றின்ப வழியில் பேரின்பத்தைப் புலப்படுத்தியுள்ளார் சிவப்பிரகாசர். தன்னொடு தன்னைச் சார்ந்தோரும் சேர்ந்தே வருத்தம் தெரிவிக்கும் போது மகிழ்ந்து அருளுவர் மாற்றார் என்பது பொருள் என்றாலும் தன்னொடு தன் பொறிபுலன்கள் ஆன்மா, பிற உறுப்பினர்கள் முழுமையாக இறைவனின் பாதகமலங்களைப் பற்றினால் ஆன்ம விடுதலை பெறலாம் என்பதே உணர்த்த வந்த கருத்தாகும். மாதொரு பாகன் விழுந்த.கால் எவருடையது என ஆராய்ந்தால் அவனுடையதே என்பது விளங்கும். நம்மை விழும்படிச் செய்வதற்கே இக்காட்சியை நகையுணர்வுடன் படைத்தார் சிவப்பிரகாசர்.

கற்பனைக் களஞ்சியமான சிவப்பிரகாசர் தாம் பாடிய எல்லா நூல்களிலும் கற்பனையைச் சிறப்புடன் பாடியுள்ளார் என்பதற்குச் சில சான்றுகளைப் பிரபுலிங்க லீலை நூல்வழியே கண்டோம். கற்பனையை வகைப்படுத்தி பொருட்சிறப்பைப் புலப்படுத்தி ஆய்வதற்குப் பிரபுலிங்க லீலை மிகச் சிறப்பான காப்பியம் என்பதனை மேற்கண்ட சில சான்றுகளாலேயே உணரலாம்.

88. சிவப்பிரகாசரும் தர்க்கமும்

கு. மோகனசுந்தர், சின்னசேலம்.

தவத்திரு துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகளார் அவர்கள் தமிழ்நாட்டில் பிறந்து தமிழை நன்றாகக் கற்ற பேரறிஞர் ஆவார். தமிழைத் தாம் கற்றதோடு அல்லாமல் தமிழை நன்கு வளர்த்த பெருமையையும் பெற்றவர்.

''சவிகொள் சங்கத் தமிழ்க்குழவிக்கு ஒரு செவிலி என்ற சிவப்பிரகாசனே''[1] என்று சிவப்பிரகாசரைப் பற்றிச் சதமணிமாலை பாயிரம் சிறப்பிக்கின்றது. இவர் தாம் பிறந்த நாட்டுக்கு உரிய தமிழ் மொழியே அன்றி, சமய மொழியாகிய கன்னடத்தையும், தெலுங்கு மொழியையும், வடமொழியையும் நன்கு கற்றவராவர். கன்னட மொழியில் சாமரசன் என்பான் இயற்றிய பிரபுலிங்க லீலையை தமிழ்மொழியில் அழகான மொழிபெயர்ப்புக் காப்பியமாகச் செய்துள்ளார். இதன் சிறப்பைக் கன்னட நாட்டுப் புலவர்களே பாராட்டுகின்றனர்.

தெலுங்கு மொழியில் சோமநாத ஆராத்திரியர் செய்த சரண ஸ்தோத்திரம் என்ற அடியார்களைப் பற்றிய நூலை இவர் நன்றாகப் படித்துள்ளார். இதனை, ''சோமநாதன் துதியுள் ஒரு சரணர்''[2] என்று பிரபுலிங்க லீலை நூலில் குறிப்பிடுவதால் தெரிந்து கொள்ளலாம்.

சித்தாந்த சிகாமணி, சதரத்ன சங்கிரகம் என்கின்ற சதமணிமாலை இவற்றை எல்லாம் வடமொழியில் இருந்து தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

வேதாந்த சூடாமணி என்கின்ற அவர் செய்த நூல், கன்னட மொழியில் நிஜகுணயோகி செய்த விவேக சிந்தாமணியில் உள்ள வேதாந்த கருத்துக்களின் மொழிபெயர்ப்பாகும்.

வடமொழியில் உள்ள தர்க்கபரிபாஷை என்கின்ற நூலை தமிழில் உரைநடையில் மொழி பெயர்த்துள்ளார். இதனால் இவர் செய்யுள் நடையே அன்றி உரைநடை நூல் இயற்றுவதிலும் வல்லவர் என்பது புலனாகிறது.

இப்படி பல வகை புலமைகளில் சிறந்த சிவப்பிரகாசர் அவர்தம் தமிழ் இலக்கியத்தில் தர்க்க நூல் கருத்துக்களை எங்கெங்கே எவ்வாறு அமைத்துள்ளார் என்பதை ஆராய்ந்து எழுதுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சிவப்பிரகாசர் தர்க்கநூல் கருத்துக்களை எடுத்தாண்ட சில இடங்கள்

1. தர்க்க பரிபாஷை என்ற தர்க்க நூலில் மனத்தைப் பற்றி, பிரமேயத்தில் அருத்தம் என்ற தலைப்பில் மனம் என்ற உள்தலைப்பில் எழுதியுள்ளார்.

''மனத்துவ சாமாநியமுடையது மனம். (அது அணுபரிமாணம் உடையது. ஆத்மசையோகி, அக இந்தரியம்)'' என்று மனத்தைப் பற்றி எழுதியுள்ளார். மேற்கண்டவற்றால் மனம் அணுபரிமாணம் உடையது என்பது புலனாகிறது.

மனத்தை அணு என்று சொல்லுதல் தர்க்க நூலாருடைய கருத்து. ஏனைய சமயவாதிகள் அப்படிச் சொல்லுவதில்லை. இக்கருத்தை எடுத்துக்கூறி அதனை மறுக்கவும் செய்கின்றார் சிவப்பிரகாசர். அது எங்கே? எப்படி என்று பார்ப்போம்.

பிரபுலிங்க லீலையில் மாயை உற்பத்தி கதியில் மாயைக்குத் தந்தையாகிய மமகாரன் என்னும் அரசன் தன் குழந்தைக்கு பெயரிடும் சடங்கை செய்த பொழுது, இந்த நிகழ்ச்சியைக் கூற வந்த சிவப்பிரகாசர்,

"காந்தம் வலியும் இரும்புபோல் கண்கள் தன்னோடு உறப்பிணித்து
நேர்ந்த மனமோர்அணு வென்னல் நியாயம் அன்றென்று அம்மனத்தில்
போந்த ஆசைப்பெருங் கடலைப் புகட்டு மகளைக்கண்டு உவந்து
வேந்தன் மாயையெனும் நாமம் விளம்பிச் சிறப்புப் பல செய்தான்"[3]

என்ற பாடலில் பாடியுள்ளார்.

அரசன் தன் மனைவியாகிய மோகினியிடத்துப் பிறந்த பெண் குழந்தையை முதன் முதலில் பார்க்கின்றான். கண்டவுடன் அக் குழந்தையைக் காந்தம் இழுக்கும் இரும்பைப்போல் தன்னுடைய கையால் தூக்கி கண்ணோடு வைத்து அணைத்துக் கொண்டான். அக் குழந்தை ஆசையாகிய பெருங்கடலை அரசனுடைய மனத்திற்குள் (நுழைவிப்பதாய்) புகட்டுவதாய் இருந்தது.

இந்த நிகழ்ச்சியைச் சிவப்பிரகாசர் சொல்லும்பொழுது மனத்தை தர்க்க நூலார் அணுத்தன்மை உடையது என்று சொல்லுகின்றார்களே? மனம் அணுவானால் ஆசையாகிய பெருங்கடலை அணு வடிவமான மனத்திற்குள் எப்படி புகட்ட முடியும்? என்று கேள்வியை எழுப்பிக் கொண்டு, ''ஆசைக் கடலைப் புகட்டுவதற்கு உரிய இடமாக மனம் இருத்தலால் அம்மனம் அணுப்பரிமாணம் உடையதன்று என்று கூறி மறுக்கின்றார்.

(குழந்தை ஆசையாகிய பெருங்கடலை தந்தையாகிய அரசனுடைய மனத்திற்குள் புகட்டுவதாய் இருப்பதால் மனம் அணுபரிமாணமுடையது அன்று என்று சிவப்பிரகாசர் கூறி மறுக்கின்றார்.)

இவ் அணுவைக் குறித்து சிவஞான பாலைய தேசிகர் கலம்பகத்தில் சம்பிரதம் என்ற தலைப்பில் வரும்

''..........தருக்கர் கூறும்
ஐந்தணுவில் ஓரணுவுள் அண்டம் உண்ட
அம்புகொளும் சம்புவைநாம் அடக்குவோமே''[4]

என்ற பாடலாலும் அறியலாம்.

தருக்கநூலார் கூறும் நிலம் முதலான ஐந்தணுவால் உலகத்தை உண்ட திருமாலாகிய அம்பினை உடைய சிவபெருமானை அடக்கி விடுவோம் என்று கூறுவதை ஒப்புநோக்குக.

2. தர்க்க நூலில் பிரமாணம் என்ற தலைப்பில் அநுமானபிரமாணமும், அர்த்தாபத்தி பிரமாணமும் சொல்லப்பட்டுள்ளன.

அநுமானப்பிரமாணம்

''அனுமானப் பிரமாணமாவது காரியத்தால் காரணத்தைத் துணிதல். புகை உண்மையால் நெருப்பாகிய காரணம் உண்டு என்று துணிதலாம்''.

இது தன்பொருட்டு அனுமானம் என்றும், பிறர்பொருட்டு அனுமானம் என்றும் இரண்டு வகைப்படும். காரியத்தால் காரணம் உண்டு என்று தான் துணிந்து கொண்டால் அது தன்பொருட்டு அனுமானமாகும்.

தான் துணிந்து கொண்ட அதனை பிறர்க்கு எடுத்துக் கூறினால் அது பிறர்பொருட்டு அனுமானம் ஆகும். அவ்வாறு எடுத்துக்கூறும் போது, 5 உறுப்புகள் அமைந்த சொல்லால் சொல்ல வேண்டும் என்டார். அவ்வைந்து உறுப்புகளாவன:

1. பிரதிஞ்ஞை (அ) மேற்கோள்
2. ஏது
3. திருஷ்டாந்தம் (அ) உதாகரணம்
4. உபநயம்
5. நிகமனம் (அ) முடிவுரை

1. பிரதிஞ்ஞை

இம்மலை தீயுடைத்து

2. ஏது

புகை உண்மையால்

3. திருஷ்டாந்தம்

அடுக்களைப் போல (சமையல் வீடு)

4. உபநயம்

யாது யாது புகை உடைத்து? அது அது தீ உடைத்து.

5. நிகமனம்

இதுவும் அங்ஙனம்

அர்த்தாபத்தி பிரமாணமாவது

இதனைப் பொருள்பேறு என்பர். ஒருவன் சொல்லுகின்ற பொருளாலோ (அல்லது) காண்கின்ற பொருளாலோ மற்றொரு பொருள் தோன்றுவது அர்த்தாபத்தி பிரமாணமாகும்.

பிரபுலிங்க லீலையில் பிரபுதேவர் வந்த கதியில் பிரபுதேவரை மாயைக் கண்டு மயங்கியச் செய்தியைக் கூறும் பாடலில் இரண்டு பிரமாணங்களையும் சிவப்பிரகாசர் எடுத்தாளுகின்றார். எவ்வாறு எடுத்தாளுகின்றார் என்பதைக் கலாவிலாசி என்ற தோழியின் கூற்றாக வரும் கீழ்வரும் பாடலில் காண்போம்.

> "மாயை இடையை உள்ள். முலையாள் மற்றை மாதர்போல் என்று
> தூய மதிஞர் அனுமிதித்துச் சொல்லும் மருங்குல் தோகை தான்
> வாயில் இளவெண்நகைதோன்ற வாளா இருப்பக் கண்டு மயல்
> ஆயின் உடையள் எனமாதர் அறிந்தார் அருத்தா பத்தியினால்" [5]

மாயை பிரபுதேவரைக் கண்டு மயங்கி நின்றாள். இந்நிலையில் தோழியர்கள் மாயையைக் காண்கின்றார்கள். இவள் மயங்கி இருப்பதற்கு காரணம் என்ன என்பதை ஆராய்கின்றார்கள். அத்தோழியருள் ஒருத்தி யாகிய கலாவிலாசி இவளுடைய உள்ளம் அழிந்ததற்கு காரணம் யாது என நான் ஏன் மறைக்கவேண்டும்? காரணத்தைச் சொல்கிறேன். பிரபு தேவருடைய அழகு என்னும் மதுவை உண்டு மாயை உளம் மயங்கி விட்டாள் என மாயைக்கு முன் உரைக்கின்றாள். இதனைக் கேட்டு மாயை சினம் கொள்ளவில்லை. அதற்கு மாறாக சம்மதப்பட்டு புன்சிரிப்பு சிரித்துக்கொண்டு முகம் கவிழ்ந்திருந்துவிட்டாள். இந்நிலையினைக் கூறிய பின் எழுந்தது இப்பாட்டு.

இப்பாட்டில் சிவப்பிரகாசர் அனுமானபிரமாணம், அர்த்தாபத்தி பிரமாணம் என்னும் இரண்டு பிரமாணங்களையும் எடுத்தாள்கின்றார். முன்னே மாயையின் உருவ வர்ணனையால் அநுமான பிரமாணத்தையும்,

அவளுடைய உள்ளக் கருத்தை அறிவதற்கு அர்த்தாபத்தி பிரமாணத்தையும் எடுத்து ஆளுகின்றார்.

''மாயையினுடைய இடை உண்டோ இல்லையோ என்று ஐயப் படுகின்ற அளவிலான நுண்ணிய தன்மை உடையதாய் உள்ளது. அதை உண்டு என்று துணிவதனால் காண்டல் அளவையால் அறிய முடியாது. அனுமான பிரமாணத்தால்தான் ஆய்ந்து துணிய வேண்டும். மேலே நகில் என்னும் முலை விளங்குவதால் அதை தாங்குவதற்கு ஆதாரமான இடை கண்ணுக்கு தோன்றாவிட்டாலும் இருக்கவேண்டும் என்ற செய்தி அனுமானபிரமாணத்தால் அறியப்படுகின்றது.

எனவேதான் இப்பாடலில் மாயை இடையை உளள் என்பது பிரதிஞ்ஞை (அ) மேற்கோள் என்னும் உறுப்பு ஆகும். முலையாள் என்பது ஏது என்னும் உறுப்பாகும். மற்றை மாதர்போல் என்பது திருஷ்டாந்தம் என்னும் உறுப்பாகும். மற்ற இரண்டு உறுப்புகளைச் சொல்லாவிட்டாலும் அதை அறிஞர் வருணித்துக் கொள்ளவேண்டும். எனவே மாயையினுடைய இடை அனுமான பிரமாணத்தால் அறியத் தக்கதாய் உள்ளது.

பிரபு தேவரைக் கண்ட சமயத்தில் மாயையின் உள்ளத்தில் ஏற்பட்ட காமக் கருத்து அர்த்தாபத்தி பிரமாணத்தால் அறியக்கூடியதாய் உள்ளது என்பதை மேற்கண்ட பாடலின் பிற்பகுதி கூறுகின்றது.

பிரபுதேவரைக் கண்டு மாயை உள்ளம் அழிந்தாள். அவளுடைய உள்ளம் அழிவதற்கு காரணம் என்ன என்பதை அறிய தோழியர் முற்பட்டனர் தோழியருள் ஒருத்தியாகிய கலவிலாசி இனியான் மறைப்பது என்கொள்? இன்று வந்த அல்லமனின் அழகை உண்டு உள்ளம் அழிந்தாள் என்று கூற, அதனைக் கேட்ட மாயை முனியாமல் சம்மதப்பட்டு புன்சிரிப்பு சிரித்துக் கொண்டு, முகம் கவிழ்ந்திருந்தாள். இந்த நிலையைப் பார்த்த தோழியர்கள் எல்லாம் மாயையின் உள்ளக் கருத்தை அர்த்தாபத்தி பிரமாணத்தால் தெரிந்து கொண்டார்கள்.

மாயைக்குச் சம்மதம் இல்லையானால் இது கேட்டு முனிவாள். அவ்வாறு முனியாமல் ஏற்றுக் கொண்டதனால் முனியாமல் இருந்த நிலையைக் கண்டு மாயையின் உள்ளக் கருத்தைத் தெரிந்து கொண்டார்கள்.

எனவே அனுமான பிரமாணத்தால் ஆராய்ந்து அறியத்தக்க இடையை உடைய மாயையின் உள்ளக் கருத்து அர்த்தாபத்தி பிரமாணத்தால் அறியத்தக்கதாய் உள்ளது.

3. தர்க்க நூலில் திரவியம் என்ற தலைப்பில் நிலம் முதலான பூதங்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் தேயுவாகிய நெருப்பைக் கூறும் போது அது வெள்ளை ரூபம் உடையது என்று கூறப்படுகின்றது.

''மாயை அல்லமனை விரும்பிக் காமத்தால் துன்பப்படுகின்றாள். அப்போது சந்திரனைப் பார்த்து பழித்துக் கூறுகின்ற பகுதி பிரபுலிங்க லீலையில் பிரபுதேவர் வந்த கதியில்

உருப்பமிகு வன்றழல் சிவப்புற்று உலகர்காண ஓலிதரவு
நெருப்பு வெண்மையென்பது நல்நியாயர் நின்னைக் குறித்தன்றோ
பொருப்பு நறுஞ்சந்தனச்சேறு புலர்ந்து பொறியப் பூவணையும்
விரும்பமலரும் கொளுந்த அழல் வீசியெழுந்த வேண்டிங்காள்.[6]

என்றவாறு குறிப்பிடப்பட்டுள்ளது''.

நெருப்பு சிவந்த தழலை உடையதாகிய சிவந்த சுவாலை வீசக் கூடியதாய் இருப்பதை பலரும் பார்க்கின்றார்கள். எனவே நெருப்பின் நிறம் சிவப்பு என்றே உலக மக்கள் அறிகின்றார்கள். ஆனால் தர்க்க நூலார் நெருப்பு வெள்ளை நிறம் உடையது என்று கூறுகின்றனர்.

இந்நிகழ்ச்சியைக் கூறும் சிவப்பிரகாசர் மாயை அணிந்த சந்தனக் குழம்புப் பொழியவும், மலர் மாலை கருகும்படியும் சந்திரன் நிலவை வீசி வருத்துகின்றான். இந்நிலையில் சந்திரனை நோக்கி மாயை, ''நெருப்பை வெள்ளை நிறமுடையது என்று தர்க்கநூலார் கூறுகின்றனர். ஆனால் உலகத்தில் காணப்படும் நெருப்பு சிகப்பாகத்தான் உள்ளது. என்னை சுட்டு வருத்துகின்ற திங்களாகிய நீதான் வெள்ளையாக இருக்கின்றாய். என்னைச் சுடுகின்ற திங்களாகிய உன்னைக் கருதித்தான் தர்க்க நூலார் நெருப்பு வெள்ளை என்று கூறுகின்றார்கள் போலும்'' என சுவை தோன்ற வர்ணிக்கின்றார்.

இவைப்போன்று பல இடங்களில் தர்க்கநூல் கருத்துக்களை தன்னுடைய இலக்கியங்களில் சிவப்பிரகாசர் எடுத்தாண்டு உள்ளார்.

குறிப்பு

எனது ஆசிரியரும் குருவும் ஆகிய குகையூர். பேராசிரியர் திரு. அடிகளாசிரியர் அவர்கள் இவ் ஆய்வுக் கட்டுரை எழுதுவதற்கு உதவி செய்தார்கள். ஆதலால் அவர்கட்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

அடிக்குறிப்புகள்

1. சிவப்பிரகாசர், சதமணிமாலை - பாயிரப்பகுதி.
2. சிவப்பிரகாசரின் பிரபுலிங்க லீலை - துதிகதி - பாடல் 10.
3. சிவப்பிரகாசரின் பிரபுலிங்க லீலை, மாயை உற்பத்திக்கதி பாடல் - 45
4. சிவஞான பாலைய தேசிகர் கலம்பகம் - 83-ஆம் பாடல்.
5. சிவப்பிரகாசரின் பிரபுலிங்க லீலை, பிரபுதேவர் வந்த கதி - பாடல் 37.
6. சிவப்பிரகாசரின் மேலது, பாடல் - 60.

89. பிரபுலிங்க லீலையும், சித்த மருத்துவமும்

ச. ரங்கராசன், தஞ்சாவூர்.

சுழன்றடித்த ''அத்துவைதச் சூறாவளியில், காபாலிகம், காளாமுகம், பைரவம் போன்ற அகச் சமயப் பிரிவுகள் மறைந்து, ''சண்மதம்'' என்ற ஓர் புதியதோர் பிரிவு தோன்றியது. மறைந்துவிட்ட சமயப் பிரிவுகளின் காலியிடத்தை நிரப்ப, வீர சைவம் என்ற ஓர் அமைப்பு கன்னட நாட்டில் தோன்றியது. இச்சமயத்தைப் பின்பற்றியவர்கள் வீரசைவர்கள் என்ற இலிங்காயத்தினர். தமிழகத்திலும் இப்பிரிவுக்கான திருமடங்களும் துறவிகளும் உள். துறைமங்கலம் சிவப்பிரகாசர் வீரசைவப் பிரிவினர் ஆவர். இவர் இயற்றிய காப்பியமான பிரபுலிங்க லீலையில் பல்வேறு சித்த மருத்துவம் தொடர்பான கருத்துக்கள் மிளிர்கின்றன. சித்தர்களைப் பற்றி ''கைலாயகதியில்'' வருகின்றது. பாடல் ''உரகர் சித்தர்கள் வித்தியாதரர் சுரர் உயர் கிம்புருடர்' ஆகியோர் உடல் நெருங்க விழி பிதுங்கக் காண வந்தார்கள். கலையை மதிக்கும் புலவர்தமைச் சித்தர் குழாத்தைக் கடவுளரை'' என்று சித்தர்களைப் பற்றிக் கூறப்படுகின்றது. தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு இந்நூல் இயற்றப்பட்டுள்ளது. தலைவி யாகவும், ஆணவம், கன்மம், மாயை என்பதில் மாயை என்பது தலைவி யாகப் படைக்கப்பட்டுள்ளது. மாயைக்கு மயங்காத பெருமகனாக அல்லமதேவரையும் அவரது அரிய ஆற்றலையும் இந்நூலில் காண முடிகின்றது. நோய்களுக்கு அடிப்படையானது முக்குற்றங்கள், ஆணவம், கன்மம், மாயை என்பன முப்பெரும் தத்துவங்கள், வாதம் பித்தம் கபம் என்பன உடற்குற்றங்கள் இவை மிகினும் குறையினும் நோய் செய்யும் இவற்றையெல்லாம் வென்றோர் சித்தர்கள் ஆவர் அல்லமதேவரின் ஆற்றல்கள் அவரை ஓர் சித்தராகவே காட்டுகின்றன.

மருத்துவக் கருத்துகள்

உடல் வெளுத்தல், நரம்பு பசந்து உடல் முழுவதும் பரவுதல், மார்பு காம்புக் கறுத்தல் ஆகிய குறிகள் மகப்பேறு அடைந்ததின் அறிகுறிகளாகக் காட்டப்படுகின்றன. தாயினுடைய சத்துக்கள் யாவும் கருவுக்குச் செல்லுவதால் இரத்தச்சோகை நோயானது ஏற்படும் வாய்ப்புண்டு. பொதுவாகவே மகப்பேறு காலத்தில் பெண்கள் வெண்மை நிறத்தையும் சத்துக்கள் இழப்பால் அடைவார்கள். இதனையே ''மெய்த்திருமேனி விளர்த்து'' என்ற அடிகளால் சுட்டுகின்றார். பாலுக்காக மார்பகங்கள்

பெருத்து இருக்கும். இதுவும் மகப்பேற்றின் இயல்பாகும். இக்கருத்துக்களை மருத்துவத் தொடர்பு இல்லாத பிரபுலிங்க லீலையில் சுவாமிகள் கூறி யிருப்பது மிகவும் வியப்பானதாகும். இதுபோலவே மக்கட்பேறு பற்றியும் கூறப்படுகின்றது. அறிவுடன் செயல்படாத செயல், மக்கள் இல்லாத வாழ்வுடன் ஒப்பிடப்படுகின்றது. மக்களில்லாத வாழ்வு பயனற்றது என்பதை வலியுறுத்துகின்றார். இதை நந்திதேவரின் கதி என்னும் பிரிவில் சிவப்பிரகாசர் காட்டுகின்றார்.

இதுபோலவே வேறோரிடத்திலும் மருத்துவம் பற்றிய செய்தி கூறப்படுகின்றது. ''கன்னல் மதவேள் எய்த, பசும் புண்ணின் மருந்தாக்களிப் புற்றான். இனிப்பான சாற்றைக் கொண்ட கரும்பை வில்லாக உடைய காமன், மலரம்பைத் தொடுக்கின்றான். இவ்வம்பு பட்டு, பச்சைப்புண் ஏற்படுகிறது. இப்புண்ணினால் ஏற்படும் வலியானது நீக்கும் மருந்தால் இன்பம் பெறுகின்றான். இங்கு பசிய புண்ணாற்றும் மருந்து பற்றி வருதல் காண்க. கோரக்க சித்தரின் கதி என்னும் பிரிவில் ஒளிமரம் பற்றிக் கூறப் படுகின்றது. சோதி விருட்சம் எனப்படும் ஒளிமரம் சித்தர் இலக்கியங்களில் மிகவும் அரியவகை மரமாகக் காட்டப்படுகின்றது. இம்மரத்தின் பாலால் ''இரசம் கெட்டியாகும் என்று போகர் நிகண்டு 1200-இல் பேசப்படுகின்றது. இத்தகைய அரிய மரவகையைப் பற்றிய செய்தியை சுவாமிகள் தருவது மிகவும் மகிழ்ச்சியை அளிக்கின்றது. இவ்வரிய மரம் பற்றிய குறிப்புகள் பல தமிழிலக்கியங்களிலும் வருகின்றன. திருப்பர்ப்பத மலையில் (ஸ்ரீ சைலம்) இம்மரம் உள்ளதாகக் குறிப்பிடுவதன் மூலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் உள்ளதை ஆவணப்படுத்தி அதன் மூலம் தாவரம் மற்றும் மருத்துவ ஆய்வாளர்களுக்கு உதவுகின்றார். இன்று இம்மரம் மலையில் உள்ளதா? என்பதை ஆய்வாளர்கள் கண்டறிதல் வேண்டும்.

சித்தர்களின் வரலாறு இன்றும் தெளிவாக ஆவணப்படுத்தப்பட்டு எழுதப்படவில்லை. பிரபுலிங்க லீலையில் ''கோரக்கர்'' பற்றிய வரலாறு உள்ளது. பிரபுலிங்க லீலையின் காலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டாகும். ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்கு முன்னர் கோரக்கர் திருப்பருவதம் என்னும் ஓங்கலில் வாழ்ந்தவர் என்னும் செய்தியானது அறியலாம். கோரக்கர் 18 சித்தர்களில் ஒருவர், கோரக்கர் மூலி என்ற கஞ்சாவை மயக்க மூட்டியாக மருந்துக்குப் பயன்படுத்தியவர். கோரக்கர் கற்ப சூத்திரம் 31, கோரக்கர் குரு செயறின் 10, கோரக்கர் போகர் 700, கோரக்கர் மலை வாகடம், கோரக்கர் லகார சூத்திரம் 100 என்பன அச்சான நூல்கள். ஆயின் கோரக்கர் என்ற பெயரில் பலர் இருத்தல் கூடும். இதில் சிவப்பிரகாசர் காலத்தைய கோரக்கரின் வரலாற்றை ஆய்வு செய்தல் வேண்டும்.

''அத்தநேர் வருதல் கண்ணுற்றப்
பெருஞ்சித்தன் தன்னோடு
ஒத்த ஓர் சித்தனாக''

என்று கோரக்கரைச் சிவப்பிரகாசர் வர்ணித்து பெருஞ்சித்தன் என்ற அடைமொழியையும் அளிக்கின்றார். காயகற்பம் என்னும் சாகாக் கலையைக் கற்றுணர்ந்தவர், இக்கலையை ஒத்துக் கொள்ளாத அல்லம தேவர் இவரை நல்வழிப்படுத்துவதாக காப்பியத்தில் வருகின்றது. இரசவாதம், காயகற்பம், சரப்பயிற்சி என்பன சித்த மருத்துவத்தின் பிரிவுகளாகும். இவ்வழிகளைக் கடைப்பிடித்தவர்கள் சித்தர்கள் ''ஆதிநாதன் அருளினால் குளிகையாதிகளான்'' என்று காயகற்பக் குளிகை பற்றியும் கூறப்படுகின்றது. பல்வேறு வகையான குளிகைகளைப் பற்றி சித்தர் நூல்களில் வருகின்றது. இக்குளிகைகள் பற்றிய விபரங்கள் எதுவும் இன்று இல்லை. இக்குளிகைகளால் நீண்ட காலம் உயிர் வாழ்தல் இயலும் என்ற நிலை நெடுங்காலமாகவே நிலை பெற்றிருந்தது. கோரக்கரின் வரலாற்றை ஆய்வு செய்யும் ஆய்வாளர்களுக்கு இந்நூல் ஓர் கருவியாக அமையும். காயகற்பமுண்டாரின் கூற்றாக ''ஏதுஎவில்லினும் என்னுடல் அழிவுறாதென்று'' சுவாமிகள் காட்டுவார். ஈயின் சிறகளவு தோல் அறுபட்டாலும் சித்தனல்லன் என்று வெஞ்சினம் கூறுகின்றார். எனவே, உயிர்களாலும், ஆயுதங்களாலும் எவ்விதமான ஊறும், காயகற்ப முண்டாருக்கு ஏற்படுவதில்லை என அறியுமாறு, இந்நூல் உரைக் கின்றது. காயகற்பம் உண்டதன் பயன்களை ''போகர் கற்பம்'' ''சட்ட முனிகற்பம், ''திருமூலர் கற்பம்'' போன்ற சித்த மருத்துவ நூல்களில் பரக்கக் காணலாம்.

பிரபுலிங்க லீலை என்னும் காப்பியத்தின்கண், மருத்துவக் கருத்துக்கள் பொதிந்துள்ளன. கோரக்கச் சித்தர் பற்றி ஆய்வு செய்வோர் இந்நூலை அணுகுதல் வேண்டும். பருப்பதமலையில் ஒளிமரம் உள்ளது எனவும், இக்காப்பியத்தில் காட்டப்படுகின்றது. சித்த மருத்துவம் பற்றிய ஆய்வாளர்களுக்கு ஏற்ற களமாக இந்நூல் விளங்குகின்றது.

90. திருநாமம் சொல்லும் பேறு

தி. ரமா, காரைக்குடி

'திருநாமம் ஓதுக'

சிவ வழிபாட்டில் சிவநாமத்தைச் செப்புவது செய்யத்தக்கது. சிவனடியார், சிவநாமத்தைச் சொல்லிச் சொல்லி இன்பம் எய்துவர். மனம் சோரும் போதெல்லாம் சிவநாமத்தைச் செப்பின் எல்லாப் பேறும் இனிது வாய்க்கும். தோன்றும் இடர் எல்லாம் பகலவனைக் கண்ட பனியாகப் பறந்துவிடும். வாழ்க்கைத் துயரை வெல்லக் கடவுளின் பெயரே கை கொடுத்துக் காப்பாற்றும். அப்பர் பெருமான் ஞாலத் துயரை வெல்லப் 'படைக்கலமாக உன் நாமத்தெழுத்தஞ்சும்என் நாவிற் கொண்டேன்' (10:8) என்றுரைக்கிறார். அவர் சிவபெருமான் பெயரைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே என்பர். இதனைப்

''பெரியானைப் பெரும் பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே'' (11:1)

என்று கோயில் பதிகத்தில் பாடுகிறார். இவர் சிவன் திருப்பெயரை ஓதுதற்காகவே சிவபெருமான் மக்களுக்கு வாயினை அளிந்திருக்கிறான் என்பர். ''வாயினை வாழ்த்த வைத்தார்'' (23:3) என்பது திருக்கழிப் பாலைத் திருப்பதிகப் பாடலடி. இவ்வாறு சிவநாமத்தை இடைவிடாது சொல்லவேண்டும் என்பது ஆன்றோர்கள் காட்டிய வழியாகும்.

முழக்க ஒலி

சிவனடியார் நெறிவந்த சிவப்பிரகாசரும் மக்கள் சிவ சிவ என்னும் திருநாமத்தைச் சொல்லவேண்டும் என்று வலியுறுத்துகிறார். பலரும் ஒன்றுகூடி ஒரு செயலில் ஈடுபடும்போது ஒற்றுமையாகச் செயல்படுதற்கும் முழக்கம் இடுதற்கும் சிவ சொற்கள் தேவைப்படுகின்றன. வைணவர்கள் 'கோவிந்தா' என்றும் 'இராமா' என்றும் முழங்கி ஒன்று படுவர். சைவர்கள் 'அரகர' என்றும் 'சிவ சிவ' என்றும் முழக்கமிடுவர். இத்தகைய முழக்கம் அடியார்களை உணர்ச்சிப்படுத்தும்; கூட்டத்தினர் அனைவருக்கும் ஒரு மனத்தை உண்டாக்கும்.

அனைவரும் ஒன்றாக வழிபாட்டில் ஈடுபடுதற்கு இத்தகைய ஆகுல ஒலிகள் - தேவைப்படுகின்றன.

நாமத்தை மறக்காதே

ஆழ்வார்களும் நாயன்மார்களும் இறைவன் திருநாமத்தைச் சொல்லிப் பேறு பெறுகின்றனர். இந்த மரபை ஒட்டித் திருமந்திரம், தேவாரம், திருவாசகம், திவ்வியப் பிரபந்தம் பாடிய ஆன்றோர்கள் மக்களைத் தெய்வப் பெயரைச் சொல்லுங்கள் என்று வலியுறுத்துகின்றனர். தேவார ஆசிரியர் 'நமச்சிவாய' என்னும் மந்திரத்தை நான் மறந்தாலும் என் நாக்கு மறக்காது என்கிறார். அடியார்களுக்குத் தெய்வப் பெயரைச் சொல்லுவது மனத்துக்கு அமைதி தரும், நினைத்ததை எல்லாம் நிறை வேற்றும்; திருநாவுக்கரசர் 'முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்' என்பர். அதனைத் தொடர்ந்து அவர் திருப்பெயரைக் கேட்பதன் பயனை அவர் விளக்குகிறார். அகப்பொருளில் 'உறுபெயர் கேட்டல் என்பது இந்த உண்மையை விளக்கும்.

நூலும் யாப்பும்

துறைமங்கலம் சிவப்பிரகாசர் கற்பனைக் களஞ்சியம் என்று போற்றப்பெறும் பாவலர் ஆவார்; இவர் பத்துப் பத்துப் பாடல்களான பல சிறு நூல்களை ஆக்கியிருக்கிறார். அவருடைய பல சிறு நூல்கள் ஒன்றாகத் தொகுக்கப்பட்டுக் கி.பி. 1904-இல் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவரியற்றிய சிவநாம மகிமை என்ற பதிகம், பத்துக் கலி விருத்தங்களால் ஆகியது. இப்பதிகத்திற்குப் பயன் சொல்லுவதாக ஆறு சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் ஒன்று இறுதியில் காணப்படுகிறது. இந்தப் பத்துப் பாட்டுகளும், சிவநாமம் சொல்லுதலை வலியுறுத்துகின்றன.

அடியார்கள் மனத்தை ஒருமைப்படுத்தி ஏதேனும் ஒரு சொல்லை உணர்ந்து ஆழ்நிலை தியானத்தில் ஈடுபடவேண்டும். தமிழ் மக்கள் ஆழ்நிலை தியான வழிபாட்டுக்காகச் சிவ சிவ என்னும் சொல்லைத் தேர்ந்தெடுத்திருக்கின்றனர். இந்தப் பதிகம் பொது நிலையிலே ஒவ்வொரு வரும் சிவ மந்திரத்தைச் சொல்லுக என்று அறிவிக்கின்றது.

யாரும் சொல்லத்தக்க மந்திரம்

ஒவ்வொருவரும் சிவ சிவ என்ற மந்திரத்தை எளிமையாகச் சொல்ல முடியும். இதனைச் சொல்லுவதற்கு ஆழந்த பயிற்சியோ, அறிவுத்திறனோ வேறு நியமங்களோ தேவை இல்லை. வேதம், ஆகமம் போன்ற நூல்களை ஓதி இறைவனை அடையலாம்; ஆனால் அவற்றை ஓதினால் அந்த வேத வாக்கியத்தின் பொருள் என்ன அதுவா? இதுவா? என்று உள்ளம் தடுமாறும். அடியார் தெளிவு பெறுவதற்கு ஓதும் வேதாகமம் மனத்தைச் சஞ்சலப்படுத்தும். ஆனால் சிவ சிவ என்ற மந்திரம் அத்தகைய சிக்கலை மனத்தில் எழுப்பாது. அந்த மந்திரம் மனத்து இருளை எல்லாம் போக்கிவிடும் அதனால் ஒவ்வொருவரும் சிவ சிவ என்று சொல்ல வேண்டும்.

''வேத மாகமம் வேறும் பலப்பல
வோதி நாளு முளந்தடு மாறன்மின்
சோதி காணிருள் போலத் தொலைந்திடுந்
தீதெ லாமுஞ் சிவசிவ வென்மினே'' (1)

இப்பாட்டு எளிய சொற்களால் தெளிவான கருத்துடன் அமைந்திருக்கிறது; அடியார் மனத்தைத் தடுமாற விடக்கூடாது என்று வலியுறுத்துகிறது. 'எல்லாத் தீமையும் ஒளி தோன்ற ஓடிவிடும்' என்று கூறுகிறது.

வேதம் ஓத வேண்டுமானால் அவன் சோதியனாக இருக்க வேண்டும். புல்லரானாலும் போதகரானாலும் தீமை அனைத்தும் 'சிவ சிவ' என்றிட மறையும். ஐம்புலன்களால் வருகின்ற தீமைகள் அனைத்தும் சிவ சிவ என்று சொல்லப் போய்விடும். இவ்வாறு முதல் நான்கு பாடல்களில் என்ன என்ன வகையான தீமைகள் சிவ சிவ என்று சொல்லிட அழியும் என்று சிவப்பிரகாசர் உணர்த்துகிறார்.

அம்மை அப்பர்

இதில் உள்ள ஐந்தாவது பாசுரத்தில் சிவபெருமானைச் சிவப்பிரகாசர் மாதொரு பாகனாகக் காண்கிறார். அப்பெருமானைக் கண்டால் கல்வி செல்வம் ஆகிய கிட்டும். 'சிவ சிவ என்பது அம்மையப்பனாகிய சிவனையே குறிப்பதாகும். 'சிவ சிவ' என்று சொல்லுக என்று சொல்லி வந்தவர், இப்பாடலில் அவன் திருவடியைக் காணுக என்று குறிக்கிறார். சிவ சிவ என்றால் சிவன் தோன்றுவான் என்று கொள்ளவேண்டும்.

''வில்லி தென்ன விளங்குந் திருநுதல்
வல்லி பங்கன் மலரடி காணிய
கல்வி நல்குங் கருத்து மகிழ்வுறுஞ்
செல்வ நல்குஞ் சிவ சிவ வென்மினே'' (5)

சிவன் பயிர்க்காப்பாளர்

சிவப்பிரகாசர் தீமை தரும் நாண்மீன், ஒன்பது கோள்கள் இவற்றால் வருகின்ற தீமைகள் சிவ சிவ மந்திரத்தைச் சொன்னால் அழியும்; ஆயுள் பல்கும், நலம் வளரும் என்றுரைக்கிறார். சிவநாமம் பேசுவோரை வெண்மதி சூடிய சிவபெருமான் மெய்காப்பாளர் போலக் காப்பாற்றுவான் என்பது துணிவு. சிவன் அடியார்க்குத் தொண்டனாக இருப்பான்; இதனை விளக்கு தற்குச் சிவப்பிரகாசர் உழவியல் உவமையைக் கையாளுகின்றார்.

''வருந்தி யாற்றி வளர்த்த கதிர்த்தலை
பொருந்து வான்பயிர் போற்றுநர் போலவே'' (7:2)

உழவன் வயலிலே மிகவும் கடினப்பட்டுப் பயிரை வளர்த்துக் கண்ணென வளர்ப்பான்; களையெடுப்பான்; பயிர் வாடாது நீர்

பாய்ச்சுவான்; அப்பயிர் கதிர்விட்டதற்குப் பின் அதனை அறுத்து அடிக்கும் வரை அதனைப் பெரும் கவனத்துடன் காப்பான். அதுபோலச் சிவபெருமான் சிவ சிவ என்று சொல்லும் அடியாரைக் காப்பான் என்பது சிவப்பிரகாசர் துணிபு.

பாராட்டுவோரைத் தான் சிவன் கருணை செய்வான் என்பது இல்லை. அவன் பெயரைச் சொல்லி இகழ்வோருக்கும் அடியார்க்கும் இவன் அருள் செய்வான். எவ்வாறாயினும் மனம் ஒன்றிடச் சிவ சிவ என்று நீசர் சொன்னால் அவர்கள் தேவர் ஆவார்; வானுலகத் தேவர் ஆயினும் சிவ சிவ என்று சொல்லவில்லை என்றால் அவர்கள் நீசர்களாய்க் கீழோராய் விடுவர்; இது சிவ சிவ மந்திரத்தின் ஆற்றல்.

கூற்றை வெல்ல

மக்கள் தங்களுக்கு வாழ்நாள் மிகவேண்டும் என்றே விரும்புவர். சிவப்பிரகாசரும் ‘ஆயுள் பல்கும் அறம் வளர்ந்து ஓங்குறும்’ (6:3) என்பர். வாழ்நாள் கூடுதலைச் சிவப்பிரகாசர் வலியுறுத்துவர். ‘சிவ சிவ’ என்று இறைவனை வழிபடுகின்றவர்கள் உயிர் பறிக்கக் கூற்றுவன் அஞ்சுவான்; இது திண்ணம் என்று சிவப்பிரகாசர் ஆணையிடுகிறார். ஆகவே ஒவ்வொருவரும் ‘சிவ சிவ’ என்று சொல்லுதல் வேண்டும். இந்தப் பாடல்களால் சிவ சிவ என்று சொல்லுகின்ற திருநாம மகிமையை ஆசிரியர் வெளிப்படுத்துகிறார். அப்பெயரைச் சொன்னால் இம்மைக்கும் நன்மை; மறுமைக்கும் நன்மை. அவர் சிவநாமத்தின் பெருமையை உணர்ந்து ஓதுவதாலேயே இப்பகுதிக்குச் ‘சிவநாம மகிமை’ என்று பெயரிட்டார்.

அடிப்பொடியாவேன்

இந்தப் பத்துப் பாட்டுகளுக்குப் பின் சிவ நாமத்தைச் சொல்லு கின்றவன் திருவடித்துகள் தன்னுடைய குல தெய்வம் என்று சிவப்பிரகாசர் செப்புகிறார். சிவ சிவ என்னும் பெயரைச் செப்பினாலே எல்லாப் பேறும் எய்தி அவன் மனமாசு மாய்ந்துவிடும். சிவ சிவ என்பது சொல்ல எளியது; எல்லோருக்கும் பயன் தருவது.

சமயக் குரவர் இறைவன் திருப்பெயர்களை சொல்லுக என்று பல்வேறு பெயர்களைச் சொல்லுமாறு மக்களை வலியுறுத்திப் பதிகங்கள் பாடியுள்ளனர். அவர்களைப் பின்பற்றிச் சிவப்பிரகாசர் சிவ சிவ மந்திரத்தைச் செப்பி அம்மந்திரம் எல்லாப் பயனும் தரும் என்றும் ஆயுளைக் கூட்டும் என்றும் மறலியை ஓட்டும் என்றும் சிறப்பித்துக் காட்டுகிறார். ஓர் சமயம் வான ஊர்தி ஒன்று கடத்தப்பட்டது. அவ்வான ஊர்தியில் அமர்ந்திருந்த ஒருவர் இடைவிடாது ‘சிவ சிவ’ மந்திரத்தைச் சொல்லிக் கொண்டு வந்தார். வான ஊர்தியைக் கடத்தி வந்தவர்களின்

தலைவன் ஒரு விமான நிலையத்திற்கு விமானம் போனபோது தன் கூட்டாளிகளை நோக்கி 'இவன் ஏதோ செய்து கொண்டிருக்கிறான். இவனை முதலில் இறக்கி விடுங்கள்' என்று ஆணையிட்டான். அவரும் அவ்வாறே இறக்கி விடப்பட்டார். அவர் உயிர் பிழைத்தது சிவ சிவ என்ற மந்திரத்தாலே யாகும். இத்தகைய ஆற்றலுடையது சிவ சிவ மந்திரம். நாயன்மார்கள் சிவ சிவ மந்திரத்தைச் சொல்லுங்கள் என்று குறிப்பிட்டார்களேயன்றி அவர்களின் திருவடிப்பொடி எங்கள் குலதெய்வம் என்று கூறிலர். சிவப்பிரகாசர் சோண சைல மாலையில்

''கூம்புறு கரமும், மலர்ந்திடு முகமும்
கொண்டு நின்றனை வலம் புரிவோர்
மேம்படு சரண மலர்ப்பொடி மேனி
மேல்படில் பவம்பொடி படுமே'' (சோ: 58:1-2)

என்பர். குலதெய்வம் என்று பாடியது, சோண சைல மாலை பாடிய பின்னராகும். திருவண்ணாமலையின் தனிச்சிறப்பை உணர்த்த சிவ சிவ மந்திரத்துக்குரிய பயனைச் சிவப்பிரகாசர் சுட்டுகிறார். இம்மாலையில், சிவன் திருநாமத்தைச் சொல்லாதவர்கள் நீர், நெருப்பு, நோய், அரக்கர், பேய், விலங்கு, திருடர் ஆகியோரால் வருந்துவர் (53) என்பர்.

சிவப்பிரகாசர் உள்ளத்தில் ஓடிய உணர்வே இவ்வாறு வெளிப் படுகிறது. தெய்வ வழிபாட்டில் தெய்வத்திற்குத் தொடர்புடைய பொருளை அடியார் சொல்லுவதுதான் பெரும் பேற்றைத் தரும். சிவ சிவ என்ற மந்திரத்தைச் சொல்லுக என்று சொல்லி அது குறித்துத் தனியே பதினொரு பாடல்கள் புனைந்து சிவப்பிரகாசர் சைவத்தை வளர்த்திருக் கிறார். சமய வழிபாட்டில் தெய்வத் திருப்பெயரைச் சொல்லுவது தான் அச்சமயத்தின் பற்றுதலையும் அழுத்தத்தையும் உண்டாக்கும்.

பாடலமைப்பும் கருத்தும்

சிவப்பிரகாசர் பன்னூல் பாடிய புலமை வாய்ந்தவர். இவர் கற்றவரும் கல்லாதவரும் சிவ சிவ என்ற திருநாமத்தைச் சொல்ல வேண்டும் என்பதே இவர் கருத்து. அதனால் ஒவ்வொரு கலி விருத்தத்தின் இறுதி இரண்டு சீர்களும் 'சிவ சிவ வென்மினே' என்று முடிகின்றது. இதன் மூலம் 'சிவ சிவ' என்னும் மந்திரத்தைச் சொல்லுங்கள் என்று இவர் குறிப்பிடுகிறார். அடியார்களைக் கண்டு சொல்லுவது போல இந்தத் தொடர் அமைந்திருக்கிறது. திருநாவுக்கரசர் திருநீலக்குடி அரனைப் பாடும்போது 'நல்ல நாமம் நவிற்றி உய்ந்தேன் அன்றே' என்று பாடுவர். அப்பரைக் கல்லில் கட்டி கடலில் இட்டபோதே அவர் தான் சிவநாமத்தைச் சொல்லி உய்ந்ததாகப் பாடுகிறார். தன்னுடைய அனுபவத்தைக் குறிப்பிடுகிறார். இன்னொரு பாசுரத்தில்,

''காமம் காய்ந்தபி ரான்கடம் பந்துறை
நாமம் ஏத்தநம் தீவினை நாசமே'' (159:8)

என்று பொது நிலையில் இறைவன் பெயரைக் கூறுக என்று சுட்டுகிறார். அவரைப் பின்பற்றித் துறவியும் சிறந்த அடியாரும் ஆகிய சிவப்பிரகாசர் அடியார்கள் ஒவ்வொருவரும் சிவ சிவ என்ற நாமத்தைச் சொல்ல வேண்டும் என்று வலியுறுத்துகிறார். இவ்வாறு தான் கண்ட உண்மையை அனைவரும் அறிந்து பயன்பெற வேண்டும் என்ற நோக்கில் இவ்வாறு ஆற்றுப்படுத்துகிறார். சிவப்பிரகாசர் துறைமங்கலம் திருமடத்தில் எழுந் தருளியிருந்தபோது சிவநாம மகிமை, கைத்தலமாலை, சீகாளத்திப் புராணத்தில் உள்ள சுருக்கங்கள் ஆகியவற்றைப் பாடினார். இவர் வாழ்வின் இறுதியில் பாடியவை இந்தப் பாடல்கள் மிக எளிமையானவை. இவை உணர்த்தும் அறம் சிவ சிவ என்னும் திருநாமத்தைச் சொல்லுக என்பதேயாகும்.

91. திருக்கூவப்புராணத்தில் மெய்ப்பாடுகள்

ந. லட்சுமி, புதுவை.

இலக்கியப் படைப்பாளன் படைப்பினை உருவாக்கும்போது, நடந்த நிகழ்வுகளோடு கற்பனை கலந்து எழுதுவது இயல்பே. சிவப்பிரகாசர் இவற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்ட நிலையில் முழுக்க முழுக்கக் கற்பனையைச் சுவைபட கூறுவதில் வல்லவராகத் திகழ்வதாலேயே 'கற்பனைக் களஞ்சியம்' என்ற போற்றுதலைப் பெற்றிருக்கின்றார். இவர் 35-க்கு மேற்பட்ட இலக்கிய நூல்களைப் படைத்துள்ளார். இவர் இயற்றிய நூல்களுள் நால்வர் நான்மணிமாலை, பிரபுலிங்க லீலை என்ற இரண்டு நூல்கள் மட்டுமே சிறப்புக்குரியது என்று அனைவரும் கருதுகின்றனர். இக்கருத்தினை மாற்றும்முகமாக ஆசிரியரின் திருக்கூவப் புராணம் அமைந்துள்ளது. கடவுள் உருவங்களையும் புராணக் கதை களையும் புதுமையாக நோக்கிப் பல புதிய புதிய கற்பனை கலந்த கருத்துக்களைத் தமிழுலகிற்குத் தந்தவர் சிவப்பிரகாசர். காப்பியத்தின் தன்மை, அளவு, பொருள் ஆகியவை பொருந்தப் பாடப்படும் இலக்கிய வகை தலபுராணமாகும்.

இலக்கியம் என்பது வாழ்க்கையைப் பிரதிபலிப்பது என்பர் அறிஞர் பெருமக்கள். சொற்களைக் கருவியாகக் கொண்டு இலக்கியம் படைக்கும் போது தரமான சொற்களை அமைப்பதால் சிறந்த இலக்கியம் கிடைக் கின்றது. படைப்பாளன் தேர்ந்தெடுத்து அமைக்கும் சொற்கள் உணர்வு களை அழகுற வெளிப்படுத்த உதவுகின்றது. இந்த உணர்வுகளுள் ஒழுங்கமைப்பினை 'எண்வகை மெய்ப்பாடுகள்' எனலாம். அதனைக் கருத்தில் கொண்டு சிவப்பிரகாசர் இயற்றிய திருக்கூவப்புராணத்தில் மெய்ப்பாடுகள் காணப்படுகின்றனவா என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மெய்ப்பாடு - விளக்கம்

மனித வாழ்க்கையில் காணப்படும் செய்கைகளைப் பற்றி அதாவது, உடலில் ஏற்படும் புலப்பாடுகளைப் பற்றிக் கூறுவது மெய்ப்பாடு ஆகும். தொல்காப்பியர் மெய்ப்பாடுகளை எட்டு வகைகளாகப் பகுத்துள்ளார். இதனை,

'நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப'

எனும் நூற்பா அடிகள் விளக்குகின்றன. இந்த எண்வகை மெய்ப்பாடு களும் மனிதனின் இயல்பு வாழ்க்கை வெளிப்பாடுகளே.

நகை

இகழ்தல், இளமை, அறியாமை, அறிந்தும் அறியாதது போலிருத்தல் எனும் நிகழ்வுகளினால் சிரிப்பு தோன்றும். இதனை

'எள்ளல் இளமை பேதமை மடன் என்று
உள்ளப்பட்ட நகை நான்கு என்ப'

எனும் நூற்பா அடிகள் விளக்குகின்றன.

சிரிப்பு என்பது மனிதனுக்கு உரிய சிறப்பம்சமாகும். மற்ற உயிர் களிடத்து இல்லாது மனிதனுக்கு மட்டுமே இ[illegible] கொடுத்த வரம் எனலாம்.

'வாய்விட்டு சிரித்தால் நோய் விட்டுப் போகும்'

எனும் பழமொழி இதனை உணர்த்துகின்றது. எனவே, சிரிப்பு என்பது மனித வாழ்க்கையில் முக்கிய இடம் பெறுவதால் தொல்காப்பியனாரும் எண்வகை மெய்ப்பாடுகளில் 'நகை' எனும் உணர்வையே முதலில் குறிப்பிடுகின்றார்.

'திருஇ றைஞ்சு பொன் பைஅரவு அல்குலாள் சிரிப்பத்
தரும சீலர்தம் மனையிடைப் புகுந்தனன் தலைவன்'

எனும் பாடலடியில் சிவனுடைய வில் போன்ற வளைந்த தோற்றத்தைக் கண்டு பார்வதி அம்மையார் சிரிப்பதாகச் சிவப்பிரகாசர் குறிப்பிடு கின்றார். அதனை எள்ளல் நிலையில் தோன்றும் நகை எனும் மெய்ப் பாடாகக் கருதலாம்.

அழுகை

'இளிவே இழவே அசைவே வறுமை எனா
விளிவில் கொள்கை அழுகை நான்கே'

எனும் நூற்பா அடியானது இழிவு, இழப்பு, தளர்ச்சி, வறுமை எனும் நான்கு நிலைகளினால் அழுகை தோன்றும் என்பதைத் தெளிவுபடுத்து கின்றது. இழப்பு வறுமை, தளர்ச்சி போன்ற நிகழ்வுகள் ஏற்படும் பொழுது மனிதன் உடல் நிலையாலும் மன நிலையாலும் பாதிக்கப்படுவதால், இழப்பை எண்ணி வருத்தப்படுவதைக் காட்டிலும் அத்துயர நிகழ்ச்சி யினைப் பிறரிடம் சொல்வதாலோ அல்லது வாய்விட்டு அழுவதாலோ மனம் தெளிவடைகின்றது. எனவே துன்பத்தின் வடிகாலாகக் கண்ணீர் அமைகின்றது எனலாம்.

கூவப்புராணத்தில் தருமசீலனார் சிவனடியார்க்கு உணவு படைக்கத் தன்னிடம் ஏதும் இல்லை என்று வருந்துகின்றார். அதனால் பிச்சை எடுத்தாவது சிவனடியார்க்கு விருந்திட நினைக்கிறார். ஆனால் அது முடியாமல் போகவே உடல் தளர்ந்தார். கணவனின் உண்மையான வருத்தத்தைக் கண்ட தருமசீலனின் மனைவி மனம் உருகிக் கண்ணீர் சிந்தியபோது தீயிலிடப்பட்ட மெழுகு உருகினாற் போல தம் வறுமை நிலையை எண்ணி வருந்துகின்றார். இந்நிகழ்ச்சிக்குக் காரணமான 'அழுகை' என்பதை வறுமை எனும் நிகழ்வினால் தோன்றியது என்பதற்குச் சான்றாகக் குறிப்பிடலாம். இதனை

'கொழுநர்தம் மெய்வருத்தம் காண்தொறும் குழைந்து நெஞ்சம்
விழிபொழி வெள்ளம் ஓட'

எனும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

இளிவரல்

எண்வகை மெய்ப்பாடுகளுள் தொல்காப்பியரால் மூன்றாவதாகக் குறிக்கப்படும் 'இளிவரல்' எனும் மெய்ப்பாடு மூப்பு, பிணி, வருத்தம், மென்மை ஆகிய நான்கு இடங்களில் தோன்றும். இதனைத் தொல்காப்பியர்,

'மூப்பே பிணியே வருத்தம் மென்மையோடு
யாப்புற வந்த இளிவரல் நான்கே'

எனும் நூற்பா அடிகளில் குறிப்பிடுகின்றார். மேற்சுட்டிய நான்கு இடங்களில் துன்பத்தினால் (வருத்தம்) ஏற்படும். இளிவரல் எனும் மெய்ப்பாட்டிற்குச் சான்றாகத் தேவர்கள் தாருகன் எனும் அசுரனால் தானம், தவம் ஆகிய இரண்டையும் இழந்து துன்புற்றதைக் குறிப்பிடலாம். இதனை

'சீரிய தவங்கள் தானம் சிதைந்தன துன்பம் எய்தி
ஆருயிர் தரித்துஇ ருந்தனர்'

எனும் கூவப்புராண அடிகள் தெளிவுபடுத்துகின்றன.

மருட்கை

தொல்காப்பியர் 'மருட்கை' எனும் மெய்ப்பாடு தோன்றுவதற் குரிய நான்கு நிலைக்களன்களை,

'புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே'

எனும் நூற்பா அடிகளில் குறிப்பிடுகின்றார்.

மருட்கை என்பது வியப்பு, புதுமை, பெருமை, சிறுமை என்கின்ற நிலைகளில் தோன்றுகின்றது. ஒரு செயலோ அல்லது பொருளோ இயல்பு நிலையிலிருந்து மாறுபட்டு அதன் சிறப்புத் தன்மையின்

காரணமாக உயர்வுபெற்று விளங்குவதால் 'வியப்பு' எனும் உணர்வு தோன்றுகின்றது.

வித்துன்மாலி, தாரகாட்சன், காமலாட்சன் எனும் மூவரும் பிரமனிடம், 'ஒரே அம்பினால் எங்கள் மூவரையும் வெல்ல வேண்டும். வேறு செயலால் எங்களை வெல்ல முடியாத பெருமை வேண்டும்' என்று வரம் கேட்டனர். இங்கு அசுரர்களுடைய தவபலத்திற்கு ஏற்ப வரம் கேட்டமை என்பது 'பெருமை' எனும் நிகழ்வினால் தோன்றிய மருட்கைக்குச் சான்றாகும். இதனை,

'என்னினும் ஒருவ னேநின்று எளிதினில் ஆட லேபோல்
தன்ஒரு கணையால் எம்மை ஒருங்குறத் தடிவது அல்லால்
பின்ஒரு செயலால் வெல்லாப் பெருமையும் வேண்டும் என்றார்'

எனும் கூவப்புராண அடிகள் புலப்படுத்துகின்றன.

அச்சம்

தம்மைப் பாதுகாக்கவோ அல்லது அழிக்கவோ கூடிய ஒரு பொருளின் மேல் அச்சம் அல்லது பயம் ஏற்படும். பயத்தின் காரண மாகவே மழை, இயற்கை, கொடிய விலங்குகள் போன்றவற்றை ஆதி சமூகமக்கள் வணங்கினர். இந்த அச்சம் என்பது தோன்றுவதற்கு காரணமாக நான்கு நிலைகளைத் தொல்காப்பியர்,

'அணங்கே விலங்கே கள்வர் தம்இறை எனப்
பிணங்கல் சாலா அச்சம் நான்கே'

எனும் நூற்பா அடிகளில் விளக்குகின்றார்.

சிவன், தாருகன் என்ற அரக்கனை அழிக்கத் தேரில் சென்றபொழுது விநாயகரை வழிபட்டுச் செல்லாததால், சினந்த விநாயகக்கடவுள் தேரின் அச்சினை முறிக்கின்றார். அதைக் கண்டு தேவர்கள் அச்சம் கொள்வதோடு, இனி என்ன நேரிடுமோ என்றும் எண்ணுகின்றனர். இச்செயலானது தேவர்களின் தலைவனான சிவனின் (தம்இறை) நிலையை எண்ணியதால் தோன்றும் 'அச்சம்' எனும் மெய்ப்பாட்டிற்குச் சான்றாகும். இதனை

'தந்தை உற்றருள் இரதகூ வரத்தினைத் தனயன்
வந்துஇ றுத்தலும் இமையவர் மனம்பதைத்து இன்னல்'

எனும் அடிகளின் வழி அறியலாம்.

பெருமிதம்

'கல்வி தறுகண் இசைமை கொடைஎனச்
சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே'

எனும் நூற்பா அடிகளின் மூலம் 'பெருமிதம்' எனும் மெய்ப்பாடானது, கல்வி, அஞ்சாமை, வரும் புகழ், வரையாது வழங்கும் வள்ளன்மை ஆகிய நான்கு நிலைகளில் தோன்றும் என்பதைத் தொல்காப்பியர் தெளிவாகச் சுட்டுகின்றார்.

இவ்வகையில் அஞ்சாமையின் காரணமாகத் தோன்றும் பெருமிதச் சுவைக்குச் சான்றாக, தாருகன் வதைச் சருக்க நிகழ்ச்சி ஒன்றைக் குறிக்கலாம்.

தாருகன் வதைச் சருக்கத்தில், காளிக்கும் தாருகாசுரனுக்கும் இடையேயான போரில் காளியின் அம்புபட்டு அவன் தலையில் சூடியிருந்த முடி கீழே வீழ்ந்திட தேவர்கள் கைகொட்டிச் சிரிக்கின்றனர். அதனால் ஆத்திரம் அடைந்த தாருகன் மேருமலையை ஒத்த வில்லை வளைத்து அடர்ந்த விடாமழை போல் அம்புகளைத் தொடர்ந்து செலுத்தினான்.

அதனால் அவனுடைய அஞ்சாத தன்மையைக் கண்டு தேவர்கள் அஞ்சினர். இதனை,

'பின்னர் அவ்வசுரன் மேருப் பிறங்கல்நேர் சிலைவ ளைத்துத்
தன்னுறு சேனை மாரி தோன்றிடப் பகழி தூர்த்தான்'

எனும் பாடல் வரிகள் உறுதிபடுத்துகின்றன.

வெகுளி

உறுப்புக்களை அறுத்தல், தம் கீழ் வாழும் குடிகளைத் துன்புறுத்தல், வைதல் மற்றும் அடித்தல், அறிவாற்றல் புகழ் முதலானவற்றைக் கொன்றுரைத்தல் போன்ற நிகழ்வுகள் 'வெகுளி' எனும் மெய்ப்பாடு தோன்றுவதற்குரிய நிலைக்களன்களாக உள்ளன என்பதனைத் தொல்காப்பியர்,

'உறுப்பறை குடிகோள் அலை கொலை என்ற
வெறுப்ப வந்த வெகுளி நான்கே'

எனும் நூற்பா அடிகளின் வழி விளக்குகிறார். தாருகன் வதைச் சருக்கத்தில் தன்னைக் கொல்ல வந்த தாருகனின் மார்பில் முத்தலைச் சூலத்தால் குத்திக் கொல்லும் காளியின் கோப நிலையை,

'முத்தலை அதனால் அன்னோர்
மொய்ம்பினில் குத்தி நெய்த்தோர்'

எனும் பாடல் வரிகளில் சிவப்பிரகாசர் தெளிவுபடுத்துகின்றார்.

உவகை

எண்வகை மெய்ப்பாடுகளுள் ஒன்றான உவகை என்பதனைத் தொல்காப்பியர்,

> 'செல்வம் புலனே புணர்வு விளையாட்டு என்று
> அல்லல் நீத்த உவகை நான்கே'

எனும் நூற்பா அடிகளில் குறிக்கிறார். உவகை எனும் மெய்ப்பாட்டிற்குக் காரணமாக நிலைக்களன்களாக செல்வம் நுகர்தல், இன்பம் நுகர்தல், புலன் நுகர்தல், விளையாட்டு போன்றவைகளைக் குறிக்கிறார்.

திருக்கூவப் புராணத்தில் தாருகனை வென்ற காளி வெற்றிக் களிப்பில் ஆடிப்பாடி மகிழ்ந்தாள் என்பதனை,

> 'துடித்திட இமயமும் துளங்கக் கைகளை
> அடித்தனர் அதிர்த்தனர் ஆடல் மேயினார்'

எனும் பாடலடிகள் குறிக்கின்றன. இங்கு போர் என்பதனை விளையாட்டில் (வீரவிளையாட்டு) ஒரு வகையாகக் கொள்ளலாம். எனவே இப்பாடலடிகளானது உவகை எனும் மெய்ப்பாட்டிற்குச் சரியான சான்றாகும்.

இலக்கியங்கள் பொதுவாகச் சமூகம் சார்ந்த நிலையிலேயே தோற்றம் பெறுகின்றன. சமூகத்தில் படைப்பாளனும் ஓர் அங்கம் என்பதால் அவனின் உணர்வுகளும் படைப்புகளில் இடம்பெறுதல் என்பது தவிர்க்க முடியாததாகிறது. அதற்கு சிவப்பிரகாசரும் விதிவிலக்கல்ல. இந்த உணர்வுகளைத் தொல்காப்பியர் மெய்ப்பாடு எனும் சொல்லால் குறிக்கின்றார். இவரால் குறிக்கப் பெறும் எண்வகை மெய்ப்பாடுகளும் திருக்கூவப் புராணத்தில் காணப்படுகின்றன என்பது உள்ளங்கை நெல்லிக்கனி ஆகும்.

92. சிவப்பிரகாசரும் திருவெங்கைப் பதியும்

வி. வசுமதி, உடுமலை.

''கடல் முரசம் ஆர்ப்பக் கதிர்க்கயிற்றால் ஏறி
அடைமதி விண்கழை நின்றாடக் - கொடைமருவும்
எங்கள் சிவஞான ஏந்தல் இறைத்த மணி
தங்கியவே தாரகைகள் தாம்''

என்று அரிய பல கருத்துக்கள் பொதிந்த பாடல்களைப் பாடி வீரசைவ மரபில் நின்ற புகழ்பெற்று வாழ்ந்தவர் துறைமங்கலம் சிவப்பிரகாசர். இவர்தம் பாடல்கள் தமிழுக்குக் கிடைத்த அரிய பெட்டகம் போன்றன. தமிழுக்கு வளம் செய்ய வந்த இவர் ''நட்பு'' என்ற நிலையில் நின்று அமைத்த பாடல் பதிவுகளை இக்கட்டுரை ஆய்வு செய்கின்றது. எனவே இவர்தம் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளோடு திருவெங்கைப்பதியின் வரலாற்றுக் குறிப்பினையும் கொண்டு சிவப்பிரகாசரின் தமிழினை (பாடல்களை) வளம் செய்யும் நிலைகளை ஆய்வு செய்வது இக்கட்டுரையின் நோக்கம்.

சிவப்பிரகாசரும் - அண்ணாமலை ரெட்டியாரும்

சங்க காலங்களில் கோப்பெருஞ்சோழன் - பிசிராந்தையார்; அதியன் - ஔவை; எனில் காலச்சூழல் மாற்றத்தில் சுந்தரர் - சிவபெருமானின் நட்பு. இந்நட்பு வழிவகுக்கப் பிறந்ததே சிவப்பிரகாசர் அண்ணாமலை ரெட்டியார் நட்பு.

முற்றுப்புள்ளியே இல்லாத இந்நட்பு தனிமனித வாழ்வில் ஒவ்வொரிடமும் காணப்படுகின்றது. சில நட்பு காலம் முழுவதும் தொடர்ந்து வரும். சில இரயில் சினேகம் போல் நின்றுவிடும். சில நட்போ வாழ்வில் ஒரு பகுதியாய் நின்று ஒளிவிடும். அத்தகைய ஒளியோடு கூடிய நட்பே சிவப்பிரகாசர் - அண்ணாமலை ரெட்டியார் நட்பு.

திருவண்ணாமலையில் கருணைப் பிரகாசர், வேலையர், ஞானாம்பிகை என்ற இவர்களோடு பிறந்து கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியவர் நம் சிவப்பிரகாசர். இவர் தமிழ்மொழியில் உள்ள சிறந்த இலக்கணங்களைக் கற்க விரும்பி தென்னாடு-வாலி கண்டபுரம் தெற்கே துறைமங்கலம் எனும் ஊரில் சிவவழிபாடு செய்து வந்தனர். அப்போது

''புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்'' (திருக்குறள்-785-ம் குறள்)

என்பதற்கிணங்க அண்ணாமலை ரெட்டியாரின் நட்பு அறிமுகமானது. அதைத் தொடர்ந்து தம் குரு சென்ன வசவையர் திருமடத்துக்கு மேற்றிசையில் ஒரு திருமடம் கட்டுவித்து, அதில் அடிகளை இருக்கச் செய்த அண்ணாமலை ரெட்டியார் தாமும் அடிகளின் அணுக்கத் தொண்டராக அமர்ந்து அவர்தம் அறிவுரைகளைக் கேட்டு மகிழ்ந்து இரண்டாண்டு காலங்கள் வாழ்ந்து வந்தார். இச்சமயங்களில் இவர்களின் நட்பு

''முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு'' (திருக்குறள்-786)

என்று அமைந்திருந்தது.

இடையிட்ட பிரிவு

சிவப்பிரகாசர்-அண்ணாமலை ரெட்டியார் இவர்தம் நட்பில் அடிகளின் வேண்டுகோளுக்கு இணங்க தென்னாடு செல்லும் பொருட்டு இருவரும் பிரிந்தனர். அச்சமயம் ரெட்டியார்வழிச் செலவிற்கு முந்நூறு பொன்களைக் கொடுத்து அனுப்பினார். ஒருவிதம் பார்த்தால் இப்பிரிவும் நன்மைக்கே என அமைந்தது.

அச்சமயம், திருநெல்வேலி சிந்துபூந்துறையில் தருமபுர ஆதீன வெள்ளியம்பலவாண சுவாமிகளிடம் இலக்கணப் புலமை கண்டு தமிழ் பயில விருப்பம் கொண்டார். ஆங்கு இவரின் தனிப்புலமை வெளிப்பட்டது. சுவாமிகள் அடிகளிடம் ''கு'' எனும் எழுத்தை முதலிலும் இறுதியிலும் அமைத்து இடையில் ''ஊருடையான்'' என்பதை அமைத்து கவிபாட பணித்தார். உடனே அடிகளும்,

''குடக்கோடு வானெயிறு கொண்டாற்குக் கேழல்
முடக்கோடு முன்னமணி வாற்கு - வடக்கோடு
தேருடையான் தெவ்வுக்குத் தில்லைதோல் மேற்கொள்ளல்
ஊருடையான் என்னும் உலகு''

என்று பாடினார். ''வடக்கோடு தேருடையான்'' என்ற அழகிய தொடரினைக் கண்ட சுவாமிகள் மனம் மகிழ்ந்து தமிழிலக்கணங்களைக் கற்பித்தார். குரு காணிக்கையாக முந்நூறு பொன்களை சுவாமிகள் தர முற்படுகையில் சுவாமிகளோ தம்மை இகழ்ந்து எப்பொழுதும் வசைபாடி கொண்டிருக்கும் புலவர் ஒருவர் திருச்செந்தூரில் உள்ளார். அவர் தம்மை தம்முன் வணங்கச் செய்வதே முதல் காணிக்கையாகும் என்றார். சுவாமிகளின் கருத்தினை உணர்ந்த அடிகள் திருச்செந்தூரில் சென்று அப்புலவரினைக் கண்டு வசைமொழிந்த அவரின் முன் பேச சொற்போர்

நிகழ்ந்தது. இந்நிலையில் புலவர் இதழ் ஒட்டா நிரோட்டக யமகம் பாடுமாறு கூற இருவரும் முடிவு எடுத்தனர். உடனே சுவாமிகள், ''கொற்ற வருணனை…'' எனத் தொடங்கும் நிரோட்டக யமக அந்தாதியைப் பாடினார். அப்புலவரால் பாடமுடியாமற் சுவாமிகளுக்கு அடியனனாயினார். அப்புலவரை வெள்ளியம்பலத் தம்பிரான் சுவாமிகளிடம் அழைத்துச் சென்று அவருக்கு அடிமை பூணச் செய்தார். பின்பு குருவின் விருப்பத்திற் கிணங்க சிதம்பரம் சென்று சில மாதங்கள் கழிந்த பின்பு மீண்டும் அண்ணாமலை ரெட்டியாருடன் நட்பு பூண்டார்.

இப்பிரிவும் அடிகளுக்கு பேரும் புகழும் பெற்றுத் தந்தது.

திருவெங்கைப் பதி - வரலாறு

இறைவனின் திருவருளால் நடுநாடு - துறைமங்கலத்தில் உதித்த இலிங்கா ரெட்டியார் தம் நன்மைந்தரான அண்ணாமலையாருடன் சிவ வழிபாடு செய்து வாழ்ந்து வந்தார். இறைவனின் அருளால் கோவில் அமைத்து குடமுழுக்குச் செய்து வந்தார். இச்செய்தி,

> ''சாலிவாக சகாப்தம் - கருசருஙூ ஆகிய ருத்திரோற்காரிஙூ வைகாசி மாதத்தில் வளர்பிறை துவாதசியும் அதத விண்மீனும் கூடிய வியாழக் கிழமையிலே, ஆபதோத்தாரண சிவாசரியார் குமாரர் பிழை பொறுத்த சிவாசாரியாரால் விநாயகர் முதலிய சகல மூர்த்தங்களுடன் பழமலை நாதரையும் பெரியநாயகி யம்மையாரையும் நிறுவுதல் செய்வித்து, குடமுழுக்கு விழா நடத்துவித்து, பின்னும் வேண்டிய பெரும்பொருள் செலவிட்டுப் பெருமண்டம், நிருத்த மண்டபம் இரண்டு திருச்சுற்று கோபுரம், திருமதில், திருக்குளம் முதலிய திருப்பணிகளைக் குறைவற இயற்றிக் கொண்டிருந்தனர்''
>
> (பனுவல் திரட்டு - திருவெங்கை மான்மியம்-435-ம் பக்கம்)

எனும் சாசனத்தின் வழி அறியலாம். இன்றும் இத்தலம் சிறப்புடன் மிளிர்கின்றது.

இன்று - திருச்சி - விருத்தாசலம் ரோட்டில் நடுப்பிரிவில் உள்ளது. திருவெங்கை என்று பெயர் பெற்று விளங்கும் திருநகரம் தற்பொழுது திருவெங்கப்பூர் என அழைக்கப்படுகிறது.

சிவப்பிரகாசரும் திருவெங்கையும்

சிவப்பிரகாசர் அண்ணாமலை ரெட்டியாரிடம் கொண்ட நட்பு சிறு பிரிவிற்குப் பின் தொடரலாயிற்று. அடிகள் முன்பு போலவே ரெட்டியாருக்குத் திருவருள் செய்து அவர் வேண்டுகோளின் படி வாலி கண்டபுரம் வடமேற்கு பாகத்தில் உள்ள திருவெங்கைப் பதியில்

அவரால் கட்டுவித்த திருமடத்தில் எழுந்தருளினார். அச்சமயம் சிவப்பிரகாசர் அத்திருநகரிலுள்ள பழமலை நாதர் மீது திருவெங்கைக் கலம்பகம், திருவெங்கைக் கோவை, திருவெங்கை உலா எனும் இலக்கியங்களைப் படைத்தார். அவ்விலக்கியங்களில் தம் நட்பின் பெருமையையும், இறைவனின் நாம பெருமைகளையும் கூறிச் சிறப்பிக்கின்றார். (திருவெங்கை அலங்காரம் எனுமிலக்கியம் தற்பொழுது கிடைக்கவில்லை).

கலம்பகத்தில்

''பொன்னுலவும்....'' எனத் தொடங்கும் இக்கலம்பகத்தில் இறைவனையும் தலப்பெருமையும் பாடுகிறார். இறைவன் ஆணவத்தை அடக்கி, மாயையை மறைத்து நின்று உயிர்களுக்கு அருள் பாலிப்பவன் எனும் நிலையினைக் கூற முற்படும்போது முயலகனை மிதித்தும், நான்முகனின் தலையைக் கிள்ளிய செய்தியையும் கூறிச் செல்கிறார். இக்கருத்து,

''கடகரி நரம டங்கல் காலன்வெண் மதிய ரக்கன்
அடுமுய லகன்ப தைப்ப அடர்த்தனை பதத்தாற் கஞ்சன்
நடுமுடி கரத்திற் கொண்டாய் நகைத்துமுப் புரமெ ரித்தாய்
படைகள்கைக் கொண்ட தென்கொல் பகருதி வெங்கை யோனே''

எனுமிப்பாடலில் காணலாம்.

கோவை இலக்கியத்தில்

''சேவுந் தழகர் திருவெங்கை வாணர் சிலம்பின் மலர்
தூவும் பொழில்'' (1-ம் பாடல்)

சூழும் நகரமான திருவெங்கையில் குடி கொண்டிருக்கும் பழமலை நாதரைப் பாடும்போது சிவப்பிரகாசர்,

''சந்தாப வெந்தழ றன்னடி யார்க்குத் தணித்தருளுஞ்
செந்தா மரைமலர்த் தாளர்'' (17-ம் பாடல்)

எனச் சிறப்பிக்கின்றார். அண்ணாமலை ரெட்டியாரின் நட்பின் திறத்தினையும்

''வல்ல அண்ணாமலை யார்கட்டு கோயிலகட்
பாலுக்கு வந்தது கண்டாய்நம் வெங்கைப் பழமலையே''
(121-ம் பாடல்)

என்று பெருமையுடன் கூறிச் செல்கிறார். மேலும் நண்பனை மேம்படுத்த வேண்டி,

''சென்னியுஞ் சேகரமும்போ னமக்குச் சிறந்த நண்பன்
மன்னியிங் கோர்துணை யாயினல் லாமல் வலியில்லையே''
(42-ம் பாடல்)

எனும் வரிகளில் பெருமைபட இயம்புவதைக் காணலாம்.

உலா இலக்கியத்தில்

''பாவை விழையும் பழமலையான் - கோவை
எழுதுந் திருக்கரத்தா னெய்யாமல் வேதம்
முழுதும் புகழு முதல்வன்'' (282-284-ம் வரிகள்)

எனப் புகழப் பெறும் இவ்வுலா இலக்கியத்தில் பழமலைநாதரைப் புகழ்ந்து பாடினாலும், சிவப்பிரகாசர் தம் நண்பனரான அண்ணாமலை ரெட்டியாரைப் பற்றி 41-61 வரிகளில் சிறப்பாகக் கூறிச் செல்கிறார். அப்போது தம் நண்பரை,

''யாண்டும்
இவையென்றால் கேட்பவுமின் னாதென்று இரப்போர்
நிலைகண்டாங்கு எப்பொருளு நேர்வோன்''
(49-51-ம் வரிகள்)

என்று இரக்கத்தன்மையைக் கூறும் இவர் ரெட்டியாரின் செல்வம் குபேரனின் பதுமநிதிக்கு ஈடாகவும் காட்டிச் செல்கிறார். இது

''கண்டுபுகழ்
பண்பு மலாது பயனும் புணர்ந்து நிதித்
தண்பதுமம் வென்ற தடக்கையான்'' (54-56-ம் வரிகள்)

என்புழி அறியலாம். மேலும் ''புரைதீர் கொடையினன்'' எனப் புகழும் இவரினை,

''வன்புலவர்
தம்மை விழி காக்குஞ் தகலி னிமைபோலச்
செம்மை பெறக்காக்குஞ் சீருடையான்'' (57-60-ம் வரிகள்)

என்று சிறப்பித்துப் புகழாரம் சூட்டுவதைக் காணலாம்.

நால்வர் குறிப்பு

நால்வர் நான்மணிமாலை பாடிய நாயகனான இவர், நட்பின் பெருமையை அனைவரும் அறியும்படி பாடல்களைப் பாடி நின்றவர். அச்சூழலிலும் நால்வர் பற்றிய குறிப்பினை திருவெங்கைக் கோவை, திருவெங்கைக் கலம்பகம் எனுமிலக்கியங்களில் பிரதிபலித்துக் காட்டுகிறார்.

சம்பந்தப் பெருமானைக் காட்டும் போது,

''நாமொழி யாது புகழ்வா னருள்வெங்கை நாதரைசொற்
பாமொழி யானெய்த லாம்பாலை ஞான சம்பந்தன்''
(கோவை-312-ம் பாடல்)

என்றும்,

திருநாவுக்கரசரைப் பற்றிக் கூறுகையில்,

''ஆடற் பரியிற் சேரமா னனையக் கயிலை கிரிமீதி
லானைக் கழுத்தி லிவர்ந் தணையு மரவு ''திருநாவுக்கரசு''
(கலம்பகம்-58-ம் பாடல்)

என்றும்,

திருநாவலூரரான சுந்தரரை,

''மருகலம்பர் களர் நினறி யூர்மிழலை வல்லம் வேதிகுடி சேய்ஞலூர்
மறைசை காசி திருநாவலூர் (கலம்பகம்-97-ம் பாடல்)

என்றும்,

மாணிக்கவாசகப் பெருமானைக் குறிப்பிடுகையில்,

''மாணிக்க வாசகன் செந்தமிழ் மாலை மணக்குமுடி
வேணிக் கடவுளிடமாகிய திருவெங்கை''
(கோவை - 265-ம் பாடல்)

என்றும் குறிப்பிட்டுச் செல்வதன்வழி இவரின் புலமையைக் காணலாம்.

''கோவை உலா அந்தாதிக்கு ஒட்டக் கூத்தன்'' என்பது தனிப் பாடல். ஆனால் அச்சங்க இலக்கியப் புலவரின் புலமையொடு எளிய தமிழில் புகழ் பாடியவர் சிவப்பிரகாசர் ஆவார். மேற்கூறிய இக்கட்டுரையின் வழி அடிகளின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்களோடு அவரின் நட்பின் ஆழத்தை அறிய முடிந்தது. தம் நண்பனின் வேண்டுகோளுக்கு இணங்கி திருவெங்கையம்பதியில் நின்று இறைவனைப் பாடுகையிலும் நட்பினையும் புகழ்ந்து புகழாரம் சூட்டுவரை இக்கட்டுரை ஆய்ந்தது.

93. பிரபுலிங்க லீலையில் குருவருள்

சா. வளவன், சென்னை.

மக்களை உய்திபெறச் செய்வதற்குக் குருவருள் வேண்டும். இறைவன் தாளை அடைந்து இருப்பதற்குக் குரு வேண்டும். குருவை நாமே தேடி அடைவதா? அல்லது குருவே நம்மை நாடி வந்து உதவுவாரா? இரண்டுமே இவ்வுலகில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நாம் குருவைக் கண்டு போற்றி உய்தி பெறவும் முடியும். அந்த அருள் இல்லாதவரைச் சூழ்ந்து குரு காப்பதும் உண்டு. நீருள்ள குளத்தில் தாமரை இலையும் பூவும் நிரம்பி இருக்கின்றன. நீரின்றி வற்றினால் தாமரையும் மறைகின்றது. நீர் உயர்ந்தால் தாமரையும் உயர்கிறது. ஆனால் தாமரை, நீரால்தான் பாதுகாக்கப்படுகிறோம் எனத் தெரியாமல் உயிர் வாழ்கிறது. நம்மில் பலரும் தாமரையாக இருக்கிறோம். சுற்றியுள்ள நீர்தான் குருவருள். குருவருள் காப்பது அறியாமலே பலரது வாழ்வு முடிகிறது. மீண்டும் பிறப்பெடுக்க வேண்டியுள்ளது. பிறப்புப்பிணி நீங்க வேண்டுமானால் தாமே வந்து அருள் கூட்டும் குருவையாவது உணரவேண்டும்.

சிவப்பிரகாசர், குருவருளின் சிறப்பை பிரபுலிங்க லீலையில் அழகுற விளக்கியுள்ளார். பிரபுலிங்க லீலையின் கதைப் பொருளை ஆராயும் போது உண்மைப் பொருளும் வெளிப்படும். காப்பியத்தின் தொடக்கத்தில் கைலை மலையில் இறைவனும் இறைவியும் காட்சி தந்து கொண்டிருக் கின்றனர். இந்திரன் முதலிய தேவாதி தேவர் அவர்களை வணங்க வந்தனர். அவர்களைப் பார்த்த இறைவி இறைவனிடம் ஓர் ஐயத்தினை எழுப்பினாள். இத்தேவர்கள் வீடுபேறு எய்துவாரோ என்றாள். இறைவன் மாட்டார் என்றார்? அவர்கள் தொழிலில் மட்டும் ஈடுபட்டதால் வீடு பேறடையார் என்றார். வீடுபேறடைவதற்கு வழியாதென அறியாதவள் போன்று இறைவி கேட்டாள். இறைவன் அதற்கு, மணணுலகில் மக்களாகப் பிறந்து யோக நெறியில் ஒழுகினால் மெய்யறிவு கைவரப் பெறுவர் என்றார்.

அத்தகைய மக்கட்பிறவிக்கு ஞானாசிரியனாக அமைபவர் யார் என்று கேட்டாள் இறைவி. எனவே குருவேண்டும் என்பதை இறைவியே உணர்த்தினாள் என்பதை அறியலாம். மக்கட் பிறவிதான் வீடுபேறடைய உகந்தது என்பதும் தேவராயினும் மனிதராகப் பிறந்தே உய்திபெற முடியும் என்பதும் சிவப்பிரகாசரால் உணர்த்தப் பெறுகின்றன. சற்குருவாக

வருபவர் இறைவனின் கூறே என்பதும் பிரபுலிங்க லீலை உணர்த்தும் உண்மையாகும்.

''தொல்லையில் உயிர்சுஞ் ஞானிதூய் நிராங்காரன் என்போர்
எல்லையில் தவங்கள் செய்ய எமதுமெய் வடிவந்தானே
அல்லம நாம மைந்தன் ஆயினம் அனையான் தன்னை
வில்லுறழ் நுதலாய் காண்டல் மிக உனக்கரியது என்றான்''

(கைலாசகதி - 54)

இறையே குருவாய் வருவதும் அவரை அறிவது அரிது என்பதும் சிவப்பிரகாசர் உணர்த்தும் உண்மைகள். மக்களைக் கரையேற்றுவதே குருவின் நோக்கமாக உள்ளது.

மமகாரனும் மோகினியும் நோன்பிருந்து மாயையைப் பெற்றெடுத்தனர். மாயை பிறந்ததால் எங்கோ தொடர்பில்லாமல் தவம் மேற்கொண்டிருந்த முனிவர்க்கு இடையூறு நேரிட்டதாம்.

''கண்ணகல் நிலத்த கங்கைக் கரையிலும் முழையிடத்தும்
புண்ணிய வனத்தும் எய்திப் புற்றுமாய் மரமாய் உற்றும்
தண்ணிய புனலில் தீயில் சார்ந்தும் ஊண்துயில் துறந்து
பண்ணிய தவத்தோர் நெஞ்சும் பதைத்தன மயலின் மூழ்கி''

(மாயையின் உற்பத்தி கதி. - 32)

புண்ணிய வனத்திலும் கங்கைக் கரையிலும் மலைக்குகையிலும் புற்றாக, மரமாக மாறியும் நீரையும் நெருப்பையும் சார்ந்தும் உணவையும் உறக்கத்தையும் நீக்கியும் செய்து கொண்டிருந்த தவத்தினர் நெஞ்சம் மயலில் மூழ்கியதாம்.

எங்கோ எவரோ பிறக்க எங்கோ எவர்க்கோ வினை பற்றும் என அறிய முடிகின்றது. மாயை இங்ஙனம் அறிந்தோ அறியாமலோ கலக்கத்தினை ஏற்படுத்தும். நெஞ்சம் கலங்கியதற்குக் காரணத்தினைத் துறவியராயினும் குருவின் மூலமே அறிய முடியும். துருவாச முனிவர் காரணத்தினை உரைக்கின்றார்.

''சங்கரி ஒருகூ ளால்தன் தமோ குண வடிவ மாயை
மங்கையை விடுப்ப அன்னாள் வனவசை நகரில் பிள்ளைத்
திங்களின் உதித்தாள் இன்று செய்தவக் கிழமை பூண்டீர்
உங்கள் நெஞ்சு அதனால் ஆற்றல் உடைந்தது என்றுஅவன்
உரைத்தான்''

(மா. உ.க. 36)

துறவியர்க்கே அறிவிக்க அறிவுறுத்த செயற்பட குருவருள் தேவை எனில் பாமர மக்களுக்கு உறுதியாகத் தேவை என்பதனைக் கூறவும்

வேண்டுமோ? கலக்கத்திற்குக் காரணத்தினை மட்டும் கூறிவிட்டுச் செல்ல மாட்டார் குரு. கலக்கம் தீரவும் தீர்ப்பவரும் பற்றியும் கூறுவார். அல்லம தேவரே எல்லா நன்மைகளையும் அருள்வார் என்றும் கூறினார்.

''பிணிதப வேண்டில் வாழ்நாள் பெரிதுற வேண்டில் செல்வம்
அணிதர வேண்டில் கல்வி அறிதர வேண்டில் வானம்
பணிதர வேண்டின் முத்திப் பயன்பெற வேண்டில் என்றும்
இணையறும் அல்ல மப்பேர் எந்தையை நினைப்பர்''

(மா. உ.க.41)

இக்கருத்துக்களைக் குருவான துருவாசமுனிவர் துறவியர்க்குக் கூறினாரா என்றால் இல்லை என எளிதில் கூறிடலாம். மாயை பிறந்ததால் எழுந்த கலக்கம் காமக் கலக்கம். அதிலிருந்து விடுபடக் கூறும் வழியன்று இது. அது ஒரு சாக்கு. அதைக் கொண்டு குரு, துறவியர்க்கு மட்டுமல்லாது மக்கட்கும் உதவும் அல்லமனை அறிமுகப்படுத்தி அவனை வழிபாடு செய்யுமாறு எல்லார்க்கும் அறிவுறுத்துகின்றார். சிவப்பிரகாசர் எனும் குரு, பிரபுலிங்க லீலை எனும் காப்பியம் பாடுவதுபோல் நாம் கடைத்தேற இறைவனை வழிபடும் வகைகளை விளக்குவதை உணர வேண்டும்.

'குறைதான் இரக்கும் அவர்க்கு ஓடிக் குறுக நிற்பான்'

எனப் பேரெடுத்த மன்னன் மமகாரனுக்கும் மோகினிக்கும் மகளாய் மாயை பிறந்தாள். பிறந்து மொழிபயின்று பின் காதல் நலம் சிறக்கும் காலம் வந்தது. தருக்கும் வந்தது.

''அன்ன நடையும் அன்னமிலா ஐயர் நடையும் தளர்வெய்தக்
கன்னி மலர்வீழ் நடைகற்றாள் கரும்பு கசக்கும் மொழி பெற்றாள்
மன்னு மலர்வீழ் சுரும்பனைய மைந்தர் பார்வைக் குறிப்புணர்ந்தாள்
தன்னை அரியள் எனஅறிந்து தானே மனத்தில் தருக்குற்றாள்''

(மா.உ.க. 59)

மணப்பருவம் வந்ததால் மமகாரன், மகளின் மணங் குறித்து எண்ணலானான். எண்ணும் வேளையில் அவனுடைய குரு அகங்காரன் காண வந்தான். மாயையையும் கண்டான். மாயை வணங்கிப் போற்றினாள்.

''மன்னவன் வந்தனம் மரபில் கொண்டவன்
கன்னிதன் எழில்நலம் காணப் போயினான்
அன்னவள் எதிர்நடந்து ஆரியன் தனைச்
சென்னியின் வணங்குபு சிறப்புறச் செய்தனள்'' (மா. உ. க. 67)

குருவாய் இருந்தமையால் மாயை வளர்ந்து ஆளானதற்குக் காரணத்தை ஓர்ந்து கொண்டான். மமகாரனிடம் 'உன் மகளுக்கு

மணவாளன் யாவன்? எனக் கேட்டான். நான் அறியேன், நீயே கூறுக என்றான் மமகாரன். சங்கரனே மாயைக்குத் தலைவன் என அறிவித்தான் அகங்காரனாகிய குரு.

''கொங்கவிழ் தொடையினாய் கூன்கொக் கன்றுவான்
கங்கையை அடைவது கடவுள் அன்னமே
மங்கையை அணைபவர் மனிதர் அல்லர்நம்
சங்கரனே இவள் தலைவன் என்றனன்'' (பா. உ. க. 71)

மமகாரனுக்கு இவ்வாறு இறைவனே எளிமையாய்க் கிட்டுவானோ எனும் ஐயம் தோன்றியது. குருவிடம் கேட்க. அவனும் வேண்டிய கோலமாய் நணுகும் என்றான்.

''மாலும் நான்முகனும் நாடரிய வள்ளல்இவ்
லெவார் குழலினாட்கு எளிய னோஎன
ஆலமார் மிடற்றினோன் அன்பர் வேண்டிய
கோலமாய் நணுகும்ஈ உண்மைக் கூற்று என்றான்''
(மா. உ.க. 72)

இங்ஙனம் குரு உணர்த்தியோடு நில்லாமல் மாயைக்கு இறைவழிபாட்டு முறையையும் உணர்த்தினான்.

''இன்னணம் அரசனோடு இயம்பி மாயையாம்
கன்னியை விளித்து அவள் கருத்தில் தங்குறச்
செந்நிலை தனைஉப தேசித்து ஏகினான்
தன்னிகர் குபேரன் தனது இடத்து அரோ'' (மா.உ.க. 73)

மாயையும் குருவின் மொழியை ஏற்று அவள் வழிபடும் மதுகை நாதனைப் பரவினள்.

''குருவருள் மொழிநெறி கொண்டு மாயைதான்
வரவன வசைநகர் மதுகை நாதனைப்
பரவினள் அருச்சனை பயின்று பூசனைக்
கருவிகள் முழுவதும் கடைப்பிடித்து அரோ'' (மா.உ.க. 74)

சிவப்பிரகாசர் குவி மனத்தவர் மனங்கொள்ளும்படியாக மாயை செய்த பூசையை அடுத்து விவரிக்கின்றார். விரிந்த மனமுடையவரைப் பிறவி விடாது தொடரும். குவிந்த மனமுடையவரைப் பிறவி தொடராது. குவிந்த மனம் என்பது அவா அற்றிருத்தலாகும். தாமே சிவம் என உணரும் நிலையாகும். தம்மைச் சிவமாகக் காணாதவரைப் பிறப்பு விடாது. உள்ளத்தூய்மை உடையாருக்குத் தாமே சிவம் என்னும் மெய்ம்மை எளிதில் தோன்றும் என்பனவற்றை மனோலயகதியில் அல்லம தேவர் வசவண்ணருக்கு உபதேசிக்கிறார்.

இறைவழிபாட்டைக் குருமுகமாக உணர்ந்து செய்தால் பயன் ஏற்படும் என்னும் உண்மையை மாயை கோலாகலகதியில் விமலை மாயைக்கு உபதேசிக்கிறாள்.

''பொருவிலி ஆகமம் புகன்ற மந்திரக்
கிரியைகள் வழுவறக் கிளக்கும் நல்லருள்
குருபரன் அருளினால் கொண்டு செய்குநர்
பரசிவ பூசனைப் பயனை நண்ணுவார்'' (மா.கோ.க. 13)

மாயை தன் வரலாற்றைத் தாய் தந்தையர்க்குத் தெரிவித்துக் கைலையை அடைகின்றாள். மகளைப் பிரிந்த பெற்றோரை அகங்காரன் வந்து தேற்றுகின்றான். குரு தாமே வந்து உதவும் காட்சி இது.

''வந்துவேந்தன் வழிமரபு ஆரியன்
நுந்தம் மாமகள் நோன்மை நுமக்குநான்
முந்து கூறில னோதுயர் மூழ்கிநீர்
சிந்தை நோதல் தகாதுஎனச் செப்புவான்''
(வசவண்ணர் வந்த கதி - 23)

கைலைக்கு மாயை போனதை அறிந்தும் வருந்தும் தன்மை மடமை மடமையே என்றும் உமையின் கூறே மாயை மகளாகத் தோன்றினாள் என்றும் குரு உபதேசித்தான்.

இங்ஙனம் நூல் முழுவதும் குருவருள் கிட்டும் பல்வேறு நிலைகளைச் சிவப்பிரகாசர் விதந்து ஓதுகின்றார். அன்பாய் வழிபடுதலும் அன்புக்கு இறைவன் எளியனாதலும் தக்க நேரத்தில் குருவந்து நெறிப் படுத்தலும் குருவை எதிர்நோக்கிப் பார்த்திருத்தல் வேண்டும் என்பதும் அவர்தம் சொற்பொருளை இருளின்றி உணர்தல் வேண்டும் என்பதும் மாயையும் கன்மமும் ஆணவமும் இருந்தாலும் குருவருள் கிட்டும் என்பதும் அவ்வருளை உணர்ந்து உய்தி பெறவேண்டுமென்பதும் சிவப்பிரகாசர் பிரபுலிங்க லீலை வழி உணர்த்தும் கருத்துக்களாகும். இவையாவற்றையும் விட மனிதப் பிறவியே உயர்ந்தது என்பதும், மக்களாய்ப் பிறந்து குருவை நாடி யோக நெறியில் குவிமனத்தராய் அவாவற்றுச் சிவமாய் நிற்பின் உய்தி பெறலாம் என்பதும், பிறவற்றுக்கு இவ்வாய்ப்பு இல்லை என்பதும் உணர்ந்து செயல்படுமாறு சிவப்பிரகாச குரு போதித்த நெறியைப் பின்பற்ற வேண்டும் என்பதும் உணர்ந்தால் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம். எண்ணில் நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவில்லை. மக்கள் பிறரை வாழ வைக்கலாம்.

94. சிவப்பிரகாசரின் உவமை வளம்

வெ. ஜெயலட்சுமி, கொடைக்கானல்.

கற்பனைக் களஞ்சியம் என்றும் கற்பனைக் கருவூலம் என்றும் சிறப்பிக்கப்படும் சிவப்பிரகாசரின் ''பிரபுலிங்க லீலை' என்னும் காப்பியத்தில் உவமை வளம் குறித்துக் காண்பதாக இக்கட்டுரை அமைகிறது.

இலக்கிய வரலாற்றாளர்களால் பதினேழாம் நூற்றாண்டைச் சார்ந்த வராகக் கணிக்கப்படும் சிவப்பிரகாசர் காப்பியம், தலபுராணம், சிற்றிலக்கியம், நீதிநூல், போற்றி நூல், தனிப்பாடல் பிற சமயக் கண்டன நூல், உரைநடை நூல் என்ற பல்வேறு இலக்கிய வகைகளைத் தமிழுலகிற்குக் கொடுத்த கொடையாளர்.

கன்னட மொழியில் சாமரசர் எழுதிய பிரபு லிங்க லீலையைத் தழுவித் தமிழில் அதே காப்பியப் பெயரில் கன்னட பிரபுலிங்கலீலை போன்று 25 கதிகளை அமைத்துச் சிவப்பிரகாசரால் பாடப்பட்ட தமிழ்க் காப்பியம் பிரபுலிங்க லீலை. சுந்தரரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு சிவனடியார்களின் புகழ் பேசும் பெரியபுராணக் காப்பியத்தை ஒத்த நிலையில் வீர சைவக் குரவரும் ஞானாசிரியருமான சிவபெரு மானாகிய அல்லமரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு வீர சைவ அடியார்களின் சிறப்பினைப் பேசுவது பிரபுலிங்க லீலை.

பிரபுலிங்க லீலை என்பது மேலான இறைவனாம் சிவபெருமானின் திருவிளையாடல்களைப் பேசுவது என்று பொருள்படுகிறது.

உயிர்களை மாயைகளில் அகப்படாமல் தடுத்து ஆட்கொள்பவனாக இறைவனாம் சிவபெருமானையும், மண்ணுலகில் பிறவி பெற்று மாயை களால் கட்டுண்டு தவித்து இறைவனால் ஆட்கொள்ளப்படும் இறைவியாம் உமையம்மையையும் மையமாகக் கொண்டு நிகழ்கின்றன பிரபுலிங்க லீலையின் கதை நிகழ்வுகள்.

உணர்த்துபவன் ஆணாகவும், உணர்பவள் பெண்ணாகவும் படைக்கப் படுவது பொதுவாகத் தமிழ் இலக்கிய மரபாக விளங்குகிறது. இம்மரபிற்கு ஏற்பப் பிரபு லிங்க லீலையிலும் அறியாமையில் கிடந்து உழலும் உமையம்மைக்கு ஞானாசிரியரது தன்மை குறித்தும் யோக நெறி

நின்று வீடுபேறு அடையும் மெய்யறிவு குறித்தும் அறிவுறுத்துபவராகச் சிவபெருமான் படைத்துக் காட்டப்படுகிறார்.

இதுபோன்று வயப்படுத்துவோர் ஆணாகவும், வயப்படுவோர் பெண்ணாகவும் படைக்கப்படும் தமிழ் இலக்கிய மரபில் இக்காப்பியத்தில் மாயை என்னும் பெண் சிவபெருமானை வயப்படுத்த முயன்று தோல்வியுற்று அவரால் வயப்படுத்தப்படுகிறாள் என்ற கதைப் போக்கு சிற்றின்பம் நீக்கிப் பேரின்பம் காணுதல் என்ற ஞானநெறி உணர்த்தும் விதமாகக் கையாளப்படுகிறது.

மேற்கண்ட கதை நிகழ்வுகள் காப்பியத்தில் வெவ்வேறு வகையான உவமைகள் பலவற்றைக் கைக்கொண்டு கற்பனை வளத்துடன் சிவப்பிரகாசரால் எடுத்தாளப்படுவது இலக்கிய இன்பம் பயப்பதாய் அமைகிறது.

''பூவாய் நெடுங்கோட் டுறுபசுந்தேன் கைகால்
முடங்கு பொறியிலி தன்
நாவாய் ஒழுகிற் றெனவுலகம் அளந்த
மாலும் நான்முகனும்
காவாய் எனநின் றேத்தெடுப்பத் தானே
உவந்தெங் கரதலத்தின்
மேவா அமர்ந்த மாமணியைத் தொழுது
வினைக்கு விடைகொடுப்பாம்'' (துதி கதி-1)

மணம் மிக்க மலர்களிலிருந்து சேகரிக்கப்பட்டு மரத்தின் உச்சியில் கட்டப்பட்ட தேன் கூட்டிலிருந்து கை கால்கள் அற்ற முடவனின் நாவில் தானாக ஒழுகிய தேனைப் போன்று நான்முகனுக்கும் திருமாலுக்கும் அகப்படாது என் மனத்தில் தானே வந்து அமர்ந்து என்னை ஆட்கொண்ட சிவபெருமானை வழிபட்டு நல்வினை தீவினை சார்ந்த பிறவியை நீக்கிக் கொள்வோம் என சிவப்பிரகாசர் 'தானே வந்து தன்னை ஆட்கொண்ட சிவபெருமானை' வாழ்த்துகிறார். இங்கு ஆட்கொள்பவனாம் சிவபெருமானின் செயலுக்கு தானே வந்து முடவனின் நாவில் விழுந்த உயர்சுவை கொண்ட தேன் உவமையாக்கப்படுவது இலக்கிய நயம் பொருந்துவது.

இச்செய்யுள் எளிதின் முடிபணி, நிரல்நிறையணி, இன்பவணி, சுவையணி முதலியன கலந்து அமைந்த கலவையணியாக அமைகிறது. (சிவப்பிரகாசரின் இலக்கிய நூல்கள் - ஒரு திறனாய்வு, மா. சு. சாந்தா, ப. 3)

ஆட்கொள்பவனைத் போற்றிய சிவப்பிரகாசர் ஆட்படுபவளாம் இறைவியையும் போற்றத் தவறவில்லை.

''ஆதி பகவன் தனதூடல் தணிப்பான்
பணிய அவ்விறைவன்
பாதம் இறைஞ்சும் அதற்கும் நெற்றிப் பகையும்
அல்கும் பகையுமாம்
சீதமதியு மரவும்விழும் செயற்கும்
உவகை செயாமலலை
மாது பணியும் அதற்கு மனமகிழும்
உமையை வணங்குவோம். (துதி கதி - 2)

உமையின் ஊடல் தணித்தற் பொருட்டு அவளது பாதத்தில் தன் தலை தாழ்த்தி வணங்கிப் பணியும் சிவபெருமானின் தலையில் சூடப் பெற்ற பிறைநிலவும், கழுத்தில் அணியப்பெற்ற பாம்பும் உமையின் நெற்றிக்கும் அல்குலுக்கும் ஈடாகாமல் தலை தாழ்ந்து பணிகின்றன எனினும் அவரது தலையில் சூடப்பெற்ற மாற்றாளாகிய கங்கை தன்னைப் பணிந்ததைக் கண்டு மனம் மகிழ்பவளாக உமையம்மை இப்பாடலில் பேசப்படுகிறாள். கைலையில் தொடங்கி கைலையில் முற்றுப் பெறுவதாக அமைக்கப்பட்டுள்ள இக்காப்பியக் கதையில் வீடுபேற்றிற்கு உரியவர் எவர்? மண்ணுலக உயிர்களுக்கு வழிகாட்டும் ஞானாசிரியனாக அமைபவர் யார்? என்று உமையம்மை கைலாசநாதரிடம் வினவுவதாகக் காப்பியம் தொடங்குகிறது. மண்ணுலகில் மக்களாகப் பிறந்து யோக நெறி ஒழுகுபவர் மெய்யறிவு கைவரப் பெறுவர்; யாமே ஞானாசிரியராக அமைவோம். எம்மை உன்னால் கூடக் காண இயலாது என அதற்குச் சிவபெருமான் விடையளிக்கிறார்.

காப்பியத்தின் மையப்பகுதியிலும் மேற்கண்டவாறு சில அறியா வினாக்களை அம்மையார் எழுப்ப, சிவன் அவளுக்கு அறிவுறுத்துகிறார்:

''அல்லமன் அருள் பெறற் கடைந்த நந்தியோ
டெல்லையி னின்கணம் எனது நற்கலை
மெல்லியல் நிலமிசை மேவிச் செய்ததென்
சொல்லுதி எனஉமை இறைவன் சொல்லினான்''
- (மான்யமிய கதி)

இப்பாடலில் நந்தி, சிவகணங்கள், நற்கலை ஆகியோர் நிலவுலகில் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என இறைவி வினவ, அவர் தம் நிலவுலகப் பணிகளை அவளுக்கு எடுத்துரைக்கிறார் இறைவன்.

இங்கு பேசப்படும் பொருள் ''எல்லாம் அறிந்த இறைவன் இறைவி'' சம்பந்தப்பட்டதாக அமையினும் கூட உணர்த்துபவன் - உணர்பவள் என்ற ஆண்-பெண்ணின் தன்மைகள் குறித்த இலக்கிய மரபும், சமுதாயக் கருத்தாக்கமும் ஒன்றிணைந்து படைப்பாளியின் அறிவுத் திறனுடன் செயல்பட்டு இவ்வாறு படைப்பாகிறது என்ற இலக்கியப் படைப்பாக்க நெறி புலப்படுகிறது.

இறுதியில் இறைவி ''உண்மை உணர்ந்தேன்'' என்று இறைவனைப் பணிகிறாள். இவ்வாறு அறியாமை நிறைந்த இறைவி இறைவன் உணர்த்த உணர்வது காப்பியத்தின் கதைக் கருவை விளக்கிக் காப்பியத்தைக் கட்டமைக்க ஏதுவாகிறது.

வள்ளிகாவை நகரில் ஆகமநெறி நின்று வாழும் நிராங்காரனும், சுஞ்ஞானியும் மகப்பேறு வேண்டித் தவம் மேற்கொண்டு ஒன்பது திங்கள் சிவயோக சமாதி உற்றிருந்தபோது அவர்தம் நெற்றியின் கண் உள்ள பரஞ்சோதி திரண்டு அல்லமன் என்னும் குழந்தையாகச் சிவபெருமான் தோன்றுகிறார்.

அல்லமனாகிய சிவபெருமானை மயக்குவதற்கு அதாவது வயப் படுத்துதற்கு உமையம்மையால் நிலவுலகிற்கு அனுப்பட்ட மாயை, வனவசை நகரைத் தலைநகராகக் கொண்டு விளவலதேயத்தை ஆட்சி செய்து வந்த மமகாரனுக்கும் அவன் மனைவி மோகினிக்கும் மகவாகத் தோன்றி அந்நகரில் குடி கொண்ட ஈசன் மதுகைநாதனைத் தன் தலைவராக எண்ணி வழிபட்டு வருகிறாள்.

அல்லமர் அழகிய இளைஞன் வடிவு கொண்டு மத்தளம் முழக்கி மதுகைநாதன் கோயில் முன் செல்ல, மாயை அவனையும் அவனது மத்தள ஓசையையும் கண்டு கேட்டு மயங்குகிறாள்.

மேற்கண்ட காப்பியக் கதைப்பின்னல் ஆழ்ந்து நோக்கத்தக்கது. மயக்க வேண்டும் - மயக்குவேன் எனச் சபதம் எடுத்து வந்தவள் மயக்கப் படுகிறாள். மயங்குகிறாள். இங்கு ஆண் வயப்படுத்துபவன் - பெண் வயப்படுபவள் என்ற சூத்திரம் செயல்பட்டிருப்பது காணத்தக்கது.

''மிடிய னொருசெய் யாளனச் செய்
விளையக் காக்கும் செயல்போலப்
படியில் கல்வி விரும்பி னோன்
பாடம் போற்றும் அதுபோல
ஓடிவில் செங்கோல் மனுவேந்தன்
உலகம் புரக்கும் முறைபோலக்
கொடிய நோன்பு செய்தீன்ற
கொடியை வளர்த்தாள் மோகினியே''

(மாயையின் உற்பத்தி கதி - 49)

என மாயை வளர்க்கப்படும் முறை பேசப்படுகிறது. இங்கு அதிக நிலமற்ற வறியவன் அக்கறையுடன் நிலத்தை விளைவித்தலும், கற்கும் ஆர்வம் மிக்கவன் பாடம் போற்றுதலும் செங்கோல் செலுத்தக் கருதியோன் உலகு புரத்தலும் மாயையை மோகினி வளர்த்தலுக்கு உவமைகளாக விவரிக்கப்படுகின்றன.

''தன்னை நிந்தைசெய் வெண்ணகை மேற்பழிசார
மன்னி அங்கதுநிகரற வாழ்மனை வாய்தன்
முன்னி றற்திடுவேனென ஞான்றுகொண் முறைமை
என்ன வெண்மணி மூக்கணி ஒருத்தி நின்றிட்டாள்''

(மாயை பூசை கதி-11)

இப்பாடல் மாயைக்கு அணிகள் பல அணிந்து மகிழும் நிலையைப் பேசுகிறது. மாயையின் மூக்கிற்கு மூக்குத்தியும் மூக்கின் உள்ளிடத்துள்ள மூக்குத் தண்டின் கீழ் புல்லாக்கும் அணிகின்றனர். புல்லாக்குத் தலை கீழாகத் தொங்கும் காட்சி, மாயையின் பல் ஒளிக்கும் அழகிற்கும் வெட்கி, வெண் முத்தாலாகிய புல்லாக்கு நான்று கொண்டு தொங்குவது போல் உள்ளது என உவமிக்கப்படுகிறது. இங்கு இல்பொருள் உவமை இடம் பெற்று மாயையின் அழகிற்கு அழகு சேர்க்கிறது.

''பான லங்கருங் கண்ணிபோ கியகொடும்பாலை
யானை தன்புழைக் கைநிகர் துளியிடை விடாமல்
வான நின்றுபெய் யினுந்தழற்பட்ட வல்இரும்பின்
மேன கந்நெறி திவலைபோற் சுவறுறும் விரைந்து'

(மாயை கோலாகல கதி - 49)

மாயை அல்லமரைக் கண்டு மயக்குற்று அவரைப் பின் தொடர்ந்து பாலை நிலத்துவழி செல்லும் காட்சியை எடுத்துக் காட்டுகிறது. யானையின் துதிக்கை போல் மழைத்தாரை இடைவிடாமல் பெய்யினும் தழலிற் பாய்ந்த இருப்பின் மேற்பட்ட நீர்த்துளிகள் போன்று காய்ந்து போகும் படியான நிலப்பகுதி என பாலை நிலத்தின் கொடுமை சுட்டப்படுகிறது.

''நாடிய ஆடி நிழலென அணைமேல்
நண்ணுறத் தோன்றிய இறையை
ஓடினள் விழுந்து தழுவுறத் தழுவ
உறாமையால் அணைமிசை விழுந்தே
ஆடிய னிழலைப் பற்றிநீட் டியகை
ஆடியில் தாக்க நின்றழுது
வாடுறு மழலைப் பேதையே போல
வருந்தினள் மதர்விழி மாயை''

(பிரபுதேவர் வந்த கதி பாடல் - 67)

இப்பாடலில் மாயையின் பிடியில் சிக்காமல் ஆடி நிழல் போன்று அருவமாக விளங்கும் அல்லமரின் தன்மையும், கண்ணாடியில் தோன்றும் நிழலைப் பற்றுதற்குக் கை நீட்டி ஏமாற்ற முற்று வருந்தும் மழலை போன்று துயருறும் மாயையின் நிலையும் 'ஆடி நிழல் பற்றுதல்' என்னும் உவமை வாயிலாகத் தெளிவுபடுத்தப்படுகின்றன.

''இன்பினால் அன்பர் பெறற் கெளியனாம்
எனச் சூளொன் றறைந்துவந்து
வன்பினால் பெறவேண்டி நின் றழிந்தாய்
இது தகுமோ மாயை மாதே
முன்பினாக் கடுவிதைத்துக் கரும்பாக
வேண்டி மிகமுயன்று நெஞ்சில்
துன்பராய்த் திரியுமவர் போலென்றான்
மாயைதனைத் துரக்க வல்லான்''

(மாயை கோலாகல கதி-73)

கசப்பான விஷத்தை விதைத்து அதை ருசியான கரும்பாக்க வேண்டி வீணே முயலுதல் போன்று அன்பினால் பற்றுதற்கு எளிய என்னைச் சூளுரைத்து வன்மையில் பெற வேண்டி அழிகின்றாய் மாயையே'' என்று அல்லமர் மாயைக்கு அறிவுறுத்தி அவள் வயப்படாமல் விலகும் செயலை இப்பாடல் காட்சிப்படுத்துகிறது.

சிவபெருமானை வயப்படுத்துவேன் என்று சூளுரைத்துச் சென்ற மாயை தன் எண்ணத்திலும் செயலிலும் தோல்வியுற்று உமையம்மையை நாடி கைலாயம் வந்தடைகிறாள் எனக் காப்பியக் கதை நகர்கிறது.

சிவப்பிரகாசரை ஆதரித்த அண்ணாமலை ரெட்டியார் சிவப்பிரகாசர் இல்லற வாழ்வை மேற்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார். அதற்கு சிவப்பிரகாசர் பின்வருமாறு விடையளிக்கின்றார்.

''சேய் கொண்டா ருங்கமலச் செம்மலுட னேயரவப்
பாய் கொண்டா னும்பணியும் பட்டீச் சுரத்தானே
நோய் கொண்டா லுங்கொளலாம் நூறுவய தளவிருந்து
பேய் கொண்டா லுங்கொளலாம் பெண்கொளல் ஆகாதே''.

இத்தனிப்பாடலில் நூறு வயது வரை உயிருடன் இருந்து நோய் கொண்டு உழன்றாலும் உழலலாம். பேய் பிடிக்கப்பட்டுத் துன்புற்றாலும் துன்புறலாம். ஆனால் இதனினும் துயர் மிகுந்த பெண் கொள்ளுதல் தகாது என சிவப்பிரகாசர் அண்ணாமலை ரெட்டியாரிடம் கூறுவதன் வாயிலாகப் பெண் பற்றியும் பெண்ணுடன் வாழும் இல்லற வாழ்வு பற்றியும் சிவப்பிரகாசர் கொண்டிருந்த கருத்தாக்கம் புலப்படுகிறது.

ஆண் - பெண்ணின் ஆளுமை குறித்த சமூகக் கருத்தாக்கமும், தமிழ் இலக்கிய மரபும், படைப்பாசிரியர் தம் அறிவுருவாக்கமும் இணைந்த ஆண் - பெண் குறித்த ஆளுமை மாறுபாட்டுச் சிந்தனையை வெளிப்படுத்தும் பிரபுலிங்க லீலையில் சிவப்பிரகாசர் தம் சிந்தனை வெளிப்பாட்டிற்கு உவமையை எடுத்தாளும் விதம் எண்ணுதற்குரியது.

95. சிவப்பிரகாசர் கற்பனையில் நிலவு

ஜெ. ஜெயவாணிஸ்ரீ, தஞ்சை.

கற்பனை என்பது எளிய காட்சிகளையும் தன் இனிய கற்பனையைக் காலத்தால் அழியாதவாறு நேரில் கண்ட காட்சியைப்போல் நினைவுக்குக் கொண்டு வந்து சுவைபட படைத்து இன்பமூட்டுவதாக அமைவது. இதில் இலக்கிய உலகின் அமர காவியமாக ஆக்கும் வல்லமை, திறன் படைத்த கற்பனை களஞ்சியமாகத் திகழ்பவர் சிவப்பிரகாசர் ஆவார். ''திருவெங்கைக் கலம்பகத்தில்'' காணப்படும் பாடல்களில் நிலவினைக் கூறும் ஆதார தோற்றங்களைக் கொண்டு பகுப்பளவையும், அனுமானங் களையும் ஒட்டியதாக அமைந்துள்ள பாடல்களின் பாங்கினை இவ் வாய்வில் சிறுதுளியாக பகர்கின்றேன். சிவபெருமானின் தலையில் சூடிய நிலவைக் கண்ட சிவப்பிரகாசர், தம் படைப்பில் தொட்ட இடமெல்லாம் கற்பனை நிறைப்பட 'நிலவு' பற்றிய கற்பனைகளை இவ்வாய்வில் இலக்கணத் துணையுடன் கொடுத்திருக்கிறேன்.

சிவபெருமான் அணியும் நிலவு

தக்கனின் 27 பெண்களை மணந்த சந்திரன், உரோகிணியின் மீது மட்டும் அதிக காதலுற்றார். இதனையறிந்த மற்ற பெண்மக்கள் சந்திரனை தேயும்படி சாபமிட்டனர். தினந்தோறும் தேயும்படி சாபம் பெற்ற சந்திரன், செய்வது அறியாது முழுமுதற் கடவுளாம் சிவபெருமானிடம், தஞ்சம் அடைந்தார். சிவனும், சந்திரனின்பால் மனமிரங்கி துன்பத்தை நீக்கும் பொருட்டாக, தஞ்சமென வந்த உன்னை, நான் என் தலையில் சுமக்கிறேன். நீ நாளும் வளரவும் வரம் அளிக்கிறேன் என அருளி, தன் தலையிலே பிறையாக கூடிய அற்புதத்தை நாம் இன்றும் உணர முடிகிறது. சந்திரனை நிலவு என்றும், நிலா என்றும் கூறுவது மரபு. இதில் சிவப்பிரகாசரின் கற்பனை வயமாக மருட்கையில் கூறும்போது,

மருட்கை கற்பனை

சீர்பூத்த நிறைமதி மான் திருக்கரம் கொண்டு அம்மதியை
ஏர்பூத்த சடாமவுலிக்கு இளையாஈர்ந் தனையிருத்தி
மற்றைய ஓர் பகவுமணி மார்பகத்தில் கிடத்திமைப்பக்
கொற்றவநீ இருங்கேழல் கோடெனப் பூண்டருளினை கொல்?"

(1)

முழு நிலவினை எடுத்து, அதிலமைந்த மானினை தம் திருக்கரத்தில் ஏந்தினார். சந்திரனை வகிர்த்து ஒரு பகுதியைத் தம் சடையில் பொருத்திக் கொண்டார். மற்றொரு கூறினைத் திருமார்பகத்தில் பன்றிக்கொம்பாகப் பூண்டு கொண்டார். இவ்வாறு நிலவையும், பன்றிக் கொம்பையும் கற்பனை செய்து பாடிய பாங்கில் சிவப்பிரகாசரின் கற்பனை நயம் ம்ருட்கையை நினைவு கூர்கிறது.

மெய்ப்படு கற்பனை

காணாமல் அயன் தேடும் நின்முடிக்கண்
கண்ணப்பன் தொடுகழற்கால் வைத்த போதில்
கோள்நாகம் முறிந்ததுவோ குளிர்வெண் திங்கள்
கொழுந்து பொறாது ஒதுங்கிற்றோ? (92)

கண்ணப்பர், இறைவன் மேல் கொண்ட அன்பினால் தினமும் மாமிசத்தை வைத்து படைத்து வந்தார். அவ்வாறு படைத்து வரும் காலத்தில் கண்ணப்பரின் பக்தியை உலகுக்கு உணர்த்த நினைத்த இறைவன், தன் கண்ணில் இரத்தம் கசிய செய்தார். இதனைக் கண்ட கண்ணப்பர், ''ஊனுக்கு ஊனே துணை'' என எண்ணி தன் கண்ணையே கொடுக்க முன்வந்தார். ஒரு கண்ணை பொருத்திய உடன் அக்கண்ணில் இரத்தம் கசிவது நின்றது. மற்றொரு கண்ணில் மீண்டும் இரத்தம் கசிந்தது. இதனைக் கண்ட கண்ணப்பர் தம் திருவடியை எடுத்து சிவபெருமானின் கண்ணில் பதித்தார். இதனை ''நாளாறில் கண் இடர்ந்து அப்பிய'' என்ற பாடலில் அறியலாம். அதாவது, இறைவனின் மீது தலைபதிக்கும் அடியார்கள் தாள் பதித்த போது, செஞ்சடையின் மீதிருந்த பாம்பு நசுங்கியதோ? இளம்பிறை வலி பொறுக்க முடியாமல் ஒதுங்கியதோ? என கருணை மேம்பட அவலங்கொண்டு மன உணர்வில் இரங்கி அழுகை மெய்ப்படவும் கற்பனை தோன்ற சிவப்பிரகாசர் பாடிய பாங்கு நினைவில் அழியாது நிற்கும்.

நகைச்சுவை கற்பனை

''ஆயிழை மகளிர்வாழ் அகங்கள் தோறுமுன்
நீஇரும் பலிகொள நினைந்து வெங்கையில்
தூயநின் சடையினில் சோமன் சுற்றியே
ஏயினை வெற்றரை யாகி என்னையே'' (12)

தாருகாவன முனிவர் சிவனைப் புறக்கணிப்பவர். அவரின் செருக்கினை நிலைகுலையச் செய்ய, சிவபெருமான் திகம்பர மேனியராய் பிரமகபாலம் ஏந்திச் சென்றார். தாருகாவன முனிவருக்கும், அவரது மனைவியின் செருக்கையும், மற்ற மகளிரின் பேதமை நிறையழியவும்,

சந்திரனைக் குறிக்கும் சோமனை ஆடையாக அணிந்து சென்றார். இதனைச் சிலேடையாக சிந்தனை செய்து, ''இடுப்பில் அணியும் சோமனைத் தலையில் சுற்றி ஏகியது என்னை? என்று வினவ பித்தனாய் அவன் மகளிரை புலப்படுத்தினார் சிவப்பிரகாசர்.

இளிவரல் கற்பனை

பெண்கள் அட்டமி சந்திரனை பிறை நிலவாக, எண்ணி பொட்டாக நெற்றிக்கு உவமை காட்டுவர். உமையம்மையான பார்வதியும் தன் நெற்றி ஈடு இணையற்றது என எண்ணுவாள். ஆனால் நிலவோ தானே நிகர் என எண்ணியது. இதனால் உமையம்மை சினங்கொண்டு சிவனிடம், தங்கள் தலையில் பிறை சூடியது ஏன்? என்றாள்.

''அருமந்திரி மதியை உளங்கொளாமல்
குறைபாட்டு மதியைச்சூடி மேலும்,
பிழைபாட்டைப் பெருக்குவது ஏனோ? (51)

இப்பாடலில் பார்வதி மனம் கலங்க, வில்லங்க மதியினை சூடியது ஏன்? மேலும் மேலும் பிழையைத் தாங்கள் பெருக்கிக் கொண்டே போகுவதும் ஏனோ? என இறைவனைச் சாடினாள் என சிவப்பிரகாசர் கற்பனை மேம்பட சிவபெருமானிடம் வினவி, இதனால் நேருகின்ற வருத்தமும், இடையூறும் ஏற்பட அணிந்தது ஏன்? என மென்மையாக இளிவரல் பொருட்பட இறைவனை கேட்கும் பாங்காக அமைந்தது.

வெதும்புதலில் கற்பனை

வெண்ணிலா தண்ணிலவு மொழியாமல்
வெங்கதிரோன் போல் வெந்தழல் வீசுவதாக
வேறுபடக் கருதிய தலைவி, அதை
வெந்நிலவாய் நினைந்து வெம்புகிறாள்.

''என்றைக் கடுக்கும் இந்து'' (69)

இப்பாடலில் தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவிக்குச் சந்திரன் குளிர்ந்த ஒளிக்கற்றையாகிய அமுதைப் பொழிவதாகத் தோன்றாமல் சுட்டெரிக்கின்ற தணலாய் தோன்றியது தலைவிக்கு. இதில் நிலா எறிகிறது என்று கருதாமல் எரிக்கின்றது என்றே கருதுவாள் என சிவப்பிரகாசர் கற்பனை மேம்பட உயர்த்திக் காட்டுகிறார்.

தலைவனைப் பிரிந்த தலைவிக்கு அந்தி மாலையானது செந்தீ எனவும், வெண்ணிலாவானது வெண் தீயாகவும், கருதி,

''எம்தீவர மதிமாழ்கிச் செவ்வானம் எனும் கொடிய
செந்தீ வர, மதியாகும், வெண்தீ வரத்தேம்பும் எம்மேல்'' (95)

என மேலோங்கிப் பாடி, நிலவின் தாக்கத்தைக் கூறுகிறார்.

வெண்மையின் தாக்கம்

நெருப்பை விரும்பித் திருக்கரத்தில் ஏந்துபவர் சிவபெருமான். அதே வெம்மையினை கருதியே நிலவையும் விருப்பமாகக் கருதி செஞ்சடையில் சூடிக் கொண்டார்போலும் எனக் கருதி,

''உழைஎன வெங்கை உவப்பானார்
தழலுரு என்ற தரத்தாலோ,
விழஎமை இன்று வெதுப்பாமேல்
எழுமதி ஒன்றை எடுத்தாரோ'' (19)

என நிலவைச் சூடிக் கொண்டதற்கு காரணமாகக் கற்பனையை எடுத்து இயம்புகின்றார்.

ஒப்புநோக்கல்

''சேண்விசும் பெழுந்த திங்கள் நோக்கிக்
கருங்கடு உமிழ்ந்த கடல்மறித்தொரு
வெண்கடு உமிழ்ந்த தெனஉளம் வெதும்பும் (67)

பாற்கடலை கடைந்தபோது முதலில் வெளிப்பட்டது விடம். அடுத்தாற்போல் வெளிப்பட்டது சந்திரன். இதனைச் சிவப்பிரகாசர் கூறும் கற்பனைத்திறனில், தலைவி கூற்றாக, ''முன்னையது தோன்றியது கருநிற விடம். பின்னையது தோன்றியது வெண்ணிறமான விடம் என விடத்தையம், நிலவையும் விடமாக பாவித்தது தலைவிக்கு என ஒப்புநோக்கும் பாங்கு மனதில் நிற்பவையாக ஒவ்வொருவருக்கும் நினைவில் நிற்கும்.

மெய்ப்பாடு கற்பனை

''குருமதி முனியேல் என்பாள்
கும்பிடு கின்றேன் என்பாள்'' (62)

தலைவியானவள், ''சந்திரனிடம் தன்னை வருத்த வேண்டாம், பொலிவான நிறம் பொருந்திய மதியே'' என அன்புடன் விளித்துத் தொழுதாள். அஞ்சினாள், கெஞ்சினாள். பின் விஞ்சி தவித்தாள். இதனால் தன்பால் இருந்த அசைவினால் வருகின்ற அழுகையை மெய்ப் பாடுசார் கற்பனையில் கூறினார்.

இளிவரல் பொருண்மை

தலைவனுடன் கூடியிருந்த தலைவிக்கு நெற்றி பொலிவுற்றிருந்தது. இதனால் சந்திரமதி தோற்றுப்போனது. இதனைக் கண்ட திங்கள் பகை மேலோங்கி பழி வாங்கத் தக்க தருணம் வருமென காத்திருந்தது (பாடல் 13) இல் தலைவியை விட்டு தலைவன் பிரிந்து செல்லும்

நேரம் வந்தது. இதனை அறிந்த சந்திரன், தலைவியின் மேல் தழலெனக் கதிரைச் சொரிய, அதனை ஆற்றாத தலைவி தோற்றாளாகி வாட்டாதே! என வருந்தி நிலவினை வேண்டினாள் தலைவி என சிவப்பிரகாசர் எடுத்துரைக்கிறார்.

மதியைச் சாட்டுதல்

> **பரவு வெங்கைப் பழமலை நாட்டுளேன்**
> **வெருவ வெந்தழல் வீசுகின்றாய் மதீ!**
> **பரிவி லாவுனைப் பாம்பு கடிக்கநீ**
> **மருவு பெண்பழி மாற்றிட வல்லையோ?** (27)

சந்திரன், உரோகிணியைப் போற்றி ஏனைய மனைவியரைப் புறக்கணித்துப் பெண்பாவம் பெற்றான். அதனால் தானோ, என்னவோ கரும்பாம்பாம் இராகுவினால் கௌவப் பெற்றான். அப்பாவம் போதாதென இன்று இங்கு என்னையும் வருத்தம் அடைய செய்தது ஏனோ! மேலும், பெண்பாவம் உனக்கும் தேவை தானோ? என்று பட்டும் தெளியாத பாழ்மதி உடையை என அப்பால் மதியை சாட்டினார்.

சிவபெருமானின் தலையில் அமைந்த இளம்பிறையானது, தலைவனைப் பிரிந்த தலைவியின் நிலையிலும், நிலவினைப் பாம்பு கடித்து அவதியுறுமாறு சபிப்பதும், பாற்கடலைக் கடைய சந்திரன் தோன்றியதும், இராகுவாகிய பாம்பின் வாயிலிருந்து பிழைத்தற்குக் காரணம், சந்திரனுடைய நல்வினை மட்டுமல்ல, தலைவியின் தீவினையுமே காரணமாகிறது.

கண்ணப்பர், கால்பட்டு நிலவு கலங்கியதையும், உலகினர் தன்னுடைய மனபோக்கிற்கு தக்கவாறு அதன் உருவை மாற்றிக் கொள்வதும், வாழ்த்துவதும் சிவப்பிரகாசர் கற்பனை கனவில் ஆயுமுகத்தமாக அமைந்த பாங்கு நினைவில் என்றென்றும் நிற்கும்.

ஒருவரின் செயல் உருவத்தை மட்டுமல்லாமல் செயல்களைப் பொருத்தும் மதிக்கப்படும் என்பதை நிலவின் முகங்கொண்டு எண்வகை மெய்ப்பாட்டு தன்மையின் வகையில் இன்ப உணர்வுகளைத் தூண்டும் பாங்காக அமைந்திருப்பது சிவப்பிரகாச சுவாமிகளின் திருவெங்கைக் கலம்பகத்திற்கு கற்பனை களஞ்சியமாக மேன்மேலும் மெருகு ஊட்டுகிறது.

96. சிவப்பிரகாசர் உணர்த்தும் வாழ்வியல் நெறி

அர. ஜோதிமணி, திருப்பூர்.

இன்று நாம் கணினி யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மனித உழைப்பை இயந்திரங்களின் பெருக்கம் சுருக்கி விட்டது. என்றாலும், மனித இனம் அதிகமான மன இறுக்கத்துக்குள்ளாகி தவித்துக் கொண்டிருக்கிறது. 'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்ற நிலை மாறி, 'கொடிது கொடிது மானிடராய்ப் பிறத்தல்' என்ற நிலையே வளரும் சூழல் இன்று நிலவுகிறது.

''இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்'' (குறள் - 448)

என்பதற்கிணங்க, சான்றோர்களின் துணையை நாடாமல் வன்முறைக்கு வாழ்வளித்து ஊழல்களுக்கு உறவுக்கரம் நீட்டுகிறோம். இந்நிலை மாற, மக்களை நல்வழிப் படுத்த எழுந்த நீதி நூல்களை நாம் வாழ்வியல் வழிகாட்டியாகக் கொள்ள வேண்டும். இவ்வகையில் துறைமங்கலம் சிவப்பிரகாசர் எழுதிய 'நன்னெறி' என்னும் நீதி நூல் கூறும் வாழ்வியல் கருத்துக்களை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

அன்பு

அன்பு மனிதனிடத்து இருக்க வேண்டிய அடிப்படைப் பண்பு. இப்பண்பில்லாதவன் இவ்வுலகில் வாழ்தல் இயலாது என்பதை,

''அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று'' (குறள் - 78)

என்று மொழிகிறது திருக்குறள். சிவப்பிரகாச சுவாமிகளும்,

''மொழியிலார்க் கேது முதுநூல் தெரியும்
விழியிலார்க் கேது விளக்கு'' (நன்னெறி - 15)

என்னும் உவமை மூலம் அன்பில்லாதவரைக் குருடருக்கும், ஊமையருக்கும் ஒப்பிடுகிறார். இவர்கள் கண் இருந்தும் குருடரே, வாய் இருந்தும் ஊமையேயாதலால், உலகத்தோடு ஒன்றி வாழ அனைவரிடத்தும் அன்பு செலுத்த வேண்டும் என்பதை அறிய முடிகிறது.

அறம்

தன்னலம் கருதாது உலக உயிர்களின் நலன் கருதிச் செய்யப் படுகின்ற நற்செயல்களே அறம் எனப்படுகின்றன. இவ்வறம் இல்லறம், துறவறம் என இரு வகைப்படும்.

ஆணும், பெண்ணும் இணைந்து வாழும் அகவாழ்க்கையில் இருந்து கொண்டே புறத்தே செய்கின்ற அறம் இல்லறம் எனப்படுகிறது.

இல்லத்தைத் துறந்து தவமேற்கெண்டு வாழும் நிலையில் செய்கின்ற அறம் துறவறம் எனப்படுகிறது.

இல்லறம்

இல்வாழ்க்கை மேற்கொண்ட கணவனும், மனைவியும் ஒத்த கருத்துடன் இணைந்தே அறத்தைச் செய்தல் வேண்டும். தனித்துச் செய்யும் அறம் சிறப்புடையதன்று. அதனால்தான் கோவலனைப் பிரிந்திருந்த கண்ணகி,

''அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை'' (சிலப். வழக். 71-73)

என்று வருந்துவதாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது. இல்லத்தில் கணவனும் மனைவியும் கண்களிரண்டும் ஒரே காட்சியைக் காண்பது போல உள்ளத்தில் மாறுபாடு இல்லாது ஒத்த கருத்துடன் அறம் செய்ய வேண்டும் என்கிறார் சிவப்பிரகாசர். மேலும் விதி விலக்குகளைப் பகுத்தாய்ந்து அறம் செய்ய வேண்டும். இல்லையென்றால் வலிய கதவிருந்தும் தாழ் இல்லாதது போல அவர்கள் செய்யும் அறம் பயனற்றதாகி விடும் என்கிறார்.

''காதன் மனையாளுங் காதலனும் மாறின்றித்
தீதி லொருகருமஞ் செய்பவே'' (நன்னெறி - 6)

''பன்னும் பனுவற் பயன்றே ரறிவிலார்
மன்னும் அறங்கள் வலியிலவே'' (நன்னெறி - 32)

இதன்வழி இல்லத்தில் ஒற்றுமையும் பகுத்தறிவும் கொண்டு செய்யும் அறத்தின் பயனை அறிய முடிகிறது.

துறவறம்

துறவு வாழ்க்கை மேற்கொண்ட நிலையில், தவசிகள் காடு, மலை, குகை என்று தவ வாழ்க்கைக்கு இடையூறு ஏற்படா இடங்களை நாடிச் செல்கின்றனர். ஏனெனில்,

''பகர்ச்சி மடவார் பயிலநோன் பாற்றல்
திகழ்ச்சி தரு நெஞ்சத் திட்பம் - நெகிழ்ச்சி பெறும்''
(நன். 23)

மனத்தளர்ச்சி ஏற்படாதிருக்க இறைவனை இடைவிடாது தியானிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் புறச்சூழல்களால் வரும் துன்பத்தை அவர்கள் வென்று வாழலாம் இதையே,

''உடற்கு வருமிடர் நெஞ்சோங் குபரத் துற்றோர்
அடுக்கும் ஒருகோடி யாக - நடுக்கமுறார்'' (நன். 29)

என்னும் சிவப்பிரகாசரின் வரிகள் உணர்த்துகின்றன. இதனால் துறவறம் சிறக்க பெண்கள் தொடர்பின்றியும், இறைப்பற்று மிகுந்தும் இருத்தல் வேண்டும் என்று அறிய முடிகிறது.

கல்வி

''உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே'' (புறம் - 183)

என்று கல்வியின் இன்றியமையாமையைச் சங்க இலக்கியம் மொழிகிறது. இன்று வரை இக்கருத்துக்கு மாற்றுக் கருத்து இல்லை. வாழ்க்கைக்கு கண்போன்ற இக்கல்வியைக் கற்றவர்கள் செருக்கடையக் கூடாது அச்செருக்கு வல்லவனால் வெல்லப்படும் என்கிறார் சிவப்பிரகாசர்.

''உடலின் சிறுமைகண் டொண்புலவர் கல்விக்
கடலின் பெருமை கடவார்'' (நன். 26)

''ஆக்கும் அறிவா னலது பிறப்பினான்
மீக்கொள் உயர்விழிவு வேண்டற்க'' (நன். 22)

என்பதன் வழி, பிறப்பையோ, புறத்தோற்றத்தையோ கருத்தில் கொள்ளாது அறிவின் சிறப்பைக் கொண்டே ஒருவரை மதிக்க வேண்டும் என உணர முடிகிறது.

நட்பு

உறவு நிலைகளிலேயே உயர்ந்தது நட்பு. உள்ளப் பிணைப்பே நட்பை .உறுதிப்படுத்துகிறது. இந்த உறுதி எந்நிலையிலும் தளரக் கூடாது, தளர்ந்தால் நட்பு பெருமையிழந்து விடும்.

''நீக்க மறும்இருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கி னவர்பெருமை நொய்தாகும் - பூக்குழலாய்
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோற்
புல்லினுந் திண்மைநிலை போம்'' (நன். 5)

இங்கு நெல்லின் நீங்கிய உமியைக் கொண்டு இடையில் பிரிதலின் தொய்வை எடுத்துரைக்கிறார் சிவப்பிரகாசர். மேலும் நல்லோர் நட்பே

நன்மை பயக்கும், தீயோர் நட்பு கூடாது. பகையை வெல்ல வலியவருடன் சேர வேண்டும் போன்ற கருத்துக்களையும் கூறிச் செல்வதால் நண்பரைத் தேர்வு செய்யும் முறையையும் நட்பின் சிறப்பையும் அறிய முடிகிறது.

நிலையாமை

''நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு'' (குறள் - 336)

இவ்வுண்மையை உணராத, மக்கள் ஆசை கொண்டு அல்லல்படுகின்றனர். உயிருக்கோ உடைமைக்கோ அழிவு வருகின்றபொழுது வருந்தி அழுகின்றனர்.

''வருந்து முயிரொண்பான் வாயி லுடம்பிற்
பொருந்துத றானே புதுமை'' (நன். 12)

என்பதால் ஒன்பது துளைகளையுடைய இவ்வுடம்பை விட்டு உயிர் பிரிதல் இயல்பு, பிரியாது நீடித்தல் புதுமை என்று கூறி, இறப்பு வருமுன்னே அறத்தைச் செய்ய வேண்டுமென்று வலியுறுத்துகிறார் சிவப்பிரகாசர். நிலையாமையை உணர்ந்த அறிஞர்கள்,

''தொலையாப் பெருஞ்செல்வத் தோற்றத் தோமென்று''
(நன். 14)

செருக்கடையாது அனைவருக்கும் கொடுத்து மகிழும் வாழ்வியலை உணர முடிகிறது.

மனநலம்

விலங்குகளிடத்திருந்து மனிதனை உயர்த்திக் காட்டுவது மனம், இதையே

''ஆறறிவதுவே அவற்றொடு மனனே''

என்றார் தொல்காப்பியர், மனம் செம்மையாக இருந்தால்தான் மனிதன் செம்மையாக வாழ முடியும். அனைவரிடத்தும் இனிமையாகப் பேச வேண்டும், கடுஞ்சொற்களைத் தவிர்க்க வேண்டும். சினங்கொள்ளக் கூடாது, மனதில் நல்லெண்ணங்களே வளர வேண்டும். நன்மை பொருந்திய மனத்தையுடையவர் சொல்லும் கடுங்சொல்லும் இன் சொல்லாகவே கருதப்படும் என்று மொழிகிறார் சிவப்பிரகாசர்.

மனநலமுடையவர் செய்யும் அறச்செயல்களை அவரது வழியினரும் தவறாது தொடர்வர்.

''எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ - பைந்தொடீ

நின்று பயனுதவி நில்லா அரம்பையின் கீழ்க்
கன்று முதவுங் கனி'' (நன். 17)

என்பதால் ஒருவரின் பண்பு மரபு வழியாக அடுத்த தலைமுறைக்கும் அமைந்திருக்கும் என்பதை அறியமுடிகிறது. அதேசமயம் பெற்றோர் நல்வழி காட்டினால் பிள்ளைகள் வாழை அடி வாழையாக அவ் வழியைப் பின்பற்றி நடப்பார் என்னும் உண்மை விளக்கமுறுகிறது.

பெரியோர் இயல்பு

வாழ்வியல் நெறி உணர்த்தி வரும் சிவப்பிரகாசர் நல்லவரும், தீயவரும் இணைந்து வாழும் இவ்வுலகில், தோற்றத்தை வைத்து மக்களை மதிப்பிட முடியாதாகையால் அவர்களை அளந்தறியும் அளவுகோலாக அவர்களது பண்புகளைக் கூறி நமக்கு வழிகாட்டுகிறார்.

''வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு'' (குறள் - 595)

என்பதற்கிணங்க, உள்ளத்தால் உயர்ந்தவர்களையே பெரியோர் என்கிறோம். இவர்கள் பிறர்க்குற்ற துன்பத்தைத் தமக்குற்ற துன்பமாகக் கருதி இரங்குவர். தம்மை நேசிக்காதவருக்கும் உதவுவர். தன்னலங் கருதாது பிறர் நலங்கருதி அவர் குறையை நீக்க முயல்வர். தம்மிடம் உள்ள பொருளுக்கேற்ப மிகுதியாகவும் குறைவாகவும் கொடுப்பர். ஒன்றும் கொடாதிரார், தம்மினும் தாழ்ந்தவராயினும் அவரிருக்கும் இடம் தேடிச் சென்று உதவுவர். பழிபாவங்களுக்கு அஞ்சுவர் என பெரியோர் இயல்பை நன்னெறி விளக்குகிறது.

பெரியோர் பிறர் நலங்கருதியே வாழ்வதால் சில விதிகளைக் கடைப்பிடிப்பர், தகுதியில்லாதவர்களுக்குக் கொடுக்க மாட்டார்கள்.

''நெல்லுக் கிறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி
புல்லுக் கிறைப்பரோ போய்'' (நன். 36)

என்னும் உவமை வழி சிவப்பிரகாசர் பெரியோர்களின் தக்காரைப் போற்றும் பண்பைச் சிறப்பிக்கிறார்.

சிறியோர் இயல்பு

உள்ளத்தில் உயர்ந்த எண்ணங்கள் இல்லாதவர்களை சிறியோர் என்கிறோம்.

''குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்'' (குறள் - 504)

என்னும் வழக்கைக் கடைப்பிடிக்கத் தவறி குணத்தை விட்டு குற்றத்தையே காணுதல் சிறியோர் இயல்பு.

''உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே'' (நன். 24)

என்கிறது நன்னெறி. சிறியோரிடம் ஈகை குணமிருக்காது, பழி பாவங்களுக்கு அஞ்சமாட்டார்கள், கல்வியறிவுடையவரை விரும்ப மாட்டார்கள், இவர்களால் மக்களுக்கு நன்மையேதும் நிகழப்போவதில்லை என்பதைச் சிவப்பிரகாசர்,

''காயினு மாகும் கதலிதா னெட்டிபழுத்
தாயினும் ஆமோ அறை'' (நன். 28)

என்று வினவுதன் மூலம் உணர முடிகிறது.

மக்கட்குத் தேவையான கருத்துக்களைக் கூறிவரும் சிவப்பிரகாசர் இறுதியாக,

''பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னும் அறிஞரைத் தாம் மற்றொவ்வார்'' (நன். 40)

என்று கூறுவதன் மூலம் பொருளிருந்தாலும் அதை நன்னெறியில் செலுத்த கற்றறிந்த சான்றோர்களின் துணை தேவையாதலால் மன்னனினும் புலவரே உயர்ந்தவர் என்னும் உண்மையை உணர்த்தி நம்மை நெறிப் படுத்துகிறார்.

அனைவரிடத்திலும் அன்பு செலுத்த வேண்டும். இல்லறத்தில் கணவனும், மனைவியும் ஒத்த கருத்துடனும், பகுத்தறிவுடனும் அறம் செய்ய வேண்டும். துறவறத்தில் இறைபக்தியும், மன உறுதியும் மேலோங்கியிருக்க வேண்டும். கற்றோரை அறிவைக் கொண்டே போற்ற வேண்டும். நல்ல நண்பர்களோடு சேர்வதால் நன்மை பயக்கும். இடையிற் பிரியா நட்பே சிறப்புடையது. உடலைவிட்டு உயிர் பிரிவது இயல்பு. அனைவரிடத்தும் இன்சொல்லே பயன்படுத்த வேண்டும். கோபத்தைத் தவிர்க்க வேண்டும். தந்தையின் பண்பு மரபுவழி மைந்தனுக்கும் அமையும். பெரியோர் தன்னலங் கருதாது பிறர் நலங் கருதியே வாழ்வர். சிறியோரால் எவ்விதப் பயனும் ஏற்படாது. கற்றறிந்த சான்றோரை வழிகாட்டியாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பன போன்ற வாழ்வியல் கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டன. இவற்றைக் கடைப்பிடித்தால் அமைதியும், இன்பமுமாக இவ்வுலகில் வாழலாம்.

97. சிவப்பிரகாசர் என்ற கவிதா சார்வபௌமர்

கே. ஸ்ரீநிவாசன், சென்னை.

தமிழ்நாட்டின் பழம்பெரும் நகரங்களுள் ஒன்றாகிய காஞ்சிமாநகரில் பதினேழாம் நூற்றாண்டில் அவதரித்த சிவப்பிரகாச சுவாமிகள் ''கற்பனைக் களஞ்சியம்'' என்றும் ''வள்ளுவப் பிரகாசர்'' என்றும் போற்றப்பட்டு இணையிலாப் புலவராய்த் திகழ்ந்தார்.

''கவிகொள் சங்கத் தமிழ்க் குழவிக்கொரு
செவிலியென்ற சிவப்பிரகாசனே''

என ஓர் பெரும்புலவர், சிவப்பிரகாச சுவாமிகள் தமிழ்மொழியை, செவிலி என்பாள் பேணிக் குழந்தையை வளர்ப்பதுபோல், பாங்குற வளர்த்தார் எனப் புகழாரம் சூட்டுகிறார்.

''கவிதா சார்வபௌமர்'' எனத் தமிழறிஞர்களால் பெரிதும் பாராட்டப்பட்ட சிவப்பிரகாசர், தமிழ் பழுத்த உளம் கொண்டும், தவம் பழுத்த துறவு பூண்டும், பன்மொழி வித்தகராகவும், பல்துறை வல்லுநராகவும் விளங்கி, இலக்கியம், செய்யுள், உரைநடை, காப்பியம், தனிப்பாடல்கள் முதலியவற்றைத் தமிழுலகிற்கீந்து, சைவ சமயத் தத்துவத்தில் தவழ்ந்து, இறைவனடி வேண்டி,

''பெருகுறு தமிழ்ச் சொன்மலர் நினக்கணியும்
பிறவியே வேண்டுவன் தமியேன்''

எனும் வரிகள் மூலமாகத் தன் வாணாளின் குறிக்கோளை விளக்குகிறார். இவர்தம் புலமை நயத்தையும், கற்பனைச் சிறப்பையும், மொழிவளத்தையும், பக்திப் பெருக்கையும் அன்னார் தீட்டிய நூல்களின் வாயிலாக அறியலாம். இப்பெருமையை ஓர் கட்டுரை மூலம் சொல்வது எளிதன்று. இருப்பினும் சுவாமிகளவர்களின் பற்பல சிறப்புகளை ஓரளவு கேட்டு மகிழ்வோமாக!

காஞ்சியில் குமாரசாமி என்ற சைவகுலப் பெரியாரைத் தந்தையாகக் கொண்டு சிவப்பிரகாசர், வேலையர் மற்றும் ஞானப்பிரகாசர் என்ற இரு தம்பிகளுடனும், ஞானாம்பிகை என்ற தங்கையுடனும், கி.பி. 1603-1654 வரை வாழ்ந்தார் எனத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் திருமதி சாந்தா அவர்கள் சிவப்பிரகாசர் பற்றிய தமது ஆய்வேட்டில் கூறியுள்ளார்கள்.

வீர சைவ சமய நெறிகளை நன்கறிந்து, சைவ சித்தாந்தத்தைத் தனது வாழ்க்கையில் குறிக்கோளாகக் கொண்டு, சிவத்தலங்கள் பலவற்றிற்கும்

சென்று, நூல்கள் பலவற்றை இயற்றி, தமிழ்மொழியை வளப்படுத்தி, சமுதாயத்தை நன்மார்க்கத்தில் கொண்டு செலுத்திய தனிப்பெருமை நம் சுவாமிகளவர்களைச் சாரும். துறைமங்கலத்தில் பல ஆண்டுகள் தங்கியிருந்தாலும், நல்லாற்றூரிலும் வாழ்ந்து சிவனடி எய்தியதாலும் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளெனவும், நல்லாற்றூர் சிவப்பிரகாசர் எனவும் அழைக்கப்பட்டார்.

சிவப்பிரகாசரின் உடன் பிறந்தோர் இல்லறத்தை ஏற்றுக்கொண்டனர். ஆனால் சிவப்பிரகாசரோ பிறவிப் பிணியிலிருந்து நீங்க ஈசனுக்குப் பணியாற்ற துறவறத்தை மேற்கொண்டார். இவருடைய இரு தம்பிமார் களும் சிறந்த புலமை பெற்று பல நூல்களை இயற்றியுள்ளனர். ஆனால் சிவப்பிரகாசர் எழுதிய இலக்கியப் படைப்புகள், காப்பியம், தலபுராணங்கள், சமய நூல்கள், செந்நெறிப் பாடல்கள் பலவகைப்பட்டன. இம்மூவரும் சேர்ந்து காளத்திப் புராணம் பாடியது தமிழிலக்கியவுலகில் ஒரு சாதனை யாகத் திகழ்ந்துள்ளது. காளத்திப்புராணத்தில் முதல் ஐந்து சருக்கங் களைக் கருணைப்பிரகாசர் பாடி மறைந்தார்; பின்னர் ஆறாவது, ஏழாவது சருக்கங்களை நமது சுவாமிகள் பாடிச் சிவனடி சேர்ந்தார்; கடைசியாக 8-வது, 9-வது சருக்கங்களைப் பாடி முடித்து, இளையவர் வேலையர் இறையெய்தினார்!

சிவப்பிரகாச சுவாமிகளின் ஞானாசிரியர் புகழ்பெற்ற சிவஞான பாலைய சுவாமிகளாவர். இஞ்ஞானாசிரியர் மயிலம், விருத்தாசலம் எனும் பழமலை முதலிய இடங்களில் மடாலயங்களில் பணியாற்றியவர். குருவிற்குச் சிறந்த சீடராய் விளங்கிய சிவப்பிரகாசர், தமது குருவிற்குக் காணிக்கையாக (1) சிவஞான பாலைய சுவாமிகள் பிள்ளைத்தமிழ் (2) தாலாட்டு, (3) கலம்பகம், (4) நெஞ்சுவிடு தூது முதலிய நூல்களை இயற்றிப் பெருமைப்படுத்தியுள்ளார்.

சுவாமிகள் பிரபுலிங்கலீலை என்ற கன்னட மொழியிலுள்ள ஓர் வீரசைவ சமய நூலைத் தமிழாக்கம் செய்து பெரும்புகழ் பெற்றார். இந்நூல் சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய ஒரே சிறப்புக் காவியமாகும். இக்காப்பியத்தை இவர் கி.பி. 1652-ஆம் ஆண்டில் இயற்றியதாகத் தெரிய வருகிறது. இக்காப்பியமும், மற்றும் தர்க்க பரிபாஷை என்ற சமஸ்கிருத நூலின் விளக்கத்தை நேர்த்தியாக தருக்க பரிபாடை என்ற தமிழ் நூலும், வேதாந்த சூடாமணி, சதமணிமாலை, சித்தாந்த சிகாமணி போன்ற நூலும் சுவாமிகளின் பன்மொழிப் புலமைக்குச் சான்று பகர்கின்றன. தூய தமிழில் கற்பனை வளத்தையும், மொழிநயத்தையும், இலக்கியச் செறிவையும் சிறிதும் வழுவாது அளித்த இப்பெருமான் சமஸ்கிருத, கன்னட, தெலுங்கு மொழிகளில் வெறுப்பு கொள்ளாமல் அம்மொழிகளை மேன்மைப்படுத்தியது, நம் பின்மொழிப் பெருந்தகையின் மிகப் பரந்த நோக்கம் போற்றற்பாலது. கன்னட மொழியிலுள்ள பிரபுலிங்க லீலையைப் பெயரை கூட மாற்றாமல், தமிழில் சமஸ்கிருத பாத்திரங்

களை அவ்வாறே வைத்ததும், தர்க்க பரிபாஷையைக் கருத்துக்கள் பிறழாமல் அளித்ததும் மற்றும் தெலுங்கு பதங்களைக் கையாண்ட விதமும், சுவாமி களின் மொழி நேயத்தையும், பரந்த மனப்பான்மையையும் மற்றவர்கள் பின்பற்ற வேண்டும் என்று கூறுவது போல் அமைந்துள்ளது.

சிவப்பிரகாச சுவாமிகள் இலக்கணப் பயிற்சி பெறுவதில் ஆர்வம் கொண்டு, சிந்துபூந்துறைவாழ் வெள்ளியம்பலவாணத் தம்பிரானவர்களை அணுகி தமது விருப்பத்தைத் தெரிவித்தார். அதுபோழ்து சுவாமிகளின் புலமையைச் சோதிக்க, அவர் 'கு' என்ற எழுத்தை முதலிலும், கடை யிலும் வைத்து, இடையில் 'ஊருடையான்' எனும் தொடரைச் சேர்த்து ஓர் வெண்பா பாட இயலுமா எனக் கேட்டபோது, நம் சுவாமிகள் தயங்காது உடனேயே கீழ்க்கண்ட சிறப்பான வெண்பாவைப் பாடி முடித்தார்;

''குடக்கோடு வான்எயிறு கொண்டார்க்குக் கேழல்
முடக்கோடு முன்ன மணிவாற்கு - வடக்கோடு
தேருடையான் தெய்வுக்குத் தில்லை தோன் மேற்கொள்ளல்
ஊருடையான் என்னும் உலகு''.

இவ்வெண்பாவைச் செவியுற்ற வெள்ளியம்பலவாணத் தம்பிரான வர்கள், சுவாமிகளின் புலமையைப் பாராட்டி, அவருக்கும் அவரது இரண்டு தம்பிமார்களுக்கும் ஐந்திலக்கணத்தைப் பதினைந்தே நாட்களில் பாடி முடித்தார்.

இலக்கண அறிவும் இலக்கிய ஞானமும் ஒருங்கே அமையப் பெற்ற நம் சுவாமிகள், சிதம்பரம், திருவண்ணாமலை, திருவெங்கை, விருத்தாசலம், துறைமங்கலம், திருக்கூவம் முதலிய தலங்கட்குச் சென்று, தலபுராணங்கள் இயற்றியுள்ளார். திருக்காளத்திப் புராணம் மட்டும், மூன்று சகோதரர்களாலும் இயற்றப்பட்டது. இதன் விந்தையென்னவெனில் முதல் 5 சருக்கங்களைப் பாடி கருணைப் பிரகாசர் மறைந்தார்; 6, 7-வது சருக்கங்களை இயற்றி நம் சுவாமிகள் சிவனடி சேர்ந்தார்; பின் 8,9-வது சருக்கங்களைப் பாடி முடித்து வேலையர் இறையெய்தினார்.

இத்தல புராணங்களில் சுவாமிகளின் பல்வகைப்பட்ட புலமை நன்கு வெளிப்படுகிறது. சான்றாக, திருக்கூவப் புராணத்தில் வரும் வரிகள் எத்துணை நேர்த்தியாயுள்ளன.

''மருளை ஒத்தன முப்புரம் அப்புரம் மருவும்
இருளை ஒத்தனர் அவுணரவ் விருளினை யிருக்கும்
அருளை ஒத்தன் முகுந்தனல் விருளினையுடைய
பொருளை ஒத்தனன் அப்பொருளாகிய புராரி!

அதே போன்று சீகாளத்தித் தல புராணத்தில் தான் தீட்டிய கண்ணப்ப சருக்கத்தில், கீழே கொடுக்கப்பட்டுள்ள பாசுரங்கள் கண்ணப்பரின் மனநிலையை எவ்வாறு விவரிக்கின்றன என்று பாருங்கள்! இறைவன் கண்ணில் குருதி வந்ததைக் கண்ணுற்ற கண்ணப்பர்,

ஓடுவன் மீள்வன் வீழ்வனுருளுவன் எழுந்து விம்மல்
நீடுவன் அந்தோவென்பன் நெட்டுயிர்ப் பெறிவன் நெஞ்சம்
வாடுவன் பொங்கிப் பொங்கி வாய்விட்டு முகத்தைக் கையால்
மூடுவன் எழுவன் கைகள் மோதுவன் கற்களோடே!''

இவ்வாறு குமுறுகிறார்.

தனது கண்ணைப் பிடுங்கி அப்பியபின் இறைவன் கண்ணில் குருதி நின்று விட்டதைப் பார்த்தபின், அவர் பரவச மகிழ்ச்சியைப் பாருங்கள்.

''ஓடினான் திசைகள் எல்லாம் உடம்பெலாங் குலுங்க நக்கான்
பாடினான் வாயில் வந்த யெலாம் கைகள் கொட்டி
யாடினான் துள்ளித்துள்ளி ,யாரவாரித்து நின்று
நாடினான் செய்த செய்கை நன்றுநன்றென வியந்தான்''

என்னே சிவப்பிரகாச சுவாமிகளின் சிறப்புப் படைப்பு!

பிரபுலிங்கலீலை என்ற காப்பியம், ஞானாசிரியர் குறித்து எழுதிய நூல்கள், மற்ற சிற்றிலக்கியங்கள், சைவ சமய நூல்கள் யாவும் போற்றத் தக்கவையாகும். நன்னெறியும், நால்வர் நான்மணிமாலையும் சுவாமிகளின் கவிதை மேம்பாட்டையும், கற்பனை நயத்தையும், மொழி வளத்தையும் காட்டுகின்றன. நாற்பது மணியான வெண்பாக்களில் செந்நெறி பற்றி நன்னெறியில் தூய தமிழில் சமுதாய மேம்பாட்டிற்கான கருத்துக்களை அறிந்துள்ளார். அதே போன்று நால்வர் நான்மணி மாலையில் சைவசமயக் குரவர்களைப் பற்றிய சீரிய கருத்துக்கள் ஆய்வுநோக்குடன் தரப்பட்டுள்ளன. இதனைப் பெரியபுராணத்தின் சாரம் என்றே கூறலாம்.

இத்தகைய பெருமானைப் பேணிக் காத்த பெருமை அண்ணாமலை ரெட்டியார் எனும் விசயநகர வேந்தர் இரண்டாம் வேங்கடபதிராயர் காலத்தில் வாழ்ந்த வள்ளலைச் சாரும். இவர் சுவாமிகட்கு துறைமங்கலத் திலும், திருவெங்கையிலும் மடாலயங்கள் கட்டிக்கொடுத்து சுவாமிகள் சைவ சமயப்பணியும் தமிழ்ப்பணியும் ஆற்ற வகை செய்தார். இவ்வள்ளல் திருவெங்கையில் கட்டிய ஆலய ஈசனைப் பற்றி திருவெங்கைக் கோவை, திருவெங்கையுலா, திருவெங்கைக் கலம்பகம் எனும் மூன்று நூல்களில் பாடி, பேராளரின் பெருமையையும் வெகுவாய் நன்றியுணர்வுடன் எடுத்துரைத்துள்ளார். இதே போன்று தமது குரு வெள்ளியம்பலவாணரை இகழ்ந்த ஓர் புலவரை, திருச்செந்தூரில் வாதில் வென்று, நிரோட்டக யமக அந்தாதி பாடி, அப்புலவரை தமது குருவிற்கு, நன்றியுள்ளத்துடன் அடிமையாக்கினார். மேலும் மானமே பெரிது, அன்பே சிவம் ஆகிய கோட்பாடுகளைத் தமது நூல்களில் வலியுறுத்தி, சமுதாய உணர்வை கீழ்க்காணும் வரிகளில் வெளியிட்டுள்ளார்.

''மானமும் உயிரும் ஒருங்கு நில்லாத
வழியுயிர் தன்னையே விடுத்துத்
தானுறு பொருளாய் மானமே கொளும்''

என்றும்

''ஆசறுமனத் தெழும் அன்பை அன்றியே
பூசனை உவக்கின் புரிவாரில்

என்றும் கூறுகிறார்.

இவ்வாறு பெரும்புலவர்களால் போற்றப்பட்ட காப்பியத்தையும், மற்ற பல்வகை நூல்களையும் இயற்றிய இப்பெருமான், ''மனிதன் இதைச் செய்யவேண்டும், இதைச் செய்யக்கூடாது'' என்று செந்நெறி பரப்பி, சைவக் கருத்துக்களைத் தெரிவித்து தமிழ்மொழியைச் செம்மைப் படுத்திய இப்பெரும்புலவர், மொழியின் பெருமை இறைவனைப் பாட உகந்தது என்று கூறி, சிவநாம மகிமையை

''நாக்கினானு நயனங்களானுமிவ்
வாக்கையானு மருஞ்செவியாது நம்
மூக்கினானு முயங்கிய தீவினை
தீர்க்கலாகுஞ் சிவசிவ வென்மினே''

என பதினோறு பாடல்கள் அடங்கிய சிறுநூலில் கூறுகிறார். சோணசைல மாலை எனும் நூலில், தமக்கு அன்பும், அருளும், ஒழுக்கமும், சால்பும், ஐம்பொறிகளை வெல்லும் வீரமும், தந்து பிறவிநோய் களைந்து எனை ஆட்கொள்வாய் என்று கூறி

''சிந்தனை கலங்கியினை விழியிருண்டு
செவிகளுஞ் செவிடு பட்டைம்மேல்
உந்திடவுயிர் போம்பொழுது நின்வடிவ
முளங்கொலும் பரிசெனக் கருளாய்!''

என இறைவனை வேண்டுகிறார்.

நெறியை வளர்த்து, இல்லற துறவறங்களை உலகத்தார்க்குய்யும் வகையில் செப்பி, மொழி வெறுப்பற்று, தமிழ்ப்பற்று, ஈசனைப் போற்றி, வீடுபெற செந்நெறி உணர்த்திய பெரும் தமிழ்ப்புலவராக உலகத்தோருக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினார் இச்''சார்வபௌமரா''கிய சிவப்பிரகாச சுவாமிகள்.

அத்தகைய பெருமை வாய்ந்த பெருந்தகை யவர்களின் இலக்கியங் களைப் படித்து உய்வோமாக!

மருவே மலரே சரணம் சரணம்
மணியே யொளியே சரணம் சரணம்
திருவே பொருளே சரணம் சரணம்
தேனே யமுதே சரணம் சரணம்
இரவே பகலே சரணம் சரணம்
எமையாளுடையாய் சரணம் சரணம்
அருவே யுருவே சரணம் சரணம்
அருளாகரனே சரணம் சரணம்.

98. சிவப்பிரகாசர் காட்டும் நன்னெறி

ம. ஷீலா ஸ்ரீநிவாசன், வில்லுக்குறி.

இடைக்காலப் புலவர்களில் அறிஞராயும், கவிஞராயும், ஞானி யாயும் விளங்கியவர் சிவப்பிரகாசர் சுவாமிகள். பல்துறை நிலை களிலான கூறுகளை உடையன இவரது பாக்களாம். தாம் உணர்ந்த ஞானத்தை மட்டுமன்றி அறநெறிகளையும் பகிர்ந்து கொண்டவர் சுவாமிகள். இவரின் 'நன்னெறி' மண்ணில் நல்லவண்ணம் வாழ் வதற்கான வழிகளைக் கூறுவதுடன், உலகியல் நெறிகளையும் பேசுகின்றது. சிவப்பிரகாசர் காட்டும் நன்னெறி நிலையினைப் பற்றி இங்குக் காண்போம்.

1. நன்னெறி

நடைமுறை வாழ்வியல் நன்கியல் கடைப்பிடிக்க வேண்டிய நெறிகள் பற்றிப் பேசுவதால் நன்னெறியாம். கடவுள் வாழ்த்து தவிர்ந்த நாற்பது வெண்பாக்களையுடையதாய் இது விளங்குகிறது. மகடூஉ முன்னிலையாய் இப்பாக்கள் அமைகின்றன.

நல்லார், தீயார் இயல்புகள், அவர்தம் சொற்களின் நிலை அவர்தம் வருகைகள் வாழும் வகைகள், நட்பின் நிலை, இல்லறத்தான் நிலை, கல்வி மற்றும் செல்வத்தின் செருக்குகள், குணங்களாய் சினம் காத்தல், அன்பு, புலன்களின் நிலை, நிலையாமை, பிறவிக்கொடையாளர், கற்றார் நிலை, கல்வி, அறம், அறிவுச்சிறப்புகள் போல்வன நன்னெறியின் பாடுபொருள்களாம்.

தன்னைப் புகழாதவருக்கும் உதவல் (1), தன் துயர் தீர்த்தலினும் பிறர் துயர் தீர்க்க முந்துதல் (10); ஐம்புலன்களின் புன்மைநிலை உணர்ந்து அதற்கு ஆட்படாமை (11); தாம் பெற்ற பொருட்கள் சிறிதாயினும் பெரிதாயினும் பிறர்க்கு விருப்போடு வழங்கல் (13); செல்வத்தில் செருக்காமை (14) தாம் உயர்நிலையில் இருப்பினும் தம்மை மதியா இழிஞர் துயரெனவரின் விரைந்து சென்று தீர்த்தல் (16); பிறர் துயரைத் தம் துயர்போல் கருதிப்போக்கல் (20); வறுமையுறினும் துயர் வரின் கலங்காமை (29); பிறர் துயர் களைய முன்வரல் (31); பழிக்கு அஞ்சுதல் (34); தகுதியுடையர், அல்லார் என்று கருதாது யாவர்க்கும் அளித்தல் (36); இத்தகு பெரியார், அறிஞர் நாடாளும்

வேந்தரினும் சிறந்தவராவார் (40), இவர் நல்லார் விழுமியர், மாசற்றவருமாவார்.

தீயார் பேசும் இன்சொல்லும் பயனற்றதாம் (12); இவர்கள் புலன்களின் ஆட்சிக்கு அடிமைப்பட்டவராவார் (11); இவரின் வருகை துயரையே விளைவிப்பதால் யாரும் அதனை விரும்பார் (19); பிறரிடம் குணம் பல இருப்பினும் குற்றங்களை மட்டும் காணுதல் இவர்தம் இயல்பாம் (24); இவரிடம் அன்பாகப் பழகினும் மனமுவந்து பொருட்களைத் தரார்; பயனுமன்று (28); தம்மைத்தாமே புகழா வரைக்கும் இவர் போற்றற்குரியவராம் (33); பழிக்கு சிறிதும் அஞ்சார் (34); பெரியார் முன் தம்மைத் தாம் புகழ்வதின் மூலம் தம் இழிவைப் பறைசாற்றலும் இவரியல்பாம் (37); இத்தகு நிலையார் புல்லியர், அல்லோர், இழிஞர், பேதையராம்.

நல்லோர்தம் சொற்கள் கடுமையானதாக இருப்பினும் அது நன்மையே பயக்கும் (2); இவர் வருகை யாவராலும் விரும்பப்படுவதால் அன்புடன், முறுவலுடன் வரவேற்கப்படுவர் (19); இவர்களிடம் கோபித்தாலும் பிறர்க்கு வழங்கலையே இயல்பாகவுடையர் (28); முன்னோர் கொடுத்து கொடுத்து வறுமையடைந்தவரே என்றறிந்தாலும் தம் கொடைமை நிலையில் மாறாது நிற்றலும் இவர்தம் இயல்பாம் (17).

நடைமுறை வாழ்வு சிறப்பதற்கான வழிகளை வாழும் வகைமைகள் எனும் இப்பகுதியில் காணலாம். ஒருவரிடமிருந்து ஒரு பொருளைப்பெற அவர் தமக்கு நெருங்கியவர் அல்லராயினும் அவருக்கு நெருக்கமுடைய பிறர் ஒருவரின் உதவியைக் கொண்டு அவரைத் தொடர்பு கொள்ளல் வேண்டும் (பசுவின் பால் பெற கன்றினைத் துணைக்கழைத்தல் போன்றதாம்) (3); செல்வம் என்பது பிறர்க்கு உதவுவதற்கு உரியதேயாம். அவர் நேரடியாய்ப் பிறர்க்கு உதவும் குணமுடையர் அல்லராயினும் ஆய்ந்து நோக்கின் கடல்நீரை குடிநீராகப் பயன்படுத்த இயலாத போதும் மேகம் அதனை மழைநீராக மாற்றி பிறர்க்கு உதவுவதுபோலும் முயலின் அச்செல்வமும் பிறர்க்கு உதவும் நிலையினதாம். தக்கார் செயல்திறமே காரணமாம் (4) பகைவர் வலியராயினும் அஞ்சாது அவரின் வலியாரைத் துணையாகக் கொள்ளின் தாம் மெலியராயினும் வலிய பகைக்கு அஞ்சத் தேவையில்லை (9); வலிய பகையாயினும் முயலின் வெல்லலாம் அஞ்சத் தேவையில்லை (29) போல்வன சிவப்பிரகாசர் காட்டும் வாழ்வகை நெறிகளாம்.

நல்லவர் நட்பு நன்மையைத் தர, தீயார் நட்பு நாளும் துயரையே தரும் (38); கல்லார் நெருங்கிய நட்பு முதலில் இனிப்பினும் என்றும் துயரையே விளைக்கும் (39); அன்பிலார் நட்பராய் நெருங்கியிருப்

பினும் சிறு பிரிவு ஏற்பட்டு பின் அவர் அன்பால் இணையினும் அதன் திட்பம் குறைவே (5); எனவே நட்பு கொள்ளுமுன் ஆராய்ந்து நட்பு கொள்ளின் துயரமின்று என்கிறார் சிவப்பிரகாசர்.

கல்வி சிறப்புடையதேனும் செருக்கு அழியத்தக்கதேயாம் (7); இலக்கணம் அறியின் கல்வி எளிதாம்; அன்றேல் அரிதாம் (21); ஒருவனின் உயர்வு தாழ்வு பிறப்பால் அன்று, அவன் கற்ற கல்வியால் வருவதேயாம் (22);கல்வி அடக்கத்தைத் தரும் (25); கல்வி சிறப்புடையது ஆதலின் வாழ்நாளின் சிறுமை கண்டு கல்லாது விடார் அறிஞர் (26); கல்வி மனிதனைப் பண்படுத்துமாதலின் கற்றவர் பிறர்க்கு உதவும் இயல்புடையராம் (27,31); இவரின் சுடு சொல்லும் நன்மையே பயக்கும் (28); கல்லார் செய்யும் அறங்களில் அதன் உட்பொருள் உணராது செய்யப்படுதலின் அவை பயனின்றாம் (32); அறிஞர் தம்மைப் புகழாதிருப்பினும் போற்றற்குரியரே (33); இவர் பழிக்கஞ்சும் இயல்புடையர் (34); தம்போல் கற்றவரைப் புலமைக் காய்ச்சலின்றிப் போற்றுதலும் இவரியல்பாம் (35); கல்லார் நட்பும் துயரே (39); நாடாளும் வேந்தரினும் கல்வி கற்ற அறிஞர் சிறப்பிற்குரியரே (40); இவை கல்வியின் சிறப்பை உயர்த்துவனவாய், அதனை அடைந்தார் மேன்மையை விளக்குவனவாய், அல்லார் புன்மையை வெளிப்படுத்து வனவாய் அமையக் காணலாம்.

புலன்கள் பொய்மையுடையன. அவை மெலியாரையே வருத்தும் (11); ஒன்பது துளைகளையுடைய உடலில் உயிர் தங்கியிருத்தலே வியப்பு (12); கல்வியின் சிறப்பு கூறுகையில் யாக்கையின் புன்மையும் மொழியப்படுகிறது (26); அறமே மானிடர்க்கு உய்தி தருவதாம். ஆதலின் காலன் வருமுன் நல்லன செயல் வேண்டும் (30) என்பன யாக்கை நிலையினையும் அதனின்று உய்தி பெறும் வழியினையும் காட்டுவனவாய் அமைகின்றன.

இல்லறம் என்பது காதல் மனையாளும் காதலனும் இணைந்த வாழ்வாம். அவர்கள் ஒருபுடை ஒத்து வாழ்தலே நல்லறமாம். அவர்கள் முகத்தின் இரு கண்களாவார் (6); சினம் காத்தலே குணமெனப்படுவதாம் (8); அன்பே வாழ்வின் ஆதாரம். அது இன்றேல் யாவும் இருந்தும் பயனின்றாம் (15); உலகம் விரும்புவது இன்சொல்லையே அன்றி வன்சொல்லையன்று (18); என்பன பொது நிலையிலமைந்த நன்னெறி காட்டும் பிரகாச மொழிகளாம்.

2. சிவப்பிரகாசர் காட்டும் நன்னெறி

மக்கள் வாழ்நெறி காட்டி வாழ்வகை இயல்புகள், சிறப்புக்கள், பயன்கள் பேசும் வழிகாட்டியாய் சிவப்பிரகாசரின் நன்னெறி விளங்குகிறது.

மக்கள் நல்வாழ்வு வாழ்ந்து உய்நெறி அடைவதற்கான வழியாக யாக்கை நிலை, குணவியல்புகள் (அன்பு, சினம், உதவிபெறல், செயல், நட்பு, கொடைமை, போல்வ), கல்விச்சிறப்பு, அதைக் கற்றார் உயர்வு, கல்லார் தாழ்வும் இழிவும் பிறரிடம் கொள்ளும் உறவு நிலைகள், இவைகளால் பொதியப்பெற்ற நல்லார் மாசற்றார் இயல்பும் சிறப்பும் அல்லார் இழிவும் போல்வன காட்டி மானுடன் கடைப்பிடிக்க வேண்டிய நன்னெறிகளைக் காட்டுகின்றது சிவப்பிரகாசம்.

இந்நன்னெறிகளை மக்கள் உளங்கொள் வகையில் விளக்குகையில் சிவப்பிரகாசர் சிறப்புறுகின்றார். வெறுமனே நீதிகளை அடுக்கிக்கூறும் நிலையில் நில்லாமல் பழமொழிகள், வழக்காறுகள், புராணக் கூறுகள், வருணனைகள், உவமங்கள், உடலுறுப்புக்கள், நேரெதிர் நிலைகள், அடுக்கிக் கூறல் என நன்னெறி நிலையினை எளிமைப்படுத்தி அழகுற விளக்குகின்றார்.

'எறும்பு ஊரக் கல்லும் தேயும்' (23) எத்தகு கடினமான கல்லா யினும் மீண்டும் மீண்டும் ஊர இளகும் என்றார்போல் அறிவில ராயினும் கல்வியில், நோன்புகளில் பழக மனம் நெகிழும் நற்குணம் வரும் என்பதை இப்பழமொழி விளக்குகின்றதாம். நல்லார், அல்லார் மொழிகள் பற்றிக் கூறலில் நல்லார் இன்சொல்லே எப்போதும் கூறுவர். மாறாக அவர்கள் வன்சொற்கள் மொழியின், அதுவும் நெல்லிபோல் முன்கைத்துப்பின் இனிக்கும் இயல்புடையதாம், நன்மையின் பொருட்டுக் கூறப்படுதலாம். தீயார் இயல்பு வன்சொல்லே அவர் மாறாய் இன்சொல் கூறினும் அது பயனின்றே (அழிவிற்காம்) வாழையின் காய் பயனுடையதாய் அமைய, எட்டியின் பழமோ பயனற்றதாம் (28) என்கிறார். இவை நல்லார் தீயார் சொற்களின் விளைவைப் பேச வந்த பழமொழியாம்.

பரவலாய் வழக்காறுகள் மொழியப்படுகின்றன. சூறாவளியில் சிறு துரும்பு அலைக்கழிக்கப்படுவது போல் கல்தூண் துயருறாது என்பதை மெலியார் புலன்களின் ஆட்சிக்கு உட்பட்டு துயருறுவர்; உணரும் பெரியாரோ திடமாய் நிற்பர் (11) என்கிறார். இனிய சொற்களையே யாவரும் விரும்புவர், வன்சொற்களை விரும்பார் என்பதை சூரியன் வரவு கண்டு பொங்காது, சந்திரன் வரவில் பொங்கும் கடல்போல் (18) என்கின்றார். இன்சுவைகனிகள் பல இருக்க காகம் வேப்பங்காயையே விரும்புவது போல் கீழ்மக்களும் குணங்களைவிட பிறரின் குற்றங்களையே விதந்தோதுவர் (24).

புராணக் கூறுகள் என்பவை இலக்கிய நயமூட்டும், அறிவூட்டும், கருத்துக்களை எளிமையூட்டும் ஒரு கூறு எனலாம். அறிவுரை கூறும் நிலையின் வறட்சியைப் போக்கும் நிலையிலும் இது அமைகின்றதாம்.

நல்லார் வன்சொல், ஏனையாரின் இன்சொல்லினும் இனியது என்பதை பக்திமை கூறு ஒன்றால் விளக்குகின்றார். ஈசன் அன்புடையார் எறியும் கல் வழிபாட்டையும் (சாக்கியர்) ஏற்பர், ஆயின் வஞ்சகமுடையார் மலர்க்கணை எறியினும் எரிப்பர் (காமன்) (2) என்கின்றார்; பகைவர் வலியராயினும் அவரின் வலிய துணையைக் கொள்ளின் மெலியார் துயருற வேண்டாம் என்பதை ஈசன் உடலில் ஆபரணமாய் விளங்கும் பாம்பு வலிய சிறகுடைய கருடனைக் கண்டாலும் அஞ்சாது (9) என்கின்றார். தம் துயரினும் மேலார் பிறர் துயர் துடைக்க முன்வரு நிலையை களங்கமுடைய நிலவு தன் களங்கத்தைப் போக்க முயலாது உலகின் இருளைப்போக்க தன் கதிர்களைப் பரப்புவதை சான்றாக்குகின்றார்.

வருணிப்புகளும் உள. விநாயகர் சடையின் ஒளியினை மின்னெறி சடாமுடி எனல் (க.வா). மகடூஉ நிலையில் வருணிப்புக்கள் பரவலாய் வருகின்றன. 'வண்ணம் செய்வாள் வாள்விழி' (34), 'இரைக்கும் வண்டூதும் மலர் ஈர்ங்கோதையாய் (14); உள்ளம் கவர்ந்து எழுந்து ஓங்கு சினம்' (8) போல்வன.

உவமங்களின் ஆட்சி குறைவே. கொங்கையினைத் தங்க நெடுங்குன்று (3) 'மலையளவு நின்ற முலை' (13) எனல். அடலேறனைய செருக்கு (7); பூங்கை (1); கருங்கடல் நீர் (4), 'ஓதகலை எண் இரண்டும் ஒன்றும் மதியென் முகத்தாய் (6), பண்ணின் புகலும் பனிமொழியாய் (29) பிறைநுதால் (34) போல்வனவாம்.

வாழ்நெறி காட்டுகையில் யாவரும் அறிந்த எளிய பொருட்களின் வழி விளக்கல் யாவருக்கும் புரிதலுடன், நடைமுறைப்படுத்தலிலும் எளிமையாய் இருப்பதை உடல் உறுப்புக்கள் வழி விளக்கலால் உணரலாம்.

'கைக்கு வாய் நன்றி கூறுமா?' (1); இல்லறத் தம்பதியர் இரு கண்கள் போல்வர் (6); பெரியார் பிறர் துயர் பெறார் என்பதை உடலில் காயம்பட கண் கலங்கல் (20); கற்றறிந்தோர் மெய்வருந்தியேனும் பிறருக்கு உதவுதல்போல் பல்லும் உணவினை மென்று நாவிற்கு சுவையூட்டு கின்றது (27); தன் துயர் தாங்கிப் பிறர் துயர் துடைக்கும் பேரறிஞர் இயல்பை உடலில் அடி விழுமுன் கைசென்று தடுத்தல் (31) போல்வனவாம்.

கருத்தினை மேலும் தெளிவுறுத்த வலுவூட்ட நேரெதிர் நிலைகள் பயன்படுத்தப்படுகின்றது. சினம் காத்தலின் சிறப்பைப் பேசுகையில் வெள்ளம் வருகையில் தடுத்தலோ, விடுத்தலோ பெரிதெனல் (8); யாக்கையின் இயல்பு பேசுகையில் ஓட்டைக் குடத்தில் நீர் நில்லாது செல்லலோ ஒன்பது துளையுள்ள உடலில் உயிர் நிற்றலோ வியப்பு (12) எனல்; இன்சொல் வன்சொற்களில் உலகம் விரும்புவது பற்றிப் பேசலில், கடல் சூரியனைக் கண்டு பொங்காது; சந்திரன் வரவிலே மகிழும்

(18); நல்லோர் வரவே மகிழ்வு, அல்லார் வரவு துயரே என்பதற்கு தென்றலையும், சுழற்காற்றையும் சான்றாக்கல் (19) போல்வனவாம்.

அடுக்கி மொழிதல் அருகியே வருகின்றது. அன்பு இல்லானுக்கு எல்லாம் இருந்தும் பயனின்றே என்பதை, மொழியில்லாதார்க்கு பழமையான நூலால் என்ன பயன்? குருடர்க்கு விளக்கால் என்ன பயன் என அடுக்கல் (15); கல்வியே மானுடர்க்குள் உயர்வு தாழ்வை நிர்ண யிப்பது என்பதை பாம்பின் அரிய மணியை வெறுப்பவர் உண்டோ? உவர்ப்பு கண்டு கடலை வெறுப்பவர் எவரோ? (22) என வினவுகின்றார்.

3. மதிப்பீடு

மானுட மதிப்புக்களைப் பற்றிப் பேசும் நீதி நூலாக நன்னெறி விளங்குகிறது.

பெண்ணினை முன்னிலைப்படுத்தும் பாங்கில் மகடூஉ முன்னிலையாக இப்பாக்கள் அமைகின்றன.

வாழ்வியல் முறைமைகள் எளிமையாய் விளக்கப்படல் இதன் தனித்தன்மையாம். (உதவார் பெருஞ்செல்வத்தின் பயன்படுநிலை (4), எத்தகு நட்பு தேவை (38, 39) போல்வனவாம்).

நிலையாமை வழி நன்னெறி செல்வதின் தேவையை உணர்த்தல் (12, 14).

நல்லார் நல்லியல்பு, சிறப்பு போல்வன வழி அங்ஙனம் வாழத் தூண்டும் செயலூக்க நிலையும் (13, 16); சிறியார் சிறுமை, இயல்பு விளக்கலால் (5, 24, 37) அதனிழிவினையும் வெறுக்கத்தக்கப் போக்கினையும் ஒருங்கே மொழிவதன் வழி (9, 33, 34) மக்கள் செல்வழியினைத் தெளிவாக்கல் பாங்கு.

நன்னெறி காட்டலில் உவமம் முதல் புராணக் கூறுகள் வரை யிலான இலக்கியச் சுவைகள் அளவாக விரவப்பட்டுள்ளமையும் இதன் சிறப்புக்களுள் ஒன்றாம்.

எளிமையும் விளக்கமும் தெளிவும் நன்னெறி காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள் எனில் மிகையின்றாம்.

வாழ்வியல் நடைமுறைகளை மொழியும் நன்னெறி இல்லறத்தான் முதல் துறவின் நிலை வரை பரக்கப் பேசுகின்றது. அறம், பொருள், இன்பம் முதல் வீட்டின் வாயிலாய மனத்தைப் பக்குவப்படுத்தும் வாழ்வின் நிலையாமையையும் மொழிவதன் மூலம் ஞானவாழ்வுக்கும் வழி கூட்டுகின்றது. இங்ஙனம் பாடு பொருள்களாலும், வெளிப்பாட்டு நிலைகளாலும் மானுட வாழ்வின் மைல் கல்லாக நின்றிலங்குகின்றது நன்னெறி எனலாம்.

99. நன்னெறி காட்டும் வாழ்வியல் நீதிகள்

வெ. இராசேசுவரி, பேரூர்.

இலக்கியம் இன்புறுத்தல், அறிவுறுத்தல் என்னும் இரண்டு நோக்கங்களை உடையதாக இருக்கும். ஓர் இலக்கியத்தில் இரண்டுமே இருக்கலாம். இவற்றில் எது மிகுதியாக இருக்கிறதோ அப்பெயரால் அவ்விலக்கியத்தை வழங்குவர். அற இலக்கியங்கள் அறிவுறுத்தலை முதன்மையாகக் கொண்டவை. இன்புறுத்தல் துணையாக இருக்கும். இவற்றை நீதி நூல்கள் என்று அழைப்பர். இந்நூல்கள் முற்காலம் முதல் இக்காலம் வரை தோன்றி உள்ளன. நீதிகளையும் ஆன்றோர் ஆய்ந்து கண்ட நன்னெறிகளையும் தொகுத்து நீதிநூல்களாக மக்கட் சமுதாயத்துக்கு வழங்கும் வழக்கம் மிகத் தொன்றுதொட்டு வருகின்ற ஒன்றாகும். சமுதாயம் செந்நெறியில் செல்ல மக்கள் கடைபிடிக்க வேண்டிய நல்வழிகளை நன்னெறி என்னும் நூலில் நாற்பது வெண்பாக்களால் எடுத்துக் கூறியுள்ளார் சிவப்பிரகாசர்.

சிவப்பிரகாசர்

தொண்டை நாட்டின் தலைநகராகிய காஞ்சிபுரத்தில் பிறந்தவர். இவர் இளமையிலேயே இலக்கணப் புலமை பெற்றவர். இவரது பன்னிரண்டாவது வயதிலேயே நூலியற்றத் தொடங்கினார். முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார். அவை தோத்திரம், சாத்திரம், சிறுபிரபந்தம், காவியம், புராணம், தருக்கம், நீதிநூல், குருதுதி, மொழி பெயர்ப்பு எனப் பலவகையில் அமைந்துள்ளன. இவரை புலவர்கள் 'கற்பனைக் களஞ்சியம்' என்று சிறப்பித்துக் கூறுவர். இவருடைய கற்பனைகள் பிறர் எவரும் கூறாத வகையில் தனித்தன்மை வாய்ந்தவைகளாக இருக்கும்.

நன்னெறி

நன்னெறி என்னும் இந்நூல் நீதிநூல் வகையைச் சார்ந்தது. நன்னெறி என்பது நன்மை - நெறி என இரண்டு சொற்களாலாகிய தொடர். இதனை நன்மையாகிய நெறி எனப் பண்புத்தொகையாகவும், நல்லநெறி எனக் குறிப்புப் பெயரெச்சமாகவும் விளிக்கலாம். நல்வழி என்பது இதன் பொருளாகும்.

நன்னெறி-ஞானநெறி எனப்படும். நன்மை-மிகுதி. ''நன்று பெரிதாகும்'' என்பது தொல்காப்பியம். எல்லாவற்றினும் மிக்கது வீடு. ஆதலின் நன்னெறியாவது வீடுபேற்றுக்குரிய நெறி ஆகிய ஞானநெறியே எனப் பொருள் கொள்ளலாம். இந்த அடிப்படையில் சிவஞான முனிவர் சிவஞானபோதம் எட்டாம் சூத்திரத்தில் ''ஈண்டு ஆன்மாக்களுக்கு முற்செய் தவத்தான் ஞானம் நிகழும் மேற்சரியை, கிரியா, யோகங் களைச் செய்துழி நன்னெறியாகிய ஞானத்தைக் காட்டியல்லது மோட்சத்தைக் கொடாவாகலான்'' என்னும் பகுதிக்கு உரை எழுதும் பொழுது நன்மையெனப்படுவன எல்லாவற்றிலும் சிறந்த நெறியாகலின் ஞானம் நன்னெறி எனப்பட்டது என்றும், வீட்டிற்கு நெறி என அவ்வச் சமயத்தாரால் கூறப்படுவன அனைத்தும் தன்கண்ணே வந்து கூடநின்ற நெறியாகலானும் அது நன்னெறி எனப்பட்டது, என்றும் விளக்கந்தருவது குறிப்பிடத்தக்கது. அப்பர் சுவாமிகள் ''நன்னெறியாவது நமச்சிவாயவே'' என்று பாடியுள்ளார்.

நீதி நூல்கள்

வாழ்க்கையைச் செந்நெறியில் செலுத்தும் அறங்களை வலியுறுத்திச் செல்லும் அறநூல்கள் நீதிநூல்கள் என்று கூறப்படுகின்றன. இவ்வுலகில் ஆன்மா அடையும் இலக்கு இன்மையின்பம், மறுமையின்பம், வீடுபேறு என மூன்றாக அமைகிறது. இவற்றை அடைதற்கு வழிகாட்டியாகத் திகழும் நூல்கள் நீதிநூல்களும், தத்துவ நூல்களுமாம். நீதிநூல்கள் இம்மை மறுமை இன்பங்களை அடைவதற்கு வழிகாட்டியாகத் திகழ்வன, தத்துவ நூல்கள் வீடுபேற்றிற்கு வழிகாட்டியாகத் திகழ்வன ஆகும்.

கற்பவரின் உணர்ச்சியைத் தூண்டாமல் அறிவைத் தூண்டுவது நீதிநூல்களின் இயல்பாகும். நீதிநூல்கள் மனிதனை மனிதனாக வாழ்வாங்கு வாழச் செய்வதற்கும், வையத்தில் மாண்புமிகு மனிதனாகச் சிறப்புற்று விளங்கச் செய்தற்கும் வழிகாட்டும் ஒளிவிளக்குகளாகும். படிப்பவர் களை உணர்ச்சிப் பெருக்கால் கிளர்ச்சி அடையச் செய்யாமல், சிறந்த கருத்துக்களை அறிவுறுத்தி அவர்களின் வாழ்க்கையைச் செம்மைப்படுத்து வதையே நோக்கமாகக் கொண்டவை நீதிநூல்கள். உணர்ச்சி, கற்பனை, கருத்து, வடிவம் என்ற நான்கும் இலக்கியக் கலைக்கு இன்றியமையாத பண்புகள். நீதிநூல்கள் இப்பண்புகளைத் தன்னகத்துக் கொண்டுள்ளன.

நன்னெறி - நூல் அமைப்பு

நன்னெறி தனித்தனி வெண்பாக்களால் ஆனது. அதிகாரப் பிரிவுகள் இதில் இல்லை. இந்நூல் மொத்தம் நாற்பது நீதிகளைக் கொண்டுள்ளது. இவை உடம்பாட்டு வகையிலும், எதிர்மறை வகையிலும் புராணக் கதை, பழமொழி, உலக நடை ஆகியவற்றை எடுத்துக்காட்டி வற்புறுத்தும்

வகையிலும் கூறப்பட்டுள்ளன. நீதிநூல்கள் எளிதில் பொருள் விளங்கும் பாடல்களாக கதைகளும், பழமொழிகளும் உடையதாக வெண்பா யாப்பினால் ஆக்கப்படுதல் மரபு. பாடலின் ஒரு பாதி நீதியும், மறுபாதியில் அதற்கு எடுத்துக்காட்டாக அமையத்தக்க புராணக் கதைகள் அல்லது பழமொழிகள் இடம் பெற்றிருக்கும். நன்னெறியும் இவ்வாறு அமைந்துள்ளது. தமிழ்மொழியில் உள்ள சிறந்த அறநூல்களையும் தத்துவ நூல்களையும் மொழிபெயர்த்தவர் ஜி.யு. போப். அவருடைய கவனத்தையும் கவர்ந்த நூல்களுள் நன்னெறியும் ஒன்றாகத் திகழ்கிறது.

நன்னெறியும் வாழ்வியல் நீதிகளும்

ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வை செம்மையுடையதாக ஆக்கிக்கொள்ள எத்தகைய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை சிவப்பிரகாசர் நன்னெறியில் எளிமையாகவும் இனிமையாகவும் விளக்கியுள்ளார். அவற்றை வாழ்வியல் நீதிகள் எனக் குறிப்பிடலாம். அவை ஈகை, இன்சொல், நட்பு, இல்வாழ்க்கை, கல்வி, செல்வம், சினம், அன்பு, உயர்ந்தோர், கீழோர், உயிரும் உடம்பும், அன்புடைமை, உயர்வு தாழ்வு, அறம் முதலியவைகளாகும். இதில் முதலாவதாக இடம் பெறுவ ஈகை ஆகும்.

ஈத்துவக்கும் இன்பம்

ஈகை என்பது ஒருவர்க்கு ஈதல் என்பதாகும். அதாவது வறியவர்க்கு ஈதலே ஈகையாகும். இதனைத் திருவள்ளுவர் 'வறியார்க்கொன்றி ஈவதே ஈகை' என்று கூறுகிறார். இதற்கு உரை கூறும் பரிமேலழகர் வறியராய் ஏற்றார்க்கு மாற்றாது கொடுத்தலே ஈகை என்கிறார். பிறர்க்கு உதவியாக வாழ்பவனே பண்பாடு உடையவன் ஆவான்.

ஈகையைப் பற்றி நன்னெறியில் எட்டுப் பாடல்களில் எளிமை யாகவும், உவமைகள் மூலம் விளங்கும்படியாகவும் சிவப்பிரகாசர் விளக்கியுள்ளார். பயன் கருதி உதவி செய்தல் கூடாது. பிறர்க்கு உதவி செய்யும் இயல்பு இல்லாதவர்களுடைய பொருளையும் எடுத்து உதவுவாரின் பொருளாகவே கொள்ளப்படும். இதனை

"பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறும் - பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடணீர் சென்றுபுயன் முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு"

என்ற நன்னெறிப் பாடல் விளக்குகிறது.

பெரியோர் தாம் பெற்ற செல்வத்திற்கு ஏற்ப மிகுதியாகவும், குறைவாகவும் கொடுப்பர். ஒருபோதும் ஒன்றும் கொடாது இரார்.

தந்தை கொடுத்து வறுமையுற்றான் எனக் கருதி மைந்தர் கொடாது இருப்பதில்லை. இதனை

"எந்தை நல்கூர்ந்தான் இரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ - பைந்தொடீஇ!
நின்று பயனுதவி நில்லா வரம்பையின்கீழ்
கன்றும் உதவுங் கனி"

எனச் சிவப்பிரகாசர் பிறர்க்குதவி செய்யும் பண்புடையானை வாழை மரத்துக்கு உவமை கூறி எளிமையாக ஈகையின் உயர்வினை விளக்குகிறார்.

அறிவுடையவர்கள் கைம்மாறு கருதாது பிறருக்குத் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்வர். அறிவுடையவர்கள் கோபத்திலும் கொடுப்பர். மூடர் மகிழ்ச்சியிலும் கொடார் எனக் கூறுகிறார் சிவப்பிரகாசர். மேலோர் தகுதியுடையவர்க்கன்றி தகுதியில்லார்க்கு ஈதல் செய்யார்.

இன்சொல்

மனத்தின்கண் உவகையை வெளிப்படுப்பனவாகிய இனிய சொற்களைச் சொல்லுதல் இன்சொல் என்று பரிமேலழகர் கூறுகிறார். இன்சொல் என்பது மாசற்ற செஞ்சுடன் சொல்லப்படுவது. இன்சொல்லினால்தான் மக்கள் மகிழ்வர். வன்சொல்லினால் மகிழ்ச்சியடைய மாட்டார் என்று இன்சொல்லின் சிறப்பையும் அதனால் வரும் மகிழ்வினையும் சிவப்பிரகாசர் கூறுகிறார். திருவள்ளுவர் 'இனியவை கூறல்' என்ற அதிகாரத்தில் இன்சொல்லின் மேன்மையை விளக்கியுள்ளார். வன்சொல் தோற்கும் இன்சொல் வெல்லும் என்று ஔவையார் நல்வழியில் கூறியுள்ளார்.

நட்பின் சிறப்பு

ஒருவனுக்கு இடுக்கண் வருங்கால் உதவுவது உயர்வுடைய நட்பு. நட்பு என்பது ஒருவரோடு ஒருவர் பழகி பிறகு பிரியாதிருத்தல். நட்புக் கொண்டவர்கள் பின்னர் எக்காரணங் கொண்டும் பிரிதல் கூடாது. இதனை

"நீக்கமறும் இருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர்பெருமை நொய்தாகும் - பூக்குழலாய்!
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோல்
புல்லினும் திண்மைநிலை போம்"

என நட்பின் பிரியாமை பற்றியும், பிரிந்தால் உண்டாகும் இழிநிலை பற்றியும் எளிமையாக உவமை நயத்துடன் விளக்குகிறார் சிவப்பிரகாசர். இவை போன்ற நீதிகளை கற்கும் அறிவுடையார் தம் வாழ்வில் இந் நெறியில் தவறாது ஒழுகுவர். நட்பிற்கு உவமை கூறும் ஔவையார் மூதுரையில்

''பண்டு முளைப்பதரிசியே யானாலும்
விண்டுமி போனால் முளையாதாம்''

என்று விளக்குகிறார். கற்றறியாதவர்கள் செய்கின்ற மிகுதியான நட்பு அவர்கள் கூடியிருக்கின்ற காலத்தினும் துன்பமே செய்யும் என்கிறார் சிவப்பிரகாசர். திருவள்ளுவர் நட்பின் இலக்கணத்தை நட்பு அதிகாரத்திலும் தீ நட்பு, கூடா நட்பு அதிகாரங்களிலும் விரிவாக விளக்கியுள்ளார்.

இல்வாழ்க்கை

'இல்லறமல்லது நல்லறமன்று' என ஔவையாராலும் 'மங்கலம் என்ப மனைமாட்சி' எனத் திருவள்ளுவராலும் போற்றப்பெறுவது இல்லறம். இல்லாளோடு கூடி வாழ்க்கை நடத்துவது இல்வாழ்க்கை எனப்படும். இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை. திருவள்ளுவர் ''அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை'' சிறப்புடைத்து எனக் கூறுகிறார்.

நன்னெறியில் சிவப்பிரகாசர் இல்வாழ்க்கையில் தலைவனும் தலைவியும் என்றும் ஒற்றுமையுடன் இருத்தல் வேண்டும் என்பதை

''காதல்மனையாளும் காதலனும் மாறின்றித்
நீதிலொரு கருமஞ் செய்பவே - ஓதுகலை
எண்ணிரடு மொன்றுமதி என்முகத்தாய் நோக்கறான்
கண்ணிரண்டும் ஒன்றையே காண்''

என்ற பாடலில் இல்வாழ்க்கையின் செம்மைத்தன்மையை உயரிய உறுப்பாகிய கண்ணோடு ஒத்து காட்டுகிறார்.

கல்வி, செல்வம்

ஒருவன் தான் கற்றற்குரிய நூல்களை கற்றலே கல்வி எனப் பரிமேலழகர் கூறுகிறார். அவ்வாறு கற்றவற்றைப் பிறர்க்கு விளங்குமாறு எடுத்துரைத்தல் வேண்டும். அதுவே கல்வியின் சிறப்பாகும். அறியாமையால் வரும் இடர்களைக் களைந்து அதை நீக்குவதற்கு அறிவு தேவை. அத்தகைய அறிவு கல்வி மூலம் ஏற்படுகிறது. அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கையும் தரும் கல்வியைவிட சிறந்த அணிகலன் வேறில்லை என்கிறார் குமரகுருபரர்.

கல்வி கற்றவன் செருக்கடைதல் கூடாது. இலக்கண அறிவில்லாதவர்களுடைய கல்விப்பெருமை இலக்கண அறிவுடையாரைக் கண்டால் இல்லாய்போகும் என்று கல்வியின் உயர்வைச் சிவப்பிரகாசர் விளக்குகிறார். ஒரு புராணக் கதை மூலம் அக்கருத்தை எளிமைப்படுத்திக் காட்டுகிறார். கங்கை ஆயிரம் முகத்தால் பெருகி வருவதைக் கண்டு அஞ்சி தேவர்கள் இறைவனிடம் முறையிட்டனர். இறைவன் அக்கங்கையைத்

தன் சடையின் ஒரு கூற்றில் ஒரு சிறிய நீர்த்திவலை போல் அடங்கி நிற்கும்படி செய்துவிட்டான். அதுபோன்று இலக்கண அறிவில்லார் இலக்கண அறிவுடையார் முன் அடங்குவர் என்கிறார். மேலும் செல்வம் பற்றிக் கூறும்போது அது நிலையில்லாதது. எனவே எத்துணை பெருஞ்செல்வத்துக்கும் அழிவு வரும் என்று அறிந்து செருக்கடைதல் கூடாது என்கிறார். இவ்வாறு கல்வி, செல்வம் இரண்டும் ஒருவன் வாழ்வில் எத்தகைய இடத்தைப் பெறுகின்றன என்ற நிலையை நன்கு விளக்கி உள்ளார்.

சினம் காத்தல்

சினத்தைக் காத்தல் வேண்டும். இல்லையேல் தீங்கு விளையும். இதனைத் திருவள்ளுவர் ''தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால் தன்னையே கொல்லும் சினம்'' என்று சினத்தால் வரும் கேட்டினைக் கூறுகிறார். சிவப்பிரகாசர் நன்னெறியில்

''உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளும் குணமே குணமென்க - வெள்ளம்
தடுத்தலரிதோ, தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ? விளம்பு''

என்ற பாடலில் சினத்தைக் காத்துக் கொள்ளும் குணமே அருமையாகிய குணம் என்று விளக்குகிறார்.

உயர்ந்தோர் தாழ்ந்தோர்

கல்வி அறிவு ஒழுக்கங்களான் உயர்ந்தோர் உயர்ந்தோராவர். இவர்களைச் சான்றோர், பெரியோர் என்றும் கூறலாம். சிவப்பிரகாசர் நன்னெறியில் உயர்ந்தோர் சிறப்பினைப் பலபாடல்களில் விளக்கியுள்ளார். விழுமியோர், மெய்ப்புலவர், உயர்ந்தோர், வல்லோர், பெரியவர், ஒண்புலவர், பேரறிஞர், அறிவுடையார், மேன்மக்கள் என்னும் பெயர் களில் உயர்ந்தோர்களைச் சுட்டுகின்றார். அறிவிலும், குணங்களிலும் சிறந்தவர் பிறருக்கு உண்டாகிய குறையை நீக்குவர். தம் குறையை நீக்கிக் கொள்வதை முதன்மையாகக் கொள்ள மாட்டார்கள். பெரியவர்கள் பிறருக்கு வரும் நோயைக் கண்டு தமக்கு வந்த நோய்போல் கருதி மனம் வருந்துவர். பேரறிஞர்கள் பிறருக்கு வரும் துன்பத்தைத் தடுத்துக் காப்பதற்கு வீரத்துடன் முனைந்து நிற்பர். இதனை

''பேரறிஞர் தாக்கும் பிறர் துயரந் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார் - நேரிழாய்
மெய்சென்று தாக்கும் வியன்கோ லடிதன்மேற்
கைசென்று தாங்குங் கடிது''

என்ற பாடலில் சிவப்பிரகாசர் உயர்ந்தோர் தன்மையைச் சிறப்பாக விளக்குகிறார். இதுபோல் பல பாடல்கள் பெரியோர் பண்பினை விளக்குவனவாக நன்னெறியில் அமைந்துள்ளன. பெரியாரைத் துணைகோடல் அதிகாரத்தில் திருவள்ளுவர் அதனால் வரும் நன்மையை நன்கு விளக்குகிறார். மேலும் திருவள்ளுவர் பெரியோர், சிற்றினம், கயவர், கீழ்மக்கள் என மக்கட் பாகுபாட்டைக் குறிப்பிடுகிறார். அறிவில்லாதவரைக் கீழ்மக்கள் என்பர். இவர்களால் சமுதாயத்தில் பல தீங்குகள் நேரும். இவர்களிடம் ஒதுங்கி இருத்தல் வேண்டும். இவர்களைச் சிவப்பிரகாசர் கீழ், கயவர், இழிஞர், பேதை என்னும் சொற்களால் குறிப்பிடுகிறார்.

அன்புடைமை

அன்புடைமையின் சிறப்பை அறநூல்கள் எடுத்து விளக்குகின்றன. தொடர்புடையான்கண் காதலுடையான் ஆதல் என்றும், அன்பின் பயனாவது இல்லறம் இனிது நடத்தலும், பிற உயிர்கள் மேல் அருள் பிறத்தலும் ஆகும் என்றும் பரிமேலழகர் உரை செய்துள்ளார். இடம், பொருள், ஏவல் இருந்தும் ஒருவனுக்கு அன்பு இல்லையெனில் ஒரு பயனும் இல்லை என்று சிவப்பிரகாசர் கூறுகிறார். இன்னும் பலவகையான அறக்கருத்துக்கள் புராணக் கதைகள் மூலம் நன்னெறியில் எளிமைப்படுத்திக் கூறியுள்ளார் சிவப்பிரகாசர்.

நன்னெறி கூறும் நீதிகள் அனைத்தும் விளங்கிக் கொள்ள மிக எளிமையும், சுவையும் உடையன. இந்நூல் கூறும் நீதிக்கருத்துக்கள் எக்காலத்தும் மக்கள் பின்பற்ற ஏற்புடையவை. மக்கள் இந்நூல் கூறும் நீதிகளை அறிந்து வாழ்க்கையை செம்மை உடையதாக ஆக்கிக் கொள்வது சாலப்பொருந்தும்.

100. சிவப்பிரகாசர் ஒரு சமூகப் புரட்சியாளர்

கு. கதிரேசன், திருச்செந்தூர்.

கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் மத்தியில் காஞ்சிபுரம் துறைமங்கலத்தில் குமாரசாமி தேசிகரின் மகனாகப் பிறந்தவர் சிவப்பிரகாச சுவாமிகள். பிறந்த ஊரின் பெருமையினாலும் சிவப்பிரகாசர் எனும் பெயரில் பின்பு பலர் இருந்தமையாலும் இனம் காணும் வகையில் ஊர்ப் பெயரை முன்னிணைத்துத் துறைமங்கலம் சிவப்பிரகாசர் என அழைக்கப்பட்டார். வீர சைவநெறிக் கோட்பாடுடைய இவர், சமயத் தொண்டுடன் தமிழ் இலக்கியத் தொண்டையும் புரிந்தார். அவற்றில் அக்காலச் சமூகத்தில் மண்டிக்கிடந்த மடமைக் குணங்களை மாற்றியமைக்கும் சமூகச் சீர்திருத்தக் கருத்துகளையும் புகுத்தி, சமூகத் தொண்டையும் மேற் கொண்டார். அது அவரை ஒரு சமூக சீர்திருத்தப் புரட்சியாளராகவே அடையாளம் காட்டியது.

வீரசைவரான துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் நாட்டின் பல பகுதிகளிலும் வீரசைவ மடங்கள் தோன்றக் காரணமாக இருந்தார். இம்மடங்கள் வழி சைவ சமய சொற்பொழிவுகள், இலக்கண, இலக்கிய, தத்துவ, சாத்திர விளக்கக் கூட்டங்கள் முதலியவற்றை நிகழ்த்தி சமயத்தை வளர்த்தார். கல்விச் சாலைகளை அமைத்து கல்வியையும் மொழியையும் சமயத் தத்துவங்களையும் போதித்தல், சமய இலக்கியங்களையும் உரை நூல்களையும் படைத்து வெளியிடல் முதலிய ஆக்கப்பூர்வமான பணிகளின் மூலம் சைவ சமயத் தத்துவங்களைப் பரப்புதல் முதலியவை இம்மடங்களின் தலையாய நோக்கமாக இருந்தது.

மார்பில் லிங்கம் கட்டிக்கொள்ளும் வீரசைவ மரபினரின் பணி, சமயம், மொழி, இலக்கியம், பண்பாடு முதலியவை கலந்த சீரிய பணியாக அமைந்தது. மடங்கள் அமைத்து அவற்றின் மூலம் மொழி, கல்வி, இலக்கியம், சமயம், பண்பாடு முதலியவற்றைப் பயிற்றுவித்தது. அதற்காகப் பல கல்லூரிகள் நிறுவப்பட்டன. இத்தகைய மடங்களில் எல்லாம் கல்லூரிகளை நிறுவித் தமிழ் கற்பித்தனர். இதனால்தான் இலக்கிய இலக்கண நூல்கள் மக்களிடையே வாழ்ந்து வந்தன. புலவர்களும் தொடர்ந்து பெருகி வந்தார்கள். சைவமும் தமிழும் தழைத்து இனிது ஓங்கின (கு. பாலசுப்பிரமணியம், இலக்கிய வரலாறு, 1995: 217)

என்னும் செய்தி வீரசைவப் பிரிவினரின் சமயப் பணியைப் படம் பிடித்துக் காட்டுவதாய் அமைகிறது.

வீரசைவரான சிவப்பிரகாசர் நாட்டின் பல பகுதிகளில் மடங்களை நிறுவிச் சமயத்தையும் மொழியையும் வளர்த்தார். தமிழ்க் கல்லூரி ஒன்று தொடங்கி நடத்தி வரும் ஸ்ரீமயிலம் மடம், சித்தாந்த சாத்திரத்தைப் பரப்புவதில் முன்னிற்கும் திருவண்ணாமலை மடமும் சுவாமிகள் உருவாக்கிய மடங்களில் முக்கியமானவை. இவை கல்லூரி, பள்ளிகள் அமைத்து அறிவுடன் மொழி, சமயம் முதலியவற்றை வளர்க்கப் பாடு பட்டன. இலக்கண இலக்கிய நூல்களை வெளியிட்டு மொழி உணர்வை வளர்த்தன. அந்த வகையில் இம்மடங்கள் வெளியிட்ட நூல்களில் ஒன்றே பிரபுலிங்க லீலை. இது ஒரு காப்பியம். ஆகவே இக்காப்பியத்தில் சுவாமிகள் தம் கொள்கை முடிவுகளை அதாவது வீரசைவக் கோட்பாடு களைப் பரவலாக அமைத்துப் பாடியுள்ளார். அவற்றை இனம் கண்டு தெளிவதன் மூலம் சுவாமிகள் ஒரு வீர சைவர் என்பதனை அடையாளம் காணலாம். தம் கொள்கை முடிவுகளை அந்நூலில் பரவலாக இடம்பெறச் செய்யும் சுவாமிகள், அதன் மூலம் சமூக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் உத்திகளையும் கையாண்டுள்ளார். எனவே பிரபுலிங்கலீலை வெற்று இலக்கியமல்ல. அது சமயம், மொழி, பண்பாடு, கோட்பாடுகள் முதலிய வற்றை உட்பொதிந்த ஆன்மீக அறிவுக் கருவூலமாகும். இத்தகைய இலக்கியத்தில் சிவப்பிரகாசர் சுட்டும் வீரசைவக் கோட்பாடுகளையும் அதன் மூலம் சமூக விழிப்புணர்ச்சியூட்டும் புரட்சி உணர்வுகளையும் இனம் காட்டும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

இலிங்கத்தை மார்பிலே அணியும் மரபைக் கொண்ட வீரசைவத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட பிரபுலிங்கலீலை என்னும் காப்பியம் பெயருக்கும் கொள்கைக்கும் பொருந்தக்கூடியது. தமிழ், தெலுங்கு, கன்னடம், மராத்தி முதலிய மொழிகளிலும் உள்ள இந்நூல் முதலில் கன்னடத்தில் தோன்றியதே. கன்னடத்தில் உள்ள அல்லமர் சரிதையை அடியொற்றி அதனைத் தமிழில் பிரபுலிங்கலீலை யாக்கினார் சிவப்பிரகாசர். வேதம், ஆகமம் என்னும் இரண்டையும் ஏற்றிப் போற்றும் வீரசைவ நூலான பிரபுலிங்கலீலை சைவத்தையும் வைணவத்தையும் போற்றியே பேசுகின்றது.

''கருமநெறி, பக்திநெறி என்பன மனம் தூய்மை பெறக் கருவிகள். அவை முடிவுகள் ஆகா. ஞானம் ஒன்றே மெய்ப்பொருளை, 'சீவான்ம ஐக்கியத்தை' அங்கலிங்க ஐக்கியத்தை அடைவிக்கும் என்பது இந்நூலின் அறிவார்ந்த முடிவு'' (இரா. இராசகோபாலன்: 1990:5) என்னும் கருத்தாக்கம் ஏற்படையதாக அமைகிறது.

பிரபு என்பது எல்லாமாகவும் அல்லவுமாகவும் இருக்கும் தன்மை யாகும். லிங்கம் என்பது ஆன்மா. லீலை என்பது திருவிளையாடல். எனவே பிரபுலிங்கலீலை என்பது ஆன்மாவின் திருவிளையாடலை உணர்த்தும் நூல் ஆகும். இந்நூல்வழி சுவாமிகள் தம் வீரசைவக் கோட்பாடுகளை வெளிப்படுத்துவதையும் அதன் மூலம் அவரது சமூகப் புரட்சி உள்ளம் வெளிப்படுவதையும் இனம் காணலாம். பிரபுலிங்கலீலை என்னும் இக்காப்பியத்தின் கதைத்தலைவனான தன்னிகரில்லா அல்லமதேவனே வீரசைவத்தைத் தோற்றுவித்தான் என்கிறார் சிவப்பிரகாசர். கலங்குதல் இல்லாத நிலையினை உடைய தூயன் அல்லம தேவன், கொள்ளக் கொள்ளக் குறைவுபடாத பேரின்பத்தைக் கொள்ளைகொண்டு உண்ண உலகத்தில் வீர சைவத்தை ஒளி திகழுமாறு செய்தனன் என சுவாமிகள் உரைப்பது வீர சைவத்தின் தோற்றம் பற்றி அவருக்கு இருந்த கருத்தாக்கத்தைப் புலப்படுத்துகிறது. வீர சைவநெறி என்பது இறைவனாலேயே தோற்றுவிக்கப்பட்டது என்னும் கொள்கை முடிவில் சுவாமிகள் உறுதியுடன் இருந்தமை அவரது எழுத்துக்கள் வழி அறியலா கிறது. இறைவனை அல்லமராக அவதரிக்கச் செய்து அவருக்கு வீரசைவ நெறி மிக விருப்பமானது எனக் கூறுமிடத்து சிவப்பிரகாசர் வீரசைவத்தைச் சிவபெருமானின் உள்ளத்தில் இடம்பிடித்த உயர்ந்த நெறிக் கோட்பாடு என்றே வலியுறுத்த முனைவதை அடையாளம் காணலாம். ‘மை தீட்டப்பெற்ற வரிகள் படர்ந்த கயல் நெடுங்கண் மடவரலே’ என உமாதேவியை அழைத்த சுவாமிகள், அவருக்குக் கூறுவது போன்று சிவபெருமானின் சிறப்பைக் கூறி அவனுக்கு விருப்பமானது வீரசைவமே என்கிறார். ஒவ்வொருவர் பிறவிப் பிணியையும் நீக்கும் அல்லம தேவன், எல்லா சமயங்களுக்கும் இறைவனே. ஆயினும் சைவ சமயத்திடம் நேயம் கொண்டவன்; அதிலும் வீரசைவத்தில் விருப்பு உடையவன்'' என்று வள்ளலாகிய இறைவன் விளம்பினான் எனக் கூறுமிடத்து எல்லா சமயங்களுக்கும் தலைவன் அல்லமதேவன்; அவன் இறைவன். அவனுக்கு விருப்பமானது சைவம்; அதிலும் மிக விருப்பமானது வீரசைவம் என்னும் தன் கொள்கை முடிவை வெளிப்படுத்தியிருப்பதை இனம் காணமுடிகிறது. இறைவனை அல்லம தேவனாகவே கண்டவர் மட்டுமல்லாது அவரே உமாதேவியிடம் நமக்கு விருப்பமானது வீர சைவமே எனக் கூறுவதாக சுவாமிகள் தம் காப்பியத்தை எடுத்துச் செல்கிறார். இதன் மூலம் அவர் தம் கோட்பாட்டை வலியுறுத்தவும் நிலைநிறுத்தவும் இறைவனையே கருவியாக எடுத்தாண்டிருக்கும் கருத்துருவாக்கப் புலப்பாட்டு உத்தியை இனம் காண முடிகிறது.

உமாதேவியும் சிவபெருமானும் உரையாடுவதாக அமைத்து அவ்வுரையாடலில் வீர சைவத்தின் சிறப்பையும் பெருமையையும் திறனையும் வெளிப்படுத்தி, படிப்பவர் நெஞ்சில் இடம் பிடிக்கும்

தன்மை சிவப்பிரகாச சுவாமிகளின் இலக்கிய வடிவ உருவாக்கத்தில் பெற்றிருந்த தெளிவினை இனம் காண முடிகிறது.

''இமையவர் போற்றும் முக்கட்பிரானே எவ்வகைச் சமயத்திற்கும் சைவம் மேல் ஆகியது எதனால்? அதிலும் வீரசைவம் சிறந்தது எதனால் கூறுக'' என உமையவள் இறைவனிடம் கேட்க, ''பருக்கைக் கற்களின் ஒலியால் சிலம்பு அரற்றும் அடிமலரும் தடங் கண்ணும் உடைய நல்லாய்! அதாவது உமாதேவியே! உரைக்கப்படும் சமயங்கள் யாவற்றுக்கும் முடிவான இடத்தைச் சைவம் வகிக்கிறது. அந்தச் சைவத்தின் மேலாய பாகத்தை வீரசைவம் ஏற்றிருக்கிறது. யாவருக்கும் தெரிவிக்கும் காமியத் தவம் முதலியவற்றின் உச்சியில் வீரசைவம் விளங்கி நிற்பதைக் காண்பாயாக'' என இறைவன் பதில் கூறுகிறான். இவ்வாறு அமைந்த பகுதியில் வீரசைவம் சைவ சமயத்தில் மேலான இடத்தையும் பங்கினையும் பெற்று விளங்குவது என்பதை இறைவனாலேயே கூறச் செய்திருப்பது வீரசைவ நெறியில் அவருக்கு இருந்த வெறியையும் வேட்கையினையும் அறிந்து கொள்ளலாம். மேலும் 'காமியத் தவம்' என்னும் அனைவருக்கும் இறையாற்றலை அறிவிக்கும் திறம் கொண்ட காமியத் தவத்தை அடிப்படையாகக் கொண்டு வீரசைவம் விளங்குகிறது; அது நன்மையைத் தருவதே. அதோடு வீரசைவமே மனிதன் வீடுபேறு அடைவதற்குரிய இறுதி நிலைப்படியாக விளங்குவது வீர சைவமே என வலியுறுத்துகிறார் சிவப்பிரகாசர் சுவாமிகள். சைவர்களின் வாழ்க்கை இலட்சியத்தை, பிறவிப் பயனை அடையும் முக்தி நிலைக்கு வீரசைவர்களாலேயே செல்ல முடியும் என்றும் அதற்குரிய இறுதிப்படி வீரசைவம் என்றும் குறிப்பிடுவது வீர சைவக் கோட்பாட்டில் சுவாமிகளுக்கு இருந்த உறுதியை இனம் காட்டுகிறது.

''நறுந்தளிரை வருத்துகின்ற, அதனைவிட தன் மென்மையாலும் வண்ணத்தாலும் சிறந்துள்ள மேனியை உடைய நறுமலர்க்கொடி போன்றவளே! புறமான சமயங்களிற் புகுந்தாலும் பின்பின் அகச் சமயத்தை அடைந்து, அதன்பின் அறம் திகழும் சைவ சமயம் சார்ந்து அதன் சரியை கிரியை யோகம் ஆகியவற்றை நன்கு செயலாற்றிப் பின்பு, சிறப்புறு வீரசைவம் சேர்ந்தபின் விடுதியாகிய முத்தி கிடைக்கும்'' என இறைவன் உமையம்மையிடம் கூறுவது போன்று அமைந்திருக்கும் சுவாமிகளின் இக்கருத்தாக்கம் பிறவிப் பெரும்பயனாகிய முத்தியைத் தருவதே வீரசைவம் என முடிவு துணியும் தன்மையினைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

வேதாந்தமும் ஆகம முடிவும் ஒத்து இலங்குவது வீரசைவத்தின் இயல்பாகும். ''அரிய மறையின் முடிவும் சீர்சால் ஆகமத்தின் முடிவும் ஒத்து, முரண்பாடு இன்றி, பூரணமாக நிறைந்துள்ள பரம்பொருளை விளங்கும்படி காட்டி (நிறுவிகற்ப சமாதிநிலை) தருகின்ற முறை வீர சைவம் ஆகும். அதனால் அது தலைமையானது. மறுவற்ற அந்த இருவகை (வேதம், சைவாகமம்) நூல்களும் (இந்தச் சுவ அனுபூதிக்குப்) பிரமாணம்

ஆகும்'' என வீரசைவத்தின் தன்மையை எடுத்துரைக்கிறார் சிவப்பிரகாச சுவாமிகள். இதன் மூலம் அவர் வீரசைவ நெறியில் கொண்டிருந்த ஆழ்ந்த ஈடுபாட்டையும் நம்பிக்கையையும் தெளிவையும் இனம் காணமுடிகிறது.

''மாவடு போன்ற கண்களை உடைய மாதே! ஒவ்வொரு விடயத்திலும் உறுவதால் எய்தும் இனிய சுவையைப் பூரணமாக்கி எப்பொழுதும் எமது முன்னிலையில் படையல் செய்து அந்த எமது பிரசாதம் கொண்டு மிக்க கரும அனுட்டானங்களை நினையாமல் சலனமற்றிருக்கின்ற இந்தத் தூய சுவானுபூதிநிலை இந்த வீர சைவத்தினால் எய்தும் அல்லாமல் வேறொரு மார்க்கத்திலும் கிடைக்குமோ?'' என இறைவன் உமையம்மையிடம் கேட்பது போன்று அமைத்துள்ள இக்கருத்தாக்கத்தின் மூலம் சுவாமிகள் ஒப்பற்ற தூயவழி வீர சைவமே என நிலைநிறுத்துகிறார்.

காப்பியத் தலைவனான அல்லமதேவன் சிவபெருமானின் வடிவமாகவே படைக்கப்பட்டுள்ளான். காப்பியத் தலைவியான அக்கமாதேவி உமாதேவியின் வடிவமாகப் படைக்கப்பட்டுள்ளாள். இவ்விரு கதை மாந்தர்களுக்கும் இடையே ஓர் உரையாடலை அமைத்து அதில் வீரசைவக் கோட்பாட்டு நெறிகளையும் இயல்பினையும் சிறப்பினையும் எடுத்துரைக்கும் பாங்கில் சிவப்பிரகாசர் புதிய இலக்கிய உத்தியைக் கையாண்டு தனித்தன்மை பெற்றுத் திகழ்கிறார். அத்துடன் அவர் வீரசைவ நெறி பற்று கொண்டிருந்த கோட்பாட்டு கருத்தாக்கங்களையும் புரட்சி உள்ளத்தையும் இனம் காண முடிகிறது.

வீரசைவத்தின்கண் எல்லாவற்றையும் அறியும் அறிவை, ஞான போதகாசிரியன் என்கின்ற ஒப்பில்லாத அல்லமதேவன், அழகிய மாதேவி என்னும் பெயருடையவளாகிய உன்னுடைய சாத்துவிகக் கலை மாதினுக்கும் மேன்மை பொருந்திய வசவிண்ணன் முதலிய மெய்யடியார்கட்கும் விளங்கக் காட்டினன் (இரா. இராசகோபாலன்: பிரபுலிங்கலீலை வசனம்: 1990: 308) என வரும் கருத்தாக்கத்தின் மூலம் வீர சைவ அறிவினை அல்லமர் விளங்கச் செய்தார் என்னும் சுவாமிகளின் முடிவான கருத்தினை விளங்கிக் கொள்ளலாம்.

வீரசைவரான சுவாமிகள் இட்டலிங்க வழிபாட்டைப் போற்றுகிறார். இட்டலிங்க வழிபாடு இறைவனை உயிரினுள் ஒன்ற உதவும் என்கிறார். ''ஆ (பசு) கொண்டுள்ள நோயானது நீங்க ஆவின் பாலைக் கறந்து ஆவுக்கு ஊட்டுதல் போல ஆணவம் கெட உயிரிற் பிரிவற நின்ற இறைவனை உள்ளங்கையில் வரவழைத்துப் பின்னர் உயிரினுள் அமைவுறும்படி ஞான ஆசிரியன் ஆக்குவன்'' எனக் குறிப்பிடுவதன் மூலம் சுவாமிகளின் இட்டலிங்க வழிபாட்டுக் கோட்பாட்டையும் தத்துவார்த்த நெறியையும் விளங்கிக் கொள்ளலாம். இதில் அவருக்கு இருந்த வாகட மருத்துவ அறிவினை இனம் காணமுடிகிறது. தம் சமயக்

கோட்பாட்டுப் புலப்பாட்டுடன் மருத்துவம் யதார்த்தம் உள்ளிட்ட பிற அறிவுநிலைக் கருத்தாக்கங்களையும் அமைத்து வெளியிட்டிருப்பது அவரது தனித்தன்மையினையும் புரட்சி உள்ளத்தையும் இனம் காட்டுகிறது. இட்டலிங்கம் உள்ளங்கையில் விளங்குகிறது. அது பல பெயர்களை ஐவகைப் பொறிதொறும் அந்தந்த நிலைக்கு அளவாகத் தாங்கி ஒள்ளிய ஐந்து புலன்களை அறிவை நுகர்ந்து பேருமின்றி அழிந்து அறிதற்கு அரிய அனுபவ நிலைகளுக்கு ஆதாரத்தன்மை அடைந்தும் தனது இயல்புத்தன்மைக்கு மாறின்றிப் பூரணமாக நிறைந் திருக்கும். இது அடைந்துள்ள வடிவம், உணர்வு இருப்புநிலை என்பவ தூல (பரு) சூக்கும (நுண்) காரணம் என்னும் உடல் மூன்றினும் அடைந்திடும் சங்கிலி போல் தொடர்ந்து உள்ள இருவினை வலிமையை மாய்த்து யான் என்னும் இடும்பை குன்றிய இடத்துப் பேரின்பப் பேற்றைத் தரும் இயல்புடையது. இந்த இட்டலிங்கத்தைக் கூர்ந்து நோக்குபவன் அறியாமை என்னும் மாயையை வெல்லும் ஆற்றல் பெறுகிறான் என்பது போன்ற கருத்தாக்கங்கள்வழி வீரசைவத் தத்துவ நுண்மை களை எடுத்துரைக்கிறார் சிவப்பிரகாசர். இதன் மூலம் வழிபாட்டு நெறியில் அவர் கொண்டிருந்த புரட்சி எண்ணத்தை இனம் காணமுடியும்.

''ஒப்பற்ற மெய்யன்பு என்னும் மாலை அணிந்து மேலான உறுதி (வைராக்கியம்) என்ற ஆடை புனைந்து நீங்காத உண்மையறிவு என்ற இருப்புக் கச்சை செறிய இறைவனைத் தன் நெஞ்சகத்தே தவறாது நிறைபெறச் செய்வோன் பக்தன் ஆகுவன்'' (இரா. இராசகோபாலன்: 1990 : 222) என ஒரு பக்தன் விளங்கவேண்டிய முறையையும் அவனுக் குரிய இலக்கணத்தையும் வரையறுத்துக் கூறும் சுவாமிகள் இதிலிருந்து மாறுபட்டு விளங்குபவனைப் பக்தனாகவே ஏற்றுக்கொள்ளாத தன்மையைக் காணலாம். பரு, நுண், காரண உடம்புகள் மூன்றையும் ஒன்றினுள் ஒன்றாக உள்ளுறப் பொருந்த ஆணியின் மடிப்பைப் போல் மடித்து எப்போதும் அமைதியுண்டாக வைப்பவன் சிவ வடிவமே உருவானவன் என்பது சுவாமிகள் கண்ட முடிவு.

குற்றமில்லாத மனத்தொழும் அன்மையல்லாது இறைவன் வெறும் பூசனையை விரும்பமாட்டான். அன்பும் மன ஒருமையுமே இறைவனுக்கு உவப்பான வழிபாடு எனக் கூறுகிறார் சுவாமிகள். இது,

''கண்ணைக் காட்டில் அலையவிட்டு
பண்ணிடும் பூசையாலே பயன்ஒன்றும் இல்லையடி''

என்னும் கவிமணியின் கருத்துடன் ஒப்பிட்டுக் கருதத்தக்கது. பூசனை புரியாத கையையும் இறைவனின் புகழைப் பேசுதல் இல்லாத வாயையும் உடையவராய் உழலும் ஈனர்களைவிடப் பெருங்காட்டில் நாணமில்லாது அலையும் புன்குரங்கு நற்பண்பு உடையது. மேலும் குடிப்பன, விழுங்குவன, கூரிய பல்லாற் கடிப்பன, நக்குவன ஆகிய அனைத்தையும்

கையாகிய தாமரை மலரில் உள்ள சிவனுக்குப் (இட்டலிங்க சிவனுக்கு) படைத்து உண்பவன் இனிமேல் வரும் வினைகள் யாவும் ஒழித்தவன் ஆவான் என்பது சுவாமிகள் வகுத்த புரட்சிகரமான வழிபாட்டு நெறியாகும்.

''பிறர் பொருளைக் கொள்ளை கொண்டாலும் பிறர் குறைகளைக் கூறினாலும் பிள்ளையை அறுத்தாலும் பற்பல பிழைகள் செய்தாலும் சொல்லுதற்கு அரிய நல்ல சிவனடியாரை இகழாதிருப்பின் ஈசனுக்கு அன்பனாம் அவன்'' எனக் கூறி பக்திமை உறப்பின் தன்மையையும் புரட்சிக் கருத்தையும் வெளிப்படுத்துகிறார் சுவாமிகள். ''உலகில் பாவம் எனக் கருதும் எதனையும் பாவமல்ல; சிவனடியாரை இகழ்ந்து பேசுவதே பாவம்'' என்னும் மாறுபட்ட கருத்தாக்கத்தை நிலைநிறுத்துவது அவரது புரட்சி மனத்தைக் காட்டுகிறது. தனித்தன்மையைப் புலப்படுத்துகிறது.

மேலும், ''அடியார்கட்குச் சாதி வேற்றுமை கருதினோன் உள்ளங் கையில் எழுந்தருளிய இறைவனுக்கும் அவ்வாறு கருதினோன் ஆவான். இறைவனோடு அடியார்களை வேறு எனப் பேதம் காணும் அத்தகையோன் அறிதற்கரிய சேற்றினில் (நரகினில்) கிடந்து வருந்துவான் எனக் குறிப்பிட்டு கடவுட் பற்றுக்குச் சாதியுணர்வு தடையாக இருப்பதையும் அவ்வாறு தடையாக இருந்தால் சாதி வேறுபாடு கருதுபவனுக்கு நரகம்தான் கிடைக்கும் என்னும் ஒரு சமூகப் படிப்பினையை ஊட்டுகிறார் சுவாமிகள். இது அவரது சமூகப் புரட்சிக் கருத்தாக்கத்தின் விழுமியத்திற்குத் தக்க சான்றாக அமைகிறது. சமூகத்தைக் கூறுபடுத்தி மனித இனத்தைப் பாழ்படுத்திக் கொண்டிருக்கும் கிருமிகள் பல உள்ளன. அவற்றில் ஒன்று சாதி. இது சமூகத்தின் பலநிலைகளிலும் விசக்கிருமியாப் படர்ந்து மனித இனத்தைப் பாழ்படுத்தி அழித்துக் கொண்டு வருகிறது. அந்த நிலையில் சமய நெறிகளும் பரவி இறைநெறியையும் பக்தி மார்க்கத்தையும் அழித்துவரும் சாதிய அழுத்தத்தை இனம் கண்டு பொங்கி எழுந்தார் சிவப்பிரகாச சுவாமிகள். சாதி என்னும் விசக் கிருமி சமயத்தில் பரவுவதை அவர் மனம் அனுமதிக்கவில்லை. எனவேதான் சமய நிலையில் சாதிப் பாகுபாடு காண்பவர்கள் நரகத்தில் விழுவர் என கோபத்தின் உச்சத்திற்கே சென்று குறிப்பிடுகிறார். இதன் மூலம் பல எதிர்ப்புகளையும் விமர்சனங்களையும் சந்தித்தபோதும் தம் சாதிய ஒழிப்புக் கருத்தாக்கத்தில் உறுதியாக நின்றிருந்தார். இதன் மூலம் அவரது மனத்திடத்தையும் கொள்கைப்பற்றையும் தனித்தன்மையையும் பக்தி நெறியையும் வீர சைவக்கோட்பாட்டு அழுத்தத்தையும் புரட்சி உள்ளத்தையும் இனம் காணமுடிகிறது.

மேற்குறிப்பிட்ட செய்திகள் வீரசைவர் சிவப்பிரகாசர் ஒரு சமூகப் புரட்சியாளர் என்னும் கருத்தாக்கத்தை நிலைநிறுத்தும் ஆதாரங்களாக விளங்குவதை இக்கட்டுரைவழி ஓரளவு இனம் காணமுடியும்.

101. சுவாமிகள் காட்டும் நன்னெறி

வ.ச. வண்டார்குழலி, கோவை.

தமிழ்மொழிக்கு உயிரும் உடம்பும் என்று மதிக்கத்தக்கன சமய இலக்கியங்கள். இவை பெரும்பாலும் ஆன்மீக வாழ்வு பற்றிக் கூறும் பக்தி இலக்கியங்களாம். சமய இலக்கியங்கள் என்ற பெயர் பெற்றிருப் பினும், இவ்விலக்கியங்கள் மக்கள் வாழ்க்கைக்குத் தொடர்பான அறநெறிகளையும், உயர்ந்த எண்ணங்களையும், நல்ல வழக்க ஒழுக்கங்களையும் நிரம்பவும் தெளிவாக உணர்த்துகின்றன. அத்தகு இலக்கியங்களுள் ஒன்றாகத் திகழ்வது சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய நன்னெறி என்னும் நூலாம்.

நூல் குறிப்பு

காலந்தோறும் இவ்வுலகில் சான்றோர் பலர் தோன்றுகின்றனர். அவர்கள் பேரறிவுத்திறனும், பரந்துபட்ட உள்ளமும் கொண்டு திகழ் கின்றனர். இவ்வுலக மக்கள் அனைவரும் இன்ப வாழ்வு வாழ்ந்து உயர்நெறி எய்த வேண்டும் என்பது அவர்களின் திருவுள்ளம். இவ்வுலகில் வாழும் மக்கள் பல திறத்தினர். ஒவ்வொருவரும் தனித்தன்மையுடையராய் இலங்குகின்றனர். எனினும் அவர்கள் மனம் செம்மையடைய வேண்டும்; நல்வாழ்வு பெற்றுச் சிறக்க வேண்டும் இதற்குரிய சீரிய நெறிகளைக் கற்றுவல்ல சான்றோர்கள் தத்தம் இலக்கியங்களில் பொதிய வைத்துள்ளனர். இச்சான்றோர்களில் தலை சிறந்தவர் சிவப்பிரகாச சுவாமிகள். அவர் மனித வாழ்க்கைக்குரிய வாழ்வியல் உண்மைகளைத் தம் நூலாகிய நன்னெறியில் வடித்துத் தந்துள்ளார்.

ஆசிரியர் குறிப்பு

சிவப்பிரகாச சுவாமிகள் காஞ்சியில் பிறந்து, துறைமங்கலம் என்னும் ஊரில் வாழ்ந்தவர். குமார தேசிகரின் மகன் ஆவார். அண்ணாமலை ரெட்டியரால் ஆதரிக்கப் பெற்றவர். வீரசைவ சமயத்தினர். இவருடைய ஞானாசிரியர் பொம்மபுரம் சிவஞான பாலைய தேசிகர் ஆவார். இவர் தருமபுரம் வெள்ளியம்பலத் தம்பிரானிடம் இலக்கணம் கற்றவர். கற்பனைக் களஞ்சியமாகத் திகழ்ந்த இவர் எதையும் விரும்பியவாறு பாடவல்லவர். கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் உயிர் வாழ்ந்த காலம் முப்பத்திரண்டே ஆண்டு காலம் என்பர். இவர்

பொம்மபுரத்தில் வாழ்ந்தபோது இந்த 'நன்னெறி' எழுதப்பட்டதாகும் என்பர். ஒருநாள் இவர் தனியாகக் கடற்கரை சென்றார். அங்குள்ள மணற்பரப்பில் நன்னெறி வெண்பா நாற்பதையும் எழுதிவிட்டு வந்தார். தம் தம்பி கருணைப் பிரகாசரை அங்கு அனுப்பி அப்பாடல்களை ஏட்டில் எழுதி வரும்படி பணித்தார். அவரும் அப்படியே எழுதி வந்தார் என்பர். இந்நூலுக்கு சரவணப் பெருமாள் ஐயர், ந.மு.வே. நாட்டார் போன்றோர் உரை எழுதியுள்ளனர்.

சிவப்பிரகாச சுவாமிகள் 'நன்னெறி' என்ற இந்நூலின்கண் 40 வெண்பாக்களைப் பாடியுள்ளார். இன்றைய மனித வாழ்க்கை உணவுக்கும், புகழுக்கும், பணத்திற்கும், பதவிக்கும் போட்டியிட்டுக் கொண்டு உள்ளது. சிறந்த வாழ்வியல் நெறிகள் பிறழ்ந்து கொண்டிருக்கின்றன. சிவப்பிரகாச சுவாமிகள் இன்றியமையாத சில வாழ்வியல் நன்னெறிகளை இந்நூலில் சுட்டியுள்ளார். விநாயகனின் அடிதொழுது இந்நன்னெறியினை நயம்பட நவின்றுள்ளார்.

கல்வி – நெறி

மனிதன் மாண்புடையவனாக விளங்க வேண்டுமானால் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும். எழுத்தறிவின் மேன்மையினை,

''எழுத்தறியார் கல்விப் பெருக்கம் அனைத்தும்
எழுத்தறிவள் காணின் இலையாம் எழுத்தறிவார்
ஆயுங் கடவுள் அவிர்சடைமுன் கண்டளவில்
வீயுஞ் சுரநீர் மிகை'' (நன்னெறி-21)

என்ற பாடலின் வழி விளக்குகின்றார். 'கல்லாதவரின் பெருக்கம் அனைத்தும் கற்றோர் முன் என்றும் இல்லாமல் போகும்' என்கிறார்.

அரசரும் கற்றோர்க்கு ஒப்பாகார் என்ற கருத்தினை

''பொன் அணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னும் அறிஞரைத் தாம் மற்றொவ்வார்'' (நன்னெறி-40)

என்ற பாடல்வழி விளக்குகின்றார்.

அறநெறி

உலக நடப்பிற்கும், ஒரு குடும்பத்தின் நல்வாழ்விற்கும் பல அறங்கள் தேவைப்படுகின்றன. அறநெறியினை மேற்கொண்டு செம்மையான அறங்கள் செய்து, மானுட வாழ்வின் சிறப்பினை அடைய வேண்டும் ஒல்லும் வகையால் அறவினையைச் செய்ய வேண்டும். அவ்வறத்தினை அன்றறிவாம் என்று எண்ணாது உடனுக்குடன் ஆற்ற வேண்டும்.

''. . . . .
. . . .
வன்மையில் வந்திடுங் கூற்றம் வருமுன்னந்
தன்மையில் நல்ல தவஞ்செய்யும் நீரே'' (திருமந்திரம்-255)

என்று திருமூலர் அறம் செய்வான் திறத்தில் குறிப்பிடுவது போலச் சிவப்பிரகாசரும்

''கொள்ளும் கொடுங்கூற்றம் கொல்வான் குறுகுதல்முன்
உள்ளம் கனிந்து அறம்செய்து உய்கவே...''

என்று மொழிகின்றார்.

செய்யும் அறங்கள் பயனுள்ளதாக இலங்க வேண்டும். அறிவுடையோர் செய்யும் அறங்களே பயன் விளைப்பன. நூல்களின் பொருளை அறியும் அறிவிலார் செய்யும் மிகுந்த அறங்கள் பயனில்லாதன என்று

'பன்னும் பனுவல் பயன்தேர் அறிவிலார்
மன்னும் அறங்கள் வலியிலவே' (நன்னெறி-32)

என்று விளக்குகின்றார்.

ஈகை நெறி

அறங்களில் தலையாய அறமாக விளங்குவது ஈகை. வள்ளுவர் 'வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை' என்கிறார்.

சிவப்பிரகாச சுவாமிகளும்,

'எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்குஈந்து என்றுஅவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ - பைந்தொடீ!
நன்று பயனுதவி நில்லா அரம்பையின்கீழ்க்
கன்றும் உதவும் கனி' (பாடல்-27)

வழிவழியாக வாழைபோல் பிறருக்குக் கொடுத்து உதவவேண்டும் என்கிறார்.

பேச்சு - நெறி

பிறருக்குப் பயன்தரும் சொற்களைப் பேசுதலும் அறமாகும் சொற்களில் இருவகையுண்டு. ஒன்று வன்சொல், மற்றொன்று இன்சொல்.

'மாசற்ற நெஞ்சுடையார் வன்சொல் இனிது ஏனையவர்
பேசுற்ற இன்சொல் பிறிது என்க'....

என்று கூறுமுகத்தான் குற்றமற்ற நெஞ்சினர் பேசும் வன்சொல்லும் அது பிறருக்கு இனிமை பயக்கும் என்கிறார். உள்ளத்திற்கு இனிமை தருகின்ற சொல்லைக் கேட்டு மனம் மகிழ்வர் என்று பிறிதொரு பாடலில் கூறுகிறார்.

இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் அன்றும் மகிழாதே

என்கிறார். திருமூலரும் எல்லோரும் செய்யக் கூடிய எளிமையான அறம் இனிமையாகப் பேசுதல் என்பதனை,

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுரை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே (திருமந்திரம்-252)

திருமந்திரப் பாடலில் குறிப்பிட்டுள்ளமை நோக்கத்தக்கது.

உதவி - நெறி

மனித மனம் துன்பம் வந்தபோது உதவிக்கு ஏங்குகின்றது. அவ்வாறு உதவிக்கு ஏங்கும் உள்ளங்களுக்குக் கைம்மாறு விரும்பாது, வேண்டாது உதவ வேண்டும் என்றும், விருப்பமுடன் உதவவேண்டும் என்றும், உதவி தேவைப்படும்போது உரியவரைக் கொண்டு உதவி பெறவேண்டும் என்றும் நன்னெறியில் சுவாமிகள் குறிப்பிட்டுள்ளார். கீழ்வரும் பாடல் வரிகள் இக்கருத்துக்களை விளக்குவன.

''என்று முகமன் இயம்பா தவர்கண்ணும்
சென்று பொருள் கொடுப்பர் தீதற்றோர்''

''கைம்மா றுஉகவாமல் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மால் இயல்உதவி தாம் செய்வா....'' (நன்னெறி-27)

பெருக்க மொடுசுருக்கம் பெற்ற பொருட்கு ஏற்ப
விருப்ப மொடு கொடுப்பர் மேலோர்..... (நன்னெறி-13)

தங்கட்கு உதவிலர்கைத் தாம்ஒன்று கொள்ளின்அவர்
தங்கட்கு உரியவரால் தாம்கொள்க.... (நன்னெறி-5)

'உதவி' எனும் உன்னத அறப்பண்பினை இப்பாடல்கள் வழி அறிய முடிகின்றது.

நட்பு-நெறி

மனித வாழ்க்கையில் தோழமைப் பண்பு உயரிய பண்பாகும். தோழமை கொள்ள வேண்டியவர் யார்? நட்பு கொள்ளாது நீக்க வேண்டியவர் யார் என்பன போன்ற சிறந்த கருத்தமைந்த வெண்பாக்களை நன்னெறியில் காணமுடிகின்றது. நல்லோர் நட்பும் தீயோர் நட்பும் (பாடல்-31) தகவிலர் நட்பின் தீமையும் (பாடல்-32) விட்டுப்பிரியா நட்பும் (பாடல்-5) எத்தகையது என்பதனை நன்னெறியில் சுட்டுகின்றார்.

அடக்க வேண்டியவை

செருக்கு கல்வியாலும், செல்வத்தாலும் ஏற்படக் கூடியது. முன்னது ஞானச் செருக்கு, பின்னது செல்வச் செருக்கு. இவ்விரு செருக்குகளை நன்னெறி ஏழாம் பாடலும், பதினான்காம் பாடலும் விளக்குகின்றன.

செருக்கினைப் போல் சினத்தினையும் அடக்க வேண்டும் என்பதனை

'உள்ளம் கவர்ந்தெழுந்து ஓங்கு சினம்காத்துக்
கொள்ளும் குணமே குணம் என்க' (நன்னெறி-8)

நன்னெறி உணர்த்துகின்றது.

கடைப்பிடிக்க வேண்டியவை

சமுதாய வாழ்விற்குப் பெரியோரைத் துணைக்கொண்டு (பாடல்-9) பழிக்கு அஞ்சி, (பாடல்-37) பிறர் துன்பத்தினை நீக்கி, (பாடல்-10) புகழ்வேண்டாது, (பாடல்-33) மேலோர், கீழோர் இயல்புகளை அறிந்து (பாடல்-35) கீழோர் தொடர்பினை நீக்கி, (பாடல்-25) உருவுகண்டு எள்ளாது (பாடல்-37), தன்னைத் தான் வியந்து கொள்ளாமல் அறிஞர் செயல் எது மூடர் செயல் எது என இனம் கண்டு, (பாடல்-28) புலன்களால் வரும் தீமை அறிந்து, (பாடல்-11) உடம்பு, உயிர் இரண்டின் தன்மையினை உணர்ந்து (பாடல்-12) நன்னெறி நடத்தலின் இன்றி யமையாமையை இந்நூலின்கண் கூறியுள்ளார்.

நன்னெறி என்ற இந்நூலின்கண் ஆசிரியர் மகடூஉ முன்னிலையாக வருணனைத் திறத்துடனும் ஒவ்வொரு வெண்பாவிலும் அழகிய உவமை நயத்துடனும் கூறியிருக்கும் பாங்கு படித்து இன்புறத்தக்கது. எளிய இனிய அனைவரும் ஏற்றுக் கொள்ளத்தக்க நன்னெறியினை இந்நூலின்கண் கூறியுள்ளார்.

''மனிதனாய் ஆணாய்க் கிரேக்கனாய்ப் பிறந்த
மாட்சிமைக்கு அறிஞர்தாம் ஒருவர்
நனிமிக மகிழ்ந்தார்; நலம்மிகு தமிழன்
நற்சைவன், சைவ சித்தாந்தி,
எனஇவண் பிறந்த இனியநற் பேற்றை
எண்ணி, நாம் இறையருள் வழுத்தித்
துனியறு சைவச் செந்தமிழ் வளர்க்கும்
தொண்டுகள் புரிந்துநன் றுயவாம்'' (ந. இரா. முருகவேள்)

அவர்கள் கூறியது போல, சிவப்பிரகாச சுவாமிகளின் நன்னெறி காட்டும் வழியில் நடந்து நன்றுய்வோமாக!

102. சிவப்பிரகாசரின் சிறுவர் இலக்கியம்

தி. சுந்தராம்பாள், விருதுநகர்.

நன்னெறி என்னும் நீதிநூல் இன்றைக்கு ஏறக்குறைய இருநூற்றெண்பது ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த துறைமங்கலம் சிவப்பிரகாசர் என்னும் கவிஞரால் இயற்றப் பெற்றது. மக்கள் வாழ்வு செம்மையாக அமைவதற்குரிய நல்ல அறநெறிகளை எடுத்து மொழியும் இந்நூலுக்கு ''நன்னெறி'' என்னும் பெயரை வழங்கியுள்ளார் சிவப்பிரகாசர். ஔவையாரின் நல்வழிபோல் 'நன்னெறி' என்றமைந்து பொது அறங்களைக் கூறும் நீதிநூலாகத் திகழ்கிறது.

நூல் அமைப்பு

நீதி நூல் ஆறடிக்கு மேற்படாதிருத்தல், அம்மை என்ற வனப்புப் பொருந்தி அமைதல், அறம், பொருள் இன்பங்களை வெண்பா யாப்பில் (தொல். செய். 235) ஒருவரை விளித்து நேரே பேசுவது போல் அமைதல் வேண்டும் என்பர். நன்னெறி நூலின் கடவுள் வணக்கச் செய்யுள் விநாயகர் வணக்கமாக அமைந்துள்ளது. இச்செய்யுளில் இடம் பெறும் 'நன்னெறி நாற்பது' என்ற தொடருக்கேற்ப இந்நூல் நாற்பது வெண்பாக்களால் அமைந்துள்ளது. நீதி நூல் ஒருவரை விளித்து நேரே பேசுவது போல் அமைதல் வேண்டும் என்ற இலக்கணத்திற்கேற்ப இந்நூலின் பெரும்பான்மையான பாடல்கள் (இருபத்தி நான்கு வெண்பாக்கள்) மகடூஉ முன்னிலையாக அமைந்துள்ளன. மகடூஉ முன்னிலை, இரண்டாம் அடியில் தனிச் சொல்லாகவோ அல்லது மூன்றாம் அடியில் சொற்றொடர் களாகவோ எழில் பெற விளங்குகின்றது. நீதி நூல் அறம், பொருள் இன்பங்களை எடுத்துரைத்தல் வேண்டும் என்னும் விதிக்கேற்ப இந்நூலின் ஒவ்வொரு வெண்பாவிலும் முதல் இரண்டடிகளில் ஒரு நீதிக்கருத்தைக் கூறிப் பின்னிரண்டடிகளில் அக்கருத்தை விளக்கும் உவமானம் அமைக்கப்பட்டுள்ளது.

நன்னெறி சிறுவர் இலக்கியம்

சிவப்பிரகாசரின் நன்னெறிப் பாடல்களை அழுத்தமாகப் பார்க்கும் போது அப்பாடல்கள் கற்பவருக்கு வியப்பும் மகிழ்ச்சியும் விளைவிப்பனவாக உள்ளன. வயதிலும் அறிவிலும் முதிர்ந்த பெரியவர்கள் படித்துப் போற்றும் அறக்கருத்துக்கள் பொருந்தியனவாக உள்ளன. என்றாலும் சிவப்பிரகாசரின்

பிற நூல்களைவிட இந்நூல் எளிமையாக அமைந்திருப்பதும் பண்டைக் கதைகளையும், பழமொழிகளையும், உவமைகளையும் கூறி அறக்கருத்துக் களை விளக்கும் பாங்கும், இந்நூல் சிறுவர்க்கேற்ற நீதிநூல் என்று கருதுவதற்குச் சான்றாக அமைகின்றது. இக்கணிப்பிற்கு,

''இந்நூலின் ஒவ்வொரு பாவும் மக்கட்கு இன்றியமையாத நீதி களை அழகிய உவமைகளுடன் கூறுவதாகும். உவமைகளெல்லாம் யாவராலும் அறியப்பட்டனவாகவும், உவமேயங்களுடன் மிக்க பொருத்த முள்ளனவாகவும் அமைந்து, கற்போர்க்கு வியப்பும் மகிழ்ச்சியும் விளைப்பனவாகும். மக்களின் உடலுறுப்புக்களாகிய கண் முதலியவற்றின் இயல்புகளை ஒன்பது பாக்களிலும், ஞாயிறு, திங்கள், கடல், காற்று முதலிய இயற்கைப் பொருள்களையும், நெல், வாழை, பசு முதலிய பயிற்சி மிக்க பொருள்களையும், வெறும் பல பாக்களிலும் உவமையாக அமைத்திருப்பது, இளைஞர்கட்குக் கல்வி பயில்விப்பதில் இவ்வாசிரியர்க் குள்ள திறப்பாட்டை நன்கு விளக்கா நிற்கும்'' (நன்னெறி மூலமும் உரையும் கழகம், முன்னுரை)

''பெரும்புலவர் வியக்குமாறு காப்பியம், தலபுராணம், சிற்றிலக்கியங்கள் படைத்துள்ள சிவப்பிரகாசர் சிறுவர்க்கேற்ற ஒரு நூலையும் படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அந்நூல் நன்னெறி என்னும் நீதிநூல். 'நெறி' என்பதும் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகத் தொகுக்கப்பட்டுள்ளது'' (தமிழ் இலக்கியக் கொள்கை-2-132) என்னும் கருத்துரைகளும் வலுவூட்டுவனவாக உள்ளன.

உவமையணி-துணையாதல்

ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் பலர் வாழும் சமுதாயத்தைப் படைத்துக் காட்டுவதே கவிஞர்களின் குறிக்கோள். அறச் சான்றோராகிய சிவப்பிரகாசரும் எதிர்காலச் சமுதாயத்தின் குடிமக்களாக அமையும் சிறுவர் நெஞ்சத்தில் ஈகை, இன்சொல், பிறர் துயர்களையும் பேராண்மையும், சினமும் செருக்கும் களைந்த சான்றாண்மை, கல்விச் சிறப்பு, பிறர் நோயையும் தம் நோய் போல் கருதுதல் என்பன போன்ற உயர் பண்புகள், நீதிக்கருத்துகள் பசுமரத்தாணி போல் பதிந்து உள்ளத்தை நெகிழச் செய்து நிலையாகப் பதியும் வகையில் பாடியுள்ளார். நெறியான வாழ்வுக்கு நீதிகள் துணை செய்யும் என்பது உண்மை. நீதிகளை நேரடிக் கட்டளை போல் சொன்னால் நினைவில் தங்காது போகலாம். மற்றும் எதிர்ப்பும் வீம்பும் ஏற்படும். இது இளம்பருவ இயல்பு. ஆதலால் கருத்து விளக்கத்திற்காக உவமை அணி பொருந்தும்படிச் சொல்லி யுள்ளார். தம் நூலை நீதிக்கருத்துக்களைச் சொல்லும் பட்டியலாகப் படைக்காமல், நூல் முழுவதையும் கவிதை உணர்வோடு கற்பனை

நயம் மிளிரும் அழகிய உவமைகளைக் கொண்டு தாம் சொல்ல விரும்பிய அறக் கருத்துக்களை விளக்கியுள்ளார்.

சிவப்பிரகாசரின் உவமைத்திறம் நன்னெறியின் நாற்பது வெண்பாக் களிலும் காணப்படுகின்றது. கை, கண், நாக்கு, பல் ஆகிய உடல் உறுப்புகள்; கடல், மேகம், வெள்ளம், சந்திரன், சூறாவளி என்னும் இயற்கைப் பொருட்கள்; வாழை, மா, எட்டி, சோலை, நெல், புல் ஆகிய தாவர இனங்கள்; பாம்பு, எறும்பு, காக்கை, பசு என்னும் உயிர் வகைகள்; தளிர், பூ, கனி ஆகிய செடி, கொடிகளின் உறுப்புகள்; குளம், பானை, படகு, தாழ் முதலிய செயற்கைப் பொருள்கள் என்பன உவமைகளாக அமைக்கப்பட்டுள்ளன.

நன்னெறி நூலின் நாற்பது வெண்பாக்களிலும் சிவப்பிரகாசரின் கற்பனைத்திறம் படைத்த உவமைகள் இடம் பெற்றுள்ளன. ஆயினும் கட்டுரையின் இடச் சுருக்கம் கருதி பண்டைய புராண இதிகாசக் கதைகள், கை, கண், நாக்கு, பல் ஆகிய உடல் உறுப்புகள் என்பனவற்றை உவமான மாகக் கூறித் தான் கூற விரும்பும் நீதியை விளக்கிக் காட்டி இந்நூல் சிறுவர்க்கேற்ற நீதிநூல் என்று தெளிவுறுத்தும் சிவப்பிரகாசரின் கவித்திறம் மட்டும் இங்கு விளக்கப்படுகின்றது.

புராண இதிகாச நிகழ்வுகள் உவமை வடிவம் பெறுதல்

பொதுவான நிகழ்ச்சிகளைவிட குறிப்பிட்ட ஒருவர் வாழ்வு நிகழ்ச்சியென்றால் சிறுவர்களுக்குக் கேட்கும் ஆர்வம் கூடுதலாகும். அச்செய்தியைப் படிக்கும் சிறுவர்கள் அந்நிகழ்வுகள் வாயிலாகப் புலப்படுத்தப்படும் செய்தியை உணர்ந்து அதன்படி நடக்கவும் முயற்சி செய்வர். ஆகவே சிவப்பிரகாசர் புராண இதிகாசங்களில் இடம் பெற்றுள்ள நிகழ்வுகள் சிலவற்றை உவமையாக எடுத்துக்காட்டி நீதிக் கருத்துக்களை எடுத்துரைத்துள்ளார்.

1. வன்சொல்லும் இனிது 2. கல்விச் செருக்கு அற்று இருத்தல்; 3. வலியாரைத் துணைக்கோடல் 4. செல்வச்செருக்குக் கொள்ளாதிருத்தல் 5. பிறர் துயரம் தாங்குதல் 6. சிறியோர் நிலை பெறுதல் இல்லை என்பனவாகிய அறச் செய்திகளை சிவப்பிரகாசர் விளக்கும் பாங்கு,

1. ''சிவபெருமானுக்கு மன்மதன் அன்பின்றி எறிந்த மலர் அம்பைவிட சாக்கிய நாயனார் அன்போடு எறிந்த கல்லே விருப்பமுடையது; சாக்கியர்க்கு அருள் செய்தார்; மன்மதனை எரித்தார். அது போல குற்றம் பொருந்திய மனமுடையவரின் இனிய சொற்களைக் காட்டிலும் குற்றமற்ற மனமுடையவரின் கடுஞ்சொற்கள் இனியதாகும். மனநலமுடையவருடைய

கடுஞ்சொல்லும் இன்பம் விளைவிக்கும், மனநலம் இல்லாதவருடைய இன்சொல்லும் துன்பம் விளைவிக்கும்''. (நன்-2)

2. ''முழங்கும் பனிக்கடலும் அகத்திய முனிவர் கையால் மொண்டு பருகப் பெற்றது. அதுபோல எத்துணைப் பெருங்கல்வி உடையவராயினும் செருக்கடைவாராயின் வல்லவர் ஒருவரால் தப்பாது வெல்லப்படுவார்கள். ஆதலால் நாம் கல்விப் பெருமையால் கடலை ஒத்தவர் என்று செருக்குக் கொள்ளுதல் கூடாது. (நன்-7)

3. ''சிவபெருமானுடைய சடையில் வீற்றிருக்கும் பாம்பு கருடனைக் கண்டு பயப்படாது; அங்ஙனமே வலிமை யற்றவர் தம் பகைவர் வலியராய் இருக்கும்போது அவர் களைக் காட்டிலும் வலியாரைத் துணையாகக் கொண்டால் அஞ்ச வேண்டியதில்லை''. (நன்-9)

4. ''எக்காலத்திலும் அசைவற்றிருந்த மேரு மலைக்கும் ஒரு காலத்தில் வளைவு ஏற்பட்டது. அதாவது மேரு மலையும் ஒருநாள் வில்லாய் வளைக்கப்பட்டது. ஆதலால் அறிவுடையார் எத்துணைப் பெருஞ் செல்வத்துக்கும் அழிவு வரும் என்று அறிந்து செருக்கடைதல் இல்லை''. (நன்-14)

5. ''பெருகி வரும் ஆகாய கங்கை சிவபெருமானது சடையைக் கண்ட அளவில் அடங்கிவிடும். அதுபோல கல்விப்பெருக்கு மிக்கு இருப்பினும் இலக்கணப் புலமை மிக்கவரைக் கண்டால் இலக்கண அறிவில்லாதவர் அடங்கிவிடுவர்''. (நன்-21)

6. ''அகத்திய முனிவர் முன்னிலையில் தன்னைச் சிறப்பித்துக் கூறித் தருக்குற்ற விந்திய மலை, அவர் கையினாலே ஊன்றப் பாதாளத்திலே தாழ்ந்து தன்னுடைய உயர்வு நீங்கியது. அது போல பெரியோர் முன்பு தன்னைப் புகழ்ந்துரைப்பவன் தாழ்வை அடைவான்''. (நன்-37)

என்னும் கருத்துரைகளால் அறியப்படுகிறது. இப்பகுதியில் சிவபிரான் மீது மன்மதன் மலர்க்கணை விடுத்தல் : அம்பைவிட சாக்கிய நாயனார் கல் எறிந்து வழிபடுதல்; அகத்திய முனிவர் கடலைக் குடித்தல்; சிவபிரான் தன் கழுத்தில் பாம்பினை தரித்துக் கொள்ளுதல்; மேருமலையை வில்லாக வளைத்தல்; பெருகி வந்த கங்கையை தன் சடையில் அடக்கிக் கொள்ளுதல், அகத்திய முனிவர் விந்திய மலையின் செருக்கை அடக்குதல் ஆகிய புராண நிகழ்ச்சிகளை சிவப்பிரகாசர் சிறுவர் சமுதாயத்திற்குச்

சொல்ல விரும்பிய நீதிக் கருத்துக்களைச் சுருக்கமாகவும் செம்மையாகவும் தெளிவுறுத்துவதற்குரிய உவமைகளாக வடிவமைத்துள்ளார் என்பதும் அறியத்தக்கது.

உடல் உறுப்புகள் உவமையாதல்

அ. புகழுரையை (முகமன்) எதிர்பாராது உதவி செய்தல் :

ஆ. கைம்மாறு வேண்டாது கணவன், மனைவி ஆகிய இருவரும் கருத்து ஒருமித்து அறம் செய்தல் என்னும் அறங்களை சிறுவர்களுக்கு மிகவும் பரிச்சயமான நம் உடல் உறுப்புகளாகிய கை, பல், நாக்கு, கண் என்பனவற்றின் செயல்களை உவமைகளாகப் புனைவு செய்து,

அ. ''கையானது புகழை எதிர்பார்த்து நாவுக்கு உணவை எடுத்துக் கொடுப்பதில்லை. அதுபோல சான்றோர் தம்மைப் புகழ்ந்து கூறாதவரிடத்தும் தாமே சென்று அவர்க்கு வேண்டும் பொருள்களை வழங்குவர்'' (நன்-1)

ஆ. ''பற்கள் தமக்கு ஒரு உதவியும் செய்தற்கியலாத நாக்கிற்கு கடினமான தின்பண்டங்களைத் தாமே மென்று கொடுத்து சுவையை உண்டாக்கும். அதுபோல கற்றறிந்தோர் கைம்மாறு கருதாமல் தம் உடலை வருத்தித் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்வர்''. (நன்-6)

இ. ''இரண்டு கண்களும் ஒரு பொருளையே காணும் அதுபோல கணவன், மனைவி ஆகிய இருவரும் கருத்து ஒருமித்து செய்யும் அறமே நிறைவேறும், சிறப்புறும்'' (நன்-2)

என்று சிறுவர் நெஞ்சம் ஏற்குமாறு வடிவமைத்துக் காட்டியுள்ளார். இச்செய்திகளை

''என்று முகமன் இயம்பா தவர்கண்ணுஞ்
சென்று பொருள் கொடுப்பர் தீதற்றோர் - துன்றுசுவை
பூவிற் பொலி குழலாய்! பூங்கை புகழவோ
நாவிற்கு உதவும் நயந்து''

''கைம்மா றுகவாமற் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மால் இயலுதவி தாஞ்செய்வர் - அம்மா
முளைக்கும் எயிறு முதிர்சுவை நாவிற்கு
விளைக்கும் வலியனதாம் மென்று''

''காதன் மனையாளும் காதலனும் மாறின்றித்
தீதி லொருகருமஞ் செய்பவே-ஓதுகலை

எண்ணிரண்டு மொன்று மதிஎன் முகத்தாய் நோக்கறான்
கண்ணிரண்டு மொன்றையே காண்''

என்னும் பாடல்களால் அறியலாம்.

நாடும் மொழியும் காத்து நாளும் தொண்டாற்றிய வீரர்கள், அறிஞர்கள், புலவர்கள் ஆகியோரை சான்றோர் என்று பாராட்டுவர். இவர் யார்? ஒரு காலத்தில் சிறுவர்களே! எனவே ஏடு தூக்கி பள்ளியில் பயிலும் சிறுவர்கள் நாடு காக்கும் வீரத் தலைவராக, மொழி வளர்க்கும் அறிஞராக, இலக்கியம் படைக்கும் புலவராக உருவாக வேண்டுமென்று கருதிய கவிஞர்களின் சமுதாய நல்வாழ்வு பற்றிய எண்ணங்களே சிறுவர் இலக்கியங்களாக வடிவம் பெற்றுள்ளன. இக்கண்ணோட்டத்தில் கருதிப் பார்க்கும்போது சிறுவர்கள் செந்நெறியில் வாழ்ந்து, உயர்வு அடைவதற்குரிய நல்ல அறநெறிகளை கற்பனைக் களஞ்சியமாகிய சிவப்பிரகாசர் ஞாயிறு, திங்கள், கடல் முதலான இயற்கைப் பொருட்கள், நெல், வாழை, பசு முதலிய பயிற்சி மிக்க பொருட்கள், புராண இதிகாச நிகழ்வுகள், கை, பல், நாக்கு, கண் ஆகிய உடல் உறுப்புகள் என்பன வற்றை அழகிய உவமைகளாகப் புனைவு செய்து சிறுவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் விளக்கியுள்ளார்.

ஔவையாரின் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி ஆகிய நீதி இலக்கியங்களுடன் அதிவீரராமரின் வெற்றி வேற்கை உலகநாதரின் உலகநீதி என்னும் நீதிநூல்களுடன் சேர்த்துத் தொகுப்புகளிலும், பாடநூல்களிலும் நன்னெறி இடம் பெற்றிருப்பது இந்நூலின் சிறப்பைக் காட்டுகிறது.

103. தொல்காப்பியரும் சிவப்பிரகாசரும்

ச.வே. சுப்பிரமணியன், தமிழூர்.

தொல்காப்பியம் தமிழில் இன்று கிடைக்கின்ற நூல்களில் முதல் நூலாகவும், முதன்மை நூலாகவும் அமைந்துள்ளது. தொல்காப்பியம் கி.மு. 4–ஆம் நூற்றாண்டில் தோன்றினாலும், ஏறத்தாழ அதற்கு முந்திய தமிழ்க் கருத்துக்களை எல்லாம் தொகுத்துக் கூறும் நூலாக அமைகின்றது. தொல்காப்பியம் போன்று ஒரு உலகப்பொதுநூல் தமிழில் தோன்ற வேண்டும் என்றால் அதற்கு முன்பு ஐயாயிரம் ஆண்டுகளாவது அம்மொழி மிகுந்த இலக்கிய வளத்துடன் இருந்திருத்தல் வேண்டும். அதைச் செய்யுளியல் தெளிவாகக் காட்டுகிறது. செய்யுள் என்பது தொல்காப்பியக் காலத்து இலக்கியம் என்ற பொருளில் அமைந்தது. பிற்கால வழக்கில் தான் கவிதை என்ற பொருளில் அமைந்தது. செய்+உள்=செய்யுள். செய்யப்படுவது உள்ளே இருப்பது செய்யுள். தமிழர் மரபு முறைப்படி இலக்கியம் அகம், புறம் என இருவகைப் படும். தமிழ் இலக்கியங்களையும் அவ்வாறே பகுத்துக்கொண்டனர் அது வாழ்க்கைக்கும் பொருந்தும். தொல்காப்பியம் உலக இலக்கியங்களின் ஆணிவேர்–உலக இலக்கிய வகைகள் அனைத்தும் செய்யுளியலில் உள்ளன.

அகம் என்பது உலகம் முழுவதும் பொருந்தும். அதேபோன்றதுதான் புறமும், அகவாழ்க்கையைப் புறத்தில் செய்யமுடியாது. அக வாழ்க்கை வீட்டுவாழ்க்கை எனவும், புறவாழ்க்கை நாட்டுவாழ்க்கை எனவும் சொல்லலாம். உலகம் முழுவதும் காதல் ஒன்றுதான். அதைக் கூறுகின்ற முறைகள் வெவ்வேறுபட்டு அமையலாம்.

சிவப்பிரகாச சுவாமிகள் பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். மரபு வழி செல்லும் பெருங்கவிஞர். பல பிரபந்தங்களையும் எழுதியுள்ளார்.

அவர் திருவெங்கையூரில் இருந்தபோது திருவெங்கைக்கோவை, திருவெங்கைக் கலம்பகம், திருவெங்கையுலா, திருவெங்கையலங்காரம், எனப் பல நூல்கள் எழுதியுள்ளார். அக நூலாகிய திருவெங்கைக் கோவை, எவ்வாறு தொல்காப்பியம் வகுத்த அக இலக்கணம் முறையில் அமைந்துள்ளது என்பதைக் கூற முயல்கின்றது இக்கட்டுரை.

தொல்காப்பியர் ஒரு நூலைத்தான் எழுதியுள்ளார் வள்ளுவரும் திருக்குறள் மட்டுமே எழுதினார். இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை

மட்டுமே எழுதினார். இவ்வாறு ஒரு நூலை மட்டும் எழுதிப் புகழ் பெற்றோர் பலர். சிவப்பிரகாசர் பல நூல்களை எழுதிப் புகழ்பெற்றார்.

கோவை என்ற சொல் தொல்காப்பியத்தில் இல்லை. அது பிற்காலத்தில் தோன்றிய இலக்கிய வகை. முதல் முதலில் தோன்றிய கோவை பாண்டிக்கோவை என்பது. அது கி.பி. ஏழாம் நூற்றாண்டில் எழுதப்பெற்றதாக இருக்கலாம். ஆசிரியர் பெயர் தெரியவில்லை. அதில் 350 பாடல்கள் கிடைக்கின்றன. கோவைக்கு இலக்கணம் பின்தோன்றிய பாட்டியல் நூல்கள் கூறுகின்றன.

கோவை என்பது கூறுங்காலை
மேவிய களவு கற்பெனுங் கிளவி
ஐந்திணை திரிமா அகப்பொருள் தழீஇ
முற்றிய கலித்துறை நானூறு என்ப (பன்னிருபாட்டியல்–221)

பிற்காலத்தில் தோன்றிய எல்லா இலக்கிய வகைகளையும் தொல்காப்பியம் விருந்து என்ற அமைப்பில் அடக்கி உள்ளது.

விருந்தே தானும்
புதுவது புனைந்த யாப்பின் மேற்றே (தொல். 1495)

இதில் கோவையையும் அடக்கலாம். கோவைப் பாடல்கள் நானூறு அமைதல் வேண்டும் என்பது ஒரு கருத்து. கலித்துறைப் பாக்களால்தான் அமைதல் வேண்டும் என்பது பாட்டியல் கூறும் எண்ணம். பிற்காலத்தில் தோன்றிய முத்துவீரியம் நால்வகைப் பாக்களிலும், கோவை அமையலாம் என்று கூறுகிறது. தமிழில் 80-க்கு மேல் கோவைகள் உள்ளன.

சிவப்பிரகாசர் எழுதிய திருவெங்கைக் கோவையில் காப்புச் செய்யுள் உட்பட 427 பாடல்கள் உள்ளன.

தொல்காப்பியம் அகத்திணையியல், களவியல், கற்பியல் மூன்றிலும் அகச்செய்திகளைத் தருகிறது. பொதுநிலையில் களவியல் கற்பியல் என்பன பெரும்பிரிவுகளாக அமையும். கோவை இலக்கியத்திலும் கள்வியல் கற்பியல் என்ற பெரும்பிரிவுகள் அமைகின்றன.

திருவெங்கைக்கோவை, திருவெங்கூர் என்ற இடத்தில் உள்ள இறைவனை அவ்வூரில் உள்ள பெண் காதலித்ததாகக் கொண்டு பாடப் பெற்ற நூல். அதில் களவியலும், கற்பியலும் உண்டு. தொல்காப்பியத்தில் குறிப்பிடப் பெற்ற கூற்றுக்கள் அதே தொடரில் திருவெங்கைக் கோவையில் அமைந்துள்ளன.

கைக்கிளை – 947; காட்சி – 1053; ஐயம் – 1040; குறிப்பறிதல் – 1105; இரந்து பின்னிற்றற்கு எண்ணல் – இரந்து பின்னிலை நிற்றல் இவை இரத்தல் என்ற நிலையில் தொல்காப்பியத்தில் – 987 – 23; அமைகின்றது. முன்னிலையாக்கல் – 1047 – 1; மெய்தொட்டுப்

பயிறல் – 1048–1; பொய் பாராட்டல் – 1048–1; இடம்பெற்றுத்தழால் – 1048–2; வழிபாடு மறுத்தல் 1057–3; இடையூறு கிளத்தல் – 1048–2; நீடுநினைந்திரங்கல் – 1048–3; மறுத்தெதிர்கோடல் – 1048–3; வறிது நகைதொற்றல் என்பது தொல்காப்பியத்தில் பழிதீர் முறுவல் சிறிதே தோற்றல் – 1057–4 என்ற தொடரில் அமைகிறது. தெளிவு – 1047–4; பிரிவுழிக் கலங்கள் என்பது பிரிந்த வழிக்கலங்கல் என்ற தொடரில் தொல்காப்பியத்தில் 1048–8 உள்ளது.

பண்பு பாராட்டல் என்பது பாராட்டு எடுத்தல் என்ற தொடரில் 1210–1; தொல்காப்பியத்தில் உள்ளது. இடந்தலைப்பாடு – 144–1; பாங்கற்கூட்டம் என்பது – 1050, 1128; இரண்டு நூற்பாக்களிலும் உள்ளன. தொல்காப்பியத்தில் பாங்கி என்ற சொல் தோழி என்ற பொருளில் இல்லை. தோழி என்ற சொல்லே தொல்காப்பியத்தில் பயன்படுத்தப் பெற்றுள்ளது.

ஊர்வினாதல் – 1048–11; பெயர்வினாதல் – 1048–11; கெடுதிவினாதல் – 1048–11; ஒழிந்தது வினாதல் – 1048; பகற்குறி – 1076–1; இரவுக்குறி – 1077–1; வரைதல் வேட்கை – 1156–8; வரைவு கடாதல் – என்பது வரைவுகடாவல் எனத் தொல்காப்பியத்தில் – 1060–43 உள்ளது. அலரறிவுறுத்தல் என்பது அம்பலும் அலரும் களவு வெளிப்படுத்தாங்கு என்ற தொடரில் 1085–1 அறத்தொடு நிற்றல் – 1152–1; இவ்வாறு தொல்காப்பியத் தொடர்கள் திருவெங்கைக் கோவையின் கூற்றுத் தலைப்புக்களாக உள்ளன. (இங்குள்ள மேற்குறிப்பிட்ட எண்கள் அனைத்தும் தொல்காப்பிய நூற்பா எண்கள்.)

கற்பியலில் ஓதற்பிரிவு 972–977; தூதிற்பிரிவு 972,978. காவற்பிரிவு அதாவது பகைவயிற் பிரிவு – 973; பொருள்வயிற் பிரிவு – 979. இவ்வாறு அமைகின்றன.

சிவப்பிரகாச சுவாமிகளுக்குத் தொல்காப்பியம் தெரியும் என்பதில் ஐயமில்லை. திருக்குறளைப் பல இடங்களில் அவர் பயன்படுத்தி உள்ளார்.

கற்பதற்காகப் பிரிகின்ற பிரிவு ஓதற்பிரிவு என்று கூறப்பெறும். ஓதல் என்றால் சுற்றல் என்பது பொருள்.

''விண்ணுடையார் புகழ் நூபுர பாதர் வெல்வேல் நெடுங்கண்
பெண்ணுடையார் மகிழ் தென்வெங்கை மாநகர்ப்
பெண்ணணங்கே
கண்ணுடையார் கற்றவரே கல்லார்கண் முகத்திரண்டு
புண்ணுடையார் எனக் கூறி நம்காதலர் போயினரே.''

(திருவெங்கை – 409)

இங்குத் தோழி தலைவியிடம் அவள் காதலன் கற்பதற்காகப் பிரிந்துள்ளான் என்பதை இப்பாடலில் கூறுகிறார். இங்கு

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்துஇரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். (குறள் – 393)

என்ற குறள் எடுத்தாளப்பட்டுள்ளதை உணர்கிறோம்.

திருவெங்கைக்கோவை பல சுவையான பாடல்களைக் கொண்டுள்ளது. தோழி தலைவனாகிய சிவனைப் பார்த்துக் கேட்கின்றாள். திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளாகிய சிவன் வாழ்கின்ற ஊர் திருவெங்கை. அங்கே பசுமையான குளிர்ச்சியையுடைய சோலைகள் உள்ளன. பஞ்சு போன்ற மென்மையான தளிர் போன்ற பசுமையான பாதங்களை யுடைய மகளிர் பலர் அவ்வூரில் உள்ளனர். ஆனால் எம்தலைவி எம்மோடுதான் எப்போதும் இருக்கின்றாள். அவள் எவ்வாறு உம்முடைய உள்ளத்தில் புகுந்து மறைந்தாள் என்பது எங்களுக்குத் தெரியவில்லை. அதை நீங்கள் சொல்லலாமே! என்று கேட்கிறாள்.

இஞ்சிப் புரம் ஒருமூன்று எரித்தார் வெங்கை ஈர்ம்பொழில்வாய்ப்
பஞ்சில் சிறுதளிர் மெல்லடி மாதர் பலரினும் தான்
வஞ்சித்து எமைஎம்முடனே இருப்பினும் வந்துஉனது
நெஞ்சிற் புகுந்து மறைந்தவள் யார்சொல் நெடுந்தகையே!
(திருவெங்கை–87)

திருமணத்தை விரைவில் முடிக்கவேண்டும் என்று தோழியும் தலைவியும் நினைக்கின்றனர். அதனை வரைதல்வேட்கை என்று கூறுவர். தலைவன் இரவில் வந்து சென்று கொண்டு இருக்கிறான். வீட்டில் தாய் உறங்காது இருக்கின்றாள். வீதியில் நாய் குலைத்துக்கொண்டு இருக்கிறது. காவலர்கள் ஊரைக் காவல் புரிந்து கொண்டு இருக்கின்றனர். முழுநிலா தீயாக தலைவியைத் துன்புறுத்துகிறது. ஆந்தையாகிய கோட்டான் கூவிக்கொண்டே இருக்கிறது. இதற்கிடையில் காலை வந்துவிட்டதென சேவல் கூவுதல் வெங்கை ஊரில் இருக்கும் பனிமலையில்வாழ் சிவன் காவலர்களும் வேல்வீரர்களும் நம்மைக் கருதினால் அதனால் வரும் துன்பமும் உண்டு. இந்த நிலையில் இரவு வந்து செல்வதை நிறுத்தி விரைவில் திருமணம் செய்து கொள்க என்று வேண்டுகிறாள் தோழி.

தாயும் சுணங்கனும் ஊரும் வெங்காவலும் சந்திரனாம்
தீயும் குடிஞையும் சேவலும் தப்பும் செயல் எளிதோ
பாயும் சினவிடையார் வெங்கை வாணர் பனிவரைமேல்
காயும் கதிரிலை வேல்வீரர் நம்மைக் கருதினுமே.
(திருவெங்கை–214)

இறைவனுக்குப் பொருள் எதற்குத் தேவை அவன் பொருள் தேடுவதற்காகத் தலைவியைப் பிரிய வேண்டாமே! இறைவன் பொருள் தேடுவது உலகில் இல்லாதவர்களுக்கும் துன்புறுகின்றவர்களுக்கும் கொடுப்பதற்காகவே என்று நினைக்கிறாள் தோழி. தலைவியிடம் தலைவன் பொருள் காரணமாகப் பிரிந்ததைக் கூறுகிறாள். பாற்கடலைக் கடையும்போது அலையின் நடுவே நஞ்சு எழுந்தது. அதைத் தான் உண்டான். அவன் திருவெங்கையில் இருக்கின்றான். அவன் மேரு என்னும் மலைமீது நிதியம் திரட்டுவதற்காகச் சென்றுள்ளான் காரணம் இந்த நில உலகில் இல்லாது இரக்கின்றவர்களும் துன்புறுகின்ற மிடிகளும் மிகுதியாக இருப்பதால் அவர்களையும் தேடிக் கண்டு அவர்களுக்குக் கொடுப்பதற்காகப் பொருள் தேடச் சென்றுள்ளார்.

திரைப்பால் எழுநஞ்சம் உண்டோன் திருவெங்கைத் தென்கயத்தின்
விரைப்பான் அலங்கல் விளங்கிழையாய் மகமேரு என்னும்
வரைப்பால் நிதியம் தரற்கு ஏகினர் கடன் மாநிலத்தில்
இரப்பார் மிடிகள் புகுமிடம் தேட இறையவரே.

(திருவெங்கை–421)

பிற்காலத்து வந்த எந்தக் கவிஞனும் தொல்காப்பியத்தின் கருத்துக்கள் இல்லாமல் கவிதை எழுதுவது கடினம். எல்லாப் பொருளும் இதன் பால் உள எனத் திருக்குறளுக்கு கூறுவது போன்று தொல்காப்பியமும் எல்லாப் பொருள்களையும் கொண்டுள்ளதாய் சிவப்பிரகாசரும் தொல்காப்பியத் தொடர்களையும், கருத்துக்களையும் கொண்டுள்ளார் என்பதில் ஐயமில்லை.

பயன் கொண்ட நூல்கள்

1. சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தத் திரட்டு – கழகம் – 1941.
2. தொல்காப்பியம் – தெளிவுரை – ச.வே. சுப்பிரமணியன் – மணிவாசகர் பதிப்பகம் சென்னை – 2001.
3. தொல்காப்பியச் சிறப்பகராதி – பன்னாட்டுத் திராவிட மொழியியல் நிறுவனம் – 2000.
4. சிற்றிலக்கியச் செல்வம் – டாக்டர் ந.வீ. ஜெயராமன் – மணிவாசகர் நூலகம் – 1979
5. சிற்றிலக்கிய அகராதி – டாக்டர் ந.வீ. ஜெயராமன் - பாரி நிலையம் – 1983.

104. சிவப்பிரகாசர் நோக்கில் சான்றோர்

இரா. சுசீலா, கோவை.

தனிமனித வாழ்விற்கும் சமூக வாழ்விற்கும் தேவையானவை யாகவும் முக்கியமானவையாகவும் நல்லனவாகவும் இருக்கின்றவற்றை அறங்கள் எனலாம். மனித நேயத்தை வளர்க்கின்ற, மனித இனத்திற்கு நல்லதை விளைவிக்கின்ற அறங்களை மேற்கொள்கின்றவர்கள் ஆன்றோர்கள் எனப்படுவர். இவர்கள் அடிப்படையில் உயிர்களிடத்தில் அன்பு சான்றவர்கள். உயிர்களிடத்துக் கொள்ளும் அன்பே பிற பண்புகளை யெல்லாம் ஒருவனிடத்துக் கொண்டு சேர்க்கும் வல்லமையுடையது. அது உயிர்க்கு இன்பத்தைத் தரவல்லது. எனவேதான் அது 'இன்ப அன்பு' எனப்படுகின்றது. திருமூலர் 'அன்பே சிவம்' என்பார். 17–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வீரசைவராகிய சிவப்பிரகாசரும் இடம், பொருள், ஏவல் மற்று எல்லாம் இருந்தும் ஒருவரிடத்து அன்பில்லை எனில் ஒரு பயனுமில்லை என்று கூறுகிறார். இத்தகைய அன்பையே அடிப்படையாகக் கொண்டு பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பிப் பழிக்கு அஞ்சி வாழும் சான்றோர்களால்தான் இவ்வுலகம் இன்னும் நிலைத்து நிற்கின்றது எனப் புறநானூற்றுப் புலவன் ஒருவனும் தேர்ந்து தெளிந்து கூறியுள்ளான். எக்காலமாயினும் சான்றாண்மை மிகுந்த சான்றோர்களின் பெருக்கமே உலகத்தை அழியாமல் காக்கும் வல்லமையைத் தரவல்லது. அத்தகைய சான்றோர் பண்புகள் குறித்துச் சிவப்பிரகாசரும் தம் சிந்தையில் தெளிந்து 'நன்னெறி' என்னும் தம் அறங்கூறும் நூலில் அருமையாக எடுத்துரைத்துள்ளார்.

உயர்வும் இழிவும் அறிவால் வருவதன்றிப் பிறப்பால் வருவன அல்ல என்றுரைக்கும் சிவப்பிரகாசர் அறிவுடைய சான்றோரை உயர்ந்தவர் களாய்க் கொள்கின்றார். மேலும் நற்குணங்கள் பல நிரம்பியவர்களாய் இருப்பினும் கீழ்மக்கள் ஒருவரிடத்துள்ள குற்றத்தையே விதந்து பேசுவர் என்பதால் சான்றோர் குற்றமற்றவர்களாய் விளங்க வேண்டும் என்றும், அறிவு சான்ற சான்றோர் மேற்கொள்ளும் அறங்களே உறுதியும் நிலைத்த தன்மையும் உடையன என்றும் கல்வியறிவு சான்ற சான்றோர்க்கு ஒப்பாக அரசனும் ஆகான் என்றும் குறிப்பிடுகின்றார். 'மூதுரையும் மன்னனின் கற்றோன் சிறப்புடையோன்' என்பதுடன் நன்மக்களாகிய சான்றோரைக் காண்பதுவும் அவர் சொற் கேட்பதுவும் அவர்தம்

சிறப்புக்களை விதந்து உரைப்பதுவும். அவர்களுடன் நட்புறவு கொண்டு இருப்பதுவும் நன்மையைத் தரும் எனக் கூறக் காணலாம்.

சான்றோரை ஐம்புலத் துன்பம் இல்லாதவர்களாய், செருக்கற்றவர்களாய், நல்லோர் சேர்க்கை உடையுவராய், அச்சமில்லாதவர்களாய், பழிக்கு அஞ்சும் பான்மையர்களாய், பிறர் துன்பம் நீக்கும் பெற்றியாளர்களாய், ஈகைத்திறம் மிக்கவர்களாய்ச் சிவப்பிரகாசர் காட்டுகின்றார்.

ஐம்புலத் துன்பமும் செருக்குமற்றவர்கள்

மனம், மொழி, மெய்யால் தீ நெறிக்கண் செல்லாத ஆற்றல் சான்றவர்கள் சான்றோர்கள். ஒருமையுள் ஆமைபோல ஐம்புலன் களையும் அடக்கும் திறம் பெற்றவர்கள். எனவே ஐம்புலன்களால் வரும் துன்பம் இவர்களுக்கில்லை. சூறைக்காற்றானது அற்பமான துரும்பைச் சுழற்றுமேயன்றிக் கற்றூணைச் சுழற்றாது. அதுபோலப் பொய்மை யுடைய ஐம்புலன்களால் அறிவற்றவர்களே துன்பம் உறுவார்களன்றி அறிவு சான்றவர்கள் அவற்றால் துன்பமுறார் என்று ஐம்புலன்களை அடக்கியாளும் சான்றோரின் ஆற்றலை விளக்குகிறார் சிவப்பிரகாசர். மேலும் ஐம்புலன்வழிச் செல்லாச் சிறப்புசால் சான்றோர் அழிவிலாச் செல்வக்குடியில் பிறப்பினும் செருக்கற்றவர்களாய் விளங்குவர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நல்லோர் நட்பை விரும்புவோர்

நல்லோர் உறவு என்றும் நன்மை பயக்கும். கீழோர் உறவு ஒருவனைக் கிளையொடும் சாய்க்கும். ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை சாந்துணையும் ஒருவனுக்குத் துன்பம் பயக்கும். எனவே தான் வள்ளுவரும்

'குணமும் குடிமையும் குற்றமும் குன்றா
இனனும் அறிந்தியாக்க நட்பு'

என்று குறிப்பார்.

'நல்லோர் வரவால் நகைமுகங்கொண் டின்புறீஇ
அல்லோர் வரவால் அழுங்குவார்'

என்றும், 'கற்ற அறிவினரைக் காமுறுவர்' என்றும் கூறிச் சான்றோர் கற்றறிந்த நல்லவர் உறவையே விரும்பி நிற்கும் தன்மையைச் சிவப்பிரகாசரும் காட்டுகிறார். மேலும் நல்லோர் நட்பு நாளும் நன்மை பயக்கத் தீயோர் நட்பு நாளும் தீமை பயக்கும் என்பதை,

'நல்லோர் செயுங்கேண்மை நாடோறும் நன்றாகும்
அல்லார் செயுங்கேண்மை ஆகாதே – நல்லாய்கேள்

காய்முற்றின் தின்தீங் கனியாம் இளந்தளிர்நாள்
போய்முற்றின் என்னாகிப் போம்'

என்ற பாடலில் உவமை நயம்பட விளக்குகிறார்.

அச்சமிலார்

நிலையாமை குறித்து அறிஞர் பலரும் சிந்தித்துள்ளனர். அறம்பல செய்து மற்றவர்க்காய் வாழ்ந்து மறைவோரே உடம்பால் ஆழியினும் மற்றவர்களின் உணர்வால் என்றும் போற்றப்படுவர் என்றும் கூறியுள்ளனர். வாழ்க்கை நிலையில்லாதது என்பதை,

'நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு'

என்ற வள்ளுவர் வாக்கு தெளிவுறக் காட்டும்.

'உடல் அழியும்; உயிர் அழியாதது' என்பதை உணர்ந்துள்ள சான்றோர் உடற்கு உறும் நோய்க்காக வருந்தார். உள்ளத்தை நோய் அண்டாது காத்துக் கொள்ளும் திறம் படைத்த அவர்கள் வாழ்க்கை பற்றிய அச்சமோ, சாவு பற்றிய அச்சமோ இல்லாதவர்கள். யாக்கை நிலையாமையையும் அதற்கு வரும் துன்பம் குறித்துச் சான்றோர் அஞ்சாத தன்மையையும் சிவப்பிரகாசரும் எடுத்துரைத்துள்ளார்.

ஒன்பது வாயில்களையுடைய உடம்பில் உயிர் நிற்பதுதான் புதுமை யன்றி நீங்குவது புதுமையன்று என்று நிலையாமையைக் கூறிப் பரம்பொருள்மேல் உளம் வைத்து வையத்து வாழ்வாங்கு வாழும் ஆன்றோர் சாவுகண்டு அஞ்சும் தன்மையர் அல்லர்; அடுக்கிய கோடி துன்பம் உறினும் துவளாத மனங்கொண்டவர்கள். உடற்கு உறும் துன்பம் ஒரு கோடியாக இருப்பினும் நடுக்கமுறார் என்கிறார்.

பழிக்கு அஞ்சுபவர்கள்

தனிமனிதனுக்கும் சமூகத்திற்கும் ஒரு நாட்டிற்கும் தீங்கு தரத்தக்க எச்செயலையும் உலகம் இழிந்ததாய்க் கருதும். அச்செயல்களை ஒருவன் மேற்கொள்கின்ற பொழுது ஒருவனுக்குப் பழிவந்து சேரும். அத்தகைய செயல்களைச் சான்றோர் பழிப்பதுடன் அவற்றைத் தாமும் பழியஞ்சி விலக்கி நிற்பர்.

அறிவற்றோர் பழிக்கு அஞ்சாத தன்மையையும் அறிவுடையோர் பழிக்கு அஞ்சுகின்ற தன்மையையும்,

'அறிவுடையா ரன்றி அதுபெறார் தம்பால்
செறிபழியை அஞ்சார் சிறிதும் – பிறைநுதால்
வண்ணஞ்செய் வாழ்விழியே யன்றிமறை குருட்டுக்
கண்ணஞ்சுமோ இருளைக் கண்டு'

என்ற பாடலில் உவமை நயம்பட விளக்குகின்றார் சிவப்பிரகாசர்.

பிறர் துன்பம் நீக்கும் பெற்றியர்

தன்னலம் கருதாது பிறர் நலத்திற்காக வாழும் சான்றோர்கள் பிறர் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் பாடுபடும் தன்மையுடையவர்கள். அவர்கள் பிறர்க்கு வரும் துன்பங்களைத் தமக்கு வந்த துன்பங்களாய்க் கண்டு அவற்றை நீக்க முயலும் இயல்புடையவர்கள். இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் இனிய பண்புடையவர்கள். இத்தகைய சான்றோர் களின் இயல்பினை,

'தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர்.'

என்பார் சிவப்பிரகாசர். மேலும் அறிவொழுக்கங்களால் உயர்ந்த அவர்கள் தங்களையும் தங்கள் தலைமைத் தன்மையையும் உயர்வாகக் கருதாது தம்மை நாடி வந்தவர்கள் எத்தகையவர்களாயினும் அவர்களைத் தேடிச் சென்று அவர்களுடைய துன்பத்தைக் களைந்து நிற்பர் என்றும் குறிப்பிடு கிறார். ஆன்றோர் பிறருக்கு வந்த துன்பத்தைத் தமக்கு வந்த துன்பமாகவே கருதி வருத்தமும் அடைவர் என்பதை உவமை நயம்பட,

'பெரியவர்தந் நோய்போற் பிறர்நோய் கண்டுள்ளம்
எரியின் இழுதாவர் என்க – தெரியிழாய்
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண்'

என்ற பாடலில் விளக்குகிறார். பிறரின் துன்பத்திற்காய் வருந்தும் சான்றோர்க்குப் பிற உறுப்புக்களின் வருத்தத்தால் கண்ணீரைச் சிந்தும் கண்ணை ஒப்புமையாகக் கவிதை நயம்படக் காட்டுகிறார்.

'சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாமவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர்'

என மூதுரை சான்றோர் தன்மையைக் குறிக்கச் சிவப்பிரகாசர் தன்னலங் கருதாது பிறர்க்குற்ற துன்பத்தைத் தமக்குற்றவையாய்க் கருதி அவர்களைத் தேடிச் சென்று உதவும் திறம் படைத்த சான்றோர்கள் பிறருக்குற்ற துன்பத்தைத் தாம் ஏற்றுக்கொண்டு அவர்களை வீரத்துடன் சென்று பாதுகாக்கவும் விரைவர் என்று மேலும் குறிப்பிடுகிறார்.

கொடுக்கும் திறம் மிக்கவர்கள்

மனிதன் என்றும் பிறரைச் சார்ந்து வாழும் தன்மையுடையவன். கொண்டும் கொடுத்தும் வாழும் இயல்புடையவன். இத்தகைய வாழ்க்கையே நேயம் மிக்கதாயும் கருதப்படுகிறது. பிறருக்குப் பொருள் உதவி செய்வது அறங்களில் சிறந்ததாய் எண்ணப்படுகிறது. பொருள் இல்லாதவர்க்கு இவ்வுலக இன்பம் இல்லை. ஒருவன் வாழ்க்கையைப்

பொருளுடையதாகச் செய்வதும் பொருளே. பொருளில்லாத் தன்மையால் வறுமையும், வறுமையால் பசியும், பசியால் பல குற்றங்களும் மல்குவதால் பிறருக்குக் கொடுக்கும் அறம் சிறப்புடையதாக அறநூல்கள் பேசப்படுகிறது.

'மானங் குலங்கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை – தேனின்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போகும்'

எனப் பசிப்பிணியின் கொடுமையால் வரும் குற்றங்களை நல்வழியும் குறிப்பிடுகிறது. எனவேதான் மணிமேகலையும் 'உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே' என்று கூறுகிறது. உடுக்கை இழந்தவன் கைபோலப் பிறர் இடுக்கண் களைய விரைந்து வரும் சான்றோரும் ஈதல் அறத்தைத் தாம்பேண வேண்டிய பேரறமாகக் கொண்டு வாழும் தன்மையராவர். நல்வழியும் ஆன்றோர் குணம் அவர்தம் ஈகைத்தன்மையால் வெளிப்படும் என்பதைத் 'தக்கோர் குணம் கொடையால்' எனக் குறிப்பிடக் காணலாம். சான்றோர் ஈகை குறித்துச் சிவப்பிரகாசரும் நினைந்துள்ளார்.

சான்றோர் பிறர் தம்மைப் புகழவேண்டும் என்ற எண்ணம் இல்லாதவர்கள். பிறர் புகழாத நிலையிலும் அவர்களுக்கு உற்றுழிப் பொருள் கொடுக்கும் இயல்புடையவர்கள். நாம் புகழவேண்டும் எனக் கருதிக் கை நாவிற்கு உணவளிப்பதில்லை. கை தன் கடமையைச் செய்கிறது. அதுபோலச் சான்றோரும் தம்மைப் புகழாதவரையும் தேடிச் சென்று பொருள் கொடுக்கும் இயல்புடையவர்கள் என்று கூறும் சிவப்பிரகாசர் ஆன்றோர் பொருள் கொடுக்கும் முறையையும் விளக்குகிறார்.

தங்களிடத்துப் பொருள் நிறைய இருக்கின்ற பொழுது பிறர்க்கு அதிக அளவிலும் குறைந்த அளவில் இருக்கின்ற பொழுது குறைவாகவும் இவ்வாறு தம்பொருள் அளவு அறிந்து கொடுப்பர் என்றும் அவ்வாறு கொடுக்கின்ற பொழுது தேவையுள்ளவர்களுக்கே கொடுப்பர் என்றும் குறிப்பிடுகிறார். மேலும் கற்றறிந்த சான்றோர் தம்மால் இயன்ற உதவியைத் தாம் பிறருக்குக் கைம்மாறு கருதாமல் செய்வர் என்றும் பிறரிடத்துச் சினம் கொள்கின்ற சூழல் வந்துற்ற நிலையிலும் கூட உதவிசெய்ய வேண்டிய சூழலில் தவறாது கொடுப்பர் என்றும் கயவர்கள் உள்ளம் மகிழ்ந்திருக்கும் நிலையிலும் கூடப் பிறருக்குக் கொடுக்கும் தன்மையிலர் என்றும் கூறுகிறார்.

இவ்வாறு மக்களை நல்லவழியில் வழிநடத்தும் சான்றோர் இயல்புகளையும் அவர்கள் பேணும் அறங்களையும் சிவப்பிரகாசர் தம் நூலில் விரிவாக எடுத்துரைத்துள்ளார்.

105. நன்னெறியின் – நன்மக்கள்

முத்து இலக்குமி, மதுரை

சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கில் ஒன்று சிவப்பிரகாசம். உமாபதி சிவாச்சாரியாரால் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் இயற்றப் பெற்றது. கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் துறைமங்கலத்தில் வாழ்ந்த சிவப்பிரகாசர் சைவ சித்தாந்தச் செம்மல் ஆவார். யமகம், கோவை, கலம்பகம், பிள்ளைத்தமிழ், திருப்பள்ளி எழுச்சி, தூது ஆகிய இலக்கிய வகைகளை வளம் பெறப் பாடினார். மண்ணில் மானுடம் நல்லவண்ணம் வாழ 'நன்னெறிப்' பாடல்களைக் கடற்கரை மணலில் எழுதினார். அது மற்றவர்களால் பதிவு செய்யப்பெற்று நன்னெறி என்பதாயிற்று. உடன் பிறப்பினரின் இலக்கியத் தேடலுக்கு ஊன்று துணையாய் இருந்து, சிவப்பிரகாசர் தம்பியருடன் இணைந்து 'திருக்காளத்திப் புராணம்' என்னும் தலபுராணத்தைப் பாடினார். இவரது சைவ சமயக் குரவர் நால்வரைக் குறித்த நூலே நால்வர் நான்மணிமாலை, வீர சைவ சமயத்தை விளக்கும் சமயக் காப்பியமே பிரபுலிங்கலீலை. மேலும் கிறித்துவச் சமயத்தை மறுத்து ஏசுமத நிராகரணம் என்னும் நூலைச் சிவப்பிரகாசர் எழுதினார். இவரது காலத்திற்குப் பின்பு தில்லை, மதுரை என்ற இடங்களில் சிவப்பிரகாசர் என்ற பெயரில் புலவர்கள் வாழ்ந்தனர் என்பதை வாழ்வியற் களஞ்சியம் (ப. 63364) மூலம் அறிய முடிகிறது.

'கற்பனைக் களஞ்சியம்' என்று தமிழ் உலகினரால் பாராட்டப் பெறும் சிவப்பிரகாசர் (வாழ்வியற் களஞ்சியம் – தொகுதி ஒன்பது, ப. 59). தமது முப்பத்திரண்டாம் ஆண்டில் ஒரு முழு நிலவு நாளில் இட்டலிங்க பரசிவத்தில் இரண்டறக் கலந்து அருளினார். முப்பத்திரண்டு ஆண்டுகள் வாழ்ந்தவர் ஏறத்தாழ முப்பத்து மூன்று நூல்களைப் படைத்துள்ளார். அவையாவன,

1. புராணங்கள் – 3
2. சிற்றிலக்கியங்கள் – 18
3. சமய சாத்திர நூல் – 5
4. நீதி நூல் – 1
5. பல்துறை நூல் – 5
6. சமய மறுப்பு நூல் – 1

என்பன.

இவண் சிவப்பிரகாசரின் 'நன்னெறியில்' வாழும் நன்மக்களின் நலன்கள் விளக்கம் பெறுகின்றன. ''இந்நூல் மக்கள் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய நல்வழிகளையெல்லாம் கூறுதலின் நன்னெறி என்று பெயர் பெற்றது'' என்று 'சிவப்பிரகாச சுவாமிகள் பனுவல் திரட்டு' (ப.100) என்ற நூல் குறிப்பிடுகிறது. அருமை பெருமையாய் அமைந்துள்ள நீதிக் கருத்துக்களால் இந்நூல் 'நீதி நூற்கொத்து' என்னும் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. மகடூஉ முன்னிலையில் பாடல்கள் அமைந்துள்ளன.

கடந்த காலத்தின் நீட்சி நிகழ்காலம் – நிகழ்காலத்தின் நீட்சி எதிர்காலம். முக்காலத்திற்கும் ஒத்தியல் பொருளாக என்றும் மாறாது ஏற்புடையனவாக விளங்குவன மானுடத்தின் வாழ்வியல் விழுமியங்கள் (Values). இவ்விழுமியங்களை அமைத்திட அடித்தளத்தில் அமைய வேண்டுவன நற்சிந்தனை மிகுநெறியான கருத்தியல்கள். (Ideology) சைவ அடியாருக்கு 'நன்னெறியில்' உய்ப்பது நாதன் நாமம் ஆகும். இறையின் பிடிமானத்தில் ஏனைய நற்பண்புகள் நாளும் வந்தமைந்திடும் என்று மக்கள் நம்பினர். இந்நம்பிக்கைக்கு வழிகாட்டியவை இலக்கியங்கள். இதில் குறிப்பாக நீதியைக் கூறும், அறக் கருத்துக்களை அழுத்தமாக எடுத்துரைத்த நீதி நூல்களில் சிவப்பிரகாசரின் நன்னெறிக்குத் தனித்ததோர் இடமுண்டு என்பதை நூலைப் பயிலுந்தோறும் அறியலாகும்.

கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் புறச்சமயத்தாரின் நுழைவினால் சமுதாயக் கட்டமைப்பில் மாற்றங்கள் ஏற்பட்டன. எனவே சமூகக் கட்டுப்பாடு (Social Control) கட்டாயமாக வேண்டப்படுவதாயிற்று. அரசியல் தேச வர்த்தமானச் சூழலைப் புரிந்து கொண்ட புலமை மிக்கோர் சமூகத்தின் மீது கொண்ட பற்றினால் நெறியான வாழ்வுக்கு வழிகாட்டும் வகையில் பாக்களைப் பாடினார்கள். சமுதாயத்தில் (Society) அடங்கியுள்ள சமூகத்தில் (Social) மக்களுக்கு இடையே உறவுகள் இணக்கத்துடன் பிணைக்கப்படவேண்டும். ஒற்றுமைக்கான பண்புக்கூறுகள் காணப்பட வேண்டும். சில சமயங்களில் இப்பண்புகள் இல்லாமலும் போகலாம். எனவே புலவர்கள் சமூகத்தின் மீது அக்கறை கொண்டு இப்பண்புகளைப் பெற்று நாளும் நலம்பெற வளம் பெற வாழ்ந்திட வகைமை செய்யும் வகையில் பாடல்களைப் பாடினார்கள்.

குடும்ப நெறி – கருத்தொருமித்த நெறி

குடும்பம் என்பது ஒரு சமுதாய நிறுவனம். ஆண், பெண் என்ற இருவர் திருமணம் என்ற சடங்கினால் கணவன், மனைவி என்ற சமுதாய அந்தஸ்தைப் பெறுகின்றனர். இருவரும் இணக்கமாக, இணைந்து வாழ்தல் வேண்டும் என்பதைச் சிவப்பிரகாசர் பாடல் எண் 6-ல் குறிப்பிடுகிறார். எங்ஙனம் பதினாறு கலைகளைக் கொண்ட மதி

ஒன்று தான் உண்டு என்பதைப் போல கணவன், மனைவி இருவரும் இரண்டாக இருந்தாலும் ஒன்று என்று தான் இருக்க வேண்டும். மேலும் கண் இரண்டு ஒருசேர இணைந்து ஒரே காட்சியைக் காண்பதைப் போல இருவரும் சேர்ந்து நல்லறச் செயல்களைச் செய்ய வேண்டும் என்கிறார்.

குடும்பம் ஒரு கோயில் என்றும், பல்கலைக்கழகம் என்றும் பாராட்டப்படுவதற்கு இத்தகு நற்பண்புகள் தேவைப்படுகின்றன. குடும்பக் கூட்டினுள்ள ஒவ்வொருவரும் இணக்கத்துடன் வாழ்தல் வேண்டும். இல்லையென்றால் விரிசல், விலகல் ஏற்பட்டு கூட்டின் பாதுகாப்புக் கலைந்து விடும். இதனால் சமுதாயத்தில் பல்வேறு குழப்பங்கள், சிக்கல்கள் உருவாகும். எனவே அமைதியான - அன்பான - அழகான குடும்ப உறவும் வாழ்வும் சமுதாயத்திற்குத் தேவை என்பதால் சிவப்பிரகாசர் கணவன் - மனைவி உறவின் அழுத்தத்தைச் சிறப்புற எடுத்தியம்பியுள்ளார்.

அடுத்து, குடும்பத்திலுள்ளத் தந்தை, மகன் இருவரின் ஈகைப் பண்பினைக் குறிப்பிட வந்த சிவப்பிரகாசர் வாழைமரம், வாழைக் கன்றினை உவமித்து உரைக்கிறார். தந்தைப் பிறருக்குக் கொடுத்து நலிவடைந்தார் என்றாலும் மகன் கொடுப்பதை விட்டுவிடமாட்டார் என்கிறார். வாழைமரம் கொடுத்து விட்டதே என்று வாழைக் கன்று வாளா இருப்பதில்லை. அது மரமாகும் பொழுது தன் பணியைச் செய்கிறது. அதுபோலத்தான் உதவுதல் என்ற நற்பண்பினைப் பெற்ற குடியினர் அதைத் தக்கவைத்துக் கொள்வார்களே தவிர தவற விடமாட்டார்கள் என்கிறார்.

''எந்தை நல்கூர்ந்தான் இரப்பார்க்கு ஈந்து என்றுஅவன்
மைந்தர் தம்ஈகை மறுப்பாரோ - பைந்தொடி
நின்று பயனுதவி நில்லா அரம்பையின் கீழ்க்
கன்று உதவுங் கனி'' (பாடல் 17) (நீதிநூற்கொத்து, ப. 28)

என்பதே அப்பாடல்.

சமுதாய நெறி - உறவு நெறி

குடும்பங்களால் உருவாகும் சமுதாயத்தில் ஒருவருக்கு ஒருவர் எங்ஙனம் உறவுநிலையில் இணக்கம் வந்தமைந்திட இயலும் என்பதற்கான நெறிமுறைகளைச் சிவப்பிரகாசர் பல பாடல்களில் எடுத்து இயம்புகிறார்.

1. குற்றமற்ற மனத்தினரின் கடுஞ்சொல் இனிது
   குற்றமுடைய மனத்தினரின் இன்சொல் கடிது (பாடல் 2)
2. யாரோடும் இன்சொல் பேசினால் மகிழ்வர்
   கடுஞ்சொல்லால் மகிழார் (பாடல் 18)

3. இடமறிந்து செயல்பட வேண்டும் பரமசிவன் கழுத்திலுள்ள பாம்பு கருடனைக் கண்டு அஞ்சாது (பாடல் 9)
4. கல்வி அறிவுடையோர் நல்லோர் வரவால் மகிழ்வர். கற்றாரைக் கற்றாரே காமுறுவர் (பாடல் 19, 35)
5. கல்லாதவரிடம் சேரும் கற்றார் பெருமை இழப்பர் (பாடல் 25)
6. கீழோர் எப்போதும் குற்றமே விதந்து பேசுவர் (பாடல் 24)
7. பிரிவிற்குப் பின் இணைந்தாலும் வலிமை குறைந்து காணப்படும். (பாடல் 5)
8. உருவம் சிறிதாயினும் அறிவினால் பெரியோர் ஆவார். (பாடல் 26)

இக்கருத்தியல்களைச் சிவப்பிரகாசர் பாடல்தோறும் மக்களின் வழக்கத்தில் பயின்று வரும் உவமைகளின் மூலம் தெளிவுபடுத்துகிறார்.

மேலும் மாதருடன் பேசிப் பழகுவதால் மனத்திட்பம் நலிவாகும் என்று கூறி 'எறும்பு ஊரக் கல் குழியும்'. மாதர் பேச்சால் மதி மயங்காதே என்று எச்சரிக்கை விடுக்கிறார்.

''பகர்ச்சி மடவார் பயில நோன்பாற்றல்
இகழ்ச்சி தரு நெஞ்சத்திட்பம் - நெகிழ்ச்சி
பெறும் பூரிக்கின்ற முலைப் பேதாய் பலகால்
எறும்பு ஊரக் கற்குழியுமே'' (பாடல் 23) (ப. 32)

என்பதே அப்பாடல்.

சமுதாயத்தில் காணப்படும் சாதிப் பகுப்பினையும் சாடுகின்றார். சாதியில் மக்களைப் பிரிக்காதீர் விரும்பாதீர். கல்வியால், அறிவினால் விரும்புங்கள் என்கிறார்.

உதவும் நெறி

உறவில் புரிதலும் சுமுகமான சூழலும் அமைந்திட்டால், மானுடத்தில் உதவுதல் என்ற நற்பண்பு வந்தமைந்திடும். எனவே சிவப்பிரகாசர் உதவிடும் உன்னத நன்னெறியினைப் பல பாடல்களில் நயம்பட எடுத்துரைத்துள்ளார்.

உதவி புரியும் உயர்ந்தோர்

தனக்கென வாழாப் பிறருக்கென வாழுநர் உண்மையான் உண்டு இவ்வுலகு என்பதே சங்கச் சான்றோர் வாக்கு. சிவப்பிரகாசரும்

இவ்வாறு தனக்கெனச் செல்வத்தைச் சேமிக்காது தக்கார்க்கு தகைமை யறிந்து வழங்கும் நற்பண்பினதாக மக்கள் வாழ்ந்திட வேண்டும் என்கிறார். அத்தகு பேறு பெற்ற பாக்கியவான்களைக் குறிப்பிட்ட சொற்களால் குறிப்பிடும் பாங்கு குறிப்பிடத்தக்கது.

1. தீது அற்றப் பெரியோர் (பாடல். 1)
2. விழுமியோர் (பாடல். 10)
3. பெரியோர் (பாடல்.13) (பாடல்.20) (பாடல்.37)
4. உயர்ந்தோர் (பாடல். 16)
5. கற்றறிந்தோர் (பாடல். 15)
6. மூதறிஞர் (பாடல். 28)
7. பேர் அறிஞர் (பாடல். 31)
8. விள்ளா அறிஞர் (பாடல். 33)
9. அறிவுடையார் (பாடல். 34)
10. அறிஞர் (பாடல். 40)

இம்மக்கள் உதவிடும் பாங்கினைப் புலப்படுத்தும் பொழுது புலவர் பல்வேறு உவமைகளைப் பொருத்தமுற இணைத்துள்ளார்.

1. கை நாக்குக்கு உதவுதல் போல - கை உடம்பினைத் தாக்கும் அடியிலிருந்து காப்பது போல
2. பல் நாவிற்குச் சுவை ஊட்டுவதைப் போல -
3. கடல் நீர் உப்பங்கழியிலும் பாய்வதைப்போல தாழ்ந்தோராயினும் உதவுக -
4. உதவ நினையாதவரை அவர் வழியில் சென்றுக பெறுக,
    1. பசுவின் பாலைக் கன்றின் மூலம் பெறுவது போல -
    2. கடல் நீர் மழையாகச் சென்று பொழிவதைப் போல -
5. பழம் பாலை விரும்புவது போல -
6. நீர் நெல்லுக்குப் பாய்வதைப் போல -

என்று பயின்று வரும் உவமைகளால் விளக்கம் செய்கிறார்.

மேன்மக்களின் மகத்துவ நெறி

இத்தகு மேன்மக்கள் பழிக்கு அஞ்சி தன் குறைக்காகத் துன்பத் திற்காக வருந்தாது பிறர் குறையினைத் தீர்க்கத் துன்பத்தைப் போக்கப் பாடுபடுவர். இவர் தம் வாழ்வே உயிரான வாழ்வு என்று வள்ளுவர் வழியில் கூறலாம்.

''ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்''

என்பது வள்ளுவம். எனவே தான் இவர்கள் பொன் அணிந்த அரசனுக்கும் ஒப்பாகார் என்று சிவப்பிரகாசர் கூறுகின்றார்.

''பொன்அணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னும் அறிஞரைத் தாம்மற்று ஒவ்வார் - மின்னுமணி
பூணும் பிறஉறுப்புப் பொன்னே அதுபுனையாக்
காணுங் கண் ஒக்குமோ கண்'' (எண் 40)

ஏன்பது நன்னெறி.

உய்யும் நெறி

இவ்வுடல் பொத்தல் குடத்தைப் போன்றது (எண். 12) எனவே ஐம்புலன்களை அடக்கி (எண். 11) கொல்லும் எமன் வருமுன் அறஞ்செய்க என்று உலக நிலையாமையினை உணர்த்தி, உய்யும் நெறிக்கான வழியினையும் சிவப்பிரகாசர் எடுத்தியம்புகிறார். இறைச் சிந்தனை உடைய 'பரத்து உற்றோர்' உடம்புக்கு வரும் இன்னல் கண்டு மயங்கிடார் (எண். 29) எங்ஙனம் சந்திரன் களங்கத்துடன் இருந்தாலும் கலங்காது உள்ளதோ அதுபோல திட்ப நுட்பத்துடன் இருப்பர் என்று அழுத்தமாகக் கூறுகிறார்.

சிவப்பிரகாசர், மக்கள் எப்படியும் வாழலாம் என்பதை ஏற்க வில்லை. இப்படித்தான் வாழ வேண்டும் என்று முடிவு செய்து அவ் வாழ்வியலுக்கான நெறிகளைத் தேர்ந்து தெளிவு செய்து ஏறத்தாழ 40 பாடல்களில் நயம்பட விளக்கியுள்ளார்.

- நன்னெறி காட்டும்
- குடும்ப நெறி
  - ⋆ கருத்தொருமித்த நெறி
- சமுதாய நெறி
  - ⋆ உறவு நெறி
  - ⋆ உதவிடும் நெறி
  - ⋆ மகத்துவ நெறி
- உய்யும் நெறி

என்பன. என்னெற்றும் வாழ்வில் பின்பற்ற வேண்டியன.

106. வேதாந்த சூடாமணி

முத்து சண்முகம், கோவிலூர்.

''சத்தியும் சிவமுமாகித் தாணுவாய்ச் சகத்துக்கெல்லாம் முத்தியும் அளிக்க வல்ல முதல்வன்'' ''மெய்யான தொன்றுமே மெய்'' என்னும் பரம சித்தாந்தத்தை நம் முன்னோர் உணர்ந்தவாறு ஒழுகாமையால் சாதல், பிறத்தல் என்னும் துன்பத்துள் அழுந்தினர். இத்துன்பத்திலிருந்து விடுவிக்கப் பெற்று பிறப்பு இறப்பு அற்ற பெருநிலை அடைவதை வேதாந்தம் உணர்த்துகிறது.

வேதாந்தத்தின் பொருளைச் சுருக்கமாகவும் பெருக்கமாகவும் விளக்கமாகவும் கூறும் நூற்கள் எண்ணிறந்தனவாம். அவ்வாறு கூறும் நூற்களுள் கன்னட மொழியில் நிஜகுண யோகி என்றும் பெரியார் திருவாய் மலர்ந்தருளிய, ''விவேக சிந்தாமணி'' என்னும் நூல் வேதாந்தக் கருத்துகளைத் தெளிவுற விளக்கும் சிறப்புடையதாகும்.

வேதாந்தப் பரிச்சேதம் என்னும் பகுதி வேதாந்தத்தின் (உபநிஷத்தின்) பொருள்களைச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் விளக்குகிறது. வேதாந்தக் கருத்துகளை அறிந்து கடைப்பிடிப்பவர் யாவராறும் இந்நூல் போற்றும் தகுதியுடையதாகிறது.

ஏறக்குறைய முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னிருந்த துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் என்னும் ஞானவேந்தர் வேதாந்த இரகசியத்தைத் தமிழ் மக்கள் எளிதில் உணர்ந்து உய்ய வேண்டும் என்னும் கருணை கொண்டார். அதனால் வேதாந்தப் பரிச்சேதப் பொருளை விடாது அமைத்து விருத்தப் பாக்களால் திருவாய் மலர்ந்தருளினார். ஆனந்த ரசம் பெருகத் திருவாய் மலர்ந்தருளிய இந்நூலுக்கு, ''வேதாந்த சூடாமணி'' எனப் பெயர் தந்தருளினார். இது, ''வேதாந்த சூளாமணி'' எனவும் குறிக்கப் பெறுகிறது.

வேதாந்த சூடாமணியின் கருத்துகளை அறிந்து அதன் வழிநிற்க முயன்று வரும் தமிழ்மக்கள் ஸ்ரீ சேஷாத்திரி சிவனார் அருளிச் செய்துள்ள, ''நாநா ஜீவவாதக் கட்டளை''யைப் படித்து அல்லது குருமுகமாகப் பாடம் கேட்டு உணர்ந்தபின் வேதாந்த சூடாமணியைக் கற்றுவருகின்றனர் என்பது வேதாந்த உலகின் பிரசித்தமாகும். அவ்வாறு கற்றால் சூடாமணியின் பொருளை எளிதாக நன்கு உணர இயலும் என்பது வேதாந்த உலகில் தெளிந்த உண்மையாகும்.

பிறப்பு இறப்பு அற்ற வீடுபேறு அடைவதற்குக் காரணமான வேதாந்தக் கருத்துக்களைத் தமிழ்மக்கள் மத, இன வேறுபாடில்லாமல் கற்று தரும் கோவிலூர் மடாலயம் வேதாந்த மடமாகும். பொருள் வைத்த சேரியென்னும் ஊரில் வாழ்ந்த உகந்தலிங்க தேசிகரிடம் வேதாந்தத்தை முறையாகக் கற்றவர் முத்துராமலிங்க ஞானதேசிகர். முத்துராமலிங்க ஞானதேசிகரால் கோவிலூர் வேதாந்த மடம் நிறுவப்பெற்றது. இம்மடத்தில் 16 நூற்கள் வேதாந்தப் பாடமாக தேர்வு செய்யப்பெற்றும் கற்றுத் தரப்படுகிறது. அதில் 9-வது நூலாக வேதாந்த சூடாமணி இடம்பெறுகிறது என்பது மகிழ்ச்சிக்கு உரியதாகும்.

சிறப்புப் பாயிரத்தில் இந்நூலின் பெருமையை நன்கு உணரலாம்.

அருமறையின் பொருடெரித்த விவேகசிந்தா
மணியதனுள் அறை வேதாந்தப்
பொருளினைமுன் நீர்வரைப்பி னுலகறியச்
செந்தமிழாற் புனைதல் செய்தான்
பெருகுசுவை நறவொழுகு செஞ்சொன் மலராற்
புனைபாப் பெருந்தனர் மாலை
கருமிடற்று வானவற்கே சாத்து சிவப்
பிரகாசன் கவிஞர் வேந்தே.

அளவில்லாது பெருகி நவரசமென்னும் தேன் ஒழுகுகின்ற அழகிய சொற்களாகிய மலர்களால் தொகுத்த பாடலாகிய இனிமை வாய்ந்த மாலையாக கவிஞர் வேந்தாகிய சிவப்பிரகாச சுவாமிகள் தொடுத்தார். அம்மாலை திருநீலகண்டத்தை உடைய சிவபெருமானுக்கே அணிவிக்கின்ற தகுதியுடையதாகும்.

அருமையாய் உள்ள வேதப் பொருள்களை விளக்கமாகக் கூறிய விவேக சிந்தாமணியென்னும் நூலின்கண் சொல்லப் படுகின்ற வேதாந்தப் பொருள்கள், கடல் சூழ்ந்த உலகத்தின்கண் உயர்ந்தோர் கண்டு உவக்குமாறு செந்தமிழ் பாடலால் அழகாக வேதாந்த சூடாமணி யென்னும் நூலாக இயற்றியருளினால், இது இறைவனுக்கே சூடும் மாலையாகும் என்பதனால் இதன் பெருமை கதிரவன் ஒளியென விளங்கும் என்பதனால் இந்நூலின் கருத்துகள், மக்களுக்கும் பயன்தரும் வகையில் இனிமையுற இயற்றப்பெற்றது.

வேதாந்த சூடாமணியில் சில மணிகளாகிய கருத்துகளை அறிவது சாலச் சிறந்ததாகும்.

சீவப் பிரம்ம ஐக்கியமே வேதாந்த சூடாமணியென்னும் நூலின் பொருளாம் பிரமம் சொல்லப்படுவதாம். வேதாந்த நூல் சொல்வதாம்

துன்பமனைத்தையும் ஒழித்து ஆனந்த (மகிழ்ச்சி) வடிவமாக விளங்கும் நிலையைப் பெறுவதே இந்நூலின் பயனாகும்.

உலகில் அழியாததும் அழியும் பொருள்களின் தன்மையைப் பகுத்தறிதலும், காணப்படும் இவ்வுலகத்திலும், கேட்கப்படும் புண்ணிய உலகத்திலும் அனுபவித்தற்குரிய பொருள்கள் துக்க சாதனம் என்று, அவற்றின் தன்மையை அறிந்து நீக்குதலும், அவற்றின்கண் ஆசை யின்மையும் வேண்டும்.

இவ்வுலக மக்களுக்கு ஏற்படும் துன்பங்கள் மூன்று வகையால் ஏற்படும் என்பது தெளிவாகும்.

1. தன் உடம்பைப் பற்றி வரும் துன்பம்
   - பசி, தாகம், நோய்.
2. பிற உயிர்களால் வரும் துன்பம் -
   சிங்கம், புலி, பாம்பு போன்றனவாகும்.
3. தெய்வத்தைப் பற்றி வரும் துன்பம் -
   இடி, மின்னல், நிலநடுக்கம், பெருமழை, புயல்.

இவ்வகையாக வருகின்ற மூன்று துன்பங்களின் தன்மைகளை அறிதல் தன்னைப் பற்றிய அறிவுக்கு விளக்கமாக அமையும்.

நூல்களில் கூறப்பட்ட சுருதி வாக்கியத்திலும், குரு உபதேச வாக்கியத்திலும் உறுதியாக இருந்து நம்பிக்கை கொண்டால் அறிய வேண்டும் பொருளும், அடைய வேண்டும் பிரமமும் (சிவமும்) கிடைக்க ஆர்வமுண்டாகும்.

இவ்வகையாக குரு உபதேசம் பெறவிரும்பும் மாணாக்கர் (சீடன்) நான்குவகைச் சேவைக்கு தன்னை உட்படுத்தி கொள்ளவேண்டும்.

1. குருவிற்குப் பிரியமாக ஒழுகுதல் – ஆப்தம்
2. குருவிற்குத் துணி தோய்த்தல் கால் பிடித்தல் முதலியன – அங்கம்
3. குருவின் வீடு விளைநிலம் முதலியவற்றைப் பாதுகாத்தல் – தாளம்.
4. பரசிவமே குருவடிவாக அனுக்கிரகம் செய்யவந்துள்ளார் என உறுதியுடனிருத்தல் – சற்பாவம்.

இவ்வாறு குருசேவையை மாணாக்கன் கடைப்பிடித்து ஒழுகவேண்டு குருகுலவாசக் கல்வி முறை இவை கடைப்பிடிக்கப்பட்டன என்பது வெள்ளிடை மலை.

மாணாக்கனின் சேவையைக் கூறுவதுடன் குருவின் தன்மையை எட்டுவிதமாக வகைப்படுத்துகிறார்.

1. போத குரு : சுருதி முதலிய நூல்களின் பொருளை கற்பிப்பவர்.
2. வேதக குரு : தத்துவங்களின் பொருளை விளக்கிக் கூறுபவர்.
3. நிஷித்தகுரு : வசியம், ஆகர்சனம் முதலிய வித்தைகளைக் கற்பித்து அவற்றின் வாயிலாக இம்மையில் சுகத்தையும் மறுமையில் கொடிய துக்கத்தையும் தருபவர்.
4. காமிய குரு : அறநெறியைக் கற்பித்து இம்மையிலும் மறுமை யிலும் இன்பத்தை விளைவிப்பவர்.
5. சூசக குரு : அழியும் அழியாப் பொருள்களின் அறிவை அடையுமாறு செய்பவர்
6. வாசக குரு : இவ்வுலகமனைத்தும் நிலையற்றது என விளக்கி ஆத்மாவில் விருப்பமுண்டாக்குகிறவர்.
7. காரணகுரு : சிவப்பிரம்ம ஐக்கிய ஞானஉபதேசம் செய்பவர்
8. விகித குரு : மாணவர் ஐயத்தை (அஞ்ஞானத்தை) நீக்குவது வாயிலாக நிலையாகவுள்ள வீடுபேற்றை அருள் செய்கிறவர்.

தகுதிய குருவைத் தேர்வு செய்து வீடுபேற்றை அடையும் நிலை உணர்த்தப்பெறுகிறது.

சச்சிதானந்த நித்திய பூரணம் – விரித்துரைப்பதை நன்கு உணர வேண்டும்.

சத்து : யான் இதனை யறிவேனென்னும் அறினும் யான் இதனை யறியேன் என்னும் அறியாமையிலும் சாக்கிர, சொப்பன, சுழுத்தியில் கேடுஇன்றி இருப்பது. முக்காலத்திலும் உண்மையாக உள்ளது.

சித்து : சாக்கிர, சொப்பன, சுழுத்தியில் தோன்றும் பொருளை யறியவது. முக்காலத்திலும் யாவற்றையும் அறிவது.

ஆனந்தம் : முக்காலத்திலும் மிகு விருப்பத்திற்குப் பொருளாக இருப்பது.

நித்தியம் : முக்காலத்தும் கேடின்றி இருப்பது.

பூரணம் : கடத்தில் மண் நிறைந்திருப்பதுபோல் இவ்வுலகில் அனைத்திலும் நிறைந்திருப்பது.

(இவற்றின் விரிவை விரிப்பின் பெருகும்)

இத்தகைய உண்மையுணர்ந்து சத்துவகுணத்தால், சாந்தமான விருத்தியில் சத்வடிவமாகவும், சித்வடிவமாகவும் அன்றி ஆனந்த வடிவமாகவும் இருப்பதாம்.

சில தத்துவக் கருத்துகளை மட்டுமே இங்கு சுருக்கமாக விளக்கி யுள்ளேன். இவற்றின் முழுத்தெளிந்த பொருள் உரைப்பின் பெருகும். சிலதுளி தேன்சுவை தேனின் முழுச்சுவையறிதற்கு ஏதுவாதல் போல இவற்றை இங்கு கூறியுள்ளேன்.

இவ்வாறு மேற்கூறிய கருத்துகளை உணர்தல் வேண்டும். மேலும் இந்நூலில் பிரபஞ்ச விளக்கம், அந்தகரணம், பிராண பஞ்சகம், தத்துவங்கள், சிருஷ்டி, தத்துவமசி, விதேக முக்தி என்பன பற்றி கவிஞருள் வேந்தர் எனப் போற்றப்படும் சிவப்பிரகாச சுவாமிகள் விளக்கியுள்ளார்கள்.

வேதாந்தம் என்பது துறவிகளுக்கு மட்டுமே உரியது என்ற தவறான கருத்து எங்கும் நிலவுகிறது. இல்லறத்தில் உள்ளவர்களும் வேதாந்தமறிந்தால் துன்பமின்றி இன்பமுடன் இல்லற வாழ்வை நடத்தலாம் என்பது உண்மையாகும்.

முத்தியை வேண்டுபவர்களுக்கு முத்தி நூலாகவும் வேதாந்தி களுக்கு அத்வைதம் உணர்த்துவதாகவும், அறிஞர்களுக்கு அறிவு விருந்தளிப்பதாகவும், இல்லறத்தார்களுக்கு உண்மையறிந்து இன்பம் தருவதாகவும் உள்ள வேதாந்த சூடாமணியைக் கற்றுணர்வது நன்மை பயக்கும் விளக்கமாக விளங்கும்.

என்றும் நிலைபெற்று இன்பமளிக்கும் இந்நூலை நமக்கு உணர்த்திய சிவப்பிரகாச சுவாமிகளின் திருவடிகளை மனதில் நினைந்து வணங்குகிறேன்.

107. நெஞ்சுவிடு தூது காட்டும் சிவஞானி

ம. மனோன்மணி, பேரூர்.

கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகளின் படைப்புக்களை முப்பத்து நான்காகக் கூறுவர். அவை காப்பியம், புராணம், சிற்றிலக்கியம், நீதிநூல், சமயம், தருக்கம் எனப் பல வகையில் அமைந்துள்ளன. அவருடைய வாழ்வில் குருமார்கள் மூவர். அவர் தம் சமய நெறிக்கும், கல்விக்கும், ஞானநெறிக்கும் உய்யும் வழிகாட்டுபவராக விளங்கினர். அவர்களுள் ஞான குருவாக வாய்க்கப்பெற்ற இரண்டாம் பட்டத்துச் சிவஞான பாலய தேசிகர் மட்டும் சிவப்பிரகாசரின் ஐந்து நூல்களுக்குப் பாட்டுடைத் தலைவராகும் சிறப்புப் பெற்று திகழ்ந்தார். அவர் மீது இயற்றப்பெற்ற நூல்களுள் ஒன்றே 'சிவஞான பாலய தேசிகர் நெஞ்சுவிடு தூது' ஆகும்.

தூது இலக்கியங்களின் வைப்பு முறையில் சிவப்பிரகாசரின் சிவஞான பாலய தேசிகர் நெஞ்சுவிடு தூது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இந்நூல் கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் மயிலம் – பொம்மபுர ஆதீனத்தின் இரண்டாம் பட்டத்துச் சிவஞான பாலய தேசிகர் மீது பாடப்பட்டது. சிவப்பிரகாசர் தம் நெஞ்சைச் சிவஞான பாலய தேசிகரிடம் தூது விடுவதாக அமைகிறது. தம்மைத் தலைவியாக்வும் தம் ஞானாசிரியரைத் தலைவனாகவும் கொண்டு இயற்றப்பெற்று இருப்பினும் காமச்சுவை விரவாமல் பாடப்பெற்று இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். சிவஞானி பவனி வருகையில், உலாக்கண்ட மகளிருள் ஒருத்தி அவரைப் பெற விருப்புற்ற நிலையில், நெஞ்சை விளித்து அதன் பெருமைகளை எடுத்துச் சொல்லி, சிவஞானியிடத்தில் தூது சென்று தன் நிலைமையை எடுத்துக்கூறி மாலை வாங்கிவா எனக் கூறுவதாக இந்நூல் அமைந்துள்ளது. இவ்வகையில் அமைந்த சிவஞானியின் சிறப்பைக் கூறுவது இக்கட்டுரையின் பொருளாக அமைகிறது.

இந்நூற் செய்திகளை மூன்று வகையாகப் பாகுபடுத்தலாம். சிவஞானியின் சிறப்புக்கள் முதற்பகுதியிலும், தூதுப் பொருளாக அமைந்த நெஞ்சின் சிறப்புக்கள் இரண்டாம் பகுதியிலும், தூதுச் செய்தி இறுதிப் பகுதியிலுமாக அமைந்துள்ளன.

சிவஞானியின் உயர்வு

சிவப்பிரகாசர் தம் ஞானாசிரியராகிய சிவஞானியின் சிறப்புக்களை நெஞ்சுவிடு தூதின் தொடக்கத்திலேயே சிறப்பித்துள்ளார். அத்தகைய சிறப்புக்களில் சிவஞானியின் இயல்புகள், சிறப்புக்கள், சிவஞானியின் அருள்தன்மை ஆகியவை விளக்கம் பெற்றுள்ளன.

சிவனே சிவஞானி

சிவபெருமானே சிவஞானியாக வந்துள்ளார் என்னும் நம்பிக்கை நூல் முழுவதும் பல இடங்களில் வெளிப்படுத்தப் பெற்றுள்ளது. சிவன் தன் மானையும் மழுவையும் மறைத்து எம் ஆணவ மாயை மறையும் படிக்குச் சிவஞானியாக வந்துள்ளார் எனவும், சிவநிலையில் புலித் தோல் ஆசனத்தில் அமர்ந்திருந்த நினைவால் சிவஞானி இப்போதும் புலித்தோலின் மீது வீற்றுள்ளார் என்றும் சிவப்பிரகாசர் காட்டியுள்ளார். மேலும் தன்னுடைய ஒளிவடிவை பிறர்க்கு உணர்த்த வேண்டிச் சிவ நிலையில் பூண்ட பாம்பை ஒளித்து இப்போது வந்துள்ளார் என்றும் பாடுகின்றார்.

சிவஞானியின் சிறப்பைப் பொருத்தமான உவமைகளின் வழி சிறப்பித்துக் காட்டியுள்ளார். ‘விடம் கலவாத அமுதம் சிவஞானி' என்றும், ‘என்னைத் தானாக்குபவன்' என்றும், தன்னையே எனக்கு அருள்பவன்' என்றும், ‘மனித வடிவம் கொண்டு வந்த நம்பன்' என்றும் பலதிறமாகப் போற்றிய சிவப்பிரகாசர் சிவஞானி அருள்புரியும் திறத்தைப் பொருத்தமான உவமைகளால் விளக்கியுள்ளார்.

சிவஞானியின் பெருமைக்குரிய இயல்புகள்

சிவஞானியின் பெருமைக்குரிய இயல்புகளைக் கூறுமிடத்து, ''மக்கள் இழுத்து மகிழும் தேரில் செய்து வைக்கப்பெற்ற பாகனாகிய பதுமைபோல் இல்லறத்தில் எம்மை நிறுத்தித் தானியாக்குபவர் சிவஞானி என்றும், புழுக்களால் அரிக்கப்பெற்ற பயிர்போல் ஐம்புலன் களாலும் துன்புறும் எனக்கு உற்ற துணையாகுபவர் சிவஞானி என்றும், சிவனே நேரில் வரினும் இழக் கூடிய ‘கருவேறிகளும்' வந்து வணங்கும் தன்மையர் சிவஞானி'' என்றும் அவருடைய பெருமைக்குரிய இயல்புகள் சுட்டப்பெற்றுள்ளன. மெய்ஞானம் வாய்க்கப்பெறாதவர்களாலும் மேலான கடவுள் என்று போற்றியுரைக்கப் பெறுபவர் சிவஞானி என்று சுட்டப்பெற்று மயிலத்தில் எழுந்தருளிய சிவஞானியின் தோற்றப் பொலிவினைக் கண்டு வந்த ஆசிரியர்,

> ''கயிலை மீதிருந்த காட்சிபோல் வந்து
> மயிலை மலை மீதிருக்கும் வள்ளல்''

என்று பாடியுள்ளார்.

சான்றோர்க்குத் தோன்றாத் துணையாகியும், தோன்றும் துணை யாகியும் அருள்பாலிப்பவர் சிவஞானி என்பதாகக் கூறிய ஆசிரியர் அறுசமயங்கட்கும் அப்பாற்பட்டவராகிய தம் ஞானாசிரியர், கரும்பினைப் போல் அடியார்களுக்கு அருள்பவர் எனக் கூறுவர். கரும்பு தனது அடிப்பகுதியில் நீரினைக் கொண்டு அதனை மக்கள் துய்ப்பதற்குச் சாறு எனத் தருவது போன்று சிவஞானியும் அன்பர்கள் அன்பினால் அபிடேகம் செய்யும் நன்நீரை முடியினால் ஏற்றுப் பின்னர் அதனையே உய்வுதரும் அருள் என்னும் நிலையில் ஈபவர் என்றும் கூறியுள்ளார்.

சிவபரம்பொருளின் அருளிச் செயல்கள்

(சிவபெருமானாக இருந்த நிலை சிவஞானியுடன் ஒப்பிட்டுப் பேசப்படுகிறது) சிவபரம்பொருளின் அருளிச்செயல்கள் பலவற்றையும் சிவப்பிரகாசர் விளக்கியுள்ளார். அவ்வகையில் கயிலையை இராவணன் அசைத்தமை, அமுதம் எடுக்கக் கடல் கடைந்தபோது மந்தரமலையை மத்தாகக் கொண்டமை, திரிபுரம் எரிக்கச் சென்ற காலத்து மேருமலையை வில்லாக வளைத்தமை ஆகிய செயல்கள் எடுத்துரைக்கப்பெற்றுள்ளன. சிவபெருமானுக்குத் தொண்டு செய்தலை மறவாத அருச்சுனன் முன்பு வில்லால் அடித்ததால் ஏற்பட்ட தழும்பு மறைந்துள்ள தலையையும், இயல்பாகப் புலன்களை வென்றதால் பகையில்லையாதலின் மன்மதனை எரித்த நெற்றிக் கண்ணைத் துறந்த தண்ணிய நெற்றியையும், கேவல இருளைக் கெடுப்பதில் நாட்டமுடைய இருவிழிகளையும், நல்ல இசை கேட்டு வந்த இரண்டு இசை பாடுநரைத் தம் காதுகளில் வைத்திருந்த சிவன்போலன்றி அவர்களைப் போகவிடுத்து வந்த திருச்செவிகளையும் சிவனாக இருந்தபோது இயற்பகையார் மனைவியை இந்த வாயின் செயல் நன்றன்று என அதனை மறந்துள்ள அழகிய வாயையும், முன்பு ஆலம் உண்டதால் சிவன் மிடறு இப்போது சிவஞானியாக வந்து பாலுண்டது எனுமாறு பெற்றுள்ள அழகிய கழுத்தையும், பிரமன் தலையைத் தன் மாலையில் ஒன்றாகப் பெற்ற சிவனைப் பிரமன் மனைவியாகிய நாமகள் போற்ற நாணுவள் ஆதலின் இத்தலையை யுடைய மாலையை நீக்கி மங்கலமாகத் திகழும் புயத்தையும், பன்றி உருவெடுத்த திருமாலின் ஏனமருப்பினை அணிந்த மார்பைவிட, சிவஞானியாக வரும்போது அது இல்லாதிருப்பது அழகு எனத் திகழும் மார்பையும், சிவபிரான் கரம் ஒருமுறை பிரமன் தலையைத் தாங்கினமையின் அது அவன் தலைக்குக் கழுத்தெனத் திகழ்ந்தது. ஆதலின், அதனைத் தாங்காத கரம் சிவஞானியது ஆதலின் தலைக்குக் கழுத்தென்பதில்லாக் கரத்தையும் புலித்தோலை உடுக்காது நூல் ஆடையைத் தரித்திருக்கும் சிவஞானியின் மருங்கையும், வீழ்ந்து வணங்கும் தேவர்களுடைய திருமுடி தம் திருவடியிற்படுதலை வெருவி இங்கு வந்தும் அன்பர் வணங்குவதால் சிவந்த திருவடிகளையும்

சிவஞானியிடத்தில் கண்டு களிப்பதாகத் தலைவி அவரைப் பெறுதற்கு மிக விரும்பி நெஞ்சினைத் தூதாக விடுத்த செய்தியால் இத்தகு விரிவான செய்திகளைச் சிவப்பிரகாசர் விரிவாக விளக்கிக் காட்டுகிறார்.

உலா வரும் சிவஞானி

சிவஞானி, அவரது பக்கங்களில் பல்வேறு அடியார்கள் சூழ்ந்துவர, பல்லியங்கள் ஒலிக்க, திருச்சின்னங்கள் ஆர்ப்பரிப்ப, வந்தியர் துதிப்ப, தேவர்கள் புகழ உலா வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு உலா வரும் சிவஞானியின் தோற்றப்பொலிவு விரிவாக விளக்கம் பெறுகிறது. தமது பெயரைச் சொன்னாலே தவஞானமில்லாதார்க்கும் வீடுபேறளிக்கும் சிவஞானதேவன் என்னும் பெயருடையவர் இந்நூலின் பாட்டுடைத் தலைவர். சாதனங்களுள் முற்பட்டதும், உயிரினங்களிடையே நிலைத்துள்ள குற்றம் போக்குவதும் ஆன திருநீறு அணிந்து, குற்றமற்ற அக்கமணியைப் பூண்டு, மன்மதனை வெல்லும் அடையாளம் எனுமாறு காவியாடையை இடையில் தரித்துக் கொண்டு உலா வருகையில் காட்சியளிப்பதாகக் குறிப்பிடுகிறார்.

மயிலை மலைத்தேனாக விளங்கும் சிவஞானி முன்பு தாம் சிவபெருமானாக இருந்தபோது அணிகலன்களாகப் பூண்ட பாம்புகளை நீத்து, திருநீறு அணிந்து பிறர் காணற்கரியவனாய், நாம் காண்டற்கு எளிய நிலையில் வந்தருளினன் என்று கூறி மகிழ்ந்து உலாக் காண்பவர்கள் அவரை வணங்குவர். அவ்வாறு வணங்கும் பல்வேறு அடியவர்களின் காட்சி விளக்கப்பெற்றுள்ளது.

உலா வரும் சிவஞானியைச் சூழ்ந்து வரும் அடியவர்களின் இயல்புகளும் விரித்துரைக்கப்பட்டுள்ளன. சிவன் திருவடிக்கு மெய்யன்பு கொண்டு பூசனை செய்வார், திரும்பவும் பிறப்பில்லா வகை எதுஎன எண்ணிப் பார்ப்பார், வேதங்களையும், சிவாகமங்களையும் ஆராய்வார், ஞான அனுபவர் சார்வாவார், பொன்னையும், கல்லையும், குழையும், பழியையும், குடியையும், மணிமாளிகையினையும் வேறுவேறாகக் கருதார், பகையும், நட்பும் இல்லாதார், சினமின்றி இறைவனிடத்து இறைஞ்சுவார், இறைநிலையில் இருந்து ஏதும் கூறாது இருப்பவர், அன்பால் துதி செய்பவர் எனப் பலதிறத்து அடியவரின் நிலைகள் எடுத்துரைக்கப் பெற்றுள்ளன.

இத்தகு பெருமைமிகு அடியவர்கள் சிவஞானியின் பெயரை மந்திர உலையாகக் கொண்டு சிவஞானியின் அடித் துகளைத் தமக்குக் கிடைத்த பேறெனக் கருதித் துடைத்திருப்பர். அதுபோல விண்ணுலகத்தவரும் பிறவி நோய்க்கு அதுவே மருந்தெனத் துடைத்திருப்பர். அவ்வாறு அடியவர்களின் புகழ்மொழிகள் விண்ணில்புக உலாவரும் சிவஞானியை

மாசு அகன்று அம்மண்ணில் புகும் மாமதி என்று கருதிப் புல்லியங்கள் ஆர்த்தன என சிவஞானியின் சிறப்புக்கள் போற்றப்பெறுகின்றன.

உலா வரும் சிவஞானியின் பக்கத்தில் ஆலவட்டம் அசைந்துவர, வெள்ளை மணிக்குடை மேல்நிழற்ற, அன்பர்குழாம் வான்மழை போல் மலர்பொழியுமாறு கூறப்பெறும் செய்திகளும் சிவஞானியின் சிறப்புக்களையும், அருட்பண்புகளையும் வெளிப்படுத்துகின்றன. உலாவரும் சிவஞானியைப் பலரும் எதிர்கண்ட செய்தியைச் சிவப்பிரகாசர் விரிவாகப் பாடுகிறார். சிவனாக இருந்தபோது கொண்டுள்ள மழுவையும், பிற வற்றையும் விடுத்து திருநீற்றினை மட்டும் மேனியில் தரித்து வந்துள்ளார் சிவஞானி என அறியமுடிகிறது. சருகையே உணவாகக் கொண்டு நாம் காண வந்தருளும் நாயகன் என மொழிந்து சிவப்பிரகாச சுவாமிகள் சிவஞானியின் கேண்மையை விளக்கியுள்ளார். மேலும் ஓங்கார நாதமுறும் பொருள், நாயகன் வேதமணிமுடியான் வித்தகன், பதமருள் நாசகன், மயிலைமலைக்கேன், கருணாலயன் எனும் சொற் களாலும் சிவஞானியின் சிறப்புக்கள் போற்றியுரைக்கப்பெற்றுள்ளன.

சிவஞானி முத்திபாதத்தில் என்றும் அழிய இன்பம் அருள்பவர் என்றும், உயர்ந்தோர் பழித்துரையா ஒழுக்கசீலர் என்பதும், உலகம் கடந்த ஞானோதயர் என்றும், புலன்களைத் தன்வயமாக்கிக் கொள்ளும் உணர்வாகிய படையையுடையவர் என்பதும் வந்தியர்துதி எனும் பகுதியால் அறிந்து கொள்ள முடிகிறது.

இத்தகு சிவஞானியிடத்து தம் நெஞ்சைத் தூது விடுக்கும் ஆசிரியரின் ஞான அனுபவங்களையும், இறைஞானக் காட்சிகளையும் உணர்ந்து கொள்ள முடிகிறது.

108. பிரபுலிங்க லீலை உணர்த்தும் வீட்டு நெறி

செ.மா.க. வசந்தகோகிலம், கடலூர்.

கற்பனைக் கருவூலமாகிய சிவப்பிரகாச சுவாமிகள் அருளிச் செய்த நூல்களுள் அரும்பெரும் காப்பிய இலக்கியமாகப் பிரபுலிங்க லீலை திகழ்கின்றது. இறைவன் சிவபெருமான் அல்லமாப் பிரபுவாக மண்ணுலகில் தோன்றி நிகழ்த்திய திருவிளையாடல்களைப் பற்றிக் கூறுவதன் வாயிலாக, வீரசைவ சமயத்தினை விளக்கவும் வளர்க்கவும் கி.பி. 17–ஆம் நூற்றாண்டில் தோன்றியதெனினும் எச்சமயத்தவர்க்கும் எக்காலத்தவர்க்கும் எந்நாட்டவர்க்கும் பொதுவான வீட்டு நெறியை விரிவாக உணர்த்தும் பெற்றியதாக இக்காப்பியம் இலங்குகிறது.

ஒரு காப்பியம் 'நாற்பொருள் பயக்கும்' தன்மையதாக அமைதல் வேண்டுமென்று தண்டியலங்காரமும் 'அறம் பொருள் இன்பம் வீடு அடைதல்' நூலின் பயனென்று நன்னூலும் கூறியதற்கேற்பப் பிரபுலிங்க லீலை அமைந்திருந்தாலும் அது ஏனைய மூன்று உறுதிப் பொருள் களினும் வீடு பற்றிய செய்திகளையே மிகுதியாகவும் பரவலாகவும் கூறியிருக்கிறது.

வீட்டுலகினை முத்தி, பரமுத்தி, பரமமுத்தி, இன்பசித்தி, பேரின்பம், வான்செய்பதம், சிவபதம் என்று பலவாறு குறிப்பிடும் சிவப்பிரகாச சுவாமிகள் அதனை அடைதற்குரிய நெறிமுறைகளை மிகவும் தெளிவாகக் கூறுகிறார்.

'உடம்பைப் பொறியைக் கரணத்தை
உயிரைத் தானென் றுழலாமல்
அடங்கத் துறந்து தனையறிந்து
பேதா பேதம் என்னுமயல்
கடந்திட் டிருக்கும் பரமுத்தி' (விமலை கதி – 22)

என்ற பாடல் வழி, உடம்பு, பொறிகள், மனம், உயிர் முதலான வற்றைத் 'தான்' என்று கருதாமல் முற்றிலுமாகத் துறந்து பல்வகை வேறுபாடுகளாகிய மயக்கததைக் கடந்து தன்னையறியும் நிலையில் முத்திகிட்டும் என்று உணர்த்துகிறார்.

உலகியலில் ஓரறிவுயிர் முதலாக ஆறறிவுயிர் ஈறாகப் பல கோடி உயிரினங்கள் பலப்பல உடல்களைப் பெற்றுப் பெற்று உழல்கின்றன.

அவ்வுயிர்களோடு கலந்து நின்று அவற்றின் அறிவு, இச்சை, செயல் களை ஆணவ மலம் மறைப்பதன் விளைவாக அவை செருக்குற்றுத் தம் மனமொழி மெய்களால் பல்வேறு வினைகளை மேற்கொள்கின்றன. இவ்வினைகளே உயிர்களின் இன்ப துன்பங்களுக்கும் அடுத்தடுத்த பிறவிகளில் உடல்கள் அமைவதற்கும் காரணமாகின்றன. ஒரு பிறவியில் செய்யப்படும் பினைகள், அடுத்த பிறவிக்கு மட்டுமின்றி, அடுத்தடுத்த பிறவிகளிலும் தொடர்ந்து வந்து பயனளிக்கும் ஆற்றல் வாய்ந்தவை. நல்வினை, தீவினை என்ற பாகுபாடுடைய இவற்றுள் நல்வினை களைச் செய்தாலன்றி மானிடப் பிறவி அமையாது என்பது சிவப்பிரகாச சுவாமிகளின் கருத்தாதலை

'புன்மரம் நெளிபுழுப் புள்வி லங்கெனும்
பன்மைய துயர்செயும் பவங்கள் தப்பியே
வன்மைகொள் நிலமிசை மக்கள் ஆகுதல்
நன்மைகொள் உயிர்க்கலால் அரிது' (இட்டலிங்க கதி–10)

என்று கூறுவதால் அறியலாம்.

மானிடப் பிறவி எய்தினாலன்றி மெய்யுணர்வுற்று வீடு பெற இயலாதென்பதால் அதனைப் 'பீடுறு மானிடப் பிறப்பு' என்றும் 'எய்தற்கரிய யாக்கை' என்றும் சிறப்பிக்கும் சுவாமிகள், உடம்பின் மீது கொள்ளும் பற்று பிறவி தொடரக் காரணமாவதை உட்கொண்டு, 'மின்போல் அழியும் உடல்', 'பொய்த்தழி உடம்பு', 'மல வடிவு', 'மின்னிற் கெட்டிடும் தசை நிணம் என்பு தோல் மேய்ந்த இன்னற் பொய்க்குடில் ஆகிய உடம்பினை யானென் றுன்னிக் கெட்டனை' என்று பலவாறு இழித்துரைக்கிறார்.

'வெருவு றப்படும் பிறவியை ஒழித்துமெய் வீடு
மருவு தற்குளம் வைத்தவன் இம்மல வடிவைத்
தெருவி னிற்புனி தம்படா ஒன்றனைத் தீண்டி
அருவ ருப்பவன் போலரு வருத்ததை அகற்றும்'

(கோரக்கர் கதி – 40)

என்று அவர் கூறுவதன் வழி வீடுபேற்றை விரும்புவோன் உடம்பின் மேல் கொண்ட பற்றைத் துறக்க வேண்டும் என்பது தெளிவாகிறது.

பொறிகளின் மீது கொள்ளும் பற்றினை நீக்க வேண்டும் என்று வலியுறுத்தும் சுவாமிகள் ஐம்புலன்களையும் ஒழிக்க வேண்டும் என்கிறார். ஐம்புலன்களாகிய மான் கூட்டத்தை அறிவாகிய வேலினால் அருள் என்னும் வலையில் வீழுமாறு எறிந்தால் துன்பமில்லை என்றும் வருத்தும் ஐம்புலன்களையும் அறிவு என்னும் தீயில் சுடுவதனால் பிறவியைச் சுடமுடியும் என்றும் உணர்த்தும் அவர்,

'புலன்களை ஒழித்த போதே பொறிகளும் பூதம் ஐந்தும்
கலங்குறு கரண நான்கும் கலாதியும் சுத்தம் ஐந்தும்
விலங்குறும் அடியில் வைத்த வெறுங்குடம் தள்ளின் மேல்மேல்
மலங்குற ஒருங்கடுக்கு மட்கலம் விழுத லேபோல்'
(சித்தராமையர் கதி – 72)

என்ற பாடலில், அடுக்கி வைத்த மண் பானைகளில் அடியிலுள்ள பானையைத் தள்ளினால் மற்றைப் பானைகள் தாமே வீழ்ந்து நொறுங்கு வதைப் போல் புலன்களை ஒழித்தால் பொறிகள், பூதம், கரணம், கலை, சுத்தம் ஆகிய தத்துவங்கள் தாமே ஒழியும் என்று அறிவுறுத்தி, புலனடக்கமே வீடுபேற்றினை அடைதற்கு அடிப்படையென்பதை விளக்குகிறார்.

கரணமாகிய மனத்தினை அடக்க வேண்டுமென்று வற்புறுத்தும் சுவாமிகள், மனத்தைப் பெற்றிருப்பதாலேயே மக்கள் மாக்களினின்று வேறுபட்டு மானிடராக மேன்மையுறுவதாலும் மனமே இறைவன் உறைகின்ற இடமாகப் பரிணமிப்பதாலும் அந்த மனத்தின் இயல்பு களையும் அதனை அடக்கித் தூய்மையாக்குவதையும் பற்றி விரிவாகக் கூறுகிறார்.

அறவினைக்கும் பொருளையும் இன்பத்தையும் பெறுவதற்கும் கல்வி கற்றுச் சிறத்தற்கும் வீரத்திற்கும் துறவிற்கும் துணை நிற்கும் மனம் நல்ல செயல்களைப் புரிந்து மானிடரை உயர்த்தவும் நன்மையல்லாத வற்றைச் செய்து நரகச் சேற்றிலே அமிழ்த்தவும் வல்லதாகும். இத்தகு மனத்தை வசப்படுத்தல் எளிதன்று என்பதனாலேயே அதனை 'வாரணம் ஆகும் மனம்' என்று யானையாக உருவகிக்கின்றார் சுவாமிகள். கரங்கள் நல்லன செய்தாலும் மனம் அலைந்து திரிந்து உலகப்பொருள்களில் பற்றுக்கொண்டால் பிறவி தொடருமாதலால் மனத்தினும் அல்லற்படுக்கும் பகை வேறு இல்லை என்று கருதும் சுவாமிகள் அவ்வாறு அலையும் மனத்தினை 'விரிந்த நெஞ்சம்' என்றும் அலையாது அடங்கும் மனத்தினை 'ஒருங்கு நெஞ்சம்' என்றும் குறிப்பிடுகிறார். மனத்தை அடக்க வல்லவரே பிறவிக் கடலைக் கடக்க வல்லவர் என்பதை,

'கெடுக்க வல்லதும் கெட்டவர் தங்களை
எடுக்க வல்லதும் இம்மனம் என்றதை
அடக்க வல்லவன் ஐய பவக்கடல்
கடக்க வல்லவன் ஆவன் கடிதரோ' (சாதகாங்க கதி–15)

என்ற பாடலில் உணர்த்துகிறார்.

அடங்கும் மனமே தூய்மையுறும் எனக் கூறும் சுவாமிகள் அத்தூய்மையே தன்னை அறிதற்கும் வீடு பெறுதற்கும் காரணமாதலை,

'அந்தக் கரண சுத்தியே அறிவை அறிதற் காரணம்',
(மனோலய கதி – 12),

'ஆசு தீர்ந்த மனத்தினிடை அன்றி உணர்வு தோன்றாது'
(மனோ – 14)

'பரம முத்தி பதம்பெறும் ஏதுவுள்
கரண சுத்தி அதனது காரணம்' (சாதகாங்க கதி – 4)

என்று விளக்குகிறார்.

உயிரின் மீதும் பற்றுக்கொண்டு அதனைத் தான் என்று உழலக் கூடாதென்று எச்சரிக்கும் பொருட்டே உயிர் என்பது உடலில் போக்குவரவு செய்யும் உயிர்க் காற்றிற்கு இயற்பெயரென்றும் உயிர்க்கு வேறாக நிற்கும் ஆன்ம வடிவிற்கு ஆகுபெயரென்றும் சுவாமிகள் தெளிவுறுத்துகிறார்.

'உயிரெ னும்பெயர் இயங்குகாற் கியற்பெயர் உரைப்பின்
அயலு றுந்தனக் கப்பெயர் ஆகுபேர் ஆமென்
றியலு ணர்ந்தவர் இயம்புவர்' (கோரக்கர் கதி – 38)

என்கிறார்.

இவ்வாறு உடம்பு, பொறி, கரணம், உயிர் முதலானவற்றைத் தான் எனச் செருக்குவதன் விளைவை,

'இருவினை தாம்வரும் யானென லாலவ்
இருவினை யால்வரும் இன்பொடு துன்பம்
இருவினை யானெனல் இன்றெனில் இல்லை
இருவினை இல்லெனில் இல்லை பிறப்பே' (மனோ – 8)

என்று அறிவுறுத்தி,

'யானென தென்ப திருந்திடு காறும்
ஞானம் உறான்' (மனோ – 5)

என்று புகல்கின்றார். ஆதலால் யான் எனது என்னும் மயக்கத்திலிருந்து விடுபட்டு முற்றத்துறக்கும் நிலையிலேயே தன்னை அறிதலாகிய ஞானம் கைவரப்பெறும் என்பது புலனாகிறது.

தன்னை அறிதலாவது ஒப்பற்ற மெய்யுணர்வு உறுதலாகும். உயிரானது தன்னை விட்டுப் பாசத்தைப் பிரித்து, பிரிக்க இயலாத இறைவனைச் சார்ந்து அடங்கியிருப்பதாகிய அடிமைத் திறத்தையும் தன்னிடத்தில் இறைவன் கலந்திருப்பதையும் கருத்தில் கொண்டு தன்முனைப்பின்றி அருள்வழி நின்று இறைவனையே தானாகவும் தன்னையே இறைவனாகவும் பாவிப்பதே தன்னை அறிதலாகும்.

இதனைச் சிவோகம் பாவனை என்று சைவ சமய சாத்திரங்கள் கூறும் சிவத்தோடு தன்னை வேறுபடுத்திக் காணாமல் தன்னையே சிவமாக உணர்ந்தோனே பிறவிச் சூழலிலிருந்து விடுபடுவான் என்ற உண்மையை,

'நானே சிவமென் றெண்ணினோன்
ஊனம் இல்லா ஒருசிவமே ஆவன் இவ்வா றுன்னாதான்
ஈனம் எல்லாம் உடையஉடம் பெடுத்துச் சுழலும் எஞ்ஞான்றும்'
(மனோ–15)

என்றும்,

'தன்னைச் சிவமென் றென்றறிவன் அன்றே பாசம் தனைநீப்பன்
தன்னைச் சிவமென் றறியாதான் தனக்குப் பிறப்பே துணையாகும்'
(மனோ – 16)

என்றும் சுவாமிகள் எடுத்துரைக்கிறார்.

தன்னையறிந்தவன் துயர் தரும் உடலை விரும்பாமல் உணவுண்ட இலையை எறிவதுபோல் எறிவான் என்பது சுவாமிகளின் கருத்து.

'சச்சி தானந்த சங்கரன் ஆகவே
அச்ச நீங்குபு தன்னை அறிந்தவன்
துச்ச மாந்துயர் தோல்மலி யாக்கையை
இச்சி யானதை யானென எண்ணியே'
(முத்தாயி அம்மை கதி–10)

தன்னையறிந்தவன் ஞானியாதலை, 'அறிவறி ஞானி' என்றும் 'தன்னைப் பேதமறச் சிவமென் றறிவோன் ஞானி' என்றும் சுவாமிகள் உணர்த்துகிறார். ஞானியே இறைவனை உள்ளத்துள் காண்பதை,

'புறம்பு காண்குவன் புல்லியன் ஈசனை
அறிந்த ஞானி அகமுறக் காண்பான்' (சாதகாங்க கதி – 7)

என்று கூறும் அவர் ஞான நெறியே வீட்டுலகை அடைதற்குரிய நெறியென்றும் ஏனைய சரியை, கிரியை, யோக நெறிகள் ஞானம் பெறுதற்குற்ற கருவிகள் என்றும் தெரிவிக்கிறார்.

சிவோகம் பாவனையில் நெஞ்சை நிறுத்திய ஞானி, திருமால் முதலான தேவர்களும் போற்றத்தக்க உயர்வு அடைவதை,

'நெஞ்சம் சோகம் பாவனையில் நிற்க நிறுத்தி விடயங்கள்
அஞ்சும் துறவாத் துறந்தசிவ யோகி ஒருவன் அடியிணையில்
துஞ்சும் திருமால் முதலமரர் உள்ளம் அவனைத் துதித்திறைஞ்சா
தெஞ்சும் தவமா முனிவரிலை எனநான் மறையும் இயல்புமால்'
(மனோ – 19)

என்ற பாடலில் சுவாமிகள் தெரிவிக்கிறார்.

சிவோகம் பாவனையில் நின்று அகப்பூசை புறப்பூசை இரண்டனுள் அகப்பூசையால் சிவபெருமானை வழிபடுவோர் வீட்டின்பம் எய்துவர் எனக் கூறும் சுவாமிகள் சிவபூசை முறைகளை குருவருளால் அறிதல் வேண்டுமென்பதனை,

'பூசைசெய் தன்னையும் பூசிக் கப்படும்
ஈசன தியல்பையும் இறைவன் பூசைசெய்
ஆசறு பொருளையும் அறிவ றிந்துயர்
தேசிகன் அருளினால் தெளிய வேண்டுமாய்'

(மாயை கோலாகல கதி – 15)

என்று உணர்த்துகிறார்.

கண்ணுக்குப் புலப்படாமல் உயிரோடு ஒன்றாய் வேறாய் உடனாய் நின்று படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் ஆகிய நான்கு தொழில் களையும் செய்து உயிரைக் காத்து வரும் இறைவன் எஞ்சிய அருளல் தொழிலைச் செய்தற்கு, கண்ணால் காணக்கூடிய குரு வடிவில் அருள் பாலிப்பான் என்பது சைவசமய சாத்திரக் கருத்தாகும். இந்த உண்மையை உள்ளத்துள் கொண்டு இறைவன் சிவபெருமான் பூவுலகில் அல்லமாப் பிரபுவாகத் தோன்றி, வேறுபாடின்றி அனைவர்க்கும் மெய்ப்பொருள் அருளி வீடுபேறு அளித்தமையை,

மூத்தவர் இளைஞர் நோயர் முகிழ்முலை மாதர் நல்ல
தீத்தொழி லாளர் பொல்லாத் தீத்தொழி லாளர் என்றும்
பார்த்திலன் யாவர் மாட்டும் பரிந்தருள் மாரி பெய்து,
காத்தனன் அமல ஞான காரணன் குருகு கேசன்'

(மான்மிய கதி – 19)

என்று சுவாமிகள் விளக்குகிறார்.

இத்தகைய குருவருளும் திருவருளும் வாய்க்கப் பெற்றவர்கள் உயிர்களிடையே பேதாபேதம் கருதாமல் நன்மனம் உடையோராய், வைதவனை நன்றாக வாழ்த்தினான் என்றும் தீமை செய்தவனை நல்லன செய்தானென்றும் கருதுவானென்று கூறும் சுவாமிகள்,

'ஓடும் பொன்னும் உறவும் பகையுமோர்
கேடும் செல்வமும் கீர்த்தியும் நிந்தையும்
வீடும் கானமும் வேறற நோக்குதல்
கூடுந் தன்மை கொளுமனம் நன்மனம்' (சாத. – 19)

என்று சிறப்பிக்கிறார்.

சிவப்பிரகாச சுவாமிகள் பிரபுலிங்க லீலையை இருபத்தைந்து கதிகளாகப் பாகுபாடு செய்தருளியமையை ஆராய்ந்த அறிஞர்கள்

ஆன்ம தத்துவம் இருபத்து நான்காகும். இவற்றைக் கடந்து நின்ற இருபத்தைந்தாவது தத்துவம் முத்தி தத்துவமாகும். ஆன்மா இருபத்து நான்கு தத்துவங்களையும் கடந்து, இருபத்தைந்தாவது தத்துவமாகிய முத்தியை அடைதலை நோக்கமாகக் கொண்டது இந்நூல் என்று கூறுவதையும் நூலில் கூறப்பெற்ற செய்திகளையும் நோக்குமிடத்து உலகோரை வீட்டு நெறியில் செலுத்துதற்கென்றே இக்காப்பியம் அருளப் பெற்றதென்ற உண்மை புலப்படுகிறது. சுவாமிகள் உணர்த்துவது போல் அரிய மானிடப் பிறப்புற்ற ஒவ்வொருவரும் தத்தம் உடம்பு, பொறி, மனம், உயிர் முதலானவற்றைத் தான் என்று பற்றுக் கொள்ளாமல் விடுத்து, பேதாபேதம் கடந்து, தான் இறைவனிடத்திலும் இறைவன் தன்னிடத்திலும் கலந்து நிற்றலைக் கருத்தில் இருத்தி அருள்வழி நின்றால் வீட்டுலக இன்பம் பெறுவது உறுதியாம்.

109. சிவப்பிரகாசரின் இலக்கியநயங்கள்

சு. மீனாட்சி சுந்தரம், கண்டாச்சிபுரம்.

சிவப்பிரகாசர் நூல்களின் இலக்கிய நயம் பெரிதும் பாராட்டிச் சுவைத்தற்குரியது. அவரது நன்னெறி என்ற நீதிநூல் மனித உடம்பின் உறுப்புக்களையும் நடைமுறைச் செயல்களையும் உவமானமாகக் கொண்டே செய்யப்பெற்ற நூலாகும். உறுப்புகளில் கண் சிறந்தது என்பர். இக் கண்களைப் பெரியவர்களுக்கு ஒப்பாகக் கூறும் இலக்கியம் பெரிதும் சுவைக்கத் தக்கதாகும்.

பெரியவர்கள் மற்றவர் படும் துன்பங்கண்டு பொறுக்கமாட்டார்கள். அதுபோல் கண்களும் தம் உடம்பின் பிற உறுப்புகள் படும் துன்பங் கண்டு பொறா. இதனை அவர்தம் செய்யுள் மொழியில்,

பெரியவர் தம்நோய்போல் பிறர்நோய் கண்டுள்ளம்
எரியின் இழுதாவ ரென்க – தெரியிழாய்
மண்டு பிணியால் வருந்தும் பிறஉறுப்பைக்
கண்டு கலுழுமே கண் (நன்னெறி)

எனக் காணலாம். மற்றும் இதுபோல் பல உதாரணங்களை நூல் முழுதுங் காணலாம். அவற்றை நன்னெறி நூலில் கண்டு சுவைக்கலாம். சுவைக்க வேண்டும்.

இது போலவே பெரியநாயகி கலிவிருத்தத்தில் பெண்களின் பெருமையைப் பாராட்டு முறையினும் பரிமேலழகர் உரையை மறுக்கும் முறையானும் உலகவர் வாழ்த்தும் முறையானும் வேறுபட்ட காட்சியை நமக்கு அறிவிக்கிறார். இதில் அவர்தம் பெண்ணின் பெருமை தெள்ளெனத் தோற்றம் தருதல் காணலாம்.

கற்றார் அறிகுவர் மக்கட்தம் பேறெனக் கட்டுரைத்த
கொற்றான் ஒருபெண் ஒழித்ததென் பாரொடு தொல்லுலகின்
நற்றாண் மகப்பெறு கென்றாச் சொல்பவர் நாணவுனைப்
பெற்றான் மலையரை யன்குன்றை வாழும் பெரியம்மையே
(பெரியநாயகியம்மை கலித்துறை)

இன்னும் இதுபோல் நால்வர் நான்மணிமாலையிலும் குறள் உரைகளை மறுத்திருக்கிறார். இதனை 'அறத்தாறு இதுவென வேண்டா' என்ற பாடலால் உணரலாம். நால்வர் நான்மணிமாலையில் உள்ள ஒவ்வோர் பாடலின் நயமும் மகிழத் தக்கதாகும்.

தமிழின் பெருமை வடமொழியிலும் மிக்கது என்பதை மணிவாசகர்க்குப் பாடிய அகவலிலும் தெளிவாகக் காணலாம்.

திருவார் பெருந்துறைச் செழுமலர்க் குருந்தின்
நிழல்வாய் உண்ட நிகரிலா னந்தத்
தேன்தேக் கெறியுஞ் செய்ய மாணிக்க
வாசகன் புகன்ற மதுர வாசகம்
யாவரும் ஓதும் இயற்கைத் தாதலின்
பொற்கலம் நிகர்க்கும் பூசுரர் நான்மறை
மட்கலம் நிகர்க்கும் மதுர வாசகம்
ஓதின் முத்தி யுறுபயன்
வேதம் ஓதின் மெய்ப்பயன் அறமே.

சம்பந்தர், நாவுக்கரசர் இவர்கள் பாடலிலும் மிக்க நயங்கள் பல உள்ளன. படித்து மகிழலாம். உணர்ந்து இன்புறலாம்.

இதுபோல் பல நூல்களிலும் சிவப்பிரகாசர் சமுதாயச் சீர்திருத் தத்தையும் கடவுள் அடியார் மரபை வைத்துப் பாராட்டியுள்ளார் என்பதை அறியலாம். மற்றும் நெடுங்கழி நெடில் என்ற பகுதியில் இறைவன் எப்படிப்பட்டவன் என்பதை அடியார்க் கெளியான் எனும் முறையில் நமக்கு அறிவித்துள்ளார்.

தான்பெறு மழலைமகன் றன்னைத்
தன்கையால் உளங்களித்து அரிந்து
சமைத்து உலகறிய விடுபெருந் தொண்டன்
றனைச்சிறுத் தொண்டனென் றவன்சேய்
ஊன்பெறு நீயே யுரைத்தனை யென்றால்
உரிமையோர் சற்றுமி லாதேன்
உன்திருத் தொண்டனென்றிருப் பதனுக்கு
உன்னுதல் பெரும்பிழை யன்றோ
. . . .
இட்டநன் குதவி யென்கரத்து இருக்கும்
ஈசனே மாசிலா மணியே.

பிரபுலிங்க லீலையில் ஆதிபகவன் எனும் பாடலில் உலகில் மகளிர் மகிழும் பாங்கை உணர்த்துகிறார். கைலை கதியில் பாற்கடலை உபமன்னியுவுக்குக் கொடுத்த இறைவன் திறத்தை மறுக்க மண்ணுண்ட மாயனுக்கு வலுவில்லை எனும் நயம் மிக மகிழத்தக்கது. இதுபோல் பல பாடல்களும் கற்பனைத் திறம் நிறைந்தவை. ஆதலால் சிவப்பிரகாசர் ஒரு கற்பனைக் களஞ்சியம் என்னும் புகழாரம் கொண்டவர் என்பது தெள்ளத் தெளிகிறது எனலாம்.

110. சோணசைலமாலையில் அணிகள்

பா. அருணாதேவி, பேரூர்.

இயற்கை வருணனை, சொல்நயம், பொருள்நயம், சந்தம், கற்பனை எனப் பல ஆபரணங்களை அணிந்து அழகு பெறும் இலக்கியத்திற்கு மேலும் அழகு சேர்ப்பவை அணிகளாகும்.

''உணர்வினில் வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்'

எனும் பவணந்தியாரின் கூற்றுக்கு ஏற்ப இயற்கையாய் உள்ள அழகை மேலும் அலங்கரிப்பது அணியாகும். இத்தகைய அணிகளின் சிறப்பைச் சிவப்பிரகாச சுவாமிகள் தமது நூலான ''சோணசைலமாலை'யில் கையாண்ட திறத்தை இரத்தினச் சுருக்கமாய் காட்டுவதாய் இக்கட்டுரை அமையும்.

சோணசைலமாலையில் அணிகள்

கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாசர் எனப் போற்றி வணங்கப் படும் சுவாமிகள் திருவண்ணாமலையைக் கிரிவலம் வரும் பொழுது பாடிய பாடல்களே நமக்குச் 'சோணசைலமாலை' எனும் இலக்கிய மாகியது.

நினைத்தாலே முக்தி தரும் சோணாச்சலரைப் புகழ்ந்து பாடிய இந்நூலில் 'தன்மை அணி', 'உவமையணி', 'உருவகம்', 'சிலேடையணி', 'உயர்வு நவிற்சி அணி', 'வேற்றுமையணி' எனப் பல அணிகள் பயின்றுவர இந்நூலைப் படைத்தருளியுள்ளார்.

தன்மை அணி

தன்மையாவது குறித்த பொருளை உள்ளது உள்ளவாறே அழகுபெறக் கூறுவதாகும். இதனை 'இயற்கை நவிற்சி' என்றும் கூறுவர். இதனை ஆங்கிலத்தில் Natural Description என்பர்.

இவ்வணிக்கு,

''எவ்வகைப் பொருளும் மெய்வகை விளக்கும்
சொன்முறை தொடுப்பது தன்மை''

''அதுவே
பொருள் குணஞ்சாதி தொழிலொடு புலனாகும்''

என்று தண்டியலங்காரம் விளக்கம் கூறுகிறது. இத்தகைய அணியைச் சிவப்பிரகாச சுவாமிகள் தமது சோணசைலமாலையில்,

''ஆர்த்து எழுதிரைகள் சுருண்டு எறிகடல்''

எனும் பாடலடியில் காட்டுகிறார். இப்பாடலில் கடலின் தன்மை கூறும் பொழுது 'கடலானது ஓசையிட்டுச் சுருண்டு ஓங்கி அலை வீசுவது. இவ்வியல்பு இயல்பாகவே கடலுக்கு உண்டு என்பதனை மிக அழகாகக் கூறுகின்றார்.

மேலும், ஒரு பாடலில் உடலானது மரண காலத்தில் மனம் கலங்கி கண்கள் இருண்டு, செவிகள் செவிடுபட்டு, நெஞ்சில் கோழை மிகுந்து மூச்சு அடைக்கும். இத்தகு துன்பத்தை இயல்பான தன்மையைச் சித்தரிக்கும் பொழுது சிவப்பிரகாச சுவாமிகள்,

''சிந்தனை கலங்கி இணைவிழி இருண்டு
செவிகளும் செவிடுபட்டு ஐம்மேல்
உந்திட உயிர்ப்போம் பொழுது நின்வடிவம்
உளங்கொளும் பரிசு எனக்கு அருளாய்''

எனும் பாடல் வரிகளில் அழகுபடக் கூறி தன்மையணியை எடுத்தாண்டுள்ளார்.

உவமையணி

இரண்டு பொருள்களிடத்தில் காணப்படும் அரிய, எளிய மக்களால் பொறிகளின் நுகர்வால் காணமுடியாத ஒப்புமைகளை எடுத்துக்கூறி அதன் வழியே உயர்ந்த கருத்துக்களையோ, பொருள் விளக்கத்தையோ உலகினர்க்குத் தருவது புலவர்கள் வழக்காகும். இத்தகைய ஒப்புமை களைக் கூறுவதே உவமையாகும்.

உவமைகளைப் பொருள் விளக்க உவமை, வருணனை உவமை என இருவகைப் படுத்துவர். வருணனை உவமையை எளிய வருணனை, விளக்க வருணனை எனவும் வகைப்படுத்துவர். இவ்வுவமைகளைச் சிவப்பிரகாச சுவாமிகள் தமது நூலில் பல இடங்களில் பயன் படுத்துகின்றார்.

பொருள் விளக்க உவமை

சொல்ல எடுத்துக்கொண்ட பொருள் நுட்பத்தை விளங்க வைக்கப் பாடுவது பொருள் விளக்க உவமையாகும். இதனை சுவாமிகள் தமது நூலில் கூறும் பொழுது 'அடியார்களைக் கண்டால் மனம் உருக வேண்டும். அதுவும் எவ்வாறெனின் கன்றினைக் கண்ட தாய்ப் பசுவுக்கு உளம் உருகுவது போல' என்று கூறுகிறார். இதனை,

''அள்ளிவெண் திருநீறு உடல்முழுதும் அணியும்
அடியவர்ப் பெறின் எழுந்து இளங்கன்று
உள்ளிநின்றுருகும் அன்னையின் மனம் நெக்கு
உருகுபு சென்று இறைஞ்சிலேனே''

என்னும் பாடல்வரியிலும்

''நீரினில் எழும் மொக்குகளின் அழிஉடம்பு
கந்தமும் மலரும் நினை என்னில்
காண்பதக் காணும் நாள் உளதோ?''

எனும் பாடலிலும் கூறுகின்றார். இதுபோன்று பல பாடல்கள் உள.

வருணனை உவமை

இயற்கையை இறைவனை மிகச்சிறப்பாக சிறப்பித்து வருணித்து உவமித்துப் பாடும் வருணனை உவமைகளை எளிய வருணனை விளக்க வருணனை என வகைப்படுத்துவர்.

இயற்கைப் பொருளை மேலும் சிறப்பிக்க வேறொரு இயற்கைப் பொருளுடன் உவமிப்பது வருணனை உவமை எனப்படும். இவ்வெளிய வருணனை உவமையைச் சிவப்பிரகாச சுவாமிகள் தம் பாடலில் கூறும் பொழுது தினைக் கதிர்களைக் கவர்ந்து செல்வதற்குக் கிளிகள் வருகின்றன. அவற்றைச் சிறுமிகள் ஓட்டுவதால் அவை கூட்டமாகப் பறந்து செல்வது மலைக்கு மாவிலைத் தோரணம் அமைத்தது போல இருப்பதாகக் கூறுகின்றார்.

இதனை,

''கொய்யுறுதினை வீழ்ந்திரு பசுங்கிள்ளைக்
குழுக்கள், தோரணம் எனஎழுந்து
தையலர் கடியப் பறந்துறும் சோண
சைலனே கைலை நாயகனே''

என்கிறார்.

விளக்க வருணனை

இயற்கைக் காட்சிக்கு மேலும் அழகூட்டிப் பாடுவது விளக்க வருணனை ஆகும். அவ்வகையில் சிவப்பிரகாச சுவாமிகளும் பல பாடல் களைப் பாடியுள்ளார். கார்த்திகை தீபத்தைப் பாடும் பொழுது, இதழ் விரிந்த அழகிய பெரிய செந்தாமரையின் அருகில் ஒரு வெண்மையான அன்னம் மெதுவாக வருவது போலத் திருக்கார்த்திகை நாளன்று அண்ணாமலையின் உச்சியில் தோன்றும் பெருஞ்சோதியும் அன்று தோன்றும் முழுமதியும் விளங்குகின்றன என்கிறார். இதில் சோதி

யானது செந்தாமரை மலரைப் போலவும் அருகில் வரும் சந்திரன் அன்னப் பறவை போலவும் விளங்கும் காட்சியை மிகச் சிறப்பாக,

''மடல் அவிழ் மரை மாட்டு எகினென அருகு
மதியுறுக் கார்த்திகை விளக்குத்
தடமுடியிலங்க வளர்ந்து எழும் சோண
சைலனே கைலை நாயகனே''

எனும் பாடலில் கூறுகிறார். மேலும் ஒரு காட்சியைக் கூறும் சுவாமிகள், மக்களுக்கு காலத்தை அறிந்து கொள்ள ஓசை எழுப்புகிறார்கள். அதற்கு சூத்தியும் செகண்டியும் பயன்படுகிறது. இக்காட்சியை மரக்கிளையில் தேனீக்களால் கட்டப்பட்ட கூட்டினை செகண்டியாகவும் அதனருகில் அழகாக மலர்ந்துள்ள காந்தள் மலர்களை சுத்தியாகவும் கொண்டு இனிய தென்றல் காற்று வீசும் பொழுது காந்தள் மலர் தேன் கூட்டில் மோதுவது ஓசை எழுப்ப மோதுவது போன்று உள்ளதாய் உவமிக்கின்ற திறத்தை,

''தேக்குறும் இருளின் கண்ணல் காட்டுவபோல்
தென்றல் வந்து அசைதோறும் மெல்லத்
தாக்குறும் காந்தள் துடுப்புஅலர் சோண
சைலனே கைலை நாயகனே''

என்னும் பாடலடி கொண்டு அறிய முடிகின்றது.

உருவகம்

உருவகம் உவமையின் மற்றொரு வகை ஆகும். இதற்கு தண்டியலங்காரம்,

''உவமையும் பொருளும் வேற்றுமை யொழிவித்து
ஒன்றென மாட்டின் அஃது உருவகமாகும்''

என்று இலக்கணம் கூறுகிறது.

ஒரே சொல்லாகி, இரண்டினைச் சார்ந்த தனித்தனி உணர்ச்சிகளும் ஒருங்கிணைந்து ஆற்றல் மிக்க உணர்ச்சியாய் வளர்ந்து வருவது தான் உருவகம் என்பர் அறிஞர் பலர். இத்தகைய உருவகத்தினைச் சிவப்பிரகாச சுவாமிகளும் சோணசைலமாலையில் பல இடங்களில் பயன்படுத்தியுள்ளார்.

''பவக்கடல் கடந்து முத்தியம் கரையில்
படர்பவர் திகைப்பற நோக்கித்
தவக்கலம் நடத்த உயர்ந்துஎழும் சோண
சைலனே கைலை நாயகனே''

எனும் பாடலில் பவக்கடல் என்பதனைப் பிறவிக்கு உருவகமாகப் பயன்படுத்தியுள்ளார். மேலும் மானுடப் பிறவியினை 'கருணை வெயில்', 'உளக்கமலம்', 'சிவசூரியன்' என உருவகம் செய்துள்ள திறனை,

''மயலினால் அழுந்தும் பிறவியாம் அவற்றை
வளர்திரு நின்பெரும் கருணை
வெயிலினால் உலர்த்திஎனது உளக்கமலம்
விரிக்கும் ஒண்பருதி நீஅலையோ''

எனும் பாடலில் காட்டுகின்றார். இதுபோன்று தமது பாடல்களில் மேலும் பல பாடல்களில் இதுபோன்ற உருவகங்களைப் படைத்தருளி நூலினைச் சிறப்பாகத் தந்துள்ளார் எனில் அது மிகையன்று.

வேற்றுமையணி

ஒப்புடைய இரு பொருட்களைக் கூறி பின் அவற்றிற்கிடையே உள்ள சிறப்பால் ஒன்றினை விட மற்றொன்று உயர்ந்தது என வேற்றுமை தோன்றக் கூறுவது 'வேற்றுமையணி' ஆகும்.

அவ்வகையில் சிவப்பிரகாச சுவாமிகளும் தமது பாடலில் இவ்வணியைப் பயன்படுத்தி பாடல்கள் புனைந்துள்ளார்.

சுவாமிகள் திருவண்ணாமலையினை மருந்து என்று கூறுகிறார். (மருந்து - அமிழ்தம்) பாற்கடலில் மந்திர மலையை மத்தாக நாட்டி தேவர்கள் ஒருபுறமும் அசுரர்கள் மறுபுறமும் நின்று கடையத் தோன்றியது அமிழ் தாகிய மருந்தாகும். அது நரை, திரை, மூப்பு போன்ற நோய்களை அகற்றக் கூடியது. நெடுங்காலம் வாழ வைக்கக் கூடியது. ஆனால் சிவபெருமானாகிய மருந்தைக் கடல் இன்றி மத்தின்றி கடைபவர்கள் இன்றி தானே விளைந்த அமுதம் நரை, திரை, மூப்பு நீக்கி நெடுங்காலம் வாழ வைக்கும். அத்தோடு பிறவிப் பிணியையும் நீக்கும் சிறப்புக்காரணத்தால் சிவபெருமானாகிய மருந்தே உயர்ந்ததாகும் என்ற கருத்தை,

''பூந்திரை சுருட்டும் கடல் கடைகுநர், ஒன்
பொறி அரவின்றி, மாதவர்க்குச்
சாம்துயர் அகற்றும் மருந்தருள் சோண
சைலனே கைலை நாயகனே''

என்னும் பாடலில் வேற்றுமையணி தோன்ற படைத்துள்ளார்.

அன்பர்க்கு, அருகில் நின்று அருள்புரியும் அன்பனாய் ஆணவத்தார்க்கு அறிய ஒண்ணாதவனாய் சோதி வடிவில் காட்சிதரும் அண்ணாமலையானை, சோணசைலனை சிவப்பிரகாச சுவாமிகள் பலவாறாகப் போற்றிப் புகழ்ந்து பாடியுள்ளார். அவற்றில் சோணசைல மாலை என்னும் நூலில் அமைந்த பாடல்களில் ஒரு சில அணிநலன் களை எடுத்துக்காட்டும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

111. செந்தமிழ் வல்ல சிவப்பிரகாசர்

அ. அறிவுநம்பி, புதுவை.

தமிழ் இலக்கியவுலகில் சமயத்தையும் மொழியையம் இணைத்து ஏராளமானோர் பல்விதப் படைப்புகளைத் தந்துள்ளனர். பக்தி இலக்கியம் தமிழகத்தில் முகிழ்த்த காலந்தொட்டு இவ்வகையில் தொண்டாற்றியவர் களின் பெயர்கள் இலக்கியவுலகில் பதிவாகியுள்ளன. அவ்வழியில் தமக்கென ஓரிடத்தைப் பெற்றவர் துறைமங்கலம் சிவப்பிரகாசர். ஏறத்தாழ முப்பத்து நான்கு நூல்களை உருவாக்கிய இவரால் சைவம் மெருகுபெற்றது என்பது உண்மை. பல்வேறு பாடுபொருட்களை மூலமாக்கிக் கொண்டவர் இவர். செய்திகளைப் பரிமாறச் செந்தமிழின் பல்வேறு இலக்கிய வடிவுகளைப் பயன்படுத்திய இவரின் அருமை பெருமைகள் பலப்பல. அவற்றுள் அவருடைய தமிழுணர்வு குறிக்கத் தக்கது. அதனைத் தொட்டுக்காட்ட முயலுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

சிற்றிலக்கியங்கள் பலவற்றை இவருடைய எழுதுகோல் செதுக்கி யுள்ளது. உலா, கலம்பகம், தூது, பிள்ளைத்தமிழ், மாலை எனப் பல்வகை இலக்கியங்களில் தம் கருத்தைத் தூவியுள்ளவர் சிவப்பிரகாசர். அவ்வகையில் அவரின் தமிழறிவு எண்ணியெண்ணி மகிழத்தக்கது. அவ்விலக்கியங்கள் தமிழ் உட்படப் பல செய்திகளை நல்குகின்றன.

அவருடைய வாக்குமூலம்

சிவப்பிரகாசருக்குக் களம் அமைத்துக் கொடுத்த பெருமை மயிலம் பொம்மபுர ஆதினத்துக்குரியது. ஆதினத் தலைவர் சிவஞான பாலையரைத் தாலாட்டு வடிவ இலக்கியத்தால் போற்ற வருகிறார் சிவப்பிரகார்சர். அந்நூலின் முதற்பாடலில் தான் தமிழைச் சாற்றுவதாக அவரே வாக்குமூலம் தருகின்றார்.

'அவஞானம் போக்கி அருள்ஞானம் ஆக்கும்
சிவஞான தேவன் திருமுன் - தவஞானத்
தாலாட்டு எனுந்தமிழைச் சாற்றுதற்கு நற்றுணையாம்
மாலாட்டு முகத்தான் வந்து.

இவ்வாறு, அந்தாதி, உலா போன்ற இலக்கியங்களைப் படைத்த சிவப்பிரகாசர் பற்றிப் பல நூல்கள் வந்துள்ளன. ஆதினப் புலவர்

ஆ. சிவலிங்கனார் 'சிவப்பிரகாசர் மாலை' என்ற நூலை நல்கி யுள்ளார். அதில்

''செந்தமிழ் அருளும் சிவப்பிரகாசச்
செம்மலே நல்லைவாழ் முகிலே''

என்றெழுதியுள்ளது பேருண்மையாகும். அதனைப் போலவே

''திருவுறும் தமிழ்சேர் சிவப்பிரகாசச்
செம்மலே''

என வரும் வரியும் சிவப்பிரகாசரின் தமிழ்ப் புலமையை எடுத்துரைக்கும். தானே மொழிந்து நிற்கும் சிவப்பிரகாசரின் வரியும், அவரை இனங் காட்டும் பிறரின் வரிகளும் அவரின் தமிழ்ப் புலமையை உணர்த்தும்.

பிற சான்றுகள்

நெஞ்சுவிடு தூது - துறைமங்கலத்தாரின் அரிய நூல். அந்நூலில் இறைய்டியார்களைப் பட்டியலிட வேண்டிய தேவை ஏற்படுகின்றது. இறையன்பர்களின் நிகழ்வுகளைத் தொட்டுக்காட்ட வேண்டிய சூழல் ஆசிரியருக்கு உண்டாகின்றது. சுந்தரரைப் பற்றிப் பேச வேண்டிய இடத்தில் அவருடைய மணச்செய்தி, பித்தனாய்ப் பாடியமை, வழக்கு, கண்பார்வை நிலை எனப் பல்வேறு செய்திகள் பேசப்படுதற்கான வாய்ப்புகள் உண்டு. ஆனால், படிப்பாருக்குச் சிவப்பிரகாசர் சுந்தரரை அறிமுகம் செய்யும்போது,

'தொண்டத்தொகை பெறுஉத் தொல்லுலகம் உய்ய
விறல்மிண்டத் தொழும்பர் வெகுண்டதூஉம்'

என இலக்கிய வாணராகச் சுட்டுவது குறிக்கத்தக்கது.

பிள்ளைத் தமிழை நெய்கின்றபொழுது 'ஆயும் தமிழ்க்குறுமுனிவர்க்கு' எனத் திருவிளையாடலை நினைவு கூர்வார் சிவப்பிரகாசர். அதனைப் போல மாணிக்கவாசகர் வரலாற்றில் பற்பல செய்திகள் இடம் பெற்றிருக்கவும்

'திருந்துதமிழ்க் கோவையொரு நானூறும் உரைத்த
திருவாதவூரனெனும் செழுமலர்க் கற்பகமே'

எனக் கோவை பாடிய கோவை அடையாளப்படுத்தலும் எண்ணி மகிழ்தற்குரியதாம்.

முன்னோர் மொழிபொருளைத் தம்முடைய நூலில் பெய்கின்றார் சிவப்பிரகாசர். திருக்குறளின் பற்பல செய்திகளைத் தம் சொல்லாடலில் வரைகுவார் அவர். அவ்வாறான சூழலில்,

'இரப்பாரை யில்லாயின் ஈர்ங்கண் மாஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று'

என்ற குறளைச் சேதாரமில்லாமல் அவ்வண்ணத்திலேயே தம் நூலில் இழையவிட்டிருப்பது கருதத்தக்கது.

இறையடியார்களின் தமிழ்ப்பணிகளைப் புகழும் சிவப்பிரகாசர், தமிழிலக்கியவாணர்களின் சொல்லாட்சிகளைப் பலபட எடுத்தியம்புவார். மணிவாகசர்,

'தன்பெருமைத் தானறியாத் தன்மையன்'

என்றெழுத, சிவப்பிரகாசர்,

'தன்பெருமை பொன்னறியாத தன்மைபோல்'

என எழுதக் காணலாம்.

ஆலவாயண்ணலின் மறுவரவே சிவப்பிரகாசர் எனக் கருத்துரைக் கிறது கீர்த்திமாலைத் திரட்டு. இறைவனின் அருளிச் செயல்கள் ஆயிரம் ஆயிரம் இருக்கவும், முச்சங்கத்தில் தமிழ்வளர்த்த சிவபெருமானின் மறுவடிவே சிவப்பிரகாசர் என நமசிவாய நாவலர் பாடுவது படித்தின் புறத்தக்கது. தமிழை முன்வைத்துப் பேசப்படுவதும் எண்ணத்தக்கது.

தமக்குத் தமிழ்க்கல்வி தந்த ஆசானின் புகழுக்குக் களங்கமூட்ட நினைத்தவரை எதிர்த்து 'நிரோட்டக யமக அந்தாதி' பாடியவர் சிவப்பிரகாசர் என்ற செய்தியும் அவரின் பெருமையைக் காட்டப் போதுமானது.

தமிழின் பேச்சு வழக்குச் சொல்லையும் தம் எழுத்தில் கொணர் பவனே தமிழ்ப் படைப்பாளி. அவ்வகையில் 'நைந்து' என்ற சொல்லைத் தம் பாட்டில் பாட வரும்போது,

'நிரந்தரம் நஞ்சு தொழுது ஏத்து
தாதர்க்கு நேயமொடு
வரம்தர நஞ்சு களத்து வைத்தான்
என்பர் மாதவரே'

என எழுதுவார். முதலடியில் 'நைந்து' என்பது நஞ்சாக மாற்றம் பெறும்.

பிடாரிக்கு ஓலை விடுக்கும்போது தம் தமிழ்ச் செருக்கை முன்வைத்து அறிமுகம் செய்து கொள்ளுவதும், சந்தமிகு தமிழ்ப் பாடல்களை வரைந்திருப்பதும், பிறவும் அவருக்கிருந்த செந்தமிழ் நலத்தைச் சுட்டுவன. அவ்வகையில் செந்தமிழ்வல்ல சிவப்பிரகாசரின் நூல்கள் போற்றத்தக்கன.

112. அந்தாதி காட்டும் சிவப்பிரகாசர் சிறப்பு

கு. கலைச்செல்வி, விழுப்புரம்.

சைவ சமய வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரிந்தவர்கள் அறுபத்து மூன்று நாயன்மார்கள். அவர்களுள் குறிப்பிடத்தகுந்தவர்கள் சைவ சமயக் குரவர்கள் என்று அழைக்கப்படும் நால்வர் அப்பர், சுந்தரர், ஞானசம்பந்தர், மாணிக்கவாசகர். இவர்களுக்குப் பிறகு பல சைவ மடங்கள் மூலம் சைவ சமயம் வளர்ச்சியடைந்து வருகின்றது. அவ்வகையில் 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிவப்பிரகாசரும் சைவ சமயம் வளருவதற்குக் காரணமாக இருந்தவர்.

தமிழ்மொழி வளர்வதற்கும் சைவ சமயம் தழைத்தோங்கு வதற்கும் பெரிதும் காரணமாக இருந்தன சைவ மடங்கள். அம்மடங் களில் வீர சைவத்தை வளர்க்கக் கூடிய ஸ்ரீ மயிலம் மடம் ஒன்று. சைவ சமயக் குரவர்களைப் பின்பற்றி இலக்கியத் தொண்டு புரிந்த சிவநெறிச் செல்வர்களுள் குறிப்பிடத் தகுந்தவர்கள் குமரகுருபரர், சிவஞான முனிவர், சிவப்பிரகாசர் ஆகியோர் ஆவர். இவர்கள் மக்களுக்கு நல்வழி காட்டும் நூல்களைக் குறிப்பாக நீதி நூல்களையும் சிற்றிலக்கியங் களையும் படைத்துத் தந்தனர். சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றான அந்தாதி வடிவம் என்றாலே காரைக்கால் அம்மையாரின் அற்புதத் திருவந்தாதியைக் குறிப்பிடுவர். அதே போன்று சிவப்பிரகாசரும் அந்தாதி வடிவத்தைக் கையாண்டுள்ளார். நிரோட்டக யமக அந்தாதி, பழமலை அந்தாதி ஆகிய இரண்டு நூல்களை இயற்றியுள்ளார்.

நிரோட்டக யமக அந்தாதி

திருநெல்வேலி வெள்ளியம்பலத் தம்பிரானிடம் இலக்கணங் கற்று, ஆசிரியரின் ஆணைக்கு இணங்க புலவர் ஒருவரோடு போட்டியிட்டு நிரோட்டக யமக அந்தாதி பாடி வெற்றிப்பெற்றார் என்பர். ப,ம போன்று இதழ்கள் இணையும் எழுத்துகளின்றிப் பாடுவது நிரோட்டகம். யமகம் என்ற சொல்லணி அமையப் பெற்றிருப்பது இதன் சிறப்பு. மேலும் வெற்றியையுடைய சமுத்திர ராசனைக் (கடலிடத்தே) நின்று கலக்கிய மாமரவடிவாகிய சூரபத்மனைக் கொன்ற அருணனை அன்ன செவ்வேற் படைச் செந்திலர்க்குச் சூரியனைப் போன்ற சிவந்த வேலாயுதத்தை யுடைய திருச்செந்தூரில் வாழும் முருகக் கடவுளுக்குத் தான் பாடுவதே

நிரோட்டக யமக அந்தாதி என்கிறார் ஆசிரியர். நூலின் முகப்பில் இக்கருத்து இடம்பெறக் காணலாம். நிரோட்டகமும் யமகமுமாகப் பாடப்படும் அந்தாதி. நிரோட்டகமாவது இதழ் முயற்சியால் பிறக்கும் மெய்யும், உயிரும் உயிர் மெய்யும் வாராமற் பாடப்படுவது. யமகமாவது அடிமுதலெழுத்தோடு, இரண்டெழுத்து முதற் பத்தெழுத்தீறாக ஓரடி போல நான்கடியும் பாடப்படுவது. இப்பிரபந்தத்தின் முதலிலே தனித்து நிற்கும் இக்காப்புச் செய்யுள் நிரோட்டகமுமன்று, யமகமுமன்று. அடி முதலெழுத்தொழிந்து இரண்டெழுத்து முதற் பன்னிரண்டெழுத்தீறாக ஓரடி போல நான்கடியும் பாடப்படுவது. (திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதி, ப.10)

இவ்வந்தாதி நூல் அகப்பொருளைப் பற்றிக் கூறுகிறது. 'முருகக் கடவுள் பவனி வருதல் கண்டு மால் கொண்டு வஸ்திரமும் வளையலு மிழந்து நின்ற மகளிர் சொல்லியது,

''தரிக்கனந் தங்கலை நீர்சடைக் கைக்கனற் சங்கரனந்
தரிக்கனந் தங்கலை நீதிகள் சாற்றரன் றந்தநற்கந்
தரிக்கனந் தங்கலை நீர்ச்செய்க்க ணாஞ்செந்திலார் தளையா
தரிக்கனந் தங்கலை நீத்திழள் தேங்கரச் சங்கங்களே

(நிரோட்டக யமக அந்தாதி, பாடல் 16)

மேற்கூறிய பாடல் ப, ம போன்ற இதழ்கள் ஒட்டா எழுத்துகள் வராமல் இயற்றப்பட்டுள்ளது. ஆனால் அதைப் பிரித்து பொருள் கொள்ளும்போது ப, ம ஆகிய எழுத்துக்கள் வெளிப்படும். இவ்வாறு பிரித்துப் பொருள் காண்பது பிற்கால வழக்காம்.

''தரிக்க நந்து அம்கலை நீள்சடைக்
கைக்கனல் சங்கரன்அந்
தரிக்கு அனந்தம் கலை நீதிகள் சாற்று
அரன் தந்த நற்கந்
தர் இக்கு அனம் தங்கு அலைநீர்ச்
செய்க்கண் ஆம் செந்திலார் தளைஆ
தரிக்க நந்தம் கலை நீத்து
இழந்தேம் கரச் சங்கங்களே''

காரைக்கால் அம்மையார் இயற்றிய அற்புதத் திருவந்தாதி போன்று ஒரு பாடலின் இறுதிச்சீர் (அந்தம்) அடுத்தப் பாடலின் முதற்சீர் (ஆதி) வருவது அந்தாதியாக அமைந்தது. ஆனால் இவர் பாடிய பாடலின் சீரும் அவ்வாறே அமைந்திருந்தாலும் ப, ம என்ற இதழ்கள் ஒட்டாச் சீர்கள் வந்திருப்பது இவர் அந்தாதிக்குச் சிறப்பு என்பர். இதனை நிரோட்டக யமக அந்தாதி, நிரோட்டகம் என்ற உத்தியையும், யமகம்

என்ற சொல்லணியையும் சேர்த்து அந்தாதி என்ற வகையில் அடக்கிப் பாடியுள்ளார். தமிழ்க்கடவுள் முருகப் பெருமான் மீது பாடப் பட்டுள்ள இப்பாடலை முறையான இலக்கணத்துடன் பாடியிருப்பது மேலும் சிறப்பு.

எந்த ஒரு இலக்கியத்தையும் ஒரு வடிவத்துக்குள் அடக்கிப் பாடும்போது அதன் சிறப்பு கூடுகிறது. அதனால்தான் இன்று வரை அழியாமல் பாதுகாக்கப்படுகிறது. இயற்கையாக அமையக் கூடிய இலக்கியங்களில் உணர்வுகளும் அதற்கான சொல்லாட்சியும் பெறும். சிற்றிலக்கியங்களின் வகைகள் ஒவ்வொன்றும் ஒரு சிறப்பிற்குரியன. அவற்றில் ஒன்று அந்தாதி அமைப்பு. எனவே சிவப்பிரகாசரின் இரு அந்தாதிகளும் குறிப்பிடத்தனவாக அமைகின்றன.

சைவ சமயத்தையும், தமிழையும் வளர்க்கும் குறிக்கோளில் பல்வேறு வடிவங்களில் சொல்லப்படும் கருத்துகள் நூலில் நிறைந்துள்ளன.

....
....
....
தனக்கடங் காணினச் சாரிலை யன்ன றரணியிலே

(பாடல் - 14)

என முதற்பாடலின் ஈற்றடி வர,

"தரணி யனைய நிறத்தன்ன லாருரந் தன்றளந்த
....
....
.... (பாடல் - 15)

என அடுத்தப் பாடலின் ஆதி அமைகின்றது.

பழமலை அந்தாதி

சிவப்பிரகாசர் இயற்றிய மற்றொரு அந்தாதி நூல் பழமலை அந்தாதி. இந்நூல் விருத்தாசலம் என்னும் திருத்தலத்தில் இருக்கும் இறைவன் இறைவியைப் பற்றிப் பாடப்பட்டது ஆகும். இந்நூல் சங்க இலக்கிய அகப்பொருள் மரபில் எழுதப்பட்டுள்ளது. தலைவன், தலைவி, தோழி, பாங்கி, அறத்தொடு நிற்றல், அலர்தூற்றுதல் ஆகிய சொல்லாட்சி களும், கருத்துகளும் அகப்பொருள் மரபைச் சுட்டுகின்றன.

நிரோட்டக யமக அந்தாதியில் முருகனைப் பற்றியும் பழமலை அந்தாதியில் விருத்தாசல இறைவன் இறைவியைப் பற்றியும் அகப்பொருள் மரபில் எழுதப்பட்டிருப்பது தனிச்சிறப்பு. சிற்றிலக்கிய

வகைகளில் ஒன்றான அந்தாதி வடிவத்தில் அகப்பொருள் மரபில் எழுதப்பட்டிருப்பது தனிச்சிறப்பு. அந்தாதி வடிவத்தில் அகப்பொருள் உத்தியோடு கூறியிருப்பது சிவப்பிரகாசரின் தனிச்சிறப்பு என்றே கூறலாம். இலக்கியங்கள் அழியாமல் காப்பது வடிவமும், உத்தியும் ஆகும். அவ்வகையில் சிவப்பிரகாசர் இறை நெறியையும் தமிழையும் மரபு மாறாமல் சொல்லியிருப்பது இந்நூல்களின் கூடுதல் சிறப்பு.

இறைவன் பல்வேறு வடிவுகளைக் கொண்டவன். இலக்கியமும் பல்விதமான வடிவுகளைக் கொண்டது. நூலை எழுதப்புகும் படைப்பாளன் இவ்விரண்டையும் ஒருசேரப் பயன்படுத்துதல் பல வழிகளில் நன்மையைத் தரும். தமிழ்கூறும் நல்லுலகிற்குரிய நல்ல கொடையென அந்நூல்களைக் கொள்வர். அவ்வகையில் அந்தாதி வடிவைப் பயன் படுத்தியது சிவப்பிரகாசரின் பணி பெருமைக்குரியதாகும். நிரோட்டக யமக அந்தாதி கடுமையான முயற்சியினால் விளைவதாதலின் அப்பணி போற்றற்குரியதாக கொள்ளப்பெறும். இறைவன் இறைவியின் எழில் தோற்றங்கள், செயற்பாடுகள் ஆகியன நூற்களில் பொதிந்து இன்பம் தருகின்றன. அவ்வகையில் கருதத்தக்க இலக்கியம் படைத்த சிவப்பிரகாசர் ஏத்தப் பெறுகின்றார்.

113. நன்னெறியில் கல்வி அறம்

கே. பழனிவேலு, கடலூர்.

கற்பனைக் களஞ்சியம் துறைமங்கலம் சிவப்பிரகாசர் அவர்கள் வாழ்ந்த காலத்திற்கு முன்பின்னாகச் சிவப்பிரகாசப் பண்டிதர், சிவப்பிரகாசத் தம்பிரான், சிவப்பிரகாசம், துறையூர் சிவப்பிரகாசர், மதுரை சிவப்பிரகாசர், சித்தர் சிவப்பிரகாசர் எனப் பலர் வாழ்ந்து தமிழிலக்கிய வரலாற்றில் இடம்பெற்றுள்ளனர். எனினும் துறைமங்கலம் சிவப்பிரகாசரின் வரவும் பணியும் வீரசைவ மரபிற்குப் பெருந் துணையாக இருந்துள்ளது. இதனைப் ''பசவண்ணர் (1125-1165) கன்னடநாட்டில் பிராமண குலத்தில் பிறந்து இலிங்காயத சமயப் பிரிவைப் பரவச் செய்தார். இரண்டு நூற்றாண்டுகள் கழித்து வீரசைவ மதம் என்று கூறுகின்ற இந்த மதம் தமிழ்நாட்டில் பரவத்தொடங்கிற்று. பிற்காலத்தில் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் ஒருவர் செய்த நூல்களாலேயே இந்தச் சமயம் இன்று தமிழ் இலக்கிய உலகில் நிலவுகிறது. வீரசைவ மதத்தைப் பின்பற்றுவோர் பலர் இருப்பினும் அவர்களுக்கு வேறு சிறப்பான நூல்கள் இல்லை (மு. அருணாசலம், 254,255) எனக் கூறுவதால் அறியலாம். வீரசைவம் சார்ந்து முப்பதிற்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்துள்ள சிவப்பிரகாசர் சில அறநூல்களையும் படைத்துள்ளார். அவற்றில் சிறப்புடையது நன்னெறியாகும். இந்நூலைச் சிவப்பிரகாசர் பொம்மையாபுர ஆதீனத்திற்கு அருகிலுள்ள கடற்கரை மணலில் எழுதிவிட்டு வர இவரின் தம்பியார் கருணைப் பிரகாசர் சுவடியில் எழுதிக் கொண்டு வந்தார் எனக் கூறுவர். தமிழில் அற இலக்கிய மரபு சமயம் சார்ந்து இயங்குவதாகவே உள்ளது. இதனால் சமண, பௌத்த, வைதீக சமயங்கள் சார்ந்த பல அற இலக்கியங்கள் தமிழில் தோன்றியுள்ளன.

பொதுவாகச் சைவ மடங்கள், ஆதீனங்கள் மூலமாகப் பேணப் பட்ட இலக்கிய வடிவங்கள், சிற்றிலக்கிய வடிவங்கள், தலபுராணங்கள், தனிப்பாடல்களாகும். சமயவாதிகள் நீதி, அறக்கருத்துக்களைச் சமயக் கருத்துகளோடு இணைத்தே எழுதிச் செல்வர். அதே நேரத்தில் சமயத் துடன் நேரடியாக இணைக்காமல் பொதுநிலையில் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட அறக்கருத்துகளை எழுதுகின்ற மரபும் தமிழிலக்கியத்தில் தொடர்ச்சியாக இருந்து வருவதைக் காணமுடிகிறது. 19-ஆம் நூற்றாண்டில்

மாயூரம் ச. வேதநாயகம் பிள்ளை கூட சில நீதி நூல்களை எழுதி யுள்ளார். இன்றும் பல நீதி நூல்கள் செய்யுள் வடிவில் எழுதப்பட்டு வருவதைக் காணமுடிகிறது.

வீரசைவ மரபில் முனைப்புடன் இலக்கியங்களைப் படைத்த சிவப்பிரகாசர் சமயப் பிரச்சாரமற்று மாணவர்களுக்குச் சமூக விழுமியங் களை விளக்கும் வகையில் நாற்பது பாடல்கள் கொண்ட நன்னெறியை எழுதியுள்ளார். நன்னெறி அறம், ஒழுக்கம், நீதி சார்ந்த கருத்துகளை ஒரு பாடலுக்கு ஒன்று என வெளிப்படுத்துகின்றது. இப்பாடல்கள் பெரும்பாலும் ஒரு பெண்ணை விளித்து எடுத்துக்காட்டுடன் அறக்கருத்தை முன்வைக்கின்றன.

மடம் சார்ந்த கல்வி, வேறு வேறு ஆசிரியரிடம் பாடல் கேட்டல், ஆசிரியர் மாணவர் உறவு, நூல் இயற்றல், அரங்கேற்றல், வாதிடுதல், புலமைக் காழ்ப்பு என அக்காலத்திய கல்வி முறைகளைச் சிவப்பிரகாசருடைய வரலாறு வெளிப்படுத்துகின்றது. கல்வி, கற்றோர், கல்லாதோர் குறித்து சிவப்பிரதாசர் புலப்படுத்தும் கருத்துகளை ஆராய்வதன் மூலம் கல்வி குறித்த அறக்கருத்துகள் தமிழ்ச்சமூகத்தில் இயங்கிய முறையை அறியமுடியும் என்பதால் நன்னெறி புலப்படுத்தும் கல்வி அறம் பற்றி இக்கட்டுரை ஆராய முற்படுகின்றது.

தமிழகத்தில் பரவலாக்கப்பட்ட, எளிதாக அனைவருக்கும் கிட்டக் கூடியதான ஒரு கல்வி முறை இல்லாத சூழலில் கற்றல் உயர்வானது கல்லாமை தாழ்வானது எனும் கருத்தைத் தமிழிலக்கியங்கள் காலந் தோறும் வலிமையாகத் திரும்பத் திரும்பக் கூறி வந்துள்ளன. இக்கருத்து உருவாக்கத்திற்குச் சமண பௌத்த மதங்கள் பெரும் பங்காற்றியுள்ளன. திருக்குறள் மதக் கருத்துகளை உள்வாங்கிக் கொண்டு பொதுநிலையில் கல்வியின் உயர்வையும் கல்லாமையின் தாழ்வையும் பேசுகின்றது. திருக்குறளை அடியொற்றியே பிற நீதி, அற நூல்கள் கல்வியின் உயர்வையும் கல்லாமையின் தாழ்வையும் பேசுகின்றன. கற்றவர் X கல்லாதவர் என்கின்ற எதிர்நிலை மேல், கீழ் என்ற படிநிலையைக் கட்டமைக்கிறது. ''அதிகாரத்திற்கான அறிவு எண் - எழுத்தோடு உறவு கொண்டிருந்தது. நவீன அர்த்தத்தில் கல்வியறிவற்ற அன்றைய சமுதாயத்தில் எழுத்து, அதிகாரத்தின் அடையாளமாக இருந்தது. எழுதுதல் என்பது அதிகாரத்தின் குறியீடு'' (ராஜ் கௌதமன், 66) என்று கூறுவர். எழுத்தை அறிந்தவர்களை அதிகாரமுடையவர்களாகவும் எழுத்தை அறியாதவர்களை அடங்கி நடக்க வேண்டியவர்களாகவும் வடிவமைக்கும் முயற்சிகள் தொடர்ந்து நிகழ்ந்துகொண்டேயிருந்தன. தந்தை, பெரியவர்களுக்கு உதவி செய்து, அதன்மூலம் கிடைக்கின்ற தொழில் செய்யும் அறிவு எழுத்துகளின் மேலாதிக்கத்தால் தாழ்வாகக்

கருதப்பட்டது. இந்த நிலை சங்ககாலம் தொடங்கி இன்றுவரை நீண்டு கொண்டிருக்கிறது. செல்வமும் பரம்பரை உரிமையும் அதிகாரம் செலுத்தும்போது, கல்வியே எல்லாவற்றையும் விட சிறப்பானது என்ற கருத்து திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டு ஏற்றுக் கொள்ளும்படி செய்யப்பட்டுள்ளது.

ஆங்கிலேயரின் கல்வி முறையே முறைப்படுத்தப்பட்ட பாடத்திட்டத்தை முன் வைத்து கல்வியைக் கற்பித்தது. தமிழ் மரபுவழிப்பட்ட கல்வியில் மாணவர்கள் எழுத்தை அறியாமல் ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், நல்வழி, சதகம், நிகண்டு, நன்னூல் போன்றவற்றைக் கிளிப்பிள்ளைகளைப் போல மனப்பாடம் செய்வார்கள். பொருளறியாத இப்படிப்பால் பெருமிதம் கொண்டு திரிபவர்களை நாலடியார் மூன்று பாடல்களில் பதிவு செய்துள்ளது. ஆங்கிலேயக் கல்வி பரவலாக்கப்படும் வரை இந்த முறையே இருந்தது. சிவப்பிரகாசரின் நன்னெறியும் 19-ஆம் நூற்றாண்டில் மனப்பாட நூல்களில் ஒன்றாக இருந்ததை மயிலை சீனி. வேங்கடசாமி (சீனி. வேங்கடசாமி, 64) சுட்டிக் காட்டுகின்றார். மனப்பாடம் செய்யப் பட்ட நூல்களின் பொருளை வேறு புலவர்களிடம் மாணவர்கள் அறிந்து கொள்வர். அவ்வாறு பாடம் கேட்டுப் பொருளறியாமல் வெறும் பாடலைச் சொல்லி செருக்குடன் திரிபவர்களும் உண்டு. இவற்றை 'எழுத்தறியார் கல்விப் பெருக்கமனைத்தும் எழுத்தறிவார்க் காணினிலையாம் (பா.21)' என்ற பாடலில் சிவப்பிரகாசர் பதிவு செய்துள்ளார். மேலும் ''கல்லாத அறிவுடைய கயவரிடத்தில் கற்றுணர்ந்த நல்லார் தமது பெருமையை இழப்பர் (பா.25)'' என்று கூறுகிறார். 1. எழுத்தறிந்தவர் கல்வி 2. எழுத்தறியார் கல்வி என்ற இருவகைக் கல்வியில் பொருளறியாத கல்வியை நிராகரிப்பதுடன் தமிழகக் கல்வி நிலையைத் தெளிவாகப் பதிவு செய்துள்ளார்.

பழைய தமிழிலக்கியங்கள் சுட்டும் கருத்துகளின் இடையீடற்ற தொடர்ச்சியாகவே கல்வி, கற்றவர் குறித்த சிவப்பிரகாசரின் கருத்துகள் பதிவாகியுள்ளன. உயர்ந்தோர், தலையாயவர், மேலோர், பெரியோர், நல்லோர் போன்ற உயர்வைத் தரக்கூடிய சொற்களும் கீழ், கீழ்மையர், புல்லியர், அல்லோர், கயவர் போன்ற தாழ்வைச் சுட்டும் சொற்களும் சிவப்பிரகாசரால் ஆளப்பட்டுள்ளன. இந்த முரண்களுக்கு இடையிலேயே சிவப்பிரகாசர் கல்விஅறம் குறித்த கருத்துகளைச் சுட்டிச் செல்கிறார். மேலோர்களாகிய இவர்கள் இத்தகைய குணநலன்களைக் கொண்டவராக இருப்பர் எனக் கூறி, அதற்கு நேரிடையான குண முடையவர்களின் இழிவு புலப்படும்படியாகச் சுட்டுகிறார். பொதுவாக உயர்வு தாழ்வுகள் தமிழ்ச் சமூகத்தில் சாதி, பிறப்பால் வருவனவாகவே உள்ளன. எனினும் சிவப்பிரகாசர் பொதுநிலையில் மக்கள் அனைவரும்

கடைபிடித்து ஒழுகவேண்டிய சமூக விழுமியங்களைச் சுட்டிச் செல்வதால் பிறப்பு, சாதி சார்ந்த படிநிலைகளை (தற்காலிகமாகப்) புறக்கணித்து கல்வி, அதன் மூலம் கிடைக்கும் அறிவு, ஒழுக்க குணம் போன்ற வற்றையே படிநிலையில் அமைத்து கல்லாத, கற்றும் சமூகம் ஒப்பாத, அடக்கமான குணமற்றவர்களைக் கீழ்மையோராகச் சித்திரிக்கின்றார். உயர்ந்த மேன்மக்களுடன் கற்றவர்களை இணைப்பதைச் (மேன்மக்கள் கற்ற அறிவுடையவரையே விரும்புவர் (பா.35)) சில இடங்களில் காண முடிகிறது. பிறப்பினால் உயர் ... நிர்ணயிக்கப்படும் சமூகத்தில் பிறப்பை விடக் கல் ... எனும் கருத்தை ''ஆக்குமறிவால் அல்லாது பிற ... க் கொள்கின்ற உயர்வையும் இழிவையும் விரும்பாதவர்கள் (பா.22)'' என்று கூறுகின்றார். பிறப்பைப் போலவே தோற்றம் கூட முதன்மையானதன்று, ''உடலின் சிறுமையைக் கண்டு சிறந்த புலவர்கள் கல்விக் கடலின் பெருமையைக் கடக்கமாட்டார்கள் (பா.26)'' என்று கூறி கல்வியை மட்டும் ஒருவனின் உயர்வு / தாழ்வை நிர்ணயிக்கும் காரணியாக்கு கின்றார். பிறப்பு, சாதி போன்ற காரணிகளை இரண்டாம் பட்சமான தாகக் கருதுகின்றார்.

''கற்றறிந்தவர்கள் கைமாறு எதிர்பார்க்காமல் தன்மெய்யை வருத்திக் கொண்டு தம்மால் இயன்ற உதவியைச் செய்வார்கள் (பா. 27), மூத்தறிஞர்கள் கோபம் கொண்டிருந்தாலும் கொடுப்பார்கள் (பா. 28), பெரிய அறிவை உடையவர்கள் பிறரைத் தாக்கும் துயரங்களைத் தாங்கி அவர்களைக் காக்க விரைந்து செல்வர் (பா. 31), அறிவுடையவர்கள் பழிக்கு அஞ்சுவார்கள் (பா. 34)'' எனக் கற்றவர்கள் கொண்டிருக்கின்ற, கொண்டிருக்க வேண்டிய பண்புகளைக் கூறும்போது இதற்கு முரண்பட்ட கல்லாதவரின் பண்புகளையும் ''கயவர்கள் மகிழ்வுடன் இருந்தாலும் கொடுக்க மாட்டார்கள் (பா. 28), அறிவைப் பெறாதவர்கள் தம்பால் வருகின்ற பழிக்கு அஞ்சமாட்டார்கள் (பா. 34)'' எனச் சுட்டிச் செல்கின்றார். எனினும், பெரும்பாலும் கற்றவரின் மேன்மையைச் சுட்டி கல்லாதவரின் இழிவை / தாழ்வை வாசகர்களே உணருமாறு செய்கிறார்.

கல்லாத மன்னன் கூட கற்றவனுக்கு ஒப்பாக மாட்டான் என்பதை

''பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னு மறிஞரைத்தா மற்றொவ்வார்'' (பா. 40.)

என்ற பாடலால் உணர்த்துகின்றார். ஆட்சியதிகாரம் கொண்ட அரசனைவிட கற்றவனே சிறந்தவன் எனும் கருத்தை அறிவை முதன்மைபடுத்தும் மரபுவழிப்பட்ட சிந்தனையாகவே கொள்ள வேண்டும்.

எனினும் அரசனை விட உயர்ந்தவனான கற்றவன் கற்றோர் அறத்தைக் காப்பவனாக, அடக்கமுடையவனாக இருக்க வேண்டும் ''கல்வியால் யான் கடலை ஒத்தவன் என்னும் ஆண் சிங்கத்தைப் போன்ற செருக்கினால் ஆழ்ந்து விடாதீர்; ஒலிக்கின்ற கடல் குருமுனியின் கையால் முகர்ந்து உண்ணப்படும் (பா. 7)'' என்ற பாடலின் கருத்து கற்றவர்கள் இகபர இன்பங்களுக்கு அடிமையாகாமல் மும்மலங்களை அடக்கி மேன்மைபெற்று வாழவேண்டும் என்பதை அறிவுறுத்துகின்றது.

சிவப்பிரகாசர் சுட்டும் கல்வி அறம் நன்மை / தீமை; உயர்வு / தாழ்வு என்ற முரண்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் அமைந் திருப்பதை அறியமுடிகிறது. தமிழகச் சிந்தனை மரபில் நிலைபடுத்தப் பட்ட, கல்வி பற்றிய மதிப்பீடுகளை மறு எழுதுதலுக்கு உட்படுத்திய நூலாகச் சிவப்பிரகாசரின் நன்னெறியைக் காணமுடிகிறது.

114. பிரபுலிங்கலீலை சுட்டும் வீடுபேறு

அரங்க முருகையன், புதுவை.

பிரபுலிங்க லீலை விளக்கம்

பேரிரக்கப் பேருணர்வினை உடைய சிவபெருமானின் அருவுருவான சதாசிவத்தை உணர்த்தி, அவ்விறையின் திருவிளையாடல்களைப் பிரபுவாகிய அல்லம தேவரின் வரலாற்றின் வழி விளக்குவதே இந்நூலாகும். பிரபுலிங்க லீலை என்பது மேலான இறைவனது திருவிளையாடல் எனக் கொள்வது பொருத்தமானது.

கதைச்சுருக்கம்

சிவனும் பார்வதியும் திருக்கைலாய மலையில் வீற்றிருந்தபோது அங்கே நாராயணர், பிரமர், இந்திரர் முதலான தேவர்கள் வீற்றிருந்தனர். அப்போது உமாதேவி இறைவனைப் பார்த்து இவர்கள் அனைவரும் வீடுபேறு அடைவரோ? எனக் கேட்டார். அதற்கு இறைவனாகிய சிவன் இவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் ஒரு தொழிலில் ஈடுபட்டு இருப்பதால் வீடுபேறு அடையமுடியாது என்றார். அதற்கு உமாதேவியார் இறைவனைப் பார்த்து வீடுபேறு அடைவதற்கு வழி யாது எனக் கேட்க, அதற்கு இறைவன், மண்ணுலகில் தோன்றி மெய்யறிவு பெற்று வருபவரே வீடுபேற்றையும் அதற்கான அறிவையும் பெறமுடியும் என உரைக்கிறார். இதைக்கேட்ட பார்வதி அத்தகைய மக்கட் பிறவி பெற்றோர்க்கு ஞானாசிரியன் யார் என வினவ யானே அல்லமன் எனும் பெயரோடு வருவேன் என உரைக்கின்றார். மேலும் அப்போது உன்னால் கூட என்னைக் காண முடியாது என்று கூறவும் பார்வதி சினம் கொண்டு மாயையை அனுப்பி உன்னைக் காண்பேன் என சபதமெடுத்து மண்ணுலகிற்கு அனுப்புகிறாள்.

இவ்வாறு அல்லம தேவருக்கும் மாயைக்குமான போராட்டம் பலவழிகளில் நடந்தேறி மாயை அல்லம தேவரை அடையமுடியாததால் பார்வதி தன் தவறை உணர்ந்து உண்மையை உணர்ந்தவளாய்ப் பணிகிறாள். அல்லமதேவர் உலகில் யாவர்க்கும் வீடுபேறு அளிக்கும் செயலை மேற்கொள்கிறார். இதுவே இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன.

வீடுபேறு விளக்கம்

வீடுபேறு எது என்பதைத் திருக்களிற்றுப் படியார்

"தன்னைப் பெறுவதன்மேல் பேறுஇல்லை; தான்என்றும்
தன்னைத்தான் பெற்றவன்தான் ஆர்என்னில்-தன்னாலே
எல்லாம்தன் னுள்கொண்டு கொண்டதனைக் கொள்ளாதே
எல்லாமாய் நிற்கும் இவன்." (திருக்களிற்றுப்படியார் - 45)

எனக் கூறுகிறது.

பெறுதற்குரிய பேறு அருளின் துணைக்கொண்டு தன்னை உறுதியாகப் பெறுகின்ற பேறு ஒன்றே ஆகும். பாசத் தொடர்பால் 'நான்' எனும் உணர்வைப் பெறுகின்ற நாம், நம்மை உயர்த்தியவன் நம்மைப் பெற்றவன் தந்தையாகிய சிவபெருமான் என்பதை உணர்தல் ஆகும். பாசத்தை ஒழித்து 'எல்லாவற்றையும்' உணர்ந்தோம் என்னும் உணர்வையும் ஒழித்து, நமக்கென ஓர் உணர்வு இன்றிச் சிவ உணர்வுடனேயே வாழவேண்டும். அப்போது, எல்லாமாய் நிற்கும் சிவபெருமான், நம் உணர்வில் ஒட்டி நிற்பன். அதுவே வீடுபேற்றின் பெருநிலை ஆகும் என விளக்கம் கொள்ளலாம்.

வீடுபேற்றிற்கான வழிகள்

வீடுபேற்றிற்கான வழிகளை உண்மை விளக்கம்

"அப்பா, இம்முத்திக்கு அழியாத காரணம் தான்
செப்பாய் அருளாலே; செப்பக்கேள் - ஒப்புஇல்
குருலிங்க வேடம் எனக்கூறில் - இவைகொண்டார்
கரு ஒன்றிநில்லார்கள் காண்" (பா. 51)

குருவழிபாடு, இலிங்க வழிபாடு, சங்கம வழிபாடு ஆகிய இம் மூன்று திருவருள் நிலைகளே வீடுபேற்றுக்கு உரிய வாயில்கள் ஆகும். இவ்விடங்களில் இறைவனை இடைவிடாது நினைந்து, தொழுது இறைஞ்சுபவர்கள் மீண்டும் பிறக்கமாட்டார்கள் எனக் கூறுகிறது.

மேற்கண்ட விளக்கங்களின் வழி வீடுபேறு என்பது

1. 'நான்' எனும் உணர்வை அழித்தல்.
2. பாசத்தை ஒழித்து எல்லாவற்றிற்கும் இறையே காரணம் என உணர்தல்
3. குரு வழிபாடு, இலிங்க வழிபாடு, சங்கம வழிபாடு போன்றவற்றில் நாட்டம் கொள்ளல்

என்கின்ற மூன்று நிலைகளை வீடுபேற்றிற்கான அடிப்படைக் காரணிகளாக அறிய முடிகின்றது.

பிரபுலிங்க லீலை காட்டும் வீடுபேறு

மனிதம் தன் வாழ்நாளில் தன்னலமின்றி செய்யும் இறைவழி பாட்டினால் எல்லாவகையான பேறும் எய்தலாம் என கோலாகல கதியில் சிவப்பிரகாச சுவாமிகள் விளக்குகின்றார்.

''சித்தியும் ஆயுளுஞ் சிறப்புங் காமிய
புத்தியர் அடைவரப் புத்தி நீங்கினோர்
முத்தியை அடைவராம் முதல்வன் பூசையால்
சத்தியம் சத்தியம் தளர் மருங்குலாய்''

(கோலாகலகதி, ப. 135)

சித்தியாகிய அணிமா, மகிமா, லகிமா, கரிமா முதலிய பேறு களையும் இம்மைச் செல்வம் மக்கட்பேறு முதலியவற்றில் அவாவுடையோர் அவ்வாசையில் இருந்து நீங்கி வாழத் தலைப்படும்போது அவர்கள் இறைவழிபாட்டின் மூலமாக முக்தியைப் பெற முடியும் எனக் கூறுகிறார்.

கொக்கி தேவர் கதியில் அல்லம தேவர் கூற்றாக வரும்

''சிரித்து வினைநல் லனசெய்து
சிதையா இன்பம் பெறுவானேல்
வருத்தல் உறுமும் மலங்களினோர்
மலமாகிய ஆணவத்தாலும்
பொருத்தமுறு பேரின்ப நாம்'' (ப.212)

எனும் பாடலில் பிறருக்கு மனமகிழ்வுடன் நல்லன செய்து அதன்மூலம் கிடைக்கின்ற அழியாத இன்பத்தால் வீடுபேறை அடைய முடியாது காரணம் ஆணவமலப் பற்றை நீக்காமல் முக்தி அடைய முடியாது எனக் கூறுகிறார் வேறு ஒரு பாடலில்.

''பொறியிற் புறத்து மனஞ்செல்லிற் புலனே தோன்றி இடுமகத்தில்
செறியக் கரணம் பரானந்தசிவமே தோன்றும் சிவம்தோன்ற
அறிவிற் பரந்த விடயமயம் ஆகும் உலகத் தோன்றாமல்
பிறவித்துயரக் கடல்கடந்து பேரின்பஞ்சார் குவரென்று''

(ப.எண்:214)

பொறியாகிய மெய், வாய், கண், மூக்கு, காது எனும் ஐம்பொறிக்குக் கிடைக்கின்ற அனுபவத்தையும், புலன்கள் வாயிலாகக் கிடைக்கின்ற சுவை, ஒளி, ஊறு, ஓசை நாற்றம் என்பன உள்ளத்தில் பொருந்தி இருக்கும்போது உள்ளத்தில் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என ஐம்பொறி இன்பத்தின் வழியாகவே வெளிப்படும். மேற்கண்ட இந்நிலைகள் உள்ளத்திலே அடங்கி பரமானந்த சிவத்தினுடைய

எண்ணமே தோன்ற மனம் பழக்கப்படும்போது பிறவித்துயரின் கடல் கடந்த பேரின்ப நிலை கிட்டும் என்கிறார்.

இட்டலிங்க கதி

வசவண்ணருக்கு இட்டலிங்க வழிபாட்டின் சிறப்பை எடுத்துகூறும் அல்லமர் கூற்றாக வரும் பாடலில் பசுகொண்டுள்ள நோயானது நீங்கப் பெற ஆணவம் கெட அவ்வுள்ளத்துள் சிவபெருமான் குடிகொள்வான் என்பதை

''ஆவுறு பிணிகெட ஆவின் பால்காரந்
தாவினை ஊட்டல்போல் ஆணவங்கெட
ஆவியுள் அமலனை அங்கை தந்துபின்
ஆவியுள் அமைவுற ஆக்கும் ஆரியன்'' (ப. 278)

எனக் கூறுகிறார்.

மேலும் மனத்தை அடக்குபவன் பிறவியைக் கடக்கலாம் என்பதை

''கெடுக்க வல்லதும் கெட்டவர் தங்களை
எடுக்க வல்லதும் இம்மனம் என்றதை
அடக்க வல்லவன் ஐய பவக்கடல்
கடக்க வல்லவன் ஆவன் கடிதரோ (ப. 299)

எனக் கூறுமிடத்து எடுக்கவல்லதும் கொடுக்கவல்லதுமான நிலைகளுக்கு மனமே காரணமாக இருப்பதனால் மனத்தை அடக்குபவனே பிறவிக் கடலை நீந்தி வீடுபேற்றை அடைய முடியும் என்கிறார்.

வீடுபேற்றை விரும்புவோன் உடலை வெறுக்க வேண்டல்

அழிகின்ற இவ்வுடம்பானது வாழும் காலத்தில் பெறுகின்ற பற்றினை உள்ளடக்கி மலவடிவினைப் பெற்று விளங்குவதால் தூய்மை யற்ற இவ்உடம்பினை வெறுக்கும்போது ஆணவமலப் பற்று அழியும் என்பதால் உடலை வெறுப்பதன்வழி வீடுபேற்றை அடைய முடியும். இதை,

''வெருவுறப்படும் பிறவியை ஒழித்து மெய்வீடு
மருவுதற்குளம் வைத்தவன் இம்மல வடிவைத்
தெருவினிற்புனி தம்படா ஒன்றனைத் திண்டி
அருவருப்பவன் போலரு வருத்தத்தை அகற்றும்'' (ப. 314)

எனச் சுட்டுகிறார். மேலும் யான், எனது எனும் ஆணவமலப் பற்று நீங்குதலும், அகந்தை அழித்தலும், இருவினை நீக்கலும் மனத்தை யடக்கலும் வீடுபேற்றிற்கான வழிமுறைகள் என்பதை மனோலய கதியில் சிவப்பிரகாச சுவாமிகள் விளக்குகின்றார். இதை,

''யானென தென்ப திருந்திடுகாறும்
ஞானம் உறானது நண்ணிலன் ஆகில்
தானிலையாத சகந்திகழ் கிற்கும்
தினம் இலாத சிவந்திகழாதே'' (ப. 367)

எனவும்

கறங்கெறு மாறுழல்கின்ற கருத்துப்
பிறந்திறவாத பெரும் பிரமத்தில்
இறந்திடில் யானென தென்னும் அகந்தை
மறைந்திடும் அன்றி மறைந்திடுமோதான் (ப. 367)

எனவும் கூறுகிறார்.

''மனத்தை அடக்க'' மனந்துணை ஆகும்
வினத்துணை இன்றது பெற்றவன் ஆயின் (ப. 368)

எனவும்

''வாரணம் ஆகும் மனத்தை அடக்கிற்
காரண மாயை களைந்தொழி யாத
பூரண மாகிய போதம் அடைந்திட்
டாரணம் ஓதும் அரும்பொருள் ஆவான் (ப். 368)

மனத்தை அடக்கும் ஒருவன் யானையைப் போன்ற பலத்தைப் பெறுகிறான். பிறப்பிற்கு ஏதுவாகிய மாயையை நீக்குவதால் மனம் தூய்மையடைந்து அம்மனத்தில் சிவம் குடிகொள்ளும் என்று வீடு பேற்றின் இயல்புகளை விரிவாகப் பிரபுலிங்க லீலையில் சிவப்பிரகாச சுவாமிகள் விளக்குகின்றார்.

எனவே வீடுபேறு அடைய விரும்புவோர்

1. ஆணவமலப் பற்றை நீக்குதல்
2. தான் எனும் அகந்தையை அழித்தல்
3. உடல்மீது கொண்டுள்ள பற்றை அழித்தல்
4. இருவினையாகிய நல்வினை, தீவினை நீங்கப்பெறல்
5. மனத்தை அடக்குதல் எனும் வழி முறைகளைப் பின்பற்றுவதன் வழி

பிறவிப் பெருங்கடலை நீந்தி வீடுபேற்றை அடைய முடியும் என பிரபுலிங்க லீலையில் பல இடங்களில் சிவப்பிரகாச சுவாமிகள் விளக்கிக் கூறுகின்றார்.

115. உமாபதி சிவாச்சாரியரும் சிவப்பிரகாசரும்

க. இளமதி சானகிராமன், புதுவை.

முதல் தூது இலக்கிய நூலை இயற்றியருளிய உமாபதி சிவாச்சாரியாரின் நெஞ்சுவிடு தூதும் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றியருளிய ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் நெஞ்சுவிடு தூதும் இக்கட்டுரையில் ஒப்பாய்வு செய்யப் பெறுகின்றன.

தூது இலக்கியம்

தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களில் தூது இலக்கியமும் ஒன்றாகும். தூது நூல்கள் தனி இலக்கியமாகத் தோன்றுவதற்கு முன்னரே தொல்காப்பியம் தொடங்கிச் சங்க நூல்கள், குறள், காப்பியங்கள், சமய நூல்கள் போன்றவற்றில் தூது பற்றிய செய்திகள் குறிப்பிடப் பெற்றுள்ளன. ஒருவர் தம்முடைய கருத்தை மற்றொருவருக்கு ஓர் ஆள் மூலமாகச் சொல்லி விடுவது ''தூது'' எனப்படும். ஆடவர், மகளிர் மட்டுமல்லாது எகினம், மயில், கிள்ளை, எழிலி, பூவை, குயில், நெஞ்சம், தென்றல், வண்டு முதலானவற்றையும் தூதாக விடுத்துள்ளனர். உமாபதி சிவாச்சாரியாரும் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளும் தங்கள் ஞான குருவினிடத்து நெஞ்சினைத் தூதாக விடுத்துப் பாடிய பாக்களே 'நெஞ்சுவிடுதூதாக' அமைந்துள்ளன. இவை இரண்டிலும் ஒற்றுமைகளும் வேறுபாடுகளும் காணப்பெறுவதால் அவை இங்கு எடுத்துக் காட்டப் பெறுகின்றன.

உமாபதி சிவாச்சாரியாரின் நெஞ்சுவிடு தூது

கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியாரின் நெஞ்சுவிடு தூது அகப்பொருள் சார்புடையதாக இருப்பினும் சைவசித்தாந்தக் கருத்து களையே மிகுதியும் பெற்றுள்ளது. தம் ஞானகுருவாகிய மறைஞான சம்பந்தரிடம் கொன்றைமாலை வாங்கிவா என்று தலைவி தம் நெஞ்சினைத் தூது விடுப்பதாக அமையும் இந்நூல், சிவபெருமானின் இயல்பு, உயிரின் சிறுமை, உயிரைப் பற்றியிருக்கும் தளைகள், நெஞ்சுக்கு அறிவுறுத்தல், சிவபெருமானின் பத்து அங்கங்களான மலை, ஆறு, நாடு, நகர், மாலை, குதிரை, யானை, கொடி, முரசு, ஆணை முதலான வற்றின் பெருமை பேசுதல், குருவருளின் பயன்பாடு, சிவபெருமானின் ஒப்பற்ற தன்மை எனும் பிரிவுகளில் அமைகின்றது.

ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் நெஞ்சுவிடு தூது

இந்நூல், விநாயகப் பெருமானின் அருள்வேண்டும் காப்புச் செய்யுளை உடையது. சிவஞானதேவன் சிறப்பு, பத்து அங்கங்களான தசாங்கப்பெருமை, உலா வருதல், உலா வருதலைக் கண்ட மகளிரின் நிலை, தலைவி தன்னிலை கூறல், நெஞ்சினைப் புகழ்தல், நெஞ்சிடம் வேண்டுதல், தேசிகர் தங்கும் இடங்களான காஞ்சி, விருத்தாசலம், சேயூர், மயிலம், பொம்மபுரம் முதலான ஊர்களின் பெருமை, நெஞ்சு சென்று சேரவேண்டாத இடங்கள், பொம்மபுரத்தின் சிறப்பு, ஸ்ரீசிவஞான பாலைய தேசிகரின் கருணையாகிய மாலையை வாங்கி வர வேண்டுதல் எனும் பொருட்களில் அமைகின்றது.

ஒப்பாய்வு நிலையில் பெறுபவை

1. உமாபதி சிவாச்சாரியார் தம் நெஞ்சுவிடு தூதில் காப்புச் செய்யுள் பாடவில்லை. ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள்,

 "கைக்களிற்றை யன்றுரித்த கண்ணுதலோ னீன்றதனி
 மெய்க்களிற்றை நெஞ்சமே மேல்கொண்டு - புக்குருக்கி
 மேவன்பாற் றூதாகு மேனிச் சிவஞான
 தேவன்பாற் றூதாகச் செல்"

 என்று காப்புச் செய்யுளைப் பாடிவிட்டே நூலினைப் பாடுகின்றார்.

2. உமாபதி சிவாச்சாரியார் தம் ஞானகுருவான மறைஞான சம்பந்தரைத் தூது பெறுபவராக அமைத்துப் பாடுகின்றார். ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் தம் ஞானகுருவான ஸ்ரீ சிவஞான பாலய தேசிகரைத் தூது பெறுபவராக அமைத்துப் பாடுகின்றார்.

3. இருவருமே சிவபெருமானே தம் ஞானகுரு என்ற நிலையில் சிவபெருமானின் பெருமைகளையே இவர்களின் பெருமை களாகப் பாடுகின்றனர்.

4. உமாபதி சிவாச்சாரியரின் நெஞ்சுவிடுதூது நேரிசைக் கலிவெண் பாக்களால் ஆன 130 கண்ணிகளைக் கொண்டது. ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளின் தூது கலிவெண்பாக்களால் ஆன 255 கண்ணி களைக் கொண்டது.

5. இரண்டு நூல்களுமே தனிப்பாடலை இறுதியில் கொண்டுள்ளன.

6. உமாபதி சிவாச்சாரியாரின் நெஞ்சுவிடு தூதில் நெஞ்சினைப் புகழ்தல் இல்லை. ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளின் நெஞ்சுவிடு தூதில் நெஞ்சினைப் புகழ்தல் உண்டு.

கண்ணிகள் 132 முதல் 173 வரையில் நெஞ்சினைப் புகழ்ந்து உரைப்பவை.

''வேதா கமங்கள் விதிக்கும் விதியனைத்தும்
நீதான் புனிதமுற நேர்ந்தன்றோ - வாதார
யோக மிருநான்கும் உன்னைவய மாக்குவதற்
காக முயலுவன வல்லவோ - போகமுறு
தன்மைக்கும் செய்யும் தவத்திற்குங் கற்றறியு
நன்மைக்கும் கொள்ளுமொரு நட்பிற்கும் - வன்மைக்கும்
ஈகைக்குந் தன்னை யிருந்தாங் குணர்ந்தடையும்
ஓகைக்கும் நீயே யுறுதுணைகாண்''

என்று கூறுவதோடு, போகிகளைத் துறவிகளாக்குவாய், துறவிகளைப் போகிகளாக்குவாய். அறத்தை மறமாக்குவாய். மறத்தை அறமாக்குவாய். நின்னை ஒடுக்குவது முத்தி, அடுப்பது பந்தம் என நிற்பாய்; நீ புலன் வழிப் பறந்து சென்றாலும் தீதுண்டோ? நீ விரும்பின் முத்தி ஒரு கணத்தில் வரும் என்று புகழ்வர். 63 நாயன்மார்களின் பெருமையனைத்தும் அவர்களது மனச் செம்மையாலும் திண்மையாலுமே விளைந்தவை என்பதையும் இப்புகழ்ச்சியின் வாயிலாகத் தெரிவிப்பர்.

7. நெஞ்சினுக்கு 'அறிவுறுத்தல்' இருவராலுமே பேசப்பெறுகின்றன. உமாபதி சிவாச்சாரியார்,

''– நித்தலுமே
பூசிமுடித்து உண்டுஉடுத்துப் பூங்குழலார் தம்கலவி
ஆசைதனில் பட்டுஇன்ப ஆர்கலிக்குள் - நேசம்உற
நின்று திளைக்கும் இதுமுத்தி அல்லதுவேறு
ஒன்று திளைக்கும் அதுமுத்தி - அன்றுஎன்று
இலகா இருள்அலகை போல்இகலே பேசும்
உலகா யதன்பால் உறாதே''

என்று உலகாயதர், அகம்பிரம்ம வாதிகள், புத்தசமயவாதிகள், சமணர்கள், வேதியர்கள் முதலானோர்களின் சொல்லைக் கேளாதே அவர்களின் பாற் செல்லாதே, சிவபெருமானின் திருநீற்றையும் அப்பெருமான் உறைகின்ற கோயில்களையும் வழிபடாத இழிந்தவரிடத்துச் சேராதே. நல்ல தவத்துக்குரிய சிவனடியார் திருவேடமும் சிவபூசையும் அருள் உடைமையும் மெய்யுணர்தலும் அற்ற அறிவற்றோர் இடத்துச் சென்று சேராதே. சிறு தெய்வங்களை வணங்கியும் சிவபெருமானைப் பழித்தும் திரிபவர்களை ஏறெடுத்தும் பாராதே என்று நெஞ்சுக்கு அறிவுரை கூறுவர். இவரைப் போன்றே ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளும்,

உலகாயதன், கருமகாண்டி, நியாயன், வைசேடியன், புத்தன், பஞ்சராத்திரி, யோகி, வாமி, சாங்கியன் முதலிய பிற சமயத்தவர்கள்

சொற்கேட்டுத் தடைபடாமல் நேரே பொம்மபுரத்துத் திருமடம் செல்' - என்று நெஞ்சுக்கு அறிவுரை கூறுவர். இதனை,

''இல்லை யிறைவனாற் பூதமலா லிங்கென்று
சொல்லி யுனைமறித்துச் சூழ்ந்துதான் - நல்ல
வலகா யுதமெறித லாயுரைப்ப னந்த
வுலகா யதனுரைகேட் டோடேல் - பலகாலும்
நாணேது மின்றிக் கருமமலால் நானிறையைக்
காணேன் எனுங்கரும காண்டியொடு - பூனேல்''

என்று 205-வது கண்ணி தொடங்கி வருகின்ற 215 கண்ணிகள் வரையில் காணலாம்.

8. திருவள்ளுவப் பெருந்தகையின் வாக்கினை இருவருமே எடுத்தாளு கின்றனர். உமாபதி சிவாச்சாரியார்,

''தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றையவர் என்று - நிலைத்தமிழின்
தெய்வப் புல்மைத் திருவள்ளுவர் உரைத்த
மெய்வைத்த சொல்லை'' (க. 24, 25)

என்ற கண்ணிகளில் திருக்குறளை முழுமையாக எடுத்தாண்டு அவரது மொழி ''மெய் வைத்த சொல்'' - என்று பாராட்டுகின்றார். ஸ்ரீ சிவப்பிரகாசரும்,

''அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொல் நான்கும்
இழுக்கா அறமுடைய ரென்பார்'' (க.59)

என்பதிலும்

''வேண்டுதல் வேண்டாமை'' (க.62)

என்பதிலும் திருக்குறளை எடுத்தாண்டு சிறப்பிக்கின்றார். எனவே இவ்விருவரும் வள்ளுவர்மாட்டு மிகுந்த மதிப்பு வைத்திருந்தமை புலனாகும்.

9. உமாபதி சிவாச்சாரியார் தம் நெஞ்சுவிடு தூதில் முழுவதும் தத்துவக் கருத்துகளைப் பெய்து வைக்கின்றார். ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளோ இந்நூல் அகப்பொருள் சார்புடையது என்பதால் தேவையான இடங்களில் மட்டுமே தத்துவக் கருத்துகளைப் பயன்படுத்தியுள்ளார். உமாபதி சிவாச்சாரியார் உயிரின் சிறுமையைக் கூறி, உயிரைப் பற்றியிருக்கும் தளைகளையும் பேசுவர்.

''வலிமை பொருந்திய அறிவுப் பொறிகளின் வழியும் பூதங் களின் வழியும் அறியத்தக்க காமம், வெகுளி, மயக்கம் என்னும்

மூன்று குற்றத்திற்கும், சாத்துவிதம், இராசதம், தாமதம் ஆகிய மூன்று குணத்திற்கும் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலத்திற்கும், கேவலம், சகலம், சுத்தம் ஆகிய நிலைக்கும் என்னைப் பற்றி விடாத இருவினைகளுக்கும், பொருள்களைச் செலுத்தி அச்சத்திற்கும், கொடுமைக்கும் ஆளானேன்''

என்று உரைப்பதின் வழியறியலாம். ஸ்ரீ சிவப்பிரகாசர், ''ஞானம் என்னும் ஆனை உடையவர்'' - என்று வருணிக்கும்போது ஆணவம், கன்மம், மாயை முதலானவற்றை நீக்குபவன் என்று தெரிவிப்பார்.

10. இருவருமே புராணச் செய்திகளைக் கூறித் தம் ஞானகுருவைப் புகழ்கின்றனர். உமாபதி சிவாச்சாரியார், பிரமன், திருமால் ஆகிய இருவரும் அடிமுடி காண முடியாதவன், முப்புரம் எரித்தவன் என்ற புராணக் கதைகளைக் கூற ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளோ, இராவணன் கயிலாய மலையை எடுப்பேன் என்று அதை அசைத்தான். தேவர்களும் அசுரர்களும் மந்தர மலையை மத்தாகக் கடையக் கொண்டனர். சிவபிரான் திரிபுரம் எரிக்கச் சென்றபோது மேருமலையை வில்லாக வளைத்துக் கொண்டு சென்றார் என்பன போன்ற புராண கதைகளைக் காட்டுவர் (க. 23,24)

11. உறுப்பு நலன்களைப் புகழும் பகுதி முன்னவரின் தூதில் இல்லை. ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளோ சிவபிரானின் மறைக்கப் பெற்ற புறத்தோற்றத்தைப் பெற்றவராய் சிவஞான பாலய தேசிகராய் வரும் பகுதியில் உறுப்புநலன்களைப் புகழ்கின்றார்.

12. இருவருமே தசாங்கப் பெருமைகளைச் சிறப்புற விளக்குகின்றனர்.

13. இறுதியாக அமையும் தனிப்பாடலில் உமாபதி சிவாச்சாரியார் தம்மை வெளிப்படுத்துகின்றார். ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் எவ்விடத்தும் தான் 'ஆண்' - என்ற உணர்வைப் புலப்படுத்த வில்லை.

116. திருஞானசம்பந்தர் பாட்டின் பயன்

சந்திரா கிருஷ்ணன், கோவை.

''வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூத பரம்பரை பொலிய''

திருவவதாரம் செய்தவர் திருஞான சம்பந்தர். சைவ சமய உண்மையை நிலைநாட்ட முற்படுவது திருஞான சம்பந்தரின் தேவாரம் ஆகும். நால்வர் நான்மணிமாலை வெண்பா, கலித்துறை, விருத்தம், அகவல் என்ற வகையில் செய்யுளை அமைத்துக் கூறியுள்ளது. இவற்றுள் உண்மையையும் இலக்கணத்தையும் செப்புதல் என்ற அடிப்படையில் சைவ சமயத்தை நிலைநாட்டப் புகுந்த திருஞான சம்பந்தரை வெண்பாவால் பாடியுள்ளார் சிவப்பிரகாச சுவாமிகள்.

திருஞான சம்பந்தரை இயற்பாவால் மொழி ஞானப்பால் உண்டு நாவால் மறித்து, எம் செவி அமுதாய் வார்த்த பிரான், சுடுகாட்டுக்குள் ஆடுவான் சுட்டினொடு காட்டும் சம்பந்தர், தண் புகலிச் சம்பந்தா, சிரபுரத்து நாவலன் சம்பந்தன், போதமுண்ட பிள்ளை, திருஞான சம்பந்தர், வானும் புகழ் புகலி மன்னன், பிள்ளை என்று பல்வேறு விதமாகத் திருஞான சம்பந்தரை அன்பு தோன்ற பொருளொடு கூடிய பல்வேறு அடைமொழிகளால் சிறப்புறக் கூறி பல்வேறு விதமாக வெளிப்படுத்தியுள்ளார் சிவப்பிரகாச சுவாமிகள்.

சீர்காழிப் பொய்கைக் கரையில் ஞானப்பால் உண்டு தேவாரத்தை அருளிய தன்மை, ஞான சம்பந்தரின் ஞானப்பால் உண்ட செய்தி கேட்டு மங்கையர்க்கரசியார் முலை சுரந்தது, இறைவனை சுட்டிக் காட்டிய பெருமை, ஆண் பனையைப் பெண் பனையாக்கவும், பாம்பு கடித்திறந்த செட்டியை எழுப்பவும், பாண்டியன் நோயைப் போக்கவும், எலும்பைப் பெண்ணாக்கவும், பாடிய செயல், திருமணத்தில் வந்தவர்க்கெல்லாம் முத்தியை வழங்கியது, அனல் வாதம் - புனல் வாதம் குறித்த செயல்கள், இறைவனிடம் முத்துச் சிவிகை பெற்றது, சிவிகை தாங்குவோர் சிறப்பு, திருவடியை வணங்குவோர் பெறும் பயன் முதலானவற்றைச் சிவப்பிரகாச சுவாமிகள் தொடுத்தளிக்கிறார்கள். திருஞான சம்பந்தர் பாட்டின் பயன் குறித்து சிவப்பிரகாச சுவாமிகள் குறிப்பிடுவதைக் காண்போம்.

''பயனாகும் நல்லாண் பனைக்குவிடத் திற்கு
மயலாகும் நோய்க்கு மருந்தாம் - உயிராகும்
சிந்துமெலும் பிற்குச் சிரபுரத்து நாவலன்சம்
பந்தன் இயம்புதிருப் பாட்டு''

என்னும் பாடலில் சம்பந்தன் இயம்பு திருப்பாட்டின் பயன் இவை என்பதைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார் சுவாமிகள்.

திருஞானசம்பந்தப் பெருமானுடைய தேவாரப் பதிகம் ஆண்பனை களைப் பயன்தரும்படி செய்தது. நஞ்சை நீக்கியது, நோய்க்கு மருந்தாயது, எலும்பிற்கு உயிராயது என்று திருஞான சம்பந்தர் பாட்டின் பயன் களைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார் ஆசிரியர்.

இப்பாடலில் திருஞானசம்பந்தரை, 'நாவலன்' என்று குறிப்பிடு கின்றார் ஆசிரியர். திருஞான சம்பந்தர் திருவாய் ஞானப்பால் குடித்த வாயாகும். அவர்தம் திருவாயிலிருந்து வெளிப்பட்ட சொற்கள் பல அற்புதங்களைச் செய்தவை. அத்தகைய சிறப்புடைய சொற்கள் பயின்ற நாவின் இயல்பைப் பாராட்டும் முகத்தான் 'நாவலன்' என்று ஞானசம்பந்தரைக் குறிப்பிட்டார் ஆசிரியர். இவர்தம் ஊரைக் குறிப்பிடும்போது 'சிரபுரம்' என்று குறிப்பிடுகின்றார்.

அமுதம் உண்ட காரணத்தால் அழியாமலும், திருமாலால் தாக்கப் பட்டதால் தலைகள் அறுபட்டும் வருந்தினார்கள் திருப்பாற் கடல் கடைந்து அமுதம் பெற்றபோது இரண்டு அசுரர்கள் - அவர்கள் சீர்காழிக்கு வந்து வழிபட, அவர்கள் சிரம் பொருத்தப் பெற்று இராகு, கேது என்னும் கிரகமாக நிலை பெற்று நிற்கும் தன்மையைப் பெற்றார்கள். எனவே 'தலை போகின்ற நிலை வந்த போதும்' சீர்காழிக்கு வந்து வழிபடும் தன்மை உடையவர்கள் நிலைத்த புகழை அடைவார்கள் என்ற கதையை நினைவுகூரும் முகத்தான் 'சிரபுரம்' என்ற ஊர்ப் பெயர் இப்பாட்டில் குறிப்பிடப் பெற்றுள்ளது.

'இயம்' என்பது பல்வகை ஒலிகளுக்கும் அமைந்த பொதுப் பெயராகும். வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த மனிதன் 'தெய்வ வடிவுந் தரும்' என்னும் நிலைக்கு உயர்ந்தபோது அவனது வாயிலிருந்து வரும் ஒலிகள் அனைத்தும் இறைவனது ஆணையால் வெளிப்படுத்தப் பெற்ற ஒலிகள் ஆகும். எனவே திருஞான சம்பந்தரின் பாடலை, 'இயம்பு திருப்பாட்டு' என்று குறிப்பிடுகின்றார் ஆசிரியர்.

'திரு என்னும் சொல்லை, கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம். அஃதாவது அழகு' என்று பொருள் கூறுவர் பேராசிரியர். திரு என்னும் சொல் மேலும் மங்கலத் தன்மையை - திருமகளைக் குறிப்பிடுவதாகவும் அமையும்.

''நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்''

என்னும் குறள் வாக்கிக்கேற்ப இவர்தம் பாடல்கள் அமைந்துள்ள காரணத்தால் திருஞான சம்பந்தரின் பாடல்களைத் திருப்பாட்டு என்று குறிப்பிட்டார் சிவப்பிரகாச சுவாமிகள்.

கடவுளுக்கு உரிய செயலாகக் குறிப்பிடப் பெறுவது ஐந்தொழில் செய்தல் ஆகும். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பவை இறைவனின் ஐந்தொழில்கள் ஆகும்.

மேற்குறிப்பிட்ட பாடலில் திருஞானசம்பந்தர் திருவாய் மலர்ந் தருளிய திருப்பாடல்கள் செய்த நான்கு செயற்கருஞ் செயல்களைப் பாராட்டிக் கூறி, அவைகள் இறைவனைப் போன்றே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் செய்யும் ஆற்றல் உடையவை என்று சுட்டிக் காட்டுகிறார்.

நல்லாண் பனைக்குப் பயனாகும் தன்மை உடையவைத் திருஞான சம்பந்தரின் பாடல்கள். பிறருக்குப் பயன்தரும் வகையில் வாழும் வாழ்க்கையே சிறந்த - போற்றுதலுக்குரிய வாழ்க்கை ஆகும். திருவோத்தூர் என்ற ஊரில் சிவனடியார் ஒருவர் சிவபெருமான் தொண்டுக்காகப் பனைகளை அமைத்து வளர்த்தார். அவர் வளர்த்த எல்லாப் பனைகளும் ஆண்பனைகளாகிக் காய்க்காமல் இருந்தன.

திருஞான சம்பந்தர் திருக்கோவிலினுள் சென்று பெருமானை வணங்கிப் பதிகம் பாடினார் 'குரும்பை ஆண்பனை ஈன்குலை ஓத்தூர்'' என்று அவர்பாட பனை மரம் காய்த்துப் பழம் கொடுக்கத் தொடங்கிற்று. ஆசை, பொறாமை முதலானவைகளுக்கு ஆட்படாமல் அறநிலைக்குத் தன்னை இலக்காக்கி ஆண்மையோடிருத்தல் மனத்தின் ஆளுந்தன்மை ஆகும். பிற உயிர்களுக்கும் உயர்நிலை பெறுமாறு அன்பு சுரந்து இன்சொல் பேசி, அவைகளுக்கு வேண்டியவைகளைக் கொடுத்து அவைகளுக்குப் பயன்படுமாறு தன்னை ஆக்கிக் கொள்ளுதல் மனத்தின் பெண் தன்மை ஆகும்.

மனத்தின் ஆண் தன்மையோடு பெண் தன்மையை இணைத்து வளரச் செய்தல் வேண்டும். ஆண்மையும் பெண்மையும் இணைந்தபோது தெய்வத்தன்மை உண்டாகிறது. ஆண்பனை நீண்ட நாட்களுக்கு மக்களுக்குக் குலை முதலிய பயன்தரு பொருட்களைக் கொடுத்து இறுதியில் முத்தியும் பெற்றது. இத்தகைய நிலையை அளித்தது ஞானசம்பந்தப் பெருமான் திருப்பாட்டு. எனவே இதனை அருளல் என்று குறிப்பிட்டுக் கூறலாம்.

பாம்பிற்குப் பகை கீரி, கருடன், மயில் என்னும் மூன்றாகும். இவற்றுள் கீரி பாம்பிற்கு உடற்பகை. கருடன் உடலாலன்றி உள்ளத்தாலும் பகையுடையது. ஒருவன் கருட பாவனை செய்து கருடனைப் போலத் தான் நின்று பாம்பின் விஷத்தை நீக்க முடியும். மயில் பாவனைக்கு அப்பாற்பட்டது. மயில் நின்றவிடத்தில் இருந்து நாகத்தை நினைத்தால் நாகம் அழியும். திருஞான சம்பந்தப் பெருமான் பாட்டுக்கள் விஷத்திற்கு மயிலாக நின்று அழித்தன். இது அழித்தல் ஆகும். திருமருகல் என்றவிடத்தில் பாம்பு தீண்டிய வணிக மகனைப் பதிகம் பாடி உயிர்பெறச் செய்தார் திருஞான சம்பந்தர்.

நோய்க்கு மருந்து என்றது திருஞானசம்பந்தப் பெருமான் பாண்டியனுடைய வெப்புநோயைத் தீர்த்தது ஆகும். அவ்வாறு வெப்பு நோயைத் தீர்க்கும்போது வெப்புநோயை மட்டும் இல்லாமல் அவனோடு உடன் பிறந்த கூனையும் நிமிர்த்தார். இதன் காரணமாக அரசனின் பிறவி நோயையையும் தீர்த்தார். எனவே 'காத்த' தன்மை அறியலாகின்றது.

சிந்தும் எலும்பிற்கு உயிராகும் என்பது எலும்பைப் பெண்ணாக்கிய வரலாறு. இது 'இடுகாட்டுள்' என்ற செய்யளின் கீழ் எழுதப் பெற்றது. இது 'படைத்தல்' என்பதாகும்.

ஐந்தொழில் புரியும் ஆற்றல் உடையவன் ஓருருவம் ஒரு நாமம் இல்லாத இறைவன். இறைவனது அடியார்களும் இறையருள் பெற்றவராதலின் அற்புதங்கள் புரியும் ஆற்றல் பெற்றவர்கள். அடியாரே அன்றி நிறைமொழி மாந்தர் ஆணையாகக் கிளந்த மந்திரங்களும் இறைவனைப் போலவே ஐந்தொழில் புரியும் ஆற்றல் மிக்கவை. எனவே நாம் திருஞானசம்பந்தர் பாடல்களைப் படிப்பதால் அப்பாடல்களே நம்மை உய்யும் நெறிக்கு இட்டுச் செல்லும் கருவியாக அமையும் தன்மையை உடையன என்பதை உணரலாம்.

117. சிவப்பிரகாசரின் படிமங்கள்

செ. விசுவநாதன், கோவை.

கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் காஞ்சிபுரத்தில் அவதரித்தவர் சிவப்பிரகாச சுவாமிகள். அவர் சைவ வேளாளக் குடியில் தோன்றியதால் இயல்பாகவே சைவப்பற்று மிக்கவராகத் திகழ்ந்தார். சிவபெருமானைப் புகழ்ந்து பாடிய பெருமக்களைப் போற்றிப் பல பாடல்கள் பாடி யுள்ளார். அவற்றுள் நால்வர் நான்மணிமாலையும் ஒன்றாகும். சைவ சமயக் குரவர்கள் என்று வருணிக்கப்படும், அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரின் பெருமைகளை எடுத்து விளக்கும் வகையில் இயற்றப்பெற்றது நால்வர் நான்மணிமாலை ஆகும்.

இந் நூலில் இறைவனின் பெருமைகள் அடியார்கள் வாயிலாகப் பேசப்படுகின்றன. அக்கருத்துக்களை வெளிப்படுத்தும் உத்திகளில் படிம உத்தி எவ்வாறு சிறப்பாக அமைந்திருக்கின்றது என்பதை விளக்கும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

படிமம் - விளக்கம்

'படிமம்' என்பதற்கு 'உணர்ச்சியையுடைய ஒரு சொற்சித்திரம்' என்று சி.டே. லூயிஸ் கூறுகின்றார். ''ஒரு நொடியில் ஏற்படும் அறிவு ரீதியான உணர்வு ரீதியான மனநிலை வெளிப்பாடே படிமம்'' என்பது எஸ்ரா பவுண்டு படிமத்திற்குத் தரும் விளக்கமாகும். மேலும் அவர், தேவையில்லாமல் நிறைய எழுதிக் குவிப்பதைவிட வாழ்நாள் முழுவதும் முயன்று ஒரு நல்ல படிமத்தைப் படைப்பதே போதுமானது'' என்று கூறுகின்றார்.

கவிதைகளில் அணிகள் படிமங்களை உருவாக்கத் துணை செய்கின்றன. உவமை, உருவகம் போன்றவை படிமங்கள் தோன்றக் கருவிகளாக அமைகின்றன. காட்சித் தன்மையுடையனவாகவும், ஒரு குறிப்பிட்ட கருத்தை உணர்த்துகின்ற நிலையிலும், தொன்மங்களுக்குப் புதிய பொருளைத் தருகின்ற நிலையிலும், குறியீட்டு நிலையிலும் இவை படிமம் வெளிப்படத் துணை செய்கின்றன. படிமம் குறித்து ஆராய்ந்த ஸ்பர்ஜியன் என்பவர். 'உவமை, உருவகம் அனைத்தையும் படிமமாகவே கொள்கிறேன்' என்று கூறுகின்றார்.

இவ்வகையில் சிவப்பிரகாசரின் கருத்துக்கள் படிமக் காட்சிகளாக வெளிப்படுவதைக் காண்பது இங்குப் பொருத்தமுடையதாகும்.

மாணிக்கவாசகர் பற்றிய படிமங்கள்

நால்வர் நான்மணிமாலையில் மாணிக்கவாசகரைப் போற்றிப் புகழ்கின்றார் சிவப்பிரகாசர். மாணிக்கவாசகர் இயற்றிய திருவாசகத்தின் சிறப்பையும், அதை ஓதுகின்ற அடியார் அடையும் மோட்சத்தையும், சிவனின் அருள் திறத்தையும், எடுத்துக்காட்டுகின்ற நிலையில் பாடல் புனையப்படுகின்றது. இப்பாடலின் கருத்து வெளிப்பாட்டிற்கு உருவகங்கள் கையாளப் படுகின்றன. இவ்வுருவகங்கள் படிமக் காட்சிகளாகிக் கற்போர் மனத்தில் படிவதைப் பின்வருமாறு காணலாம்.

> ''உருவகங்கள் படிப்போர் மனத்தில் படிமங்களைத் தோற்று விக்கவல்லன. உருவகம் இருவேறு பொருள்களிடையே காணப்படும் சில ஒருமைகளை அடித்தளமாகக் கொண்டு உருவாக்கப்படுவது''

என்கிறார் மா. இராமலிங்கம். இவ்வகையில் பின்வரும் பாடல் ஆராயப் படுகின்றது.

''வலமழு உயரிய நலம்மலி கங்கை
நதிதலை சேர்ந்த நற்கரு ணைக்கடல்
முகந்துல குவப்ப வுகந்தமா ணிக்க
வாசகன் எனும்ஒரு மாமழை பொழிந்த
திருவா சகம்எனும் ஒண்குளம் புகுந்து
நாவெனும் மதகில் நடந்து கேட்போர்
செவியெனும் மடையிற் செவ்விதின் செல்லா
உளமெனும் நிலம்புக ஊன்றிய அன்பாம்
வித்திற் சிவமெனுதட மென்முளை தோன்றி
வளர்ந்து கருணை மலர்ந்து
விளங்குறு முத்தி மெய்ப்பயன் தருமே''

இப்பாடலில் சிவபெருமானைக் கருணைக்கடல் என்று உருவகிக்கின்றார் சிவப்பிரகாசர். இவ்வாறு உருவகம் செய்வதற்குரிய காரணத்தைக் காண வேண்டும். கடலில் சூரியன் தோன்ற வேண்டும். அதன் காரணமாக மேகம் தோன்றி, அவை முகந்து சென்று நீரைப் பொழிய, அதனால் வரும் நதிகள் உலகுக்கு ஒழுக்கத்தையம் உணவையும் கற்பித்துக் கொடுத்துவிட்டு மீண்டும் தன்னையே வந்தடைய வேண்டும். இங்கு, சிவபெருமானைக் கடலாக உருவகப்படுத்தும்போது வலப்பக்கத்தே உயர்த்திப் பிடித்த மழுவாயுதம் சூரியனாகவும், கங்கையானது தன்னை வந்து அடைகின்ற நதியாகவும் அமைவதைக் காணமுடிகின்றது.

வலப்பக்கத்தே மழுவாகிய சூரியன் தகித்துக் கொண்டிருக்க, மேலுலகத்திலிருந்து வரும் ஆகாய கங்கை சிவபெருமானின் தலையில் குளிர்ச்சி பொருந்த வந்து விழும் காட்சியானது சிவபெருமானின் அளவிட முடியாத ஒரு விஸ்வரூபத்தைக் கண்முன் படிமக் காட்சியாய்ச் சித்திரிக்கின்றது. வெம்மையும், குளிர்ச்சியும் ஒருசேர விளங்கும் அவனது ஆற்றல் உணர்த்தப்படுகின்றது. உயிர்களின் தோற்றமும் ஒடுக்கமும் அவனுக்குள்ளேதான் என்பதை உணர்கின்ற பொழுதுதான் அவனது தெய்வத் தன்மையின் சிறப்பு விளக்கம் பெறுகின்றது. இத்தத்துவத்தை விளக்குகின்ற வகையில் பின்வரும் படிம விளக்கம் அமைகின்றது.

சிவப்பிரகாசர், சிவமாகிய கருணைக் கடலிலிருந்து உற்பத்தி யானவர் மாணிக்கவாசகர் என்ற மேகம் என்கிறார். இந்த மேகமானது உலகம் உவப்பத் திருவாசகம் என்னும் மழையைப் பெய்விக்கின்றது. இம்மழை நீரானது வீணாய்க் கடலில் சென்று கலக்காமல் பாதுகாக்கப் படுகின்றது. எவ்வாறென்றால் அடியவர் உள்ளமாகிய குளம் (அல்லது) ஏரியில் நிறைந்து அதன் பயனைக் கொடுக்கின்றது. இங்கு மாணிக்கவாசகர் மேகமாகவும் அவரது திருவாசகம் அம்மேகத்திலிருந்து விழும் மழை நீராகவும், அது விழும் இடம் அடியவர் உள்ளமாகவும் காட்சிப்படுத்தப் படுகின்றன.

திருவாசகத்தை மனத்துள் வைத்திருக்கும் அடியார் உள்ளமாகிய குளத்தில் ஏற்கனவே அன்பு என்ற விதை ஊன்றப்பட்டுள்ளது. திருவாசகம் என்ற நீர் வந்து பாய்ந்ததும் 'சிவம்' என்ற மெல்லிய முளை தோன்று கின்றது. அது வளர்ந்து 'கருணை' என்ற மலரை விரிக்கின்றது. பிறகு அம்மலர் காய்த்து 'முக்தி' என்னும் கனியைத் தருகின்றது.

இங்கு, மாணிக்கவாசகர் திருவாசகத்தை அருளிச் செய்யவில்லை யெனில் அடியார் உள்ளத்தில் எவ்வித மாற்றமும் ஏற்பட்டிருக்க முடியாது. அவர் அதை அருளிய காரணத்தால் அதைக் கற்று இன்புற்ற அடியவர்கள் 'நா' நாள்தோறும் ஓதி மகிழ்கின்றது. இந்நாவானது குளத்திலிருந்து நீரை வெளியேற்றும் மதகாகச் செயல்படுகின்றது. இதைக் கேட்போர் செவியானது திறந்து வைத்த மடையாகின்றது. அம்மடையின் வழியே எளிமையாகச் சென்று திருவாசக வெள்ளமானது அவர்கள் உள்ள மாகிய நிலத்தில் பாய்கின்றது. அவ்வாறு பாய்ந்த காரணத்தால்தான் அங்கு உண்மைப் பயனாகிய 'முக்தி' என்ற கனி கிடைக்கின்றது.

எனவே கடல், மேகம், மழை, குளம், மதகு, மடை, நிலம், முளை, மலர், கனி என்ற பருப்பொருட்களின் வழியே இறைவனின் அளவற்ற கருணை அடியவர்களுக்கு முக்தியைத் தரவல்லது என்ற நுண்பொருளைப் படிமமாக்கி மகிழ்கின்றார் சிவப்பிரகாசர். இப்பாடலில்,

சிவப்பிரகாசர் குறிப்பாக வெளிபடுத்தும் கருத்து என்னவெனில், ஏற்கனவே உயிர்களிடத்தில் இறைப்பற்று இருந்தாலும் அதைத் தூண்டி விடுவதற்கு ஒரு கருவி வேண்டும் என்பதால் அக்கருவியாக மாணிக்கவாசகர் திகழ்கின்றார் என்று குறிப்பிடுவது உணரத் தக்கதாகும். இக்கருத்துக்கு அரண் சேர்க்கும் வகையில்,

''விசும்பின் துளிவீழின் அல்லால் மற்றாங்கே
பசும்புல் தலைகாண்ப தரிது''

என்ற குறளைக் கொள்ளலாம்.

சுந்தரர் பற்றிய படிமம்

முதலைவாய்ப் பாலனை அழைத்தலின் தத்துவம்

பரவையார் மகிழும் வண்ணம் குண்டையூரிற் பெற்ற நெல் மலையைத் திருவாரூரில் தன் வீட்டின் முன்னால் வருமாறு பூதங்களை ஏவிய கருணைக் கடலாக விளங்குபவர் சுந்தரர் என்று சிவப்பிரகாசர் சுந்தரரின் பெருமையைப் புகழ்கின்றார். அத்தகைய சுந்தரரால் திருப்புக்கொளியூரில் முதலைவாயில் அகப்பட்டுக் கொண்ட குழந்தை மீட்கப்பட்டது. இந்நிகழ்ச்சியைத் தத்துவப் படிமமாகக் கீழ்க்கண்ட பாடலில் உணர்த்துகின்றார்.

''வாங்குசிலை புரையுமுடல் எனுங்குளத்தின் மூல
மலமெனுமோர் வெங்கரவின் படுவாயில் நின்றும்
தீங்கிலுயிர் எனும்பனவக் குலமகனை ஆதி
திரோதாயி யென்னுமொரு வெந்திறற்கூற் றுவனால்
ஓங்குறுநா தாந்தமெனப் பெயரியஅக் கரையின்
உமிழ்வித்துச் சிவமெனுமோர் தந்தையொடுங் கூட்டாய்
கோங்கா முனக கவற்றுமிள முலைப்பரவை மகிழக்
குண்டையூர் நென்மலைமுற் கொண்ட அருட் கடலே''

இப்பாடலில், முதலையுண்ட பாலகனை மீட்கும் ஒரு தொன்மக் கதை, படிமமாகித் தத்துவ விளக்கத்திற்கு ஏதுவாகச் சிவப்பிரகாசரால் சித்திரிக்கப்படுகின்றது.

இங்கு மனித உடல் வளைந்த வில்லோடு ஒப்புமைப் படுத்தப்படு கின்றது. இரண்டுமே வளையும் இயல்புடையது. வில் வளைவதால் அம்பு ஒரு குறிப்பிட்ட இலக்கை நோக்கிப் பாய முடியும். அதே போல் உடலின் வளைதல் பல காரியங்களின் பொருட்டு என்பதை உணர முடியும். இவ்விரு செயல்களும் பருப்பொருள்களாகச் செயல்படும் உலக இயல்புகளுக்குச் சான்றாகும். இவ்வாறின்றி ஆகாயத்தில் தோன்றி அழகிய நிறத்துடன் காட்சியளிக்கும் வானவில் (இந்திரவில்) அனைவரையும் மயக்கும் தன்மையுடையது. பிறகு விரைவில் அழிந்துவிடக் கூடியது.

இதே போன்று பிரம்மனால் படைக்கப்படும் இவ்வுடலானது அழகும் இளமையும் பெற்றுக் கவர்ச்சியுடன் விளங்கிப் பின் அழிந்துவிடும் இயல்புடையது. எனவே இவ்விரு ஒப்புமைகளாலும் விரைவில் அழியக் கூடியது உடல் என்ற நிலையாமைத் தத்துவத்தை உணர்த்த 'வில்' என்ற படிமத்தைப் படைக்கின்றார் சிவப்பிரகாசர்.

உடலைக் குளமாகக் காட்சிப்படுத்துகிறார் சிவப்பிரகாசர். பொதுவாகக் குளத்தில் சேறு, கலங்கிய நீர், கொடிய நீர்வாழ் உயிரினங்கள் ஆகியவை இருப்பது இயல்பு. அதுபோலவே உடலாகிய குளத்தில் புண்ணும் இரத்தமும் பலவகைக் கிருமிகளும் இருக்கும். இங்குக் குளத்திலிருந்து வெளிப்பட்ட முதலை 'ஆணவமலம்' போன்றது என்கிறார். உயிரானது, உடலில் தங்கியிருக்கும் காலத்தில்தான் மனிதனுக்குள் ஆணவம் என்ற மலம் தலை தூக்கும். அது கன்மம், மாயை போன்ற மலங்களோடு சேர்ந்திருப்பது குளத்திலுள்ள அசுத்தங்களோடு வாழும் முதலையின் இயல்பைக் காட்டுகின்றது. அதுபோலவே இங்கு முதலை வெளிப்பட்டது என்று கூறுகின்ற இடத்தில் சைவசித்தாந்த அடிப்படையில் இந்த ஆணவ மலமானது உயிரை அநாதி காலந்தொட்டுப் பற்றியிருக்கின்றது என்பது தெளிவாகின்றது.

முதலையை 'வெம் கரவு' என்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார். ஆன்மாக்களின் அறிவை மறைத்து யான் என்ற எண்ணத்தையும், ஆன்மாக்களின் இச்சையையும், செயல்களையும் கட்டுப்படுத்தி 'எனது' என்ற எண்ணத்தையும் உண்டாக்குவது ஆதலின் பிளவுபட்ட இரண்டாக நிற்கும் பெரிய வாயை உடைய முதலை இங்கு ஆணவ மலமானது. எனவே இங்கு முதலை என்ற படிமம் ஆணவ மலத்திற்குக் குறியீடாகி விடுகின்றது.

தீங்கு இல்லாத உயிராகப் படிமப்படுத்துவது அந்தணச் சிறுவனையே யாகும். உயிரானது ஆணவத்தால் மறைக்கப்படுமேயன்றி அழியாது. சுந்தரர் முதலை வாயினின்று மீட்டது அந்தண குலத்துச் சிறுவனையல்ல. இயல்பாக அமைந்த குணங்களால் இயல்பாகவே கருணை உடையதாக உயிர்கள் நிற்க, அவ்வுயிர்களின் தலைவனாக விளங்கும் இறைவனே அந்தணச் சிறுவனாக இருக்கின்றான் என்பதாகும். எனவே உயிர்ப் படிமமாகிய அச்சிறுவன் ஆணவ முதலையால் விழுங்கப்பட முடியாது என்ற தத்துவத்தைக் காட்டிவிடுகின்றார் ஆசிரியர்.

இப்பாடலில் 'ஆதி திரோதாயி' என்று ஆசிரியர் குறிப்பிடுவது எமனைப் போன்ற ஒரு சக்தியையே ஆகும். இது இரண்டு வகையான வேலைகளைச் செய்கின்றது. இது உயிர்களைத் தொழிற்படுத்துவதும், ஆணவ மலத்தை அழிக்கவும் செய்கின்றது. உயிர்களுக்குப் பிறப்பு,

இறப்பு, நல்வினை, தீவினை ஆகியவற்றைச் செய்வதோடு அருள் பாலிக்கவும் செய்கின்றது. உயிரைக் காப்பாற்றுகின்ற செயலாகச் சுந்தரராய் வந்து நிற்கிறது. எனவேதான் அந்தணச் சிறுவனை முதலையின் வாயிலிருந்து வெளியே கொண்டு வரத் துணையாய் இருக்கின்றது. இவ்வாறு முதலையின் வாயில் அகப்பட்ட சிறுவனின் விடுதலையைக் காட்சிப்படுத்திப் படிமமாக உணர்த்தி விடுகின்றார் ஆசிரியர்.

இப்பாடலில் ''நாதாந்தம்' என்ற சொல் இடம் பெறுகின்றது. இதற்கு நாதத்தின் அந்தம் என்று விரித்து 'ஒலியின் முடிவு' என்று பொருள் கொள்ளலாம். பொருளுலகத்துக்கு அடிப்படை ஒலியுலகம். அவ்வொலி பல நாதத்தில் ஒடுங்கும். அதற்கும் அப்பால் விளங்குவது பரசிவம். எனவே ஒலி ஒடுங்கும் இடமே குழந்தை உமிழப்பட்ட கரை ஆகும். இங்கு 'கரை' என்பது காட்சிப் படிமமாகி ஒலித் தத்துவத்தை விளக்குகின்றது.

கரையில் உமிழப்பட்ட குழந்தையாகிய அந்தணச் சிறுவன் இறுதியில் தன் தந்தையோடு சேர்கிறான். இக்காட்சியைச் சிவப்பிரகாசர் தத்துவ நோக்கில் உரைத்துச் செல்கிறார். அருளை வாரி வழங்கும் தாய் போலச் செயல்பட்ட நம்பியாரூரர் குழந்தையைப் பெற்றோரிடம் ஒப்படைக்கின்றார். இங்கு சிவபெருமானைத் தந்தை என்கிறார். அதனால்தான் உலகிற்கெல்லாம் ஒரே தந்தையாக விளங்குபவன் சிவன் என்னும் கருத்தில் 'ஓர் தந்தை' என்று குறிப்பிடுகின்றார்.

உயிர்களை இறைவனோடு சேர்த்தல் என்ற ஒன்றோடு அருட்சக்தியின் செயல் முடிவு பெற்றுவிடுகிறது. நம்பியாரூரர் என்னும் அருட்சக்தியாய் நின்று செயல்பட்டதால், இங்கு 'அருட்கடல்' என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார் சிவப்பிரகாசர். இங்கு உயிர் இறைவனோடு சேரும் தத்துவத்தைக் காட்சிப் படிமமாக உணர்த்தும் சிறப்புத் தெரிகின்றது.

திருநாவுக்கரசர் திருக்கதவுப் படிமம்

வேதாரண்யம் எனப்பெறும் திருமறைக் காட்டில் மறைகளால் பூட்டப்பெற்ற திருக்கோயில் கதவினைத் திறந்த செயல் எத்தகைய தத்துவக் கருத்தைப் படிமமாக உணர்த்துகிறது என்பதைப் பின்வரும் பாடலால் அறியலாம்.

> ''தாயிலி ஆகும் சிவபெரு மான்றனைத் தானெனுமோர்
> கோயிலின் ஆரறி வாகிய நாமம்முன் கொண்டிருந்த
> வாயிலின் ஆணவ மாகுங் கபாடமும் மன்திறந்து
> நோயிலி யாகிய சொல்லிறை காட்டுவன் நோக்குதற்கே''

இப்பாடலில் அமைந்துள்ள, ''தானெனும் கோயில்'', 'ஆரறிவாகிய வாயில்' தாயிலியாகிய இறைவன் ஆகிய தொடர்கள், இறைவனைக் காணத் துடிக்கும் உயிர்களின் சிறப்பை எடுத்துக் காட்டும் படிமங்களாகத் தத்துவ நோக்கில் சிவப்பிரகாசரால் காட்டப் பெறுகின்றன.

இப்பாடலில் திருநாவுக்கரசரைப் புகழ்கின்ற வகையில் 'நோயிலி யாகிய சொல்லிறை' என்று கூறுகின்றார் சிவப்பிரகாசர். அவர், சொற் களுக்கு இறைவனாக இருப்பவன் என்ற பொருளில் நோயில்லாத சொற்களுக்கு உரியவன் என்று குறிப்பிடுகின்றார். ஒழுக்கச் சிறப்பினால் தெய்வப் புலமை பெற்றவர்களே இத்தகைய சொற்களைச் சொல்ல வல்லவராக முடியும். நோயில்லாத சொற்களை 'நிறைமொழி' என்று கூறுவதுண்டு. அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப் பயன்களைப் பயந்தேவிடும் மொழியே நிறைமொழி. திருநாவுக்கரசர் இங்கு நிறைமொழி அரசராக உணர்த்தப்படுகின்றார்.

தான் எனும் ஓர் கோயில் இங்கு ஆன்மாவாகச் சித்திரிக்கப் படுகிறது. பொதுவாக உலகத்துக் கோயில்களில் உள்ள கருவறையில் இருக்கும் பெருமானின் பெயரே கோயிலின் பெயராக அமைகின்றது. மனித உடம்பும் கோயிலே. இக்கோயிலுக்குரிய கடவுள் உயிரே. உலகத்துக் கோயில்களைப் படமாடும் கோயில் என்றும், உயிர்கள் பொருந்திய உடம்புகளை நடமாடும் கோயில் என்றும் கூறுகின்றார் திருமூலர்.

இங்கு உடல் கோயிலாகப் படிமப்படுத்தப் படுகின்றது. அக்கோயில் முழுவதும் வியாபித்திருக்கிற பொருளாக உயிர் படிமப் படுத்தப் படுகின்றது. எனவே உயிரின் கோயிலாக உடல் அமைகின்றது.

உடல் உயிருக்குக் கோயிலாக இருப்பதைப் போன்று உயிரும் கோயிலாக இருக்கிறது. உயிரைக் கோயிலாகக் கொண்டு இறைவன் உள்ளே அமர்ந்திருக்கிறான். சிவப்பிரகாச சுவாமிகள் உயிர் இறைவனுக்குக் கோயிலாக இருக்கும் நிலையை உணர்த்துவதற்காகத் ''தான் எனும் ஒரு கோவில்'' என்கிறார்.

உயிருக்குக் கோயிலாக இருக்கும் உடம்பு எப்போதாவது உயிரைக் கண்டு வழிபட வேண்டும் என்று விரும்புவதில்லை. ஆனால் இறைவனுக்குக் கோயிலாக இருக்கும் உயிர், தான் கோயிலாக இருப்பதேயன்றி, கோயிலின் உள் சென்று வணங்கக் கூடிய வழிபடுவோனாகவும் இருக்கிறது. இந்நிலையில் இறைவனுக்குக் கோயில் யார்? என்ற வினா எழுகின்றது? இக்கேள்விக்குத் 'தான்' என்பது விடையாக அமை கின்றது. எனவே இறைவனே, கோயிலாகவும் வழிபடு பொருளாகவும்,

உயிராகவும் எல்லாமுமாக நிறைந்திருப்பவன் என்பதை நுண்பொருள் படிமமாக உணர்த்துகின்றார் சிவப்பிரகாசர்.

கோவில்களில் பெரும்பாலும் நான்கு வழிகள் இருக்கும். ஒவ்வொரு வழியிலும் கோபுரங்கள் இருக்கும். இந்நான்கு வழிகளும் இறைவனை அடையக் கூடிய நான்கு மார்க்கங்களாகக் கொள்ள வேண்டும். இவற்றையே, ஞானம், கர்மம், ஞானகர்மம், ஞானகர்மபாவம் என்று கூறுவர். இவற்றில் ஞானமே இறைவனை அடையும் வழி. இதனைச் சிவப்பிரகாச சுவாமிகள் ''ஆர் அறிவு ஆகிய நாமம் முன் கொண்டிருந்த வாயில்'' என்று கூறுகின்றார். பொருந்திய ஞானம் என்ற பெயரைக் கொண்ட வழி என்று படிமப்படுத்துகின்றார்.

உயிரானது நீண்ட நாட்களாக 'ஞானம்' என்ற வாயிலின் வழியாக இறைவனைக் காண முற்படுகின்றது. அப்போது அங்கே ஒரு கதவு எல்லாவற்றையும் மறைக்கிறது. அக்கதவே 'ஆணவம்' என்பதாகும். உயிரின் அறிவை மறைத்து, அதன் வியாபகத்தைக் குறைத்து அணுத்தன்மைப் படுத்தியதால் 'ஆணவம்' எனப்பட்டது. இது அறிவை மறைப்பதால் ''ஆர் அறிவாகிய வாயிலின் அமைந்த கபாடம்'' என்று கூறுகின்றார் சிவப்பிரகாசர்.

இந்த ஆணவம் மீண்டும் வந்து மறைக்க முடியாதபடி அதை அழித்து நிலைபேறுடைய இறைவனை உயிர் காண வேண்டும். இத்தகைய ஒரு தத்துவத்தை விளக்குவதற்கே கோயில், கதவு என்ற பருப்பொருள்களின் வழியே நுண்பொருள்களாகிய உயிர், இறைவன் என்பதைப் படிமக் காட்சியாக உணர்த்துகின்றார் சிவப்பிரகாசர். இறுதியில் உயிர் இறைவனைக் காணும் முயற்சியாக 'மறைக்கதவு திறக்கப்படுதல்' என்ற தத்துவத்தை எளிமையாகக் காட்டிவிடுகின்றார் சிவப்பிரகாசர்.

மாணிக்கவாசகரின் திருவாசகச் சிறப்பு அடியார் உள்ளங்களில் பாய்கின்ற செயலும், முதலைவாய்ப் பிள்ளையை மீட்ட சுந்தரரின் அற்புதச் செயலும், திருநாவுக்கரசரின் மறைக்கதவம் திறக்கும் செயலும் தத்துவ நோக்கில் அமைந்துள்ளன என்பது படிமக் காட்சிகளின் வாயிலாக எடுத்துக் காட்டப்பெற்றது. தத்துவக் கருத்துக்களின் நுண்பொருளை எளிமையாக விளங்கிக் கொள்வதற்கு இத்தகைய படிம உத்தி சிறப்பாகப் பயன்படும் என்பதைக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

118. சிவப்பிரகாசரின் நீதிநூல்

மு. செல்வராசு, தூத்துக்குடி.

இக்கட்டுரை நீதிகள் என்றால் என்ன? என்பது பற்றியும் துறைமங்கலம் சிவப்பிரகாசர் இயற்றிய நீதிநூலாகிய நன்னெறி பற்றியும் அது மக்களுக்குப் பயன்படும் நீதி நெறிகளைக் கொண்டுள்ள விதம் பற்றியும் ஆராய்கிறது.

நீதிகள்

நீதி என்பதற்கு நியாயம் என்று பொருள் கூறுகிறது இலிப்கோ அகராதி. அது நியாயம் என்ற சொல்லுக்கு ஒழுக்கநெறி, தருமசாத்திரம், வழிகாட்டும் சாதனம் என்ற பொருள்களைத் தருகின்றது. பொதுவாக நீதி என்பதற்கு வாழ்வில் சிறப்பாக வாழ வழிகாட்டும் சாதனம் என்ற பொருளைக் கூறலாம். சிவப்பிரகாசர் இயற்றிய நன்னெறி மக்களின் வாழ்விற்கு வழிகாட்டும் சிறந்த அறநெறிகளைக் கூறுகின்றது. இதனால் இந்நூல் சிறந்த வழிகாட்டும் சாதனம் என்று கூறலாம். இந்நூல் இன்றியமையாத நீதிகளையும் கற்போர்க்கு மகிழ்ச்சியையும் தரவல்ல நூலாக விளங்குகிறது என்று வேங்கடசாமி நாட்டார் கூறியுள்ளார்.

நீதிநூல்கள் மனிதர்கள் இப்படி வாழவேண்டும் என்பதை வலியுறுத்தும் போக்கில் அமைகின்றன. ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம் ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம் என்று உலக நீதி கூறுகிறது. (பாடல்-1)

சிவப்பிரகாசர் கூறும் நீதிகள் அறத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அவர் அறம் புரிதல் வேண்டும் என்றும் அதை இறப்பதற்கு முன்னர் மனிதர்கள் செய்திட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார். மனித மனத்தில் ஆழமாகப் பதிய வேண்டியதில் அறம் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஒவ்வொருவரும் அறத்தைச் செய்து வாழ்வாங்கு வாழ வேண்டும். இறக்கும்போது தான் வாழ்ந்த நாட்களில் அறத்தைச் செய்யவில்லை என்று எவரும் வருந்தவும் ஏங்கவும் கூடாது என்பது அவரின் கருத்து. இதை அவரின் பாடல் விளக்குகின்றது.

''கொள்ளும் கொடுங்கூற்றங் கொல்வான் குறுகுதன்முன்
உள்ளம் கனிந்தறஞ்செய் துய்கவே''

என்பது அவர் தரும் விளக்கமான பாடல் (30). இதன்வழி இறப்பு வருவதற்கு முன்னர் மனிதர்கள் அறம் செய்து அறம் முன்னர் செய்ய வில்லை என்ற பழியிலிருந்து தப்பிக்க வேண்டும் என்பதை அறியலாம்.

சிவப்பிரகாசர் கூறிய நீதிநெறிகளை இருவகையாகப் பிரிக்கலாம்.

1. போற்றி ஒழுக வேண்டிய நீதிகள்
2. தவிர்க்க வேண்டிய நெறிகள்

போற்றி ஒழுக வேண்டிய நீதிகள்

வாழ்வில் செயலாற்ற வேண்டிய நெறிகளை போற்றி ஒழுக வேண்டிய நெறிகள் எனலாம். சிவப்பிரகாசர் காட்டும் நீதிகள் பிறர்க்கு உதவுதலையே மிகுதியாக வலியுறுத்துகின்றன. பிறர் துயரத்தைத் தாங்கும் எண்ணம் வரவேண்டும். பிறர் துயரம் கண்டு உருக வேண்டும். பெரிய அறிவினை உடையார் வீரத்துடன் பிறரின் துயரத்தை ஏற்றுக் கொண்டு அவர்களைக் காக்க விரைவர். இது அவர்களின் இயல்பென மொழிகின்றார் சிவப்பிரகாசர் (பாடல் - 31) அப்பரும் சம்பந்தரும் திருவீழிமிழலையில் பஞ்சம் வந்துற்ற வேளையில் மக்கள் அனைவருக்கும் உணவு வழங்கிய செயலை இதற்குச் சான்றாகக் கூறலாம். (பெரிய. திருநாவுக். 259.)

சிவப்பிரகாசர் கூறும் நீதிகள் உதவி புரிதலில் உள்ள சிக்கல்களை எடுத்துக்காட்டி அதனைக் கண்டு ஒதுங்காமல் உதவிட வேண்டுமெனக் கூறுகின்றன.

நிறைந்த குணத்தை அடிப்படையாகக் கொண்ட பெரியவர்கள் சினமுற்ற நேரத்திலும் உதவுகின்ற குணம் மாறாமல் உதவி புரிவார்கள். இதன்வழி கோபமுற்ற வேளையில் உதவி வேண்டி வந்தவரிடம் கோபம் கொள்ளாமல் வந்தவர்க்கு உதவ வேண்டுமென சிவப்பிரகாசர் கூறுவதை அறியலாம். (நன்-28)

உதவி செய்யும்போது வறுமை ஏற்பட்டு விடலாம். அதைக் கண்டு மனம் தளராமல் உதவி செய்ய வேண்டும். இதை உதவி வேண்டி வந்தவர்க்கு என் தந்தை உதவி செய்து வறுமை அடைந்தான். ஆகவே நான் உதவி செய்ய மாட்டேன் என்ற எந்த மகனும் கூறமாட்டான் என்ற கருத்தமைந்த பாடலால் அறியலாம். இதன்வழி வறுமை அடைந்து விட்டால் அதற்காக செய்துவரும் உதவியை நிறுத்திவிடக் கூடாது என்பதையும் நம் முன்னோர் உதவி செய்து வறுமை அடைந்து விட்டதால் இனி நாமும் உதவி செய்யக்கூடாது என்ற கருத்தையும் தவிர்க்க வேண்டும் என்பதையும் அறியமுடிகின்றது. பெரியபுராணத்தில் வரும் மாறநாயனார் இறையருளால் வறுமை அடைகின்றார். அவருக்கு

ஏன் இறைவன் வறுமையைக் கொடுக்க வேண்டும் என்பதை இறைவன் திருவாக்கால் சேக்கிழார் இயம்புகின்றார்.

செல்வம் மேவிய நாளில் இச்செயல் செய்வதன்றியும் மெய்யினால்
அல்லல் நல்குர வான போதிலும் வல்லர் என்றறி விக்கவே
மல்லல் நீடிய செல்வ மறைந்து நாடொறும் மாறிவந்து
ஒல்லை யில்வறு மைப்ப தம்புக உன்னி னார்தில்லை மன்னினார்.

(பெரிய. மாறநாய. 6),

என வரும் பெரியபுராணப் பாடலால் மாறநாயனார் வறுமைநிலை அடைந்ததை அறியமுடிகின்றது. பின்னர் அவர் உதவுதலில் முன்பு போலவே வல்லவராக விளங்கினார் என்பதை அவரது வரலாற்றால் அறிய முடிகின்றது.

எந்த உதவி செய்தாலும் அதனை முறையுடன் செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகின்றார் சிவப்பிரகாசர். உதவி அன்புடன் செய்வது மிகவும் இன்றியமையாதது. பொருளானது பெருகும் தன்மையும் சுருங்கும் தன்மையும் கொண்டது. எனவே பெரியவர்கள் செல்வத்தின் அளவுக்கொப்ப மிகுதியாகவும் சுருக்கமாகவும் கொடுத்து உதவுவார்கள். எந்த அளவு கொடுத்தாலும் அதில் விருப்பம் நிறைந்து காணப்படும். இதை

பெருக்க மொடுசுருக்கம் பெற்றபொருட் கேற்ப
விருப்ப மொடுகொடுப்பர் மேலோர்'' (13)

என வரும் பாடலால் அறியலாம்.

உதவுதல் அறம் எதையும் எதிர்பார்க்காமல் நிகழ்வதை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். இந்த நெறியும் சிவப்பிரகாசரால் கூறப்படுகின்றது. கற்றறிந்தவர்கள் பதில் உதவி கருதாமல் மெய் வருந்தித் தம்மால் செய்யக் கூடிய உதவிகளைச் செய்வார்கள். இவ்வாறு செய்வது சிறந்த அறமாகும். இதை

''கைம்மா றுகவாமற் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மால் இயலுதவி தாஞ்செய்வார்'' (27)

என வரும் பாடலால் அறியலாம்.

நூலில் கூறப்பட்டுள்ள நெறிப்படி உதவிகள் செய்திடல் வேண்டும். அவ்வாறு நெறிப்படி செய்யாத உதவிகள் பொருளற்றவையாகிவிடும். இதை

''பண்ணும் பனுவற் பயன்தே ரறிவிலார்
மன்னும் அறங்கள் வலியிலவே'' (32)

என வரும் பாடலால் அறியலாம்.

சிவப்பிரகாசர் கூறும் போற்றி ஒழுகவேண்டிய நெறிகள் வேண்டு வோர்க்கு அதிகம் உதவிகளைச் செய்யவேண்டும் என்ற போக்கு வலியுறுத்தப்படுகிறது. உதவி தக்க காலத்தே செய்ய வேண்டும். வெறுப்பு வந்த நேரத்திலும் உதவிட வேண்டும். வறுமை வந்த போதும் உதவிட வேண்டும். உதவி புரியும்போது கைம்மாறு பார்க்காமல் உதவ வேண்டும். அன்பினால் உதவிட வேண்டும். உதவியின் மெய் உணர்ந்து உதவிடப் பழக வேண்டும்.

உதவும் காலத்து உதவியின் மெய் உணர்ந்து உதவிட வேண்டும் என்ற நெறி சிறப்பான நீதிநெறியாக விளங்குகின்றது.

தவிர்க்க வேண்டிய நெறிகள்

மக்கள் வாழ்கின்ற காலத்தில் செய்ய வேண்டிய நெறிமுறைகளைத் தவறாமல் செய்வது போல செய்யக்கூடாத நெறிமுறைகளை நீக்கி வாழ முயல வேண்டும். இதையே தவிர்க்க வேண்டிய நெறிகள் என்கின்றோம். சிவப்பிரகாசர் மக்கள் தவிர்க்க வேண்டிய நெறிகளை எடுத்தியம்பியுள்ளார்.

தகாதவர் தொடர்பு, கீழ்மக்களின் குறைபாடு, தற்புகழ்ச்சியின் தாழ்வு, சினத்தின் விளைவு, மனஉறுதியில் தாழ்வு, பிறப்பில் உயர்வு தாழ்வு, செல்வச்செருக்கு போன்ற நெறிகளின் உண்மையை அறிந்து அவற்றைத் தவிர்க்கவேண்டுமென நன்னெறி அறிவுறுத்துகின்றது.

தகாதவர் தொடர்பு

நட்பில் நல்லோர் நட்பும் அல்லார் நட்பும் உண்டு. நல்லவர் அல்லாதாரின் நட்பின் தன்மை எவ்வாறு இருக்கும் என்பதை நன்னெறி விளக்குகின்றது. கற்றறியார் செய்கின்ற மிகுதியான நட்பு நெடுங்காலம் பழகிய விடத்தும் மெல்லிய மலரானது முதலில் மணம் வீசிப் பின் கெடுவது போல இறுதியில் தீங்கே விளையும் என்று கூறி தகாதவர் தொடர்பை நீக்கி வாழ்க என்று வழி காட்டுவதை

''கற்றறியார் செய்யுங் கடுநட்புந் தாங்கூடி
உற்றுழியுந் தீமைநிகழ் வுள்ளதே'' (39)

என வரும் நன்னெறிப் பாடலால் அறியலாம்.

கீழ்மக்களின் குறைபாடு

கீழ்மக்கள் என்பதற்குரிய அளவுமுறைகள் யாவை? என்பனவற்றைப் பல வழிகளில் நாம் காணமுடியும். ஒருவரிடம் காணப்படும் நற்குணங் களை விடுத்து அவரிடம் காணப்படும். குற்றங்களையே மிகுதியாக கீழ்மக்கள் பேசுவார்கள். இவர்களைக் கல்லா அறிவில்லாத கயவர்

என்று நன்னெறி கூறிவிடுகிறது. நற்குணங்கள் பல இருந்தும் அவற்றைக் கல்லாதிருக்கும் அறிவில்லாதவர்களிடம் கற்றுணர்ந்த நல்லவர்கள் சென்று பழகினால் அவர்கள் தங்களின் பெருமையை இழப்பர். (25) கல்லாதவரிடம் பழகியவர்கள் பழக்கத்தால் பின்னர் பிறரிடம் குற்றம் காண முற்பட்டு விடுவார்கள். அதனால் நல்லோரும் நாளடைவில் கீழ்மக்கள் என்று பிறரால் பழி கூறும் அளவிற்குப் பெருமை குன்றி விடுவர் என்பதை நன்னெறி விளக்கியுள்ளது.

தற்புகழ்ச்சி

ஒருவன் பிறர்முன் தன்னை உயர்த்திப்பேசுதல் தற்புகழ்ச்சி என்று கூறுகின்றோம். இதைப் பிறர் மதிப்பதில்லை. நேரே கூறா விட்டாலும் மனத்தில் இதை ஏற்பதில்லை. பெரியவர்கள் முன்னர் தன்னைச் சிறப்பித்துக் கூறிய மூடன் பின்னர் பொறுமையாக அவர் கூறும் பதில் உரைகளால் அவன் பொறுக்க மாட்டாது வெகுவிரைவில் தாழ்வு அடைந்து விடுவான் என்கிறது நன்னெறி. இதை ஆனாப் பெருமை படைத்த அகத்திய முனிவரின் செயலைக் கொண்டு விளக்கியுள்ளது. அகத்திய முனிவரிடம் விந்தியமலை தற்புகழ்ச்சியுடன் தன்னுயர்வைக் கூறியது. அதன் செருக்கை அடக்கத் தன் கைவிரலை ஊன்றினார் அகத்தியர். விந்தியமலை தாழ்ந்தது. ‘தோன்றா தோன்றித் துறைபல முடிப்பினும் தான் தற்புகழ்தல் தகுதியன்றே'' என வரும் நன்னூல் நூற்பாவும் தற்புகழ்ச்சி கூடாது என்கிறது.(52) இவற்றின் வழி தற்புகழ்ச்சி என்றும் கூடாது என்பதை அறியலாம். (37)

சினம்

கோபத்தின் இயல்பு யாது? என்பதை நன்னெறி விளக்கி யுள்ளது. கோபமானது மனத்தைத் தன்வயமாக்கிக் கொண்டு எழும் தன்மை மிக்கது. இதை

''உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினம்காத்துக்
கொள்ளுங் குணமே குணம்'' (8)

என வரும் பாடலால் அறியலாம்.

தன்னைத் தான் காக்கின் சினம் காக்க என வரும் குறளையும் இங்கே ஒப்பிடலாம்.

மனஉறுதி

மனஉறுதி நெகிழும் இடம் எது? என்பதை விளக்கியுள்ளது நன்னெறி. தவத்தைச் செய்யும் உள்ள உறுதி உடையவன் ஆனாலும் பலகாலும் மாதர்களிடம் வாய்ப்பேச்சு பேசி மகிழும் பழக்கம் இருந்தால் அவனின் உள்ள உறுதி கெட்டுவிடும். எனவே உள்ள உறுதி கெடும்

அளவிற்கு மாதருடன் உரையாடக் கூடாது என்பதை இதன்வழி அறியலாம். (23)

உயர்வு தாழ்வு இன்மை

உயிர்களின் பிறப்பில் உயர்வு தாழ்வு இல்லை என்பதை நன்னெறி விளக்குகிறது. உயர்வு தாழ்வு கல்விப் பெருமையால் கருதலாமே தவிர பிறப்பில் உயர்வு தாழ்வு கருதக்கூடாது என்கிறது. (22)

செல்வச் செருக்கு

செல்வம் அதிகமாகப் பெற்றுள்ளோம் என்று எண்ணி அடக்க மில்லாமல் பேசுவது, எல்லோரையும் மதிக்காமல் இருப்பது போன்ற குணங்கள் ஒருவனின் செல்வச் செருக்கைக் காட்டும் குணங்களாகும். இவற்றைக் கைவிடுமாறு அறிவுரை கூறுகின்றது நன்னெறி.

முதன்மையான அறிவுடையவர்கள் தாம் அழியாத பெருஞ்செல்வ முள்ள இடத்தில் தோன்றியுள்ளோம் என்ற செருக்கினை அடைய மாட்டார்கள். இதை

''தொலையாப் பெருஞ்செல்வத் தோற்றத்தோ மென்று
தலையா யவர்செருக்கச் சார்தல்-இலையால்'' (14)

என வரும் பாடலால் அறியலாம்.

போற்றல் வேண்டா நெறி

சிறியவர்கள் பெரியவர்கள் இருவர்க்கும் நுண்ணிய வேறுபாடு உண்டென நன்னெறி கூறுகின்றது. அறிவில்லாத சிறியவர்கள் தம்மைப் பிறர் இகழாதிருக்க நினைப்பர். பெரியவர்கள் தம்மைப் பிறர் இகழாது காக்க வேண்டிய நெறியை நினைக்க வேண்டியதில்லை. அவர்களிடம் பிறர் இகழும்படி பேசும் நெறிகள் உள்ளத்தில் இயல்பாக இருக்காது என்பதை நன்னெறி எடுத்துக் காட்டுகின்றது. (33)

பெரியவர்கள் பேசும் நெறிகள் உள்ளத் தூய்மை நிறைந் திருக்கும். சிறியவர்கள் பேசும் நெறிகள் அவ்வாறு உள்ளத்தூய்மை நிறைந்திருக்கும் என்பதில்லை. அவர்கள் தூய்மை நெறியை நாட வேண்டுமென்ற நெறி இப்பாடலின்வழி விளக்கப்படுகின்றது.

சிவப்பிரகாசர் கூறும் நீதிகள் நம் காலத்தில் எவ்வாறு இயல்பாக வாழ்வது என்பதை விளக்குவதாக அமைகிறது. நீதிகள் என்பது வாழ்க்கைக்கு வழிகாட்டும் சாதனம் என்பதைச் சிவப்பிரகாசர் கூறும் கருத்துக்கள் மூலம் அறியமுடிகின்றது.

அதிகம் உதவிகள் செய்ய வேண்டும். உதவி தூய்மையும் அன்பும் கொண்டதாய் இருக்கவேண்டும். சினம் வந்த காலத்தும் சினம் கொள்ளாது உதவ வேண்டும். அதிக உதவிகள் மக்களிடையே நிகழும் போது அதிகம் நன்மைகள் நிலைபெறும். தீமைகள் தோன்றாமலே விலகும்.

சமூகத்தில் ஒருவன் எவ்வாறு பழகுதல் வேண்டும் என்பது சிவப்பிரகாசரால் தவிர்க்க வேண்டிய நெறிகள் கூறும் நீதியில் நன்கு விளக்கப்பட்டுள்ளன. மனதைத் தன்வயப்படுத்துவது கோபத்தின் இயல்பு என்பதால் அதைத் தவிர்க்க வேண்டும் என்பதும் விளக்கப்பட்டுள்ளது. நன்னெறி கற்கும் ஒருவன் வாழ்வின் முறையறிந்து நன்முறையில் வாழ முடியும் எனலாம்.

நடைமுறைக்கு ஏற்ற அறக்கருத்துக்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.

119. சோணசைலமாலையில் அருள் வேண்டல்

சோ. ஸ்வர்ணா சோமசுந்தரம், கோவை.

கற்பனைக் களஞ்சியம், கவிதா சார்வ பௌமர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய பலவகை தோத்திர, சாத்திர நூல்களில் சோணசைலமாலை என்னும் இனிய நூல் அன்பர்கள் மனதைக் கவர்ந்து இன்புறச் செய்யும் பெற்றியுடையது. திருவண்ணாமலையில் கிரிவலம் வரும்போது சுவாமிகளால் பாடப் பெற்றது. 100 பாடல்களில் முதலிரண்டு அடிகளில் நாம் ஓதி உய்ய அருள் வேண்டல் பகுதியை அமைத்து பின்னிரண்டு அடிகளில் அண்ணல்மலையின் அணிநலன்களைக் கற்பனை வளம் பொருந்த அமைத்துப் பாடியுள்ளார் சிவப்பிரகாச சுவாமிகள்.

நாம் நமக்கு வேண்டிய அருள்வேண்டல் பகுதிகளை இங்கு பார்க்கலாம். உலகுக்கு அம்மையப்பராக விளங்கும் பெருமானிடம் நாம் வேண்ட வேண்டியது திருவருள் ஞானமே.

திருவண்ணாமலையில் அவதரித்த நம் பரம குருநாதரான அருணகிரிநாதர் பன்னூறு வழிகளில் அருள் வேண்டலை அமைத்து திருப்புகழைப் பாடியுள்ளார். அவரைப் போலவே பலவிதமாக இறைவனிடம் அருளை வேண்டிப் பெற்றவர் சிவப்பிரகாச சுவாமிகள். அருளனுபவம் நிறைந்த சான்றோரின் பாடல்களை நமக்கு வழித் துணையாகக் கொண்டு ஓதினால் நாமும் உய்யுநெறி பெறலாம்.

நம்முடைய சிற்றறிவின்படி நாம் வேண்டுபவை சிறிய பொருள் களாய்த் தான் இருக்கும். துப்புடையாரைச் சார்ந்து ஒழுகினோமானால் சோர்வில்லாமல் வழித்துணை நன்கு கிடைக்கும். நம் சாத்திர நூல்களில் ஞானநெஞ்சினர்பால் இணங்கிடுதல் நமக்கு கூரிய அறிவைக் கொடுக்கும். ஆகவே அன்பரோடு மரீஇ மாலற நேயம் மலிந்தவர் வேடமும் ஆலயந் தானும் அரனெனத் தொழுமே என்று கட்டளை இட்டிருக் கிறார்கள் ஆசாரியப் பெருமக்கள்.

விருப்பொடு வெறுப்பும் அகன்று பேரின்ப
வெள்ளத்துள் அழுந்து நின்னடியார்
திருப்பதம் இறைஞ்சி அவர்க்கு வேளாண்மை
செய்பெருஞ் செல்வமே யருளாய்'

என்ற பாடலில் சங்கமர்களாகிய அடியார்க்குப் பணி செய்து ஈடேற வேண்டும் என்று கேட்கிறார் சிவப்பிரகாச சுவாமிகள். அடியார்க்குப் பணி செய்தால் இன்ப நிலை தானே வரும். அடியார்க்குச் செய்வது அவர்களுள் இருக்கும் ஆண்டவனுக்கே உரித்தாகிறது.

சிவஞான சித்தியாரில் சிவஞானச் செய்தியுடையோர் கையில் தானம் திலம் (எள்) அளவே செய்திடினும் அந்த தானத்தின் பயன் நிலமலை போல் வளர்ந்து, பிறவிக் கடலில் அழுந்தாத வகையெடுத்து, தத்துவ ஞானத்தை நல்கி நாதன் அடிக்கமலங்கள் நணுகுவிக்கும் என்று அருள்நந்திசிவனார் அறிவுறுத்துகிறார். அதை அடியொற்றி வந்துள்ளது இந்தப் பாடல்.

அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய் பொன்னம்பலத்தெம் முடியாமுதலே என் கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே என்று மணிவாசகர் கேட்பது போலவே சிவப்பிரகாச சுவாமிகளும் கேட்கிறார் பாருங்கள்,

'நீக்குறு மயலும் நிலைத்த பேரறிவும்
நின் திருவடி மலர்க் கன்பு
காக்குறு மனமும் உடைய மெய்த்தொண்டர்
கணத்தினுள் எனை விடுத்தருளாய்'

இங்கு அருணகிரிப் பெம்மான் கேட்பதுவும் அதுவே.

என் பவம் மாற
உனைப் பலநாளும் திருப்புகழாலும் உரைத்திடுவார்
தம் குளிமேவி
உணர்த்திய போதம் தனைப் பிரியாது ஒண்
பொலச் சரண் நானும் தொழுவேனோ (திருப்புகழ்)

எனக்கென யாவும்? ஏன் அடியார் இணக்கம் வேண்டும்? அல்லார் இணக்கம் வேண்டாம் என்றால்

'குறியும் நெறியும் குணமும் இலார்
குழாங்கள் தமைப் பிறியும் மனத்தார்
பிறிவரிய பெற்றியனை'

என்ற மணிவாசகம் நமக்கு விடையளிக்கிறது. நல்ல குறிக்கோள், நன்னெறியில் செல்லும் குணம் இல்லாதவர் கூட்டத்தில் நாம் சேர்ந்தால் நம்மையும் அவர்களைப் போலவே கீழிறங்கச் செய்து விடுவார்கள். ஆதலால் அவர்கள் கூட்டத்திலிருந்து விலகி விட வேண்டும் என்ற மனமுள்ளவரை விட்டு என்றும் பிரியமாட்டான் நம்பிரான் என்று உறுதியாகக் கூறுகிறார் மணிவாசகர். அவர்களை இனம் கண்டு சேர தூய ஞான நாட்டம் பெற வேண்டுகிறார் சிவப்பிரகாசர்.

வேணவா வகன்று நின்திரு வடியின்
மெய்ம்மை யன்படைந்து பொய்ப்பிறவி
நாணுவாரினங் கண்டுறும்படி தூய
ஞானநாட்டம் பெற வருளாய்
சேணுலா மதியந் தவழ் பெருங்குடுமிச்
சிலம்புகள் சிறு துரும்பாகத்
தாணுவா யெழுந்து வளர்ந்திடும் சோண
சைலனே கைலை நாயகனே.

இக்கருத்தில் இன்னும் அழகிய இரண்டு நெறிகளையும் இணைத்துத் தருகிறார் சிவப்பிரகாச சுவாமிகள்.

'மெய்த்தவர் அடிக் குற்றேவலின் திறத்தும்
விளங்கும் ஆகம உணர்ச்சியினும்
புத்தலர் கொடுநிற் பரவு பூசையினும்
பொழுது போக்கெனக்கு அருள்புரிவாய்

அடியார்களுக்குச் செய்யும் குற்றேவலினால் அவர்களுடன் உறைந்து அவர்கள் கூறும் ஞானநூற் பொருளைக் கேட்கும் வாய்ப்பு கிடைக்கிறது. ஞானமன்றி முத்தியின்பம் எய்த முடியாது. ஞானம் கேட்டால் மட்டும் பற்றாது. கேட்டலுடன், சிந்தித்தல், தெளிதல் ஆகிய ஞானத்தில் சரியை, கிரியை, யோகம் செய்து ஞானத்தில் ஞானமான நிட்டை கிளத்தல் வேண்டும். அதற்கு புத்தலர் கொடு பரவும் பூசையும் வேண்டும். பூசையில் அக வழிபாடு, புற வழிபாடு ஆகியவை செய்து பிறவிப் பயனை எய்துதல் வேண்டும்.

அகவழிபாட்டினால் இறைவனுடன் அத்துவிதம் கிடைக்கிறது. அதையும் எவ்வாறு செய்வது என்று சுவாமிகள் அருளிச் செய்கிறார்.

'இந்தி(ரி)யங் கரணம் உடலம் வேறாக்கி
இருண் மலப் படலமும் கீறிக்
கந்தமு மலரும் எனநினை என்னில்
காண்பறக் காணு நாளுளதோ'...
சோண சைலனே கைலைநாயகனே.

இங்கு அருணை வள்ளலின் அற்புத வரிகளை ஒப்புநோக்குக.

'உடலம் வேறு யான் வேறு கரணம் வேறு வேறாக
உதறி, வாசகாதீத அடியூடே
உருகி ஆரியாசார பரமயோகி யாமாறுன்
உபய பாத ராசீகம் அருள்வாயே - திருப்புகழ் (அடைபடாது)

உடலமே யான் என்று நினைக்குந் தோறும் நகார, மகார கட்டுகள் விடுவதில்லை. ஆதலால் குருவருளால் கிடைத்த சிவஞானத்தால் தத்துவக்

கட்டிலிருந்து விடுபட்டு தன்னையறிந்து, தன்னை அறிவித்த திருவருளை தரிசித்து சிவத்துடன் கலந்தால் மலரில் மணம் போல நமக்குள் இறைவனை அந்நியமில்லாமல் கண்டு இன்புறலாம். அப்படிக் காணும் நாள் உளதோ என்று அகம் குழைந்து உருகிப் பாடுகிறார் சிவப்பிரகாச அடிகளார்.

உள்ளம் உருகில் உடனாவர் அல்லது
தெள்ள அரியர் என்று உந்தீ பற
சிற்பரச் செல்வரென்று உந்தீ பற (திருவுந்தியார்)

உள்ளம் உருகினால் இறைவன் நம் உடனாக இருப்பது தெரிய வரும். உள்ளம் உருகுவதற்கு 'பழக்கம் தவிரப் பழக வேண்டும். உலகியற் பொருள்களையே பெரிதாக எண்ணி அவற்றைப் பெறவே வாழ்நாளில் பெரும்பகுதியை செலவிடுவோர் உய்யும் வகையை அருளுகிறார் சுவாமிகள்.

'கருத்திடை நினது கருணைமா மேனி
கண்டு எழுத்தைந்தும் நா இயம்பச்
சிரத்தினில் அமைத்த கரத்தொடு நினையான்
தினம் வலம் புரியுமாறு அருளாய்'

மனம், வாக்கு, காயம் ஆகியவற்றை இறைத்தொண்டில் ஈடுபடுத்தினால் பண்பாடு வந்து மனம் உருகத் துவங்கும். இக்காலத்தில் கிரிவலம் வருவது மிகவும் பிரபலமாகிக் கொண்டு வருகிறது. முந்நூறு ஆண்டு களுக்கு முன்பே சிவப்பிரகாச சுவாமிகள் மலைவலம் வருவது பற்றி அழகுறப் பாடி வழிகாட்டியுள்ளார்கள்.

நிதமும் துதித்துப் பாராயணம் செய்யக் கூடிய பாடல் :

நின்னையே நோக்கி விடாத கட்புலனும்
நின்னையே நினைக்கும் நெஞ்சகமும்
நின்னையே துதிக்கும் நாவும் என்றருளி
நின் திருவடியின் வைத்தருள்வாய்
தன்னை யேறினர்க்குச் சகமெலாங் காட்டும்
தரணியோ டிகலி மேவினர்க்குந்
தன்னையே காட்டு மலையெனுஞ் சோண
சைலனே கைலை நாயகனே.

இகபர சௌபாக்யம் பெற வேண்டும் என்பவர்களுக்குத் துதிப்பதற்கு ஒரு பாடலையும், துதிப்பதனால் அன்பர்கள் பெறும் பேறுகளையும் அடுக்கிக் கூறி அண்ணாமலையான் அடிக்கமலத்தை மறவாது போற்ற ஆற்றுப்படுத்துகிறார் அடிகளார்.

சீரணி புகழுங் கல்வியுஞ் சிறந்த
செல்வமும் இல்லில் வாழ்பவர்க்குப்
பேரணி கலமெனப் புதல்வரும் கதியும்
பெறத் துதிப்பவர்க் கருள்பவன் நீ
நேரணி கதியை மறந்தவர் கண்டு
நினைந்துற மிக்க பேரருளால்
தாரணி முழுதும் தோன்றிடும் சோண
சைலனே கைலை நாயகனே

நினைக்க முத்தியளிக்கும் அண்ணாமலை அண்ணமலை சோணசைல மாலையில் கூறியவாறு ஏத்தி இறவாத இன்ப அன்பு பெற்று நீடினிது வாழ்வோமாக!

120. நன்னெறியும், திருக்குறளும்

சு. அற்புததேவி, கோவை.

தித்திக்கும் தீந்தமிழால் தீங்கில்லா திருக்குறளில் திருவள்ளுவர் தீட்டித்தந்த திருக்குறள் எத் தீந்தமிழ் நூலுடனும் ஏற்றமுற பொருந்தும் எனினும், தமிழ் நாடுதந்த ஐந்திலக்கணம் கற்ற சிவப்பிரகாச சுவாமிகளின் நன்னெறியுடன் எவ்வண்ணம் ஒப்புமை பெறும் என்ற கருத்தை இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

1. நல்லவை செய்தல்

நன்னெறி : என்று முகமன் இயம்பா தவர்கண்ணுஞ்
சென்று பொருள் கொடுப்பர் தீதற்றோர் – துன்றுசுவை
பூவிற் பொலிகுழலாய் பூங்கை புகழ்வோ
நாவிற் குதவும் நயந்து.

பொருள் : பெரியோர் தமக்கு அன்பு காட்டாதவரிடத்தும் தாமே சென்று அவர்க்கு வேண்டும் பொருளை வழங்குவர்.

திருக்குறள் : இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு

பொருள் : நற்பண்புமிக்க சால்புடைமையால், தமக்குத் தீங்கு செய்தவர்க்கும் நன்மை செய்யாவிட்டால் ஒரு பயனும் இல்லை.

ஒப்புமை : தன்னிடத்தில் அன்பு காட்டாதவற்கும், நமக்குத் தீங்கு செய்பவர்களுக்கும் பொருளும் கொடுத்து நன்மையும் செய்ய வேண்டும் என்ற கருத்து புலனாகிறது.

2. நட்பில் பிரியாமை

நன்னெறி : நீக்கமறும் இருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கினவர் பெருமை நொய்தாகும் – பூங்குழலாய்
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோற்
புல்லினுந் திண்மை நிலைபோம்

பொருள் : இடையே பகைமையாற் பிரிந்து கூடும் நட்பு முன்போல் உறுதியுடையதாகாது.

திருக்குறள் : நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்நீர பேதையார் நட்பு

பொருள் : அறிவுடையோர் நட்பு வளர்பிறையாக வளரும் அறிவிலாதார் நட்பு தேய்பிறைபோல் மறைந்து விடும்

ஒப்புமை : நட்பின் இலக்கணத்தை இருவரும் இருவேறு உதாரணங்களால் சுட்டி, இடையில் பிரிந்த நட்பின் வலிமை எத்தகையது என்பதை ஒப்புமையாகக் கூறுகின்றனர்.

3. கல்விச் செருக்கு விடுக

நன்னெறி : கடலே யனையம்யாங் கல்வியா லென்னும்
அடலே றனைய செருக்காழ்த்தி விடலே
முனிக்கரசு கையான் முகந்து முழுங்கும்
பனிக்கடலும் உண்ணப் படும்.

பொருள் : எத்துணைப் பெருங்கல்வி யுடையவரும் செருக்கடைவாராயின் வல்லவரொருவராலே தப்பாது வெல்லப்படுவர்.

குறள் : கற்றதனா லாயபயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்

பொருள் : கற்ற கல்வியின் பயன் இறைவனடியை வணங்குவதே யாகும் என்பது இக்குறளின் கருத்து.

ஒப்புமை : செருக்கு அடைவதற்குக் கல்வி அல்ல என்றும் இறைவன் திருவடியை வணங்குவதற்கு மட்டுமே கல்வி என்ற கருத்து ஒப்புமையாக அமைகிறது.

4. சினத்தைக் காத்துக் கொள்க

நன்னெறி : உள்ளம் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளும் குணமே குணமென்க - வெள்ளந்
தடுத்த லரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்த லரிதோ விளம்பு

பொருள் : சினங்கொள்ளுதல் எளிது சினத்தை அடக்குதல் அரிது ஆதலின் அரியதைச் செய்தலே பெருமை.

குறள் : தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

பொருள் : தன்னைக் காக்க நினைப்பவன் சினத்தை விடவேண்டும் இல்லையெனில் அச்சினமே அவனைக் கொல்லும்.

ஒப்புமை : சினத்தைக் காத்து அரிய பொருளை தேடிக் கொள்ள வேண்டும். இல்லையேல் அச்சினமே எப்படிப்பட்டவரையும் கொன்று விடும் என்ற கருத்தை நன்னெறியும் திருக்குறளும் வலியுறுத்துகிறது.

5. அன்பிலார்க்குச் செல்வம் பயனில்லை

நன்னெறி : **இல்லானுக் கன்பிங் இடம்பொரு ளேவன்மற்று**
எல்லா மிருந்தும் அவற் கென்செய்யும் நல்லாய்
மொழியிலார்க் கேது முதுநூல் தெரியும்
விழியிலார்க் கேது விளக்கு.

பொருள் : அன்பில்லாதவன் இடம் பொருளேவல்களுடையவனா யினும், அவை கொண்டு அறமும் புகழுஞ் செய்து கொள்ள மாட்டான்.

குறள் : அன்பிலார் எல்லாம் தமக்குரியவர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு.

பொருள் : தன்னலமுடையவர் அன்பில்லாதவர்களே அன்புடையவர் சமுதாயத்திற்கு தம்மை உரிமையாக்குவர்.

ஒப்புமை : ஒருவனிடத்து அன்பு இல்லாமல் இருக்குமாயின் அவனிடம் உள்ள செல்வத்தால் சமுதாயத்திற்கு எந்தப் பயனும் இல்லை என்பதையும் அன்பு இல்லாமையால் ஏற்படும் தீமைகளையும் ஒப்புமைப் படுத்துகின்றது.

6. இன்சொல்

நன்னெறி : **இன்சொலா லன்றி இருநீர் வியனுலகம்**
வன்சொலா லென்றும் மகிழாதே - பொன்செய்
அதிர்வளையாய் பொங்கா தழற்க திராற்றண்ணென்
கதிர்வரவால் பொங்குங் கடல்

பொருள் : இன்சொல்லினாலன்றி வன்சொல்லினால் ஒருவரும் மகிழ்ச்சியடையார்.

குறள் : இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

பொருள் : இனிய சொற்களை விடுத்து, கடுஞ்சொல்களைப் பேசுவது பழமிருக்க காய்களைத் திருடித் தின்பது போன்றது.

ஒப்புமை : இன்சொற்களாகப் பேசுவது எல்லோரையும் மகிழ்வித்து கனியைச் சுவைப்பது போன்ற இன்பத்தைத் தரும் என்று இரண்டு ஒத்த கருத்துகளை இவ்விருவரும் கூறுகின்றனர்.

7. பிறர் துன்பம் கண்டு உள்ளங்கசிதல்

நன்னெறி : பெரியவர்தந் நோய்போற் பிறர்நோய்கண் டுள்ளம்
எரியின் இழுதாவர் என்க - தெரியிழாய்
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண்

பொருள் : பிறருக்கு வரும் துன்பத்தைக் கண்டபோது இரங்குதல் பெரியோர்க்கு இயல்பாகும்.

குறள் : அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
தம்நோய்போல் போற்றாக் கடை

பொருள் : பிறருக்கு வரும் துன்பத்தையும் தன் துன்பமாகக் கருத வில்லையானால் பெற்ற அறிவினால் ஒரு பயனும் இல்லை.

ஒப்புமை : பிறருக்கு வரும் துன்பத்தைத் தம் துன்பம் போல் கருதி இரங்குபவர்கள் பெரியோர்கள் என்ற கருத்தை இரு நீதி நூல்களும் ஒப்புமையாகச் சொல்கின்றன.

8. பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை

நன்னெறி : ஆக்கும் அறிவா னலது பிறப்பினான்
மீக்கொள் உயர்விழிவு வேண்டற்க - நீக்கு
பவரார் அரவின் பருமணி கண்டென்றுங்
கவரார் கடலின் கடு

பொருள் : எக்குலத்தினராயினும் அறிவுடையோரை உயர்ந்தவராகவும் அறிவில்லாதோரை இழிந்தவராகவும் கொள்ள வேண்டும்.

குறள் : மேல்இருந்தும் மேலல்லார் மேல்அல்லர் கீழ்இருந்தும்
கீழ்இல்லார் கீழல் லவர்

பொருள் : உயர் நிலையில் இருப்பினும் உயர் குணமற்றவர் உயர்ந்தவரல்லர். தாழ்ந்த நிலையினராயினும் இழி குணம் இல்லாதவர் தாழ்ந்தவரல்லர்.

ஒப்புமை : எக்குலத்தினராயினும், எந்நிலையவராயினும் அறிவுடையோரே உயர்ந்தவர் என்ற கருத்து ஒப்புமையாகக் கொள்ளப்பெறுகிறது.

9. காலத்தில் அறம் செய்க

நன்னெறி : கொள்ளுங் கொடுங் கூற்றங் கொல்வான் குறுகுதன்
உள்ளங் கனிந்தறஞ் செய்துய்கவே - வெள்ளம்

வருவதற்கு முன்னர் அணைகோலி வையார்
பெருகுதற்கன் என்செய்வார் பேசு

பொருள் : இறப்பு வருமுன்னே அறத்தை விரைந்து செய்தல் வேண்டும்.

குறள் : காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

பொருள் : உரிய நேரத்தில் ஒருவர் செய்த உதவி சிறியதானாலும் அந்த உதவியின் பயன் உலகை விடப் பெரிது.

ஒப்புமை : இறப்பு வரும் முன்பு அறத்தையும் உரிய காலத்தில் உதவிகளையும் காலம் அறிந்து செய்து முடித்து விட வேண்டும் என்ற செய்திகளை ஒத்த கருத்தாக கூறுகிறது.

10. மேன்மக்கள் நல்லோரை விரும்புவர்

நன்னெறி : கற்ற அறிவினரைக் காமுறுவர் மேன்மக்கள்
மற்றயர்தாம் என்றும் மதியாரே - வெற்றிநெடும்
வேல்வேண்டும் வாள் விழியாய் வேண்டா
பால்வேண்டும் வாழைப் பழம்.

பொருள் : கல்வி அறிவுடையவரை மேன்மக்களே விரும்புவர் கீழ்மக்கள் விரும்பார்.

குறள் : கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்றசெலச் சொல்லு வார்.

பொருள் : தனக்குத் தெரிந்ததைக் கற்றோர் ஏற்குமாறு சொல்லும் திறமை உள்ளவரே மிகவும் கற்றவர் எனப்படுவர்.

ஒப்புமை : கற்றாரையும் கற்றதைக் கற்றோரிடம் சொல்லுவோரையும் மேன்மக்கள் விரும்புவார்கள் என்ற கருத்து ஒற்றுமை இவ்விரண்டு ஆசிரியர் கருத்துகளிலும் அமையப் பெறுகிறது.

இங்ஙனம் இறைவணக்கப் பாடல் முதல் தக்காரைப் போற்றிக் கொள்ள என்ற நன்னெறி பாடல் முடிய அனைத்துமே சொல்லாலோ, பொருளாலோ ஒத்த கருத்துகளைச் செப்பக்கூடிய வகையில் அமைந்துள்ள பாங்கு இந்நூல் ஆசிரியர்களிடம் காணப்பட்ட சிறப்பு இயல்புகளாக அமைகிறது.

121. சிவப்பிரகாசரின் பக்திக் கோட்பாடு

கோ. ப. நல்லசிவம், தஞ்சாவூர்.

பக்தி என்பது இருவகைப்படும். படமாடும் கோயில் பகவன்மேற் செலுத்துவது ஒரு வகை. நடமாடும் கோயில் நம்பர்களாம் அவனடியார்கள்மேற் செலுத்துவது மற்றோர் வகை. பொதுவாக, பக்தி இலக்கிய ஆசிரியர்கள் இவ்விரு நிலைகளையும் பாடுவது மரபு. அவ்வகையில் நம் பாரத நாட்டில் குறிப்பாக, தென்னகத்தில் கி.பி. 7-ம் நூற்றாண்டில் ஏற்பட்ட பக்தி இயக்கம் அதுவரை வளர்ந்து வந்த பாரபட்சமான அறங்களை, கொள்கைகளை நிராகரித்து, பக்தி என்பது ஆணுக்கு மட்டுமல்ல பெண்ணுக்கும் ஏன் எல்லா உயிர்களுக்குமே பொதுவானது; சாதி, குலம், மொழி, இனம் என்ற எல்லா வேறுபாடுகளையும் கடந்து நிற்பது பக்தி என்ற ஆழமான கொள்கையை மக்களிடையே பரப்பி மக்களுக்கு வாழ்க்கையில் ஒரு பிடிப்பை, பற்றை ஊட்டினர். ஆன்மாவில் ஆண், பெண், மனிதன், மற்ற உயிரினம் என்ற வேறுபாடு கிடையாது என்றுணர்த்தினர் பக்தி இயக்கச் சான்றோர். யானையும், சிலந்தியும், குரங்கும், பறவையும் கூட பக்தி செய்து முக்தி பெற்ற வரலாற்றைத் தம் அருட்பாடல்களில் கூறினர். கயிலாயத்து இருக்கும் இறைவன் உன் ஊரிலும், உன்னுள்ளும் விரும்பி உறைகிறான். இவ்வுடம்பு வெறும் ஊன்பொதி பண்டமல்ல.

இறைவன் உறையும் கோயில் என்றெல்லாம் உடம்பையும், ஆன்மாவையும், மனிதப் பிறவியையும் உயர்த்திப் பேசினர். அவ்வகையில் சிவப்பிரகாசரும் வாழையடி வாழையாக வந்த திருக்கூட்ட மரபினராகையில் அவருடைய பக்திக் கோட்பாடுகளும் பக்தியியக்கச் சான்றோர் கோட்பாடுகளோடு ஒத்தும் காலத்திற்கேற்ப சில வளர்ச்சி நிலைகளைப் பெற்றும் விளங்குகிறது. இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு சிவப்பிரகாசரின் பக்திக் கோட்பாட்டை இக்கட்டுரை ஆய்கிறது.

வீரசைவ நெறி

வீரசைவ நெறி சாதி, குலம், இனம் பாராது இலிங்கதாரணம் செய்து கொண்ட ஆத்மாவைப் பார்க்கிறது. இலிங்கத்தைத் தம் நெஞ்சில் அகத்தும் புறத்தும் ஏற்று நாடோறும் வழிபடுவோர் அனைவரும் வீர சைவர்களே என்னும் கோட்பாட்டை வீரசைவ அடிப்படை நெறியாகக்

காட்டுகிறார் சிவப்பிரகாசர். அதுபோலவே மெய்ஞ்ஞானத்தைப் போதிக்க மனிதரிடையே வேறுபாடுகள் பார்க்கக் கூடாது என்கிறார். பிரபுலிங்க லீலை இரண்டாம் பகுதியில் ஞானாசிரியராகிய அல்லமர் ஆடவர், பெண்டிர், இளைஞர், முதியோர், நல்லார் மட்டுமல்லாமல் பொல்லார்க்கும் மெய்ப்பொருளைப் போதிக்கும் பாங்கை மிக அழகாக அழுத்தமாக எடுத்துரைக்கிறார்.

இறைவனை ஆணவத்தாலோ, அதிகாரத்தாலோ, கல்வியாலோ அடைய முடியாது. அன்பால் மட்டுமே காண முடியும். அவனருளில் தோய முடியும். ''அழுதால் அவனைப் பெறலாமே'', அன்பெனும் பிடியுள் ''அகப்படும் மலையே'' என்பர் ஆன்றோர். அவ்வாறே சிவப்பிரகாசரும், பிரபுலிங்கலீலையில், இறைவன், பார்வதியிடம் உரையாடும்போது, தன் மெய்ப்பொருளின் திரண்ட வடிவாக அல்லமன் மண்ணுலகில் தோன்றியுள்ளான். அவனே யாவர்க்கும் முத்தியடையும் வழிகாட்டுவோன்; அவனை ஆணவத்தால் காணமுடியாது; அன்பால் காணலாம் என்று கூறுவதாகச் சிவப்பிரகாசர் காட்டுகிறார். பார்வதிதேவி அல்லமனை மாயையெனும் ஆணவத்தால் காண முயன்று தோல்வியடைவது முதற் பகுதியாகவும் அன்பால் காண்பது இரண்டாம் பகுதியாகவும் பிரபுலிங்க லீலை அமைகின்றது.

தலபுராணங்கள் உணர்த்தும் பக்திக் கோட்பாடுகள்

சிவப்பிரகாசர் பக்திக் கோட்பாட்டை விளக்கத் தமிழில் பல்வேறு வடிவங்களை, வகைகளைக் கையாள்கிறார். அவற்றுள் தலபுராணமும் ஒன்று. நம்முடைய சமயக் குரவர் நால்வரும் இமயம் முதல் குமரி வரை யாத்திரை மேற்கொண்டு பாடிப் பரவிய வரலாறு நாமறிந்ததே. ''தேடிக் கண்டு கொண்டேன் திருமாலொடு நான்முகனும் தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே தேடிக் கண்டுகொண்டேன்'' எனும் மனப்பக்குவம் யாத்திரை பல செய்து பல தலங்களை வழிபட்டாலே உண்டாகும் என நம்பினர் சமயக்குரவர்கள். அவ்வகையில் அவர்கள் தலங்கள்தோறும் பாடியவையே சைவத் திருமுறைகள், இப்படித் தலங்கள் தோறும் சென்று பாடும்போது அவர்களின் பாடல்களில் அத்தலத்தின் பெருமைகள், அத்தல இறைவன் பெருமைகள், தீர்த்தம், இயற்கைச் சூழல் இவற்றையும் பதிவு செய்தனர். இவையே பிற்காலத்தில் தலபுராணங்களாக எழுந்தன எனலாம்.

சிவப்பிரகாசர் திருக்கூவத் தலபுராணம், சீகாளத்திப் புராணத்தில் கண்ணப்பச் சருக்கம், நக்கீரச் சருக்கம் என்னும் இரு சருக்கங்களும் பாடியுள்ளார். பொதுவாகத் தலபுராணங்கள் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றின் பெருமைகளைக் கூறும். இதில் மூர்த்தியாகிய விற்கோலநாதரின்

பெருமைகளைக் கூறும்போது தருமசீலர் எனும் பக்தரின் மேன்மையைச் சிவப்பிரகாசர் புலப்படுத்துகிறார். திருக்கூவத்தில் தருமசீலர் என்னும் அடியார் நாள்தோறும் அடியார்கட்கு அன்னம்பாலித்து வருகிறார். அப்படி செய்து வருகையில் அவர்க்கு வறுமை ஏற்படுகிறது. தம் மனைவியின் தாலியையும் விற்று அன்னம்பாலிப்பைத் தொடர்கிறார். கடைசியில் அச்செல்வமும் தீர்ந்து அன்னம்பாலிப்பில் தடை ஏற்படும் நிலை காணவொண்ணாது உயிர் துறக்கத் துணிகிறார். இறைவன் அவரைத் தடுத்து நாள்தோறும் ஆலயத்தில் அவருக்காக ஒரு குடம் நெல் வைப்பதாகக் கூறி மறைந்தார். அவரும் அடியார்களைத் தொடர்ந்து அமுதூட்டி மகிழ்ந்தார். இவ்வரலாறு நமக்குப் பெரியபுராணத்து இளையான்குடி மாறரை நினைவுறுத்துகிறது. முன்னரே குறிப்பிட்டது போலப் பக்தியில் இரண்டாவது வகையான அடியார் பக்தி ஈண்டு தருமசீலர் வரலாற்றில் சிவப்பிரகாசரால் சுட்டப்படுகிறது.

பக்தியால் எதையும் சாதிக்கலாம்

எலும்பைப் பெண்ணாக்கியதும், கல்லைத் தெப்பமாக்கியதும், அரவந் தீண்டிய பிள்ளையை எழுப்பியதும், முதலையுண்ட பிள்ளையை மீட்டு அருளியதும், ஊமைப் பெண்ணைப் பேச வைத்ததும் பக்தியே என்று நால்வர் நான்மணிமாலையில் குறிப்பிடுகிறார் சிவப்பிரகாசர். உதாரணமாக அப்பர் கல் மிதப்பில் உய்ந்த செய்தியை

''பாட்டான் மறைபுகழும் பிறைசூடியைப் பாடிமகிழ்
ஊட்டா மகிழ்சொல் லிறைவனைப் பாடி யுவப்புறுக்க
வேட்டான் மலிபெருங் கல்லவன் போல மிதப்பனெனப்
பூட்டா மறிதிரை வார்கடற் கேவிழப் போதுவனே''

(நால்.நா.ம. 18)

என்ற பாடல் உயிர்த்தல் காணலாம்.

அதைப் போலவே கூவத் தலபுராணத்திலும் பக்தியால்; இலிங்க வழிபாட்டால் பழி, பகை, அச்சம், துன்பம், பிணி, நிந்தை, வறுமை, சோகம், மோகம் அத்துணையும் நீங்கும் என்று உறுதியாகக் கூறுகின்றார்.

இதனை

''அல்லலும் பழிகளும் பகையு மச்சமுஞ்
செல்லலும் பிணிகளுஞ் செயிரு நிந்தைகள்
சொல்லலு மிடியும்வெஞ் சோக மோகங்கள்
புல்லலு மிலிங்கபூ சனையிற் போகுமால்''

(திருக்கூ.பு. திரிபுரதகன. சருக்.12)

என்ற பாடல்வழி அறியலாம்.

நம்பிக்கையூட்டல்

பக்தி செலுத்துவதில் முக்கியமான அடிப்படையான ஒன்று நம்பிக்கை. நம்பிக்கையில்லாத பக்தி வெறும் வெற்றுப் பகட்டாகவே இருக்கும். மழை வேண்டிப் பிரார்த்தனைக்குச் செல்பவர்கள் கண்டிப்பாகக் குடையுடன் செல்ல வேண்டும் என்பார்கள். காரணம் தாம் செய்யும் பிரார்த்தனையால், பக்தியால் உறுதியாக மழை வருமென நம்ப வேண்டும். அதுபோல நம்முடைய ஊரும், நம்முடைய கோயிலும் நம்முடைய ஊரில் உள்ள நீர்நிலைகளும் உயர்ந்தவை அவற்றிலும் இறைவன் விரும்பி உறைகிறான் என்று நம்ப வேண்டும். ஏதோ காசியில் சென்று கங்கையில் மூழ்கினாலே பாவம் தொலையும் என்றெண்ணாது நம்மூர் தீர்த்தமும் கங்கையே அதுவும் பாவம் தீர்க்கும் என நம்பினால் அக்கங்கையே நம் தீர்த்தத்தில் வரும் என்ற நம்பிக்கையை ஊட்டினர் பக்தியியக்கத் தொடக்க காலச் சான்றோர். ஆயின் நம் சிவப்பிரகாசர் ஒருபடி மேலே சென்று திருக்கூவத்திலுள்ள தீர்த்தம் கங்கையை விட, புனிதமானது; திருக்கூவம் காசியை விட, உயர்ந்தது என்று கூறியதோடு மட்டுமல்லாமல் காசியில் செய்த பாவம் கூட கூவத்தில் தீரும் என்று குறிப்பிடுவது ஈண்டு குறிக்கத்தக்கது. இத்தலத்தின் தீர்த்தமாகிய அச்சிறுகேணி பாவமாசினைக் கழுவுவது என்று போற்றுகிறார். இதனைத்

''தக்கநற் காசி யாதி
    தலங்களி னிழைத்த தீமை
முக்கணெம் பெருமா னேய
    முழுதுறுங் கூவத் தெல்லை
புக்கவக் கணமே தீரும்
    போற்றுமந் நகரிற் செய்த
மிக்கவெம் பவம வற்றால்
    விலக்கிடப் படாதா லென்றும்'' (திருத்தலச் சருக்கம் - 59)

''கைத்தலங்கொண் டிறுத்தவிடத் தெழுந்ததுநம்
    பவமாசு கழுவு நீராய்'' (திருத்தலச் சருக்கம் - 71)

இப்படியாகச் சமயத்தில் நம்பிக்கையூட்டிப் பக்தியைச் செலுத்தும் பாங்கைச் சிவப்பிரகாசர் காட்டுகிறார்.

உடம்பு உயர்ந்தது

''காயமே இது பொய்யடா வெறும் காற்றடைத்த பையடா'', ''ஊன் நாறும் பண்டம்'' என்றெல்லாம் உடம்பை இழிவுபடுத்தி உரைத்து வந்த போக்கை மாற்றி இப்படிப்பட்ட உடம்பிற்கு மெய் எனப் பெயரிட்டனர் நம் ஆன்றோர். ஏனெனில் மெய்யாகிய பரம்பொருள்

இதில் வந்து உறைவதால் இதுவும் மெய்யே என்றனர். அவ்வகையில் ஒவ்வொரு உறுப்புமே இறைவனைப் பணியவே உள்ளது என்பார் அப்பர். சிவப்பிர்காசர் இலிங்க வழிபாட்டினைப் பற்றிக் கூறுகையில் வழிபாட்டில் அவ் இலிங்கப் பெருமானைத் தாங்கும் கையானது மிக்க சிறப்புடையது என்று அக்கையினைப் போற்றுகிறார். இதற்காகப் பத்துக் கலித்துறைகளைக் கொண்ட 'கைத்தலமாலை' என்ற இலக்கியமும் படைத்துள்ளார். உதாரணமாக

''முன்ன மாலய னிந்திர னமரர்கண் முனிவர்
பன்னு மாரணம் போற்றுதற் கரியநம் பரமன்
மின்னு லாவிய சடாடவிக் கடவுள்விற் றிருப்ப
என்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே'' (கைத். 1)

இதனையே, குமரகுருபர சுவாமிகள் இறைவனைக் கண்ட கண், அவன் புகழ் கேட்ட வார்செவிகள், அவனை வணங்கிய தலை, அவன் புகழ் பாடும் வாய் முதலிய எல்லாம் வாழ்க என வாழ்த்துவார். அப்பாடல்.

''வாழி திருமன்றம் கண்ட மலர்க்கண்கள்
வாழி பெருமான் புகழ்கேட்ட வார்செவிகள்
வாழி அவனை வணங்கு முடிச்சென்னி
வாழி அவன்சீர் பாடும் வாய்'' (சிதம்பர செய்யுட்கோவை)

வேறுபாடு காணாத பக்தி

திருநாவுக்கரசர் தம் தாண்டகமொன்றில் இறைவனுடைய அடியவரென்றால் அவர் யாராயினும் அங்கமெலாந் அழுகிய தொழுநோயரானும், ஆவுரித்துத் தின்றுழலும் புலையரானாலும் அவர் யாம் வணங்கும் கடவுள் என்கிறார்.

''சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்லா ராகில்
அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவு ளாரே''

(அப்பர். 6 : 937)

பெரியபுராணமும் புலையர், வேடுவர், குயவர், அந்தணர் என்ற எல்லா நிலையினரின் பக்தி மேம்பாட்டினையும், அவர்கட்கு, இறைவன் ஒரே தன்மையான அருள் செய்த திறத்தையும் உரைக்கின்றது.

வைணவத்திலும் பரமபாகவதராக யார் இருப்பினும் அவர்கட்குக் குலம், சாதி, இனம் ஓர் தடையல்ல என்று அனைவரையும் ஏற்றுக் கொள்கிறது. திருமழிசையாழ்வார், திருப்பாணாழ்வார் போன்றோரையும் ஒப்பவே மதிப்பர் வைணவர். இந்நிலை பக்தியியக்கத்திற்கேயுரிய தனிச்சிறப்பு. சிவப்பிரகாசர் வீரசைவம் போற்றும் தகையவராதலின் வீரசைவத்தின் அடிப்படையே வேற்றுமை காணாத பக்தி என்ற கொள்கையை வலியுறுத்துகிறார். மகளிர்க்கும் சமஉரிமை பக்தியில் உண்டு என்கிறார். நால்வர் நான்மணிமாலையில் சமயக்குரவர் நால்வரைப் போற்றிப் பரவிய சிவப்பிரகாசர் சீகாளத்திப் புராணத்தில் வேடுவராகிய கண்ணப்பரின் பக்தியை விதந்து போற்றுகிறார். சீகாளத்திப் புராணத்தில் இரு சருக்கங்களே சிவப்பிரகாசரால் எழுதப்பட்டிருப்பினும் அவற்றுள் ஒன்று கண்ணப்பரின் புகழ்பாடும் கண்ணப்பச் சருக்கம் இடம்பெற்றிருப்பது தனிச்சிறப்பிற்குரியதாம்.

எனவே சிவப்பிரகாசரின் பக்திக் கோட்பாடு என்று பார்க்கையில் இலிங்க வழிபாடு, அடியார் வழிபாடு, நம்பிக்கை, சமநோக்கு, வேற்றுமை காணாத சமயப்பற்று, சைவ சமயத்தின் ஏற்றம், பக்தி எதையும் சாதிக்கும் எனும் துணிபு என்பதே. இவையெல்லாவற்றையும் இன்னும் சுருக்கி ஒரே தொடராக்கினால் அதனை 'வீரசைவ நெறி' எனலாம்.

122. சிவப்பிரகாசரின் சமூக அக்கறை

த.கோ. பரமசிவம், தஞ்சை.

இல்லற வாழ்வில் ஈடுபட்ட பெரியோரினும் துறவு வாழ்வில் தலைநின்ற பெரியோர் சமூக உணர்விலும் அக்கறையிலும் தலைநின்றவர்களாகக் காணப்படுகின்றனர். பாரதத் திருநாட்டின் முனிவர்களும் சித்தர்களும் உலக வாழ்வை விட்டு ஒதுங்கியவர்களாக இருந்தாலும் அவர்களின் தவம், ஆய்வு, வாழ்க்கைமுறை அனைத்தும் இல்லறத்தார்க்கே பயன்படுமாறு அமைந்தன என்பதை நம் முந்தைய வரலாறுகள் காட்டுகின்றன. எந்தச் சமூகத்தை, ஊரை, இல்லறத்தை விட்டு ஒதுங்கினார்களோ அவற்றுக்காகவே நாளும் உழைத்து ஆய்ந்து பலவற்றை வெளிப்படுத்தினர். அவர்கள் வாயிலாகக் கிடைத்த புராணங்களும், இலக்கியங்களும் இலக்கண நூல்களும் பிற அறிவியல் நூல்களும் இக்கூற்றை நிறுவுவனவாம். அந்த வரிசையில் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளும் நம் ஆய்வுக்குத் துணை நிற்கின்றார்.

நம் பாரத மண்ணின் கலை, வழிபாடு, நாகரிகம் சிதைந்த போதெல்லாம் ஞானிகளும் முனிவர்களும் அருளாளர்களும் தோன்றி அவற்றைச் சிதைவினின்றும் காப்பாற்றி நிலை நிறுத்திய வரலாற்றை நாம் நன்கறிவோம். சாதி, சமயம், குலம், தொழில் என வேறுபட்ட சமூகத்தில் ஒருமையை, ஆன்ம நேய ஒருமைப்பாட்டை நிலைநிறுத்த வழிகண்ட காலத்து எளிமையுடனும் உறுதியுடனும் தோன்றிய இயக்கமாக பக்தி இயக்கம் மலர்ந்தது. நீ உயர்ந்தவன், உன் ஊர் உயர்ந்தது, உன் ஊரிலுள்ள நீர் உயர்ந்தது. நீ எக்குலத்துத் தோன்றியிருப்பினும் எத்தொழிலைச் செய்தாலும் ஆண்டவனிடத்துக் காட்டும் அன்பில் பக்தியில் ஒன்றியிருந்தால் போதும் எல்லா நன்மைகளையும் அடையமுடியும் என்ற ஒருமை பக்தியுணர்வைத் தன்னம்பிக்கை என்னும் கயிற்றால் கட்டி நிலைநிறுத்திக் காட்டியது பக்தி இயக்கம். அந்தப் பக்தியியக்கம் விளைவித்த பயன் ஏராளம். தமிழை, தமிழ் நாகரிகத்தை, தமிழ் அறிவியலைத் தூக்கி நிறுத்தி பெருமை கொண்டது அவ்வியக்கம்.

ஆழ்வார்களும் நாயன்மார்களும் பக்தியியக்கப் பாசறை வழியாகத் திருக்கோயில் வழிபாட்டை தன்னம்பிக்கை உணர்வுடன் வளர்த்தனர். இறைஉணர்வை உண்டாக்குவதே அவர்களது குறிக்கோள் என்றாலும் அவர்கள் கொண்ட மொழி என்னும் ஊடகம் இந்தக் குறிக்கோளைக்

கூட ஐயுறச் செய்கின்ற நிலையில் காணப்படுகிறது. அவர்கள் பக்திப் பயிரை வளர்த்தார்களா? மொழிப்பயிரை வளர்த்தார்களா என்பதை உறுதியாக்க முடியாத நிலையில் ஒன்றை ஒன்று விஞ்சி நிற்பதாகக் காணப்படுகிறது. பக்தி இயக்கம் இல்லையேல் தமிழ் அழிந்திருக்குமோ... வடமொழிபோல் வழக்கொழிந்த மொழியாகி இருக்குமோ என்று சொல்லுமாறு அவர்களின் தமிழ்ப் பற்றும் தமிழ் உணர்வும் காணப் பட்டன. ஐந்தாம் நூற்றாண்டு முதல் பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை இவ்வியக்கம் அருமையாகச் செயற்பட்டது. பின்னர் வந்த அரசியல் மாற்றங்கள், பிறமொழித் தாக்கங்கள் இவ் இயக்கம் கண்ட வளர்ச்சியில் தொய்வை உண்டாக்கின. குறிப்பாக 15, 16-ம் நூற்றாண்டுகளில் இத்தொய்வு அதிகமாகி மீண்டும் சாதி, இன, மத மோதல்களும் வேறுபாடுகளும் தலைதூக்கின.

கலை வாழ்க்கைக்காக

இச்சூழலில்தான் பதினேழாம் நூற்றாண்டில் தமிழகத்தில் இரு பெரிய தமிழ்க்கவிஞர்கள் தோன்றினர். சிற்றிலக்கிய வளர்ச்சியின் வேந்தர்களாக அவர்கள் விளங்கினர். பிரபந்த வேந்தராகிய குமரகுருபர சுவாமிகளும், கற்பனைக் களஞ்சியமாகிய சிவப்பிரகாச சுவாமிகளும் அச்சிறப்புமிக்க கவிஞர்களாவர். இருவருமே தமிழுடன் பிறமொழி களிலும் வல்லவர்களாக விளங்கிய போதிலும் தமிழை உயர்வாக மதித்துப் போற்றிப் பாராட்டினர். அந்த வகையில் பக்தியியக்கம் கண்ட பக்தி, ஒருமைப்பாடு, மனிதநேயம் ஆகியவற்றை மீண்டும் துளிர்க்கச் செய்வதற்காக பாடுபட்டவர்களாக இவர்கள் காணப்பட்டனர்.

இருவரும் கலை வாழ்க்கைக்காக என்னும் கொள்கையைக் கொண்டவர்கள். இதனினும் ஒருபடி மேலாகச் சென்று கலை வாழ்க்கையினின்று உய்தி பெறுவதற்காகவே என்னும் கோட்பாட்டில் இலக்கியமும் பிற கலைகளும் இறைவனை நோக்கியதாகவே இருத்தல் வேண்டும் என்னும் கொள்கையில் தலைநின்றனர். இறைவனைப் பாடுகின்ற பாடல்களே திருப்பாடல்கள், மற்றெல்லாம் தெருப்பாடல்களாக வீழ்ந்து விடும் என்று நம்பினர். சிவப்பிரகாசரின் இலக்கிய நோக்கும் போக்கும் இந்த அடிப்படையிலேயே இயங்கின.

சிந்தனை கலங்கி இணைவிழி இருண்டு
　　செவிகளும் செவிடுபட்டு ஐம்மேல்
உந்திட உயிர்போம் பொழுதுநின் வடிவம்
　　உளங்கொளும் பரிசுஎனக்கு அருள்வாய் (சோண. 38)

விரைவிடை இவரும் நினைப் பிறவாமை
　　வேண்டுநர் வேண்டுக மதுகரம்

பெருகுறு தமிழ்ச்சொன் மலர்நினக் கணியும்
பிறவியே வேண்டுவன் தமியேன் (சோண. 39)
குன்றுதோறு ஆடுங் குமரனே எனவுங்
கொடுஞ்சிலை மதனவேள் எனவும்
புன்தொழில் மனிதர் புகழ்ந்து பாழ்க்குஇறைக்கும்
புலமை தீர்த்து எனக்கருள் புரியாய் (சோண. 19)
சோற்றுத் துறையும் திருநெய்த்தா
னமுமீங் குடையான் சுழலாமற்
நோற்றுப் பசிநோய் தொலைப்பன்அவன்
தனையே துதியீர் புலவீரே (கலம். 9)

இது போன்ற பல இடங்களிலும் அவர்தம் இலக்கிய நோக்கும் போக்கும் தெளிவாகத் தெரிகின்றன. இவர்தம் பிற இலக்கியப் பண்புகளைப் பார்க்கும் போதெல்லாம்

'சந்தி பொருந்தித் தகும்சீர் கெடாது அடுக்கிப்
புந்தி மகிழ்அற் புதஅணித்தாம் - முந்தையோர்
செய்யுள்போற் செய்த திருக்கோயில்' (உலா - 66)

என்று அவர் பாடிய இலக்கணத்துக்கே இலக்கியமாய் இலங்கும் தன்மையை உணரலாம். ஆக, சிவப்பிரகாசர் மொழியை, இலக்கியத்தை, அதன் சுவையைக் கொண்டு இறைவனை உணர்த்தியுள்ளார் என முழுமையாக நம்பலாம். இது வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துடன் இணைக்கத் துணை செய்யும் என்றால் அது மிகை யாகாது. இப்பண்பை ஊட்டுவதற்காகவே அவர் இலக்கியத்தைச் சுவைபட ஊட்டினார் என்றால் அது மிகையாகாது.

கற்பனை வளம்

சிவப்பிரகாசர் கற்பனைக் களஞ்சியம் எனப் பாராட்டப்பெறும் சிறப்பைப் பெற்றவர். அவர்தம் நூல்களில் பிறநூல்களில் காணப்பெறாத கற்பனை வகைகளும் கற்பனைச் சூழல்களும் காணப்படுகின்றன. இயற்கை, செயற்கை காட்சிகளில் கருத்துகளில் கற்பனைகளைக் காண்பது போலவே இறைவடிவங்களிலும் கற்பனையைக் காண்பவர் அவர். நூல்களிலும் பாக்களிலும் கூட இறைவடிவைக் கற்பனையாகப் போற்றுபவர் நம் சிவப்பிரகாசர். திருக்குறளின் ஒன்றேமுக்கால் அடியை இறைவனின் அர்த்தநாரீச வடிவத்தின் முதல்அடி சிவபெருமான் காலாகவும் இரண்டாமடி உமையம்மையள் காலாகவும் கண்டு மகிழ்கின்ற சிறப்பை வேறு புலவரிடம் காணுதல் முடியா.

என்னடிகள் வெண்குறள் நேரடியி ரண்டும்
என்தலையி லிருந்துமிறை வெங்கை நாட்டில்

முன்னடிகள் இரண்டுநெடி லடிகள் பின்னர்
    முயங்கடிகள் இரண்டுநே ரடிக ளாகப்
பன்னடிகள் ஒருநான்கு கொடுந டக்கும்
    பழுதகல்வெண் டுறைபோலப் படர்த லாலே
பின்னடிகள் எங்கடிதிரு வடிகண் முன்னர்ப்
    பெயர்ந்தவடி யெழிலிளஞ் சேயடிக ளாமே.

(வெங்கைக்கலம். 42)

சிவனது வடிவங்களில் தோய்ந்து நிற்கும் நம் சிவப்பிரகாசர் அங்கேயும் தம் கற்பனையையும், நகைச்சுவையையும் படர விட்டே காண்கின்றார்.

பாக மொருபெண் குடியிருக்கும்
    பரமன் அணியிற் பரித்தமணி
நாக நுழைவுற் றுடல்சுருண்டு
    கிடந்து நகுவெண் தலைப்புழையிற்
போக மெல்லத் தலைநீட்டிப்
    பார்த்து வாங்கப் போருமொரு
தோகை மயில்வா கனப்பெருமாள்
    துணைத்தாள் கமலர் தொழுதிடுவாம் (சோணசை. 23)

இப்பாடலில் முருகனின் மயிலைக் கண்டு சிவனிடமுள்ள பாம்பு அஞ்சுவதும் ஒடுங்குவதும் மெல்ல எட்டிப் பார்ப்பதும் என மீண்டும் மீண்டும் செயற்படுவதை நகைச்சுவைபட கற்பனை செய்துள்ள திறத்தை வியக்கலாம்.

அவ்வாறே பிள்ளைகளின் குறும்பு விளையாட்டைத் தெய்வ வடிவங்களிலும் காட்டி மகிழ்கின்றார் நம் சிவப்பிரகாசர்.

அரனவ னிடத்திலே ஐங்கரன் வந்துதான்
    ஐயவென் செவியைமிகவும்
அறுமுகன் கிள்ளினான் என்றே சிணுங்கிடவும்
    அத்தன்வே லவனைநோக்கி
விரைவுடன் வினவவே அண்ணன்என் சென்னியில்
    விளங்குகண் எண்ணினன்என
வெம்பிடும் பிள்ளையைப் பார்த்துநீ அப்படி
    விகடமேன் செய்தாய்என
மருவுமென் கைந்நீள முழமளந் தான்என்ன
    மயிலவன் நகைத்து நிற்க

(தனிப்பாடல் செந்தமிழ் நூல்கள், ப. 21)

எனத் தொடர்கின்ற பாட்டில் முருகன் பிள்ளையார் குறும்பு விளையாட்டை ஏதோ மனிதர்களிடம் காண்கின்ற குறும்புபோல் கற்பித்துள்ளார் சிவப்பிரகாசர்.

மிகச் சிறிய நிகழ்ச்சியைக்கூட மிக அழகிய கற்பனையுடன் படம் பிடித்துக் காட்டுவதில் அவர்க்கு நிகர் அவரே எனலாம்.

பலர்புகழ் மணிமா டத்துப்
பறக்கும்ஒண் கிளியொ ழுங்கில்
இலைசெரு கியப சும்பூந்
தோரணம் இசைய வார்த்தார் (பிரபு. சூனிய. 9)

மாடங்களில் வளர்க்கின்ற பச்சைக்கிளிகள் ஆரவாரித்துக் கொண்டு மேலெழும்பி வரிசையாகப் பறக்கின்றன. அக்காட்சி ஏதோ வானத்துக்குப் பச்சை மாவிலைகளால் தோரணம் கட்டி விட்டது போல இருந்தது என்கிறார்.

இவ்வாறு அவர்தம் கற்பனை வளம் பல்வேறு சூழல்களில் பல்வேறு வடிவங்களில் பல்வேறு சொல்லணிகளுடன் காட்சிகளை உருவாக்கியும் அமைந்தது என்றால் அது மிகையாகாது. இது தமிழிலக்கிய உலகுக்குக் கிடைத்த நல்ல கொடையாகும். செய்யுள் வளம் சீராக உருவாவதற்குக் கிடைத்த நல்ல உரமாகும். எனவே கற்பனை அணி வகைகளிலும் தமிழை அவர் வளப்படுத்தினார் என்பது முற்றிலும் பொருந்துவதாகும்.

தமிழை உயர்த்துதல்

சிவப்பிரகாசர் வீரசைவ நெறிகளைப் பாராட்டி, பின்பற்றி, பறைசாற்றி வாழ்த்தியவராவார். இட்டலிங்கம் எனும் தம் மார்பில் அணிந்திருக்கும் லிங்க வடிவை அவர் பலவாறு பாராட்டி மகிழ்ந்துள்ளார். நாள்தோறும் அந்த லிங்கத் திருமேனியைத் தம் கைகளில் இருத்தி அபிடேகம் செய்து மகிழ்வதில் வாழ்நாளின் கடமை உள்ளதாகவே, பிறவிப்பயன் பெறுவதாகவே கருதினார். அச்சிவலிங்கம் தம் கைகளில் எழுந்தருள என்ன மாதவம் செய்ததோ எம் கைகள் என்று தம்மையே வியந்து பாராட்டிக் கொண்டார்.

இது அவரது வீரசைவக் கோட்பாட்டை உணர்த்துவதாகும். மொழியையும் இலக்கியத்தையும் அதற்குரிய ஊடுபொருளாகவே கொண்டார் என்றாலும், அவர் பன்மொழிப் புலவராகத் திகழ்ந்த போதிலும், தமிழைப் பெரிதும் உயர்த்திப் பேசும் பாங்கு பாராட்டும் படி அமைந்திருக்கிறது. வேதத்தை விட திருமுறைகள் உயர்ந்தன, உணர்வுப் பூர்வமாவன, தமிழ் உயிரோட்டமும் பக்தியுணர்வும் நிரம்பப்

பெற்ற மொழி, இத் தமிழ்மொழி சமயக் குரவர்களின் மொழியான போது பல அற்புதங்களைச் சாதித்தது எனப் பலவாறு ஆங்காங்கே இலைமறை காயாகவும் வெளிப்படையாகவும் அறிவிக்க அவர் தயங்கியதேயில்லை. திருமுறையாசிரியர்களையும் சிவனடியார்களையும் அவர்தம் மொழிகளையும் பொன்னே போல் போற்றித் தம் நூல்களில் பதிவு செய்து பாராட்டியுள்ளார். சமயஞ் சாராத திருக்குறளை அவர் தொட்ட தொட்ட இடங்களிலெல்லாம் போற்றியுள்ளார். இவை அவர்தம் தமிழறிவுக்கும் தமிழ்க் காதலுக்கும் கட்டியம் கூறுவனவாகக் காணப் படுகின்றன.

வாசகன் புகன்ற மதுர வாசகம்
யாவரும் ஓதும் இயற்கைத்து ஆதலின்
பொற்கலம் நிகர்க்கும் பூசுரர் நான்மறை
மட்கலம் நிகர்க்கும் மதுர வாசகம்
ஓதின் முத்தி உறுபயன்
வேதம் ஓதின் மெய்ப்பயன் அறமே (நான்மணிமாலை - 32)

தமிழின் எளிவந்த தன்மையையும் பரவலாகிய தன்மையையும் எவ்வளவு உறுதியாக வெளிப்படுத்துகிறார்?

இன்னொரு இடத்தில் தமிழ்மறையின் உயர்வைச் சிவப்பிரகாசர் இன்னும் ஒருபடி மேலாகவே காட்டி மகிழ்கின்றார். இந்தப் பாடல் சிவப்பிரகாசரை மிகத் தெளிவாக இனங்காட்டிய பாடலாகும். தமிழுணர்ந்தார் அனைவரும் இப்பாடலைக் கேட்டிருப்பர். கடவுள் மறுப்புக் கொள்கையினரும் இப்பாடலை முணுமுணுப்பர். இது சிவப்பிரகாசர் பாடல்தான் என்றுகூட பலருக்குத் தெரியாது. ஆனால் பாடல் தெரியும். அந்த அளவுக்கு நம் புலவரை நிலைநிறுத்திய தமிழுணர்வில் புடம்போட்ட தங்கமாகக் காட்டிய சிறப்பு இப்பாடலுக்கு உண்டு.

விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கண்
காரணன் உரையெனும் ஆரண மொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூ ரண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்த தென்குவீர் ஆயின்
வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சுநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவா சகம்இங்கு ஒருகால் ஓதிற்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப்பு எய்தி

அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகின் மற்றையர் இலரே. (நான்மணி. 4)

வடமொழியும் பிற மொழிகளும் ஆட்சி செய்த காலத்து, திருக்கோயில் பெயர்களும் இறைவன் பெயர்களும் கூட வடமொழிக் கோலம் கொண்டு ஆட்சி செய்த காலத்தில் எவ்வளவு துணிவாக இப்படிப் பாடுகிறார் பாருங்கள். இத்துணிவுக்குத் தமிழ்க் காதலின் ஆழமும் அகலமும்தானே காரணம்.

சமூக உணர்வு

சிவப்பிரகாசர் துறவு வாழ்க்கை மேற்கொண்டவர். தனிக்குடும்ப வாழ்வை வெறுத்து ஒதுங்கியவர். என்றாலும் சமூக உணர்விலும் கூட்டுப் பொறுப்பு நடவடிக்கைகளிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அவர் இயற்றிய பிரபுலிங்கலீலை, நன்னெறி, திருக்கூவப்புராணம் போன்ற நூல்களை நுணுகி ஆய்வார் இக்கூற்றை நம்புவர். மொழி ஒரு சிறந்த ஊடகம் என்பதை உணர்ந்த அவர், அம்மொழியின் ஆற்றலைத் தம்முள் பெருக்கிக் கொண்டு இத்தமிழினத்துக்கு வேண்டிய கல்விச் செல்வத்தை வாரி வழங்கினார். இப்பண்பில் அவர் மிகச்சிறந்த தந்தையாகவும் மிகச் சிறந்த தாயாகவும் விளங்கினார்கள் என்றால் அது மிகையாகாது. பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பித்து வேறுபாடுகளைத் தூண்டும் கயவர்களைக் கண்டிப்பதோடு சாதி குலம் நீத்தவர்கள்தாம் இறைவனைக் காண முடியும் எனும் கொள்கையிலும் தலைநின்றவராகக் காட்சி தருகிறார்.

சாதியுங் குறியுநீத்துச் சரணரைச் சிவனேஎன்று
பாதபங்கய மிறைஞ்சிப் பத்திசெய்குவன்நம் நந்தி
(பிரபு. அக்கமா. 47)

வெற்றுச் சடங்குகளாலும், வேடங்களாலும் இறைவனைக் காணமுடியாது. நிலையான உள்ளன்பு ஒன்றே அவனிடம் எடுபடும். சாதி, குலம், கோத்திரம், தவம், தானம், தருமம், விதிவழி வேட்டல் என எதுவும் அன்பில்லையேல் பயனற்றதாகிவிடும் என்கிறார் நம் சிவப்பிரகாசர். இந்தச் சமூக உணர்வில் நம் நாவுக்கரசர் பெருமானின் பாவநாசத் திருப்பதிகம் சொல்லும் உணர்வுகளில் ஒன்றித்திருக்கக் காணலாம்.

அண்ணல் ஐம்முகங்களும் அருளும் ஆகமம்
நண்ணிய விதிமுறை நன்கு செய்யினும்
எண்ணரும் அன்புளத்து இல்லை யேஎனிற்
பண்ணிய பூசனை பயன்தரா தரோ (பிரபு. மாயை - 14)

இது போன்ற பாடல்கள் சாதீய, சடங்குகள் பெருகி இருந்த காலங்களில் சீர்திருத்தப் பாடல்களாகவே அமைந்திருக்க வேண்டும். எனவே

சமூக உணர்வில் தலை நின்றவர்களாகவே நம் சிவப்பிரகாசர் விளங்குதல் காணலாம்.

கைத்தலமாலை, இட்டலிங்க அபிடேக மாலை போன்ற நூல்களில் சிவப்பிரகாசர் கொண்ட தன்னம்பிக்கை, தம்மை, தம் பிறவியை, தம் உடலை, தம் வழிபாட்டை, உயர்ந்ததாகவே காணும் பெற்றியைக் காணலாம். இது அவர்தம் சுயமரியாதைப் போக்கைக் காட்ட வல்லது எனலாம். இறைவனது அடியை முடியைக் காணாது தவித்தவர்களுக் கெல்லாம் எட்டாதவர் என் கைகளில் கோயில் கொண்டாரே! என் அன்பில் கட்டுண்டு யான் செய்யும் வழிபாட்டை ஏற்கிறாரே... தேவர் களுக்கும் எட்டாத அப்பரம் பொருள் என்கைத் தலத்தில் அமர்ந்ததே. என் கைகள் என்ன புண்ணியம் செய்தன... என வியந்து தம்மை, தம் பிறப்பைப் போற்றுகிறார். இதுதானே சுயமரியாதை!

இவ்வாறு துறவியான நிலையிலும் மொழி ஒரு சிறந்த ஊடகம் என்பதை உணர்ந்து மொழியில் வல்லமை பெற்று அம்மொழி வழி யாகவே சமூக சிந்தனைகளை விதைத்து, தாமும் தம்மைச் சூழ்ந்தவர் களும் உய்தி பெறுவதற்காகவே நாளும் உழைத்த நம் சிவப்பிரகாசரைத் துறவி என்று ஒதுக்கலாமா? அவர் நம்முள் ஒருவர், நம்மினும் மேலானவர். வாழ்க அவர்தம் தமிழும் தமிழ்ப்பற்றும்.

123. சித்தியாரும் சிவப்பிரகாசரும்

சிறுத்தொண்டன், கோவை.

மேலாம் ''சிவபரம்பொருளை - உயிரை - உலகைப்'' பற்றி வெகு விரிவாக ஆய்ந்துரைப்பனவே பதினான்கு சாத்திரங்களாகும். அதில் வரும் ''சித்தியார், இருபா இருபஃது'' எனும் இரு நூல்களையும் அருளியவர் அருணந்திதேவ நாயனாராவர். இவர் 'சிவஞான போத' ஆசிரியரான மெய்கண்டாரின் தலை மாணவராவார்; இவரின் 'சிவஞான சித்தியார்' எனும் நூல் சித்தாந்தத்தின் பிழிவும், எளிமையும் கொண்டதாகும். துறைமங்கலம் சிவப்பிரகாசர் கற்பனைக் களஞ்சியம் என்ற சிறப்புப் பெற்றவர். ''மாலை, கலம்பகம், உலா, பிள்ளைத்தமிழ், கோவை போன்ற பல நூல்களை யாத்துள்ளார். இவர் பாடிய நூலில் 'சிவப்பிரகாச விகாசம்' எனும் நூல் முப்பொருள் உண்மை பற்றிக் கூறும் நூலாகும். இவ்விரு நூலைச் சிந்திப்பாம்.

சைவ அன்பர்கள் முதலில் தெரிந்து கொள்ள வேண்டியவை 'முப்பொருள் உண்மை' பற்றியாகும். இது பற்றிய சிந்தனை அறிவு, தெளிவிற்கும், பிறவிப் பிணி நீக்கத்திற்குரிய வழிபாட்டுச் செந்நெறிக்கு ஊக்கமும், தரவல்லதாகும். சித்தாந்த நூல்கள் எல்லாப் பொருள்களையும் மூன்று வகையுள் அடக்கி ''பதி, பசு, பாசம்'' என வகுத்துள்ளனர். இவற்றை 'கடவுள்-உயிர்-மறைப்பு' என்றும் 'இறை-உயிர்-தளை' என்றும் உரைப்பர். அந்நூல்களை நான்கு வகைகளாகப் பகுத்துரைப்பர் (பிரமாண இயல் - இலக்கண இயல் - சாதன இயல் - பயன் இயல் என்பன). பிரமாணமாவது: 'பதி, பசு, பாசம்' எனும் முப்பொருள்களையும் உள்ளன எனவும், அளவை முறையால் துணிவிப்பர்; இலக்கணமாவது : உள்ளன என துணிவிக்கப்பட்ட அம்முப்பொருள்களின் இயல்பு எனக் கூறுதல்; சாதனமாவது: முப்பொருள்களின் பயனைப் பெறுவது இது. அது அதனைப் பெறுதற்கு உரிய வழி இது; அவ்வழியில் முயலும் முறை இது எனக் கூறல். பயனாவது: பயனைப் பெறுவதற்குரிய வழியில் முயன்ற பின்னர், அம்முயற்சியால் அமையும் பயன்கள் இவை எனக் கூறுதலாகும்.

இனி 'இல்லது தோன்றாது' ஆகலானும், 'உள்ளது அழியாது' ஆகலானும் வேறுபட்ட மூன்று தன்மைகளால் வேறு வேறாய் அறியப் படும் மூன்று பொருள்களுள் 'யாதொன்றனையும் ஒருகாலத்துத் தோன்றிற்று

என்றோ, ஒரு காலத்து அழியும் என்றோ, கூறுதல் கூடாமையால் முப்பொருளும் அனாதி நித்தியப் பொருள்கள்' என்றே கொள்ள வேண்டும்.

மேலும், 'மாறுபட்ட பலதன்மை ஒரு பொருட்கண் இருத்தல் இயலாது' என்பதும், ஒரு சித்தாந்த உண்மை. அஃதாவது 'தட்பமும், வெப்பமும் மாறுபட்ட தன்மைகள்'. அதனால் அவை இரண்டும் ஒரு பொருளிடத்தே இருத்தல் இயலாது. உண்மையும், இன்மையும் மாறுபட்ட தன்மைகள். அதனால் அவை இரண்டும் ஒரு பொருளிடத்தே இருத்தல் இயலாதென இவ்வாறே காண்க. (முப்பொருட்கு)

பதியின் இயல்பு

தன்னையே நோக்கி நிற்கும் பரசிவம், அந்நிலையினின்று நீங்கி, உலகத்தை நோக்குங்கால் தனது சிறப்பியல்புகளுள் ஒன்றாய - பெருங்கருணை காரணமாக உயிர்களின் பொருட்டுத் தானே, தனது விருப்பத்தால் தனது ஆற்றலைக் (சக்தியை) கொண்டு பல்வேறு நிலைகளை உடையதாம். அந்நிலைகள் யாவும் பதிக்குப் பொது இயல்பு எனப்படும், தடத்த இலக்கணங்களாகும். அவை அனைத்தும் பதியினது அனந்த சக்தியாகிய அளவில்லாத ஆற்றலால் வருவனவே யாகலின், பதியினது பொது இயல்பு யாவும் சக்தியினால் ஆவனவேயாம். அதனால் பதி சொரூப நிலையில் சிவம் என்றும், தடத்த நிலையில் சத்தி என்றும் சொல்லப்படும். சொரூப நிலையில் சத்தி தொழிற்படாது அடங்கியிருத்தலால், பதி, சிவம் என ஒன்றேயாய்; தடத்தநிலையில் சத்தி தொழில்பட சிவம் அதனோடு அத்தொழிலையெல்லாம் உடன் இயைந்து இயற்றி நிற்றலால் 'சிவமும் சத்தியும்' என இரண்டாய் நிற்கும்.

தடத்த நிலையில் சத்தியினால் பதி பல நிலைகளை உடையதாகும். அந்நிலையில் அதற்கு உருவம் உண்டு, தொழில் உண்டு. அவற்றிற்கேற்ற பலப் பல பெயர்களும் உண்டு. ஆயினும் இவையனைத்தும் அருள் காரணமாக உண்மையில் கொண்டனவேயன்றி வெறுங்கற்பனையல்ல. தடத்த இலக்கணம் சொரூப இலக்கணம் போல உண்மையானதாகும். சில ஏகான்மவாதிகள் பிரமப் பொருளை 'நிர்க்குணப் பிரமம்', சகுணப் பிரமம் எனக் கூறும் நிலையே சைவ சித்தாந்தம் கூறும் சொரூப நிலை, தடத்த நிலை எனக் கூறுகின்றனர்; அவ்வாறன்று. ஏகான்மவாதிகள் கூறும் நிர்க்குணப் பிரமம் ஒரு குணமேனும் இல்லாதது. சைவ சித்தாந்தம் கூறும் சொரூப சிவம், ஆறுகுணம், எட்டுகுணம் மற்றும் பலகுணங்களை உடையது. ஏகான்ம வாதிகள் கூறும் சகுணப்பிரமம் மாயாகுணம் உடையது. சைவசித்தாந்த சிவம் என்றும் மாயைத் தொடர்பு இல்லாதது. ஏகான்ம வாதிகள் கூறும் சகுணப் பிரமம் கயிற்றில் அரவு போல, நூற்றுக்கு நூறு பொய்த்

தோற்றம். சைவ சித்தாந்தம் கூறும் தடத்த சிவம் நூற்றுக்கு நூறு உண்மைப் பொருள். ஆகவே ஏகான்மவாதிகள் கூறும் நிர்க்குண சகுணப் பிரமங்கட்கும், சைவ சித்தாந்தம் கூறும், சொரூப, தடத்த சிவங்கட்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்பதை முதலில் நாம் நன்கு புரிந்து கொள்ளல் வேண்டும்.

''உலகம்எலாம் ஒருவனோடு ஒருத்தி ஒன்றுஎன்று
உளதாகி நின்று அளவில் ஒடுங்கும், பின்னும்
மலம்அதனால் உளதாகும் உருவம் மாறி
வருவது போவது செல்வது ஆதலானும்
அலைவில் அசேதனம் மாயை ஆதலானும்
அணுக்கள் உருஅடையும் அறிவிலாமையானும்
நிலவுதொழில் மருவி உருநிற்றலானும்
நின்று எவையும் அளித்திடுவன் நிமலன்தானே''

(சித்தியார் - 16)

''ஏற்றஇவை அரன்அருளின் திருவிளை யாட்டாக
இயம்புவர்கள்; அணுக்கள் இடர்க்கடல் நின்றும் எடுத்தே
ஊற்றம்மிக அருள்புரிதல் ஏதுவாக
உரைசெய்வர், ஒடுக்கம், இளைப்பு ஒழித்தல், மற்றைத்
தோற்றம் மலபாகம்வர, காத்தல் போகம்
துயிரித்தல், திரோதாயி நிறுத்தல் ஆகும்
போற்றல் அரும்அருள் அருளே; அன்றிமற்றுப்
புகன்றவை அருள்ஒழியப் புகழ்ஒணாதே''

(சித்தியார் - 18)

''சங்கற் பத்தால் கடம்குயவன் தன்னால் செய்யப் படாததனால்
அங்குக் குயவன் காண கருத்தாவாய்த் தேகி விகாரியாம்
சங்கற் பத்தில் சிவன்சத்தி கன்னி திக்கட் கலக்குதலால்
துங்கக் குடிலை தலையவன்தான் சொல்லின் அவிகாரியன்
அன்றே''

''உண்ணும்உயிர் வினைவழியால் உயிர்கட் கெல்லாம்
உறும்இன்ப துன்பங்கள் ஊட்டலாலே
கண்ணுதல் எம்முதல்வனோர் இட்ட மல்லன்
கருதில் அவன்இட்டூரேன் தானுமல்லன்
ஒண்ணுறும் அந்தர்யாமி யாகி யுள்ளான்
நயமுறுதன் சத்தியால் புறத்து நூலால்
எண்ணரிய சுதந்தானாய் நிறைந்த ஈசன்
எவ்வுயிர்க்கும் கத்துருவாய் இருக்கு மன்றோ''

(சிவப்பிரகாச விகாசம்)

பசு நிலை

முதற்கண் எங்கும் எல்லாவற்றையும் அறியும் தன்மைத்தாகிய அறிவை, ஒன்றையும் அறியவொட்டாது அடியோடு மறைத்து இருள் மயமாக்கி, இருட்டறையில் அகப்பட்ட கண்ணில்லாக் குழவியைப் போலப் பேரிடருக்கு உள்ளாக்கியது ஆணவ மலம்.

''காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற
கண்ணில்லாக் குழவியைப் போல் கட்டுண்டிருந்த எமை''
(தாயுமானவர்)

உயிருக்கு உள்ள இத்துன்பத்தினை அறிந்து இரங்கிய இறைவன், அவ்வாணவ இருளைப் போக்குவதற்கு விளக்குப் போல மாயை யினின்றும் உடம்பு முதலியவற்றை அவற்றின் கன்மத்திற்கு ஈடாகப் படைத்துக் கொடுக்க அவைகளைப் பெற்று, பிறப்பு இறப்புகளில் அகப்பட்டு மேல், கீழ், நடு உலகங்களில் சென்று, இன்பம், துன்பம், மயக்கம் இவைகளை நுகர்ந்தும் நினைப்பு மறப்புக்களை அடைந்தும்; வரும் இன்னல்களை எல்லாம் ஆணவ மலச் சார்பினால் உண்டாயினவே; சுட்டறிவு - சார்பு உடையதாம். (ஆன்மா)

நினைப்பு, மறப்புக்கள் ஐந்து நிலைகளாகக் கூறப்படும். அவை 'சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்' (நனைவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல்).

ஒரு மலம் உடையவர் - விஞ்ஞானகலர் (ஆணவம்)
இரு மலம் உடையவர் - பிரளாயகலர் (ஆணவம், கன்மம்)
மும் மலம் உடையவர் - சகலர் (ஆணவம், கன்மம், மாயை)

''விச்சையில் அராகம் தோன்றி
வினைவழி போகத்தின் கண்
இச்சையைப் பண்ணி நிற்கும்
தொழில், அறிவு, இச்சை மூன்றும்
வைச்சபோது இச்சா ஞானக்
கிரியை முன்மருவி ஆன்மா
நிச்சயம் புருடன் ஆகிப்
பொதுமையின் நிற்பன் அன்றே'' (சித்தியார்)

''வரும் குணவடிவாய் மூலப்பிரகிருதி கலையில் தோன்றித்
தரும் குணம் மூன்றாய் ஒன்றில்தான் மூன்றாய் மும்மூன்றாகும்
இரும் குணரூபமாகி இயைந்திடும் எங்கும் ஆன்மாப்
பெரும் குணவடிவாய்ப் போகசாதனம் பெந்தம் ஆமே'' (பெத்தம்)
(சித்தியார்)

''மும்மலமொடுஉறு சகலன் மரபியம்பின் மலத்தினால் மூடமாயம்
ஐம்மலியுரு சிற்சத்தி யுளனாகி அச்சித்து வயங்குதற்குப்
பொய்மலியும் கலாதியொடு புணர்ந்துவினை போகத்தின் பொருட்டடைந்து
மெய்மறையும் உயிர்சகலன் எனப்படும் என்றாகம நூல் விளம்புமன்றே''

(சிவப்பிரகாச விகாசம்)

''பிரளயகா லத்திலுறு கலாதிஉப சங்காரம் பெறுதலாலே விசாரம்
இருள்மலம் ஒன்று உற்றதனால் மறைப்புறும் ஒண்சிற்சத்தி இசைந்த
மருவிய வாதனையாதி மனமாயை யுறும்எனலாம் அம்மாயை மேவுங்காலம்
கருமமலி பாகமுறாக் கலையுடயன் பிரளாய கலன் என்றாமே''.

(சிவப்பிரகாச விகாசம்)

''விரிதலுறும் விஞ்ஞான யோக சன்னியாச முதல் விதியினால் முன்
கருமம் அழிவுறுதலினால் சகருமனுங் காவிறகால கலாதிமாய
மருவிமலம் ஒன்றோடு சூனிய காயனாகிமிக வயங்கு ஞானக்
கிரியையுளன் விஞ்ஞான கேவலன் என்றறையும் அரன் இலங்குநூலே''

(சிவப்பிரகாச விகாசம்)

பாச நிலை

பாசத்தின் பாற்பட்டதே 'ஆணவம் - மாயை - கன்மம்' ஆகும்.

உயிர்களின் அறிவை அடியோடு மறைத்து அறியாமை வடிவாகச் செய்வதே ஆணவ மலத்தின் தன்னியல்பு எனப்படும் சொரூப இலக்கணம்.

மாயை கன்மங்களின் சார்பு உண்டாய பொழுது அவை உயிரின் அறிவை விளக்குமிடத்துப் பொருள்களை உள்ளவாறு உணர ஒட்டாது. உயர்ந்த பொருளை இழிந்த பொருளாகவும், இழிந்த பொருளை உயர்ந்த பொருளாகவும் மயங்கி உணரச் செய்வதே ஆணவ மலத்தின் பொது இயல்பாகும்.

ஒன்றையும் அறியவொட்டாது மறைக்கும் ஆற்றல் 'ஆவாரக சக்தி' என்றும், பொருள்களை உள்ளவாறு உணரவொட்டாது மாறி உணரச் செய்யும் ஆற்றல் ''அதோ நியாமிகா சக்தி'' என்றும் சொல்லப்படும். தெய்வப் புலவர் தம் குறட்பாவில் இதனை - ''இருள்சேர் இருவினை - இருள் நீங்கி இன்பம் பயக்கும்'' என்றும் ''பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும் மருள்'' என்றும் குறிப்பிடக் காணலாம்.

ஆணவ மலம் உயிர்க்கு இடையில் வந்ததன்று. 'செம்பில் களிம்பு போல்' உயிருடன் தோன்றியதாகும். எனவேதான் இதனை 'சகச மலம்'' என்றும் ''மூலமலம்'' என்றும் கூறுவர்.

மாயையும், கன்மமும் மலங்களே எனினும் அவை ஆணவ மலத்திற்குப் பகைப்பொருளாய் அதனை நீக்குதற்கு இறைவனால் உயிர் களுக்குச் சேர்க்கப்பட்டன. அதனால் இவை **'ஆகந்துக மலம்'** எனப்படும். (ஆகந்துகம் - இடையில் வந்தது). மாயை கன்மமாகிய செயற்கை மலங் களால் இயற்கையாய ஆணவம் நீங்குதல், - (உவர் மண், சாணம் - முதலிய செயற்கை அழுக்குகளால், ஆடையில் உள்ள இயற்கை அழுக்கு நீங்குதல் போல்வதாகும்)

ஆணவம் உயிரின் அறிவை மறைப்பது, அறிவை விளக்கி அவ்வறிவு, எல்லா பொருட்கும் மேலாய்ப் பரந்து நிற்கும் பரம்பொருளை உணருமாறு விரிவடையச் செய்வதே மாயை, கன்மங்களின் தன்னியல்பு என்னும் சொரூப இலக்கணமாகும்.

'மாயை, கன்மம்' என்னும் இரண்டனுள் மாயையே உலகமாய்ப் பரிணமிப்பது, கன்மம் அங்ஙனம் மாயை பரிணமிக்கு மாற்றிற்கு ஏதுவாய் நிற்பது.

தனு - பரு உடம்பு
கரணம் - நுண்ணுடம்பாகிய மனம் முதலிய அந்தக் கரணம்.
புவனம் - உடம்போடு கூடிய உயிர்கள் உறை இடம்
போகம் - அவ்வுயிர்கள் இன்ப துன்பங்களை நுகரும் நுகர்ச்சிப் பொருட்கள்

''கருவிஆம் மனமும் புத்தி அகங்காரம் சித்தம் நான்கும்
மருவி ஆன்மாவே என்ன வரும்தீபம் எனத்தெரிந்து அங்கு
ஒருவி ஆன்மாவின் உண்மை உணர்ந்தவர் தமை உணர்ந்தோர்
தரும் இது பசுஞானம், பின் சிவஞானம் தனக்கு மேலாம்''

(சித்தியார் - 192)

''நியதிபின் தோன்றிக் கன்ம நிச்சயம் பண்ணி நிற்கும்
அயர்விலாக் கலைபின் தோன்றி ஆணவம் ஒதுக்கிச் சித்தின்
செயல்புரி கிரியாசத்தி தெரிவிக்கும் சிறிதே வித்தை
உயர்கலை அதனில் தோன்றி அறிவினை உதிக்கப் பண்ணும்''

(சித்தியார் - 145)

எண்ணரும் உயிர்கள் ஞானக் கிரியைகள் எலாம் மறைப்புப்
பண்ணுபல் சத்திபெற்றோன் ஆகும் ஆணவ பாசந்தான்

கண்ணுறு படலம் போலக் கழிபொருளாகித் தன்கண்
நண்ணுறும் அனேகசத்தி நவிலுறும் பந்தத் தீப்போல்''
(சிவப்பிரகாச விகாசம்)

''அறிவிலதாகி யொன்றாய் அநாதிஆணவந்தான் நின்ற
முறையெது வாகும் என்னில் நெல்லுமி தவிடு போலப்
பிறவியின் ஏதுவாகும் பிறங்குசெம் புறுகளங்கம்
செறிவுறு குளிகையால் போம்செய்கைபோல் தீக்கையில் போம்''
(சிவப்பிரகாச விகாசம்)

இருவர் போற்றும் நல்வாழ்வு

1. ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம், உபகாரம், உறவு, சீலம்
வழுக்கிலாத் தவம், தானங்கள் வந்தித்தல், வணங்கல் வாய்மை
அழுக்கிலாத் துறவு அடக்கம் அறிவோடு அர்ச்சித்தல் ஆதி
இழுக்கிலா அறங்கள் ஆனால் இரங்குவான் பணி அறங்கள்''
(சித்தியார்)

2. யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வம் ஆகி ஆங்கே
மாதொரு பாகனார் தாம்வருவர், மற்றத் தெய்வங்கள்
வேதனைப் படும் இறக்கும் பிறக்கும் மேல்வினையும் செய்யும்
ஆதனால் இவை இலாதான் அறிந்து அருள் செய்வான் அன்றோ''
(சித்தியார்)

3. மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினிது ஏனையவர்
பேசுற்ற இன்சொல் பிறிதென்க - ஈசற்கு
நல்லோன் எறிசிலையோ நன்னுதால் ஒண்கருப்பு
வில்லோன் மலரோ விருப்பு (நன்னெறி)

4. ''தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர் - திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகின்
நிறையிருளை நீக்குமே னின்று'' (நன்னெறி)

''நல்லினத்தின் ஊங்கு துணைஇல்லை''
''நல்லாற்றான் நாடி அருள் ஆள்க''

எனும் வள்ளுவம் போற்றி - வையத்து வாழ்வாங்கு வாழ்வோம்.

124. நன்னெறியின் வாழ்வியல் அறங்கள்

மா. சாந்தி, புதுக்கோட்டை.

உணர்ச்சியூட்டாது உண்மையை உணர்த்தி அறிவைத் தூண்டி இன்புறுத்துவதோடு அறிவுறுத்தும் இயல்பினதே நீதி இலக்கியங்கள். இலக்கிய வரலாற்றில் நீதி இலக்கியங்கள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் என்று அழைக்கப்பெறுகின்றது. இவற்றில் தலைசிறந்த நீதிநூலாகக் கருதப்படுவது வள்ளுவம், இந்நூல் மனிதன் மனிதனுக்குச் சொன்ன அறநூலாகத் திகழ்கிறது. இதில் அறிவுறுத்தும் கருத்துக்கள் மிகுதியாக இருந்த போதிலும், சிறப்பு மிக்கதோர் இலக்கியமாகப் போற்றப் பெறுகிறது. வள்ளுவத்திற்குப் பிறகு நாலடியாரும் பிற நீதிநூல்களும் தோன்றின. திரிகடுகம், ஏலாதி முதலிய மருந்துப் பெயருடைய நீதி நூல்களும் இடைக்காலத்தில் ஔவையார் பாடிய நீதிநூல்களும் பின்னர் பாரதியாரின் ஆத்திசூடியும் இவற்றை அடியொற்றி கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் தோன்றிய சிவப்பிரகாசரின் நன்னெறியும் மக்களை நல்வழிப்படுத்துகின்றது.

நன்னெறியில் அமைந்துள்ள அறக்கருத்துக்களாகிய 1. பெரியோரைப் போற்றுதல் 2. இல்லறப்பண்பு 3. நட்பாராய்தல் 4. சினத்தைக் காத்தல் 5. பிறப்பால் உணர்வு தாழ்வு இல்லை 6. கைம்மாறு கருதாது உதவுதல் 7. காலத்தில் அறம் செய்தல் என்னும் ஏழு நிலைகளில் வாழ்வியல் அறங்களை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மக்கள் வாழ்க்கை உயர்ந்த குறிக்கோளைக் கொண்டதாக அமைய வேண்டும் என்ற நோக்கத்தில் சமூகத்தை நல்வழிப்படுத்த நீதிநூல்கள் தோன்றின. அறக்கருத்துக்கள் வழி மனம் தெளிவுப் பெறவும் குற்றங்கள் நிகழாது இருக்கவும் மக்கள் தன்னைத்தான் நெறிப்படுத்திக் கொண்டு வாழ வழிக்காட்டியாக அமைந்துள்ளது சிவப்பிரகாசரின் நன்னெறியாகும். இவற்றில் முதல் நிலையாகச் சொல்லப்படுவது பெரியோரைப் போற்றுதல்.

உயர்ந்தோராக, சான்றோராகச் சொல்லப்படும் பெரியோர் சமூகத் திற்கு நல்ல வழிகாட்டியாக அமைகின்றவர்கள். அவர்களின் இயல்பைப் பின்பற்றினால் வழிநடந்தால் உயர்வடையலாம் என்கிறது அறநூல்கள். அறிவால் விரிந்து பண்பால் நிறைந்தவர்களைப் பெரியோர் என்கிறது நன்னெறி.

"அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண்" (குறள் - 983)

என்ற இக்குறள் சான்றோருக்கு இலக்கணம் கூறுகிறது. பெரியோரின் பண்புகள் தன்னை சார்ந்தவரிடத்தில் கொள்ளும் அன்பு, பழிபாவங் களுக்கு நாணும் நாணம், எல்லார்க்கும் உதவியாக ஒழுகும் ஒப்புரவு, பழகியவர்களிடத்தில் செலுத்தும் கண்ணோட்டம், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத வாய்மை ஆகிய ஐந்து பண்புகளும் ஒருங்கே அமையப் பெற்றோர் பெரியோர் என்கிறார் வள்ளுவர்.

பெரியோர் என்பர் ஒப்புரவு, கண்ணோட்டம் மிக்கவர்கள் என்பதை,

"என்று முகமன் இயம்பா தவர்கண்ணுஞ்
சென்று பொருள் கொடுப்பர் தீதற்றோர்" (நன். 1)

என்று தமக்கு அன்பு காட்டாதவரிடத்தும் தாமே சென்று அவர்க்கு வேண்டும் பொருளை வழங்குவர் என பெரியோரை உயர்த்திக் காட்டுகிறார் சிவப்பிரகாசர். நடுநிலையுடன் ஆராய்ந்து அறிந்து கடந்த காலத்தையும் இனிவரும் காலத்தையும் நிகழ்காலத்துடன் ஒப்பிட்டுப் பார்த்து, நாட்டிற்கும் மக்களுக்கும் நல்லனவற்றைச் செய்யும் பண்பினர், மேலும் தங்குறையை நீக்காது பிறர் குறையை நீக்கும் உயர்ந்த உள்ளம் கொண்டவர் என்பதை,

"தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர் நிற்பார் விழுமியோர்" (நன். 10)

என்னும் இப்பாடல் வழி வலியுறுத்தப் பெறுகிறது.

விழுமியோர் தம் நலத்தைச் சிந்தனைச் செய்யாது சமுதாய நலன் நாடும் பேரருளாளராக விளங்கும் பண்புடையவர். இத்தகையவரை நீதிநூல்கள் மட்டும் உயர்ந்தோராகப் புகழவில்லை. பல்லாண்டு முன்பு தோன்றிய சங்க நூல்களும் உயர்த்திக் காட்டுகிறது.

"பிறர்க்கென முயலும் போருள் நெஞ்சம்"

என்ற நற்றிணையும்,

"தனக்கென வாழாப் பிறர்குரி யாவன்"

என்று அகநானூறும்,

"தனக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுநர்"

என்று புறநானூறும் புகழ்கிறது.

மேலும் உயர்ந்தோர், தம்மைச் சார்ந்தவர் தம்மிற்றாழ்ந்தவராயினும் செருக்கின்றி அவரிடம் தேடிச்சென்று பாதுகாப்பர் என்று நன்னெறி எடுத்துரைக்கிறது. மானுடத்தில் சாதி, மத, இனப்பாகுபாடு இல்லாது உதவும் உள்ளம் படைத்தவர்கள் இருக்கிறார்கள். இத்தகையவரால்தான் உலகம் நிலைப்பெற்றுள்ளது என்பதை கலித்தொகை,

''பிறர்நோயும் தம்நோய் போல் போற்றி அறனறிதல்
சான்றவர்க்கு எல்லாம் கடன்'' (கலி - 139)

என எடுத்துரைக்கின்றது.

'வாடிய பயிரைக் கண்டபோது வாடினேன்'

என்ற வள்ளலாரின் மனப்பான்மை, எல்லா உயிரையும் தன் உயிர் போல் எண்ணும் எண்ணம் மக்களுக்கு வேண்டும் என்பதை அறிவுறுத்துகிறது.

''மண்ணுல கதிலே உயிர்கள்தாம் வருந்தும்
வருத்தத்தை ஒரு சிறிதெனினும்
கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும்
கணமும் நான் சகித்திட மாட்டேன்''

என்ற எண்ணம் எல்லாரிடமும் வரவேண்டும் என்பதை எடுத்துக் காட்டுகிறது. நன்னெறியும் பிறருக்கு வருந்துன்பத்தைக் கண்டபோது இரங்குதல் பெரியோர்க்கு இயல்பாகும் என்பதை

''பெரியவர்தந் நோய்போற் பிறர்நோய்கண் டுள்ளம்
எரியின் இழுதாவர் என்க.''

பாடல் மூலம் வெளிப்படுத்துகிறது. பேரறிவுடையோர் பிறருக்கு வருந்துன்பத்தை விரைந்து நீக்கும் தன்மையுடையவர் என்று நன்னெறியும்

''இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு'' (குறள் - 987)

என்று குறளும் விளக்குகிறது. செருக்கின்றி துன்பப்படுபவரை அவரிடந்தேடிச் சென்று பாதுகாப்பவர்களும், வெறுப்பிலும் உதவும் தன்மையுடையவர் பெரியோர்கள். இவர்கள் நெறியானது சமூகத்தை நல்வழிப்படும் பண்பாகும். இவற்றைப் பின்பற்றினால் மனிதர் செம்மையான வாழ்வையடையலாம் என்பது புலனாகிறது.

இல்லறப் பண்பு

கணவனும் மனைவியும் அன்பால் ஒத்து இணைந்து வாழ்கின்ற வாழ்க்கையே இல்வாழ்க்கையாகும். தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான் என்ற ஐவகையிடத்தும் அறநெறி தவறாமல் போற்றுதலே

இல்லறத்தின் கடமையாகக் குறிப்பிடப்படுகிறது. இல்வாழ்க்கை அன்பும் அறமும் உடையதாக விளங்குமானால், அந்த வாழ்க்கை பண்பும் பயனும் உடையதாக அமையும் என வள்ளுவர்,

''அன்பும் அறமும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது'' (குறள் - 45)

என்ற குறளின் வழி விளக்குகின்றார்.

உலகியலின் நன்மைக் கருதி இல்வாழ்க்கையில் இணைந்தவர் ஒரு மனம் உடையவராக வாழவேண்டும். அப்போது தான் தன்னலம் குறைந்து பிறர் நலம் பேணும் நல்லுள்ளம் தோன்றும் என்கிறது அற நூல்கள். இல்வாழ்க்கைக்குரிய அறமாகச் சொல்லப்படுவது, வறியவர்க்கும், துறந்தவர்க்கும், தன்னிடத்தே இறந்தவர்க்கும், தன் இல்லம் நாடி வருகின்ற விருந்தினரைப் போற்றுதலும் இல்லறத்தார் புரியும் அறமாகும். வாழ்வியல் நெறிகளில் தலையாய அறநெறியாக விருந்தோம்பல் சொல்லப்படுகிறது.

''உலகத்தின் பொதுமைப் பண்புகளுள் ஒன்றான விருந்தோம்பல் மானுட வாழ்வின் நேயத்தைக் காட்டும் பெற்றியது. வாழ்வியல் நெறி களுள் தலையாய அறவியல் நெறியாகப் பிறகாலத்தே மாறியது. சமூகவியல் நோக்கில் இவ்விருந்தோம்பும் பண்பு ஒவ்வொரு நாட்டிலும் மானுட நேய இழையாகத் தோன்றுகின்றது. உலகளாவிய ஒருமைப்பாடு மிக்க பண்பாக 'விருந்தோம்பும் பண்பு' இன்னும் விளங்குவதே இப்பண்பாட்டின் சிறப்பைக் காட்டும்'' என்று விருந்தோம்பலின் சிறப்பை டாக்டர் இ. சுந்தரமூர்த்தி எடுத்துரைக்கிறார்.

மேலும் தொல்காப்பியர் இல்லறத்தான் இத்தகையவன் என்பதை,

''காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே. (தொல். கற்பியல் - 51)

இந்நூற்பாவில் வலியுறுத்துகிறார்.

அறத்தைத் தனிமனிதனாக இருந்து செய்தல் கூடாது, கணவனும் மனைவியும் ஒத்துச்செய்யும் அறமே நிறைவேறும் என்று சிவப்பிரகாசர் இல்லறத்தான் செய்யும் அறத்தை

''காதன் மனையாளுங் காதலனும் மாறின்றித்
தீதி லொருகருமஞ் செய்பவே - ஓதுகலை
எண்ணிரண்டு மொன்றுமதி என்முகத்தாய்
கண்ணிரண்டு மொன்றையே காண்.'' (நன் - 6)

இப்பாடல் வழி எடுத்துரைக்கிறார்.

இல்வாழ்வில் ஈடுபட்டு பொருளைப் பாதுகாத்து வாழ்க்கை நடத்துவதெல்லாம் விருந்தினரை உபசரித்து அவர்களுக்கு உதவி செய்வதற்கே ஆகும். சிலப்பதிகாரத்தில் கோவலனைப் பிரிந்த கண்ணகி கணவன் இல்லத்தில் இல்லாமையால் சிறந்த அறஞ்செயல்களைச் செய்ய முடியாமல் போனது.

''அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க் கொதிர்தலும் தொல்லோர் சிறப்பில்
விருந்தெதிர் கோடாலும் இழந்த என்னை.''

என்று வருந்தியதாக இவ்வரிகள் குறிப்பிடுகின்றது. காப்பியக் காலத்திலும் விருந்தோம்பல் சிறந்த அறமாகச் சொல்லப்பட்டுள்ளது புலனாகிறது. மேலும் இறப்பு வருவதற்கு முன்பே அறத்தை விரைந்து செய்தல் வேண்டும் என்கிறார் சிவப்பிரகாசர்.

நட்பாராய்தல்

ஒருவர் ஒருவருடன் பழகும்போது ஏற்படும் அழிவைத் தரும் தீமைகளிலிருந்து நீக்கி, நண்பனை நல்ல வழியில் நடக்கச் செய்து, அழிவு வந்த காலத்தில் உடனிருந்து அவருடன் துன்பப்படுவதே நட்பாகும். ''நட்பு'' என்பது எப்போதும் வேறுபடுதல் இல்லாமல் முடியும் போதெல்லாம் உதவி செய்து தாங்கும் நிலையாகும் என வள்ளுவர் குறிப்பிடுகின்றார். ''ஒருவர் மற்றவருடன் நட்புக் கொள்ளும்போது அவனுடைய குணத்தையும் குடிப்பிறப்பையும் குற்றத்தையும் குறையாத இனத்தாரின் இயல்பையும் அறிந்து அவனோடு நட்புக்கொள்ள வேண்டும் என்பதை,

''குணனும் குடிமையும் குற்றமும் குன்றா
இனனும் அறிந்தியாக்க நட்பு'' (குறள் - 793)

இக்குறளின் வழி வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

நட்புடையவர் எக்காலத்திலும் பிரிதல் கூடாது. நட்பின் முதல் நிலை பிழைப்பொறுத்தல் ஆகும். நெல்லிலும் உமி உண்டு, நீரிலும் நுரை உண்டு அதுபோல நண்பரும் தவறு செய்வதுண்டு, அவற்றைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். பொறுத்துக் கொள்ளாது இடையே பகைமையாற் பிரிந்து பின்னர் மீண்டும் முன்போல் கூடும் நட்பு உறுதியுடையதாக இருக்காது என்பதை

''நீக்க மறும்இருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கி னவர்பெருமை நொய்தாகும் - பூக்குழலாய்
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோற்
புல்லினுள் திண்மைநிலை போம்'' (நன். 5)

இப்பாடல் வழி நட்பில் பிரிவுக்கூடாது என்கிறார் சிவப்பிரகாசர். மேலும் நல்லோருடன் நட்புக்கொள்ள வேண்டும். அத்தகைய நட்பே இனிமையுடையதாக அமையும் என்றும், பயன் பார்த்து நட்பு செய்பவர் நட்பிற்கு ஏற்றவரில்லை என்பதை

''ஊறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர்''. (குறள் - 813)

இக்குறள் விளக்குகிறது. சிவப்பிரகாசர் தீயோர் நட்பு சிறந்தது இல்லை என்று கூறுகிறார். மேலும் கற்றறியாதவர்களிடத்தில் கொள்ளுகின்ற நட்பு தீங்கு விளைவித்தலுக்கு உள்ளாகும் என்கிறார். மூடருடன் நட்புக் கொள்ளுதல் கூடாது அது நட்பிற்குச் சிறப்பில்லை என்பதை நன்னெறி வலியுறுத்துகிறது.

மனிதன் இந்நிலவுலகத்தின் தக அமைப்பிற்கு ஏற்ப வாழ்க்கை நடத்துகின்றான். சமுதாயத்தால் பல மாற்றங்களைச் சந்திக்கின்றான். மனமும் செயலும் தன்நிலையில் இருந்து அடங்காது இருக்கும்போது சினம் கொள்கின்றான். நல்லோனாக, ஆராய்ந்து அறிகின்ற மனம் நிறைந்த நடுநிலையாளனாக, பண்புடையவனாக வாழ்வதற்கு முதலில் சினத்தைக் காக்க வேண்டும் என்கிறார் சிவப்பிரகாசர்.

சினங்கொள்ளுதல், எளிதான செயல் ஆனால் சினத்தை அடக்குதல் அரிது, ஆதலின் நன்னெறி எளியதைவிட அரிவதைச் செய்தல் பெருமை யுடையது ஆகும் என்பதை

''உள்ளம் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளும் குணமே குணமென்க'' (நன். 21)

இப்பாடல் வழி எடுத்துரைக்கிறது. மேலும் மனத்தைக் தன்வயத்தாக்கிக் கொண்டு எழுந்து வளர்கின்ற கோபத்தை அடக்கிக்கொண்டு இன்சொல்லில் பேசவேண்டும் என்கிறது.

மனித இனம் சாதி, சமய, இனம் மற்றும் பொருளாதாரத்தால் உயர்ந்தோன் தாழ்ந்தோன் என்ற வேறுபாட்டை உடையது, இவற்றில் உயர்ந்தகுடியில் பிறந்தவன் உயர்ந்தவன் என்றும் தாழ்ந்த குடியில் பிறந்தவன் தாழ்ந்தவன் என்றும் வேறுபடுத்திக் காட்டுகிறது இச்சமூகம். ஆனால் அறநூல்கள் ''எக்குடியிலும் எம்மக்களும் பிறப்பர் என்கிறது.'' ஒருவர் பிறப்பாலும் பிறவற்றாலும் தாழ்ந்தோனாக இருந்தாலும் கல்வி யறிவுடையோராக விளங்கினால் அத்தகையவரை உயர்ந்தவராக எண்ணப்பட வேண்டும் என்பதை நன்னெறி,

''ஆக்கும் அறிவா னலது பிறப்பினன்
மீக்கொள் உயர்விழிவு வேண்டறிக.'' (நன். - 22)

என்கிறது. மேலும் எக்குலத்தினராயினும் அறிவுடையோரை உயர்ந்த வராகவும் அறிவில்லாதோரை இழிந்தவராகவும் கொள்ள வேண்டும் என்று விளக்குகிறது.

பிறப்பால் உயர்வு தாழ்வை எண்ணாது, சிறப்புடன் கல்விக் கற்றும் பெரியோரைப் போற்றியும் இல்லற மாண்புக்குரிய அறங்களை முறையாகச் செய்து, முகநக நட்புக்கொள்ளது நெஞ்சத்து அகநக நட்புக்கொண்டு, சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லியை நீக்கி, கைம்மாறு கருதாது மற்றவர்க்கு உதவி செய்து ஒரு மனிதன் வாழ்வான் என்றால் வாழ்வில் வெற்றியடைவான் என்பது உறுதியாகும்.

125. திருக்கூவத்தின் வளமை

தி. புஷ்கலா, தஞ்சாவூர்.

தலபுராணங்கள் அடிப்படையில் மூர்த்தி, தீர்த்தம், தலம் பற்றிப் பேசும் சமய இலக்கியங்களாக விளங்குவன. இவற்றில் நாட்டுச்சிறப்பு, நகரச் சிறப்பு, நிலவியல் கூறுகள், அரசர், குடிகள், அறக்கொடைகள், சமுதாயம், பொருளாதரம் சார்ந்த பலதரப்பட்ட செய்திகளும் இடம் பெறுதலால் இவை வரலாற்று ஆதாரங்களாகவும் திகழ்வன. பொதுவாக புராணங்கள், இலக்கியங்கள் போன்றன கற்பனையில் மிதந்து உயர்ந்த விஷயங்களையே படம்பிடித்துக் காட்டும் இயல்பினால் சார்புதன்மை உடையனவாகக் கருதப்பெறுகின்றன. இதன் காரணமாக இவை வரலாற்றாய்வாளர்களால் இரண்டாம் நிலை ஆதாரங்களாகவே மதிக்கப்படுகின்றன. அன்றாட நடைமுறை நிகழ்வுக் குறிப்புகளாகத் திகழும் அரசு மற்றும் தனியார் ஆவணங்கள் (கல்வெட்டு, செப்பேடு, ஓலை மற்றும் தாள், சுவடிகள் போன்றவை) முதன்மை ஆதாரங்களாகக் கருதப்படுகின்றன. இந்நிலையில் இவை இரண்டின் துணைக்கொண்டும் முறையாக மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் நம்பகத் தன்மையுடன் கூடிய தெளிவான வரலாற்றை உணர்த்த வல்லன. அவ்வகையில் செங்கற்பட்டுப் பகுதியில் விளங்கும் கூவம் பற்றிய செய்திகளை சிவப்பிரகாச சுவாமிகளின் திருக்கூவப்புராணம் மற்றும் 18-ஆம் நூற்றாண்டுச் செங்கல்பட்டு ஓலை ஆவணங்களின் வாயிலாக நோக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

திருக்கூவம்

தொண்டைநாட்டு தேவாரப் பாடல் பெற்றத் தலங்களுள் ஒன்றாகத் திகழும் கூவம் ஞானசம்பந்த பெருமானால் பாடப்பெற்ற தலமாகும். இத்தலம் தேவாரத்திலும், பெரியபுராணத்திலும் கூகம், திருவிற்கோலம் எனக் குறிப்பிடப்பெறுகிறது. சிவபெருமான் முப்புரம் அழிக்கச் செல்லும் பொழுது தேர் அச்சினை (கூவரம்) விநாயகர் உடைத்ததாயும், அவ்விடத்தில் அச்சிறுகேணி எனும் குளம் தோன்றியதாயும் கூறப்படுகிறது.

சிவப்பிரகாச சுவாமிகள் தலவழிபாடு நிகழ்த்தும் காலத்து திருக்கூவ நகரில் தங்கி அங்கு உறையும் திருவிற்கோலநாதரை வணங்கி திருக்கூவப் புராணத்தை இயற்றியருளினார். விநாயகர் அச்சிறுத்ததாலும், ஊர்

நடுக்கிணற்றை மக்கள் நாடுதல் போல மூவுலகும் அங்குவந்து சிவனை வணங்கியதாலும் இவ்வூர் கூவம் எனப்பெயர் பெற்றதாக சிவப்பிரகாசர் குறிப்பிடுகிறார். இத்தலபுராணம் 7 சருக்கங்களையும் 703 செய்யுட் களையும் கொண்டது.

சிவப்பிரகாசர் சுட்டும் கூவத்தின் வளமை

சிவப்பிரகாச சுவாமிகள் திருத்தலச் சருக்கத்தில் (பாடல்கள் 17-30) நாட்டுச்சிறப்பில் புனிதம் வாய்ந்த பாலாறு பாய்வதால் பெருகிய அப்பகுதியின் நீர்வளம், நில வளம் இவற்றின் துணைக்கொண்டு ஆற்றப்படும் உழவின் மேன்மை, அதன் பயனாகிய மிகுவிளைச்சல், அவற்றின் முறையான பங்கீடு போன்ற செய்திகளைப் படிப்படியாகக் கூறிச் செல்வதைக் காண முடிகிறது.

பொய்கையும் கிடங்கும் காவும்
புகுந்துலாம் பாலி நீத்தஞ்
செய்களின் மள்ள ரார்ப்பச் . . . . (திருத்தல. 19)

முற்றிடு நளிர்மதி . . . . (திருத்தல. 24)

முண்டக நறைமலர் . . . .
மண்டுறு பெரும்புனல் வயற்க ணிற்பரால் (திருத்தல. 25)

இப்பாடல்களில் பாலியாறு பொய்கை, கிடங்கு, சோலை போன்ற வற்றின் ஊடே புகுந்து தாம் பாயுமிடங்களை வளப்படுத்தியவாறு உழவர்கள் மகிழ வயல்களை நிறைத்து நிற்கும் காட்சியை சிவப்பிரகாசர் விவரிக்கிறார். இதைத் தொடர்ந்து வரும்

அலைபுனற் றண்பனை யகத்துச் செந்நெலோ
நிலைபுடை வளைவுற வீர்மப சுங்கதிர்
நிலைபெற வெழுந்துமே னிமிர்ந்து தோன்றுவ
கொலைமத கரியினங் குசங்கள் போன்றலே (திருத்தல. 26)

எனும் பாடலில் விளைந்து நிற்கும் செந்நெல் கதிர்கள் ஒவ்வொன்றும் யானையின் மத்தகத்தைப் போன்று தோற்றமளிப்பதாகக் குறிப்பிடுகிறார். இது வளமையைப் பறைச்சாற்றும் வர்ணனையாகும். இதன்வழி இப்பகுதி நிலங்களின் உயர் விளைச்சலையும் உற்பத்தித் திறனையுமே எடுத்துக் காட்டுகிறார்.

தொடர்ந்து வரும் பாடல்களில் (28,29) அறுவடைக் கால நிகழ்வு களான கதிரறுத்தல், போர் அடித்தல் போன்ற செய்திகளைக் கூறி இறுதியில்

வேறுறும் பலாலநீத் துலவை மேவுழி
மாறரும் பதடிகண் மாற்றி நெற்கவா

லாறினொன் றரையருக் களித்து மற்றவைங்
கூறுநல் லறங்களிற் டுலவச் செய்வரால் (திருத்தல. 30)

எனும் பாடல் வாயிலாக விளைச்சலில் ஆறில் ஒரு பங்கினை அரசுக்கு செலுத்தி எஞ்சியவற்றை அறங்கள் செய்யப் பயன்படுத்தியதை விளக்குகிறார்.

இவ்வாறாக தொண்டை நாட்டின் வளமையை பலவாறாகப் புகழ்ந்து இத்தகு நாட்டில் நடுநாயகமாகத் திகழ்வது கூவம் என்பதை

இன்னவாகிய வளங்கெழு. . . . . . . (திருத்தல. 38)

எனும் பாடலில் கூறுகிறார். மேலும் நகரச் சிறப்பில் கூவத்தின் இன்னபிற சிறப்புகளையும் எடுத்துரைக்கும் பொழுது

அறந்தலை நிற்ற லாற்பே
ரறிவினாற் கொடையா லன்பான்
மறந்தரு கொலைக ளாதி
மாற்றலால் வாய்மைச் சொல்லா
னிறைந்தவிக் கலியு கத்து
நிலைத்தசீர்க் கூவ மூதூர்ச்
சிறந்தவே ளாள ரானோர்
தேவரென் றறிய லாமால் (திருத்தல. 56)

என்ற பாடலில் கூவம் நகரின் வேளாளர் அறக்கொடைகளில் தலைநின்றதைச் சுட்டுகிறார். இதற்கு மூலக் காரணமாக விளங்குவது இப்பகுதியின் மிகுவளமே என்பதில் சிறிதும் ஐயமில்லை. செந்நெல் வைத்த சருக்கத்தில் கூவமா நகரில் மேற்கொள்ளப்படும் அறக்கொடைகளின் சிறப்பை உணர்த்தும் மாதவர்க்கினிய கூவமா புரத்தோர் எனத் தொடங்கும் பாடலிலும்,

. . . . சிவனடி யவருக்
கங்கையின் றுணைவிளை நிலமொன்
றீதல்செய் பவரெக் காலமு மகலா
திருப்பரொண் கயிலைமால் வரையில் (செந்நெல். 40)

வளமைச் சார்ந்தக் கருத்து தொக்கி நிற்றல் காணலாம். கூவமா நகரத்து விளைநிலங்கள் கையளவு நிலத்திலும் மிகுதியாக விளைவிக்கும் திறனைப் பெற்றிருந்தமையைக் குறிப்பதாக இதனைக் கொள்ளலாம். இதை செங்கற்பட்டு ஆவணங்களும் நிறுவுவதைப் பின்னால் காணலாம். நாட்டுச் சிறப்பில் கூறப்பெற்ற அலைபுனற் றண்பனை - திருத்த. 26 எனும் பாடலும் இங்கு ஒப்புநோக்கத்தக்கது. இதுபோன்று மிகுவளமையைப் படம்பிடித்துக் காட்டும்

ஒருபிடி படியுஞ் சீறிடம்
எழுகளிறு புரக்கும் நாடுகிழ வோயே (புறம். 40)

எனும் பாடலும் ஈண்டு நினைவுக் கூரத்தக்கதாம்.

சிவப்பிரகாச சுவாமிகள் வெளிப்படுத்தும் இத்தகு வளம் பொருந்திய காட்சிகளை சுமார் 1 நூற்றாண்டு கழித்து எழுதப்பட்ட செங்கற்பட்டு ஓலை ஆவணங்கள் புள்ளிவிவரங்களுடன் உறுதி செய்வதை இனிக் காண்போம்.

செங்கற்பட்டு ஆவணங்களில் வளமையும் பங்கீடும்

செங்கற்பட்டு ஓலை ஆவணங்கள் தென்னிந்தியாவில் ஆங்கிலேயர் ஆதிக்கம் தொடங்கிய காலத்தையொட்டி கி.பி. 1760-களில் எழுதப் பட்டவை. வருவாய் கணக்கிடும் கிராமக் கணக்குகளான இவை அச்சமயம் செங்கற்பட்டுப் பகுதியில் விளங்கிய சுமார் 2100 கிராமங்களுக்கான தகவல் தரவுகளைக் கொண்டவை. 18-ஆம் நூற்றாண்டு சமுதாயப் பொருளாதார ஆய்வுகட்கு பெருந்துணை புரியக்கூடிய இவ் ஆவணங்கள் ஒவ்வொரு கிராமத்தின் தரவாரி நிலப்பிரிவுகள் (புறம்போக்கு, மானியம் மற்றும் உயில்பற்று) நிலப்பயன்பாடு, பல்வேறு இன மக்கள், அவர்தம் தொழில், வேளாண்மை, உற்பத்தி, பங்கீடு, தீர்வை போன்ற செய்திகளை தரப்படி வகைஏடு, வாரச்சட்டம், மேரைச்சட்டம், சுதந்திரத் திட்டம், தீர்வை வகையேடு எனும் தலைப்புகளில் மிக விரிவாக அரிய புள்ளி விவரங்களுடன் தருகின்றன. குறிப்பாக தீர்வை வகையேடுகள் 1762 முதல் 1766 வரை 5 வருடங்களின் உற்பத்தி விவரங்களைத் தருகின்றன.

இவற்றின் அடிப்படையில் செங்கற்பட்டு நிலங்கள் மிகுதியான விளைதிறனைப் பெற்றிருந்தமை தெரிய வருகிறது. சுமார் 65 கிராமங்கள் ஆண்டுக்கு ஹெக்டேருக்கு 10 டன்கள் வீதம் உற்பத்தியைப் பெற்றிருந்தன. இது பாரதத்தின் இன்றைய உற்பத்தித் திறனை (ஹெக்டேருக்கு 2 டன்கள்)விட பன்மடங்கு உயர்வானதாகும்.

இத்தகு மிகுதியான வளமை முறையாக செங்கற்பட்டு மக்களால் பகிர்ந்து கொள்ளப்பட்டதையும் இவ் ஆவணங்கள் காட்டுகின்றன. மொத்த விளைநிலத்தில் 25% கிராம மிராசு மானியங்களாகவும், மொத்த விளைச்சலில் 30% தானிய ஒதுக்கீடுகளாகவும் கிராம நிர்வாகத்துடன் தொடர்புடைய சமய கல்வி, கலாச்சார நிறுவனங்கட்கும், கணக்கு, காவல், தூக்கிரி போன்ற கிராமநிர்வாகப் பணியாளர்க்கும், வண்ணான், நாவிதன், குயவன், வெட்டி, தலையாரி போன்ற பல்வேறு கிராமப் பொதுப் பணியாளர்க்கும் அளிக்கப்பட்டு வந்ததை இவ் ஆவணங்கள் சுட்டுகின்றன.

இவ் ஒதுக்கீடுகள் அறுவடையின்போது 4 வித நிலைகளில் அளிக்கப்பட்டன. முதலாவதாக களத்தில் சூட்டடிப்பிற்கு முன்பும் இரண்டாவதாக களமளத்தலுக்கு முன்பும் மூன்றாம் நிலையில் பொது தானியத்திலிருந்தும் நான்காவதாக மேல்வார தானியத்திலிருந்தும் அளிக்கப்பட்டு வந்தன. இத்தகு ஒதுக்கீடுகள் கிராமிய அளவில் மட்டுமன்றி மாகாண அளவிலும் மேற்கொள்ளப்பட்டு வந்தன. சுமார் 15-க்கும் அதிகமான சமயக் கலாச்சார நிறுவனங்கள் 100-க்கு மேற்பட்ட கிராமங் களிலிருந்து மானியம் மற்றும் மேரைப் பங்குகளைப் பெற்றுவந்தன. அவற்றுள் வீரசைவ மடமாகிய காஞ்சிபுரம் பாலைய பண்டாரமும் ஒன்று என்பது சிறப்பாகக் குறிக்கத்தக்கது. இம்மடத்திற்கு சுமார் 172 கிராமங்களிலிருந்து மேரை, மானியப் பங்குகள் சென்றிருப்பதை அறியமுடிகிறது.

இவ் ஆவணங்கள் தெரிவிக்கும் இத்தகு வளமையும் பங்கீட்டு முறையும் சிவப்பிரகாசர் சுட்டும் கருத்துக்களை அரண்செய்வதாகவே அமைகின்றன.

செங்கற்பட்டு ஆவணங்களில் கூவம்

செங்கற்பட்டு ஆவணங்களில் நமக்குக் கிடைத்துள்ள கூவம் பற்றிய ஆவணம் 44 ஏடுகளைக் கொண்டவை. இவற்றில் 24 ஏடுகள் தரவாரி நிலப்பிரிவுகளைக் கூறும் தரப்படி வகையேடுகளாகவும் 20 ஏடுகள் தீர்வை ஏடுகளாகவும் காணப்படுகின்றன. (இவற்றில் பெரும் பான்மையான ஏடுகள் உடைந்தும் சிதைந்தும் காணப்படும் நிலையில் விடுபட்ட தரவுகள் சென்னை ஆவணக் காப்பகத்தில் உள்ள செங்கற்பட்டு ஆவணங்களின் சுருக்கப் படிகளான ஆங்கில ஆவணச் சுருக்கத்தி லிருந்து பெறப்பட்டன.)

இத்தரவுகளின் அடிப்படையில் 1762-ம் வருடம் கூவத்தின் நெல் உற்பத்தியைக் கணக்கிடும்போது 633 காணி நிலப்பரப்பில் 27611 கலங்கள் (ஹெக்டேருக்கு 10.9 டன்கள்) விளைந்திருத்தல் தெரியவருகிறது. இத்தகு உயர் உற்பத்தித் திறன் திருக்கூவப் புராணத்தில் விவரிக்கப் பட்டுள்ள வளமையை மெய்ப்பிப்பதாகவே உள்ளது. இத்தகு வளமைக்கு அடிப்படையாக விளங்கியது இப்பகுதியின் நீர் மற்றும் நில வளமுமே என்பதை இவ் ஆணவச் செய்திகள் உணர்த்தும். இதனைப் பின்வரும் அட்டவணை வாயிலாகக் காணலாம்.

கூவம் – நிலப் பயன்பாடு

நிலப்பிரிவு	எண்ணிக்கை	பரப்பளவு காணியில்
கோயில்	36	11.00
குளம் & குட்டை	23	21.00
மண்டபம்	★	30.00
ஏரி & தாங்கல்	★	220.00
சாவடி	★	0.25
பூந்தோட்டம்	6	6.00
தோப்பு	★	20.00
பாட்டை	2	27.00
பருக்கைமேடு	1	130.00
கயக்கால்வாய்	1	3.50
துரவு	1	0.25
களத்துமேடு	★	40.00
மந்தைவெளி	6	6.00
கிராமநத்தம்	6	65.00
சேரிநத்தம்	6	25.00
ருத்திரபூமி	★	10.00
மொத்தப் புறம்போக்கு		615.00
மானிய நிலங்கள் (நஞ்சை & புஞ்சை)		133.75
வாரப்பற்று நிலங்கள் (நஞ்சை & புஞ்சை)		1302.25
மொத்தத் தரம்		2051.00

★ தரவுகள் விடுபட்டுள்ள நிலையில் இவற்றின் எண்ணிக்கை தரப் படவில்லை.

இதன்படி கூவத்தின் மொத்த நிலப்பரப்பாகிய 2051 காணியில் 63% விளைநிலங்களாகவும் 37% பொதுப்பயன்பாட்டிற்கான புறம்போக்கு நிலங்களாகவும் விளங்கியதைக் காணமுடிகிறது. மேலும் மொத்தப்

புறம்போக்கு நிலப்பரப்பில் 40% பல்வகை நீராதாரங்களை கொண்டு விளங்கியமையும் சிறப்பாகக் குறிக்கத்தக்கது.

தளங்கமழ் கமல வாசச்
. . . .
விளங்கிய கூவ நீரை
வெள்ளங் கொண் டகலு மோதான் (திருத்தல. 57)

எனும் பாடல் வாயிலாக சிவப்பிரகாச சுவாமிகளும் கூவத்தில் நீர் நிலைகள் மிகுதியாக விளங்கியதைக் குறிப்பிடுவதையே இது நினைவுறுத்து கிறது. இவ்வாறாக திருக்கூவப் புராணமும் செங்கற்பட்டு ஆவணங்களும் திருக்கூவத்தின் வளமையை உணர்வதில் ஒன்றுக்கொன்று துணை செய்வதைக் காணமுடிகிறது.

இதுவரை கூறியவற்றால் புராணங்கள், இலக்கியங்கள் போன்றன வெறும் கற்பனையை மட்டும் பிரதிபலிப்பவையல்ல என்பதும், ஆவணங்கள் போன்ற முதன்மைச் சான்றுகளுடன் ஒப்பிட்டு முறையாக ஆய்வு செய்யப்படும் நிலையில் தெளிவான வரலாற்றுச் செய்திகளைத் தரவல்லன என்பதும் எடுத்துக்காட்டப் பெற்றன.

126. 'சிவப்பிரகாசர்தம் சீரிய வாழ்வு'

-செ. இராசு, ஈரோடு.

சைவ உலகில் சிவப்பிரகாசர் என்ற பெயருடைய பெருமக்கள் நால்வர் இருந்து சிறந்துள்ளனர். ஆனால் கற்பனைக் களஞ்சியம், முத்தமிழ்க் கவிதைச் சிவப்பிரகாசர், துறைமங்கலம் சிவப்பிரகாசர், நல்லாற்றூர் சிவப்பிரகாசர் என அழைக்கப்படும் மிகு சிறப்பை உடையவர் நம் சிவப்பிரகாசர் அவர்களேயாவர்.

முப்பத்திரண்டு ஆண்டுகள் வாழ்ந்து சமயம், தத்துவம், தோத்திரம், புராணம் முதலிய பொருள்களில் 34 நூல்களை அருளிச்செய்தார்கள். (திரு. அடிகளாசிரியர் அவர்கள் சிவப்பிரகாசர் ஐம்பத்து நான்கு ஆண்டுகள் வரை வாழ்ந்திருந்தார் என்பர்).

சிவப்பிரகாச நற்றவத்தோன், சிவப்பிரகாசஐயன், சிவப்பிரகாசத் தவப் பெருந்தகை, சிவப்பிரகாச முனிவர் என்றெல்லாம் சிவப்பிரகாசர் சிறப்பிக்கப்பட்டுள்ளார்.

தனிப்பெரும் தந்தையார்

சிவப்பிரகாசரின் தந்தை பற்றிக் குறிப்பிடும் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் 'ஏதோ ஒரு நகரில் இருந்த வேளாளன்' என்று கூறுகிறார். ஊரையும், பெயரையும் குறிப்பிடவில்லை. ஆனால் ''சர்வார்த்த சித்தி'' என்று பெயரிட்டு 'அபிதான சிந்தாமணி' எனப் பெயர்பெற்ற நூலின் ஆசிரியர் ஆ. சிங்காரவேலு முதலியார் 'காஞ்சிபுரம் குமாரசுவாமி தேசிகர்' சிவப்பிரகாசரின் தந்தை என்று குறிப்பிடுவார். 'குமாரசுவாமிகள்' எனவும் இவர் அழைக்கப்பட்டுள்ளார். மயிலம் பொம்மபுர ஆதீன மரபிலும் இச்செய்தியே கூறப்பட்டு வருகிறது.

குமாரசுவாமி தேசிகரும் சிறந்த தமிழ்ப்புலவர். சிவபூசகர் தொண்டை மண்டலம் சைவவேளாளர்கட்குத் தீட்சா குருவாக விளங்கியவர். அவர் தாம் அடைந்த பேறுகள் பற்றி,

'கயல்வாய்த்த கண்ணி உலகீன்ற வல்லிபங் காஉனது
செயல்வாய்த்த அன்பார்க்கும் அல்லாது அவர்க்கும் சிரிப்பல்லவோ
இயல்வாய்த்த எந்தைக்கு யான்வாய்த் ததுவுமிங்கு என்றனக்கு
வயல்வாய்த்த தும்மனை வாய்த்தது மைந்தர்கள் வாய்த்ததுமே'

என்ற பாடலைப் பாடியுள்ளார்.

உயரிய உடன்பிறந்தார்கள்

சிவப்பிரகாசருக்கு வேலையர், கருணைப் பிரகாசர் என்ற இரு தம்பியரும், ஞானாம்பாள் என்ற தங்கையும் உண்டு. கருணைப் பிரகாசரை மூத்த தம்பி என்று வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் கூறுவர். வேலையர் வேலன், வேலாயுதம் என்றும் குறிப்பிடப்படுவார். ஆனால் வேலையர் சிவப்பிரகாசர் சிவபதம் அடைந்தபோது தாம்பாடிய பாடலில் தம்மைப் பற்றி இருவரிடையில் தோன்றியவர் என்று கூறி தாமே மூத்த தம்பி என்று தம்மை அறிவிக்கிறார்.

''அல்லிமலர்ப் பண்ணவனும் ஆராய்ந்து அறிதமிழை
சொல்லும் இருவரிடைத் தோன்றியயான்''

என்று வேலையர் கூறுகிறார். வேலையரும், கருணைப் பிரகாசரும் சிறந்த கவிஞர்களேயாவர். இவர்கள் தமிழ்ப் பயிற்சிக்குச் சிவப்பிரகாசரே காரணமாய் அமைந்தார்.

வேலையர் கைத்தலமாலை, நல்லூர்ப் புராணம், பாரிசாதலீலை, வீரசிங்காதன புராணம் (1719), மயிலாசல இரட்டை மணிமாலை, மயிலாசலஉலா, குகை நமசிவாயர் லீலை ஆகிய நூல்களைப் பாடி யுள்ளார். கருணைப் பிரகாசர் 'இஷ்டலிங்கவிதிஅகவல்' என்ற நூலைப் பாடியுள்ளார். சகோதரர்கள் மூவரும் சேர்ந்து இயற்றியது காளத்திப்புராணம்.

சகோதரி ஞானாம்பாள் பேரூர்த் திருமட முதல்வர் சாந்தலிங்கரை மணம் செய்துகொண்டார்.

ஞானாசிரியர்

சிவப்பிரகாசரின் ஞானாசிரியர் மயிலம் பொம்மபுரம் ஆதீனம் ஆதி சிவஞான பாலய சுவாமிகள் அவர்கள் ஆவார்கள். தமிழகத்தில் வீரசைவ ஆதீனங்களில் தொன்மையானது மயிலம் பொம்மபுர ஆதீனமாகும். இவ்வாதீனத்தின் அருட்சீடர்களுள் முதன்மையானவர் சிவப்பிரகாச சுவாமிகள் ஆவார்கள்.

'பயன்கருதி மனிதரைப் புகழ்ந்து பாடாமை' என்ற உயர்நெறியைக் குறிக்கோளாகக் கொண்டு இறைவனை மட்டும் பாடிய சிவப்பிரகாசர் மயிலம் பொம்மபுர ஆதீன முதல்வர் ஆதி சிவஞான பாலைய தேசிகர் அவர்களை இறைவனாகவும், தம் ஞான குருவாகவும் கொண்டு பாடினார்.

'நான் திருக்காஞ்சியில் தண்மலர்ப்பூந்
தேனே அனைய சிவஞான தேவனைச் சேர்ந்திமைப்பில்
ஊனே உயிரே எனுமிவை வேறுபட்டு உய்ந்தனன்'

என்பது சிவப்பிரகாசர் வாக்காகும்.

பல இடங்களில் தம் ஞானாசிரியரை

'கொடை மருவும் எங்கள் திருஞான வேந்தன்'

'எங்கட்கு இனிய சிவஞான தேவன்'

எனப் புகழ்ந்து பாடியுள்ளார்.

செந்தமிழில் சிறந்த சிவப்பிரகாசர்

சிவப்பிரகாசர் மிகச் சிறந்த தமிழ்க் கவிஞர். புலவர் புராணம் பாடிய வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்

'சிந்தையிடம் கோயில்கொளும் சிவன்அருளால் செழுந்தமிழின்
விந்தைமலி கவிபாடும் விரகினனா மிளிர்ந்தானே'

என்று சிவப்பிரகாசரைப் புகழ்வார்.

சிவப்பிரகாசர் இயற்றிய 'வேதாந்த சூடாமணி' பாயிரச் செய்யுளில்

'பெருகுசுவை நறவுஒழுகு செஞ்சொல்மல
ரால்புனையாப் பெருந்தண்மாலை
கருமிடற்று வானவற்கே சாத்துசிவப்
பிரகாசன் கவிஞர் வேந்தே'

என்று புகழப்படுகிறார். 'கல்வியில் பொலிவார் சிவப்பிரகாசன் கவிமழை பொழிதரு கார்போல்' கவி பாடியதாகக் கூறப்படுகிறார். தவம் பழுத்த துறவும் தமிழ் பழுத்த உளமும் உடையவர் எனச் சிவப்பிரகாசர் பாராட்டப் பெற்றார்.

வெள்ளியம்பலத் தம்பிரான் தொடர்பு

தென்பாண்டிநாட்டுத் திருநெல்வேலி அருகேயுள்ள சிந்துபூந்துறையில் தருமபுரமடத்தின் கிளைமடம் ஒன்றுண்டு. அங்கிருந்தவர் வெள்ளியம்பலத் தம்பிரான். இலக்கியங்கள் கற்றுக் கவிபாடும் பேராற்றல்பெற்ற சிவப்பிரகாசர் அவரிடம் இலக்கணம் கற்கச் சென்றார்.

ஆசிரியர் இவரைச் சோதிக்க 'கு' என்று தொடங்கி ஊருடையான் என்ற சொல்லை இடை வைத்து 'கு' என முடியும் வண்ணம் ஒரு கவி பாடுக என்றார். உடனே சிவப்பிரகாசர்,

'குடக்கோடு வானெயிறு கொண்டார்க்குக் கேழன்
முடக்கோடு முன்னமணி வார்க்கு – வடக்கோடு
தேருடையான் தெவ்வுக்குத் தில்லைதோன் மேற்கொள்ளல்
ஊருடையான் என்னும் உலகு'

என்ற வெண்பாவைப் பாடினார். வியந்து உமக்கு நான் கற்பிக்கும் நிலையில் நீங்கள் இல்லை; ஆனால் உங்கள் தம்பியருக்கு ஆசிரியராக இருப்பேன் என்று அவர்கட்குக் கற்பித்தார். அண்ணாமலை ரெட்டியார் அளித்த 300 பொன்னை வெள்ளியம்பலத் தம்பிரானுக்குக் குருதட்சிணை யாகக் கொடுத்தார். ஆசிரியர் வேண்டிக்கொள்ள திருச்செந்தூர்ப் புலவரை வென்று அவருக்கு அடிமையாக்கினார்.

பிறரைப் பாராட்டும் பேருள்ளம்

திருக்காட்டுப்பள்ளியில் ஒரு பெண் வாழ்ந்தாள். அவர் தெருவில் உப்பு விற்பவள். அவள் சைவப்பற்றும் செந்தமிழ்த் தேர்ச்சியும் கொண்டவள். ஒருமுறை அவள் புலமை கண்டு சிவப்பிரகாசர்,

'நிறைய உளதோ எனிதே கொளுவோம்
பிறையை முடிக்கணிந்த பெம்மான் - உறையும்
திருக்காட்டுப் பள்ளி திரிபாவாய் நீயிங்கு
இருக்காட்டுப் பள்ளி எமக்கு'

என்று பாடினார்.

சிவப்பிரகாசரின் நயன தீட்சையால் அருள்பெற்ற உப்பு விற்கும் அப்பெண்,

'தென்னோங்கு தில்லைச் சிவப்பிரகா சப்பெருமான்
பொன்னோங்கு சேவடியைப் போற்றினோம் - அன்னோன்
திருக்கூட்டம் அத்தனைக்கும் தெண்டனிட்டோம் தீராக்
கருக்கூட்டம் போக்கினோம் காண்'

என்று பாடித் தன் நன்றிப் பெருக்கையும், பக்தியையும் காட்டினாள்.

திருமணம் - வெறுப்பும் வாழ்த்தும்

அண்ணாமலை ரெட்டியார் சிவப்பிரகாசரைத் திருமணம் செய்து கொள்ளுமாறு வேண்டினார். அதை மறுத்த சிவப்பிரகாசர்,

'சேய்கொண்டா ருங்கமலச் செம்மலுட னேஅரவப்
பாய்கொண்டா னும்பரவும் பட்டீச் சுரத்தரனே
நோய்கொண்டா லும்கொளலாம் நூறுவயதிருந்து
பேய்கொண்டா லும்கொளலாம் பெண்கொள்ளல் ஆகாதே'

'நிட்டையிலே இருந்துமனத் துறவடைந்த
பெரியோர்கள் நிமலன் தாளைக்
கிட்டையிலே தொடுத்துமுத்தி பெறும்அளவும்
பெரியசுகம் கிடைக்கும்; காம
வெட்டையிலே மதிமயங்கும் சிறுவருக்கு
மணம்பேசி விரும்பித் தாலி
கட்டையிலே தொடுத்துநடுக் கட்டையிலே
வைக்குமட்டும் கவலை தானே'

என்ற பாடல்களைப் பாடினார். ஆனால் அவரே தம்பி கருணைப்பிரகாசர் திருமணத்தை மனமுவந்து பல பாடல்கூறி வாழ்த்தியுள்ளார். தங்கை ஞானாம்பாளுக்கும் சாந்தலிங்கருக்கும் மணமுடித்துவைத்துப் பாராட்டினார்.

சிவப்பிரகாசர் சேவடி வாழ்க!

கட்டுரையாளர் முகவரி

1. கயிலைப்புனிதர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் 1
பேரூராதீனம், பேரூர் - 641 010.

2. சி. அங்கயற்கண்ணி 6
10, கல்லூரி ஆசிரியர் குடியிருப்பு
சிக்கய்ய நாயக்கர் கல்லூரி
ஈரோடு - 638 004

3. அரு. அப்பாசாமி 11
19, வேதபுரி நத்தம் தெரு
பாகூர், புதுவை - 607 402.

4. சா. அபிராமி 18
144 - 4வது குறுக்குத்தெரு
அஜீஸ் நகர், ரெட்டியார்பாளையம்
புதுவை - 605 010

5. க. அமுதா 27
சின்ன உஞ்சனை
உஞ்சனை அஞ்சல், அரியக்குடி
சிவகங்கை

6. கா. அரங்கசாமி 34
15, தமிழ் நகர்
கோபி - 638 452

7. அரங்க முருகையன் 731
இடையார்பாளையம்
18, பூரணாங்குப்பம் வழி
புதுவை - 605 007

8. மு. அருணாசலம் 38
எண் : E5, முதல் மாடி
பவானி டவர்ஸ், குமரன் நகர்
வயலூர் சாலை, திருச்சி - 17.

9. பா. அருணாதேவி 714
ஞானாம்பிகை நுழைவு உரிமைப்பள்ளி
பேரூர், கோவை - 641 010.

10. மு. அழகர்சாமி 49
14, ஏழாவது தெரு
பெரியார் நகர், சென்னை - 82.

11. சு. அற்புததேவி 765
27-B, விநாயகர் கோயில் வீதி
நால்வர் லே அவுட், ரத்தினபுரி
கோவை - 641 027

12. அ. அறிவுநம்பி 719
19, இரண்டாம் வீதி
இராசராசேசுவரி நகர், புதுவை - 11.

13. அன்னிதாமசு 57
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113.

14. அனுராதா ஸ்ரீநிவாசன் 67
35, காந்தி தெரு
போஸ்டல் ஆடிபி காலனி
சாலி கிராமம், சென்னை - 93.

15. முத்து. ஆபத்சகாயம் 74
காளத்தி தெரு
புதுகும்முடிப்பூண்டி
கும்முடிப்பூண்டி - 601 201

16. க. இந்திரசித்து 82
49, சிங்கப்பூர் நகர்
உடுமலைப்பேட்டை
கோவை - 642 126

17. இரத்தின கிருஷ்ணமூர்த்தி 88
தாயகம், 15, ஆலைத்தெரு
சண்முகபுரம், பழனி - 624 602

18. த. இரத்தினமாலா 92
184, நாடார் நடுத்தெரு
திருத்தங்கல், சிவகாசி - 626 130.

19. இரெ. இராசபாண்டியன் 97
C, 31, இந்து காலனி
நங்கைநல்லூர், சென்னை - 61.

20. செ. இராசு 805
3-பி, வெங்கடேஸ்வரா நிவாஸ்
நாராயணவலசு, ஈரோடு - 11.

21. வெ. இராசேசுவரி 654
த.சா. அடிகளார் கலைக் கல்லூரி
பேரூர், கோவை - 641 010.

22. கு. இராமு 103
D-5, 16-ம் தெரு
பெரியார் நகர், சென்னை - 82.

23. இளமதி சானகிராமன் 736
தமிழியல் துறை
புதுவைப் பல்கலைக்கழகம், புதுவை.

24. இரா. இளங்கண்ணன் 107
C-84, சிவசெல்வகம்
சிக்கந்தர் பாட்சா வீதி
காந்தி நகர், உடுமலைப்பேட்டை
கோவை - 642 154

25. ந. இறையடியான் 115
வள்ளுவர் இல்லம்
21, சி தெரு, பென்ஷன் டவுன்
பெங்களூர் - 560 046

26. பி. உமா 123
30-KGL பிரபு நகர் II
4, ஔவையார் தெரு
மீஞ்சூர் - 601 203

27. ச. உமா அறிவழகன் 130
6/12C, பசுமர்த்தி தெரு முதல் சந்து
கோடம்பாக்கம், சென்னை - 24.

28. ர. உமாதேவி 136
25 - எ, வருமானவரி அலுவலகம்
குடியிருப்பு விசுவாசபுரம்
சரவணம்பட்டி, கோவை - 35.

29. தவத்திரு. ஊரன் அடிகளார் 142
தபால்பெட்டி 2
வடலூர் - 607 303

30. கடவூர் மணிமாறன் 146
109, மேலைத் தெரு
கிருட்டிணராயபுரம், கரூர் - 639 102.

31. இரா. கண்ணன் 152
சிவனருள் நிலையம்
3/401, வள்ளலார் தெரு
அண்ணாநகர், ஆவடி
IAF, சென்னை - 55.

32. அ. கணேசன் 158
3, காரியபெருமாள் கோயில் தெரு
சிதம்பரம் - 608 001.

33. கு. கதிரேசன் 661
ஆதித்தனார் கலைக் கல்லூரி
திருச்செந்தூர், தூத்துக்குடி - 628 216.

34. பொ.நா. கமலா 165
14 என்/3ஏ, பெரிய கருப்பன் தெரு
சிவகாசி - 626 189

35. தி. கமலி 171
6, அண்ணாமலை நகர்
விரிவாக்கம், திருரங்கநாதன் நகர்
ஆவடி, சென்னை - 600 054.

36. கு. கலைச்செல்வி 722
தெய்வானையம்மாள் கலைக் கல்லூரி
விழுப்புரம்

37. ந. காந்திமதிலட்சுமி 176
சுந்தரகம், 43/A,
மீனாட்சிபுரம் கிழக்கு
தூத்துக்குடி - 628 002

38. சி. கார்த்திகேயன் 183
அன்னை இல்லம்
505-D, மெயின்ரோடு
வி.கே.புரம், நெல்லை - 627 425

39. க. கிருஷ்ணமூர்த்தி 188
பிளாட் எண் : 17
திருநகர், பழநி - 1.

40. பி.எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி 194
நிர்வாக இயக்குநர்
54, PSS, நாடார் தெரு
தூத்துக்குடி - 628 001.

41. தவத்திரு. குமரகுருபர சுவாமிகள் 200
கௌமார மடாலயம்
சின்னவேடன்பட்டி, கோவை - 6.

42. க. கொன்றையாண்டி 207
52, கந்தாடைத்தெரு
ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125

43. இரா. கோபி சுகுணா 215
6, இரண்டாவது குறுக்குத்தெரு
பரசுராமபுரம், வில்லியனூர்
புதுவை - 605 110

44. கோமதி சூரியமூர்த்தி 220
391, இந்திரா காந்தி தெரு
ஆழ்வார் நகர், நாகமலை
மதுரை - 625 019

45. மோ.கோ. கோவைமணி 227
ஓலைச்சுவடித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 5.

46. சு. சண்முகசுந்தரம் 240
2/180, PKM, நகர்
வண்டியூர் அஞ். மதுரை - 20.

47. கா. சத்தியபாமா 245
21, கல்யாண் நகர், முதல் தெரு
முனிசிபல் காலனி, தஞ்சாவூர் - 7.

48. மு.பெ. சத்தியவேல்முருகன் 252
12, பதினொராவது தெரு
நியூகாலனி, ஆதம்பாக்கம்
சென்னை - 600 088.

49. சந்திரா கிருஷ்ணன் 741
வி.எல்.பி. ஜானகியம்மாள்
கலை, அறிவியல் கல்லூரி
கோவைப்புதூர், கோவை - 42.

50. ப. சாந்தி 260
TC 17/1375, கேசவபுரம் ரோடு
பூஜாபூரா, திருவனந்தபுரம் - 12.

51. மா. சாந்தி 791
ஜெ.ஜெ. கலை, அறிவியல் கல்லூரி
சிவபுரம், புதுக்கோட்டை - 622 404.

52. ச. சாம்பசிவனார் 265
அஞ்சல் பெட்டி 35, மதுரை - 16.

53. ச. சாரதா 270
80, பிருந்தாவன் தெரு
மேற்கு மாம்பலம்
சென்னை - 600 033

54. ச. சிவகாமி 279
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 113.

55. அ. சிவபெருமான் 286
தமிழியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
608 002

56. கு. சிவலிங்கம் 290
கௌமார மடாலயம்
சின்னவேடன்பட்டி, கோவை - 6.

57. நா. சிவா 298
70, மெயின்ரோடு
பெரிய காலாப்பட்டு
புதுவை - 605 014

58. சிறுத்தொண்டன் 784
196, அசோகபுரம்
கோவை - 641 022

59. இரா. சுசீலா 684
சாந்தலிங்க அடிகளார் கல்லூரி
பேரூர், கோவை -10.

60. தி. சுந்தராம்பாள் 673
21, மாலைப்பேட்டைத் தெரு
விருதுநகர் - 626 001

61. கோ. சுப்பிரமணியனார் 304
222, தெற்கு வீதி
திருவையாறு - 613 204

62. ச.வே. சுப்பிரமணியன் 679
உலகத் தமிழ்க் கல்வி இயக்ககம்
தமிழூர், அடைக்கலப்பட்டணம்
திருநெல்வேலி - 627 808

63. செ. சுமதி 313
5, அருண்நகர்
வடவள்ளி, மருதமலை ரோடு
பாரதியார் பல்கலை அஞ்சல்
கோவை - 46

64. ஆ. செந்தாமரைக்கண்ணி 320
ஜெ.ஜெ. கலை, அறிவியல் கல்லூரி
புதுக்கோட்டை - 622 404

65. வெ. செல்வசுப்பிரமணியன் 326
17/1, ஜெய்சிம்மபுரம்
பாப்பநாயக்கன்பாளையம்
பழையூர், கோவை - 37.

66. இரா.வீ. செல்வபெருமாள் 334
20, சுந்தரர் வீதி
சாமிப்பிள்ளைத் தோட்டம்
இலாசுப்பேட்டை, புதுவை - 8.

67. அ. செல்வராசு 339
ஜெ.ஜெ. கலை, அறிவியல் கல்லூரி
புதுக்கோட்டை - 622 404

68. மு. செல்வராசு 753
366, த.நா.வீ வசதி வாரியம்
எட்டையபுரம் சாலை
தூத்துக்குடி - 628 002

69. வே. செல்லாத்தாள் 344
4/72, காளியண்ணன் புதூர்
மில்கோவில்பாளையம்
பொள்ளாச்சி - 642 110

70. தவத்திரு. சொக்கலிங்க சுவாமிகள் 350
தத்தோஜியப்பா சந்து
கீழ வீதி, தஞ்சாவூர் - 613 001

71. ஞா. ஞானசிங்காரம் 356
3, அவினாசிலிங்கம் ஆசிரியர் குடியிருப்பு
அழகேசன் சாலை, கோவை - 43.

72. சு. ஞானப்பூங்கோதை 363
34, நஞ்சம்மநாயுடு குடியிருப்பு
பேரூர், கோவை - 10.

73. ஞானப்பூங்கோதை 370
244, திருவள்ளுவர் தெரு
ஆழ்வார் நகர், நாகமலை, மதுரை - 19.

74. இல. தங்கராஜ் 377
தமிழ்த்துறை
கந்தசாமி கண்டர் கல்லூரி
வேலூர், நாமக்கல் - 638 182.

75. தாயம்மாள் 382
தமிழியல் துறைத்தலைவர்
அன்னை தெரசா பல்கலைக்கழகம்
கொடைக்கானல்

76. கா. திருநாவுக்கரசு 391
சாந்தலிங்க அடிகளார் கல்லூரி
பேரூர், கோவை - 10

77. ச. திருநாவுக்கரசு 399
11 ஏ/3, சாலியர் தெரு
பார்வதிபுரம், முசிறி
திருச்சி - 621 211

78. க. திலகவதி 407
இலக்கியத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005

79. திலகவதி சண்முகசுந்தரம் 414
அமுத நிலையம்
பத்மா நகர், மருதமலைச்சாலை
கோவை - 641 066

80. செ. தேவராஜு 420
87, பெருந்துறை ரோடு
கொண்டயங்காட்டு வலசு
காஞ்சிகோயில் அஞ்., ஈரோடு - 638 116.

81. ரெ. தேவி 425
சிற்பத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005

82. புரிசை ச. நடராசன் 430
அன்னம் இல்லம்
4/6, எழில் நகர், திருப்பத்தூர் - 635 601.

83. கோ.ப. நல்லசிவம் 770
ஸ்ரீ கா.சு.சு. கலைக் கல்லூரி
திருப்பனந்தாள், தஞ்சை மாவட்டம்.

84. அ. நாகரத்தினம் 438
33, கென்னடி வீதி
வெள்ளாளபாளையம்
வெள்ளாலூர், கோவை - 641 111.

85. கா. நாகராசு 448
1/182, பாப்பநாயக்கன்பாளையம்
தடாகம், கோவை - 641 108.

86. ப.வெ. நாகராசன் 455
கௌமார மடாலயம்
சின்னவேடன்பட்டி
கோவை - 641 006

87. பா. நீலாவதி 465
14, அவினாசிலிங்கம் குடியிருப்பு
அழகேசன் சாலை, கோவை - 641 043.

88. எஸ். பசுமதி 472
பூவையூர் மேற்கு
அகஸ்தீஸ்வரம் அஞ்சல்
கன்னியாகுமரி - 629 701

89. ச. பத்மினி 480
கௌமார மடாலயம்
சின்னவேடன்பட்டி, கோவை - 6.

90. த.கோ. பரமசிவம் 776
ஓலைச்சுவடித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்

91. கே. பழனிவேலு 726
பெரியார் கலைக் கல்லூரி
கடலூர் - 607 001

92. சு. பாலுசாமி 487
பி.ஜி.பி. கலை, அறிவியல் கல்லூரி
பிள்ளைகளத்தூர், நாமக்கல்
637 206

93. பிரபாகரன் 492
30, KGL, பிரபுநகர் II
4, ஔவையார் தெரு
மீஞ்சூர் - 601 203

94. க. புனிதாதேவி 499
ஓலைச்சுவடித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்

95. தி. புஷ்கலா 798
ஓலைச்சுவடித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்

96. த. பூமிநாகநாதன் 505
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 113.

97. தி. மகாலட்சுமி 514
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

98. சு. மதியழகனார் 520
107, ஆ. தெற்கு வீதி
தம்மம்பட்டி, ஈரோடு - 636 113.

99. வீ. மலர்விழி 532
சிற்பத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்

100. த. மலைமதி 538
6 E, கிழக்குத்தெரு
குருவிநத்தம் அஞ்.
புதுவை - 607 402

101. ம. மனோன்மணி 700
முதல்வர், சாந்தலிங்கர் கல்லூரி
பேரூர், கோவை - 641 010.

102. வே.இரா. மாதவன் 545
ஓலைச்சுவடித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்

103. அ. மாதவி 551
91, செங்குந்தர் நடுத்தெரு
திருநெல்வேலி நகரம்
திருநெல்வேலி - 6

104. சு. மீனாட்சிசுந்தரம் 712
மணியம் தெரு, கண்டாச்சிபுரம்
விழுப்புரம் - 605 701

105. முத்துசண்முகம் 695
131, கோவிலூர் மடாலயம்
கோவிலூர், காரைக்குடி - 630 307.

106. முத்து இலக்குமி 689
4/145, ரோஜா தெரு
குறிஞ்சி நகர், A பிளாக்
புதுநத்தம் ரோடு, மதுரை - 14.

107. தெ. முருகசாமி 558
பொன்மொழி இல்லம்
20/8, ஐஸ் கேணித்தெரு
காரைக்குடி - 630 001

108. இரா. முருகன் 564
47, தெற்குத்தெரு
பூரணாங்குப்பம்
புதுவை - 605 007

109. க. முருகேசன் 572
வி.எல்.பி. ஜானகியம்மாள்
கலை, அறிவியல் கல்லூரி
கோவைப்புதூர் - 641 042

110. தெ. மேகநாதன் 580
மஞ்சக்கொல்லை அஞ்சல்
சிதம்பரம் வட். கடலூர் - 608 601.

111. கி. மைதிலி 587
பச்சையப்பன் கல்லூரி
சென்னை - 30

112. கு. மோகனசுந்தர் 594
சிவனேசர் மடம்
48, சிவன்கோயில் தெரு
சின்னசேலம் - 606 201

113. ச. ரங்கராசன் 600
96, வடக்கு அலங்கம்
தஞ்சாவூர்

114. தி. ரமா 603
1411, வள்ளுவர் நகர்
காரைக்கடி - 630 002

115. ந. லட்சுமி 609
525, கடலூர் ரோடு
முருங்கப்பாக்கம், பாண்டிச்சேரி.

116. செ.ம.க, வசந்தகோகிலம் 705
17-B, நெல்லிக்குப்பம் சாலை
செம்மண்டலம், கடலூர் - 607 001.

117. வி. வசுமதி 615
L-30, அண்ணா குடியிருப்பு
SV மில்ஸ் அஞ்., உடுமலை - 642 128.

118. வ.ச. வண்டார்குழலி 668
2, அரங்கசாமி நகர்
விமானநிலையம், கோவை - 641 004

119. சா. வளவன் 621
பச்சையப்பன் கல்லூரி
சென்னை - 30

120. செ. விசுவநாதன் 745
110/1, சௌமியா இல்லம்
வஞ்சிமாநகர், சாமிசெட்டிபாளையம்
கோவை - 641 047

121. சோ. ஸ்வர்ணாசோமசுந்தரம் 760
C/o, பேரூர் ஆதீனமடம்
கோவை - 641 010

122. வெ. ஜெயலட்சுமி 626
தமிழியல் துறை
தெரசா பல்கலைக்கழகம்
மதுரை - 625 016

123. ஜெ. ஜெயவாணிஸ்ரீ 632
1F, பெருமாள் தெரு
தெற்கு உடையார்பாளையம்
ஆத்தூர், அஞ். சேலம் - 636 102.

124. அர. ஜோதிமணி 637
புளியாண்டம்பாளையம்
பெரியகாடு
நாச்சிபாளையம் (அஞ்)
விஜயாபுரம், திருப்பூர் - 641 606.

125. கே. ஸ்ரீநிவாசன் 643
17, மணிநாயக்கர் தெரு
கணபதிபுரம்
குரோம்பேட்டை, சென்னை - 44.

126. ம. ஷீலாஸ்ரீநிவாசன் 648
மணிபவன், கீழ்ப்பள்ளம்
வில்லுக்குறி
கன்னியாகுமரி - 629 180



கற்பனைக் களஞ்சியம்

துறைமங்கலம் சிவப்பிரகாசர்